

# முத்தான சொத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தான சொத்து

தொகுப்பாளர் : அருட்சகோதரி யுஸ்ரீனா

மொழி ஆக்கம் : அருட்சகோதரி பிறிஜிற் மல்லிகா

வெளியீடு : 150 ஆவது அகவை நோக்கி வட மாநில திருக்குடும்ப நிறுவனம்

அர்ப்பணம் : இலங்கையில் தடம் பதித்த ஆதித்தாய்மார்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Source : Collection of Letters in French from our First Missionaries

Complier : Sr. Justina

Translator : Sr. Briget Mallika

Title : முத்தான சொத்து (Muththana Sothu) Priceless Heritage

Edition : First Edition

Date of Publication : June 12, 2009

Number of Copies : 1,000

Pages : XXX + 531

Printer : Lanka Publishing House - Sri Lanka Tel : 060-2137006

Publisher : In grateful remembrance of the dawning of the 150 years of service by the Holy Family sisters in Jaffna.


Dedication : To our early Missionaries who rendered dedicated service in Ceylon

ISBN : 978-955-51658-0-8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்காலத்திற்குமுரிய நிறுவனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அழைத்து வந்த ஆயர் சமேரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மண்ணில் தடம் பதித்த சகோதரிகள்



Mère Xavier (Marchand)

Maîtresse des Novices à la Conception

Fondatrice des Œuvres de la Ste Famille à l'Ile de Ceylan

et ses Coopératrices.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகளை முதன் முதலாக யாழ் மண்ணின் மக்களுக்குப் பணி செய்ய விரும்பி வரவழைக்க, யாழ்ப்பாணத்தின் அப்போஸ்தலிக்க விக்காரியருமாகிய மகா கனம் பொருந்திய சமாரியா ஆண்டவர் 1860ம் ஆண்டு சகல குருமாருக்கும், விசுவாசிகளுக்கும் எழுதிய சுற்று மடலின் சிறப்பான பக்கம்.**

## 1860 – Bishop Semeria's Letter.

பெண்பிள்ளைகளை வளர்க்கிறதுக்குச் சகல நற்குணம் விளங்கும் கன்னியாஸ்திரிகளைப் போல வேறே ஆருந் தானில்லை. இப்படியே மனதிலும், சரீரத்திலும் பரிசுத்தர்களாய் இருக்கும்படி ஆண்டவருடைய காரியங்களை நினைத்துக் கொண்டிருக்கிற (1 கொரி 7:31) திடாரிக்கமான மனமுள்ள கன்னிகள் எத்தேசங்களிலும் பலவிதமான பெயர்களைத் தரித்து நானாவிதமான ஆடைகளை உடுத்துப் பிள்ளைகளைப் படிப்பிக்கிறதும், நோவாளிகளைப் பேணுதலும், வறியவர்களைப் பராமரிக்கிறதுமான தர்ம கருமங்களை முடித்துக் கொண்டு கண்ணீர்க்கணவாயிலிருக்கிற இப்பூமியில் கஸ்திப்படுகிற சகலருக்கம் தேத்தரவையும், இளைப்பாற்றியையும் வருவிக்கிறார்கள்.

கூடக்குறைய இந்தியாவில் சகல விக்காரியத்துகளில் வேறு சங்கங்களைச் சேர்ந்த கன்னியாஸ்திரிகள் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் அவ்விடங்களுக்குக் கிடைத்த உச்சிதமான நயம். இயாழ்ப்பாண விக்காரியத்துக்கும் தாமதமின்றி கிடைக்க வேண்டுமென்று சித்தமாயிருக்கிறோம். அவர்களுக்குள்ளே சிலர் கொஞ்சக் காலத்துக்குள்ளே இலங்கையில் தங்குவார்கள் என்று நம்புகிறோம். அவர்கள் சேரும் நாளிலே இலங்கைத் தீவுக்கு அருணோதயம் போலாகும்.

அவர்கள் சுறுக்கிலே வருவதைக் காத்திருந்து இலங்கையிலுள்ள முதற் கன்னியர்மடம் கட்டுறதுக்கு விஸ்தாரமான ஓர் நிலத்தை விலைக்கு வாங்கியிருந்தோம். ஆனால் கன்னியர் மடத்தையுமதில் அடங்கிய சாலைகளையும் ஓர் பள்ளிக்கூடத்தை சேர்ந்த பிள்ளைகளுக்கு இடங்களையும், தகுந்த விதமாகக் கட்டுகிறதற்கு செலவளிக்க வரும் பணம் பெரிய தொகையாய் இருக்கும்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது சொல்லப்பட்ட கன்னியர் சபை பெண்பிள்ளைகளுக்கு உத்தமமான கழகமாவதும் தவிர வேறனேக தர்மங்களுக்கு மூலமுமாயிருக்கும். அதெப்படியென்றால் கன்னியாஸ்திரிகள் நிலைப்பட்டிருக்கும் ஒவ்வொரு இடத்தில் நோவாளிகளுக்கு சாலைகளும் விருத்தாப்பியர்களுக்கு தஞ்சமான புகலிடங்களும, நன்னெறிகளைத் தப்பிப் போனவர்களுக்கு ஒதுக்கிடங்களும் இவை முதலான தர்மங்கள் அநேகம் ஆரம்பிக்கும். வரப்போகிற கன்னியாஸ்திரிகளைக் கொண்டு ஆண்டவர் இந்த விக்காரியத்தில் நடப்பிக்கப்படும்படி நியமித்த கருமங்கள் எத்தனை என்று இந்நேரஞ் சொல்லமாட்டாதாயினும் அவர்கள் தங்கள் கல்லூரிப் பள்ளியை ஏற்படுத்துகிறதோடே ஒழுங்குடனே அநாதைப் பிள்ளைகளுக்கும் அடைக்கலமான சாலையையும் ஸ்தாபகம் பண்ணுவார்கள் என்று நம்புகின்றோம்.

தாய்தந்தையரை இழந்து போன பிள்ளைகள் யாதொரு தஞ்சமாதரவுமில்லாமல் முழு அந்தரிப்பாய் இருக்கிறதைக் கண்டு இளநெஞ்சர்கள் எவரும் மனமிளகாமல் போகார்கள். நிர்ப்பாக்கியமான அநாதைப் பிள்ளைகளைத் தேற்றாமலும் விடார்கள். எங்கள் கன்னியாஸ்திரிகளும் அந்தப் பிள்ளைகளுக்கு அடைக்கலமான ஓர் வீட்டை ஸ்தாபிப்பார்கள். அல்லது இப்போதுண்டாயிருக்கிறதை அதிகப்படுத்துவார்கள். எத்தனை தாய்தகப்பன் இல்லாப் பிள்ளைகளை வளர்க்க நம்மால் உண்டாகுமோ, அத்தனை பேர்களைத்தான் தாய்க்குச் சமமானவர்கள் பராமரிப்பில் வைக்க ஒப்பிக்கக் கருதியிருக்கின்றோம். அப்படியே அந்த எளிய பிள்ளைகள் நன்னெறியிலும், தேவ பயபக்தியிலும் வளருவதுமன்றி தங்கள் சீர் நிர்வாகத்திற்கு தகுந்த படிப்பினையையும் படிப்பிக்கப்படுவார்கள். அபகீர்த்தியிளப்பம் முழுக்கேட்டுக்குமுள்ள அந்தஸ்தில் நின்று மீளப்பட்டுச் சொல்லப்பட்ட அடைக்கல வீட்டிற் பிரவேசித்து ஞானசுகத்தை அடைந்து சிதறிப்போன பிள்ளைகள் எத்தனை பேர்களோ விமோசனகரை ஏறுவார்களென்று சொல்ல முடியாது.

தாய்தந்தை இழந்த பிள்ளைகளுக்காக நாம் ஸ்தாபிக்கப்போகிற அடைக்கலசாலைக்கு கிறிஸ்தவர்களுடைய இனாங்களை கேட்போமாகில் அநேகபேர் உதவி செய்கிறதற்குப் பிரியப்பட்டிருக்கிறார்கள் என்று நாம் கேள்விப்பட்டதினாலே அநாதைப் பிள்ளைகளுடைய தாபரரான சர்வேசுரனுடையவும் பாலருடைய உருக்கமான, நமது மதுரமான யேசுவினுடையவும் நாமத்தினாலே நமது விசாரணைக்குட்பட்ட கிறிஸ்தவர்கள் ஒத்தாசை பண்ணவேண்டுமென்று கேட்கின்றோம். ஆண்டவருடைய ஏவுதலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்து இவ்வுத்தம தர்மத்துக்கு உதாரமாய் ஈர்த்துக்கொள்வோர் பாக்கியம் பெற்றவர்களாம். ஏனென்றால் அவர்களுடைய நாமங்கள் சீவிய பொஸ்தகத்தில் எழுதப்படும். சகல சுவாமிமாரும், கன்னியாஸ்திரிகளும், பிள்ளைகளும் செபித்துக்கொள்ளும் செபங்களிலும், பெறும் பேறுகளிலும், சகலதர்மசாலிகளுக்கும் பங்கு இருக்கும். அதுவுமல்லாமல் வளர்க்கப்படும் பிள்ளைகளும் தினந்தோறும் தங்கள் இராச் செபத்தில் அவர்களுக்காக வேண்டிக் கொள்ளக்கடவார்கள்.

மற்ற தேசங்களில் மாசற்ற கன்னிமை பொருந்தும் புனிதமுள்ள அனேக ஸ்திரிகள் "கன்னிகள் மாத்திரம் பின் செல்லும் செம்மறிப்புருவையை" ஏகமாய் நேசித்துத் தேடிப்பெற்றுக் கொள்ள இந்நாட்டிலே மாத்திரம் கன்னிமை என்கின்ற பூண்டு வளராமலென்ன, ஆயினும் உலக வாழ்வை வெறுத்து தங்கள் கன்னிமையை சருவேசுரனுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கின்றவர்கள், இந்நாட்டிலே அநேகம் இருப்பார்களோ இல்லையோ என்று நமக்கு தெரியாதிருந்தாலும் அதில் சந்தேகப்படாத ஓர் சக்தியம் உண்டு. அதென்னவெனில் பெண்பிள்ளைகள் கற்பு நெறியில் வழுவாமல் ஐம்பொறிகளின் ஒறுத்தலைப் பழகி முற்காலமனுசரித்ததிலுமினி அதிகவொடுக்கத்தோடே ஒழுக வேணுமென்கிறதேயாம்.

ஆனால் அவர்களுக்களித்த நிர்மலவிசயத்தைப் படிப்பதெங்கே? கற்பினுடைய தூய நெறியை அவர்களுக்கு காட்டுவதால் ஸ்திரிகளுக்குச் சிறப்பான புண்ணியங்களால் அலங்கரிக்கப்பட்ட ஸ்திரிகள்தான் என்று எல்லோரும் ஒரு வாய்ப்பட சொல்லுவார்கள். ஏனென்றால் தங்களுக்கில்லாத சற்குணம் வேறொருவனுக்கு கற்பித்தலரிதல்லவோ?.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***The Rt Rev. Bishop Etienne Semeria omi the Apostolic Vicar of Jaffna, desired first of all, to invite the Holy Family Sisters of Bordeaux to serve the people of Jaffna. In 1860, he wrote to all priests and the faithful and gave this information through a Circular, a special extract from which is given below.***

**(1860 - Bishop Semeria's letter)**

No one will be more suitable to form young girls than religious sisters who are holy and possess (all) good qualities. These religious women filled with courage have given themselves to God, to be holy in body and spirit, in order to be concerned only with the things of the Lord (cf 1Cor 7:31ff) These generous women are present in many countries, under different names, wearing different costumes and are courageously devoting themselves to teaching children, caring for the sick, assisting the poor, these bring comfort and consolation to all exiles, in this valley of tears through their many good works.

Almost in all the Vicariates in India we find religious sisters of different Congregations. They are special blessings to these places. We too want to get down religious sisters to Jaffna, without delay. We hope that a few of them will be coming very soon to Jaffna and will remain with us. That day will be the dawn of blessings to this island of Ceylon.

While eagerly waiting for their speedy arrival, we have bought a spacious property to build the first convent in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ceylon. However, to construct the convent, a parapet wall, along with other buildings such as a school and hostel for boarders with all the necessary facilities, will require a fair amount of money.

This religious congregaton will not only be a very good institution for young girls, it will certainly be a source of charitable works. Wherever the sisters are they will have a dispensary for the sick, a home for elders, a place of refuge for those who go astray and many other good works. Although we are unable to predict how the Lord is going to use them in this Vicariate, we believe they will start a college for students and also an orphanage for the abandoned and homeless children.

There will be hardly anyone who will not feel moved to see the sad plight of these unfortunate children who have lost their parents, nor will they fail to alleviate their sorrows. Our sisters will establish a home for them or they will improve the existing building. We will take in as many orphaned children as we can care for and entrust them to our sisters who will be mothers to them. In this way these poor children will not only grow in good conduct, in love of God and piety, they will also be given adquate knowledge and skills to live in society. It will not be possible to estimate how many lost girls will be snatched away from bad repute and evil ways, that lead to sin through this home of protection, where they will experience spiritual healing and will follow the path to salvation.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Since we heard that there are christians who are eager to help if we intend to put up a children's home, if we approach them, we ask all these good christians of our Vicariate to come forward and help this cause in the name of God who is their compassionate protector and in the sweet name of Jesus.

Blessed are those who will listen to God's inspiration and respond generously, for their names will find a place in the book of life. Besides, these benefactors will have a share in the prayers and good actions of all the priests, religious and children. The orphans will remember them daily in their night prayer.

In other countries there are women, virtuous and holy, "Virgins who love only the spotless Lamb and follow Him", why should not this holy state of virginity grow in our land?


We may not know that there are now women who have renounced the world and have consecrated their virginity to God, in this country. But there is this fact that young women should discipline their lives, mortify their senses and become more modest than even before.

Where will they learn about this holy subject of purity? Who will show them this sublime path? All will accept that only those womenwho are adorned with virtues particular to women can do this: for, is it not difficult to teach others what one does not live?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் ஆயரின் ஆசிச் செய்தி



முத்தானசொத்து என்ற இந் நூலுக்கு ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். போர்டோவின் திருக்குடும்பச் சபைத் துறவிகளின் யாழ் வருகை எம் மகளிருக்கும், குடும்பங்களுக்கும் மகத்தான கொடையாகும்.

146 வருடங்களாக ஐரோப்பிய நாடுகளில் இருந்து வந்த இச்சபைச் சகோதரிகளின் மகத்தான சேவையால் யாழ் மண் சிறப்புற்றிருக்கின்றது. மாறுபட்ட சூழல், பண்பாடு, மொழி, இனம், உணவுப் பழக்கவழக்கங்கள் மத்தியில் இவற்றையெல்லாம் உள்வாங்கி யாழ் மறை மாவட்டத்தில் சிறந்த குடும்பங்களை உருவாக்க உழைத்தனர். அவர்களது ஆழ்ந்த இறைப்பற்று அவர்களது சிறப்பான பண்புகளாகும்.

அமலமரித் தியாகிகள் பணிபுரிய ஆரம்பித்த காலத்தில் ஆயர் குருக்களுக்கு உதவியாக இருந்து இறையரசுப் பணியில் இறைவன் மாத்திரமே என்ற விருதுமொழியைத் தாங்கி யாழ் திருச்சபை வளர உடன் உழைப்பாளர்களாக விளங்கினார்கள். மக்கள் முன்னேற்றத்திற்காக அநாதை இல்லங்கள், தொழிற்கல்வி நிலையங்கள், விடுதிப் பாடசாலைகள் என்பன மூலம் இளைஞர்கள், யுவதிகளை உருவாக்கினார்கள்.

இளம் பெண்களின் இறைஅழைத்தலுக்கு வித்திட்டு ஆங்கில சுதேச நவசந்நியாச இல்லங்களை ஆரம்பித்தனர். இவர்களது பணி எமது மறைமாவட்டம் என்று மட்டுமிராது தென் பகுதியிலும் பரவிற்று. அங்கும் அவர்கள் மேற்கொண்ட பணியில் சிங்கள, கத்தோலிக்க மக்களிடையே இறையழைத்தல் பெருக கடுமையாக உழைத்தனர். இன்று இச் சபையானது எட்டுக்கும் மேற்பட்ட மறைமாவட்டங்களிலும் பரவி சிறப்பான பணியை ஆற்றி வருகின்றது.

எங்கும் திருச்சபையின் மேய்ப்புப் பணி ஓங்கி வளர தம்மை முழுமையாக அர்ப்பணித்து கடுமையாக உழைத்து வருகின்றனர். இச்சபைச் சகோதரிகளின் சாட்சிய வாழ்வைப் பின்பற்றி இன்றும் இளம் யுவதிகள் இறைபணிக்குத் தம்மை அர்ப்பணிக்கின்றனர். 146 ஆண்டுகள் நிறைவில் இச்சபையினர் மேலும் தம் அர்ப்பணப் பணியில் வளர்ந்து எமது மறை மாவட்டங்களில் விண்ணரசின் விழுமியங்களைக் கொணர என் வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன்.

**அதி. மேன்மை தங்கிய இ. தோமஸ் சவுந்தரநாயகம்**
யாழ் ஆயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message of our General



*It is a privilege to write a few words for this book which tells the story of the Holy Family presence in Jaffna from 1861- 1938. The writing of the book involved a work of research and translation particularly from the Annals of the Holy Family which are a record of the early years of the Holy Family presence in Jaffna. Thanks to the first members who set foot on Sri Lanka soil and their successors we have the opportunity to get a glimpse of what life was like then, of the joys and struggles, of their response to the needs of the people and of the welcome and collaboration given to them by the people. We have also the on-going story for at least 77 years.*

*A journey back to our origins and forward to today helps us to be more aware of where we came from and where we are going, guided by our tradition and the action of the Spirit in the lives of our members past and present.*

*We need to know our story in order to live our charism with creative fidelity in the reality of today. It is a reminder that we build on the lives of those who have gone before us and that we, in our turn, hand on the torch to the next generation. All who were part of the Holy Family story in the Province are part of the tradition; each one's unquine contribution has enriched that tradition.*

*May all who read this story be encouraged by the vision of our Founder who, responding to the call of the Spirit of God, was inspired to found a Family, open to all vocations, and called to build "new society" where all may be gathered together as ONE and live in uniity and communion. respecting the diversity and dignity of each person and of the whole of creation.*

*May you "go forward" with trust and confidence in our Trinitarian God who journeys with you and in the Holy Family, our models and guides.*

***Sr.Margaret Muldoon***
Superior General



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாநிலத் தலைவியின் மகிழ்வுச் செய்தி



இலங்கைத் திருக்குடும்பச் சபையின் வரலாற்றினை எடுத்தியம்பும் வடிவங்களுள் இந்த வாழ்வுக் கடிதங்கள் (ANNALS) நமது சபையின் உயிர்த்துடிப்பான சொத்துக்கள் எனலாம். இவை அனைத்தும் பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்டிருந்தமையால் இதுவரை காலமும் எல்லோராலும் இவற்றை வாசித்துப் பயன்பெற முடியாதிருந்தது. இன்று இக்கடிதங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு "முத்தான சொத்து" என்னும் நூல்வடிவமாக வெளிவருகின்றது. இவ்வரலாற்றுக் கடன் நிறைவெய்தியமை கண்டு மனம் மகிழ்ந்து, இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

எமது ஆதித் தாய்மார் தமது ஒவ்வொரு அனுபவங்களையும், இங்கு வாழ்ந்தவாழ்க்கை முறைகளையும், அன்றாடம் நடந்த சிறு, சிறு சம்பவங்களையும் தமது பிரான்சிலிருந்த தலைமைத்துவத்துக்கு அடிக்கடி அச்சொட்டாக எழுதி, தமக்கும் அவர்களுக்கும் இடையில் இருந்த உறவை வளர்த்துக் கொண்டிருந்தார்கள் என்பதை இக்கடிதங்கள் தெளிவாக்க காட்டுகின்றன.

அறிமுகமற்ற பண்பாட்டியல் கலாசாரத்தோடு தம்மை இணைத்து, பல சவால்கள், சோதனைகள் மத்தியில் வீரத்துவமான பெண் துறவிகளாக செயல்பட்ட இவர்களின் வரலாற்று நிகழ்வுகள் எம் வாழ்வுக்கு ஒரு சவாலாக அமைகின்றது. இறைபராமரிப்பில் நம்பிக்கை கொண்டு, செபத்தால் வெல்ல முடியாதவை எதுவுமில்லை என்ற ஆழமான நம்பிக்கையோடு செயல்பட்ட வாழ்வின் நிலைகளையும் இக்கடிதங்களில் நாம் காணலாம். இவர்கள் முன்னெடுத்த பணிகள், துணிகரமான செயற்பாடுகள் இவர்கள் சபைமீதும், இறையரசின் மீதும், இறைமக்களின் உடல், உள, ஆன்மீக வளர்ச்சி, முன்னேற்றத்தின் மீதும் கொண்ட தணியாத தாகத்தை எடுத்தியம்புகின்றன.


பொதுவாக நோக்கின் இக்கடிதங்கள் ஓர் ஆன்மீகப் பயணமாகவே தோன்றுகின்றது. நமக்கு ஒரு புத்தூக்கமும், உற்சாகமும் தரும் அடையாளங்களாகவே மலர்ந்துள்ளது. எனவே நமது நிறுவுனரின் கனவுக்கு வாழ்வும் வடிவமும் கொடுத்த உன்னத அடையாளமாக விளங்கும் ஆதித் தாய்மாரின் வாழ்வும், பணியும் நமக்கும் வாழ்வாக அமைய வாழ்த்துகின்றேன்.

**யோலன்ட் மத்தாயஸ்**
மாநிலத் தலைவி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய, சமூக, வரலாற்றுப் பின்னணி



இலங்கைத் திருச்சபை வரலாற்றை நோக்கின், அதன் பரம்பலுக்கும் வளர்ச்சிக்கும் ஆரம்ப காலம் முதல் இன்று வரையும் பல துறவற சபைகள் பெரும் பங்களிப்புச் செய்துள்ளன. இச்சபையினரின் பணிகள் பற்றி விபரிக்கும் ஆவணங்கள் அந்தந்தச் சபையினரின் தலைமைப்பணி மையத்திற்கு அறிக்கைகளாகவும், கடிதங்களாகவும், வேறு இலக்கிய வடிவங்களாகவும் இங்கிருந்து அனுப்பப்பட்டிருந்தன. இவ் ஆவணங்கள் அச்சபையினரின் ஆவணக்காப்பகங்களில் கவனமாகப் பேணப்பட்டு வருகின்றன. 1862 முதல் இலங்கையில் வடவிக்காறியேற்றில் பிரான்ஸ் - போடோ திருக்குடும்பச்சபை அருட்சகோதரிகள் பணியாற்றினர். வடவிக்காறியேற் யாழ்ப்பாண விக்காறியேற் எனவும் அழைக்கப்பட்டது. அவ் வேளையில் இவ் வடவிக்காறியேற் இன்றைய யாழ், மன்னார், திருமலை-மட்டுநகர், அனுராதபுரம், சிலாபம், குருநாகல் ஆகிய மறைமாவட்டங்களின் நிர்வாகப்பரப்புக்களை உள்ளடக்கியிருந்தது. யாழ்விக்காறியேற்றில், பணியாற்றிய பிரான்ஸ் - போடோ திருக்குடும்பச்சபை அருட்சகோதரிகள், தங்கள் சபை முதல்வருக்கு 1862 முதல் 1938 வரையிலான காலப்பகுதியில் எழுதிய கடிதங்கள், உரோமாபுரியிலுள்ள இச்சபையினரின் ஆவணக் காப்பகத்திலிருந்து பெறப்பட்டு அருட்சகோதரி பிறிஜிற் மல்லிகா அவர்களால் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. (பிரான்ஸ் - போடோ திருக்குடும்பச்சபையினரின் தலைமைப்பணி மையம் தற்போது உரோமாபுரியில் இயங்கினாலும் 1860களில் பிரான்ஸ் நாட்டிலேயே இயங்கியது. ஆரம்ப காலங்களில் இலங்கையில் (யாழ்ப்பாணத்தில்) பணியாற்ற வந்த இச்சபைசார் அருட்சகோதரிகளில் அதிகமானோர் பிரான்ஸ் நாட்டவர்களே. இதனால் இக்காலத்து முதன்மை ஆவணங்கள் பிரெஞ்சு மொழியிலேயே காணப்படுகின்றன.)

இக் கடிதங்கள் பற்றியும், இக்கடிதங்களின் உள்ளடக்கங்கள் பற்றியும் தெளிவான அறிவைப் பெறுவதற்கு இக்கடிதங்கள் எழுதப்பட்ட சமகாலத்துச் சமய, சமுக, fyhrhu, அரசியற் பின்னணிகள் பல்பரிமாண நிலையில் நோக்கப்படுதல் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியற் பின்னணி

இலங்கையின் ஆட்சி நிர்வாகம் ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயரிடம் மாறியதன் விளைவாக கத்தோலிக்கத் திருச்சபையின் வரலாற்றிலும் கத்தோலிக்கத் திருச்சபைக்குச் சாதகமாகப பல மாற்றங்கள் ஏற்பட்டாலும், அது பல சவால்களையும் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. ஆங்கிலம் ஆட்சியாளரின் நிர்வாக மொழியாக மாறியதுடன் ஆங்கில அறிவுள்ளவர்களுக்கு அரசில் வேலைவாய்ப்புக்கிடைத்தது. பல வேலை வாய்ப்பிற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. விளைவாக, ஆங்கில அறிவுள்ளவர்கட்கு உயர்வேலை வாய்ப்புக்கிடைத்தது. இதனால் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு ஆங்கிலக்கல்வியளிப்பதில் அதிக ஆர்வம் காட்டினர் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து வந்திருந்த அங்கிளிக்கன், மெதடிஸ்ற், அமெரிக்க மிஷனறி திருச்சபையினர் பல இடங்களிலும் பாடசாலைகளை ஆரம்பித்து ஆங்கிலக்கல்வியை வழங்கினர். கத்தோலிக்க குருமார் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே பணியாற்றியதாலும், ஏனைய பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய காரணத்தினாலும், கத்தோலிக்கப் பெற்றோர் எதிர்பார்த்த ஆங்கிலக்கல்வியை வழங்கும் நிலையில் கத்தோலிக்க குருமார் இருக்கவில்லை.

## யாழ்ப்பாணத்து சமய சமூக கலாசார பின்னணி

19 ஆம் நூற்றாண்டின் நடுக் கூற்றில் இலங்கையின் வட விக்காறியேற்றில் மதங்கள் மத்தியில் சுமுகமான உறவு நிலவவில்லை. இலங்கையின் வடபகுதியில் சுதேச மதமான இந்து மதமே அதிக மக்களால் கடைப்பிடிக்கப்பட்டது. இருப்பினும், கிறிஸ்தவ மதங்கள் மேலாதிக்க உணர்வு நிலையிலிருந்து இந்து மதத்தைக் குறைந்த மதிப்பீட்டுக் கண்ணோட்டத்தில் நோக்கின. இந்து மதம் கிறிஸ்தவ மதங்களுடன் ஒப்பிட்டு நோக்குவதற்குத் தகுதியற்றது என்னும் மேலாண்மைவாத மனநிலையே எல்லா ஐரோப்பியர் மத்தியிலும் காணப்பட்டது. இந்து மதம் (pagan) என்னும் பதத்தினால் அழைக்கப்பட்டதிலிருந்து ஐரோப்பிய மேலாண்மை தெளிவாகின்றது. ஐரோப்பிய மேலாண்மை மதம்சார் விடயங்களில் மட்டுமல்ல ஏனைய சமூக கலாசார கூறுகளிலும் பிரதிபலித்தது.

அதே வேளையில் கிறிஸ்தவ சபைகள் மத்தியிலும் போட்டிகளும், பொறாமைகளும் நிலவின. கத்தோலிக்க மறையை புரட்டஸ்தாந்து சபைகள் ஒட்டு மொத்தமாக வெறுத்தன. ஐரோப்பாவில் ஆரம்பித்த இக் குரோதப் போக்கு இலங்கையிலும் பிரதிபலித்தது. இப்பின்னணியில் கத்தோலிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்கியது. ஆங்கிலேயர் அனைத்து மதங்களுக்கும் சுதந்திரம் அளித்த போதும் புரட்டஸ்தாந்து சபைகள் ஆட்சியாளர்களின் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தன. கத்தோலிக்க மதம் கிறிஸ்தவ மதமாயிருந்த போதும் புரட்டஸ்தாந்து மதங்களுக்குக் கிடைத்த வசதிகளும் வாய்ப்புக்களும் இதற்குக் கிடைக்கவில்லை. மேலும், கத்தோலிக்கருக்கும் புரட்டஸ்தாந்தினருக்குமிடையில் இடம்பெற்ற போட்டிகள் விரும்பத்தகாத விளைவுகளையே தோற்றுவித்தன.

1860களில் யாழ் சமுகம் பல நிலைகளில் பின்தங்கியதாகக் காணப்பட்டது. இதற்கு அறநெறி வாழ்க்கை முறைக்கும், அறிவு வளர்ச்சிக்கும் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படாமையே முக்கிய காரணிகளாக விளங்கின. அங்கீகரிக்கப்பட்ட சாதி அமைப்பு, பெண்கள் சமத்துவமற்ற முறையில் நடத்தப்பட்டமை, மூடநம்பிக்கை, பலதாரத்திருமணம், அறவாழ்வு சமயங்களால் வலியுறுத்தப்படாமை, பிரயாண வசதியின்மை, உட்கட்டமைப்பு வளர்ச்சியடையாத நிலை எனச் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

## யாழ்ப்பாணத்தில் நிலவிய பெண்கள் கல்விப் பின்னணி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன் அரைக்கூற்றில் யாழ்ப்பாணத்தில் பெண்கள் கல்வி பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டது. 1816 இல் முழு யாழ்க்குடாவிலும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இரண்டு பெண்கள் மட்டுமே காணப்பட்டனர். என தென் இந்தியத்திருச்சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்களுக்குக் கல்வி பெரும் கேடுகளை ஏற்படுத்துமென்னும் கருத்து யாழ்ப்பாணத்துப் பெற்றோர் மத்தியில் ஆழமாகவும், இறுக்கமாகவும் பதிந்திருந்தது. என்பதை 1891 யூன் மாதத்தில் வெளியான "இந்து சாசன"ப் பத்திரிகை வாயிலாக அறிய முடிகிறது. எனினும், இலங்கையின் ஏனைய இடங்களுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாணத்தில் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை மிக உயர்ந்ததாகக் காணப்பட்டது. 1830 களில் இலங்கை முழுவதும் கற்ற மாணவர்கள் தொகை 9988 ஆகக் காணப்பட, இதில் யாழ்ப்பாணத்தில் மட்டும் 7477 மாணவர்கள் காணப்பட்டனர். இதற்கான அடிப்படைக் காரணம் யாழ்ப்பாணத்தில் அங்கிலிக்கன், மெதடிஸ்ற், அமெரிக்க மிஷனறி சபையினரால் பாடசாலைகள் பல ஆரம்பிக்கப்பட்டு இயங்கியமையாகும். 1824ல் அமெரிக்க மிஷனறிமார் பெண்களுக்கென ஓர் உயர்தரப் பாடசாலையை உடுவிலில் ஆரம்பித்தனர். 19 ஆம் நூற்றாண்டின் முன்னரைக்கூறுவரையும் உள்ளக முரண்பாடுகள் காரணமாக கத்தோலிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமார் கல்வி மேம்பாட்டிற்கு அதிக பங்களிப்புச் செய்ய முடியாத சூழல் நிலவியது.

## ஐரோப்பாவில் சபையின் நிலை

பிரஞ்சுப் புரட்சியின் விளைவாகப் பல வகையிலும் நலிவுற்றிருந்த பிரான்ஸ் நாட்டு மக்களின் வாழ்வில் அமைதியையும், சுபீட்சத்தையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தும் இலட்சியத்துடன், பிரான்ஸ்- போடோ மறைமாவட்டத்தைச் சேர்ந்த தவத்திரு பீற்றர் பியன்வெனு நோஆய் (Pierre Bienvenu Noailles) அடிகளினால் திருக்குடும்பச்சபை 1820 இல் நிறுவப்பட்டு, நிறுவுனராலேயே அதே ஆண்டு இச்சபையின் ஒழுங்குகள் தயாரிக்கப்பட்டன. இவ்வொழுங்குகள் 1825 இல் போடோ மறை மாவட்ட ஆயரினது அங்கீகாரத்தைப் பெற்றிருந்தாலும், இவை 1844, 1851 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டன. சபை ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகளிலேயே யாழ் விக்காறியேற்றையும் தங்கள் பணித்தளமாக ஏற்றுக் கொண்டமை எதிர்கால வளர்ச்சிக்கான அடையாளமாக நோக்கலாம். திருக்குடும்பச் சபையினரின் யாழ் வருகையில் அமலமரித்தியாகிகள் சபையினருக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்புண்டு.

யாழ்ப்பாண விக்காறியேற்றின் முதல் அப்போஸ்தோலிக்க ஆளுநர் ஆயர் ஒறாசியோ பெற்றக்கினி ஐரோப்பியக் குருமாரின் உதவி நாடி ஐரோப்பா எங்கும் அலைந்த பின் அமலமரி தியாகிகளின் சபையை நிறுவிய ஆயர் இயூவின் டீ மசனற் இடம் விடுத்த உருக்கமான வேண்டுதல் காரணமாக 1848 இல் அமலமரி தியாகிகள் சபையினர் யாழ்விக்காறியேற்றில் பணியாற்ற வந்தனர். இறை ஆவியின் ஏவுதல் பெற்று நீண்ட தரிசன நோக்கில் செயற்பட்ட திருக்குடும்பச் சபையின் நிறுவுனர், ஆன்மீக ஆதரவையும், தார்மீக ஆதரவையும் பெறும் நோக்குடன் அமல மரித்தியாகிகள் சபையின் நிறுவுனர் ஆயர் இயூயின் டீ மசனெட் அவர்களுடன் கலந்தாலோசித்த 'பின் திருக்குடும்பச்சபையை அமல மரித்தியாகிகள் சபையுடன் 1858 இல் இணைத்துக் கொண்டார். இந்த இணைப்பு திருக்குடும்பச்சபையினர் இலங்கையின் வட பகுதியில் பணியாற்றுவதற்கு வழியை ஏற்படுத்திய முக்கிய ஓர் காரணியாகும். ஆயர் செமேரியா தவத்திரு நோ ஆயிடம் விடுத்த மன்றாட்டான வேண்டுகோள் காரணமாக 1861 இல் யாழ் விக்காறியேற்றில் பணியாற்ற வரவிருந்த அருட்சகோதரிகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. எனினும், இச்சகோதரிகள் யாழ்விக்காறியேற்றில் பணிப்பொறுப்பை ஏற்பதற்கு முன்பே நிறுவுனர் 1861 இல் மரணத்தைத் தழுவிக் கொண்டமை ஓர் துன்பமான விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட இலங்கையில் திருச்சபை

ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையின் வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டின் நடுக்கூற்று வரையும் மறைபரப்பிலும் மேலாக, பணித்தளத்தின் ஒழுங்கமைப்பே அதிகம் இடம் பெற்றுள்ளது. பத்துருவாதோ உடன்படிக்கையைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த முடியாத சிக்கல்களுக்கும் ஏனைய பல பிரச்சினைகளுக்கும் விடை காணும் முகமாக 1834 இல் இலங்கை தனி விக்காறியேற்றராக (Vicariate) அதாவது தன்னாதிக்க நிர்வாக அலகாக நிறுவப்பட்டது. இதனைத் தொடர்ந்து பத்துரோவாதோ ஆதரவாளருக்கும், விசுவாசப்பரம்புதல் சபை ஆதரவாளருக்குமிடையே (Padrado vs Propaganda) ஏற்பட்ட முறுகல் காரணமாகவும், இவை தொடர்பான ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் 1849 இல் இலங்கை வட, தென் விக்காறியேற்றுக்களாகப் பிரிக்கப்பட்டது.

## யாழ்ப்பாண வருகை

யாழ்ப்பாணத்தின் முதலாவது அப்போஸ்தலிக்க ஆளுநர் இத்தாலிய ஒறற்றோரியன் குழுவைச்சேர்ந்த ஆயர் பெற்றக்கினியைத் தொடர்ந்து, அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த ஆயர் செமேரியா அவர்கள் வட பகுதியின் இரண்டாவது அப்போஸ்தலிக்க ஆளுநராக நியமனம் பெற்றார். ஆயர் பெற்றக்கினி தமது நிர்வாககாலத்தில் பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர் நோக்கியிருந்தார். ஆயர் செமேரியா பொறுப்பேற்கும் போது இவற்றின் சில சிக்கல்களும், சவால்களும் தீர்க்கப்பட்டிருந்த போதும், முற்றாக எல்லாவற்றிற்கும் தீர்வு காணப்படவில்லை. இப்பின்னணியில் வடவிக்காறியேற்றில் கத்தோலிக்க மறையை முனைப்புடன் பரப்பும் இலக்குடன் ஆயர் செமேரியா சில ஏற்பாடுகளை முன்னெடுத்தார். 1862 இல் அமலமரித்தியாகிகள் சபையின் பொது அமர்வில் கலந்து கொள்ள ஐரோப்பா சென்ற ஆயர் சமேரியாவுடன் யாழ் நோக்கிப்பயணித்த போடோவின் திருக்குடும்ப அருட்கோதரிகள் அறுவர் 1862 நவம்பர் 2ஆம் திகதி யாழ் மண்ணில் முதல் கால்பதித்தனர். அருட் சகோதரி மேரிசேவியார் மார்ச்கன்ட் (பிரான்ஸ்) என்பவர் தலைமையில் ஏனையவர்களாக அருட்சகோதரிகள் மேரிலிகோறியர் (பிரான்ஸ்), மேரி யோசப் மறோய்ல்ஸ், (பிரான்ஸ்) ஸ்ரனிஸ்லாஸ்குயின் (அயர்லாந்து), கெலன் வின்ரர் (அயர்லாந்து) திரேஸ் வன்மியுஸ் (ஒல்லாந்து) என்போரே வருகை தந்த முதற் குழுவினராகும்.

## கல்விப்பணி ஆரம்பம்

அருட்சகோதரிகள் மறைப்பணியாற்றும் இலக்குடன் அழைக்கப்பட்டாலும், வடவிக்காறியேற்றிலுள்ள மாணவிகளுக்குக் கல்வி வழங்குதலும், சீரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக ஆளுமை உருவாக்கத்தை அளிப்பதும், பெற்றோரற்ற பிள்ளைகளைப்பராமரிப்பதும் அவர்களின் குறிப்பான பணியாயிருந்தது. இவற்றுடன் மறைப்பணியில் எவ்வாறான முறைகளிலெல்லாம் பங்களிப்புச் செய்யமுடியுமோ அனைத்து வழிகளிலும் பணியாற்றியுள்ளார்கள் என்பதை இக்கடிதங்களில் காணப்படும் விடயப்பொருளைக் கொண்டு அறியக் கூடியதாயுள்ளது. அருட்பணி. வி.கசினிலி (V.Cassinelli) அவர்கள் தயாரித்த யாழ் விக்காறியேற்றின் முதல் அறிக்கையின்படி 1850 இல் கத்தோலிக்க மாணவர்களுக்கொன்றும், மாணவிகளுக்கொன்றுமாக இரண்டு ஆங்கிலப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பெண்கள் கத்தோலிக்க பாடசாலையில் 1850 இல் திருமதி. மேரி ஆன் ஒ பிளனகன் (Mrs.A Mary Anne O.Flanagan) அவர்களைத் தலைமை ஆசிரியையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் 28 மாணவிகள் கல்வி பயின்றனர். 1862 இல் அருட்சகோதரிகள் இப்பாடசாலையினைப் பொறுப்பேற்றனர்.

## கடிதங்களின் உள்ளடக்கம்

1862 முதல் இலங்கையின் வட விக்காறியேற்றில் பணியாற்ற அழைக்கப்பட்ட அருட்சகோதரிகள் பிரான்ஸ் நாட்டிலுள்ள தங்கள் சபை முதல்வர் அருட்சகோதரி காடி மோசாங் (Hardy Moisan) தாயாருடன் கடிதங்கள் மூலம் உறவைப் பேணினர் இக்கடிதங்களை யாழ்ப்பாணத்திலிருந்து, எழுதிய அருட்சகோதரி மார்ச்கண்ட் (குழுத்தலைவி), தங்களைப் பற்றியும் தங்கள் பணியைப் பற்றியதுமான செய்திகளைத் தொடர்ச்சியாக அறிவிப்பதை முதன்மை இலக்காகக் கொண்டிருந்தபோதும் இக்கடிதங்களின் உள்ளடக்கங்களாக அருட்சகோதரிகள் ஆற்றிய மறைப்பணி பற்றிய தகவல்கள் உண்டு; அருட்சகோதரிகளது சுகநலன் பற்றிய செய்திகளுண்டு; எதிர்கொண்ட கலாச்சாரஅதிர்ச்சியின் வெளிப்பாடுகள் உண்டு; யாழ் மக்களின் பழக்கவழக்கங்கள் பற்றிக் கூறும் மானிடவியல் சார் விடயங்களுண்டு; வரலாற்றுச்செய்திகளுண்டு; அவர்களின் சாதனைகள், வெற்றிகள் தோல்விகளுமுண்டு. ஒட்டுமொத்தமாக, யாழ் மாகாணத் திருக்குடும்பச்சபையின் வரலாற்றுத்தகவல்கள் என பல்வேறுபட்ட உள்ளடக்கங்களைக் கொண்ட ஆவணத்தொகுப்பாக இவற்றை நோக்க முடியும்.

இக்கடிதங்கள் இங்கு பணியாற்றிய அருட் சகோதரிகள் தங்கள் மேலதிகாரிகள் மேல் கொண்டுள்ள இதய சுத்தியான உறவையும், உறவின் ஆழத்தையும் நெருக்கத்தையும், உள்ளங்களின் ஒன்றிப்பையும் வெளிப்படுத்துகின்றன. நிர்வாக மையத்திலிருந்து நெடுந்தொலைவில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் பணியாற்றிய அருட்சகோதரிகள் மேல், அவர்களது அதிகாரிகள் அதிக பற்றும், அக்கறையும் கொண்டிருந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை இங்கிருந்து வரையப்பட்ட மடல்களின் தொனியும் தன்மையும் விளம்பி நிற்கின்றன. தங்கள் வாழ்வில் தாம் எதிர்கொண்ட எல்லா விடயங்களையும் தெளிவாகவும் கூடிய விபரிப்புடன் எடுத்துக்கூறியுள்ள தன்மை மேலதிகாரிகள் மேற்கொண்டுள்ள நம்பிக்கையினதும் நட்பினதும் வெளிப்பாடாகக் கொள்ளுதல் பொருத்தமானது.

யாழ்ப்பாணத்தில் அருட்சகோதரிகள் தங்கள் பாடசாலைகளிலும், பணித்தளங்களிலும் தம் பராமரிப்பிலுள்ள பிள்ளைகள் மட்டில் கொண்டிருந்த கரிசனையையும் கவனிப்பையும் அவர்கள் வரைந்த மடல்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. அருட்சகோதரிகளின் பராமரிப்பிலுள்ள பிள்ளைகள், பிள்ளைகளின் செயற்பாடுகள், அருட்சகோதரிகள் வினாக்களுக்குப் பிள்ளைகள் அளித்த பதில்கள் முதலாகப் பல விடயங்கள் இக்கடிதங்களில் இடம்பெற்றுள்ளன. இவை சகோதரிகள் தம் பணியைப் பொறுப்புடனும், பிள்ளைகள் மட்டில் அர்ப்பணிப்புடனும் நடந்துள்ளமையின் பிரதிபலிப்புக்களாக நோக்கவேண்டியவை. திருமுழுக்கு, பாவமன்னிப்பு, திவ்விய நற்கருணை, உறுதிபூசுதல் ஆகிய திருவருட்சாதனங்களின் முன்பும், பின்பும் செலுத்திய அக்கறையும் கவனிப்பும் பிள்ளைகளை எதிர்காலத்திற்கேற்ற கத்தோலிக்கர்களாக உருவாக்குவதற்கு அருட்சகோதரிகள் அளப்பரிய சேவைகள் பல ஆற்றியுள்ளனர். உருவாக்குதற் பணியின் போது பிள்ளைகளைப் பாராட்டியும், ஊக்குவித்தும், தன்நம்பிக்கையை ஏற்படுத்தியும் திருத்தங்களை மேற்கொண்டுள்ளனர்.

இந்து மதப் பிள்ளைகளை கத்தோலிக்க மறையில் இணைப்பதில் அருட்சகோதரிகள் காட்டிய ஆர்வமும் திருச்சபைக்கு வெளியே மீட்பு இல்லை என்னும் இறுக்கமான இறையியற் கோட்பாடைத் திருச்சபை கண்டிப்புடன் கடைப்பிடித்த வரலாற்றுப்பின்னணியும் நோக்குதலே பொருத்தமானது. மேலும், சீர்திருத்த மறை (Protestant) பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் அருட்சகோதரிகளிடம் உருவாக்கம் பெற வேண்டும் என்னும் நோக்குடன் தங்களிடம் கையளித்தமையை இவ்வாவணங்களில் பல இடங்களிலும் காணக்கூடியதாயுள்ளது. இவ்வாறான குறிப்புக்கள் பல இடம்பெற்றுள்ளமையும் இதை அச்சபையின் மறைப்பணியாளர்கள் விரும்பாமையையும் அக்காலத்தில் நிலவிய கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து போட்டி, எதிர்ப்பு மனப்பாங்கின் பின்னணியிலும் திருத்தெந்து சங்கத்தின் பின்னணியிலும் நோக்கப்பட வேண்டியவை.

## சபையின் வளர்ச்சிக்கான பங்களிப்பு

அருட்சகோதரிகளின் கல்விப்பணியையும், பெற்றோரை இழந்த பிள்ளைகளை உருவாக்கும் பணியுடன், பங்கு மறைக்கல்விப் பணியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்ட போதும் தங்கள் சபையின் வளர்ச்சியிலும் ஆர்வத்துடன் செயற்பட்டிருக்கின்றார்கள். திருக்குடும்ப அருட்சகோதரிக்கொன்றும், சுதேச மகளிர் துறவு வாழ்வை மேற்கொள்ள புனித பேதுறுவின் அருட்சகோதரிகளுக்கொன்றுமாக இரண்டு நவசன்னியாச பயிற்சி மடங்களை ஆரம்பித்தமை சபையின் வளர்ச்சியையும், பணியின் பரிமாணத்தின் தேவையையும் கருத்திற் கொண்டு செயற்பட்டமையின் வெளிப்பாடாகக் கொள்ளலாம். 1862 இல் கொழும்பில் ஒரு மடத்தை நிறுவும் திட்டமிருந்த போதும், ஆட்பற்றாக்குறையால் செயற்படுத்த முடியவில்லை. இருப்பினும் 1870 இல் குருநாகல் என்னும் இடத்தில் இரண்டாம் மடமும் தொடர்ந்து மாதகல், மன்னார், வெனப்புவ ஆகிய இடங்களில் ஏனைய மடங்களும் படிப்படியாக நிறுவப்பட்டன

அருட்சகோதரிகள் பணியாற்றிய காலத்தில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளமையை அவர்களின் மடல்கள் எடுத்துரைக்கின்றன. தமிழ் மொழியைக்கற்பதில் எதிர்கொண்ட பிரச்சினைகள், அடிப்படை வசதிகளற்ற ஆரம்பகால தங்குமிடங்கள், பாம்புகளின் பூச்சிகளின் தொல்லைகள், (அதிகம் இக்குறிப்பில் இடம்பெற்றுள்ளவை) பழக்கப்படாத உணவுகள், கடும் வெப்பத்தின் தாக்கம், பராமரிப்பிலுள்ள பிள்ளைகளின் மரணங்கள், வேகமாக உடல்நலம் குன்றியமை பணியாற்ற வந்த அருட்சகோதரிகளின் மரணங்கள், பிரயாணங்களின் போது ஆறுகளையும், ஏரிகளையும் கடந்த ஆபத்தான அனுபவங்கள், சுதேசிகளிடம் காணப்பட்ட துப்புரவுக் குறைவான தன்மை, கொலரா போன்ற தொற்று நோய்களின் வேகமான பரவல், புரட்டஸ்தாந்தினரின் பகைமை, இவர்களின் பணி பற்றிய தவறான பிரச்சாரங்கள், ஐரோப்பிய பெண்களிடமும், பிள்ளைகளிடமும் காணப்பட்ட அசமந்தப்போக்கு, குருநாகல்போன்ற இடங்களுக்கு சென்ற மாட்டு வண்டிப்பயணங்கள், பயணங்களின்போது வெட்டவெளிகளில் இரவுகளைக் கழித்தமை, அவற்றிலும் மேலாக யாழ்ப்பாணத்து மக்களின் மனப்போக்கைப் புரிந்து கொள்வதிலும் உளவியல் ரீதியான தாக்கங்களை அனுபவித்துள்ளார்களென ஊகிக்க முடிகின்றது. "தமிழர்கள் தாம் விரும்பியதைத் தான் விளங்கிக்கொள்வர்" என்னும் கூற்று இதனை புலப்படுத்துகின்றது. இவற்றின் மத்தியிலும் சுதேச பிள்ளைகள் காட்டிய அன்பும், ஆதரவும் இவர்களின் சேவையை பெரும் மகிழ்வோடு வரவேற்றமையும் சுதேசிகளிடம் காணப்பட்ட நற் பண்புகளும் இவர்களை வெகுவாகக் கவர்ந்ததோடு பெரும் ஆறுதலாயும் இருந்தது. என்பதை மடல்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணமும், பெண்துறவியரும்

இலங்கையிலிருந்து முதல் பெண்துறவிகளைத் திருச்சபைக்கு அளித்த பெருமை யாழ்ப்பாணத்தைச் சாரும். முதல் பெண்துறவிகளைப் பணிக்கு அழைத்த சிறப்பும் யாழ்ப்பாணத்துக்குரியதே. திருக்குடும்பச்சபையின் அருட்சகோதரிகளே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த முதற் கத்தோலிக்க பெண் துறவிகளாவர். இவர்களது வருகை 1862 இல் இடம்பெற்றது. (எனினும் இவர்களது வருகைக்கு 240 வருடங்களுக்கு முன்பே, அதாவது 1623 இல் யாழ்ப்பாண மன்னன் பரராசசேகரனின், - (சங்கிலி - II ) மரணத்தின்பின்பு அவனது புதல்வியர்களான டோனா இசபெல்லா (Dona Isabela), டோனா மறியா (DonaMaria) ஆகிய இருவரும் இந்தியாவின் கோவா நகருக்குச் சென்று அங்கு அகுஸ்தினார் சபைப்பெண் துறவிகளாகத் தங்களை அர்ப்பணித்தனர்.) அண்ணளவாக 146 ஆண்டுகள் இலங்கையில் பணியாற்றியுள்ள திருக்குடும்பச்சபையினர் இன்று முற்றும் யாழ்ப்பாணத்து சமுக, பண்பாட்டு, அரசியற் சூழலின் வளத்திற்கும், வரட்சிக்குமேற்பத் தங்களை இசைவு படுத்தி விட்டனர். இங்கு வருகை தந்திருந்த ஐரோப்பிய முன்னோடிப் பெண்துறவிகள் தம் ஆரம்பப்பணிகளிலே சபையை மண்ணின் மயப்படுத்தும் செயற்பாடுகளிலும் ஆர்வத்துடன் ஈடுபாடு கொண்டிருந்தமையின் பிரதிபலிப்பாக இதை நோக்கலாம்.

எழுபத்தாறு ஆண்டுகள் காலமாக இலங்கையிலிருந்து வரையப்பட்ட கடிதங்களின் மொழிபெயர்ப்பாகிய இத்தொகுப்பு இன்று பணியாற்றும் சபையின் அங்கத்தினருக்கு விடுக்கும் செய்தி என்ன? முன்னோடிகளான ஐரோப்பிய அருட்சகோதரிகள் பல மட்டுப்பாடுகள் மத்தியில் பெரும் தியாகங்களை மேற்கொண்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றியதோடு, தம் பராமரிப்பிலுள்ள பிள்ளைகளிலே மனிதத்தைக் கண்டனர். இவர்களின் எடுத்துக்காட்டான துறவு வாழ்வு பெருமைப்பட வேண்டியது, கடைப்பிடிக்கப்பட வேண்டியது.

**அருட்கலாநிதி ஞா. பிலேந்திரன்**
முதுநிலை விரிவுரையாளர்,
தலைவர்/கிறிஸ்தவ,
இஸ்லாமிய நாகரிகத்துறைகள்
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்

**முன்முகனை:**



எம் அன்னையாம் திருக்குடும்பச்சபை எழில்மிகு இலங்கைத் தீவில் முதற் பெண் துறவிகள் சபையாக 1862ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 2ம் நாளில் வடபுல யாழ் மண்ணில் தடம் பதித்தாள். வித்திட்டு, முளை வளர்ந்து விருட்சமாகி, அகலக் கிளை பரப்பி, மொட்டுக்கள் அரும்பி மலராகிக் காயாகிக் கனிந்து இன்சுவை ஊறும் அமுதசுரபியாக 146 அகவைகளை நிறைவு செய்துள்ளாள். சபை நிறுவனர் பீற்றர் பியன்வெனு நோஆய் அடிகளாருடைய கனவை நனவாக்கி, நாலா திசையிலும் நறுமணம் பரப்பி நாடுகளிடையே நடைபோடுகின்றாள்.

வரலாற்று ஓட்டத்தில் காலங்களின் பதிவுகள் கடந்து செல்லும்போது, எமது அன்னை ஏன் இங்கு வந்துதித்தாள்? எவ்வாறு வருகை தந்தாள்? எவற்றைத் தாங்கி வந்தாள்? என்பதை உள்ளூர அறிய என் உள்ளத்தில் என்றும் தணியாத ஒரு தாகம். எமது ஆதித்தாய்மாரின் அறிவுரை வழியாகவும், எழுத்துருவம் பெற்ற சில கைநூல்களைப் படித்தறிந்ததன் பயனாகவும் ஒருசில உண்மைகளை உள்வாங்கினேன். ஆனால் முழுமை நிறைவடையவில்லை. அண்மைக் காலங்களில் (ARCHIVES) ஆவணக் காப்பறையில் பணியாற்றும்போது பிரான்சிய மொழியில் எழுதப்பட்ட "ANNALS" நூல்களில் இலங்கையும், யாழும் இலங்குவதைக் கண்டு பெருமகிழ்சியுற்றேன். தேடலின் ஆர்வத்திற்கு ஒரு திருப்புமுனையைக் கண்டேன்.

**வடிவமைப்பு:**

(1861 - 1938) காலவரையிலான 77வருட 45 நூல்களின் வருடாந்த வாழ்வின் நிகழ்வு அறிக்கைகள் முதன்முறையாக நமது தாய்மொழியில மொழிஆக்கம் செய்யப்பட்டுள்ளது. காலங் கடந்த மொழி நடையாக அமைந்திருந்தாலும், தெற்றென விளங்கும் தெளிநத நடையில் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. நீண்ட காலச் சிக்கலான அறுவைச் சிகிச்சைகளுடன் சீரமைக்கப்பட்டு எக்காலத்துக்குமேற்ற, புதிய பார்வையுடன் நோக்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்க மெருகூட்டப்பட்டுள்ளது. நவீன கணனி நுட்பங்களைப் பயன்படுத்தி புதுமுகப் பொலிவுடன் வெளியிட பொருத்தமான இடங்களில் அதற்குரிய பிரதிமைப் படங்களையும் பதித்து " எல்லாவற்றையும் புதியனவாக்குவேன்" என்பதற்கொப்ப புதுப்பிக்கப்பட்டுள்ளது. கண்ணைக் கவரும் கருத்தாழமிக்க முன்னைப் பழமையும், பின்னைப் புதுமையும் இணைந்த முகஅழகுடன் **"முத்தான சொத்து"** அச்சேற்றப்பட்டுள்ளது.

**நூலின் அமைப்பு:**

யாழ் மண்ணில் உருவெடுத்த திருக்குடும்ப சபை யாழ்-அப்போஸ்தலிக்க பிரதிநிதிகளாகிய ஆயர்களின் நிர்வாக இணைப்புக்குட்பட்ட குருநாகலுக்கும் விரிந்து சென்றது. குருநாகலைத் தலைமையகமாகக் கொண்டு தென்பகுதி சிங்கள கத்தோலிக்க மக்கள் வாழும் மறைமாவட்டங்களாகிய வென்னப்புவா, சிலாபம் போன்ற பகுதிகளிலும், ஏனைய இடங்களிலும் சபை விரிவடைந்து வளர்ச்சி பெற்றுள்ளது. எனவே யாழ்ப்பாணம், குருநாகல் என்னும் இருபாகங்களை உள்ளடக்கியது.

**காலவேறுபாடு:**

நவீன வசதிகளற்ற அக்காலத்தில் போக்குவரத்து, தபால் சேவைகள், தகவல் பரிமாற்றங்கள் நடைறுெவதற்கு நீண்டகாலம் பீடித்திருக்கும். எனவே இங்கிருந்து "போர்டோவின் தலன்ஸ்" தலைமையகத் தலைவிக்கு அனுப்பும் அறிக்கைகள் சென்றடைவதற்கும், அங்கிருந்து தகவல்களைத் தொகுத்து "ANNALS" நூலாக அனுப்புவதற்கும் வருட வேறுபாடு இருப்பதை நூலில் அவதானிக்கலாம்.

**உரிமைச் சொத்து:**

முத்தான சொத்துள் பொதிந்திருக்கும் ஆன்மீக செல்வங்கள் இன்று வாழும் நோஆய் குடும்பத்தின் சகல உறுப்பினர்க்கும், வருங்காலச் சகோதரர்க்கும் நற்பயன் அளிக்குமென்பது நம்பகம். சமேரியா ஆண்டகை அ.ம.தி அவர்களின் பரிந்துரையை ஏற்றுக்கொண்ட நோஆய் அடிகளார், யூஜின் டி மசனெட் ஆண்டகை ஆகிய இவர்களின் ஒப்புதலோடு முதற் சகோதரிகள் இங்கு அனுப்பப்பட்டனர். 1860ம் ஆண்டு சமேரியா ஆண்டகை யாழ் திருச்சபைக்கு வரைந்த சுற்றுமடல் வருகைக்கு நற்சான்று பகரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலக் கட்டத்தில் இறைமக்களின் விசுவாச வாழ்வை உறுதிப்படுத்த, இறைஆட்சி பரவ, சிறுவர், அநாதைகள், பெண்பிள்ளைகளின் கல்வி, ஒழுக்க மேம்பாட்டுக்காக உழைக்கச் சகோதரிகளின் சேவை முன்னுரிமை பெற்றது. பிறந்த பொன்னாட்டைத் துறந்து, ஆழ்கடலில் அலைந்து, அந்நிய நாட்டில் புகுந்து, மக்களோடு தங்களை இணைத்து, பண்பாடு, கலாசாரம், பழக்கவழக்கம், மொழி வழக்கு, சூழமைவு, வாழ்வியல் பாரம்பரியங்கள் இவற்றினூடே வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டார்கள். ''இறைவன் மாத்திரம்'' என்னும் தணியாத வேட்கையினால் கிறிஸ்துவை மக்களுக்கு அறிவித்து, அவரில் பற்றுறுதி கொண்டு வாழ இறைவனிடம் இட்டுச் சென்றார்கள். இறைபராமரிப்பில் நம்பிக்கை வைத்து சகல வேதனை, தனிமை, துன்பங்கள், எதிரிடைகள், கொள்ளை நோய், சாவு, நோவு, இயற்கை அழிவின் இழப்புக்கள் எல்லாவற்றையும் தாங்கி இறைவனின் மகிமைக்காக அனுபவித்து வாழ்ந்தார்கள்.

துறவற அழைப்புக்கு இளம் பெண்களைக் கல்விப் பணி மூலம் உருவாக்கி இந்நாட்டில் திருக்குடும்ப சபையை முதற் பெண் துறவற சபையாக தோற்றுவித்தார்கள். சிறுவர்கள், இளைஞர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு மனிதவள, ஆன்மீகத்துறைகளில் உருவாக்கிக் கிறிஸ்தவ குடும்பங்களைக் கட்டியெழுப்பி திருச்சபை வளர்ச்சிக்கு வித்திட்டார்கள். அவர்கள் நமது மண்ணுக்கும், மக்களுக்கும் தாங்கி வந்த நிறுவனரின் பாரம்பரிய உரிமைச் சொத்துக்களை உள்வாங்கிப் பின்தொடரும் வழித்தோன்றல்களாகிய எமக்கு அசையாத அடித்தளமிட்டார்கள். இந்த அடித்தளத்தின் மேல் கட்டப்பட்ட நாமனைவரும் எமது ஆதித்தாய்மாரின் மனப்பான்மையில் வாழ அழைக்கப்படுகின்றோம்.

**இதய நிறைவுடன்:**

- அர்ப்பணிப்புடனும், நீடித்த பொறுமையுடனும் முன்வந்து மொழிஆக்கம் செய்த அருட்சகோதரி பிறிஜிற் மல்லிகா

- பற்பல பணிகள் மத்தியிலும் கையளித்தல், கவனத்துடன் கணனிசார் வேலைகளை நிறைவுறச் செய்து நூல் உருவாக உழைத்த அருட்சகோதரி லூமினா போல்ராஜா.

- உவந்து உதவிக்கரம் நீட்டிய கலையார்வன் திரு.கு.இராயப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறைநோக்கி நிறைவாக்கிய அருட்சகோதரிகள் புஷ்பம், யோலண்ட்
- கரிசனையுடன் ஊக்கம் ஊட்டி உதவி செய்த சகோதரர், சகோதரிகள்
- முகவடிவுக்கு (அட்டை) உருக்கொடுத்த திரு. யூட்சன்
- அழகாக அச்சிட்டு வெளியேற்றிய - Lanka Publishing House
- ஆசியுரை வழங்கிய ஆயர்களின் வாரிசான யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
- முத்தான சொத்துக்கு ஆர்வத்துடனும், உரிமையுடனும் ஆசிச்செய்தி அளித்த சபைத் தலைவி மாகிறெற் முல்டூன்
- யாழ்-ஆதித் தாய்மாரின் வரலாற்றுக்குச் சான்றாக மகிழ்வுச் செய்தி வழங்கிய வட மாநிலத் தலைவி யோலண்ட் மத்தியாஸ்
- வரலாற்றுப் பின்னணியை வகுத்துத் தொகுத்து வழங்கிய யாழ் பல்கலைக்கழக முதுகலை விரிவுரையாளர் கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத் துறைகள் தலைவர் அருட்கலாநிதி ஞா. பிலேந்திரன் அனைவர்க்கும் என் இதய பூர்வமான நன்றித் துதிகளை அன்புடன் அளித்து நிற்கின்றேன்.

திருக்குடும்ப அன்னையின் அன்புப் புதல்வி

**அருட்சகோதரி யுஸ்ரீனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## யாழ்ப்பாணம்


| | | |
|---|---|---|
| Annals -No | - 07 | : புரட்டாதி 1862 |
| Annals -No | - 08 | : தை 1863 |
| Annals -No | - 09 | : (புரட்டாதி1865) 08 மார்கழி 1982 |
| Annals -No | - 10 | : தை 1864 |
| Annals -No | - 11 | : தை 1865-1866 |
| Annals -No | - 12 | : 08 தை -1866 |
| Annals -No | - 13 | : 19 மார்கழி 1866 |
| Annals -No | - 14 | : (ஆனி 1869) - 22 தை 1868 |
| Annals -No | - 15+16 | : (ஆனி 1870 - 1872) 05 தை 1869 |
| Annals -No | - 17 | : (ஆவணி 1872) 20 மார்கழி 1869 |
| Annals -No | - 18 | : (ஆனி 1873) 19 மாசி 1872 |
| Annals -No | - 19 | : (வைகாசி 1874) ஆனி 1873 |
| Annals -No | - 20 | : (ஆனி 1875) ஆனி 1874 |
| Annals -No | - 21 | : (ஆடி 1876) 17ஆடி 1875 |
| Annals No | - 22 | : (ஆடி 1877) 19 வைகாசி 1876 |
| Annals -No | - 23 | : 01 சித்திரை 1877 |
| Annals -No | - 24 | : (ஐப்பசி 1879) 15 வைகாசி 1879 |
| Annals- No | - 25 | : (ஐப்பசி 1880) சித்திரை 1879 |
| Annals -No | - 26 | : (மார்கழி 1881) சித்திரை 1880 |
| Annals -No | - 27 | : 06ஆனி 1881 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Annals -No | - 28 | : (மார்கழி 1883) வைகாசி 1882 |
| Annals -No | - 29 | : (மார்கழி 1888) சித்திரை 1883 |
| Annals -No | - 30 | : ஆனி 1884 |
| Annals -No | - 31 | : (பங்குனி 1890) ஆனி 1885 |
| Annals -No | - 32 | : (ஆனி 1890) மார்கழி 1886 |
| Annals -No | - 33 | : (புரட்டாதி 1890) சித்திரை 1887 |
| Annals -No | - 35 | : (கார்த்திகை 1890) மார்கழி 1889 |
| Annals -No | - 36 | : (மார்கழி 1892) மார்கழி 1890 |
| Annals -No | - 39 | : மார்கழி 1893 |
| Annals -No | - 41 | : மார்கழி 1895 |
| Annals -No | - 42 | : (சித்திரை 1899) மார்கழி 1896 |
| Annals -No | - 43 | : இலங்கை 1897 |
| Annals -No | - 47 | : யாழ்ப்பாணம் 1923 |
| Annals -No | - 48 | : 08 ஆனி 1924 |
| Annals -No | - 49 | : யாழ்ப்பாணம் 1925 |
| Annals -No | - 50 | : யாழ்ப்பாணம் 1926 |
| Annals -No | - 51 | : ஆசியா 1927 |
| Annals -No | - 52 | : யாழ்ப்பாணம் 1928 |
| Annals -No | - 53 | : இலங்கை 1929 |
| Annals -No | - 54 | : யாழ்ப்பாணம் 1930 |
| Annals -No | - 55 | : யாழ்ப்பாணம் 1931 |
| Annals -No | - 56 | : யாழ்ப்பாணம் 1932 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Annals -No | - 57 | : இலங்கை 1933- 1934 |
| Annals -No | - 59 | : யாழ்ப்பாணம் 1937 - 1938 |

## திரிகோணமலை

| | | |
|---|---|---|
| Annals No | - 27 | : 1881 |
| Annals No | - 28 | : 30 ஆனி 1882 |
| Annals No | - 29 | : தை 1883 |
| Annals No | - 30 | : 1884 |
| Annals No | - 32 | : மார்கழி 1886 |
| Annals No | - 34 | : மார்கழி 1887 - 1888 |

## அனுராதபுரம்

| | | |
|---|---|---|
| Annals -No | - 47 | : 1923 |
| Annals -No | - 49 | : 1925 |
| Annals -No | - 50 | : 1926 |
| Annals -No | - 52 | : 1927 |
| Annals -No | - 53 | : 1929 |
| Annals -No | - 54 | : 1930 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Annals -No | - 55 | : 1931 |
| Annals -No | - 56 | : 1932 |
| Annals -No | - 57 | : 1933-1934 |
| Annals -No | - 59 | : 1937-1938 |

## பாகம் 11

## குருநாகல்

| | | |
|---|---|---|
| Annals -No | - 17 | : 17 மார்கழி 1870 |
| Annals -No | - 18 | : 23 சித்திரை 1872 |
| Annals -No | - 19 | : 02 சித்திரை 1873 |
| Annals -No | - 20 | : 05 சித்திரை 1874 |
| Annals -No | - 21 | : பங்குனி 1875 |
| Annals -No | - 22 | : 08 ஆடி 1876 |
| Annals -No | - 24 | : 01 ஆடி 1878 |
| Annals -No | - 25 | : மாசி 1879 |
| Annals -No | - 26 | : சித்திரை 1880 |
| Annals -No | - 27 | : தை 1882 |
| Annals -No | - 28 | : ஒணறின் வரலாறு 1882 |
| Annals -No | - 29 | : ஆனி 1883 |
| Annals -No | - 30 | : ஆனி 1884 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Annals -No | - 31 | : மார்கழி 1885 |
| Annals -No | - 32 | : மார்கழி 1886 |
| Annals -No | - 33 | : சித்திரை 1887 |
| Annals -No | - 34 | : (ஆனி 1891) ஆனி 1888 |
| Annals -No | - 35 | : மார்கழி 1889 |
| Annals -No | - 36 | : மார்கழி 1890 |
| Annals -No | - 37 | : (வைகாசழ 1893) மார்கழி 1891 |
| Annals -No | - 38 | : வைகாசி 1894 |
| Annals -No | - 45 | : 1920 - 1921 |
| Annals -No | - 46 | : குருநாகல் வைத்தியசாலை 1922 |
| Annals -No | - 47 | : குருநாகல் இலங்கை 1923 |
| Annals -No | - 49 | : குருநாகல் இலங்கை 1925 |
| Annals -No | - 50 | : வென்னப்புவா இலங்கை 1926 |
| Annals -No | - 51 | : வென்னப்புவா இலங்கை 1927 |
| Annals -No | - 52 | : குருநாகல் வகுப்புகள் 1928 |
| Annals -No | - 53 | : வென்னப்புவா இலங்கை 1929 |
| Annals -No | - 54 | : பம்பலப்பிட்டி 1930 |
| Annals -No | - 55 | : வென்னப்புவா 1931 |
| Annals -No | - 56 | : பம்பலப்பிட்டி 1932 |
| Annals -No | - 57 | : பம்பலப்பிட்டி 1932 - 1934 |
| Annals -No | - 59 | : பம்பலப்பிட்டி 1937 - 1938 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்

## பாகம் I



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNALS NO. 07

**புரட்டாதி - 1862**

சபைத் தலைவியின் கடிதம் - இலங்கையில் சபையின் ஆரம்பம்

என் அன்பான பிள்ளைகளே!

எம் இதயத்திற்கு மகிழ்ச்சி தருவதும், எதிர்காலத்துக்கு நம்பிக்கையூட்டுவதுமான ஒரு சபை ஆரம்பிப்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். எம் நல்ல பிதா தம் குருத்துவ வாழ்வை ஆரம்பித்தபோது தூரஇடத்துப்பணி அவர் உள்ளத்தில் ஆவலாக இருந்தது. உலகம் முழுவதும் செல்ல அவர் விரும்பினார். தம் அப்போஸ்தலப் பணிக்கு பிரான்ஸ் தேசத்திலும் பார்க்க வேறு ஓர் இடத்தை விரும்பினார். அமெரிக்க நியூஓர்லியன்ஸ் ஆயர் டுபோவ் (Udbourg) தனது பணியைப் பற்றி இவருடன் பேசியபோது நல்லபிதா தனது தலைவர்களின் அதிகாரத்தை மதித்ததினால் தன் சொந்த விருப்பத்தைக் கைவிட்டார். ஆனால் நல்ல இறைவன் அவரின் ஆவலுக்கும், ஆன்மாக்களை மீட்கும் தணியாத் தாகத்திற்கும் ஓர் இடத்தை ஆயத்தம் செய்திருந்தார். இதன் மூலம் தன் அழைப்பின் இரகசியத்தை அறிந்து கொண்டார்.

அதாவது அவரின் அப்போஸ்தலிக்க வாஞ்சை சில ஏழைப் பெண்களை வழிநடத்த இட்டுச் சென்றது. இவர்களின் அடக்கமான, சாந்தமான செயற்பாடுகளின் மூலம் தன் இலக்கை அடைய முயல்கின்றார். திருக்குடும்ப சபையில் இவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அர்ப்பணிக்கப்பட்ட பெண்கள் பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்பெயினில் இவரின் கனவை நனவாக்கினார். இன்றும் இவர்கள் மூலம் இருளிலும், மரண நிழலிலும் இருப்போரைத் தேடிச் செல்லத் தன் ஆவலை நிறைவு செய்தார். இலங்கையில் ஒலிம்பியா –ஆயர் சமேரியா இளைஞர்களின் கல்வி மூலம் தன் பணித்தளத்தை முன்னேற்ற விரும்பினார். ஆண்களின் கல்வியை அ.ம.திக் குருக்களிடம் ஒப்படைத்தார். இளம்பெண்களின் கிறிஸ்தவக் கல்வியையும் ஒரு சபையிடம் ஒப்படைக்க முயன்றும் பலன் தரவில்லை. திருக்குடும்பச் சபைக்கே இறைவன் வைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூலோன் (Toulon) என்னும் இடத்தில் இருந்து புரட்டாதி 6ந் திகதி 6 சகோதரிகள் புறப்பட்டனர். அவர்கள் (Marie Xavier Marchand )மாறி சேவியர் மாச்சான்ட் (Marie Stanislaus Quinn) மாறி ஸ்ரனிஸ்லாஸ் குயின் (Marie Helen Winter) மாறி கெலன் உவின்ரர் (Marie Therese Vanmeurs) மாறி திரேஸ் வான்மோஸ் (Marie Joseph Maroille) மாறி ஜோசெவ் மறோஅ (Marie Ligori Rojer) மாறி லிகோறி றோஜர்– நல்ல இறைவன் சமேரியா ஆயர் வழியாக உதவி புரிய அவர்களும் தியாகத்துடன் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இளம் உள்ளங்களுக்கு கல்விப் பணி புரிகின்றனர். இவர்கள் தாராள உள்ளத்துடன் தம் நாடு, பெற்றோர், உறவினர், தம் தலைவிகளைத் துறந்து நூறு மடங்கு பலனைப் பெறுவதற்காக இயேசுவைப் பின்சென்றுள்ளனர். அவர்களின் முன்மாதிரிகை வேறு பலருக்கு ஆர்வத்தைக் கொடுக்கும். ஏற்கனவே பல பெயர்கள் பதியப்பட்டுள்ளன.

என் அன்பான பிள்ளைகளே, இந்த அழகிய பணிக்கு உங்கள் செபத்தாலும் உதவி செய்ய முடியும். நீங்கள் செபிப்பீர்களென நம்புகின்றேன். எனவே, என் அன்பான குமாரத்திகளே! உங்கள் நல்லதாயாரின் அன்பையும், தியாகத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்

Hardy moison
(H.காடி முஆசோன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தை 1863**

தூரஇடத்துப் பணிகள் - இலங்கை

நல்ல இறைவனின் அழைப்பிற்குப் பதிலிறுத்துத் தம் நாடு, குடும்பம் எல்லாவற்றையும் துறந்து எம் சகோதரிகள் இலங்கைக்குச் சென்றுள்ளனர்.நாம் அவர்களின் நீண்ட பயணத்தில் பின்தொடர்வோம். அதற்குமுன் நாம் சிலவற்றைக் கூற வேண்டியுள்ளோம்.

ஆயர் சமேரியா ஆண்டகை மூலம் நல்ல இறைவன் சில ஏற்பாடுகளைச் செய்திருந்தார் என்பதை நாம் அறிவோம். முன்பு நல்ல முடிவு எடுக்காவிடினும், பின்பு நாம் பதிலிறுத்தபோது, நாம் இலங்கைக்கு அனுப்பவிருந்த சகோதரிகளுக்கு 1861 ஆனி 8ம் திகதி பின்வரும் கடிதத்தை அனுப்பி வைத்தார், அந்தக் கடிதத்தை வாசிக்கும்போது ஆயரின் நல்ல உள்ளத்தையும், சகோதரிகளின் பணி பற்றியும் அறியக் கூடியதாக இருந்தது.

**யாழ்ப்பாணம் செல்லவிருக்கும் திருக்குடும்ப சகோதரிகளுக்கு யாழ்ப்பாணம் ஆனி 8 -1861**

என் அன்பான சகோதரிகளே! இறைவன் என்றும் போற்றப்படுவாராக. நீண்டகாலமாக எதிர்பார்த்து, எம் செபங்கள் கேட்கப்பட்டதால் உங்கள் தலைவிகள் உங்களைத் தேர்ந்தெடுத்து பல வருடங்களின் முன் நாம் தொடங்கிய இத்தூரதேசப் பணிக்கு உதவி செய்ய முன்வருகின்றீர்கள்.

நாம் இலங்கைக்கு வந்ததும் கிறிஸ்தவர்களின் வாழ்வு எமக்குக் கவலையை அளித்தது. அவர்களை உறுதிப்படுத்த இளைஞர் கல்வி தேவைப்பட்டது. இருபது அல்லது முப்பது கிறிஸ்தவர்கள் தூரத்தூர இருக்கும்போது மறைப்போதக குருக்கள் என்ன செய்ய முடியும்? எனவே நமக்கு உதவியாகச் சில சகோதரிகள் வந்து உதவி செய்யலாம் என்று விரும்பினோம். அதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டோம். 1856ம் ஆண்டு நான் ஐரோப்பாவுக்குச் சென்றபோது,சில சகோதரிகளை அழைத்துவர முயன்றபோதும் அது முடியவில்லை. ஏனென்றால், நாம் இறைபராமரிப்பின் இரகசியத்தைப் புரிந்து கொள்ளவில்லை. பின்பு திருக்குடும்பச்சபை எம் சபையுள் (OMI) சேர்ந்திருப்பதால் 1856ல் நடந்தது தோல்வியல்ல என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தோம்.அவர்கள் எம்பணிக்கு உதவ முன் வருவதால் இறைவனின் கரத்தை அங்கு கண்டோம்.

எனவே நீங்கள் நல்லதொரு பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். தொடக்கத்தில் கஷ்டமாக இருப்பினும் நல்ல முடிவுகளைப் பெறுவீர்கள். நீங்கள் தேடுவதை அடைந்து கொள்வீர்கள். இறைவனின் முன்பாக மேன்மை அடைவீர்கள். நீங்கள் இங்கு வந்ததும் (1) 15 – 20 ஐரோப்பிய இளைஞர்கள் அல்லது அவர்களின் வழி மரபினர்களைக் காண்பீர்கள். (2) 50 சுதேச இளைஞர்கள் (3) பாலர் சபைகளின் மூலம் 10 இந்து சமயத்தவர்கள் கிறிஸ்தவர்களாக மாற உள்ளனர். (4) சில இளம்பெண்கள் துறவுவாழ்வு மேற்கொள்ள உள்ளனர். உங்கள் மடம், பாடசாலை கட்டப்பட்டுப் பணி ஆரம்பித்தவுடன் கத்தோலிக்க, இந்து, புரட்டஸ்தாந்து மாணவர்கள் தொகை பெருகும் என நம்புகின்றேன். உங்களைத் தொடர்ந்து வேறு சகோதரிகளும் வருவார்கள். நாமும் யாழ்ப்பாணத்தில் இருந்து எல்லையை விரிவுபடுத்தலாம். எம் கிறிஸ்தவர்கள் அடிக்கடி சிலுவை, செபமாலை, வரவணிக்கம் கேட்பார்கள். நீங்கள் வரும்போது உங்கள் கைகளில் இந்தப் பக்திப் பொருட்களை எதிர்பார்ப்பார்கள் என்பதை அறிவிக்கின்றேன். நீங்கள் வரும்போது கொஞ்சம் கொண்டு வந்தால் அவர்களை நீங்கள் மகிழ்விக்கலாம். ஆனால் கவனமாக இருக்க வேண்டும். கொழும்பு காலியில் நீங்கள் கொடுக்கத் தொடங்கினால் பலர் கேட்பார்கள். நீஙகள் கொண்டு வந்ததும் முடிந்துவிடும்.

J. எற்றியன் (Etienne)

ஓலிம்பியா ஆயர் – அப்போஸ்தலிக்க விக்கார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர் சமேரியா ஆண்டகை எம் சகோதரிகளின் வருகையைத் துரிதப்படுத்தினார். இரண்டு குடும்பங்களுக்கும் பொதுவான மார்செயி ஆயர் மசனெட் ஆண்டகையின் இழப்பு இதற்குக் காரணமாகும்.

சிறிது காலத்தின் பின்பு இழந்த குருக்களை நிரப்புவதற்காகப் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது. அதற்கு யாழ் ஆயருக்கு அழைப்புக் கிடைத்தது. எனவே இக்கூட்டம் முடிந்து செல்லும்போது சகோதரிகளையும் அழைத்துக் கொண்டு செல்ல முடிவாயிற்று. அதேவேளையில் யாழில் கோடை காலத்தில் 'கொலரா' நோய் மக்களை தாக்கியது. அத்துடன் புரட்டஸ்தாந்து மக்கள் தம் எதிர்ப்பையும் காட்டினர். எனவே போஞ்ஜின் குரு தாமதத்தைப் பாராட்டினார். எதிர்பார்த்தபடி காலம் போகப் போக புயலும் அடங்கியது. நல்ல இறைவன் எம் சகோதரிகளுக்கு எங்கும் நல்வரவேற்பைக் கொடுத்தார். புறப்படுவதற்குப் பல மாதங்களுக்கு முன்பே பயணம் செய்யவிருக்கும் சகோதரிகளை ஒன்றுகூட்டி எம் திருக்குடும்ப மடத்தில் அவர்களுக்குத் தேவையானவற்றையெல்லாம் கொடுத்தோம். எம் அருமையான முதற் சகோதரிகள் எம் நல்ல பிதாவின் நல்லெண்ணத்தை நிறைவேற்றுவதற்குச் செல்லும்போது அவர்களை இயக்குவதற்குத் தேவையான அருளை அவருடைய இருதயத்திற்கு கிட்ட வந்து பெற்றுக்கொள்வது இயல்பான தல்லவா? வருடாந்த தியானம் ஒன்றாகச் செய்த பின்பு, பல நாட்கள் மார்த்தியாக் ஏகாந்த இடத்தில் செலவிட்டு, சகல வரப்பிரசாத மாதாவின் சிற்றாலயத்திற்கும், நல்ல பிதாவின் கல்லறைக்கும் அடிக்கடி சென்று தம் ஆன்மாவைப் பலப்படுத்தினர்.

புறப்படும் காலம் நெருங்கியதும் எம் அருமையான சகோதரிகள் தாராள உள்ளத்துடன் மார்செயி நோக்கிப் புறப்பட்டனர். நாம் அவர்களுடன் துறைமுகம் நோக்கிச் சென்றோம். ஆனால் பல காரணங்களால் புறப்படும் வேளை நாம் நிற்க முடியவில்லை. இவற்றை எல்லாம் இங்கு கூறமுடியாது. மிக நீண்டதாக இருக்கும். பிரியும் நேரம் அண்மித்து வர நல்ல ஆசானுடன் சேர்ந்து அவர் அன்பினால் உறுதிப்பட வேண்டியதாயிற்று. எனவே சமேரியா ஆண்டகை மூன்று நாள் தியானத்தை ஒழுங்கு செய்து, தானே அதை நெறிப்படுத்துபவராகவும், மறைஉரை கொடுப்பவராகவும் இருந்தார். அமலமரி தியாகி குருக்களில் இலங்கை செல்ல இருந்தோரும் இதில் பங்குபற்றினர். இதன்மூலம் நல்ல இறைவன் தன் அருளைப் பொழிந்து, இத்தியான முடிவில் நம் சகோதரிகள் தாராள உள்ளத்தையும், செபத்தையும் பெற்றுக் கொண்டனர்.

நாளும் நெருங்கி வந்துவிட்டது. புரட்டாதி 6ம் திகதி ருலோன் (Toulon) என்னும் இடத்திலிருந்து 'கனடா' என்னும் கப்பல் புறப்பட ஆயத்தமானது. அதில் சமேரியா ஆண்டகை தலைமையில் இச்சிறிய குழுவும் சேர்ந்து அலெக்சாந்திரியா நோக்கிச் சென்றனர். இக்குழுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்தந்தையர்கள் புவாசோ (Boesseau) பூற்ரன் (Boutin) மூன்று அ.ம.திச் சபை அயர்லாந்து தேசத்துச் சகோதரர்கள் அடங்குவர். மாலையில் கப்பலேறினர். மறுநாள் காலையில் கப்பல் பிரான்சில் இருந்து வெகு தூரத்திற்குச் சென்று விரைவில் அவர்கள் பார்வையிலிருந்து விடுதலை பெற்றது. ஆயர் உதவியுடன் எம் சகோதரிகளுக்கு ஒரு பெரிய அறை கிடைத்ததால் ஒருமித்து இருப்பதற்கு உதவியாக இருந்தது. கடல் குழப்பம் (sea sick) முதலில் சேவியர் தாயாரையும்பின்பு ஏனைய சகோதரிகளையும் பற்றிக் கொண்டது. ஆயரும், குருக்களும் பக்கத்து அறையில் இருந்தபடியால் அதை அறிந்து நம்பிக்கைச் சகோதரிகளாக மாறி (தாதிகள்) அன்பாக அவர்களைக் கவனித்தனர். கப்பலில் பெண் தாதிகள் இல்லாதபடியால் இவர்களின் பராமரிப்பை ஏற்க வேண்டி இருந்தது. திங்கட்கிழமை கடல் அமைதியுற்றபடியால் இவர்களின் வயிற்றுக்குழப்பம் சீரடைந்து கப்பலின் மேல் வந்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தனர்.

அவர்களின் எல்லாக் கடிதங்களிலும் கப்பலில் தாம் அனுபவித்த கரிசனை அன்பைப் பற்றி எழுதியுள்ளனர். சேவியர் தாயார் ஒருநாளில் பலமுறை மருத்துவரின் சந்திப்பைப் பெற்றார். அவ அதிகம் துன்புற்றதால் மருத்துவர் எல்லா உதவிகளையும் செய்தார். இருமுறை திருப்பலி நிறைவேற்றப்பட்டுத் திருவிருந்து அளிக்கப்பட்டது. எம் குருக்கள் களைப்பில்லாது கப்பலிலும் மறைபோதகர்களாக இருந்தனர். காலையிலும், மாலையிலும் ஒருவர் உரத்த குரலில் செபங்களைச் சொல்ல மற்றவர்கள் பக்தியுடன் அதற்குச் செவிசாய்த்தனர்.

புரட்டாதி மாதம் 14ந் திகதி ஞாயிற்றுக்கிழமை 'கனடா' கப்பல் அலெக்சாந்திரியா துறைமுகத்தை வந்தடைந்தது. திருப்பலி முடிந்ததும் கப்பலை விட்டு வெளியேற முடிவு செய்தனர். கப்பல் தலைவன் தன் சொந்தப் படகிலேயே எம் பயணிகளை ஏற்றித் தரைக்குக் கொண்டு வர முடிவு செய்தான். ஆயர் லாசறிஸ்ற் (Lazarist) குருக்களின் வரவேற்பைப் பெற்றார். எம் சகோதரிகள் அன்புக் கன்னியர்சபையின் வரவேற்பைப் பெற்றனர். 16ந் திகதி எகிப்தின் தலைநகராகிய கயிறோ (Cairo) வுக்குச் சென்றபோது ஒரு தந்தி கிடைத்தது. மீளவும் கப்பலேறி 'சுயெஸ்' கால்வாய் நோக்கிச் செல்ல அழைப்பு வந்தது.

ஆயர் சகோதரிகளை நல்லாயன் சபைச் சகோதரிகளுடன் சேர்த்துக் குழுவாழ்வை அனுபவிக்க அனுப்பினார். அத்துடன் அங்கேயிருந்த புனிதமான இடங்களைச் சந்தித்து மகிழ வாய்ப்பளித்தார். அவர்களும் இதை ஏற்று திருக்குடும்பம் சென்ற இடங்களைப் பார்த்து ஆறுதல் அடைந்தனர். இந்த அருட்சிக்குரிய யாத்திரைகளை அவர்கள் எவ்வாறு செய்தனர் என அவர்கள் கூறியவாறு உங்களுக்குத் தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கயிறோ புரட்டாதி 22 - 1862

கயிறோவில் இருந்தபோது எமது நேரத்தை நல்ல முறையில் செலவிட்டோம். நாம் இரு யாத்திரைகள் செய்தோம். ஒன்று திருக்குடும்பத்தின் வீடு. மற்றையது மடோனா மரம். அதாவது எகிப்துக்குச் சென்றபோது இயேசு, மரி, சூசை தரித்துச் சென்ற மரம். திருக்குடும்ப வீட்டிற்கு நாம் அதிகாலை 5.30 மணிக்குச் சென்றோம். திருப்பலியில் பங்குபற்றலாம் என நினைத்தோம். எம் குழுவில் ஆயர், குருக்கள், சகோதரர்கள், நல்லாயன் சகோதரிகள், அவர்களின் சில மாணவர்களும், நாங்களும் இருந்தோம். நாம் கழுதைகளில் ஏறிச் சென்றோம். பயத்தோடு சென்றோம். எம்மில் ஒரு சகோதரி மட்டும் கழுதையில் இருந்து கீழே விழுந்தா. ஆனால் காயம் ஏற்படவில்லை.கெபியின் வாயில் காப்போன் எம்மை உள்ளே விடவில்லை. எனவே அண்மையில் உள்ள ஒரு குருக்களின் இல்லத்தில் சிக்கனமாக காலை உணவை எடுத்தோம். பலமுறை முயற்சித்தும் அனுமதிக்காதபடியால் திரும்பிச் செல்ல முற்பட்டபோது, ஒருவன் வந்து கதவு திறந்துள்ளது என்றான். நாம் பல ஒடுக்கமான பாதைகளினூடாகச் சென்று அந்த அறையை அடைந்தோம். அமைதியாகச் செபித்தோம். பரிசுத்தமான சுவர்களை முத்தமிட்டோம். உங்களுக்காகவும், எம் குருக்கள், சகோதரிகள், சபைக்காகவும் செபித்தோம். பின்பு தேவதாய் பாலனின் உடுப்புக் கழுவிய தொட்டியருகே இருந்த மண்ணில் சிறிது எடுத்து, உங்களுக்கு மகிழ்ச்சி தரும் என்று கருதி சிறிது அனுப்பி வைக்கின்றேன்.

மதிய உணவு முடிந்ததும் 2ம் யாத்திரையைக் குதிரை வாகனத்தில் ஆரம்பித்தோம். ஒரு பாலைவனத்தினூடாகச் செல்ல வேண்டியிருந்தது. வீதி சரியில்லாதபடியால் குதிரை அசையாது நின்றது. அதிலேதான் ஆயரும் நாமும் பயணித்தோம். எனவே கால்நடையாகச் சுடுமணலில் களைப்புடன் நடந்து இத்தூய மரத்தின் அடியை அடைந்தோம். முன்பு திருக்குடும்பமும் இப்பாதையால் சென்றது என்று ஆறுதல் அடைந்தோம்.

அந்தப் பெருமரத்தின் மூன்று கிளைகள் தொட்டில் போன்று வளைந்து காணப்பட்டன. அடிமரம் பட்டுப்போனது போன்று இருப்பினும் நல்ல பசுமையான இலைகளைத் தாங்கிய கிளைகள் காணப்பட்டன. நாம் திருக்குடும்பத்தின் பிரார்த்தனையையும், செபத்தையும் சொன்னோம். அத்துடன் எமக்கு அருமையானவர்களுக்காகவும் செபித்து ஒவ்வொருவரும் தம் பெயரை அம்மரக்கிளையில் எழுதினர். நான் உங்கள் பெயரையும், எம் சபைத் தலைவர், தலைவிகள் பெயரையும் சேர்த்தேன். பின்பு ஒரு நீரூற்றண்டை சென்று அந்த நீரைப் பருகினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஊற்று மட்டும் இந்த நாட்டில் உள்ளது. நைல் நதியிலும் மேலானது. இயேசு பாலன் தன் காலால் தட்டிய போது இந்த ஊற்றுப் புறப்பட்டது என்று கூறுகின்றார்கள். இக்கடிதத்துடன் இம்மரக்கிளையில் சில இலைகளையும் சேர்த்து அனுப்புகின்றேன்.

கயிறோவில் நாட்கள் நகர்ந்தன. பயணத்தைத் தொடர முடியவில்லை. பின்பு பரீசில் இருந்து திரு. அமிறல் ஜோறே என்பவருக்கு ஐப்பசி 1ம் திகதி எக்கோ (Echo) என்னும் கப்பல் புறப்படும் என்ற செய்தி தந்தி மூலம் கிடைத்தது. உடனே அவர் அதனை ஆயருக்குத் தெரியப்படுத்தினார். எல்லோரும் அதை வரவேற்றனர். ஆயர் எல்லோரின் தேவைகளையும் அன்புடன் கவனித்து வந்தார். எனவே எம் சகோதரிகள் அவரைப் பற்றிக் கூறும்போது பலமுறை அவர் ஒரு 'தந்தை' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

நல்லாயன் சபைச் சகோதரிகளின் மடத்தைவிட்டு வெளியேறும்போது தம் உடன் சகோதரிகளை விட்டுப் பிரிவதுபோல் கண்ணீர் சொரிந்தனர். அநாதைச் சிறுமிகளும் சகோதரிகளின் கையை முத்தமிட்டுக் கண்ணீர் சொரிந்தனர். இவ்வாறு அவர்களை விட்டுப் பிரிந்து 'சுயெஸ்' நோக்கிச் சென்றனர். அங்கு இலங்கை செல்ல'எக்கோ' என்னும் கப்பல் நின்றது. அங்கும் 'கனடா' போன்று கப்பல் ஊழியர்கள் சகோதரிகளை நன்கு கவனித்தனர். நல்லமுறையில் பயணிப்பதற்கு உதவி செய்தனர். செங்கடல் பயணம் நன்கு முடிவுக்கு வந்தது. பலத்த காற்று வெப்பநிலையைக் குறைத்தது. எனினும் கடற்படையினர் குறிப்பிடும் 'போறணை' என்னும் பகுதி ஆபிரிக்க வெப்பநிலையினால் 'உத்தரிப்பு ஸ்தலம்' எனக் கூற வேண்டும் போல் இருந்தது. எனினும் இரவில் குளிர்மையாக இருந்தது. அத்துடன் மேற்பகுதியில் கூடாரம் அடித்து சில மணித்தியாலங்கள் இளைப்பாற முடிந்தது.

எம் சகோதரிகள் பைபிளில் குறிப்பிட்டிருக்கும் ஏரிகளைப் பார்த்தனர். ஆயர் அவ்வழியாகப் பலமுறை பயணம் செய்தபடியால் பக்திக்குரிய இடங்களைக் காட்டி மகிழ்ந்தார். சீனாய் மலையைக் கண்டதும் வணக்கத்தைத் தெரிவித்தனர். அங்கு இஸ்ராயேல் மக்கள் பரவோன் படை துரத்தி வரும்போது தப்பிக் கொண்டதையும், செங்கடலைக் கடந்தபோது இறைவனின் வல்லமை எவ்வாறு இஸ்ராயேல் மக்களோடு இருந்ததென்பதையும் உணர்ந்து கொண்டார்கள்.

செவ்வாய் - புதன் இரவில் 'ஏடின்' என்னும் இடத்தை அடைந்தனர். அங்கு சிறிது இளைப்பாறி மறுநாள் பயணம் செய்வதற்குத் தம்மைத் தயார் செய்து கொண்டனர். ஏடினில் இருந்து இலங்கையில் உள்ள காலி என்னும் இடத்திற்குச் செல்ல வழமையாக 14 நாட்கள் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எக்கோ' என்னும் கப்பல் 10 நாட்களில் செல்லும் என்றனர். நல்ல காலநிலை இல்லாதபடியால் புயலைத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அத்துடன் நிலக்கரி எட்டு நாட்களுக்கே போதுமானதாக இருந்தது. நிலக்கரி முடிந்தால் 2 பாய் விரித்தே வரவேண்டும். எனவே கப்பல் தலைவன் இதை ஆயருக்குத் தெரிவித்தார். ஆயர் தனது இறைநம்பிக்கையைக் கைவிடவில்லை. நல்ல காலநிலை மீண்டும் இருந்தபடியால் 7ம் நாள் முடிவில் இலங்கைக் கரை தெரியத் தொடங்கியது. ஒருநாளுமே இவ்வளவு விரைவில் பயணிக்காததால் செபத்தின் வல்லமையை எல்லோரும் புரிந்து கொண்டனர்.

தமது இரண்டாவது நாடாகிய இந்தத் தரையைக் கண்டதும் எம் சகோதரிகளுக்கு ஏற்பட்ட உணர்ச்சியை எவ்வாறு கூறுவது? தாம் செய்யப் போகும் அழகிய பணியை நினைத்தார்கள். தம்மைத் தியாகம் செய்வதையிட்டு மகிழ்ச்சியுற்றனர். தம்மை அப்போஸ்தலர்களாக நினைத்தனர். அவர்கள் இதயம் இறைவனை நோக்கி எழும்பியது. அன்று ஞாயிற்றுக்கிழமை. பிரான்சிலிருந்து புறப்பட்டு 40 நாட்கள். எனவே நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. எல்லோரும் அதில் பங்குபற்றினர். அப்போது எழுந்த உணர்ச்சிப் பிரவாகங்களை எழுத்தில் வடிக்க முடியாது. இதயம் மட்டுமே அதனைப் புரிந்து கொள்ளும்.

பிரயாணிகள் காலித் துறைமுகத்தில் இறங்கினர். எம் சகோதரிகள் ஒரு கத்தோலிக்க குடும்பத்தினரால் வரவேற்கப்பட்டனர். இவர்கள் வருகையானது ஓர் ஆசீர்வாதம் எனக் கருதி அந்த இலங்கைக் குடும்பம் பெரிய மரியாதையுடன் தாமே தம் கையால் அவர்களுக்குப் பணிவிடைபுரிந்தனர். தம் ஊழியர்கள் அவர்களை அணுகவிடாது தேவதூதர்களென அவர்களைப் பராமரித்தனர். செபமாலை ஒன்றையே வெகுமதியாகப் பெற்றுக் கொள்ள விரும்பினர்.

22ம் திகதி மாலையில் காலியை விட்டுப் புறப்பட்டு மறுநாள் கொழும்பை அடைந்தனர். பத்திரிகைகளில் ஐரோப்பிய சகோதரிகளுக்கு நல்வரவு கூறி அவர்களை அழைத்து வந்த ஆயருக்கும் நன்றிகூறி எழுதப்பட்டிருந்தது. ஆயர் இலங்கை ஆளுநரைச் சந்தித்தார். அவர் நீராவிக் கப்பலில் யாழ் செல்ல முடியாது என்றார். சகோதரிகள் இறைவனின் பராமரிப்பை உணர்ந்தனர். இவர்களின் வருகையானது நகரின் எல்லா இடமும் பரவியது. அவர்களைச் சந்திக்க மக்கள் எல்லா இடங்களிலும் இருந்து வந்து அவர்களின் பாதைகளில் நின்றனர். துகிலால் தலையை மூடி, சிரிக்க மாட்டாதவர்கள் என்ற எண்ணம் தப்பானது எனக் கண்டனர். அவர்களுக்குப் பகிரங்க வணக்கம் செய்து அவர்களின் உடை, செபமாலையை முத்தம் செய்தனர். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவன் சில இந்து மக்களை 'நீங்கள் ஏன் சகோதரிகளின் முன் முழந்தாளில் நிற்கின்றீர்கள்' என்று கேட்டார். அப்போது அவர்கள் 'தம் உள்ளங்களில் ஒரு குரல் பேசுவதை உணர்ந்ததாகவும், இவர்கள் இறைவனின் மக்கள் எனக் கூறுகிறது' எனவும் பதிலிறுத்தனர்.

சமேரியா ஆண்டகை மேற்றிராசனக் கோவிலில் ஒரு குருத்துவ திருநிலைப்படுத்தல் நிறைவேற்ற வேண்டியிருந்ததால் சகோதரிகளையும் வரும்படி அழைத்தார். அந்தநாளில் பெண்களும், குருமுதல்வர் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டனர். நாட்டின் பாரம்பரியத்தின்படி அவ்வாறு செய்வதில்லை. திருப்பலியின் பின்பு இல்லம் நிரம்பி இருந்தது. எனவே சகோதரிகள் பகிரங்கமாக சாப்பிட வேண்டியிருந்தது. எல்லோரும் அவர்களைப் பார்க்க விரும்பினர். சிலநாட்களின் பின் ஒரு குருவானவர் 30 இளம்பெண்களைக் கொண்டுவந்து சேவியர் தாயாருக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஐப்பசி 31ம் திகதி எம் சகோதரிகள் கொழும்பை விட்டு புறப்பட்டனர். 'பேள்' (முத்து) என்னும் கப்பலில் பயணத்தை மேற்கொண்டு 2நாட்களின் பின் யாழ் வந்தடைந்தனர். அங்கு மகிழ்வுடன் வரவேற்கப்பட்டனர். இதைப்பற்றி அவர்கள் கூறுவதைக் கேட்போம்.

**யாழ்ப்பாணம் கார்த்திகை 8 : 1862**

என் அன்புத் தாயாரே!

நாளையுடன் 8 நாட்களின் பின் உங்கள் சகோதரிகள் பயணத்தின் முடிவை அடைந்துள்ளனர். கப்பல் யாழ் துறைமுகத்தை இரவு வந்தடைந்தது. எனவே ஆயர் உடனே தரைக்குச் செல்லாது மறுநாள் காலை செல்ல விரும்பினார். கரையில் மணற்திடல்கள் இருக்கும் என நம்பினார். ஆனால் கப்பல் வந்து தரிப்பதைக் கண்ட எம் குருக்கள் இருவரை அனுப்பினர். அவர்களின் மகிழ்ச்சி சொல்லுந்தரமன்று. முதியவரான அருட்தந்தை மூக்கெல் (Moukel) ஆயரின் கரத்தை முத்தி செய்தார்.

ஆயர் இரவில் தரைக்குச் செல்ல விரும்பாததால் மறுநாள் படகை அனுப்புவதாகக் கூறிச் சென்றனர். திருப்பலி முடிந்தபின் தூரத்தில் படகு வருவதைக் கண்டோம். அத்துடன் அவர்கள் ஆடல், பாடலுடன் வந்தனர். கப்பலண்டையில் வந்ததும் அமைதியடைந்தனர். இது அதிசயமாக இருந்தது. அவர்கள் ஆயருக்கு மரியாதை செய்தனர். அவ்வேளை படகில் நாம் ஏறினோம். எமக்குப் பயமிருக்கவில்லை. கரை அடையும் வரை அமைதியாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலிலே பிரம்புச் சாய்மனைக் கதிரைகள் இருந்தன. ஆயருக்கு சிவப்பு கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. இடையிலே பொஞ்சீன், மோலா (Mola) குருக்களும் வந்திருந்தனர். அவர்களும் எம்முடன் சேர்ந்து கொண்டனர். கரையை நெருங்க வேறு படகுகளும் வந்து எம்மைச் சூழ்ந்து கொண்டன. அதிலே தமிழ் கலாசார வாத்திய குழு ஒன்று இசைக்கருவிகளுடனும், நாதஸ்வரங்களுடனும் வந்து இசைத்து மத்தளமும் கொட்டினர். தரையை அடைந்ததும் பெருந் திரளான மக்கள் எமக்காகக் காத்திருந்தனர். எல்லா குருக்களும் அடையாளக்கொடி சிலுவையுடன் நின்றனர். நாம் இறங்கின இடத்தில் ஒரு மேடை சமைத்து சில நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஆயர் தன் மந்தையின் பாராட்டுக்களைப் பெற விரும்பினார். ஒரு சுதேசி ஆங்கிலத்தில் வாழ்த்துப் பா வாசித்தார். திருமதி விளானகான் (Flanagan) தன் மகள், மாணவருடன் வந்திருந்தார். எம்மைக் கண்டதும் அவ மிக மகிழ்ச்சி அடைந்தார். பொஞ்ஜின் குருவானவர் ஆயரின் பெயரால் சிறிய உரை வழங்கிய பின், ஆயர் வாகனத்தில் ஏறி பெரிய கோவில் நோக்கிப் புறப்பட்டார். நாம் அவரைப் பின்சென்றோம். மக்களும் பின்னே வந்தனர். காலநிலை நன்றாக இருந்தது. ஆலயமணிகள் எல்லாம் ஆர்ப்பரித்தன. நன்றிக் கீதம் (Tedeum) பாடியபின் ஆயர் இல்லத்தில் உணவருந்தினோம். ஆயர் இல்லம் எளிமையானதாகக் காணப்பட்டது. நாம் வந்து சேர்ந்த நாளில் நல் வரவேற்புக்கள் கிடைக்கப் பெற்றுக் குடும்பவிழாவாகத் திகழ்ந்தது.நாம் எமது குடும்பங்களைப் பிரிந்து வந்தாலும் இந்தத் தொலைவிலுள்ள தீவிலே தனிமை தெரியவில்லை. இறைவன் எங்கும் இருக்கின்றார். எமக்குத் தேவையான ஆதரவு, பாதுகாப்பு எல்லாவற்றையும் இறைவன் தந்துள்ளார்.

எனது நீண்ட கடிதம் இத்துடன் நிறைவு பெறுகின்றது. சிறிய செபங்களையும் உங்களுக்காகச் சொல்லுகின்றேன். சிலநாட்களின் பின்பு அவர்களுக்கு ஒரு சிற்றாலயம் எழுப்பப்பட்டு அதில் இயேசுவின் நற்கருணைப் பிரசன்னம் வைக்கப்பட்டது. எம் செபங்களை எமது சகோதரிகளுக்காக ஒப்புக்கொடுப்போம். எம் நினைவுகளிலும், இதயப் பார்வையிலும் அவர்கள் இருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாதி 1865

### இலங்கைப் பணி

தற்போது எல்லோரும் எம்மை மகிழ்வுடன் பார்க்கின்றனர். அரசியல் வழக்கறிஞர் புரட்டஸ்தாந்து மதத்தவராக இருந்தாலும் பெண்கள் கல்வியின் அவசியம் பற்றி எழுதியுள்ளார். அதையே நாமும் செய்ய வந்துள்ளோம். அவர் நம்மைக் காண விரும்பியதால் ஒரு குருவுடன் சேர்ந்து வர விரும்பினார். புனித. பிரான்சிஸ் சவேரியார் திருநாளன்று எல்லோரும் மடத்தில் இருந்த படியால் ஆயர் அந்த நாளில் வரும்படி அழைப்புவிடுத்தார். நாம் அவருக்கு நன்றி கூறினோம். அவரின் கண்களில் நீர் மல்கியது. சிறிது நேரத்தின் பின்பு தன்னில் எப்போதும் சார்ந்திருக்கலாமெனவும், எமக்கு உதவியாகவும் இருப்பேன் என்றதால், அவர் கத்தோலிக்க இதயத்தைக் கொண்டிருப்பதை அறிந்தோம்.

நாம் வசிக்கும் இடம் பற்றி உங்களுக்கு எழுத வேண்டும். மழை பெய்தால் வீட்டில் ஒரே ஒழுக்கு. சனிக்கிழமை இரவு மழை பெய்து என் தலையணை நனைந்து விட்டது. திடுக்கிட்டு எழும்பினேன். காலநேரத்துடன் இவைகளைச் சீராக்கலாம். எமக்கு உதவும் பெண்கள் சுகாதார, சுத்த முறைகளைக் கடைப்பிடிக்காதபடியால் எமக்குத் தயாரிக்கும் உணவுப் பொருட்களும் எப்படியாக இருக்கும்? தேங்காய் எண்ணெயைத் தம்மில் பூசிக்கொள்வதால் இதன்மணம் தாங்க இயலாது. காலத்துடன் இவைகளை மாற்றலாம் என்று நம்புகிறேன். அத்துடன் வேறு வசதியீனங்களும் காணப்படுகிறது. புலிமுகச் சிலந்தி ஆபத்தானது. எம் சகோதரிகளில் ஒருவர் நூலகத்தில் ஒரு புத்தகத்தை எடுத்த போது கடிக்கப் பார்த்தது. இரவில் எலி, பாம்புகள் வீட்டின் அடிக்கூரையில் (சீலிங்) ஓடித் திரியும். எலி, பாம்புகள், தவளை, சிலந்தி வசிக்கும் ஆபத்தான பூமியில் நாம் வாழ்வதால் எப்போதும் இறைவன் முன்னே செல்ல ஆயத்தமாக இருக்க வேண்டும்.

## 21 மார்கழி 1862

என் நல்ல தாயாரே!

தற்போது நாம் கொழும்பிலே எம்மை நிலை நிறுத்திக் கொள்ள முடியாதென்பதை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். யாழ்ப்பாணத்தில் நாம் அஸ்திவாரமாக அமைவதற்கு 6பேர்தான் தற்போது உள்ளதால் நாம் பிரிவது சாத்தியமாகாது. நாம் கொழும்பை வந்தடைந்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

200 மாணவிகள் உடனே அங்கு வந்திருந்தார்கள். ஆங்கிலம் கற்பிக்கும் ஒரு சகோதரியோடு நாம் என்ன செய்ய முடியும்? நகரிலுள்ள பிள்ளைகள் பலர் இங்கு வருவார்களென எதிர்பார்க்கிறோம். யாழ் பணிகள் திட்டமிடப்பட வேண்டும். இந்துமதப் பிள்ளைகள் அநாதை இல்லத்தில் உள்ளனர். வகுப்புக்குச் சென்று வருகின்றனர். சிறிது வேலையும் செய்யாது சுற்றித்திரிந்து நேரத்தை வீணாக்குவார்கள். 15-16 வயதுப் பெண்கள் தம் நேரத்தைச் செலவிட இங்கு வருவார்கள். அனைத்தையும் ஒழுங்காக்குவதற்கு புனித. சூசையப்பரின் அநாதைப் பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்ட ஒழுங்குகளைப் பயன்படுத்த எண்ணுகிறேன். நான் ஆயரிடம் கேட்டுள்ளேன். ஆயரும், குருக்களும் இதற்கு சம்மதித்துள்ளனர். ஆங்கிலம் கற்பிப்பதற்குச் சுதேச பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம் வைத்திருக்கின்றோம்.

இப்பணியின் சித்திக்காகப் புனித. சூசையப்பரை வேண்டுகின்றோம். தற்போது பிள்ளைகளுடன் நவநாட்கள் ஆரம்பித்துள்ளோம். சிலர் ஆங்கிலத்திலும், சிலர் தமிழிலும் செபிப்பர். நாம் பிரெஞ் மொழியில் செபிப்போம். இதயத்திலிருந்து புறப்படும் வேண்டுதலைக் கேட்கும் இறைவனுக்கு எல்லா மொழிகளையும் விளங்க முடியும். அதே திகதியில் எழுதப்பட்ட வேறொரு கடிதத்தில் பின்வருவனவற்றை நாம் வாசிக்கின்றோம்.

11ம் திகதி ஒரு நிறுவனத்தின்பரிசளிப்பு விழாவில் பங்குபற்றினோம். ஆயர் முதற் தடவையாகத் தலைமை வகித்தார். இதற்கு முன்னதாகப் பொதுப் பரீட்சை நடைபெற்றது. புரட்டஸ்தாந்து அதிகாரிகளே பரீட்சை நடாத்தினர். நல்ல முறையில் இது நடைபெற்றது. இவர்கள் மாணவர்கள் மட்டில் இளக்காரமும், கனிவும் கொண்டிருந்தது என்னைத் தொட்டது. இவர்களைப் பற்றி முன்பு எமக்குச் சொல்லியிருக்காவிட்டால் இவர்களைக் கத்தோலிக்கரென்றும், எம் நண்பர் என்றும் கணித்திருப்போம். இவர்களின் இதயங்களை நம் பக்கமாகத் திருப்பியது இறைவனின் நன்மைத்தனமே. திருமதி விளனகான் (Flanagan) கல்வியில் எமக்குத் துணை புரிகின்றார். அவரின் தியாகம் பொதுவான வரவேற்புப் பெற்றுள்ளது. மாணவர் எமக்கு மகிழ்ச்சியூட்டுகின்றனர். நல்ல எதிர்காலம் உண்டென நம்புகின்றோம். ஆயர் அவரின் ஒத்துழைப்பாளர்கள் அமதிக் குருக்கள் வழியாக இலங்கைக்கான பாதை திறக்கப்பட்டாலும் ஓர் ஆங்கில மாது திருமதி விளனகான் எமது யாழ் மடப் பாடசாலையுடன் தொடர்புடையவராக இருந்தார். அத்துடன் எம் சகோதரிகளுக்கும் உதவி செய்தார். அவரின் பணியில் அவரின் ஒரு மகள் துணை புரிந்தார். அவர் பலகாலமாகத் துறவு வாழ்வில் நாட்டம் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் 10. தை 1863

இன்னும் சில நாட்களில் எம் வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளோம். இங்கே சாதிப்பிரச்சினைகள் இருக்கின்றன. அண்மையில் ஒரு பிள்ளை ஓடிவிட்டாள். அப்பிள்ளையை 17 வயதுடைய ஒரு இந்துப் பிள்ளை அழைத்து வந்தாள். தான் கத்தோலிக்கத்தில் சேர விருப்பமெனக் கூறினாள். ஒரு புரட்டஸ்தாந்து ஆள் தனக்குத் திருமுழுக்கு அளித்ததாகவும், தான் விண்ணகம் சேர விரும்புவதாகவும் கூறினாள். அவளை விசாரித்தபோது அவள் மணமுடியாதிருக்க விரும்புவதாகக் கூறினாள். பல முறையும் அவள் திருமணத்தை விரும்பவில்லை. ஆயரின் அனுமதியுடன் அநாதை இல்லத்தில் சேர்த்தோம்.

தைமாதம் முதலாம் திகதி திருமதி விளானகானின் மகள் கத்தறீன் ஆயத்த கன்னிகையாக சேர்க்கப்பட்டாள். வேறொரு எலிசபேத் என்னும் சுதேச பெண் சபையில் சேர ஆசிக்கின்றாள். 8ம்திகதி ஆயரின் ஆலயத்தில் அ.ம.தி. குருக்கள் திருக்குடும்பத்துக்குள் வரவேற்கும் சடங்கு இடம்பெற்றது. தாராளமுள்ள மிஷனறிக் குருக்கள் “சேப்பிளிஸ்” அணிந்தவர்களாகப் பீடத்தில் முழந்தாழ்படியிட்டு நமது அருமையான சபையின் மதிப்புக்குரிய அடையாளமான ஆசீர்வதிக்கப்பட்ட நாடாவைப் பெற்றுக் கொண்ட காட்சியைப் பார்க்க அருட்சியாக இருந்தது. 4குருக்கள் யாழ்ப்பணத்திற்கு வெளியே இருந்து வந்திருந்தனர். அமதிக் குருக்கள் இதைப் பெறுவதற்கு வருவதையிட்டு மகிழ்ச்சியடைந்தோம். குடும்பமாக ஒன்று சேர்ந்து பிரான்சிய மொழியில் பாடியதையிட்டு மகிழ்ந்தனர். “இன்று அனுபவித்த ஆறுதல் பலகாலத்திற்கு ஊக்கம் தரும்” என்று அவர்களில் ஒருவர் கூறினார்.

## 14. தை. 1863

நான் ஒரு பெரிய வேலை ஒன்றை முடித்து வந்துள்ளேன். எம் அநாதைஇல்லம், போடிங் வகுப்புகளுக்கு ஒழுங்குத் திட்டம் போட்டுள்ளோம். எனவே எதிர்காலத்தில் நல்லமுறையில் இயங்கும்.

நான் முன்னைய கடிதத்தில் கூறியபடி 75 அநாதைப் பிள்ளைகள் வேதபோதக நிதியினாலும், 30 பிள்ளைகள் திருப்பாலத்துவசபை நிதியினாலும் பராமரிக்கப்படுகின்றனர். போடிங் 4பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் புரட்டஸ்தாந்து மக்கள் தங்கள் விடுதிகளை உயர்தர நிலையில் வைத்திருக்க விரும்புகின்றனர். கொழும்பில் உள்ள புரட்டஸ்தாந்து மக்கள் எங்களை எதிர்த்து நிற்கின்றனர். பத்திரிகைகளில் எங்களைப் பற்றி கட்டுரைகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளும் பிரசுரித்தள்ளனர். எங்களைப் பற்றி பயப்பட்டு எங்கள் நிறுவனத்திற்கு வரும் ஆதரவையும், பாராட்டையும் எதிர்ப்பதற்கு விழிப்பாய் இருக்கின்றனர். அத்துடன் இன்னொரு கஷ்டமும் ஏற்பட்டுள்ளது. இனிமேல் சாதாரண கப்பலில்தான் பயணம் செய்ய வேண்டும். கொழும்பு, யாழ் சென்ற நீராவிக் கப்பலை அரசாங்கம் விற்றுள்ளது. சாதாரண கப்பலில் பயணம் செய்ய 8நாள்கள் எடுக்கும். கொழும்பில் இருந்து போடிங் பிள்ளைகள் வருவதற்கு இது தடையாக இருக்கும். எனினும் ஒரு சிலராவது வருவார்கள் என்று நம்புகின்றோம். இன்றைய கடிதத்தில் பங்குனி மாதத்தில் இருவர் வருவதாகக் கூறியுள்ளனர். எம்வீட்டிற்கு அண்மையில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துள்ளோம். இங்கு அநாதைப் பிள்ளைகளும், தொழிலகமும் உண்டு.

தென்னங்கீற்றால் வேயப்பட்ட வேறொரு பெரிய கட்டிடம் சமையலறையாகவும், சாப்பாட்டறையாகவும் பயன்படுகிறது. நமது சிறுமிகளுக்கு மேசையோ, இருக்கைகளோ தேவைப்படவில்லை. பலவித வசதிகளின்றி வாழக் கூடியவர்கள். சௌகரியமான வாழ்வை அறியமாட்டார்கள். மாலையில் சில பாய்களை விரித்து காலையில் எடுத்து விடுவார்கள். அங்கு ஒரு பெரிய மண்டபம் வகுப்பறையாகவும், படுக்கைக்கும் உதவியாக இருக்கிறது. சோறு, கறி அவர்களின் வழமையான தினசரி உணவாகும். மஞ்சள் தேங்காய்ப்பால், மிளகு, மிளகாய், மரக்கறி, சில வேளைகளில் மீன் அல்லது இறைச்சி சேர்த்து சமைப்பர். இதுவே எல்லோரின் உணவுமாகும். நாம் அரசியின் வழக்கறிஞரை இழக்கப் போகின்றோம். புரட்டஸ்தாந்து என்றாலும் எங்களுக்குப் பல நன்மைகளைச் செய்துள்ளனர். நேற்று வந்து தான் இங்கிலாந்து செல்ல விரும்புவதாகவும், அங்கு 3வருடம் தங்கி இருக்கப் போவதாகவும் கூறிச் சென்றார்.

**9 மாசி 1863**

போடிங் பிள்ளைகள் குறைந்த தொகையினராயினும் அவர்களில் பலர் புரட்டஸ்தாந்து சபையினைச் சேர்ந்த நல்ல பிள்ளைகள். படிப்புக் குறைவு, எனினும் உருவாக்கம் பெற விருப்பமுள்ளவர்கள், வகுப்பில் பலர் இருக்கிறார்கள். 53பேர் வெளிப்பிள்ளைகள், 50பேர் அநாதைப் பிள்ளைகள். பலர் இன்னும் இந்துக்களாக உள்ளனர். பல புரட்டஸ்தாந்து குடும்பங்கள் பிள்ளைகளை எங்களிடம் கொண்டுவர விரும்புகின்றனர். சமயம் மாறி விடுவார்கள் என பயப்படுகின்றனர். பாஸ்டரின் மகள் ஒரு பாடசாலை திறப்பதாகக் கூறுகின்றார். அத்துடன் புரட்டஸ்தாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர் கொழும்புக்கும், யாழ்ப்பாணத்திற்கும் ஆசிரியர்களை அழைக்கவிருப்பதாகக் பத்திரிகைகள் கூறுகின்றன. நாம் இறைவனின் கரத்தில் உள்ளோம். அவரின் மகிமைக்காகவே பணிபுரிகின்றோம். நற்கருணை அற்புதக் காட்சியின் விழாவை சிறப்பாகக் கொண்டாடினோம். ஆயர் எம் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார். அவரைத் தொடந்து இன்னும் 2குருக்கள் திருப்பலி நிறைவேற்றினர். ஆலயம் அழகாக இலைகள், மலர்களால் அலங்கரிக்கப்பட்டு நாள் முழுவதும் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது. ஆயர், குருக்கள் நற்கருணைநாதரைச் சந்தித்துச் செபித்தார்கள். அதன் பின்பு ஆசீர்வாதம் அருளப்பட்டது.

## 6. பங்குனி 1863

முன்னே கூறிய 2புரட்டஸ்தாந்து இளம்பெண்கள் வந்தனர். வேறு சிலரும் வருவார்கள். ஏற்கனவே இறைவன் எம்முயற்சிகளை ஆசீர்வதித்துள்ளார். வியாதியாக இருந்த 15 வயதுப் புரட்டஸ்தாந்துப் பெண் மனம்மாற்றம் அடைந்துள்ளாள். தாய் அவளுக்கு மாதா பக்தியை ஊட்டியபடியால் மாதாவைப் பற்றி அறிந்திருந்தாள். நான் இதை அறிந்திருந்தபடியால் மாதாவின் பிள்ளை தவறாக இறக்கமாட்டாள் எனக்கூறிய படியால் சம்மதித்தாள். சகோதரி திரேஸ், கத்தரீன் என்னும் பெண்ணுடன் சென்ற போது விண்ணில் இருந்து வந்த தூதர்கள் போல் எம்மை வரவேற்றாள். நாம் அவளுக்கு மரியாளைப் பற்றியும், அவள் தரும் அருள் வரங்களைப் பற்றியும் எடுத்துக்கூறி ஒரு வரவணிக்கம் கொடுத்தபோது மகிழ்வுடன் அதைப் பெற்று முத்தமிட்டாள். அதை கழுத்தில் அணிவித்து சகல வரப்பிசாத மாதாவுக்கு நவநாள் செய்வோம். நீயும் எங்களுடன் சேர்ந்து மாதாவே எங்களுக்காக மன்றாடும் என்று செபித்துக் கொள்ளும் என்றேன். ஆம் என்று சம்மதித்தாள். நன்றி கூறினாள். நோயாளியை மகிழ்வுடன் வைத்திருந்தோம். அன்றிலிருந்து தன் ஆன்மமீட்புப் பற்றிப் பேசினாள். நாம் படிப்பித்த செபங்களைச் சொன்னாள். 7ம் நாளில் அவள் நிலைமை மோசமடைவதைக் கண்டு உண்மையைத் தழுவ அவளின் விருப்பம் கேட்டபோது தான்விரும்புவதாகவும், புரட்டஸ்தாந்து மக்களுக்குப் பயப்படுவதாகவும் கூறினாள். பின்பு ஒரு குருவை அழைக்கும்படி கேட்டதால், பொஞ்ஜின் குருவானவர் வந்தார். நோய் கடுமையாக இருந்ததால் மாலையில் திரும்பவும் வருவதாகவும், திருமுழுக்கு கொடுப்பதாகவும் கூறினார். எனவே ஒருவரை ஆயத்தம் செய்ய அனுப்பினோம். மாலையில் திருமுழுக்குப் பெற்று "ஆன்மேரி" என்னும் பெயர் பெற்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டஸ்தாந்துப் பாஸ்டர் இதை அறிந்து தன்மறை ஆசிரியரை அவளிடம் அனுப்பி பைபிள் வாசிக்கவைத்தார். அவள் மகள் பலமுறை அவளிடம் வந்து அவளின் தீர்மானத்தைக் குழப்ப முயன்றும் அவள் திடமாக இருந்த படியால் விட்டுவிட்டனர். எனவே எம்முடன் நன்றி கூறுங்கள். தினமும் மறைக்கல்வி படிக்க 2அநாதைப்பிள்ளைகளை அவளிடம் அனுப்பி உறுதிப்பூசுதலுக்கு ஆயத்தம் செய்கின்றேன். ஆயர் விரைவில் கொடுப்பதாகக் கூறினார்.

எனக்கு ஆங்கிலம் தெரியாத படியால் புனித. சூசையின் துணையுடன் தமிழ் படிக்கின்றேன். சுதேச கன்னியரை ஆயத்தப்படுத்த இது கட்டாயம் தேவை. இவர்கள் எமது அநாதை இல்லத்திற்கும், தமிழ்ப் பாடசாலைக்கும் கட்டாயம் தேவையானவர்கள். ஐரோப்பியர் இந்த மொழியைப் படித்துக்,கதைக்க எழுத கற்பிக்க முடியாது. எம் அநாதைச் சிறுவர்கள் தினமும் செபமாலை ஓதி நான் அவர்களுடன் தமிழில் கதைக்க செபிக்கின்றனர். நாம் அவர்களுக்கு "புனித. சூசையின் அநாதைகள்" எனப் பெயரிட்டோம். வீட்டிலுள்ள தொழிலகம் எமது பணியை நிறைவு செய்கின்றது. இளம் தொழிலாளிகள் அதில் மகிழ்வுடன் பணிபுரிகின்றனர். ஒவ்வொரு ஞாயிறும் திருவிருந்தில் பங்கு பெறுகின்றனர். பலருக்கு பெற்றோர் இல்லாதபடியால் கிறிஸ்தவ தொழிலாளிகளை உருவாக்க இவர்களைத் தெரிவு செய்ய முடியும்.

**6 வைகாசி 1863**

என் நல்ல தாயாரே!

நான் நோயுற்றுத் தற்போது சுகம் பெற்றுள்ளேன். அத்துடன் 3சகோதரிகள் நோயுற்று வேலை செய்ய முடியாதிருக்கின்றனர். ஆயரும், குருக்களும் எம்மில் நல்ல கரிசனை காண்பிக்கின்றனர். இத்துன்பம் விட்டகலும் என்ற நம்பிக்கை என் உள்ளத்தின் ஆழத்தில் உண்டு. மாதாவுக்கு ஒரு நவநாள் ஆரம்பித்துள்ளோம். எம் செபத்தை அவர் கேட்டருள்வார். எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்காது இறைகரத்தில் எம்மைக் கொடுக்கின்றோம்.

மட்டக்களப்பில் ஒரு மடம் ஆரம்பிக்க என்னைக் கேட்டனர். ஒரு வீடு, தோட்டம் தருவதாகக் கூறினர். ஆசிரியர் பற்றாக் குறை. நல்ல பணிபுரியலாம். பல புரட்டஸ்தாந்து மக்கள் தம் பிள்ளைகளை எம்மிடம் ஒப்படைப்பார்கள். ஆனால் நோயாளிச் சகோதரிகளுடன் என்ன செய்ய முடியும்? எனவே தற்போது முடியாதெனக் கூறினோம். அங்கு 2 அ.ம.தி. குருக்கள் பணிபுரிகின்றனர். சுதேச புரட்டஸ்தாந்துக் மக்கள் அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் மொழி கதைக்க முடியாது. ஒரு பிள்ளை எமக்கு மொழி பெயர்ப்பாள். இறைவன் அவளை வழிநடத்துகின்றார்.

குவாசிமோடோ (Quasimodo) ஞாயிறு தினத்தில் 5 தொழில்புரியும் பெண்கள், ஒரு ஆசிரியை தி.கு சபையில் சேர்க்கப்பட்டனர். ஆயர் இந்த வழிபாடுகளை நடாத்தினார். அருட்தாந்தை சலோன் (salaum) என்பவரும் நாடா பெற்றுக் கொண்டார். (cord) சகோதரி மாறியோசெவ் தான் விரும்பியதைச் செய்து வருகின்றார். மனம் மாறிய புரட்டஸ்தாந்துப் பெண் சென்ற கிழமை அமைதியாக மரணமடைந்தாள். இதுவரை போராடித் திடமாக இருந்தாள். மாதத்தின் முதல் ஞாயிறு அன்று எலிசபேத்தின் மடியில் இறந்தாள். இத்துடன் குழுவைப் பராமரிக்கும் சகோதரியின் கடிதம் உள்ளது. எம் சிறிய குழுச் சகோதரிகளின் நோய் பற்றியும், இந்தக் காலநிலையில் எப்படி அவர்கள் செயற்படுவது பற்றியும் கூறுகின்றது. அவர்கள் தைரியத்தோடும், இறைசித்தத்தோடு தாராள உள்ளத்துடன் வாழ்ந்தார்கள் என்பதை இக்கடிதங்கள் காட்டுகின்றது.

## 23 வைகாசி 1863

தந்தைக்குரிய அன்புடன் ஆயர் கடற்கரையை அண்மிய ஒரு கிராமப்புறத்தில் ஒரு வீடு வாங்கியுள்ளார். ஒரு பகுதியை அநாதைப் பிள்ளைகளுக்கும் கொடுக்கத் திட்டமிட்டுள்ளார். இவ்வீடு எமக்கும் ஒரு மாற்றத்திற்கும் உதவும். சனி, ஞாயிறு அங்கு செல்லத் திட்டமிட்டுள்ளோம். எம் வீடு சிறியது. இம் மாற்றம் எமக்குப் பெரிதும் உதவும். நாளை எமது 12பிள்ளைகள் உறுதிப்பூசுதலும், 2பிள்ளைகள் முதல்நன்மையும் பெறுவார்கள்.

## 8 ஆனி 1863

நாம் எல்லோரும் சுகமேயுள்ளோம். ஆனால் வலுக்குறைந்துள்ளோம். மாதாவின் மாதத்தில் துன்பங்களை அனுபவித்தோம். அது எம் ஆன்மாவுக்கு நன்மையாக இருந்தது. எனக்கு நம்பிக்கையுண்டு. எமக்குத் தற்போது வந்த துன்பத்திற்கு இயேசுவின் திருஇருதயத்தில் இருந்து ஆறுதல் பெறுவோம். தமிழ்ப்பிள்ளைகளின் ஆசிரியை நோயுற்று இருக்கின்றார். வகுப்புகள் கற்பிக்க முடியாது. ஆயரும், குருக்களும் வேறொருவரைத் தேடுகின்றனர். இது இலகுவானதல்ல. ஒரு 16 வயதுடைய ஆங்கில போடிங் பிள்ளை நோயுற்றுள்ளார். அநாதை இல்லத்தில் 15 இந்துப் பிள்ளைகள் உள்ளனர். சிலர் தேவதாயின் விண்ணேற்புவிழாவில் திருமுழுக்குப் பெறுவார்கள். நேற்றைய நாளில் நற்கருணைப் பவனி நடைபெற்றது. ஆங்கிலப் பிள்ளைகள் வெண்ணுடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரித்து துப்பட்டி, முடி அணிந்திருந்தனர். அநாதைப் பிள்ளைகளும் தம் சீருடை அணிந்திருந்தனர். புனித. சூசையின் கொடியை ஏந்தியவர்களாக நல்ல ஒழுங்கு முறையில் முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் பவனி நடைபெற்றது. பிள்ளைகளின் பக்தி நிலை மக்களையும் கவர்ந்தது. ஆயரும், குருக்களும் கூட மகிழ்ச்சியடைந்திருந்தனர். நாம் ஓரிடத்தில் நின்றபோது ஒரு வாகனத்தில் புரட்டஸ்தாந்து மக்கள் வந்தனர். தலைவணங்கியபடி நின்ற மக்கள் நிமிர்ந்து பார்த்தனர். பார்த்த எங்களைக் குழப்ப முயன்றனர். இவர்கள் விவேகமாகத் தங்கள் வாகனத்தை நிறுத்தினர். நீங்கள் செல்லமுடியாது என்றனர். முன்னேறிச் சென்றிருந்தால் வாகனம் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும். ஆலயத்தில் இருந்தும் பிள்ளைகள் ஒழுங்காக வீட்டிற்குச் சென்றனர். ஆயர் இதை உங்களுக்கு எழுதும்படி கூறினார். முன்பு ஒரே ஒழுங்கீனம் காணப்பட்டது. இது சிறிய புதுமையெனக் குருக்கள் கூறுகின்றனர். எமது பிள்ளைகளின் பயபக்தியையும், மவுனத்தையும் கண்டு புரட்டஸ்தாந்து மக்களும் வியக்கின்றனர். — ஆயர்.

## 8 ஆடி 1863

என் நல்ல தாயாரே! ஆவணி 15 திருவிழாவில் பல இந்துச் சிறுமிகள் திருமுழுக்குப் பெறுவார்கள். நான் இதை அறிவித்தபோது 7 வயதுச்சிறுமி என்னை அணுகி தானும் திருமுழுக்குப் பெறமுடியுமா எனக் கேட்டாள். தானும் இறைவனின் பிள்ளையாக மாற வேண்டும்என்று எனக்கு மொழிபெயர்த்துக் கூறுவாள். தன் தாய் வந்தபோதும் கத்தோலிக்கத்தில் சேரக் கேட்டாள். அவளை நாம் " மாறி ஒணறின்" என அழைத்தோம்.

பாடசாலை அதிகாரியை எதிர்பார்த்துள்ளோம். அரசாங்க ஆசிரியை நோயுற்றுள்ளார். சென்ற வருடம் எம்முடன் இருந்த ஒரு பெண்ணுக்குப் பதிலாக இவர் வந்துள்ளார். இவருக்கு அனுபவம் இல்லாவிடினும், இளம் பிள்ளையாக இருந்தும், புரட்டஸ்தாந்து சமயமானபடியால் எடுத்துள்ளனர். புரட்டஸ்தாந்து மதத்தவர்கள் பொறாமைப்படுகின்றபடியால் நாம் புது இடத்திற்குச் செல்லவில்லை. பொஞ்சின் குருவானவர் சில இளைஞருடன் அங்கு சென்றுள்ளார்.

## 8 ஆவணி 1863

நல்ல இறைவன் நம் நம்பிக்கையைச் சோதிக்கின்றார். இளம் ஆசிரியை எல்லோரின் நம்பிக்கைக்கும் உரியவளல்ல. நமது நற்சுகத்திற்கு நன்றி கூறிய போது நாம் நோய்வாய்ப்பட்டோம். நான் கேட்ட விண்ணப்பத்திற்காக தேவதாயிடம் நன்றி கூறினோம். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடியான நேரத்தில் எங்களில் ஒருவரை நல்லதேவன் எடுப்பாரென்று நான் நம்பவில்லை. புரட்டஸ்தாந்தரிடம் இருந்து ஓர் எதிர்ப்பு வந்தது. இறந்த ஆசிரியைக்குப் பதிலாக ஓர் இளம் ஆசிரியை வந்தார். அவருக்குச் சொந்தமான வேறு இரு பெண்களும் வரவிரும்பினர். பெற்றோர் தம் பிள்ளைகளை எடுத்தனர். ஒரு புரட்டஸ்தாந்துப் பெண் தன் மகளை எம்முடன் சேர்க்க விரும்பினாள். ஆனால் தந்தை கத்தோலிக்கத்திற்கு எதிரானவர். எம்முடன் ஒரு போதகரின் பிள்ளையும் இருக்கின்றார். சென்ற கிழமை கொழும்பில் இருந்து இருவர் வந்தனர். வேறு அநாதைப் பிள்ளைகளும் வந்தபடியால் இடமில்லை. ஏற்கனவே 3 வீடுகள் உள்ளன. எதிர்கால மடத்தின் வரைபடம் பூர்த்தியாகி விட்டது. மழையின் பின்பே ஆரம்பிக்கலாம். இந்த நாட்டிற்கு இது தேவை. எப்போது வேலை முடியுமெனத் தெரியாது. ஐரோப்பாவில் ஒருவர் செய்யும் வேலையை இங்கு நான்கு பேர் செய்வார்கள்.

தற்போது யாழ்ப்பாணத்தில் நோய் பரவுகின்றது. இறைவன் குணப்படுத்துவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அவர் பணியை நாம் இங்கு செய்கின்றோம். எனவே இறைவனின் கரத்தில் நாம் உள்ளோம். சில நாட்களின் முன்பு எமது போடிங் பிள்ளை ஒன்றினை அவரின் அன்றி கூட்டிச்செல்ல முற்பட்டபோது பெற்றோர் விரும்பாத படியால் நாம் மறுத்துவிட்டோம். அவளின் கணவன் கோபமுற்று பத்திரிகை மூலம் எம் வீட்டைக் காவல்புரிய ஊர்காவலர்களை அழைத்தார். கோபத்தினால் அவர் எழுதிய அறிக்கை எமக்கொன்றும் செய்யவில்லை. வேறு மாணவர்களும் எம்மிடம் வருகின்றனர். துறவிகளாக விரும்பி இரு இளம் பெண்கள் கொழும்பில் இருந்து வந்தனர். பெற்றோர், குருக்களுக்கு அறிவிக்காமல் வந்தபடியால் இவ்வாறு புறப்படக் கூடாது என்று அவர்களுக்குச் சொன்னோம். திரும்பிச் செல்வதிலும் பார்க்க தாம் இறக்கப் போகின்றோம் என்றனர். இவர்களைத் திருப்ப அனுப்ப வேண்டும். ஆயரும் அவ்வாறே கூறுகிறார்.

சந்தர்ப்பம் வரும் போது ஒரு சுதேச நவகன்னியர் இல்லம் அமைக்க வேண்டும். ஏனைய காரியங்களைப் போல் இதிலும் விவேகத்துடன் செயற்பட வேண்டும். கொழும்பில் உள்ள குருக்கள் ஒரு குழுவை அமைக்க விரும்புகிறார்கள். எனவே ஒரு விதவையையும், ஒரு இளம் பெண்ணையும் சேர்த்து வகுப்புகள் ஆரம்பித்தள்ளனர். நாம் கொழும்புக்கு வந்தபோது எம்மை வரவேற்ற பெண்ணே இந்த விதவையாகும். தற்போது இங்கே எம்முடன் இருக்கின்றார். தினமும் எம் சிற்றாலயத்தில் செபித்து ஆறுதல் பெறுவதாகச் சொல்லுகின்றார். கொழும்பில் நமது ஸ்தாபகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியடையாவிட்டால் தான் இங்கேயே இருப்பதாகக் கூறி ஆறுதல் அடைகின்றார்.

## 24. ஆவணி. 1863

சகோதரி கெலனைப் பற்றிக் கூறவேண்டும். சில நாட்கள் மிகவும் துன்புற்றார். அருட்தந்தை புவாசோ (Boisseau) 'ரூர்' நகரிலுள்ள திருமுகத்தின் எண்ணெயைத் தந்து நவநாள் செய்யும்படி கூறினார். நவநாள் செய்யும் போது அவரில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. வெளிறிய முகம்தேறி நல்ல நிலைக்கு வந்து சாப்பிடவும் மனம் கொண்டுள்ளார். தற்போது சுகமாக இருக்கின்றார். நானும் எவ்வாறு பிரான்சில் இருந்து புறப்பட்டேனோ அவ்வாறு நல்ல சுகநிலையில் உள்ளேன். எனவே பயப்பட வேண்டாம். என் கடிதம் தியான வேளையில் உங்களை வந்தடையும். நல்ல இறைவன் உங்கள் களைப்புகளைப் போக்குவாராக! எமது வருடாந்த தியானம் தாமதமாகின்றது. மார்கழி 15ம் திகதி பாடசாலை லீவு ஆரம்பமாகும்.

மாதாவின் விண்ணேற்புத் திருவிழாவில் 6 பிள்ளைகள் திருமுழுக்குப் பெற்றனர். இவர்களுள் மாறிஒணறினும் அடங்குவார். எல்லோரும் மகிழ்ச்சியடைந்தனர். வழிபாடு ஒன்றரை மணித்தியாலம் நடைபெற்றது. பிள்ளைகள் தேவதூதர்கள் போல் காட்சி தந்தனர். மாலையில் என்னிடம் வந்தபோது ஒவ்வொருவருக்கும் ஒரு செபமாலை கொடுத்து நெற்றியில் முத்தமிட்டேன். அவர்களின் ஆசிரியை இதைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். நான் அவர்களைக் கோவிலுக்கு அழைத்துச் சென்று மாதாவின் பாதுகாப்பில் ஒப்படைத்தேன். மாதாவே அவர்களின் தாயெனக்கூறி உங்களுக்காகவும் செபிக்கும்படி கூறினேன். அதே நாளில் ஆங்கிலப் பெரிய பிள்ளைகள் மாதாவுக்கு ஓர் ஒப்புக் கொடுத்தல் செபம் எழுதும்படி கூறி, மிகவும் நல்ல செபத்தைச் சொல்லுவதாகக் கூறினேன். ஒரு 16வயதுடைய புரட்டஸ்தாந்துப் பிள்ளை எழுதிய செபம் தெரிவுசெய்யப்பட்டது. இதயத்தில் இருந்து வெளிப்பட்ட தேவதாயின் அன்பை இது எடுத்துக் கூறியது. மாலைச் செபத்தின் பின்பு பிள்ளைகள் மெழுகுதிரியைக் கையில் ஏந்திய வண்ணம் பீடத்தைச் சுற்றிவர நின்றனர். அப்போது இந்தப் பிள்ளை தான் எழுதிய செபத்தை உருக்கமாக வாசித்தாள். அதில் தானும், தனது பெற்றோரும் விரைவில் கத்தோலிக்க திருச்சபையில் உறுப்பினராக வரவேண்டும் என எழுதியிருந்தது. ஒரு நாளுக்கு இந்த அருள் கிடைப்பதாக!.

இறைவன் ஒரு ஆபத்திலிருந்து எங்களைக் காப்பாற்றினார், நன்றி கூறுவேண்டும். சென்ற கிழமையில் நான் வேலை செய்யும் அறைக்குச் சென்றேன். திடீரென எம் வேலைசெய்யும் "எலியனோர்" கூச்சலிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே விரித்திருந்த பாயைத் தூக்கிபோது 2பெரிய பாம்புகளையும், 5 தவளைகளையும் கண்டாள். எனவே அவள் பயந்து விட்டாள். இறைவன் எம்மைப் பராமரித்து வருகின்றார். தினமும் நாம் தேவபராமரிப்பை உணர்கின்றோம்.

## 24 புரட்டாதி 1863

நல்ல இறைவன் வேறு சோதனைகளை அனுப்பியுள்ளார். எம்பணி சிலுவையின் நிழலில் உறுதிபெற விரும்புகின்றார் போலும். இந்த மரத்தினடியில் எம்பணி உறுதிபெற்று மணம் வீசும் என்பது என்நம்பிக்கை.

பாடசாலை அதிகாரி வந்தபோது பொதுவாக எம்பணிகளில் திருப்தியடைந்தார். சகோதரி கெலனின் வகுப்பில் பிள்ளைகள் அமைதியாக நல்ல பதில் கூறினர். புத்திரிகைகளிலும் பாராட்டுக் கிடைத்திருக்கும். இந்தக் கிழமை புரட்டஸ்தாந்து ஆயர் உறுதிப்பூசுதலுக்கு வந்திருந்தார். இங்கிலாந்தில் இருந்து 2 ஆசிரியர்களை வரவழைத்து கொழும்புக்கு அனுப்பினார். அவர்கள் மனையியலையும், பிரஞ்சு பாஷையையும் படிப்பிப்பார்கள். அவர்களும் மற்றவர்களைப் போல் களைப்படைவர், திருமணம் புரிந்து வெளியேறுவார்கள். என்னவரினும் இறைவனுக்காக நாம் பணிபுரிகின்றோம். தங்க இடவசதி இல்லாதபடியால் ஆயர் 4ஆவது வீடொன்றை வாடகைக்கு அமர்த்த விரும்பினார். அவர்களுடன் கதைப்பதற்கு கத்தறின் உதவி செய்வார். பின்பு சிஸ். லிகோரி இவர்களை வழிநடத்துவார் என நம்புகின்றேன். லிகோரி நன்கு இம்மொழியைப் படிக்கின்றார்.

## 6 மார்கழி 1863

என் நல்ல தாயாரே! பாடசாலையில் பரீட்சை 15ம் திகதியும், பரிசளிப்பு 17ம் திகதியும் நடைபெறவுள்ளது. எல்லாம் திருப்தியாக நடைபெற இறைவன் துணை புரிவாராக! பரிசளிப்பு விழாவில் மாணவிகளில் திறமையான பிள்ளைக்குக் கொடுக்கும்படி கல்வி அதிகாரி ஒரு நல்ல புத்தகம் அனுப்பியிருந்தார். எமது நிறுவனத்தைப் பற்றி விசேடமாகக் கொழும்பில் கல்வி அதிகாரி நன்கு பாராட்டியுள்ளார். புனித. சவேரியார் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருப்பலியின் போது சகோதரி ஸ்ரனிஸ்லாஸ் ஆங்கிலத்திலும், பிரான்சிய மொழியிலும் பாடல்களைப் பாடினார். பயிற்சிப் பிள்ளைகளும் சிஸ். திரேஸ் தன் மாணவர்கள் மூலம் அழகிய சித்திர வேலைப்பாடுகள் கொடுத்தார். சிஸ். மேரி யோசெவ் விற்பனைக்காக பல கைவேலைகள் கொடுத்தார். அநாதைப் பிள்ளைகள் தாமே உடுப்புத் தைத்து மஞ்சள், சிவப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறத்தால் அலங்காித்தனர். எனவே இந்த நாள் மிகவும் மகிழச்சியை அளித்தது. எல்லாம் இதயத்தில் இருந்து பெற்றுக் கொண்ட கொடைகளாகும்.

## 20 மார்கழி 1863

நீங்கள் கூறியவற்றை நான் செய்தேன். எல்லா அநாதைப் பிள்ளைகளும் என்னைச் சூழவர அமர்ந்து நான் கையில் வைத்திருந்த உங்கள் "போட்டோ" படத்தைப் பார்த்தனர்.ஓவ்வொருவரும் ஒவ்வொன்று கூறினார்கள். ஔறின் எம்நல்ல தாயாரை அதிகம் நேசிப்பதாகவும், தினமும் அவருக்குச் செபிப்பதாகவும் கூறினாள். பெரிய பிள்ளைகள் கிறிஸ்மஸ் தியானத்தில் திருவிருந்தில் பங்கு கொண்டு அதை உங்கள் கருத்துக்காக ஒப்புக்கொடுப்பதாக சொன்னார்கள். எம் "மாகிறேற்" பல தடவை யோசித்துவிட்டு எமது மகா மேன்மையுள்ள நல்ல தாயாரே! அதிக தூரத்தில் இருந்து எம்மை நினைப்பது எவ்வளவு நல்லது எனக் காட்டினார். நாம் அவரைப் பார்க்க விரும்புகின்றோம் என்றார். பிள்ளைகள் எவ்வளவு நல்லவர்களாயினும் நேரடியாக அவர்களுடன் கதைக்க முடியாதிருக்கின்றது. ஆங்கில இளம்பெண்கள் அவ்வாறல்ல. அவர்கள் இதயம் இன்னும் பண்படவில்லை. நாம் செய்வதை அவர்கள் குறைவாகவே விளங்கிக் கொள்கின்றனர். பெருமையுடையவர்கள். இறைவன் அவர்களுக்கு உதவிபுரிவாராக!

பரிசளிப்பு விழர நல்ல முறையில் நிறைவெய்தியது. புரட்டஸ்தாந்து பிள்ளைகளின் பெற்றோர் தவிர மற்றையோர் எமது கண்காட்சியிலும், பரீட்சையிலும் பங்குபற்ற, உதவி செய்ய முடியாதென்று தீர்மானித்ததாக நாங்கள் அறிந்தொம். ஒரு பெண் எமது நிறுவனத்தைப் பற்றிப் பத்திரிகையில் எழுதியிருந்தார். எம் பரீட்சை பற்றி எழுதினார். புரட்டஸ்தாந்தினரின் முறையில் அவர் சில குற்றங்களைக் கூறினாலும் அது நமக்கு நன்மையையே அளித்தது. இறுதியில் 'இந்த நிறுவனத்தில் ஒரே பிழை உள்ளது. அதாவது இது கத்தோலிக்க நிறுவனமாக உள்ளது' என்று எழுதி முடித்தார். மகிமை பொருந்திய குற்றச்சாட்டு. இந்தப் பெண் அரசியின் வழக்கறிஞரின் மனைவியாகும். 2 பேரப்பிள்ளைகளை அவர் எம்முடன் விட்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நல்ல செய்திகள் உங்களுக்குக் கூறவுள்ளேன். எமது தியான நாட்கள் நல்ல சூழ்நிலையில் நடைபெற்றது. 10ந் திகதி ஆரம்பமாகி 16ந் திகதி முடிவடைந்தது. தினமும் காலையில் ஆயர் மறைஉரை ஆற்றினார். Fr. Bonjean மாலையில் உரையாற்றினார். நான் ஒருபோதும் இப்படியான தியானம் செய்யவில்லை. நான் மட்டுமல்ல, எமது சகோதரிகளும் நல்ல முறையில் இந்த நாட்களைச் செலவிட்டு, புது ஊக்கத்துடன் மீளவும் இறைமகிமைக்காகவும் ஆன்மாக்களின் மீட்புக்காகவும், பணிபுரிய புறப்பட்டோம். தியான இறுதி நாளன்று ஆயர் தலைமையில் 3குருக்களும் 5சகோதரரும் பலிப் பூசையில் பங்குபற்றினர். பாப்பரசரின் ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டு பின் நாள் முழுவதும் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது. பீடம் நன்றாக அலங்கரிக்கப்பட்டு ஒரு சிறிய விண்ணகம்போல் காட்சியளித்தது. இயேசுவின் பிரசன்னத்தை அங்கு கண்டோம். லீவு நாட்களில் போடிங் பிள்ளைகள் எம்முடன் இருந்தனர். மற்றும் உதவி செய்யும் பிள்ளைகளும் இருந்தார்கள். தியான நாட்களுக்கு முன் நான் அவர்களுடன் பேசி அறிவுரைகள் கூறிவிட்டு வந்ததால், எல்லோரும் அமைதி காத்தனர். சிலர் என்னைப் பார்க்கவுமில்லை. தங்களைவிட்டுப் பிரியப் போகின்றோம் என்று சிலர் அழுதனர். இச்செயல்கள் என் உள்ளத்தை ஆழமாகத் தொட்டன.

சிறிது நாட்களின் பின் ஓர் அநாதைச் சிறுமி விண்ணுலகு சென்றுவிட்டாள். இயேசுவின் திருஇருதய விழாவன்று இப்பெண் இங்கு வந்தா. புனித.சூசையின் பாதுகாவலில் வைத்து அவர் பெயரை அவவுக்கு இட்டோம். சில மாதங்களின் முன் நோயினால் பீடிக்கப்பட்டிருந்ததால் திருமுழுக்கு கொடுக்க ஒரு குருவைக் கேட்டபோது அவர், அவளுக்கு கடுமையான நோய் இல்லை எனவும், நோய் கூடினால் நீங்களே கொடுக்கலாம் எனவும் கூறியிருந்தார்.

ஒருநாள் மாலை நேரம், நோய் கடினமாகக் காணப்பட்டதால் திருமுழுக்கு கொடுக்கும்படி சிஸ். லிகோரியிடம் கேட்டேன். சிறுமி ஞானஸ்நானம் பெற்று மறுநாள் இறந்துவிட்டா. இறப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் நான் அவளைச் சந்தித்துக் கதைத்தேன். நீ இறைவனைச் சந்தித்ததும் எமக்காக மன்றாடும்படி அவளைக் கேட்டேன். சிஸ்ரர் அழுதபோதும் அழ வேண்டாம். நான் விண்ணகம் செல்கின்றேன். உங்களுக்காகவும் செபிப்பேன் என்று கூறி இறந்தாள்.

பாடசாலை மீளவும் அதே பிள்ளைகளுடன் ஆரம்பமாகியுள்ளது. இந்த நாட்டில் பெற்றோர் பிள்ளைகளை 'போடிங்கில்' விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கமாட்டார்கள். பத்திரிகைகளிலும் எமது பரீட்சைகள், பரிசளிப்புகள் பற்றி எடுத்துக் கூறினாலும், நாம் கத்தோலிக்கர் என்றபடியால் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். புரட்டஸ்தாந்து மதத்தவர்களின் வகுப்புகள் சரியில்லாதபடியால் எமக்கு நல்ல காலம் வருமென எதிர்பார்க்கின்றோம்.

**தை 15 -1864**

இறைவன் எம் தியான நாட்களை ஆசீர்வதித்ததுபோல், நாம் செய்து கொண்ட தீர்மானங்களையும் ஆசீர்வதித்தால் நாம் பெரிதும் மகிழ்வோம். இயேசு நற்கருணைப் பேழையில் மட்டுமல்ல, எமது ஆலயம் முழுவதும் தன் பிரசன்னத்தைத் தருகின்றார். உண்மையில் இயேசு எம் மடத்தில் மகிழ்வுடன் உள்ளார். இந்தப் பெரிய நகரில் 4 இடத்தில் மட்டும் நற்கருணை பிரசன்னம் உள்ளது (1) பெரிய கோவில் (2) ஆயர் இல்லம் (3) பொஞ்ஜீன் சுவாமியின் அநாதை இல்லம் (4) எமது மடம்.

**மாசி 23 - 1864**

இரண்டு மாதங்களாக போர்டோவில் இருந்து கடிதங்கள் வரவில்லை. நாம் நல்ல சுகமாக இருக்கின்றோம். தியான நாட்களின் அருட்கனிகளைப் பாதுகாக்க முயற்சிக்கின்றோம். எமது பிள்ளைகளும் ஆங்கிலத்தில் தியானம் செய்தனர். முதல்முறையாக நான்கு நாட்கள் அமைதியில் செலவிட்டனர். ஒரு நாளில் இரண்டு மறையுரை வழங்கப்பட்டது. இறுதிநாளில் ஆயர் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். திருமுழுக்குப் பெற்றவர்களும் தியானத்தில் பங்குபற்றியவர்களும் சாதாரண பொதுநிலையினராகத் திருக்குடும்பத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். பல பிரிவினை மதப் பிள்ளைகள் விரும்பியும் பெற்றோர் தடை செய்ததால் சேர முடியவில்லை.

13 வயதுச் சிறுமி தன் நன்றியைத் தெரிவிக்க தோட்டைக் கழற்றிப் பீடத்தில் வைத்தார். உத்தரவு பெறாமல் வைக்க முடியாதென்றபடியால் என்னை அணுகிக் கேட்டாள். உறவினர் ஒருவர் தனக்குக் கொடுத்தபடியால் பெற்றோர் ஒன்றும் சொல்ல மாட்டார்கள் என்று கூறியபடியால் அதற்குச் சம்மதித்தேன்.

எம்முடன் இருக்கும் பிள்ளைகளுடன் திருக்குடும்பப் பிள்ளைகள் சபையை ஆரம்பிக்க விரும்பினேன். பலமுறை கூறியும் அவர்கட்கு இது விளங்கவில்லை. நானே இதைக் கூறி இன்னும் சில காலத்தில் அதற்குரிய ஸ்தாபகர்களைத் தேர்ந்தெடுப்போம் என அறிவித்தேன்.

இங்கு படிப்பின் முக்கியத்துவம் கவனிக்கப்படுவதில்லை. வகுப்புக்கு வந்தாலும் 12 வயதுடன் நிற்பாட்டி விடுகின்றார்கள். என்றாலும், மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் வயது கடந்தாலும் எம்மிடம் வருகின்றனர். ஐரோப்பியர் புரட்டஸ்தாந்து மதத்தினர், கத்தோலிக்கர் ஏழைகள். எம் தேவைக்கு அவர்களால் உதவி செய்ய முடியாது.

எம் தமிழ் பிள்ளைகளுக்குத் தியானம் அவசியம். எம்மால் தமிழ் பேச முடியாது. அவர்களுக்குப் பொறுப்பாக உள்ளவர்களையும் நம்ப முடியாது. முதல் பொறுப்பாளரை மாற்றினாலும் அவவுக்குப் பதிலாக வேறொருவரை எடுப்பது கஷ்டமாக இருக்கின்றது. இரண்டாவது பொறுப்பாளர் வயது 17 ஆகும். சிஸ். லிகோரிக்குத் தமிழ் படிப்பிக்கின்றா. அவவின் பெற்றோர் அவளுக்கு மணம் முடித்துக் கொடுக்க விரும்பினாலும், அந்தப் பிள்ளை இறைவனுக்குப் பணி செய்ய விரும்புகின்றாள். பலகாலம் நாம் அவவைப் படித்து அறிய வேண்டும்.

## பங்குனி 01 - 1864

எமது தாயார் வெளிப் பிள்ளைகளுக்கு ஞாயிறு பாடசாலை நடாத்த விரும்புகின்றார். அவர்கள் கிழமையில் மூன்று அல்லது நான்கு நாட்கள் பாடசாலைக்கு வந்து, மறு நாட்கள் வரமாட்டார்கள். ஒரு சிறு விழாவுக்கு எட்டு நாட்கள் கொண்டாட்டம் நடத்துவார்கள். எனவே வகுப்பில் பிள்ளைகள் குறைவாக இருப்பார்கள். இங்குள்ள மக்களின் விழாக்கள் பிள்ளைகள் அரிச்சுவடி தொடங்குதல், காது அல்லது மூக்குக் குத்துதல், அதற்கு ஆபரணம் போடுதல், காப்பு, சங்கிலி அணிதல் என்பனவாம். கத்தோலிக்கரும் இவற்றைப் பின்பற்றி வாழுகின்றார்கள்.

## சித்திரை 01 - 1864

இறைவனுடைய மகிமைக்காக இதை எழுதுகின்றேன். எம் சகோதரிகள் நோய் இல்லாது இருந்தாலும், வெயிலின் கொடுமையால் மிகவும் களைப்படைந்துள்ளனர். சிஸ். லிகோரிக்கும் இடைக்கிடை தலைவலி வருகின்றது. பணிக்குப் பொறுப்பெடுத்தும், தன் மனச்சாட்சிப்படி செய்யமுடியாதுள்ளது. சென்ற சனிக்கிழமை ஒரு பிள்ளை வீட்டுக்கு ஓடிவிட்டாள். ஒரு தமிழ் பொறுப்பாளர் உத்தரவு கொடுத்திருக்கலாம். இன்று அப்பிள்ளையைக் கூட்டிவர அவ கேட்டா. பிறசமய மக்கள் மத்தியில் அப்பிள்ளை இருந்ததால் நான் சம்மதித்தென். எமக்குத் தமிழ் தெரிந்தால் எவ்வளவோ நன்மை செய்யலாம். சிஸ்.லிகோரிக்குச் சில தமிழ் சொற்கள் விளங்குகின்றன. எனக்குக் கத்தறின் உதவி செய்கின்றா.

Mrs. Flanagan திருகோணமலையில் வகுப்புத் தொடங்க இருப்பதால் அவவின் மகள் Fanny எம்மை விட்டுச் செல்லவுள்ளார். ஓடிய சிறுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று மாலை திரும்பி வந்தாள். அடக்கம், அமைச்சலுடன் நான் கொடுத்த பகிரங்க தண்டனையை ஏற்றுக் கொண்டாள். அவள் ஒரு பிற சமயத்தவரை மணம் முடிக்கவுள்ளாள்.

ஒரு புரட்டஸ்தாந்து பிள்ளை எமது போடிங்கில் இருந்தவ. போதகரான அவவின் தந்தை இறந்துவிட்டார். இவ கத்தோலிக்க சமயத்தில் மிகவும் வெறுப்பாக இருந்தா. தற்போது ஒருமாத காலமாக அவளுடைய நடத்தையிலே ஒரு மாறுதல். சமயத்தைப் பற்றிக் கதைக்க வேண்டாம் என்று நான், பிள்ளைகள், சகோதரிகளிடம் கூறினேன். இச்சூழல் அவவை மாற்றியது. தன் பிரிவினை மதப் புத்தகங்களை என்னிடம் ஒப்புவித்தா. கத்தோலிக்க பிள்ளையாக மாறினால் அவர் நல்ல நன்மைகள் புரியலாம். ஏனெனில் எழுத்து மூலம் தன்னை வெளிப்படுத்தும் கொடையைப் பெற்றுள்ளார்.

Natal (Africa) செல்லும் சகோதரிகளுக்கு அவர்கள் பயண வேளையில் செபிக்கின்றோம். கடற் பிரயாணம் என் அனுபவம் வழியாக அறிவேன். ஆங்கிலம் தெரியாது செல்கின்றனர். எனக்குச் சிறிது தெரிந்தாலும், நேரடியாகக் கதைப்பதற்கும், வெளியூருக்கு எழுதுவதற்கும் தெரியாது.

## சித்திரை 20 - 1864

உங்கள் அறிக்கை கிடைத்தது. தேவபராமரிப்பு எம்மைப் பாதுகாத்து வருகின்றது. ஒரு புரட்டஸ்தாந்து ஆசிரியை தன்னுடன் இருந்த ஒரு பிள்ளையை எம் வகுப்புக்கு அழைத்து வந்தா. அடுத்தநாள் ஆறு பேர் வந்தனர். தற்போது ஆங்கில வகுப்பில் சமனாகப் பிரிவினை மதத்தவரும், கத்தோலிக்கரும் உள்ளனர்.

சென்ற கிழமையில் பாலர் சபையில் இருந்த ஒரு சிறுமியை வீடு செல்ல உத்தரவு கேட்டார்கள். அவளின் சகோதரன் வியாதியாக இருந்தான். நாம் எம் பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்புவதில்லை. போனால் திரும்பி வரமாட்டார்கள். அன்ரோனியா இதை உணர்ந்து என்னருகே வந்து, தன் சகோதரனுக்கு திருமுழுக்குக் கொடுத்துவிட்டு உடனே திரும்புவதாகக் கூறியதால் அனுமதித்தேன். அவளும் அவ்வாறே செய்து திரும்பி வந்தாள். வரும் வழியில் தன் தகப்பனுக்கு இதுபற்றிக் கூறினாள். தந்தை ஆச்சரியமடைந்து என் பிள்ளைகள் கிறிஸ்தவர்கள் என்றால் நானும் வரலாம் சிந்திப்பேன் என்றார். பையனுக்கு 'யோசெவ்' என்று பெரிட்டோம். தற்போது அன்ரோனியா தந்தையின் மனமாற்றத்திற்காகச் செபிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் சபை பற்றிய சிறிய புத்தகங்களை Fr.Bonjean க்குக் காண்பித்து அவர் தன் மறைஉரையில் அதுபற்றி கூறும்படி கேட்டேன். அவர் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அச்சிடவும் வாக்களித்தார். நாம் சிலரைத் தெரிந்து இச்சபையை ஆரம்பிக்கவுள்ளோம். ஆங்கில வகுப்பில் சில கத்தோலிக்கரே இருப்பதால் சிறியதாகவே இருக்கும். பின்பு அநாதைப் பிள்ளைகளுக்கும் ஒன்றை ஆரம்பிக்கலாம். எனவே அவர்களுடன் கதைக்க வேண்டும்

## வைகாசி 18 - 1864

நான் எழுதும் இதழின் மேலுள்ள படம் ஒரு புத்த விகாரை ஆகும். எம் கத்தோலிக்க தேவாலயங்களும் இவ்வாறே உள்ளன. வறிய பங்குகளில் மிஷனறிக் குருக்களின் இருப்பிடங்களும், கோவிலும் பனை, தென்னை ஓலைகளால் வேயப்பட்டு வௌவால், பாம்புகளின் உறைவிடமாக உள்ளன. கிறிஸ்தவர்கள் ஏழையாக இருப்பதால் இறைவனின் ஆலயத்தை அழகுபடுத்த முடியாது. சிறிது காலத்தின் முன் மன்னார் குருக்கள் எமக்கு ஓர் பார்சல் அனுப்பி வைத்தனர். திறந்து பார்த்தபோது தம் தோட்டத்துப் பூக்கள் எனக் கூறி அழகான முட்களை அனுப்பி வைத்தனர். வேதசாட்சிகளின் அடையாளமாக "புனிதர்கள் தீவு" என்ற இடத்தில் சாத்தான் வேலை செய்கின்றான்.

## வைகாசி 22 - 1864

நாம் நலமாக உள்ளோம். வெயில் வெப்பம் வந்தால் வேலை செய்யும் ஆர்வமே அற்றுப்போகும். இன்னும் சிலநாளில் உறங்கவே முடியாது. எமது வீட்டிற்கு முன்னால் ஒரு திருமணம் நடக்கப்போகின்றது. அப்போது செவிப்பறை அதிரும் வண்ணம் 'மியூசிக் போடுவார்கள். இங்குள்ளவர்கள் இடைக்கிடை தம் அயலவர்களுக்கு இவ்வாறான வைபவங்கள் நடாத்துவார்கள். உதாரணமாக ஒரு பிள்ளை வாசிக்கத் தொடங்கும்போது, காது குத்துதல், முதன் முறையாகத் தாடி வளர்த்தல் போன்றவை இந்நாட்டின் பழக்கவழக்கங்களாகும்.

## ஆனி 2 - 1864

எமது ஆயர் 5 குருக்களுடன் இணைந்து எம் இல்லத்திற்கு (convent) முதற் கல்லை நாட்டினார். இந்நிகழ்வு ஆடம்பரமாக நடைபெற்றது. எல்லா சமய மக்களும் பங்குபற்றினர். Brothers தம் மாணவர்களுடனும், நாம் எமது பிள்ளைகளுடனும் பங்குபற்றினோம். புரட்டஸ்தாந்து மதத்தவர்களும் வரவழைக்கப்பட்டனர். அன்று அரசியின் விழா கொண்டாடப்பட்டது. எல்லோரும் God save the queen என்ற ஆங்கில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசீய பாடலில் பங்கு கொண்டனர். 3பிள்ளைகள் காணிக்கையாக 450 பிராங் சேர்த்தனர். ஆயர் அரசியிடம் நிதி கேட்கவுள்ளார். நாம் இதற்காகச் செபிக்கின்றோம். ஏனென்றால் இக்கட்டிடம் 'தேவபராமரிப்பில்' உள்ளது. எம்மிடம் கட்டிடப் பொருட்கள் இருப்பதால் வேலை தொடங்கலாம். இவ்வருடம் அரிசி குறைவு. எனவே காணிக்கையாகக் கிடைக்கும் அரிசி இல்லாமையால் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, ஆயர் பாண்டிச்சேரி மிஷனறிமாரிடம் கேட்டு அவர்கள் உதவி புரிந்தார்கள்.

யாழ்ப்பாணம் மத்தியில் இருந்து எமது மடம் தூரஇருப்பதால் போடிங் பிள்ளைகள் குறைவு. எனவே கொழும்பு, கண்டி பகுதியில் போடிங் ஆரம்பிக்க விரும்புகிறார்.

எமது முதலாவது தமிழ் பொறுப்பாளர் 3கிழமைகளாக வீட்டில் இருக்கின்றார். சில நாட்கள் ஓய்வு கேட்டா, திரும்பவரமாட்டாரென நினைக்கின்றேன். 2வது பொறுப்பாளருக்கு வயது 17. பெற்றோர் மணம் முடித்து வைக்க விரும்புகின்றார்கள். அவள் தலைவியாக வரவிரும்பினாலும் இங்கு மணம் முடியாது இருப்பது வழக்கத்துக்கு மாறான செயலாகும். பிரிவினை மதத்தவர்கள் சிறப்பாக போதகர்கள், எங்களிடையே ஓர் ஆசிரியர் வருவதற்கு முயற்சி செய்கிறார்கள். எம் பிரிவினை மத மாணவர்கள் தம்மிடையே அவர்கள் ஆசிரியர்களாக வந்தாலும் எம் துறவிகளுக்குப் பணிந்து நடப்போம் எனக் கூறுகின்றார்கள். நானும் இதை நம்புகின்றேன். ஏனெனில் அவர்கள் மறைக்கல்வி வகுப்பில் பங்குபற்றுகின்றார்கள். குருக்களின் படிப்பிக்கும் முறையை வரவேற்கிறார்கள். எங்களுடைய பிள்ளைகள் எங்களைவிட்டுப் பிரிய மாட்டார்கள்.

## ஆடி 09 - 1864

எம் குழுவில் இருந்து நவசந்நியாச இல்லத்தைப் பிரித்துள்ளோம். அவர்கள் ஊக்கத்துடன் பணிபுரிகின்றார்கள். மாலையில் மட்டும் குழுவுடன் பொழுதுபோக்குக்காக வருவார்கள். நானும் இதில் பங்குபற்ற முடிகின்றது. எம் புனித ஒழுங்குகளைப் பற்றி ஆங்கிலத்தில் இவர்களுக்கு உரையாற்றுகின்றேன். தமிழில் கூற விருப்பம். இறையருள் கிடைத்தால் இந்த மொழி படிப்பேன். கொலரா நோய் யாழ்ப்பாணத்தில் வந்துள்ளது. எம்மத்தியில் உள்ள இயேசு எம்மைப் பாதுகாப்பாராக.

## ஆவணி 09 - 1864

காலியில் இருந்து ஒரு பிரிவினைமத ஆசிரியர் வரவுள்ளார். அவ இங்கிலாந்திலிருந்து வந்தவள். இங்கு வந்து சேர 2மாதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்குமாம். வுந்து சேர்ந்ததும் சிறிய சச்சரவை எதிர்பார்க்கலாம். ஏற்கனவே பத்திரிகைகளில் எம் பாடசாலைக்கு அவர்களின் பிள்ளைகளை அனுப்பியதற்கு பிள்ளைகளின் குடும்பங்களுக்கு கண்டனம் தெரிவித்து எழுதப்பட்டுள்ளது. இன்ஸ்பெக்ரர் இந்த மாதத்தில் கட்டாயம் வருவார். சென்ற வருடத்தில் அரசினர் பாடசாலைகளில் திருப்தி இல்லாமலும், எம் பாடசாாலைகளில் திருப்தி, மகிழ்ச்சியுடனும் சென்றார். அவ்வாறே இவ்வருடமும் திருப்தியாக இருந்தால், தற்போதைய நிலைமையைச் சமாளிக்க முடியும். பெற்றோர்களும் திருப்தியாகவுள்ளனர். போதகரே குழப்பத்தை விளைவிக்கின்றனர்.

கொலரா நோய் யாழில் பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. விசேடமாக பிறமதத்தவர் மத்தியிலே பலர் திருமுழுக்குப் பெற்றனர். எமக்குச் சேதம் ஏற்படவில்லை.

## ஆவணி 24 - 1864

கொலரா பற்றிக் கூறியபடியால் எம்மைப் பற்றி நீங்கள் கவலைப்படுவீர்கள். யுாழில் பல இறப்புக்கள் நேர்ந்தாலும் எம் மத்தியிலும், குருக்கள் மத்தியிலும் ஓர் உயிரிழப்பும் இல்லை. குருக்கள் நோயாளிகளைப் பராமரித்துத் திருமுழுக்குகக் கொடுத்தனர். துற்போது நோய் குறைந்தாலும் யாழின் தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில் அதன் தாக்கம் உள்ளது.

வருகிற கிழமை 'இன்ஸ்பெக்ரர்' பாடசாலைச் சந்திப்புக்கு வரவுள்ளார். நோயின் காரணமாக 1ம் வகுப்பு ஆசிரியை தாக்கப்பட்டிருந்தா. நாம் அரசிடம் விண்ணப்பித்துள்ளோம். புாடசாலை சந்திப்புத் திருப்தியில்லாவிடில் எம் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என அஞ்சுகின்றேன்.

புத்த கோவில் தலைப்புள்ள கடிதத்தில் எழுதியதாக சேவியர் மாச்சான்ட் தாயார் கூறியிருந்தார். இக்கோவில் ஒன்றில் புத்தரின் பல் உள்ளது. கதவின் மேல் காணிக்கைகள் வாங்க ஒரு இடமுண்டு. மக்கள் அரிசி, பழங்கள் கொடுப்பார்கள். ஒரு மரம். தமிழில் கொடி மரம் எனவும், ஆங்கிலத்தில் Flag staff எனவும் அழைப்பர். ஒரு தென்னை மரத்தில் கொடியேற்றுவர். பிக்குகள் மஞ்சள் உடை அணிவர். 3வாக்குத்தத்தம் எடுக்கிறார்கள். ஆனால் அதை அனுசரிக்கின்றார்களோ தெரியவில்லை. கண்டியில் அவர்களுக்கு ஒரு அழகான Seminary உள்ளது.

இங்கு பல பிரிவினைச் சபைகள் உள்ளன. (Wesleyons) 'வெஸ்லியன்ஸ்' எம்மைத் தாக்குகின்றார்கள். போதகர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே. சில மாதங்களின் முன் எம்மைத் தாக்கிய ஒருவர் படுக்கையில் இறந்து கிடந்தார். வேறொருவர் தோட்டத்தில் இறந்தார். இவ்வாறு இறைவன் எம் சார்பாக உள்ளார்.

மன்னாரில் இருக்கும் குருக்கள் (OMI) Fr.P.Boutin 'பூற்ரன்' என்பவர் நாம் பிரான்சில் இருந்து வந்தபோது எம்முடன் வந்தவர். இத்தீவில் துன்புறுகின்றார். மாதோட்டப் பகுதியில் இருப்பவர்களும் அதிகம் துன்புறுகின்றனர். எனினும் உற்சாகத்துடன் பணி புரிகின்றனர். Fr. Boisseau (புவாசோ) பருத்தித்துறையில் கொலரா நோயாளிகளுடன் இருந்து பின் ஆயரைச் சந்திக்க இங்கு வந்தார். 3பேருக்குத் திருமுழுக்குக் கொடுத்தார். ஓர் ஆன்மாவை மீட்பது எல்லாவற்றிலும் சிறந்தது. ஏனென்றால் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள் அல்லவா? ஓர் பேரரசன் தன் வெற்றியில் அடையும் மகிழ்ச்சியிலும் பார்க்க இக்குருவானவர் மூவரின் மனமாற்றம் பற்றி அதிகம் மகிழ்ச்சியடைந்தார்.

எம் ஆலயங்களில் மணிகள் ஏற்றப்பட்டுள்ளன. பிரிவினை மதத்தவர்கள் ஆலயங்களிலும் உள்ளன. பெரிய கோவில் மணியின் ஓசை கேட்பதற்கு நன்றாக இருக்கும். தற்போது தேவதாயின் விண்ணேற்பு திருநாளுக்கு நவநாட்கள் நடைபெறுகின்றன. தினமும் மாலையில் நற்கருணை ஆராதனைகள் நடைபெறும். ஒவ்வொரு சமூகமும் முறைப்படி ஆலய அலங்கரிப்புக்களில் ஈடுபடுவர். தீபங்கள் பலவர்ண பேப்பர்களினால் அழகுபடுத்தப்படும். ஆராதனையின் பின் குருவானவர் சுரூபத்தைத் தூக்கி ஆலயத்தை வலம் வருவார். அப்போது "சால்வேறெஜீனா" பாடுவர். குருவுடன் பீடப்பணியாளர் இருப்பார்கள். இறுதியாகத் தமிழில் பாடல் பாடுவார்கள். நாம் அதற்கு நில்லாது சென்றுவிடுவோம். வருகிற ஞாயிறு மாதாவின் பிறந்தநாளுக்கு நவநாட்கள் ஆரம்பமாகின்றன. ஆடம்பரமாக எல்லாம் நடைபெறும்.

## புரட்டாதி 09 - 1864

நாம் இன்னும் துன்பத்திலேதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். Fr. Mauruit('மோறுவா') கொலரா நோயினால் தாக்கப்பட்டுள்ளார். தன் பணியை எமக்கு அண்மையில் உள்ள ஒரு ஆலயத்தில் செய்யும்போதே தாக்கப்பட்டார். எனினும் தொடர்ந்து பாவசங்கீர்த்தனம் கேட்டார். பின்பு அவரை அவரில்லம் கொண்டு சென்று பராமரித்து தற்போது சுகமடைந்துள்ளார். எனினும் மக்கள் புரட்டாசி 8 மாதாவின் பிறப்புவிழாவை அமைதியிலே கொண்டாடினர். அலங்கரிப்புக்கள் அங்குமிங்குமாக இருந்தன. திருப்பலி முடிந்ததும் எல்லோரும் மாதாவின் சுரூபத்தினடியில் இருந்து குருவுக்குப் பூரண சுகம் கிடைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றாடினார்கள். மன்றாட்டுக் கேட்கப்பட்டது. இந்த நாட்களில் ஒருவன் சிறைக்குச் செல்லமுன் ஒரு குருவைக் காண வேண்டும் என விரும்பியும் அரசு தடுத்தது. இதை அறிந்த மோறுவா கடற்கரை சென்று அவன் பயணமாகுமுன் பாவசங்கீர்த்தனம் கேட்டு ஒப்புரவாக்கினார்.

பாடசாலை 'இன்ஸ்பெக்ரரின்' சந்திப்பு 3நாட்கள் இடம் பெற்றது. எம் செபத்தின் உதவியினால் எல்லாப் பரீட்சைகளிலும் திருப்தி கண்டார். வாசிப்பு, எழுத்து, கணிதம், சங்கீதம் - இதிலும் சிறப்பாக ஆக்க வேலைகள் சிறப்பாக இருந்தன. ஒவ்வொரு வகுப்புக்கும் பரிசும் ஒருநாள் லீவும் கொடுத்தார். எமது பாடசாலைக்கு நன்றி கூறி ஊக்கப்படுத்தினார். இவரின் குறிப்புகள் எமக்கு உதவும்

அருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்ளாத ஒரு ஆங்கிலப் பெண்மணி எம் உதவியினால் Fr. Bonjean, இடம் பாவசங்கீர்த்தனம் செய்து நற்கருணைப் பந்திக்கு வந்தது கண்டு ஆறுதல் அடைந்தோம். இவர்கள் கொழும்பில் உள்ள 2போடிங் பிள்ளைகளின் தாயாவார்.

எம்முடன் இருக்கும் கத்தறின் என்ற பிள்ளை ஒரு இரவு விழித்து யாரோ தன்னைக் கூப்பிட்டதாகநினைத்தா. பின்பு ஒரு புலிமுகச் சிலந்தி முகத்தருகே காணப்பட்டது. தேவபராமரிப்பு அவவைக் காப்பாற்றியது

## கார்த்திகை 09 - 1864

இறைவனின் துணையால் நாம் நலமே உள்ளோம். சுதேச ஆயத்த கன்னிகைகளை வைத்திருப்பதற்கு ஓர் இடம் தேவை. அத்துடன் அவர்களின் தமிழ்மொழியைப் படிக்க வேண்டும். இது எனக்கு ஒரு வேலை. ஒருவர் மொழி பெயர்ப்பார். பின்பு தமிழ் படிப்பேன். தற்போது ஓர் இடத்தை இந்த நவகன்னியர் இல்லத்திற்குத் தயார் செய்கின்றேன். எம் புனித ஏழ்மைக்குரியதாக இந்த இடம் உள்ளது.

அரசிடம் நாம் கேட்டவை கிடைக்கவில்லை. Fr. போஞ்ஜீன் அடிகளாரும் அப்படியே விடும்படி சொன்னார். ஒரு பிரிவினை மத ஆசிரியை எம் லீவு காலத்தில் வருவா எனக் கூறுகின்றார்கள். எம் மாணவர்கள் (16-18) வயது படிப்பு முடிந்ததும் போய்விடுவார்கள்.

## மார்கழி 08 - 1864

பிரிவினை மதத்து ஆசிரியை நேற்று வந்தா. எமக்கு அண்மையாக ஒரு பிரிவினை மத ஆலயம் உள்ளது. தினமும் மாலையில் கிறிஸ்மஸ் பாடல்களில் பயிற்சி பெறுகின்றார்கள். சங்கீத வாத்தியங்களும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிழமையில் 3வழிபாடுகள் நடைபெறும். நாம் வெளியில் செல்லாது போதகரின் பிரசங்கம் கேட்கலாம்.

**மார்கழி 09 - 1864**

வருகிற வியாழக்கிழமை பரிசில் வழங்கப்படும் பொதுவான பரீட்சை இல்லை. இவ்வருடம் பெரிய பெண் பிள்ளைகள் வந்துள்ளனர். சிலரைத் திருப்பி அனுப்பிவிட்டேன். தற்போது மழைகாலம். சகோதரிகள் நலமாக இருக்கின்றார்கள். Sr.M.Joseph அதிகம் வேலை செய்கிறா. அநாதைப் பிள்ளைகளுக்கு ஒரு விற்பனை ஆயத்தம் செய்துள்ளா. நல்ல விற்பனைக்காகப் புனித.சூசையப்பரிடம் மன்றாடுகின்றோம். எம்மிடம் தாதிகள் இல்லை. இவ்விடத்துச் சகோதரிகள் இவ்வேலை செய்ய மாட்டார்கள். நானே இந்த வேலையைச் செய்கின்றேன்.

விஷக்கடியினால் துன்புற்ற ஒரு ஆயத்த கன்னிகையைத் தான் கூட்டிப் போவதாக ஆயர் எழுதியிருந்தார். நோயில்பூசுதல் கொடுக்கப்பட்டது. ஒரு பிள்ளை ஆயத்த கன்னியராக வர விரும்பினார். தாய் விரும்பவில்லை. எனவே நானும் சம்மதிக்கவில்லை. ஓர் ஆங்கிலச் சிறுமி வியாதியாக இருந்ததாலும், அவளின் பெற்றோர் கொழும்பில் இருந்தாலும் நான் கவலைப்பட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அநேக காரியங்களைப் பற்றி உங்களுக்குக் கூற விரும்புகின்றேன். பலமுறைகளில் உங்களுக்குக் கூறியதுபோன்று இலங்கையில் நல்ல காரியங்கள் மெதுவாகவே நடைபெறுகின்றன. இந்துக்கள் மட்டுமல்ல, புரட்டஸ்தாந்து மக்களும் எமக்குத் தடையாக உள்ளனர். அவர்கட்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருப்பதால், வலுவற்றவர்கள் அவர்களால் தூண்டப்படுகின்றனர். எப்படியிருப்பினும் நாம் இங்கு வருகை தந்ததில் இருந்து எம் சகோதரிகளின் தியாகச் செயல்களை இறைவன் ஆசீர்வதித்து எம் வகுப்புக்களும் அரச அதிகாரிகள், பெற்றோர் சார்பாக பாராட்டுக்களைப் பெற்று வருகின்றது. இதனால் சிலர் பொறாமையுற்று பத்திரிகை மூலம் எம்மைத் தாக்கினர். எனினும் புரட்டஸ்தாந்துப் பெற்றோர் தம் பிள்ளைகளை எம்மிடம் கொண்டு வருவதை இது தடை செய்யவில்லை. தற்போது இந்த மனப்பான்மை குறைந்து எமது சமயத்தை விரும்புகின்றார்கள். எம்மதத்திலும் உண்மைகள் உள்ளன என்று நம்புகின்றார்கள். எனினும் தூரநோக்கில் அவர்களது மனமாற்றத்தை எதிர்பார்த்துள்ளோம். ஒவ்வொரு ஞாயிறும் பாஸ்டர், மனைவிமார் இளம் பிள்ளைகளை ஒன்றுசேர்த்து பைபிள் படிப்பித்து நகரப் புதினங்களைப் பகிர்ந்து கொள்கின்றார்கள். சில நாட்களின் முன் எமது மாணவி ஒருவர் அவர்களால் விசாரிக்கப்பட்டாள். "இயேசுவின் தாய் யார்? எனக் கேட்டபோது அவள் புனித. கன்னிமரியாள் எனப் பதிலிறுத்தாள். ஏன் புனித கன்னிகை? 'மரியாள்' என்று கூறினால்போதும். அவள் மற்றப் பெண்களைப் போல் ஒரு பெண் எனவும் சொன்னார்கள். அப்போது எமது நான்சி, அவள் தேவனின் தாயாக இருப்பதால் புனிதை என்றாள். அவரின் தந்தை யாரெனக் கேட்டபோது, புனித சூசையே அவரின் வளர்ப்புத் தந்தை என்றாள். அவர் ஒரு தச்சன் என்று சொன்னபோதும் அவள் விட்டபாடில்லை. இறைவன் இயேசுவுக்கு அவர் வளர்ப்புத் தந்தையாக இருந்தபடியால் அவர் புனிதர். அவரை நான் புனித சூசையே என்றுதான் அழைப்பேன் என்றாள்.

13 வயது ஆங்கிலப் பெண் நோயினால் துன்புற்றாள். பொறுமையுடன் இருந்ததைக் கண்டு, தனிமை பற்றிக் கேட்டபோது, தான் செபமாலை சொல்வதாகவும், இயேசுவின் பாடுகளைத் தியானித்து தனது பாடுகளையும் ஒப்புக்கொடுப்பதாகவும் கூறினாள். இன்னொருமுறை பாடசாலைத் தோழிகள் இருவர் ஓய்வுநேரத்தில் தன்னைப் பார்க்க வரும்போது எனக்காக உங்கள் ஓய்வு நேரத்தை ஒதுக்க வேண்டாம் என்றாள். பின்பு தன் படுக்கையில் இருந்து கோவிலைக் காட்டி அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே இருக்கின்றார் இது எனக்குப் போதுமானது என்றாள். இந்த ஆங்கிலப் பெண்ணின் பெயர் 'அனி' எல்லோருக்கும் உதாரகுணமானவள். தற்போது சுகம் பெற்றுப் பக்தி உடைய பெண்ணாக இருக்கின்றாள்.

செல்வத்தைத் தேடி ஐரோப்பாவில் இருந்து வந்த குடும்பங்கள், தந்தை இறந்து விதவைத் தாயுடன் பல பிள்ளைகள் இருப்பதால், அல்லது தாய் இறந்து தந்தையுடன் பிள்ளைகள் இருப்பதால் மிகவும் வறுமையடைந்துள்ளனர். எமது வருகையின்போது ஆங்கில விடுதியில் இவ்வாறான பல பிள்ளைகளைக் கண்டோம். வயது கூடியதால் வகுப்புக்குச் செல்ல முடியாத நிலை. ஒரு பிள்ளையை ஒரு சிறிய வகுப்பை நடத்த அனுமதித்தோம். 4பிள்ளைகள் கைவேலை செய்கின்றார்கள். தற்போது 8பிள்ளைகள் இருக்கின்றனர். சில மாதங்களுக்கு முன் ஓர் அறையில் ஒன்றுகூடி புனித சூசையின் பெயரைக் கொடுத்து அவர் பாதுகாவலில் ஒப்படைத்தோம். சிஸ். மேரி யோசெவ் தன் நாளின் ஒரு பகுதியை இவர்களுடன் செலவிடுவா. நான் புதன்கிழமையில் பாடம் எடுப்பேன். நான் போகாவிட்டால் மிகவும் கவலைப்படுவார்கள்.

எமது இளம் உழைப்பாளிகள் வேலையிலும், பயபக்தியிலும் முன்னேறி வருகின்றார்கள். சென்ற வருடம் ஒரு விற்பனை நடைபெற்றது. வெற்றியளிக்கவில்லை. இம்முறை புனித. சூசையப்பரின் உதவியுடன் நடாத்தி 700 பிராங் கிடைத்தது. 3பேர் சிறிய பொருட்களை எடுத்துவிட்டு 100 பிராங் தந்தனர். மிகுதிப் பணத்தை எமது வேலைக்கு எடுக்கும்படி கூறினர்.

சில நாட்களின் முன் வகுப்பு முடிந்த பின் எம் இளம் பிள்ளைகள் 6 வயதுடைய ஒரு பிள்ளையை போடிங்கில் சேர்க்கக் கேட்டார்கள். தாய் விதவை ஏழை. புனித சூசையின் திருநாளில் பிறந்த பிள்ளையெனக் கூறினர். எனக்கு விருப்பமாயினும் நிதி பற்றாக் குறை என்றேன். தாம் பணம் கொடுப்பதாகக் கூறினர். அதற்கு நான் நீங்களே ஏழைகள் என்றேன். அதற்குத் தங்கள் ஓய்வு நேரங்களிலும் வேலை செய்வோம் என்றதால் பிள்ளையை ஏற்றுக் கொண்டேன். 'லூசி' என்ற பெயரை யோசேப்பின் என மாற்றினோம். பின்பு பிள்ளையை அனுப்பும்படியும் ஆயரின் நிதியாளர் உதவி செய்யும்படியும் கூறினேன். அருட்சகோதரன் இவர்களுக்கு வேலை கொடுத்தும், பணமும் கொடுத்து யோசேப்பினுக்கு உதவி செய்யக் கூறினார்.

எமது அநாதை மடம் நாம் விரும்புவது போல் இல்லாவிடினும் சிஸ். லிகோறி சில நன்மைகளைப் பெற்று வருகின்றா. திருப்பாலத்துவ சபைக்குப் பணம் சேர்க்கக் கூறியபோது ஒரு பெண் தன்னிடம் பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை எனக் கண்டு விறகு, சில்லறைக் காசுகளைச் சேர்த்து சிஸ்.லிகோறியிடம் கொண்டு வந்து இதை எடுத்துக் கொண்டு பணம் தரும்படி கூறினாள்.

கார்த்திகை 23ல் ஓர் அநாதை சுதேச பெண் இறந்தாள். அவள் கிணற்றில் விழுந்ததால் பயம் அவளை ஆட்கொண்டது. தாய் இதை அறிந்து வந்து வீட்டிற்குக் கூட்டிச் செல்ல விரும்பினாள். அங்கு சாத்தான் உதவியுடன் குணப்படுத்தப் போகின்றார்கள் என்று அறிந்து அவளை விடவில்லை. தந்தையும் மாலையில் 4பேருடன் வந்து 'அனாவைக்' கொண்டு செல்ல முயன்றார்கள். நான் விடவில்லை. பிள்ளையும் செல்ல விரும்பவில்லை. அருட்தந்தை (ஜெனேஸ்) Fr. St.Genas, இறுதி அருட்சாதனங்கள் கொடுத்தார். 2மணித்தியாலங்கள் தந்தை வாதாடினார். இறுதியில் அவளைப் பார்க்க மட்டும் விரும்பினார். அப்போது அவளுக்குக் கண்திறக்க முடியவில்லை. தந்தை, தாயைப் பார்த்துப் பிள்ளையை எழுப்ப இயலாது என்றார். எனினும் தாய் பிள்ளையுடன் இருக்க விரும்பினாள். தந்தை சென்றதும் பிள்ளை கண் திறந்து 'நோயில்பூசுதல்' பெற முயன்றாள். தாய் இவற்றையெல்லாம் ஒரு மூலையில் இருந்து பார்த்தாள். இரவு அவருடன் தங்க விரும்பினாள். நோயாளிகளின் அறை தோட்டத்தில் தனியே இருந்ததால் அனுமதித்தேன். காவலுக்கு 2பேர் இருந்தனர். இருவரும் நித்திரை செய்யத் தாய் தன் பிள்ளையிடம் கதவுத் திறப்பைக் கேட்டு பிள்ளையைக் கொண்டு செல்ல முயன்றாள். பிள்ளை மறுத்தாள். நான் இதை அறிந்து மறுநாள் தாயைப் பேச அவள் சென்றுவிட்டாள். சிலவேளைகளில் பிள்ளைகளிற் சிலர் சாத்தான் சோதித்தது என்று கூறுகின்றார்கள். 'ஆனா' முதல்நன்மை பெற்று இறுதி மூச்சு விடுமுன்''என் காவல் சம்மனசுகளே, என்னைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்றாள். இவ்வாறு நல்ல ஆன்மாக்களும் பிள்ளைகள் மத்தியில் உள்ளனர். இந்து மதத்தில் பிறந்த இந்த ஏழைப் பிள்ளைகள் பலவற்றை அறிய கல்வி பெறத் தேவையாக இருக்கின்றது.

ஒரு புதிய ஆசிரியை லீவுவிடுவதற்கு முன் வந்திருந்தாள். எமது பரிசளிப்பு விழாவில் பெற்றோரையும் அழைத்திருந்தோம். அவர்களுடன் நகரில் வந்திருந்த வேறு ஐரோப்பியரும் வந்திருந்தார்கள். எனவே, புரட்டஸ்தாந்து மதத்தினரையும் காண முடிந்தது. மண்டபம் அலங்கரிக்கப்பட்டு அழகாகக் காட்சியளித்தது. ஒவ்வொரு பிள்ளையும் பியானோவில் ஒரு இசை இசைத்தனர். பிரான்ஸ், ஆங்கில மொழியில் இசைத்தனர். 6வயது பிள்ளை உட்பட 3பிள்ளைகள் தனித்தனியாகப் பாடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசளிப்பின் பின் 'பொஞ்ஜீன்' ஆண்டகை உரையாற்றினார். அதில் பிள்ளைகளின் சங்கீத இசைக்கு நன்றி கூறினார். இன்னொரு குருவானவர் வருகை தந்த பெரியார்களை அறிமுகம் செய்தார். நீதிபதி, அரசியின் சட்டத்தரணி, வங்கி அதிகாரிகள் எல்லோரும் இந்த மாலை நிகழ்ச்சியில் எனக்கு நன்றி கூறினர்.

தியான நாட்கள் முடிவில் முதல் ஆயத்த கன்னிகை உடுப்புப் பெற்றா. எமது ஆலயத்தில் நடைபெற்றது. கன்னிகை வெள்ளை உடுப்பும் 'ஒறேஞ் நிற முடியும் அணிந்து பீடத்தை நோக்கிச் சென்றாள். 'போஞ்ஜீன்' அடிகளார் உள்ளத்தைத் தொடக் கூடிய ஓர் மறை உரை ஆற்றினார். எம் பிள்ளைகள் உணர்ச்சி மிகுதியினால் கண்ணீர் வடித்தனர்.

வருகின்ற திங்கள் பாடசாலை ஆரம்பமாகின்றது. போதகரின் மனைவி ஆசிரியருடன் சேர்ந்து வீடுவீடாகச் சென்று பிள்ளைகளைச் சேர்த்து வருகின்றா. இது எமக்குத் துன்பம்தான். எனினும் இறைவனது கரத்தில் எம்மை ஒப்படைத்துள்ளோம்.

## யாழ்ப்பாணம் 4 சித்திரை - 1865

இந்த நாட்டில் பெண்கல்வி புறக்கணிக்கப்பட்டிருப்பதால் தாய்மார் தம் பிள்ளைகளுக்கு நல்ல கொள்கைகளைக் கொடுக்க முடியாமல் இருக்கின்றது. சுதேச பெண்கள் மாத்திரமல்ல, ஐரோப்பிய பெண்களும் அவ்வாறே உள்ளனர். சோம்பலிலும் வேலையில்லாமலும் புகைத்துக் கொண்டு காலத்தைக் கழிக்கின்றனர். நாகரிகம் என்று சொல்லித் தம் பெண்களைப் பாடசாலைக்கு அனுப்புகின்றார்கள். அத்துடன் தங்களுக்கு விருப்பமானதே செய்வார்கள். படிக்க, வேலை செய்ய விருப்பமில்லையானால் செய்யமாட்டார்கள். கேட்டால் எனக்கு விருப்பமில்லை. எனவே செய்ய மாட்டேன் என்பார்கள். அத்துடன் பெருமைப்படுவார்கள். எனவே வேலை செய்வது கடினம். எமக்குத் தந்த திராட்சைத் தோட்டத்தின் ஒரு பகுதியை அவரின் துணையுடன் செய்ய நம்பியுள்ளோம்.

ஆங்கில சுதேசபிள்ளைகள், பாடசாலை ஆரம்பமானதும் தம் தியான ஒடுக்கத்தைச் செய்தனர். சுதேச பிள்ளைகளுக்கு இது முதன்முறை. அருட்தந்தை பொஞ்ஜீனும், ஜெனஸ் குருவும் வழிநடத்தினர். இறுதிநாளுக்கு முதல் நாள் மாலை மன்னிப்பு வழிபாடு நடைபெற்றது. இரு சமூகப் பிள்ளைகளும் ஒப்புரவாகினர். சாதிப் பிரச்சினை, சமூகப் பிரச்சனை நிறைய உண்டு. இதனால் எம்முடன் இருக்கும் சுதேசப் பிள்ளைகள் மத்தியில் பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. அன்று மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குடும்ப பவனி நடைபெற்றது. பிள்ளைகள் தம் திருமுழுக்கு அர்ப்பணத்தைப் புதுப்பித்தனர். அவர்களில் மூன்று பேரை திருக்குடும்ப ஆரம்ப நிலைக்கு (Aspiarnts) தேர்ந்தெடுத்தோம். இவர்கள் சிஸ்.லிகோரிக்குத் துணை புரிந்தனர்.

ஆங்கிலப் பிள்ளைகளின் தியானம் நல்ல முறையில் நடைபெற்றது. தம் பிழைகளுக்காகக் கண்ணீர்விட்டனர். இறுதிநாள் காலையில் ஆயர் திருப்பலி நிறைவேற்றினார். அருட்தந்தை பொஞ்ஜீன் மறையுரையாற்றினார். மாலையில் 4பேர் திருக்குடும்பப் பிள்ளைகள் நிலைக்கு உயர்த்தப்பட்டனர். ஓர் ஆங்கிலத் தளபதி, தன் மனைவி சகோதரியுடன் வந்து இந்நிகழ்வில் பங்கேற்றார்.

புனித.சூசையப்பர் மாதமும் நல்ல முறையில் முடிவுற்றது. எம் பாதுகாவலரின் உதவியுடன் கொழும்பில் இருந்து சில பொருட்கள் தொழிலகத்திற்கு கிடைக்குமென நம்புகின்றோம்.

## யாழ்ப்பாணம் 04 ஆடி - 1865

எமது ஆலயம் சிறியதாக இருப்பதால் ஒரு புதிய ஆலயத்தைத் திறக்க வேலைகள் தொடங்கியுள்ளோம். முதல் கோவிலில் காற்று குறைவு. தற்போது பெரியதாகவும் 2 யன்னல்களும் கூட வைத்துள்ளோம். கிடுகினால் வேயப்பட்ட கோவிலில் மாதாவின் மாதம் கொண்டாடப்பட்டது. தினமும் காலையில் பாடல்கள் பாடி, இறுதியில் மாதாவுக்குப் பாடுவார்கள். மாலையில் பிரார்த்தனையின் பின் பவனியின்போது மாணவிகள் சிலர் ஒரு பூவை பரலோகராணிக்குக் காணிக்கையாக வைப்பார்கள். இந்தப் பக்தி மாணவர்களிடையே நல்ல திருப்பத்தை ஏற்படுத்தியது.

ஒரு புரட்டஸ்தாந்து அநாதைப் பெண். தாயன்பை இழந்தவள். மாதாவுக்குப் பூ வைப்பதற்கு என்னிடம் கேட்டாள். உத்தரவு கொடுத்தேன். படிப்பில் விருப்பம் இல்லாவிடினும், இச்செயலுக்குத் தன்னை முழுவதும் அர்ப்பணித்தாள். முதலில் ஆங்கில வகுப்புப் பிள்ளைகளுக்கே இச்சலுகை கொடுக்கப்பட்டது. பின்பு சுதேசப் பெண்களும் மாதாவுக்கு மலர் வைக்க விரும்பினர். எனவே மாதாவின் மாதத்தில் எல்லாருக்கும் இச்சலுகை கிடைத்தது. மாத முடிவில் 6 சிறுமிகள் திருமுழுக்குப் பெற்றனர். இவ்வேளை நான் அவர்களை மாதாவின் பாதத்தண்டை அழைத்துச் சென்று, உங்களை நினைத்து மன்றாடி எம் தலைவிகள் பணிக்காகவும் மன்றாடினேன்.

திருமுழுக்குப் பெரிய கோவிலில் நடைபெற்றது. பல அநாதைச் சிறுவர்களும் திருமுழுக்குப் பெற்றனர். ஒவ்வொருவரும் பலவர்ணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்களால் முடி செய்து அணிந்தனர். எமது பிள்ளைகள் றோஸ், வெள்ளை மலர்களால் ஆன முடி அணிந்தனர். வழிபாடு முடிந்ததும் ஆயரில்லம் சென்று நன்றி கூறினர். ஆயர் பாணும், வாழைப்பழமும் கொடுத்தார். மகிழ்வுடன் வாங்கி உண்டனர். சில நாட்களின் பின் எமது கோவிலில் 8பிள்ளைகளுக்கு முதல்நன்மையும், பின்பு 5பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதலும் கொடுக்கப்பட்டது. 6மாதங்களுக்கு முன் ஆரம்பப்படியில் சுதேசப் பெண்கள் சிலரைத் திருக்குடும்பத்தில் சேர்த்தோம். அவர்கள் நல்வழியில் நடந்து வந்ததால் நிரந்தரமாக திருக்குடும்ப பிள்ளைகள் நிலைக்குச் சேர்த்தோம்.

## யாழ்ப்பாணம் 4 புரட்டாதி - 1865

ஆடி மாதத்தில் ஒரு மாலை நேரம் உலாவிச் சென்று திரும்பி வரும்போது ஒரு 8வயதுப் பிள்ளை எம்மைப் பின்தொடர்ந்து வந்தாள். மடத்து வாசலை அண்மித்ததும் தன்னையும் கூட்டிச் செல்லும்படி கதறினாள். உடுப்பின்றி இருந்தாள். தன் பெற்றோர் இறந்துவிட்டதாகவும், மக்கள் உணவு கொடுப்பதாகவும், ஒரு கிராமத்தில் வசிப்பதாகவும் கூறித் தன்னை ஏற்றுக் கொண்டால், தான் நன்றாக வேலை செய்வதாகவும் கூறினாள். யார் அழைத்து வந்தது என்று வினாவியபோது ஒரு வெள்ளைத் தோல் பெண் அழைத்து வந்து அவள் கோவிலுக்குச் செல்ல, தான் எங்களைச் சந்திக்க வந்ததாகவும் கூறினாள். தான் பதிதமதம் எனவும் கிறிஸ்தவளாக விரும்புவதாகவும் கூறினாள்.

இறைபராமரிப்பில் நான் அவளை ஏற்று 'மடலேன்' என்னும் பெயரிட்டேன். உடுப்புக் கொடுத்துப் பிள்ளைகளுடன் விட்டபோது அவளுக்கு மகிழ்ச்சி. கோவிலில் பிள்ளைகளுடன் விளையாடிக் குழப்பம் செய்வாள். நான் சற்றுக் கண்டித்தபோது தன்னை அனுப்ப வேண்டாம், நல்ல பிள்ளையாக நடப்பேன் என்று சொன்னாள். தற்போது திருந்தி எழுத, வாசிக்க, செபிக்க கற்கின்றாள். தோட்டம் துப்பரவு செய்வாள். விரைவில் கிறிஸ்தவளாக வருவாள்.

திருக்குடும்பப் பிள்ளைகளும், திருப்பாலத்துவசபைப் பிள்ளைகளும் ஒன்று சேர்ந்து நத்தார் தினத்தன்று ஒரு லொத்தர் போடத் தீர்மானித்தோம். பிள்ளைகள் தம் ஓய்வு நேரத்தில் பொருட்கள் செய்து தந்தனர். புரட்டஸ்தாந்து பிள்ளைகளும் 'ரிக்கெற்' வாங்கினர். ஆனால் ஆங்கிலசட்டம் ஒன்று இதைத் தடை செய்தது. கடும் தண்டனைப் பணம், சில நாட்களுக்குச் சிறை என அறிவித்தனர்.

ஊக்கம் தணியாது எமது அறியாமையை ஏற்றுக்கொண்டு, அரசியின் சட்டத்தரணியை அணுகிப் பொருட்களைப் பாவிக்க உத்தரவு பெற்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாசி 8ந் திகதி எல்லோரும் வந்து பொருட்களை மேசையில் பரப்பினர். திருக்குடும்பப் பிள்ளைகள் வெண்ணுடையணிந்து 'ரிக்கெற்' விற்பதிலும், பெயர் எழுதுவதிலும் ஈடுபட்டிருந்தனர். ஆயர் சில குருக்களுடன் விழாவுக்கு வந்தார். ஒரு பிரென்ஸ் பாடலுடன் விழா ஆரம்பமானது. பின்பு லொத்தர் இழுக்கப்பட்டது. முடிவு பெற்றபின் 'பியானோ' இசையும் ஓர் ஆங்கிலப் பாடலும் இசைக்கப்பட்டது. லொத்தர் மூலம் 112 பிராங் பெறப்பட்டது. இது ஒரு பிள்ளையின் வழியாக ஆயருக்குக் கொடுக்கப்பட்டது.

ஆயருக்கு ஓர் அழகிய பாவை கிடைத்தது. அவர் அதை 'லுசி' என்ற சிறுமிக்குக் கொடுத்தார். நல்ல உள்ளம் கொண்ட 7வயதுச் சிறுமி அவள். எனவே மறுநாள் என்னிடம் வந்து தனது பொம்மையை 'வுளோறினுக்குக்' கொடுக்க விரும்பி உத்தரவு கேட்டாள். நீயாகவே அதைக் கொடு என்றேன். பின்பு திருப்பாலத்துவ சபையினரை ஒரு விற்பனைக்குத் தயார் செய்யும்படி கூறினேன். அடுத்த மாதம் இந்த ஏழைச் சிறுமிகள் ஓய்வு சேரத்தில் செய்த தமது மரக்கறிகளை எமக்கு விற்றனர். இதற்கு நான் செபமாலை, வரவணிக்கம் போன்றவற்றைக் கொடுத்தேன். பின்பு பிள்ளைகள் சிஸ்.லிகோரியிடம் தம் சாப்பாட்டில் அரிசி, தேங்காய் போன்றவற்றைக் குறைக்கும்படி கூறினார்கள். ஐரோப்பிய பிள்ளைகள் தம்மை ஒறுத்து எமக்கு உதவி செய்வது போல, நாமே எம் பணிக்காக ஒறுத்தல் செய்வோம் என்றனர். தம் ஓய்வு நேரத்தில் விளக்குமாறு, கயிறு செய்தனர். ஆயரும் சில பொருட்களை அனுப்பி வைத்தார். 2நாட்களின் முன் ஆலயத்தில் உள்ள குழந்தை இயேசுவின் முன் "குழந்தை இயேசு ஒரு பொருள் கேட்கின்றார். அவர் உங்களுக்கு அருள், ஆசீர் தருவார்" என ஒரு கூடையில் எழுதி வைத்தனர். இதன் மூலம் ஆங்கில மாணவர்களையும் இந்த விற்பனையில் பங்கு பெறச் செய்தனர். கத்தோலிக்கப் பிள்ளைகள் பணம் இல்லாவிட்டாலும் இயேசுவின் அழைப்பிற்குச் செவிமடுத்தனர். கொடுத்த பொருட்களில் ஒரு மாதா சுரூவம் ஆயரால் ஒரு பிள்ளைக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பலர் தியாகம் செய்தனர். ஒரு பிள்ளை தன்னிடம் ஒன்றுமில்லையென உணர்ந்து தன் காதணியைக் கழற்றிக் கொடுக்க சிஸ். லிகோரியிடம் உத்தரவு கேட்டாள். கண் வருத்தம் உடைய இப்பெண்ணின் வேண்டுதல் மறுக்கப்பட்டது. மீளவும் கண்ணீருடன் கேட்டாள்.

புரட்டஸ்தாந்து மாணவிகளும் விற்பனைக்கு அழைக்கப்பட்டனர். ஆயர், குருக்கள் சிலர், பல கத்தோலிக்கர் சமூகமளித்தனர். விற்பனை ஆங்கில வகுப்பில் வைக்கப்பட்டது. அநாதைப் பிள்ளைகளின் பாடலுடன் சிஸ். ஸ்ரனிஸ்லாஸ் அவர்களின் இசையுடன் விழா ஆரம்பமானது. பின்பு திருப்பாலத்துவ சபை பற்றி ஓர் உரையாடல் இடம் பெற்றது. விற்பனை ஆரம்பமானது. பொருட்கள் மேசையில் பரப்பப்பட்டுள்ளன. நிலத்தில் தேங்காய், அரிசி, மிளகாய், தானியங்கள், மரக்கறி, கயிறு, துடைப்பம் காணப்பட்டன. அருட்தந்தை பொஞ்ஜீன் கயிறு வாங்கினார். பிறதர் அரிசி, மரக்கறி வாங்கினார். விற்பனை மூலம் 62 பிராங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. இந்த விழா நற்கருணை ஆசீருடன் கோவிலில் நடைபெற்று முடிவடைந்தது.

### தமிழ் பிள்ளைகள் (Montpellier) மொன்பெலியேயில் உள்ள போடிங் பிள்ளைகளுக்கு எழுதிய கடிதம்

எமது நன்கொடையாளிகளே, திருக்குடும்ப போடிங் பிள்ளைகளே, திருப்பாலத்துவ சபைப் பணியினால் இயங்கும் போடிங்கில், திருக்குடும்பச் சகோதரிகளினால் வழிநடத்தப்படும் யாழ்- பிள்ளைகள் எழுதுவது, யாழ் ஆயர் வெகு தொலைவில் இருந்து எமது அருமைச் சகோதரிகளை எமக்காக கொண்டு வந்துள்ளார். இவர்கள் இறைவனை நாம் நேசிக்கக் கற்றுக் கொடுக்கின்றார்கள். எல்லா உறவினரையும் விட்டு ஆயரின் அழைப்பைக் கேட்டவுடன் வந்தபடியால் பிறரன்பைக் காட்டுகின்றனர். தாமதமாக எம் கடிதம் வந்தாலும், எவ்வாறு ஆயரும், சகோதரிகளும் யாழ் வந்தனர் என்பதை உங்களுக்கு எடுத்துரைக்கப் போகின்றோம்.

ஆயரையும், சகோதரிகளையும் தாங்கிய கப்பல் வருகின்ற செய்தி கேட்டவுடனே கடற்கரைக்கு நாம் சென்றோம். பலகாலமாகக் காத்திருந்ததால் கிறிஸ்தவர்களும் மகிழ்வுடன் சென்று அழைத்து வந்து ஆலயம் சென்றோம்.

சகோதரிகள் நமக்கு சல்ல அறிவுரை தர விரும்புகின்றார்கள். ஆனால் தமிழ் பேசத் தெரியாது. எனவே கஷ்டப்படுகின்றார்கள். விரைவில் மொழி படிக்க மன்றாடுகின்றோம். உங்கள் உதவியினால் எங்கள் யாழ் பணி தொடர்கின்றது. அதற்காக நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். எம்மில் 15 பேர் முதல் நன்மை, உறுதிப்பூசுதல் பெற்றுள்ளனர். அவ்வேளை எல்லோரும் புதுஉடை அணிந்து துப்பட்டி மேல் முடி வைத்துச் சென்றோம். மேலும் 10 பேர் ஆவணி 15ல் திருமுழுக்குப் பெறத் தம்மை ஆயத்தம் செய்கின்றனர். புதிதாக உறுதிப்பூசுதலைப் பெற்றவர்களே இதை எழுதுகின்றார்கள். அவர்களின் பெயர் கீழே உள்ளன. மரியா, அகுஸ்தீனா, அன்ரோனியா, றோசா, நொலினா, அப்பலோனியா, திரேசியா, பார்பறா, மேர்சி, மரியன்னா, மேரி, பிரான்சிஸ்கா, மாகிறெற், சூசான்னா, அக்னெஸ்.

### சமேரியா ஆயர் பிரான்ஸ் mont pellier பிள்ளைகளுக்கு எழுதிய கடிதம் - 26 ஆனி

என் அன்பான பிள்ளைகளே,

யாழ் அநாதைப் பிள்ளைகளின் கடிதத்துடன் என் கடிதத்தையும் இணைத்து அனுப்புகின்றேன். உங்கள் அன்புச் செயல்களுக்கு நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றேன். இங்குள்ள ஏழைச் சிறுமிகள், பதித மக்கள், திருப்பாலத்துவசபை நிதி உதவியுடன் பலர் திருமுழுக்கு, முதல்நன்மை, உறுதிப்பூசுதல் பெற்றுள்ளனர். நாம் இவர்களை நேசிக்கின்றோம். அவர்கள் கல்வி கற்காததால் திருக்குடும்பச் சகோதரிகள் மூலம் அவர்களுக்கு வழிகாட்டுகின்றோம். நீங்கள் செய்த உதவிகட்கு நன்றி கூறுகின்றோம். "உங்கள் சிறிய சகோதரர்க்குச் செய்த உதவி எல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்று இயேசு கூறினார். இயேசுவை நேசித்து நன்மை பெற்றவர்கள் அடிக்கடி இந்த அருட்சாதனத்தைப் பெற்றுப் பலன் அடைவீர்களாக. அத்துடன் மாதா பக்தியையும் வளர்ப்பீர்களாக. எம் யாழ் பிள்ளைகளுக்காகவும், நல்லுதவிகளுக்காகவும், மிஷனறிமாருக்காகவும் இறுதியாக எனக்காகவும் மன்றாடும்படி கேட்கின்றேன்.

J. ஏட்றியன் சமேரியா
ஓலிம்பியா ஆயர் - யாழ் பிரதிநிதி

நல்ல தாயாரின் திருநாளுக்கு இலங்கைப் பிள்ளைகளால் பல கடிதங்கள் எழுதப்பட்டன. சில அநாதைப் பிள்ளைகளின் கடிதங்களைத் தருகின்றோம்.

இயேசு, மரி, சூசை துணை

**யாழ்ப்பாணம் 4 ஆடி 1865**

இயேசு, பரிசுத்த சிலுவை போற்றப்படுவதாக. பிதா, சுதன், பரிசுத்தஆவி, திரித்துவத்தின் பெயராலே.

பரலோக பூலோக இராக்கினியின் பின் எல்லாவற்றையும் ஆளும் பெரிய தாயாரே உங்களுக்கு எம் வணக்கங்கள்.

இந்துக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஏழை அநாதைப் பிள்ளைகளாகிய நாம் இயேசு, மரி, சூசையின் அங்கத்தவர்கள், எம் கடிதத்தை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். இறைமகன் கருணையினாலும், பரிசுத்த தாயின் உதவியுடனும் நாம் இந்து மதத்தை விட்டு நன்மை, தீமை அறிய நாம் தெரிந்து எடுக்கப்பட்டுள்ளோம். திருக்குடும்பச் சகோதரிகளை எம் மத்தியில் அனுப்பியதற்கு நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். எல்லாவற்றையும் துறந்து அவர்கள் எம் மத்தியில் இருக்கின்றார்கள். எம் தாயார் ஆனி 26ல் உங்களுக்கு எழுதுவதற்கு உத்தரவு தந்தா. ஆவணி 15ல் உங்கள் பெயர் கொண்ட திருநாளும் வருகின்றது. உங்களை எங்களுக்குத் தெரியாவிட்டாலும் எம் வாழ்த்துக்களை சமர்ப்பிக்கின்றோம். நீடிய வாழ்வு தரும்படி இறைவனிடம் கேட்டு நிற்கின்றோம். இவ்வுலகில் உங்களை நாம் காணாவிட்டாலும் மறுஉலகில் ஒருநாள் உங்களைச் சந்திப்போம் என நம்புகின்றோம். திருமுழுக்கு, வாழ்வின் அப்பம், உறுதிப்பூசுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் தூயஆவியைப் பெற்றுள்ளோம். எமது மொழியில் எழுத, வாசிக்க கற்றுக்கொள்கின்றோம். சிறிது ஆங்கிலம், புவியியல், கணிதம், தையல் என்னும் பாடங்களையும் படிக்கின்றோம். 5அநாதைப் பிள்ளைகள் இயேசு, மரி, சூசையின் சபையில் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளோம். 4பேர் ஆயத்தநிலையில் (Aspirants) உள்ளோம்.

மேலும் கடிதத்தை நிறைவு செய்யுமுன் இறைவனின் முன்னிலையில் எம்மையும் நினைவுகூர வேண்டி, என்றும் நாம் இறைவனுக்கு பிரமாணிக்கமாக இருக்க வேண்டி உங்கள் செபத்தை நாடி நிற்கின்றோம்.

றோஸ், மேரி மாகிறெற், மரியா, பிரான்சிஸ்கா, திரேசா, மேரி, மேரி ஆன், அன்ரோனியா.

கடிதத்தின் ஒரு பகுதி இலங்கையில் எவ்வாறு புனித. பிரான்சிஸ் சவேரியார் திருவிழா கொண்டாடுவது பற்றியது.

## யாழ்ப்பாணம் 4 மார்கழி - 1865

இயேசு, மரி, சூசையின் பின் புனித. சவேரியார் திருவிழா எம்முள்ளத்தில் இடம் பெறுகின்றது. இந்தியாவின் அப்போஸ்தலராக இருப்பதாலும், எம் தாயாரின் பெயர் கொண்டதாலும் எமக்கு முக்கியமானது. 2நாள் இதற்காக எம் பிள்ளைகள் செலவழிப்பார்கள். அத்துடன் இங்கு கொண்டாட்டங்கள் எல்லோருக்கும் விருப்பமான ஒரு நிகழ்வு. என்ன விழா என்றாலும் 6,8 நாட்கள் எடுக்கும். எனவே நேற்றைய விழாவைப் பற்றிக் கூறுகின்றோம். எம் சுதேச அநாதைச் சிறுமிகள் தம் வகுப்பறையில் எம் தாயாரை வரவேற்றனர். ஒரு சாய்மனைக் கதிரையின் மேல் சிலுவை ஒன்றிற்கு மேலாக றோசாமலர் முடி அணிந்து கதிரையிலும் அழகிய துணி போட்டனர். ஒரு தமிழ் பாடலின் பின் திருக்குடும்ப பிள்ளை ஒருவரால் உரை வாசிக்கப்பட்டது. பின்பு பாடலின் அடிகள் பாடப்பட்டது. இது பிள்ளைகளினால் இயற்றப்பட்டது. இது முடிவடைந்ததும் தொழிலகம் சென்றார்.

அங்கு ஓர் உரையாடல் இடம் பெற்றது. பின்பு ஆங்கில வகுப்புக்குச் சென்றார். அங்கு 'பிரெஞ்ஸ்' மொழியில் ஒரு பாடல் இசைக்கப்பட்டது. 'வாழ்க எம் அன்புத்தாயே, நீர் மகிழ்ச்சியாயிருப்பீராக' என்று பாடிய வசனங்கள் பதாகையில் எழுதி மேலே கட்டப்பட்டிருந்தது. பின்பு ஆங்கிலத்திலும், பிரெஞ்ஸ் மொழியிலும் வாசிக்கப் பிள்ளைகள் ஒவ்வொருவராக வந்து தாயாருக்கு முன் முழங்காலிட்டுத் தம் வாழ்த்துக்களையும், விழா பூங்கொத்தையும் கொடுத்துச் சென்றார்கள். பின்பு குழுச் சகோதரிகள் அவரின் பிரசன்னத்திற்கு நன்றி கூறினர். ஆயரும் 2அழகிய விளக்குகள், 4பாகங்களைக் கொண்ட ஒரு தியானப் புத்தகமும், அழகான பூசை உடுப்பும் அனுப்பி இருந்தார். குழுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அறையில் இருந்து தொழிலகத்திற்குப் பிள்ளைகளின் கைவேலையைப் பார்வையிடச் சென்றோம். அங்கு விழாக் கோலம் பூண்டிருந்தது. பலவகையான கைவேலைகள் மேசையில் பரப்பி வைக்கப்பட்டிருந்தன. விற்பனைக்குத் தயாராக இருந்த பொருட்களில் பிள்ளைகளுக்கேற்ற உடுப்புக்கள், குழுவுக்குத் தேவையான துணிகள், கோவில் உடைகள், பொருட்கள் எல்லாம் நல்லமுறையில் செய்யப்பட்டிருந்தன.

மடம் விழாக்கோலமாக இருந்தபடியால் பிள்ளைகளின் தாய்மாரும் தாங்கள் கொண்டு வந்த பழம், கேக் என்பவற்றைக் காணிக்கையாக அளித்தனர். பின்னர் கொழும்புத்துறையில் உள்ள புனித. சூசையின் அநாதைச் சிறுவர்களும் 2கூடைகளில் பூக்கள் கொண்டு வந்தனர். இவ்வாறாக முதலாவது நாள் முடிவுற்றது. 2ம் நாள் மேலும் வியப்புக்குரியது. உங்களைப் பீடத்திற்கு அழைத்துச் செல்லப் போகின்றேன். என்னைப் பின்தொடர்வீர்களென நம்புகின்றேன்.

எம்மடத்துச் சிற்றாலயம் சிஸ். லிகோறியால் அலங்கரிக்கபட்டு புனித. சூசையின் பிள்ளைகளின் கைவேலைப்பாடுகளினால் மிளிர்ந்தது. எம் தாயார் என்னையும் கவனிக்கக் கூறியதால் நல்ல காலநிலையைத் தரும்படி இறைவனிடம் கேட்டேன். அவருக்கு நல்ல உடையெல்லாம் அணியப்பட்டது. ஆயர் பூசைக்கு வந்தபோது நாம் பாடல்கள் பாடினோம். ஆயர் மாலையில் நற்கருணை ஆசீர்வாதத்திற்கு வந்தபோதும், 'தாந்தும் ஏர்கோ' மாதாவின் பிரார்த்தனை பாடினோம். இத்துடன் ஞாயிறு நாள் முடிவுற்றது. திங்கள் மாலையில் ஒரு கலை நிகழ்ச்சி நடைபெற்றது. மாத முடிவிலும் இந்நிகழ்ச்சி ஆயரின் விழாவுக்குத் திரும்பவும் நடைபெறலாம்.

செவ்வாய்க்கிழமை திரும்ப வகுப்புத் தொடங்க வேண்டியுள்ளது. இத்திருவிழாக்களின் பின் சற்றுக் கஷ்டமாக இருக்கும். எம் தாயார் மாலையில் கொழும்புத்துறைக்குச் சென்றார். ஆயர் 8நாள் லீவுக்கு அவவை ஒரு கிராமத்திற்கு கூட்டிச் செல்வதாகக் கூறியதால் மகிழ்ச்சி அடைந்தா. இம்மாதம் பரிசளிப்பு விழாவும் நடக்க இருக்கின்றது. இங்கிலாந்தில் இருந்து வரவேண்டிய புத்தகங்கள் வராதபடியால் எவ்வாறு பரிசளிப்புவிழா நடைபெறக் கூடும். ஆபிரிக்காவில் நல்நம்பிக்கைமுனை வழியாக அனுப்பப்பட்டது. பயணம் பற்றி அறிவிக்க பிரான்சிஸ் சவேரியார்தான் இவ்வாறு மகிமைப்படுத்தப்படுவதைக் கண்டு பெருமையடைய வேண்டும். முதல்நாள் அவரின் சுரூபம் கழுவித் துப்பரவு செய்யப்பட்டது. தாயார் அவரை என் பொறுப்பில் தந்ததால் மங்கி இருந்த அவரின் உடை, சப்பாத்து, முகம் அனைத்தையும் அழகுபடுத்தி அவரிடம் இதற்குக் கூலி கேட்டு நியாயப்படுத்தினேன். என்ன கூலி தெரியுமா, மழையில்லாத நல்ல காலநிலையைக் கேட்டேன். அவர் மிகவும் அலங்கார உடையுடன் சிறப்பாக இருந்தார். எமது தாயார், சகோதரிகள், பிள்ளைகள் எனக்காக அவரிடம் வேண்டினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNALS NO. 12

**யாழ்ப்பாணம் பங்குனி 1867** **வலிகாமம் தை 8 - 1866**

வலிகாமத்தில் இருந்து ஒரு கடிதம் வருவதைக் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். சென்ற மாதம் 30ம் திகதி யாழில் இருந்து புறப்பட்டு அந்த அழகிய கிராமத்தில் எட்டு நாட்களைச் செலவிட்டு இந்த ஆண்டு களைப்பில் இருந்து ஓய்வு பெற்றோம்.

இந்த அழகிய வலிகாமப் பங்கு யாழில் இருந்து சில மைல் தூரத்தில் சமுத்திர ஓரத்தில் அமைந்துள்ளது. 22 ஆலயங்கள் குருக்களுக்கு உண்டு. நல்ல கிறிஸ்தவர்கள் பலர் உள்ளனர். சிறிது சிறிதாக மனம் மாறுகின்றனர். புரட்டஸ்தாந்து மதம் இங்கு பரவவில்லை. நாம் தங்கும் வீடும் நன்கு அமைந்துள்ளது. சில மாற்றங்களின் பின் எம் போடிங் பிள்ளைகளும் எம்முடன் தங்க முடிகின்றது. அத்துடன் மக்கள் தென்னோலையால் ஒரு கொட்டில் போட்டு அநாதைப் பிள்ளைகள் தங்குவதற்கு வசதி செய்யப்படுகின்றது. எனவே எல்லோரும் கடலில் இருந்து சிறிது தூரத்தில் உள்ளோம்.

வலிகாமக் கிறிஸ்தவர்கள் ஒரு மைல் தூரத்தில் இருந்து நாதஸ்வரம், கொடிகள், வெடிகளுடன் எம்மை வரவேற்க வந்திருந்தனர். நாம் காரில் இருந்தபடியால் பொறுமையுடன் இதை ஏற்றோம். இறுதியாக மக்கள் காலை தொடங்கி எழுந்தேற்றம் செய்யப்பட்ட கோவிலுக்கு எம்மை அழைத்துச் சென்றனர். தேவநற்கருணைச் சந்திப்பின் பின்பு தலைமைக் குருவும் அருட்தந்தை புவாசோவும் (Boisseau) எம்மைப் புதிய இடத்திற்கு அழைத்துச் சென்றனர். புதிய இடத்து அனுபவங்கள், சந்திப்புக்கள் பற்றிக் கூறாவிடினும் ஒரு சம்பவம் பற்றி உங்களுக்குக் கூற வேண்டும். பாடசாலை ஆசிரியர் ஒருவர் வயோதிபர். தம் வகுப்பை எமக்குக் காட்டி ஆங்கிலத்தில் பேசினார். பிள்ளைகள் மறைக்கல்வி படிக்கின்றார்களா? எனக் கட்டபோது உடனே தன் கண்ணாடியைப் போட்டு கேள்விகள் கேட்டார். பிள்ளைகள் உடனே பதில் கூறினர். அவர்களுக்கு நான் ஒரு வரவணிக்கம் கொடுத்தேன். அங்கே 15 வயதுடைய ஒரு இந்து இளைஞனும் இருந்தான். அவனும் என்னை அண்மித்து ஒரு வரவணிக்கம் பெற விரும்பினான். நான் கிறிஸ்தவர்களுக்கே கொடுப்பேன் எனக் கூறி மறுத்தேன். அடுத்தநாள் வந்து தான் கிறிஸ்தவனாக வருவதாகவும் அநாதைச் சிறுவனாகையால் பிரச்சினை இல்லை என்றும் கூறினான். திருமுழுக்குப் பெற விரும்பியதால் குருமுதல்வரிடம் அனுப்பி அவர்களின் அநாதை மடத்தில் சேர்க்கும்படி இரந்து கேட்டான். அனுமதிபெற்ற செய்தியைக் கூற வந்தபோது வரவணிக்கம் கொடுத்தேன். மகிழ்ச்சியுடன் தன் கழுத்தில் மாட்டிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இந்த அழகிய வலிகாமத்தில் சுதேச சகோதரிகளுக்கு முதல் மடத்தைக் கட்ட விரும்புகின்றேன். பெண்களுக்கு வகுப்புக்கள் இல்லை. நான் இந்த மக்களிடம் உங்கள் பிள்ளைகளுக்கு செபிக்க, வாசிக்க, வேலை செய்ய கற்றுக்கொடுக்க நல்லாசிரியர்கள் விருப்பமா? எனக் கேட்டபோது அவர்கள் மகிழ்வுடன் அதை வரவேற்றனர். விரைவில் இப்பணிகளை இக்கிராமப் பெண்களுக்கு ஆரம்பிக்கலாம் என்று எண்ணுகின்றேன். தற்போது 5 சுதேச நவகன்னியர்களே உள்ளனர். இவர்கள் நிலைத்திருக்கவும், தொகை பெருகவும் செபிப்போம்.

சில நாட்களின் முன்பு ஓர் உயர்தர இளம்பெண் எம்மடத்தில் தங்க இடம் கேட்டார். அவளிடம் ஆயரின் கடிதமும் இருந்தது. துறவற வாழ்வையும் விரும்பினாள். வீட்டில் அனுமதி கிடைத்ததா? எனக் கேட்டபோது தனக்குத் தாயும், ஆண் சகோதரரும் இருப்பதாகக் கூறினாள். நான் அவளின் அழைத்தலைப் பரிசோதிப்பதற்காக அங்கு தங்கும்படி கூறினேன். மறுநாள் தாய் வந்து தன் மகளைத் தரும்படி கேட்டாள். அவ்வேளை மகள் வந்து அமைதியுடனும், உறுதியுடனும் "தான் இந்த பரிசுத்தமான இடத்தை விட்டு விலகமாட்டேன்" எனக் கூறினாள். தாய் கோபங் கொண்டு "மகளுக்குக் கலியாணம் செய்யாவிடில் தனது உறவினர்கள் தன்னைப் பேசுவார்கள் என்றும், இணங்காவிடில் தான் போய் ஒரு கிணற்றில் விழுவேன்" என்றும் கூறினாள். மகள் மாறி (Marie) "இதற்குப் பயப்படாது நான் கடவுளுக்கு அமைய வேண்டும்" என்றும் கூறி அநாதை இல்லத்திற்குச் சென்றுவிட்டாள். இரு நாட்களாக வந்து கேட்டும் பயனில்லாது போகவே இந்தப் பெண்ணைத் தேவஅழைத்தலுக்குச் செவிமடுக்க விட்டுச் சென்றுவிட்டார். மாறி எம் அநாதைப் பிள்ளைகளுக்கு நல்ல உதவி செய்தாள். எனவே நவகன்னிகை இல்லத்தில் சேர்க்க விரும்பினேன். எனினும் குடும்பத்தைப் பொறுத்த மட்டில் விவேகமுள்ளவர்களாக இருந்தோம்.

லொறற்றோ மாதா திருநாளில் 6 பிள்ளைகள் திருமுழுக்குப் பெற்றது மிகவும் மகிழ்ச்சி. அழகிய பூக்கொத்துப் போல் மாதாவுக்குக் கொடுத்தோம். இப்பிள்ளைகள் எம் சபைக்காக மன்றாடினார்கள். எமது தலைவிகளுக்கும், எல்லா குடும்பத்திற்கும் நிச்சயமாக அருள் கிடைக்கும். இவர்களில் 5 வயதுப் பிள்ளை ஒன்றை நாம் ஏற்றுக்கொள்ள மறுத்தபோது அவள் கெஞ்சிக் கேட்டு மறைக்கல்விச் செபங்களைப் படித்தாள். தந்தை பொஞ்ஜின் இளமை காரணமாக அவளை ஏற்றுக்கொள்ள மறுக்கவில்லை. எமது சின்ன எலிசபேத்தும் பலகாலம் சாத்தானின் ஆட்சியில் இருந்தாள்.

எமது சின்ன சாளெற்றுக்குத் தன் சிறிய தந்தையும், பாதுகாவலருமானவரின் வருகைக்குப் பின் துன்பத்தின் காலம் தொடங்கிவிட்டது. 3 வருடங்களின் பின் அவர் இங்கிலாந்தில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். சிறுமி பல காலமாகக் கத்தோலிக்க வேதத்தில் சேர விரும்பி தன் சிறிய தந்தையின் உத்தரவைப் பெறக் காத்திருந்தாள். முன்பு புரட்டஸ்தாந்து மதமாயினும் எம்முடன் நல்ல நண்பனாக இருந்தவர் யாழ்ப்பாணம் வந்ததும் தன் சட்டத்தரணி பதவி மீண்டும் பெற்றுக் கொண்டார். ஆனால் இங்கிலாந்தில் இருந்தபொழுது தனது எண்ணங்களை மாற்றிவிட்டார். அத்துடன் ஒரு புரட்டஸ்தாந்துப் பெண்ணையும் மணம் முடித்தார். எனவே சிறுமியின் ஆவலை நிறைவேற்ற முடியவில்லை. ஒவ்வொரு ஞாயிறும் பிள்ளையைக் கோவிலுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார். மறுநாள் ஒரு கடிதம் எழுதித் தான் கத்தோலிக்கத்தில் சேருவதற்கு உதவி செய்ய வேண்டும் என்று உருக்கமாக வேண்டினாள். உடனே அவர் எவ்வாறு ஒரு அங்கிலிக்கன் போதகரின் மகள் தன் தந்தையின் பாதையை விலக முடியுமென்றும், மறுமுறை வரும்போது நல்ல நிலையில் இருப்பாளென எதிர்பார்ப்பதாகவும் எழுதினார். ஆனால் மறுமுறை வந்தபோது அவள் இன்னும் தன் தீர்மானத்தில் உறுதியாக இருந்ததால் இனிப் பார்க்க வருவதில்லை எனக் கூறிச் சென்றார். எனினும் பரிசளிப்பு விழாவிற்கு அழைப்பு அனுப்பினோம். தம் கடமை நிமித்தம் வரமுடியவில்லை எனவும், எமது பாடசாலை மட்டில் அக்கறையுடன் இருப்பதாகவும் கூறினார்.

இவ்வருடம் பரிசளிப்பு விழாவில் ஒரு மாற்றம் செய்தோம். அது நல்ல பயனளித்தது. ஆங்கில சமூகத்திலுள்ள முக்கியமானவர்கள் பொறாமையுடன் எம்மைப் பார்ப்பதால், இதைத் தடுப்பதற்காக இம்முறை விழாவிற்கு அவர்களை அழைத்தோம். அவர்களில் நாம் சிறிது நம்பிக்கை வைத்தாலும் அவர்கள் வந்து தம் பிரசன்னத்தைத் தந்தனர். எல்லாம் நல்ல முறையில் நடைபெற்றது. நாம் அவர்களை அழைத்தது எம் பகைவரைக் குறைப்பதற்கன்று. மாறாக புனித சூசையின் பொருட்களை வாங்குவதற்கு ஆட்சேர்ப்பதுமாகும், நாம் நம்பிக்கை மாதாவிடம் இந்த விற்பனையை ஒப்படைத்து அவரின் திருநாளில் இதைத் தொடங்கினோம். பல பொருட்கள் விற்பனையாகின. இந்த விற்பனைக்கு வந்தவர்கள் தம் நண்பர்களுக்கு எமது மடத்துச் சகோதரிகள் பற்றிய தப்பபிப்பிராயங்களை நீக்கிவிடுவதாகக் கூறினார்கள். அத்துடன் மீதியாக இருந்த பொருட்களுக்கு லொத்தர் போட்டு 4நாட்களின் பின் சீட்டிழுப்பு வைக்கவும் உதவினர். எம் பிள்ளைகள் ஒரு நிகழ்ச்சியையும் நடாத்தினர். அது எல்லோரின் பாராட்டையும் பெற்றது. பிள்ளைகளின் உச்சரிப்புத் திறன், நடத்தையைப் புகழ்ந்தனர். வேறுசிலர் அழகான பொருட்களைப் பார்க்க மடத்திற்கு வரவேண்டும் என்றனர். எல்லோரும் ஆங்கில சமுதாயம் உட்பட இந்த இனிய மாலைப் பொழுதிற்காக நன்றி கூறினர். நாம் இறைவனுக்கும் தேவதாய்க்கும் நன்றி கூறினோம். விற்பனையினால் 1200 பிராங் சம்பாதித்தோம். எம் நாடு, சிறிய அளவு இளம் பெண்கள், குறைந்த நேர வேலை இவற்றை ஒப்பிடும்போது இத்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியதாகும். எனவே காணக்கூடிய இந்த இறைபராமரிப்புக்காக நவநாள் ஆராதனை செய்து நன்றி கூறினோம். இனி எமது தியான நாட்களை ஆயத்தம் செய்வதற்கு வலிகாமத்தை விட்டுச் செல்லப் போகின்றோம். நேற்று இறுதியாக எமது கடற்கரை உலா இடம் பெற்றது. இங்கு செலவிட்ட நாட்கள் எம் சகோதரிகளுக்கும் பிள்ளைகளுக்கும் நற்பயன் அளித்தது.

**09 தை 1866**

எனது கடிதத்தை யாழ்ப்பாணத்தில் இருந்து தொடர்கின்றேன். நேற்று வலிகாமத்திலிருந்து நாம் புறப்பட்டபோது அங்குள்ள நல்ல மக்கள் உணர்ச்சி பூர்வமாகப் பிரியாவிடை கூறினர். பல மணித்தியாலங்களுக்கு முன்பே எம்வீடு மக்களால் சூழப்பட்டது. எமக்கு உதவி புரிய முன்வந்தனர். கிராமத்துத் தலைவர்கள் மக்கள் சார்பாக உரையாற்றினார்கள். நாம் அவர்களுடன் செலவிட்ட நாட்கள் தமக்கு ஆசீர்வாதம் என நல்ல ஆங்கிலத்தில் உரையாற்றினார். தொடர்ந்து நல்ல மழை பொழிய இறைவனை வேண்டும்படியும்,அல்லது வரட்சி வந்து பஞ்சம் ஏற்படலாம் எனவும், இதனால் கொலரா போன்ற நோய்கள் அரிசியில்லாதபோது ஏற்படலாம் என்றும் கூறினார்.

என்னால் இயன்றளவு இந்த உரைக்குப் பதிலளித்தேன். பின்பு புறப்படக் காரில் ஏறினோம். அப்போது மணியடித்தது. வெடிகள் வெடித்தன. மக்கள் கிராம எல்லை வரை எம்முடன் வந்தனர். மீளவும் நாம் இங்குவர விரும்புகின்றனர். நல்ல இறைவன் விரும்பினால்................

**இலங்கை திருக்குடும்ப நவகன்னியர், பிரான்ஸ் நவகன்னியர்களுக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி - ஆங்கிலத்தில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது.**

நாம் மீளவும் உங்களுடன் ஒரு முறை சில மகிழ்ச்சியான நேரங்களைச் செலவிட வருகின்றோம். இது உண்மையாக இருந்தால் எவ்வளவு நல்லது. இல்லை எம்மைப் பிரிக்கும் இடத்தை நாம் மறக்க வேண்டும். உங்கள் கடைசிக் கடிதத்திற்கு ஆயிரம் நன்றிகள். அத்துடன் (St. Peter) Novitiate House இல் நடைபெற்ற தியான நாட்களைப் பற்றி எழுதியிருந்தீர்கள். நற்கருணைநாதரின் முன் உங்கள் செபத்தில் நாம் தங்கியுள்ளோம்.

அடிக்கடி பிரான்சில் உள்ள நவகன்னியர் மடத்தை எமது மனக்கண் முன் கொண்டு வருகின்றோம். முக்காடிட்ட தலை, குவித்த கரங்கள் அமைதியாக இயேசுவுக்காக, இயேசுவின் குரல், அவர் உங்களில் ஆற்றும்பணி, ஓய்வு நேரத்தில் மகிழ்ச்சியான முகங்கள், சந்தோஷமான சிரிப்பொலி கேட்டாலும் பங்கெடுக்க முடியாத நிலை. நாம் இலங்கையில் அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் தொடங்கிய கடிதத்தை அழகிய கிராமமாகிய வலிகாமத்தில் முடிக்கின்றோம். இங்கு நாம் ஒரு வார காலம் ஓய்வை அனுபவிக்கின்றோம். இங்கிருந்து சில செய்திகள் தரலாம் என நம்புகின்றோம். செலவிட்ட நாட்கள் மகிழ்ச்சியானவை. மக்கள் எம்மேல் நல்ல அக்கறை, கரிசனை காட்டினார்கள். புதுவருடத்தன்று காலையில் எம்மைச் சந்தித்து வெகுமதிகள் அளித்தனர்.

மூன்று பேர் மேளம் அடித்துக் கொண்டு பவனியாக வந்தனர். பின்பு ஒருவர் ஓர் ஆட்டுடன் வந்தார். ஒருவர் தன் தோளில் 6 வான்கோழிகள் கொண்ட ஒரு கூடையைச் சுமந்து வந்தார். அதைத் தொடர்ந்து தேங்காய்க் கூடை, அரிசி, தோடம்பழம், எலுமிச்சம் பழம், முட்டை, கேக் என்பனவற்றைக் கொண்டு வந்தனர்.

தினமும் மாலையில் கோவில்கள் சந்திக்கச் செல்வோம். அல்லது கடற்கரையில் உலாவி வருவோம். அப்போது சில பெண்கள் எம்மைப் பின்தொடர்வர். பெண்கள் வழமையாக வீட்டில் இருந்து தூரப்போக மாட்டார்கள். மாலையில் 'கல்லறை ஆண்டவர்' கோவிலுக்குச் சென்று வருகின்றோம். அங்கு பெரிய மரித்த ஆண்டவரின் சுரூவம் உள்ளது. புதுமை மிகுந்தது. அங்கு செல்பவர்கள் புதுமையாகச் சுகம் பெறுகின்றனர். சிலவேளைகளில் 'முனகல்' சத்தம் கேட்பதாகக் கூறுகின்றனர். அங்கு உங்களுக்காகச் செபித்தோம்.

குருவானவர் எமக்கு ஒரு சம்பவம் கூறினார். நாம் இங்கு வருவதற்கு முதல்நாள் ஒரு மனிதன் ஒப்புரவு அருட்சாதனத்திற்காக வந்திருந்தார். அபராதத்தைப் பின்போட்டேன். பூசை முடிந்து வரும்போது மீளவும் அவன் வந்தான். குருவே, நேற்று நான் கெட்ட வார்த்தை பேசவோ, கேட்கவோ மாட்டேன் என்று வாக்குறுதி செய்தேன். என் உறவினன் ஒருவன் என் வீட்டிற்கு வந்து கூடாத வார்ததைகள் பேச வீட்டை விட்டு வெளியேறும்படி கூறினேன். அவர் விலகாதபடியால் வீட்டிற்கு தீ வைத்துள்ளேன். இறைவன் இதனால் மகிழ்ச்சியடைவார். முற்றாக எரிந்து முடிந்தது. பாருங்கள், இவர்களின் குணத்தை இதனால் அறிந்து கொள்ளலாம்.

இக்காலத்தில் சம்மனசுகள் குறிப்பாக இப்பிரதேசத்தில் உலாவுவதாக மக்களிடம் ஒரு பக்தி வழக்கம் பரவியுள்ளது. அவர்களைப் போல மக்களும் ஊஞ்சல் கட்டி அதில் ஆடிக் கெண்டு நத்தார் கீதங்களை இசைப்பார்கள். எனவே சக்கிறிஸ்ரன் எம் தாயாரிடம் புளிய மரத்தில் ஓர் ஊஞ்சல் கட்ட உத்தரவு கேட்டார். இதன் மூலம் பிள்ளைகள் இந்நாட்டுப் பழக்கத்தைப் பின்பற்ற முடியும் என்றார்.

சிலநாட்களின் முன் கடற்கரையில் இருந்து வரும்போது எமது தாயாரும் வேறொரு சகோதரியும் முன்னே வந்தனர். மேளம் அடிப்பவர்கள் இருவர் அவர்களை நோக்கி வந்தனர். இவர்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதும் இருவரும் மேளம் அடித்து நடனமாடினர். மேளச் சத்தத்தைக் கேட்டு மக்களும் கூடிவிட்டனர். தாயாருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எனவே குடையினால் தன்னை மறைத்துக்கொண்டே சிரித்தா. மேளக்காரரும், மக்களும் அதிகம் பேர் வீட்டு வாசலில் கொண்டு வந்துவிட்ட பின்பே சென்றனர்.

எமது நீணட கடிதத்தையிட்டு மன்னிக்கவும். வாழ்வில் சிறு நிகழ்வுகளும் உங்களுக்கு மகிழ்ச்சி தரும் என்று எழுதியுள்ளோம். உங்கள் கடிதம் சிறியது. புது வருடத்திலே உங்கள் கடிதத்துடன் நீங்கள் அனுப்பிய குருசுகளுக்கும் நன்றி. எம் வாழ்த்துக்களையும் ஏற்றுக்கொள்ளவும்.

இன்னும் சில நாட்களில் எமது தியான நாட்களைத் தொடங்குவோம். எமது கடிதம் உங்களை வந்தடையும்போது அது முடிந்திருக்கும். என்றாலும் நாம் பெற்ற அருள் தொடர்ந்து பயனளிக்கவும், நிலைத்திருக்கவும் மன்றாடுங்கள்.

இப்புதுவருடத்திலே எல்லா ஆசிகளையும், அருள்களையும் விரும்பி சகோதர அன்பில் நிலைத்திருக்கின்றோம்.

உங்கள் சகோதரிகள்
இலங்கை - நவகன்னியர்கள்.

## யாழ்ப்பாணம் 04 சித்திரை 1866

இத்தவணையில் சுற்றுலாப் பயணம் பற்றிக் கூறவில்லை மாறாக எம் ஆன்ம பக்தி முயற்சிகள், தனிமை, அமைதி பற்றிக் கூறவுள்ளேன். 3ஞானொடுக்கங்கள் நல்ல முறையில் நடைபெற்றன. பயனளிக்கும் என நம்புகின்றோம். முதலாவது சகோதரிகளுக்கு நடைபெற்றது. அவ்வேளை எம் பிள்ளைகளின் நல்நடத்தை பற்றிக் கூற வேண்டும், எமது அநாதைப் பிள்ளைகளை ஆயத்த கன்னியரிடம் ஒப்படைத்தோம். போடிங் பிள்ளைகளை புனித. சூசையின் தொழிலகப் பிள்ளைகளிடம் ஒப்படைத்தோம். அமைதி பேணும்படி கேட்டிருந்தோம். அவ்வாறே அமைதி பேணி நல்ல முறையில் தியானம் செய்ய உதவியாக நடந்து கொண்டனர். 80பேர் தியானம் செய்யாவிடினும் அமைதி பேணப்பட்டது. தியான முடிவில் இலங்கை முதல் நவகன்னிகை வாக்குத்தத்தம் செய்தா. இங்குள்ளவர்களுக்காக இதை ஆடம்பரமாகச் செய்தோம். எமது ஆலயத்தில் எல்லாம் நடைபெற்றது. பின்பு நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது.

எம் தியான நாட்களின் பின் ஆங்கிலப் பிள்ளைகளும் தியானம் செய்தனர். இறுதி நாளின் முதல் நாள் மாலை மாசி 3ந் திகதி மாலை 4மணிக்கு எமது பிள்ளைகளில் ஒருவருக்கு அன்பின் புதுமை கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர், குருக்கள் எம் சிற்றாலயத்தில் வந்திருந்தனர். ஒரு பெண் வெண்ணிற ஆடை அணிந்து ஆலய வாசலில் நின்றாள். முன்பு கத்தோலிக்க சமயத்தில் வெறுப்பாக இருந்தவள். தேவதாயிடம் அவளுக்காக மன்றாடி அவவின் வரவணிக்கத்தையும் தலையணையின் கீழ் வைத்தோம். இதனால் அவளது சினம் சிறிது தணிந்தது. உண்மையைத் தேடி தன் உதவிகளையும், வசதிகளையும் துறந்து உண்மை விசுவாசத்தைத் தழுவினாள்.

இப்பெண்தான் சாளெற் என அறிவீர்கள். நாம் அவளுக்கு மாறி என்னும் பெயரிட்டோம். அவளின் உணர்வு, மகிழ்ச்சி, ஆனந்தக் கண்ணீர் வழியாக வந்தது. தியான நாட்கள் மூலம் அவள் ஆயத்தப்படுத்தப்பட்டு இறுதிநாளில் திருவிருந்தில் பங்கு பெற்றாள். தன் விசுவாசத்தை திருவிருந்தின் முன் உரத்த குரலில் அறிக்கையிட்டாள். பின்பு 3நாள் நன்றிச் செபத்தில் செலவிடக் கேட்டாள். 3ம் நாள் மீளவும் நற்கருணை பெற ஆயர் அனுமதி கொடுத்தார்.

ஞானத் தாயாக மாறிக்கு கொழும்பில் இருந்து ஓர் இளம்பெண் கொடுக்கப்பட்டார். யோசேப்பின் என்பவ முன்பு எம் மடத்திலிருந்து விடுதலை அடைந்தவ. யாழ்ப்பாணத்தில் பிறந்து புனித.சூசையின் திருநாளில் ஆயரால் திருமுழுக்குப் பெற்று யோசேப்பின் என்று பெயர் பெற்றா. சில வருடங்களின் முன் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வளர்ந்தவ. உலகின் கேடுகளைத் தாய் கவனிக்காததால் எம்மிடம் ஒப்படைக்கும்படி ஆயரால் திருமதி வன்டெஸ்ராரென் என்பவவுக்குக் கூறப்பட்டது. அவ்வாறே எம்மிடம் ஒப்படைக்கப்பட்டாள். உலக ஆசைகளால் கவரப்பட்டவளாக யோசேப்பின் எம்மிடம் வந்தாள். மடத்துவாழ்வு அவளுக்குப் பிடிக்கவில்லை. கண்ணீரும், கம்பலையுமாக இருந்தாள். நாம் அவளுக்கு எவ்வளவோ அன்புகாட்டியும் எம்மை அறியாது, தான் கடும் வியாதியாக இருப்பதாகத் தாய்க்குக் கடிதம் எழுதி சீக்கிரம் வராவிடில் தன் இறப்பையே காண முடியும் என அறிவித்தாள். இதை அறிந்த நான் அவளை ஊக்கப்படுத்தி, கடிதம் எழுதும்படியாகவும், சில மாதங்களின் பின் நான் வருவதாகவும் எழுதச் சொன்னேன். சில மாதங்களின் பின் அவளின் நடத்தை முற்றிலும் மாறியது. தியானத்தின் பின் நல்ல தீர்மானங்கள் எடுத்தாள். தினமும் காலை தியானம் செய்கின்றாள். எளிமையும், அமைச்சலும் உள்ளவளாகத் தன் நண்பிகளுக்கு முன்மாதிரிகையாக விளங்குகின்றாள். இறைவன் இவளுக்கு நல்லதோர் திட்டம் வைத்திருக்கின்றார். உங்கள் செபத்தை இவளுக்கு விரும்புகின்றேன்.

3ஆவது ஞானொடுக்கம் எம் சிறிய சுதேசப் பிள்ளைகளுக்கு நடைபெற்றது. 40பேர் பங்குபற்றினர். சிலவெளிப் பிள்ளைகளும் இதில் அடங்குவர். இம்முறை பிள்ளைகள் நல்லமுறையில் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில அழைத்தல்களும் அவர்கள் மத்தியில் வந்தன. தமக்குச் சில காலமாகத் துறவீற வாழ்வில் நாட்டமிருப்பதாக 3பேர் என்னிடம் கூறினர். மேலும் இத்தியான நாட்களில் இறைவன் மேலும் மேலும் அழைப்பதை உணர்வதாகக் கூறினர். நான் அவர்களை நவகன்னியர் இல்லம் செல்வதற்குத் தயாராக அவர்களை ஆயத்தப்படுத்தும்படி கூறினேன். மூவரும் நல்ல அறிவுள்ளவர்கள். சமூகத்தில் உயர் மதிப்புள்ளவர்கள். முன்பு இந்து சமயத்தில் தெய்வங்களை வணங்கியவர்கள். இயேசுவின் பத்தினிகளாக வரப் போகின்றதை நினைத்து மகிழ்கின்றேன்.

எம் சுதேச ஆயத்த கன்னியர் அநாதைப் பிள்ளைகளுடன் தமது தியானத்தைச் செய்தனர். முதல்முறையாக இவர்களுக்கு இது அருளப்பட்டது.

புனித சூசையின் தொழிலகப் பிள்ளைகள் பங்குனி மாதத்தில் தம் பாதுகாவலருடைய திருநாளுக்கு ஓர் அழகிய பீடத்தை தயார் செய்தனர். நாம் அவரிடம் பெறும் அருள் வீணாகப் போகாமல் இருப்பதற்காகச் செபித்தோம். இந்த மாதத்தில் ஒரு 10 வயதுச் சிறுமியைத் தபாற் கந்தோருக்கு அனுப்பினோம். நன்றாகத் தன் கடமையைச் செய்யும் இச்சிறுமி அன்று வீடு திரும்பவில்லை. அன்று காலையிலும் அவள் தாய் வந்து கூட்டிச் செல்ல விரும்பியும் அவள் செல்லவில்லை. எனவே வழியில் தாய் அவளை வலோற்காரமாகக் கூட்டிச் சென்றிருக்கலாமென நாம் முடிவு செய்தோம். அங்கு பிறசமயத்தவர்கள் மத்தியில் அவளின் விசுவாசம் குறையப் போகின்றதே எனப் பயந்தோம்.

எனவே புனித சூசையின் பீடத்தில் மெழுகுதிரி ஏற்றி அவர் அவளை அழைத்து வந்தால் அவள் துன்பப்படுவோருக்காக ஒரு நவநாள் செய்வாள் என வாக்குறுதி கூறினோம். 2நாட்கள் முடிந்தது. ஒரு செய்தியும் இல்லை. 3ம் நாள் சாப்பாட்டின் பின் கோவிலுக்குச் சென்றபோது எமது சுதேசப் பிள்ளைகள் மகிழ்வுடன் இருப்பதைக் கண்டு அங்கு சென்றேன். அவர்கள் மத்தியில் கெலன் இருந்து, என்னைக் கண்டதும் என் காலில் வந்து விழுந்தாள். தாய் தன்னை வற்புறுத்தி அழைத்துச் சென்றதாகவும், தனக்கு அங்கிருக்க விருப்பமில்லை எனவும் கூறினாள். அவளை அழைத்து வந்த தந்தை அங்கிருந்தார். அவருக்கு அச்சுறுத்தலான புத்திமதி கூறாமல் அவரை விட நான் விரும்பவில்லை. ஆனால் அவரோ எம் முதல் தந்தை ஆதாமைப் போன்று தன் மனைவிதான் கூட்டி வந்ததாகவும், தான் மகளின் விருப்பப்படி மீளவும் கூட்டி வந்ததாகவும் சொன்னார். புனித சூசையப்பரே இவரைக் கருவியாகப் பயன்படுத்திச் சாத்தான் கையில் இருந்து மீட்டார் என அவருக்கு நன்றி கூறி, கெலன் நவநாள் செய்தாள். தொடர்ந்தும் நல்ல பிள்ளையாக இருக்கின்றாள். பிறசமயத்தவர்கள் மத்தியில் செபிக்க முடிந்ததா? எனக் கேட்டபோது தான் காலையும், மாலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபித்ததாகவும், அப்போது சிலர் தன்னைச் சூழ்ந்து முழங்காலில் இருந்து நான் என்ன செய்வதாகவும், யாருடன் கதைப்பதாகவும் கேட்டனர். என் தம்பிக்குச் சிலுவை அடையாளம் கற்பிக்க விரும்பினேன். அது பலனளிக்கவில்லை என்றாள்.

4புதிய ஆயத்த கன்னியர்கள் நேற்று திருக்குடும்பத் திருநாளன்று வந்து சேர்ந்துள்ளனர். எனவே எமது புனித இராயப்பர் நவகன்னியர் 9பேர் உள்ளனர். இந்தப் புதிய முயற்சி செபிக்கவும், பலருக்கும் எல்லாம் கற்பிக்க வேண்டியிருக்கின்றது. என்றாலும் இறையருளுடனும், உங்கள் செபத்தாலும் எல்லாவற்றையும் வெற்றி கொள்ள முடியும்.

## யாழ்ப்பாணம் 06 ஆடி 1866

இத்தவணையின்போது மாதாவின் மாதமும், திருஇருதயத்தின் மாதமும் நல்ல பக்தியாகக் கொண்டாடப்பட்டது. சென்ற வருடம் போன்று பகலில் நல்ல முறையில் கொண்டாடியவர்கள் மாலையில் ஒரு றோசாப் பூவை மாதாவின் பாதத்தில் வைத்தார்கள். மாதம் முழுவதும் பூ வைத்தவர்கள் மாத முடிவில் ஒரு முடி வைப்பார்கள் எனவும் கூறியதால், பிள்ளைகள் எல்லாரும் போட்டி போட்டு நல்ல முறையில் வாழ முயற்சித்தனர். எனவே மாத முடிவில் பிரார்த்தனை முடிந்த பின் வெற்றி பெற்றவர்கள் பவனியாகப் பீடத்தை அண்மித்தனர். 2பேர் முடியுடன் சென்றனர். மற்றவர்கள் முடியில் கட்டும் தம் றிபன்களை வைத்திருந்தனர். அர்ப்பணச் செபம் தமிழில் வாசித்தபோது தம் முடிகளை மாதாவின் பாதத்தில் வைத்தனர். மாதாவின் பீடம் மலர்களாலும், விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

சுதேசிகள் முன்னேயும், பின் ஆங்கில வகுப்புப் பிள்ளைகளும் சென்றார்கள். அவர்கள் வெண்ணுடை அணிந்து நீளத் துப்பட்டி அணிந்திருந்தனர். முடி றோசா, லீலிப் பூக்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. முகத்தில் கபடற்றவர்களாகவும், மகிழ்ச்சியுடனும் காட்சி அளித்தனர். 8 இளம்பெண்கள் ஒன்றாகப் பீடத்திற்குச் சென்று முடியை வைத்தனர். 2பேர் தனியாக உணர்ச்சி பூர்வமாகப் பாடிக் கொண்டு தம் உள்ளத்தில் இருப்பதை எடுத்துக் காட்டினர். பிரியாவிடைச் செபத்துடன் வழிபாடு முடிவுற்றது.

பங்கு கோவிலிலும் மாதாவின் பவனிக்கு அழைப்பு வந்திருந்ததால் அங்கு சென்றோம். எமது பிள்ளைகள் சுரூவத்தைத் தோளில் தாங்கியவர்களாக பெரிய கோவிலைச் சுற்றியுள்ள வீதிகளில் பவனியாக வந்தார்கள். மாதா பக்தியுடைய இந்த மக்கள் கோவிலை றோஸ், அலரிப் பூக்கள், மல்லிகை வேறும் இயற்கைப் பூக்களால் அலங்கரித்தனர். ஒளி ஏற்றப்பட்டிருந்தது. கோவிலுக்கு வரும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிகள் அடிக்கப்பட்டன. வெடிகள் அதிர்ந்தன. எல்லாம் இசைவாக மாதாவை மகிமைப்படுத்தின.

சில நாட்களின் பின் நற்கருணைப் பவனி நடைபெற்றது. இதில் புனித சூசையப்பரின் அநாதைச் சிறுவர்கள், திருக்குடும்பப் பிள்ளைகள் பங்குபற்றினர். பிரான்சிய முறையிலும் பார்க்க வேறுபட்டிருந்தாலும் அழகாக இருந்தது. நல்லுள்ளத்துடன் எல்லாவற்றையும் செய்தோம்.

சில நாட்களின் பின் இயேசுவின் திருஇருதய மாதமும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. திருஇருதயப் படம் இல்லாததால் நற்கருணைப் பேழையை அலங்கரித்தோம். பீடத்தைச் சுற்றி 2 பதாகையில் இயேசுவின் ஆராதனைக்குரிய இருதயம் என்றும் போற்றப்படுவதாக என்று எழுதி 2 பூக்கொத்தில் பொருத்தினோம். தினமும் மாலையில் செபத்திற்கு ஒன்று கூடினோம். காணிக்கையாகப் பூக் கொடுப்பது மாதங்கள் தோறும் வேறுபட்டிருக்கும். அதாவது தினமும் காலையில் ஒவ்வொரு பிள்ளையும் இந்த ஞானப்பூவை இயேசுவுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்பார்கள். இளம் உள்ளங்கள் அப்புண்ணியத்தை வாழ முயற்சி எடுப்பதைக் காணக் கூடுமாயிருந்தது. திருஇருதய ஞாயிறன்று விழாவின்போது நற்கருணை எழுந்தேற்றம் நாள் முழுவதும் வைக்கப்பட்டிருந்தது. வருடத்தில் 3முறையே இவ்வாறு வைக்கப்படும். இயேசுவிடம் கேட்க எவ்வளவோ உள்ளன.

ஆனி மாதத்திலே ஆங்கில வகுப்புக் கத்தோலிக்க மாணவர்கள் திருப்பாலத்துவ சபை, விசுவாசப் பரப்புதல் சபைக்காக ஒரு லொத்தர் சீட்டிழுப்பு வைத்து 130 பிராங் கிடைத்தது. இதைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சி நடைபெற்றது. எல்லா புரட்டஸ்தாந்து பிள்ளைகளும் சீட்டிழுப்பில் பங்குபற்றினர். 15 பேர் திருப்பாலத்துவ சபையிலும் சேர்ந்துள்ளனர். எனவே சிலர் தம் பாதை விட்டு ஒருநாள் மனந்திரும்பலாம்.

எம்முடன் இருந்த ஓர் அநாதைச் சிறுமி ஒரு கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு உடல் எல்லாம் வீங்கிக் காணப்பட்டாள். மருத்துவர் சுகப்படுத்த முடியாதெனவும் மரணத்தை எதிர்பார்க்கும்படியும் கூறிவிட்டார். ஒணறின் என்னும் இச்சிறுமி முதல்நன்மை பெறவும், நோயில்பூசுதல் தரும்படியும் கேட்டாள். அவளது சிறிய அறை கோவிலாக மாறியது. கேட்டவை அருளப்பட்டன. எல்லா அநாதைச் சிறுமிகளும் அவளுடன் இருந்தனர். இறைவனும் வாழ்வு அளித்தார். மறுநாள் சுகமடையத் தொடங்கிவிட்டாள். மருத்துவரும் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். தன்னுடன் வேலை செய்பவருக்கும் காட்டினார். தற்போது ஒணறின் நலமே உள்ளாள். ஆன்மாவையும், உடலையும் குணப்படுத்தும் உண்மையான மருத்துவரை இந்த இந்து மருத்துவர் அறிந்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரைப் போலவே எவ்வளவோ ஆன்மாக்கள் அறியாமையிலும், பாவ இருளிலும் மூழ்கியுள்ளனர். இந்த ஏழை மக்களுக்காக நாம் செபிக்கின்றோம். பதிலாக நாம் அவர்களிடமிருந்து ஏச்சுக்களையும், ஏளனத்தையும் பெறுகின்றோம். சிலவேளைகளில் எம்மைப் பற்றி அவதூறான பாடல்களை இயற்றி எம் யன்னலடியில் வந்திருந்து பாடினர். எமக்கு தமிழ் விளங்கவில்லை. எம் பிள்ளைகள் இதைக் கேட்டுத் துன்புற்றனர். அண்மையில் ஓர் அநாதைச் சிறுமியைத் தபாலகத்திற்கு அனுப்பினேன். பணப் பற்றாக் குறையினால் அங்கு வேலை செய்த ஒருவரிடம் மிகுதிப் பணத்தைக் கட்டுமாறும் பின்பு வந்து தருவதாகவும் அவள் கூறினாள். அதற்கு அவன் 'உனக்கும் உனது சிஸ்ரமாருக்கும் உதவி செய்ய மாட்டேன். அவர்களால்தான் இங்கு வரட்சி ஏற்பட்டுள்ளது'. என்றான். அதற்கு அவள் 'அவ்வாறு கூறாதே. அவர்கள் நன்மை புரிகின்றார்கள். தீயோரின் பாவம்தான் கடவுளின் கோபத்தை வரவழைக்கின்றது'. என்றாள். இதனை வந்து எனக்குக் கூறினாள். 'மரியா' நல்ல பிள்ளை. மேலும் அவள் கூறினாள். அடிக்கடி முகமதியர், இந்துக்களிடமிருந்து பல அவதூறுப் பேச்சுக்களைக் கேட்டாலும் நான் உங்களிடம் சொல்லவில்லை. தற்போது உங்களுக்குக் கூறவேண்டும் என நினைக்கின்றேன். ஏனென்றால் ஆரம்பநிலையில் உள்ளோரை உங்கள் அலுவல்களுக்கு அனுப்பினால் இவ்வாறான பேச்சுக்களால் துன்புறுவர் என்றாள்.

## யாழ்ப்பாணம் 05 ஐப்பசி 1866

ஒரு மாதத்திற்கு மேலாக எம்வீடு வைத்தியசாலை போல் காட்சியளிக்கின்றது. எல்லா வியாதிகளையும் சுகப்படுத்த வேண்டியுள்ளது. ஒரு சிறுமி கைட்றோபிசி (HYDROPSY) என்னும் நோயினால் இறந்தாள். வேறொருவர் மூளைக் காய்ச்சல்,மற்றும் 8பேர் நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டனர். ஒருவர் இறந்துள்ளார். நாம் எந்தச் சூழலில் உள்ளோம் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளலாம். வைத்தியசாலையும் இல்லை. மருத்துவரும் இல்லை என்றே கூறலாம். ஏனென்றால் எம்மருத்துவர் யாழ்ப்பாணத்தில் 'கொலரா' நோய் தொடங்கியுள்ளதால் அங்கு சென்று வருகின்றார். அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டவர் அனுபவமில்லாதவராகையால் நானே சிலவேளை நோயாளிக்குச் செய்ய வேண்டியதைக் கூறிவருகின்றேன். அவரும் அதற்குச் சம்மதிக்கின்றார். நாம் எமது ஆங்கிலப் பிள்ளைகளின் படுக்கையறையை நோயாளிகளின் இல்லமாக்கியுள்ளோம். (Infirmary) மாலையில் வகுப்பறையை படுக்கைக்குச் சிலர் பயன்படுத்துகின்றனர். அவ்வாறே அநாதைப் பிள்ளைகளும் செய்கின்றனர். அறைகள் பக்கத்தே காணப்படுவதால் நோயாளிகள் தனிமைப்படுத்தப்படவில்லை. எனவே எனக்குத் திருப்தியில்லை. நோயும் பரவிக் கொண்டு வருவதால் அருட்தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொஞ்ஜீன் சுகமாக உள்ளவர்களை சில சகோதரிகளுடன் கிராமப் புறத்திற்கு ஓய்வுக்கு அனுப்பும்படி கூறியுள்ளார். இப்பிரிவினால் வரும் கஷ்டங்களை நான் உணர்ந்தேன். அவர்கள் நோய்க் கிருமிகளைக் காவிச் சென்று நோயினால் துன்புற்றால் தொலைவில் மருத்துவ உதவி இல்லாமல் கஷ்டப்படுவார்களே என நான் உணர்ந்தேன். என்றாலும் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவரின் இருதயத்தில் எமது குடும்பத்தை வைத்துத் தினமும் எம் அர்ப்பணத்தைப் புதுப்பித்தோம். அதன் பின் ஒருவரும் தாக்கப்படவில்லை. இறைவன் எம் விசுவாசத்தைப் புடமிட்டார். பல பிள்ளைகள் 12 நாள் காய்ச்சலினால் தாக்கப்பட்டாலும் சில குயினையின் மாத்திரைகளுடன் சுகம் பெற்றனர். தற்போது தொற்றுநோய் நின்றுவிட்டது. எம் நோயுற்ற சிறுமிகள் ஓய்வுக்குச் சென்றுள்ளனர். படிப்படியாகப் பலம் அடைந்து வருகின்றனர். இக்கஷ்டமான வேளையிலும் எமது வழமையான பணிகளைச் செய்தோம். நோயாளிகளைப் பராமரிக்காதபடியால் சகோதரிகள் பாடசாலையில் கற்பித்தனர். ஓர் ஆயத்த கன்னிகையும், ஒரு பெரிய அநாதைப் பிள்ளையும் தியாக சேவையுடன் பணிபுரிந்தனர். வேறு சகோதரிகள் நோயுற்றவர்களுக்குப் பணி புரிய விரும்பியும் அவர்களுக்குரிய வேலை இருந்தபடியால் நான் அவர்களைத் தடுத்தேன். தற்போது சில நாட்களாக யாழ் நகரில் கொலரா நடைபெறுகின்றது. எமது ஏழை மக்கள் அச்சத்தினால் வெளியே வருவதில்லை. எனவே வெளிப் பிள்ளைகள் இங்கு வருவதும் குறைவு. நாம் இறைவனது கரத்தில் சரணடைந்துள்ளோம். எமது செபத்தில் நம்பிக்கை வைக்கின்றோம். அத்துடன் விவேகமாக செய்ய வேண்டியவற்றையும் கவனிக்கின்றோம். முதல் அறிகுறி தோன்றியவுடன் செய்ய வேண்டியவை பற்றி மருத்துரிடம் கேட்டறிந்துள்ளேன். எனவே நோய் வந்தவுடன் செபிப்போம். அத்துடன் அதனுடன் போராடுவோம். எம் மத்தியில் வசிக்கும் இயேசுவில் நம்பிக்கை வைத்துள்ளேன். அவர் எப்போதும் எம்மைப் பாதுகாப்பார்.

சென்ற மாதத்தில் மாதாவின் பிறந்த நாளுக்கான ஆயத்த நவநாளின் இறுதிநாளுக்கு பாட்டுக்கு அழைப்பு வந்தது (O.L.R) அடைக்கலமாதாவின் கோவிலுக்குப் பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர். பீடத்துக்கு அண்மையில் எங்களுக்கும், பிள்ளைகளுக்கும் இடம் ஒதுக்கப் பட்டிருந்தது. ஆலயம் ஒளியினால் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. மரியாயின் பாடல் பாடியபோது சோடினையில் நெருப்புப் பற்றி ஓட்டுக்குச் சென்றுவிட்டது. எல்லோரும் கூச்சலிடத் தொடங்கி, நெருப்பு அணைந்த பின்பே அடங்கினர். எனவே நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. பின்பு புகழ்ச்சிப் பாடலின்போது வெளியே இருந்து கூச்சல் கேட்டது. சக்கிறிஸ்ரியில் தீ பரவிவிட்டது. உடனே கதவுகள், யன்னல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடப்பட்டன. எம் பக்க யன்னல்கள் திறந்திருந்தன. எனவே மக்கள் எம்மை நோக்கி வர நாம் முதலாவதாக யன்னலால் வெளியே வந்தோம். அல்லாவிடில் மக்கள் கூட்டத்தில் நசுக்கப்பட்டிருப்போம். இந்த 2ஆபத்துக்களிலிருந்து தப்பியதற்காக இறைவனுக்கு நன்றி கூறினோம். தீ அணைக்கப்பட்டதாகவும், பெரிய சேதம் இல்லை எனவும் பின்பு அறிந்தோம்.

சென்ற வருடம் போல் இவ்வருடமும் அரச அதிகாரி பாடசாலைப் பரீட்சைகளில் திருப்தி அடைந்தார். எமது பிள்ளைகளின் முன்னேற்றம் பற்றி அயல் வட்டங்களில் புகழ்ந்து கூறினார். ஒரு புரட்டஸ்தாந்து மனிதன், எமது பிள்ளைகளின் தாய் ஒருவரிடம் 'எமது சமயத்திலும், ரோமன் கத்தோலிக்க இளம் பிள்ளைகளின் நிலையம் போன்று ஒன்று நாம் தொடங்க முடியவில்லையே' எனக் கூறினார். அப்போது அப்பெண் 'உண்மைதான்' எமது சமயத்தில் (Nuns) துறவற சகோதரிகள் இல்லையே என்றாள். தியாகம் இல்லாவிடில் அது உண்மையான சமயமல்ல என்பதை இறைவன் அவர்களுக்கு உணர்த்துவாராக.

எமது அநாதை இல்லத்தில் ஒரு வயோதிபப் பெண் வந்திருக்கின்றாள். தளர்ந்த வயதிலும், ஞாபகமின்மையிலும் சமயம் படிப்பதில் மிகவும் ஆர்வமாக இருக்கின்றாள். அண்மையில் திருமுழுக்குப் பெற ஆயத்தமாக இருக்கின்றாள். அருட்தந்தை மொறோய் (Mauroy) அனுப்பிய ஒரு புரட்டஸ்தாந்து பெண்ணுக்கு சமயம் படிப்பித்து திருமுழுக்குப் பெற உதவி செய்தோம். அத்துடன் புனித. இராயப்பர் சபை நவகன்னியர் இல்லத்திற்கு ஒரு ஆயத்த கன்னிகை வந்துள்ளாள்.

இலங்கையிலும், முழு இந்தியாவிலும் வறுமை காணப்படுகின்றது. மழை குறைவாக இருப்பதால் விவசாயிகள் தம் தானியங்களை விதைக்கத் துணியவில்லை. எனவே வருகிற வருடம் மோசமாக இருக்கும். இது இறைவனின் சித்தம் என்றால் அவரின் தூயநாமம் போற்றப்படுவதாக. வரட்சியைப் பற்றிக் கூறும்போது தபாலகத்தில் வேலை செய்யும் மனிதன் தற்போது தன் நடத்தையில் இருந்து எங்கள் மட்டில் தன் நடத்தையில் மனம் மாறிவிட்டான் என்பதைக் கூற விரும்புகின்றேன். அவனைப் பற்றி முன்பு கூறியிருந்தேன். அவனின் மனைவி முழங்காலில் இருந்து மன்னிப்புக் கேட்டாள். மன்னிப்புப் பெறாவிட்டால் எல்லாத் தீமைகளும் தன் வீட்டில் விழும் என்றாள். அத்துடன் தன் கணவனையும் மறுநாள்கூட்டி வருவதாகவும், மன்னிப்புக் கேட்பான் எனவும் கூறினாள். அவ்வாறே மறுநாள் அவன் வந்து மன்னிப்புக் கேட்டபின் தான் மடத்தின் மேலான நண்பனாக இருப்பதாகவும் எமது தேவைகளில் மகிழ்ச்சியோடு பணிபுரிவதாகவும் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம் 19 மார்கழி 1866**

இலங்கை நவகன்னியர் பிரான்ஸ் நவகன்னியருக்கு எழுதிய கடிதம்
அன்பான சகோதரிகளே!

வைகாசி மாதத்தில் உங்கள் கடிதம் கிடைத்தது. பல காரணங்களின் நிமித்தம் பதில் போடத் தாமதித்தோம். வருடத்தின் நடுப்பகுதியில் பாடசாலை அதிகாரி எம்மைச் சந்திக்க வந்தபோது அவருக்குத் திருப்தி அளித்தது. இறைவனுக்கு நன்றி. புரட்டாதி மாதத்தில் ஐரோப்பிய சுதேச பிள்ளைகள் நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டார்கள். படுக்கையறை ஒன்றும், வகுப்பறை ஒன்றும் நோயாளிக்குக் கொடுக்கப்பட்டது. எமது குருக்கள் வேறு முறைகளைக் கையாள வேண்டும் எனக் கூறியபோது எமது தாயார் நவநாள் செய்து செபித்தார். அத்துடன் நோய் பரவாவிடில் நற்கருணை ஆராதனையை ஆடம்பரமாகச் செய்வதாக வாக்களித்தார். அவவின் செபம் கேட்கப்பட்டது. சென்ற வருடத்தில் திருமுழுக்குப் பெற்ற ஒரு பெண்ணை நாம் இழந்தோம். ஆயர் மேய்ப்புப் பணி சம்பந்தமாகச் சென்றிருந்தார். திரும்பி வந்ததும் வாக்களித்தபடி நற்கருணை ஆசீர்வாதம் நிறைவேற்றினர்.

அதேவேளை "கொலரா" நோய் சுதேசிகளைத் தாக்கியது. சில குடும்பங்கள் அழிந்தன. தொற்று நோய் வரும்போது அவர்கள் தம் சுவாமியையே அழைப்பார்கள். ஏனென்றால் இதை மாற்ற முடியாதென நம்புகின்றார்கள். மருத்துவரிடம் சென்றும் பயனில்லை என்று நினைப்பார்கள். எங்கள் குருக்களின் தியாக தன்னலமற்ற பணி, புரட்டஸ்தாந்து, இந்து மக்களால் போற்றப்படுகின்றது. குருக்கள் நோயாளிகளுக்கு தைலம் பூசச் செல்லும்போது வழியில் கண்டால் ஒதுங்கி நின்று வழிவிட்டுக் கொடுப்பார்கள்.

புரட்டஸ்தாந்து போதகர்கள் தம் உண்மை நிலையை இந்த வேளையில் காட்டிவிட்டார்கள். தம்முடைய, தம் உறவினருடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக, துன்புறும் மக்களைக் கைவிட்டு அவர்களின் இறுதிச் சடங்கில் உதவி புரியாது சென்றுவிட்டார்கள். இதனால் அவர்கள் கத்தோலிக்க குருக்களை அழைக்க இறைவன் வழி செய்தார். இதோ, ஒரு நிகழ்ச்சியைக் கூறலாம்.

ஓல்லாந்து தேசத்தைச் சேர்ந்த ஒரு பெரிய குடும்பத்தின் தாய் நோயினால் பீடிக்கப்பட்டு புரட்டஸ்தாந்து போதகரை வரும்படி கேட்டாள். அவர் மறுத்துவிட்டார். 2வது,3வது போதகர்களும் மறுத்துவிட்டனர். ஒரு கத்தோலிக்க அயலவர் இதை அறிந்து, ஒரு கத்தோலிக்க குருவை அழைத்து வரவா? எனக் கேட்டார். குருவானவர் வந்து திருமுழுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து நற்கருணையும் வழங்கினார். இதனால் "மீட்புப் பெற்று நான் எப்போதும் கத்தோலிக்கத்தில் இருப்பேன்" எனவும் "தன் கணவனையும், பிள்ளைகளையும் மனம்மாறச் செய்வேன்" எனவும் கூறினாள்.

ஒரு சுதேச மாணவி சென்ற வருடத்தில் மணம் முடிப்பதற்காக பாடசாலையில் இருந்து விலகினாள். ஆயரிடம் ஒப்புரவு அருட்சாதனம் பெற்றாள். சகல ஆன்மாக்களின் திருநாளுக்கு முதல்நாள் தான் மடத்தை விட்டு விலகியது பற்றி துன்புறுவதாகவும், மடத்தில் பிள்ளைகளைக் காண மகிழ்ச்சி அளிப்பதாகவும் கூறினாள். பின்பு அருட்சகோதரரிடம் (Brother) சாம்பிராணி வாங்கிச் சென்றாள். அவள் இருந்த இடத்திலும் கொலரா பரவி இருந்தது. மக்கள் தூபம், ஆசிநீரில் விசுவாசம் கொண்டவர்கள். வீடு சென்றதும் நோயினால் தாக்கப்பட்டு குருவை அழைத்து வரும்படி கேட்டாள். அவளின் விருப்பப்படி குருவானவர் நற்கருணை வழங்கினார். மறுநாள் அமைதியாக இறந்தாள்.

பேழையில் பாதுகாக்கப்பட்ட நோவாவின் குடும்பம் போல் இறைவன் எம்மைப் பாதுகாத்து வருகின்றார். சென்ற கிழமை எமது வீட்டின் பின்புறத்தில் இருவர் இறந்தனர். உடனே எம் தாயார் இயேசுவின் திரு இருதயத்தில் தம் குடும்பத்தை வைத்து அர்ப்பணச்செபம் சொல்லி வருகின்றார்.

உங்கள் நவகன்னியர் இல்லம் பற்றிப் பேசுவோம். ஒருநாள் விண்ணகத்தில் உங்களைச் சந்திப்போம். 185 நவகன்னியர்கள் ஒன்றித்திருப்பது எவ்வளவு அழகானது. எம் நல்ல பிதா இதனைக் கண்டு மகிழ்வார். இறைவன் இவர்களை ஆசீர்வதித்து திருக்குடும்ப நவகன்னியர் பக்தியிலும், தொகையிலும் பெருக உதவி புரிவாராக. இதனால் மேலும் பலர் கவர்ந்திழுக்கப்படுவர்.

அயர்லாந்து சகோதரிகளும் உங்களுடன் உருவாக்கப்படுகின்றார்கள் என்று அறிகின்றோம். இலங்கை உள்ளங்கள் பிரான்ஸ் சகோதரிகளைப் போன்று அவர்களையும் விரும்புவதாகவும், எம் மத்தியில் வந்து பணியாற்றி இறைவனுக்கு ஆன்மாக்களைச் சேர்த்து அவரை மகிமைப்படுத்தலாம் எனக் கூறிவிடுங்கள்.

எம்முடன் நல்ல திறமையுள்ள 17 வயதுடைய ஒரு பெண் இருக்கின்றாள். உங்கள் செப உதவியை நாடி நிற்கின்றா. ஆயத்த கன்னியர்களின் தொகை அதிகரிக்கின்றது. இவர்களில் சிலர் உடுப்புப் பெறவிருப்பதாகத் தாயார் கூறினார். எம் தியான நாட்கள் முடிவில் இது நடைபெறும். இக்கடிதம் உங்கள் கைக்கு வரும்போது இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்று முடிந்தாலும் உங்கள் செப உதவியை நாடி நிற்கின்றோம். இதன் வழியாக நாம் தியான நாட்களின் பலனை அனுபவிக்கவும், எம் அழைத்தலுக்குத் தகுதியுடையவர்களாக இருக்கவும் முடியும். அன்பு முத்தம் தந்து உங்களிடம் இருந்து விடை பெறுகின்றோம். புதுவருட வாழ்த்துக்களை அளித்து நிற்கின்றோம். குழந்தை இயேசு எம்மை ஆசீர்வதித்து புண்ணியங்களில் வளரச் செபிப்போம். விசேடமாகத் தாழ்மை, பற்றற்ற தன்மையில் வளர்ந்து புது வருடமானது அருள்தரும் காலமாக மிளிர்வதாக.

என்றும் அன்புள்ள சகோதரிகள்
இலங்கை நவகன்னியர் (தி.கு)

### யாழ்ப்பாணம் தை 7 - 1867

என் நல்ல தாயாரே!

இத்தவணையில் பல நல்ல செய்திகளைத் தரலாம் என நம்பியிருந்தேன். ஆனால் கொலரா நோய் வந்து 3மாத காலம் எங்களைச் செயலற்றவர்கள் ஆக்கிவிட்டது. அத்தொற்று நோயின்போது வகுப்புக்களுக்கு சிலரே வந்தனர். அமதி குருக்கள் நோயாளிகளுடன் இருந்ததால் எம் பிள்ளைகளைக் கவனிப்பதும் குறைவாகவே இருந்தது. இராப்பகலாக பணிபுரிந்து வந்தனர். எமக்கும் பணிபுரிய விருப்பம் இருந்தாலும் இவர்களுக்காக தினமும் செபித்து வருகின்றோம். இறைவன் இக்கஷ்டமான பணியை ஆற்றுவதற்கு பலனை அளிப்பதற்காக செபிக்கின்றோம்.

இந்தநாட்கள் எங்கும் கவலையும், துன்பமும் நிறைந்துள்ளது. ஒரே அமைதி மணியோசை கேட்கின்றது. அத்துடன் ஏழைகளின் அழுகுரல்கள், கத்தோலிக்க மக்களின் செபங்கள் ஒருவித சோக ராகத்துடன் உள்ளங்களை ஊடுருவிச் செல்லுகின்றது. தற்போது சிலர் மட்டும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். நோய் வேறு கிராமங்களுக்கும் பரவியுள்ளது. இவ்வேளை இறைவன் எம்மை புதுமையாகக் பாதுகாத்துள்ளார். இயேசுவின் திருஇருதயத்தில் நாம் இருந்தோம். தொற்று நோய் அங்கு வரமுடியவில்லை. ஆயரின் நற்கருணை ஆசீர்வாதம் அங்கு இடம் பெற்றது. நாம் முழு உள்ளத்துடன் நன்றியோடு பாடினோம்.

வறுமையும், உணவுப் பற்றாக்குறையுமே தொற்றுநோயின் காரணமாகும். எம்மிடம் அரிசி, மற்றும் பொருட்கள் உள்ளன. எனவே எல்லோருக்கும் பொதுவான இத்துன்பத்தை உணர்கின்றோம். எமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி செய்வோர் எம்மைக் காத்திருக்கச் செய்கின்றனர். அன்றாடம் இறைபராமரிப்பில் வாழ்கின்றோம். பல உதாரணங்கள் உண்டு. அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுகின்றேன்.

சில நாட்களுக்கு முன் சிஸ். மாறி லிகோரி என்னிடம் வந்து உணவுப் பொருட்கள் வாங்குவதற்கு கொடுத்துவிடப் பணம் கேட்டார். வீட்டில் அரிசி மட்டும் இருந்தது. என்னிடம் ஒரு சதமும் இல்லை. எனவே புனித சூசையிடம் சென்று செபித்தோம். அப்போது ஒருவர் வந்து 14 பிராங் தந்து சென்றார். அப்போது சகோதரி இப்போதைய தேவைக்குப் போதும், மாலையிலும் ஒருவருக்குப் பணம் கொடுக்க வேண்டும். எனவே ஆயருக்குக் கடிதம் எழுதும்படி கூறினார். அதற்கு நான் "அவர் எப்போதும் எனக்கு உதவி செய்கின்றார். ஆனால் இப்போது அவர் ஏழைகளுக்கும் உதவி புரிவதால் பொறுத்திருந்து பார்ப்போம். சில வேளைகளில் புனித சூசை தொடர்ந்தும் உதவி புரியலாம்" என்றேன். எனினும் மாலையில் ஒருவரும் வரவில்லை. எனவே சகோதரி மீண்டும் கூற, நான் கடிதம் எழுத ஆரம்பிக்க, வரவேற்பு வாசலுக்குப் பொறுப்பாயிருக்கும் சகோதரி 300 பிராங் அடங்கிய ஒரு கடிதத்தைக் கொண்டு வந்தார். அது எம்முடன் இருக்கும் ஒரு பிள்ளையின் தந்தை வாங்கிய பணம். தன் வீடு ஒன்றை ஏலத்தில் விட்டிருந்தார். ஆயருக்கும் இதைப் பற்றி எழுதியிருந்தார். நான் எதிர்பாராத வேளை இப்பணம் வந்து எமக்கு உதவியது. எனவே புனித. சூசைக்கு நன்றி கூறினோம். அதே போன்று தேவதாயும் எமக்கு உதவி செய்து வருகின்றார். ஒரு உதாரணம்.

சென்ற வருடம் போல் இவ்வருடமும் புனித சூசையின் பிள்ளைகளின் கைவேலையை விற்பனை செய்ய முயன்றபோது, வெளியாட்கள் குறைவாய் இருந்ததால், அதிகம் விற்பனை இராது என்பதால் விற்பனையைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் முழு நம்பிக்கையுடன், நம்பிக்கை மாதாவிடம் ஒப்படைத்து நவநாட்கள் செய்தோம். "கொலரா" காரணமாக பரிசளிப்பு விழாவும் எளிமையாக நடைபெற்றது. விற்பனையிலும் பார்க்க பிள்ளைகளின் கலைநிகழ்ச்சியைக் கண்டுகளிக்க ஆங்கில மக்கள் விரும்பினர். அத்துடன் எம் வீதியிலும் "கொலரா" நோய் பரவியிருந்தது. எனினும் எம் நம்பிக்கை வீண் போகவில்லை. சென்ற வருடத்திலும் பார்க்க விற்பனை திருப்தி அளித்தது. எனவே பரலோக புனிதர்களுக்கு எம் நன்றியைக் கூறினோம். எமக்குத் தேவை ஏற்படும்போது எம் செபங்களை உத்தரிப்புத்தலத்து ஆன்மாக்களுக்கு ஒப்புக்கொடுக்க இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்கள் இயேசுவிடம் புனித மரியாள், சூசை வழியாகப் பெற்றுத் தருகின்றார்கள்.

எம் அநாதைச் சிறுமிகள் ஒரு தாராள சிந்தையுடைய செயலைச் செய்துள்ளனர். அதாவது எல்லாம் விலையாக இருப்பதால் தம் அன்றாட உணவின் செலவைக் குறைக்க விரும்பினர். எனவே எம் சகோதரி லிகோரிக்குக் கூறாமல் சமையல் செய்பவருடன் சேர்ந்து பெரிய பிள்ளைகள் தம் அரிசியில் ஒரு பகுதியை எடுத்து வைக்கும்படி கூறியுள்ளனர். வழமையாக அரிசி, தேங்காய், சிறிய மீன்கள் சமையலுக்குக் கொடுப்போம். பல காலத்தின் பின்பே இதை அறிந்தோம். அவர்களின் ஒறுத்தலையும், இரகசியம் காப்பாற்றுவதையும் கண்டோம். இவ்வாறான செயல்கள் இங்கு அரிதாகும்.

முன்பு கூறிய வயோதிபப் பெண் திருமுழுக்குப் பெற்று "மாறி" என்னும் பெயர் பெற்றாள். தனது இரண்டு பேரப்பிள்ளைகளை அழைத்து வந்தாள். முழுக் குடும்பத்தையுமே உண்மையான விசுவாசத்துக்கு அழைத்து வருவாள் என நம்புகின்றேன். முதல்நன்மை கொடுக்க விரும்பியும், எம் குருக்கள் "கொலரா" நோயுள்ளவர்களுக்கு உதவுவதால் தற்போது முடியவில்லை.

எம் பரிசளிப்பு விழா ஆடம்பரமாக நடைபெறாவிடினும் இறைவனுக்குகந்த முறையில் நடைபெற்றது. பிரிந்து செல்லுமுன், பரிசு பெற்றோர் ஆயரிடம் சென்று பரிசின் பெறுமதியை (பணம்) ஏற்கும்படியும் தற்போது நகரில் ஏழைகள் பலர் இருப்பதால் அவை உதவும் என்றனர். இதில் பலர் புரட்டஸ்தாந்துப் பிள்ளைகள். ஆயர் பொஞ்ஜீன் இதனை மகிழ்வுடன் ஏற்று இவர்களின் நல்ல செயலுக்கு இறைவன் உதவி செய்வார் என்றார். மறுநாள் இதே பிள்ளைகள் பீடத்திற்கு வந்து தம் முடிகளை எம் சிற்றாலயத்தில் உள்ள இயேசு மரியின் பாதத்தில் வைத்து செபம் செய்து பாட்டுப் பாடினர். மாதாவின் பாடல் முடிந்ததும் தம் வருடப் பலனை ஏழைகள் சார்பாக அளித்ததை நினைந்து மகிழ்ந்து அங்கிருந்து சென்றனர்.

இந்தக் கிழமை ஒரு கைம்பெண் 2பெண்களுடன் வந்தாள். தாய் தன்னைத் திருமுழுக்குக்கு ஆயத்தம் செய்துவிட்டு திரும்பிச் சென்றுவிட்டாள். மூத்த பெண் வரும்போது "கொலரா"வினால் தாக்கப்பட்டிருந்தாள். வந்தபின் தான் எமக்கு அதைப் பற்றித் தெரியும். எனினும் இறைவன் எம்மிடம் ஒப்படைத்தவற்றைத் தள்ளிவிட விரும்பாது எம்மாலியன்ற உதவிகளைச் செய்தோம். தற்போது அவர் ஓய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கின்றார். எம் பிள்ளைகளுக்குத் தொற்றவிடாது இறைவன் காத்துள்ளார்.

இப்பொல்லாத நோயின் பின்பு எம் எதிர்காலம், பாடசாலை பற்றித் தெரியாது. அரச ஆங்கிலப் பாடசாலை ஆசிரியை வேறு இடம் செல்கின்றார். அவரிடமாக இன்னொருவர் வருவார் என்பது சந்தேகம். எல்லாப் புரட்டஸ்தாந்து குடும்பங்களும் தம் பிள்ளைகளை எம்மிடம் ஒப்படைக்கின்றனர். 2அல்லது 3பேர் மட்டும் சிஸ்ரமாரிடம் அனுப்புவதிலும் பார்க்க குசினியில் பிள்ளைகளை விடலாம் எனக் கூறுகின்றனர். இதற்குக் கத்தோலிக்கரே காரணம் என்று புரட்டஸ்தாந்து மக்கள் கூறித் தம் பிள்ளைகளைக் கவனிக்கின்றனர். அவர்கள் எம்மை நம்புகின்றனர். அவர்களின் போதகரும் சுதந்திரமாக, அவர்களை அனுமதிக்கிறார். எங்களுக்கு விடுதி, இடவசதி இருந்தால் இன்னும் பல அநாதைப் பிள்ளைகளைச் சேர்க்கலாம். தற்போது 60 பேருக்குக் கிட்ட இருக்கின்றார்கள்.

**23 தை 1867**

எம் தியான நாட்களைப் பற்றி எழுதலாம் என நினைத்தேன். தியானம் நடைபெறவில்லை. எப்போது நடைபெறும் என்றும் தெரியாது. சில நாட்களாக சிலுவை எம்மை அமுக்குகின்றது. நல்ல இறைவன் போற்றப்பட்டு மகிமைப்படுத்தப்படுவாராக. எமது துன்பங்களைக் கூற முன்பு உங்கள் பிள்ளைகள் சுகமேயுள்ளோம். ஆயரும், குருக்களும் நலமேயுள்ளனர். இறைவன் எம்மைக் காப்பாற்றியதற்கு நன்றி கூறிக் கொண்டிருக்கும்போது ஏழை அநாதைப் பிள்ளைகள் தாக்கப்பட்டனர். 5 நாளில் 14 பிள்ளைகள் இறந்தனர். 8ம் நாள் 1வது பிள்ளை இறந்தார். 14ம் திகதி 8பேரின் அடக்கம் இடம் பெற்றது. ஆழ்ந்த துயரத்தில் இறைவனின் கரத்தில் என்னை ஒப்படைத்தேன். இத்துயரமான நாளில் ஆயர் காலையில் திருப்பலி நிறைவேற்றினார். அத்துடன் நாள் முழுவதும் ஏனைய குருக்களும் எம்முடன் தங்கினர். ஒப்புரவு அருட்சாதனம், நோயில்பூசுதல், உறுதிப்பூசுதல், நற்கருணை என்னும் அருட்சாதனங்களைக் கொடுத்தார். பின் ஆயர் பொஞ்ஜீன் குருவுடன் மறுநாள் வந்து ஒருசில நேரம் எம்முடன் செலவிட்டார். இது என் இதயத்திற்கு ஆறுதலாய் இருந்தது. நோய் தொடங்கியவுடன் சிஸ். லிகோரியுடன் சேர்ந்து பணிகளில் ஈடுபட்டேன். மருத்துவர் எனது பலவீனத்தைப் பார்த்து என்னை விலகும்படி கூறினார். எனவே சிஸ.யோசெவ், சிஸ்.லிகோரியுடன் சேர்ந்து பராமரித்தனர். சில சுதேச ஆயத்த கன்னியரையும் உதவிக்கு விட்டேன். 3ம் நாள் நோய் இன்னும் விரைவாய் பரவிக் கொண்டு வருவதைக் கண்டு சுகதேகிகளான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமிகளை தூரத்தே கொண்டு செல்லும்படி மருத்துவர் பணித்தார். எனவே கட்டிடப் பொருட்கள் இருந்த ஒரு பெரிய வீட்டிற்கு அனுப்பப்பட்டார்கள். ஒரு சுதேச நவகன்னிகையும், அவரின் நண்பியும் மேற்பார்வை செய்ய அவர்களுடன் சென்றனர். மறுநாள் நான் அவ்விடம் சென்றேன். ஆயர் தலைமையில் வேலைகள் நடைபெற்றன. ஆயரும் சேர்ந்து பலகைகள், கற்களை அப்புறப்படுத்தினார். "உண்மை நண்பனை ஆபத்தில் அறியலாம்" என்பது உண்மையே.

எமது பிள்ளைகள் சுத்தகாற்றை சுவாசித்தாலும், கிருமிகளைத் தம்முடன் கொண்டு வந்தனர். எனவே ஒரு மாட்டு வண்டி நோயாளிகளை எம் மடத்திற்கு அழைத்துச் சென்றது. இதைக் கண்டு மருத்துவர் சகோதரிகளையும், ஐரோப்பிய சிறுவர்களையும் தூரச் செல்லும்படி பணித்தார். எங்கு செல்வது? தேவபராமரிப்புத்தான் உதவி செய்ய வேண்டும்.

எம் மடத்திற்கு அண்மையில் ஓர் ஐரோப்பியரின் வீடு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. தோட்டம், முற்றம் இருந்தபடியால் எம் பிள்ளைகளுக்குப் போதுமானது. உடனே (Brother) அருட்சகோதரர் அதை ஒரு மாதத்திற்கு வாடகைக்கு எடுத்தார். சில மணித்தியாலங்களில் அவசியமான பொருட்களை ஏற்றி மாலையில் சென்றோம். சில சகோதரிகளை விட்டு சிலர் அங்கு செல்வது கஷ்டமாக இருந்தது. விசேடமாக எனக்கு அவர்களின் களைப்பில் பங்குபற்ற விரும்பியும் ஆயர் அனுமதி தரவில்லை. எனவே சிஸ்.லிகோரியும், யோசெவ்வும் நோயாளிகளுடன் இருந்தனர். இவர்களுடன் சிஸ். லூயிஸ், டோறா என்னும் அநாதைப் பெண்ணையும் அனுப்பினேன். ஆயத்தக் கன்னியரை, எம் சகோதரிகளை நன்கு கவனிக்கும்படி கூறினேன். சிஸ். லூயிஸ் வீட்டுப் பொறுப்பை ஏற்றார்.

புதிய இடத்திற்கு வந்ததும் நாள் அட்டவணை தயாரித்தேன். வேலைக்கும், செபத்திற்கும் நேரம் ஒதுக்கப்பட்டது. எம் சகோதரிகள், பிள்ளைகள், குருக்கள் (தம் நேரத்தை, இறப்போர் மத்தியில் செலவிடுவோர்) எம் செபத்தில் இடம் பெறுகின்றனர். அருட்தந்தை பெலிசியர் (PELLISSIELR) அவர்களுக்காகச் செபிப்போம். இரு இடங்களின் சுகநலப் பகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதை நல்மனத்துடன், தந்தைக்குரிய பாசத்துடன் செய்து வருகின்றார்.

15ம் திகதி இரவு இரண்டு பேர் இறந்தனர். 3பேர் நோயினால் தாக்கப்பட்டனர். 16ம் திகதி நாம் ஒரு நவநாள் ஆரம்பித்து, புதிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரையும் நோய் பற்றிக் கொள்ளாவிடில் வருடம் முழுவதும் துன்புறுவோருக்காக செபமாலை ஓதுவோம் என வாக்குப்பண்ணினோம். அன்று தொடங்கி நோய் தணியத் தொடங்கியது. எம் மருத்துவர்கள் புரட்டஸ்தாந்தவர்களாயினும், இந்துக்களாயினும் சரி அக்கறை, தியாகத்துடன் செயற்பட்டனர். தினமும் ஒருவர், இருவர் நோயாளிகளைச் சந்திப்பதோடு எம்மையும், பிள்ளைகளையும் சந்தித்துச் செல்வர். தற்போது எல்லாம் நன்றாக நடைபெறுகின்றது. தொற்று நோய் முடிவுற்றது. வழமையாக நோய் நீடிப்பது என இந்த மருத்துவர்கள் கூறுகின்றனர். நாம் தற்போது புதிய வீட்டிலேயே உள்ளோம். சிஸ். லிகோரி களைப்பின் காரணமாக எம்முடனே இருக்கின்றார். வருகிற கிழமை எம் மடத்திற்கு திரும்பி விடுவோம்.

இனிப் பிள்ளைகளுக்காக வருந்துவதை விட்டு இறைவனுக்கு நன்றி கூறுவோம். பெண் பிள்ளைகள் 7பேர் இறப்பதற்கு முன் திருமுழுக்குப் பெற்றனர். 7வயதுப் பிள்ளைகள் ஒப்புரவு அருட்சாதனம் பெற்றனர். பின்பு நோயில்பூசுதல், உறுதிப்பூசுதல் பெற்றனர். பொஞ்ஜீன் குருவுக்கு இது மகிழ்ச்சியைக் கொடுத்தது. அத்துடன் திருப்பாலத்துவசபைப் பணியை நாம் செய்கின்றோம். அவர்கள் தற்போது விண்ணகத்தில் உள்ளனர் என்றார். அத்துடன் இம்மாதத்தில் நாம் குழந்தை இயேசுவின் திருவிழாவைக் கொண்டாடுவதால் இந்த சம்மனசுகள் எமக்காகவும், எம் பணிக்காகவும் செபிப்பார் என்றார். இவர்களுள் எம் "மதலேன்" சென்ற வருடம் அவரை நான் வீதியில் சந்தித்தேன். அவரைப் பற்றித்தான் நான் முன்னைய கடிதத்தில் எழுதியுள்ளேன். "கொலரா"வால் இறந்தவர்களுள், அநாதை மடத்து 2பிள்ளைகளும் அடங்குவர். ஒருவர் தன் தியாக சேவையினால் இறந்தார். தன் நண்பர்களுக்கு இரவும், பகலும் பணிபுரிந்தார். நோயினால் தாக்கப்பட்டதும் ஆயரை அழைத்து மரணிப்பதற்கு பயப்படுவதாகக் கூறினார். ஆயர் ஒப்புரவு அருட்சாதனம், நோயில்பூசுதல் கொடுத்தார். பின்பு அமைதியடைந்து தான் இறப்பில் மகிழ்வதாகக் கூறினார். 2 வருடங்களே திருமுழுக்குப் பெற்ற 17 வயதுடைய பிள்ளை, பெற்றோர் இந்துக்கள். எனவே இறைவன் நல்ல நிலையில் தன்னிடம் அழைத்துக் கொண்டார்.

தொற்று நோய் பரவிக் கொண்டதால் வீட்டுக் கட்டிட வேலைகள் தாமதமாயின. அதிக பெறுமதி வாய்ந்த புதிய வீடு நல்லது. எப்போது நாம் அங்கே செல்வோம்? நிதி பற்றாக் குறையினால் வேலைகள் தடை போடப்பட்டன. பேலிசியர் (Pellissier) குருவானவர்தான் கட்டிட வேலைக்குப் பொறுப்பானவர். மீளவும் வேலை தொடங்குவதாகக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெரிய கடிதத்துடன் மேலும் ஒரு இதழைச் சேர்க்க விரும்புகின்றேன். இன்று காலை ஆயர் இறந்த பிள்ளைக்காகத் திருப்பலி நிறைவேற்றினார். எல்லாப் பிள்ளைகளும் திருவிருந்தில் பங்குபற்றினர். அநாதைச் சிறுவர்களும் அத்துடன் அருட்சகோதரர்களும் அருட்தந்தை பொஞ்ஜினுடைய அநாதைச் சிறுவர்களும் சமூகமளித்தனர். அதேவேளை ஒரு நன்றிக் கடிதம் குருவானவருக்கு எழுதினேன். அவர் எழுதிய ஒரு பதில் கடிதத்தின் ஒரு பகுதியை மொழி பெயர்த்து உங்களுக்கு அனுப்புகின்றேன். அவர் ஆங்கிலத்தில் எனக்கு எழுதியிருந்தார்.

நன்றியுடன் உங்கள் கடிதத்தை ஏற்றுக் கொள்கின்றேன். எங்கள் பணிக்கு உங்கள் சேவைகள்தான் உதவிபுரிகின்றன. நாமும் உங்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். இத்துடன் திருக்குடும்பச்சபை முழுவதற்குமே நன்றி. யாழ்ப்பாணத்தில் திருக்குடும்பசபை மரமானது இரு நல்ல கிளைகளைத் தந்துள்ளது. தொற்று நோய் வந்தபோது இரு சகோதரிகள் நல்ல பணிபுரிந்தனர். 1867ல் திருக்குடும்ப சபை புரிந்த பணியை எம் மக்கள் என்றுமே மறக்க மாட்டார்கள். அருட்தந்தை பொஞ்ஜீன் எழுதிய இக்கடிதம் உங்களுக்கு மகிழ்ச்சி தரும் என நம்புகின்றேன். (திருப்பாலத்துவ சபை 2 நல்ல கிளைகளைத் தந்துள்ளது. இப்பிள்ளைகள் உங்கள் தியாகத்தின் கனிகளாகும்

**22 மாசி - 1867**

"கொலரா" நோய் யாழ்ப்பாணத்தில் இருந்து விலகவில்லை. பலர் இறந்துள்ளனர். இன்று காலை ஒரு மீனவர் இந்நோயால் பீடிக்கப்பட்டார். எமக்குத் திருப்பலி நிறைவேற்றக் குருவானவர் வந்தபோது ஒப்புரவு அருட்சாதனமும் பெற்றார். எம் மடத்துக்கு முன்னால் ஒரு பெரிய வீட்டில் பலர் வசித்தனர். மரண வீடு வரும்போது போடும் கூக்குரலால் இரவில் நாம் நித்திரையில் இருந்து விழிக்கின்றோம்.

இன்று எம்முடன் இருந்த ஒரு பிள்ளைக்குத் திருமணம் செய்ய முயற்சிக்கின்றேன். கிறிஸ்தவ குடும்பங்கள் அதிகரிப்பதற்கு இது தேவை. இப்பிள்ளையின் பெற்றோர் இந்துக்கள். ஒரு கிறிஸ்தவ இளைஞனுக்கு மணம் முடித்து வைக்க விரும்புகின்றோம். இங்கு ஐரோப்பாவைப் போலல்ல. திருமணநாள் வரையும் பெண் தன் எதிர்கால மணமகனோடு பேசமாட்டார். இறைவனுடைய மகிமைக்காக இப்பணிகளைச் செய்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 சித்திரை 1867

நாம் இவ்வருடத்தை பல இன்னல்களிடையே இறை மகிமைக்காகத் தொடங்கினோம். குழந்தை இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த மாதத்திலே இறைவன் நம் யாழ் - பாலரின் தோட்டத்திலே சில பூக்களைப் பறித்துச் சென்றுவிட்டார். இப்பூக்கள் இன்று பரலோக தோட்டத்தில் பயிரிடப்பட்டு அங்கு நல்ல கனிகளைப் பயிரிட்டவர்களுக்குப் பெற்றுத் தருவர். முன்பு பெரிய கடிதத்தில் எல்லாம் கூறியபடியால் சிலவற்றை மட்டும் சேர்த்துக் கொள்கின்றேன். எம் பிள்ளைகள் துன்பமான வேளைகளில் நடந்து கொண்ட விதம் ஆறுதல் தரக்கூடியது. தம் கடிதங்களில் பெற்றோருக்கு விசுவாசம் நிறைந்த வார்தைகளை எழுதினார்கள். இறந்த பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்பட்டாலும் இந்துக்களாக இருந்தவர்கள் தற்போது வானதூதராக உள்ளனரன்றோ?

உங்கள் பிள்ளைகளின் தியாக சேவையை மௌனத்தில் விட்டுச் செல்ல முடியாது. மிகவும் பாராட்டுதற்குரியதாக இருந்தது. பிள்ளைகளைத் தாக்கிய 'கொலரா' மிகவும் கொடியது. 'நச்சுத் தன்மைமிக்கது' என்று மருத்துவர் சொன்னார். எனினும் நமது சகோதரிகள் நோயாளிகளை நன்கு கவனித்தனர். மருத்துவர் இவர்களின் முயற்சிகளைப் பாராட்டியதோடு "உங்களை கவனியுங்கள். நோய் தொற்றாதிருக்க தூரச் செல்லுங்கள்" என்றார். முதன்முறை எம் சகோதரிகளுக்கும் சாட்சியாக இருந்தார். குருக்களும், சகோதரிகளும் ஒரே ஊற்றில் இயற்கைக்கு மேலான வரங்களைப் பெறுவதை மருத்துவர் உணரவில்லை. ஒருநாள் இவர்கள் தம் கண்ணைத் திறந்து உண்மைகளைக் காணச் செபிக்கின்றோம். இவர்களில் ஒருவர் இந்து ஆயினும் சேவைமனப்பான்மையுள்ளவர்.

"கொலரா" நோய் தணிய எம் சகோதரி லிகோரி நெருப்புக் காய்ச்சலினால் வருந்தினார். அப்போது சிஸ்.மேரி யோசவ் அவரை பராமரித்தார். ஒருமாதம் கழித்து பாடசாலை ஆரம்பமாகியும், மாணவர் வரவு குறைந்திருந்தது. கொலரா நோயினால் பயந்து பெற்றோர் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பவில்லை. அரசாங்கப் பாடசாலைகளிலும் சில மாணவர்களே காணப்பட்டனர். எம்மிடம் கத்தோலிக்க மாணவர்களிலும் பார்க்க புரட்டஸ்தாந்து மாணவர்களே அதிகம். இங்கே பெண் கல்வி குறைவு. புத்தகம் வாங்கிக் கொடுக்க மாட்டார்கள். சிலர் மட்டும் கல்வியின் நன்மையைப் புரிந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மாதங்களுக்கு முன்னர், புனித சூசையின் தொழிலகத்திலிருந்த பிள்ளை தன் வீட்டிற்குச் சென்றார். 'கெற்றி' என்னும் இப்பெண் தி.கு. பிள்ளைகள் கூட்டத்திலும் சேர்ந்திருந்தாள். மடத்தை விட்டுக் கொழும்பு சென்று அங்கு தன் சகோதரியுடன் சில மாதங்கள் தங்கியிருந்தாள். இந்தச் சகோதரி புரட்டஸ்தாந்து ஆளை மணம் செய்திருந்ததால் அவர்களின் மகள் அங்கிலிக்கன் சபையில் திருமுழுக்குப் பெற்றிருந்தாள். எனவே கெற்றி இதைப் பற்றித் துன்பப்பட்டாள். தனக்காகச் செபிக்கும்படி எழுதியிருந்தாள். இக்காலத்தின் பின் அவள் சகோதரிக்கு வேறொரு பெண் பிள்ளை பிறந்தது. 'கெற்றி'யின் உதவியால் குழந்தைக்கு திருமுழுக்கு அருளப்பட்டு அவளே ஞானத் தாயானாள். முதற் பிள்ளையும் கத்தோலிக்க மறைக்கு வந்தாள். தாயும் தன் கடமைகளை அனுசரிக்கின்றாள். தற்போது ஏனைய சகோதரிகளின் மனமாற்றத்திற்கு உதவி செய்கின்றாள். இறைவன் இவளை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக.

எம் அநாதைச் சிறுமிகளும், ஆயத்த கன்னியரும் தம் தியானத்தை நல்ல முறையில் செய்தனர். இறுதி நாளில் ஒரு ஆங்கிலச் சிறுமி உட்பட 8 பேர் முதல்நன்மை பெற்றனர். ஆயர் தலைமையில் இது நடைபெற்றது. அதே நாளில் மாசி 3ம் திகதி நற்கருணை எழுந்தேற்றம் செய்து மாலையில் திருமுழுக்கு அர்ப்பணத்தையும் புதுப்பித்து உத்தரியமும் பெற்றுக் கொண்டனர்.

எம் நல்ல இறைவன் சில வேளைகளில் வாழ்வின் களைப்பை நீக்க சற்று ஓய்வு தருகின்றார். புனித சூசையின் திருவிழாவில் ஓய்வு எடுத்தோம். எம் குடும்ப விழாவைக் கொண்டாடினோம். அத்துடன் எம் சபை முதல்வர் விழாவுமாகும். 7சிறுமிகள் திருமுழுக்குப் பெற்றனர். 12ஆன்மாக்கள் சாத்தான் பிடியில் இருந்து மீட்கப்பட்டனர். 8பேர் மரணப் படுக்கையில் திருமுழுக்குப் பெற்றனர். ஒரு பிள்ளையே தற்போது உயிருடன் இருக்கின்றாள். ஆயரின் சிற்றாலயத்தில் திருமுழுக்கு நடைபெற்றது. அருட்தந்தை பொஞ்ஜீன் நல்ல வார்த்தைகளைப் பரிமாறினார். நற்கருணை ஆசீருடன் விழா முடிந்தது. சிஸ். ஸ்ரனிஸ்லாஸ் ஆங்கிலச் சிறுமிகள் பாடினார்கள். சுதேசிகள் இசைக் கருவியுடன் தமிழில் பாடினர்.

மடத்துக்கு வரும்போது திருமுழுக்குப் பெற்ற சிறுமிகள் எமக்காகக் காத்திருந்து நன்றி கூறினர். நான் அவர்களைக் கோவிலுக்கு அழைத்துச் சென்று, அவர்களுக்கு உதவிய ஒவ்வொருவருக்கும் செபிக்கும்படி கூறினேன். திரேசியா என்னும் 8வயதுப் பிள்ளையை என் கருத்துக்களுக்காகச் செபிக்கும்படி சொன்னேன். அவளும் உரத்த குரலில் செபித்தாள். நிச்சயமாக இறைவன் இதைக் கேட்டிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித சூசையப்பரின் திருநாளில் இவை எமக்கு மிகவும் மகிழ்ச்சியாக அமைந்தது.

இவ்வருடம் பங்குனி மாதத்தில் புனித. சூசையப்பரிடம் அதிகம் செபித்தோம். எமது சிற்றாலயத்திலும். வரவேற்பறையிலும் இரு பீடங்கள் அவருக்கு வைத்தோம். அவ்வழியே செல்வோர் புதிய கட்டிடம் விரைவில் முடிவதற்கு ஒரு சிறிய செபம் சொல்ல முடியும். வருகிற வருடம் அங்கு வசிக்க முடியும் என நம்புகின்றோம்.

ஆயத்த கன்னியருக்கு எம் வீட்டின் முன்னால் கிடுகினால் வேய்ந்து ஒரு கட்டிடம் அமைத்துள்ளோம். எம் தமிழ் ஆசிரியர் கொலராவினால் இறந்துள்ளார். மிகவும் நல்லவர். இந்த ஆசிரியர் வெளியே புரட்டஸ்தாந்து ஆகவும், மனதிலே கத்தோலிக்கராகவும் இருந்தார். எமது சமயத்தைப் பற்றி அதிகம் படித்தார். எனினும் மனித மரியாதைக்காக எமது சமயத்தில் சேரப் பயந்தார். அவரின் பெற்றோர், நண்பர்கள் எல்லோரும் புரட்டஸ்தாந்தவர்கள். அவருடைய மரணத்துக்கு முன்பு "இறைவன் நீதி முன்னிலையில் புரட்டஸ்தாந்" என்னும் புத்தகத்தை வாசிக்கக் கொடுத்தேன். வாசித்தார். பின்பு அருட்தந்தை பொஞ்ஜீனுடன் கதைத்தார். பின்பு அவர் கொலராவினால் தாக்கப்பட்டுக் குருவானவர் அங்கு செல்லுமுன் இறந்துவிட்டார். அவரின் மனைவியும் அவர் இறக்குமுன் குருவானவரைக் கேட்டதாகவும், தான் உடனே செல்லவில்லை எனவும் கூறினாள். இறைவனின் இரக்கம் அவர்களுடன் இருப்பதாக.

நாம் ஒரு பிள்ளையை மணமுடித்து வைத்தோம் என்று கடைசியாக கடிதத்தில் எழுதியிருந்தோம். ஆயர் இல்லத்தில் வேலை செய்த மனிதன் தனக்கு திருமணத்துக்கான ஒரு பெண்ணை தேடித் தரும்படி கேட்டான். நானும் அவனது சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் தேர்வு செய்தேன். பெண்ணின் பெற்றோரிடமிருந்து சிறு சீதனத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அவளின் பெற்றோரிடம் தொடர்பு கொண்டபோது அவர்களிடம் ஒன்றும் இருக்கவில்லை. தகப்பனுக்குக் கவலை அதிகரித்தது. என்னைப் பார்த்து நல்ல பாதையைக் காட்டியது நீங்கள்தான். எனவே என் மகள் உங்கள் சொந்தமாகின்றாள் என்று கூறினான். திருமணம் அமைதியாக நடைபெற்றது. திருமணம் முடிந்ததும் என்னைச் சந்திக்க வந்தனர். என் பாதத்தில் முழங்காலில் இருந்து நல்ல கிறிஸ்தவர்களாக வாழ்வதாக வாக்களித்தனர். இத்திருமணம் மக்களுக்கு நல்ல மதிப்பைக் கொடுத்தது. முன்பு இம்மடத்தில் உள்ள பிள்ளைகள் வளர்ந்த பின் என்ன செய்வார்கள் என்ற கேள்விகள் எழுந்தன. எமது பிரான்சிஸ்கா இடைக்கிடையில் வந்து எம்மைச் சந்தித்துச் செல்கின்றார். எமது ஆங்கிலச் சிறுமிகள் தற்போது ஞானொடுக்கம் செய்கின்றார்கள். ஆயத்த கன்னியர் எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புக்களில் புரட்டஸ்தாந்துப் பிள்ளைகள் தொகையில் கூடியபடியால் அவர்களுக்கு நடைபெறுகின்றது.

## 28 சித்திரை 1867

சில நாட்களுக்கு முன்பு எமது நல்ல ஆயர் யாழிலிருந்து புறப்பட்டு விட்டார். வைகாசி 7ம் திகதி இலங்கையை விட்டுச் செல்வார். அவர் போகுமுன் அவரிடம் ஒரு சிறிய கடிதம் கொடுத்துவிடுவேன். தற்போது எம்முடன் மூன்று நவகன்னியர் உள்ளனர். அவர்களின் போட்டோக்களை அனுப்பிவிடுகின்றேன்.

எம் நவகன்னியர் இல்லத்தில் மூன்று நவகன்னியரும் 07 ஆயத்த கன்னியரும் உள்ளனர். ஆங்கில நவகன்னியர் இல்லத்தையும் தொடங்க இருக்கின்றேன். 2இளம்பெண்கள் உள்ளனர். ஒரு பெண் பெற்றோரின் சம்மதம் பெறமுடியாது நவநாள் செய்கின்றாள். ஏழைக் கத்தோலிக்கருக்கு அபாயமும் கூட. கிறிஸ்துவின் பத்தினிகள் சிலர் இருப்பின் எமக்கு மகிழ்ச்சி உண்டாகும். ஆயருடன் சென்ற அருட்தந்தை பொஞ்ஜீன் தன்னுடன் 3மாணவர்களைக் குருத்துவத்திற்கு ஆயத்தப்படுத்துவதற்கு பிரான்ஸ்சிற்கு அழைத்துச் சென்றுள்ளார். சிஸ்.லூயிஸ் அவர்களின் சகோதரன் தனது படிப்பை முடிப்பதற்கு ஒட்டுன் (Autun) சென்றுள்ளார்.

## 6ஆனி - 1867

எனது கடிதம் உங்களுக்கு பிந்தியே கிடைத்திருக்குமென பயப்படுகின்றேன். ஆயரிடம் கடிதம் கொடுத்திருந்தேன். அவருடன் வேறு ஆயர்களும் சென்றதால் அவர் நேரடியாக உரோமாபுரிக்குச் சென்றிருப்பார். குருமுதல்வரும் நாமும் சுகமாக இருக்கின்றோம். குருமுதல்வர் தான் புதுமையாகக் குணமடைந்ததாகக் கருதுகின்றார். எனினும் பல காலம் அவர் பணி செய்ய முடியுமோ தெரியாது. ஆயர் சென்றபின் பொறுப்பேற்ற ‘லெபஸ்கோ’(Lebescou) குருவானவரும் அக்கறை, கரிசனையுடன் எம்மைக் கவனிக்கின்றார். அவ்வாறே இலங்கைக் குருக்களும் தந்தைக்குரிய தியாகத்தைக் காட்டி வருகின்றனர்.

எனது கடைசிக் கடித்தில் ஒரு ஆயத்த கன்னிகை பெற்றோரின் சம்மதம் கிடைக்காதது பற்றி எழுதியிருந்தேன். ஆயர் கொழும்பு சென்றபோது அவளின் தாயைச் சந்தித்தார். பெற்றோர் சம்மதம் கொடுத்துள்ளனர். எனவே யோசேப்பின் வைகாசி முதலாம் திகதி நவகன்னியாகச் சேரமுடியும் என்று எழுதியிருந்தார். இக்கடிதம் மாதாவின் மாத முடிவில் எனக்குக் கிடைத்தது. அவளின் அழைத்தல் வாழ்வுக்கு தாய் எதிர்ப்பில்லை என்றும், தங்களிடம் வந்து செல்லும்படியும் அல்லாவிடில் தாயும், சகோதரரும் எழுதமாட்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், மடத்தில் இருக்கும் இரு சகோதரிகளும் வந்துவிடுவார்கள் என்றும் எழுதியிருந்தது. இது துன்பத்தைத் தந்தாலும் ஊக்கம் தணியாமல் யோசேப்பின் மாதாவின் பாதத்தில் ஒரு பூக்கொத்தை காணிக்கையாக வைத்தாள். மாதாவும் இவள் மன்றாட்டைக் கேட்டருளினார். அன்று மாலை ஒரு சகோதரன் கடிதம் அனுப்பியிருந்தான். அதில் கொழும்புக்கு வரத் தேவையில்லை என்றும் ஒரு சகோதரிக்கு சங்கீதம் பழக்கிவிடும்படியும் எழுதியிருந்தது. எனவே போடிங்கிலிருந்து பிள்ளைகளை எடுக்கமாட்டார்கள் என்பதும் உறுதியானது. யோசேப்பின் நவகன்னிகை இல்லத்தில் படிக்கின்றாள். சிஸ். மேரி கெலனின் பாடத்திலும் பங்குபற்றுகின்றாள். எலிசபேத் நன்றாக இருக்கின்றாள். டோறாவும் அவவுடன் நவகன்னிகை இல்லத்தில் சேர்க்கப்படலாம்.

புதிய கல்வி அதிகாரியின் (Inspector) சந்திப்பு நடைபெற்றது. ஏழைப் பிள்ளைகளின் மத்தியில் பயத்தை ஏற்படுத்தினார். எட்டு, பத்து கணக்குகள் கொடுத்து, ஒவ்வொருவரையும் தனித்தனியாக இருத்தி மேற்பார்வை செய்தார். அப்படியிருந்தும் பிள்ளைகள் நன்றாகச் செய்தனர். எனவே பரிசுகள் அனுப்புவதாகக் கூறிச் சென்றார். இவர் புரட்டஸ்தாந்து மதத்தவர். எமது பணிகளுக்கு இவர் உதவி செய்ய முடியும். ஒரு 14வயதுப் பிள்ளை செய்த கணக்கு இலங்கையில் ஒருவரும் செய்ய முடியாது என்றார். அத்துடன் கட்டுரை, உச்சரிப்பு, வாசிப்பு எல்லாம் நன்றாக இருந்தது எனப் பாராட்டினார்.

அரசாங்க ஆசிரியை மாற்றலாகிச் சென்றார். அவரின் இடத்திற்கு ஒரு போதகரின் மனைவி வரவுள்ளார். இறைவனிடம் மன்றாடுகின்றோம். போதகரின் மருமகளை என்னிடம் அழைத்து வரப் பெற்றோர் விரும்பாது ஒரு கத்தோலிக்கருடன் அனுப்பி வைத்தனர்.

### 3 ஆடி 1867

இத்தவணை பல நிகழ்ச்சிகளால் நிறைந்துள்ளது. சில துன்பம் தருவன. இறைபராமரிப்பு எமக்குத் தேவையானதை எம்மிலும் பார்க்க அதிகம் அறிந்திருப்பதால், அவர் எமக்கு அனுப்புவதற்கு இறைவனைப் புகழ்வோம்.

எனது கடைசிக் கடிதத்தில் ஆங்கிலச் சிறுமிகள் தியானம் செய்வதாக எழுதியிருந்தேன். இத்தியானம் நல்ல முறையில் இடம் பெற்றுப் பலனைத் தந்தது. எம் பிள்ளைகளின் பக்தி நிலையை உறுதி செய்தது. அத்துடன் ஒரு பிள்ளையின் மனமாற்றத்திற்கு உதவி செய்தது. அவளின் அழைத்தலை வளரச் செய்தது. இம்மனமாற்றம் ஒரு அருளின் புதுமை என நாம் நம்புகின்றோம். இது புனித.சூசையின் பரிந்துரையால்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்திருக்க வேண்டும். (Betzy) பெற்சி என்பவர் 19 வயதுள்ள ஓர் அயர்லாந்துப் பெண் போடிங்கில் இருந்த பின் புனித.சூசையின் தொழிலகத்தில் சேர்ந்தாள். அழைத்தல் வாழ்வில் ஒரு பற்றும் இருக்கவில்லை. பலமுறை மடத்தை விட்டு வெளியேற விரும்பியும் ஏதோ ஒரு தடை வந்து மறித்துவிட்டது. உலக ஆசையால் கவரப்பட்டாள். எமது அன்பு, கவனம் இவளைத் தொடவில்லை. புரட்டஸ்தாந்து மக்களும் எம்மை அறியாது இவளுக்கு உதவி செய்தனர். பெற்சி இவர்களுக்கு செவிசாய்த்து எங்களுக்குத் துன்பத்தைத் தந்தாள். எனினும் விசுவாசம் உடையவளாக விளங்கினாள். எம்மைவிட்டு பிரியும் நேரமும் நெருங்கியது. அப்போது எம் செபத்தை அதிகரித்தோம். இயேசுவிடம் இவளின் ஆன்மாவைக் காப்பாற்ற வேண்டினோம். புனித.சூசையின் மாதம் அண்மித்தது. இறைவனிடம் செல்லும் பாதையைக் காட்டும்படி ஒரு துண்டுக் கடதாசியில் எழுதி புனித.சூசையின் பாதத்தில் வைத்தாள். சில நாட்களின் பின்பு அவளில் ஒரு மாற்றம். ஒருவரிடமும் சொல்லவில்லை. இறையருள் அவள் இதயத்தில் வேலை செய்தது. தியான நாட்களின்போது தனக்குள்ளே நடப்பதை என்னுடன் பகிர்ந்து கொண்டாள். அத்துடன் பல காலமாக இறைகுரலைக் கேட்பதாகவும், இறைஅழைத்தலென உணர்ந்து காதை மூடியதாகவும், தற்போது தான் இயேசுவை நேசிக்க விரும்புவதாகவும் கூறினாள். மாலையில் தன் நகைப் பெட்டியைத் தந்தாள். அதற்குப் பதிலாக நான் ஒரு சிலுவையையும், மாதாவின் படத்தையும் கொடுத்தேன். அத்துடன் அவள் நிலையாக உள்ளாள். ஒவ்வொரு ஞாயிறு திருப்பலியிலும் திருவிருந்திலும் பங்குபற்றுகின்றாள். தன் பிழைகளைத் திருத்துகின்றாள். திருக்குடும்பத்தின் ஒரு நல்ல பிள்ளையாகத் திகழ்வாள் என நம்புகின்றேன்.

தியான நாட்களின் முடிவில் எம் ஆங்கிலப் பிள்ளைகளிடம் திருத்தந்தையின் புனித. இராயப்பர் சபைநிதிக்கு உதவ ஒரு காணிக்கை அளிக்க கேட்டோம். நான் கூறியது போல் கத்தோலிக்கர் பணக்காரர் இல்லாவிடினும் நல்ல உள்ளத்துடன் பதிலிறுத்தனர். ஒரு பிள்ளை பணம் இல்லையென்று, தன் மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தாள். அதேபோன்று தம் கை, காதில் இருந்த நகைகளைக் கழற்றியதைப் பார்க்க எம் உணர்வைத் தொட்டது. எனவே பிரச்சினை இல்லாத பொருட்களைத் தரும்படி கேட்டோம். 8வயதுச் சிறுமி தன் தாயின் அனுமதியுடன் தன் காதிலிருந்த தோடுகளைக் கொண்டு வந்தாள். அது அவருக்கு அழகாக இருந்த நகை. மோதிரம் கொடுத்த பிள்ளை ஒரு சிறிய பொன் சிலுவையையும் கொண்டு வந்தாள். அதுமட்டுமே அவளிடம் இருந்தது. எல்லோரும் தம் பணத்தைச் சேர்த்து 400 பிராங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தனர். ஓர் ஏழைச் சிறுமி என்னிடம் கண்ணீருடன் வந்து தன்னிடம் ஒன்றுமில்லையென்றும், நாளைய திருவிருந்தை பாப்புவின் கருத்துக்களுக்கு ஒப்புக்கொடுப்பதாகவும் கூறினாள்.

ஆங்கில சிறுமிகளின் நல்ல செயல் பற்றி அநாதைச் சிறுமிகள் அறிந்து கொண்டனர். இச்செயல் அவர்களையும் தொட்டது. அமைதியாக அவர்களும் பாப்புவுக்கு நிதி சேர்த்தனர். ஒரு பணம் இல்லாத பிள்ளை தன் மயிரை வெட்டி விற்றார். மூன்று பிராங் 30 சதம் சேகரித்து ஒரு கூடையில் வைத்துத் தந்தாள். ஏழை விதவையின் காணிக்கையை ஏற்றுக் கொண்ட இறைவன் இதையும் ஏற்றுக் கொள்வார். ஆயரிடம் இக்காணிக்கையை வெவ்வேறாக வைத்து அத்துடன் ஒரு கடிதமும் அனுப்பினார்கள்.

தியான இறுதிநாள் ஆடம்பரமாக முடிவுற்றது. காலை உணவுக்கு வெளிப் பிள்ளைகளையும் அழைத்தோம். அவர்களில் பணவசதியுடைய தாய்மார் செலவை ஏற்பதாக கூறினர். ஒரு வகுப்பறையை சாப்பாட்டறையாக மாற்றினர். இரு மேசைகளை ஆயத்தப்படுத்தினர். சுதேச பிள்ளைகளில் ஒரு பிள்ளை தாழ்வு மனப்பான்மையால் ஒதுங்கி நின்றபோது ஏனையோர் அவளை அரவணைத்து நாம் எல்லோரும் சகோதரிகள் அல்லவா? என்ற கிறிஸ்தவ அன்பைக் காட்டினர். ஆயர் காலை உணவை ஆசீர்வதித்தார். சாப்பாட்டின் பின்பு ஆயர் சிற்றாலயத்திற்குள் சென்று ஒரு பிள்ளைக்குத் திருக்குடும்ப வரவணிக்கம் அளித்தார். 7பேருக்கு நீல உத்தரியம் வழங்கப்பட்டது. பின்பு தியான நாட்களின் நினைவாக சில பக்திப் பொருட்கள் வழங்கப்பட்டது. எல்லோரும் மகிழ்வுற்றனர்.

மாலையில் எம் தியான நாட்களை ஆரம்பித்தோம். கொலரா நோய் காரணமாகப் பின்போட்டோம். ஆயரும், பொஞ்ஜீன் சுவாமியும் நான்கு நாட்கள் போதித்தனர். நல்ல பயன்தரக் கூடுமாக அமைந்தது. தியான இறுதி நாளில் ஆயரும், நான்கு குருக்களும் திருப்பலி நிறைவேற்றி 14 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் கொடுத்தனர். 3 ஆயத்த கன்னியர்கள் சகோதரி. மைக்கல், கபிரியேல், ஏஞ்சல் என்னும் பெயர்களுடன் துறவற உடை அணிந்தனர். திருச்சடங்குகள் தமிழில் நடைபெற்றன. பிள்ளைகள் மகிழ்ச்சியடைந்தனர். **இவர்களே முதல் சுதேச துறவிகள் ஆவர்.** இறைவன் இவர்களையும், இச்சபையையும் ஆசீர்வதிப்பாராக. இப்பரிசுத்தமான நாள் நல்ல முறையில் முடிவுற்றது. எம் சிற்றாலயத்தில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டிருந்தது. பலர் அவர் பாதத்தில் நாள் முழுவதும் அமர்ந்திருந்து செபித்து நன்மை பெற்றனர். எமது உள்ளம் 'மார்த்தியாக்கை' நாடிச் சென்றது. வருடாந்த தியானம் செய்த சகோதரிகள் தம் தீர்மானங்களை வரப்பிரசாதமாதாவின் பாதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து ஆறுதல் அடைவதை நினைவு கூர்ந்தோம். மதிய உணவின்போது இதைப் பற்றிச் சல்லாபித்தோம். பின்னர் எமது அதிசிரேஷ்ட குருமுதல்வர் எழுதிய கடிதத்தைத் தேவபராமரிப்பு எமக்கு கொண்டு வந்தது. அக்கடிதத்தில் நல்ல அறிவுரைகளும், ஒவ்வொருவருக்கும் தம் கைப்பட எழுதியவைகளையும் கண்டு மகிழ்ந்தோம். எம் நல்ல குரு எம் மத்தியில் இருப்பதுபோல் உணர்ந்தோம்.

அருள்களைப் பெற்றபின் இறைவன் தம் துன்பக் கலசத்தில் பருக எம்மை அழைத்தார். சில நாட்களின் பின் ஆயர் தன் பொஞ்ஜின் குருவுடன் எம்மை விட்டுச் சென்றார். எமது தலைமைக்குரு ஆயர் இல்லாதபோது உதவி செய்பவர் நோய்வாய்ப்பட்டார். எனவே ஆயர் எம் பணிகளுக்கு லெபஸ்கு(Lebescow) தந்தையை விட்டுச் சென்றார். அவரைப் பற்றி அதிகம் தெரியாவிடினும் நல்ல திறமைகள் படைத்தவராக இருந்தார். ஆனி 17ம் திகதி இந்தக் குரு மூன்று நாட்கள் கடும் நோயுற்று ஒரு மறை சாட்சியைப் போல் துன்பங்களைத் தாங்கி மறுஉலகை அடைந்துள்ளார். தற்போது நாம் துன்ப சூழலில் இருப்பதால் எதுவும் எழுத முடியவில்லை. சுற்றுமடலில் இந்த மறைத்தூதரைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள முடியும். ஒரு பிள்ளையின் தந்தை எனக்கு எழுதிய கடிதத்தில் "வானம் ஒரு புனிதருக்கு முடி சூட்டியுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

Rev.Superior தற்போது குணமடைந்து வருகின்றார். அவரை நாம் வைத்திருக்க விரும்புகின்றோம். ஆனால் அவர் தம் பணிகளைத் தொடர்ந்து செய்ய முடியாது. ஒப்புரவு அருட்சாதனம் பெற உதவியாக இருக்கின்றார். மற்றைய குருக்கள் வேலைப் பளுவினால் களைப்படைந்துள்ளனர்.

மாதாவின் மாதத்தில் முதல் பூவாக பழைய போடிங் மாணவியை ஒரு புதிய ஆயத்த காணிக்கையாக ஒப்புக்கொடுத்தோம். சென்ற வருடத்தைப் போல் மாதாவுக்குப் பூ வைத்த பிள்ளைகளுள் 15 வயதுடைய ஒரு புரட்டஸ்தாந்துப் பெண்ணும் இணைந்திருந்தாள். பரலோக அன்னை ஒருநாள் அப்பெண் நம் திருச்சபையில் சேர அருள்புரிவாராக. மாதாவின் பாதத்தில் மாதம் முழுவதும் விளக்கு வைக்க விரும்புவதாக சக்கிறிஸ்ரி வேலை செய்யும் சிஸ்ரர் பிள்ளைகளுக்குச் சொன்னார். இதை கேட்ட ஒரு பிள்ளை பணம் சேகரிக்க என்னிடம் உத்தரவு கேட்டாள். ஆங்கில வகுப்புப் பிள்ளைகள், கத்தோலிக்கர், புரட்டஸ்தாந்துப் பிள்ளைகள் எல்லோரும் பணம் சேகரித்துக் கொடுத்தனர். மிகுதிப் பணத்தில் திருஇருதயப் பீடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரம் செய்யப்பட்டது. புரட்டஸ்தாந்துப் பிள்ளைகளும் மாதாவுக்குப் பூ வைத்து இறுதியில் முடிசூட்ட விரும்பினர். எல்லோரும் பயபக்தியுடன் காணப்பட்டனர். ஒரு பிள்ளை பாட்டு பிரதியும் கேட்டுப் பாடினார்கள்.

இந்த ஆசீர்வதிக்கப்பட்ட மாதத்திலே பாடசாலை அதிகாரி (Inspector) சந்திப்புக்கு வந்திருந்ததாக முன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அவரின் அறிக்கை நன்றாகவும், எமது பணியை ஊக்குவிப்பதாகவும் அமைந்தது. சுதேச அநாதைப் பிள்ளைகளுக்கு உதவி செய்வதாகவும், பணிகள் திறமை வாய்ந்ததாக இருப்பதாகவும் எழுதியிருந்தார். அறிக்கையின் முடிவில் எழுதியிருந்ததை அவ்வாறே தருகின்றேன். யாழ் வாழும் மக்கள் இந்த பெண்களுக்கு நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும். அரசாங்க பாடசாலைகள் இந்த நிறுவனங்கள் போல் என்றுமே இருக்க முடியாது. கத்தோலிக்கர் மட்டும்தான் இத்தியாக வேலைகளைச் செய்ய முடியுமென அவர்கள் நம்புகின்றனர். அவர்களுக்குக் காரணம் தெரியாது. நற்கருணைப் பிரசன்னம் மூலம் நாம் பெறும் உற்சாகம் எம் கஷ்டங்களில் எம்மைத் தாங்குகின்றது. மாதாவின் தாய்மை எமக்கு ஆறுதல் தருகின்றது.

இறைவனடி சேர்ந்த குருவானவர் எம் ஏழைப் பிள்ளைகளுக்கு ஒரு நாள் விடுமுறை கொடுத்து கொழும்புத்துறை செல்ல ஆயத்தம் செய்திருந்தார். பொஞ்ஜின் குருவின் அநாதைப் பிள்ளைகளும் அதிகாலையில் இன்னோர் இடத்துக்கு சென்றிருந்தனர். எனவே நாம் எம் பிள்ளைகளுடன் காலைப் பூசையில் பங்குபற்றினோம். திருப்பலியின் முடிவில் பொஞ்ஜின் குருவும் புவாசோ (Boisseau) குருவும் வெளியே சென்றுவிட்டனர். பிள்ளைகள் மகிழ்வுடன் இந்நாளை இங்கே செலவிட்டனர். மாலையில் குருவானவர்கள் திரும்பி வந்து நற்கருணை ஆசீர்வாதம் கொடுத்தனர். சுதேச ஜஸ்வரியவான் எங்களுக்குரிய எல்லாச் செலவையும் ஏற்றுக் கொண்டார். தனது வீட்டில் உணவு தயாரித்து நேரத்துக்கு அனுப்பி வைத்தார். அத்துடன் எமக்கு ஒன்றும் குறைவுபடாமல் இருப்பதற்கு இருவரை எம்முடன் அனுப்பி வைத்தார். இவற்றைச் செய்வதற்கு முன் என்னிடம் அனுமதியும் கேட்டார்.

திருஇருதயத்தின் மாதத்தைப் பாப்பரசரின் கருத்துக்காகவும் ஒப்புக்கொடுத்தோம். மாதாவின் மாதத்தைப் போன்று இந்த மாதத்திலும் இருமுறை நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. பிள்ளைகள் செய்த புண்ணியங்கள் தினமும் குறிக்கப்பட்டு, கையொப்பமிடாமல் சேர்க்கப்பட்டு "இயேசுவுக்கு" என எழுதப்பட்டது. இதை நற்கருணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசீர்வாத நேரம் தூபத்துடன் சேர்த்து எரித்தோம். இப்புண்ணியங்களைப் பற்றிய விளக்கமும், அதைச் செய்வதற்குரிய ஆர்வத்தையும் காணக்கூடுமாக இருந்தது.

திருஇருதய விழாவின் பூக்கொத்தாக திருக்குடும்பப் பிள்ளைகள் திருப்பாலத்துவ சபை, விசுவாசப் பரப்புதல் சபைக்கு நிதி சேரக்க ஒரு லொத்தர் இழுப்பு ஒழுங்கு செய்தனர். கடின உழைப்புடன் பொருட்களையும் செய்து விலையையும் குறித்தனர். ஒரு புரட்டஸ்தாந்து பழைய மாணவி லொத்தருக்குரிய பொருட்களும் கொடுத்து 20 ரிக்கெற்றும் பெற்றுக் கொண்டார். வேறொருவர் 20 ரிக்கெற் எடுத்து தான் பெற்ற பொருட்களை மறுவருட லொத்தர் இழுப்புக்கு விட்டுச் சென்றார். எல்லாப் புரட்டஸ்தாந்துப் பிள்ளைகளும் ரிக்கெற் எடுத்துப் பக்தியுள்ள பொருட்கள் பெற்றனர். ஒரு பிள்ளை மாதாவின் சுரூவம் எடுத்தபோது அதற்குப் பதிலாக வேறொரு பொருளைக் கொடுக்க முற்பட்டபோது, மாதா சுருவத்தையே வைத்திருக்க விரும்பினாள். நல்ல இறைவனும் தி.கு. பிள்ளைகளின் ஆர்வத்திற்கு உதவினர். அவர்கள் குறைந்த ரிக்கெற் எடுத்தாலும் எல்லோரும் சிறிய பொருட்கள் பெற்று அதை அடுத்த வருட லொத்தருக்கு வைத்துள்ளனர். இவ்வருடம் 157 பிராங் கிடைத்தது.

அண்மையில் புனித. சூசை தொழிலகத்தில் இருந்த பிள்ளையிடம் இருந்து கடிதம் ஒன்று கிடைத்தது. அவள் ஓர் அயர்லாந்துப் போர் வீரனை மணம் முடித்து இருக்கின்றார். மாதாவின் மாதத்தில் மறு போர்வீரர்களுடன் மாதாவின் பக்தி முயற்சிகளைச் செய்து வருவதாகவும், மாதாவின் பீடத்துக்குத் தேவையான பொருட்களைப் பெற்றபின் தன் கணவனுக்கு "ஆவே மறிஸ்ரெலா" என்னும் கீதத்தையும் பிரார்த்தனையையும் படிப்பித்ததாகவும், அவர் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து மாலையில் மாதாவின் முன்னிலையில் மண்டியிட்டு எல்லோரும் மாதாவின் புகழ்ச்சி கீதங்களைப் பாடுவதாகவும் எழுதியிருந்தாள். அத்துடன் போர்வீரரின் பிள்ளைகட்கு மறைக்கல்வி படிப்பிப்பதாகவும் எழுதியிருந்தாள். நாமும் அவளின் செயலைப் பாராட்டிப் பதில் எழுதினோம்.

இப்போது எம் ஆங்கில வகுப்புப் பற்றிக் கூறவுள்ளேன். கொழும்பில் நல்லாயன் சகோதரிகள் ஒன்று ஆரம்பிக்க இருப்பதால் புதிய போடிங் பிள்ளைகள் இல்லை. எனவே இதை எதிர்பார்க்க முடியாது. அதிகம் பிள்ளைகள் வரமாட்டார்கள். இவர்கட்கு அதிகம் நன்மைகள் செய்யலாம். இறைவன் தன் பிள்ளைகளை வேறு கருவிகள் மூலம் அவர்களை மீட்கின்றர். இவ்வழியாக இறைவன் மகிமைப்படுத்தப்படுகிறாரென எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனம் கூறவில்லையா? வெளிப் பிள்ளைகளில் அதிகமானோர் புரட்டஸ்தாந்துப் பிள்ளைகள். கத்தோலிக்கருடனான தொடர்பு அவர்களை அறியாது அவர்கட்கு நன்மை புரிகின்றது.

புரட்டஸ்தாந்து கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த 12 வயதுடைய இரு பிள்ளைகள் கணக்குச் செய்வதில் கஷ்டப்பட்டனர். பின்பு கத்தோலிக்க பிள்ளை நன்கு செய்தாள். இதைக் கேட்டபோது தேவதாய் உதவி செய்வதாகவும், தான் ஒரு 'அருள் நிறை மரியே' சொன்னபோது உடனே கணக்குச் செய்ய முடிந்தது எனவும் கூறினாள். அப்போது கெலன் தானும் இச்செபத்தைச் சொன்னால் செய்ய முடியுமா? என்று வினவினாள். "நீ மாதா நம்பிக்கையுடன் செய்தால் வெற்றி பெறுவாய்" என்று 8வயதுப் பிள்ளை கூறினாள்.

அவளுக்குச் செபம் தெரியும். எனவே மாதா சுருவத்தைப் பார்த்துச் சொல்லவிட்டுத் தன் கணக்கைச் செய்தபோது வெற்றி பெற்றாள். இப்பிள்ளை தன் துன்ப வேளையில் மாதாவின் அடைக்கலத்தை நாடுவாள் என்பது கண்கூடு. மேலும் ஒரு புரட்டஸ்தாந்து சிறுமி தனக்கு ஒரு செபமாலை பெற்றுத் தரும்படியும், இரகசியமாகத் தான் வைத்திருப்பதாகவும் தன் சிநேகிதியிடம் கேட்டாள். எனவே அப்பரிசுத்த விதைகள் இந்த இளம் உள்ளங்களில் பலன் அளிக்க வேண்டுவோம்

## 7 ஐப்பசி 1867

இந்த வேளையில் 4ஆன்மாக்களை சாத்தானின் பிடியில் இருந்து மீட்டோம். சிலநாட்களாக ஒரு தாய் அவரின் பன்னிரண்டு, ஏழு வயதுடைய இரு பிள்ளைகளுடன் எம்முடன் இருக்கின்றார்கள். அவர்கள் நிலையைக் கண்டு திருமுழுக்குப் பெற விண்ணப்பித்தோம். தாய் பொலின் என்ற பெயரைப் பெற்றார். தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்த முடியாமல் இருந்தாள். இதற்கு நன்றியாகத் தன் இரு பிள்ளைகளையும் தருவதாகக் கூறினாள். இத்துடன் தான் இனிமேல் பாவம் செய்வதில்லை எனவும், தன் ஆன்மாவைக் கறைப்படுத்த விரும்பவில்லை எனவும் கூறினாள். நேற்று செபமாலை அன்னை திருவிழாவில் முதல்நன்மை பெற்றாள். எம் தேவைகட்கு உதவி செய்கின்றாள். அவளுடைய மகன் திருப்பாலத்துவ சபையின் அநாதை இல்லத்தில் இருக்கின்றான். தாய் விதவையானதால் எம்முடன் மகிழ்வுடன் இருக்கின்றாள். வேறொரு மகள் 16 -17 வயது. இந்து மதத்தில் இருக்கின்றாள். கடைசியாக திருமுழுக்குப் பெற்ற 4 வயதுச் சிறுமி வியாதியினால் கஷ்டப்படுகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இந்துப் பெண் போடிங்கில் இருந்து கொலராவினால் இறந்த தன் தாயின் ஆன்மசாந்திச் சடங்குகளுக்குச் சென்றிருந்தாள். அங்கு 13 வயதுச் சிறுமியை என்னிடம் அழைத்து வந்தாள். கஷ்டமாக இருந்தாலும் அவள் ஆன்மாவை மீட்பதற்காக சேர்த்திருக்கின்றோம். தற்போது மகிழ்வுடன் திருமுழுக்குப் பெற மாகிறெற் என்னும் பிள்ளை தன் சகோதரியையும் கூட்டி வந்து ஆயத்தம் செய்கின்றாள்.

அண்மையில் ஒரு அநாதைப் பிள்ளைக்கு திருமணம் செய்து கொடுத்தோம். அவள் தன் விசுவாசத்தை இழக்கவிருந்தாள். அவளுக்கும் ஒரு புரட்டஸ்தாந்து வளர்த்த இந்து ஆணுக்கும் மணம் முடித்து வைக்க விரும்பினார். இது நல்ல திருமணப் பொருத்தமாக இருந்தது. பெலிசியர் சுவாமி (Pellissier) எமது சூசனுக்கு ஒரு நல்ல கத்தோலிக்க இளைஞனைக் காட்டினார். இதை அறிந்த சூசனின் தாய் முதல் திருமணத்தை எதிர்த்தால் வீட்டில் இருந்து விலக்கப்படுவாள் என எழுதியிருந்தாள். இதை அறிந்த சூசன் துன்புற்றாள். எனினும் இறைஅருள் உதவியுடன் தன் மீட்பையே விரும்பினாள். அன்புள்ளம் கொண்டவர்கள் சிலர் சிறு சீதனம் கொடுத்தனர். ஒரு யாழ் இளம் குடும்பம் திருமண உடை வழங்கினர். திருமணத் தினத்தன்று மஞ்சள் கரையுள்ள அழகான உடை, திருக்குடும்ப உத்தரியம், மாதா வரவணிக்கத்துடன் காணப்பட்டாள். வைபவம் முடிந்து 2 மணித்தியாலங்களின் பின் தாய் அவளைத் தேடி வந்தாள். நகைகளுடன் வந்தாள். திருமணம் முடிந்தது என்று அறிந்தவுடன் கோபித்துக் கொண்டு எம்மிடம் வராமல் திரும்பிச் சென்றுவிட்டாள்.

தற்போது அவர்கள் ஒரு கிராமத்தில் வாழ்கின்றனர். அங்குள்ள மறையாசிரியர் இங்கு வந்தபோது அவர்களையிட்டு மகிழ்ச்சியடைந்தார். மிஷனறிமார் இல்லாத இடங்களில் ஆசிரியர்களாக அவர்கள் பணியாற்ற முடியும். எமது சகோதரிகளும் அங்கு செல்ல மாட்டார்கள். எனவே இறைமகிமைக்காக எம்மிடம் கற்றவற்றை இவர்கள் படிப்பிக்க முடியும்.

எம்மிடம் இருந்து சென்ற மாணவிகள் எமக்கு ஆறுதல் அளிக்கின்றனர். அண்மையில் ஒரு மாணவி எமக்கு எழுதியிருந்தாள். "எனக்கு உலகில் விருப்பமில்லை. பல பக்கத்திலும் இருந்து ஆபத்துக்கள் வருகின்றன. புனித.சூசையப்பரின் அடைக்கலத்தில் என்னை ஒப்புக் கொடுக்கவே ஆசையாக இருக்கின்றேன். துறவியாக வரவிருப்பம் என்று கூறமாட்டேன். அதற்கு எனக்குத் தகுதியில்லை". இவ்வாறு எழுதியவள் 18 வயதுடைய ஓர் ஆங்கிலப் பெண். அவள் கல்வித் திறமையும் துறவு வாழ்வுக்கு ஏற்றது. செபிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஒரு அநாதைப் பெண்ணும் எழுதியிருந்தாள். சென்ற வருடம் மீளத் திருமணம் செய்த தன் தாயிடம் சென்றிருந்தாள். "இப்போது உங்கள் நன்மைத்தனத்தை உணர்கின்றேன். என் தாயிடம் நான் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டாலும் மகிழ்ச்சியடைய முடியாது. இறைவனுக்கு என்னை அர்ப்பணிக்க வேண்டும் என்பதே தற்போதைய ஆசை." மரியாள் துறவியாக விரும்பினால் அவள் சபைக்குப் பல நன்மைகள் புரிவாள். நல்ல புத்தியுள்ளவள். தமிழ் படித்தவள். அவளின் அழைத்தலைப் பார்க்கும்படி திருமலையில் உள்ள குருவானவருக்கு கூறியுள்ளேன். அத்துடன் இறைசித்தத்திற்கு பணிந்த மனத்திற்கு இறைவனை மன்றாடுகின்றேன்.

இரண்டு பழைய மாணவர்கள் இறைவனின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக எம் அநாதைப் பிள்ளைகளுக்கு உணவு வழங்கினார். தாமே சகோதர உறவுடன் நல்ல உணவு வழங்கியமைக்கு எம் பிள்ளைகள் நன்றி கூறினர். எல்லாம் இறைவனிடமிருந்து வருகிறதென்றும் அவருக்கே நன்றி கூறும்படியும் சொன்னார்கள்.

தற்போது நம் சுதேச நவகன்னியர் இல்லம் பற்றிக் கூறப் போகின்றேன். எம்மிடம் வரும் ஆயத்தக் கன்னியர் பற்றியும் அவர்களின் முன்னேற்றம் பற்றியும் அறிவதற்கு அண்மையில் வந்த இருபிள்ளைகள் பற்றிக் கூறுகின்றேன். லூசியா என்ற பிள்ளை கொழும்பிலிருந்து வந்துள்ளாள். செபிப்பாள். சிலவேளைகளில் தையல் வேலை செய்வாள். துறவு வாழ்வு, கற்பு நிலையில் செபித்தல் என்றே அறிந்திருந்தாள். மடத்தில் அமைதியாக பக்தி முயற்சிகளில் ஈடுபடலாம் என்று அறிந்திருந்தாள். இங்கு வந்ததும் பல வேலைகளைக் கண்டாள். அமைதியில் பல வேலைகள் நடைபெறுவதைக் கண்டவள் தானும் அவ்வாறே செய்ய வேண்டுமென நினைத்தாள். மௌனமாக இருப்பது பிடிக்கவில்லை. அவள் கதைக்கும்போது தடுத்தது ஆச்சரியமாகவிருந்தது. மேற்பார்வையாளர் ஏதாவது கூறினால் தலைவிக்கு (Superior) மட்டுமே அமைவேன் என்பாள். தற்போது எல்லாவற்றையும் மகிழ்வுடன் செய்யும் ஓர் ஆயத்த கன்னிகையாக லூசியா இருக்கின்றாள். ஒரு நாள் கண்ணீருடன் என்னண்டை வந்து "ஒரு பெரிய பாவம் செய்து விட்டேன்" என்றாள். மேற்பார்வையாளருக்கு ஒரு கூடாத பதில் சொன்னதாகச் சொன்னாள். இதனால் இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்தேன் இல்லையா? என்றாள். நானும் ஆம் எனக் கூறி இறைவன் பெருமை படைத்தவர்களை விரும்புவதில்லை. எனவே இறைவனிடமும், சிஸ். கபிரியேலாவிடமும் மன்னிப்புக் கேட்கும்படி அனுப்பி வைத்தேன். அவளும் அவ்வாறே செய்து இனிமேல் நான் மதித்து நடப்பேன் என்றாள்.

இரண்டாவது ஆயத்த கன்னிகை கற்பின் ஆசையினால் வந்தாள். சுதேசிகளின் நவகன்னிகை இல்லம் ஆரம்பிக்குமுன் வந்தபடியால் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையல் அறையில் வேலை செய்தாள். சில மாதங்களாக எம் நவகன்னியர் இல்லத்தில் உள்ளாள். அனுமதித்த நாளன்று தன் நகைகளை என்னிடம் ஒப்படைத்து நான் இதைத் தியாகம் செய்கின்றேன். இயேசுவையே விரும்புகின்றேன் என்றாள். சில நாட்களின் பின் என்னிடம் வந்து தான் முந்திய நிலையில் இருப்பதாகவும், புகைப்பதை நிற்பாட்ட முடியவில்லை எனவும், தன் உடல் நலனுக்கு இது தேவையெனவும் கூறினாள். எனவே இதற்கு எனக்கு உத்தரவு வேண்டும் என்றாள். அதற்கு நான் ஒரு சிகரட்டை இயேசுவுக்காக புகைக்காது இருக்கும்படி கேட்டேன். ''சாத்தானே உன்னைத் தூண்டுகின்றது. உன் சகோதரிகள் புகைக்காது உடல் நலத்துடன் இருக்கின்றார்கள்'' என்று கூறினேன். அதற்கு அன்ரோனியா இது உண்மைதான். எனவே இதை நினைக்க மாட்டேன் என்றாள். ஒரு மாதத்தின் பின் தான் தவறு செய்ததாகவும், ஒரு பெண்ணிடம் புகையிலை கேட்டதாகவும் சொன்னாள். இவ்வாறாகப் பல சம்பவங்கள் உள்ளன. எனினும் ஒரு ஆயத்த கன்னிகை பற்றிக் கூறி என் கடிதத்தை நிறைவு செய்கின்றேன்.

கத்தறின் என்னும் ஒரு ஆயத்த கன்னிகையின் தவறான செயலால் அவளை வீட்டுக்கு அனுப்பினேன். சோம்பல், கூடாத பதில் சொல்லுவாள். எனவே வருடாந்த ஞானொடுக்கத்தைச் செய்யம்படி கூறினேன். அத்துடன் தீய செயல்களை மாற்றினால் மட்டுமே எம்முடன் வைத்திருக் முடியும் என்றேன். அவள் தன் தியான நாட்களில் பக்தி முயற்சிகள் செய்தாள். தற்போது அவள் முயற்சி உடையவளாகவும், நன்றாகவும் உள்ளாள். முன்பு போல் இல்லை. அத்துடன் தியான நாட்களில் எடுத்த தீர்மானங்களுக்கு பிரமாணிக்கமாக உள்ளாள். எனவே அடுத்த முறை இவளும் திருவுடை பெறுவாள் எனவே நல்லதாயாரே! இவர்களிலும் நல்ல ஆன்மாக்களைக் காண முடிகின்றது. இறைவனுக்கு ஏற்புடையவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் செபங்களில் எனக்கு நம்பிக்கையுண்டு.

எம் தந்தையாகிய புனித. சூசையப்பர் பல வெளிப் பிள்ளைகளையும், எம் தொழிலகத்திற்கு தேவையான பொருட்களையும் அனுப்பியிருப்பதால் வறுமை குறைகின்றது. அவரில் எமக்கு நல்ல விசுவாசம் உண்டு. கத்தோலிக்கரும், புரட்டஸ்தாந்துப் பிள்ளைகளும் தம் வணக்கங்கள், செபங்களைக் காண்பிக்கின்றனர். திருக்குடும்பத்தின் பாதுகாவலராகிய புனித. சூசை எம் தேவைகளில் உதவி செய்து இயேசுவின் புண்ணியங்களில் வளர உதவி செய்வாராக. இத்துடன் திருமுழுக்கு அருள்களைப் பெறும்போது கிடைக்கும் நல்ல குணங்களை வளரச் செய்வாராக. இதனால் இப்பிள்ளைகள் நல்ல தாய்மாராக பிற்காலத்தில் விளங்குவர். சிலர் எம்மைப் போல் கிறிஸ்துவின் பத்தினிகளாக வருவர். இத்தீவில் நன்மைபுரியத் தேவையான அருள்பெற மன்றாடவும். ஏனென்றால் இன்னும் பலர் சாத்தானின் பிடியில் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNALS NO - 14

**யாழ்ப்பாணம் -22 தை 1868**

**(June 1869)**

என் நல்லதாயாரே!

ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் சாதாரணமான வாழ்வு நிறைவுபெற மார்கழி மாதம் முதல் நாளே மகிழ்ச்சியும் உயிர்த்துடிப்பும் காணப்பட்டது. இந்தியாவின் பெரிய அப்போஸ்தலர் சவேரியாரின் திருநாளைக் கொண்டாட பெரியோர், சிறியோர் எல்லாரும் தம்மை ஆயத்தப்படுத்தினர். திருவிழா முதல் நாள் மாலை எனக்குப் பூக்கள், வாழ்த்துக்கள் வந்தன. புனித சூசையின் தொழிலகத்தில் விற்பனைக்கும் பல பொருட்கள் இருந்தன. ஒருசில மாதங்களின் பின் வேலைகள் செய்ததைப்பற்றி ஆச்சரியப்பட்டேன். போடிங்பிள்ளைகளும், பெரியபிள்ளைகளும் பாடல் இசைத்து வாழ்த்துச் சொல்ல 3 - 8 வயதுப் பிள்ளைகள் உரையாடல் நிகழ்த்தினர். ஒருபிள்ளை பூக்கூடை கொண்டுவந்தா. அதனுள் திருப்பாலத்துவ சபைக்கென கொஞ்சப் பணமும் இருந்தது. சில மாதங்களாக இப்பிள்ளைகள் ''இயேசுவுக்கு நன்கொடை'' என்று தமது (Pocketmoney) பணத்தில் சேர்த்தனர். இரு சமயப் பிள்ளைகளும் நிதி சேகரிப்பில் பங்கு பற்றினர். இது ஏழைப் பிள்ளைகளுக்கு உதவும். இவர்களில் ஒரு சுதேச சிறுமி தன் கத்தோலிக்க குடும்பத்தில் பணஉதவி பெறாததால் துன்புற்றாள். ஒருநாள் தன் உணவுக்குக் கொடுத்த பணத்தை அப்படியே கொண்டுவந்து ''திருப்பாலத்துவ சபைக்கென'' கொடுத்தாள். இவ்வாறாக 15 பிராங் சேர்த்தாள். மறுநாள் புனித சவேரியாருக்குப் பூச்செண்டாக 7 இந்துச் சிறுமிகள் திருமுழுக்குப் பெற்றனர். எமக்கு இது எவ்வளவோ மகிழ்ச்சி, இப்புனிதரும் வானில் இருந்து எமக்கு நல்லவை செய்ய அருள் தருவாராக!

தேவ பராமரிப்பு பாலத்துவ சபையில் இருந்த இரண்டு பிள்ளைகளுக்குத் திருமணம் செய்ய சந்தர்ப்பம் அளித்தது. ஒரு பெண் புனித சூசை அநாதை மடத்தில் இருந்த ஒருவரை மணமுடித்தாள். யாழில் அவர்கள் இருப்பதால் நாம் இன்னும் நன்மை செய்யமுடியும். மற்றப் பெண் சில மைல் தூரத்தில் உள்ள ஒரு சிறிய கிறீஸ்தவ சமுதாயத்தின் தலைவரின் மகனை மணமுடித்தாள். எனவே கத்தோலிக்க புதிய குடும்பங்கள் அதிகரிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். அத்துடன் அவர்கள் சென்ற பின் மேலும் இருவர் அவர்களிடமாக வந்துள்ளனர். வசதியும் இடமும் இருந்தால் இன்னும் பலர் வரலாம். சிறிய வீடு பலருக்கு இடமளிக்க முடியாதுள்ளது.

மார்கழி இறுதியில் புனித சூசையின் பிள்ளைகள் தம் விற்பனையை ஆரம்பித்தனர். இதன் சித்திக்காக புனித சூசையப்பரிடமும், நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாவிடமும் வேண்டினோம். எம் நம்பிக்கை வீண்போகவில்லை. எல்லா ஆங்கிலேயரும் பொருட்கள் வாங்கினர். புதிய ஆளுநர் 300 பிராங்குக்குப் பொருட்கள் வாங்கினார். எல்லோரிடமும் மடத்தில் செய்த பொருட்களைப் பற்றிப் புகழ்ந்து கூறினார். விற்பனையின் பின் பரிசளிப்பு இடம் பெற்றது. இதற்குக் குருக்கள், பெற்றோர், அதிகாரிகளை அழைத்தோம். புரட்டஸ்தாந்து போதகர்களை அழைக்கவில்லை. மூன்று பேர் மறைவாகப் பங்குபற்ற விரும்பியதால் அவர்களை அழைத்தோம். அவர்களும் சந்தோஷப்பட்டனர். தான் இலங்கைக்கு வந்தபின் இவ்விதமான ஒரு மாலை நிகழ்வில் தான் பங்குபற்றவில்லை என்று ஒருவர் சொன்னார். அத்துடன் போதகரின் மனைவி (ஆசிரியை) ஒருவர் பரிசளிப்பில் பங்குபற்றியபின் ''நீங்கள் செய்தவைகளைப் பற்றி எனக்கு ஒன்றும் புரியவில்லை'' எப்படியாக உங்களால் இவை எல்லாவற்றையும் செய்யமுடிகிறது என்றாள். இவ்விதமாக இறைவன் எமது சகோதரிகளின் தியாக சேவையையும், முயற்சியையும் ஊக்குவிக்கின்றார். எல்லாம் நன்றாக முடிந்தன. முதன்முறையாக ஆளுநர் வந்திருந்தார். ஒரு பிள்ளை எல்லார் பேராலும் நன்றி உரை வழங்கினார். இன்னொரு பிள்ளை ஒரு பூச்செண்டு கொடுத்தார். இதற்கு அன்புடன் பதலிறுத்த ஆளுநர் ''உயர்தர போடிங்கில் காண்பவற்றைத்தான் இங்கு காண்பதாகாவும், நீங்கள் நல்ல கல்வி கற்பதால் நான் பலவற்றைக் கூறத்தேவையில்லை எனவும், நீங்கள் உங்களுக்குக் கற்பிக்கும் இச்சகோதரிகளின் புண்ணியங்களைப் பின்பற்றுகிறீர்கள் எனவும், நான் காண்கின்றேன். இங்கு வந்தவர்களின் உணர்வுகளை மட்டும்தான் நான் கூறுகின்றேன் எனவும் இந்த மாலைநிகழ்வில் தாம் எல்லோரும் மகிழ்ச்சியுற்றதாகவும், இன்னும் பல வருடங்கள் இவ்வாறு நடைபெறவேண்டும்'' என்றார்.

இவர் இலங்கையின் வடபகுதிக்குப் பெறுப்பானவர். அக்கூட்டத்தில் பல புரட்டஸ்தாந்து மக்களும் போதகர்களும் இருந்தனர். அளுநரின் பாராட்டுக்கு எல்லோரும் கரகோஷம் செய்தனர். நாம் எம் உள்ளத்தில் இறைவனுக்கு நன்றி செலுத்தினோம். சிஸ்ரர்மார் தம் புண்ணியங்களைப் பிள்ளைகளுக்கு அளித்தால் பெற்றோர்கள் பயப்படாது தம் பிள்ளைகளை எம்மிடம் தருவார்கள். சில போதகர்மார் எங்களை ''ஒநாய்கள்'' என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் வருகையும், கரகோஷமும் இதற்கு எதிராக இல்லையா? நல்ல இறைவன் இந்த வெற்றியினால் போற்றப்படுவாராக! அவர் துணையின்றி எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. எனவே, அவருக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக!

சில நாட்களின் பின் அநாதைப் பிள்ளைகளின் பரிசளிப்பு விழாநடைபெற்றது. இது ஒரு குடும்ப விழாவாகும். குருக்களை மட்டுமே அழைத்தபடியால் ஆறு பேர் பங்குபற்றினர். நற்கருணை ஆசீருடன் விழா ஆரம்பமானது. புனித முடியப்பர் விழாவானதால் (St. Etienne) எம் ஆயர் விழாவையும் கொண்டாடினோம். எம் சுதேச பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சிய மொழியில் ஒரு பாடலை ''பியானோ''வுடன் பாடினார்கள். பாடலின் பின் ஒரு சிறிய பரீட்சை வைத்துப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. போடிங் பிள்ளைகள் பலவர்ணப் பூக்களால் முடிபுனைந்து அணிந்திருந்தது மிகவும் அழகாக இருந்தது.

இக்களைப்பான நாட்கள் முடிவுற்றதும் மாதகல் என்னும் இடத்திற்குச் சென்றோம். இரண்டு வருடங்களுக்கு முன்பும் இங்கு வந்திருந்தோம். கடற்கரைக் காற்று நல்ல இளைப்பாற்றியைத் தந்தது. முன்பு போன்று எம்வருகையின்போது மணிகள் ஒலித்தன. மேளம் அடிக்கப்பட்டது. வெடிகள் கொழுத்தப்பட்டன. ஆனால் மக்களில் பலர் இருக்கவில்லை. கொலறா நோயினால் இறந்து போனார்கள். இருப்பவர்களும் ஏழைகளாக இருந்தனர். வரட்சியினால் அறுவடையும் நல்ல பலன்களைக் கொடுக்கவில்லை. மறுநாள் எனக்கும் நல்ல சுகமில்லை. பலநாட்கள் ஒன்றும் எடுக்காது நாற்காலியில் இருக்க வேண்டியநிலை. எனக்குச் சுகம்வர சகோதரி.லிகோரி சுகவீனமாக இருந்தா அவவும் பலநாட்கள் இந்நிலையில் இருந்தா. பின்பு சகோதரிகள், எமது இரண்டு போடிங் பிள்ளைகள் ஒரு ஆயத்த கன்னியரின் சிறியதந்தை இவர்களின் வருகை பற்றிக் கடிதம் எழுதியிருந்தனர். மூன்று பிள்ளைகளையும் யாழ்ப்பாணத்திற்கு வரும்படியும், பின்பு கொழும்புக்கு அழைத்துச் சென்று தாயிடம் சேர்ப்பதாகவும் இருந்ததால். ஒரு சிஸ்ரர் மூன்று பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு யாழ் சென்றா. சிறிய தந்தை தாயின் கடிதத்துடன் மாதகலுக்கு வந்தார். கத்தோலிக்க பிள்ளைகளை இழப்பது கவலையாக இருந்தது. புரட்டஸ்தாந்து பிள்ளைகளே எம்மிடம் அதிகம் இருந்தனர். கொழும்பில் புரட்டஸ்தாந்து பாடசாலையில் சேர்க்கும் போது விசுவாசத்தை இழக்க நேரிடும். எனவே எம் செபங்களைப் பிள்ளைகளின் கருத்துக்காக ஒப்புக்கொடுத்தோம். பின்பு கொழும்புக்கு செல்லும் கப்பல் இரு நாட்கள் தாமதிக்கிறதென ஒரு கடிதம் கிடைத்தது. மறுநாள் இவர்களின் தாய் இறந்த செய்திகிடைத்தது எனவே நான் யாழ் சென்று குருவானவருடனும், சிறிய தந்தையுடனும் கதைத்துப் பின்பு பிள்ளைகளுக்குத் தாயின் மரணம் பற்றி அறிவித்தேன். உடனே அவர்கள் தம்மை இங்கு வைத்திருக்கும்படி கெஞ்சினர். அவர்களின் விருப்பை நான் நிறைவேற்றினேன். தந்தையைத் தவிர அவர்கள் குடும்பம் எல்லாம் இங்கிலாந்தில் உள்ளனர். எனவே அவருக்குப் பிள்ளைகள் இங்கிருப்பதை எழுதினேன். இறைவன் கப்பலைப் புறப்படத் தாமதித்துத் தாயின் இறந்த செய்தியை எமக்கு அறிவித்துள்ளார்.

எமது ஒய்வு காலத்தைப் எப்படிக் கழித்தோம் எனப்பாருங்கள். நல்ல இறைவன் தான் இவ்விதமான துன்பங்களையும் தருகின்றார். சென்ற வருடத்திலும் இக்காலத்தில் கொலரா நோய்தாக்கியது. நாம் அங்கு இருந்தவேளை அங்குள்ள மிஷனறிக் குருக்களின் தியாகசேவையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தோம். இவர்கள் வாழ்வு இந்த இடத்திலே மிகவும் கடினம். தம் உழைப்பிற்கு ஏற்ற பலன் பெறமுடியாது. அத்துடன் சோம்பலும், புண்ணியக் குறைவாகவும் மக்கள் இருப்பதால் நோய் வரும்போது இந்து மார்க்கத்தைப் பின்பற்றுவர். சுகம் பெறுவதற்குப் பலிகள் செலுத்துவர். பின்பு அருட்சாதனங்களைப் பெறுவதற்கு மன்னிப்புக் கேட்டு, பகிரங்க தண்டனையும் பெற ஆயத்தமாயிருப்பர். ஒரு நிகழ்வை நாம் கண்டோம். ஒரு ஞாயிற்றுக்கிழமை திருப்பலியின் முன் மக்கள் முன்னிலையில் ஒரு பெண் பல முறைகளில் அடிவாங்கினாள். பின் கோவிலுக்கு வெளியே அழைத்துச்சென்று வாயிலே கரியினால் பூசித் தலையில் முள்முடியை வைத்துத் தோளில் ஒரு சிலுவை தாங்கிக் கோவிலை வலம் வந்தாள். ஒரு சீடன் ஒரு சிறிய மணியை அடிக்க பிள்ளைகள் பலர் அவர் பின்னால் சென்றனர். எம்மைக்கண்டு அப் பெண் வெட்கமுற்றாள். ஒப்புரவு அருட்சாதனத்திற்கு முன் இவள் செய்ய வேண்டியிருந்தது. ஆண்களும் இவ்வகையான தண்டயை பெற்றாலும் திரும்பச் செய்வார்கள். தற்போது நாம் வழமையான எமது வாழவைத் தொடங்கி விட்டோம். ஒவ்வொருவரும் தத்தம் வேலைகளைச் செய்கிறார்கள். முன்பு நாமும் பிள்ளைகளும் குருக்களின்றி ஒரு சிறு தியானம் செய்தோம். தற்போது அவர்களுக்கு நேரம் இல்லை பாஸ்கு லீவின் போது ஆயர் திரும்பி வந்தால் எம் தியானத்தை அவரிடம் செய்யலாமென நம்புகின்றோம்.

**6 சித்திரை 1868**

இத்தவணை நன்றாக இருக்கவில்லை. கல்வாரிப்பாதையே விண்ணகத்தை நோக்கி அழைத்துச் செல்லும் உங்கள் இலங்கைச் சகோதரிகள் இப்பாதையில் சென்றார்கள். நீங்கள் எம் துன்பத்தில் பங்குபற்றி உங்கள் நல்ல கடிதத்தின்மூலம் ஆறுதல் அளித்தீர்கள். நன்றி. எம் ஆயர் காலதாமதமாகி வருகிறார் என்று இருந்தவேளை அவரின் மரணச் செய்தி கிடைத்தது. எல்லாக் கோவில் மணிகளும் அடிக்கப்பட்டது. இங்கு அவர் எமக்கு உதவியாக இருந்ததுபோல பரலோகத்திலும் இருந்து அவர் எமக்கு உதவி செய்வார்.

எம் பிள்ளைகளும் ஆயரின் இழப்பினால் துன்புற்றனர். ஆன்ம இளைப்பாற்றிக்காக செபங்கள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. சிலுவைப்பாதைகள், செய்து செபமாலை செபித்தனர். புனித சூசையப்பரின் பிள்ளைகள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பணம் கொடுத்தனர். அநாதைப் பிள்ளைகளும் விரும்பினர். ஆனால் அவர்களிடம் பணம் இருக்கவில்லை. எனவே ஒரு சிறுமி சிஸ்ரர் லிகோரியிடம் ஒரு வருடமாகக் கொடுத்து வைத்திருந்த ஒரு பிராங் 20 சதத்தைக் கேட்டாள். வேறொரு சிறுமி குருசு வாங்க 60 சதம் வைத்திருந்தாள். அதையும் பொலினிடம் இருந்ததையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபிள்ளைகளிடம் இருந்த சிறு தொகைப் பணத்தையும் சேர்த்து ஒரு திருப்பலிப் பூசைக்கு ஒப்புக்கொடுத்து திருவிருந்திலும் பங்கெடுத்தனர்.

புதிய மிஷனறிமார் வரக் காலதாமதம் ஏற்படுகின்றது. அவர்கள் வரும்போது மீளவும் எமது துன்பம் அதிகரிக்கும். அவர்கள் எம் குடும்பத்தைப் பற்றி உங்களைப்பற்றி எம் அதி சிரேஷ்ட குரு பற்றிக் கூறுவார்கள். குருவானவர் எம் ஒவ்வொருவருக்கும் எழுதியிருந்தார். தனது கவலையை மறந்து எமது கவலையைப் போக்கி எமக்கு எழுதியிருந்தார்.

பாடசாலை வரவு இவ்வருடம் தொடக்கத்தில் பிள்ளைகள் பலர் சென்று விட்டதால் நிறைவாக இருக்கவில்லை. சிலர் வசிப்பிடங்களை மாற்றியும், சிலர் பயணங்களையும் மேற்கொண்டுள்ளனர். எனவே எமது ஆங்கில வகுப்பு வரவு குறைந்துள்ளது. எனவே எம் ஏக ஊற்றாகிய இறைவனிடம் செபத்தின் மூலம் சென்றுள்ளோம். தேவதாய் புனித சூசையப்பர், நல்ல பிதாவிடமும் வேண்டுகின்றோம். புனித சூசையின் மாதத்தில் எமது முயற்சியை இரு மடங்காக்கியுள்ளோம். எம் செபம் கேட்கப்படும் என்ற நம்பிக்கை உண்டு. கண்டி, கொழும்பில் உள்ளவர்கள் எமது போடிங் பற்றிக் கேள்விப்பட்டாலும் அவர்கள் வருவார்களென நம்புகிறேன்.

அண்மையில் இரு பிள்ளைகளைத் திருமுழுக்குக்கு ஆயத்தம் செய்தோம். நோயுற்றிருந்தபடியால் நாளை முன்குறித்தோம். ஒரு பிள்ளை சுகமடைந்தாள். மற்றப் பிள்ளை வியாதியால் துன்புற்றாள். பெற்றோர் வந்திருந்தனர். தாய் கத்தோலிக்க சமயத்தில் சேரவிரும்புகிறாள். வேறொரு மூதாட்டியும் திருமுழுக்குப்பெற மறைக்கல்வியும் செபமும் படிக்கின்றாள்.

அரச அதிகாரி ஒருவர் ஐந்து வயதுப்பிள்ளை ஒன்றை எம் அநாதை இல்லத்தில் சேர்த்துள்ளார். விடுதிப்பணமும் கட்டுவார். பல புரட்டஸ்தாந்து இல்லங்கள் இருந்தும் அவர் எங்களை விரும்பிப் பிள்ளையை சேர்த்துள்ளார். சென்றகிழமை எமக்குச் சற்றுக்களைப்பாக இருந்தது, சற்றுத்தூரத்தில் ஒரு பணக்கார இந்துப் பெண் இறந்தாள். வீடு அருகில் இருந்ததால் எல்லாவற்றையும் கேட்கமுடிந்தது. கடைசி ஆவி பிரிந்ததும் பெற்றோரும் நண்பர்களும் இறந்தவரைச் சூழ நின்று அவர் செய்த புண்ணியங்களைக் கூறிக் கதறி அழுதனர். மக்கள் சேவைசெய்வோர் இவர்கள் சமயத்தில் புண்ணியவான்களாகக் கருதப்படுவார்கள். அவர்கள் தூயவர்களாக இருப்பதால் அவர்கள் நேரடியாக மேலுலகம் செல்வார்களென்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. எம் அயலவரின் புண்ணியவதியாக இருந்தபடியால் பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையுடன் அழுதனர். மக்களின் ஓலத்துடன் 12 பறைமேளச் சத்தமும் கேட்டால் எப்படி இருக்கும், நாங்கள் கதைக்கவோ, ஓய்வு நேரம் ஒன்றாகச் செலவிடவோ, பக்தி முயற்சிகள் செய்யவோ முடியாமல் தனித்தனியாகச் செய்தோம். இறந்த பெண்ணைத் தோட்டத்துக்குள் வைத்து நீராட்டித் தூய்மைப்படுத்தி அழகான உடை அணிந்து மீளவும் அவவின் அறைக்கு எடுத்துச் சென்று மக்களின் தரிசிப்புக்கு வைக்கப்பட்டது. நாம் ஆசிநீர் தெளிப்பது போன்று ஒவ்வொருவரும் அரிசிமா, நாணயம் கலந்த கலவையால் தெளித்தனர்.

அவ்வேளை இந்துக்குரு மரணச்சடங்கு நிறைவேற்றியபடியால் நாம் அந்தப் புகையையும் சுவாசிக்க வேண்டியதாயிற்று. எமது யன்னலுக்குக் கீழ் ''பாடை'' ஆயத்தம் செய்தபடியால் பெரியசத்தம் 2ம் நாள் மாலை, எல்லா ஆயத்தங்களும் முடிய இறந்தவர் ஒரு சிவப்புப் பெட்டியில் வைக்கப்பட்டு மேலே ஒரு மூடி வைத்தனர். சிவப்பு அவர்களின் இறப்பின் நிறம், அலரிப்பூக்களினால் மாலை செய்து போடப்பட்டது. நறுமண நீர் தெளித்துப் பிரேதத்தை எடுத்துச் சென்றனர். முன்னாலே இசைக்குழு சென்றது. கணவன் முடிவெட்டியவராக கழுத்தில் நூல் தரித்து பிரேத வாகனத்தைத் தொடர்ந்து சென்றார். நிலப்பாவாடை விரித்து அதன் மேல் நடந்து சென்றனர். இவ்வாறு நகருக்கு வெளியே கொண்டுபோய் சுடுகாட்டில் எரித்தனர். 2 அல்லது 3 நாளின் பின் வந்து சாம்பலை எடுத்து கடலோடு சங்கமமாக்கினர். அத்துடன் சுடலையில் பலியும் செலுத்தினர்.

இந்துக் குரு பலிப்பொருட்களை எடுத்துச் சென்றார். தேங்காய், பழம், பணம் என்பன வைக்கப்பட்டிருந்தன. மற்றவர்கள் அதைத் தொடமுடியாது, பெரும்பாலும் இவர்கள் பயத்தால் எல்லாவற்றையும் செய்கிறார்கள். இந்தச் சடங்குகளின்போது விசுவாசத்தை எமக்களித்த இறைவனுக்கு நன்றி கூறினோம். அறுவடை அதிகம், ஊழியர் குறைவு. வேத போதகக் குருக்கள் கிறீஸ்தவர்களுடன் பணிபுரிகிறார்கள். இந்துக்களுடன் பணிபுரிய முடியாது. நல்ல இறைவன் அவர்களுக்குத் துணைபுரிவாராக அத்துடன் நீங்களும் இவர்களுக்காகச் செபிக்க வேண்டுமென்று கேட்கின்றேன்.

சிலநாட்களின் முன் ஒரு கத்தோலிக்க பெண் என்னுடன் கதைக்க விரும்பினாள். என்னைக் கண்டதும் குனிந்து மூக்கினால் என் சப்பாத்தைத் தொட்டாள். பின்பு ''இந்தக்கடிதத்தை உங்கள் பாதத்தில் வைக்கும்படி என் சகோதரன் தந்தார்'' என்றாள். பின்பு தன் இரு கையினாலும் அக்கடிதத்தை என்னிடம் தந்தாள். திறந்து பார்த்தபோது அதனுள் 35 பிராங் 60சதம் இருந்தது. நான் மதலேனுக்கு நன்றி கூறி அவள் சகோதரனுக்கும் நன்றி சொல்லும்படி கூறி அனுப்பினேன். அவளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிமார், சிஸ்ரர்மாரில் அதிகம் விருப்பம். கவலையாக இருந்தபோது அநாதைப் பிள்ளைகளின் சிற்றாலயத்திற்குச் சென்று தன் இரு கைகளாலும் தேவநற்கருணைப் பேழையைத் தொட்டு ''என் கண்ணீரையும் இதயக் கவலைகளையும் தருகின்றேன் இயேசுவே என்னை தேற்றிடுவாய்'' என்றாள்.

நேற்று மாலை நோயுற்ற எம் சிறுமி முதல் நன்மை பெற்று நோயில் பூசுதலும் பெற்றுக்கொண்டாள். சகோதரிகளும் பிள்ளைகளும் மெழுகுதிரியுடன் பவனியாகத் தோட்டத்திலிருந்த நோயாளியின் அறைக்குச் சென்றனர். அவள் நிலத்தில் படுத்திருந்தாள். மாலை ஒய்வுவேளை இயேசுவின் அன்பைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தபோது அவளின் ஆன்மா பேறுபெற்றோர் இடத்தை நோக்கிச் சென்றது.

**6 ஆடி 1868**

சிலமாதங்களின் முன்பு புனித சூசையின் பிள்ளைகள், அநாதைப் பிள்ளைகள், நவகன்னியர், ஆயத்த கன்னியருக்கு தந்தை Chounewel (சூனாவேல்), தந்தை Pellissier (பெலிசியர்) இவர்களால் தியானம் தமிழில் நடத்தப்பட்டது. ஆங்கிலப் பிள்ளைகள் இதில் பங்குபற்ற முடியவில்லை துறவு வாழ்வு பற்றி நவகன்னியருக்கு மட்டும் எடுத்துரைக்கப்பட்டது. ஆங்கிலத்தில் தியானம் நடாத்தத் தற்போது குருக்கள் இல்லை. பலர் தியானம் செய்த போதிலும் மவுனம் காத்தார்கள். விசேடமாகப் புனித சூசையின் பிள்ளைகளும் நவகன்னியரும் அடங்குவர். தியான உரைக்கு எல்லோரும் ஒருமித்து வருவார்கள். அவர்களின் பக்தியும் ஒருமித்த நிலையும் எம்மைக் கவர்ந்தது. எனவே பலர் தியானத்தின் அருளைப் பெற்றிருப்பார்களென நம்புகிறோம். இறுதி நாளில் 8 பேர் முதல் திருவிருந்தில் பங்குபற்றினர். அவர்களில் இருந்த உருமாற்றத்தை உணர்வுப்பூர்வமாக அனுபவித்தேன். அவர்களை ஆயத்தப்படுத்தியவர்களும் சந்தோஷப்பட்டனர். அவர்களிடையே ஒரு 10 வயதுப் பிள்ளை நல்ல புத்திக்கூர்மையுடையவளாகக் காணப்பட்டாள். அவளும் திருவிருந்தில் பங்குபற்றினாள். மாலையில் திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தனர். மாசில்லா மாதா உத்தரியம் பெற்றனர். தேவதாய் இந்நாட்டில் இப்பிள்ளைகளைப் பாதுகாப்பாராக.

தியான முடிவில் ஒர் அநாதைப் பிள்ளை நவ கன்னியர் இல்லம் சென்றா. இது முதலாவது பெண் ஆகும். பலர் அவளைப் பின்தொடர்வார்கள். பலர் துறவு வாழ்வை விரும்புகின்றனர். (aspir-ants) விண்ணப்பகாரர் வயது குறைந்தவர்களாக இருப்பதாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை அறிவதற்குக் காலம் தேவைப்படுகின்றது. ஆயர் ஐரோப்பா செல்லு முன் ஒரு பிள்ளை துறவு வாழ்வை விரும்புகிறா என்று என்னிடம் கூறினார். சிலநாட்களின் பின் இதுமாற்றம் அடைந்தது. மணம் முடிக்க விரும்பினாள். ''வசதி வந்தால் பார்ப்பேன்'' என்றாள். ஒருவருடம் இவ்வாறு கழிந்தது. பின்பு ஒருவர் எம் அநாதைப் பிள்ளைகளில் ஒருத்தியை மணம்முடிக்க விரும்பினார். சீதனம் தேவை இல்லை என்றும், தனது சமூகத்தைச் சேர்ந்த பக்தி உள்ள ஒரு பெண்ணைத் தேடினார். அப்போது நான் இவளை நினைவுகூர்ந்து கேட்டபோது ''தான் இப்போது மணம் முடிக்கவிரும்பவில்லையெனவும், துறவறவாழ்வு மேற்கொள்ள விரும்புவதாகவும் கூறினாள். பலமுறை கேட்டும் அவள் மறுத்து விட்டாள். தற்போது அநாதைச் சிறுமிகளுக்குப் பாடம் எடுக்கின்றாள். பிள்ளைகளை நன்கு கவனிக்கின்றாள். நவகன்னியர் இல்லத்தில் அவளைச் சேர்க்கமுடியும். தற்போது சுதேச இல்லத்தில் 11 நவ கன்னியர் உள்ளனர். ஒருவரை ஒருவர் அன்பு செய்கின்றனர். பக்தி பணிவு உள்ளவர்கள். அவர்கள் இங்கு வந்தபோது சரியாக நடக்கவே தெரியாது, ஒரு வேலையும் செய்யத் தெரியாது, தற்போது நல்ல பணிபுரிகின்றனர். பெரிய வேலைகள் செய்கிறார்கள். குழுமச் சகோதரிகளின் தையல், பழுது பார்க்கும் வேலை செய்கின்றனர். அநாதை மடத்தில் பிள்ளைகளைக் கவனிக்கின்றனர்.

ஒருநாளில் 2,3 மணித்தியாலங்கள் படிக்கிறார்கள் எம்முடன் பக்தி முயற்சிகளில் ஈடுபடுவர். கோவிலில் தமிழில் செபிப்பர். இடநெருக்கடி காரணமாக ஆங்கில நவகன்னியர் இல்லத்திற்கு 3 ஆயத்த கன்னியர் வருவார்கள். வியாதிகள் வரலாம். இறைவன் எம்மைப் பாதுகாப்பாராக. திருமுழுக்குப்பெற்று திருவிருந்தருந்திய ஓர் அநாத பிள்ளையை இழந்து விட்டோம். இறக்கும்போது நோயில்பூசுதல் பெற்றாள். மகள் சுகவீனமாக இருப்பதால் தாய் அவளுடன் இருக்க விரும்பினாள். மகள் எலனோர் தாயின் கண்ணீரைப் பார்த்து அழவேண்டாம். நான் விண்ணகம் செல்வேன். நீங்கள் ஒரு கத்தோலிக்க பெண்ணாக வரவேண்டுமென்பதுதான் எனது ஆசை, எனக்கு உறுதி மொழி கூறும்படி கேட்டாள். தாயும் வாக்குறுதி கொடுத்தாள். தந்தை மகளை வீட்டிற்குக்கூட்டிச் செல்ல விரும்பினார். அவள் இறந்தால் சுற்றம் சூழவுள்ளவர்கள் அழுது புலம்புவார்கள் எனக்கூறினார். எலனோர் போகவிரும்பாததால் மனைவியை மடத்தைவிட்டு போகும்படி கூறினார். பின்பு மகளிடம் இதைப்பற்றிக் கூற அவளும் ''தந்தையைச் சாத்தான் சோதிக்கிறது'' அதைக் கேட்கக்கூடாதென்று கூறிவிட்டு என்னை அழைத்தாள். தந்தை தாயைத் துன்புறுத்துகிறார், அவ இங்கிருந்தால் கத்தோலிக்க வேதத்தில் சேரமுடியும். வீட்டில் இருந்தால் தந்தை விடமாட்டார் என்றாள். அப்போது நான் தாயின் மேல் எனக்கு உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை, நீ விண்ணகம் சென்றபின் என்னிலும் பார்க்கக் கூடிய உதவி புரிவீர் என்றேன். இறுதி மூச்சு வரை அறிவுடையவளாக தனக்குத் தெரிந்த பக்தி முயற்சிகளைச் செய்தாள். சிலரிடம் கொஞ்சப் பணம் கொடுத்து வைத்திருந்தாள். தான் இறந்ததும் அப்பணத்துக்கு மெழுகுதிரி வாங்கி எனக்காக கோவிற் பீடத்தில் எரிக்கும்படி கூறினா. இறுதி மூச்சு விடுமுன் 2 நிமிடங்களுக்கு முன் அவளிடம் சென்றேன். எலனோர் நீ பேறுபெற்றவள், விண்ணகத்தில் முதலாவது ஆளாக ஆயரைச் சந்திப்பாய், எமக்கும், பணிக்கும் செபிக்கும்படி கூறுவாய் என்றேன். சிறிது தன்னை உயர்த்தி 'ஆம்' எனக் கூறி உயிர்விட்டாள். தாயும் எமது வேதத்தில் சேருவதாகக் கூறிச் சென்றுவிட்டாள். செபிக்கத் தொடங்கி விட்டாள். அவளின் இரண்டு பிள்ளைகள் எம்முடன் இருந்ததால் இடைக்கிடை வருவாள் சிலநாடகளின் முன் தன்பிள்ளைக்குச் செய்த வாக்குறுதியை மறந்ததாகக் கூறினேன். அதற்கு இல்லை எனக் கூறித் தான் அதை நிறைவேற்றுவேன் என்றாள். முன்பு புரட்டஸ்தாந்து மதத்தில் செபித்துக் கொண்டிருந்து பின்பு நிற்பாட்டி இருந்தாள். எனவே உங்கள் செபத்தைக் கேட்டு நிற்கின்றேன்.

மாதாவின், திரு இருதய ஆண்டவரின் மாதவழிபாடுகள் பக்தியுடன் நடைபெற்றன. 8 போடிங் பிள்ளைகள் தினமும் மாதாவுக்கு பூ வைத்தனர். திரு இருதய விழாவின்போது நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது. பிள்ளைகள் மிகவும் பயபக்தியுடன் செபித்தார்கள் இயேசுவின் திரு இருதயம் எம்மைச் சூழவுள்ள இருளில் நடப்போருக்கு வழிகாட்டுவதாக!

வைகாசி 12ந் திகதி இரு புதிய சகோதரிகள் வந்தார்கள் நாம் அவர்களைக் கோவிலுக்கு அழைத்துச் சென்று, கஷ்டமான தூரப் பயணத்தில் இருந்து இறைவன் அவர்களைப் பாதுகாத்து வழிநடத்தியமைக்காக நன்றி கூறினோம். அவர்கள் வருகை எமக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அந்த மகிழ்ச்சி துக்கத்துடன் கலந்திருந்தது. எம் தலைவிகளைப் பற்றிச் சல்லாபித்து மகிழ்ந்தோம். 6 வருடங்களாக அவர்களை நாம் காணவில்லை இவ்வுலகில் சந்திப்போமோ தெரியாது. எனவே இது ஆறுதல் அளித்தது.

எம் சகோதரிகள் இங்குள்ளவர்களுக்குப் பழக்கப்பட்டு வருகிறார்கள் ஐரோப்பிய பழக்கத்திலும் வித்தியாசமானவை. எண்றாலும் அவர்கள் வரும்போது பிரான்சில் உள்ளது போன்ற ஒரு குழும வாழ்வைக் கண்டார்கள். நாம் வரும்போது வெளியாட்களுடனேயே தொடர்புகொண்டோம். அவர்கள் மொழி எமக்கு விளங்காது எம்துறவு வாழ்வு அவர்களுக்கு விளங்காது. இவ்வருடம் வெய்யிற் சூட்டினால் எம் சகோதரிகள் துன்பப்படுகின்றனர். வியர்வையினால் சிறிய பருக்கள் தோன்றியுள்ளன. கட்டில் மிருதுவானதல்ல. எம் சகோதரிகள் சோறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறி சாப்பிடப்பழகிக் கொண்டனர். ஊக்கமுள்ளவர்கள் பிள்ளைகளுடன் பேசவும், விளங்கமுடியாததும்தான் கடினமான காரியம், எனவே சைகைகாட்டி ஊமைகள்போல் பேசுகின்றனர். என் பெரிய துன்பத்தை நான் மறக்கவில்லை. தற்போது நான் மொழி பெயர்ப்பாளராக விளங்குகின்றேன். இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். எம் சகோதரிகள் கொண்டுவந்த கடிதங்கள், பக்திப் பொருட்கள் எமக்கு மகிழ்ச்சியூட்டுகின்றது. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் நன்றிகூற விரும்புகின்றோம் அத்துடன் இரு மடங்காகச் செபித்து நாம் பலரைத் திருச்சபைக்குள் கொண்டு வருவதற்கு உதவும்படி கேட்கின்றோம். உலகில் இருந்துகொண்டு உண்மை ஒளியைக் காண்பது கஷ்டம்.

(Vitry) விற்றியில் உள்ள சகோதரிகள் அனுப்பிய பணம் கிடைத்தது. அவர்களின் மாணவர்கள் இதை எம் திருமண சேவைக்கு அனுப்பினார்கள். எம்பிள்ளைகள் தினமும் நன்கொடையாளருக்காகச் செபிக்கின்றனர். மணம் முடித்த அநாதைப் பிள்ளைகள் தாம் சென்ற இடத்தில் நல்ல நன்மைகள் செய்கின்றனர். திருவருட்சாதனங்களுக்கு ஆயத்தப்படுத்துகின்றனர். St. Saulve சென்ற். சோர்விலுள்ள (Ursuline) ஊர்சுலின் பெண்களின் மாணவர்கள் வலன்சிற்கு (Valenec) அருகே உள்ளவர்கள் எம் பணியில் அக்கறை காட்டுகிறார்கள். பல வருடங்களாக எம் அநாதைப் பிள்ளைகளுடன் தொடர்புடையவர்கள். தற்போது ஒரு கடிதம், பாடல்கள், பக்திப் பொருட்கள் அனுப்பியுள்ளனர். (Nantes) நான்ற் இல் உள்ள கிளாறிஸ் சகோதரிகள் அச்சுப்படங்கள் அனுப்பியுள்ளனர்.

அரச கல்வி அதிகாரி எம்மைச் சந்திக்க வந்தார். பரீட்சையில் எதிர்பார்த்ததிலும் பார்க்க நன்றாகச் செய்தனர். பெரிய பிள்ளைகள் இவ்வருடம் பாடசாலையை விட்டுச் சென்றுவிட்டனர். இறைவன் எமக்கு உதவி செய்து வருகின்றார். பரீட்சை இறுதி நாளில் வடபகுதி அதிகாரி Mrs. Russel திரு. திருமதி றசெல் வருகை தந்தனர். இருவரும் சங்கீதப் பரீட்சை, பாட்டு, உரையில் பங்குபற்றினர். பின்பு நேரடியாக புனித சூசையின் தொழிலகத்திற்குச் சென்றனர். பிள்ளைகளின் வேலையைப் பார்த்து மகிழ்ந்து பொருட்களை வாங்கியும், ஓடரும் கொடுத்தனர். தொடர்ந்து அநாதை இல்லம் சென்றனர். பிள்ளைகள் அவர்கள் முன்னிலையில் தைத்து, பின்னி, அயன்பண்ணி, மடித்துக் காட்டினர். இது அவர்களைக் கவர்ந்தது. அத்துடன் இங்குள்ள பெண்களுக்கு ''லோன்றி'' மிகவும் நல்லது என்று சொன்னார். ஏனென்றால் இங்குள்ள ஆண்கள்தான் உடுப்புக் கழுவி அயன் பண்ணுகிறார்கள் என்றார். எம் பரீட்சையை அவர்கள் வந்துபார்த்தது நல்லது. வேறுபாடசாலைகளுக்கு அவர்கள் செல்லவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை முடிய எம் தியான நாட்களைத் தொடங்கினோம். 8 அருளின் நாட்கள் வருடாந்தக் களைப்பை நீக்க உதவியது. நல்ல அமைதியான நாட்கள். எமது அருமையான 80 பிள்ளைகள் அமைதி காப்பாற்றினார்கள். இத்துடன் புனித இராயப்பர் சபைக் கன்னியரின் கடிதம் அனுப்பி வைக்கிறேன். உங்கள் திருநாளில் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர். அவர்கள் கடிதத்தை நான் பிரான்சிய மொழியில் தருகின்றேன். சிஸ்ரர். யூஸ்ரல் சிறிது களைப்பாக இருக்கிறா. சிஸ்ரர். திறினிற்றி நலமுடன் இருக்கின்றா. பெரிய அநாதைப் பிள்ளைகள் இச்சகோதரியின் தலைமையில் வேலை செய்கின்றனர். சிஸ்ரர். யூஸ்ரல் சைகை மூலம் கதைக்கின்றா. அவ ஆங்கிலம் படித்தால்தான் போடிங்கில் பணிபுரிய முடியும்.

**இராயப்பர் சபை நவகன்னியர், சபைத்தலைவிக்கு எழுதுவது.**
**(சிங்களத்தில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது)**
**யாழ்ப்பாணம் 9 ஆடி 1868**

எல்லாம் வல்ல இறைவன் பாதுகாப்புடன், திருக்குடும்பத்தின் ஒரு கிளையாகிய புனித இராயப்பர் சபையின் அங்கத்தவர்களாகிய நாம் உங்கள் பாதத்தில் விழுந்து மன்னிப்பு, ஆசீர் கேட்டு நிற்கின்றோம். ஆவணி 15ந் திகதி உங்கள் திருநாள் வருகிறது. நீங்கள் தூர இருக்கிறீர்கள். நாம் விரும்புவது செய்யமுடியாது. இக்கடிதத்தின் வழியாக நாங்கள் உங்களைப்பார்க்கிறோம் உங்களுடன் கதைக்கிறோம் எம் அன்பை உங்களுக்குத் தெரிவிக்கிறோம். 9 நாட்களின் முன் எம்பாவம் தவிர்ந்த செயல்கள் யாவற்றையும் காணிக்கையாக்குகின்றோம். உங்கள் திருநாளில் உங்களை நாம் மறக்கமாட்டோம். இங்கு இருந்தாலும் எம் இதயம் உங்களுடன்தான் இருக்கும். எனவே உங்களை எம் இதயத்தில் பதித்தோம். நீங்கள் எங்களுக்காகச் செபிப்பதுபோல் நாமும் உங்களுக்காகச் செபிக்கிறோம். நற்சுகமும் இறை ஆசியும் கேட்டுநிற்கிறோம்.

நாம் புதிய மடத்திற்குச் செல்லும்போது உங்கள் போட்டோ தருவதாக எமது தாயார் கூறினார். தற்போது நாம் தென்னோலைக் குடிசையில் இருக்கிறோம். எம் நல்ல பிதாவின் படமும் எம் சபைத் தலைவர், எம் ஆயர் படங்களையும் தருவதாக எம் தாயார் கூறியுள்ளார். எம் தாயார் சேவியர் படம் கிடைப்பது மகிழ்ச்சி. எம் அறையில் மாட்டுவோம்.

நாம் தியானம் செய்திருக்கிறோம் அருள்களைப் பெற்றிருக்கிறோம். இறைவனுடைய உதவியுடன் நாம்பெற்ற அருளைப் பாதுகாப்போம். எனவே எம் தாயாரைத் துக்கப்படுத்தாது அமைச்சலுள்ளவர்களாக இருப்போம். திரு இருதயத் திருவிழா, தியான முடிவின்போதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு எம் சபைத் தலைவர் திருக்குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்காகவும் செபித்தோம். எம் சபைத் தலைவியைப் பார்க்க விரும்பினாலும் இவ்வுலகில் இது முடியாத காரியம், விண்ணகத்தில் மட்டுமே காணமுடியும்.

தயவுசெய்து உங்கள் உடல் நலனைத் தெரிவிக்கவும் அத்துடன் பிதா சூலியே (Soullier) படம் அனுப்பியிருந்தார். அவருக்கு நன்றி கூறிவிடவும் அப்படங்களை எம் செபப்புத்தகத்தில் வைத்துள்ளோம் நற்கருணை ஆசீர் கிடைக்கச் செபிக்கின்றோம்.

உங்களிடம் ஒன்று கேட்க விரும்புகின்றோம். நாம் மூவர் முதல் வாக்குத்தத்தம் செய்ய விரும்புகின்றோம். தயவுசெய்து உத்தரவு தாருங்கள். அத்துடன் 6 ஆயத்த கன்னியர் பிரான்சிஸ்கா, மதலேன், அன்ரோனியா, திரேசா, கத்தறின், லூசியா துறவு உடை எடுக்க விரும்புகின்றார்கள். உத்தரவு தரவும். இறைவனுக்காக நாம் இங்கு வந்துள்ளோம். அவருக்கே எம் வாழ்வைக் கொடுக்க விரும்புகின்றோம். எம் உள்ளத்தில் உள்ளதை அப்படியே கூறுகிறோம்.

எம் ஆயர் உயிருடன் இருந்தபோது எமக்கு சூரியஒளி போன்று இருந்தார். அவருடைய முகதரிசனம் எமக்கு மகிழ்வைக் கொடுத்தது. அவரின் மரணம் எமக்குத் துயரைத் தருகின்றது. இதயத்தை ஊசி ஊடுருவியதுபோல் உள்ளது. இறைசித்தம் என ஏற்றுக்கொண்டோம். 8 மாதங்கள் பிரான்சில் இருந்தார். இனி நாம் அவரைக் காணமுடியாது. விண்ணகத்தில் இயேசுவுடன் உள்ளார் என்பதை உணர்கின்றோம்.

பிரான்சில் இருந்து ஆயத்த கன்னியர் எமக்கு சில வெகுமதிகள் அனுப்பிவைத்தனர். நாம் அதற்குத் தகுதியற்றவர்கள். அவர்களை நாம் அன்பு செய்கின்றோம். அவர்களுக்காகச் செபிக்கின்றோம் அவர்களின் கடிதத்தை மகிழ்வுடன் வாசித்தோம். எமது சபைத் தலைவி நவகன்னியருக்கு கடிதம் எழுத விரும்பினும் ஆங்கிலத்தில், பிரான்சிய மொழியில் எழுத முடியாதவர்களாகவுள்ளோம்.

இத்துடன் எம்மடலை நிறைவு செய்கின்றோம். எமக்கு விருப்பமானது எல்லாம் எழுதினால் ஒரு புத்தகமே எழுதிவிடலாம். இக்கடிதம் கிறீஸ்தவர்களின் பாரிய அடிக் கல்லாகிய புனித இராயப்பரின் சுதேச பிள்ளைகளால் எழுதப்பட்டது. அநாதைப் பிள்ளைகளும் தம் தாழ்மையான வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து நிற்கின்றனர். நல்ல இறைவன் நற்சுகத்தையும் தேவையான அருள்களையும் பொழிந்து வருவாராக!

சகோதரி கபிரியேலா, மரிமிஷல், மரிஆஞ் - மதலேன், திரேசியா, பிரான்ஸ்சிஸ்கா, யுஸ்ரீனா, கத்தறின், லூசியா, அன்ரோனியா, திரேசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆயத்த கன்னியர் பொதுவாகத் தமிழில் கதைத்தாலும் கடிதம் சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளது. பலர் சிங்களவர்களாக இருக்கிறார்கள்)

**8 ஐப்பசி 1868**

எம் தாயார் தற்போது சிறிது களைப்பாக இருப்பதால் தனக்காக என்னை எழுதும்படி கூறியதால் இப்பணியைச் செய்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். எனக்குக் கவர்ச்சியான முறையில் எழுதத் தெரியாததால் பயப்படுகின்றேன். என்றாலும் என்னால் இயன்றளவு யாழ். குடும்பத்தில் கடைசி நாட்களில் நடந்தவற்றைத் தருகின்றேன். உங்கள் புரிந்துணர்வைக் கருத்தில் கொள்ளுகிறேன்.

விசுவாசப் பரப்புதல் சபை, திருப்பாலத்துவ சபை, லொத்தர் வழியாக 180 பிராங் கிடைத்தது. இங்குள்ள வறுமையைப் பொறுத்தமட்டில் இந்த நிதி பெரியது. இவ்வருடம் ஆங்கிலப் பிள்ளைகளும் குறைவு எனவே ரிக்கெற்றை விற்பது கஷ்டமாக இருந்ததால் சில குருக்கள், குழுமம் முன்னிலையில் மகிழ்வுடன் லொத்தர் இழுப்பு நடைபெற்றது.

ஆவணி 15ந் திகதி அண்மித்ததும் ஆயத்த கன்னியரும், சுதேச நவகன்னியரும் நவநாள் உங்களுக்காகச் செய்வதற்கு உத்தரவு கேட்டனர். அவர்களின் செபங்கள் செயல்கள் திருவிருந்து எல்லாம் உங்கள் கருத்துக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டன. 14ந் திகதி மாலை தம் வாழ்த்துக்களைத் தெரிவித்து ஒவ்வொருவரும் ஒரு பூவை அன்பின் அடையாளமாகத் தந்தனர். ஒரு பிள்ளை ஒரு உரை ஆற்றினா இந்த இதயபூர்வமான செயல்களால் நாம் உணர்ச்சி வசப்பட்டோம்.

ஆவணி 15ந் திகதி 10 இந்துப் பிள்ளைகள் திருமுழுக்குப் பெற்றனர். எமக்கு இது மிகவும் மகிழ்ச்சி 2 1/2 மணித்தியாலமாக நடந்த வழிபாட்டில் இவர்கள் பக்தியுடன் பங்குபற்றினர். சாத்தானின் அரசு எம்மிடையே இருந்து விரைவில் அழிக்கப்படும் என்றும், இறைவன் வெற்றி பெறுவார் என்றும் மாலையில் இவர்கள் கூறினர். 60 அநாதைச் சிறுவர்களில் 4இந்துப் பிள்ளைகளே இன்னும் உள்ளனர்.

சில நாட்களின் முன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு குரு எம்மைச் சந்திக்க வந்தார். எம் தாயாரிடம் சில நகைகளைக் கொடுத்தார். ஒரு பெண்தான் சாகு முன் எம் சகோதரிகளுக்கு இந்த நகைகளைக் கொடுக்கும்படி கூறியிருந்தா. எம் அநாதைப் பிள்ளைகளின் திருமணத்திற்கு இவை உதவும். இச்சுதேச குரு கிறீஸ்து பிறப்பு நாளில் பூசை ஒப்புக்கொடுக்கக் கேட்டார். காணிக்கையை அநாதைப் பிள்ளைகளிடம் கொடுக்கும்படி கூறினார். பின்பு பிள்ளைகளுடன் அன்பாகக் கதைத்தார். சுதேச குருவாக இருந்தாலும் அவரின் நடத்தை எமக்கு ஆச்சரியமாக இருந்தது. தான் பல வருடங்கள் ஐரோப்பாவில் வாழ்ந்ததாகக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல இறைவன் நமக்குத் துன்பத்தையும் தருகின்றார். அது அவரின் அன்பின் வெளிப்பாடு. ஒவ்வொரு வருடமும் எமது அநாதைப் பிள்ளைகளை நோய் தாக்கித்தொற்றிப் பரவுகின்றது. இவ்வருடமும் 15 பிள்ளைகள் சின்னமுத்து நோயினால் தாக்கப்பட்டுள்ளனர். 6 பேர் குணமடைந்தனர். நோய் பரவாமல் இருப்பதற்கு ஒரே வழி நோயாளியைத் தூர இடத்தில் வைப்பது தான். அதற்கு ஒரு வீடு தேவை. இதற்குப் பல மாதங்கள் தேவை இல்லை. இங்கு சில மணித்தியால வேலைதான். சில தென்னோலைகள், சில மரங்கள் நடுவதற்குத் தேவை அதன் மேலே சலாகைகள் வைத்து பின்னிய கிடுகுகளினால் வேய்ந்து விடுவதுதான். கீழே தரையில் பாயை விரித்து விடுவர். கிளாசில் தேங்காயெண்ணெய் ஊற்றி எரிப்பர். ஐரோப்பாவில் இந்த முறைகள் தெரியாது.

இப்பிள்ளைகளைப் பராமரிக்க ஒரு சுதேச சகோதரி இருக்கின்றா. இரவும் பகலும் அவர் மத்தியில் இருப்பா. மாலையில் சிலவேளை நாம் இப்புதிய வீட்டிற்குச் செல்வோம் எம் தாயார் இந்தச் சந்திப்பில் எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்துவா.

எம்மிடம் உள்ள அநாதைச் சிறுமி ஒருவர் விண்ணகம் செல்லப் போகின்றா. பெற்றோர் இந்துக்கள் மகள் கத்தோலிக்க பிள்ளை, சிலநாட்களின் பின் திருவிருந்தில் பங்குபற்றுவா. இந்தவாரம ஒரு அநாதைப் பிள்ளை கத்தோலிக்க இளைஞனை மணம்முடித்தா. இவ்வாறான திருமணங்கள் அவர்களையும் மீட்டு, வரும் சந்ததியையும் மீட்டுக் கொள்ளும் இதனால் இறைவன் மகிமைப்படுத்தப்படுவாராக!

நல்ல செய்திகளைக் கூறிய பின் தற்போது எவ்வாறு தேவபராமரிப்பு எம்மைக் காப்பாற்றுகிறது எனக் கூறப்போகின்றேன். இங்குள்ள சிறு பூச்சிகள், பிராணிகள் பற்றிக்கூறப்போனால் அவை தினமும் எம்மைப் பயப்படுத்துகின்றன. நவகன்னியரின் கொட்டிலில் பாம்பு இருந்தது. புலிமுகச் சிலந்தி அநாதை இல்லத்துக்கு வருகின்றது. ஒரு கிழமையில் 6 புலிமுகச் சிலந்தியைக் கண்டோம். கடித்தால் மரணம்தான். ஒரு சிறுமி சில இரவுகள் தன் பாயின் கீழ் ஏதோ இருந்ததைக் கண்டு பார்த்தபோது ஒருபெரிய கறுப்புச் சிலந்தியைக் கண்டாள். 6 வருடங்களாக எம் சகோதரிகள் ஒரு விபத்துமின்றி இருந்தனர். கொடுக்கன் வாலினால் தாக்குகிறது. சிறிய எறும்புகளும் இரவில் வருகின்றன. பூனைகளும் எம் படுக்கை அறைக்கு வருகின்றன. பாயில் நடக்கும்போது எம்மை விழிக்கச் செய்கின்றது. எலிகள் ஒரு பக்கம், எனவே இங்கு நன்கு நித்திரை செய்யமுடியாது. சிஸ்ரர் திறினிற்றி பிராணிகளைக் கொன்று விடுவா. இறை பராமரிப்பில் நம்பிக்கைவைத்து நல்ல நித்திரை செய்வா.

ஒளியின் செயல்களையும் கூறவிரும்புகின்றேன். சூரியனின் மறைவு எம் கடற்கரையில் அழகாக இருக்கும் புதுவீட்டில் ஒரு மணித்தியாலம் ஆங்கில வகுப்பு எடுப்பேன், எம்தாயாரும் இருப்பார்.

நான் இங்கு மகிழ்வுடன் இருக்கிறேன். என்னைத் தினமும் இறைவன் நேசிக்க இவை எல்லாம் உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம் 5 தை . 1869.**

என் நல்ல தாயாரே!

எனது கடைசி அறிக்கையில் எம் அநாதைச் சிறுவர்களைச் "சின்னமுத்து" நோய் தாக்கியதாக எழுதியிருந்தேன். ஒருவர் இறந்து விட்டார். அதன்பின் எட்டு பிள்ளைகள் இறந்துவிட்டனர். அவர்கள் சிலகாலத்துக்கு முன்பே திருமுழுக்கு நீரால் கழுவப்பட்ட பூக்கள். இறைவன் அதனைக் கொய்து தன் விண்ணகத்தோட்டத்தில் வைத்துள்ளார். இதனால் இவர்களின் வெற்றிடங்களை நிரப்ப வேறு பிரிவினைமதத்தவர்கள் வந்து சேருவார்களென்ற சிந்தனையானது எமது துயரத்தைக் குறைக்கின்றது. Fr.Pellissier இவர்களின் இறுதிப்பயணத்தில் உதவி செய்தார். ஒரு பிள்ளை தனது வாழ்வுபற்றிக் கவலையடைந்தார். "இறைவன் நான் ஒரு துறவியாக வரவிரும்பவில்லை போலும்" என்றார்.

இந்த நிலையிலே எம்விழா ஆயத்தங்களைச் செய்தோம். இவ்வேளையில் இறைவன் ஆயர் பொன்ஜீனை அனுப்பினார். மதபேதங்கள் இல்லாது ஒருபெரிய வரவேற்பு கொடுக்கப்பட்டது. அடுத்தநாள் எம் வகுப்புக்களைச் சந்திக்க வந்தார். தன் குருக்களுடன் பவனியாகக் கோவிலுக்குச் சென்று நற்கருணை ஆசீர்வாதம் கொடுத்தார். பிள்ளைகள் "என் ஆன்மா" என்ற மரியாளின் பாடலைப்பாடினார்கள். பின்பு ஒரு வகுப்புக்குச் சென்று ஆங்கிலப்பிள்ளைகளின் நாடகத்தைப் பார்த்தார். அதன்பின் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஆறுதல் கூறினார்.

மார்கழிமாதம் பல வேலைகளால் பரிசளிப்புவிழா பகிரங்கமாக நடைபெறவில்லை. ஆயரையும், குருக்களையும் அழைத்து பரிசில்களைக் கொடுத்தோம். ஆளுநரின் மனைவி பிள்ளைகளின் சங்கீதத்திற்குப் பரிசாக ஒரு பெரிய புத்தகம் அனுப்பியிருந்தார். அவர் ஓருநல்ல பெண். சில நாட்களின்முன் ஐரோப்பா சென்றுவிட்டார்.

முன்னைய ஆண்டுகளைப்போன்று இம்முறையும் எம்விற்பனையை நம்பிக்கைமாதா, புனித சூசையப்பர் பாதுகாவலில் ஆரம்பித்தோம். இம்முறை விற்பனை குறைவு. புரட்டஸ்தாந்து மதத்தவர்கள் இங்கிலாந்திலிருந்து பொருட்களை எடுப்பித்து 15 நாட்களுக்குமுன் விற்பனை செய்தார்கள். எமது சகோதரிகளை அவர்கள் விரும்புவதில்லை. எனினும் திருக்குடும்ப பக்தியுடன் எம் பணிகளைச் செய்தோம். எனினும் சூசையப்பரின் பிள்ளைகள் தங்கள் பொருட்கள் நன்கு விற்கப்பட்டால் உத்தரிக்கின்ற ஸ்தலத்து ஆன்மாக்களுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபிப்பதாகக் கூறினார்கள். பொருட்கள் நன்கு விற்கப்பட்டடன. பிரிவினை மதத்தவர்களும் வந்து வாங்கினார்கள். வேலை முடிந்தபின் ஒய்வெடுத்து தியான ஒடுக்கம் செய்தோம். ஆயர் பிரசங்கம் செய்தார். அவரின் படிப்பினைகள் மிகவும் உறுதி வாய்ந்தன. பின்பு 2 நோவிசியற்றுக்கும் தியானம் நடைபெற்றது. இறுதிநாள் விழாவைக் கொண்டாடினோம். எமது சுதேச இராயப்பர் நவகன்னியர்கள் மூவர் கீழ்ப்படிதல் வாக்குத்தத்தம் செய்தார்கள். இம்மூவரும் எமது சபையில் புதிய கிளையில் 3 ஸ்தாபர்களாக இருப்பர். எம் சபை தோன்றிய போதும் மூன்று ஸ்தாபகிகள் ( நல்ல தாய்மார்) எம் ஸ்தாபகருக்கு உதவினார்கள். சிஸ். மாகிறெற்மேரி, சிஸ்.ஒணறின் என்ற இரு போஸ்ரியூலன்ஸ் உடுப்பு எடுத்து இப்பெயரைப் பெற்றுக் கொண்டார்கள். சிஸ். மாகிறேற்மேரி திரு இருதயப் பக்தியின் அப்போஸ்தலரின் பெயரைப் பெற்றார். சிஸ். ஓணறின் அவரின் நல்ல தாயாரின் பெயரைப் பெற்றிருக்கிறார். ஆடம்பரமாக எம்ஆலயத்தில் ஆயர் தலைமையில் பிரதி ஆயர் Fr.Pellissier முன்னிலையில் நடைபெற்றது. இரு அநாதைப் பிள்ளைகள் சுதேச சபை நவகன்னியர் இல்லத்தில் சேர்க்கப்பட்டனர். மரிஆச்சி, மறீயா ஆகிய இருவரும்தான் அவர்கள். மரிஆச்சி படிப்புக் குறைவு. ஆனால் நல்ல பிள்ளை. ஒரு வருடம் எம் அநாதை மடத்தில் இருந்தாள். பிள்ளைகளைக் கவனிக்கக் கூடியவள். மறீயா அநாதை மடத்தில் முதலாவதாகச் சேர்ந்தவள். தாய் பிற சமயத்தவள். தன் தோட்டத்தில் தங்கள் தெய்வச் சிலைகளை வைத்திருந்தாள். இவர் தான் மூத்த புதல்வி. இவரின் தீர்மானம் தாய்க்கு துன்பத்தைக் கொடுத்தது. தாய்க்கு இன்னும் இரு பிள்ளைகள் இருக்கின்றார்கள். தாய் தன்னைப் பார்க்க வரும்போது ஒரு சிஸ்டரைத் துணைக்குத் தரும்படி இந்த நவகன்னிகை கேட்டார். நேற்றுத் தாய் வந்தார். நான் சிஸ்ரர் லூயிசைத் துணைக்கு அனுப்பினேன். மகளின் கழுத்தில் மாலைக்குப் பதிலாக சிலுவை இருப்பதைக் கண்டு தாய் சினம் கொண்டாள். இறை அழைத்தலைப் பற்றித் தாய்க்கு சிஸ்ரர் விளக்கம் அளித்தார்.

மூன்று ஆங்கிலப் பிள்ளைகள் முதல் நன்மை பெற்றனர். 13 பிள்ளைகள் உறுதிப்பூசுதலைப் பெற்றனர். இரு நவகன்னிகை இல்லமும் ஒன்றாகச் சேர்ந்து விருந்தில் பங்குகொண்டனர்.

பொஞ்ஜீன் ஆயர் பிரான்சில் இருக்கும்போது அங்குள்ள தேவபராமரிப்புச் சபை சகோதரிகளுடன் தொடர்பு கொண்டு எம்அநாதைப் பிள்ளைகளைப் பற்றிக் கூறினார். அவர்கள் செபமாலை, வரவணிக்கம் அனுப்புவதாகக் கூறினார்கள். இவற்றை அனுப்புபோது "மதலேன்" என்னும் பெயரில் அனுப்புவதாகக் கூறினார்கள். எம்மிடம் அப்பெயரில் ஒருவரும் இல்லை. தற்போது ஒரு பிறசமயப் பெண் தன் கணவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - 3ம் குறுக்குத்தெருவில் ஆதித்தாய்மாரின் முதல் இல்லங்கள்
(1862 - 1869)







அருகில் புரட்டஸ்தாந்து ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்பொழிந்த ஆண்டவன் ஆலயம்



ஆதரவளித்த ஆயரின் இல்லம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தைக் கவர்ந்து பலமுறை ஓய்வெடுத்த வலிகாமம் (மாதகல்)



முதல் மடம் 1894



புனித அந்தோனியார் ஆலயம்



பணி மனை





புனித தோமையார் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








பொறுப்பேற்ற மரியாள் பாடசாலை
22.09.1890



ஆராதனையில்
பங்குகொண்ட ஆலயம்



அடைக்கல மாதா ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பலமுறை சந்திக்கச் சென்ற
புனித. லிகோரியார் ஆலயம்



இந்துக் கோவிலைச்
சந்தித்த அனுபவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்மடத்திற்கு அடிக்கல்நாட்டல்
02.06.1864

சிற்றாலயம்





இலங்கையின் முதல் பெண்துறவிகளின்
மடம் (புதுமடம் புகுதல் 22.01.1870)



மரியன்னை பக்தியின்
ஊர்வலம் - கெபி



யாழ். திருக்குடும்ப பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருஇருதய பாடசாலை
குருநகர்
திறப்பு விழா 1873
பாஸ்காத்திங்கள்



புனித ஜேம்ஸ் மகளிர்
வித்தியாலயம்






புனித ஜேம்ஸ் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Kayts வரவேற்பு



புனித ஜேம்ஸ் ஆலயம்



புனித மரியாள் ஆலயம்



புனித அந்தோனியார் ஆலயம்



துறைமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்து, பொருட்களையும் இழந்து தன் 4 வயதுப் பெண்ணையும் எம்மிடம் தந்தாள். நான் அவளை நேரே கோவிலுக்கு கூட்டிச்சென்றேன். பின்பு அநாதை மடத்துக்கு அழைத்துச் செல்ல எல்லோரும் மகிழ்ச்சியடைந்தார்கள். அவளுக்கு "மதலேன்" என்று பெயரிட்டுள்ளோம்.

## 10 சித்திரை 1869

எமது செய்திகள் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதனால் நாம் செய்த சுற்றுலா ஒன்றைப் பற்றி எழுதுகின்றேன். அன்று நாம் அதிகாலையில் எழுந்து திருப்பலியில் பங்குபற்றிக் காலை உணவின் பின்பு சிலர் வாகனத்திலும், சிலர் மாட்டு வண்டியிலும் பிள்ளைகளும், நவகன்னியர்களும் சாவகச்சேரிக்கு சென்றோம். பாதை மிகவும் அழகானது. இருமருங்கும் நெல்வயல். வெள்ளை, றோஸ் நிறத்தில் அலரிப் பூக்கள். கடல்நீர் அடைக்கப்பட்ட பாத்தி வரம்புகள் காட்சி தந்தன. இரண்டு மணித்தியாலயங்களின் பின்பு ஆலயத்தை அடைந்தோம். முதல் நாள் மாலையிலே சிலர் எம்மை வரவேற்க வந்திருந்தனர். ஆலயம் பெத்லகேமை எமக்கு நினைப்பூட்டியது. அறை வீடும் கிடுகளால் வேயப்பட்டிருந்தது. ஒரு தோட்டக்காரனும், அவரது மனைவியும் அந்த வீட்டைப் பாதுகாத்து வந்தார்கள். நாம் அங்கு சென்றதும் பாய்விரித்து மேசை, கதிரை போட்டார்கள். இவ்விடத்து மக்கள் பிற சமயத்தவர்கள். கத்தோலிக்கர் குறைவு, ஏழைகள். மிஷனறிக் குருக்கள் வருடத்திற்கு ஒரு முறை வந்து 8 நாட்கள் தங்குவார்கள்.

அதற்குப் பக்கத்தில் ஒரு ஆலமரத்தின்கீழ் ஒரு சைவக் கோவில் உள்ளது. மாலையில் பொங்கல் விழா. புதுப்பானையில் 2000ம் பேரளவில் பொங்கினர். அதனூடாக நாம் செல்லும்போது "கிறிஸ்தவர்களே உள் நுழையாதீர்கள். நீங்கள் இதனை மாசுபடுத்துகிறீர்கள்" என்னும் குரல் கேட்டது. அப்போது ஒருவன் கோடரியுடன் கண்களில் கோபம் பொங்க நின்றான். எனவே நான் 2 ஆயத்த கன்னியரையும், 1அநாதைப் பிள்ளையையும் அதனூடாக வழி இருக்கிறதா எனப் பார்க்க அனுப்பினேன். அந்த மரத்தைப் பார்க்க விரும்பினோம் என அமைதியாகக் கூறி வீடு திரும்பி வந்தோம். பின்பு வேறொரு நேரத்தில் இன்னொரு பாதையால் அங்கு சென்று அந்த ஆலமரத்தைப் பார்த்தோம். கோவிலுக்குள் நாம் செல்லவில்லை. மரம் அடர்த்தியானது. உள்ளே பல சிறிய கோவில்களுண்டு. அங்கு குருக்கள் பலி செலுத்தவார்கள். நாங்கள் "அருள்நிறை மரியே" செபம் சொல்லி ஆவேமறிஸ்ரெலா பாடினோம். கிறிஸ்தவர்கள் எம்மைச் சந்திக்க வந்தபோது செபமாலை, பாடுபட்ட சிலுவை கொடுத்தோம். இளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களும் தங்களுக்கு ஆசிரியர் இல்லை என்றனர். அங்குள்ள பலமரங்கள் பயன்தரும் போது எம் அநாதைப் பிள்ளைகள் இங்கு வந்து மக்களுக்குச் செபம் சொல்லிக் கொடுக்கலாம் என ஆயர் கருதுகின்றார்.

சில நாட்களுக்குப்பின் யாழ்ப்பாணத்திலிருந்து ஒருமைல் தூரத்திலுள்ள கொழும்புத்துறை என்னும் இடத்திற்குச் சென்றோம். Fr. Boisseau புவாசோ அநாதை மடத்தின் இயக்குனராக இருந்தார். அவர்களுடன் தேநீர் விருந்து அருந்தும்போது நீக்கிலாஸ் என்பவருக்கு விவாகபந்தன மோதிரமாற்று நடைபெற்றது. எம்மிடம் புதுத்தம்பதிகள் வந்தார்கள். நாம் இங்கு பலவித பணிகளில் பங்குபற்றுகிறோம். எல்லாவற்றிலும் இறைவனுக்கு மகிமையும், ஆத்துமங்களின் மீட்பையுமே நோக்கமாகக் கொண்டுள்ளோம். இன்னொரு அநாதைப் பிள்ளையின் திருமணம் நடைபெற்றது. கணவனோடு எம்மிடம் வந்து சந்தித்தனர். தேவதாயின் திருமண ஒப்பந்தநாள் பெண்களுக்கு சீதனம் சேர்க்கும் நாளாக இருந்தது. அன்றையதினம் இந்த நன்கொடையாளர்களுக்காக ஆயர் திருப்பலி நிறைவேற்றினார். எமது பிள்ளைகள் பாடி நன்றி கூறினார்கள்.

எமது ஆங்கில வகுப்புப் பிள்ளைகளுக்கு Fr. keating தியானம் கொடுத்தார். குழந்தைகளின் நடத்தைகளைப் பாரட்டினார். விசுவாசப் பரப்புதல் சபையில் சேரவிரும்பி திருப்பாலத்துவசபைப் பிள்ளைகள் பல தியாகங்கள் செய்து காணிக்கை ஒப்புக் கொடுத்தனர். 4 ஆயத்த கன்னியர் சுதேச சபைக்கு வந்துள்ளனர். ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். ஒரே ஒரு மகள். தாய் விதவை. பிரிந்து வருவது கஷ்டமாக இருந்தது. எனினும் இறைசித்தம் எனக் கூறிவந்தாள். ஏனைய மூவரும் வலிகாமத்தைச் சேர்ந்தவர்கள். பெற்றோர்கள் சம்மதிக்காததால் ஒன்றும் கூறாமலே வந்துவிட்டார்கள். பெற்றோர்கள் தேடிவந்தும் அழைத்துச் செல்ல முடியவில்லை. இங்கு திருமணம் செய்வதே இவர்களின் வழக்கம். எனவே துறவுவாழ்வு விளங்காது.

யாழ்ப்பாணத்தில் ஒரு "மகாதியானொடுக்கம்" ஆரம்பிக்கப்பட்டுள் ளது. குருக்களுடன் நாமும் ஒத்துழைக்கின்றோம். எமது பிள்ளைகள் மாலையில் பாடல்களில் பங்குபற்றுவார்கள். தற்போது பெற்றோர் தம் பிள்ளைகளை எம்மிடம் அனுப்புகிறார்கள். முன்பு இளம்பெண்களுக்குப் படிப்புத் தேவையில்லை. வீட்டிலே இருந்து சமையல் செய்தால் போதும் என்றிருந்தவர்கள் இப்போது தியானத்தின் பயனாக மனமாற்றம் அடைந்து வருகின்றனர். தற்போது 100 பெண்கள் உள்ளனர். இடம் காணாது. சூடு அதிகம், எனினும் ஒரு புதிய வீடு ஆயத்தமாகின்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுநரும் கோவிலுக்குச் செல்வதற்கு ஒரு புதிய வீதி அமைக்கின்றார். Convent street எனப் பெயரிடப்படும். வீடும், வீதியும் ஒரேநேரத்தில் முடிவடையும்.

ஆயர் அன்புப் பெண்கள் ladies of charity சபை ஒன்றை ஆரம்பித்துள்ளார். புனித ஆனாள் பாதுகாப்புடன் தொடங்கிய இச்சபையில் இரு நோக்கங்கள் உள்ளன. 01.) ஏழைப் பெண்கள் கோவிலுக்கு வருவதற்கு உடையளித்தல். 02.) குடும்பப் பெண்களுடன் எமக்குத் தொடர்பை ஏற்படுத்துதல். இச்சபையை இயக்க ஆயர் எம்மைக் கேட்டுள்ளார். தற்போது 13 பெண்கள் சேர்ந்துள்ளனர். (பணம் படைத்தவர்கள்) 19 ஏழைப் பெண்களுக்கு உதவி செய்துள்ளனர். சிறிது நாட்களின் பின் ஒரு 16 வயதுப் பிள்ளை ஆயரால் எம்மிடம் அனுப்பப்பட்டுள்ளாள். பெற்றோர் இல்லை. கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவள். புரட்டாஸ்தாந்து மதத்தவர்களிடம் வளர்ந்தபடியால் விசுவாசக் குறைவு. பிற சமயத்தவருக்குத் திருமணம் செய்ய முற்படும்போது ஒரு கத்தோலிக்கப் பெண்ணின் உதவியுடன் கிறிஸ்தவளாக வரப்போகிறேன் எனக் கூறி இவ்விடம் வந்தாள்.

தியானத்தின் பயனாக நல்ல மனமாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. வேறொருபெண் போர்த்துக்கீசப் பெண். பூசைக்குச் செல்வதற்கு நல்ல உடுப்பு இல்லையெனக் கூறியபோது அன்புப் பெண்களிடம் பெற்றுத் தருவதாகவும், தினமும் படித்து முதல் நன்மை பெறும் படியும் கூறினேன்.

எம்மிடம் ஓர் இளம் விதவைப் பெண் திருமுழுக்குப்பெற படித்து வருகிறாள். சென்ற வருடம் திருமுழுக்குப் பெற்று, எமது கடையைப் பரமரித்து வரும் பொலின் என்பவரின் மகள். அவளுக்கு "ஒற்றாவியா" எனப் பெயர் கொடுப்போம். போர்டோவின் அதி. சிரேஷ்ட ஆலோசகர் Mother St.Bernard அவருக்கு ஞானத் தாயாக இருப்பார். பெருந் தொகையான அவவிசுவாசிகளையும், பாவிகளையும் இறையரசில் சேர்க்க வேண்டுமென்ற எமது ஆவல் நிறைவேற, எம்முடன் சேர்ந்து இந்த அருளுக்காக மன்றாடுங்கள்.

### 17 ஆடி 1869

இவ்வருடம் மாதாவின் மாதம் நன்கு கொண்டாடப்பட்டது. பீடம் நன்கு அலங்கரிக்கப்பட்டது. French, Latin, English தமிழ்ப் பாட்டுக்களைப் பாடினோம். தமிழ் சசோதரிகளுக்கு தமிழில் தியானம் நடைபெற்றது. அதில் எம் அநாதைச் சிறுமிகளும் பங்குபற்றினார்கள். மரணத்தைப் பற்றியும் ஒரு தியானம் கொடுக்கப்பட்டது. அப்போது குருவானவர் "விரைவில் ஒருவர் இறப்பார், அது நீயாக இருக்கலாம்" என ஒரு 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுப் பிள்ளையைப் பார்த்துக் கூறினார். சில நாட்களின் பின் ஒரு சிறிய வியாதியால் அவள் இறந்தாள். இறக்கும்முன் "நான் நன்கு ஞானொடுக்கம் செய்தேன், சமாதானமாக இருக்கின்றேன்" என்றாள். தியானத்தின்போது சிலரை திருமுழுக்கிற்கும், சிலரை முதல் நன்மைக்கும் ஆயத்தம் செய்தோம். தியான இறுதி நாளில் ஆயர் இவர்களுக்கு முதல் நன்மை கொடுத்தார். பூசை முடிவில் உறுதிப்பூசுதல் அருளப்பட்டது. காலை உணவின் பின் எல்லோரையும் அழைத்துப் படங்கள் கொடுத்தார். ஆசீர்வாத முடிவில் 9பேர் திருமுழுக்குப் பெற்றனர். மிகவும் மகிழ்ச்சி. வெண்மையான பூமுடி அழகைக் கொடுத்தது. தேவதாய்க்கு அழகான பூச்செண்டு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மறுநாள் ஆயர் பரிசுத்த ஆவியின் பெருவிழாவை எமது ஆலயத்தில் நடாத்தினார். 3 ஆயத்த கன்னியர் துறவற உடைகளைப் பெற்றுக் கொண்டனர். ஒருவர் ஆங்கிலேயர், மற்றைய இருவரும் சுதேசிகள். எனவே வழிபாடுகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் நடைபெற்றன. ஒரு நவகன்னிகை சிஸ்.மேரி யோசேப்பின் என்னும் பெயர் பெற்றார். மற்றைய இ.ருவரும் சிஸ். மேரி.ஒவ். சென்ற். பீற்றர், சிஸ்.மேரி. பொலின் என்னும் பெயர்கள் பெற்றனர். இம்மூன்று பேரும் எம் விசுவாசமற்ற இந்த நாட்டுக்கு அருள் கொடையாக இருந்தார்கள்.

எமது ஆயர் எல்லாச் சடங்கு வழிபாடுகளும் நிறைவெய்தியபின் மன்னார்த் தீவுக்குப் போகிறார். புனித. பிரான்சிஸ் சவேரியார் காலத்தில் புனித. வேதசாட்சிகளின் தீவு என அழைக்கப்பட்டு தற்போது கூடாத கிறிஸ்தவர்களின் தீவு என அழைக்கப்டுகிறது. எம் ஆயர் வந்தபின் பல மாற்றங்கள் இடம்பெற்றன. இந்த ஏழை மீனவர்கள் அவரின் காலில் வீழுந்து இறைவனுடன் ஒப்புரவு பெற்று வாழ்வின் அப்பத்தில் பங்கு கொள்கிறார்கள். எம் செபத்தினால் ஆயரின் இந்தப்பணிக்கு ஒத்துழைக்கும்படி கேட்கிறார். எனவே நாம் இக்கருத்துக்காகச் செபித்து சில ஆன்மாக்களின் மீட்புக்காக ஒத்துழைக்கின்றோம்.

நாம் மாதாவின் வணக்கமாதத்தை திருச்சுருவப் பவனியாகக் கொண்டு வந்து நிறைவுசெய்தோம். எமது பிள்ளைகள் இச்சுருவத்தைச் சுமந்துவந்து பல இடங்களில் வைத்தனர். அந்த வேளையில் மாதாவுக்குப் பாட்டிசைத்தனர். அவ்வேளையில் சிலர் நெற்றி நிலத்தில்படவைத்தும், சிலர் வானைநோக்கிக் கைகளை உயர்த்தியும், சிலர் நெஞ்சில் கைவைத்தும் செபித்தனர். இவர்களுக்கு மாதாவில் அதிக விருப்பம். திருஇருதய ஆண்டவரின் மாதமும் நன்கு கொண்டாடப்பட்டது. எம்மிடம் திருஇருதயச் சுருவம் உண்டு. திருநாள் அன்று நற்கருணை எழுந்தேற்றமும் செய்து செபித்தோம். எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவமும் அதிகம் அதிகம் வளர்ந்து வருகிறது. ஆனால் எம்மைச் சுற்றியுள்ள இந்த ஆன்மாக்களால் நாம் அதிகம் பேறுடையவர்களாகின்றோம். இந்த அன்புச் சகோதரிகளின் சபை நன்கு சேவை செய்கிறார்கள். அவர்கள் எமது Associate ஆக வரவேண்டும் என்ற நிபந்தனை.

எமது சுதேச சகோதரிகள் பக்தியுடனும், மகிழ்ச்சியுடனும் நல்ல பிதாவின் திருநாளைக் கொண்டாடினர். முதல்நாள் மாலை விளையாட்டுக்கு வரும்போது ஒவ்வொருவரும் தம்கையில் ஒரு பூக்கொண்டுவந்து அவரின் படத்தின் முன்வைக்கக் கேட்டனர். நான் உத்தரவு கொடுத்து நானும் அவர்களுடன் சென்றிருந்தேன். ஒவ்வொருவரும் தன் பூக்கொத்தைக் கொடுத்தபின் இறுதியாக வந்த பெண் படத்தின் முன் பார்த்தபடி கைகூப்பியபடி நின்றாள். ஒன்றும் காணவும் இல்லை, கேட்கவும் இல்லை. அப்படியே செபத்தில் உறைந்து வானகத்தந்தையுடன் பேசிக்கொண்டிருந்தாள். நான் இதைக்கண்டு உணர்ச்சிவசப்பட்டேன். எம் நல்லபிதா என்னிடம் ஒப்படைத்த பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார் என நானும் செபித்தேன்.

ஓர் இளம் போர்த்துக்கேயப் பெண் முதல்நன்மை பெறுகிறாள். ஞாயிறு தோறும் எம் ஆலயத்திற்கு பூசைக்கு வருகிறாள். தாய் புரட்டஸ்தாந்து சமயம். புனித. இராயப்பரின் திருவிழாவுக்கு முதல்நாள் மகள் தன்தாயுடன் வந்து நன்றி சொன்னாள். நாம் மகளுக்குச் செய்ததுபோல் தாய்க்கும் விரும்பினால் செய்யலாம் எனக்கூற சிந்திப்பேன் எனப் பதிலிறுத்தாள் தாய். புனித. இரயப்பரின் திருநாளானபடியால் ஒரு வரவணிக்கம் கொடுக்கலாமென அதற்குச் சம்மதித்தாள். நான் நல்லபிதாவின் உடலைத்தொட்ட ஒரு வரவணிக்கத்தை எடுத்துவந்து அவளின் கழுத்தில்போட்டேன். உடனே அதை ஒருவரும் காணாதபடி மறைத்தாள். அடுத்தநாள் அயலில் வசித்த ஒரு கத்தோலிக்கப் பெண் அவள் சிலுவை அடையாளம் தன் அறைமூலையில் போட்டதாகக் கூறினாள். பின்பு செபங்களைப் படித்துவருகிறார். ஞாபகமறதி இருப்பதால் பாடமாக்க அவருக்குக் கஷ்டம். இறைவன் அவரின் முயற்சியைப் பார்த்து ஆசீர்வதிப்பாராக.

**10 ஐப்பசி 1869**

ஆடி 26ம் திகதி அன்புப் பெண்கள் தங்கள் பாதுகாவலியாகிய புனித. ஆனாள் திருவிழாவைக் கொண்டாடினர். எமது ஆலயத்தில் பங்குத் தந்நை தமிழில் திருப்பலியை நிறைவேற்றினார். எம் அநாதைப் பிள்ளைகள் தமிழில் பாடினர். இவர்கட்கு தமிழ் மட்டுமே விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையில் ஆசீர்வாதத்திற்கு திரும்பவும் வந்தனர். இச்சிறிய சபை நன்மைகள் செய்து இறைவனுக்கு மகிமை சேர்க்கிறார்கள்.

திருக்குடும்பப் பிள்ளைகள் விசுவாசப் பரப்பதல்சபை, திருப்பாலத்துவ சபைக்காக வருடாந்த லொத்தர்இழுப்புச் செய்தனர். Ticket எடுத்தபின் பிள்ளைகள் தந்த ஒளிக்காட்சியைக் காட்டினேன். 130 பிராங் கிடைத்தது. இதைப் பெறுவதற்கு எம் பிள்ளைகள் பல தியாகங்கள் செய்தனர். மாறி என்ற ஒரு சின்னப் பிள்ளை வேறு ஒரு பிள்ளைக்கு பணம் இல்லாதபோது தன்பணத்தைக் கொடுத்தாள். எமது பிள்ளைகள் தாராள மனம்படைத்தவர்கள். யாழ் மக்கள் மாசற்ற இதயநாயகிக்கு முடிசெய்யப் பணம் சேர்த்தார்கள். எமது பங்குத்தந்தை பாலக இயேசுவுக்கு ஒரு முடிசெய்தால் நல்லது என எம் பிள்ளைகளுக்கு கூறினார். தமிழ், ஆங்கிலப் பிள்ளைகள் தனித்தனியே பணம் சேர்த்தனர். தமிழ்ப் பிள்ளைகளுக்கு கஷ்டமானதால் வெளியில் இருந்துவரும் பிள்ளைகளிடம் பணம்கேட்டனர். இவ்வாறு 7பிராங் சேர்த்தனர். ஆங்கிலப் பிள்ளைகளுக்கும் கொடுக்க விருப்பமாயினும் பணம் இல்லாதிருந்தது. எனவே ஒரு பெண் தன்னிடமுள்ள நகைகளைக் கழற்றி பெறுமதிமிக்க சங்கிலி ஒன்றைக் கொடுத்தாள். 25 பிராங் பெறுமதி உடையது. மற்றப் பிள்ளை தன்தந்தை இறக்கும்போது கொடுத்த ஒரு பொன் பென்ரனைக் கொடுத்தாள். அவளுக்குக் கஷ்டமாக இருந்தாலும் முடியில் ஒரு பூவைக்க கொடுத்தாள். மற்றப் பெண் தோடு கொடுத்தாள் இந்த மூன்று பொருட்களும் சேர்ந்து முடிக்குப் போதுமானதாக இருந்தது. பங்குத்தை மகிழ்ச்சியுடன் இதனை ஏற்றார். இது எந்த ஊற்றிலிருந்து வருகின்றது என்பதை அவர் அறிவார்.

புனித. மரியாள் பிறந்த திருநாளில் எமது விடுதி மாணவிகள் தங்களுக்குள் மிகவும் சின்னஞ்சிறிய அழகான ஆனுக்கு உடை அணிந்தார்கள். தாமே உடை தயாரித்து அழகான குஞ்சம்வைத்த தொப்பியும் தைத்துப் போட்டார்கள். அகுஸ்தீன் என்பவரின மகளை எமது திருப்பாலத்துவ சபையில் இருந்து புனித. சூசையப்பரின் அநாதைப் பிள்ளை ஒன்றுக்கு மணம்முடித்து வைத்தோம். பூசை முடிந்ததும் பெற்றோர் அனாவை எம்மிடம் கொண்டு வந்தனர். மேலும் 4 பிள்ளைகள் எமது திருப்பாலத்துவ சபையின் பிள்ளைகளுக்கு பிறந்துள்ளனர். ஒரு குழந்தை இறந்துவிட்டது. சில நாட்களின் முன் குழந்தையின் தாய் இறந்து விட்டார். எனவே விண்ணகத்திற்கு தனது தாயைத் தேடி குழந்தை சென்று விட்டது.

எமது இப்பணிகள் இறையரசைப் பரப்ப முயற்சி செய்தாலும் பல கஷ்டங்களைத் தாண்ட வேண்டியுள்ளது. சில நாட்களின் முன் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல பிள்ளையை வேறொரு கிறிஸ்தவனுக்கு அறிமுகம் செய்து திருமணம் செய்யக் கூறினேன். ஆம் என்று கூறினான். ஆனால் அவன் தாய் இதற்கு சம்மதிக்காததால் பின்பு மறுத்தான். நாம் இதற்காக செபித்தோம். எமது பிள்ளைகள் மீன் கறி இல்லாது வெறும் சோறு சாப்பிட்டும், சுதேச சகோதரிகள் உபவாசம் இருந்தும் மாதாவிடம் செபித்தனர். ( சாத்தானின் எதிரி) 3 நாட்களின் பின் அக்கினேஸ் வந்து மன்னிப்புக் கேட்டாள். தாய் மகளுக்கு மருந்து போட்டிருந்தாள். தாய் தருவவற்றை வாங்க வேண்டாம் எனச்சொன்னேன். சில நாட்களின் பின் தாய் பழங்கள், கேக் கொண்டு வந்தாள். உடனே தோட்டத்தில் அவை புதைக்கப்பட்டடன. தாய் புலம்பி அழுது ஒரு பிற சமயத்தவனை கத்தோலிக்கனாக்கி அக்கினேசை மணப்பான் எனக் கூறியும் சகோதரி அவளை அனுப்பி விட்டார். தாய்க்குக் கோபம். தாய் எம்மை அமைதியாக இருக்கச் சொன்னாள். அக்கினேஸ் இந்தக் கத்தோலிக்கனை திருமணம் செய்தாள்.

இந்த அறிக்கை நீண்டு இருப்பினும் இத்திருமணப் பணியில் நாம் சந்திக்கும் கஷ்டங்களை விளக்குவதற்காக இதனை வரைகிறேன். எமக்குப் பால் கொண்டுவரும் ஒருபெண் திருமுழுக்கு மட்டும் பெற்றிருந்தாள். நாம் அவளுக்குப் படிப்பித்து முதல்நன்மை, பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தம் செய்தோம். சென்ற ஞாயிறு திருவிருந்தில் பங்குபற்றினாள். விரைவில் உறுதிப் பூசுதலும் பெறுவாள். எனவே ஒருஆடு இறைகுடும்பத்தின் மந்தையில் சேர்ந்துள்ளது.

ஒரு புதிய ஆயத்த கன்னிகை புனித. இராயப்பர் சுதேச சபையில் சேர்ந்துள்ளார். திருப்பாலத்துவ சபையில் அநாதை மடத்தில் சேர்ந்து 3 வருடத்துக்குள் விலகி திருகோணமலையில் மறுவிவாகம் செய்த தன் தாயுடன் போய்ச் சேர்ந்துவிட்டாள். எனினும் தன்னை இறைவனிடம் ஒப்புக்கொடுக்க ஆசையாக இருந்தாள். கடிதம் மூலம் தொடர்பு கொண்டு தற்போது வந்துள்ளார். பேரன் அவரைக் கூட்டிவந்து விட்டுச் செல்லும் போது முதியவரின் கண்களில் அழுகைவந்தது . எனினும் தாராள குணத்துடன் விட்டுச் சென்றார். மரியன் நல்ல குணம் படைத்தவ. அறிவாற்றல் உடையவ. தமிழ் வகுப்புக்களில் படிப்பிக்க முடியும்.

புதியவீடு கட்டிமுடிந்துள்ளது. பின்பு தோட்டம் ஒழுங்குபடுத்த வேண்டும். எம் அநாதைச் சிறுவர் பாடசாலை முடிந்ததும் மும்முரமாக இதில் ஈடுபடுவர். மணல், கற்களை அப்புறப்படுத்தி வெட்டிய மரங்களை அகற்றுவர். வேறு சிலர் கூடாத பூண்டுகளைப் பிடுங்கி எறிவர். இந்த வருடம் பரிசுத்த சம்மனசுகளின் திருநாள் ஒரு சனிக்கிழமையில் வந்ததால், பள்ளிக்கூடம் இல்லாதபடியால் அவர்களைத் தோட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைசெய்யும்படி அனுப்பினேன். அவர்களும் நாள் முழுவதும் பல வேலைகளைச் செய்ததாகச் கூறிச்சென்றனர். சிறிது நேரத்தின்பின் 3 சிறுமிகள் ஒரு பாழடைந்த அறைப்பக்கம் இருந்த முட்செடிகளைப் பிடுங்கினர். உடனே ஐயோ! ஒரு பாம்பு என்று கத்தினார்கள். உடனே தோட்டக்காரன், சகோதரி, பிள்ளைகள் எல்லோரும் வந்து பார்த்த போது பொல்லாத பாம்பு, மிகவும் துணிச்சலானவர்களும், தோட்டக்காரனும் சேர்ந்து பாம்பைக் கொன்றனர். இரண்டு மீற்றர் நீளம். மாலை 5 மணிக்கும் ஒரு விஷப்பாம்பைக் கொன்றனர் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது ஒரு பிள்ளை என்னைக் கூட்டிக் கொண்டு போய் 4 புலிமுகச்சிலந்திகளைக் காட்டினா. சம்மனசுகள் எல்லாப் பிள்ளைகளையும் ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றியுள்ளார்கள். எனவே நன்றி கூறியுள்ளார்கள். கடிதத்தை முடிக்கும் முன் ஒரு புரட்டஸ்தாந்துமதப் போதகரின் மகளுடன் நடந்த உரையாடலைக் கூறி கடிதத்தை நிறைவு செய்யலாம் என நினைக்கின்றேன். இந்தப் பெண் தன் தகப்பனோடு சேர்ந்து ஊழியம் செய்பவர். இவ ஓர் இளம் பெண்ணை எமது போடிங்கில் சேர்த்திருந்தார். ஒரு நாள் அவவைச் சந்திக்க வந்தபோது என்னிடம் இவ்வாறு கூறினா. “உங்களுடன் அதிக நேரம் பேசிவிட்டேன். இங்கு ஒர் அமைதியை நான் உணர்கின்றேன். வேறு இடங்களில் இவ்வாறு காணமுடியாது. நீங்கள் இவ்வுலகைச் சார்ந்தவர்கள் அல்லர். எனவே நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்களென நான் நம்புகிறேன்” எனக்கூறித் தொடர்ந்தாள். எனினும் “எம் அதிகாரிகள் பிள்ளைகளை இவ்விடம் அனுப்புவதை விரும்புவதில்லை” என்றாள். அதற்கு நான் “நாம் ஒருவரையும் எம்மதத்திற்கு வரும்படியும் வற்புறுத்துவதில்லை” எனக் கூறினேன். அதற்கு அவள் “உங்கள் போதனையல்ல, உங்கள் முன்மாதிரிகையான செயற்பாடுகளே எங்களுடைய அதிகாரிகளை சந்தேகிக்க வைக்கின்றன. புண்ணியங்கள், நன்மைகள் வார்த்தைகளிலும் பார்க்க மேலானவை. நானும் நன்மை செய்ய விரும்புகின்றேன். எனவே பயனுள்ளவளாக இருக்க நான் என்ன செய்யமுடியும்” என்றாள். நான் புன்னகை செய்தேன். அவளுக்கு விளங்கி விட்டது. நானாகவே தொடங்கவேண்டும். ஆனால் முடியாது என்றாள். அந்தப் பெண் உண்மையிலிருந்து தொலைவில் நிற்கின்றாள். அவர்கள் எமக்கு எதிராக இருந்தாலும் கத்தோலிக்க சமயம் பல நற்செயல்களைச் செய்கின்றது எனக் கூறிவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNALS NO - 17



## (August 1872)
## இலங்கையுடன் தகவற் தொடர்பு

எம் நல்ல தாயாரே,

இங்கு வந்து 7 வருடத்தின் பின்பு நாம் வாழ்வதற்கேற்ற ஓர் இல்லம் கிடைத்துள்ளது. (convent) இந்த மடலின் மூலம் நாம் எவ்வாறு இந்த மடத்தைத் திறந்தோம் எனவும், அதே வேளை இந்த அறிக்கையானது கட்டாயம் உங்கள் இதயத்தின் ஒர் ஆசையாகிய உங்கள் யாழ் புத்திரிகளைப் பற்றிக் கூறுவதால் உங்கள் ஆசைக்குப் பதிலளிப்பதாகவும் இருக்கும்.

மடத்தின் கட்டிட வேலைகள் முடிந்ததும் தோட்ட வேலைகளை நாம் செய்தோம். எமது அநாதபிள்ளைகளின் சாதி, சமய வேறுபாடற்ற நல்லுள்ளத்தினால், மரங்கள், கற்கள் அகற்றப்பட்டு வீடு ஆசீர்வதிக்கும் காலம் வந்தது. ஆயர் அவர்கள் ஆடம்பரமாக இதைத் திறக்க விரும்பியதால் எல்லோரும் பங்குபற்றுவதற்காக அரச ஊழியர், பிள்ளைகளின் ஒய்வு நாளைத் தெரிந்து, கார்த்திகை 9ந் திகதி என்று நாளைக்குறிப்பிட்டார். அந்நாளில் டிகால் (Galles) இளவரசரின் பிறந்த நாளுமாகும். எல்லாம் ஒழுங்காக நடைபெறுவதற்காக அழைப்பிதழும் கொடுக்கப்பட்டது. 800 அழைப்பிதழ்கள் தயாரிக்கப்பட்டன. மழையின் காரணமாக எமது ஆயத்தங்கள் பயனற்றுப் போய் விடுமோ என நாம் பயந்த போது ''ஆங்கில வகுப்புப் பிள்ளைகளின்'' ''ஆவேமறிஸ்ரெலா'' என்னும் பாடல் எமக்கு நம்பிக்கையைத் தந்து படிப்படியாக மழை குறைந்து வானம் வெளித்தது. அப்போது நாம் ''பார்த்தீர்களா மரியாள் சிரிக்கிறாள்'' என்று கூறத்தூண்டியது.

வானம் வெளித்ததும் எம் கொடிகளையும் எடுத்துக் கொண்டு ஊர் வலமாக ஆயர் இல்லம் சென்றோம். அங்கே எம் வரவை எதிர்பார்த்து ஆயர், குருக்கள், அநாதைப் பையன்கள் கொடிகளுடன் நின்றனர். நாம் அங்கு அண்மித்ததும் ஆலயமணிகள் மகிழ்வுடன் ஒசை ஒலி எழுப்பின. முன்னே சிலுவை, பின்பு வெள்ளை உடுப்பு அணிந்து முக்காடிட்ட அநாதைச் சிறுவர்கள் ஆங்கில கத்தோலிக்க மாணவர், புரட்டஸ்தாந்து மாணவர், வேறு வழியாய் மடத்துக்கு வந்தனர். புனித சூசையப்பர் பிள்ளைகள், சகோதரிகள் அநாதைபிள்ளைகள், குருக்கள் இறுதியாக ஆயர், ஆடம்பர உடையுடன் ஆலவட்டக்குடையின் கீழ் நடந்து சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வலம், இதற்காகப் புதிதாகத் திறக்கப்பட்ட (Convent Street) கொன்வென்ற் வீதியால் மடத்துக்குச் சென்றது. நல்ல அகலமான பாதை, இருமருங்கும் இள மரங்கள் நாட்டப்பட்டிருந்தன. இப்பாதையால் சிலரே செல்வதாலும், நிழல் மரங்கள் இளைப்பாற்றி தருவதாலும் ஆன்மா இலகுவாக இப்பாதையால் கடக்கும் போது இறைவனை நோக்கிச் செல்லும்.

மூலையால் திரும்பிச் செல்லும் போது இலைகளினூடாகக் கடல் தெரியும். சிறிது நேரத்தின் பின் ஒரு சிறியகுளம், அதில் தென்னை, பற்றை மரங்களின் பிரதிபலிப்பு மனதிற்கு மிக ரம்மியமாக இருக்கும். இல்லத்தின் முன்னுள்ள தோட்டத்தைக் கடக்க ஒரு அரைவட்டம், இவ்வாறு ஊர்வலம் மெதுவாக ஊர்ந்து ஒழுங்காகச் சென்றது.

தூரப்பார்வையில் அகலமான விறாந்தைகளும் பெரிய தூண்களும் தெரியும். அண்மித்ததும் விறாந்தை, உள்மண்டபத்திற்கு இட்டுச் செல்லும் நல்ல காற்றோட்டமான அறைகள். பொலிஸ்மார் ஒழுங்கீனங்களையும், தோட்டத்துள் ஆட்கள் நுழைவதையும் தடுப்பதற்குத் தூரத்தில் நின்றனர். ஆயர் கோவிலை முதல் ஆசீர்வதித்தார். அப்போது சமேரியா ஆண்டவரின் நினைவு எமக்கு வந்தது. ஒரு சிறிய பீடம் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்நது. ஆயர் முழுங்காலிட்டு வழக்கமான செபங்களைச் சொல்லி பின்பு புனிதர்களின் பிரார்த்தனையைச் செபித்தார். கோவில் திருக்குடும்பத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. கோவிலை ஆசீர்வதித்த பின், இல்லத்தை ஆசீர்வதிக்க பிரிவினை சமயப்பிள்ளைகள். இந்து இஸ்லாமிய மக்கள் மத்தியில் நடந்து வந்த போது ஆசீநீர்தெளித்தால் நல்லது என மெதுவாகக் கூறினோம்.

இச்சடங்குகள் நிறைவெய்தி ஆயர் தம் இருக்கையில் அமர்ந்ததும், ஒரு சிறிய வரவேற்புப் பாடல் இசைக்கப்பட்டது. ஆயர் தன் உரையில் துறுவற வாழ்வு பற்றியும், மடங்களின் முக்கியத்துவம், நன்மைகளையும் கூறிப் பின்பு பாலத்துவ சபை, விசுவாசப் பரப்புதல் சபை இவற்றின் பணிகள் பற்றிக் கூறினார். அதைத் தொடர்ந்து 1200 பிராங்கு அன்பளிப்பாகக் கிடைத்தது. இது சோடினைச் செலவுக்கு உதவியது. தேசிய கீதம் "God Saves the Queen" பாடியதுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன. இத்துடன் மக்கள் கூட்டமும் கலைந்தது. நாமும் ஆயரை வாழ்த்தி எம் பழைய இல்லத்துக்குச் சென்றோம்.

புதிய மடத்தின் படம் அனுப்பு முன் சில தகவல்கள். பெரியகதவுக்கு நேரே (Hall) மண்டபம் சதுர வட்டமேசை, 4 பெரிய சாய்மனைக் கதிரைகள். சிலகதிரைகள் உள்ளூர் மரத்தினால் செய்யப்பட்டவை. படங்கள் திரு இருதயம், மாதா, சகலவரப்பிரசாதமாதா, கோவிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பல கம்பளம் இல்லை. வலது பக்கம் தையல் அறை, சகோதரிகளின் படுக்கை அறை, தலைவியின் அலுவலக அறை. இது கோவிலுக்குப் பக்கத்தில் உள்ளது, பெரியஅறை குருவின் தேவைக்கும், மடத்துக்கு வருவோர், போவோரைக் கண்காணிக்கவும் உதவும். தையல் அறையின் பின் ஆங்கில ஆயத்த கன்னியரின் (Postulents) அறையும், பயிற்சி அறையும் உண்டு. அழகான பெரிய அறை, அங்கு மாசில்லா மாதா சுருவமும், அதன் கீழ் ஒரு பெரிய இயேசுவின் சுருவமும் அதன் கீழ் ''இறைவன் மாத்திரமே'' எனப் பெரிய எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. சிலபடங்கள் திரு இருதயம், மாசில்லாமாதா சூசையப்பர், எமது அன்புக்குரிய தலைவிகளின் (Photos) எம் பயிற்சி அறைத் தலைவியையும், அவர் வேலையையும் சூழப் போடப்பட்டுள்ளன. பின்பு குழுமத்தின் சாப்பாட்டறை, ஆங்கில மாணவர்களின் சாப்பாட்டறை இடம் பெற்றுள்ளன.

மண்டபத்தின் (Hall) இடதுபக்கத்தில் புனித சூசையப்பரின் வேலைத்தளம். மாணவரின் படுக்கை அறை (Piano) பியானோ அறை, தையல் அறை, தலைவியின் அறைக்கு, வலது பக்கத்தினால் நுழையலாம் அதில் கோவில் உள்ளது. 19மீற்றர் நீளம், 6மீற்றர் அகலம், 3ஜன்னல்கள், 3பெரிய இரட்டைக் கதவுகள். 4ம் கதவு வெளியாட்களுக்காகக் கடைசியில் உள்ளது. பீடம் தற்காலிகமானது. தேவபராமரிப்புத் தான் எமக்கு உதவ வேண்டும். (2) அழகான திரு இருதயம், மாதாவின் சுருவங்கள் கோவிலில் உண்டு. கோவிலின் பின் சக்கிறிஸ்தி உண்டு. அதன் பின் ''நொவிஷியற்'' அங்கு புனித இராயப்பரின் சுருவம் உள்ளது. மரியாளின் சுருவமும் உள்ளது. அங்கு பாய், தலையணை வைத்து ''நொவிஸ்மார்'' மட்டும் படுப்பார்கள். பின் அநாதைகளின் தொழிலகம், வகுப்பறைகள், படுக்கை அறைகள் உண்டு.

## 22 தை 1870

கார்த்திகை மாதத்தில் குருக்களின் வாக்குத்தத்தம் புதுப்பித்தல் சடங்கில் பங்குபற்றினோம். யாழ். பேராலயத்தில் ஒரு குருப்பட்டத்தைத் தொடர்ந்து இது நடைபெற்றது. 2 சகோதரர்கள் திருஉடை பெற்றனர். ஒருவர் சுதேசி. இவ்வைபவத்தில் பலர் பங்குபற்றினர். இளம் குருக்கள் பாடினார்கள். 17ந் திகதி எம் ஆயர் றோமுக்குச் சென்றார். எல்லாம் இறைவனின் மகிமைக்காக என்று சொன்னார். மார்கழி 5ந் திகதி எமக்குத் தந்தையான ஆயரைத் தந்தமைக்கு மகிழ்ச்சி. 17ந் திகதி பரிசில்கள் வழங்கப்பட்டன. ஐரோப்பியர் குறைவாக இருந்ததால் புனித சூசையின் சிறார்களின் விற்பனைப் பொருட்கள் விற்க முடியவில்லை. பின்பு ஒரு பிரிவினை மதத்தவரும் கத்தோலிக்கரும் லொத்தர் மூலம் விற்றார்கள். இறைவனுடைய அன்பின் நிமித்தம் நல்ல மனத்தோடு இதைச் செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22ந் திகதி எம் பழைய இல்லத்தை விட்டுச் சென்றோம். 7 வருடங்களாக இந்த வீட்டை, அதுவும் கோவிலை விட்டுச் செல்வது கஷ்டமாக இருந்தது. இந்தக் கோவிலில் இயேசுவின் பாதத்தில் எத்தனையோ முறை எமக்கு நேர்ந்த கஷ்டங்களை மேற்கொள்ளத் துணிவைப் பெற்றோம். பலமுறை எம் இதயங்கள் நன்றியினால் நிரம்பி வழிந்தது. எனவே அந்த இடத்தில் குதிரையைக் கட்டவேண்டாமென்றும், வேறொரு இடத்தில் கட்டும்படியாகவும் வீட்டு உரிமையாளராகிய பிரிவினை மதப் பெண்ணுக்குக் கூறினோம். அவளும் அவ்வாறே செய்வதாகக் கூறினாள்.

மாலை நாம் புதிய வீட்டுக்கு வந்ததும், எம் தோட்டத்தில் வாணவேடிக்கைகள் செய்து மகிழ்ந்தனர். அடுத்தநாள் பத்திரிகைகளில் சகோதரிகள் புதிய மடத்துக்கு வந்துவிட்டார்கள் என்று பிரிவினை மதத்தினர் அறிவித்தனர். எம் கோவிலும் எல்லோரையும் உள்ளடக்கும். நல்ல காற்றோட்டம். றோட்டைக் கடக்க வேண்டியதில்லை. நகரச் சத்தங்கள் எம்மைத் தடைசெய்யாது. பழைய கோவிலுடன் ஒப்பிடும்போது அங்கே ஒரே சத்தம். இங்கே அமைதியில் செபிக்கலாம்.

சில நாட்களின் பின்பு ஊர்த் தலைவர் எமக்கு விருந்து வைத்தனர். ஆங்கில தமிழ் முறையில் உணவு பரிமாறப்பட்டது. பின்பு பாடல். தொடர்ந்து சகோதரிகளின் நன்றிச் செபம்.

கார்த்திகை மாதத்தில் 4 பேருக்கு ஆயத்தம் செய்து ஒரு திருமணம் நடைபெற்றது. இதன் வழியாக எம் மறையை இந்நாட்டில் பரப்பலாம். ஏற்கெனவே 6, 7 குழந்தைகள் புதுக் கிறிஸ்தவர்களிடம் இருந்து பிறந்தனர். இந்தச் சந்ததியிலிருந்து நிச்சயமாக கத்தோலிக்கர்கள் அதிகரிப்பார்கள். ஆன்மாக்களை மீட்டெடுப்பது சிறந்த பணியல்லவா?

தை மாதம் 8ந் திகதி எமது சபை ஆரம்பிக்க நினைத்த 50வது ஆண்டை ஐரோப்பிய சகோதரிகள் எவ்வாறு கொண்டாடினார்கள் என்று அறிய விரும்பினோம். நினைவுகூர்ந்து காலையில் திருப்பலியும், மாலையில் நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றது. நாம் எமது குடும்பத்தையும் நல்ல பிதாவையும் பற்றி பேசிக்கொண்டோம். தினமும் எம் பிள்ளைகளை ஆசீர்வதிக்க நல்ல பிதாவிடம் மன்றாடுகிறேன்.

வருடாந்த தியான ஒடுக்கம் 9ந் திகதி தொடக்கம் 16ந் திகதி முடிவடைந்தது. ''இறைவன் மாத்திரமே'' என்பதைச் சிந்தித்து வாசித்துச் செபித்தோம். இறுதிநாளில் எமது முதல் ஆயத்தத் துறவி (Postulent) முதல் வாக்குத்தத்தம் செய்தார். முழுநாளும் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டிருந்தது. மாலையில் நற்கருணை ஆசீர்வாதம் நடைபெற்றது. அடுத்தநாள் பாடசாலை தொடக்கம். புது இல்லம் திறக்கப்பட்டபடியால் பிள்ளைகளுக்குத் தேநீர் விருந்து, அத்துடன் நாம் நகரத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரவுள்ள பிள்ளைகளையும் கவர்ந்து கொள்வதற்காக தேநீர் விருந்து தயார் செய்தோம். எல்லோரும் சமூகமளித்து மகிழ்வுடன் சென்றனர். பல அலுவல்களையும் செய்வதால் நேரம் போவதே தெரியவில்லை.

இன்று காலை சமேரியா ஆயரின் ஆன்மசாந்திக்காக திருப்பலி ஒப்பக்கொடுக்கப்பட்டது. இதில் எல்லோரும் பங்குபற்றினர்.

## 8 சித்திரை 1870

பின்பும் 2 திருமணங்கள் நடைபெற்றது. மாலையில் அன்பளிப்புக்களுடன் எம்மைச் சந்திக்க வந்தனர். கேக், வாழைப்பழம் தந்து எமது மகிழ்ச்சியான ஆசீர்வாதத்தையும் பெற்றுச் சென்றனர். அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருப்பதால் நாம் பின்பு சென்று சந்திக்கலாம். 14 இந்துமதச் சிறுவர்கள் எம்மிடம் வந்தனர். இறைவன் நமக்குத் தேவையானவற்றைத் தந்து அவர்களை இருளில் இருந்து ஒளிக்கு அழைக்க உதவுகிறார். தற்போது 70 அநாதைச் சிறுவர்கள் உள்ளனர். அவர்களிற் சிலரை திருமணத்திற்கு ஆயத்தம் செய்த பின்னரே மீளவும் சேர்க்கலாம்.

நாம் எம்மிடம் மீதியாய் இருந்த பொருட்களுடன் லொத்தர் ஒன்று ஏற்பாடு செய்தோம். பல பிரிவினை மதத்தோர் 'ரிக்கற்' பெற்றனர். விசேடமாக நீதிபதி அவரின் குடும்பம், அரசாங்க ஆசிரியர் இவர்கள் எல்லோரும் ஒரு சிறிய கொண்டாட்டத்தில் பங்குபற்றினர். ஆயரின் பிரதிநிதி தலைமை வகித்தார். லொத்தருடன் பிள்ளைகள் பியானோ (Piano) விளையாடிப் பாடினர். இந்த லொத்தர் 400 பிராங்கு பயன்கொடுத்தது.

திருகோணமலையில் திருமதி விளானகான் (Flanaghan) அவரது மகளும் ஆங்கில வகுப்பு ஒன்று நடாத்துகின்றனர். அவர்கள் ஒரு தமிழ் ஆசிரியரைக் கேட்ட போது எம் அநாதைபிள்ளைகளில் ஒருவரான சிசிலியாவை அங்கு அனுப்பினோம். அவ அவர்களுக்கு நல்ல உதவியாக இருக்கிறா என்று எழுதியிருந்தா.

பங்குனி மாதத்தில் 75 பிள்ளைகளுக்குத் தியான ஒடுக்கம் நடைபெற்றது. ஒருநாளில் 3மறை உரைகள் கொடுக்கப்பட்டது. இறுதிநாளில் இராயப்பரின் சகோதரிகள் 5பேர் முதல் வாக்குத்தத்தம் செய்தனர். தமிழிலும் பாடினார்கள். 15 பிள்ளைகள் முதன்நன்மை பெற்றனர். பின்பு தேவதாயின் பாதுகாப்பில் வாழ உத்தரியமும் பெற்றுக் கொண்டனர். மாலையில் சில சிறுவர்கள் சகோதரியைச் சந்திக்க வந்தனர். "என்ன வேண்டும்" என்று கேட்டதற்கு 5வயதுச் சிறுவன் ஒருவன் எமக்குத் திருமுழுக்குத் தேவை என்று கூறினான். ஏன் என்று கேட்க "பசாசின் பிள்ளைகளாக இருக்காது மோட்சம் போக" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு பல கேள்விகளின் பின் செபங்கள் மறைக்கல்வி தெரிந்தால் புனித சூசையப்பரின் திருநாளில் தரலாம் என்றேன். பின்பு 9 சிறுவர்களும் 2 மறைக் கல்விப் பிள்ளைகளும் திருமுழுக்குப் பெற்றனர். ஒன்று இளம் பெண், மற்றவர் வயதானவர். செபம் பாடமாக்கக் கஷ்டமாக இருந்தது. எனினும் மேரி என்னும் பெயர் பெற்று திருமுழுக்குப் பெற்றாள். தற்போது முதல்நன்மைக்கு ஆயத்தம் செய்கிறாள். தன் உள்ளத்தில் இயேசுவுக்கு ஆலயம் அமைக்க விரும்புகிறாள். கேள்விகள் கேட்ட போது நல்ல பதில் கூறாதபடியால் முதல் இடைமறிக்கப்பட்டாலும் பின்பு ஒரு சகோதரியின் துணையுடன் பெற்றாள். இடைமறிக்கப்பட்டபோது ஒருநாள் முழுவதும் உணவின்றி இருந்தாள்.

நாம் புதிய வீட்டில் நன்றாக இருந்தாலும் மரங்கள் இன்னும் வளராதபடியால் சூட்டை உணருகின்றோம். தோட்டமும் சரியாகத்துப்பரவு செய்யாததால் பாம்புகள் அதிகம். 15 நாட்களுக்குள் 5 பாம்புகள் அடித்தோம். அதில் ஒன்று 2 மீற்றர் நீளம், மொத்தமானது. ஒரு போஸ்ருலன்ரும் 2 அநாதைப்பிள்ளைகளும் சேர்ந்து இந்தச் சாரைப் பாம்பைத் துரத்தி விட்டனர். அது தன் வாலில் நின்றபடியால் மிகவும் பயந்தோம். தேவபராமரிப்பு எம்மைக் காப்பாற்றுகிறது. ஒவ்வொரு நாளும் பராமரிப்பில் புதியவற்றைக் காணலாம்.

மடத்தின் எல்லா வேலைகளும் நிறைவடையவில்லை. இங்கு எல்லாம் மெதுவாகவே நடைபெறும். விரைவாகச் செய்ய விரும்புபவர் பொறுமையைப் படிக்க வேண்டும். குருக்கள் தங்களை ஒறுத்து எங்களுக்கு உதவி செய்கிறார்கள். அவர்களின் பங்குமனைகளும் மிக எளிமையானதும், வசதியற்றதுமாகும்.

**17 ஆடி 1870**

இரு ஆங்கிலப் பிள்ளைகள் தங்களை இறைவனுக்கு அர்ப்பணிக்க விரும்புகிறார்கள். மாதாவுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட மாதத்தில் பூக்கள் போன்று இவர்களைக் காணிக்கையாக்கலாம். மடத்துக் கோவில் வேலை செய்யும் சகோதரியும் பூக்களினால் மாதாவை நன்கு அலங்கரித்தா. இதைக்கண்ட பிள்ளைகள் பூக்கள் நடுவே இருக்கும் தாயை மன்றாடுவது நலம் என்றார்கள். வைகாசி மாதத்தில் 18 - 20 வயதுக்குட்பட்ட ஒரு பிள்ளை பிரிவினை மதத்தை விட்டு கத்தோலிக்க மறைக்கு வரவிரும்பினா. நன்கு படித்து அறிந்ததும் திருமுழுக்குக் கொடுக்கப்படும்.

எம் அநாதைபிள்ளைகள் நால்வருக்கு திருமணம் மாதாவின் அடைக்கலத்தில் நிறைவேறியது. 2 புதிய குடும்பங்கள் சாவகச்சேரிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இருந்து 10 - 12 மைல் தூரத்தில் இருக்கும் இவ்விடத்தில் லிகோரியார். ஆலயம் உள்ளது. எமது பிள்ளைகள் கோவிலுக்குச் சூழவுள்ள தோட்டத்தைக் கண்காணித்து வருகிறார்கள். ஒவ்வொரு ஞாயிறும் அங்கிருந்து பூசைக்கு இங்கு வருகிறார்கள். கத்தோலிக்கர் குறைவான படியால் ஒரு குருவானவரை அனுப்ப முடியாது. அங்குள்ள மக்கள் இவர்களிடம் பல கேள்விகளைக் கேட்டனர். அத்துடன் சாத்தானைப் பற்றிக் கதைப்பார்கள். பல வடிவங்களிலும் தோன்றுவதாகக் கூறிப்பயந்து காணப்பட்டனர். நாம் மாதாவின் பாதுகாப்பை எடுத்துக் கூறியதால் நம்பிக்கை அடைந்தனர். லோறன்ஸ் என்ற அவர்களின் அயலவரை எம்முடன் கூட்டிச் சென்றோம். அவர் அல்பேட்டின் என்னும் பெண்ணைத் திருமணம் செய்தார். இக்குடும்பம் நல்லதொரு கிறீஸ்தவக் குடும்பமாகும். யாழ் வரும் போது மடத்திலும் தங்குவார்கள். அல்பேட்டின் அநாதைபிள்ளைகளுடனும், லோறன்ஸ் தோட்டத்திலும் உதவி செய்வார்கள். இப்பிள்ளைகள் மற்றவர்களிடம் இருப்பதை விட எங்களுடன் இருக்கவே விரும்புகின்றனர். சுவாமிமாரிடம் திருமுழுக்குப் பெறுவதை விட சிஸ்ரமாரிடம் பெற விரும்பினார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு பங்குத் தளத்தில் எம் சிறுவர்கள் யூபிலி காலத்தில் ஒவ்வொரு மாலையும் சென்று தமிழில் பாடி வந்தனர். எங்களுடன் இருந்த ஒருவர் பலகாலமாக திருவருட்சாதனங்களை அணுகாது இருந்தார். ஒரு நோவிஸ் மூலம் அறிவுரை கூறியும் ஏற்காதபடியால் நானே அழைத்துக்கூற ''பெரியம்மா'' சொல்லுகிறபடியால் நான் செய்வேன் எனவும் செபங்களை மறந்து விட்டதாகவும் கூறினார். ஒருவர் உமக்கு உதவி செய்வார் என்று கரிசனை காட்டியபடியால், உடனே தனக்குத் தெரிந்த செபங்களை ஒரு ''போஸ்ரியூலன்ற்'' மூலம் கூறினார். திருவருட்சாதனங்களைப் பற்றி நன்கு அறிந்ததும் பாவசங்கீர்த்தனத்துக்குக் குருவானவரிடம் அனுப்பினேன். அத்துடன் குருவானவருக்கு ஒரு கடிதம் கொடுத்து விட்டேன் அடுத்த ஞாயிறு நன்மையில் பங்குபற்றினார்.

எம்முடன் இருந்த மேரியும் புதுநன்மை பெற்றுக் கொண்டா. காலையில் ஞானத்தாயாகிய எம் சுதேச சகோதரி தோட்டத்தில் உள்ள நீர்த்தொட்டிக்கு அழைத்துச் சென்று அங்கு கழுவி (பாக்கு வெற்றிலை போடுவதால் உதடுகள் பற்கள் சிவப்பு நிறமாக இருக்கும்) சீலை உடுத்து ஆயத்தம் செய்து நன்மை பெற்றா. வைகாசி மாதத்தில் காசு சேர்த்து மாதாவுக்குக் காணிக்கையாகக் கொடுத்தா.

பாஸ்குத்திருநாளன்று ''சக்கிறிஸ்தி'' செய்யும் சகோதரி மாதாவின் பாதத்தடியில் மெழுகுதிரிப் பார்சலும் 20, 25 பிராங் செப்புக்காசும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடிகாதணி (தோடும்) கண்டா. எவ்வாறு அங்கு வந்தது என்று விசாரித்த போது 'பார்சலில்' யாழ் திருக்குடும்பப் பிள்ளைகளால் ஒப்புக் கொடுக்கப்பட்டது என்று எழுதியிருந்தது. புனித சூசையப்பர் பிள்ளைகளே இந்த வேலையைச் செய்திருந்தார்கள். ஒரு வசதி படைத்த பிள்ளையின் பெற்றோர் கொடுக்காத போது, தபக்காலத்தில் ஒரு நேர உணவை ஒறுத்து அதன் பெறுமதியைக் கொடுத்தா. உமது சுகத்திற்குக் கூடாதே என்று கூறிய போது தேவதாயின் பீடத்தை அலங்கரிக்க தனது பங்கையும் அளிக்க வேண்டுமே எனக்கூறினாள். ஒரு புரட்டஸ்தாந்து 10 - 12 வயதுப் பிள்ளை தன் தந்தையிடம் 12 மெழுகுதிரி கேட்டபோது தந்தை 2 மெழுகுதிரியைக் கொடுத்து மரியாள் இருளில் இல்லை எனக் கூறினார்.

நான் சில வேளைகளில் அவர்கள் செய்யும் வேலைக்குப் பணம் கொடுத்தாலும், உடனே விசுவாசப் பரப்புதல் சபைக்குக் கொடுப்பார்கள். வேறு ஒருவர் தன்னிடம் தேவையான பொருட்கள் இருக்கிறதென்றும், அடுத்த வருடம் ஒன்றும் தேவையில்லை என்றும் கூறினார். நத்தார் விழாவில் மட்டுமே 1 உடுப்பு அல்லது 1 சிறிய சட்டை கொடுப்பது வழக்கம்.

இந்த ஆசீர்வதிக்கப்பட்ட மாதத்திலே யாழ் இளம் பெண்களுக்கு திருக்குடும்பப் பிள்ளைகளின் சபையை ஏற்படுத்தத் தீர்மானித்தோம். முதலில் நல்ல குடும்பங்களில் உள்ள இளம் பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்தால், அவர்களின் முன் மாதிரிகை மற்றவர்களுக்கு நன்மை பயக்கும், சபையின் ஒழுங்குகளையும் விளங்கிக் கொள்வார்கள் என்று கருதினோம். மறைமாவட்ட முதல்வர் R.P. Pullicani, தந்தை புலிக்கானி 24 பெண்களை அன்புப் பெண்கள், இராயப்பர் சகோதரிகளும் முதலாம் படிநிலைக்கு ஏற்று திருக்குடும்ப உத்தரியங்களைப் பெற்றனர். எல்லோரும் சந்தோஷமாகவும், நாம் கூறுவதை ஏற்கவும் தயாராக இருந்தனர்.

முதல் முறையாக அவர்களின் உத்தரியத்துடன் மாதாவின் திருச் சுருவப்பவனியில் பங்குபற்றினர். அத்துடன் திருச்சுருவத்தையும் தூக்கிச் சென்றனர். இதனால் அவர்களுக்குப் பெருமையாக இருந்தது. நற்கருணை ஆசீர்வாதப் பவனிக்கும் செல்ல விரும்பினர். இம்முயற்சி நீடித்திருக்க மன்றாடவும், மிக விரைவில் தமிழில் ஒழுங்குகள் அமைக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படும். தற்போது வாசிப்பும், ஆலோசனையும் கொடுக்கப்படுகின்றது.

திரு இருதயநாதரின் மாதத்தில் நற்செயல்கள் புரிந்து நற்கருணை எழுந்தேற்றமும் செய்யப்பட்டது. பாலத்துவ சபையில் இருந்து ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை ஓடி விட்டாள். சகோதரனின் முதல்நாள் உரையாடலால் மனம் மாறி விட்டாள். தற்போது 72 அநாதைப் பிள்ளைகள் உள்ளனர்.

சென்ற சனிக்கிழமை எல்லாம் அமைதியாக இருக்கும் வேளையில் ஒரு பயங்கரக் கூச்சல் கேட்டது. இதனால் நான் அதிர்ச்சி அடைந்து வந்த திசையை நோக்கிப் பார்த்த போது கிணற்றைச் சுற்றி நின்று பிள்ளைகள் வேலை ஆட்கள் சகோதரிகள் அழுதனர். உடனே நான் கோவிலுக்குச் சென்று மிகுந்த நம்பிக்கையுடன் செபித்து வந்த போது 'அஞ்சலின்' என்ற பிள்ளையைக் கிணற்றில் இருந்து எடுத்தார்கள். எல்லோரும் இறந்து விட்டா என்று கூறினர். அறிவிழந்த நிலையில் இருந்த பிள்ளைக்குக் கொஞ்சம் ''பிறன்டி'' கொடுத்தோம். அவகண்ணைத் திறந்தா. மருத்துவரை அழைத்துக் கேட்ட போது பயத்தினால் அப்படி இருக்கிறா என்று கூறினார். பின்பு விழுந்த போது என்ன நினைத்தீர் என்று அஞ்சலீனைக் கேட்டோம். ஒன்றுமில்லை மரியாயின் மாசற்ற இருதயத்தைப் பற்றிக் குருவானவர் கூறியதை தினமும் செபித்து வந்தேன். அவ என்னைக் காப்பாற்றினா. என்று பதிலளித்தாள். கிணற்றில் இருந்து பிள்ளையை எடுத்தவர் தனக்குப் பணம் தேவையில்லை, ஒரு சிறிய சிலுவை தந்தால் போதும் என்றார். அவர் ஒரு நல்ல கிறீஸ்தவன்.

அரசு ஆங்கில பாடசாலையை யாழ்ப்பாணத்தில் மூடியதால் எமது பாடசாலையும், பிரிவினை மதத்தவரின் பாடசாலைகளும் உள்ளன. எம்மடத்தில் இருந்த பிரிவினை மதத்தவர்களும் போய்விட்டார்கள். அவர்கள் எமக்கு எதிராகக் கதைத்தாலும், பல துன்பங்களுக்கிடையில் ஆண்டவரும் அன்னை மரியாளும் எம்மைப் பாதுகாக்கிறார்கள்.

## 24 ஐப்பசி 1870

எமது குடும்பம், திருச் சபையை நினைக்கும் போது சில வேளை கவலையாக இருக்கிறது கண்ணீர் விடுகிறோம். எம்முடன் இருக்கும் பிள்ளைகளில் சில பேரைத் திரும்ப அனுப்ப வேண்டியிருந்தால் அவர்கள் மீளவும் பிறசமயத்தை நாடுவர். எனவே நாம் பல தியாகம் செய்கிறோம். திருக்குடும்பம் எம்மைக் கைவிடாது.

நாம் பல வழிகளில் பொருளாதாரத்தைப் பெருக்குகிறோம் சிறிய தோட்டம் உள்ளது. பறவைகளைப் பேணும் தேவபராமரிப்பு எம்மை விட்டு அகலாது. ஆடிமாதத்தில் அன்னம்மாள் திருநாளை இசைக்கருவியுடன் தமிழ்ப் பாடல்கள் பாடி திருநாள் திருப்பலியைச் சிறப்பித்தோம். ஆசீர்வாதம், மறையுரையின் பின் தருமசீமாட்டிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தில் அவர்கள் கடமைகள், சபையின் நோக்கங்கள் பற்றிக் குருவானவர் எடுத்துரைத்தார்.

ஆவணி 15ல் சகோதரி மேரியோசேப்பின் அமைச்சல் வாக்குத்தத்தமும், சகோதரி பொலின் விரத்தத்துவ வாக்குத்தத்தமும், இராயப்பர் சபையிலும் ஒரு ஆயத்தக் கன்னிகை மேரி என்னும் பெயருடன் அமைச்சல் வாக்குத்தத்தமும் எடுத்தார்கள்.

அன்று மாலை Pullicani குருவானவர் வழிபாடு நடாத்தினார். 5மணிக்குப் பவனியாக சகல வரப்பிரசாத மாதா சுருவத்தைத் தூக்கிச் சென்று கெபியில் ஒரு பாறையில் வைத்தோம். பிள்ளைகளுக்கு அது ஒர் அதிசயமாக இருந்தாலும் பின்பு நாம் அலங்கரித்த பின் நன்றாக இருந்தது. ஒவ்வொரு மாலையிலும் சூரியன் மறைந்த பின்பு நாம் தோட்டத்தில் உலாவி வருவோம். அதே வேளையில் கெபிக்கும் சென்று மன்றாடி வருவோம். மெழுகுதிரிகள் கொழுத்துவோம்.

நாம் குருநாகல் என்னும் இடத்தில் ஒருமடம் திறக்க விரும்பினோம். யாழ்ப்பாணத்தில் இருந்து 282 மைல் தூரத்தில் உள்ளது. மடத்தைத் திறந்த ஆங்கில சகோதரிகள் சிஸ்ரர். மேரி யோசெவ், மேரி. ஸ்ரனிஸ்லாஸ், மேரி யோசேப்பின் சிங்கள வகுப்புக்கும், வீட்டு வேலைக்குமென சிஸ்ரர். பொலின், மேரி, யுஸ்ரீனா ஆகிய இலங்கைச் சகோதரிகள் மூவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரிக்குச் சென்றனர். 29ம் திகதி திருப்பலியின் பின் நான் அவர்களைக் கூட்டிச் சென்று பயணம் செய்வோரிடம் சேர்த்து விட்டேன். Fr. Mauroit மொறோவாவும் Benett பெனற், Destaffanee டெஸ்ராவனி சகோதரரும் இவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்தனர். கடல் கொந்தளிப்பாக இருந்ததால் தரைமார்க்கமாகச் சென்றனர். தற்போது புதிய மடத்திற்குச் சென்றுள்ளனர். அங்கு 28 மாணவர்கள். ஆங்கில வகுப்பிலும் 11, 12 பேர் சிங்கள வகுப்பிலும் இருக்கிறார்கள். அங்கிருந்த ஒரு ஆசிரியை பாடசாலையை விட்டு வெளியேறியுள்ளா. பிரிவினை மதத்தவர்கள் சில பிள்ளைகளை எம்முடன் விட்டு, முழங்காலில் இருக்க விட வேண்டாம் எனக் கூறிச் சென்றனர். (குருநாகல் பயணம் பின்பு அறிவிப்பேன்)

**26 ஐப்பசி 1870**

எமது சகோதரிகள் ஆவணி 29ந் திகதி, தியாக வாழ்வைத் தருபவரும், செய்து முடிக்கச் சக்தி தருபவருமாகிய ஆண்டவரைப் பெற்றுக் கொண்டு எல்லாப் பக்கங்களிலும் இருந்து கண்ணீர் மல்க 8 வருடங்களின் பின் பிரிந்து செல்கின்றனர். இதுவே முதற்பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்தலைவி, சகோதரிகள், ஒரே குடும்பம், ஒரே தாய் நாட்டில் இருந்து பெரிய பலி செய்து செல்கின்றனர். திரும்பி ஒருவர் ஒருவரைக் காண முடியாதிருந்தாலும், இறைவனுக்கு முன்பாக நாளாந்தம் ஒவ்வொருவரையும் நினைவு கூருவோம் என்று இறுதியாகப் பிரியாவிடை கூறினார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து 10 மைல் தூரத்தில் உள்ள சாவகச்சேரி வரைக்கும் சேவியர் தாயார் துணையாகக் கூட்டிச் சென்றா. 3மணிக்கு அவ தன் சகோதரிகளை அரவணைத்து, புதிய இடத்துக்குச் செல்லும் அவர்கள் மட்டில் மிகுந்த அன்பு, கரிசனையைக் காட்டினா. அவர்களது மாட்டுவண்டிப் பயணம் மிகுந்தகளைப்பைக் கொடுக்கும் என்று தன் இதயத்திலே மிகவும் வேதனைப்பட்டா.

பிரயாணச் சகோதரிகளுக்கு இது தெரிந்தாலும் அவர்களின் தாராள குணம் எல்லாவற்றையும் தாங்கச் செய்தது. இந்த ஏழ்மையான, செழிப்பற்ற தாய் நாட்டுக்காக எல்லாவற்றையும் இறைவனுக்கு ஒப்புக் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைந்தனர். 5 வண்டிகள் தொடராகச் சென்றன. முதல் 3 வண்டிகளிலும் குருவும் இரு சகோதரரும் 4ஆவது வண்டியில் 3 ஐரோப்பிய சகோதரிகளும் 5 ஆவதில் 3 சுதேச சகோதரிகளும் சென்றனர். இந்த வண்டிகள் 1.80 மீற்றர் நீளமும் 2.50 மீற்றர் உயரமும் மூங்கில்தடிகளால் வேயப்பட்டு வைக்கோல், தென்னோலைகளால் மேலே போடப்பட்டிருக்கும். மழை, வெயிலுக்குப் பாதுகாப்பாக இருக்கும். நிலத்தில் இருந்து 2 அடி உயரத்துக்கு வண்டிக்குள்ளே ஒரு பலகை போட்டு அதில் பயணப் பொதிகள் வைக்கக் கூடியதாக இருக்கும். இப்பலகை வண்டியோடு இருபக்கமும் பொருத்தப்பட்டிருக்கும். அதன் மேலே சிறிது வைக்கோல் பரவி அதன் மேல் பயணிகள் இருக்கலாம். நாற்காலிகள் கிடையாது. 3பேர் கால் நீட்டவும் முடியாது. இவர்கள் கொண்டு சென்ற சிறிய கதிரைகள் தங்குமிடங்களில் பாவித்தார்கள். வழியில் ஒன்றும் வாங்கவும் முடியாது 8 - 10 நாட்களுக்குச் சாப்பாட்டுச் சாமான்கள், அரிசி, சமைக்கும் பாத்திரங்கள் கொண்டு செல்ல வேண்டும். அரசின் தங்குமிடங்களில் (Rest House) தங்கி 2 or 3 முறை இரவு தங்கிச் சென்றனர். இந்தச் சிறிய குடிசைகள் துப்பரவு அற்றவை. காட்டு மிருகங்களின் பயமும் அங்கு நித்திரை செய்ய முடியாதிருந்தது. தண்ணீர் பற்றாக்குறை சேற்றுநீர், யானைகள் பிளிறும் சத்தமும், மரங்களை முறிக்கும் சத்தமும் கேட்கும். கடுமையான சூட்டிலும் இரவிலும் பயணம் செய்ய முடியாது. மாடுகளும் அடிக்கடி ஓய்வெடுக்க வேண்டும், நாங்களும் சிறிதென்றாலும் சாப்பிட வேண்டும்.

வழிப்பாதை மிகவும் கடினம். சிலவேளை ஏற்றம், இறக்கம், மாடுகள் ஏறக்கஷ்டப்படும், இறக்கத்தில் இழுத்துச் செல்லும். அந்த வேளையில் கீழேயும் விழலாம். சிலவேளைகளில் பாறைகள் மரக்குற்றிகள் பாதையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். விபத்தைத் தடுப்பதற்காக சாரதி ஒரு பக்கத்தால் வண்டியைச் செலுத்தி கிடங்குகளைத் தவிர்த்துக் கொள்வார். நாங்கள் ஒரு நாளில் ஆயிரம் முறை ஆண்டவனுக்கு நன்றி சொல்ல வேண்டும், ஏனென்றால் சகல ஆபத்துக்களிலுமிருந்து எம்மைக் காப்பாற்றினார் என்று ஒரு சகோதரி சொன்னா.

புலோப்பளை என்னும் இடத்தில் எமது பயணத்தின் முதல் தரிப்பு, இரவு 9 1/2 மணி, சந்திர ஒளியும் மறைந்ததால் சரியாக காரிருள் சூழ்ந்து கொண்டது. பயணிகளும் கால் விறைத்த நோவுடன் தரையில் பாய்களை விரித்து இளைப்பாறி சமைத்த உணவுகளைப் பரிமாறிச் சாப்பிட்டார்கள். நாமும் அவ்வாறே செய்தோம். இரவு முழுவதும் மாட்டின் கழுத்தில் இருந்த மணிகளின் ஓசை, ஒரு குழந்தையின் இடைவிடாத அழுகைக் குரல் இதனால் சரியாக உறங்க முடியவில்லை. அதிகாலை 3 1/2மணிக்குத் திரும்பப் புறப்பட இருந்ததால் மிக விரைவாகக் 'கோப்பி' அருந்தினர். வண்டியுள் எல்லாப் பொருட்களையும் போட்டு ஒரு ஏணியின் உதவியுடன் மேற்பகுதிக்குச் சென்றனர். பகல் கடுமையான வெயிலில் பயணத்தைத் தொடர்கிறார்கள். ஒரு நாள் ஒரு சகோதரி பாயைச் சுற்றும் போது அதற்குள் ஒரு ''புலிமுகச் சிலந்தி'' இருந்தது. ஆனால் ஒரு தீங்கும் செய்யவில்லை. இந்தப் பகுதிகளில் குடிசனம் இல்லை. ஒரு பிறசமயப் பெண் தனது 1 1/2 வயதுக் குழந்தையுடன் சாவகச்சேரியில் இருந்து 160 மைல் தூரம் நடந்து தனது குழந்தைக்கு நேர்த்தி செய்ததால் தூக்கிக் கொண்டு எங்கள் பின்னே வந்தாள். அந்தக் குழந்தையே இரவு முழுவதும் அழுத குழந்தை.

பிரயாணம் நீண்டதும் வேதனைக்குரியதாகவும் அமைந்தது. ஒவ்வொரு முறையும் பயணத்தை ஆரம்பிக்கும் போது சீனாவுக்குப் பயணம் போல இருக்கிறதென்று ஒரு சகோதரி சொன்னா. ஒரு முறை தென்னந்தோப்பு ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது சிஸ்ரர். மாறியோசெவ் ஒரு சத்தத்தைக் கேட்டா. உடனே சிஸ்ரர். ஸ்ரனிஸ்லாஸ் ''இறுக்கிப்பிடியுங்கள்'' என்று கூறு முன்பே நாம் எல்லோரும் கீழே வந்தோம். வண்டிச் சாரதிக்கும் பெரிய கஷ்டமான நிலைதான்.

இரண்டாவது தரிப்பிடம் திறந்த வெளி, நிழலுக்காக ஒரு மரத்தையும் காண முடியவில்லை. அகோர வெயில் அதன் அனல் சகோதரிகளின் கை, முகங்களில் வீசி எல்லாம் வீங்கிவிட்டது. சேற்றுத்தண்ணீரில் தான் கை, கால், முகங்களைக் கழுவினர். சில மணித்தியாலங்களின் பின் ஒரு பகுதிக் கடலைக் கடக்க வேண்டியிருந்தது. இப்பகுதி மிகவும் ஆபத்தானது. தேவதாயின் பரிந்துரையை எல்லோரும் கேட்டு கடலில் பிரவேசித்தனர். அப்போது ஒருவர் முன் சென்று மாடுகளுக்கு வழிகாட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியிருந்தது. காற்றுப் பலமாக வீசியதால் அப்பிராணி மிருகங்கள் தலையைக் கீழே போட்டு நோவுடன் மேலே உயர்த்தின. மறு கரையை அடைந்ததும் ஏற்றத்தில் ஏறிச் செல்ல சாரதி குரலெழுப்பினான். மாட்டைத் தடவி அது எவ்வித ஆபத்துமின்றிச் சென்றதைப் பாராட்டினான் சாரதி.

முன்பு பயணம் செய்த இடம் ஒரே தென்னந்தோப்பு. இப்போ யானை, புலிகள் நிறைந்த அடர்ந்த பயங்கரக் காட்டுப்பகுதி. அத்துடன் சிறு பூச்சிகள், சிறு உண்ணிகள், அட்டைகள். இவை தேகத்தில் சதை ஊடாக சென்று வேதனையைக் கொண்டு வருபவை. எண்ணெய் தடவி தேய்த்து இவற்றை அகற்றலாம். கவனமாக இராவிடில் அதிக நாட்களுக்கு கால் வியாதியாக இருக்கும். சில சகோதரிகள் இவ்விதம் கவனமில்லாமல் கஷ்டப்பட்டனர்.

''ஒல்லிய பாலும்'' என்ற இடத்தின் திறந்த வெளியிலே எமது பயணிகள் தங்கள் வாழ்விலே முதன் முறையாகப் படுத்துத் தங்கினர். இந்த வெளி தான் அவர்களது அறை. காட்டின் நடுப்பகுதியில் இந்த இடம் காணப்பட்டது. சந்திரனது மென்மையான ஒளியும் வரத்தொடங்கியது. இந்த இயற்கையின் வரவு அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டியது. ஒளியின் வீச்சு அவர்களின் உள்ளத்துக்கு இதமாக இருந்தது.

எங்கள் பாய்களை விரித்து அதிலே உட்கார்ந்தோம் என்று Sr. மாறியோசெப்பின் சொன்னா. 10, 12 வண்டிகள் எம்மைச் சூழ மாடுகள் எமதருகில் படுத்துறங்கின. ஒவ்வொருவரும் தத்தம் சாப்பாடுகளைத் தயார் செய்தனர். விண்மீன்களின் ஒளியிலே எங்கள் மாலைச் செபத்தைச் சொன்னோம். இறைவனது பார்வையின் கீழ் எம்மை வைத்து உறங்குவோமென்றால் முடியவில்லை. இது இலகுவானதொன்றல்ல. வண்டிக்குள் ஏறுவதும் முடியாத நிலை, எனினும் மூவரும் ஒரு வண்டிக்குள் இரு சுதேச சகோதரிகள் நிலத்தில் பாய்களை விரித்து உறங்கினோம். சற்று உறங்குவதற்குச் சாரதிகளும், மாடுகளும் எமது பாதுகாப்பாக அமைந்தது. இரவு மிகவும் அமைதி. அதிகாலை 6 மணிக்குத் திரும்பவும் பயணம் ஆரம்பம். அழகான காலைக் காட்சி, இயற்கையின் வனப்புகள் எமது களைப்பையும் கஷ்டத்தையும் மறக்கச் செய்தன. யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட நேரம் தொடங்கி தங்கள் உடுப்புகளையே மாற்ற முடியவில்லை. என்ன நிலையில் இருந்திருப்பார்களென்று எனது நல்ல தாயாரே, நீங்களே நினைத்துப் பாருங்கள். உடுப்புக்கள் வியர்வை புழுதியுடன் கலந்திருந்தன. பெரிய தேவதாரு மரங்கள் வளர்ந்து எல்லையாகவும், அவற்றின் நுனி ஒன்றிணைந்து வளைவுகளாக அவர்கள் மேல் நிழலிட்டன. பாதையுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தன. அங்குமிங்கும் சிறிய செடிகள், பல வர்ணப் பூக்களால் நிறைந்திருந்தன. பச்சை, பொன் இறகுகளைக் கொண்ட அழகான பறவைகள் ஒரு கிளையில் இருந்து இன்னொரு கிளைக்கு இன்னிசை ஒலித்து தாவிக் கொண்டிருந்தன. பலவித வர்ணங்களைக் கொண்ட வண்ணத்துப்பூச்சிகள், சிறியவை பெரியவை பல வடிவங்களைக் கொண்டவை மலர்களைத் தேடிச் சென்றன. மரங்களின் கிளைகளைத் தாவும் குரங்குக் கூட்டங்கள் எத்திசையும் பாய்ந்து கொண்டிருந்தன.

ஒரு நாள் சிறிய ஓய்வு எடுக்கும் நோக்குடன் வண்டியின் முன் நடந்து சென்றனர். எருமைக் கூட்டத்தை எதிர்கொள்ள நேர்ந்தது. உடனே திரும்பி தங்கள் ''சில்லு வீட்டிற்கு'' (வண்டி) வந்து விட்டார்கள் அவர்களின் ஒவ்வொரு உணவின் போதும் நல்ல நீர் கிடைக்கவில்லை. நாள்முழுவதும் இக்காம்பில் இருந்தாலும் ''நல்லநீர்'' கிடைப்பதில்லை என்று எங்கள் 'மிஷனறிஸ்மார்' சொன்னார்கள்.

இவ்விடம் கொக்காவிலைச் சூழ இருந்தது. பாதையில் பாறைகளும் மரக்குற்றிகளுமாகையால் வண்டி போக முடியாத நிலை, வண்டி திரும்பி வந்து விடும். இருவர் மாடுகளைப் பிடித்து வழி நடத்தினர். பின்பு மாடு ஒரு பக்கம் இழுத்துச் சென்றது. பெரிய ஒரு சத்தம் கேட்டது அந்நேரம் சகோதரிகள் தங்கள் ''பொது ஆத்தும சோதனை'' செய்து கொண்டிருந்தனர். எல்லோரும் மன எழுச்சியுடன் காணப்பட்டனர். மாடுகள் வண்டியை அங்குமிங்குமாகத்திருப்பத் தொடங்கின. காரணம் எமக்கு சற்று முன்பாக ஒரு பாம்பு வீதியைக் கடந்து ஊர்ந்து வந்தது. மென்மேலும் இவ்வாறானவை நேரிட்டுக் கொண்டிருந்தன. எருமைகளின் கூட்டம் ஒரு பக்கம், இருண்டு போகும் வேளையில் 3 யானைகள் கருமையான கூட்டமாகக் காணப்பட்டது. ஆனால் அவை மரத்தோடு இறுக்கக் கட்டப்பட்டன. வண்டிச் சாரதிகள் மாடுகளின் கண்களை மறைத்து ஒன்றும் பேசாமல் மறுபக்கமாகக் கடந்து சென்றனர்.

புரட்டாசி 2ந் திகதி எமது சகோதரிகள் ''சிறாம்புக்குளம்'' என்னும் இடத்தை அடைந்தனர். இங்கே ஒரு சிறிய சுக வசதியற்ற பூச்சிகள் நிறைந்த அறையைக் கண்டனர். சிறிது நேரம் ஓய்வு எடுத்து திரும்பவும் தங்கள் வண்டிக்கு வந்தனர். மீளவும் பயணித்து நண்பகலில் பக்கு செறிங்க இறம்பைக்குளம் அடைந்தனர். மாடுகள் முன் செல்ல மறுத்ததால் தங்க வேண்டி நேரிட்டது. அப்பகுதியில் உள்ள ஏழைகளான கிறீஸ்தவர்கள் முட்டை, பால் கொடுத்தனர். தங்களிடம் உள்ளவற்றைப் பகிர்ந்தனர். எமது சகோதரிகள் அவர்களுக்குப் புதியவர்கள் ஆகையால் அவர்களை உற்றுப் பார்த்தனர். அவர்களுடைய சிறிய கோவில் வீடுகளைப் போல மண்ணால் கட்டியிருந்தன. இரு அறைகள் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே தங்கள் உணவை உண்டு சிறிது இளைப்பாறி மீளவும் பயணத்தைத் தொடர்ந்தனர். இவர்களைப் போன்று பயணம் செய்தவர்களும் திரும்பி வீதிக்கு வந்து விட்டனர்.

''செமலாக்குச்சி'' என்ற இடத்தில் மின்னல் இடிமுழக்கம், வெயில் அகோரம், பாதைகளும் மிகவும் கஷ்டமான நிலை, சாரதியும் மாடுகளும் வியர்த்துக் களைத்திருப்பதைக் கண்டோம். ''கட்டவுச்சியை'' வந்து சேருமுன்னே சென்ற மாடு ஏறும்போது வழுக்கியதால் பின் சென்ற வண்டியில் தட்டியது. எனவே சாரதிகள் கூச்சலிட சகோதரிகள் பயந்து போயினர். வண்டியை விட்டு இறங்கி விட்டனர். தொடர்ச்சியாகத் தேவதாயின் பாதுகாப்பு அவர்களோடிருந்த படியால் விபத்து ஒன்றும் ஏற்படவில்லை. செம்மலக்குச்சியை அடைந்ததும் அங்குள்ள கிறீஸ்தவர்கள் அரிசி, கோழி முட்டைகள் கொண்டு வந்து கொடுத்தனர். தங்களைப் பார்க்க விட்டு அவர்களைத் திருப்திப்படுத்தியது தான் சகோதரிகளின் நன்றியாகும். மக்களுக்கு மகிழ்ச்சி. வழிப்பிராயணத்தில் சாரதிகளுக்கு எதிராக ஒன்றும் சொல்லக் கூடாது. அவர்கள் விரும்பியதைச் செய்யவிட வேண்டும். ஓர் இரவு, நல்ல நிலா ஒளி, பிரயாணத்தைத் தொடர்ந்து செய்திருக்கலாம். மாடுகள் களைத்து விட்டன எனக்கூறி பிரயாணத்தைத் தடுத்து விட்டனர் சாரதிகள்.

புரட்டசி 4ந் திகதி ஞாயிற்றுக் கிழமை அனுரதபுரத்தை அடைந்தார்கள். அங்கு சமேரியா ஆயருக்கு உதவியாக இருந்த 'பிலிப்' என்பவரின் வீட்டில் தங்க இடம் கிடைத்தது. அங்கு சிலகிறீஸ்தவர்களும் ஆலயம் ஒன்றும் இருந்தது. வருடத்திற்கு ஒருமுறை குருவானவர் வந்து தங்குவார். அங்குதான் எங்கள் தலைவியின் (Mother) முதல் கடிதம் கிடைத்தது. இக்கடிதம் கொண்டு வந்த மகிழ்ச்சியினால் பயணத்தின் பற்றாக்குறைகளையும், கஷ்டங்களையும் தாங்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் வெளியேறிய நாளிலிருந்து கூட வந்த குருவானவராலும் திருப்பலி நிறைவேற்ற முடியவில்லை. இப்போ திருப்பலி என்றதும் மிகவும் மகிழ்ச்சி. பின்பு பிலிப்பின் வீட்டிற்குச் சென்றனர். வீடு நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. 3 கட்டில்கள் ஆயத்தப்படுத்தினர். ஒரு தாயின் கரத்தினாலும், உள்ளத்தாலும் எல்லாம் கரிசனையோடும், பண்போடும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அவ்வேளை பெரும் இடிமுழக்கத்தோடு பெரு மழை பெய்து வெள்ளம் பெருகி ஒடியது. சுழல் காற்று வீசியதாலும் வெள்ளம் வீட்டுக்குள் புகுந்து விட்டது. ஓர் அறையில் மாத்திரம் தான் எல்லோரும் தங்கக்கூடியதாக இருந்தது. ஒரு சகோதரிகட்டிலில் வைத்த ''தொப்பி'' நனைந்த படியால் சற்று மனவருத்தப்பட்டா. அப்போ குருவானவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் குழப்பமடைகிறீர். அதைக் காயவிட்டு நாளைக்குப் போட்டுக் கொள்ளலாம் என்றார். இடிமுழக்கமும் மழையும் ஒய்ந்து விட்டது. அவர்கள் இளைப்பாறச் சென்ற போது ஒரு பாம்பின் இரைச்சல் கேட்டது. பிலிப்பிடம் சொன்னார்கள். ஒரு பாம்பு தான், நீங்கள் பயப்பட வேண்டாம். எனது வீட்டில் ஒரு தீங்கும் நிகழாது என்றார். அந்த இரவு அமைதியுடன் உறங்கினார்கள். மழை கொஞ்சம் பெய்தாலும் அடுத்த நாள் காலை அனுரதபுரம் வரலாற்றுச் சிதைந்த கட்டிடங்களைப் பார்க்கச் சென்றனர். சந்திர வட்டக்கல், யானைகளின் செதுக்கப்பட்ட வடிவக் கற்பலகைகள் என்பவற்றை ஆலயமுகப்பில் கண்டனர். 2000 ஆண்டுகளைப் பழமையாகக் கொண்டவை. 1ம் மாடியில் 9அடி உயரமுள்ள 2 உருவங்கள. 2ம் மாடியில் காணிக்கை செலுத்தும் அறைகள். 3ம் மாடியில் நிலத்தில் வெள்ளரச மரம். இது இரும்புக் கம்பிகளால் சுற்றி வாசலில் சலவைக் கற்களால் பதிக்கப்பட்ட இடத்தில் உள்ளது. இது புத்த மக்களின் புனிதமான மரம். இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டது. கொழும்புத்துறைக்கு (Colombogam) வந்து அங்கிருந்து அனுரதபுரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

எமது சகோதரிகள் அங்கு சென்ற போது வழிபாடுகள் நடந்து கொண்டிருந்தது. உள்ளே செல்ல உத்தரவு கேட்ட போது செருப்பை வெளியில் வைத்து விட்டு வரும்படி கூறப்பட்டது. Sr. M. Josephine காலணியைக் கழற்றாது உள்ளே செல்ல அங்கு நின்ற புத்த குருவுக்குக் கோபம் வந்து விட்டது. நீங்கள் இப்படிச் செய்தால் எம் கடவுள் உங்களைத் தண்டிப்பார். எனக் கூறினார். முன்பு ஒரு இளம் ஐரோப்பியர் அந்த வெள்ளரசுக்கு வணக்கம் செய்யாததால் வாயில் புண் வந்து ஒரு கிழமையால் இறந்து விட்டார். சகோதரிகள் பயந்து விட்டார்கள். அவர்கள் திரும்பி வந்து சிதைவடைந்த ஒரு புத்தமடத்தைப் பார்த்தார்கள். இந்த இடத்தை 600 தூண்கள் தாங்கி நின்றன. 9மாடிகள், 1000 அறைகள் உண்டு சிறிது தூரத்தில் பெண்களுக்கும் ஒரு மடம் இருந்தது.

வேறொரு இடத்துக்குச் சென்ற போது அங்குள்ள புத்த சமயத்தவர்கள் இவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. தங்களை ஏற்றுக்கொண்ட பிலிப் என்பவருக்கு நன்றி கூறி பயணத்தை மேற்கொண்டனர். வழியில் தங்கினர். அப்போது மழை மற்ற இடங்களில் பெய்தது. இவர்கள் இருந்த இடத்தில் பெய்யவில்லை.

(பம்புவால்ரம்) Pamboualtam என்னும் இடத்தில் வண்டிச் சாரதிகளுக்கு இடம் தெரியவில்லை. 2 வண்டிகளை நிறுத்தினார்கள். ஒன்றும் பேசாமல் மாடுகளை விட்ட போது சடுதியாக முதலாவது வண்டிகீழே விழ, இவர்களுடன் சென்ற Brother உம் விழுந்து காலில் நோவு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உலாலப்புளை) Oullapulle என்னும் இடத்தை நண்பகல் 12 மணிக்கு அடைந்து அங்குள்ள ஒரு கொட்டிலில் சிறிது இளைப்பாறி 2 மணி வரை சிறிது கோப்பியுடன் இருந்தனர். 3மணிக்கு உணவு தயாராகிவிட்டது. பின்பு Brother உடன் சேர்ந்து மதிய உணவு அருந்தி நடந்தவற்றைப்பற்றி நகைச்சுவையுடன் கதைத்து மகிழ்வுற்றிருந்தனர். களைப்பைப் போக்க இது காரணமாயிற்று. பாதையும் மிகவும் சீரற்ற நிலை, கனத்த மழையும் பெய்தது.

புரட்டாசி 8ந் திகதி இறுதிநாள் பயணம் இந்த இரு சம்பவங்களின் உணர்வும் எண்ணங்களும் அவர்களுடைய தைரியமான வாழ்வுக்கு உயிர் அளித்தது. ஒரு சிறு கொட்டிலில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பலம் கொடுக்கும் தெய்வீக உணவு அவர்களின் தாராள குணத்துக்கு ஆறுதலும் திடமுமாக இருந்தது. கடைசிப் பயணம் மிகவும் கஷ்டமானது. மலைப் பகுதியை நெருங்கிப் போகும் போது மேடு பள்ளம் சரிவு மிகவும் ஆபத்தான கட்டம் ஓர் ஆற்றையும் கடக்க வேண்டியிருந்தது. 3வண்டிகளும் மறுகரையை அடைந்தன. ஏனைய 2 வண்டிகளின் மாடுகளும் கரைக்கு வந்தும் தண்ணீரைக் கடக்க மறுத்து விட்டன. சாரதிகள் சத்தம் போட்டு அடித்தபின் எவ்வித ஆபத்துமின்றி கடந்து சென்றன.

இறுதியான தங்குமிடத்தில் தங்களுடைய கறுப்பு உடையை அணிந்து குருநாகலின் நுழைவாயிலை அடைந்தனர்.

சாயங்காலமாக இருந்தாலும் மக்கள் குழுக்களாகப் பல மைல் தூரம் நின்று இவர்களின் வருகைக்காகக் காத்திருந்தனர். துவக்குவெடி வெடித்து மக்களுக்கு அறிவித்தனர். பட்டினத்தை அண்மியதும் தங்களுடைய வண்டியை விட்டு, மழை பெய்து கொண்டிருந்தபோதும் 4 திறந்த வாகனங்களில் ஆடம்பரமாகச் சென்றனர்.

பங்குக் குருவும் நீடித்த பொறுமையுடன் காத்திருந்தார். முதன் முதலாகச் சிறிய கோவிலுக்குச் சென்றனர். கோவில் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சகோதரிகளைச் சூழ்ந்து மக்கள் கூட்டம் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நின்றனர். பின்பு பங்குக் குருவின் பணிமனையில் அவர்களை வரவேற்று, வரவேற்றுப்பத்திரம் வாசிக்கப்பட்டது. அதன் பின் சுவையான நல்ல உணவு பரிமாறப்பட்டது. பிற்பாடு நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. ஆசீர்வாதம் நிறைவுற்றதும் தங்களின் எளிமையான இல்லத்துக்குச் சென்று ஆயிரம் முறைஆண்டவனை வாழ்த்திப் போற்றி நன்றி கூறினர். இறைவன் அவர்களைத் தொடர்ந்தும் காப்பாற்றினார். இறைவன் அறியப்பட்டு அவர் அன்பு செய்யப்படவேண்டுமென்பதே அவர்களின் ஒரே நோக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அனுபவித்த கஷ்டங்கள், பற்றாக்குறைகள், எல்லாவற்றையும் இந்த இரவில் எடுத்துக்கொண்ட இளைப்பாற்றி மறக்கச் செய்தது. இறைவனுக்கென்று தங்களை ஒப்புக் கொடுத்த இந்தச் சகோதரிகளை ஆண்டவரின் பத்தினிகளை ஒரு போதும் கைவிடமாட்டார் என்பது எமது நம்பிக்கை.

## யாழ்ப்பாணம் 30 தை 1871

பிரான்சில் நடக்கும் துன்ப சம்பவங்கள் எம்மை துன்ப சாகரத்துள் அமிழ்த்துகின்றன. எனது நல்ல தாயாரே! நான் உங்களுக்குக் கூறியவாறு விரைவில் சில பிள்ளைகளைக் கைநெகிழக் கட்டாயப்படுத்தப்படுகிறோம். ஏற்கனவே 3 பிள்ளைகள் வீட்டிற்கு அவர்களின் பெற்றோருடன் அனுபப்பட்டுள்ளனர். தற்போது 12 பிறசமயப் பிள்ளைகள் இருக்கிறார்கள். திருமுழுக்குப் பெற ஆயத்தம் செய்கிறார்கள். திருமுழுக்கினால் ஒருமுறை பெற்றுக்கொண்ட விசுவாசத்தை நாம் காப்பாற்ற வேண்டும். இறைபராமரிப்பிலே நம்பி வாழ்கின்றோம். இவ்வருடம் எமது விற்பனையும் குறைவு. ஆண்டவரில் நம்பிக்கை கொண்டவர்களை அவர் ஒருபோதும் கைநெகிழமாட்டார். எமது 2 அநாதைப் பிள்ளைகள் நல்ல கத்தோலிக்க இளைஞரைத் திருமணம் செய்து கொண்டனர். அவர்கள் நல்ல கத்தோலிக்க குடும்பங்களை உருவாக்குவார்கள். சில நாட்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு தனவந்தனான கத்தோலிக்கர் 40 கொத்து அரிசி எமது பிள்ளைகளுக்கு அனுப்பி வைத்தார்.

வசதியற்ற நிலையிலும் எமது சிறுவர்களுக்கு ஒரு கொண்டாட்டம் வைத்து பரிசுகள் வழங்கினோம். சில குருக்கள் மாத்திரம் அழைக்கப்பட்டிருந்தனர்.

எமது சகோதரிகள் தை மாதம் 2ந் திகதி யாழ்ப்பாணம் வந்தார்கள். குருநாகலுக்குச் செல்வதிலும் பார்க்க, யாழ் திரும்பி வருவது மிகவும் கடினம். நாமும் பொறுமையோடு காத்திருந்தோம். நற்சுகத்தோடு இருக்கிறார்கள். ஆனால் மிகவும் களைப்பு.

அவர்கள் திரும்பி வந்த பயணத்தைப் பற்றிப் பின்பு எழுதுவேன். அதில் Sr. Joseph, Patrick எவ்வாறு களைப்பைத் தாங்கினர் என்று அறிவீர்கள், அவர்கள் தனியே வரவில்லை. ஆயர் யாழ் வந்த அடுத்தநாள் எம்மைச் சந்திக்க வந்தார். அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் அவரை வரவேற்றோம். ஆங்கிலச் சிறார்கள் பாட்டுப்பாடி வாழ்த்துரை கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அநாதைப்பிள்ளை தங்கள் சிறுவர் பெயரால் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். எமது புரட்டஸ்தாந்து பிள்ளைகளும் பங்குபற்றினர். ஆயருக்கு மிகவும் மகிழ்ச்சி. எமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய ஆயரைத் தந்த இறைவனுக்கு எமது உள்ளத்தில் நன்றி கூறினோம்.

தை 16ந் திகதி ஆயர் எமது தியான ஒடுக்கத்தைத் தொடங்கிவைத்தார். Fr. Pullicani மறை உரை ஆற்றினார். 23ந் திகதி தியானம் முடிவடைந்தது. நாள் முழுவதும் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டிருந்தது. ஆயர் திருப்பலி நிறைவேற்றினார். சாயுங்காலம் ஆசீர்வாத நேரத்தில் ஆயர் அறிவுரை வழங்கினார். செப நேரத்தில் எமது குடும்பம், தாய் நாட்டிற்காகச் செபித்தோம்.

## யாழ்ப்பாணம் மாசி 01 - 1871

குருநாகலில் இருந்து யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து குருநாகலுக்குச் சென்ற அறிக்கை போல இப்பயணமும் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். கார்த்திகை 15ல் எம் சகோதரிகள் ஆயர், Fr. Pullicani ஓர் Brother உடன் சேர்ந்து கொழும்புக்குத் தபால் எடுக்கும் வண்டியில் புகையிரத நிலையம் அடைந்தனர். அங்கிருந்து கொழும்பு புகையிரத்தில் சென்று பின்பு கப்பல் வழியாக யாழ்ப்பாணம் போக எண்ணினர். நல்லாயன் சபைச் சகோதரிகளிடம் கொழும்பில் தங்கினர். பொருட்கள் துறைமுகத்தில் இருந்ததால் இன்னும் 2 நாட்கள் தங்க எண்ணினர். இரவு 8.30 மணியளவில் காலநிலை சீரற்றதாக இருப்பதால் கப்பல் செல்லாது என அறிவிக்கப்பட்டது. 2 கப்பல்கள் சென்று திரும்பி வந்தன. கடல் சரியான நிலைக்கு வர சில மாதங்கள் தாமதமாகலாம், எனவே ஆயர் வண்டி மூலம் பயணிக்கத்திட்டமிட்டார்.

மாலையில் Fr. Pullicani சகோதரிகளைத் தேடிவந்தார், ஆயர் இவர்களுடன் போகாத படியால் சகோதரிகள் அவருக்கு பிரியாவிடை கூறினர். ஆயர் இவர்களை அழைத்துச் செல்ல விரும்பவில்லை. இது அவர்களுக்குப் பெரும் ஏமாற்றம். வழியில் வரும் அபாயங்களை ஆயர் எடுத்துக்கூறியும் அவர்கள் கேட்கவில்லை. யாழ்ப்பாணத்தில் விற்பனை நடக்கவிருப்பதால் Sr. M. Joseph அவசியம் போக வேண்டியிருந்தது.இறுதியாகக் காய்ச்சல் வந்தால் என்ன செய்வீர்கள் என்ற போது ''என்னிடம் குயினைன் மருந்து இருக்கிறது என்று கூறினா. ''பெண்கள் விரும்புவதை இறைவனும் விரும்புகிறார். என்பது பழமொழி என்றா. எனவே எல்லாம் ஆயத்தம் என்றால் காலை 7 மணிக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படலாம். அல்லது குருநாகலுக்குத்திரும்பலாம் என்றார். Sr. Joseph ஆம் எனக்கூறி காலை 6.30 மணிக்கு ஆயருக்கு முன் புகையிரத நிலையத்தை அடைந்து விட்டா. அங்கு ஒரு நல்ல சிங்களவர், அறியப்பட்டிருந்தவர், குருவானவருக்கு ஒரு வெகுமதி கொண்டு வந்து அவருக்குத் தனது மரியாதையைக் காட்டினார். ஏனையோர் சகோதரிகளுக்கு தோடம்பழம், பிஸ்கெற் கொண்டு வந்து கொடுத்தனர். சகோதரிகள் கொழும்பில் இருந்த போது பலர் அவர்களைச் சந்தித்தார்கள். அதில் எமது 2 போடிங்பிள்ளைகளின் தந்தை அவர்களைக் கூட்டி வரப்புறப்பட்டார். எம்மைக் கண்டதும் தனது 3வது பிள்ளையையும் எம்மிடம் ஒப்படைத்தார்.

எமது பயணிகள் கண்டியை நோக்கிச் சென்றனர். புகையிரதப் பாதை மகிழ்ச்சி தரும் கிராமங்களினூடாகப் போகும் போது அழகான காட்சிகள், இருமருங்கும் மலைப்பாறைகள், பயிர்கள் விளைநிலங்கள், வரண்டநிலங்கள், பள்ளத்தாக்குகள். இவ்வாறு காட்சியளித்தன. இதை எழுதும் போது என்முன்னே மூங்கிலால் வேயப்பட்ட வீடுகள் நிறைந்த பகுதி எண் கண் முன்னே தேன்றுகிறது. நெற்பயிர் விளைநிலங்கள், கோப்பிச் செய்கை, சிவந்த கனிகள், நீர்வீழ்ச்சி, தெளிந்த நீரோட்ட இரைச்சல். இவற்றைப் பார்க்கும் போது இந்த அதிசயமான படைப்புக்களைப் படைத்த இறைவனிடம் எமது உணர்வுகளையும், உள்ளத்தையும் எழுப்பி நன்றி கூறினோம்.

1300 அடி உயரமுள்ள (Rockof Sensation) உணர்ச்சிப்பாறை அழகான காட்சி, ஆறுகள் வெண்திரையாக மேலிருந்து பள்ளத்தை நாடி ஓடி வரும் காட்சி, அருகில் ஒரு பாதாளம், புகையிரதம் தடம்புரண்டால் நடப்பது விபரீதம். பாறையினூடாகச் சென்ற பாதையின் இடையில் சுரங்கப்பாதைகள். பாறையினூடாக ஊற்றுக்கள் புறப்பட்டு நீர்வீழ்ச்சிகளின் அழகு இந்தப் பாறையினூடாக பாதையை ஏற்படுத்தி நிறைவுக்குக் கொண்டு வந்தவர்களையும், வல்லமையுள்ள இறைவனின் நன்மைத் தனத்தையும், நினைத்துக் கொண்டு கண்டியை அடைந்தோம். அங்கு 2 வாகனங்கள் எமக்காகக் காத்திருந்தன. Fr. Pullicani அங்கு நின்றார். இவரின் அன்பும் சிந்தனையும் இந்த வாகனங்கள் வரக் காரணம். மக்கள் அவர் மேல் நன்றியுடையவர்களாக இருந்தனர்.

பெனடிக்ரன் சபையினர் ஆயரையும் சகோதரிகளையும் வரவேற்றனர். முதல் கோவிலுக்குச் சென்று நன்றி கூறினோம். நகரைச் சுற்றிப் பார்க்க முடியவில்லை. பின்பு தபால் வண்டி எடுத்து மாத்தளை சென்றோம். 16 மைல் தூரம். அங்கும் உணர்ச்சி மலை போன்று பய உணர்வு அவ்வேளையில் இறைவனின் கரம் எம்மைத் தாங்கிய உணர்வும் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுங்கிய பாதை, ஏற்ற இறக்கம், நெளிந்த மலைத் தொடர்களில் பயணம் செய்தோம். அவ்வேளையில் கோப்பி அறுவடை செய்ததால் வண்டிகள் பாதையில் சென்று கொண்டிருந்தன. இறக்கத்தில் குதிரைகள் பாய்ந்து சென்றன. வண்டிச் சாரதி பிற சமயத்தவன். சகோதரிகள் கிறீஸ்தவர்களாக இருந்து பயப்பட்டால் அது அவனுக்கு இடறலாக இருக்கும். எனவே இயற்கைக் காட்சிகளை இரசித்த வண்ணம் மலை, வளர்ந்த மரங்கள், சூரியனின் ஒளிக்கதிர்கள் இலைகளின் அசைந்தாடும் ஒசை - இவையெல்லாம் படைத்தவனை நினைவுக்குக் கொண்டு வரப் பயணம் செய்தோம்.

எமது பயணம் புனித தோமையார் திருநாளை அண்மித்த நாட்களில் முடிந்தது. மக்கள் ஆயரை எதிர்பார்க்கவில்லை. தற்செயலாக நாம் மாத்தளையை அடைந்தது எல்லா மணிகளும் ஒலித்தன. நகரை அடைந்ததும் பலகாலமாகக் கிறீஸ்தவளாகி வாழ்ந்த ஓா ஒல்லாந்த (Duteh) பெண் நிலத்தில் வீழ்ந்து மகிழ்வுடன் இவர்களை வரவேற்றாள். பின்பு Pullicani குருவின் கை கால்களை முழங்காலில் இருந்து முத்தமிட்டாள். அவர் பலகாலமாக இவர்களின் பங்குத்தந்தையாக விளங்கினார். முழங்காலில் இருந்து மரியாதையுடன் உரையாடினாள். இவவிடம் எம் சகோதரிகளைக் குருவானவர் ஒப்படைத்தார். ஒன்றுமே குறைவில்லாமல் மகிழ்வுடன் அப்பெண் வரவேற்றாள்.

புனித தோமையார் திருநாளில் திருப்பலியில் பங்கெடுத்து திருவுணவினால் ஊட்டம் பெற்று ஆன்மபலம் பெற்றுக் கொண்டனர். பலவிதமான ஆபத்துக்களிலே நின்று காப்பாற்றியதற்காக இயேசுவுக்கு நன்றி கூறினார்கள். பகலில் மக்கள் பலர் அவர்களை அண்மித்து வந்து, அதிசயமாக அவர்களைப் பார்த்துப் பல கேள்விகளைக் கேட்டு விசாரித்தனர். ஒரு புரட்டஸ்தாந்து பெண்ணும் சகோதரிகளின் அன்பான பிரசன்னத்தினால் ஈர்க்கப்பட்டாள். மாத்தளையில் இருந்து தபால் புகைவண்டியில் பயணம் செய்ய விரும்பினர். கிறீஸ்மஸ் பெருவிழாவுக்கு ஆயரைத் தங்களுடன் மறித்து வைத்திருக்கவும் மக்களுக்கு ஓர் எண்ணம் இருந்தது. அதனால் கோப்பி அறுவடைக்கு வண்டிகள் பயன்படுத்தப்படும் என்று சொன்னார்கள். எனினும் ஆயர் அவர்களை அறியாது குறிப்பிட்ட நேரத்தில் பயணத்தைத் தொடங்கினார். பின்பு சாம்பு (Sampoo) என்ற ஒரு செழிப்பான கிராமத்தை அடைந்து சிறிது நேரம் ஒய்வெடுத்து மீண்டும் பயணத்தை தொடங்கினோம். நாங்கள் போகும் போது எருமைகளும், யானைகளும் புகையிலைச் சுமைகளோடு வந்து கொண்டிருந்தன. ஆனால் பயணிகட்கு அவை இடங்கொடுத்தன.

அனுராதபுரம் வரைக்கும் பாதைகள் நன்றாக இருந்தன. கிறிஸ்மஸ் விழிப்புத்தினத்தில் விடுதியில் பயணிகள் தங்கினர். மறுநாள் காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7மணிக்கு ஆயர் திருப்பலி ஒப்புக் கொடுத்தார். பட்டாஸ் வெடிகள், மத்தள ஓசை மக்கள் கூட்டத்தை ஆலயத்திற்கு இட்டுச் சென்றன. Sr. M. Patrick முதன்முறையாக இவற்றைக் கண்டதும், கேட்டதும், அவவை பெரும் சத்தமாகச் சிரிக்கவைத்தன. சிறப்பாக மத்தளத்துடன் கூடிய அங்க அசைவுகள் (கண்டியன் நடனம்) ஆயரின் முன் மனநோயாளர் போல் தோன்றியது. திருப்பலியின் பின் பிலிப் அவர்களின் இல்லத்தில் காலை உணவை அருந்தினார்கள்.

நடனகாரர் திரும்பவும் தங்கள் அங்க அசைவுகள், முகபாவனைகளினால் மகிழ்ச்சியையும், மதிப்பையும் ஆயருக்கு எடுத்துக்காட்டினர். இந்த மனிதர் எப்படி மனநோயாளரைப் போல் நடிக்கலாம், ஆடலாம் என்பது Sr. Patrick க்கு புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று. சிதைவடைந்த அனுரதபுரி நகரைச்சுற்றிப் பார்வையிட்டனர். இந்த மிஷனறிச் சகோதரிகள் வரலாற்று நகரைச் சுற்றிப் பார்க்கும் போது அதிசயமான விக்கிரகங்களைக் கண்டார்கள். எங்கும் யானைகள், பெரிய முதலைகளின் சிலைகள் தென்பட்டன. அங்கு சிங்கள வண்டிச் சாரதிகள் தம் பயணத்தை நிறுத்திக் கொண்டதால் வேறு வண்டிகளைப் பிடித்தனர். மாலை வரையும் பயணத்தை இடைநிறுத்துவதில்லை எனச் சாரதிகளுக்குக் கூறினோம். எனினும் சில மணித்தியாலப் பிரயாணத்தின் பின்மாடுகள் முன் நோக்கிச் செல்ல மறுத்தன. ஒரு குளக்கரைக்கு வந்து மரத்தினாலான பாலத்தில் செல்ல வேண்டியிருந்தது. பயணிகள் ''மதவாச்சியை விட்டு'' விளாங்குளம் நோக்கிச் செல்லுகையில் மழையினால் காட்டில் இருந்து வரும் நீர் அருவியாகப் பாய்ந்து ஓடி பாதையை மறைத்தன. எனவே சாரதிகள் மாடுகளுக்குத் துணையாக நின்று வண்டியைத் தள்ளினர். Sr. M. Joseph இழுத்துச் செல்லுங்கள் என்று இடைவிடாது கூறிக்கொண்டே இருந்தா. சகோதரிகள் ஒரு குடையுடன் ஒருவாறு சமாளித்தனர். ஒரு நிலத்தை உழுதது போன்று பாதை சேறும் சகதியுமாகக் காணப்பட்டது. மாடுகள் குளத்தை அடைந்து அங்கு மிங்கும் இழுத்தன. சகோதரிகளுக்குப் பயமேற்பட்டாலும் திருக்குடும்பத்தின் துணையுடன் அடுத்த கரையை அடைந்தனர்.

இரவு 9 மணிக்கு விடுதியை அடைந்தனர். வண்டியை விட்டு இறங்கிய போது ஆயர் மிகவும் கரிசனையுடன் சகோதரிகளிடம் வந்து தனது அனுதாபத்தையும், பயணத்தின் கஷ்டங்களையும் எடுத்துக்கூறிய போது அவர்கள் தைரியத்தை இழக்காது ஆயரை அமைதிப்படுத்தினர்.

இந்தக் கூடாதகால நிலை 4 நாட்கள் நீடித்தன. அடிக்கடிகுளங்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. இரவில் லாம்பும் இல்லை. ஒரு ரோச்சின் உதவியுடன் பயணித்தனர். பாதைகள் மிகவும் கெடுதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை, சடுதியாக ஒரு மணியோசை கேட்டது. கிறீஸ்தவ கிராமமாக இருக்கலாம் என்று நினைத்து சகோதரிகள் மூவேளைச் செபத்தை சொன்னார்கள். பின்பு பார்த்த போது அது ஒரு இந்துக் கோவில் மணி என்று அறிந்தனர்.

இதுவரைக்கும் தங்கிய விடுதிகள் சுத்தமாகவும் இளைப்பாற்றி எடுக்க வசதியாகவும் இருந்தது. தற்போது தங்குமிடம் வசதியற்றது. பொதுமக்களும் இங்கே தான் தங்குவார்கள். ஆயருக்கும் மிஷனறிச் சகோதரிகளுக்கும் ஒரு புறம்பான இடம் தேடியும் கிடைக்கவில்லை. மூங்கிலால் அமைத்த சிறு கொட்டில் வீடுகள், அங்கே கட்டில், தளபாடங்கள் இல்லை. ஒரு நாற்காலி, சில படுக்கைகள் இருந்தன. ஆயருக்கு இந்த இடத்தைக் கொடுக்கச் சகோதரிகள் விரும்பினர். ஆயர் சொன்னார் சிஸ்ரர். ஜோசெவ் வண்டியிலும் சிஸ்ரர். பற்றிக் சாய்மனையிலும் படுக்கச் செல்லுங்கள். தங்குமிடத்திற்குப் போனபோது கறையான், ஈசல் நிறைந்து மூடிக் கொண்டது. அவைகளை அகற்றுவது மிகவும் கஷ்டமாக இருந்தது. உணவுப் பொருட்களை ஏற்றி வரும் வண்டி பிந்தி வந்ததால் எல்லோருக்கும் பசி எடுத்தது. சிஸ்ரர். ஜோசெவ் உணவுப் பொருட்களுக்குப் பொறுப்பாக இருந்தபடியால் அவவிடம் இருந்த பிஸ்கெற்றை நிறைவான உணவுகிடைக்கு மட்டும் சாப்பிட்டனர். இங்கு தங்கி இருந்த போது சாரதி ஒருவர் சுகவீனமுற்றதால் சகோதரி குளிர்பானம் கொடுத்தா. அதைப் பருகியபின் ஒருவருக்கும் சொல்லாமல் அனுரதபுரத்துக்குத் திரும்பிவிட்டான்.

31ந் திகதி இரவும் தங்குமிடத்தில் Sr. Marie Joseph ஒரு முறிந்த நாற்காலியில் உட்கார்ந்த போது புலிமுகச் சிலந்தி ஒன்றைக் கண்ட போது பயத்துடன் அவ்விடத்தை விட்டு விலகினா. ஆயருக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தை அவர் சகோதரிகளுக்குக் கொடுத்து விட்டுத் தான் வண்டியிலே படுத்து உறங்கினார். 3மணிக்கு எழும்பி திருப்பலி நிறைவேற்றினர். திரும்பவும் எமது பயணிகள் இளைப்பாறச் சென்ற போது பயங்கரமான விஷஜெந்துக்கள், பாம்புகள் போன்றவற்றைச் சந்திக்க நேர்ந்தது.

திரும்பவும் அவர்கள் சென்ற போது கதவைத் தட்டும் சத்தம் கேட்டார்கள். ஒரு Brother சுகவீனமடைந்ததால் தங்களிடம் இருந்த மருந்தைக்கொடுத்துக் குணப்படுத்தி Sr. Joseph அவர் அருகில் இருந்து உதவி செய்தா. இவ்வாறு இரவைக் கழித்து புதிய வருடத்தைத் தொடங்கினார்கள்.

புதிய வருடத்தில் சகோதரிகள் தங்கிய சிறிய அறையில் ஆயர் திருப்பலியை நிறைவேற்றினார். இச்சிறிய அறை தாழ்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நசரேத்தின் இல்லத்தை நினைவூட்டியது. இந்த ஏழ்மையான பீடத்தில் தங்களுடைய செயல்களையும், தலைவிகள், சகோதரிகளுக்குத் தெரிவிக்கும் வாழ்த்துக்களையும் நற்கருணைக்கு முன்னெடுத்துக் கூறினர். விலைமதிக்க முடியாத நேரம். அவர்களது இருதயத்தை ஆண்டவர் தன் உறைவிடமாக்கிக் கொண்டார். திருப்பலியின் பின் தங்களது புதுவருட வாழ்த்துக்களை ஆயருக்கும் Fr. Pullicani க்கும் தெரிவித்துக் கொண்டனர்.

சிலநாட்களின் முன் எம் பயணிகள் ஒரு கத்தோலிக்க கிராமத்தை அடைந்தனர். வழக்கப்படிமக்கள் அரிசி முட்டை, வாழைப்பழம் கொண்டு வந்து வரவேற்றனர். பலரின் கழுத்தில் 4மாதத்திற்கு முன்பு எம் சகோதரிகள் கொடுத்த உத்தரியம், வரணிக்கம் காணப்பட்டது. செபங்களை மறந்திருந்தவர்களுக்கு நீண்ட நேரம் செலவிட்டுப் படிப்பித்தார்கள். குருவானவர் 9 பிள்ளைகளுக்குத் திருமுழுக்குக் கொடுத்து விண்ணகத்தின் கதவுகளைத் திறந்து விட்டார்.

அவர் வழிமாறி விட்டார். அவர்கள் பயணத்தைத் தொடர இருந்த வேளை குருவானவரைக் காணவில்லை. அவரைத் தேட ஒர் ஆளை அனுப்பியும் வரவில்லை. ஆயரும் பொறுமையை இழந்து குருவைத்தேடினர். இறுதியாக ஒரு அடர்ந்தகாட்டில் ஒரு தெருவில் நிற்கக் கண்டு ஒருமிக்கப் பயணத்தை தொடர்ந்தனர்.

வண்டி நன்றாக ஒடிக்கொண்டிருக்கும் போது மழை பெய்தபடியால் மாடுகள் நல்ல நிலையில் இருக்கவில்லை. தன்மாடு வரும் போது நன்றாக இருந்ததென்றும் தற்போது அப்படி இல்லையென்றும், யாராவது ஏதும் தீயகாரியங்கள் செய்திருக்கலாம் என்று சாரதி ஆயருக்கு எடுத்துரைத்தார். ஆயரும் அதற்குச் செவிமடுத்து தீயசக்திக்கு எதிராக மாடுகளை ஆசீர்வதித்தார். 5 வயதுப்பிள்ளை ஒன்றும் செபமாலை ஓதியது. தேவதாயின் இதயத்தை இச் செபம் தொட்டபடியால் எல்லாம் நல்ல நிலைக்குத் திரும்பியது.

வருடத்தின் முதல்நாள் காலநிலை மிகவும் நன்றாக இருந்தது. மழைமேகங்கள் கலைந்து தெருவோரங்களில் பசும்புற்தரைகளும், பலவர்ணப்பூக்களும் சூரிய ஒளியில் பிரகாசித்தன. இந்த மனோரம்மியமான இயற்கை வனப்பு அவர்களின் பயணக்களைப்புக் கஷ்டங்களை மறக்கச் செய்தது. பயணிகளும் ஆனையிறவை அடைந்து விட்டார்கள். அங்கு வண்டி பாதை ஒன்றில் ஏறிக்கடந்த வேளை சகோதரிகள் அடுத்த கரையில் இருந்த தங்குமிடத்திற்குச் சென்று அதைப்பார்வையிட்டனர். இரு அடுக்கு மாடிவீடு. புதிதாகப் பெயின்ற் பண்ணப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் அங்கு தங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3/4 மணித்தியாலத்தின் பின் வண்டிகள் அடுத்த கரைக்கு வந்து இரவுக்கு முன் பளையை அடைவதற்காகச் சென்றனர். பயணிகள் எல்லோரும் தங்கக்கூடிய பெரிய தங்குமிடம் அங்கிருந்தது. காலை 3 மணியளவில் புறப்படுவோம், புறப்படுவோம் என்ற குரல் கேட்டது. சாரதிகள் அதற்குச் செவிசாய்க்கவில்லை. சாரதிகள் காணாமற் போன தங்கள் மாடுகளைத் தேடிச் சென்று விட்டனர். பசும்புற்களையும், இலைகுழைகளையும் மேய்ந்து கொண்டிருந்த இருமாடுகளையும் கண்டு பிடித்துக் கொண்டு வந்தனர்.

பயணமும் முடிவுக்கு வருகிறது. கடைசி தங்குமிடம் புலோப்பளையை அடையமுன் ஒரு கூட்டம் கத்தோலிக்கர் சிலுவை கொடிகளுடன் ஆயரைச் சந்திக்க வந்தனர். முதலாவது வண்டியைக் கண்டதும் எல்லோரும் நிலத்தில் விழுந்தனர். அதில் எமது சகோதரிகள் இருந்தனர். உடனே சாரதிக்குச் சொல்லி ஆயரின் வண்டியை முன்னுக்கு விட்டார்கள்.

ஒரு கிராமத்துக்கு வந்தபோது பெண்கள் கூட்டம் ஒன்று குழந்தைகளோடு பார்க்க வந்தார்கள் அவர்களுடைய குழந்தைகளைத் தடவிய போது அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. அவர்களுள் எம் சகோதரிகளோடு அநாதைப் பிள்ளைகளாய் இருந்து திருமணம் செய்து குழந்தைகளையும் பெற்றெடுத்த சிலரும் நின்றனர். குழந்தைகளைக் காண்பித்து மகிழ்ச்சியடைந்தார்கள். இந்தியாவில் பெரிய அப்போஸ்தலரை வரவேற்பது போல் மக்கள் அவரை வரவேற்றனர். தங்கள் இடத்திற்கு ஆயர் வருவார் என்று நம்பினார்கள். முதல்நாள் பின்னேரம் சில மைல்களுக்கப்பால் இருந்த பங்குக்குரு ஆயரை வரவேற்க அண்மித்து வந்து மக்களைக் கொண்டு பெரிய வரவேற்பு சிறப்பாக நடாத்தி வாழ்த்துப் பத்திரமும் வாசிக்கப்பட்டது. தங்களுக்கு ஒரு குருவை அனுப்பும்படி கேட்டார்கள். ஒரு வருடத்துக்கு ஒரு முறை தான் குருவானவர் போவார். அதிகமானோர் திருமுழுக்கு திருவருட்சாதனங்கள் இன்றி இறந்துவிடுவார்கள். பணி செய்ய ஆட்கள் தேவை. ஆயர் அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வார்த்தைகளை எடுத்துக் கூறினார்.

ஒரு மணிக்கு புல்லா வெளியில் இருந்து புறப்பட்டனர். எல்லாக் கிறீஸ்தவர்களும் ஒரு குறிப்பிட்ட தூரம் வரையும் மேளச்சத்தத்தோடு ஆயரை அழைத்துச் சென்றனர். இறுதியாக ஆயர் இந்த தைரியமான மக்களை ஆசீர்வதித்தார். அவர்களும் மகிழ்ச்சியோடு திரும்பிச் சென்றனர்.

கடைசியாக எமது பயணிகள் சாவகச்சேரியை அடைந்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்து 10 மைல் தூரம் தான். கார் அவர்களுக்காகக் காத்திருந்தது. வண்டியை விட்டு இறங்கினார்கள். எங்கள் தாயாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களைச் சந்திக்க வர விரும்பிய போது ஒரு நல்ல குடும்பம் தம் வாகனத்தைக் கொடுத்து உதவியது. சில பிள்ளைகளுடன் எம்மைச் சந்திக்க வந்தா. யாழ்ப்பாணச் சகோதரிகளுக்கு மிகவும் மகிழ்ச்சி எல்லோரும் ஆலயம் சென்றோம். ஆயருக்கு வாழ்த்துரை வாசிக்கப்பட்டது. ஆயர் ஒவ்வொருவருக்கும் ஆசிகூறி நற்கருணை ஆசீர்வாதத்துடன் பயணமும் முடிவுக்கு வந்து விட்டது.

## 24. சித்திரை 1871

எமது அநாதைப் பிள்ளைகளைப் பராமரிப்பது எவ்வளவு கஷ்டமென்பதை மிகவும் சுருக்கமாக முன்பு உங்களுக்குக் கூறியுள்ளேன். திருமுழுக்குப் பெற்ற அவர்களைத் திருப்பி அனுப்ப ஆயர் விரும்புவதில்லை. அநாதை ஆண், பெண் சிறுவர்களைப் பராமரிக்க தனது காரை லொத்தருக்கு விட்டார். நாமும் எம்மால் இயன்றவற்றைச் செய்கிறோம். இன்று வரைக்கும் தேவபராமரிப்பிலும் புனித சூசையப்பரின் வேண்டுதலிலும் நம்பிக்கை வைத்து இச்சிறுவர்களை ஆதரித்து வருகிறோம்.

புனித சூசையப்பரின் தொழிற்பட்டறையில் வேலை செய்யும் இளைஞர்கள் ஒரு பிள்ளையைத் தாம் வைத்திருப்போம் எனக்கூறினர். உங்கள் வாழ்க்கையே மிகவும் கஷ்டமானது, எப்படி ஒரு பிள்ளையை ஆதரிப்பீர்கள் என்று கேட்டதற்கு பயப்பட வேண்டாம் மதர் என்றார்கள். எங்களுக்கு உத்தரவு தாருங்கள், ஒய்வுநேரத்தில் உழைத்துக் கொடுப்போம். எங்களுடைய பழைய உடுப்புக்களைக் கொடுப்போம், இரவு உணவு கொடுப்போம். 3 அப்பங்கள் சாப்பிடுவதன் மூலம் அவவுக்கும் கொடுப்போம் என்றனர். அவர்களுடைய உதார குணத்தைப் பாராட்டினேன். என் உள்ளத்தை ஈர்த்தது. ஒருநாள் அவவைப் பார்க்கப் போனேன். எமது சின்ன விக்ரோறியா சுத்தமான உடை அணிந்திருந்தா. ஒரு மாதபோடிங் காசு நான் கொடுத்தேன். எமது தொழிலாளிகளான இளைஞர்கள் மிகவும் ஆர்வம் நிறைந்தவர்கள்.

யாழ் அநாதைபிள்ளைகளைப் பற்றி மக்களுக்கு ஆயர் ஒரு சுற்றுமடல் எழுதியிருந்தார். சந்தைக்கு மீன் வாங்கச் சென்ற 'பெயாற்றிஸ்' என்ற பிள்ளையை 3 மீனவர்கள் சந்தித்து ஒவ்வொரு மாலையும் தாங்கள் மீன்தருவதாகவும், மீன் அதிகம் கிடைக்க மன்றாடும்படியும் கேட்டார்கள். அதன் பின் பெயாற்றிஸ் ஒவ்வொரு நாளும் சந்தைக்குச் சென்று மீன் வாங்கி எமது குடும்பத்துக்குப் பகிர்ந்தளித்தா. எமது ஏழ்மையான திருக்குடும்ப உறுப்பினர்க்கு பெயாற்றிஸ் ஒரு பகிர்ந்து அளிக்கும் ஆளாக மாறிவிட்டா. முன்பிருந்த யூடொக்சி போல பெயாற்றிஸ் திருக்குடும்ப அநாதைபிள்ளைகளுக்கு நல்லுபகாரியாக இருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தலைமை மருத்துவ அதிகாரியும் இலவசமாக மருந்து கொடுக்கவும், இரவு பகல் சிகிச்சைக்கும் சம்மதித்தார். ஒருவர் இந்து சமயத்தவர், மற்றவர் புரட்டஸ்தாந்து சமயத்தவர். எங்கள் மேல் அவர்கள் கொண்ட ஆதரவுக்கு இறைவன் அவர்களுக்குச் சம்பாவனை அளிப்பார். எனது நல்லதாயாரே! உமது புத்திரிகளை இறைவன் கைநெகிழாது தமது தேவபராமரிப்பைக் காட்டி வருகிறார். எமது அன்புக்குரிய பாதுகாவலராகிய புனித சூசையப்பர் எமது பிள்ளைகள் எங்கெல்லாம் இருப்பார்களோ அவர்களைப் போஷித்து வருகிறார். சாத்தானும் எம்முடன் போட்டி போட்டுச் சோதிக்கின்றது. இச் சோதனையுள் அகப்பட்டு 7 பிள்ளைகள் வீடு சென்றுள்ளார்கள். 2 சின்னப் பிள்ளைகள் தங்களுடைய சகோதரிகளோடு திரும்பப் போக விரும்பவில்லை. இக்கஷ்டமானசூழ்நிலையில் எனது நல்ல தாயாரே! நீங்கள் எங்களுக்காக மன்றாடுவீர்களென்று நம்புகிறோம். மாசி 8ந் திகதி எங்கள் நல்ல பிதாவின் மரணநாளை நினைவு கூர்ந்து கொண்டாடினோம்.

புனித சூசையப்பரின் மாதத்துக்கு முதல் ஆயத்த நாளில் அவரது திருச்சுரூவத்தின் பாதத்தடியில் அதிகமான மெழுகுதிரிப்பைக்கெற்றும், ஒரு பெரிய தேன்திரியும், காசும் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டோம். யார் இதைக் காணிக்கையாக வைத்தார்களென்று எங்களுக்குத் தெரியாது. கடைசியாக எமது இளம் பெண் ஒருத்தி புனித சூசையப்பரின் மேற்கொண்ட பக்தியினால் காசு சேகரித்து இவற்றை வாங்கிவைத்தாள். அவரின் மாதம் நன்கு கொண்டாடப்பட்டது. எங்கள் தலைமைக் குருவுக்காக 9 நாட்கள் நவநாட்கள் செய்து அவருடைய திருநாளில் அவருடைய கருத்துக்காகச் செபித்தோம். 19ந் திகதி ஞாயிற்றுக் கிழமை வந்த படியால் சூசையப்பரின் திருநாளைக் கொண்டாடினோம் அடுத்தநாள் (Fr. General) க்காக ஆயர் எங்கள் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி மாலையில் நற்கருணை ஆசீர்வாதமும் அளித்தார்.

சித்திரை 5ந் திகதி எமது பதில் பிரதிநிதித்துவ குருவுக்காக செபங்களை ஒப்புக் கொடுத்தோம். அவரை அறிந்திராவிட்டாலும் அவரின் க்டிதங்கள் வழியாக அவரின் தந்தைக்குரிய அன்பை அனுபவித்தோம். இலங்கைத் தீவுக்குத் தூரமாக இருந்தாலும் அவர் தமது குமாரத்திகளை மறக்கவில்லை. அவர் செய்தவைகளுக்கு நன்றியாக புனித வின்சென்ற் திருநாளில் அவர் கருத்துக்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுத்தோம். இம்முறை எமது சிற்றாலயத்தில் ஆயர் புனித வாரச்சடங்குகளை நிறைவேற்ற விரும்பினார். எமக்கு முன்பு இவ்விதமான சகாயம் இல்லாதபடியால் பெரிய அருள்கொடையாகவும் ஆறுதலாகவும் ஏற்றுக்கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் மிகவும் கருத்தோடு நல்ல ஆயத்தங்கள் செய்தோம். எங்கள் சுதேச சகோதரிகள் ஒவ்வொருவரும் பொது அறையில் (Community) ஒன்றாகக் கூடிப்பூக்கள் செய்தோம். பெரிய செவ்வாய்க்கிழமை எங்கள் விளையாட்டு நேரத்தில் இரவில் எல்லோரும் ஆர்வமாக வேலை செய்து கொண்டிருக்கும் போது சிஸ்ரர். ஸ்ரீவன் சடுதியாக தாக்கப்பட்டு இரத்தமாக வாந்தி எடுத்தா. மரணப்பிடியில் தான் இருந்தா. நான் குருவானவருக்கும் டொக்டருக்கும் ஆள் அனுப்பினேன். காலை மட்டும் அவ உயிருடன் இருக்கமாட்டாரென்று சொன்னார்கள். டொக்டர் போனபின் அவ பாவசங்கீர்த்தனம் செய்து நோயில்பூசுதலும் பெற்றுக்கொண்டா. அவவின் இறுதிப்பயணத்துக்கு Fr. Pullicani நன்கு ஆயத்தம் செய்தபடியால் இவ்வுலகை விட்டு இறைவனிடம் செல்வதற்கு மகிழ்ச்சியோடு காத்திருந்தா.

இரவில் அவவின் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால் காலையில் அவவுக்கு ஏமாற்றம். மிகவும் சுகம் பெற்று இருந்தா. தன்னை அதிகம் கவனித்துப்பராமரித்தபடியால் தனது இறுதிப் பயணம் தடைப்பட்டது என்று கூறினா. வியாதியாக இருக்கும் ஒரு சகோதரி எமது இல்லத்துக்கு பெரிய ஆசீர்வாதம் என்று சந்தோஷப்பட்டோம். தனது துன்ப வேதனைகளின் வழியாக தனது அப்போஸ்தல பணியைச் செய்கின்றா என்று நிறைவடைந்தோம். பெரிய புதன் கிழமை நற்கருணைப் பீடத்தை அலங்கரித்தோம் பெரிய வியாழன் திருப்பலி நிறைவு பெற்றபின் நாம் தயாரித்த பீடத்திற்கு பவனியாக நற்கருணையைக் குருவானவர் கொண்டு வந்து வைத்தார். மிகவும் அழகாக இருந்தது. எங்கள் தெய்வீக மீட்பரைப் பின் சென்ற பரிசுத்தபெண்களைப் போன்று நாமும் கல்வாரிப்பாதையில் நடந்து சென்றோம்.

அரசாங்க அதிபர் மிகவும் பிரபல்யமானவர்களை அழைத்து இராவிருந்து கொடுத்தார். எமக்கும் அனுப்பியிருந்தார். அவர் ஒரு புரட்டஸ்தாந்து சமயத்தவர். ஒரு வைராக்கியம் உள்ள அதிபா். ஆண்டவரின் சீடர் எப்படி மீட்பரின் பாடுகளையும் மரணத்தையும் இந்த நாட்டியம், கேளிக்கையான விருந்துடன் கொண்டாடப் போகிறார் என்று சிந்தித்தோம். இறைவன் உண்மையான விசுவாச ஒளியைக் கொடுக்க வேண்டுமென்று அவருக்காகச் செபித்தோம்.

திருப்பாலத்துவ சபையில் இருந்த அம்புறோசியா என்ற 16 வயதுப் பிள்ளை மரணத்தைத் தழுவிக் கொண்டாள். நல்ல குணமான சுகமான எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிள்ளை, அவவின் பெற்றோர் பிள்ளையைப் பற்றி பெருமையாக எண்ணி ஒரு பிற மதத்தவர்க்குத் திருமணம் செய்து கொடுக்க எண்ணியிருந்தனர். புனித வாரத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள் செவ்வாய் நாட்களில் மிகவும் களைப்பாகக் காணப்பட்டா. டொக்டரிடம் காட்டிய போது காத்திரமானதொன்றும் இல்லை என்றார். செவ்வாய் இரவு தான் சாகப் போவதாகவும் குருவானவரைக் காணப் போவதாகவும், அம்புறோசியா சொல்வதாக சிஸ்ரர். மைக்கேல் தலைவிக்குச் சொன்னா. புதன் காலை திருப்பலி முடிந்த பின் குருவானவர் அவவிடம் பாவசங்கீர்த்தனம் கேட்டார். இரண்டாம் முறை டொக்டரை அழைத்த போது அவர் ஏற்பு என்று சொன்னார். நோயிற்பூசுதலும் திருப்பயண உணவையும் பெற்றுக் கொண்டாள். இது இறைவனின் சித்தம் என்றபடியால் நான் சாவதற்கு விரும்புகின்றேன் என்றாள். புனித சூசையப்பர் அநாதை இல்லத்தில் இருந்த அவளது சகோதரன் பார்க்க வந்தார். அழாதே என்று அவருக்குச் சொன்னாள். நான் மோட்சத்துக்கு போகிறேன். எனது பெற்றோருக்குச் சொல்லும். அவர்களும் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்தால் எல்லோரும் ஒருநாள் மோட்சத்தில் சந்திப்போம். தனது செபமாலையையும் உத்தரியத்தையும் சகோதரனுக்கு விட்டுவிட்டாள். தனது கழுத்து மாலையை தாயிடம் கொடுத்து பாதியைத் தாய் எடுக்கும் படியாகவும், பாதியை விற்று அந்தப் பணத்தை தனது ஆத்தும இளைப்பாற்றிக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்கும் கொடுக்க வேண்டும் என்று தனது விருப்பத்தைத் தெரிவித்தாள். உத்தரிப்புஸ்தலத்தில் அநேக நாட்கள் துன்பப்பட வேண்டுமென்ற பயத்தால் தனது நண்பிக்களுக்கும் பணம் கொடுத்திருந்தாள். ஒரு சனிக்கிழமை தனது அருகில் இருந்த போஸ்ரியூலன்ற் இடம் நான் இன்று சாவேன் என்று சொன்னாள். நான் வாக்குப்பண்ணியது நிறைவேறினால் நீர் எனக்காக ஒரு செபமாலை ஓத வேண்டுமென்று சொன்னாள்.அடுத்தநாள் காலையும் பாவசங்கீர்த்தனம் செய்து பரிபூரணபலனும் பெற்றுக் கொண்டாள். 11 மணியளவில் ஓர் அனுங்கல் அழுகையும் கடைசி மூச்சும் கேட்டது. இவவின் அமைதியான மரணம் எமது பிள்ளைகளுக்கு உறுதியான ஒரு மனப்பதிவைக் கொடுத்தது. அவவுடைய பூதவுடல் வளர்த்தப்பட்டு பிள்ளைகள் அதற்கு முன்பாகச் செபித்தார்கள். அமைதியாக துயில்வது போல் அவளின் பிரேதம் காணப்பட்டது.

இவளின் மரணத்தையிட்டு நாம் கவலை அடைந்தாலும் பலவிதமான ஆறுதல்களை நமக்கு அளித்தது. இன்னொரு சம்மனசு விண்ணகம் சென்று விட்டது. எமது மீட்பரின் தோட்டத்தில் இருந்து ஒரு றோசாமொட்டு மலர்வதற்காக விண்ணகம் சென்று விட்டது. தனது குடும்பத்துக்காக தொடர்ந்து செபிப்பாள்.

சுதேச சகோதரிகள் தங்கள் வருடாந்த ஞானஒடுக்கத்தைச் செய்தனர். தமிழ் பேசும் மாணவர்களும் இதற்கு அனுமதிக்கப்பட்டனர். ஒரு நாளில் 3 மறைஉரைகள், கடைசி மறையுரையில் துறவிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஸ்ரியூலன்ற மாத்திரம் பங்கு பற்றுவர். ஆயர் இறுதி நாளில் திருப்பலி நிறைவேற்றி 7 பிள்ளைகளுக்கு உறுதிபூசுதல் வழங்கினார். அத்துடன் சென்ற வருடம் திருமுழுக்குப் பெற்ற ஒரு மூதாட்டியும் இவர்களுடன் இணைந்து கொண்டா. அவ பொய்த்தேவ வழிபாடுகளை விட்டபடியால் தனது பிள்ளைகளால் மிகவும் தாக்கப்பட்டா. அவவை நாள் முழுவதும் எம்முடன் வைத்திருந்தோம். சிஸ்ரர். சென். பீற்றர் அவவைப் பொறுப்பேற்றுக் கொண்டா. அவவுக்கு ஓர் இடம் கொடுக்கப்பட்டு நன்றாகப் பராமரிக்கப்படுகின்றா. பின்னேரம் நற்கருணைஆசீர்வாதம் நடைபெற்றது. அதற்கு முன்பு தியான ஒடுக்கம் செய்தோர் (மாசில்லா மாதா கூட்டம்) நீல உத்தரியம் பெற்றுக் கொண்டனர்.

சற்றுநேரம் சென்ற பின் நாம் இன்ஸ்பெக்ரரைச் சந்திக்கப் போகிறோம். அதே வேளை எங்கள் பிள்ளைகளையும் பரீட்சைக்கு ஆயத்தம் செய்கிறோம். English Inspector ஒரு புது ஆள். புரட்டஸ்தாந்து சமயத்தவர் பாரபட்சம் காட்டாதவர். என்றாலும் நாம் எமது நல்ல தாயாராகிய மரியன்னையிடம் பாதுகாப்பையும் நம்பிக்கையும் வைத்திருக்கின்றோம்.

தற்போது தான் நாம் குருநாகல் சகோதரிகளுடைய கடிதத்தை வாசித்துக் கொண்டிருக்கிறோம். நமது சகோதரிகளின் நற்செயல்கள் எல்லாம் எமக்கு முன்மாதிரிகையாக இருக்கின்றது.

**20. ஆடி 1871**

இந்நாட்களில் எங்கள் தாயார் சற்றுக் களைப்பாக இருக்கிறபடியால் என்னை இந்தத் தவணையில் நடந்தவற்றை (3 மாதம்) உங்களுக்கு அறிவிக்கும்படி கூறினா. யாழ்ப்பாணத்துக் குடும்பம் பிள்ளைகளைப் பற்றிப் பேசுவது உங்களுக்கு எப்பொழுதும் மகிழ்ச்சி தரும் என்று அறிவோம். புனித சூசையப்பருடைய பிள்ளைகள் என்றும் நல்லவர்கள். பக்தியுடையவர்கள் ஏழைகளாக இருந்தாலும் நாள்முழுவதும் வேலை செய்வார்கள். புனித சூசையப்பரின் திருநாளில் சக்கிறிஸ்தி வேலை செய்யும் சிஸ்ரர் சுரூவத்தின் காலடியில் ஒரு பார்சல் இருந்து எடுத்தா. அதில் ஒரு பூசை உடுப்பு இருந்தது. இந்தப்பிள்ளைகள் தங்கள் ஓய்வு நேரத்தில் இரகசியமாகச் செய்திருந்தார்கள். எத்தனையோ காரியங்களை ஒறுத்து தங்களுக்குக் கிடைத்த பணத்தில் துணிவாங்கி அழகிய வேலைப்பாடு செய்திருக்கிறார்கள். தங்களுடைய பாதுகாவலராகிய புனித சூசையப்பருக்கு தங்கள் நன்றியையும், தாராள உள்ளத்தையும் வெளிப்படுத்துவதற்குப் பலவழிகளில் அவர்கள் முயற்சித்ததை நான் பல முறைகளில் அவதானித்துள்ளேன்.

இந்த வருடத்தில் தோட்டத்தின் பின்பக்கத்தில் கட்டப்பட்ட மாதாவின் பீடத்தில் அவவின் சுருவம் வைகாசி மாதத்தில் அழகுடன் மிளிர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனுடைய அனல் வெப்பச்சூட்டில் நின்று நாம் அலங்கரிக்க முடியாத நிலையில் இயற்கை வனப்பும், செடிகொடிகளும் புத்தம் புதிய மலர்களும் தாராளமாக அலங்கரித்தன. கெபிமிகவும் அலங்காரமாகக் காட்சியளித்தது. மாதாவின் சுரூவம் ஒரு பாறையில் வைக்கப்பட்டு லீலிப்பூக்களால் அலங்கரிக்கப்பட்டு மாலையில் சூரியன் மறையும் போது நாம் செபம் செய்து பாடல்கள் பாடி மாதாவின் பிரார்த்தனை சொல்லுவோம். பவனியாகப் போகும் போது கீதங்கள் இசைப்போம். பிள்ளைகள் உரத்தகுரலில் செபிப்பார்கள். இடையில் பறவைகளின் இசைக்கும் செவிமடுப்போம். மாதாவின் பீடத்தை அடைந்ததும் ஒவ்வொரு பிள்ளையும் ஒரு பூவை மாதாவின் பீடத்தில் வைத்து கோவிலுக்குச் செல்லும் போது மாதாவின் பிரார்த்தனை பாடிக்கொண்டு செல்வோம். தாயார் எல்லாக் கருத்துக்களுக்காகவும் ''மிகவும் இரக்கமுள்ள தாயே'' செபம் சொல்லுவா பின்பு ஒரு சிறிய கீதம் பிரான்ஸ்சிய மொழி அல்லது ஆங்கிலத்தில் பாடப்படும் இந்தப் பக்தி முயற்சி ஒவ்வொரு பின்னேரமும் நடைபெறும்.

கடைசி நாளில் பூவுக்குப் பதிலாகத் தங்களைக் காணிக்கையாக ஒப்புக் கொடுத்து கெபியின் பாதையில் பூக்களால் முடிசெய்து தொங்கவிட்டுத் தங்கள் அன்பின் அடையாளத்தைக் காட்டுவர்.

ஆனி மாதம் 12ந் திகதி கெபியில் ஆசீர்வாதத்தின் பின் சகல வரப்பிரசாதமாதாவின் திருநாளைக் கொண்டாடிச் சென்றோம். கெபி பல வர்ணப்பூக்களால் நிரம்பி வழிந்தது. இருட்டில் ஒளியினால் மினுங்கியது. விரித்தகரங்களை உடைய மாசில்லா மாதாவின் சுரூவம் எம்மை அழைப்பது போலவும் அவவுடைய சக்தி வாய்ந்த பாதுகாப்பையும் உணர்ந்தோம்.

எமது தாயார் உரத்தகுரலில் எமது குடும்பத்திற்காகவும் தலைவிகட்காகவும், பணிகளுக்காகவும், பிரான்ஸ் நாட்டுக்காகவும் மன்றாடினா.

பிரான்சில் ஏற்பட்ட துர்அதிஷ்டத்தினால் யாழ்பிள்ளைகள் அவ்வளவாக வளமடையவில்லை. எனினும் எம் ஸ்தாபகிகளைப் போன்று வறுமையிலும் ஏழைகளை அரவணைத்து சேவியர் தாயார் இறைபராமரிப்பின் நம்பிக்கையுடன் வயதான பிச்சையெடுத்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணை அரவணைத்தா. பின்பு 15 பிற மதப் பிள்ளைகள் வந்து சேர்ந்தனர். ஆயர் திருப்பாலத்துவ சபைப் பணத்தைப் பல இடங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கின்றபடியால் எங்களுக்கும் சிறிய தொகைதான் கிடைக்கின்றது. இறைவனில் நம்பிக்கை கொண்டவர்களை அவர் அன்பு செய்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்க காலங்களில் எங்களிடம் சொற்ப பணம்தான் இருந்ததென்பதை நீங்கள் ஏற்கனவே அறிவீர்கள். சில சிறுவர்கள் எங்களுக்கெதிராகப் போய்விட்டார்கள். அதிகமானோர் பாதுகாக்கப்பட்டார்கள். இறைவன் தீமையிலிருந்து நன்மை செய்யக் கூடியவர். ஒரு கத்தோலிக்கப் பெண் பிறமதத்தினளான தன் சகோதரியை வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போக வந்தாள். சேவியர் தாயார் அன்பாக எவ்வளவோ நற்புத்திமதிகளைச் சொன்னாலும், அவள் செவிமடுக்காமல் பிடிவாதமாக நின்றாள். கடைசியாகத் தாயார் கொஞ்சம் கடுமையாகப் பேசி அவளோடு வாதிட்டு ஈற்றில் செபிக்கத் தொடங்கினாள். பின்பு மாலையில் சகோதரியிடம் மன்னிப்புக் கேட்டு பாவசங்கீரத்தனமும் குருவானவரிடம் செய்து முதல்நன்மையும் பெற்றுக் கொண்டாள்.

இத்தவணையில் சிஸ். ஸ்ரீபன் இறந்துவிட்டா. சில பக்தியுள்ள பெண்கள் பணம் சேகரித்து 7 பூசைகள் ஒப்புக்கொடுக்கும்படி தந்தார்கள்.

சில நாட்களின் பின் ஒர் அநாதைச் சிறுமி அறிவில்லாமல் இருந்து, குருவை அழைத்தோம். குருவானவர் வந்து கதைத்தபோதும் அறிவில்லை. திடீரெனக் கண்களைத் திறந்தபொழுது பாவசங்கீர்த்தனம் கேட்டு நோயில்பூசுதலும் வழங்கினார். இரவு ஒன்பது மணிக்கு இறைவனடி சேர்ந்துவிட்டார்.

எங்களுடன் இருந்த வயதான மூதாட்டி சுவாச நோயினால் பாதிக்கப்பட்டு, எமது மடத்திலேயே சாக வேண்டும் என்று விரும்பினா. அவவின் இரு பிள்ளைகளும் கொலரா நோயினால் இறந்துவிட்டனர். மடத்திலே ஒரு சிறிய கொட்டில் போட்டு அதிலே இருந்தா. திருமுழுக்கு ஏனைய திருவருட்சாதனங்களையும் பெற்றுவிட்டா. அவ இருப்பது எமது வேலைகளுக்கு ஆசீர்வாதமாகும். அஸ்மா வியாதியால் நித்திரையும் இல்லை. உரத்துச் செபிப்பா. எங்கள் இல்லத்தில் தான் இருப்பதையிட்டு மகிழ்ச்சியாக இருந்தா. அருட்சிக்குரியதும், ஆன்மாக்களுக்கு வலுவூட்டுவதற்குமுரிய ஞானக் காரியங்களைப் பற்றி எல்லோருடனும் உரையாடுவா.

விசுவாசப் பரப்புதல், திருப்பாலத்துவ சபைக்காக இழுக்கப்பட்ட லொத்தரில் 200பிராங் கிடைத்தது. கஷ்டமாக இருந்தபோது ஒரு புரட்டஸ்தாந்து பிள்ளை 70 ரிக்கற் எடுத்து உதவி செய்தா.

குருநாகல் சகோதரிகளும், அங்குள்ள பிள்ளைகளும் மிகுதியை எடுத்து உதவி செய்தார்கள்.

ஆயர் ஐரோப்பாவில் இருந்து வந்து மிகவும் ஆர்வத்துடன் மறைக் கல்வி வகுப்புக்களை ஒழுங்குபடுத்தினார். இளம் பெண்பிள்ளைகளுக்கு பங்குதந்தை பொறுப்பாக இருந்தார். மற்றவர்களை எமது சுதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகளிடம் ஒப்படைத்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் கோவில் விறாந்தையில் வகுப்புகள் நடைபெறும்.

எமது சுதேச சகோதரிகளுள் ஒருவரான Sr. M Angela குருநாகலுக்குச் சென்றுவிட்டா. நமது ஆரம்ப கால சந்நியாசத்தின் முதல் சகோதரி. மிகவும் அன்புக்குரிய அமைதியான பயபக்தி உள்ள சகோதரி. எளிமையானவள். பிறர் சிநேகம் நிறைந்தவள். பெயருக்கேற்ற சகோதரி பிள்ளைகளுக்கு முன்மாதிரியான புண்ணியங்கள் நிறைந்தவ. தலைவியால் அன்பு செய்யப்பட்டவ. அவவின் பிரிவு எமக்குப் பெரிய தியாகமாக இருக்கின்றது. நவசந்நியாச சகோதரிகளும் நாமும் அவவின் பிரிவின் போது கண்ணீர் விட்டோம் . இறைவனுக்காக நான் இந்தப் பரித்தியாகத்தை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று அஞ்செலா கூறினா. இருபெண்களும் அவர்களின் பிள்ளைகளும் துணையாக அவ குருநாகலுக்குப் பயணமானா.

இத்தவணையில் எங்களுடன் இருந்த ஒரு அநாதை இளம் பெண் திருமுழுக்குப் பெற்ற பின்பு வீடு சென்று விட்டா.

சிலநாட்களின் பின் Fr. Pullicani யின் குருத்துவ வெள்ளிவிழாவைக் கொண்டாடுவதற்காகக் குருக்கள் எம்மையும் அழைத்தனர். நாமும் அழைப்பை ஏற்று விழாவுக் கேற்ற பாடல்களைப் பாடித்திருப்பலிக் கொண்டாட்டத்தைச் சிறப்பித்தோம். பின்பு வரவேற்பறையில் குழந்தை இயேசுவைத் தாங்கிய அழகான மாதாவின் சுரூவம் அலங்கரிக்கப்பட்டு மாலையணிந்து சுவரில் வைக்கப்பட்டது.

குருக்கள், சகோதரர்கள், சிஸ்ரர்மார், அநாதைபிள்ளைகள், இளைஞர், யுவதிகள் அனைவரும் இக்கொண்டாட்டத்தில் சிறப்பித்தனர். பாராட்டுக்கள் நிறைந்த, உணர்ச்சிததும்பும் வாழ்த்துரையை Fr. Salaun சலோன் வழங்கினார். இந்த உரையின் சாரம் பின்வருமாறு. ஒரு நல்ல குருவின் வாழ்வானது மலையில் இருந்து ஊற்றெடுக்கும் ஒரு நதிக்கு ஒப்பானது. இந்த நதியானது இருமருங்கும் நிலத்தை செழிப்பாக்கி பலனுள்ள காய்கனிகளையும், பலவர்ணப்பூக்களையும் மலரச் செய்து நறுமணம் வீசி பரப்புகின்றது. இந்த நதிதான் எமது மதிப்புக்குரிய Fr. Pullicani 1/4 நூற்றாண்டிலும் இந்த ஆறு ஒடியது. இன்னும் 2,3 மடங்காகப் பாய வேண்டும். Fr. Pullicani இவற்றிற்குப் பதிலாகத் தனது சில சொற்களால் தான் பெற்றுக்கொண்ட பயனை வேறு விதமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்ந்துரைத்ததற்கு நன்றி கூறினார். ஓர் இளம் குருத்துவ மாணவன் தமிழிலும் புனித சூசையப்பர் சபை பிறதர் ஒருவர் சிங்களத்திலும் உரையாற்றினர். எம் அநாதைப்பிள்ளைகளும் குருவின் முன் அரைவட்டமாக நின்று நடுவில் உள்ள மாணவி ஓர் உரையாற்றினா. பின்பு வெகுமதிகள் அளிக்கப்பட்டன. அழகான அன்னாசிப்பழங்கள், 2 புறாக்கள், பூச்செண்டு, ஒரு பலாப்பழம் என்பன தங்கள் பண்பாட்டின் படி அலங்கரித்து வழங்கப்பட்டன. புறாக்கள் பறக்கவிடப்பட்டன. பலாப்பழம் அவர் முன்பாக வைக்கப்பட்டது. இக்குடும்ப விழாவில் பங்கு பற்றிய மகிழ்ச்சியுடன் நாம் எமது இல்லம் திரும்பினோம்.

## 30. ஐப்பசி 1871

ஆடிமாதம் 26ந் திகதி எமது தரும சீமாட்டிகள் (Ladies of Charity) தங்கள் பாதுகாவலியாகிய புனித அன்னம்மாள் திருநாளைக் கொண்டாடினர். இந்த ஆடிமாதம் எமது பிள்ளைகளுக்கு பயனுள்ள அருள்நிறைந்த காலமாக இருந்தது. 20 பிள்ளைகள் புதுநன்மை பெற்று, அதேநாளில் உறுதிபூசுதலும் பெற்றுக் கொண்டனர். யாழ் பேராலயத்தில் நடைபெற்றது. எங்களுடைய பிள்ளைகள் மற்றவர்களைப் பார்க்கிலும் மிகவும் பயபக்தி உடையவர்களாகக் காணப்பட்டனர். எங்கள் சிற்றாலயத்தில் போதிய இடவசதியிருந்தால் எம்மடத்திலேயே கொண்டாடியிருப்போம்.

ஆவணி 15ந் திகதி பரலோக மாதா திருநாள். உங்கள் கருத்துக்காக மன்றாடினோம் 6 சிறுவர்கள் திருமுழுக்குப் பெற்றனர். 8 மாதங்களுக்கு முன்பு அவர்களை வீட்டுக்கு அனுப்பத் தீர்மானித்திருந்தோம். இதை அவர்கள் அறிந்து ''சாத்தானிடம் நாங்கள் திரும்ப'' விருப்பமில்லை என்றார்கள். புனித சூசையப்பரின் பரிந்துரையால் இறைவனின் பணியைக் கொண்டு செல்லமுடிந்தது. எமது தோட்டத்தில் அவருக்கு ஒரு பீடம் கட்டுவதாகவும், ஏழைப் பிள்ளைகளுக்கு நாளாந்த அரிசி கிடைக்க வேண்டுமெனவும் கேட்டோம். ஒவ்வொரு மாலை நேரத்திலும் அவரின் பாதத்தில் உதவிகேட்டுச் செபிப்போம்.

இன்னும் 7 பிள்ளைகள் திருமுழுக்குப் பெற இருக்கிறார்கள், விரைவில் அவர்களுக்கு அருளப்படும் எமக்குச் சொந்த வளங்கள் இருந்தால் இன்னும் எத்தனையோ ஆன்மாக்களை மீட்கலாம். அதிகம் பேர் அறியாமையால் வாடுகிறார்கள்.

ஆவணி 15 பேராலயத்தின் திருவிழாவானதால் மக்களுடன் இணைந்து கொண்டாட விரும்பியும் முடியவில்லை. ஆயர் இதைப்புரிந்து கொண்டார். மறுநாள் 16ந் திகதி நாங்கள் அங்கு சென்று 2 சகோதரரின் தியாக்கோன் பட்ட விழாத்திருப்பலியில் பங்குபற்றினோம் மாலை 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியளவில் ஆயரும் 5 குருக்களும் 3 தியாக்கோன்மாரும் எமது இல்லத்துக்கு வருகை தந்தனர். மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்ட எமது ஆலயத்தில் ஆயர் அனுப்பிய அலங்கார திருவுடைகள் அணிந்து மாலை ஆராதனை பாடி நற்கருணை ஆசீர்வாதமும் அருளினார். அதன் பின் மாதாவின் கெபிக்குச் சென்று வரப்பிரசாத மாதாவின் பாடலைக் குருக்களும் நாமும் சேர்ந்து பாடினோம் ''மிஷனறிமாரின் நல்ல தாயே'' என்ற கீதத்தை இசைத்து இந்த வேற்று நாட்டில் எமது தனித்துவமான நம்பிக்கையையும் ஆதரவு ஒத்துழைப்பையும் வெளிப்படுத்தினோம். மறுநாள் காலை ஆயர் உங்கள் கருத்துக்காகத் திருப்பலி நிறைவேற்றினார்.

எமது ஒரு அநாதைப் பெண் மணமுடித்துள்ளா. சூசையப்பர் அநாதை இல்லத்தில் இருந்த ஒரு கத்தோலிக்னை தாய் ஒழுங்கு செய்திருந்தா. பலமுறை அவர் திருவிருந்தில் பங்குபற்றிய பின்னரே பெண் திருமணத்திற்குச் சம்மதித்தாள். திருமணத்தன்று இருவரும் திருவிருந்தில் பங்குபற்றினர்.

ஆவணி 19ந் திகதி ஆயர் எமக்கு உதவி செய்யும் உபகாரிகளுக்காகப் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார். நாம் அனைவரும் அதில் பங்குபற்றினோம். எமது பிள்ளைகள் இறந்தவர்களுக்காகவும் வேண்டிக்கொண்டனர். சிலநாட்கள் சென்ற பின்பு பங்குத் தந்தை கோவிலுக்குரிய சிலுவை, மெழுகுதிரி கத்திசால் போன்ற பாத்திரங்களை மினுக்கிச் சுத்தமாக்கவும், அதற்கேற்ற பணம் தருவதாகவும் சொல்லி பிள்ளைகளிடம் அனுப்பினார். அதற்குரிய பணத்தை 5 பிராங் நான் பிள்ளைகளிடம் கொடுத்தேன். அவர்கள் எல்லோரும் ஒரே மனமாக அந்தப் பணத்தை உத்தரிக்கிற ஆன்மாக்களுக்குத் திருப்பலி ஒப்புக் கொடுக்க குருவிடம் கொடுத்தனர்.

எம்முடன் இருந்த வயதான மூதாட்டி மாறியும் இறைவனடி இணைந்து விட்டா. எம்முடன் இருந்த காலத்தில் தன் பொறுமை பக்தியினால் முன்மாதிரிகையாக இருந்தா. கடைசி அருட்சாதனங்களைப் பெற்றபின் இறைவன் மாறியை நேரில் சந்திக்க விரும்பினார். ''சனிக்கிழமை இறப்பேன்'' எனக்கூறி அந்நாளே இறந்து விட்டார். எமது வரவேற்புப் பணிச் சிஸ்ரருக்கும் அவ மோட்சத்துக்குப் போகும் போது சந்திப்பேன் என்றும் கூறினா.

எமது சகோதரிகள் யாழ்ப்பாணத்தில் உள்ள அநேகமான கிறீஸ்தவர்களுக்கு, ஆனால் வேத அறிவு அற்ற அறியாமை நிறைந்த மக்களுக்குத் தான் பணியாற்றுகிறார்கள். அறுவடையோ மிகுதி. எங்களுக்காகச் செபிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்

என் நல்ல தாயாரே! என் கடைசிக் கடிதத்தின் பின்பு என் பணிகள் சாதாரணமாக உள்ளன. திருமுழுக்கு ஒரு பிள்ளைக்கும் கொடுக்கப்படவில்லை. சிலவேளை வருகிற மாதம் நடைபெறலாம்.

வகுப்புக்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன. எனினும் பல கத்தோலிக்க பிள்ளைகள் ஒழுங்காக பாடசாலைக்கு வருவதில்லை. பெரும்பாலும் கரையோரத்தில் வாழும் பிள்ளைகள். தாய்மார் இஷ்டம் போல் பிள்ளைகளை ஓடித்திரிய விடுவார்கள். தினமும் காலையில் ஒரு நாளைக்குத் தேவையான உணவைக் கொடுப்பர். வளர்ந்ததும் சில நகைகளால் அலங்கரிப்பர். இவ்வாறு தம் கடமைகளை நிறைவேற்றுவர். நான் இயேசுவின் திரு இருதயத்திடம் மன்றாடிக், குருவானவரின் உதவியுடனும் இவர்களுக்கு ஏதும் செய்யலாம் என்று நினைக்கின்றேன். நீங்களும் இக்கருத்துக்காக மன்றாடிக் கொள்ளுங்கள்.

மார்கழி மாதத்திலே எமக்குப் பல திருநாட்கள் நடைபெற்றன. 3ம் திகதி இந்தியாவின் அப்போஸ்தலர் புனித. சவேரியார் விழா. எமது அநாதைச் சிறுமிகள் வகுப்பறையை பூக்களாலும், இலைகளாலும் அலங்கரித்தனர். 5ம் திகதி எம்நல்ல தந்தையின் நாளை நாம் நினைவு கூர்ந்தோம். 7 நாட்களின் பின்பு சூரிய கிரகணம் யாழ்ப்பாணத்தில் காணப்பட்டது. முழுவதும் இருள்மயமாக இருந்தது. இதைப் பல ஐரோப்பியர் பார்க்க வந்தனர். ஒரு புதிய விண் வெள்ளியையும் கண்டதாக வான சாஸ்திரிகள் கூறுகின்றனர்.

19ம் திகதி அமலமரித் தியாக்கோன்கள் மூவரின் குருப்பட்டம் பேராலயத்தில் நடைபெற்றது. அதே நாளில் எம் ஆயரின் 25வருட குருப்பட்ட நாள். எல்லா இடமும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாலையில் நற்கருணை ஆசீவாதத்தின் பின்பு கிறிஸ்தவர்கள் பெயரால் ஒருவர் தமிழில் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார். வாண வெடிகளுடன் பவனியாக ஆயர் தம் இல்லத்தை அடைந்தார். நாமும் ஆயரை மற்றவர்களுடன் வாழ்த்தினாலும் எம் குடும்ப விழாவைக் கொண்டாட விரும்பினோம். அடுத்த நாள் Fr. Flanagan தன் முதற் பூசையை எமது சிற்றாலயத்தில் ஒப்புக் கொடுத்தார். காலை 6.30 மணிக்கு Frs. Keating Melizan இணைந்து கூட்டுத் திருப்பலியாக நிறைவேற்றினர். திருமதி. Flanagan கடைசி மகளும் எல்லாச் சகோதரிகளுடன் Sr.M.Louise அங்கிருந்து ஆனந்தக் கண்ணீர்விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை 5 மணிக்கு ஆயர், குருக்கள்புடைசூழ எம்மிடம் வந்தார். அலங்கரித்த வரவேற்பறையில் ஒரு பாடலுடன் வரவேற்றோம். 3 ஐரோப்பியப் பிள்ளைகள் ஆயரைப் புகழ்ந்துரைத்தனர். 3தமிழ்ப் பிள்ளைகள் தமிழில் உரையாற்றினர். பியானோ விளையாடினார்கள். பரிசும் கொடுக்கப்பட்டது. அத்துடன் பிள்ளைகளின் பாடல், கவிதைள் இடம்பெற்றன. ஆயரும், குருக்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். சிறுவர்களுக்கும் மகிழ்ச்சி. பலகாலமாக குடும்பமாகவே பரிசளிப்பு விழா நடைபெறுகிறது. இதனால் பெற்றோரும் தம் பங்களிப்பைக் கொடுக்கின்றனர்.

21ம் திகதி புதிய குருவில் ஒருவர் தனது இரண்டாவது திருப்பலியை எமது ஆலயத்தில் நிறைவேற்றினார். மாலையில் Fr. Flanagan நற்கருணை ஆசீர்வாதம் கொடுத்தார். பின்பு சகல வரப்பிரசாத மாதாசுருவத்தை அடைந்தோம். தாய் தனது செலவில் மெழுகுதிரிகளை ஏற்றினார்.

நடுச் சாமப்பூசைக்கு பெரிய கோவிலுக்கு செல்லவேண்டும். இந்த வருடம் இரவு 10 மணிக்குத் தொடங்கி அதிகாலை 2 மணிக்கு முடிந்தது. இங்குள்ள மக்களுக்கு நத்தார் குடில் நல்ல விருப்பம். எல்லோரும் வருவார்கள். வழிபாடு 4 மணித்தியாலம் நீடித்தது. பிள்ளைகள் அழுவார்கள், கதைப்பார்கள், செபிக்க முடியாது. குடிலும் தங்கள் விருப்பம் போல் செய்வார்கள்.

அடுத்த நாள் 26ம் திகதி ஸ்ரீவன் திருவிழா. காலஞ்சென்ற சமேரியா ஆயரையும், ஸ்ரீவன் சகோதரியையும் நினைவு கூர்ந்தோம். ஒரு பூமுடி செய்து அவவின் கல்லறையில் வைத்தோம்.

தை 2ம் திகதி Mazlatz (மாதகல்) என்னும் இடத்திற்கு ஒய்வுக்குச் சென்றோம். Fr. pelissier ஒரு வீடு ஆயத்தம் செய்து தினமும் காலையில் பூசைக்கு வருவார். அவருடன் Fr. Vedrenne எனும் குருவும் மாறிமாறி வருவார்கள். இவர் ஆன்ம குருவாக எங்களுக்கு ஆயரால் நியமிக்கப்பட்டார். சிலநாட்கள் கடற்கரையில் தனிமையில் விடப்பட்டிருந்தோம். பின்பு யாழ் வந்ததும் எமது ஞானொடுக்கத்தைச் செய்ய இது உதவியாக இருந்தது. 8 நாட்கள் ஆயர் தலைமையில் ஞானொடுக்கம் நடைபெற்றது. இறுதி நாள் சிஸ்.பற்றிக் தனது முதல் வாக்குத்தத்தம் செய்தார். அன்று மாலை ஒரு அயர்லாந்துக் குரு கீற்றிங் எமக்கு ஆங்கிலத்தில் ஒரு தியானம் செய்தது எமக்கு பெரும் உதவியாக இருந்தது.

தை 23ம் திகதி எமது அன்றாடக் கடமைகளை ஆரம்பித்தோம். பரிசுத்த ஆவியானவருக்கு ஒரு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கும் அநேக பிள்ளைகள் வந்தனர். இளம் பெண்களைப் பயிற்றுவிப்பது நல்லது எனப் பெற்றோர் புரிந்து கொண்டால் இன்னும் பலரை எதிர்பார்க்கலாம். திருப்பாலத்துவ சபையில் இருந்த ஒரு அநாதைப் பிள்ளைக்கும், ஒரு யாழ் கிறிஸ்தவனுக்கும் திருமணம் செய்து வைத்தோம். எல்லாம் நன்றாக நிறைவேறிற்று.

5ம் திகதி ஆயர் எமது மடத்துச் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார். பின்பு 5 அல்லது 6 மாதங்களுக்கு பிரியாவிடை கூறினார். எமக்கு இது கவலையாக இருந்தாலும் எமது குருநாகல் சகோதரிகள் மகிழ்ச்சியடைவார்கள். இவர் எம் எல்லோரதும் ஆயர் அல்லவா? 8ம் திகதி நல்ல பிதாவின் மரண நாளை நினைவு கூர்ந்தோம். இந்த வேதபோதக நாட்டில் பணிசெய்யும் தனது முதற் குமாரத்திகளை அவர் மறக்க மாட்டார் என்று நம்புகின்றோம். இலங்கைப் பணித்தளத்தை அவர் எவ்வளவோ ஆசித்தார். என்றும் எங்களையும், எங்கள் பணித்தளத்தையும் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டினோம்.

## வைகாசி 17. 1872

எனது நல்ல தாயாரே, உங்களுக்கு எழுதிய கடைசிக் கடிதத்தின் பின்பு இறைவன் நமக்குச் சில ஆன்மாக்களின் மீட்புக்கு ஒத்துழைக்கச் சந்தர்ப்பம் அளித்தார்.

பங்குனி மாதத்தில் (புனித. சூசையப்பர்) 7 சிறுபிள்ளைகளுக்கு திருமுழுக்கு ஆயத்தம் செய்து, அவரின் திருநாளில் சூசையப்பர் பெயரால் அவர்களை அழைத்தோம். ஆட்களை அடையாளம் காண்பிப்பதற்காக பெயரில் சில மாற்றங்கள் இடப்பட்டது. இவர்கள் 9 நாட்கள் நவநாள் செய்தனர். எமக்கு இது நல்ல மகிழ்ச்சி. இறைவன் புனித. சூசையப்பர் மூலம் எம் மன்றாட்டுக்களைக் கேட்டார்.

தவக்காலத்தில் ஓர் இளைஞன் ஆயத்த கன்னிகையாகவுள்ள தன் சகோதரியைப் பார்க்க வந்தார். சிறுவயதில் கொழும்பில் உள்ள ஒரு புரட்டஸ்தாந்து வீட்டில் வேலை செய்ய யாழ் விட்டுச் சென்றார். ஏனவே புதுநன்மை எடுக்கவில்லை. இதனால் அவரின் சகோதரி துன்புற்றாள். ஏவ்வாறு சொல்வது என்று தெரியாமல் இருந்தபோது நான் அவருடன் சென்று கதைத்தேன். அவர் பாவசங்கீர்த்தனம் செய்ய விரும்பினாலும் ஆயத்தம் இல்லை என்று தட்டிக் கழிக்கப் பார்த்தார். நான் குருவானவருக்கு ஒரு கடிதம் எழுதி அவரிடம் கொடுத்து அனுப்பினேன். குருவானவரும் ஆயத்தப்படுத்தி, பாவசங்கீர்த்தனம் கேட்டு, புது நன்மைக்கு ஆயத்தம் செய்து பெரிய வியாழன் அன்று நற்கருணை பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிறமத இளைஞன் ஓர் ஆங்கில மாணவியை வாகனத்தில் ஏற்றி வருவார். எமது gate சிஸ்ரரால் செபங்களும் படித்து திருமுழுக்குப் பெற்றார். புரட்டஸ்தாந்துடன் இருந்தால் தன் கடைமைகளைச் செய்ய முடியாதென தன் இடத்தை மாற்றிக் கொண்டார்.

சில நாட்களின் முன் ஒருபெண் என்னுடன் பேசவிரும்பினாள். அவள் திருமுழுக்குப் பெற்றிருந்தாள். ஆனால் புதுநன்மை பெறவில்லை. அவள் ஒரு இளம் பெண்ணை போடிங்கில் சேர்த்துப் படிப்பித்து, திருமுழுக்குக் கொடுக்கும்படி கேட்டாள். எனக்கு மிகவும் சந்தோஷம். அவளையும் வரும்படி கூறி அவளுக்கும் படிப்பித்தோம். அவள் கணவன் அவளைக் கைவிட்டும், மற்றவர்களால் கைவிடப்பட்டும் தன் விசுவாசத்தைக் காப்பாற்றுகிறாள்.

ஒரு French மனிதன் எமது மடத்துச் சிற்றாலயத்துக்கு வந்து அருள்பெற்று இயேசுவின் விண்ணேற்பு நாளில் நன்மை பெற்றார். "13 ஆண்டுகளாக இந்த மகிழ்ச்சி எனக்கு இருக்கவில்லை. உங்கள் கோவில் என்னைத் தொட்டது" என்றார். பாட்டு, பீடம், தியானம் எல்லாம் அவருடன் பேசியது. "தன் மனைவியும் தன் முன்மாதிரிகையைப் பின்பற்றி இருவரும் ஒரு புதுவாழ்வு வாழ்வோம்" என்றார். இறைவனின் இரக்கத்தைப் பாருங்கோ.

வேறு சில ஆன்மாக்களுக்கும் உதவி செய்கிறோம். இறைவன் தனது அருளை அவர்கட்கு அருளும் போது நாமும் அவர்கட்கு உதவி செய்ய முடிகின்றது. சென்ற கிழமை நாம் இருவரை திருமதி. விளானகானுக்கு திரிகோணமலைக்கு அனுப்பினோம். ஆங்கிலப்பெண், தமிழ்ப்பெண் இருவரும் அந்தந்த வகுப்புக்கு உதவி செய்வர். இதனால் அவருக்கு ஆறுதலாக இருக்கும். முன்பு நாம் அனுப்பியது அவருக்குச் சந்தோஷம். அவர்கள் யாழிலும் பார்க்க திரிகோணமலையில் ஓர் இடம் எடுப்பார்கள்.

எமது ஆளுநர் சிறிது காலத்துக்குமுன் இலங்கைக்கு வந்து தற்போது பிரதான நகரங்களைச் சந்திக்க உள்ளார். எமது மடத்திற்கும் வருவார். எனவே சோடினைகள் செய்து ஆயத்தம் செய்கிறோம். எமது (gate)இல் இருந்து மடம் வரைக்கும் அலரிப் பூக்கள் பூத்திருக்கின்றன. வேறு அலங்காரங்கள் தேவையில்லை. மாணவர்கள் வெள்ளை உடை அணிந்து, நீல Belt கட்டினர். அழகாக இருந்தது. காரில் இருந்து இறங்கிதும் வெடிவேட்டுக்கள் தீர்ந்தன. வரவேற்புப் பாடல் இசைக்கப்பட்டது. பின்பு ஓர் ஆங்கில மாணவியால் உரை வழங்கப்பட்டது. ஆளுநர் பதிலிறுத்தார். தான் பல மடங்களைத் தரிசித்ததாகவும், ஒரு குழுவின் பிரதிநிதியாக இருப்பதாகவும் கூறி, மடங்களுக்கு உதவி செய்வது தனக்கு விருப்பமெனவும், தன் நாட்டைப் போன்று இங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகள் நல்ல சேவை செய்வதாகவும் கூறினார். எமது அநாதை இல்லத்தை தரிசிக்கும் போது French மொழியில் என்னுடன் கதைத்தார். தாம் எமக்கு உதவி செய்வதாகவும் கூறினார். எமது அநாதைச் சிறுமிகள் தமிழில் பாடியதை Fr விளானகான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். சிறுமிகள் நற்சுகத்தடனும், மகிழ்ச்சியுடனும் சகோதரிகளுக்குப் பணிந்திருப்பதைக் கண்டு மிகவும் சந்தோஷம் என்று கூறினார். பிள்ளைகளின் வகுப்பு ஒரு தோட்டம் போல உருமாறியிருந்தது. பூக்கள் நடுவில் இவர்கள் முகம் மலர்ந்தன. எனினும் ஆங்கில மாணவிகளையும் இனங்காண முடிந்தது. பின்பு எமக்கு கைலாகு கொடுத்து எமது பிரதி ஆயரின் செயலரை இரவு விருந்துக்கு அழைத்தார். இத்தரிசிப்பு புரட்டஸ்தாந்து மக்கள் மத்தியிலும், எம்நாட்டு மக்கள் மத்தியிலும் எமக்கு மதிப்பை அளித்தது.

தற்போது மாதாவின் வணக்க மாதத்தை ஆவலுடனும், முயற்சியுடனும் அனுசரிக்கின்றோம். எமது ஆலயத்தில் மாதா நீலப்பூக்கள் மத்தியில் இருக்கின்றார். தினமும் மாலையில் பவனியாகச் சென்று சகலவரப்பிரசாத மாதா சுருவத்தின் முன் பாடிச் செபித்து வருவோம். பிள்ளைகள் அவரின் பாதத்தில் மலர்களை வைப்பார்கள். திரும்பிக் கோவிலுக்குச் சென்று மாதாவின் பாதத்தடியில் பாடிவருவோம். உங்கள் பிள்ளைகள் உங்களை நினைப்பார்கள். மாதாவின் பாதுகாப்புடனும், பலிப்பூசையுடனும் அந்நியநாடு எமதுநாடு போலிருக்கும்.

சென்ற நாட்களில் ஒரு புயற்காற்று வீசியதால் 20 வாழைமரங்கள் சரிந்து வீழ்ந்து விட்டன. கடலில் ஏற்பட்ட தாக்கத்தினால் பல படகுகள் சேதமுற்றன. எம் அநாதைப் பிள்ளைகளுக்கு வரவேண்டிய அரிசிமூடைகள் அதே வேளையில் வந்து கொண்டிருந்தன. இறைவனுடைய இரக்கத்தால் கரைவந்து சேர்ந்தன.

## யாழ்ப்பாணம் 30. புரட்டாதி 1872

ஆனிமாதத் தொடக்கத்தில் எமக்கு பரீட்சைகள் ஆரம்பிக்கின்றன. இறைவனுடைய இரக்கத்தாலும், தேவதாயின் கருணையாலும் எல்லாம் வெற்றிகரமாக முடிந்தன. பின்பு விடுமுறைக் காலம் தொடங்கியது. சிலர் ஓய்வெடுக்க விரும்பியதால் 4சகோதரிகள், 3 ஆயத்தகன்னியருடன் ஊர்காவற்றுறை நோக்கிச் சென்றோம். இவ்விடம் யாழில் இருந்து 12 மைல் தூரத்தில் உள்ளது. கடலூடாகச் செல்லாது தரை வழிப் பிரயாணம் செய்து பின்பு 2மைல் கடற் பிரயாணம் செய்தோம். மற்றவர்கள் போல் எம்மை ஏற்றாது கிடுகு போட்டு அதன்மேல் பாய்விரித்து எம்மை ஏற்றிச் சென்றனர். எம்மை ஏற்றிய பின்பு மற்றவர்களை ஏற்றினார்கள். மக்கள் எல்லோரும் எம்மையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தனர். எமது பயணத்தின் நோக்கம் பற்றி ஆயத்த கன்னியரிடம் கேட்டனர். நாம் ஊர்காவற்றுறையை அடைந்தபோது (Fr. Boisseau) புவாசோ எம்மைப் புனித. அந்தோனியார் கோவிலில் வரவேற்றார். அவர் மாதா கோவிலில் இருந்து தினமும் இங்கு பூசைக்கு வருவார். இராயப்பர் கோவிலுக்கு முன்பே அறிவித்த படியால் மணியடித்து எம்மை வரவேற்றனர். எல்லாக் கோவில்களுக்கும் சென்றோம். பெண்கள் தங்கள் பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு சகோதரிகள் தேவை என்று எம்மைக் கேட்டனர். ஒருகிழமை ஓய்வின்பின் யாழ் திரும்பி வகுப்புக்களைத் தொடங்கினோம். அத்துடன் இராயப்பர் சபைச் சகோதரிகள் (சுதேச) தியான ஒடுக்க நாட்களைத் தொடங்கினர். ஒரு நாளில் 3 தியான உரை. 2உரை எல்லோருக்கும் உரியது. ஓன்று குழுவுக்குரியது. பலரும் பங்குபற்றியபடியால் கோவிலில் இடம் போதாமலிருந்தது. இறுதி நாளில் 10பேர் முதல்நன்மை பெற்றனர். 4பேர் முதல்வாக்குத்தத்தம் செய்தனர். 25பேர் உத்தரியம் பெற்றனர். தந்தை கூர்டோன் மறையுரை ஆற்றினார்.

ஒரு மாலை நேரம் படிப்பு முடிந்தபின் சாப்பாட்டு நேரம் வரையும் வெளியில் உலாவினோம். அலரிப் பூக்களின் அழகு, தெளிந்த வானம், ஒளிவீசும் மின்தாரகைகள் இதயத்தை இறைவன் பக்கம் எழுப்பியது. அவ்வேளை வெளியில் ஒரு குரல் கேட்டது. சென்று பார்த்தபோது ஒரு சிறுமி இரவில் தங்க இடம் கேட்டா. அவ தன்வீட்டுக்குப் போக 10 மைல்தூரம் இருப்பதாகவும், தன்னை வேலைக்கு அமர்த்திய எஜமான் கோபத்தில் தன்னை துரத்திவிட்டதாகவும் கூறினாள். சில கேள்விகளின் பின் அவள் பெயரளவிலே கத்தோலிக்கப் பெண்ணாக இருந்தாள். அருட்சாதனங்கள் ஒன்றும் பெறவில்லை. எனவே அவளது கிராமத்தில் உள்ள மறைபோதகரிடம் சென்று ஆயத்தம் செய்யும் படியும், பயணத்திற்கு வேண்டிய பொருட்களும், உடுப்புப் பார்சல் ஒன்றும் கொடுத்தேன்.

சில நாட்களின் பின் இறைவன் வேறு ஒர் ஏழை ஆன்மாவை அனுப்பியிருந்தார். 10வயதுச் சிறுமி. பிற சமயத்தவள், தனியே வந்திருந்தாள். தாய், தந்தை இல்லையென்றும், ஒரு சைவக்குருவுடன் இருந்து, பின் கோபத்தில் தன்னைத் துரத்திவிட்டதாகவும், எங்களோடு தங்கி இருக்க விரும்புவதாகவும் கூறினாள். நகருக்கு வந்தபோது ஒரு பெண் சாப்பாடு கொடுத்து மடத்துக்குச் சென்றால் எல்லாம் கிடைக்கும் என்றாள். எனவே இங்கு வந்ததாகக் கூறினாள். இங்கு இருப்பதாயின் வேறு தெய்வங்களை வழிபடுவதைவிட்டு, இறைவனின் பிள்ளையாக வரவேண்டும் எனக் கூறினேன். பிள்ளையின் பெயர் நாகமுத்து, தகப்பனின் பெயர் வைரமுத்து. தற்போது "அக்னெஸ்" என்ற பெயர் கொடுக்கப்பட்டது. பின்பு அநாதை மடத்திற்கு அனுப்பினேன். ஒரு சிறிய காற்சட்டை மட்டும் போட்டிருந்தாள். கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரகங்களுக்கும், பசுவுக்கும் மட்டுமே பழக்கப்பட்டிருந்தாள். ஒரு புதிய உலகத்துள் வந்துவிட்டாள். முதல் நாட்களில் எல்லாவற்றையும் ஒழுங்கீனமாக வைத்திருப்பாள். பின்பு தேவமாதா, சூசையப்பரின் சுருவங்களை விக்கிரகங்களைக் கும்பிட்டது போல கும்பிட்டாள். என்னிடம் உத்தரவு கேட்டு புனித. சூசையப்பரின் சுருவத்துக்கு பூப்பிடுங்கி வைப்பாள்.

வேறு ஒரு சிறுமி திருமுழுக்கு பெற்று எம்தமிழ்ப் பாடசாலையில் படிக்கிறாள். அவளின் ஏழைத் தாய் அவளைத் துன்புறுத்துகின்றாள். சில நாட்களின் முன் உறுதிப்பூசுதல் பெற்றுக் கொண்டாள். இவள் கத்தோலிக்க சமயத்துக்கு வந்தது தாய்க்கு விருப்பமில்லை.

ஒரு புரட்டஸ்தாந்துப் பெண் ஒரு பிறமதச் சிறுமியை எம்மிடம் தந்து கிறிஸ்தவளாக வர விரும்புகிறாள் என்றாள். அச்சிறுமி இப்போது திருமுழுக்குப் பெற்று பாடசாலைக்குச் செல்கிறாள்.

எம்மிடம் ஒரு இளம் தொழிலாளி திருமுழுக்கு மட்டும் பெற்றிருந்தார். 20 வயது. நாம் முதல்நன்மைக்கு ஆயத்தம் செய்து வந்தோம். நல்ல கவனத்துடன் படித்ததால் உறுதிப்பூசுதலுக்கும் ஆயத்தமானார். தற்போது தன் சகோதரன் மனமாற்றத்திற்காக வேலை செய்யப்போவதாக றேமன்ட் கூறினார்.

சிலகாலமாக இறைவன் எமக்கு நன்மைகள் பல செய்வதற்கு உதவி செய்து வருகிறார்.

இங்கு புரட்டஸ்தாந்து மக்கள் கத்தோலிக்க பெண்களை வேலைக்கு வைத்திருப்பர். இங்கு படிக்கும் ஆங்கிலப் பிள்ளைகளுக்கு அவர்கள் சாப்பாடு கொண்டு வரும்போது அவர்களை நாம் கேற்றடியில் சந்தித்து பிள்ளைகள் சாப்பிடும் போது நாம் அவர்களுக்குச் செபம் படிப்பிப்போம். பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தம் செய்வோம். இந்த வேலைக்காரர் மத்தியில் ஒருபெண் முன்பு கூடாதவாழ்க்கை வாழ்ந்திருந்தாள். பாவசங்கீர்த்ததனம் செய்வதுடன் பகிரங்கமாக மன்னிப்புப் பெற்று இறைவனுடன் ஒப்புரவாக உதவினோம். புரட்டஸ்தாந்து வீட்டுத் தலைவரிடம் உத்தரவு பெற்று வந்து தான் பூசைக்குப் போக முடியும். இதற்கு எம்சகோதரி உதவியாக இருந்தார். பாவசங்கீர்த்தனம் செய்து ஞாயிறு பூசைக்குச் சென்றாள். அங்கு முள்முடி அணிந்து ஒரு சிறிய சிலுவை தோளில் வைத்து தன் பிழையைக் கூறினாள். அத்துடன் கையில் சில அடிகளும் கொடுக்கப்படடன. பின்பு அருட்சாதனம் பெற அனுமதிக்கப்பட்டாள்.

புனித. சூசையப்பரின் பிள்ளைகள் ஒரு லொத்தர் ஆயத்தம் செய்து விசுவாசப்பரப்புதல், திருப்பாலத்துவ சபைக்கென 165 பிராங் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fr. Pullicaniவொத்தர் இழுத்தார். ஆயர் இல்லாத படியால் அவரே ஞானொடுக்கத்தையும் முடித்துப் பாராட்டுக்களையும் பெற்றார். அடுத்த நாள் அநாதை மடத்தில் Fr. Dominic திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்படடது. பிரதிஆயர் Fr. Pulli eani செலவைப் பொறுப்பேற்றார்.

புனித. சூசையப்பருக்கு ஒரு இடம் ஆயத்தம் செய்து இராயப்பர் சகோதரிகள் அதை அழகுபடுத்தினர். தினமும் மாலையில் சிலர் மாதாவின் இடத்துக்கும் சூசையப்பரின் இடத்துக்கும் உலாவச் செல்வார்கள். இது பாதயாத்திரையாகவும் இருந்தது.

சில நாட்களின்முன் நான் கோவிலுக்குப் போய்க் கொண்டிருக்கும்போது ஒருவன் என்னுடன் பேச விரும்புவதாகக் கூறினான். சாட்சியங்கள் இல்லை. நான் கோவிலுக்கு அருகில் விறாந்தையில் நின்று வரும்படி கூறினேன். அவன் அம்மா உம்முடன் கோவிலில் தனியே முழங்காலில் இருந்து பேசவிரும்புகிறேன் என்றான். நான் கோவிலில் கதைப்பதில்லை எனவும், கதைக்கும் அறையில் கதைக்கலாம் என்றும் சொன்னேன். பின் ஒரு சகோதரியைக் கதவண்டை நிற்கும்படி கூறினேன். பின்பு அவன் என் காலில் விழுந்து அழுதான். தான் கத்தோலிக்கன் எனவும், மாதாவைத் தன் தாயாகக் கண்டு செபிப்பதாகவும், தன் மனைவி பேயினால் பீடிக்கப்பட்டுள்ளாள். எனவே செபம் கேட்பதற்காக இறைவன் என்னை இங்கு அனுப்பியுள்ளார் என்றான். அப்போது நாம் 9நாள் மாதாவுக்கு (நவநாள்) இக்கருத்தை வைத்துச் செபிப்போம் என்றும் கூறினோம். இன்றுடன் நவநாள் முடிவடைகின்றது.

ஓர் ஆயத்த கன்னிகையும் பலகாலமாப் பாவசங்கீர்த்தனம் செய்யாதிருந்த தன்தந்தையை மனம்மாற்றியுள்ளார். ஆயர் கடலோரத்தில் ஒரு நிலம் வாங்கியுள்ளார். அங்கு ஒரு வகுப்பு நடைபெறுகின்றது எல்லோரும் கத்தோலிக்கர். அறியாமை நிரம்பவுள்ளது. எம்மைத் தம்மிடம் வரும்படி கூறியுள்ளார். அதிகம் பிள்ளைகள் வருவார்களாம். மன்றாடவும். எம்மிடம் இருந்த ஒரு பிள்ளை பிறமதத்தவர் மத்தியில் உள்ளா. கடிதம் நீளமாக உள்ளதால் தற்போது உங்கள் செபத்தைக் கேட்டு நிற்கின்றேன். எல்லாப் பிள்ளைகளின் செபங்களுடன் எளிய கருவிகளும் நன்மை செய்ய முடியும்.

**19. மாசி 1875**

என் நல்ல தாயாரே!

சென்ற அறிக்கையில் ஒரு கத்தோலிக்கர் கோயில் மூப்பர். பேய் பிடித்த தன் மனைவிக்காகச் செபிக்கும்படி கூறியிருந்தார் அல்லவா?. அவர் ஒரு மாதத்தின் பின் திரும்ப வந்து, தன் மனைவி சுகம்பெற்றதாகவும், அதற்கு இறைவனுக்கும், சகோதரிகளுக்கும் நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவதாகவும் சொன்னார். கோவிலுக்குச் சென்று முழந்தாள் படியிட்டு இறைவனுக்கு நன்றி கூறினார். பின்பு எனக்கும் நன்றியாக சில தோடம்பழங்களைத் தந்தார். இங்கு ஐரோப்பா போன்று பழங்கள் இல்லாவிடினும் அவரின் கருத்துக்காக இதை ஏற்றுக் கொண்டோம்.

முன்பு நான் கூறிய ஒரு அநாதைச் சிறுமி தற்போது தாயுடன் ஒரு வருட காலமாக இருக்கிறாள். பிரச்சினைகள் மத்தியிலும் தன் விசுவாசத்தைப் பாதுகாத்து வருகிறாள். தன்வீட்டில் தாய் ஒரு பீடம் வைத்திருக்கிறாள். அக்னெஸ் இதற்கு தீவைக்க விரும்பி என்னைக் கேட்க விரும்பினாள். நான் தாயை வீணாக துன்புறுத்தாது, செபத்தினால் எல்லாம் கூடுமெனப் புத்தி சொன்னேன். அத்துடன் பொறுமையினாலும், நற் செயல்கள், சேவையினாலும் எமது சமயம் மேலானது எனக் காட்டலாம் என்றேன். ஆனால் 15 வயதுடைய அவளின் சகோதரன் அநாதை மடத்தைவிட்டு விலகி பிறமதச் சடங்குகளில் பங்குபற்றுகிறான்.

ஒரு நாள் அக்னெஸ் தன் சகோதரனுடன் யாழ் வந்தாள். அவன் உள்ளேவராது வெளிக்கேற்றடியில் நின்றான். பின்பு தான் வருவதாகக் கூறி நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து எனக்கு நன்றி கூறினான். பின்பு தாய், மகன், மகள் மூவரும் வந்தார்கள். ஆயர் அவனை அநாதை மடத்திற்கு திரும்பிச் செல்லும்படி கூறினார். தாயின் மனம் திரும்புதலுக்கு அக்னெஸ்சும், நவகன்னிகையாக இருக்கும் சகோதரியும் இறைவனையே நோக்கி மன்றாடுகிறார்கள். தவறான வழியில் நடந்த தாயை எமது சுதேச சகோதரிகளின் உதவியுடன் மனம் திருப்பினர்.

மார்கழி 3ம் திகதி புனித. பிரான்சிஸ் சவேரியாரின் திருவிழாவைக் கொண்டாடினோம். ஆயர் யாழ்ப்பாணத்தில் இருந்தபடியால் அவரே வந்து மடத்தில் திருப்பலி நிறைவேற்றினார். அதே வேளை ஒரு கைம்பெண் 2பிறமதத்தவர்களை அழைத்து வந்தாள். ஒரு பெண்ணுக்கு பிரான்சுவாஸ் எனப் பெயரிட்டோம்.

மார்கழி 5ம் திகதி எம் குடும்பத்தை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறினோம். 8ம் திகதி புனித. சூசையப்பரின் பிள்ளைகள் செய்த வேலைகளை விற்றோம். முன்னைய 2 வருடங்களிலும் பார்க்க நன்றாகச் செய்தார்கள். பல புரட்டஸ்தாந்து மக்கள் வந்து நல்ல விலை கொடுத்து வாங்கினார்கள்.

இவ்வருடம் பலர் நடுச்சாமப் பூசைக்கு வருகை தந்தனர். ஆயர் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். குருக்கள், குருமாணவர்கள் பாடினார்கள். gloria கீதம் நன்கு பாடினார்கள். மக்கள் முன்னைய வருடங்களிலும் பார்க்க அமைதியாக திருப்பலியில் பங்கு பற்றிபற்றினார்கள். ஆனி மாதத்தில் பரிசளிப்பு நடைபெறும் பரீட்சையின் பின்பு லீவுக்கு மாணவர்கள் அனுப்பப்படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் லீவுக்குப் பருத்தித்துறைக்குச் சென்றோம். தனிமையான இடம். கடலோரத்தில் ஓய்வெடுத்தோம். ஓர் ஒல்லாந்தப் பெண் தன் பிள்ளைகளை எம்மிடம் ஒப்படைப்பதாகக் கூறினாள். திரும்பி யாழ் வரும்போது விட மனமில்லை. எனினும் வந்தார்கள்.

பருத்தித்துறையில் புனித. சவேரியார் கோவிலுக்குச் சென்றோம். கத்தோலிக்க மக்கள் எம்மைக் கண்டதும் ஒடிப்போய் மற்றவர்களுக்கும் அறிவித்தார்கள். எம்முடைய உடுப்பைக் கண்டதும் திருச்சபையைச் சார்ந்தவர்கள் என நினைத்து எல்லா மணிகளையும் அடித்தார்கள். சிலர் "தோத்திரம் சுவாமி" என்றனர். பருத்தித்துறையை விட்டுவரும்போது ஒரு இந்து ஆலயத்தையும் கண்டோம். அந்தக் கோவிலில் திருவிழா நிகழ்வதால் பல நிகழ்ச்சிளைக் கண்டோம். ஒரு மனிதன் இடையில் ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு நிலத்தில் புரண்டு உருண்டார். தலையில் கையைக் குவித்தார். கற்கள், முட்கள் மேல் புரண்டார். எல்லோரும் திருவிழா உடை அணிந்திருந்தனர். இவர்களுக்காக நாம் நன்கு செபித்தோம்.

எமது வழியில் இக் கோவிலுக்குப் போகிறவர்களைச் சந்தித்தோம். நெற்றி, நெஞ்சு, கையில் திருநீறு அணிந்திருந்தனர். ஆண்கள் உயரமும், உறுதியும் கொண்டவர்கள். பெண்கள் அழகானவர்கள். பல வர்ணச்சேலை அணிவார்கள். இதனால் கிறிஸ்தவப் பெண்களில் இருந்து பிரித்து அறியலாம். நற்செய்திப் பணியாளர்களுக்கு இலங்கை ஒரு பரந்த விளைநிலமாக இருக்கிறது.ஆனால் வேலை ஆட்கள் குறைவு. நாம் செபித்து வருகிறோம். நாம் மேலோட்டமாகத் தான் செபிக்கிறோம். எம் ஓய்வு நாட்களின் பின் தியான நாட்கள் ஆரம்பமாகும். எம் ஆயர் தம் பணிகள் மத்தியிலும் எம் தியானத்திற்கு உதவி செய்தார். எல்லாம் விசுவாசத்தின் அடிப்படையில் இருந்தது. அதுவே எம் துறவற வாழ்வுக்குத் தேவை. இறுதி நாளிலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. நற்கருணை ஆசீர்வாதம் மாலையில் நடந்தேறியது.

தியான நாட்களின் பின் எம் அன்றாட வேலைகளைத் தொடங்கி விட்டோம். ஒரு அநாதைப் பிள்ளைக்கும், சூசையப்பரின் இளைஞனுக்கும் திருமணம் நடைபெற்றது. அவர் மன்னாரில் படிப்பிக்கிறார். மாசி 8ம் திகதி எமது நல்ல பிதாவை நினைத்துச் செபித்தோம்.

அடுத்தமாதம் St. James பகுதியில் எமது புதிய பாடசாலை ஆரம்பிக்கப்படும். தற்போது ஊர்காவற்றுறையில் ஒருமடம் கட்டப்போகிறோம். ஆயர் ஒரு நிலத்தை வாங்கியுள்ளார். Fr. Boisseau இவர்களின் ஆர்வத்தினால் கட்டிடச் செலவுக்கும் ஓர் அறிக்கை தொடங்கி உதவுகிறார். அமலமரித் தியாகிகள் சபை 300/400 frank பெறுமதியான சேவைகளைச் செய்கிறார்கள். இங்குள்ள மக்கள் தூய கத்தோலிக்கர். பிரிவினை மதத்தவர் இல்லை. இது நல்ல பயனளிக்கும் என்பது நம்பிக்கை. எனினும் செபத்தில் நம்பிக்கை கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆனி 1873.**

**யாழ்ப்பாணம்.**

என் நல்லதாயாரே,

எனது கடைசித் தவணைக் கடிதத்தின் பின்பு கல்வி அதிகாரியின் சந்திப்பு நடைபெற்றது. அவர் தம் மனைவியுடன் வந்தார். அவர்களுக்கு எம் பணி மிகவும் பிடித்திருப்பதால், அது பரவ வேண்டும் என்னும் ஆவலால் முழு இலங்கையிலும் உள்ள பெண்களின் பொறுப்பை நாம் விரும்பினால் தரமுடியும் என்றனர். மன்னாரில் பலகத்தோலிக்கர் இருப்பினும் பெண்களுக்குப் பாடசாலை இல்லை. பிரிவினை மதத்தவர்களும் தம் பிள்ளைகளை விடுவார்கள். எனவே அங்கு ஒரு மடம் திறக்கக் கேட்டார்கள். ஆனால் ஆயர் மட்டக்களப்பிலேயே முதல் மடத்தைத் திறப்பார் போலுள்ளது. 9, 10 வருடங்களாக அங்கு சகோதரிகளைக் கேட்கிறார்கள். அறுவடையோ மிகுதி ஆட்களோ குறைவு. தெரிவுகள் இல்லாவிடின் நாம் பல ஆயத்த கனிகளைப்பெறலாம். இங்கு நாம் உயர் சாதிப்பிள்ளைகளையே அனுமதிக்கிறோம். அல்லது சுதேசிகள் நம் சகோதரிகளை மதிக்கமாட்டார்கள். அத்துடன் துறவிகளாக வருமுன் அவர்களை நல்ல நிலைக்கு வரச் செய்ய வேண்டும். சோம்பல் தனத்தைப் போக்க வேண்டும். அதிக இளம் பெண்கள் வீடுகளில் ஒன்றுமே செய்வதில்லை எனவே நவகன்னிகை இல்லத்திற்குச் செல்லுமுன் வேலைப்பயிற்சி கொடுக்கவேண்டும். எம் அநாதைப்பிள்ளைகளை உற்சாகப்படுத்த பங்குனி மாதத்தில் செபமாலை புத்தக விற்பனையொன்றை ஆரம்பித்தோம். ஒவ்வொரு பிள்ளையும் தன் முயற்சியால் இதை வாங்க வேண்டும். ஆயரும் அவரின் பிரதி முதல்வரும் இதில் பங்குபற்றினர். நன்கு முயற்சி எடுத்த பிள்ளைக்கு ஆயர் 50 Frank கொடுப்பதாக வாக்களித்தார். இந்தப் பரிசைப் பிள்ளைகள் பெறுவதற்கு ஆசிரியர்கள் அனுமதியும் இருக்க வேண்டும். இப்பரிசு பெற்றவ தற்போது ஆயத்தகன்னிகையாக இருக்கின்றா. விழா ஓர் உரையாடலுடன் ஆரம்பமானது. பிள்ளைகள் ஆயருக்கு நன்றிகூறி அவர் படும் கஷ்டங்களுக்கு ஆறுதல் கூறினர். பின்பு ஒரு பாடல் ஆயத்தம் செய்யப்பட்டது. Sr. கபிரியேலா சுகயீனமாக வகுப்பறைக்கு அருகில் இருந்தமையால் பாடமுடியவில்லை. எனினும் பிள்ளைகள் மகிழ்வுடன் (போனா) Bonnet தாயார் அனுப்பிய சிவப்பு செபமாலை, புத்தகங்களைப் பெற்றுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வருடம் புனித சூசையின் மாதத்தை தோட்டத்தில் உள்ள அவர் சிற்றாலயத்தில் நடாத்தினோம். இளம் தொழிலாளிகள் சிற்றலாயத்தை அலங்கரித்து தம் ஞானக்கடமைகளை நிறைவேற்றினர். 19ந் திகதி அவரின் திருவிழா மகிழ்ச்சியும், துன்பமும் கலந்திருந்தது. அன்று ஒரு பிரிவினை மதப்பெண் திருமுழுக்குப் பெற்றாள். அதன் பின் சற்பிரசாத ஆசீர்வாதம் நிகழ்ந்தது. எம் சகோதரி கபிரியேலா தன் ஆன்மாவை இறைவனிடம் ஒப்படைத்தா. தன் இறுதிப் பயணத்தை அமைதியில் செலவிட புனித சூசையப்பர் உதவினார்.

சில வருடங்களின் முன் ஓர் இளம் பெண் புதுநன்மைபெற ஆயத்தம் செய்தோம். தாய் புரட்டஸ்தாந்து போர்த்துக்கேயப் பெண். அவள் ஒரு போதகருடன் இருந்தாள். சிலமாதங்களுக்கு முன் அவள் வருத்தமுற்றாள் போதகர் வந்து பைபிள் வாசித்தபோது, அவள் தான் கத்தோலிக்க சமயத்தில் சேரப் போவதாகக் கூறியதால் வீட்டில் இருந்து துரத்தி விட்டார். மகள் வந்து தாயின் நிலையை எம்மிடம் கூறினாள். தேவபராமரிப்பு மூலம் ஒரு பெண் வீடு கொடுத்தாள். பின் திருமுழுக்குப் பெற்றாள். விரைவில் இறைவனையும் சந்திப்பாள்.

எங்கள் சுதேச சகோதரிகளில் ஒருவர் பலகாலமாக அருட்சாதனங்களைப் பெறாத ஒரு பெண்ணை மனம்மாற்றினாள். அவள் பகிரங்கமாகப் பாவ அறிக்கை செய்து பாவசங்கீர்த்தனம் செய்து திருவிருந்தில் பங்குபற்றினாள். நமது சுதேச சகோதரிகளுக்கு ஒரு விசேட ஞானொடுக்கம் நடைபெற்றது. இறுதி நாளில் 5 ஆயத்த கன்னிகைகள் உடுப்புப் பெற்றனர். 4 நவகன்னியர் வாக்குத் தத்தம் செய்தனர். ஆயர் திருப்பலியை நிறைவேற்றினார். எமது சகோதரிகள் பாடினார்கள். தாமாகவே ஒரு பாட்டு இயற்றி பாடினார்கள். அவர்களின் குடும்பங்களும் வந்திருந்தார்கள். ஒரு சகோதரி எம் Sr. Marie Agnes க்குச் சொந்தம். பூசையின் பின் ஆயர் உறுதிபூசுதல் கொடுத்தார். காலை உணவின் பின் அவர்களுக்குப் படமும் கொடுத்து அவர்களின் பெயர்களையும் புதிய நவகன்னியருக்குக் கொடுத்தார்.

இரண்டு அநாதைப்பிள்ளைகளும் ஞானொடுக்கம் தொடங்கமுன் நவகன்னியர் இல்லம் வந்தனர். 5 or 6 பிள்ளைகள் சேர்வதற்கு கேட்டனர். அவர்கள் இளம் வயதினர். அழைத்தலை அறிவதற்குக்காலம் தேவை. எமது இரண்டு ஆயத்தகன்னியர் பிரிவினை மதத்தில் இருந்து வந்தவர்கள். அதில் ஒருவர் றோசி மகள் துறவியாவதற்குப் பெற்றோர் விரும்பவில்லை எனவே பல இன்னல்களை அனுபவித்தாள். பெற்றோர் வரும் போது Sr. M. லிகோரியை துணையாக அனுப்புவேன். தகப்பனார் மிகவும் தொந்தரவு கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை 5ந் திகதி Fr. Ronllet றூனெக்கு க்காகச் செபித்தோம். நாம் உங்களுடன் சேர்ந்து இவ்வேளையில் நீங்கள் என்ன செய்வீர்கள் என நினைப்போம். இதனால் தூரம் குறைவாகத் தெரிகிறது.

உயிர்த்த ஞாயிற்றின் மறுநாள் திங்கட்கிழமை ஆயர் பல குருக்களுடன் வந்து மீன்பிடிப்பவர் பகுதியில் உள்ள பாடசாலையை ஆசீர்வதித்தார். பெற்றோரும் அதிகாரிகளும் வந்திருந்தார்கள். தூயஆவிக்குப் பாடல் பாடி ஆயர் வகுப்பறைகளை ஆசீர்வதித்தார். வகுப்புகள் பூக்கள், மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பின்பு ஆயர் உரையாற்றி இன்னும் இரண்டு நாட்களில் பாடசாலை ஆரம்பமாகும் என்றார். முதல்நாளில் 80 பிள்ளைகள் தற்போது 156 பிள்ளைகள் எல்லோரும் கத்தோலிக்கர். சிலுவை அடையாளம், பரலோகமந்திரத்தைத் தவிர வேறு எதுவும் தெரியாது 14, 15 வயதுப் பெண்பிள்ளைகள் இன்னமும் முதல்நன்மை பெறவில்லை. படிப்பு இல்லாமல் அலைந்து திரிந்தவர்கள். இறைவன் விரும்பும் இந்த ஆன்மாக்களை நாம் அன்பு செய்கிறோம். இரண்டு சுதேச சகோதரிகள் ஓர் அநாதைபிள்ளையுடன் Sr. M. Eustelle தலைமையில் அங்கு சென்று பின் குழுவுக்கு வருவர். இங்கு திருமணமான ஓர் அநாதைபிள்ளையை காவலுக்கு விட்டுள்ளோம். அவர்கள் மத்தியில் இருந்து பணிபுரிவதே நன்று. இரண்டு பத்திரிகைகள் பாடசாலையை நன்கு பிரசுரித்தன. (Protestant Journal, Messenger Catholic Colombo) கல்வி அதிகாரிகளுக்கு உதவி செய்யவிருப்பம். எம் சகோதரிகள் இறைஇரக்கத்தை நம்பியுள்ளனர். எம்பிள்ளைகள் மாதாவின் மாதத்தை ஆசிரியர்களுடன் சேர்ந்து கொண்டாடுகிறார்கள். ஒரு மாதாபடத்தின் முன் முழுந்தாட்படியிட்டு மெழுகுதிரி கொழுத்திப் பாடினார்கள். விரைவில் ஒரு சுரூபம் கிடைக்கும். ஒவ்வொரு ஞாயிறும் எம் சகோதரிகள் மறைக்கல்வி வகுப்புக்குச் செல்வார்கள். திரு இருதயப் பாடசாலையில் வகுப்பு நடைபெறும் அதன் பின்பு ஆசீர்வாதத்திற்கு அழைத்துச் செல்வர். அவர்கள் அங்கு சென்றபின்பு பெண்கள் சண்டை சச்சரவின்றி ஒழுங்காக வாழ்ந்தார்கள். சகோதரிகளுக்கும் மதிப்புக்காண்பித்து பணிந்து நடந்து வந்தனர்.

திருக்குடும்பத் திருவிழாவின் போது 17 பிள்ளைகள் புதுநன்மையும் 22 பிள்ளைகள் உறுதிப்பூசுதலும் பெற்றனர். மாலையில் ஆயர் நற்கருணை ஆசீர்வாதம் கொடுத்து 28 பிள்ளைகளுக்கு திருக்குடும்ப உத்தரியம் கொடுத்தார். நாம் ஸ்பெயின், பிரான்ஸ் சகோதரிகளுக்காகச் செபிக்கிறோம். இயேசுவின் திரு இருதயமும், மாதாவும் இவர்களைப்பாதுகாப்பார்களென நாம் உறுதியாக நம்புகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 புரட்டாதி 1873

ஆனி 12ந் திகதி ஒரு பிறசமயப் பெண்ணுக்குத் திருமுழுக்கு கொடுத்தோம். 2ஆயத்தகன்னியர்களைத் தேவதாய்க்கு ஒப்புக் கொடுத்தோம். இந்த பிள்ளைகளையும் நாம் பருத்தித்துறையில் இருந்து அழைத்து வந்தோம். 25ந் திகதி பரிசளிப்பு விழா நடைபெற்றது. குருக்கள் மட்டும் அழைக்கப்பட்டார்கள். அதன்பின்பு 15நாள் லீவுக்காக மாதகலுக்குச் சென்றோம். அங்கு கடற்கரையில் தனியாக நீண்டதூரம் நடக்கமுடிந்தது. அப்போது பல இளம் யுவதிகள் துறவிகளாக வர விருப்பம் தெரிவித்தனர். அவர்களில் ஒரு பெண் நவசந்நியாசத்தில் இருக்கிறா. ஒரு பெரிய ஆலயமும் கட்டவுள்ளனர்.

29ந் திகதி சுதேச சகோதரிகள் தம்திருவிழாவைக் கொண்டாடினர். நல்ல பிதாவின் படமும் எமது தோட்டப்பூக்களால் அலங்கரிக்கப்பட்டது. அவர் தங்களைக் காப்பார் என நம்புகின்றனர். ஆவணி 15ந் திகதி 10 அநாதைச் சிறுமிகள் திருமுழுக்குப் பெற்றனர். வெள்ளைப்பூக்கள் உங்கள் கருத்துக்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது. இப்பிள்ளைகள் உங்களுக்காகவும் எமது குடும்பச் சகோதரிகளுக்காகவும் அதிகம் செபித்தனர். மடத்து வாசலில் (gate) இருக்கும் சகோதரிகளும் தொழுநோய்பீடித்த ஓர் இளம்பெண்ணைத் திருமுழுக்குக்கு ஆயத்தப்படுத்தினர். மாறி என்னும் பெயர் இவவுக்கு கொடுக்கப்பட்டது. தற்போது முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்கிறோம். இயேசுவின் பாடுகளுடன் அவள் பெலமடைகிறாள். எங்கள் மடத்தில் இருந்த இன்னொரு புரட்டஸ்தாந்து பெண்ணும் சுகவீனமுற்றிருந்து திருமுழுக்கு நீருடன் சுகம் பெற்றுள்ளாள். பல வருடங்களாகத் திருவருட்சாதனங்கள் பெறாத ஒரு பெண் பாவசங்கீர்த்தனம் செய்து திருவிருந்து பெற உதவி செய்தார்கள். அறுவடையோ மிகுதி வேலையாட்களுக்காகச் செபிக்கின்றோம்.

திரு இருதயப் பாடசாலை நன்றாக நடைபெறுகின்றது. முன்னேற்றம் அடைந்து வருகின்றது. பலருக்குச் செபம் தெரியும். வாசிக்க, எழுதத்தெரிந்த பிள்ளைகளுக்கு கணிதமும், தையலும் படிப்பிக்கிறோம். மற்றப்பிரிவு கரும்பலகையில் வாசித்து நிலத்தில் எழுதுகிறார்கள். 160 பிள்ளைகள் சேர்ந்துள்ளனர். பெற்றோரும் படிப்பின் முக்கியத்துவத்தை உணர்வதில்லை. பாடசாலை செல்வதற்கு அவசியமானவற்றை நாம் கொடுத்து உதவுகின்றோம். எல்லோரும் கிறீஸ்தவர்கள். ஆனால் அனுசரிப்பதில்லை. இரண்டு சகோதரிகள் அங்கு சென்று மறைக்கல்வி படிப்பித்துப் பின் பூசைக்கு அழைத்துச் செல்வர்.

சிலநாட்களின் முன் Sr. Helen அவர்களுடைய ஆசிரியர், மாணவர்கள் திரு இருதயப் பாடசாலைக்குச் செல்லவிரும்பினார். பிரிவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தலைவர்கள், கத்தோலிக்கர்கள் தம் ஆசிரியருடன் மகிழ்வுடன் சென்றனர். சிலேற், புத்தகங்கள் எடுத்துச் சென்று இந்த ஏழைப் பிள்ளைகளுக்குக் கொடுத்தார்கள். பிள்ளைகளுக்குப் பொறுப்பாக இருந்த Sr. Eustelle மகிழ்வுடன் அவற்றைப் பெற்றுக்கொண்டா. எம் அநாதை மடத்தில் தற்போது 83 அநாதைப் பிள்ளைகள் இருக்கிறார்கள். இவர்களுள் 13 பேர் திருமுழுக்குப் பெற ஆயத்தம் செய்கின்றனர். இரண்டு போர்த்துக்கேய சிறுமிகளும் ஆங்கிலபாடசாலையில் படிக்கிறார்கள். மூத்த சிறுமி விரைவில் புதுநன்மை பெறுவர்.

புனித சூசையப்பரின் தொழிலகப் பெண்கள், விசுவாசப் பரப்புதல் சபை, திருப்பாலத்துவ சபைக்கு லொத்தர் சீட்டுப் போட்டு பணம் சேர்க்கின்றனர். எமது அநாதைச் சிறுமிகளும் இதில் பங்கெடுத்தனர். 450Frank சேர்ந்தது. இவையே எமது 3மாத வேலைகளாகும். கஷ்டங்கள் வந்தாலும் இறை அருளால் வாழ்கிறோம். இவர்கள் மத்தியில் பணி செய்வது எப்பொழுதும் இலகுவான காரியமல்ல. எனவே எம்பணியை நாம் நன்கு செய்ய மன்றாடவும். இதனால் பல ஆன்மாக்களை இறைவனுக்கு அர்ப்பணிக்க முடியும்.

## யாழ்ப்பாணம் தை 1874

சென்ற வருட அறிக்கையில் ஒரு 4 வயதுப் பிள்ளை அக்னெசுக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது பற்றி எழுதினேன். அவவின் பாட்டி சரியான வாழ்வு வாழாதபடியால் பிள்ளையை புரட்டஸ்தாந்து பாடசாலையில் சேர்த்தார்கள். சில காலத்தின் பின் பிள்ளை சுகவீனமுற்றாள். அவர்களால் குணப்படுத்த முடியவில்லை. திரும்பவும் தன்னைப் படிப்பித்த சிஸ்ரமாரிடம் கொண்டு போகும்படி அக்னெஸ் கேட்டுக்கொண்டாள். அக்னெஸ் இறைவனடி சேர்ந்தாள். சகோதரிகள் உதவி செய்து அடக்கச் சடங்கு நடைபெற்றது.

முன்பு றோசிபற்றிக் கூறி இருந்தேன். பெற்றோர் அவளை வீட்டுக்குக் கூட்டிச் சென்றனர். அவள் தன் சமயக் கடமைகளைச் செய்வதில்லை என்று ஒரு கடிதம் வந்தது. அவளின் விசுவாசத்துக்காகச் செபித்தோம். அவளின் சகோதரி அன்ரோனியா உதவி செய்வாள் என நம்பினோம். ஒரு நாள் றோசியும், அன்ரோனியாவும் வந்தார்கள். சுகவீனமுற்றிருக்கும் தம் தந்தை சுகம் பெற மன்றாட்டுக் கேட்டு எம்மிடம் மன்னிப்பும் கேட்டனர்.

பின்பு தந்தை மரணம் வந்தாலென்ன, சுகம் வந்தாலென்ன தான் கிறீஸ்தவ சமயத்தில் சேருவேன் என்று கூறினார். றோசியை வீட்டுக்கு அனுப்பித் தந்தைக்கு உதவி செய்யும்படி கூறினோம். நாமும் புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவேரியாருக்கு நவநாள் செய்து மன்றாடினோம். பின்பு தகப்பனார். அன்ரோனியாவின் மாமனாரைக் கூட்டிவரச் செய்து பிள்ளையின் உத்தரியத்தை வாங்கித் தன் மேல் போடச் சொன்னார். குருவானவரை அழைத்தவர விரும்பாததால் பிறமதத்தினர் சூழ வர புனித சவேரியார் திருநாளில் இறந்தார். பின்பு றோசியின் மாமனார் அவளை மடத்திற்கு அழைத்து வந்தார். அவளும் பிள்ளைகளிடம் மன்னிப்புக் கேட்டாள்.

இம்முறையும் லொத்தர், புனித சூசையப்பரின் கூட்ட விற்பனையும் நடைபெற்றது. யாழ் மக்கள் அதிகம் முயற்சியெடுக்காததால் நல்ல பயன் அளிக்கவில்லை. புரட்டஸ்தாந்து மக்களுக்கு ஒவ்வொரு வருடமும் வேறிடங்களில் இருந்து பொருட்கள் விற்பனைக்கு வருகின்றன. இவை அவர்களின் அநாதை மடத்துக்கு உதவுகின்றன. இந்த வருடம் அவர்கள் எமக்கு முன் விற்பனையை ஆரம்பித்த படியால் எம்மிடம் வரும் புரட்டஸ்தாந்து மக்களைத் தடுக்க விரும்பினர். அதேபோல பாடசாலையிலும் பிரச்சினை. யாழ்ப்பாணத்தில் இரு பிரிவு மதத்தவர்களிடையே பிளவு. ஆனால் எமது கத்தோலிக்கரோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவர்கள் ஒன்றாகச் சேர்வார்கள்.

தற்போது அரிசி விலைகூட பட்டினியும் தலைகாட்டுகிறது. எனவே பிள்ளைகளைப் போஷிப்பதும் கஷ்டம். ஆனால் நல்ல இறைவன் எமக்கு உதவுவார். கஷ்டமானவேளைகளில் இதை நம்புகிறோம்.

லொறற்றோ மாதா திருநாளில் ஒரு நல்ல கிறீஸ்தவன் 4 துணிச்சுருளை எம் அநாதை பிள்ளைகளுக்குக் கொடுத்துச் சென்றார். தன் வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும் போதெல்லாம் ஏழைகளுக்கு ஒரு பகுதியை வைப்பதாகக் கூறினார். அதில் ஒரு பகுதியை ஆயருக்கும், மற்றதை எங்களுக்கும் தந்ததாகக் கூறினார்.

தருமசீமாட்டிகள் சபை இவ்வருடத்தில் 63 ஏழைப்பிள்ளைகளுக்கு உடுப்புக் கொடுத்தனர். இந்தப் பணிகளுடன் ஆன்ம பணிகளையும் செய்து அதேவேளையில் தங்கள் சொந்த புனிதத்துவ வாழ்வையும் தேடும்படி கூறியுள்ளார் ஆயர். திரு இருதயச் சபையில் இருந்து இரண்டு பிள்ளைகள் முதல்நன்மை பெற்றுள்ளனர். இப்பிள்ளைகளின் தாய்மார் தங்கள் கணவன்மார் பிடித்த மீன்களை விற்கச் செல்வர். இந்த அன்புப் பெண்கள் வீட்டில் அல்லது பாதையில் சிறுபிள்ளைகளைப் பராமரிப்பார்கள். சிலவேளை நல்ல உடுப்புக்கள் இல்லாதபடியாலும் பாடசாலைக்குப் போக மாட்டார்கள்.

தைமாதத்தில் எமது வருடாந்த தியான ஒடுக்கத்தைச் செய்தோம். வீட்டில் 100 பிள்ளைகளுக்கு மேல் இருந்தார்கள். அவர்கள் தியான ஒடுக்கம் செய்யவில்லை. அவர்கள் எம்பராமரிப்பில் இருப்பதால் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு நன்மை செய்ய முடியும். சிலநாட்களுக்கு முன் பெரிய கோவிலில் திருப்பாலத்துவப் பூசை வேளையில் நற்பணிகளுக்காகப் பணம் கேட்டிருந்தார். எங்களுடைய பிள்ளைகளிடம் பணம் இருக்கவில்லை. எங்கள் தியான நாட்களில் இவர்கள் அமைதியாக இருந்த படியால் கடற்கரைக்குச் சென்று ஏதாவது வாங்கிச் சாப்பிடும்படி ஒரு சிறுதொகைப் பணம் (3ரூபா) கொடுத்தேன். அவர்கள் கடற்கரைக்குப் போக விரும்பினர். ஆனால் காசைச் செலவழிக்கவிரும்பாது ஆயரிடம் திருப்பாலத்துவ சபைக்காகக் கொடுத்தார்கள். ஆயர் மகிழ்வுடன் அதைப் பெற்றுப் பதிலாக தனது ஆசீரை வழங்கினார்.

தை மாதம் 15ந் திகதி புதிய சகோதரிகளை வரவேற்றோம். உடனே அவர்களை ஆயரின் கோவிலுக்கு அழைத்துச் சென்றோம். பின்பு ஆயரையும் சந்தித்து மடத்துக்கு வந்து பார்சல்களை அவிழ்த்த போது நீங்கள் அனுப்பிய சிறு பொருட்கள் எமக்கு மகிழ்ச்சி அளித்தன. நீங்கள் எங்களை மறக்கவில்லை என்பதை இவைவெளிப்படுத்தின. நான் அவர்களுக்கு எழுதுவேன். எனினும் ஒரு படத்தின் வழியாய் தொடர்பு கொண்ட எல்லோருக்கும் என் நன்றிகள். அத்துடன் நீங்கள் அனுப்பிய செபமாலை, குருசு இவற்றைப் பெற்றுக் கொள்ளப் போகின்றவர்களின் நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை ''செப்ரூவாஜெசிமா'' ஞாயிறு நாள் முழுவதும் எழுந்தேற்றம் இருந்தது. ஆயர்திருப்பலி நிறைவேற்றினார். பலர் சமூகமளித்தனர். காலையில் ஆங்கிலத்தில் மறை உரை நிகழ்த்தினார். நற்கருணையைப் பற்றிக் கூறி எமது பல கருத்துக்களுக்காகவும் செபிக்கும் படிகூறினார் இந்தப் பிரசன்னத்தில் நாம் ஆறுதல் அடைகின்றோம்.

மாலையில் ஆசீர்வாதம் ஆடம்பரமாக நடைபெற்றது. பீடம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. மக்கள் வந்திருந்தனர். பாட்டும் நன்றாக இருந்தது. எமது திருக்குடும்ப சகோதரிகள், தலைவிகள் பணிக்காகச் செபித்தோம்.

கடிதத்தை முடிக்கு முன் எம் மறைத்தூதர் Fr. Casenave கசனாவ் இறந்த செய்தியைக் கூறுகிறேன். இரண்டு வருடங்கள் மாத்திரம் இலங்கையில் இருந்தார். நாம் இறுதிச்சடங்குகளில் பங்குபற்றினோம். அவரின் கல்லறை எம் இறந்த சகோதரிகளின் கல்லறைக்கு அண்மையில் உள்ளது. இது எமது கடைசி இடம். பின்பு எம் இறந்தவர்களை நாம் சந்திக்கலாம். இந்தச் சிந்தனையுடன் என் பெரிய கடிதத்தை முடிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## June 1875 - Jaffna

எனது அன்பான நல்லதாயாரே!

மாசிமாதம் ஆளுநர் யாழ் வந்தார். அவர் வருவதற்கு முன்பே பாடசாலைகளைச் சந்திக்கமாட்டார். என்று அறிவிக்கப்பட்டது. எமக்கு நேரம் கிடைக்கவில்லை. நகர மேயர் M. கிறகரியை வரவேற்க ஆயத்தம் செய்தார். நாம் அமைதியாக இருந்தோம். ஆளுநர் சகோதரிகளையும் சந்திக்க விரும்பியதாக ஆயர் கூறினார். ஓர் ஆயத்தமும் தேவையில்லை, நட்பு முறையிலே சந்திக்க விரும்புகிறார் என்றார். அவர், நேரம் காலம் முன்னறிவிக்க வேண்டியும், ஆயர் அனுப்பிய கடிதம் அடுத்தநாளே என்கையில் கிடைத்தது. அவர் வர ஒரு மணித்தியாலத்தின் முன் தான் கிடைத்தது. அதில் 3.30 மணிக்கு என்று குறிக்கப்பட்டிருந்தது. அவர்கள் மூன்று பேர் 3மணிக்கே வந்து விட்டார்கள். என்னபாடுபட்டிருப்போம். அநாதைபிள்ளைகளின் உடுப்பை மாற்றத்தான் நேரம் கிடைத்தது. மற்றவர்கள் அப்படியே நின்றார்கள். Sr. M. Eustelle க்கு ஆள் அனுப்பி அவ தன் பிள்ளைகளுடன் வந்தா. பின்பு நாம் அவருடன் சல்லாபித்து முடிவில் எமது பணிகளைப் பார்வையிட்டார். புனித சூசையப்பர் இளம் பெண்களின் வேலைகளைப்பாராட்டினார். ஆங்கில வகுப்புப் பிள்ளைகள், அநாதை இல்லத்தையும் தரிசித்தார் அவர்கள் இனிமையான பாட்டுப் பாடினார்கள்.

எமது பிள்ளைகளின் உடுப்புக்களையும் சந்தோஷமான சூழ்நிலையையும் பார்த்து ''நீங்கள் நல்ல பணி செய்து வருகிறீர்கள் என்று எம்மைப்பாராட்டினார். பின்பு அநாதைமடவெளிவிறாந்தையில் ஒழுங்காக நின்ற திருஇருதய வெளிமாணவர்களையும் அவருக்குக் காட்டினோம். எனினும் புரட்டஸ்தாந்தர் சந்தோஷப்படவில்லை. அவர்கள் தம் போடிங்கில் பிள்ளைகளை இலவசமாக எடுத்துப் படிப்பிக்கிறார்கள்.

மாசி 16ந் திகதி எல்லா மறைத்தூதர்களையும் (மிஷனறிமார்) திருஇருதய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தோம். அடுத்த நாள் ஆயரின் ஆலயத்தில் நடைபெற்ற தியான முடிவிலும் வாக்குத்தத்தம் புதுப்பித்தலிலும் பங்குபற்றினோம். ஆயரின் மறையுரை பாடல்கள் எல்லாம் நன்றாக இருந்தன.

பங்குனி மாதத்தில் புனித சூசையப்பரின் பாதத்தண்டை தினமும் ஒன்று சேருவோம். 19ந் திகதி திருமுழுக்குப் பெறுபவர்களின் பட்டியலைத் தயாரித்தோம். குருக்களுக்கு நேரமின்மையால் திருமுழுக்குப்பின்போட வேண்டியிருந்தது. சித்திரை 5ந் திகதி பாஸ்குத்திருநாள் கொண்டாடினோம். Fr. Roullet றூனே உடைய திருநாள் அடுத்தநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடினோம். 9ந் திகதி Fr. Salaum சலோம் 7, 8வருட வியாதிக்குப் பின் இறந்து விட்டார். அவர் எமது ஆன்ம குருவாக இருந்தவர். எமக்காக நிச்சயம் செபிப்பார். மாதாவின் மாதத்தில் ஓர் இளம் தொழுநோயாளி முதல் நன்மை பெற்றா. இம்மாதத்தில் எம்மாணவர் பங்குத் தந்தையின் தலைமையில் தியானம் செய்தனர். பாடசாலையில் உள்ள எல்லாக்கத்தோலிக்க மாணவர்களும் திரு இருதயப் பாடசாலை மாணவர்களும் பங்குபற்றினர். இறுதி நாளில் ஒரு பிள்ளை திருமணம் செய்ய ஆயத்தப்படுத்தப்பட்டா. மூன்று பேர் இராயப்பர் சபைக்கு (சுதேச) அனுமதிக்கப்பட்டனர். ஏழு பேர் திருமுழுக்குப் பெற்றனர். இறுதிநாள் பூசையின் பின் எல்லோரும் ஆயருக்கும் சுவாமிக்கும் நன்றி கூறினர். ஆயர் படங்கள் கொடுத்தார்.

வைகாசி மாத முடிவில் பேராலயத்தைச் சுற்றி மாதாவின் திருச் சுரூவ பவனி நடைபெற்றது. எமது பிள்ளைகள் திருச்சுரூபத்தைச் சுமந்து வந்தார்கள். அழகான சுரூவத்திற்கு உடை அணிந்து, முகத்தை மட்டும் வெளியில் தெரிய விட்டு முடிசூட்டினர். ஞாயிறு நற்கருணைப்பவனி இடம் பெற்றது.. 200 பிள்ளைகள் பங்குபற்றினர். பலர் நல்ல உடுப்பு இல்லாததால் பங்குபற்றவில்லை. இந்த நாட்களில் ஓர் அநாதைப் பிள்ளைக்குத் திருமணம் நடந்தது. மணமகள் வீட்டார். நட்டுவ மேளத்துடன் மணமகளை ஆலயத்திற்கு அழைத்துச் சென்றனர். மூன்று நாட்களின் பின் எம்மைச் சந்திக்க வந்தனர். தற்போது 40, 50 பிள்ளைகள் முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்கிறார்கள். குருக்கள் குறைவாக இருக்கிற படியால் திரு இருதயத்திருநாளில் கொடுக்கலாம்.

## 30 புராட்டாதி 1874

ஆனிமாதம் 12ந் திகதி சகலவரப்பிரசாதமாதா கெபியில் ஐரோப்பாவில் உள்ள சகோதரிகளுடன் ஒன்று சேர்ந்து எம் சபைக்காகவும், பணிக்காகவும் செபித்தோம். 9ம் பத்திநாத பாப்புவின் 28ம் ஆண்டு நினைவுகூரப்பட்டுக் கொண்டாடப்பட்டது. யாழ் - பேராலயம், ஆயர் இல்லம், பாப்புவின் படம் வைத்து அலங்கரிக்கப்பட்டது. பல வீடுகளிலும் பாப்புவுக்கு ''நீடுழி வாழ்க'' என்ற வசனம் காணப்பட்டது. எமது பிள்ளைகளும் வீட்டின் மேல் பாப்புவின் கொடியை ஏற்றினர். இது புரட்டஸ்தாந்து மக்களுக்குப் பிடிக்கவில்லை. எனினும் இவர்கள் குறைந்த தொகையில் இருப்பதால் ஆங்கில அரசுக்கெதிராக வரவில்லை. சுதந்திரம் அளித்தனர். ஆயர் பாப்புவின் கருத்துக்களுக்காகப் பணம் சேகரிக்கச் சொன்னபடியால் எமது பிள்ளைகள் 28 பிராங் கொடுத்தனர்.

ஆனி 28ல் 44பிள்ளைகள் உறுதிபூசுதல் பெற்றனர். இன்னும் கூடுதலாகச் சிலர் பெற்றிருக்கலாம். பெற்றோர் பிள்ளைகளை மறைக்கல்விக்கு அனுப்புவதில்லை. 20 வெளிப்பிள்ளைகளும் முதல் நன்மை பெற்றனர். மாலையில் ஆயர் படங்களும் கொடுத்து உறுதிப்பூசுதல் அட்டையும் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலநாட்களின் முன் ஒரு பெண் என்னிடம் வந்து தான் பாவசங்கீர்த்தனம் செய்வதற்கு குருவானவருக்கு ஒரு கடிதம் தரும்படி கேட்டாள். பின்பு பாவசங்கீர்த்தனம் செய்து பகிரங்க மன்னிப்புப் பெற்றுத் திருவிருந்து அருந்தினாள்.

எமது வகுப்புக்கு இரண்டு அயர்லாந்துப்பிள்ளைகள் வந்துள்ளனர். இப்பிள்ளைகளின் மாமனார். அமெரிக்காவில் அதிமேற்றிராணியாராக இருக்கிறார். (aunties) அயர்லாந்தில் சிஸ்ரமாராக இருக்கிறார்கள். ஒருவர் 11வயது மற்றவ 15வயது, ஆனால் அவர்கள் சமயம் படிக்கவில்லை. தற்போது படிக்கிறார்கள். தாய் புரட்டஸ்தாந்து, தகப்பன் சட்டத்தரணி.

புரட்டஸ்தாந்து பாடசாலைகள் எல்லாவிடமும் கட்டுகின்றனர். நாம் சிறிய அளவில் இருப்பதாலும் இங்கு வந்து 11 வருடங்களின் பின் வேலை, காலநிலையால் களைப்படைந்தாலும் தியாக சேவை நமக்கு உற்சாகமூட்டுகின்றது.

இரண்டு அநாதைப் பிள்ளைகள் திருமணம் செய்து கொள்ள அவர்கள் இடத்திற்கு வேறு இருவர் வந்திருக்கின்றனர். இரு, 5 வயதுப்பிள்ளைகள் இறந்து விட்டனர், அவர்கள் இடத்திற்கும் வேறு இருவர் வந்திருக்கின்றனர்.

புனித சூசையப்பரின் பிள்ளைகள், திருப்பாலத்துவ சபை, விசுவாசப் பரப்புதல் சபைக்காக லொத்தருக்கு ஆயத்தம் செய்தனர். எமது ஆங்கில வகுப்புப் பிள்ளைகள் அநாதைப் பிள்ளைகள் 20ரிக்கற் எடுத்தனர். ஆயர் ஆடிமாதத்தில் லொத்தர் இழுத்தார். Piano, மியூசிக், பாடல்கள் இடம் பெற்று பிள்ளைகள் மகிழ்ச்சியோடு இருந்தார்கள்.

லீவுக்கு இளவாலைக்குச் சென்றோம். கல்லறை ஆண்டவர் கோவில் அங்குள்ளது. வெள்ளிக்கிழமைகளில் நோயாளிகள் அங்கு சென்று செபிப்போாகள். புதுமை உள்ள கோவில் என்று கூறுவர் மாலையில் நாம் சென்று செபிப்போம். பக்கத்தில் குருமனை இருந்தது. நாம் அங்கு சென்ற போது அவர் அதை எமக்கு விட்டுவிட்டு வேறொரு கிராமத்திற்குச் சென்றிருந்தார். ஒரு மாலை நேரம் நாம் அங்கு சென்றபோது குருவானவர் இல்லை. மக்கள் கதிரை இல்லாமையால் குருவின் கட்டில், பாயை எமக்குத் தந்தனர். நாம் கல்லில் இருந்து விட்டு வந்தோம் அவர்கள் ஒரு குறிப்பிட்ட தூரத்தில் இருந்து எம்மைப் பார்த்தனர்.

இளவாலை செழிப்பான இடம். தானியம், பழங்கள், மஞ்சள் நிரம்ப உண்டு பல சகோதரிகள் இவர்கள் மத்தியில் இருந்து வந்துள்ளனர். இவர்களின் பெற்றோர் இங்கு முதன்மையானவர்கள். சிலர் நவகன்னிகையாவதற்குக் கேட்டனர். துறவற வாழ்வு இதயத்தில் ஆழமில்லாதபடியால் பின் போட்டோம் யோசேப்பின் தாயாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்பதற்காக யாழ் சென்றோம். 1 1/2 மாதம் எங்களுடன் ஒன்றாகச் செலவிட்டு புரட்டாதி மாதம் 1ந் திகதி குருநாகல் சென்றா தன்னுடன் ஒரு இராயப்பர் (சுதேசி) சகோதரியையும், ஓர் அநாதைப் பிள்ளையையும் வகுப்புக்கு உதவி செய்யக்கூட்டிச் சென்றா.

## பங்குனி 8 - 1875

சென்ற அறிக்கையின் பின்பு 12வருட யாழ் வருகையை நினைவு கூர்ந்தோம். காலநிலை கடினமாயினும் இலங்கையில் கூடிய காலம் வாழ முடியும். சிலநாட்களின் முன்பு 100 வயது 3 மாதமுடைய ஒரு போர்த்துக்கேயப் பெண்ணின் அடக்கச் சடங்கு நடைபெற்றது அவவின் வளர்த்த மகன் பல வசதிகளைச் செய்து கொடுக்க விரும்பியும் அவர் புரட்டஸ்தாந்தாக இருந்ததால் கடைசி அருட்சாதனங்கள் கிடைக்காது என்று மகனோடு சேரவில்லை.

12 வருடங்களும் இறைவன் செய்த நன்மைகள் அளப்பல. பலர் துறவற வாழ்வை மேற்கொண்டுள்ளனர். ஏனையோர் கத்தோலிக்க திரு மறையில் மணம் முடித்து விசுவாசத்தைக் காப்பற்றுகிறார்கள். அவர்களின் பிள்ளைகள் பாடசாலைக்கு வருகிறார்கள். சிலர் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள். அவர்களுக்குத் தொடர்ச்சியாக நாம் புத்திமதி கூறி வருகின்றோம். சிலவேளைகளில் குடும்பப் பிரச்சினைகளையும் தீர்த்து விடுகின்றோம். இதனால் இறைவனுக்கு மகிமை சேர்த்து ஆன்மாக்களுக்கு மீட்பளிக்க உதவி செய்கின்றோம். கார்த்திகை மாதத்தில் கடைசியாகத திருமணம் செய்த இருவர் மகிழ்ச்சி இல்லாது எம்மிடம் வந்து எமது அணுகுமுறைகளினால் பின்பு சந்தோஷமாக வாழ்ந்து வெகுமதிகளும் தந்து சென்றனர். சோரும் பிள்ளை, ஜானுக்கு அடித்ததாகவும் அவள் அதை விரும்பாமல் பிரச்சினையை ஏற்படுத்தினர். எனினும் இங்கு இது வழமையாக உள்ளது.

உலில்லியம் (கியோம்) என்பவர் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து தன் மனைவி அக்னெஸ் உடன் வந்து தான் திரு விருந்திலும் பங்குபற்றியதாகக் கூறினார். மார்கழி மாதத்தில் ஒரு பெண் ஆறு பிள்ளைகளுடன் எம்மிடம் வந்தாள். அவளுக்கு எட்டுப் பிள்ளைகள். இரு வருடங்களாகக் கணவன் சுகவீனமுற்றிருந்தார். எனவே ஆயரிடம் சென்றபோது அவரும் மறுத்தார் புரட்டஸ்தாந்தரிடம் செல்லு முன் என்னிடம் வந்தாள். நான் அவளை மாதாவிடம் மன்றாடக் கூறினேன். அவள் கோவிலுக்குச் சென்று மன்றாடிய பின் ஆயரிடம் சென்றாள். ஆயர் சம்மதித்தார். ஏனென்றால் மாதா ஆளுநருக்கு நல்ல தூண்டுதல் கொடுத்துப் பணிகள் செய்வதற்கென ஒரு தொகையை ஆயருக்கு அனுப்பி இருந்தார். எனவே அப் பெண்ணின் இரண்டு பிள்ளைகளுக்கு அத்தொகையை அனுப்பியதால் தற்போது அவர்கள் எம் அநாதைமடத்தில் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற வருடம் போல புனித சூசையப்பரின் பிள்ளைகளின் கைவேலை விற்பனை மார்கழியில் நடைபெற்றது. அவர்கள் சிலராயினும் பல வேலைகளைச் செய்தார்கள். தம் ஒய்வு நேரத்தில் ஏழைகளுக்கு வேலை செய்வர். போர்த்துக் கேயப்பிள்ளைகளுக்கு உடுத்தியுள்ளனர். கோவில் வேலை செய்துள்ளனர்.

மார்கழி மாதம் லீவு. வகுப்புகள் முடிந்ததும் இராயப்பரின் சகோதரிகளுக்கு ஞானொடுக்கத்தை Frs. Boisseau, flanagan புவாசோ விளானகான் நடாத்தினர். ஆயர் கீழ்ப்படிதல் பற்றிக் கூறினார். இறுதி நாளில் ஆயரின் திருப்பலி இடம் பெற்றது. சகோதரிகள் வாக்குறுதிகளைப் புதுப்பித்துக்கொண்டனர். தாங்களாகவே தமிழில் பாடல் இயற்றிப் பாடினார்கள். சிஸ்ரர் யூஸ்ரல் ஹாமோனியம் இசைத்தா. இரண்டு இளம் பெண்கள் புதுநன்மை பெற்றனர். ஒருவர் புரட்டஸ்தாந்தில் இருந்து வந்தவர். மற்றவர் அமெரிக்காவில் உள்ள சின்சினாற்றி மாகாண ஆயரின் பெறாமகள் ஆவார். இவ 15 வயதுடைய பெண். Sr. St. jean படிப்பித்து ஆயத்தம் செய்தா.

தைமாதம் 7ந் திகதி ஆயர் இல்லத்தில் 4பேர் குருவுடை தரித்தனர். 3பேர் வாக்குறுதி எடுத்தனர். இந்த இளம் உள்ளங்கள் விசுவாசத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று செபித்தோம்.

தை 8ந் திகதி எமக்குத் தியானம் நடைபெற்றது. ஆயர் இதை நடாத்தினார். Fr. Jourld Leil ஜோடோய் ஹாமோனியம் வாசித்தார். தியான முதல் நாளில் ஒரு பிற சமயப் பெண் என்னைக் காண விரும்புவதாகக் கூறினாள். திருமுழுக்குப் பெற விரும்பினாள். தாய் தந்தைக்குத் தெரியாமல் இரவில் தனியே வெளிக்கிட்டு வந்திருந்தாள். அவளின் வீரச் செயலைக் கண்டு யார் உமக்குப் படிப்பித்தார்கள் எனக் கேட்டபோது ஒருவரும் இல்லை நான் எனது இதயத்தில் இறைவனது விருப்பத்தை உணர்ந்து ஒருவருக்கும் சொல்லாது இங்கு வந்தேன் என்றாள். 2 வருடங்களுக்கு முன் வலிகாமப் பகுதியில் இறந்த ஒரு மிஷனறியின் நினைவு தினத்திற்குச் சென்றிருந்தோம். அந்த வழி பாட்டிற்குப் பலரும் வந்திருந்தனர். இதுவே அவள் கத்தோலிக்க சமயத்திற்கு வர உதவியாக இருந்திருக்கும். இரவிலே வரும் போது தகப்பனுடைய கத்தியுடன் வந்திருந்தாள் இந்த 19 வயதுப் பெண். எமது அநாதை இல்லத்தில் வைத்திருக்க முடியாது, எனவே நான் குருவிடம் அழைத்துச் சென்றேன் அவர் திருமணமான ஓர் அநாதைப் பிள்ளையின் வீட்டில் இருந்து செபம் படிக்கும்படி கூறினார். வீடு யாழ் பேராலயத்திற்கு அருகாமையில் இருந்தது. அவளின் தந்தை இதை அறிந்து கோபத்துடன் வந்தார். அவளோ தான் திருமுழுக்குப் பெறப் போகின்றேன் என்று அவருடன் செல்வதற்கு மறுத்தாள். கொல்லப் போகின்றேன் எனப் பயமுறுத்தினார் தந்தை. இதனால் அரசாங்கத்திடம் பாதுகாப்புக் கேட்பது நல்லது என்றனர். ஒரு கத்தோலிக்கன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிபதிக்குக் கடிதம் கொடுத்து அவள் வீடு செல்ல விரும்பவில்லை எனத் தெரிவித்தனர். அவளின் தந்தை 50 பேருடன் வந்தும் அவள் மறுத்தாள். எமது குருக்கள் ஆயரிடம் கூறிய போதும் அவள் தன் நிலையில் இருந்து விடுபடவில்லை. எனவே வலிகாமத்தில் இருக்கும் குருக்களிடம் படிக்கக் கூறியபோதும் அவள் மடத்தை விட்டு விலகமாட்டேன் என்றாள். இங்கிருந்தால் மணம் செய்து கொள்ள முடியாதென்றேன். அதற்கும் Regina கேட்டபாடில்லை. தியானம் செய்யத் தெரியுமா? என்று கேட்ட போதும் நல்ல பதில் கூறினாள். எனவே இறைபராமாப்பு, தயாள குணத்தை இவளில் கண்டேன்.

தை 25ந் திகதி சமேரியா ஆயரின் கல்லறையில் நாம் ஒருமித்துச் செபித்தோம். அந்நாளில் எமது ஆங்கில வகுப்புப் பிள்கைளை கொழும்புத்துறைக்கு அழைத்துச் சென்றோம். நாம் லீவு முடிந்து அங்கு சென்றதால் பலர் வாகனங்களுடன் வந்து எம்முடன் சேர்ந்தனர். தம் உணவுகளையும் தம்முடன் கொண்டு வந்தனர். Fr. Flanagan புனித சூசையப்பர் அநாதைமடத்திற்குப் பொறுப்பாக இருந்தவர். தமது பிள்ளைகளை மாலை வரை சுற்றுலாவுக்கு அனுப்பியிருந்தார். எனவே நாம் சுதந்திரமாக உலாவ முடிந்தது. எனினும் பிள்ளைகள் நற்கருணைச் சந்திப்புச் செய்ய மறக்கவில்லை. அடுத்த நாள் வழமைபோல் எமது வேலைகளைச் சகோதரிகள் தொடங்குகிறார்கள். 27ந் திகதி ஆயர் 3மாத காலத்துக்குக் குருநாகலுக்குச் செல்கிறார். எமது சகோதரிகள் மகிழ்ச்சியடைவார்கள்.

மாசித் தொடக்கத்தில் இரண்டு அநாதப் பிள்ளைகள் திருமுழுக்குப் பெற்றனர். ஒரு பிள்ளைக்கு ஆறு மாதம் படிப்பித்தோம் அவளை அவவின் பெற்றோர். குருவிடம் வேலை செய்யும் ஒரு கத்தோலிக்கனுக்கு மணம் முடித்து வைக்க விரும்பினர்.

மாசி 8ந் திகதி நல்ல பிதாவின் மரணத்தை நினைவு கூர்ந்து அவரின் பாதுகாப்புக்காக வேண்டினோம்.

17ந் திகதி எமது குருக்கள் தமது தியானத்தை நிறைவு செய்தனர். Fr. Pellissier பெலிசியர்திருமலையில் இருந்து வந்திருந்தார். தமிழ் பேசக்கூடியவர். எமது 200 பிள்ளைகளுக்குத் தியானம் கொடுத்தார். 40 பிள்ளைகள் வெளிவாரிப்பிள்ளைகள். இறுதி நாளில் பலர் திருவிருந்தில் பங்குபற்றினர். திருப்பலியை Fr. Pullicani நிறைவேற்றினர். மறைமாவட்ட முதல்வரால் நற்கருணை வழங்கப்பட்டது. இது இளம் உள்ளங்களுக்குப் பல நன்மைகள் செய்தன.

புதிய மிஷனறிச் சகோதரிகள் நத்தாலுக்கு (natal) சென்றது கேட்டு மகிழ்ச்சி அடைந்தோம். ஆபிரிக்காவிலும் புதிய பணிகள் தொடங்க இறைவன் துணைபுரிவாராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம் 17 ஆடி 1875.**

என் நல்ல தாயாரே,

இந்த வருடம் புனித சூசையப்பரின் மாதப் பக்தி முயற்சிகள் எம் ஆன்ம தேவைக்காகவும், எம் பணிகளுக்காகவும்"", ஒப்புக்கொடுக்கப்பட்டது. எம் விசுவாசக் கண்ணுடன் நோக்கும்போது எம் தேவைகள் நிறைவேற்றப்பட்டதென்றே சொல்ல வேண்டும். ஏனெனில் சிலுவைகள் மூலம் எம் பணிகள், ஆன்மா தூய்மையாக்கப்படுகின்றது. அது பரலோக பாதை அல்லவா?

பங்குனி 15ம் திகதி ஓர் இளம் பிள்ளை காய்ச்சலால் தாக்கப்பட்டா. 19ம் திகதி புனித சூசையப்பரின் திருவிழா. எமது அதி.சிரேஷ்ட குருவின் திருவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்போது சிலுவை வெளிப்பட்டது. எம் சகோதரி Sr. St.Jean o, Carroll நோயுற்றா. பின்பு Sr.Mary இரத்த வாந்தி எடுத்தா. இவ்வாறு முதிய பழம் தொடங்கி இளம் மலர்களும் மரண அறுவடையில் சென்றுவிட்டன. விபரங்கள் கூற முடியாதுள்ளன. நெருப்புக்காய்ச்சல் தொடங்கியவுடனே நான் கடல் அருகில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து எம் போடிங் பிள்ளைகள் ஆங்கில வகுப்புச் சகோதரிகளுடன் அனுப்பி வைத்தேன். Sr.St. Jean சுகவீனமுற்றிருந்தாலும், கடற்காற்று நல்லதென டொக்டர் கூறியிருந்ததால் சென்றிருந்தா. பின்பு அநாதைச் சிறுமிகளும் நோயினால் தாக்கப்பட பயம் பீடித்தது. எனவே ஒவ்வொரு பிள்ளைக்கும் திரு இருதய உத்தரியம் கொடுத்து எம் பெரிய குடும்பத்தை திருஇருதய பாதுகாப்பில் ஒப்படைத்தேன். இத்துடன் காய்ச்சல் நின்று விட்டது. நோயாளிகள் சுகம் பெற்றனர். பின்பு அநாதைச் சிறுமிகளையும், இராயப்பர் சபை ஒரு சகோதரியையும் சிஸ். மேரி லிகோரியுடன் கடற்கரையில் ஒரு வீட்டிற்கு அனுப்பினேன். நான் குழுக்களைச் சந்தித்தேன். Sr. St,Jean உடைய நிலை கவலைக்கிடமாக இருந்ததால் அவவைக் குழுவுக்கு அழைத்து வந்தேன்.

பெரிய சனிக்கிழமை "லிசி" என்னும் 4 வயதுப்பிள்ளை 5 நாள் காய்சலின் பின் இறந்தாள். எம்மால் பெரிதும் அன்பு செய்யப்பட்டவள். தேவதூதருடன் சேர்க்கப்பட்டாள். பின்பு 10 வருடங்களின் முன் "சாளெற் முதிகுன" என்னும் ஒரு போதகரின் மகள் மனம் மாறி எம்முடன் சேர்ந்திருந்தவள். திருமுழுக்கின் பின் அவள் பெற்றோர் அவளைக் கைவிட்டனர். தன் விசுவாசத்தைக் காப்பாற்ற எவ்வளவோ பாடுபட்டாள். வழக்கறிஞராக இருந்த அவளின் மாமனார் சமயம் மாறினால் தன்னுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம் எனக்கூறியும் அவள் அதை ஏற்காது புனித. சூசையின் சகோதரிகளுடன் ஒரு சாதாரண ஊழியக்காரியாக இருந்தாள். திருமுழுக்கின் போது "மரியா" என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. எனவே மாதா பக்தி உடையவள். இரவிலும் எழும்பிச் செபிப்பாள். ஏழைகளுக்கு உதவுவாள். கெபி, புனித சூசையின் சிற்றாலயத்திற்கு மற்றவர்களுடன் சேர்ந்து மாலை கோர்த்து போடுவாள்.

இந்தியாவில் உள்ள கார்மேல் சபையில் சேர விரும்பினாள். ஆனால் ஒரு கிளையில் உள்ள பறவை போன்று எங்கு பறப்பது என்று தீர்மானம் எடுக்க முடியவில்லை. பின்பு கடும் முயற்சி எடுத்தபோது அது மரணத்திற்கு அவளை ஆயத்தப்படுத்தியது. ஒரு சிறிது கால நோய் வந்து இறைவன் தன் பக்கம் எடுத்துக்கொண்டார் விசுவாசத்தை இறுதிவரை காப்பாற்றினாள். பின்பு "லூாயிஸ்" என்னும் சிறுமியும் இறந்து விட்டாள். இந்த இறப்புக்கள் மத்தியில் குறிப்பாக புரட்டஸ்தாந்தரில் சிலருக்குக் கவலையைக் கொடுத்தது, அனுதாபமும் தெரிவித்தனர். சிலர் இறைவனின் தண்டனையென பத்திரிகைகள் வழியாகத் தூற்றினர். அத்துடன் எம் இல்லங்கள் சுத்தம் இல்லை என்றனர். எனவே பின்பு எம் இல்லங்களில் மரித்தவர்களை அடக்கம் செய்தோம் என்று கதை பரப்பப்பட்டது. அப்போது பெற்றோர், அதிலும் பிற சமயத்தவர்கள் தம் பிள்ளைகளைக் கேட்டனர். விசுவாசத்தைக் காப்பாற்றுவதற்காக எம்மால் பிள்ளைகளைக் கொடுக்க முடியவில்லை. எனவே சிலுவையைக் கண்டோம் பின்பு அமைதி அடைந்தோம். ஆயரும் இருக்கவில்லை. தம் கடிதங்களால் எம் உடைந்த உள்ளங்களை ஆறுதல்படுத்தினார். பின்பு வந்த போது எம்மைச் சந்தித்து நல்ல வார்த்தைகள் கூறினார்.

ஒரு மாத லீவின் பின் சித்திரை 20ம் திகதி எம் வகுப்புக்கள் தொடங்கின. வைகாசியில் மாதாவின் மாதத்தை ஆரம்பித்தோம். 16ம் திகதி தூய ஆவியின் திருவிழா. 26ம் திகதி சிஸ். மேரி இறந்தா. திருஇருதய மாதத்தில் ஆறுதல் கிடைத்தன. எமது 3 பிள்ளைகள் திருமணம் செய்து கிறிஸ்தவக் குடும்பங்களை உருவாக்கினர் இருவர் யாழ்ப்பாணத்திலும் ஒருவர் பருத்தித்துறையிலும் உள்ளனர். திருஇருதயத் திருநாளில் ஆயரின் திருப்பலியும், நாள் முழுவதும் நற்கருணை எழுந்தேற்றமும் இடம் பெற்றன. ஆனி 12ல் சகல வரப்பிரசாத மாதாவின் திருவிழாவைக் கொண்டாடினோம். 16ம்திகதி பெரிய கோவிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நற்கருணை எழுந்தேற்றமும் இடம் பெற்றது.

செல்வந்தரான எமது பழைய மாணவி இந்தியாவில் இருந்து வந்து தம்முடன் ஒரு பிள்ளையை ஸ்ரெவானியை அழைத்துச் சென்றா. 29ம் திகதி புனித. இராயப்பர் திருநாளைக் கொண்டாடினோம். ஆயரால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. ஆடி 9ம் திகதி ஆயரால் பரிசளிப்புக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்பட்டது.நல்லபிதாவின் திருநாளையும், இராயப்பர் சகோதரிகள் தங்கள் பாதுகாவலர் திருநாளையும் கொண்டாடினர்.

## யாழ்ப்பாணம் ஐப்பசி 1875

என் நல்ல தாயாரே,

முன்பு அறிக்கையில் மேரி என்னும் ஒரு தொழுநோயாளி திருமுழுக்குப் பெற்றதை எழுதியிருந்தேன். முதல் நன்மை பெற்ற பின்பு மடுவுக்கு யாத்திரை செய்தாள். அங்கு செபமாலை அன்னையை வேண்டி தன்னைக் குணப்படுத்த மன்றாடினாள். அல்லது பெத்செய்தா குளத்தில் இருந்த பாரிசவாதக் காரனைப் போல் அங்கு இருக்க விரும்பினாள். பின்பு குணம் பெற்றாள். இதனால் பல நன்மைகள் செய்ய விரும்பினாள். தனது 16-17 வயதான மைத்துனியை எம்மிடம் கூட்டி வந்தாள். மரியாவின் குணப்படுத்தல் அவவையும் தொட்டது. அவளும் நோயாளியாக இருந்தாள். எனவே மடுவுக்குச் செல்ல விரும்பினாள். அங்கு கிறிஸ்தவளாகவும் வர விரும்பினாள். பெற்றோர் பிற சமயத்தவர்கள். எனவே திரும்பி அவர்களிடம் செல்ல முடியாது. அவ்வேளையிலும் தேவ பராமரிப்பு கைகொடுத்தது. ஒரு நல்ல கிறிஸ்தவ பெண் தன் வீட்டில் ஒருபகுதியை இந்த நோயாளிக்குக் கொடுக்க முன் வந்தாள். மேரி அவளுக்கு உதவி செய்ய முன்வந்தாள். தற்போது இந்த நோயாளி திருமுழுக்கு, முதல் நன்மை பெற்றுள்ளாள். அவளின் தாயும் உடன் இருக்கின்றாள். அவளின் மனமாற்றத்தையிட்டு மகிழ்ச்சியடைகின்றாள்.

பின்பு மேரி வேறு பலரைக் கூட்டி வந்தாள். நாம்திருமுழுக்குக் கொடுத்தோம். மாலையில் எம்மிடம் வந்து செபங்கள் படித்த பின்பு அவள் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பாள். தற்போது உறுதிப்பூசுதலுக்கு ஆயத்தம் செய்கிறாள்.

ஆடி 26ம் திகதி புனித. அன்னாள் திருநாளில் எம் "அன்புப் பெண்கள்" தம் விழாவைக் கொண்டாடினார்கள். நன்மை செய்து வருகின்றார்கள். குருவானவர் எமது ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி நற்கருணை ஆசீர்வாதம் கொடுத்தார். அவ்வருடத்தில் 80 உடைகள் இவர்கள் ஏழைகளுக்கு கொடுத்திருக்கின்றனர்.

ஆவணி 15ம் திகதி எமது ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாலையில் பெரிய கோவிலில் நற்கருணை ஆசீர் வழிபாடு நடைபெற்றது. கிறிஸ்தவர்கள், பிற சமயத்தவர்கள் மெழுகுதிரி எரிப்பார்கள். இவர்கள் கைகளில் மெழுகுதிரியை ஏந்திய வண்ணம் முழங்காலில் கோவில் முகப்பிலிருந்து மாதா பீடம் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவர். பின்பு மெழுகுதிரியை வைத்து விட்டு மாதாவைத் தொட்டு முத்தி செயவர். சில நாட்களின் முன்பு எமது பிள்ளையின் பிற சமயத் தந்தையிடம் திருட்டு நடைபெற்றதால் திருடன் அகப்பட்டால் மெழுகுதிரி எரிப்பதாகக் கூறினான். இதை அறிந்த அயல் வீடுத் திருடன் பயந்து உண்மையைக் கூறிப் பொருளைக் கொடுத்தான். உடனே அவன் மாதா பீடத்தில் மெழுகுதிரி ஏற்றினான்.

ஒரு மாதத்தின் முன்பு அனஸ்தாசி என்னும் பெண் என்னைக் காண விரும்பினாள். 3 வருடத்தின் முன்பு ஒரு கத்தோலிக்கனை மணம் முடிப்பதற்காக திருமுழுக்குப் பெற இங்கு ஆயத்தம் செய்தாள். 8 மாதங்கள் எம்முடன் இருந்தாள். திருமணத்தின் பின் நான் அவளைக் காணவில்லை. அவள் கணவனை இழந்து, தன் பிள்ளை, தாய், தந்தை எல்லோரையும் இழந்து தன் சகோதரியுடன் வாழந்திருந்தாள். அங்கு பிற சமயத்தவர் மத்தியில் வாழ்ந்ததால் சமயக் கடமைகளை நிறைவேற்ற முடியவில்லை. தான் சாகப் போகிறேனே என உணர்ந்து கிறிஸ்தவளாக வாழ விரும்பி இங்கு வந்தாள். ஒரு சகோதரி பாவசங்கீர்த்தனம் செய்ய அன்றே ஆயத்தம் செய்தாள். பின்பு 3,4 முறை வந்து படித்து தன் இறுதிப் பயணத்தை முடித்துக்கொண்டாள்

ஒவ்வொரு வருடமும் புனித. சூசை தொழிலகத்தில் லொத்தர் நடைபெறும். ரிக்கெற் விற்பது கஷ்டம். எம் அநாதைச் சிறுமிகள் தம் பணத்தை ஒன்று சேர்த்து பூக்கள் செய்து அதை விற்று ரிக்கெற் வாங்கினர்.

## மார்கழி 1875

உங்களுக்கு கொடுத்த முதல் அறிக்கையின் பின்பு 6 சிறுமிகள் திருமுழுக்குப் பெற்றது அவர்களுக்கும் எங்களுக்கும் மிகவும் மகிழ்ச்சி.

ஐப்பசி 31ம் திகதி 20 பிள்ளைகள் எம் ஆலயத்தில் முதல்நன்மை பெற்றனர். அநாதைப் பிள்ளைகள் வெள்ளையுடை அணிந்து றோஸ் முடி வைத்தனர். ஆங்கில வகுப்புப் பிள்ளைகள் மெல்லிய றோஸ் முடியும், திருஇருதயப் பிள்ளைகள் வெண்ணுடையும், மினுங்கும் முடியும், பல நிறத்துப் பட்டியும் அணிந்திருந்தனர். ஆயர் திருப்பலி நிறைவேற்றி நன்மை கொடுத்தார். பூசையின் பின் நாம் ஆயத்தப்படுத்திய 3 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் கொடுத்தார். கோவிலில் இருந்து வெளியேறிய போது பிள்ளைகள் ஆயருக்கும், அருட்தந்தை பெலிசியருக்கும் (Pellissier) நன்றி தெரிவித்தனர் ஆயர் இவர்களின் மகிழ்ச்சியைக் கண்டு என்னிடம் பிஸ்கெற் தந்து அவர்களுக்குக் கொடுக்கக் கூறினார். மறு நாள் நன்றிப்பூசையின் பின் 24 பேர் நீல உத்தரியம் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை 2ம் திகதி சின்னமுத்து நோய் எம் பிள்ளைகளில் 40 பேரைத் தாக்கியது. 2 பிள்ளைகள் இறந்தனர். மேலும் மேரி அழைத்து வந்த நோயாளியும் இறந்து விட்டா. 8ம் திகதி இங்கிருந்து சென்ற யூலியா என்னும் பிள்ளை 3 வருடத்தின் பின் மீளவும் இங்கு வந்தா. புரட்டஸ்தாந்து ஆட்களுடன் என்றும் சச்சரவுதான். தற்போது அவர்களிடம் 3 ஆங்கில வகுப்புக்கள், பல தமிழ் வகுப்புக்கள். ஒரு போடிங் உள்ளது. அவர்கள் வெகுமதி அளித்தும், நல்ல வார்த்தைகள் கூறியும் எம் பிள்ளைகளைக் கவர்கின்றனர். 2 கத்தோலிக்க பிள்ளைகள் அவர்களுடைய போடிங்கிலிருந்து மணம் முடிப்பதற்காக எம்மிடம் வந்துள்ளனர்.

இந்த தவணையில் 4 கிறிஸ்தவக் குடும்பங்கள் உருவாகியுள்ளன. 2 பேர் யாழ்ப்பாணத்திலும் மற்றவர்கள் அயலூரிலும் உள்ளனர். எம் பணிகள் பல. இறைவன் மகிமைக்காகச் செய்கிறோம். ஆன்மாக்களை யேசுவிடம் கொண்டு வருகிறோம்.

மார்கழி 2ம் திகதி எமது குழுச்சகோதரிகள் குழு விழாவுக்கு ஆயத்தம் செய்தனர். சிஸ். மேரி யூஸ்ரல் வேதனையுற்றிருந்தா. எனினும் வகுப்புக்கள் அலங்கரிக்க உதவி செய்தா. 2 மணி போல் குழு தம் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். சிஸ். யூஸ்ரலுக்கு மரண வேதனை இருந்தது. 2 நாட்களின் பின் பரலோகம் சென்றுவிட்டா. இவ்வருடம் கொலரா காரணமாக எமது லீவுகாலத்தை வீட்டிலேயே செலவிட்டோம். புனித. அருளப்பர் திருநாளில் எம் பிள்ளைகள் இறந்த Sr.St. Jean ஐ நினைத்து 4 திருப்பலிகள் ஒப்புக்கொடுத்து கல்லறைக்கும் சென்றனர்.

1876ம் ஆண்டின் முற்பகுதியில் இறந்த அஞ்சலீனாவின் தாயார் எம்மைக் காண வந்தார். 3 வருடமாகப் பிள்ளை சுகவீனமுற்றிருந்தும் பார்க்க வராது இடைக்கிடை இறக்கவில்லையா? எனக் கேடபார். இறந்த போது எம்மிடம் தன் பிள்ளையைத் தரும்படியும், நாம்தான் அப்பிள்ளையைக் கொன்றோம் என்றும் அதிகாரிகளிடம் கூறப்போகிறேன் என்றும் சொன்னார். இவர்களுடைய எண்ணங்களை, நன்றியின் அளவைப் பாருங்கள். எனவே இறைவனுக்கு மட்டுமே எம் பணியைச் செய்ய வேண்டும்.

தை 11ம் திகதி வருடாந்த தியானத்தைச் செய்தோம். தனிமையிலும் இயேசுவின் பாதத்தில் எம் சிலுவையைப் போட இக்காலம் எம் ஆன்மாவுக்குத் தேவையாக இருந்தது. தியான இறுதி நாள் இராயப்பர் சபைச் சகோதரிகள் தம் தியானத்தை ஆரம்பித்தனர். தினமும் ஆயர் ஒரு தியானம் கொடுத்தார். இறுதி நாளில் 8 சகோதரிகள் தமது வாக்குத்தத்தங்களைச் செய்தனர். 19 பேர் திருக்குடும்ப நாடா பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம் 19 வைகாசி 1876**

மாசி 8ந் திகதி எம் நல்ல பிதாவின் மரணத்தை நினைவுகூர்ந்தோம். அவர் எமது வானகத் தந்தையாக எம்மைப் பாதுகாத்து வருகின்றார். யூபிலி நிறைவுற்றது. எமது பணிகள் தொடர்கின்றன. நாம் இறைவனின் மகிமைக்காகவும் ஆன்மாக்களின் மீட்புக்காகவும் எம் தியாகச் செயல்களைச் செய்கிறோம். எம்மால் போதிக்கவோ, மறைபரப்பவோ, பாவசங்கீர்த்தனம் அருட்சாதனங்களைக் கொடுக்கவோ முடியாவிடினும் குருக்களுக்கு உதவி செய்வதன் மூலம் எம் பங்களிப்பைக் கொடுக்கிறோம். செபத்தின் வழியாகவும், வரும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, சிதறுண்ட ஆடுகளுடன் தொடர்புகளை வைத்து மீளவும் இறைவனிடம் அழைத்து வருகின்றோம். இப்பணி இறைவனால் ஆசீர்வதிக்கப்படுகின்றது.

ஒரு கத்தோலிக்கப் பெண் புரட்டஸ்தாந்த மதத்தினர் ஒருவரை மணம் முடித்திருந்தாள். திருமணத்தின் முன் கத்தோலிக்க கடமைகளைச் செய்து வந்தாள். பின்பு 3 வருடமாக ஒன்றுமே அனுசரிக்கவில்லை. எம்மை வந்து சந்திக்கும்படி கூறியும் வரவில்லை. ஒரு ஞாயிறு எங்கள் பொது நிலையினரான கத்தறின் அவளைச் சந்திக்க உத்தரவு கேட்டாள். நான் மகிழ்வுடன் சம்மதித்தேன். எனவே அவ மாகிறெற்றையும் கூட்டிக்கொண்டு காவல்தூதர்களையும் துணைக்கு மன்றாடி அங்கு சென்றாள். அங்கு அப்பெண் சம்மதித்தும் தன் கணவனைக் கேட்க வேண்டுமெனக் கூறியதால் அவர் வரும் வரைகாத்திருந்தனர். வந்ததும் தாங்கள் வந்த நோக்கம் பற்றி எடுத்துரைத்தனர். உடனே அவர் அதை விரும்பவில்லை. ''அவள் திருமணத்தின் முன் தனது சமயத்திற்கு வருவேன்'' என்று கூறிப்பின்பு ஒன்றும் அனுசரிப்பது இல்லை என்று அவர் கூறினார். எனவே தனது கத்தோலிக்க சமயத்தை அனுசரிப்பது நல்லது என்றார். எனவே உடனே தன் காரில் எம்மையும் தன் மனைவியையும் ஏற்றி அருகிலுள்ள ஒரு கோவிலுக்குப் போகச் சம்மதித்தார். இவ்வாறாக சிதறிய ஆட்டை மீளவும் மந்தையில் கொண்டு வந்து சேர்த்தோம். தற்போது அவள் எம்மைக் காணும் பேதெல்லாம் நன்றியுடையவளாக இருக்கின்றாள்.

அதே போன்று வேறொரு போர்த்துக்கேயப் பெண் 18 வருட காலமாகத்தன் சமயக் கடமைகளை அனுசரிக்காது இருந்தாள். அவள் பெயர் மரியா. சிறு வயதில் தந்தையை இழந்தாள். முன்பு இருந்த ஆயர் சமேரியா இவளுக்கு உதவியாக இருந்தார். அவள் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டஸ்தாந்தரைத் திருமணம் செய்து எல்லாச் சமயத்தையும் கைவிட்டாள். மகிழ்ச்சியாக இருக்கவில்லை. பலமுறை எம்மிடம் வரவிரும்பியும் சாத்தான்விடவில்லை. எனினும் ஒரு நாள் தன் மூத்தமகளுடன் வந்தாள். நானும் Sr. M. Louise உம் அவளை நன்கு வரவேற்று சகல வரப்பிரசாதமாதா கெபிக்கு அழைத்துச் சென்றதும் முழங்காலில் இருந்து செபித்தாள். பின்பு தன்முதற்சந்திப்பு முடிந்தது எனவும் 2ம் சந்திப்பு விரைவில் இருக்கும் எனவும் கூறினாள். அவ்வாறே வந்த போது ஆயரிடம் அழைத்துச் சென்றேன். ஆயர் சிதறிய ஆட்டை மகிழ்வுடன் வரவேற்றபோது அவள் தன் ஆன்மாவைத் திறந்து உடைந்த உள்ளத்தை நல்லாயனுக்குக்காட்டி எண்ணெய், மருந்து பெற்றுக்கொண்டாள். பின்பு பாவசங்கீர்த்தனம் செய்து நன்மை பெற்றாள். அவள் அவநம்பிக்கைப்பட்டாலும், மாதா பக்தி உடையவளாக இருந்ததால் இறை இரக்கத்தைப் பெற்றதாக எனக்குச் சொன்னாள்.

இவ்விதமான மனமாற்றங்கள் எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. எம்முடன் இருந்த ''மாறியோசெவ்'' என்ற பெண் வைத்தியசாலையில் இருந்த ஒரு நோயாளியைக் கவனிக்க விரும்பினாள். அவள் அந்த நோயாளி மேல் காட்டிய கவனம் அங்குள்ள தாதியையும் கவர்ந்தது. பின்பு அந்த நோயாளிக்குத் திருமுழுக்கு அளித்து சில நாட்களில் இறந்த பின்னும் அவளின் இறந்த உடலை நல்ல முறையில் அடக்கம் செய்தாள். இவ்வாறு இன்னும் சில ஏழைப்பிள்ளைகளுக்கு ஆன்ம உதவிகள் செய்தாள்.

பங்குனி 25ந் திகதி யூபிலி நடைபெற்றது. கிறீஸ்தவர்கள் ஆலயத்தை நன்கு அலங்கரித்தனர். யூபிலி கொண்டாடியவர்கள் மெழுகுதிரி கொண்டு வந்து 4 பிரமிட் வடிவத்தில் தம் மெழுகுதிரிகளை 4 மூலைகளிலும் ஏற்றினர். அடுத்தநாள் ''கொலரா'' வில் இருந்து நகரைக் காப்பாற்றியதற்காக நன்றிப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது

## யாழ்ப்பாணம் 25 புரட்டாதி 1876

நான் சென்ற அறிக்கை அனுப்பியபோது Fr. P. Farelly (வரலி) 2 வருடகாலமாக இங்கு சுகவீனமாக இருந்து இறந்து விட்டார். தற்போது எம்பாதுகாவலராக விண்ணகத்தில் உள்ளார். 2 நாட்களின் பின் ஆயர் பங்குத்தரிசிப்பிற்காகக் குருநாகல் சென்று விட்டார். 15 நாட்கள் அங்கு இருப்பார். திரு இருதய விழா நன்கு கொண்டாடப்பட்டது. எழுந்தேற்றம் எம் ஆலயத்தில் இருந்ததால் மார்த்தா போல இருக்கும் நாம், மரியாள் போன்று அவரின் பாதத்தடியில் அமர்ந்து அவர் மொழிகளைக் கேட்டோம்.

ஆம், என் நல்ல தாயாரே! நாங்கள் சிலவேளைகளில் உலக காரியங்களில் அதிக அக்கறை கொண்டிருக்கும் போது விசுவாச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகள் இறைமகிமைக்காக வாழ நமக்கு உதவி செய்கின்றன. இந்த நோக்கம் எம் உள்ளத்திற்கு உறுதியளித்து தியாக சிந்தையுடன் எம்பணிகளை மேற்கொள்ள உதவுகின்றது. இந்தவகையில் ஓர் அநாதைப் பெண் கிறீஸதவத் திருமணம் செய்து கொண்டா.

ஓர் அநாதைச் சிறுமி அக்னெஸ் என்ற பிள்ளை இறக்கும் தருவாயில் இருந்த போது திருமுழுக்குக் கொடுத்து ''கபிரியேல்'' என்னும் பெயரிட்டா. அன்று மாலை குழந்தை இறந்தது.

எமது ஓய்வு காலத்தை மாதகலில் 15 நாள்கள் செலவிட்டு இழந்த சக்திகளை மீளப் பெற்றுக் கொண்டோம். சுவாமி தன் இல்லத்தையும் நற்கருணையையும் எமக்காக விட்டு அயற்கோவிலுக்குச் சென்றார். தினமும் வந்து காலையில் திருப்பலி நிறைவேற்றினார். எமது பிள்ளைகளும் Sr. M. லிகோரியுடன் Kayts சென்றனர். அங்கு அந்தோனியார் கோவிலில் சில நாட்களைச் செலவிட்டு மகிழ்வுடன் மீண்டும் வந்தனர். 2 அல்லது 3 மாதங்களுக்கு முன் ஒருவர் தன் 2 பிள்ளைகளுடன் வந்து இடம் கேட்ட போது சில காலத்தின் பின வரும்படி கூறினேன். பின்பும் வந்தார். தேவபராமரிப்பில் நம்பிக்கை வைத்து பிள்ளைகளை எடுத்து றோசா, அமலியா, எனப் பெயர் கொடுத்தோம். பின் ஒரு சிறுபிள்ளையுடன் வந்து தான் நீதிமன்றம் செல்ல விருப்பதாகவும், அடுத்தநாள் கூட்டிச் செல்வேன் என்று கூறி விட்டுச் சென்றார். அப்படியே மறுநாள் வந்து தன் பிள்ளையை எடுத்துத் தன் கதையைக் கூறினார். தான் விடுதலை அடைந்தால் கத்தோலிக்கனாவேன் என்று கூறியதால் நாம் மன்றாடினோம். மூன்று பிள்ளைகளும் எம்முடன் இருந்தார்கள். கடைசிப் பிள்ளை சுகவீனமுற்ற போது நாம் திருமுழுக்கு க் கொடுத்தோம். 'பிலோமன்' எனப் பெயரிட்டோம். சுகவீனமுற்றதை அறிந்த தந்தை பார்க்க வந்தார். பின்பு நீதிபதியும் இவருக்கு விடுதலை கொடுத்தார். எனவே திருமுழுக்குப் பெற்ற தன் மனைவியையும் அழைத்து வருவேன் என்றார். எனவே கணவனை Fr. Flanagan உடனும் மனைவியையும் குழந்தையையும் எம்முடன் வைத்திருக்கத் தீர்மானித்தோம். மறு அறிக்கையில் இவர்களது திருமுழுக்குப் பற்றி எழுதுவேன்.

ஆவணி 15ந் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிலருக்குத் திருமுழுக்குக் கொடுக்க விரும்பினும் குருக்களுக்கு நேரமில்லாதபடியால் முடியவில்லை. புரட்டாதி 9ந் திகதி எம் ஆயர் களைப்புடன் வந்தார். சூரிய வெயிலின் அகோரம் பாதைகளின் அபாயம் இவற்றின் மத்தியில் ஓர் உண்மையின் தூதுவராக இயேசுவுக்காக எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டார். நீராவிக்கப்பல், புகையிரத சேவைகள் எல்லாம் தெற்கில் உள்ளது. அதைத் தவிர ஒன்றும் இல்லை எனவே மன்றாடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் தை - 1 1877

முன்னைய அறிக்கையில் ஒருவர் தன் 3 பிள்ளைகளுடன் இறையருள் பெற்றுக் கத்தோலிக்கனாக வருவது பற்றி எழுதியிருந்தேன். அவர் பெயர் சங்கரப்பிள்ளை . ஐப்பசி 1ம் திகதி புனித சூசையப்பரின் அநாதை மடத்திற்கு வந்தார். மனைவி மொன்தசின் ஆச்சி தன் 15 மாதக் குழந்தையுடன் எம்முடன் இருந்தாள். பிள்ளைகளுக்குத் தாயைக் கண்டதும் மகிழ்ச்சி. கணவன் உடனே செபத்தில், படிப்பில் ஆர்வம் காட்டினார். மனைவியைச் சாத்தான் அலைக்கழித்ததால் படிக்க முடியவில்லை. மதம் மாற விரும்பவில்லை. எனவே கணவன் பொறுமையாக இருந்தார். பின்பு படிக்க விரும்பியும் எம் செபங்கள் அவளுக்குப்புரியவில்லை. படிப்பித்த சகோதரி சில உண்மைகளை எளிதாகப் புரிய வைத்தார். புனித சவேரியார் திருநாளில் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டு திருமணமும் ஆசீர்வதிக்கப்பட்டது. சங்கரப்பிள்ளை ''லாசர்'' என்னும் பெயரையும் மனைவி 'ஆன்' என்னும் பெயரையும் பெற்றனர். லாசர் தம் குடும்பத்தவர்களை எம்மிடம் கொண்டு வந்தார். அருள் அவர்களை வெற்றி கொள்ளும் என்ற நம்பிக்கை உண்டு ஐப்பசி மாதம் திருத்தந்தைக்கு 3 நாட்கள் வழிபாடு நடைபெற்றது. பெரிய கோவிலில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு மக்களுடன் நாமும் சேர்ந்து பரிசுத்த தந்தை, திருச்சபைக்காகவும், எங்கள் பிரான்ஸ் நாட்டுக்காகவும் மன்றாடினோம்.

கார்த்திகை 22ந் திகதி புதிய சகோதரிகளின் வருகை எமக்கு மகிழ்ச்சியூட்டியது. உங்கள் புதினங்களை அவர்கள் மூலம் கேட்டறிந்தோம். பின்பு பார்சல்களை அவிழ்க்கும் போது நீங்கள் அனுப்பிய வெகுமதிகள் சிறப்பாக ''போனா'' தாயாரின் வெகுமதி எமக்கு அதிகம் மகிழ்ச்சியைத் தந்தது. செபமாலை, மற்றும் பொருட்கள் இங்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

வருகை தந்த புதிய சகோதரிகள் பழக்கப்பட்டு வருகின்றனர். வந்த நாட்களில் பாம்புக்கும், வேறு பிராணிகளுக்கும் பயந்து தடிதூக்கினர். எமக்கும் பழகி விட்டது. 14 வருடங்களாக எமக்கும் ஓர் ஆபத்தும் வரவில்லை. அவ்வாறே குருக்களும் தேவபராமரிப்பின் வழியாகப் பாதுகாக்கப்படுகின்றனர். சில வேளை கால நிலை மிகவும் சூடாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சில மாதங்களாக கொலரா நோய் பரவுகின்றது. குறிப்பாகக் கீழ்மட்டத்தில் உள்ளவர்களே ஏழைகள். பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மழையின்மையால் நெல் அறுவடை குறைந்து கூடிய விலைக்கு அரிசி வாங்க வேண்டியுள்ளது. ஏழைகள் சத்துணவின்மையால் கொலராவால் தாக்கப்படுகின்றனர். அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஒரு தீய சக்தி எனக் கண்டு கதவுகளை அடைத்து வீட்டுக்குள் இருப்பதால் இன்னும் நோய் பரவுவதற்கு உதவுகின்றன. எனவே அரசாங்கம் இந்நோயில் இருந்து விடுதலை பெற 'சிவப்பு' மருந்து போட்ட மாட்டு வண்டியில் வைத்தியசாலைக்கு ஏற்றி வருகிறார்கள். வண்டிச் சாரதிகளுக்கும் சிவப்பு நோயெதிர்ப்பு மருந்து பூசுவதால் அவர்கள் ''பேய்'' போல் தோன்றுகின்றனர். கொலராவால் தாக்கப்படுவதிலும் பார்க்க வண்டியில் செல்வது தான் கூடிய பயம் என்று ஒரு பெண் சொன்னாள். இப்போ வைத்தியசாலை இவர்களால் நிரம்பி இருக்கின்றது. இவர்கள் மத்தியில் நல்ல பணி செய்யலாம். ஆனால் புரட்டஸ்தாந்த அரசாங்கமாக இருப்பதால் கஷ்டமாக உள்ளது.

தற்போது நோய் பரவுதல் குறைந்து வருகின்றது. நாம் தேவபராமரிப்பின் உதவியுடன் வாழ்கின்றோம். மார்கழி 3ந் திகதி புனித சவேரியார் திருநாளில் எம் பிள்ளைகள் கோவிலுக்கு ஒரு வெகுமதி எனக்குத் தர விரும்பினர். ஒரு நாள் பிள்ளைகளுக்கு 25 பிராங் கிடைத்தது. Sr. லிகோரி என்ன செய்யப் போகிறீர்கள் எனக் கேட்ட போது கோவில் உண்டியலுக்கு என்று சொன்னார்கள். பல வழிகளாலும் காசு சேர்த்தனர். ஒரு சின்னப் பிள்ளைக்கு ஒருவர் வாழைப்பழம் கொண்டு வந்த போது அதை விற்றுப் பணத்தை என்னிடம் கொடுத்தா. 60 பிராங் சேர்ந்தது. மற்றவர்களும் தம் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி கைவேலை செய்து உழைத்த பணத்தைக் கொண்டு ஒரு சவேரியார். சுரூவம் வாங்கித் தந்தனர். திரு இருதயப் பிள்ளைகளும் திருப்பாலத்துவ சபைக்கு நான் பணம் கேட்டதால் 28 பிராங் தந்தனர். எல்லாரின் முயற்சிகளையும் நான் பாராட்டினேன். ஆங்கில வகுப்புப் பிள்ளைகளும் வெகுமதி தந்தனர். இவற்றிற்கு மேலாக இறைவன் வேறொரு வெகுமதி தந்ததைக் கூறுகிறேன்.

குழுச் சகோதரிகள் தம் வாழ்த்துக்களைத் தெரிவிக்க ஆயத்தமாக இருக்கும் போது ''கேற்றடி'' சகோதரி ஒரு முகமதுப் பெண் என்னைக் காண வந்திருப்பதாகவும், அவ எங்கள் மறையில் சேர விரும்புவதாகவும் கூறினா. இவர்களின் மனமாற்றம் அரிது என்றபடியால் புனித சவேரியாரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு சென்ற போது அவள் இயேசு, மரி, சூசை இரக்கம் புரிவதாக என்று கூறிய போது மீண்டும் ஆச்சரியமடைந்தேன். கேற்றடிச் சகோதரியையும் எனக்குத் துணையாக வைத்துக் கொண்டு யார் இவையெல்லாம் படிப்பித்தது. என்று கேட்ட போது ஒருவருமில்லை ஆனால் இப்பெயர்கள் என் உள்ளத்தில் எப்போதும் பதிந்துள்ளது. மடுவுக்குச் சென்று மாதாவை பார்த்தேன். தற்போது கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்து திருமுழுக்குப் பெற்று பரலோகம் செல்ல விரும்புகின்றேன் என்றாள். இஸ்லாம் சமயம் நல்லதல்ல. எனவே நானும் மகிழ்வுடன் தினமும் படிக்க வரும்படி கூறினேன். தினமும் வந்தாலும் பல் இல்லாதபடியால் கதைப்பதற்குக் கஷ்டமாக இருந்தது. தன் உள்ளத்துக் கருத்துக்களைக் கூறுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் திருமுழுக்குப் பெறுவதற்குக் குருவை அண்மித்த போது அவர், அவளைத் தெரியாதபடியாலும், பல அலுவல்களுடன் இருந்தபடியாலும் ''செபங்களைப்படி'' பார்ப்போம் என்று தட்டிக்கழித்து விட்டார். எனவே சோர்வடைந்து தன் இஸ்லாம் பாதைக்குச் செல்லு முன் தன் உள்ளக்குரலுக்குச் செவிமடுத்து என்னைப் பார்க்க வந்தாள். தன் சார்பாகக் குருவுடன் கதைக்கும்படி கூறினாள். அவ்வாறே செய்து நத்தாருக்குச் சில நாட்களின் பின் திருமுழுக்கு அருளப்பட்டது. தை 1ந் திகதி தன் மகிழ்சிசியைத் தெரிவிக்க வந்தாள். அப்போது நான் ஒரு செபமாலை கொடுத்தேன். ''மாறி'' என்னும் பெயர் பெற்றாள். அடுத்தநாள் அவளுக்குக் ''கொலரா'' நோய் வந்தது. சில நாட்களின் பின் அவள் இறந்து விட்டாள். எனினும் வைத்தியசாலையில் பலருக்கு உதவி செய்தாள்.

இப்போது அவள் எனக்குக் கூறிய கதையைக் கூறுகிறேன் அவள் முஸ்லிம் மக்கள் மத்தியில் பிறந்து ஒரு முஸ்லிம் ஆணை மணம் முடித்து ஒரு பெண் பிள்ளை கிடைத்தது. அவன் பணக்காரன். ஆனால் சில காலத்தின் பின் இறந்து விட்டான் ஒர் இரவு கள்வர் வந்து அவளைத் தாக்கிப் பொருட்களை எல்லாம் சூறையாடினர். கத்தியால் தாக்கியதால் காயங்கள் ஏற்பட்டன. மகளை ஒரு முஸ்லிம் இடம் ஒப்படைத்தாள். அவளால் நடக்க முடியவில்லை. அந்த வேளையில் ஒரு கனவு கண்டாள். ஒரு சிறுவன் தன் நெற்றியில் சிலுவை அடையாளம் வரைவதாகவும். காயங்களைத் தொட்டுக் குணப்படுத்துவதாகவும் ''எழுந்து நட'' மடுவுக்குச் செல் என்று கூறுவதாகவும் கண்டாள். அப்போது காயங்கள் குணமடைந்தன. தழும்புகள் மட்டுமே இருந்தன. எனவே சிறுவன் கூறியபடி மடுவுக்குச் சென்று கத்தோலிக்க சமயம் பற்றி அறிந்தாள் அங்கு திருமுழுக்குப் பெற முடியாததால் யாழ்ப்பாணம் வந்து போவோர், வருவோரிடம் இடம் கேட்டு என் திருநாளின் போது என்னிடம் வந்தாள்.

இறுதியாக ஒரு பிறசமயப் பெண் இடம் கேட்டு வந்த போது நோய்காரணமாக நான் மறுத்தேன். எனினும் தேவபராமரிப்பு ஒரு குடும்பத்தை எனக்குத் தந்தது. அவர்கள் அப்பிள்ளையை ஏற்றனர்.

தொற்று நோய் எமது லீவு காலத்திலும், வருடாந்த தியானநாட்களிலும் அச்சத்தைத் தந்தது. அத்துடன் ஒரு புரட்டஸ்தாந்து ஆயர் வருகையும், மனக்கிலேசத்தை உருவாக்க இவற்றை இயேசுவின் திரு இருதயத்துள் வைத்து, உத்தரிப்புஸ்தலத்து ஆன்மாக்களுக்குச் செபிக்க உறுதியளித்தேன். இந்த ஆயரிடம் சில கத்தோலிக்க பண்புகள் இருந்தன. எனவே நாம் நவநாள் தொடங்கிச் செபித்தோம். பின்பு மரியாளை விரும்பி மாதா பக்தி பற்றிப் போதித்தார். எனவே உண்மையின் கண்களைத் திறப்பாராக!

நத்தாருக்கு முதல்நாளில் 2 குருப்பட்ட திருச்சடங்குகள் நடைபெற்றன. ஒருவர் அயர்லாந்து நாட்டவர், மற்றவர் இங்குள்ளவர். இருவரும் கொலரா நோயாளிகளுக்குத் தம் தியாக சேவைகளை அர்ப்பணித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நல்ல தாயாரே!

1877 முதலாம் தலணையில் விசேட நிகழ்வுகள் பல நடைபெறாவிட்டாலும், எம் சிறிய குடும்பத்தைப் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிப்பது என் கடமையாக உள்ளது.

மாசி 2ந் திகதி ஆயர் எம் அநாதைப் பிள்ளைகளில் ஒருவரை புனித இராயப்பர் சபை நவகன்னியர் இல்லத்தில் சேர்த்தார். இதன் மூலம் பிள்ளைகளுக்கு ஒரு நல்லெண்ணத்தைக் கொடுக்க விரும்பினார். எனவே இந்த இளம் ஆயத்த கன்னிகைக்கு சில ஆடம்பர வழிபாடுகளைச் செய்ய விரும்பினார். ஆயர் திருப்பலி நிறைவேற்றி அல்போன்சினை அழைத்துத் தன் ஆசீரை வழங்கினார். துறவற அழைத்தலைப் பற்றியும், பிரமாணிக்கமாக வாழ்ந்தால் பெறப் போகும் நன்மை பற்றியும் எடுத்தியம்பினார். பின்பு அல்போன்சின் திருக்குடும்ப அர்ப்பணச் செபத்தைச் சொல்லி ஆயத்தகன்னியருடன் சேர்ந்தாள்.

புனித சவேரியார் திருவிழாவன்று லாசரும், ஆனும் புதிதாகக் கிறிஸ்தவ குடும்பத்தில் சேர்ந்தனர். உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும், தன் ஆன்மாவை இழந்தால் பயன் என்ன? என்பதை உணர்ந்து தமது கிராமத்தில் கூடுதலாகச் சம்பாதித்தாலும் அங்கு போகாது யாழ்ப்பாணத்திலேயே இருக்க விரும்பினர். லாசர் ஆயரின் அச்சகத்தில் பணிபுரிந்தான். ஆன் அரிசி இடித்துச் சம்பாதித்தாள். யாழ் நகரை விட்டு வெளியேறினால் விசுவாசத்தை இழக்க நேரிடும் என்று தங்களுடன் ஒரு பிள்ளையையும் வைத்திருந்து அவளும் விசுவாசத்தைத் தழுவ உதவி செய்தாள்.

பங்குனி மாதத்தில் ஆயர் இந்தியா சென்று ஒரு கூட்டத்தில் பங்குபற்றினார். அதில் வேறு சபைகளின் தாக்கம் பற்றிப் பேசப்பட்டது. நாம் இதற்காகச் செபித்தோம். எம் செபம் கேட்கப்பட்டது. 3மாதமாக கொலரா நோயினால் மூடப்பட்டிருந்த திருஇருதயப் பாடசாலை மீண்டும் திறக்ககப்பட்டது. 15 பிள்ளைகள் இதனால் இறந்துவிட்டனர். சிலர் இறக்கு முன் திருமுழுக்குப் பெற்றனர்.

**01 ஆடி 1877**

இயேசுவின் திருஇருதயமானது ஒரு பேராபத்தில் இருந்து எம்மைக் காப்பாற்றியுள்ளது. திருஇருதயத் திருவிழாவன்று அிகாலை 2மணியளவில் ஒரு சிறுமி தோட்டத்திலிருந்து ஒரு சிறிய ஒளி வருவதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாள். சில வருடங்களுக்கு முன் கொலரா நோயால் பீடிக்கப்பட்ட பிள்ளைகளைக் காப்பாற்ற ஒரு கொட்டில் போட்டுத் தற்போது தோட்டச் சமான்கள் போட அக்கொட்டில் பயன்படுத்தப்பட்டது. அதன் கூரையில் இருந்தே நெருப்புப் பொறிப் பறந்தது. 2சுவர் மட்டும் சீமேந்தினாலும், மற்றறையவை மூங்கில்,கிடுகு என்பவற்றாலும் கட்டப்பட்டிருந்ததால் இலகுவில் தீப்பற்றும். எனவே அச்சிறுமி பிள்ளைகள், ஆசிரியர்கள் படுக்கை இடம் சென்று 'நெருப்பு' எனக் கத்தினாள். எம் அநாதைப் பிள்ளைகள் தாயார் சுகவீனமுற்றிருந்தபடியயால் மெதுவாக எழும்பிச் சென்றார்கள். திறப்பு இல்லை. எனவே சுதேச சகோதரிகளிடம் சென்று ஒருவராகக் கட்டிடத்தை அடைந்தது எரியக் கூடியவற்றை எடுத்து எறிந்தனர். சிலர் ஓர் ஏணியை எடுத்து வந்து கூரையில் வைத்தனர். வாழையிலையினால் தட்டி நெருப்பை அணைத்தனர். சிலர் சங்கிலித் தொடராக நின்று தண்ணீர் தெளித்தனர். ஒரு சிறுமி "இயேசுவின் திருஇருதயமே கொலரா நோயில் இருந்து எம்மைப் பாதுகாத்தீர். தற்போது நெருப்பில் எரிய விரும்புகின்றீரா?" என்று கேட்டாள். இதற்கு அண்மையில் அரிசி மூடைகள் இருந்தன. அநாதை இல்லம், வீடு முழுவதுமே ஒரு தீப்பொறியுடன் எரிந்துவிடும். எல்லோரும் முழுமூச்சுடன் செயற்பட்டு நீரூற்றி அணைத்தனர். சில மணித்தியாலங்களின் பின் பீடத்தடியில், சென்று திருஇருதயத்தின் விழாவைக் கொண்டாடினோம். இவ்விதமாக தீ நிகழ்வுகள் நடைபெறும்போது இங்குள்ள பெண்கள் தலைமேல் கைவைத்துக் கத்துவார்கள். ஆனால் எம் அநாதைப் பிள்ளைகளின் செயல்கண்டு ஆச்சரியப்பட்டோம்.

கொலரா நோய் யாழ் நகரைத் தாக்கினாலும் எம் மடம் பாதுகாக்கப்பட்டது. திருஇருதயப் படம் எல்லா இடங்களிலும் வைத்தோம். அன்று இஸ்ராயலரின் கதவுகளில் செம்மறியின் இரத்தம் பூசப்பட்ட வீடுகள் பாதுகாக்கப்பட்டது போன்று எம்மடமும் தப்பியது. எனவே, இயேசுவின் திருஇருதயம் போற்றப்படுவதாக. பட்டினியும் தீவின் வட பகுதியில் தலை காட்டியது. அதை அறிந்த அநாதைப் பிள்ளைகள் தம் உணவைக் குறைக்கக் கேட்டனர். இதனால் அவர்கள் உடல் நலம் பாதிக்கப்படலாம். இவர்களில் பலர் ஐரோப்பியர், இவர்களின் உணவு வித்தியாசமானது. இவர்களின் தாராள உள்ளத்தைத் தாயார் பாராட்டினா. சத்தில்லாத உணவு கொலரா நோயைக் கொண்டு வரலாம். எனவே தாயார் விவேகமாக நடந்து கொண்டா.

அநாதைகளின் தொகையும் அதிகமாகின்றது. வைத்திருக்கவும் இடம் போதாது. சிலரை வைத்திருக்கலாம். கொலரா நோயினால் இறந்த ஒரு தாயின் இரு சிறுமிகளை ஆயர் எம்மிடம் அனுப்பினார். தந்தை தன் ஆண் குழந்தையை ஒரு பெண்ணிடம் கொடுத்து எம்மிடம் சேர்க்கும்படி கேட்டார். எம் தாயார் அப்பெண் மதலேனிடம், இக்குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகப் போகின்றது. குருவிடம் கொண்டு போய்த் திருமுழுக்குக் கொடுக்கும்படி சொன்னார். பின்பு தந்தையிடம் கொடுத்தபோது அவர் பெலிசியர் குருவிடம் வந்து "நீர்தான் இக்குழந்தைக்குத் திருமுழுக்குக் கொடுத்தீர் அது உமக்கே சொந்தம்" என்றார். குருவானவர் மறுத்து 'நீ நல்ல சுகமாக இருக்கிறாய். நீதான் பார்க்க வேண்டும்' என, அவன் பிள்ளையைக் கொண்டு செல்லும்போது குழந்தை இறந்துவிட்டது.

மூன்று வயதுப் பிள்ளையொன்றும் வலிகாமத்தில் இருந்து வந்துள்ளது த்ந்தை கொலரா நோயினால் இறந்தார். தாயும் நோயுற்று யாழ் வைத்தியயசாலைக்கு வந்தா. பிள்ளை அங்குமிங்கும் ஓடித்திரிய ஒரு பொலிஸ் இரங்கி அவளைக் கூட்டி வந்து தன் மனைவியிடம் ஒப்படைத்தான். அவள் தன் கணவரின் இரக்கச் செயலை உணராது அப்பிள்ளையைக் கொடுமைப்படுத்தியதால் அவள் வீட்டைவிட்டு ஓடியபோது, திருஇருதயப் பாடசாலையின் ஒரு மாணவி அவளைக் கண்டு தன்னுடன் அழைத்துச் சென்றாள். அங்கு அவவின் பெற்றோர் சிறுமியை நன்கு கவனித்தனர். பின்பு பெலிசியர் சுவாமியைக் கொண்டு திருமுழுக்குக் கொடுத்து மாறி லியோனி என்னும் பெயர் பெற்றாள். அநாதை இல்லத்தில் சேர்க்கப்பட்டாள். தற்போது எம் பிள்ளைகளுடன் சேர்ந்து கிறிஸ்தவ கடமைகளைச் செய்வாள் என்று நம்புகின்றேன்.

**04 மாசி 1878**

இம்முறையும் தைமாத வேலைப் பழுவால் என் அறிக்கையைத் தாமதித்ததற்கு வருந்துகின்றேன். எனவே முதல் அறிக்கையின் பின் நடைபெற்ற சில நிகழ்வுகளைத் தருகின்றேன்.

புரட்டாதி 17ந் திகதி பிரான்சிலிருந்து ஒரு துயரச் செய்தி கிடைத்தது. சென்ற் பேணாட் தாயார் மரணவேதனைப்படுவதை அறிந்து செபித்தோம். சிலநாட்களின் பின் இறந்துவிட்டா. 20ந் திகதி 2குருக்கள் OMI சபையில் திருவுடை பெற்றனர். நாம் அதில் பங்குபற்றினோம். அவர்களின் தாய் சகோதரியும் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். ஒரு சுதேச சகோதரன் நித்திய வார்த்தைப்பாடு எடுத்தார்.

அதே நாளில் சகோதரி இம்மானுவேலுக்கு ஒரு பம்பு கடிக்கப் பார்த்தது. தோட்டக்காரன் உடனே ஓடிவந்து அடித்துக் கொன்றான். இறைபராமரிப்பை உணர்ந்தோம். கொலரா நோய் மீளவும் வந்து பலரைப் பலி எடுத்தது. அத்துடன் பட்டினியும் மக்களை வாட்டியது. எலும்புக் கூடுகள் போல் மக்கள் நடமாடினர். நாம் ஒரு பிள்ளையை எடுத்து வளர்த்தோம். பிரான்சில் இருந்து வரும் நன்கொடைகளும், ஆயரின் பகிர்தலும் உதவியாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் திருஇருதயத்தின் பாதுகாவலில வாழ்கின்றோம். ஆயர், குருக்களின் தியாகங்கள் போற்றப்படுகின்றன. புனித சவேரியார் திருவிழா ஆயர் தலைமையில் எம் சிற்றாலயத்தில் நடைபெற்றது. வழிபாட்டு முடிவில் சுனாவெல்,மெலிசான் குருக்களும் வருகை தந்து காலை உணவில் பங்குபற்றினர். அவர்களது பிரசன்னம் விழாவில் மகிழ்ச்சி அளித்தது.

12ந் திகதி எமது விற்பனை நடைபெற்றது. கஷ்டமான இக்காலத்தில் என்ன செய்வதென்று சிந்தித்துக் கொண்டிருக்கையில் புனித சூசை தொழிலக மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி நல்ல முறையில் எல்லாம் நடைபெற்றுச் சென்ற வருடத்திலும் கூடிய வருவாய் கிடைத்தது.

கொலரா நோய் பரவி இருந்தாலும மக்கள் மாதாவைப் பவனியாக எடுத்துச் செல்ல விரும்பி ஆயரிடம் உத்தரவு கேட்டபோது அவர் சம்மதித்தார்.

முதலியாரின் மகள் மாதாவுக்கு ஓர் உடை எம் மடத்தில் தயாரித்தாள். மார்கழி 16ல் பவனி நடைபெற்றது. அந்நாளில் பரவலாக மழை பெய்தது. மாலை 4மணியளவில் சிறிதளவு ஓய ஆயர் பவனி செல்ல உத்தரவிட்டார். எல்லோரும் செபமாலை ஓதிப் பக்தியுடன் பங்குபற்றினர். சிலர் திருவருட்சாதனங்களைப் பெற்றனர். அந்தநாள் தொடக்கம் நகரில் கொலரா நோய் மறைந்தது. எனவே எம் நம்பிக்கை வீண் போகவில்லை.

23ந் திகதி 11பிள்ளைகள் முதல்நன்மை பெற்றனர். அதேநாளில் உறுதிப்பூசுதலும் நடைபெற்றது. 25ந் திகதி கிறிஸ்மஸ் விழாவின்போது 12 குழந்தைகள் திருமுழுக்குப் பெற்றனர். ஆயரே திருமுழுக்குக் கொடுத்தார். 26ந் திகதி எம் சுதேச சகோதரிகளும் 4ஆயத்த கன்னியரும் வருடாந்த தியானம் செய்தனர். விருத்தசேதனத் திருவிழாவன்று தியானம் முடிவுற்றது. அன்று 3ஆயத்தகன்னியர் துறவற உடை பெற்றனர். பிதா சுனாவெல் இறைவார்த்தையையப் பகிர்ந்தார். இவர்களுள் இருவர் இந்து மத்தினர்.

வருட ஆரம்பத்தில் ஆயர் வறிய குடும்பங்களில் குழந்தைகளை (creche) வளர்க்கும் ஒரு திட்டத்தை எமக்குத் தந்தார். சில நாட்களின் முன் ஒரு 3வயதுச் சிறுவனை எடுத்தோம். அவனுக்கு உடுப்பு அணிவித்துப் பசியாற்றித் திருமுழுக்குக் கொடுத்தோம். விரைவில் இறைவனடி சேர்ந்து விட்டான் தோமஸ். எம் குழந்தைகள் நல்லவர்கள். பீற்றர், ஜேரசெவ் ஒணறின், பொலின், மேரி என்பவர்கள் எம்முடன் உள்ளனர். அவர்களின் வீடு சில மீற்றர் தூரத்தில் உள்ளன. வாழை, தென்னை, கமுகு மரங்கள் உள்ளன. அக்கொட்டில் பிள்ளைகளுக்குப் பிடித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் - 15 வைகாசி 1879

என் நல்ல தாயாரே!

சென்ற அறிக்கையில் ஆளுநரின் சந்திப்புப்பற்றி எழுதியிருந்தேன். தற்போது மாசி 12ல் இருந்து இத்தவணையில் நாம் செய்தவற்றை தெரிவிக்கின்றேன். இந்நாளில் 9ம் பத்திநாதர் பாப்புவின் மறைவு பற்றித் தந்தி கிடைத்தது. கத்தோலிக்கர், புரட்டஸ்தாந்தர் எல்லோரும் இந்தத் துன்பத்தில் பங்கு கொண்டனர். சில நாட்களின் பின் பெரிய கோவிலில் அடக்கச் சடங்கு நினைவுகூரப்பட்டது. உணர்ச்சி, பயபக்தியுடன் திருச்சபைத் தலைவருக்கு மக்கள் சான்று பகர்ந்தனர்.

15 - 20ம் திகதிகளில் எமது பிள்ளைகளுக்குத் தியானம் நடைபெற்றது. தியான முடிவில் 20 பிள்ளைகளுக்கு புதுநன்மை கொடுக்கப்பட்டது. மாலையில் திருக்குடும்ப பொது நிலையினரின் ஒன்றுகூடல் இடம்பெற்றது. அதில் 3 பெண்கள் மேலிடத்தில் இருந்து வந்திருந்தனர். கிறீஸ்தவர்கள் பலருக்கு உத்தரியம் கொடுக்கப்பட்டது.

அடுத்தநாள் Leo 13ம் சிங்கராயர் பாப்புவின் தெரிவு அறிவிக்கப்பட்டது. மக்கள் பெரிய கோவிலுக்கு வந்து ஒரே குரலில் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். இதைப்பார்த்து ஆயரே உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் விட்டார். பின்பு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மாலையில் சிறப்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பங்குனி 8ந் திகதி எங்கள் Marie Joseph தன் சொந்த ஊருக்கு நெடுந்தீவு சென்று ஒரு கிறீஸ்தவ குழுவை உருவாக்க விரும்பினா. தன்னுடன் புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்களை அழைத்துச் சென்றா. அவவின் மகிழ்ச்சியை அளவிடமுடியாது. தற்போது ஒரு சவேரியார் கோவில் கட்டத்திட்டமிடுகின்றா.

Creach (பாலர் விடுதி) பணி நன்கு நடைபெறுகின்றது. பல குழந்தைகள் இதில் இருக்கிறார்கள். 24 பேரில் 17 பேர் திருமுழுக்குப் பெற்றனர். பலர் இறைவனடி சென்று விட்டனர். புனித சூசையப்பரின் திருநாளன்று ஆங்கில வகுப்புப் பிள்ளைகள் இச்சிறுவர்கள் விடுதிக்குச்சென்று அவர்களைச் சந்தித்தனர். அண்மையில் ஒரு பிற சமயத்தவர் தன் 3 வயதுக்குழந்தையை தங்கத்தை எம்மிடத்திற்கு எடுத்து வந்து தன் கடவுளுக்கு அவளை வளர்க்கும்படி கூறினார். மூத்தபிள்ளையும் எம்முடன் இருந்தாள். மனைவி இறந்து விட்டாள். நாம் சாத்தானுக்குப் பிள்ளையை அனுமதிக்க முடியாது எனக்கூறியபோது சிறிது சிந்தித்துவிட்டுப்பின் வீட்டுக்குச் சென்றார். CREACHEஇல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டபோது சுகவீனமுற்று இருந்தபடியால் திருமுழுக்குக் கொடுத்தோம். பின்பு குழந்தை இறந்து இறைவனடி சேர்ந்து விட்டது. சம்மனசு போல் பறந்து விட்டது.

பங்குனி 27ல் ஒரு நல்ல செய்தி எமக்குக் கிடைத்தது. 9ம் பத்திநாத பாப்பரசர் இறக்குமுன் இலங்கை திருக்குடும்ப சகோதரிகளை ஆசீர்வதித்த செய்தியை ஆயர் கொண்டு வந்தார். அதாவது இங்கு அரசாங்கத்தில் வேலை செய்த ஒருவர் (MS) றோம் சென்ற போது எம்மை நினைத்து அப்போஸ்தலிக்க ஆசி கேட்டவேளை, பாப்பு துன்பவேளையிலும் ஒரு கருதினால் மூலம் மாசி 5ந் திகதி இதை அறிந்து ஆசீர்வதித்து பரிசுத்ததான அங்கத்தவர் மூலம் கையெழுத்திட்டு பிரதி MS என்பவரிடம் அளிக்கப்பட்டது. உடனே ஆயர் மூலம் அதை எமக்கு அனுப்பி வைத்தார். (Qmasimodo) குவாசிமோடோ ஞாயிறில் நாள்முழுவதும் நற்கருணை எழுந்தேற்றம் வைக்கப்பட்டது. கோடைவரட்சியில் மரங்கள், தேனீக்கள், பூக்கள் - இயற்கை எல்லாம் வரட்சியுற்றிருந்தன. இதனால் மெழுகுதிரிக்குப் பஞ்சம். பீடத்தில் திரி ஏற்றப்படவில்லை. பின்பு ஒரு ஞாயிற்றுக்கிழமை 2 மடங்காகத்திரி ஏற்றப்பட்டது மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இந்த அறிக்கையை முடிக்குமுன் வேறொரு சம்பவத்தையும் கூற விரும்புகின்றேன். ஒரு திருஇருதய சபைப் பிள்ளை சகல வரப்பரசாத மாதா சுரூபத்தின் பாதத்தைக் கழுவ விரும்பி தண்ணீர் கொண்டு வந்து கெபிக்குச் சென்று கழுவியபின் வகுப்பு யன்னல் அருகில் கழுவிய நீரை வைத்திருந்தாள். வகுப்பு முடிய வீட்டிற்குக் கொண்டு செல்ல விரும்பினாள். ஒரு சிறுமி அதைத் தட்டி விட்டதால் ஐயோ என்று அழுது கேட்டது. ஆசிரியர் வந்து பார்த்தபோது சில துளிகள் நிலத்தில விழுந்திருந்தன. அவ சிறுமியை ஆறுதல்படுத்த முயன்றும் முடியவில்லை. சிறுமி நிலத்தில் முழங்காலில் இருந்து நிலத்தில் விழுந்த சில துளிளை நாவினால் எடுத்தாள். சிறுமியின் பக்தியை இது வெளிக்காட்டியது.

## 12 புரட்டாசி 1878

வைகாசி மாதத்தில் Creache இல் இருந்து 3 குழந்தைகள் இறைவனடி சேர்ந்து விட்டனர். மாசற்ற இப்பூக்களை மாதா கொய்து விட்டா. ஆனிமாத நடுப்பகுதியில் 12 - 14 வயதுச்சிறுமி நமது சுதேச சகோதரி ஒருவருடன் கிணற்றில் நீர் எடுக்கும் போது கட்டில் ஏறிதவறி விழுந்துவிட்டா. உடனே பிள்ளைகள் துலாவாளியை விட்டு எடுத்து விட்டனர். 21ந் திகதி Machet தாயாரின் திருநாளைக் கொண்டாடி Creache இல் 9பிள்ளைகள் திருமுழுக்குப் பெற்றனர். பலர் இறைவனடி சேர்ந்து விட்டனர். ஆடி 19ந் திகதி புனித வின்சென்ற் டிபோல். குழந்தைகளின் பாதுகாவலர் திருவிழாவைக் கொண்டாடினோம். ஆயர் இதை ஆடம்பரமாகக் கொண்டாட விரும்பினார். கோவில் இல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் அவர்கள் வீடுகளில் பீடம் அமைத்து சுத்தமாக அழகு செய்யப்பட்டது. எல்லோரும் பங்குபற்றினோம். குருக்கள், செமினறியில் உள்ளோர், எம்குழு பிள்ளைகளுடன் சமுகமாக இருந்தனர். ஆயருடைய மறையுரையின் பின் 5 வயதுச் சிறுவன் ஒருவன் நன்றி கூறினான். பின்பு எல்லோருக்கும் உணவு அளிக்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும் தான் வருவேன் என்று ஆயர் கூறினார்.

ஆவணி 3ல் ஆயர்விட்ட அறிக்கையில் Fr. Soullies (சூலியர்) வருவார் என்ற நற்செய்தி கண்டு மகிழ்ந்தோம். 16 வருடங்களின் பின்பு நாம் முதன்முதலாக எமது குடும்பத்தின் தலைவரை சந்திக்கப்போகிறோம். இதை எவ்வாறு வர்ணிப்பது என்று தெரியவில்லை. உங்கள் விழாவின் போதும் 26 பிள்ளைகள் திருமுழுக்குப் பெற்றனர். இதில் 18 அநாதைச் சிறுமிகள். 8 பேர் குழந்தைகள். தற்போது அநாதை இல்லத்தில் எல்லோரும் கத்தோலிக்கர். இத்தவணையில் பல கிறீஸ்தவ திருமணங்கள் நடைபெற்றன. ஒரு திருமணத்தில் 3பேர் மனம் மாறினர். கணவன், பெண்ணின் தாய், தங்கை ஒரே நாளில் திருமுழுக்குப் பெற்றனர். 2பேர் அநாதை இல்லத்தில் இருப்பதால் பெண்ணின் குடும்பம் முழுவதும் கத்தோலிக்கர்.

அதேவேளையில் வேறு ஒரு துயரச் சம்பவமும் நடந்துள்ளது. 8வருடங்களுக்கு முன் அநாதை இல்லத்தில் இருந்த ஒரு பெண் யூஜினியாவை அவள் தந்தை (கத்தோலிக்கன்) யிடம் ஒப்படைத்தோம். அவளின் விசுவாசத்தைக் காப்பாற்ற அவள் ஒரு கத்தோலிக்கனை மணம்முடித்தால். நான் சீதனக் காசு தருவதாகக் கூறினேன். அவள் தன் சிறிய தாயுடன் இருக்கும் காலத்தில் இடைக்கிடை எம்மைச் சந்தித்து திருப்பலி, நற்கருணைப் பந்தியிலும் பங்கு பற்றினாள். 2 மாதங்களுக்கு முன் ஒரு பிற சமயத்தவனை மணமுடித்து வைக்க விரும்பினார். அவள் மறுத்தாள். பின்பு அவன் மனம் மாறுவதாகக் கூறியதால் தன் சம்மதத்தை அவள் கொடுத்தாள். அவனும் திருமுழுக்குப் பெற்று முதல் நன்மை அருந்தித் திருமணம் செய்தனர். திருமண நாளன்று எம்மையும் மகிழ்வுடன் சந்தித்துச் சென்றனர். ஒரு மாதத்தின் பின் அவன் மறுபடியும் தன் சமயத்திற்கு திரும்பினான். நெற்றியில் விபூதி அணிந்து யூஜினியாவுக்கும் மருந்து கொடுத்து தன் பக்கம் இழுத்தான். இதைநான் அறிந்து அவளை அழைத்து அன்புடன் கடிந்து கொண்டேன். அப்போது, தான் பூசைக்குப் போகக் கணவன் அனுமதிப்பதில்லை என்று கூறினாள். நான் ஆலோசனை கூறியும் அவளது விசுவாச ஒளி அணைந்து விடுவதாகத் தெரிகின்றது.

தற்போது எம்முடன் இருக்கும் குழந்தைகளின் 3 தாய்மார் திருமுழுக்குப் பெற ஆயத்தம் செய்கிறார்கள். இறைவன் இளம் பிஞ்சுகளைக் கொண்டு பெற்றோரிடம் வருகின்றார். வேறொரு பெண்ணும் ஆயத்தம் செய்கிறாள். அவள் சிலுவை அடையாளம் போடும் போது ''சுதன்'' என்று கூறுவதற்குப் பதிலாக ''சிவன்'' என்று கூறுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல உள்ளம் இருப்பதால் விரைவில் திருமுழுக்குப் பெறுவாள். தற்போது நவகன்னியர் இல்லம் அமைக்கப்படுகின்றது. பின்பு அநாதைப்பிள்ளைகளின் படுக்கை அறை முடிந்ததும் அவர்கள் அங்கு வசதியாகப் படுக்கமுடியும்.

## யாழ்ப்பாணம் 30 கார்த்திகை 1878

ஐப்பசி 1ல் எம் காலம் சென்ற தாயாரின் சொந்தக்குறிப்புகளை வாசிக்கும் போது உணர்ச்சி வசப்பட்டுள்ளேன். நோய் முதலில் ஒரு தளர்ந்த நிலையை அளித்து இறுதியில் மரணத்தில் முடிந்தது. எம் அன்புத் தாயார் ஒருவரை நாம் இழந்தாலும் இறைவன் எம்மைப் பாதுகாக்கின்றார். 17ந் திகதி அடக்கம் நடைபெற்றது. கவலை இழப்பிலும் குழுமீளவும் தம் அன்றாட கடமைகளைத் தொடங்கியது. 21ம் திகதி ஆயர் பிரியாவிடைகூறித் தென்னிலங்கை சென்று பின்பு (Goa) கோவாவில் மார்கழி 3ந் திகதி திருவிழாவிற்குச் செல்ல ஆயத்தமானார்.

ஆயரில்லாவிடினும் சகலபுனிதர்களின் திருவிழா நன்கு கொண்டாடப்பட்டது. அடுத்தநாள் 4 பிள்ளைகள் பாடசாலையில் சோதனை நடந்தவேளை குளிக்கச் சென்று ஒரு பிள்ளை கிணற்றில் விழுந்து விட்டாள். ஏணிவைத்துப் பிள்ளையைத் தேடியும் அவ நீருக்குள் சென்று விட்டா. வந்தவர்களுக்கும் நீந்தத் தெரியாது. பின்பு ஏணியை இறக்கி ஊர்சுலாவைத் தேடிஎடுத்தார். 2 மருத்துவர் அவளைப்பார்த்தும் அவளால் கதைக்க முடியவில்லை. எனவே குருவானவர் நோயில் பூசுதல் கொடுத்தார். முதல்நாள் திவ்விய நன்மை பெற்றிருந்தாள். 3 மணித்தியால வேதனையின் பின் இறந்து விட்டாள். குருக்கள், பொலிஸ்மாரின் துணையுடன் பிரச்சினை இன்றி அடக்கம் நடைபெற்றது. அல்லது புரட்டஸதாந்தர்கள் எம்மைப் பழித்திருப்பார்கள்.

3ம் திகதி ஆயரின் ஆசியும் குருநாகல் செய்திகளும் கிடைத்தன. இடமாற்றத்தினால் நற்சுகம் பெற்றிருந்தார். அத்துடன் சென்ற இடமெல்லாம் எம்மை விட்டுப் பிரிந்த சேவியர் தாயாரின் அனுதாபங்கள் ஆயருக்குக் கிடைத்ததாகக் குருக்கள் கூறினார்கள்.

தாயாரின் இழப்பு எமக்கு ஆழ்ந்த துயரத்தைக் கொடுத்தது. உங்களுடைய தாய்க்குரிய இதயத்திற்கும் துன்பத்தைத்தரும். இறைவன் மிகவும் கடினமான துன்பம் வழியாக எம்மைச் சந்தித்தார். தாய்மாருக்குள் சிறந்த ஒரு தாயை இழந்து விடடோம். அந்நியநாட்டில் அநாதைகளாகி விட்டோம். ஆயரின் தந்தைக்குரிய நன்மைத்தனமும், எமது துன்பத்தில் அவரின் ஆறுதலும் கரிசனையும் எம்மைச் சூழ்ந்திருக்கிறது. அவரின் மேலான பண்பு எமக்கு ஆறுதலாக இருக்கிறது இந்த இழப்பு கஷ்டமாக இருந்தாலும் சிலுவைக்கு முன் நாம் தளரவில்லை. இந்தச் சிலுவை எமது இதயத்தில் ஆழமாகவேரூன்றி இருக்கிறது. எமது பிள்ளைக்குரிய மதிப்பை நாம் அவவுக்கு அளித்தோம். கடைசி நாளின் உயிர்ப்புக்குக் காத்திருப்பதற்காக அவவைக் கல்லறையில் வைத்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் - சித்திரை 1879

என் நல்ல தாயாரே!

நன்றியுள்ள உள்ளத்துடன் ஆண்டுத் தொடக்கத்தில் நடந்தவை பற்றிய அறிக்கையை உங்களுக்குத் தருகின்றேன். எமது தலைமை அதிகாரியின் சந்திப்பு எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது. இதை விபரிப்பதற்கு வார்த்தைகள் இல்லை.

தை 4ந் திகதி அமலோற்பவதியாகிகளின் தலைவர் Fr. Soullier சூயியெ எம்மைச் சந்திக்க வந்தார். ஆயர் முதல் ஞாயிறு மக்களுக்கு இதை அறிவித்தார். எனவே கிறீஸ்தவர்கள் அவரை வரவேற்க ஆயத்தமாக இருந்தவர்கள். வளைவுகள் கட்டி அலங்கரித்தனர். பிற சமயத்தவர்கள், பிரிவினை மதத்தவர்கள் இம்மகிழ்வில் கலந்து கொண்டனர். கப்பல் மாலை 6 மணிக்கு வரும் என்றார்கள் காற்றின் திசை மாறியதால் 2 மணித்தியாலம் தாமதம் ஏற்பட்டது. எனினும் மக்கள் ஆரவாரம் குறையவில்லை மின்னொளி எங்கும் பிரகாசித்தது. அவர் வந்ததும் பீரங்கி வெடிக்கப்பட்டது. மேளதாளத்துடன் பெரிய கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். முதலில் செமினறி மாணவர்கள் அநாதைச் சிறுவர், சிறுமிகள், துறவிகள், துறவற மாணவர்கள் O. M. I. குருக்கள் Fr. Soullier. Pulicani ஒரு திறந்த காரில் இவர்கள் பின்னே வந்தார்கள் பின்பு மக்கள் பின் தொடர்ந்தனர்.

Fr. Soullier சூயியெ ஆயரால் சக்கிறிஸ்ரியில் சந்தித்து வரவேற்கப்பட்டார். பின்பு ஆலயத்தில் நற்கருணை ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. பின்பு மக்கள் அறிமுகம் செய்யப்பட்டனர். மறைத் தூதர்மட்டில் மக்கள் மரியாதையில் மகிழ்ந்திருந்த அவரை, நாமும் சந்தித்தோம். ஆயர் மறுநாள் அவரை எம்மடத்திற்கு அழைத்து வருவதாகக் கூறினார். மறுநாள் காலை 6 மணிக்கு Fr. Mauroy மொறோய் உடன் தலைவர் சுவாமி திருப்பலி நிறைவேற்ற வந்தார்.

நல்ல செய்திகள் எல்லாம் கூறினார். 2 நாட்களின் பின் எம் வகுப்புக்களைப் பார்வை இட வந்தார். ஆங்கில வகுப்பு அநாதைச் சிறுமிகளைப் பார்வையிட்டு அவர் கூறியவற்றை ஆயர் மொழிபெயர்த்துக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை 8ந் திகதி நகரிலுள்ள தமிழ் வகுபபுகளைப் பார்வையிட்டு இறுதியாக Creach ஐயும் பார்வையிட்டார். ஒரு சிறுவன் உரையாற்றிய பின் இனிப்பு, கேக் வகைள் பரிமாறப்பட்டன. 12ந் திகதி வருடாந்த தியானம் Fr. Soullier தலைமையில் நடைபெற்றது. 18ந் திகதி தியான முடிவில் ஆயர் திருப்பலி நிறைவேற்றி நமது தீர்மானங்களை ஆசீர்வதித்தார். மாலையில் சுதேச சகோதரிகளின் தியானம் தொடங்கியது. ஆயர் தலைமையில் நடைபெற்ற இத்தியானம் வார்த்தைப்பாடு புதுப்பித்தலுடன் முடிவுற்றது. Fr. Soullier ஊர்காவற்றுறை சென்றிருந்ததார். அங்குள்ள சுதேச சகோதரிகளுடன் பேசமுடியாதிருந்ததால் Sr. M. Louise மொழிபெயர்த்தார். மாசி 9ல் சுதேச சகோதரிகளின் கட்டிடம் ஆசீர்வதிக்கப்பட்டது. ஆயர் திருப்பலியின் பின் Fr. Soullier Pulicani உடன் சென்று ஆசீர்வதித்து உரையாற்றினார் நாட்டு மக்களுக்கு இவர்களின் பணிபற்றி விளக்கினார். சேவியர் தாயார் இதில் பங்குபற்றியிருந்தால் மகிழ்ச்சி அடைந்திருப்பார். அவவாலே ஆரம்பிக்கப்பட்டு, அவவின் இதயத்தின் வேட்கையாகவே இச்சபை இருந்தது. பின்பு ஆயரும் Fr. Soullier உம் ஐரோப்பாவுக்குச் சென்று விட்டார்கள். அவர்கள் சென்றாலும் இறைவன் நம்முடன் இருப்பதால் அவர் பாதத்தில் ஆறுதல் பெற்றோம்.

சிலநாட்களின் பின் அவர்களுடைய செய்திகளும் கிடைத்தன. மன்னார். சென்றதாகவும், அங்கு நல்ல வரவேற்புக் கிடைத்ததாகவும் எழுதியிருந்தார்கள். 27ந் திகதி Fr. P. Fianagan உடன் இன்ஸ்பெக்டர் பாடசாலை சந்திக்க வந்தார். ஆங்கிலத்தில் பேசக் கஷ்டமாக இருந்தது. தான் மோறிசியஸ் தீவில் இருந்தபடியால் பிரான்சிய பாஷை விளங்கும் எனக்கூறி அம்மொழியில் கதைத்தேன். தன் சந்திப்பில் மகிழ்ச்சி அடைந்தார். ஆங்கில போடிங்கில் (ஆட்கள்) பிள்ளைகள் குறைவென்றும், அநாதை இல்லத்தில் 112 பிள்ளைகள் 40 வெளிப்பிள்ளைகள், திருஇருதயப்பாடசாலையில் 150 பிள்ளைகள் கூடியிருக்கக் கண்டார். இச்சந்திப்பு அரசைப் பொறுத்த மட்டில் எம்பணிக்குச் சித்தி அளிக்கும் என நம்புகிறோம்.

**7 ஆடி 1879**

இத்தவணையில் சின்னமுத்து (தொற்று நோய்) அநாதைப் பிள்ளைகளைத் தாக்கி 3 பேர் இறந்து விட்டனர். அத்துடன் ஓர் இளம் பெண் பருத்தித்துறையில் பாடசாலையில் பணிபுரிந்தவ. இறந்து விட்டா. இவையெல்லாம் மிகத்துயரும் தந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி மாதத்தில் மாதாவிடம் செபித்து, யூபிலிக் கடமைகள் செய்து, தூயஆவியின் பெருவிழாவில் பரிபூரண பலன் பெற விரும்பினோம். திருஇருதய மாதத்தில் வேறொரு சிலுவையும் வந்து நேரிட்டது. எம் சிறிய சகோதரி அக்னெஸ் சாத்தானால் அலைக்கழிக்கப்பட்டா. ஒருநாள் அல்போன்சின் தன் சகோதரனைச் சந்தித்துக் குடும்ப அலுவல்கள் பார்க்க விரும்பினா. நான் இந்த ஆயத்த கன்னிகைக்கு உத்தரவு கொடுத்து, ஒரு கத்தோலிக்க பெண்ணுடன் அனுப்பி வைத்தேன். இரவு அவர்கள் வரவில்லை. மறுநாள் காலையில் அவர்களைக் கூட்டிவரும்படி ஒருவரை அனுப்பிவைத்தேன். 10 மணியளவில் பெண் மட்டும் வந்தாள் அல்போன்சின் ஓர் அயல் வீட்டில் சென்று ஒழித்துக் கொண்டாள். மேவ்வி (Fr. Murphy) அக்கிராமத்தில் இருந்தபடியால் Fr. Pulicani (புலிக்கானி) அவரைச் சென்று சந்திக்க கூறியும், நல்ல வரவேற்புக் கிடைக்கவில்லை. ஒரு புதுமை நடந்தாலொழிய மனமாற்றம் கிடையாது. வேறொரு சகோதரியும் (அக்னஸ்) காய்ச்சலால் களைப்புற்று இறுதி அருட்சாதனம் பெற்று இறந்து விட்டா.

சிலநாட்களின் முன் ஒரு பாம்பு நவகன்னிகை இல்லத்துள் வந்தது. சிலர் கயிறு என நினைத்தனர். பின்பு எல்லோரும் சேர்ந்து அடித்தார்கள். அதைத்தீயிட்டுக் கொழுத்தினர். சிறிது நேரத்தின் பின் வேறொரு பாம்பு வந்தது. அதையும் அடித்துத்தீயில் போட்டனர். தேவபராமரிப்பு எம் சிறிய குடும்பத்தை பராமரித்து வருகின்றது.

இத்தவணை அறிக்கையை நிறைவு செய்யும் முன் எம் அநாதைச் சிறுமிகளைப் பற்றியும் கூற விரும்புகின்றேன். உத்தரிப்புஸ்தலத்து ஆன்மாக்கள் மட்டில் பக்தி அதிகம் இருப்பதால் பணம் சேகரித்துப் பூசைக்குக் கொடுத்தனர். முதல் சிஸ்ரர். அக்னெசுக்குக் கொடுத்தனர். பின்பு Fr. Boisseau (புவாசோ) இன் தாய் இறந்த போது 9 நாள் செபமாலை, சிலுவைப்பாதை ஒப்புக்கொடுத்தனர். இதுவும் போதாதென்று தம்மைப் பலவகையில் ஒறுத்து பணம் சேகரித்துப் பூசைக்குக் கொடுத்தனர்.

## யாழ்ப்பாணம் - மார்கழி 1879

ஊர்காவற்றுறைக்குச் சென்ற வரலாற்றை மகிழ்வுடன் கூற விரும்புகிறேன். அங்குள்ளவர்கள் நம்மை அன்புடன் வரவேற்றனர். இளம்பெண்கள் பாடசாலையைச் சந்தித்து ஒரு மடம் கட்டுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அழைத்தனர். ஐப்பசித் தொடக்கத்தில் ஆரம்பிக்கலாம் எனக்கூறி என்னுடன் சில சகோதரிகளையும் அழைத்துச் செல்ல விரும்பி 3 பேரைத்தெரிந்து ஐப்பசி 1ம் திகதி திருப்பலியின் Sr. M. Ligorie M. Louise, Immanuel உடன் சென்றேன்.

யாழ் மேற்கில் அமைந்த சிறுதீவு இது. முன்பு முழு இடமும் படகு மூலமே சென்றாலும், தற்போது காரை தீவையும் இணைத்துத் தரை மார்க்கமாகக் கடலையும் பார்த்துக்கொண்டு பயணிக்கமுடிந்தது. ஆனால் குதிரைகள் சிலவேளைகளில் முன்னேறத் தடுத்ததால் கால்நடையாகவும் சென்றோம். குறிப்பிட்ட நேரத்திற்கு முன் சென்றதால் கரையில் ஒருவரையும் காணவில்லை. மற்றப் பக்கத்தில் பலரைக் கண்டு ஒரு சகோதரி அவர்களைக் கேட்டபோது யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் பெரியோர்க்கே இந்த ஏற்பாடு என்றார்கள். நாம் தாம் அவர்கள் எனக்கூறி வெடிச்சத்தத்துடன் பிரித்தானிய கொடியேற்றிய பலவர்ணங்களாவான தோணியில் சென்றோம். அங்கு சேர்ந்ததும் Fr. Murphy சந்திர சேகராவும் நின்று கிறீஸ்தவர்களுடன் பவனியாக எம்மை அழைத்துச் சென்றனர். பின்பு 4 கிறீஸ்தவர்கள் எம்மை ஆலயத்திற்கு பல்லக்கில் தூக்கிச் சென்றனர். அவர்களுக்கு இது பெருமையான செயல் பின்பு பவனியாகக் குருவானவர் இல்லம் சென்றோம். இங்கு மக்கள் வந்து எம்மைச் சந்தித்தனர். அவர்களுக்குத் தமிழில் சில வார்த்தைகள் கூற கேட்டு மிகவும் மகிழ்ச்சி உற்றனர். 11 மணியளவில் மடம் கட்ட இருந்த இடத்திற்கு எம்மை அழைத்துச் சென்றனர். கடலருகே அத்திவாரம் போட்டு வரட்சியினால் வேலை கைவிடப்பட்டு இருந்தது.

பின்பு இளம் மாணவிகளின் வகுப்புகளைப் பார்வையிட்டோம். 4 அடி சுவரும் தூணும், தட்டியினால் அடைக்கப்பட்டிருந்தது. 4 வயது தொடங்கி 19 வயது வரை 160 பிள்ளைகள் படித்து வந்தனர். தரையில் கம்பளம் போட்டு, மேசைத்துணி விரித்து விழாக் கோலம் பூண்டிருந்தது. ஒரு சிறுமி பூச் செண்டு தந்தாள் இன்னொரு சிறுமி சுதேச சகோதரிகள் தங்களுக்குப் படிப்பிக்க வரவேண்டுமென்று உரையாற்றினாள். நான் வரவணிக்கம் கொடுக்க, முழங்காலில் இருந்து பெற்றுக் கொண்டனர். சில பெரியவர்களும் இதைப் பெற்றுக் கொள்ள விரும்பினர். 4 மணியளவில் வேறு கோவில்களைப் பார்க்கச் சென்றோம். இங்கு ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒவ்வொரு கோவில் உண்டு. பெண்கள் கையைக்குவித்து ''ஸ்தோத்திரம்'' என்றனர். சந்தியோகுமையோர் கோவிலில் நட்டுவ மேளம் பிடித்தனர். பின் பவனியாக மணிகள் அடிக்க கடற்கரைக்கு வந்தோம். குருக்களுக்கு நன்றி கூறினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் அநாதைச் சிறுமிகள் இறந்த ஆன்மாக்களிடம் தம் கருத்துகளுக்காக வேண்டிச் செபிப்பர். ஒரு பெண் மணம் முடித்து 8 வருடங்களின் பின் Sr. லிகோறியைச் சந்திக்க வந்து மதர் சேவியர் இடம் மன்றாடிக் குழந்தை வரம் பெற்றோம் என்றனர்.

ஐப்பசி 15ல் பெரிய கோவிலில் மதர் சேவியரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபவழிபாடு இடம்பெற்று அதில் பலர் பங்கு பற்றினர். 8 நாட்களின் பின் எங்கள் வாழைத்தோட்டத்தில் மாலை நேரத்தில் ஒரு மனிதனைக் கண்டதாகச் சில சிறுமிகள் கூறவே எல்லோரும் சென்று ஒருவனைப் பிடித்து வந்தனர். கேள்விகள் கேட்ட போது பதிலிறுக்காதபடியால் பொலிஸில் கொடுத்தோம். அவன் எம் அயலான் வீட்டு வேலைக்காரன் என அறிந்தோம். சிலகாலமாக எம் வாழைக்குலைகள் குறைந்து போன காரணத்தை அறிந்தோம். நீதிபதிக்கும் காசு கொடுப்பதால், நீதிவழங்காதபடியால், பொலிஸ் மேலிடத்திற்கு அறிவித்தார்.

மார்கழி 3ல் யோசேப்பின் தாயார், சிஸ்ரர். மேரி பிரான்சிசைக்கூட்டிக் கொண்டு இங்கு வந்தா. டொக்டர் இடமாற்றம் நல்லது என்று கூறி இருந்தார். 3 கிழமைகள் எம்மோடு இருந்தா. Kayts க்குக் கூட்டிச் சென்றேன். முன்புபோல் எம்மை நன்கு வரவேற்றனர். திரும்பி வரும்போது எம் வாகனம் உடைந்து 2 மைல் நடந்து வந்தோம். பின்பு மீனவர்களிடம் கூறி ஒரு வண்டியை ஒழுங்கு செய்து ஒரு மணித்தியாலம் காத்திருந்து, வண்டி வந்தபின் இரவு 10.30 மணியளவில் மடம் வந்து சேர்ந்தோம். இங்கு எம் சகோதரிகள் எமக்காகக் காத்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரை 1880 யாழ்ப்பாணம்

என் நல்ல தாயாரே

இந்த வருடத்தை எம் உள்நாட்டுச் சோதரிகளின் தியான நாட்களுடன் ஆரம்பித்தோம். ஒரு சுதேச குருவானவர் தந்தை சந்திரசேகரா இதனை வழிநடத்தினார். இவர் புனித. பிரான்சிஸ் சவேரியாரால் மத மாற்றம் செய்யப்பட்டவரின் பரம்பரையைச் சேர்ந்தவர். இத்தியான நாட்கள் நல்ல பலனைக் கொடுத்தன. ஏழாம் திகதி இது முடிவுற்றதும் நாம் எம் தியான நாட்களை ஆரம்பித்தோம்.

தை மாதம் முடிவில் இலங்கை ஆளுநர் சேர்.லொங்டன் (Sir. Longdon) எங்களைச் சந்திக்க வந்தார். அவருடன் அவர் முன்பு கூறியபடி அவரின் மனைவி லேடி லொங்டனும் வந்தார். எமக்கு முன்னதாக இவர்கள் வரவு அறிவிக்கப்பட்டிருந்ததால் நாம் அதற்கு ஆயத்தம் செய்திருந்தோம். ஆங்கில வகுப்பு நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டபத்தின் முன் ஒரு மேடை வைத்து அதில் இருவரும் அமர்ந்து பிள்ளைகளின் பாடல்கள், நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ்ந்தனர். இறுதியில் சேர் லொங்டன் உரையாற்றினார்.

"தலைவி அவர்களே! எனது கடைசிச் சந்திப்பின் பின்பு ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களுக்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். இந்த முன்னேற்றம் குருநாகல், கொழும்பு ஆகிய பகுதிகளிலும் காணக் கூடியதாக உள்ளது. அதாவது ஒரே ஆவியின் தூண்டலினால் எம் கத்தோலிக்கர் செயல்படுகின்றனர். எனவே, கல்வி, படிப்புடன் மட்டும் நின்றுவிடாது ஒழுக்கத்துடன் சேர்ந்து எம் இதய உருவாக்கத்துக்கு உதவ வேண்டும். இது அவர்கள் வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியுடன் வாழ உதவும். அல்லது கல்வி தீமைதான் தரும். எனவே, இத்தீவில் இவ்வாறான பல கல்லூரிகள் உருவாக விரும்புகின்றேன். இரண்டாவது தடவையாக இங்கு வருவது எனக்கு மகிழ்ச்சி. எனவே என் சார்பிலும், என் மனைவி சார்பிலும் உங்களுக்கு நன்றி" என்றார்.

பின்பு மேடையிலிருந்து இறங்கி வகுப்புக்களைப் பார்க்கப் புறப்பட்டார். புறப்படும்போது லேடி லொங்டன் வரவேற்பறையில் தரும சீமாட்டிகள் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். இவர்கள் ஒரு சபையாகச் சேர்ந்து புனித.அன்னம்மாள் பாதுகாவலில் உள்நாட்டுப் பெண்களுக்கு உடுப்புகள் சேகரித்துக் கொடுத்து உதவி வந்தனர். அவர்கள் ஒரு பின்னல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையை அவவுக்குப் பரிசாக அளித்தனர். பின்பு அநாதை மடம் நோக்கிச் சென்றனர். ஆங்கில வகுப்புப் போல இங்கும் அழகான சோடினைகள் காணப்பட்டன. தமிழில் பாடல்கள் பாடினார்கள். பாலர்களும் இவ்விழாவைச் சிறப்பித்தனர். ஒரு நாலு வயதுச் சிறுமி இவர்களுக்கு உரையாற்ற லேடி.லொங்டன் மேடையிலிருந்து இறங்கி வந்து உண்மையாகவே இவள் வாசிக்கின்றாளா? என்று பார்த்து தன் கணவனிடம் அவள் பாடமாக்கிப் பேசவில்லை(Recitation). ஆனால் பார்த்து வாசிக்கின்றாள் என்றாள். இவர்கள் எம் விழர்வின் பூக்கொத்துக்கள் எனறு எல்லோராலும் பாராட்டப்பட்டனர். பின்பு புனித. சூசையின் தொழிலகத்தையும் பார்வையிட்டனர். அவர்கள் தாம் செய்த பொருட்களைக் கண்காட்சிக்கு வைத்திருந்தார்கள். ஒரு பெண் தான் தைத்த கைக்குட்டை ஒன்றை லேடி. லொங்டனுக்குக் கொடுத்தா. அவர் ஒவ்வொருவருக்கும் நல்ல வார்த்தை கூறி, எம் பல பணிகளைப் பாராட்டிச் சென்றா.

மறுநாள் எம் வரவேற்புக்கு நன்றி கூறி அநாதைப் பிள்ளைகளின் நலனுக்காக 100 ரூபாவை ஏற்கும்படி கூறினா. இவ்வாறு புனித. சூசை எமக்கு உதவி செய்கின்றார். எமது பணிகள் எமக்கு மகிழ்ச்சியைத் தந்து நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்க எமக்கு உதவி புரிகின்றன. தை மாதத்தில் அரச அதிகாரியும், அவரது மனைவியும் என்னை அழைத்தனர். நான் அங்கு சென்றபோது வழக்கப்படி தேநீர் விருந்து ஒழுங்கு செய்தனர். இதனை நான் அறிந்து நாம் எடுப்பதில்லை என்று கூறிய போது அவர்கள் அதனை ஏற்றனர்.

## ஆனி 1880

பாஸ்குத் திருவிழா 2ம் தவணையை ஆரம்பித்து வைத்தது. நான்கு அநாதைப் பிள்ளைகளுக்கு திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. எமது ஆயர் பொஞ்சின் கடும் வியாதியாக இருப்பதாக அறிந்தோம். பின்பு அவர் நலம் பெற்ற செய்தியும், அதே வேளை மெலிசான் ஆயரின் முதல் ஆசீர்வாதமும் எமக்கு மகிழ்ச்சி அளித்தன.

பிரான்ஸ் செய்திகள் கேட்டு யேசுவின் திரு இருதயத்திடம் செபிக்கிறோம். காற்றும் கடலும் அமையத்தக்க வார்த்தைகள் சொல்லக்கூடியவரிடம்எம் சபையையும் ஆசீர்வதிக்க வேண்டுகின்றோம். இதற்காக 40 நாட்கள் தபமுயற்சிகள் செய்து இராயப்பர் திருவிழாவில் இப்பக்தி முயற்சி முடிவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குருக்களிடம் இருந்த பழைய மாணவன் அரச பாடசாலைகளில் துணைஅதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்டதை அறிந்து பிரிவினை மதத்தவர்கள் பொங்கியெழுந்தனர். அரச மதத்திற்கு எதிராகத் தெரிவு செய்யப்பட்டது எனப் பலரிடம் அறிக்கை செய்தனர்.

எதுவும் இத்தெரிவைத் தடைசெய்யவில்லை. ஆனி முதலாம் திகதி தன் வேலையை ஆரம்பித்தார். அவர் வேலை எமக்குத் திருப்தி அளித்தது. 7ம் திகதி பொது அதிகாரியும் வந்து சென்றார். எம்மை ஊக்கப்படுத்தும் வார்த்தைகளைக் கூறிச் சென்றார்.

## புரட்டாதி 1880

இத்தவணையில் எமக்கு ஒரு துன்பம் ஏற்பட்டது. எம் அநாதைப்பிள்ளைகளில் 15 பேரை வீட்டிற்கு அனுப்ப வேண்டிய நிலை. அவர்களைத் தாபரிக்க நிதி பற்றாக்குறை. எனவே எம் குருக்கள் அவர்களை வீட்டிற்கு அனுப்பத் தீர்மானித்தார்கள். எமக்கு இது கவலை தந்தது. பிள்ளைகளும் கவலைப் பட்டனர். சிறிது காலத்தின் பின் ஒரு பிள்ளை திரும்பி வந்தா. இப்பிள்ளையின் பெற்றோர் கிறிஸ்தவர்கள் என்றாலும் புதிதாகத் திருமுழுக்குப் பெற்று விசுவாசத்தில் ஆழமில்லாது இருந்தனர். எனவே தம் பிள்ளையை ஒரு இந்துவுக்கு மணமுடித்து வைக்க விரும்பினர். இதனை அறிந்த பிள்ளை பிதா புவாசோ (Boisseau) விடம் கூறியதால் குரு இவவை ஏற்று மடத்துக்கு அனுப்பி வைத்தார்.

வீடு சென்ற ஒரு பெண் எம் பாடசாலைக்கு வந்து போகின்றாள். சில நாட்களுக்கு முன் தன் தந்தை கொடுத்ததாக ஓர் பிரிவினைப் பாடற்புத்தகத்தை சோதரி லிகோரிக்குக் கொடுத்தாள். தான் அதை வாசிக்க விரும்பவில்லை எனவும் அதை ஏற்கும்படியும் கூறினாள்.

இப்படியான நிகழ்ச்சிகள் எம் வேலைக்குப் பலனைத்தருவது கண்டு மகிழ்ச்சி. வேறொரு நிகழ்ச்சியும் முட்கள் நிறைந்த நிலத்தில் பலனைப் பெற உதவுகிறது. சில வருடங்களின் முன்பு கொழும்புத்துறையில் ஒரு இளம் அநாதைச் சிறுவன் ஒரு பிரிவினை மத வீட்டிற்கு ஓடி விட்டான். அங்கு தான் பெற்ற படிப்புகள் ஞான வாழ்வு எல்லாவற்றையும் மறந்து துன்பத்திலும் நோயிலும் தன் வாழ்வைச் செலவழித்தான்.பின் ஊதாரிப்பிள்ளை போன்று தன் நிலையை உணர்ந்து பிதா விளனகன் (Flanagan) பாதத்தில் விழுந்து தன்னை ஏற்கும் படி கூறினான். அவர் மகிழ்வுடன் அவனை ஏற்று ஒப்பரவு அருட்சாதனம் கொடுத்துப் பாவப்பரிகாரமாக அவனுடன் முன்பிருந்த இளம்பெண்ணையும் நல்வழிக்குக் கொண்டுவர உதவும்படி கூறினார். அவனும் அப்படியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதாக உறுதி கூறினான். சிறிது காலத்தின் பின் அப்பெண் எம் மடத்தில் சேர்க்கப்பட்டாள். நாம் அவளுக்குப் படிப்பித்தோம். ஆனால் படிப்பிப்பது கஷ்டமாக இருந்தது. எம் சோதரி அசம்சனுக்கு (Sr.Assumption) தோல்வியடைவது போல இருந்தது. அவளின் புத்தி காரணமாக மறை உண்மைகள் அவளைச் சென்றடையவில்லை. கேள்விகளும் பதில்களும் குழம்பிய வண்ணம் இருந்தன. எனவே சோதரி சிலவேளைகளில் சாத்தானின் வேலையோ என நினைத்து புனித ஆசிர்வாதப்பரின் வரவணிக்கத்தை அணியக் கொடுத்தா. அதன்பின்பு மாற்றம் ஏற்பட்டு திருமுழுக்குக்கு அனுமதிக்கப்பட்டது. ஆவணி 11ம் திகதி இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. இக் குடும்பங்கள் பெருகி எம் மக்களுக்கு உதவும் என நம்புகிறோம்.

வேறொரு மனிதனும் திருமுழுக்குப் பெற்ற பின் 8 வருடம் ஒழுக்கமற்ற வாழ்வு வாழ்ந்து அருள்களை இழந்தார். இவர் பெயரை பிதா. சுனவால் (Fr. Chounaval) ஒரு கறுப்புப் புத்தகத்தில் எழுதினார். அந்த மனிதன் சமயத்தையும் அதன் கடமைகளையும் இழந்து கொலாராவால் தாக்கப்பட்டு இறைவனுடன் ஒப்பரவு செய்ய விரும்பாது இருந்தார். இறைவன் இரங்கினால் ஒழிய அவன் மீட்படைய முடியாதிருந்தது.

அவரின் மனைவி மரியன்னா எம் குழந்தைகளைப் பராமரித்து வந்தா. அவவையும் வேலை நீக்கம் செய்தோம். இது அவனைச் சிந்திக்கச் செய்தது. தற்போது அவளை மீண்டும் வேலையில் சேர்த்து அவள் கணவனுடன் ஒப்பரவாகச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துள்ளோம்.

ஆடி மாதத்தில் அந்த ஏழை மனிதனைக் காணச் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் அவனுடன் பேச விரும்புவதாகக் கூறினேன்.பின்பு சோதரி அசம்சனை அவனுடன் கதைக்கும்படி கூறினேன். அடுத்த நாள் வேறொருவருடன் சேர்ந்து வந்தார். உடனே சோதரி அவரை வரவேற்று தனது கேள்வியை உடனே ஆரம்பித்தார். அப்போது அவனது நெற்றியில் முத்துகளாக வியர்வைகள் வந்து எல்லாப்பக்கமும் அசையத் தொடங்கினார். இறைவனும் சோதரியின் வாயில் அந்த ஏழையின் இதயத்தைத் தொடக்கூடிய வார்த்தைகளை வைத்திருந்தார் சகோதரியும் மிகுந்த நம்பிக்கையடன் ஒரு ஆசிர்வாதப்பரின் வரவணிக்கத்தைக் கொடுத்துத் தினமும் ஒரு பரலோக மந்திரமும் ஒரு அருள்நிறை மரியேயும் 3 முறை புனித ஆசிர்வாதப்பரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்று கூறும்படியும் சொல்ல முதலில் அவன் அதனை விரும்பவில்லை. மறுநாள் வருவதாகக் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவணிக்கத்தையும் எடுத்துச் செல்ல விரும்பவில்லை. அப்போது சோதரி சாத்தான் அவன்மீது இருப்பதாகவும் இதனை அவன் எடுத்துச்செல்லாவிடில் நாளை வர அவன் விடமாட்டான் எனவும் கூறியதால் அவன் அதை வாங்கித் தன் இடையில் கட்டினான். பின் அங்கிருந்து சென்று விட்டான். அதன்பின் பல போராட்டங்களின் பின்பு தன் மனைவியைப் பார்க்கப் பலருடன் வந்தான். நாம் அதை எதிர்பார்த்து மரியன்னாவிடம் கூறியிருந்தோம். அவள் வந்து அவனிடம் மன்னிப்புக் கேட்டாள். உடனே அவனும் அவள் கையைப் பிடித்துச் சமாதானமாகவும் நல்ல கிறீஸ்தவர்களாக வாழவும், ஒப்புக்கொண்டார்கள். இத்துடன் எல்லாம் முடிவடையவில்லை. பகிரங்கமாக மன்னிப்பும் செய்ய வேண்டியிருந்தது. முதலில் Fr. மோறோயின் பாதத்தில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். பின்பு ஒவ்வொரு ஞாயிறும் ஒரு சிலுவையைத் தோளில் சுமந்து வந்து, தலையில் முள்முடி அணிந்தவனாக வந்தான். ஒரு நேரத்தில் மறைஆசிரியருடன் கோவிலை வலம் வரும்போது மறைஆசிரியர் அவன் செய்த பிழையை உரத்த குரலில் கூறினான். பின்பு இறுதியாகச் சில கசையடிகளும் கிடைத்த பின்பே மற்றவர்களுடன் பந்தியமர முடிந்தது. இதை எல்லாம் செய்வதற்கு ஒவ்வொரு ஞாயிறும் நான் சில திருப்பண்டங்களைப் பரிசாகக் கொடுத்தேன். இயேசுவின் படம், திருஇருதயப் படம், மரியாள், புனித.பெனடிக்ற் போன்றவை. இவற்றைக் கொடுத்துச் சில செபங்களைச் சொல்லி உற்சாகமுறும்படி கூறியிருந்தேன்.

புரட்டாதி முதற்கிழமையில் பொஞ்சின் (Bonjean) ஆயர் வருகை பற்றிக் கதைக்கத் தொடங்கினர். பிதா விளனகன் உடனே கொழும்பு சென்று அவரை வரவேற்கக் காத்திருந்தார். நாம் நவநாள் செய்து அவரின் பிரயாணத்தை ஆசீர்வதிக்க வேண்டினோம். 2 வருடமாக அவரில்லாதது எமக்குத் துன்பத்தைத் தந்தது. எனவே அவர் வருகை எமக்கு மகிழ்ச்சி. இத்தவணை முடிவுறும் போது எம் சுதேச நவகன்னியர்க்கும் செபிக்கும்படி வேண்டுகின்றோம். உருவாக்கம் இலகுவானதல்ல. இத்துறவு வாழ்வு பற்றி இங்குள்ளவர்கள் அறியாதுள்ளனர். ஆயர் சென்ற போது இங்கு 24 பேர் இருந்தனர். தற்போது 16 பேர் மட்டுமே ஆயத்த கன்னிகைகளாக உள்ளனர். எனினும் இப்பணி உபயோகமானது. சுதேச பாடசாலைகள் இத்துறவிகளால் நிர்வகிக்கப்படும்போது மறைமாவட்டத்திற்கு உதவியாகவிருக்கும். எனவே இப்பிள்ளைகளின் இதயத்தை உருமாற்றி இறை மகிமைக்கும் இந்த வறிய நாட்டின் மீட்புக்கும் தங்களை அர்ப்பணிக்க வேண்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தை 1881**

ஐப்பசி 10 ல் ஆயர் கொழும்பு வந்து விட்டார் என்ற தந்தி வந்தது. அதன்பின் பிதா விளனகன் வந்தார். ஆயரைக் காணச் சில கிழமைகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. தெற்கில் பணிகள் அவரைத் தாமதிக்கச் செய்தன. கார்த்திகை 6 ல் எம்மிடம் வந்தார். நல்ல கிறிஸ்தவர்கள் அவர் வருகையைக் கொண்டாடவிருந்தனர். பிரிவினை மதத்தவர்களும் பிறசமய மதத்தவர்களும் அவர்களோடு சேர்ந்தனர். நாட்டின் வழக்கப்படி எல்லாம் ஒரே ஆரவாரம். நாம் அமைதியைக் கடைப்பிடித்தோம். எமக்குரிய நேரம் இடம் கிடைக்குமென எமக்குத் தெரியும். ஆசனக்கோவிலில் நற்கருணை ஆராதனையின் பின் ஆயர் தன்னை வந்து தமதில்லத்தில் சந்திக்கும்படி கூறியதால் அங்கு சென்று சிறிது கதைத்தோம். பின்பு மாலையில் எம்மடம் வந்து ஆறுதலாகக் கதைப்பதாக் கூறினார்.

பின்பு எம்பணிகள், எம் தலைவிகள், பிரான்சில் நடந்த இன்ப துன்ப நிகழ்வுகள் பற்றி எமக்கு விளக்கினார். அவர் வாயிலிருந்து உதிர்வதைக் கேட்க எமக்கு உணர்ச்சிகள் பொங்கி வந்தன.

ஆயரின் வருகையின் பின் 2 புதிய சோதரிகளின் வருகையும் நல்வரவாக இருந்தன. இந்த ஏழை மக்களின் மீட்புக்கு இவர்கள் பணி உதவியாகவிருக்கும். பணியோ ஏராளம். பணியாளர்கள் குறைவு. எனவே எம் ஆவலுக்குத் தடை போடவேண்டியுள்ளது.

இதன் பின் எம் பார்சல்களைப் பார்வையிட்டோம். இது எமக்கு மகிழ்வையும் அனுப்பியவர்கள் மட்டில் நன்றியுணர்வையும் தந்தன. சிலுவைகள் செபமாலைகள் படங்கள் இந்த ஏழைச் சோதரிகள் கிறிஸ்தவர்களை மகிழ்வாக வைத்திருக்க உதவுகின்றன.

சிறிது நாட்களின் பின்பு புனித அந்தோனியார் கோவில் பங்கு ஆயரை அழைக்கும் போது பிதா விளனகன் எம்மையும் வரும்படி கூறினார். இந்த ஏழை மீனவர்கள் வலையும் படகும் மட்டும் வைத்திருந்தாலும் ஆயரை நல்ல முறையில் வரவேற்றுத் தம் நன்றியைத் தெரிவித்தனர். பின்பு ஆயர் சிறிய கோவிலைப் பார்வையிட்டபின் கொழும்புத்துறை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் ஒரு பாடசாலையையும் கண்டார். இப்பாடசாலை அவரில்லாத போது நிறுவப்பட்டது. தென்னோலையால் வேயப்பட்டு உள்ளே சிவப்பு வெள்ளை சோடினை காணப்பட்டன. மேலும் 50 இளம் பெண்கள் மலர்ந்த முகத்துடனும் புத்திக் கூர்மையுடைய கண்களுடனும் நின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர் சற்றுத்தரித்து அவர்களின் உரையைக் கேட்ட பின் கொழும்புத்துறை சென்றார். அப்போது பவனியில் அநாதைச் சிறுமிகள் 2 வரியிலும் ஆயர் தன் துணை ஆயருடன் காரிலும் வந்தார். அருகே ஒரு மனிதன் 3 கிளைகளை ஒன்றாகக் கட்டி அதன் நுனியில் எலுமிச்சம்பழம் கட்டி வந்தான்.

கொழும்புத்துறையை அடைந்ததும் அங்கு பாட்டு சங்கீதம் உரைகள் நடைபெற்றன. அநாதைச்சிறுவர்களாலும் புனித அந்தோனியார் கோவில் பங்கு மக்களாலும் இவை நடைபெற்றன. இறுதியில் இப்பங்கு மக்கள் சார்பில் ஒரு பணமுடிச்சு உயர் கல்லூரி கட்டுவதற்கு ஆயருக்கு வழங்கப்பட்டது. இறுதி நிகழ்வாக நற்கருணை ஆசீர் சிற்றாலயத்தில் நடைபெற்று இக்குடும்ப விழா இனிதே முடிவுற்றது.

பின்பு எல்லோரும் அவ்விடத்தை விட்டுப் பிரிந்தனர். நாம் பல காலமாக இந்த மீனவர்களுடன் இருந்த மனநிலையை மாற்றி அவர்களைப் பாராட்டிக் கொண்டு சென்றோம். எம் சமயத்தில் அவர்களுக்கு விருப்பமில்லாது இருந்ததால் எம் கிறிஸ்தவர்கள் பாசூர் என அழைத்தனர். அதாவது பசாசுகளின் கிராமம் என்றனர். பிதா விளனகனின் முயற்சியால் இறுகிய இதயங்கள் இளகியது. சிறிய பாடசாலையும் பலன் அளித்தது. பெற்றோர் தம் பிள்ளைகளை அங்கு அனுப்பினர்.ஒரு புரட்டஸ்தாந்து மனம் மாறிய பெண்ணும் அவளுக்குத் துணையாக முன்பு எம்முடன் இருந்து மணமுடித்த ஓர் அநாதைப்பெண்ணும் படிப்பித்தனர். சகோதரி மேரி லூாயிஸ் ஒவ்வொரு கிழமையும் அங்கு சென்று புத்திமதி கூறி வந்தா.

மெலிசான் (Melizan) ஆயர் யாழ் வந்த போது அவருக்கு அமோகமான வரவேற்பு கிடைத்தது. முன்னே இவ்வாறான வரவேற்புப் பற்றி எழுதியபடியால் திரும்ப எழுதத் தேவையில்லை.

மார்கழி மாதத்தில் மச்சே (Machet) தாயார் இறந்த செய்தி கேட்டு விண்ணை நோக்கினோம். அவவின் இழப்பினால் எம் குடும்பத்தில் ஓர் வெற்றிடம் வந்திருக்கும். மறுநாள் ஆயர் எம் இல்லத்தில் அவவின் ஆன்ம சாந்திக்குப் பூசை வைத்தார். நாம் அவருக்கு நன்றி கூறிய போது 'இது என் கடமை' என்றார். ஆயர் இச்சோதரியைப் பாராட்டினார். அத்துடன் எம் துயரையும் பகிர்ந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நல்ல தாயாரே!

வருடத் தொடக்கத்திலேயே தியான நாட்களுக்காக நாம் ஆயரிடம் கேட்டிருந்தோம். அவர் இத்தியானத்தின் வழியாக எம் துறவு, அப்போஸ்தலிக்கக் கடமைகளை நினைவூட்டினார். தியான இறுதிநாள் நற்கருணை ஆராதனையின் பின்பு எம்மை ஒன்று சேர்த்து மேலும் நம் இருதயத்திற்கு நல்ல அறிவுரைகள் கூறினார். எம் சபை, தலைவிகள், எம்பணிகள் நாடு போன்றவையே தியான மையக்கருத்துக்களாக இருந்தன. அண்மையில் அவர் செய்த பயணமும் நீங்காத நினைவாக அவர் மனதில் இருந்தன. அதனையும் கூறினார். நேரம் போவதையும் எண்ணாது அவர் வாயில் இருந்து உதிர்வதைக் கேட்ட வண்ணம் இருந்தோம். மாலையில் எம் அநாதைச் சிறுமிகளுக்கு (Toulouse) ரூலூஸ் இல் இருந்து கிடைத்த ஒரு St. Germain (ஜேர்மென்) சுரூவத்தைப் பரிசாகக் கொடுத்தார். சிலநாட்களின் பின் அதை அநாதைமடத்தில் ஒரு பீடத்தில் வைத்தோம். இதன் பின் பிள்ளைகளில் ஒரு மாற்றம் காணப்பட்டது. இந்த புனித இடைச் சிறுமியின் தாழ்மை, சாந்தம் என்ற புண்ணியங்களைப் பின்பற்றப் பிள்ளைகள் முனைந்தார்கள்.

அதன் பின்பும் ஆயர் எம்மை அறியாது, ஒரு சுரூவம் அதாவது இயேசு மாகிறெற் மேரியுடன் இருப்பது, இதைக் கோவிலில் வைத்தார். எமது தியான நாட்களுக்கு முன் இது நடந்தது, இது பிள்ளைகளையும் எம்மையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. எம்மிடம் வந்து தனக்குப்பின்னே வரும்படி கூறிக் கோவிலுக்கு எம்மை அழைத்துச் சென்றார். சுரூவத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டு அவருக்கு நன்றி கூறிய போது ''இது உங்களுக்குத் தான் உதவும் என நான் எண்ணி இங்கு கொண்டு வந்தேன். இயேசுவின் திருஇருதயத்தைச் சூழ நீங்கள் இருப்பதைக் கண்டு மகிழ்வேன் என்றார்.

22ந் திகதி சுதேச சகோதரிகளின் தியானம் ஆரம்பமானது. Fr. Flanagan இவர்கட்கு உரையாற்றினார். பின்பு Melizan ஆயர் எம்மைவிட்டுத் தூரச் சென்றார். தன் அப்போஸ்தலிக்க சந்திப்பின் வெற்றிக்குச் செபிக்க வேண்டினார். Fr. Pellirssier ஆயருடன் சென்றார். மறை உரை ஆற்றியும், ஒப்புரவு அருட்சாதனத்திற்கும் உதவி செய்து பங்குகளில் ஒரு புதுவாழ்வு ஆரம்பித்து வைத்தார். பலர் திருமுழுக்குப் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசி பங்குனி மாதங்களில் எம் குழந்தைகட்கு வியாதி வந்து பலர் இறந்து விண்சென்று விட்டார்கள், இந்த ஏழைக்குழந்தைகள் ஒரு கொட்டிலில் நெருக்கமாக இருந்தனர். வியாதியால் பீடிக்கப் பட்டவர்களையும், இறந்தவர்களையும் பிரிக்க முடியவில்லை. இதனால் நோய் பரவ வாய்ப்பேற்பட்டது. வசதி குறைவினால் நாம் துன்புற்றோம். முதல் 5 வயது நிரம்பிய கத்தறின் சம்மனசுகளுடன் சேர்ந்து விட்டாள். சின்ன வயதில் தாயை இழந்து குடிகாரத் தந்தையின் அரவணைப்பில் வளர்ந்து போதிய உணவில்லாமல் கண்டதையும் உண்டு துன்புற்று 3 வயதில் எமது மடத்துக்கு வந்தாள். எமது கவனிப்பால் நல்ல ஊட்டம் பெற்று வந்தாள். பின்பு காய்ச்சல் வந்து மாசி 17ந் திகதி இறந்து விட்டாள். அவளைத் தொடர்ந்து 6 வயதுச் சிறுமியும் இறந்து விட்டாள். வாசிக்க எழுதத்தெரிந்திருந்தாள். ஓர் இரவு சிஸ்ரர். அசம்ஷன் வேறொரு சிறுமியைப் பார்க்கச் சென்ற போது காய்ச்சலின் அறிகுறிகளைக்கண்டா. மருந்துகள் கொடுத்தும் சுகம் பெறவில்லை. விண்ணகம் சென்று விட்டாள். நாம் இறுதி அருட்சாதனங்களைக் கொடுத்தோம். மீளவும் கல்லறை திறக்கப்பட்டு எமது 3 வயது பிரான்சிஸ் சென்று விட்டார். இவர் நல்ல குடும்பத்து இந்து மதத்தவர். இரணைப்பிள்ளைகளில் ஒருவர். அவர்களின் சாஸ்திர முறைப்படி 7 வயதுவரையும் இவனைத் தூரவிடாவிட்டால் தந்தைக்கும் வீட்டிற்கும் கூடாது என்றபடியால் காட்டிலே விடவேண்டும், தாய் இதை விரும்பவில்லை. அவ்வேளை போன்ஜீன் ஆயர் ஓர் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்ட வந்தார். அவர் கைவிடப்படும் குழந்தைகளை ஏற்பார் என்றபடியால் அவரிடம் ஒப்படைத்தாள். அப்போது 9 மாதக்குழந்தை, அவனையும் இறைவன் அழைத்துவிட்டார்.

அதைத் தொடர்ந்து சீலியும் இறைவனிடம் சென்று விட்டாள். முதலில் அம்மை, சின்னமுத்து நோயால் தாக்கப்பட்டாள். பின்பு வாயிலே ஒரு புண் ஏற்பட்டு அது முரசு, வாய், உதடு வரை சென்றது. கதைக்க முடியாதிருந்தது. சிறுமிகள் அவளைச் சூழநின்று செபித்தனர். சிலவேளைகளில் வேதனை மிகுதியால் அழுவாள். அப்போது அவளைக் கவனிக்கும் சகோதரி ''அழாதே'' இயேசுவின் சிலுவையின் துன்பங்களை உன் துன்பத்துடன் சேர்த்து ஒப்புக்கொடு என்றா. அவளும் ''ஆம்'' எனக்கூறி இறுதியில் அவள் வேதனைக்கு விடுதலை கிடைத்தது.

**ஐப்பசி 1881**

ஆடி 4ந் திகதி போஞ்சின் ஆண்டவர் எம்மிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு தென்பகுதியில் 3 மாத சந்திப்புக்காகச் சென்றார். எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாகல் சகோதரிகளும் இவர் வருகையால் மகிழ்வார்கள் என நாம் எம் பிரிவை ஏற்றுக்கொண்டோம்.

பின்பு ஓய்வு நாட்கள் ஆரம்பமாகி எம் சகோதரிகளைக் கிராமப்புறத்திற்கு அனுப்பினேன். அங்கு அவர்கள் நல்ல ஓய்வு எடுக்க முடிந்தது. ஒரு வருடத்தில் முதல் 6 மாதங்களும் கடும் சூடு, எனவே உடற்சுகத்துக்கு இந்த ஓய்வு நாட்கள் தேவையாக இருந்தது. Fr. Flanagan எமது தேவையை நிறைவேற்ற கொழும்புத்துறையில் உள்ள தனது வீட்டை எமக்குத் தந்தார். கடலுக்கு அண்மையில் இது அமைந்துள்ளது. நகரத்தின் சத்தம் சந்தடிக்கு தொலைவில் உள்ளது. தினமும் காலையில் இங்கு வந்து மாலையில் நகர்திரும்பினோம். இது எம் உடற்சுகத்திற்கு ஏற்றதாக இருந்தது. அத்துடன் திவ்விய நற்கருணைப் பிரசன்னமும் வீட்டில் இருந்தது. ஒன்றுக்குமே குறைவில்லை. இறுதி நாளில் ''இறைவனின் பணியாளர்'' என்ற கடமையை உணர்ந்தவர்களாக தாராள மனப்பான்மையுடன் எம் அன்றாட பணிகளைச் செய்ய முற்பட்டோம்.

சில நாட்களின் பின் எம் பணிகளுக்கு Lady D 2 பதாகைகளும் பல பரிசுப் பொருட்களும் லொத்தருக்கு அனுப்பியிருந்தா. திருஇருதயப்படம் தேவதாயின் படம் இவற்றை நன்றியுடன் ஏற்றோம் ஆவணி மாதத்தில் எம் சுதேச சகோதரி மறியற் வியாதியினால் பீடிக்கப்பட்டா. ஆவணி 23ந் திகதி கடைசி அருட்சாதனங்களைப் பெற்றா. மாதாபக்தியும், விசுவாசமும் அவவைக் காப்பற்றியது. தற்போது பூரண சுகம் பெற்று பல்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளா.

ஆவணி 31ந் திகதி எமது லொத்தர் சீட்டிழுப்பு நடைபெற்றது. 15நாட்கள் வரை நீடித்தது, பலர் வந்து சென்றார்கள், பலவருடங்கள் இப்படியான சீட்டிழுப்பு யாழில் நடைபெறாததால் பலர் இதைப்பார்க்க வந்து மகிழ்வுற்றனர்.

புரட்டாதி 2ந் திகதி Sr. M. எமிலிஜேன்சன் Sr. M. ஸ்ரனிஸ்லாஸ் கின், Sr. M. பிரான்சிஸ் மூவரும் திரிகோணமலையில் ஒரு மடம் ஆரம்பிக்கச் சென்றார்கள். Sr. M. லிகோரி கப்பல் வரையும் சென்று வந்தா. 36 மணித்தியாலங்கள் கடலில் பயணம் செய்து மகிழ்வுடன் திருமலையை வந்தடைந்ததாகவும் அங்கு அமோக வரவேற்புக் கிடைத்த செய்தியும் எனக்கு வந்தன.

எமது போடிங்பிள்ளை ''இவ்லின்'' சமயம் படித்து கிறிஸ்மஸ் விழாவில் திருமுழுக்குப் பெறவுள்ளா. அவவின் தந்தையும் மகளின் வழியைத் தொடரவுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்குத் திருக்குடும்பச் சபையை மீளவும் ஆரம்பிக்க விருப்பமாயுள்ளது. 20 வருடங்களுக்கு முன் சேவியர் தாயார். இப்பணியைத் தொடர விரும்பியும் காலம் அதற்கேற்றதாக இருக்கவில்லை. திருக்குடும்பத்தின் பொதுநிலையினர் பணிபுரிவது அவர்களுக்கு ஒரு மேன்மையான நிலையாக இராது, ஓர் இழிநிலையாகக் கருதப்பட்டது, தற்போது அந்த நிலைமைமாறியுள்ளது. எனவே பலகாலமாக இருந்த எமது ஆவலைப்பூர்த்தி செய்ய முடிகிறது. தற்போது 20 பேர் உள்ளனர். ஞாயிறு பின்னேரம் மடத்திற்கு வந்து ஞானவாசனை சிலவற்றை வாசிப்பர். தொடர்ந்து சில ஒழுங்கு முறைகள் விளக்கம் கொடுக்கப்படும். பின்பு நற்கருணை ஆராதனை வரை ஒய்வு எடுப்பார்கள். சிலர் வியாழக்கிழமையும் வந்து நற்கருணை ஆராதனை முடிய ஏழைகளுக்கு உடை தயாரிப்பர். இவர்களில் ஒருவர் 2 சிறுமிகளுக்கு உடை கொடுத்து அவர்கள் பாடசாலை சென்று வர உதவி செய்கிறாள். இதனால் அவர்கள் கிறீஸ்தவக் கல்வி பெற முடியும். இவ்வாறே எமது பணி சிறப்புற்று விளங்கி இந்த நாட்டின் அபிவிருத்திக்கு உதவுவதாக!

**தை - 1882**

முன் தவணை அறிக்கையில் போஞ்சீன் ஆயர் இலங்கையின் தென்பகுதிகளுக்கு சென்றதாக எழுதியிருந்தேன். ஐப்பசி 11ந் திகதி மீளவும் மெலிசான் ஆயரையும் கூட்டிக் கொண்டு இவ்விடம் வந்தார். போஞ்சீன் ஆயரின் உடல் நலம் தேறி இருந்தது. பலவாரங்கள் மலைநாட்டில் செலவிட்டதால் நற்சுகம் கிடைத்தது. யாழில் அதிகம் சூடு, உடல் நலத்திற்கு நல்லதல்ல.

ஐப்பசி 24ந் திகதி நற்கருணை ஆராதனையின் போது புனித ஹயசிந்தின் புனித பண்டம் பெரியகோவிலில் வைக்கப்படும் என்று ஆயர் அறிவித்தார். மழையின்மை காரணமாக நெல்விதைக்க முடியவில்லை. வரட்சிக்கு இவர் வழியாகச் செபித்துப் பலன் பெறலாம் என்றதால் ஆயர் உரைக்கு வரவேற்புக்கிடைத்தது. எனவே ஆயர் பூசை உடுப்புக்களை அணிந்து கொண்டு மெலிசான் ஆயருடன் ஆயரில்லம் உள்ள ஆலயத்திற்கு மக்களுடன் பவனியாகச் சென்றார். அங்கே மக்கள் மெழுகுதிரியுடன் வர 4 குருக்கள் அந்தப் புனித பண்டத்தை எடுத்து வந்து நவநாட்கள் செய்ய ஆயத்தமானார்கள். 2 நாட்களில் மழை பொழிய ஆரம்பித்தது. விதைக்கவும் முடிந்தது. இந்து சமய மக்களும் மகிழ்வுற்றனர். ஆயர் தன் கடவுள் மூலம் தனக்கு விரும்பியதைப் பெற்றுக் கொள்கிறார். என்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாட்கள் நிறைவடைந்ததும் புனித பண்டம் ஆயர் இல்லத்துக்கு மீளவும் எடுத்துச் செல்லப்பட்டது. பின்பு யூபிலி வேலைகள் ஆரம்பமானது. 15 நாட்கள் உரையாற்றப்பட்டது. நகர்முழுவதும் விழாக்கோலம் பூண்டது. எம் அநாதைப்பிள்ளைகளும் பங்கு மக்களுடன் சேர்ந்து கொண்டனர்.

எம் சுதேச சகோதரிகளும் போஞ்சீன் ஆயர் வழிநடத்துதலில் தியான ஒடுக்கம் செய்தனர். அதே தினத்தில் ஓர் அநாதைச் சிறுமி அதிக நீருள்ள கிணற்றில் வீழ்ந்து விட்டாள். அதே வேளை சிஸ்ரர். மேரி. லிகோரி அண்மையில் இருந்ததால் சிறுமியின் அவலச் சத்தம் கேட்டு ஓடிச்சென்று ஒரு கயிற்றை எடுத்து வந்தா. சிறுமி தன் சுயநிலையை இழந்தாலும்,மீளவும் தன் நிலைக்கு வரும் போது ''மரியே'' என்னைக் காப்பற்றும் என்றாள். அப்போது சிஸ்ரர் கயிற்றைப் பிடிக்கும் படியும் மாதா துணை செய்வா என்றும் கூறி ஒரு ஏணியை எடுத்து வந்து பிள்ளையைக் காப்பாற்றி விட்டா.

இத்தவணையில் நாம் 2 சிறுமிகளுக்குத் திருமுழுக்கு அளித்தோம். ஒரு சிறுமிக்கு வயது 2 தாய் அவளை Sr. St. Praxede இடம் குணமளிக்கக் கூட்டி வந்தாள். நாம் பிள்ளையின் நிலையை அறிந்து உடனே திருமுழுக்குக் கொடுத்தோம். தாய் இதை அறியவில்லை. மறுநாள் குழந்தை இறைவனிடம் சென்று விட்டது, ஆங்கில வகுப்பில் பிள்ளைகள் கூடிக்கொண்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் வைகாசி 1882

சிலகாலமாக எமது பாலர்களைக் கவனிப்பதற்கு முற்பணம் இல்லாதது பற்றி உங்களுக்கு எழுதியிருந்தேன். ஆண்டுத்தொடக்கத்தில் இப்பணி நல்ல பலனைக் கொடுத்தது. பின்பு 4 வருடங்களாக இவர்களைப் பராமரித்து வரும் சிஸ்ரர் அசம்ஷன் முதல் இல்லாதபடியால் கவலைப்பட்டா. நாம் இறைசித்தத்துக்குப் பணிந்த மனதைக் கேட்டு வருகிறோம். எனினும் நம்பிக்கையை இழக்காது, எம்பணி நலிந்து போனாலும் நாம் செய்து வருவோம். எனினும் கிறீஸ்தவர்களின் அன்புப் பணி எமக்கு உதவி புரிந்தால் ஒரு பெரிய கட்டிடம் கட்டி முன்பு செய்ததிலும் பார்க்கக்கூடியவிதமாகப் பணிபுரியலாம். அதேவேளை 54 சிறிய சம்மனசுகளும் ஆரம்பத்தில் இருந்தே விண்ணகம் சென்றுள்ளனர். அவர்கள் எங்களுக்காகச் செபிக்கிறார்கள்.

தை 3ந் திகதி பரிசளிப்பு விழா நடைபெற்றது. 2 ஆயர்களும் எம்பணிகளை ஊக்கப்படுத்தி இதில் பங்குபற்றினர். பிள்ளைகள் புனித ஜேர்மயின் அம்மாள் நாடகம் நடித்தனர். அடுத்தகிழமை யாழ் கத்தோலிக்க பாதுகாவலன் பத்திரிகையின் யாழ் மடத்தின் பரிசளிப்பு என்னும் தலைப்பில் வந்த செய்தியை உங்களுக்கு எழுதுகிறேன்.

சென்ற செவ்வாய்க்கிழமை யாழ் மடத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பலர் பங்குபற்றினோம். மாலை 6 மணியளவில் (Piano) இசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. ஒருகவர்ச்சியான உள்ளத்தைத்தொடும் பொருள் பொதிந்த புனித ஜேர்மயின் அம்மாளின் வாழ்க்கையை நடித்துக்காட்டினர். குழந்தைகள் இதைச் செய்வது இலகுவான காரியமல்ல. இந்த ஏழைப் பெண்ணின் பொறுமை துன்பங்களுக்கு வாழ்வு கொடுத்து மடத்துப்பிள்ளைகள் சிறப்பாக நடித்தனர். இதை நடித்த பிள்ளைகளையும், பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம். சிறப்பாக ஜேர்மயின், ஞானத்தாய், அவளின் சகோதரன் இவர்களின் பாத்திரங்கள் நடித்தவர்கள் போற்றுதற்குரியவர்கள். இடைவேளையில் மியூசிக் விளையாடினர். தொடர்ந்து பரிசளிப்பு நடைபெற்றது. இறுதியில் போஞ்சீன் ஆண்டகை உரையாற்றினார். அவ்வேளையில் இப்புனிதையின் புண்ணியங்களைப் பின்பற்றுமாறும், வருகிற வருடத்தில் இன்னும் சிறப்பாகச் செய்தால் பலரும் இதைப் பார்க்க வரவேண்டும் எனக்கூறி உரையை நிறைவு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வருடாந்த தியான நாட்கள் 8ந் திகதி தொடங்கி 15ந் திகதி வரைக்கும் நடைபெற்றது. எமது ஸ்தாபகருக்கு முதல் சகோதரிகள் அவர் பணிக்கு ஒத்துழைப்பு நல்கியது போன்று, எம்பணிகளை நாம் ஆர்வமுடன் செய்ய இத்தியானம் உதவியாக இருந்தது. எமது அநாதைச் சிறுமிகளும் அமைதிகாப்பாற்றினர். மடத்தின் கைப்பகுதியில் தொழிலாளர் வேலை செய்து கொண்டிருந்தனர். சத்தம் ஏற்படாமல் எமது ஆயத்த கன்னிகை இவ்லின் (Eveline) மேற்பார்வை செய்தா.

சாள்ஸ் கொலின் குருவானவர் தியானத்தில் உரையாற்றினார். தியானம் முடியும் போது எமது ஆன்மாவில் புதிய ஆர்வம் ஊற்று எடுப்பதைக் கண்டோம். சில நாட்களின் பின்பு பாடசாலைகள் ஆரம்பமாகியது. ஓர் அநாதைப் பெண்ணின் திடீர் மறைவு பிள்ளைகளுக்கு வேதனை அளித்தது. பங்குனி 19ந் திகதி புனித சூசையப்பரின் திருநாளைக் கொண்டாடினோம். எம் சிற்றாலயத்தில் ஆயரால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலியின் பின்பும் எம்மை ஒன்று கூட்டிச் சல்லாபித்தார். போஞ்ஜீன் ஆண்டகை தந்தைக்குரிய ஊக்குவித்தலும் நல்ல அறிவுரைகளும் நிறைந்த உரையை அளித்தது எமக்கு ஒரு புதிய சக்தியைக் கொடுத்தது.

## புரட்டாசி 1882

முதல் அறிக்கையின் பின்பு சில நிகழ்வுகள் தான் நடைபெற்றன. சித்திரை 6ந் திகதி பெரிய வியாழன் வழிபாடுகள் எம் ஆலயத்தில் நடைபெற்றன. கிறீஸ்து தன் துன்பங்கள் சிலுவை மூலம் இக்கிழமையில் எம்மைச் சந்திக்க வந்தார். ஓர் அநாதைச் சிறுமி வயிற்றில் வீக்கம் ஏற்பட்டுத் துன்புற்றாள். வியாழக்கிழமை காலை நாம் அவளுக்கு கடைசி அருட்சாதனங்கள் கொடுப்பித்தோம். மாலையில் அதிகம் வேதனைப்பட்டாலும் அடுத்தநாள் காலை சுகப்பட்டாள். வைத்தியரும் அதை உறுதிப்படுத்தினார். தற்போது சிறுமி சுகமாக இருக்கிறாள்.

வைகாசி மாதம் முதற்கிழமையில் எமது ஒரு அநாதைப் பெண்ணுக்குத் திருமணம் நடைபெற்றது. பெற்றோர் பிறமதத்தவராக இருந்தபடியால் மரியன்னாவுக்கு தமது சமயத்தில் மணம் செய்ய விரும்பினர். அவள் அதை விரும்பாதலால் சோற்றுடன் ஒரு வகை மிளகாயைக் கலந்தனர். அந்த நாள் மாலைநேரம் அவள் அறிவிழந்து விழுந்தாள். உடனே மணமகன் அவளை எம்மிடம் அழைத்து வந்தான். அவளுக்காகச் செபிக்கும்படி வேண்டினான். அவனும் செபித்து திருப்பலி ஒப்புக்கொடுத்து, மாதாவின் பாதத்தில் 2 மெழுகுதிரி கொழுத்திச் செபித்தான். அவன் வேண்டுதல் கேட்கப்பட்டு அவள் சுகமடைந்தாள். பின் பிரியாவிடைகூறித் தன் கிராமத்துக்கு அழைத்துச் சென்றான். தற்போது ஒரு பாடசாலையில் பணிபுரிந்து வருகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்களால் எம்முடன் இருந்த ஓர் அநாதைப் பெண், மாலை நற்கருணை ஆராதனைக்குச் சென்று அங்கிருந்து ஓடிவிட்டாள். மடத்திற்கு வந்த பின்பே இதை நாம் அறிந்தோம். அடுத்தநாள் வரை காத்திருந்தோம். அவளுக்குப் பொறுப்பாக இருந்தபெண் இவள் திருநீறு (விபூதி) பூசிய வண்ணம் இருந்ததாகவும், திரும்பி வரமாட்டாள் எனவும் கூறினாள்.

வைகாசி மாதத்தில் ஒருநாள் ஒரு தமிழ்ப் பெண் என்னைக் காண விரும்பினாள். தமிழ் தெரியாததால் சிஸ்ரர். லிகோரியை அனுப்பினேன். சகோதரியைக் கண்டதும் மண்டியிட்டு ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்து தன் கருத்துக்காக 3 சகோதரிகள் ஒரு நேர உணவை எடுக்கும்படி கூறினாள். பின் இறைவன் எங்கே இருக்கிறார். என்று கேட்க அவ கோயிலுக்கு அழைத்துச் சென்றா. அங்கும் இயேசுவின் திருஇருதய சுரூவத்தின் முன் விழுந்து வணங்கிய பின் வெளியேவரும் போது என்னையும் சந்தித்து மீளவும் சிஸ்ரர். லிகோரிக்குக் கூறியவற்றை எனக்கும் கூறித் தன்பெயர் ''யேக்கப்பா'' எனக்கூறிச் சென்றாள். அவள் தன் கருத்தைக் கூறாவிடினும் திருஇருதய ஆசியைப் பெற்றிருக்க வேண்டும்.

இயேசு பரலோகம் சென்றநாளில் எமது இவ்ளின் திருமுழுக்குப் பெற்றாள். பின்பு பாவசங்கீர்த்தனமும் செய்து 15 நாளின் பின் நற்கருணைத் திருநாளில் முதல் நன்மையும் பெற்றாள். நன்கு ஆயத்தப்படுத்தி Fr. Murphy மேவ்வி இவளை அனுப்பியதால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். எனினும் பெற்றோர் யாழ்ப்பாணத்தில் இல்லை. அறிவிக்க நேரமுமில்லை. வெள்ளைத்துணியும் இல்லை எனக்கூறியபோது ''இயேசு தன் உள்ளத்தையே பார்க்கிறார்'' ''அதுவே போதும்'' என்றாள். இவவை ஆயத்தப்படுத்திய போது தந்தை நீர் சமயம் மாறியதை விரும்பாவிடில் என்ன செய்வாய் என்று கேட்டபோது வீட்டைவிட்டு வெளியேறுவேன் என்றாள். அத்துடன் கண்ணீரும் வெளிவந்தது ஏன் எனக்கேட்ட போது, தான் இறைவனையே விரும்ப வேண்டும் என்றாள். இத்தகைய மனமாற்றம் எம் சகோதரி Sr. Jean என்பவவையே சாரும். இவ்ளின் இவவை அறியாவிடினும் அவளின் மாமியை முதல் நன்மைக்கு சிஸ்ரர் ஆயப்படுத்தினா. சிஸ்ரர் இறந்தபின் ஒருநாள் சிற்றன்னை பார்க்க வந்த போது சிஸ்ரரைப் பற்றிக்கூறினாள். இந்த வார்த்தைகள் இவ்ளினுக்கு உற்சாகத்தை அளித்தன. நற்கருணைத் திருநாள், திருஇருதயத்திருநாள் சிறப்பாக நடைபெற்றது. பெரிய கோவிலில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் பல கோவில்களிலும் எழுந்தேற்றம் செய்தார்கள்.

ஆனி 22ல் திருஇருதய வெளிப்பிள்ளைகளுக்குப் பரிசளிப்பு நடைபெற்றது. மறைக்கல்விக்கு, பாடசாலைக்கு, மாதாந்த பாவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீர்த்தனத்துக்கு ஒழுங்காக வருகை தந்தவர்களுக்குப் பரிசாக சுரூவங்கள், சிலுவை, வரணிக்கம் என்பன கொடுக்கப்பட்டன. நாம் அங்கு சென்றதும் எல்லோரும் ''ஸ்தோத்திரம்'' என்று கூறி எம்மை வரவேற்றனர். அமர்ந்ததும் பரிசளிப்பு ஆரம்பமானது. ஒரு வெள்ளை றோஸ்முடி முதற்பரிசு, ஒரு 15 வயதுப் பிள்ளைக்குள் கிடைத்தது. அவள் அதை எதிர்பார்க்கவில்லை. நடுக்கத்துடன் அதைப் பெற்றுச் சென்று அமர்ந்ததும் கண்ணீர் சொரிந்தாள். இவ்வாறான பரிசுகள் அவர்கள் தம் சமயக் கடமைகளைச் செய்ய உதவி செய்யும்.

இன்னும் ஒரு நகைச் சுவை நிகழ்ச்சியுடன் என் அறிக்கையை முடிவு செய்கிறேன். இங்கு அறைகளுக்கு மேல் சீற்றுக்குப் பதிலாகப் பாய்கள் விரிப்பர். மழை காலங்களில் எலிகள் அதில் மேல் ஏறி அதில் உள்ள துவாரங்கள் மூலம் எம்தலைமேல் விழும், ஒருநாள் ஒரே சத்தம். ஏதோ விழுந்து ஓடித்திரிந்தது. இறுதியில் அது மரநாய் எனக் கண்டு பிடித்தோம். எம் ஒய்வுவேளையில் இதைக்கூறிச் சிரித்தோம்.

## கார்த்திகை 1882

எமது கோடைக்கால விடுமுறையை கொழும்புத்துறையில் ஒருகிழமை செலவிட்டோம். நற்கருணைப் பிரசன்னத்தில் எம் உடல், ஆன்மசக்திகளைப் புதுப்பித்தோம். பின்பு மீளவும் எம் அன்றாட பணிகளுக்குத் திரும்பினோம். ஆடி 16ந் திகதி பாடசாலை மீளவும் ஆரம்பமானது. புனித ஜேர்மயின் பிள்ளைகளுக்கு 19ந் திகதி பரிசளிப்பு நடைபெற்றது. 31ந் திகதி பிரான்சில் இருந்து கடிதம் வந்தது. அதில் நீங்கள் குறிப்பிட்ட படி எம் துறவிகளின் பணிக்கு எதிராக வரும் எல்லாத் தடைகளும் அகன்று போகச் செபிக்கின்றோம்.

ஆவணி மாதத்தில் ஒரு சுதேச சகோதரியின் உடல் நலம் பாதிக்கப்பட்டது. காய்ச்சலினால் வருந்தினா. இறைவன் எம்மிடம் மேலும் ஒரு தியாகத்தைக் கேட்கிறாரா எனப் பயந்தபோது மாதாவின் இரக்கத்தினால் எம் சகோதரி மாகிறெற் மேரி நலம் பெற்றுத் தன் பணியைத் தொடர்ந்தா.

ஆவணி 15ந் திகதி 13 வயதுச் சிறுமி எம்மிடம் வந்தாள். அவள் சிறுவயதிலேயே பெற்றோரால் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டாள். பெற்றோர் கிறீஸ்தவர்கள். ஏற்கனவே தலைமயிரை வெட்டியும், நகைகளை விரும்பாதும் இருந்தாள். இது சுதேசிகளுக்குக் கஷ்டமான ஒரு விடயம். எனினும் இந்த ஆன்மரியாவை நாம் வயது வரும்வரை அநாதைச் சிறுமிகளுடன் விட்டு ஒய்வு நேரத்தில் அவள் நடத்தையைக் கண்காணித்து வருகிறோம். நல்ல முறையில் நடந்து வருகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதி மாதம் முதற் கிழமையில் போஞ்சீன் ஆயர் Fr. Pullicani, Fr. மோறுவா உடன் வந்து சேர்ந்தார். வைகாசி 3ந் திகதியில் இருந்து இவ்விடம் இருக்கவில்லை. அத்துடன் மெலிசான் ஆயர் 4 மாதம் இவ்விடம் இல்லாது அண்மையில் வந்திருந்தார். அத்துடன் ஆயர் எமக்கு ஒரு பெரிய படம் கொண்டு வந்தார். அதில் இயேசு பாதாளத்தில் இறங்கியது வரையப்பட்டிருந்தது. அதை நாம் ஆலயசுவரில் மாட்டியுள்ளோம்.

தற்போது ஆங்கில, சுதேச வகுப்புப்பிள்ளைகளில் பக்தியைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எம் சகோதரி சமயம் படிப்பிக்கிறா. கட்டளைகள், கற்பனைகள், திருவருட்சாதனங்களைப் பற்றிப்படிப்பிக்கும் போது பிள்ளைகள் சமய அறிவைப் பெற்றுக் கொள்கின்றனர். தாம் பெற்றுக் கொண்ட அறிவிற் கேற்ப கிறீஸ்தவ வாழ்வை மேற் கொண்டு அனுசரிக்கின்றனர். வீட்டில் பெற்றோருக்கும் வழிகாட்டிகளாக திருப்பலிக்குச் சென்று, மறைக்கல்வி வகுப்புகளுக்கும் செல்கின்றனர்.

**3 மாசி 1883**

1882ம் ஆண்டு இறுதி 3 மாதங்களையும் பார்க்கும் போது பல துன்பதுயரங்கள் வந்து கல்லறைகள் திறக்கப்பட்டதையும், பல நம்பிக்கைகளின் ஊடாகச் சென்றதையும் காணக்கூடியதாக உள்ளது.

முதலியார் சவிரிமுத்து (சுதேசி) அவர்களின் மறைவு பற்றிக் கூறுகின்றேன். எமக்கு மட்டுமல்ல ஆயர், குருக்கள், மக்கள் எல்லோருக்கும் இது பெரிய இழப்பு. இதைப்பற்றி எம் பாதுகாவலன் பத்திரிகையில் வந்த செய்தியைக் கூறுகிறேன்.

முதலியாரின் மரணச் சடங்கிற்குப் பல இடங்களில் இருந்தும் மக்கள் வந்திருந்தனர். பாடசாலை மாணவர்களும் பவனியில் பங்குபற்றினர். ஏறக்குறைய 1500 பேர் பவனியாகச் சென்றனர். பிரேதப் பெட்டியில் புனித பெரிய கிரகோரியாரின் பட்டம் ஆளுநரின் பட்டத்திற்கருகில் காணப்பட்டது. Fr. புலிகானி, குருமடமாணவர்கள் பாட்டுக்களுக்குப் பொறுப்பாக இருந்தனர். ஆயர் போஞ்சீன் ஆண்டகை திருப்பலி நிறைவேற்றினார். Fr. புலிக்கானி சேமக்காலை வரை சென்றார். மறுநாள் மெலிசான் ஆண்டகை ஆன்ம இளைப்பாற்றிக்காகத் திருப்பலி ஒப்புக் கொடுத்தார். இவர் எம் பணிகளுக்குப் பெரிதும் உதவியாக இருந்தார். வரும் லொத்தர் இழுப்புக்கும் இவரையே நம்பி இருந்தோம்.

St. Bernard தாயாரின் 5ம் வருட மரண நினைவும் எம் உள்ளத்திற்குத் துன்பத்தைத் தந்தது. எனினும் விண்ணகத்தில் ஒரு பாதுகாவலி இருப்பதை உணர முடிகிறது. ஐப்பசி 15 சேவியர் தாயாரின் மறைவும், கார்த்திகை 7 Bonnat தாயாரின் மறைவும் எமக்குக் கிடைத்தன. சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசகரின் கூட்டத்தில் அவ நல்ல முறையில் பணியாற்றிய செய்தி அண்மையில் கிடைத்தது. அத்துடன் இறைவனும் அவவை அழைத்து விட்டார். இது திருக்குடும்ப சபைக்கே ஒரு பெரிய இழப்பு. எனவே எம் சிந்தனைகள் ஐரோப்பிய சகோதரிகளை நோக்கிச் செல்கின்றன. இந்த இழப்பை ஈடுசெய்ய இறைவனை வேண்டுகின்றோம். கார்த்திகை 10ந் திகதி எமது பங்கில் இருந்து Fr. P. பெலிசியர் மரணமானார். சிலகாலமாக வியாதியுற்றிருந்தார். எமது பணிகளுக்குச் சிறப்பாகத் திருமண அருட்சாதனங்களுக்கு கைகொடுத்து உதவினார். இவரின் இறப்பு எல்லோருக்கும் இழப்பு. பிள்ளைகள் பணம் சேகரித்து அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுத்துச் செபித்தனர்.

முன்னைய கடிதத்தில் எம் ஆங்கில வகுப்புப் பிள்ளைகள் சமய வகுப்புக்கள், திருப்பலிக்கு வருவது பற்றி எழுதியிருந்தேன். இது தற்போது மேலும் அதிகரித்துள்ளது. எமது 3 சின்னச் சகோதரிகள் தற்போது கால்நடையாக அவர்களிடம் சென்று அழைத்து வருகின்றனர். ஏனென்றால். வழமையாக நடைபெறும் வாகன சேவை தாமதித்து வருகின்றது மாலையில் வாகனமூலம் வீடு திரும்புவர். எம் சகோதரிகள் மழை பெயதாலும் மகிழ்வுடன் சென்று வருவர். இவ்லின் உடைய தந்தையும் இப்போ. கத்தோலிக்கராக வரவுள்ளார். கடும் வியாதியுற்று இப்போது ஒய்வு எடுக்கின்றார். நாம் அவர் குணமடைவதற்காகச் செபித்தோம்.

எமது ஆங்கில வகுப்பில் 2 வருடங்களுக்கு முன் துன்பம் ஒன்று ஏற்பட்டது. ஒரு போதகர் வந்து நல்ல வாக்குறுதிகள் கொடுத்ததால் பிரிவினை மதப் பிள்ளைகள் பிரிந்து சென்றனர். பின்பு அவருக்குப் பாடசாலை மாற்றம் கிடைத்தது. போடிங் பார்த்த ஆசிரியையும் மணம் முடித்துச் சென்று விட்டா. எனவே பாடசாலை வீழ்ச்சியுற்றது. பெற்றோர்கள் திரும்பவும் பிள்ளைகளை எம்மிடம் கொண்டு வந்தனர்.

இத்தவணையில் நாம் பல கிறீஸ்தவ குடும்பங்களை உருவாக்கினோம். உருவாக்கம் கஷ்டம் என்றாலும் விளைவு நல்லது. திருமணங்கள் திருச்சபையால் ஆசீர்வதிக்கப்பட்டு ஒழுக்கத்தில் சிறந்து விளங்குகின்றன.

திருஇருதய வகுப்புகளிலும் ''சம்மனசுகளின் சேனை" என்று ஒரு கூட்டத்தை உருவாக்கியுள்ளோம். ஒவ்வொரு ஞாயிறும் கூட்டத்திற்கு வந்து எமது உரைகளைக் கேட்கின்றனர். இதன் வழியாகப் பக்தியில் சிறந்து விளங்குகின்றார்கள். சில நாட்களின் முன்பு திருஇருதயப் பாடசாலைக்குச் செல்லும் சகோதரி ஒரு பெரு மூச்சைக் கேட்டாள். பின்பு இன்று செபம் செய்யவில்லை. எம் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. என்று கூறக்கேட்டாள். அன்று காலை அவர்கள் செபிக்கவில்லை என்று சகோதரி அறிந்து கொண்டாள். பலர் இதை அறிந்து சிரித்தாலும், செபத்தின் மகத்துவத்தை எம் சகோதரி விளக்கிக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம் சித்திரை 1883**

எமது குழுமத்தின் வருடாந்த தியானநாட்கள் இந்த அறிக்கையில் முதலாவதாக வெளிவருகின்றன. நல்ல இறைவன் எம்மேல் தன் அருட்சுடர்களை எம் ஆயர் ''போஞ்சீன் ஆண்டகை வழியாகப் பொழிந்தார். அவர்தன் வழமையான பணிகளையும் பொருட்படுத்தாது தினமும் ஆயர் இல்லத்தில் இருந்து எம்மடம் வரைக்கும் எரிக்கும் சூரிய வெய்யிலில் வந்து தந்தைக்குரிய ஆசிகளையும் உரைகளையும் வழங்கினார். தமது வார்த்தையினால் தன் குருத்துவப்பணி, அதிகாரங்கள் பற்றி எடுத்துரைத்து எம் ஆன்மாவையும் மனம்மாற்றி நல்ல தீர்மானங்கள் எடுக்க உதவினார். நிலைத்திருந்தல் (Perseverance) பற்றியும் எமக்குக் கூறினார்.

தை 23ந் திகதி ஆயர் சமேரியா ஆண்டகையின் ஆன்மஇளைப்பாற்றிக்காகப் பெரிய கோவிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. நாமும் சென்று பங்குபற்றினோம். ஒவ்வொரு வருடமும் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் எம்முதற் சகோதரிகளை இங்கு வழிநடத்தியவர் தற்போதும் எம் உள்ளங்களில் பதிந்து இந்த அந்நியநாட்டில் உங்கள் பிள்ளைகளுக்கு பக்கபலமாக உறுதுணையாக இருக்கின்றார் என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேநாளில் மரியாளின் பொது ஆலோசகர் மடலும் கிடைத்தது. எம் சபை முதல்வர், O.M.I. எங்கள் நல்ல தாய்மாரும் எம்மிலும், எம்பணியிலும் காட்டும் அக்கறை, கரிசனைகள் மகிழ்ச்சி தந்தன. இறந்த எம் பெற்றோருக்கு எழுதிய செபங்கள், வழிமுறைகள் எம் உள்ளத்தை அப்படியே ஊடுருவிச் சென்றன. இதையிட்டு யாம் சகோதரிகள் நன்றி கூறுகின்றோம், மகிழ்ச்சி அடைகின்றோம். 30ம திகதி எம் சுதேச சகோதரிகள் தம் தியான நாட்களை முடித்து வார்த்தைப்பாடுகளைக் கொடுத்து உடுப்புப் பெற்றுக்கொண்டனர். சிறப்பாக றெஜீனாவுக்கு நல்ல மகிழ்ச்சி. பிறசமயத்தில் பிறந்து வளர்ந்து இறைவனின் பத்தினியாக வாழவிரும்பினாள். ஒரு இரவு ஒரு கத்தியையும் (தற்பாதுகாப்புக்காக) எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டாள். 5 வருடங்களின் பின்பு இராயப்பர் சபையில் நவகன்னிகையாகச் சேர்ந்தாள். இந்த 5 வருடங்களிலும் மற்றவர்களுக்கு முன்மாதிரிகையான வாழ்வும், பாதுகாவலியான ஜேர்மயின் அம்மாளையும் உதவியாக வைத்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசிமாதத்தில் 2 சகோதரிகள் நவகன்னியர் இல்லத்தில் இருந்து திருமலையில் தம் பணி ஆற்றப்புறப்பட்டனர். நான் அவர்களை அழைத்துக் கொண்டு சென்றேன். சென்ற போது புதிதாக ஆரம்பித்த ஆங்கில வகுப்புப்பிள்ளைகள் மக்களுடன் சேர்ந்து திருமலைத்துறையில் எமக்கு அமோக வரவேற்புத் தந்தனர். இந்தத் துறைமுகம் அண்மையில் தான் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. அங்கிருந்து பெரிய வியாழக்கிழமை நான் யாழ்ப்பாணம் திரும்பிவிட்டேன்.

நான் யாழில் இல்லாத நேரம் பாடசாலை மாணவர்கள், சபைப்பிள்ளைகள் தம் தியானத்தைச் செய்தார்கள். கோவில் இந்த இளம் பிள்ளைகளால் நிரம்பி இருந்ததென்றும், பங்குக்குருவும் கரிசனையுடன் தியானத்தை நடாத்தினார் எனவும், (Journal of the convent) மடத்தின் நாளேடு மூலம் அறிந்தேன். இறுதிநாளில் உத்தரியங்கள் கொடுக்கப்பட்டன. இந்த நாட்களில் நாம் போர்டோவின் ஆயர் (Donnet) டொனெற் ஆண்டகைக்கு 40 நாள் செபங்கள் எழுதிக்கொடுத்தோம் எனினும் எமது நல்ல பிதாவின் பணிக்கு உதவிய அவரின் மரணச் செய்தி மிகவும் துயரைக் கொடுத்தது.

### ஆடி 1883

சித்திரை 3ந் திகதி திருச்சபையுடன் சேர்ந்து புனித சூசையப்பரின் திருநாளைக் கொண்டாடினோம். அன்று ஆயர் போஞ்சீன் ஆண்டகை தன் 2 பிரதிநிதிகளுடன் எம் ஆலயத்தில் ஆடம்பரத்திருப்பலி ஒப்புக் கொடுத்தார். திருக்குடும்பத்தின் தலைவரைக் கொண்டாடுவது எமக்கு மகிழ்ச்சி. அன்று காலையில் றோமில் இருந்து ஆயருக்கு ஒரு தந்தி வந்தது. அதை அவர் எங்களுக்கு மறைத்து விட்டார். அதாவது கொழும்பை அப்போஸ்தலிக்க தலைமைப்பீடமாக அமலோற்பவ மரித்தியாகிகளிடம் கொடுப்பதாகவும், ஆயர் அவர்கள் அப்போஸ்தலிக்க பிரதிநிதியாகவும் தெரியப்பட்டுள்ளார். என்பதேயாகும். தமது பிரிவினால் நாம் கவலைப்படுவோம் என எமக்குக்கூறவில்லை.

நெருப்புக் காய்ச்சலும் தொற்று நோயாக யாழ் நகரைப்பாதித்தது. நாம் வழமைபோல் இயேசுவின் திருஇருதயத்திடம் அடைக்கலம் புகுந்தோம். எமது அநாதை மடமும் சுகாதாரமுறைப்படி அமையவில்லை. கட்டிடங்களும் போதியதாக இல்லை. பிரதான கட்டிடம் முதல்படுக்கை அறையாகவும், பின்பு வகுப்பறைவேலை செய்யும் இடமாகவும் இருந்தது. அந்த இடம் முன்பு நகரின் கழுவும் இடமாக இருந்ததால் ஒரே ஈரலிப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலில் இருந்தது. எனவே ஒவ்வொரு வருடமும் மழைகாலத்தில் எம் சகோதரிகள் செருப்புடன் நீர்த்தரையைக் கடந்தனர்.

இரவில் உமியைப் பரவி அதன் மேல் பாயை விரித்தே எம் அநாதைச் சிறுமிகள்படுத்தனர். எனவே இது எனது பணியெனக் கருதி இந்த ஆபத்தைப்பற்றிப் பிரதி ஆயரிடம் கூறி திருப்பாலத்துவ சபைப் பணமூலம் எமக்கு உதவி செய்யும்படிகூறினேன். 70 தமிழ்ப்பிள்ளைகள் நன்கு படிக்கிறார்கள். படிப்பு முடிந்ததும் தம்கிராமங்களில் பங்குக்குருவின் தலைமையில் பாடசாலையில் படிப்பிக்கின்றனர். விசுவாசத்திலும் உறுதியாக இருக்கிறார்கள். ஓர் உதாரணம் இதை விளக்கும்.

சில வருடங்களின் முன் ஒரு விதவைப் பெண் தன் பிள்ளைகளைப்படிப்பிக்க விரும்பினாள். பிறசமயப் பாடசாலை அவள் கிராமத்தில் இல்லாததால் தன் மூத்த இரு புதல்விகளையும் எம்மிடம் கொண்டு வந்தாள். 10 வயது, 8வயதுப் பிள்ளைகள் இருவரும் எம்முடன் மகிழ்ச்சியாக இருந்ததால் தன்மகனை கொழும்புத்துறையில் உள்ள அநாதைமடத்துக்கு அனுப்பி வைத்தாள். படிப்பு முடிந்ததும் திரும்பவும் தன் சமயத்துக்கு மாற்றி விடலாம் என நினைத்தாள்.

பல வருடங்களின் பின் தீயவன் தன் திட்டத்தை ஆரம்பித்தான். இப்பெண் தன் பிள்ளைகளை மடத்தில் இருந்து எடுக்க விரும்பினாள். மூத்த பெண் ''மாறி'' தான் அநாதைமடத்தை விட்டு நீங்கமாட்டேன் எனவும், சுதேசிகளின் நவகன்னியர் இல்லத்தில் சேர்வதாகவும் கூறினாள். எனவே ஆயத்தகன்னிகையாகச் சேர்ந்தாள். இது மேலும் ஆத்திரத்தை மூட்டியது. எனவே மாறியை வரவேற்பறைக்குக்கூட்டிச் சென்ற சகோதரி தாயுடன் விட்டு வந்தா. கேற்றடிச் சிஸ்ரர் தவறுதலாகக் கதவை மூடாது விட்டு விட்டா. அப்போது தாய் நாம் இருவருமே இப்போதுள்ளோம். சகோதரிகளுக்குத் தெரியாமல் சென்று விடுவோம். என்றாள். அப்போது மகள் அவர்கள் எம்மைத் தடுக்கவில்லை நான் சுதந்தரமாகத்தான் எம்மை இறைவனுக்கு அர்ப்பணிக்க விரும்புகின்றேன். வீட்டுக்கு வரமாட்டேன் என்றாள். தாயுடன் வந்த ஒரு இளைஞன் இதை நான் எதிர்பார்த்தேன் இவள் ஒரு ஆண்மை கொண்டவள். இவளுடன் ஒன்றும் செய்ய முடியாது என்றாள். மகள் பெற்றுக் கொண்ட உடுப்பைப் பார்த்துத் தாய் கோபமுற்று இது ஒரு கீழ்த்தரமான உடுப்பு என்றாள். எனவே கேலியாகத் தூரத்தில் நின்றவாறே எவ்வளவு அழகான உடுப்பு, இதைப் பறித்து எறிய வருவேன் என்று ஒரு பிடிமண்ணைத்தூவி இத்தூசி போல் போவாயாக என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது பிள்ளை அக்னெஸ், மணமுடித்த பின்பும் தாயுடனே இருந்தாள். எனினும் விசுவாசத்தைக் காப்பாற்றினாள். எனினும் தன் மகனைத் தேவதாயின் பாதுகாப்பில் வைத்திருந்தாள். ஆனால் பாட்டியார் பிள்ளைகளுக்கு நெற்றி கைகளில் திருநீற்றைப் பூசினாள். அக்னெஸ், வரவணிக்கம் கட்டினாள். மாறிகுழந்தையையும் தாய் போலக் கிறீஸ்தவளாக்கினாள்.

வைகாசி மாதத்தில் 3 ஆயத்த கன்னியர்கள் இராயப்பர் சபையில் உடுப்புப் பெற்றனர். ஆயர் போஞ்சீன் ஆண்டகை திருப்பலி நிறைவேற்றினார். நாம் இவர்களுக்காக மன்றாடுகின்றோம். இவர்களுடைய பணி இந்த மக்களுக்குத் தேவையானது. ஒரு அநாதைச் சிறுமியை நவகன்னியருடைய தோட்டத்துக்கு விட்டுள்ளோம்.

ஒவ்வொரு வருடமும் ஆங்கில வகுப்பில் பரீட்சைகள் நடைபெறும் போது எமது சுமைகள் கூடிக்கொண்டுள்ளது. அரசாங்கம் பல பாடத்திட்டங்களைத் தருவதால் எமக்குக் கஷ்டம். ஆசிரியர்கள் தியாகத்துடன் பணிபுரிகின்றனர். அத்துடன் வெயிலின் அகோரமும் சேர்த்து களைப்பைத் தருகின்றது. எனவே கோடைகாலத்தில் லீவு அவசியமாகும். ஆனி 30ந் திகதி 8 சகோதரிகளுடன் ஊர்காவற்றுறைக்கு சென்றோம். கடற்காற்று இதமாக இருந்தது. Fr. யூலன், ஜான்டெல் அயற்கிராமங்களில் இருந்து பூசைக்கு வந்து செல்வர். 15 நாட்களில் 2 முறை என்னைப் புதுப்பித்தேன். அவ்வாறு ஏனைய சகோதரிகளும் ஓய்வெடுத்துப் பின் எமது இடம் திரும்பி வந்தோம்.

## ஐப்பசி 1883

அடுத்த நாளே எம் வழமையான வேலைக்குத் திரும்பினோம். ஆடி 24ந் திகதி எம் ஆயருக்கு வாழ்த்துக் கூறச் சென்றோம் விரைவில் எம்மை விட்டுப்போகப் போகிறார், என்ற துயரமும் இருந்தது. ஆவணி 14ந் திகதி பிரியா விடைகூற எம்மடத்திற்கு வந்து திருப்பலியும் நிறைவேற்றினார். பின்பு ஆயர் மெலிசான் ஆண்டகையை எமக்கு விட்டுச் சென்றார். போஞ்சீன் ஆண்டகை கொழும்பு அப்போஸ்தலிக்க ஆயராகச் சென்று விட்டார்.

20 வருடங்களுக்கு முன்பு ஒரு பணக்கார ஸ்கொட்லந்து நாட்டவர் இந்த நாட்டுத்தோட்டங்களில் வேலை செய்ய வந்தார். அவர் ஒரு பெண்ணை மணந்து 6 பிள்ளைகள் உள்ளனர். அவளுக்குப் படிப்புக் குறைவானதால் அவருக்கு இழிவாக இருந்தது. பின்பு இறந்தும் விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1883ம் ஆண்டு வயிற்றோட்ட நோயால் மேரி, இளையபிள்ளை வருந்தினாள். சிலநாட்களின் பின் ஒரு மகனும் அதே நோய்க்கு உட்பட்டான். மரணம் வந்து இவர்கள் இறந்தால், தான் இறைவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும் என நினைத்து. குணமடைந்தால் நான் கிறீஸ்தவள் ஆவேன் எனத் தன் உள்ளத்தில் கூறிக்கொண்டாள். தனிய கத்தோலிக்கரே தம் ஆன்ம மீட்பைக் கவனித்துக் கொள்கின்றனர் என்றாள்.

இளம் பெண் குணம் பெற்றாள். தன் வாக்குறுதியை மறக்கவில்லை. எனவே பெரியகோவிலுக்கு ஆராதனைக்குச் சென்று வந்தாள். அங்கு விசுவாசிகளின் பக்தி இவளை ஆட்கொண்டது. இவ்வாறு தான் பிரிவினை மதத்தில் காணவில்லை என்றாள். எனினும் வரும் தடைகளை எவ்வாறு மேற்கொள்ளலாம் என வழி தேடினாள். அப்போ ஒரு சுதேச தனவந்தன் ஒரு வெளிநாட்டவளை மணம்புரிய விரும்பினான். அவன் கத்தோலிக்கன். அவன் கண்ணில் மேரி விழுந்து விட்டாள். மேரியும் அதற்குச் சம்மதித்துக் குருவிடம் தனக்குச் செபமும், மறைக்கல்வியும் படிப்பித்துவிடக் கேட்டார்கள். சிஸ்ரர் லூயிஸ் திருமுழுக்கு, முதல் நன்மைக்கு ஆயத்தப்படுத்தினா. பைபிள் வாசிப்புடன் வாழ்வு முடிந்தது என நினைத்தவள் நற்கருணைப் பிரசன்னத்தில் உறுதி பெறுவது பற்றி அறிந்து மகிழ்ந்தாள். எம்முதல் சகோதரிகளுக்கு இயேசுவின் பிரசன்னம் எவ்வாறு திடமளித்தது என்ற செய்தி கேட்டு, பிரிவினை மதத்தவர்களும் நம்பினால் எவ்வளவு நல்லது என்றாள். நற்கருணைப்பிரசன்னம் அவளை முற்றிலும் உருமாற்றி விட்டது. தற்போது அவள் மணம் முடித்து விட்டாள். நிலைத்து நிற்க மன்றாடுகிறோம்.

ஆடி மாதம் 26ந் திகதி புனித ஆனாளின் திருநாள், எமது அன்னாள் சபையைப் பற்றிக் கூற விரும்புகிறேன். 1869ம் ஆண்டு ஆயர் போஞ்சீன் ஆண்டகையால் ஏழைகள், நோயுற்றோருக்கு உதவுவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. சில வருடங்கள் இயங்கவில்லை. மீளவும் ஆரம்பித்து உதவி செய்வதன் மூலம் எமது திருமறையை அறிய, தம் கடமைகளைச் செய்ய உதவுகிறார்கள். இப்பணி ஆயரின் பிரதிநிதி தலைமையில் நடைபெறும். அத்துடன் திருக்குடும்ப மடத்துத் தலைவியும் பங்கேற்பார். உதவி அதிபர், செயலாளர், பொருளாளர் தெரியப்பட்டு மாதத்தில் ஒரு முறை கூட்டம் நடைபெறும். ஆலோசகர் 10ரூபா வருடாந்த பணமாகக் கொடுப்பார். பங்குத் தந்தையும் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவார். 2 வருடங்களாக Fr. லாக் (Lafarge) இப்பணியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்று நடத்தினார். அத்துடன் வேறொரு பெண்ணும் நல்ல முறையில் உதவி புரிந்தாள். சிலகாலமாக இந்தக் கூட்டம் பெண்களின் ஒழுக்கத்திற்கும் உதவி புரிகின்றன. ஒவ்வொரு வரும் தாம் கண்காணிக்கும் நபர்களைப் பற்றிக் கூறும் போது ஒரே சத்தமாக இருக்கும். தலைவி இதை வெளிப்படுத்தச் சுதந்தரம் அளித்துப் பொறுமையுடன் கேட்டாள். நான் ஒரு தீர்மானம் எடுத்து வேறு ஒன்றைக் கூறும் போது எல்லோரும் ஆம் என்று கூறிக் கேட்பார்கள்.

ஆடி 26ந் திகதி புனித ஆனாள் திருநாள். அவவின் சுரூவம் பெரிய கோவிலில் ஒரு பீடத்தில் வைக்கப்பட்டுள்ளது. இவர்களால் அழகாக அலங்கரிக்கப்பட்டு 9 நாட்கள் நவநாள் செய்து கொண்டாடுவர். இவ்வருடம் ஆயர் போஞ்சீன் ஆண்டகை திருவிழாத்திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அதே வேளை பணிகளை ஊக்கப்படுத்தி தன் பிரிவையும் கூறினார். பின்பு என்பக்கம் திரும்பி இச்சபையை உங்களிடம் தருகின்றேன். தாயாக இருந்து அங்கத்தவர்களைக் கவனிக்கும்படி கூறினார். பின்பு தந்தைக்குரிய ஆசியையும் அளித்து செபங்களையும் வாக்குப் பண்ணினார்.

பின்வரும் அறிக்கையானது மெலிசான் ஆண்டகைக்குத் தமிழில் இருந்து மொழிபெயர்த்துக் கொடுக்கப்பட்டது. இதை உங்களுக்கு எழுதுகின்றேன்.

ஆண்டகை அவர்களே! இந்த வருடத்தில் எம் சிறிய சபையினால் ஆற்றிய பணிகளைப் பற்றிக்கூற அனுமதி அளித்தருளும் சென்ற ஐப்பசி மாதத்தில் ஆயர் போஞ்சீன் ஆண்டகை வந்து சென்ற பின் இது மீண்டும் புத்தூக்கம் பெற்றுள்ளது. தந்தைக்குரிய ஊக்கமூட்டும் வார்த்தைகள் எம் இதயத்துள் ஊடுருவி தாராளமனப்பான்மையுடன் எம்பணியை ஆற்ற உதவுகின்றன. மாதாந்த கூட்டங்களுடன் அங்கத்தவர்கள் ஆன்ம உடல் தேவைகளையும் சுதேசிகளுக்கு வழங்கி வருகின்றார்கள்.

ஓர் ஏழைப் பெண் தன் வார்த்தையாலும் நடத்தையாலும் துன்மாதிரிகையாக வாழ்ந்து வந்தாள். நாம் வாழ்வை மாற்று என்று கூறினோம். இந்த வார்த்தை அவளுக்கு உதவி புரிந்தது. பின் பங்குக் குருவுக்குத் தன் வாழ்வு மாறியது பற்றி எழுதியிருந்தாள்.

ஓர் இளைஞன் திருப்பலிக்கு ஆலயம் செல்வதற்கு நல்ல உடுப்புக்கள் இல்லாது கஷ்டப்பட்டான். எம் சபை உதவியது. அதே போன்று 5 பிள்ளைகளும் விதவைத் தாயும் காப்பாற்றப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1882 - 1883 வரவு 88 ரூபாவாக உயர்ந்தது. 60 ஏழைகள் உதவி பெற்றனர். இறைவனின் பார்வையின் நிழலில் நடத்த சில உண்மைகளை எழுதியுள்ளோம். எம்மை ஆசீர்வதித்து எம்பணிதொடர, அதில் நாம் நிலைத்திருக்க வேண்டுகின்றோம்.

ஆயர் எம் அறிக்கையை வாசித்து 2 திட்டங்களை எடுத்துரைத்த போது அது ஏக மனதாக வரவேற்கப்பட்டது. முதலாவது - ஏழைகளைப் பகுதியாகப் பிரித்து அப்பகுதிக்கு ஒருவர் பொறுப்பாக இருப்பர். இரண்டாவது - தருமசீமாட்டிகள் ஏழைகளின் வீடுகளுக்குச் செல்லாது அவர்களைத் தம் வீட்டில் அழைத்து கிறீஸ்தவ கடமைகளை எடுத்துச் சொல்லுதல்.

## தை 1884 - யாழ்ப்பாணம்

1883 சென்ற தவணை அறிக்கையில் நிகழ்வுகள் குறைவாக இருப்பினும், உங்களின் குமாரத்திகளின் பணி வட்டம் கூடுவதையும், செல்வாக்கு அதிகரிப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. ஐப்பசி மாதத்தில் செபமாலை ஒதி மாதாபக்தியை யாழ் - மக்கள் அனுசரித்தனர். ஆயர் மெலிசான் ஆண்டகையின் விருப்பப்படி நாமும் பெரிய கோவில் சென்று மக்களுடன் இப்பக்தி முயற்சியில் பங்குபற்றினோம். முதல்நாள் போடிங் சிஸ்ரர் ஒரு முணுமுணுக்கும் சத்தம் கேட்டுப் பார்த்த போது கோவிலுக்குச் செல்லும் வழியில் ஒரு பெண் செபமாலை மறை உண்மைகளை ஒதிச் செபிப்பதைக் கண்டா.

கார்த்திகை மாதத்தில் சிஸ்ரர் செனற். சூசன் குருநாகலுக்கு மாற்றம் பெற்றுச் சென்று விட்டா. எனவே எம் சகோதரிகள் நோயாளரைச் சந்திக்கச் சென்றார்கள். முன்பு இப்பணி நடைபெறவில்லை. மார்கழி மாதம் 7ந் திகதி gate சிஸ்ரர் அயல் வீட்டில் ஒரு கத்தோலிக்க வயோதிபப் பெண் எல்லாராலும் ஏன் தன் பிள்ளைகளாலும் கூடக் கைவிடப்பட்டிருப்பதாகக் கூறினா. எனவே சிஸ்ரர் பிறக்சீட்டை ஒரு சுதேச சகோதரியுடன். சேர்த்து அனுப்பினேன். அங்கு சென்ற போது அவவின் மருமகன் இருப்பதைக் கண்டு நோயாளி எங்கு என்று கேட்ட போது ஒரு கந்தல் துணி அணிந்த ஒர் உருவத்தைக் காட்டினான். துர்நாற்றமாக இருந்தாலும் இருவரும் அவளை அண்மித்தனர். நமது சுதேச சகோதரி பலமுறை அழைத்தும் பதில் இல்லை. பகல் 11 மணி வெயிற் சூடு அதிகம், ஒரு யுவதி வந்தாள். வெளியில் இருந்த நோயாளியை உள்ளே அழைத்துச் செல்லக் கேட்ட போது அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தாயெனவும், தொடவிருப்பமில்லையெனவும் கூறிவிட்டாள். மருமகனும் உதவவில்லை. எனவே மனித உதவிகிட்டாததால் இருவரும் வெளியே வந்து மீளவும் மாதா, புனித ஆசீர்வாதப்பர் வரணிக்கங்கள். இயேசுவின் திருஇருதய உத்தரியம் என்பவற்றுடன் சென்றோம். இருவரும் உணவு கொடுக்க முயன்ற போது சிறிதளவே எடுத்தாள். பின்பு சிறிது அசைந்த போது குருவை அழைப்பது பற்றிக் கேட்டோம். இல்லை, இல்லை, நாளை என்றாள். பின்போடுவது சரியில்லை என்று நினைத்துச் சிலுவை அடையாளம் வரைந்து சில செபங்களைச் சொல்லிப் பாவசங்கீர்த்தனம் பற்றிக் கேட்ட போது சம்மதித்தாள். உடனே பங்குக்குருவை அழைப்பித்து நோயில்பூசுதல் கொடுப்பித்தோம்.

இதை அறிந்து எல்லோரும் அங்கு வந்தனர். சிலர் சிஸ்ரமாரைப் பார்க்க வந்தனர். ஏன் இவர்கள் இங்கு வந்தனர் என்று ஒருவர் கேட்டார். அதற்கு ஒரு பெண், ஒரு நோயாளி, அவளுக்கும் ஓர் ஆன்மா இருப்பதால் அவளைப் பார்க்க வந்தனர். என்றாள். உடனே அவர் மறைந்து விட்டார்.

சகோதரிகள் நோயாளிக்குக் காட்டிய கரிசனையால் அவள் இவர்களைத் தன்னோடு வைத்திருக்க விரும்பினாள். மற்றவர்கள் உணவு மருந்து கொடுக்கவில்லை. எனவே சிஸ்ரர் மருமகனிடம் இவளைக் கவனிக்கும்படி கேட்டபோது, இவள் தனக்குக் கரைச்சல் என்றும், தனது சோற்றைச் சாப்பிடுவதாகவும் கூறினான். இவளைப் பராமரிக்கத்தான் விரும்பவில்லை என்றும். கூறினான். (அத்துடன் நாட்டின் வழக்கப்படி மருமகன் மாமியைப் பார்ப்பது, கதைப்பது கூடாது) கிறீஸ்தவன் ஒருவன் மற்றவனைக் கவனிக்காவிடில் இறைவனும் அவ்வாறே செய்வார். என்று சிஸ்ரர் சொன்னா. அப்போது அவன் உடனே சிஸ்ரர் சொன்னதைத் தான் செய்கிறேன் என்றான். பின்பு நாட்டு வழக்கத்தையும் கூறி ஒரு பெண்ணைப் பராமரிக்க அழைத்தாலும் ஒருவரும் வருவதில்லை என்றான். அப்போது ஒரு பெண் அங்கு வந்தாள். சிஸ்ரர் இந்த நோயாளியைப் பற்றிக் கூறியபோது அவள், இப்பெண் எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர் இல்லை எனக் கூறி மறுத்து விட்டாள். சிஸ்ரர்மார் வந்ததால் தானும் வந்ததாகவும், நீங்கள் போய்விட, நானும் போய்விடுவேன் என்று வந்த பெண் கூறினாள். நோயாளியின் இறுதி நேரத்தில் சிஸ்ரர்மார். அவள் காலடியில் நின்று இயேசு, மரி, சூசையின் செபங்கள் சொல்லி அங்கிருந்தவர்களுடன் செபமாலை ஒதினார்கள். இறுதி மூச்சுவிடும் போதும் இறைவனிடம் ஆன்மாவை ஒப்படைத்துச் செபித்தார்கள். தேங்காய் எண்ணெய் விளக்கு ஏற்றினார்கள். அத்துடன் அவார்கள் பணிமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகள் செல்லுமுன் தம் கடமையென உணர்ந்து யுவதியை அழைத்துச் சற்றுக்கடுமையாகப் பேசினார்கள். தற்போது பாட்டி இறைபிரசன்னத்தில் இருக்கிறாள். தன்னுடைய நன்மை, தீமை செயல்களுடன் உள்ளாள். நீ உன் கிறீஸ்தவக் கடமையைச் செய்யாவிடில் நீயும் ஒரு நாள் இறந்து இறைவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும் என்றனர். இது இவளது உள்ளத்தைத் தொட்டது. அவள் சகோதரிக்கு நன்றி கூறிப் பாவசங்கீர்த்தனம் செய்து, தான் பெற்றபடிப்பினையை மறக்கமாட்டேன் என்றாள்.

இது சிறிது நீண்ட அறிக்கையாக இருந்தாலும் எம் பணியை உங்களுக்கு விபரமாக எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் இங்குள்ள சாதிப்பிரச்சினைகள் சட்டத்திலும் பார்க்க மோசமாக உள்ளது. கத்தோலிக்கர் பத்துக்கற்பனையில் பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக எனக்கேட்டும் சுதந்தரமாக பணிசெய்யாதுள்ளனர். எனவே நோயாளிகள், மரணப்படுக்கையில் உள்ளோருடன் துறவிகள் பணிபுரிதல் எவ்வளவு நல்லது. நாமும் பணிபுரியச் சந்தர்ப்பம் தந்த இறைவனுக்கு நன்றி கூறி எதிர்காலத்தில் கிட்டவுள்ள இடங்களில் பணிபுரிய விரும்புகிறோம்.

மார்கழி 22ந் திகதி பரிசளிப்பு விழா நடைபெற்றது. மறுநாள் ''பாதுகாவலன்'' பத்திரிகையில் செய்தி வெளிவந்தது. வருடாந்த பரிசளிப்பு விழாவில் பங்குபற்றினோம். திருக்குடும்பக்கன்னியரின் மறைந்த பணிகளின் விளைவுகளைக் கண்டு களித்தோம் பரிசளிப்பின் இடைநேரத்தில் ''பியானோ'' இசை மீட்டனர். சிலநாடகங்கள் நடித்தனர். எனினும் எம் நகரில் இருந்து யுவதிகள் பலர் இத்துறவிகளின் திறமை தியாகங்களைப் பெறாமல் இருப்பதையும் காணக்கூடுமாய் இருக்கின்றது.

இப்புகழ்ச்சிகளைத் திருக்குடும்பச் சபைக்கே அனுப்பிவிடுகின்றோம். ''நாம் பயனற்ற ஊழியர்கள்' என்பதை அறிவோம். எம்தலைவிகள் எமக்காகச் செபிப்பதையும் அறிவோம் யாழ் - சகோதரிகளின் ஒரே ஆவல் - இறைகரத்தின் அருளின் கருவிகளாக இருந்து ஆசிகளைப் பெருக்குதலும், அதைத்தம் ஆன்மாவிலும் பணிகளிலும் வெளிப்படுத்துவதேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(May)

என் நல்ல தாயாரே!

சென்ற அறிக்கையில் நோயாளர் சந்திப்புச் செய்ய முடியாத நிலைபற்றி எழுதியிருந்தேன். இத்தடையை மேற்கொள்ளக்கூடிய வழிவகைகளும் இருந்தன. தைமாதத்தில் இறைபராமரிப்பானது ஒரு வழியை எமக்குத் திறந்தது. ஒரு திருஇருதய வெளிப்பாடசாலை மாணவி நோயுற்று மரணத் தருவாயில் இருந்தாள். அவவின் ஆசிரியை என்னைப் போய்ப்பார்க்கும் படி கூறினா. பிள்ளையின் வீட்டிலுள்ளோர் இறுதித் திருவருட்சாதனம் கொடுப்பது பற்றிச் சிந்தியாது இருந்தனர்.

சிஸ்ரர் அசம்சன் நோயாளியின் அருகே சென்றா. முதற்தடவையாக அங்குள்ள மக்கள் அன்புப் பணிபுரியும் இச்சகோதரியைக் கண்டனர். நோயாளியின் பெற்றோர். சகோதரிக்கு நன்றி கூறி நோயாளிக்கு இறுதிப் பயணத்துக்குத் தயார் செய்ய எல்லா உதவிகளையும் செய்தனர். இதனால் நோயாளி மகிழ்ந்து ஒரு குருவை அழைத்துவரச் சம்மதித்தாள். ஒப்புரவு அருட்சாதனம், நோயில் பூசுதல் பெற்றாள். மறுநாள் காலையில் அவள் உயிர்பிரிந்தது.

மாசி 5ந் திகதி அருட்தந்தை விளனகான் (Flanagan) மடத்து சிற்றாலயத்தில் ஒரு தியானம் ஆரம்பித்தார். அதில் ஆங்கிலப் பாடசாலைமாணவர்கள், திருஇருதய வெளிப்பாடசாலை மாணவர்கள் புனித சூசைதொழிலகப் பிள்ளைகள் அநாதைப்பிள்ளைகள் பங்குபற்றினர். பீடத்தைச் சுற்றி வர இந்த 200 பிள்ளைகளும் சாதி, மத, நிற, வேறுபாடின்றிக் காணப்பட்டனர். இத்தியானம் மாணவர்களுக்கு மட்டுமன்றி, பழைய மாணவர்களும் வந்து பங்கெடுக்க வழி வகுத்தது.

ஜெப்ருவாஜெசிமா ஞாயிறு நற்கருணைப்புதுமை நினைவாக நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது. திருக்குடும்ப சபைச் சகோதரிகள் மாணவர்களுடன் ஒன்று சேர்ந்து இயேசுவுக்கு நன்றி கூறி, மேலும் இச்சபைகளின் பணிகளை ஆசீர்வதிக்க வேண்டினோம். எம் பிள்ளைகள் இப்புதுமையை விபரித்துக்கூறும் போது உணர்ச்சி வசப்பட்டனர். திருக்குடும்ப பிள்ளைகள் சிவப்புப்பட்டியணிந்து ஆராதனைபுரிந்தனர்.

எமது பிள்ளைகள் பக்திப் பாதையில் முன்னேறிக் கொண்டு செல்கின்றனர். பங்குனி மாதத்தில் புனித சூசையின் பக்தி அனுஷ்டிக்கப்பட்டது. வகுப்பில் நவநாட்கள் நடாத்தப்பட்டது. அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் மெழுகுதிரி ஏற்றி ஏற்றியவரின் பெயரும் வாசிக்கப்பட்டது. புனித சூசையின் விழாவில் ஆயர் மெலிசான். (Melizan) ஆண்டகை வேறு 4 அ. ம. தி. குருக்களுடன் எம் சிற்றாலயத்தில் எம் சபையின் அதிசிரஷ்ட குருமுதல்வருக்காக அவரின் கருத்துக்களுக்காகச் செபித்தார். ஓர் இந்து மதச் சிறுமிக்கும் திருமுழுக்கு கொடுத்தார். 5 வயது நிரம்பிய இச்சிறுமி அநாதை இல்லத்திற்கு வரும் போது தனது ஆவலைக்கூறிச் செபங்களைப்படித்தாள். அவளின் ஞானத்தாய் திருக்குடும்பப் பொது நிலையினரின் தலைவி செல்வி மேரி, புனித ஜேர்மயினின் பெயரைக் கொடுத்தாள்.

4 பிள்ளைகள் தம் பெற்றோரின் மனமாற்றத்துக்கு உழைப்பதாகக் கூறியுள்ளனர். 'அனஸ்தாசி' ஒரு சிறிய கிராமப்புறப்பாடசாலையில் பணிபுரிகின்றாள். அவள் கணவன் கோவிலைப் பராமரித்து காத்து வருகிறார். சிறிது வருமானம் கிடைத்து வருகிறது. ஒருநாள் புரட்டஸ்தாந்து போதகர் வந்து அவளின் மனதைமாற்றிக் குடும்பத்தில் மகிழ்வுடன் வாழ வழி வகைகளைக் கூறினார். அவள் இந்தக்கண்ணியில் சிக்கிக் கொள்ளவில்லை ''பூவின் கீழே பாம்பு'' இருப்பதைக் கண்டு பணிவுடன் இதிலிருந்து விடுபட்டாள். எனக்குத் தேவை ஏற்பட்டால் ''என் ஆயர் உள்ளார்'' எனக்கூறித் தன் பணியைத் தொடர்ந்தாள்.

வைகாசி 3ந் திகதி எம் சகோதரி ''லிகோரி'' 22 வருடங்களாக அநாதைப்பிள்ளைகளுடன் பணியாற்றி திரிகோணமலை நோக்கிப் புறப்பட்டா. அவபுறப்படும் போது தங்கள் 2 ஆவது தாயாக மதித்து அன்பு செய்த 67 அநாதைப்பிள்ளைகளும் விறாந்தையில் அணிவகுத்து நின்று தங்கள் பிரியா விடையைக்கூறினர். பின்பு கோவிலுக்குச் சென்று அவவின் பிரயாணம் நன்றாக நிறைவு பெற செபமாலை ஓதிச் செபித்தார்கள்.

பரிசுத்த ஆவியின் பெருவிழாவன்று மரியாள் பேராலயத்தில் நடைபெற்ற முதல் நன்மைத்திருப்பலியில் நாமும் பங்குபற்றினோம். பீடத்தண்டையில் எல்லோரும் சம பந்தியில் அமர்ந்தனர். மாலையில் மாதாவின் திருச்சுருவ பவனியுடன் வைகாசி மாத வழிபாடுகளும் முடிவுக்கு வந்தன. மேலும் ஒரு குடும்பத்தில் மனமாற்றமும் இடம்பெற்றது. எமது மடத்தில் வேலை செய்யும் ஒருவர் நோயுற்றதால் தற்காலிகமாக வேலை செய்ய ஒருவர் முன் வந்தார். ஆனால் அவர் நற்செய்தி வழியில் அவள் செல்லாதபடியால் நான் தடைகளைச் சுட்டிக்காட்டினேன். தன் கிராமம் சென்று தன் மனைவியை அழைத்து வந்து குருவானவரைச்சந்திப்பதாகக் கூறினான். அவ்வாறே தன் மனைவியுடன் திரும்பி வந்தான். 6 பிள்ளைகளின் தாயான இப்பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தின் பின்பு தனது பழைய வழக்கத்தைக் கடைப்பிடித்தாள். நாம் அவர்களுக்கு மீட்பின் பாதையைக் காட்டி பிள்ளைகளுக்கும் படிப்பித்தோம்.

**யாழ்ப்பாணம் - மார்கழி 1884**

என் நல்லதாயாரே!

எமது வடபகுதியில் ஏற்பட்ட புயற்காற்றைப் பற்றி பத்திரிகை வாயிலாக அறிந்திருப்பீர்கள். இதைப்பற்றி ''பாதுகாவலன்'' பத்திரிகை இவ்வாறு பிரசுரித்திருந்தது.

ஐப்பசி 16ந் திகதி காலையிலே சூறாவளிக் காற்றுப் பலமாக வீசி மரங்களை வேரோடு சாய்த்தது. வீட்டின் கூரைகள் தூக்கி வீசப்பட்டது. தான் செல்லும் பாதையில் மரணத்தையும் அழிவுகளையும் ஏற்படுத்தியது. இரவின் இருளில் இவையெல்லாம் நடைபெற்றது. 8 மணிக்குத் தொடங்கிய இப்புயற்காற்று யுத்த முழக்கங்களைப்போல் இடி மின்னலுடன் வந்து அச்சத்துக்குள்ளாக்கியது, கடலும் 9 அடி உயரத்துக்கு எழும்பித் தரையை நோக்கி வந்து கிடுகினால் வேயப்பட்ட களிமண் குடிசைகளை இழுத்துச் சென்றது. அதில் வசித்தவர்கள் அழுகைக்குரலுடன் மரங்கள் கிளைகள் முறிந்து தம் மேல் விழுந்திடும் என்ற அச்சத்துடன் ஓடினார்கள். 50 பேர் மட்டில் இறந்து விட்டார்கள் பலர் காயமுற்றனர். பொருட்களின் அழிவுகளோ கணக்கிட முடியாது. உப்புநீர் வயல் வெளிகளுக்குள் புகுந்தபடியால் அறுவடையையும் பாதித்தது. படகுகளும் புயலினால் சிதைவடைந்து ஒரு பக்கத்தில் தூக்கி வீசப்பட்டது.

என் நல்ல தாயாரே! எமக்கு என்ன நடந்ததென அறிய விரும்புவீர்கள். நாம் இவற்றினால் பயப்பீதி அடைந்தாலும், திரு இருதயத்தில் அடைக்கலம் புகுந்தோம். இது எமக்கு நம்பிக்கையை அளித்தது. பிற்பகல் 6.30 மணியளவில் நாம் எமது ஞானவாசினையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது, ஒரு பிள்ளை ஓடிவந்து எமது பெரிய விறாந்தைக்குத் தண்ணீர் வந்து விட்டதாகக் கூறினா. அதனூடாகப் புதிய கட்டிடத்தை வந்தடைந்து, படுக்கை அறை ஆங்கிலபாடசாலை நோக்கி நீர் ஓடிற்று. எம்மிடம் உள்ளவைகளைப் பயன்படுத்தி, எம்சக்தியால் அணைகட்டினோம். இதன்மூலம் எம்பிள்ளைகள், விலையுயர்ந்த பொருட்கள், கோயிற் பொருட்கள், பூசை உடுப்புகளை பாதுகாத்தோம்.

தீடீரென ஒரு சத்தம், கரு நிற நீர் வந்து எம் அறைகளைச் சிறுகுளமாக்கியது. சுதேச சகோதரிகள் வேறுகட்டிடத்தில் இருந்தனர். 11.30 மணியளவில் யாரோ கதவைத்தட்டும் சத்தம் கேட்டது. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் கோவிற் கதவு திறந்திருப்பதாகக் கூற வந்தனர். காற்றின் தாக்கத்தால் சுதேச நவகன்னியர் இல்ல யன்னல் கதவு திறக்கப்பட்டு மின்னல் ஒளியில் கோவில் தெரிந்தது. இருவரும் துணிவுடன் நற்கருணையைக் காப்பற்றுவதற்காக தம் உயிரையும் பொருட்படுத்தாது வந்திருந்தனர். நாம் அவர்களைப் பாராட்டினோம். சக்கிறிஸ்திக்குச் சென்று அதனூடாக ஆலயத்தை அடைந்தோம். சிறுவிளக்கு ஒளியில் நற்கருணை பேழை பாதுகாக்கப்பட்டிருந்தைக் கண்டோம். பெரிய கதவு ஓர் இரும்புச் சட்டத்தால் மூடப்பட்டிருந்தும் திறந்து உடைந்து காணப்பட்டது. இசை வீணைப் பெட்டியின் மேல்மூடி 4 மீற்றர் உயரத்துக்கு வீசப்பட்டு மின்னொளி பல்ப் உடைந்து காணப்பட்டது.

காலை 3 மணியளவில் அருட்தந்தை லெலோன் (Lelons) பாதையின் அபாயங்களையும் பொருட்படுத்தாது தியாகசிந்தையுடன் வந்து நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுத்தார். திரு இருதய ஆண்டவர் எம்மைப் பாதுகாத்தார். எனினும் 2 வாழைத்தோட்டங்கள் நிர்மூலமாக்கப்பட்டன. சில பொருட்கள் உபயோகிக்க முடியாத நிலையில் காணப்பட்டன. சில மரங்கள் முறிந்தும் வேரோடும் பிடுங்கப்பட்டுள்ளன. தென்னைமரங்களின் நுனிப்பகுதி துண்டிக்கப்பட்டன. 1885ம் ஆண்டு அறுவடையும் இல்லாமற் போய்விடும், வயல் வெளிமலர்களையும், லீலிப்பூக்களையும் விட நாம் இறைவனின் கண்களுக்குப் பெரிதன்றோ. எனவே இறைபராமரிப்பில் தங்கி உள்ளோம்.

கார்த்திகை மாதமுடிவில் வேறொரு சோதனை எம்மை வந்தடைந்தது. அநாதை இல்லத்தில் ஒரு இளம்பிள்ளை கடும் காய்ச்சலினால் துன்புற்றா. எனவே இறுதி அருட்சாதனம் வழங்கப்பட்டது. ஆனால் பெற்றோரிடம் இவளைக் கையளித்தால், இந்து மதச் சூழல் அவளுக்கு உதவி செய்யாது. ஆயர் மெலிசான் ஆண்டகையுடனும், மருத்துவருடனும் கலந்தாலோசித்தபின் அவளின் தாயை மடத்துக்கு வரும்படி அழைத்தேன். அவளுக்கு ஒரு தொகைப் பணத்தை ஒவ்வொரு மாதமும் வழங்குவதாகவும். கத்தோலிக்க சமயத்தில் மகளை வைத்திருக்கும்படியாகவும் கூறினேன். அவளும் அதற்குச் சம்மதித்தாள். எனவே சிசிலியாவை அவள் தாயிடம் ஒப்படைத்தேன். ஆனால் மூளைக்காய்ச்சல் மேலும் தாக்கவே பங்குக்குரு நோயில் பூசுதல் வழங்கினார். அவள் ஆன்மா இறைவனிடம் சென்றது. இதற்கு முன் தன் உடலை மடத்துக்கு அனுப்பும் படி தன் தந்தையைக் கேட்டிருந்தாள். தகப்பன் இதை விரும்பாவிடினும், தன் மூத்த மகளை என்னிடம் அனுப்பினான். அருட்தந்தை (பூசன்) Pouzzn உடன் கலந்தாலோசித்து, மாலையில் உடலை அனுப்பும்படி கூறினேன். எல்லா அநாதைபிள்ளைகளும் பிறக்சீட்தாயாருடன் சேர்ந்து கல்லறைவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று வந்தனர். மறுநாள் பணம் சேர்த்து தங்கள் நண்பி சிசிலியாவின் ஆன்ம இளைப்பாற்றிக்காகத் திருப்பலி ஒப்புக் கொடுக்க என்னிடம் கேட்டனர்.

மேலும் ஒரு சிறுமியை மரணம் இழுத்துச் சென்று விட்டது. எம் எலிசபெத் நோயுற்றதால் அவளுக்கும் இறுதி அருட்சாதனம் வழங்கப்பட்டது. பிறக்சீட்தாயார் அவளருகில் சென்று ஆறுதல் கூறினா. இலங்கையில் ஒருவித தொழுநோய் காணப்படுகிறது. ஒரு விசேட சிகிச்சை வழியாக இதை ஒழிக்கலாம். எம்முடன் இருந்த 'ஜேற்றூட்' என்ற பிள்ளைக்கு இந்த நோய் வந்த போது, மெலிசான் ஆயரின் அனுமதியுடன் அவள் தந்தையுடன் செல்லவிட்டேன். நோய் குணமானது. அவளின் புத்தி அறிவைக்கண்டு ஒரு புரட்டஸ்தாந்து போதகர் தன்னுடன் சேர்க்க எண்ணினார். ஆனால் அவள் என்னிடம் வந்து தன்னை அநாதை இல்லத்தில் சேர்க்கும்படி கேட்டதால் நானும் இதற்குச் சம்மதித்தேன்.

மார்கழி 14ந் திகதி எல்லாப் பிள்ளைகளும் லீவுக்குப் போக, நாம் மெலிசான் ஆயர் தலைமையில், எமது தியானத்தை ஆரம்பித்தோம். 2ம் நாள் இரவில் மீளவும் புயற்காற்று ஆரம்பமானது. ஆனால் முதல் வந்த காற்றிலும் பார்க்க குறைவு. அழிந்த சிலவற்றைத் திருத்த முடியாது. சிலவற்றைத் திருத்தச் செலவு கூடும். ஆனால் பிள்ளைகள் தம் அச்சத்தை வெளிக்காட்டாது. எம் தியானத்தைக் குழப்பாது அமைதிகாத்தனர். பெரிய மண்டபத்துள் நீர் வந்தாலும், எல்லோரும் அமைதியாக நெருக்கிக் கொண்டிருப்பதை பிறக்சீட் தாயார் கண்டா. நாம் அவர்களைப் பாராட்டி இறைவனுக்கு நன்றி கூறினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(March 1890)**

என் நல்ல தாயாரே! என் அறிக்கையின் முதல் பகுதி தொற்றுநோயினால் இறந்த 2 பிள்ளைகளின் வரலாறு பற்றிக்கூறுகின்றது. எனவே அவர்களின் இறுதி நோய் பற்றிக் கூறப்போகிறேன்.

மாறி என்பவ சிறுமியாக இருந்த போதே திருப்பாலத்துவ சபைப்பணி அவவைப்பொறுப்பெடுத்துத் திருச்சபை என்னும் குடும்பத்தில் இணைந்தபடியால் எம் அநாதைமடத்தில் சேர்த்தனர். படிப்படியாக விசுவாச ஒளியில் வளர்ந்தாள். படிப்பிலும் சிறந்து விளங்கி திருஇருதயப் பாடசாலையில் வகுப்புத் தலைவியாகவும் விளங்கினாள். நம் சகோதரி அஷம்சனுக்கும் ஆறுதலாக இருந்தாள். பாடசாலை முடிந்ததும் அநாதை மடத்திற்கு வந்து அங்கும் பிள்ளைகளுக்குத் தலைவியாக மிளிர்ந்தாள்.

மாறிக்கு 18 வயது ஆனபோது யாழ் - குடாநாட்டில் 2 முறை சூறாவளி வந்து அவளைத் தாக்கியது. நிறம் மாறி மெலிந்த உருவமாகக் காணப்பட்டாள். 1884ம் ஆண்டு ஐப்பசி மார்கழி புயற்காற்றின் போது நோய் கூடி வந்து அவளைத் தாக்கியது. நாம் நன்கு பராமரித்தும், இறுதியில் வயிற்றுளைவு வந்து இறைவனடி சென்று விட்டாள். அதற்கு முன் தாய், மாமனாரை எல்லாம் சந்தித்து ஆறுதல் கூறினாள். மறுநாள் ஐரோப்பிய, சுதேசப் பிள்ளைகள் அநாதைப்பிள்ளைகளும் பவனியாக கோவிலுக்கு வந்து நோயாளியை அங்கு வைத்தனர். அருட்தந்தை ''மோறுவா'' வைக்கண்டதும் இறுதி அருட்சாதனத்தைத் தரும்படி கேட்டாள். ''பரலோகம் செல்லத் துன்புறுவதில் நான் மகிழ்கின்றேன்'' என்று பலமுறை கூறினாள். மாலையில் தாய் வந்து வீட்டுக்குக் கூட்டிச் சென்று பராமரிக்க விரும்பியும் அவள் மறுப்புத் தெரிவித்து தான் மடத்தில் வாழவே விரும்புவதாகக் கூறினாள். இவ்வாறே தன் நண்பிகளுடனும் கதைத்தாள்.

தாய் அவளுடன் இரவைச் செலவிட உத்தரவு கேட்டு மகளுடன் தங்கினாள். இரவு முழுவதும் மாறி, வேதனை அனுபவித்தாள். அதிகாலை 5 மணியளவில் தன் தாயிடம் அவளின் மடியில் வைத்து இறுதிமுத்தம் தரும்படி கேட்டாள். அத்துடன். கண்களை மூடி இறுதி மூச்சை விட்டாள்.

செபத்தில் நாள் கழிந்தது. ஆசிரியர், மாணவர்கள் அருகே வந்து செபித்தனர். அவளின் முகத்தில் மகிழ்ச்சி அமைதி காணப்பட்டது. இறுதி ஊர்வலத்தில் அநாதைப்பிள்ளைகள் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளைத் தொடர்ந்து ''மேரியும்'' இறைவனடி சேர்ந்து விட்டாள். இவளும் சிறு வயதில் வந்து பாலர் வகுப்பில் சேர்க்கப்பட்டாள். திருமுழுக்குப் பெற்று, படிப்பில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டாள். அவ்வேளை நோயினால் தாக்குற்றாள். Sr. St. பிறக்சீட், மேரி களைப்புற்றிருப்பதைக்கண்ணுற்று ''ஒப்புரவு அருட்சாதனம் பெற விருப்பமா? எனக் கேட்டபோது'' ஆம் எனக்கூறி அத்துடன் முதல் நன்மையும் பெற ஆசித்தாள். தந்தை 'லெலோன்' பரீட்சை வைத்துப் பார்க்க அதிலும் திருப்தி ஏற்பட்டது. இயேசுவைப் பெற்றதும் அவளுக்கு ஒரே மகிழ்ச்சி எல்லாரிடமும் அது பற்றிக் கூறினாள்.

அத்துடன் தன் தாயையும் காண விரும்பினாள். அவள் வழி தவறி வாழ்ந்ததால் மேரியையே செபிக்கும்படி கூறினார்கள். அந்த நாளே தாய் மடத்திற்கு வந்தாள். அவளைக் கண்டதும் கண்ணீர் உருண்டோடியது. அவள் தன் தாயை ஆறுதற்படுத்தினாள். இன்று காலை தான் பாவசங்கீர்த்தனம் செய்து, முதல் நன்மை பெற்றதாகவும், அத்துடன் இறுதி அருட்சாதனங்களும் பெற்றதால், இறைவன் தன்னுடன் இருப்பதாகவும் விண்ணகம் சென்றவுடன் தாய்க்காகச் செபிப்பதாகவும் கூறினாள். அத்துடன் திருமுழுக்கின் அருளை இழக்க வேண்டாம் எனத் தாய்க்கும் புத்திமதி கூறினாள். இரவு அவளுடன் செலவிட முடியவில்லை. மறுநாள் வரை காத்திருந்தாள். தாயின் கரங்களில் தன் உயிரை விட்டாள்.

இதன் பின்பு தியான நாட்களில் ''இயேசுவில் இறப்போர் பேறுபெற்றோர்' எனக் குருவானவர் பலமுறை கூறினார். மாசிமாதம் 26ந் திகதி இப்பக்தி முயற்சிகள் எமது பலவகுப்புப் பிள்ளைகளுக்கும் நடைபெற்றன. 200 பிள்ளைகள் மட்டில் பங்குபற்றினர். அருட்தந்தை (P. Gouret) கூறே இவர்களை வழிநடத்தினார். இறுதி நாளுக்கு முதல் நாள் மாலை எம் அநாதைச் சிறுமிகள் ஒரு பாதயாத்திரை செய்தனர். ஒரு ஆங்கில வகுப்புப் பழைய மாணவி தற்போது இவர்களுக்கு உதவி செய்பவ, இறந்து விட்டா, அவவுடைய பூதவுடலுக்கு மரியாதை செலுத்த சென்றனர். அடுத்த நாள் தம் திருமுழக்கு வார்த்தைப் பாடுகளைப் புதுப்பித்தனர். அத்துடன் உத்தரியமும், திருக்குடும்ப நாடாவும் பெற்றுக் கொண்டனர். பங்குத் தளத்திலே நிகழ்ந்த மரணமும் எம்முடையதுதான். யாழ் மறைமாவட்டத்தில் இரு குருக்கள் இறந்து விட்டனர். பங்குனி 9ந் திகதி (Fr. Puzzin) தந்தை புசென் மறைபோதகர் எம் மடத்தில் இருந்த போது பிள்ளைகளுக்கு உறுதுணையாக இருந்தவர். அத்துடன் Fr. Brown 'பிறவுன்' என்பவரும் மறைபோதகருக்கு ஒத்துழைப்பு நல்கிய அறிவாளி, இறைவனடி சேர்ந்து விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான தாக்கங்களின் பின் எமக்கு இயேசுவின் இதயத்தில் ஆறுதலடைய வேண்டிய தேவை ஏற்பட்டது. ''வருந்திச் சுமை சுமக்கிறவர்களே என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாற்றி தருவேன். இந்த வார்த்தைகள் முன்னொரு போதும் இல்லாதவாறு ஆறுதல் அளித்தது. திருஇருதயத்திருவிழா யாழ் மக்களால் நல்லமுறையில் கொண்டாடப்பட்டது. எம் வெளிப் பாடசாலையும் அவரின் பாதுகாப்பில் இருப்பதால், எம் சகோதரிகள் அங்குள்ள பிள்ளைகளுக்கு இயேசு, மரியின் பெயர்களைக் கற்பித்து வருகிறார்கள். திருஇருதய வழிபாடு வருடா வருடம் வளர்ச்சி அடைந்து மனமாற்றத்திற்கு ஒரு வழியாக இருக்கிறது.

இப்பிள்ளைகள் சிறுவயதில் எம்மிடம் வந்து செபங்களைப் படிப்பதனால் அவர்கள் பக்தியாகச் சொல்லுகிறார்கள். பெரியவர்களுக்குச் செபங்கள் அர்த்தமில்லாவிடினும், சிறுவர்கள் வளரும் போது புத்தியும் விருத்தியடைந்து நல்ல கிறீஸ்தவர்களாக வரமுடியும்.

திருஇருதயப் பாடசாலை வகுப்பு மாணவர்கள் சிலவேளைகளில் தம் சுற்றாடலில் யாரும் நோயாளிகளாக இருந்தால் பாடசாலைகள் முடிந்ததும் ஒன்று கூடி அவர்கள் இல்லம் சென்று திருஇருதயப்பிரார்த்தனை சொல்லி சிலவேளைகளில் செபமாலையும் ஓதுவர். அதனால் முழங்காலில் இருக்கவும், குனியவும், வாய்திறந்து செபிக்கவும் பழகிக் கொள்கிறார்கள்.

எங்கள் அறிக்கையில் கூறப்பட்ட மேரிமுத்துக்கிஸ்துவை மறந்திருக்க மாட்டீர்கள். 2 வருடங்களுக்கு முன்பு அவவின் மைத்துனி மெதடிஸ் மதபோடிங்கில் இருந்து அவளை எடுத்து எம் அநாதைமடத்தில் சேர்த்தாள். அங்கு செபங்களைப் படித்தாள். சில மாதங்களுக்குப் பிறகு திருமுழுக்குப் பெற ஆசித்தாள். இதை அவளின் உறவினனுக்குத் தெரிவித்தபோது தனக்குப் பிரச்சினை இல்லை எனவும், மற்றவர்களால் தொந்தரவு ஏற்படும் என்று குருநாகல் அல்லது திரிகோணமலைக்குத் தூர அனுப்பிவிடும்படி கூறினான். எனக்குத் தூர அனுப்ப விருப்பமில்லை. யாழ்ப்பாணத்திலேயே இருந்தாள். தேவதாயின் பாதுகாப்பில் அவளை ஒப்படைத்தோம். எலிசபேத் என்றும் பெயரைப் பெற்றுக் கொண்டாள்.

2 வருடங்களின் பின்பு தந்தை ''லெலோன்'' (Lelous) பரீட்சை வைத்த போதும் திருப்தியாக இருந்ததால் வேறு 2 பிள்ளைகளுடன் திருச்சபையில் சேர அனுமதிக்கப்பட்டாள். ஆயர் மெலிசான் பிள்ளைக்குத் திருமுழுக்குக் கொடுத்து, ஞானத்தாயாகத் தன் மருமகளை நியமித்து ''கிளாறா'' என்னும் பெயரை இட்டார். அவ்வேளை சாத்தானும் தன் வேலையைச் செய்யத் தொடங்கினான். உறவினன் இவளுக்குச் சார்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும், அவனின் மனைவி தீயவனுக்கு இடம் கொடுத்து கிளாறாவுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதில் திரும்பி வரும்படியும், அல்லது நகைகளை அனுப்பிவைக்கும் படியும் எழுதியிருந்தது. இதை வாசித்ததும் உடனே அவள் சங்கிலி, காப்பு, தோடு எல்லாவற்றையும் கழற்றி கடிதம் கொண்டு வந்தவனிடம் கொடுத்துவிட்டாள். இதனால் ஏமாற்றம் அடைந்து மீளவும் ஒருமுறை தன்னைச் சந்திக்கும் படி ஒருவரைக் கிளாறாவிடம் அனுப்பினாள். அதற்கும் தான் முதல்நன்மை பெற்றுப் பின் உறுதிப்பூசுதல் பெறவிருப்பதாகக்கூறி அவளையும் அனுப்பிவிட்டாள் கிளாறா.

## யாழ்ப்பாணம் - மார்கழி 1885

என் நல்ல தாயாரே, 1883ம் வருட அறிக்கை அநாதை மடநிலையை எடுத்துக்கூறியது. தற்போது அவை நிவிர்த்தி செய்யப்பட்டுள்ளது. தரை 3 மீற்றர் உயர்த்தப்பட்டுள்ளது. யன்னல் அகலமாக உள்ளது. எனவே காற்றோட்டமுள்ளதாக இருக்கும். அத்துடன் ஆலயவேலையும் முடிந்துள்ளது. ஆலயம் திருஇருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. ஆயர் மெலிசான் ஆவணி 15ந் திகதி முதற் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். 4 வருடங்களாகப்பட்ட கஷ்டங்கள் எல்லாம் போய் தேவபராமரிப்பிற்கு நன்றி கூறினோம். சேவியர் தாயாரின் கனவு அவர் இறந்த பின்பு நிறைவேறிற்று.

ஆயருக்கும் எம் நன்றி உரித்தாகுக. இந்த ஆலயத்தின் வழியாக எமது இல்லத்தைப் பெரிதாக்க உதவி செய்தார். இத்திருவிழாவில் முதல் நன்மை பெற்ற 5 பிள்ளைகள் உறுதிப்பூசுதல் பெற்றனர். 14 பிற சமயத்தவர்கள் திருமுழுக்குப் பெற்றனர். எமது அநாதைமடத்தில் இறைவனதும், திருச்சபையினதும் பிள்ளைகள் பெருகியதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

இதனால் பக்தி முயற்சிகள் அங்கு இடம்பெறுகின்றன. தையல் வேலைகள் தமிழில் படிப்பிப்பதால் பிள்ளைகள் பாடசாலை முடிந்து மடத்தை விட்டு வெளியேறும் போது, நல்ல குடும்பப் பெண்களாகவும் , ஆசிரியர்களாகவும் மாறி விடுகின்றனர்.

ஆரம்பத்தில் இருந்து 200 குடும்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 50 இளம் பெண்கள் தற்போது இயேசுவின் இருதயத் தொழிலகத்தில் சேர்ந்துள்ளனர். வருங்காலத்திலும் இவ்வாறான பணிகள் மக்கள் மத்தியில் செய்யவுள்ளோம். இதை எதிர்பார்த்து இயேசு, மரி, சூசையின் உதவியை வேண்டி நிற்கின்றோம்.

எமது வெளிப்பாடசாலை புதுவாழ்வு அளிக்கும் பாடசாலையாக மாறிவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம்**

**(June 1890)**

என் நல்ல தாயாரே!

எம் பணிகள் எப்போதும் சில குறிப்பிட்ட திகதிகளில் உள்ளதை மட்டுமே உங்களுக்கு நாம் அறிவிக்கின்றோம். இம் முறை இயேசுவின் திருஇருதயத்திற்கு நன்றியாக இதை வரைகின்றேன். எமது பிள்ளைகளும் இப்பக்தியில் வளர்ந்து வருகிறார்கள்.

மாசி மாதம் 2ந் திகதி (Fr. Touchet) ரூச்சே தியானம் கொடுப்பதற்கு வந்தார். மாலை 3 மணியளவில் வகுப்பில் பிள்ளைகள் இருந்தபோது மணியொலி குருவின் வருகையை அறிவித்தது. உடனே அமைதியாகக் கோவிலுக்குச் செல்ல வேண்டிய நேரம் ஆங்கில வகுப்புப் பிள்ளைகள் அநாதைச் சிறுமிகள். புனித ஜேர்மன் திருஇருதய வெளிப்பிள்ளைகள் அணியாகக் கோவிலுக்கு வந்து பீடத்தைச்சுற்றி அமர்ந்திருந்தது கண்கொள்ளாக் காட்சியாகும். அத்துடன் நகர்ப் புறத்தில் இருந்தும் சில பக்தியுள்ள பிள்ளைகள் வந்திருந்தார்கள். குருவானவரின் அறிவுரை இந்த இளைஞரின் உள்ளங்களைத் தொட்டது. அநாதைப் பிள்ளைகள் தியானநாட்களில் துறவிகளின் அமைதியைக் கண்டு பழக்கப்பட்டதால் தாமும் தம் ஒய்வு நேரங்களை விடுத்து அமைதியில் கழித்தனர்.

இறுதி நாளில் ஆயர் மெலிசான் ஆண்டகை திருப்பலி நிறைவேற்றினார். இறுதியில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது. இயேசுவின் பாதத்தண்டை நாள் முழுவதும் இருக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன. நற்கருணை ஆசீர்வேளையில் ஓர் ஆங்கில வகுப்புப்பிள்ளை எல்லோர் பேராலும் அர்ப்பணிக்கும் செபத்தைச் சொன்னாள். (act of eonsecration) அவ்வாறே ஒரு சுதேசப் பெண்ணும் தமிழில் அதே செபத்தைச் சொன்னாள்.

இதைப்பார்க்கும் போது எமது 25 வருட உழைப்பின் பலனைக்கண்டு உள்ளத்தில் மகிழ்ச்சி உண்டாகின்றது. நாளுக்கு நாள் நாம் விதைத்த விதை வளர்ந்து இயேசு, மரி, சூசைக்கு மகிமை தருகின்றது. சபையை இங்கு ஆரம்பித்தவர்களுக்கும், புதிய சகோதரிகளுக்கும் ஊக்கத்தைத் தருகின்றது.

ஆனி மாதத்தில் எம் ஆசிரியர்கள் பக்தியின் அறுவடையைக் காண்கின்றார்கள். திருஇருதய ஆண்டவர் மகிமை பெறுகிறார். முதல் வெள்ளிப் பக்தியும் நல்ல முறையில் இடம் பெறுகின்றது.

எமது ஆடி மாத ஒய்வுகால விடுமுறை 15ந் திகதி ஆரம்பமாகியது. குழுமத்தின் ஒரு பகுதி ஊர்காவற்றுறைக்குச் சென்றது. எமது உடல் நலத்திற்குப் பெரிதும் உதவுகின்றது. 2 மணித்தியாலங்கள் கடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவழிக்கின்றோம். இது எமக்கு மிகவும் மகிழ்ச்சி. எனினும் எமது படகை வேறு பிற சமயப் படகுகள் தாண்டிச் செல்கின்றன.

ஒரு தீவில் பாம்பு ஒன்றுக்கு (நயினாதீவு) வழிபாடு செய்கிறார்கள். நாம் இவர்களுக்காகச் செபிக்கிறோம். இந்தப்படகுகளில் ஏராளமானவர்கள் பயணம் செய்கிறார்கள். 15 நாட்கள் அங்கு செலவிட்டு, எம்பணிகளை மீளவும் தொடரவும். 4மாத இடைவெளியின் பின் வருகை தரும் எம் ஆயர் மெலிசானை வரவேற்கவும், யாழ் திரும்பினோம். யூபிலிக் கொண்டாட்டங்கள் ஆயருக்கும் எமக்கும் ஆறுதலைத் தந்து ஆன்மாக்களின் மீட்புக்கு உதவி செய்கின்றன.

திருஇருதய வெளிப்பாடசாலை ஆசிரியர்கள் தம் மாணவர்களின் பெற்றோரை அழைத்துப் பிள்ளைகளில் கவனம் செலுத்தும்படி கூறிவருகிறார்.கள் ஒரு பிள்ளை அழுவதைக்கண்டு எம் சகோதரி அசம்சன், அவள் துயரத்தின் இரகசியத்தைக் கண்டறிந்தாள். பெற்றோரின் முறையற்ற உறவுக்கு ஆன்மீக ரீதியான உதவியைக் கேட்டு நின்றாள்இப்பிள்ளை. எனவே சகோதரி இப்பெண்ணின் தாயை அழைத்து அவளுடன் இறைவனின் இரக்கத்தைப் பற்றிப் பேசினா. தாயும் தன் துன்பத்தைப் பகிர்ந்தாள். எனவே மறுநாள் சகோதரி அவள் இல்லம் சென்ற போது தகப்பன் எங்கோ சென்று விட்டார். அடுத்தநாள் திருப்பலி முடிந்த பின் அங்கு சென்றார்கள். அப்போது ஒரு கை ஒன்று அவனை வெளியே செல்ல விடாது தடுத்து விட்டது. தந்தையை அழைத்து வரும்படி சிறுமியை அனுப்பினர். தந்தை இவர்களைக் கண்டதும் ஆச்சிரியமடைந்தான். தன்னைக் காணவே இவர்கள் வந்தார்கள் என்ற செய்தி, அவனைக்குழப்பத்தில் ஆழ்த்தியது. அமைதியாகச் சகோதரிகள் கூறுவதைக் கேட்டு தன் பழைய நிலையில் இருந்து மனம் மாற விரும்பினான். உடனே சகோதரி அசம்சன் தன்னைப்பின் தொடரும்படி குருவிடம் சென்று 'ஒப்புரவு அருட்சாதனம் பெற்று வரும்படி கூற அவனும் அதற்குச் சம்மதித்தான். மறைக்கல்வியில் படித்து மறந்து போன செபங்களையும் படிக்கும்படி சொல்லப்பட்டது. பின்பு தினமும் அவன் திருப்பலியில் பங்குபற்றினார். ஓநாய் ஆட்டுக் குட்டியாக மாறியது. திருமண ஆசீருடன் குடும்பத்தில் அமைதி வந்தது. இந்த மனமாற்றம் பிள்ளைகளுக்கும் உதவியது. 14 வயதான கடைசிப்பிள்ளையும் திருமுழுக்குப் பெற்றாள். இவ்வாறான பல மீட்பின் செயல்கள் நடைபெறுகின்றன.

ஒரு வயோதிபருடைய வாழ்வு பலருக்கு இடறலாக இருந்தது. இதனால் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் துன்புற்றனர். திருமணத்தின்பின் அருட்சாதனங்கள் ஒன்றையும் பெற்றுக் கொள்ளவில்லை தற்போது மனம் திரும்பியுள்ளார். எமது வெளிப் பாடசாலைச் சகோதரிகள் 20 வயதுள்ள ஒரு பெண்ணுக்குப் படிப்பித்துத் திருமுழுக்குப் பெற்று ''பொலின்'' என்னும் பெயர் பெற்றாள். எம் ''மாசெத்'' தாயாரை (Machet) இது நினைவூட்டுகின்றது. நல்ல கிறீஸ்தவளாக இருக்கின்றாள். இந்த நிலையில் நிலைத்திருக்க விரும்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐப்பசி 19ந் திகதி ஒரு நோயுள்ள சிறுமியைக் கொண்டு வந்தனர். அப்போது தாதிப்பணிபுரியும் எமது ஒரு சகோதரி ''நான் சிகிச்சை செய்வேன்'' ஆனால் குணமாகுதலை நான் உறுதிப்படுத்த முடியாது என்று. வாயில் ஒரு துளி திரவத்தை விழுங்கச் செய்து நெற்றியில் நீரை ஊற்றினா. சில மணித்தியாலங்களின் பின் அவளது ஆன்மா தேவதூதர்கள் மத்தியில் சென்றது.

கார்த்திகை 30ந் திகதி எம் அநாதை மடத்தில் வளர்ந்த 2 பிள்ளைகள் ஆயத்த கன்னியர்களாக வர தயாராக இருந்தனர். ஆயர் மெலிசான் ஆண்டகைக்கும் காண்பித்தோம். இருவரும் தம் அழைத்தலை செபத்தினாலும், தம் குடும்ப விருப்புக்கு எதிர்ப்பாலும் வளர்த்தனர். ஒரு பெண் பலகாலமாகத் துறவு வாழ்வை தன் உள்ளத்திலே விரும்பியிருந்தவள். ஒரு நாள் தாய் வந்து இந்தக்கிழமையில் திருமண ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாகவும், அவள் சகோதரி மன்னாரில் இருந்து இந்த மாதத்தில் வருவாள் எனவும் கூறினாள். அப்போது அவள் ''அம்மா'' கோபிக்க வேண்டாம். முன்பு நான் திருமணம் செய்ய விரும்பினேன். தற்போது இறைவன் தன் பணிக்கு அழைக்கின்றார். எனவே அமைதியாகவிடுங்கோ. நான் உங்களுக்காகச் செபிக்கின்றேன். உங்களை மறக்கமாட்டேன். எனக்கூறிய போது தாய்க்கு ஆச்சிரியமாக இருந்தது. எனவே தனக்கு அமையும்படியும் அல்லது நகைகளைத் தரும்படி கேட்டபோதும் உடனே மகள் சங்கிலி, தோடு என்பவற்றைக் கழற்றி இவை உங்களுடையவை, உங்களிடம் தருகின்றேன் எனக் கொடுத்தாள். தாய் அதை எடுத்துச் செல்லவில்லை மேசையில் இருந்தது.

மறுநாள் அவளின் தங்கை, சித்தி வந்து தாயின் ஏமாற்றம் பற்றிக்கூறி திருமணம் செய்யாவிடினும் வீட்டில் வந்து இருக்கும்படியும் கூறினார்கள். அல்லது நீதிமன்றம் செல்ல வேண்டிவரும் என்றனர். அவள் எதற்கும் இணங்காது செபத்தில் நிலைத்திருந்த படியால் இரு ஆயத்தநிலையினரும், நவகன்னியர் இல்லம் செல்லமுடிந்தது.

மார்கழி 5ந் திகதி ஆயர் மெலிசான் எம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார். 10 சிறுமிகளுக்கு யூபிலி ஆண்டில் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. மார்கழி 24ந் திகதி 33 சிறுமிகள் முதல் நன்மை பெற்றனர்.

இந்த மகிழ்ச்சியுடன் துன்பங்களும் கலந்துள்ளன. திருஇருதய வெளிப்பாடசாலையில் 125 பிள்ளைகள் படிக்கிறார்கள். பெற்றோர் சமயக் கடமைகளை நன்றாக அனுசரித்தால் இத்தொகை இருமடங்காக அதிகரிக்கும். நகரின் ஏழைப்பகுதியில் வாழ்கிறார்கள்.

எனவே உங்கள் செபங்களையும் இவர்களுக்காகக் கேட்டு நிற்கிறோம். எமமடத்து மாணவர்கள் அங்கு செல்லும் போது நல்ல விளைவை எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(புரட்டாதி - 1890)**

வருடாந்த அறிக்கைகள் இலங்கையின் ஆரம்ப பணிகளையும், ஆசீர்வாதங்களையும் எமக்கு எடுத்தியம்புகின்றன. 1887இல் ஒரு இடைவெளி ஏற்பட்டது. வெள்ளி யூபிலி வருடத்தில் இதனையிட்டு வருந்துகின்றோம். 25 வருடமாக இலங்கைத் தீவில் திருக்குடும்ப சகோதரிகள் சிறப்பாக ஸ்தாபகிமார் தம் செயல்களைக் கூற முடியாதுள்ளது.

இறுதி வேளையில் மெலிசான் ஆயர் ஐரோப்பாவுக்கு வந்தபோது அவரின் ஒரு புத்தகம் எம் கைக்குத் தேவாதீனமாகக் கிடைத்தது. யாழ் மடத்தின் திருப்பாலத்துவ சபையின் சுருக்கமே அது. அதனை எம் சகோதரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளின் சாட்சியமாகத் தருகின்றோம்.

ஆயர் அவர்களே, 4வருட அறிக்கையைத் தருகின்றோம். வீடு உயரமான பகுதியிலிருப்பதால் சுகாதார நிலை பேணப்படுகின்றது. எனவே நோய் நொடியின்றி வாழ முடிகின்றது. ஈரலிப்பு இல்லை. மண் போட்டுக் கடல் உயர்த்தப்பட்டதால் சுகாதாரத்துக்கு நல்லதாக உள்ளது. வருடத்தின் பெரும் பகுதியில் நாளின் மதிய வேளை சூரிய வெப்பம் அதிகம். தென் கிழக்கு வாசல் கொண்ட எம் கட்டிடங்களில் வசிப்பது கஷ்டம். விறாந்தை போட வேண்டிய நிலை. இது எம் புதிய தேவையாக உள்ளது. அத்துடன் எம் மாணவர்களினதும் அவர்களின் ஆசிரியர்களினதும் வாழ்த்துக்கள் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

1887 ஐப்பசி 1ம் திகதியில் 70 அநாதைச் சிறுமிகள் உள்ளனர். 1874 தை 1ம் திகதியிலிருந்து 25 பேர் வெளியேறியுள்ளனர். 38 பேர் எம்மிடம் சேர்ந்துள்ளனர். வெளியேறியவர்கள் திருமணம் செய்தும், நல்ல நிலையிலும் உள்ளனர். 27 பேர் திருமுழுக்குப் பெற்றுள்ளனர்.

தற்போது 7பேர் இந்த அருளுக்கு ஆயத்தம் செய்யப்படுகின்றார்கள். இப்பிள்ளைகள் நல்ல புத்தியுடையவர்கள். படிக்கின்றார்கள். பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார்கள். திருஇருதயப் பக்தி அநாதை இல்லத்தில் வேரெடுத்துள்ளது. முதல் வெள்ளிப் பக்தி முயற்சி செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாளில் திருவிருந்தில் பங்குபற்றுவார்கள். இவர்கள் தம் பெற்றோருக்கு அப்போஸ்தலர்களாக உள்ளார்கள். இறைவனைப் பற்றியே கதைப்பார்கள்.

திருப்பாலத்துவ சபை இவர்களைப் பாதுகாத்து வருகின்றது. ஜேர்மைன் (Germaine) எனும் சிறுமியைத் தாய் தன் வீட்டிற்குச் சுகநலன் கருதி அழைத்துச் செல்ல விரும்பினாள். அவளுடன் விட்டால் பிற மதத்தில் சேர்ந்து விடுவாள். விக்கிரக ஆராதனை மூடப்பழக்க வழக்கங்களில் பங்குபற்றுவாள். விசுவாசத்தை இழக்க நேரிடும். எனவே தடுத்தோம். சிறுமியும் ''என்னை அங்கு அழைத்துச் செல்ல வேண்டாம். இங்கு என்னைப் பராமரிக்கின்றார்கள். வீட்டிலும் பார்க்க இங்கு விரைவில் சுகம் பெறுவேன். வீட்டிற்கு வரமாட்டேன்'' என்றாள். மறுநாள் வேறொரு காரணத்துடன் தாய் வந்தாள். அப்போது சிறுமி, ''நான் விரைவில் சுகமடைய நீர் விரும்பினால் அடைக்கலமாதா சுரூபத்தின் முன்னால் (O.L.R) 2 மெழுகுதிரியை ஏற்றி ஒவ்வொரு வருடமும் புரட்டாதி 8ல் 2மெழுகுதிரி கொண்டு வருவதாக வாக்குப் பண்'' என்றாள். சிறுமி சுகம் பெற்றாள். மாதாவின் பிறந்த தினத்தில் அவள் பாதத்தில் சிறுமி சென்று ஆரோக்கிய அன்னையைப் புகழ்ந்தாள். அதேவேளை 9வயதுச் சிறுமி இயேசுவின் வருகைக்கு ஆயத்தம் செய்து முதல்நன்மை பெற்று, இறக்குமுன் எல்லோருக்கும் நன்றி கூறி மகிழ்வுடன் இறந்தாள். இவ்வாறு வேறு சில நிகழ்வுகள் நடைபெற்றாலும் கடிதத்தை நீடிக்காது நிறைவு செய்கின்றேன்.

யாழ்ப்பாண சகோதரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (November 1890)

என் நல்ல தாயாரே!

1889ம் ஆண்டு அறிக்கையானது பல சம்பவங்களைத் தாங்கியுள்ளது. இதன் மூலம் உங்கள் யாழ் - குமாரத்திகளின் வாழ்வு, பணிகள், பயம், நம்பிக்கை என்பவற்றை அறியமுடிகின்றது.

வைகாசி மாதம் 31ந் திகதி எம் சகோதரி யோசேப்பின் இறந்த நாளாகும். அத்துடன் பிள்ளைகளின் பரீட்சை நாளுமாகும். பிள்ளைகளுக்குக் கஷ்டமாக இருந்தது. எனவே ஆனி 28ந் திகதிக்குப் பரீட்சை மாற்றப்பட்டது. திருஇ.ருதய நாதரின் உதவியுடன் நல்ல சித்தியும் கிடைத்தது.

எம் ஆயர் மெலிசான் அவ இறந்த நாளில் இல்லாதிருந்தாலும் மறுநாள் எம் துன்பத்தில் வந்து கலந்து கொண்டார். 2 நாட்களின் பின் எம் தலைவிகளின் தீர்மானத்தைக் கூறினார். எம்மில் ஒருவர் அவவின் இடத்தை எடுக்கும்படியாகக் கூறினார். ஆயர் எம்முடன் 15 நாள்கள் தங்கினார். இதற்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்கிறோம்.

தை மாதத்திலேயே ஆளுநரும் அவரது குடும்பமும் எம்மைச் சந்திக்க வருவதாக அறிவிக்கப்பட்டது. மனிதனின் தீர்மானத்தை இறைவன் தடைசெய்துள்ளார். மக்கள் அவர் வருகைக்குத் தயார் செய்யும் போது இங்கிலாந்தில் இருந்து உடனடியாக வருமாறு ஒரு தந்திச் செய்தி கிடைத்ததால் துரை துரைச்சாணி Gorden சென்று விட்டனர். இது மக்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. எனவே அவரின் செயலாளர் திரு. நோயல் வாக்கர் (Mr. Noel Waker) அவருக்குப் பதிலாக வந்தார்.

எங்கள் வகுப்புகளைப் பார்வையிடுவார் என்று அறிந்ததால் அதற்கு ஆயத்தம் செய்தோம். அருட்தந்தை விளானகானின் பிரிவினால், துயருற்றிருந்த, அவரின் தாயாருக்கு ஆறுதல் அளிக்க மாறியோசேப்பின் தாயார் பருத்தித்துறைக்குப் போயிருந்தா. எனவே ஆயர் பல பணிகள் மத்தியில் எம்மடத்திற்கு வந்து ஆளுநரின் பிரதியை வரவேற்றார்.

முதல் வரவேற்பு முடிந்ததும் ஆங்கில வகுப்புக்குச் சென்றார்கள். வாயிலில் ''பியானோ'' இசைக்கப்பட்டது. ஒரு மாணவி 2 சிறுமிகளுடன் வந்து ஒரு வாழ்த்துரை வாசித்தா. இதனால் அவர் மிகவும் மகிழ்ச்சியுற்றார். அத்துடன் ''கோர்டன் பிரபு'' வரமுடியவில்லை எனவும் கூறினார். எமது குடும்பத்தை வாழ்த்தினார். பின்பு தானே எழுந்து ஒரு சுதேசச் சிறுமியின் கரத்தைப் பிடித்துக் குலுக்கினார். இதனால் அவள் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் அநாதை இல்லத்தையும் சந்தித்தார். அவர்களின் பாட்டு நன்றாக இருந்தாலும் மொழி புரியாததால் ஆயர் மொழி பெயர்த்தார். இவற்றால் "சேர்வாக்கர்" (Sr Waker) மகிழ்வடைந்து எமது மடத்தில் தமக்கு நல்ல நம்பிக்கை உண்டானது எனக்கூறி மாலையில் வேறுபாடசாலைகளைச் சந்திக்கச் சென்று விட்டார்.

ஆனி 16ந் திகதி திருஇருதயக் காட்சியின் 2ம் நூற்றாண்டை யாழ் மக்கள் கத்தோலிக்க திருச்சபையுடன் இணைந்து கொண்டாடினார்கள். "யாழ் கத்தோலிக்க பாதுகாவலன்" பத்திரிகையில் வெளியானதை அப்படியே தருகிறேன்.

3 திட்டங்கள் இவ்விழாவுக்கு ஏற்பாடு செய்து வெற்றியும் தந்தன.

**1. முடி**

நாட்டில் வறுமை இருந்தாலும் ஏழை பணக்காரர் ஒன்று சேர்ந்து திருஇருதயச் சுரூவத்துக்கு ஒரு தங்கமுடி வைக்க தீர்மானித்தனர். அதன் பெறுமதி 1400 or 1500 பிராங் ஆகும். அதில் விலையேறப்பெற்ற கற்கள் பதிக்கப்பட்டுச் செய்யப்பட்ட அழகிய கைவேலையாகும்.

**2. தியான நாட்கள்**

8ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பம்.

**ஒப்புரவு அருட்சாதனம் :-**

ஆண்கள் பலர் புரட்டஸ்தாந்து மதத்தவருடன் வளர்ந்ததால் இந்த அருட்சாதனத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. பல ஆண்டுகள் இந்த அருட்சாதனத்திற்கு வராதவர்கள் தம்மைப் படைத்தவருடன் ஒப்புரவானார்கள். இறுதிநாளில் 200 பேர் திருவிருந்தில் பங்குபற்றினர். பெரியகோவில் நிரம்பி வழிந்தது. அருட்தந்தை யூலன் "உம் அரசு வருவதாக" என்னும் தலைப்பில் மறையுரை ஆற்றினார்.

**3. பவனி**

மறையுரையைத் தொடர்ந்து பவனி இடம் பெற்றது. பெரியகோவில் ஆச்சரியப்படத்தக்க வகையில் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது. தொங்கும் துணியில் "எரியும் இயேசுவின் இதயத்திற்கு எனப் பொன்னால் எழுதப்பட்டிருந்தது. மேலும் யன்னலில் தொங்கிய துணியில் "மக்கள் மத்தியில் இருப்பதே எனக்கு ஆனந்தம்" என உள்ளத்தைத் தொடக்கூடிய வண்ணம் வார்த்தைகள் இருந்தன. தெருக்கள் மக்களால் அலங்கரிக்கப்பட்டன. 55 வளைவுகள் கட்டப்பட்டன. சில மிகவும் அழகாக இருந்தன. திருஇருதயச் சுரூவம் ஒரு மரப்பீடத்தில் வைத்து திருக்குடும்பச் சகோதரிகளால் அலங்கரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவனியில் முதலில் சிலுவை எடுத்துச் செல்லப்பட்டது. அதைத் தொடர்ந்து பாடசாலை மாணவர் மாணவிகள் அதன் பின் தங்கமுடியுடன் திருஇருதயச்சுரூவம் 32 ஆண்களால் மாறி மாறித் தூக்கப்பட்டது. அவர்கள் திருஇருதயப்படம் வைத்து தைக்கப்பட்ட சிவப்பு நாடாவணிந்து காணப்பட்டனர்.

இவர்கள் முன்பாக மக்களின் தலைவர் ''முதலியாரும்'' நின்றார். திருஇருதயச்சுரூவத்தின் பின்னே பீடப்பணியாளர்கள், குருக்கள், பின்னே ஆண்கள் ஒரு கிலோமீற்றர் நடந்து பவனியில் பங்குபற்றினர். பார்வைக்கு மிகவும் அழகாக இருந்தது. எல்லோரும் திருஇருதய உத்தரியம், வரவணிக்கம் அணிந்திருந்தனர். பிள்ளைகள் தீபம் வைத்திருந்தனர். சபையினர் கொடி வைத்திருந்தனர். பிரார்த்தனைகள், பாடல்களுக்கிடையில் பாடல் இசை இடம்பெற்றது. 12 முறை சுரூவம் வளைவுகள் உள்ள இடத்தில் வைக்கப்பட்டு. ஒரு பரலோகமந்திரம், திருஇருதயச் செபம் சொல்லப்பட்டது. கடலுக்கருகாமையில் சுரூவம் வந்த போது மீனவர் கடலை நோக்கித் திருப்பக் கேட்டனர். 7 மணிக்குப்பவனி பெரியகோவிலை அடைந்து நற்கருணை ஆசீர் வழங்கப்பட்டது.

இயேசுவின் திருஇருதயத்திடம் நாமும் பிள்ளைகளும் அர்ப்பணிக்கப்பட்டோம். சில கிழமைகளின் பின் ''தாபோர் மலைக்கு அண்மையில் கல்வாரி'' உள்ளது என நிரூபிக்கப்பட்டது. கொலரா நோயானது யாழில் கிராமங்களில் பல அழிவுகளை ஏற்படுத்திய பின்பு எம் நகருக்கும் பரவியது. மீனவகுடும்பங்களில் பலர் இறந்தனர். எமது மடம் காப்பாற்றப்பட்டது.

ஐப்பசி மாதத்தில் 2 புதிய சகோதரிகள் வருகை தந்தனர். இறைவனுக்காக நாம் விட்டு வந்த நாடு, அங்குள்ள தலைவிகள் பற்றிக் கூறினார்கள். மார்கழி 14ந் திகதி பரிசளிப்பு வைபவம் அருட்தந்தை ''மோறுவா'' தலைமையில் நடைபெற்றது. பியானோ இசைகள் உரைகள் இடைஇடையே நடைபெற்றன.

எமது அநாதைமடத்தில் ''மாறி நற்றிவிற்றி'' என்னும் 7 வயதுச் சிறுமி சேர்க்கப்பட்டாள். தாய் தந்தையை இழந்து தாய் மாமன் பாதுகாப்பில் வளர்ந்தாள். அநாதைமடத்தில் இடமின்மையால் முதல் ஒரு பழைய மாணவியுடன் வாழ்ந்தாள். 1887 புரட்டாதி 8ந் திகதி எம் பிள்ளைகளுடன். சேர்ந்து இப்பெயரைப் பெற்றாள். அமைதியுடனும் மகிழ்வுடனும் தன்வேலை, படிப்புக்களை நிறைவேற்றி வந்தாள். 1888 வைகாசி 4ந் திகதி திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. அன்று மாதத்தின் முதல் வெள்ளியாகும். கோவிலுக்கும், கெபிக்கும் சென்று இறைவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி கூறினாள். அத்துடன் நன்கொடையாளர்களுக்கும். தாயாருக்கும் செபித்தாள். 8 வயதப் பெண் என்றே சொல்ல முடியாது. சென்ற பங்குனி மாதத்தில் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு இறுதியில் வைத்தியர் கைவிட்டனர் அவள் திருவிருந்தில் பங்குபற்றக் கேட்டாள். அவளின் இளமை காரணமாக மறுத்தும், தணியாத ஆசை காரணமாக குருவானவர் அனுமதியளித்தார். பிதா. லெகான் (Rev. P. Lecan) மாலையில் நோயாளியை கேள்வி கேட்டு அவளின் புத்தித்திறனை அறிந்து ஆச்சரியப்பட்டார். அவளும் இயேசுவைப் பெற்றுக் கொள்ளத் தன்னை ஆயத்தம் செய்தாள்.

2 நாட்களின்பின் அவளின் ஆன்மாபிரிந்தது. அதற்கு முன் அநாதைச் சிறுமிகள் அவளின் படுக்கையருகே இருவரிசைகளில் நின்று திருஇருதயப் பிரார்த்தனையைச் செபித்தார்கள். சுதேச ஐரோப்பியகுழுக்களும் குருவுடன் வந்து நன்மையும் கொடுக்கப்பட்டது. பின்பு உரத்த குரலில் தன் நண்பிகளுக்காகச் செபித்தாள். களைப்படையாதிருப்பதற்காக குரலைத் தாழ்த்தும்படி கூறினேன். கண்ணைத் திறந்து பார்த்து நான் முழந்தாளில் இருப்பதைக் கண்டு தனக்கு முத்தம் தரும்படி கேட்டாள். பின்பு பரலோகத்தில் தான் ஒருவரையும் மறக்கமாட்டேன் என்றாள். அநாதைச் சிறுமிகள் வெளியேறினாலும், ஒழுங்குமுறையில் இறுதி வார்த்தைகளைக் கேட்க வந்தனர். வாய் திறக்க முடியவில்லை. காய்ச்சல் கூடியது. சிலகரண்டி நீர்பருகினாள். செபமாலையைத் தன்னுடன் வைத்திருந்து வாய்க்குள் செபித்தாள். பங்குனி 30ந் திகதி வான் நோக்கிச் சென்றாள். தேவதூதர்களால் வரவேற்கப்பட்டு இறைவனைப்புகழ்கின்றாள். தன் உலக வாழ்வில் சகோதரிகளின் பாதுகாப்பைத் தேடியவள் தற்போது அவர்களின் சேமக்காலையில் வைக்கப்பட்டுள்ளாள். எனவே நாம் அங்கு செல்லும் போது அவளையும் நினைவு கூர்வோம். இங்குள்ள அநாதைச் சிறுமிகளுக்குப் பாதுகாவலியாக இருப்பாளாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மார்கழி 1890

என் நல்ல தாயாரே!

இந்த வருடம் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டது. மெலிசான் ஆயரால் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு சிறுமி திருமுழுக்கினால் இறைவனின் பிள்ளையானது எமக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

16 வயதுடைய ''தங்கம்'' என்னும் இப்பெண் சிந்திக்கும் திறன்படைத்தவள். கிறீஸ்தவக் கல்வியைக் கற்று ''ஆன்மேரி'' என்னும் பெயருடன் திருமுழுக்குப் பெற்றாள். எமது வருடாந்த தியானம் தைமாதம் 5 - 12 வரை இடம் பெற்றது. அருட்தந்தை யூலன் இதைநெறிப்படுத்தினார். ஆயரும் உதவி செய்தார். தியானவாரம் விலைமதிப்பற்ற நாட்கள். அந்த நாடகளில் எமது ஆன்மா புதிய வேலைகளைத் தொடங்குவதற்கு ஊக்கத்தையும், புதிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சக்தியையும் பெறுகின்றது. சுதேச சகோதரிகளுக்கு (Lecan) லெகான் குருவானவர் போதித்தார். இறுதிநாளில் சிலர்துறவற உடுப்புப் பெற்றனர். சிலர் வாக்குத்தத்தம் செய்தனர். இதனால் இராயப்பர் சபை பெருகி வருகிறது.

மாசி மாதத்தில் ''கொலரா'' நோய் தணிந்ததால் மீளவும் வகுப்புக்களை ஆரம்பித்தோம். பின்பு மாணவர்களுக்கும் திருக்குடும்பப் பிள்ளைகளுக்கும் தியான நாட்கள் ஒழுங்கு செய்யப்பட்டது. இதன் வழியாக அருள் பொழியப்பட்டன. தியானம் செய்த வெளிப்பிள்ளைகளில் ஒரு பெண் ஒரு வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தாள். அவளும் திருமுழுக்குப் பெற்றுத்திருவிருந்தில் பங்குபெற்றாள். நல்ல உடை அணிந்திருந்தாள். தியான இறுதி நாளில் பிள்ளைகள் தொகையும் பெருகியது. பாஸ்காத் திங்கட்கிழமை கடற்கரைக்குச் சுற்றுலாவுக்கு ஆயத்தமானோம். ஒரேநாளில் திரும்பிவருவது கஷ்டமாக இருந்தது. அதிகாலை எழுந்து 7 வாகனங்களில் பயணமானோம். தலைவி, சகோதரிமாறிகெலன் இவர்களின் வழிகாட்டலில் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்த வண்ணம் யாழில் இருந்து 12 மலைத் தூரத்தில் உள்ள மாதகல் என்னும் இடத்திற்குச் சென்றோம்.். கிராமத்தை அடைந்ததும் மக்கள் இசைவாத்தியங்களுடன் எம்மை அழைத்துச் சென்றனர். சிலவீதிகள் கடலுக்குச் சென்றன. இக்கிராமம் காட்டிலே ஒரு தோட்டம் போன்றது. இங்கு சென்றவுடன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றோம். கோவில் வேலை பூர்த்தியடையவில்லை. மறுநாள் திருப்பலியில் பங்குபற்றினோம். எம்முடைய சுற்றுலா மகிழ்வுடன் அமைவதற்கு எல்லாம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. குருமனைக்கு அருகாமையில் இருந்த இடங்கள் எமக்குத் தங்குமடமாயின. ஒரு கிணற்றில் நிரம்பிய நீர். மக்கள் அவற்றைப் பயன்படுத்துவர்.

மாலை உணவின் முன் கடற்கரைக்குச் சென்றோம். பரந்திருந்த கடற்பரப்பில் ஒவ்வொருவரும் முழுச்சுதந்திரத்துடன் விளையாடி மகிழ்ந்தனர். சிலர் சிப்பி ஊரிகளைப் பொறுக்கினார்கள். சிலர் நீரில் இறங்கி விளையாடி மகிழ்ந்தனர். திரும்பி வரும்போது இரவின் காரிருள் அழகில், நிலவின் பால் போன்ற ஒளி, இவற்றிடையே தென்னை மரங்களின் குளிர்தருநிழல், மெல்லிய தென்றல் காற்று எம்மைக் கவர்ந்தன. வீடு திரும்பியதும் ஒரு மேசை ஆயத்தம் செய்து உணவு பரிமாறப்பட்டிருந்தன. நடந்து வந்த களைப்பில் எமக்கு நல்ல பசி ஏற்பட்டது. நேரந்தெரியாது கதைத்துக் கொண்டே சாப்பிட்டோம். எவ்வாறு இரவைக்கழிக்கப் போகின்றோம்.

2 படுக்கை அறைகள் ஆயத்தமாகின. பாயை விரித்து தலையணை போட்டோம். நகைகள் ஓசையை எழுப்பியதால் எல்லாவற்றையும் கழற்றி தலைமைத்தாயாரிடம் கொடுத்தனர். பயமும் ஏற்பட்டது. செபத்தின் உதவியுடன் கண்மூடியது தான், சரியான சூடும், இரவின் காற்றும் கலந்திருந்தன. அதிகாலையில் இலை, பூ, பழம் எல்லாவற்றிலும் நீர்த்துளிகள் அழகாகக் காணப்பட்டன. இவை முத்துக்கள் போன்று காட்சி அளித்தன. காலையில் திருப்பலியில் பங்கு கொண்டோம். பின்பு திறந்த வெளியில் சுவையான கூழ் தயாரித்தோம். ஒடியல் மாவுடன் நிரம்பமீன், மிளகாய் போட்டுத் தயாரித்தபடியால் நல்ல சுவையாக இருந்தது. மண்பானையில் மர அகப்பையால் எடுத்து இலையில் ஊற்றிக் குடித்தோம்.

எமது வருகையை அறிந்ததும் பலர் எம்மைப் பார்க்க வந்தனர். அவர்களில் ஒரு பெண் எமது கவனத்தை ஈர்த்தாள். அவள் ஏழையல்ல. கூழ் குடிக்கக் கொடுத்தோம். அதனால் அவள் சக்தி பெற்றுத்தன் கதையைக்கூறினாள். அவள் பெயர் இசபெல்லா. சாதிப்பிரச்சினையால் துன்புற்றாள். எனவே அவள் மகளுக்கும் சின்னப்பிள்ளைகளுக்கும் தேவையானவற்றைக் கொடுத்தோம்.

மாலையில் புனித தோமையார் பங்குக்குச் சென்றோம். அங்கு ''லத்தீன்'' சிலுவை வடிவில் கோவில் அமைக்கப்பட்டு ஒரு பக்கத்தில் வியாகுலமாதா பீடம் இருந்தது. யாத்திரையாக நாம் சென்றதால் எம் இன்ப துன்பங்களை அவள் பாதத்தில் ஒப்படைத்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி 15ந் திகதி எமது ஆபிரிக்க சகோதரிகளுக்குத் தெரிந்த சேர். காவ்லொக் (Havelock) எம் வகுப்புக்களைச் சந்திக்க வந்தார். ஆயரும் பலமறை போதகர்களும் கூட வந்தனர். அநாதைகளின் இல்லத்தில் தமிழில் ஓர் உரை ஆற்றப்பட்டது. பாடல்களுடன் ஓர் அழகிய பூக்கொத்து வழங்கப்பட்டது. பாடகர் குழாம் குரல் தனக்குப் பிடித்ததெனவும், மரியாளின் பாடல் ஒன்று கேட்க விரும்புவதாகவும் கூறினார். மறுமுறை தன் மனைவியுடன் வருவதாகவும் கூறிச் சென்றார். எங்களை விட்டு இறைவனடி சேர்ந்த எங்கள் தாய்மாரை எமது யாத்திரைகளில் நினைவு கூர்கிறோம். தாங்கள் செய்த பணிகளின் பலனை அனுபவியாது முடிவில்லா சம்பாவனை பெறச் சென்றுவிட்டார்கள். சேவியர் தாயாரும், யோசேவ்வின் தாயாரும் இவ்வுலகில் இருந்த போது புனித மரியன்னை ஆலயத்தில் அதிக பணிபுரிந்தனர். புரட்டாதி 22ந் திகதி O.L.R. பாடசாலை எங்கள் தாயார் இருவரின் வேண்டுதலுக்கும் சகோதரிகளின் ஆன்மவாஞ்சைக்கும் ஒப்படைக்கப்பட்டது. அன்று 50 பிள்ளைகள் அநாதை வகுப்புகளில் சேர்க்கப்பட்டு பொறுப்பாக ஒரு ஐரோப்பிய சகோதரியும் 3 சுதேச சகோதரிகளும் நியமிக்கப்பட்டனர். குருமனைகாலியாக இருப்பதால் இங்கேயே வகுப்புக்கள் நடைபெற்றன. மெலிசான் ஆயர் பாடசாலை வேலைமுடியும் வரை அங்கு நடாத்தக்கூறினார். அடைக்கல மாதாவின் துணையுடன் (O.L.R) மாணவர்களும் ஆசிரியர்களும் வேலையில் இறங்கினர். மாணவர் தொகை 110 ஆகக்கூடியது.

புரட்டாதி 26ந் திகதி செலஸ்ற் (Celest) தாயாரும், மாறிடிலாநற்றிவிற்றி (Marie de la nativite) தாயாரும் வருகைதரும் செய்தி அறிந்து மகிழ்ந்தோம். இவர்கள் முறையே வென்னாப்புவா, குருநாகல் மடத்தின் தலைவிகளாவர். திரிகோணமலைத் தலைவி வரவில்லை. எனினும் ஐப்பசி 18ல் 7 வருடங்களின் பின்பு சென். லிகோறித்தாயார் வந்து சேர்ந்தா. அப்போது எம் தலைவிகளுக்கு ஒரு தியானம் செய்யும் ஆவல்பிறந்து, மெலிசான் ஆயர் துணையுடன் அருட்தந்தை யூலன் எம்திட்டத்தை அமுல்படுத்த முனைந்தார். ஐப்பசி 24ல் கப்பல் வருகை அறிவிக்கப்பட்டது. எனவே தெற்கில் இருந்து வந்த சகோதரிகள் திரும்ப வேண்டியநிலை. தியானம் செய்ய முடியவில்லை. இது ஏமாற்றத்தை அளித்தது. ஒவ்வொரு தலைவியும் தம் இடங்களைச் சென்றடைந்தனர். எனினும் எமது நல்ல பிதாவின் வாக்குப்படி ஆவியிலும் ஆன்மாவிலும் இதயத்திலும் ஒன்றித்துள்ளோம். ''இறைவன் மாத்திரமே'' என்னும் மனப்போக்கு எம்மை வழிநடத்துகின்றது. இயேசு, மரி, சூசையின் உன்னத மகிமைக்காக இவற்றை ஏற்று வாழ தூண்டிக் கொண்டே இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்

என் நல்ல தாயாரே!

தை மாத முடிவில் புதிய இலங்கை ஆளுநர் வருகையின் அறிவிப்பு எமது குழுவிற்கும் மிகவும் ஆரவாரமாக அமைந்தது. அரசியின் பிரதிநிதியாக சேர் காவ்லொக் (Sri Have lock) எம் பாடசாலைகளில் நன்கு வரவேற்கப்பட்டார். யாழ் வந்து மறுநாளே எம்மடத்திற்கு வருகை தந்தார். அவரை வரவேற்பதற்கு மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து 400 பேர் ஒன்று கூடினர். மண்டபம் போதாமையயால் விறாந்தையிலும் நிரம்பி வழிந்தனர். ஆயர் ஐரோப்பா சென்றபடியால் மோறுவா, மசியே குருவானவர்கள் அவரை வரவேற்றனர். மண்டபத்தில் நுழையும்போது 4வயது தமிழ் பிள்ளை ஒன்று கைகுலுக்கி வரவேற்றாள்.

சேர் காவ்லொக் எம் சபைக்குப் புதியவரல்ல. முன்பு தென்னாபிரிக்காவில் பணிபுரியும்போது (Natal) நத்தால் என்னும் இடத்தில் எம் சகோதரிகளின் பணியை அறிந்தவர். இங்கும் தமிழ் பிள்ளைகளின் தமிழ், ஆங்கில பாடல்களைக் கேட்டார். மாசி மாதத்தில் அருட்தந்தை (Fr.Roux) றூ என்பவரும், எம் சகோதரி மேரி சோபியும் இறந்துவிட்டனர். சிஸ் மேரி சோபி 1886ம் ஆண்டு பெரும் தியாகம் செய்து இலங்கைக்கு வந்தா. சில வருடங்கள் குருநாகலில் பணியாற்றிய பின் நோயுடன் யாழ் வந்தா. 1892ல் மார்கழியில் நோயில்பூசுதல் பெற்றுக் கொண்டா. இறந்தநாள் காலையிலும் தன் தாதியின் மூலம் வெள்ளிக்கிழமை என்று அறிந்து "இறப்பதற்கு ஏற்ற நாள்" என்றா. எனினும் இறைசித்தத்தை ஏற்கத் தயாராக இருந்தா.

மூவொரு கடவுளின் திருவிழா அன்று ஓர் ஆயத்த கன்னிகை துறவறஉடை பெற்றா. சென் பேணாட் என்னும் பெயர் பெற்றா. எஸ்தர் என்னும் இப்பெண் நல்ல வசதி படைத்தவ. தன் மைத்துனரைப் பராமரித்து வந்த வேளையில் இறைஅழைத்தலைப் பெற்றுக் கொண்டா.

பொஞ்சீன் ஆயர் இறந்தபின் மெலிசான் ஆயர் யாழ் வந்தார். 24ந் திகதி யூலன் ஆயர் பிரான்சில் யாழ் ஆயராகப் பதவியேற்றார். பாதுகாவலன் பத்திரிகையில் ஆங்கிலத்தில் வெளிவந்ததை மொழி பெயர்க்கின்றேன்.

மேதகு டாக்டர் கென்றி யூலன் அமதி யாழ் ஆயராகத் தெரிவு செய்யப்பட்டது தளத்திருச்சபையின் வரலாற்றில் ஒப்பிட முடியாத நிகழ்வாகும்.

ஆயர் யாழ் வருமுன்பே அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்க ஆயத்தங்கள் செய்யப்பட்டன. அவர் கொழும்பில் நின்ற வேளையில் பெரும் மழையையும் பொருட்படுத்தாது மக்கள் போட்ட திட்டத்தின்படியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயத்தம் செய்த பொருட்களை ஒன்று சேர்த்து பந்தல்கள், வளைவுகள் யாழ் பேராலயம் வரை போடப்பட்டது. ஆயர் "லேடி கோர்டன்" (Lady Gorden) என்னும் கப்பலில் மார்கழி 14ந் திகதி மண்டைதீவுக்கு வரவேண்டியவர். அருட்தந்தை கோதியே (Fr. Gauthier) அநாதைப் பிள்ளைகளுடன் முதல்நாள் மாலை அங்கு சென்றார். நகரில் பலர் நீராவிக் கப்பலை எதிர்பார்த்தபடி நின்றனர். கப்பல் வராதபடியால் எல்லோரும் திரும்பிச் சென்றுவிட்டனர்.

தென்னோலை, வாழையினால் வளைவுகள், பந்தல்கள் அலங்கரிக்கப்பட்டன. யாழ் வீதிகள் கொடிகளினாலும், பழம், பூக்களினாலும் நிரம்பி வழிந்தன. 4பந்தல்களில் ஆங்கிலம், லத்தீன் மொழிகளில் ஆயருக்கு வாழ்த்துரைகள் எழுதிக் காற்றில் பறந்தன. அமைதி, செல்வம் யாழ் மறைமாவட்டத்தில் நிலவ ஆசிக்கப்பட்டன. கடைசியாக ஒரு கப்பல், ஒரு தாரகை, இரு வானதூதர் அடங்கிய அவர் கேடயம் பச்சை, பொன் கலந்த பலகையில் காணப்பட்டது. சவிரிமுத்து முதலியார் 4 பெரிய சில்லுகள் பொருத்தப்பட்ட ஒரு பந்தலைப் புதுமை மாதா சபையினரால் சந்தியில் அமைப்பித்தார். குருமடத்துப் பந்தல், ரோமன் அமைப்பில் கட்டப்பட்டிருந்தது. சென். பற்றிக் கல்லூரி வாசலில் ஆயருக்கு அலங்கார மேடை அமைக்கப்பட்டது. 65அடி உயரத்தில் எல்லாப் பந்தல்களையும் மிஞ்சியவாறு "கோதிக்" முறைப்படி அமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டிருந்தது. திருக்குடும்பக் கன்னியர்மடத்து அண்மையிலும் தென்னோலையினாலும், தேங்காய்க்குலைகளினாலும் ஒரு பந்தல் வளைவு அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது.

வெள்ளிக்கிழமை அதிகாலையில் வானம் வெளுத்திருந்தது. திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது. எல்லா மதத்தினரும் பொறுமை இழக்க நேர்ந்தது. புனித யாகப்பர் பங்குமக்கள் புதிய ஆயரை வரவேற்க கல்முனை வரை சென்றிருந்தனர். ஒரு விசேட கப்பலில் பிதா லெகான்(Lecan) தலைமையில் புனித பற்றிக் கல்லூரிப் பிரதிநிதிகள் மக்களின் உணர்வுகளை எடுத்துக் கூறினர்.

3மைல் தூரத்தில் அதிகாலை 5மணியளவில் ஆயரின் கப்பல் வேறு 5படகுகளுடன் 12 படகோட்டிகளோடும் விரைவாக வந்து கொண்டிருந்தது. பீரங்கி வெடிகள், கோவில் மணிகள், நாதஸ்வர இசைகள் ஒலித்தன. கைக்குட்டைகள், தொப்பிகள் அசைய பதாகைகள் விரிய, எல்லாம் ஒரே ஆரவாரமாக இருந்தன. கப்பல் கரையை வந்தடைய ஆயர் யாழ் மண்ணை அடைந்தார். பிதா மோறுவா ஆயரின் மோதிரத்தை முத்தமிட ஏனைய குருக்களும் அவ்வாறே செய்தனர். நகரத் தலைவர் முதலியார் ஆயருக்கு மக்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். ஆயரும் ஆசியுரை வழங்கிய பின் கத்தோலிக்கர் சிலர் ஆயரை குருமடம் வரை பல்லக்கில் ஏற்றி வந்தனர். அங்கு பேராலய மூப்பர் ஆயரைத் தமிழில் வாழ்த்தினார்.

பேராலயத்தில் ஏற்கனவே சனத்திரள் நிரம்பியிருந்தது. "என் ஆடுகளை மேய்" என்ற குரல் கேட்டவுடன் ஆயர் நற்கருணை முன் அடிபணிந்தார். பிதா கென்றி யூலன் யாழ் ஆயராக நியமிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்புவின் செய்தியை தந்தை மொறுவா வாசிக்க, ஆயர் அவரைத் தம் பிரதிநிதியாக நியமித்துப் பீடத்தில் ஏறித் தன் ஆசியையும் வழங்கி நற்கருணை ஆசீர்வாதமும் கொடுத்தார். ஆயரில்லமும் ஒளியினால் மிளிர்ந்தது. சிலநாட்களின் பின் எம் இல்லத்திலும் திருப்பலி நிறைவேற்றியது மகிழ்ச்சி. வேறு இரு சகோதரிகள் பிரான்ஸ் போர்டோவில் இருந்து வருகை தந்ததும் பெருமகிழ்ச்சியாக இருந்தது.

## யாழ்ப்பாணத்தில் ஒரு விழா

உங்களிடம் எங்கள் விழாக்கள் நல்வரவேற்புப் பெறுவதால் ஆடி 21ந் திகதி நடைபெற்ற விழாவின் செய்தியை உங்களுக்கு அனுப்புகின்றேன். ஒவ்வொரு வருடமும் இந்தநாள் எதிர்பார்க்கப்பட்டு இரகசியமான முறையில் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படும். 18ந் திகதி தொடங்கி சென்ற் பிறக்சீட் தாயார் சுதந்திரமாக மடத்தில் உலாவ முடியாது. அநாதை இல்லம் நவகன்னியர் இல்லம் சென்றாலும் தடைகள் இருந்ததால் தாயார் புன்னகையுடன் இவற்றை ஏற்றுக் கொண்டார். 20ந் திகதி எல்லோருக்கும் மகிழ்ச்சி. மாலை 3மணியளவில் ஆங்கில வகுப்பு மாணவிகள் பூச்செண்டு கொடுத்து வாழ்த்தினார்கள். நவ கன்னியர் இல்ல மண்டபம் லீலி மலர்களால் அலங்கரிக்கப்பட்டி ருந்தது. எம் தாயார் ஐரோப்பிய சகோதரிகள் சூழவர மண்டபம் நோக்கி வந்தார். வாசலைத் தாண்டியபோது பூமழை பொழிந்து அவவின் பாரம்பரியம் நினைவூட்டப்பட்டது.

அநாதை இல்லமும் அலங்கரிக்கப்பட்டு பிரெஞ் மொழியில் சிறுமிகள் பாட்டிசைத்தனர். ஆங்கில வகுப்பிலும் வரவேற்பு நன்றாக அமைந்தது. சிறுமிகள் பலர் தேவதூதர்போல் இன்னிசையுடன் வந்தனர். திரும்பும்போது தாயாருக்கு மேலே காணப்பட்ட இனிப்பு நிரம்பிய ஒரு கொம்பு திறக்கப்பட கரகோஷத்தின் மத்தியில் சிறுமிகள் சுவைக்க ஒரு ஐரோப்பிய மாணவி உரையாற்றினார். ஒரு சிறுவன் அநாதைகளுக்கென்று பணம் கொடுக்க ஒரு சிறுமி நறுமணப் பூக்கொத்துக் கொடுத்தாள். இதைத் தொடர்ந்து திருஇருதய, மரியாள், சாள்ஸ் வெளிப் பிள்ளைகள் முட்டை, தோடம்பழம், எலுமிச்சம்பழம் கொடுத்தனர். பெற்றோரும் பங்கெடுத்தனர்.

மறுநாள் சகோதரி மேரி சோபி ஒருதிட்டத்தை வெளிப்படுத்தினா. இக்னேஸ் என்பவரின் பொறுப்பில் மடத்தில் பல ஊழியர்கள் வேலை செய்தனர். அவரும் தாயாரை அழைத்தபோது அவ அங்கு சென்றா. எல்லோரும் தம் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். இறுதியில் 3 மாத்திற்கு முன்பு சுக்கு நூறாக உடைந்த ஒரு மணிக்கூடு நிதியாளரின் உத்தரவுடன் இக்னேஸ் என்பவரால் திருத்தப்பட்டிருந்ததைத் தாயார் கண்டா. நாமும் மகிழ்ந்து வயலின் உதவியுடன பாட்டிசைத்தோம். நாளின் இறுதியில் நற்கருணை ஆசீர்வாதத்தின் பின் தாயாரும் ஒரு நறுமணப் பூக்கொத்தை இறைவனுக்கு அளித்தா. அதாவது 5சிறுமிகள் திருமுழுக்குப் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணம்**

என் நல்ல தாயாரே!

முதலாம் தவணையை (6மாதம்) நாம் வருடாந்த தியானத்துடன் தொடங்குவோம். பாலன்குடிலில் அவர் பாதத்தில் எம் பரிசுத்த அழைத்தலைப் புதுப்பித்து எம் அன்றாட வாழ்வைத் தாராள மனத்துடன் ஆரம்பிப்போம். இவ்வருடம் புனித இராயப்பர் சபைத் தமிழ்ப் பிரிவில் ஒரு மகிழ்ச்சியான நிகழ்வு நினைவுகூரக் கூடியது. அதாவது இளவாலையில் யூலன் ஆயரால் சுதேச நவகன்னியர் இல்லத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது. ஆடம்பரத்துடன் இந்நிகழ்வை நடாத்துவதற்காக சித்திரை 15ந் திகதி தெரிவு செய்யப்பட்டது. அன்று பங்குக் கோவிலின் திருவிழா. பலர் அதில் பங்குபற்ற வருவார்கள்.

முதல்நாள் மாலை வழிபாடு 9மணிக்கு நடைபெற்றது. இதில் பங்குபற்றுவதற்கு மாதகல் சகோதரிகள் எமக்கு தங்குவதற்கு இடவசதி தந்தனர். இளவாலையில் வசதி இருக்கவில்லை. சிலர்வெளியில் 4 வண்டிகளில் மெதுவாக நகர்ந்து மாதகல் சென்று பின் இளவாலை சென்றோம். யாத்திரிகர்களின் கூடாரங்களை இரசித்தோம். வழிபாட்டுக்கு ஆயத்தமாக இருந்த மக்களால் ஆலயம் நிரம்பி வழிந்தது. ஒருவாறு எமக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் இருந்து மாலை வழிபாடு முடிந்தபின் நள்ளிரவு போல் எம் தங்குமடம் வந்து சேர்ந்தோம்.

மறுநாள் அதிகாலையில் மீளவும் திருப்பலிக்குச் சென்றோம். பகலில் எங்கு தங்கலாம் என நான் சிந்தித்தேன். சில மணித்தியாலங்களில் ஒரு குசினியும் பந்தலும் மக்களால் கட்டப்பட்டது. சாப்பாட்டு வேளையில் நாம் தனிமையாக இருப்பதற்காக எம் படுக்கை விரிப்புக்களைக் கயிற்றில் போட்டோம். பயனில்லை. எம்மைப் பார்க்கவே விரும்பினர். எமது கறுப்புடைகள் அவர்களுக்கு ஒரு பக்திப் பொருளாகத் தென்பட்டது. நெற்றி நிலத்தில்பட வணங்கினர். அதேவேளை கோவில் மணி அடித்தது.

எதிர்கால மடம் கட்டப்படும் இடத்தில் ஒரு வளைவு அமைத்து ஆயரின் இருக்கை தயாரிக்கப்பட்டது. ஆயருடன் அமதிக் குருக்கள் பலரும் அமர்ந்திருந்தனர். அப்போது ஒரு பெரியார் எழுந்து நின்று கன்னியர்மடம் அமைக்க இக்கிராமத்தைத் தேர்ந்தெடுத்ததற்கு நன்றி கூறினார். பின்பு எம்மைப் பார்த்து தற்போதையப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் வழிசெய்யவதாகக் கூறினார். பின்பு ஆயர் இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களைப் பாராட்டியதுடன் எம் நம்பிக்கையான மடத்தின் முதற்கல்லையும் ஆசீர்வதித்தார்.

இதைத் தொடர்ந்து நேர்த்திக்கடன் நிகழ்வு நடைபெற்றது. பிள்ளைகளுக்கு நோய் வந்தால் பெற்றோர் நேர்த்தி செய்வர். வியாகுல மாதாவிடம் தாம் கேட்டது நிறைவேறினால் திருவிழாவன்று காணிக்கை செலுத்துவர். இது நடைபெற்றபோது எருசலேம் தேவாலயத்தில் இயேசு இரு புறாக்களுடன் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டதை நினைவுகூர்ந்தோம்.

நேரம் போய்க் கொண்டிருந்தது. வண்டிகள் யாழ் செல்ல ஆயத்தமாயின. இரவு 9மணிக்கு யாழ் போய் சேர்ந்தோம். இறைவனைப் புகழ்ந்தோம். ஆனிமாதத்தில் தமிழ் வகுப்புப் பிள்ளைகளின் சித்தி, பரீட்சை அதிகாரிகளுக்குத் திருப்தி அளித்தது. விசேடமாக அநாதை இல்லப் பிள்ளைகள் நன்கு எழுதியிருந்தனர். அவ்வேளை யாழ்ப்பாணத்தில் தொற்றுநோய் இருந்தபடியால் பலர் பாடசாலைக்கும் வரவில்லை.

மார்கழி மாத்தில் பரிசளிப்பு விழா நடைபெற்றது. அவ்வேளையில ஆசிரியர்களும், மாணவர்களும் ஆயரின் பாராட்டைப் பெற்றனர். மாலை கலை நிகழ்ச்சிகள் எல்லோரின் கரகோஷத்துக்கு நடுவே நடைபெற்றது. பாராட்டையும் பெற்றுக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(சித்திரை 1899)**

என் நல்ல தாயாரே!

இந்த வருடமும் சுதேச சகோதரிகளின் குழுவின் வருடாந்த தியானம் எம் அறிக்கையில் முதலாவதாக உள்ளது. யூலன் (Joulain) ஆயர் உதவியுடன் நல்ல இறைவன் சகோதரிகளுக்குத் தன் அருளைப் பொழிந்தார். இந்த வாரம் ஆயர் கொடிய வெயிலிலே தன் இல்லத்தில் இருந்து மடத்திற்குப் பல தடவை வந்து சென்றார். தன் வேலையை ஒதுக்கி தன் களைப்பையும் பாராது இப்பணியைச் செய்தார். தன் அர்ப்பண திருநிலைப்படுத்தலுடன் தந்தைக்குரிய அன்புடன் இவர்களின் ஆன்மாவைத் தொட்டு நல்ல தீர்மானங்கள் செய்ய உதவி செய்தார். "நிலைமை" என்னும் புண்ணியத்தை ஆயர் எதிர்நோக்கினார்.

தை 12ம் திகதி இப்பக்தி முயற்சி முடிவுற்றது. 2சகோதரிகளில் ஒருவர் தன் முதல் அர்ப்பணத்தைச் செய்தார். 4பேர் துறவற உடை பெற்றுக் கெண்டனர். 3பேர் இந்து சமயத்தில் வளர்ந்தவர்கள். பாஸ்காத் திருநாளும் எமக்கு மகிழ்ச்சி அளித்தது.

ஐரோப்பிய சகோதரிகளும் ஆயரின் வழிகாட்டலில் தம் தியானத்தைச் செய்தனர். தன் அர்ப்பண வாக்குறுதியுடன் சகோதரி மாறி விக்ரறின் வேறொரு பணிக்கு அழைக்கப்பட்டார்.

பங்குனி 31ம் திகதி எமது அநாதை இல்லத்தில் இருந்து 2 புரட்டஸ்தாந்து பிள்ளைகளும் 5 இந்துமதப் பிள்ளைகளும் திருமுழுக்குப் பெற்றனர். உடனடியாகப் பீடத்தடியில் பணிந்து தலைவிகளுக்காக திருஇருதயத்தின் ஆசியை வேண்டினர். பின்பு அவர்களின் நண்பிகள் 5பேர் பாஸ்குத் திருநாளில் முதல்நன்மை பெறத் தங்களை ஆயத்தப்படுத்தினர். தேவநற்கருணை பெற்றபின் நல்ல கிறிஸ்தவப் பண்புகளுடன் காணப்பட்டனர். மாலையில் ஆயர் அழகான புனித. ஜேர்மேயின் சுரூவத்துடன் அநாதை இல்லத்திற்கு வந்தார். எல்லோரும் நன்றியைத் தெரிவித்தனர்.

நல்ல தாயார், பிரான்சின் தலைவிகள், ஆயர் உதவியுடன் சென்ற வருடம் ஆரம்பிக்கப்பட்ட இளவாலை சுதேசிகளின் நவகன்னியர் மடக் கட்டிட வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளன. ஆங்கில வகுப்பு மாணவர்கள் (புரட்டஸ்தாந்தர், கத்தோலிக்கர்) 500 பிராங் தந்தனர். தங்கள் வசதிக்கு மேலாகக் கொடுத்துள்ளனர்.

நவகன்னியரின் முயற்சிகள் பலன் தருவதால் யாழ் மடத்தை விட்டு வெளியேறுவது கஷ்டமாகவுள்ளது. புதிய மடத்தில் ஆன்மீகப் பற்றாக் குறைகள் இருந்தன. எனவே தெய்வீக அருள் ஆசிகளைப் பெறுவதற்குத் தாராள உள்ளத்துடன் இருந்தனர். வைகாசி 18ந் திகதி வந்ததும் பங்கில் உள்ள வகுப்பு ஒன்று எடுத்தனர். வகுப்பறை ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டிலாகவும், மழையும் காற்றும் உள்ளே வரக்கூடியதாகவும் இருந்தது. நிலமும் ஈரமாக இருந்ததால் கோவிலுக்குள் படிப்பித்தனர். தற்போது பிள்ளைகள் தொகை அதிகரித்து 130 பேர் உள்ளனர். இடம் பற்றாக்குறை. பெற்றோர் பிள்ளைகளை எங்கும் அனுப்பலாம். எனினும் அவர்கள் ஒழுங்காக இருந்து படிப்பதற்கு ஏற்ற ஒரு வகுப்பறை விசாலமானதாக கட்ட வேண்டியுள்ளது. காற்றோட்டமுள்ளதாகக் கட்டியெழுப்ப பணம் (முதல்) தேவையாக உள்ளது. தேவபராமரிப்பில் நம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றோம். இறைவன் எம்மைக் கைவிடமாட்டார்.

கோவிலுக்கு அருகே நவகன்னியர் இல்லம் அமைந்துள்ளது. ஆனி 21ந் திகதி ஆடம்பரமாக ஆசீர்வதிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பந்தல் போடுவதற்கு விறாந்தைகளை அலங்கரிப்பதற்கு மக்கள் முனைந்து நின்றனர். யூவன் ஆண்டகையை வரவேற்கக் காத்திருந்தார்கள். அப்போது பயங்கர இடி முழக்கம் ஏற்பட்டு எல்லாத் திட்டங்களையும் அழித்து வெளி ஆடம்பரங்ளைக் குறைத்துவிட்டது.

அப்போது ஆயர் தன் பிரதிநிதி கொலின் குருவானவருடனும், இளவாலைப் பங்குத்தந்தை ஜான் டெலுடனும்(Jeandel) வருகை தந்து புதிய கட்டிடத்தை ஆசீர்வதித்தார். அங்கே நவகன்னியர் தம் பணிகளை ஆயத்தம் செய்து பலன் அளிப்பார்கள். பின்பு முதற் தடவையாக மடத்துச் சிற்றாலயத்தின் பீடத்தில் நற்கருணை வைக்கப்பட்டது.

இந்த இடம் இக்கிராமத்தின் தலைவரின் மகள் நவகன்னிகையாகச் சேர்வதற்கு வாய்ப்பளித்தது. அவவின் பெற்றோர் இதைத் தடை செய்வதற்கு மணம் செய்து வைக்கும் நாளையும் குறித்திருந்தனர். மரியாப்பிள்ளை என்னும் பெண் தன் சம்மதத்தைத் தரமாட்டேன் எனக் கூறியிருந்தாள்.

சில வேளைகளில் திருப்பலியின் பின் இப்பெண் எம் சகோதரிகளைச் சந்தித்து தன் கஷ்டங்களை கூறியிருந்தாள். தனக்காகச் செபிக்கும்படியும் கேட்டிருந்தாள். ஒருநாள் நான் இளவாலைக்குச் சென்றிருந்தபோது தன் பெற்றோரின் உத்தரவின்றி கார்த்திகை மாதம் 2ந் திகதி தன்னை மடத்தில் சேர்க்கும்படி என்னிடம் கேட்டாள். நானும் மூத்த மகளை இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கும்படி அவளின் தந்தையிடம் கேட்டேன். மறுநாள் அவள் திருப்பலிக்குச் செல்லவும் உத்தரவு கிடைக்கவில்லை. எனவே இறைஅழைத்தலுக்குப் பதில் அளிக்க முடியாதநிலையில் அவள் அமைதியைக் காப்பாற்றினாள். பெற்றோர் அவள் அமைதியைக் கண்டு தாம் வெற்றி பெற்றதாகக் கருதினர். ஆனால் அவள் இரகசியமாகத் தன் வீட்டை விட்டு வெளியேறி கார்த்திகை 21ம் திகதி அதிகாலையில் மடத்தில் வந்து நின்றாள். காலை 5மணிக்கு அவளைக் கண்டது சகோதரி கிளமென்ருக்கு அச்சமும், ஆச்சரியமுமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தொடர்ந்து எம் மறைமாவட்டத்தில் ஒரு மரணம் ஏற்பட்டது. ஆயரின் பிரதிநிதி அருட்தந்தை மோறுவா (Moroit) தன் பணியின் பயனைப் பெற முதலாவதாக இறைவனடி சேர்ந்துள்ளார். தன் அறிவாலும், அன்பாலும் எமக்குப் பல நன்மைகள் புரிந்தவரை எம் செபம் கல்லறைக்குப் பின்னாலும் தொடரும்.

4நாட்களின் பின் பிதா டினோ (Dinaux) பயங்கர இடியின் தாக்கத்தால் இறந்தார். எம் ஆயர் அவரில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இளம் வயதில் இக்குருவை இறைவன் தன்னுடன் சேர்த்துக் கொண்டார்.

சிலுவைகளும் நவகன்னியர் மட ஆரம்பமும் வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளன. மன்னார் மட கட்டிட வேலை நடைபெறுகின்றது. மாதகலில் 4சகோதரிகள் கல்விப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இறுதியில் சில்லாலையும் எம் பட்டியலில் சுதேச பணிகளில் இடம் பெற்றுள்ளது.

சில்லாலை கத்தோலிக்கர் நிரம்பிய இடம். மாதகலில் இருந்து 2மைல் தூரத்திலுள்ள கிராமம். ஒரு மடமும் ஒரு வகுப்பும் உள்ளது. சகோதரிகள் அங்கு அன்புடன் வரவேற்கப்பட்டனர். பருத்தித்துறையிலும் ஒரு பாடசாலை உள்ளது. இவ்விடங்களிலெல்லாம் மிஷனறிக் குருக்கள் சகோதரிகளின் வரவை விரும்புகின்றனர். எனவே பணியாட்கள் கிடைக்க தினமும் செபித்து வருகின்றோம். இயேசு மரி சூசை வழியாக எம் செபம் கேட்கப்படுவதாக.

புனித இராயப்பர் சபைச் சகோதரிகளான தமிழ், சிங்களப் பெண்கள் சுதேச மக்களுக்குப் பணி செய்யவும், இளம் உள்ளங்களில் விசுவாச வித்துக்களை விதைக்கவும் எம் அறிக்கைகள் மகிழ்வுடன் வாழ்த்தி நிற்கின்றது.

தென் பகுதியில் வென்னப்புவா மடத்தைச் சார்ந்து பல மடங்களும், பாடசாலைகளும் உள்ளன. கட்டுநேரி, நயினாமடம், மாறாவிலா, சிலாபம், மட்டக்கோட்டை போன்றவையாகும்.

| | |
|---|---|
| வென்னப்புவா பெண்கள் பாடசாலை | - 200 பிள்ளைகள் |
| கட்டு நேரி | - 150 பிள்ளைகள் |
| நயினா மடம் (கலவன் பாடசாலை) | - 230 பிள்ளைகள் |
| மாறாவிலா | - 302 பிள்ளைகள் |
| சிலாபம் | - 415 பிள்ளைகள் |
| மட்டக்கோட்டை(பெண் பாடசாலை) | - 120 பிள்ளைகள் |
| மொத்தம் | -1417 பிள்ளைகள் |

ஒரு புதிய வகுப்பு புரட்டாதி 28ம் திகதி (1896) கல்ப்பே (Halpe) யில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கிராமம் வென்னப்புவாவில் இருந்து 9 மைல் தூரத்தில் நீர்கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளது. நவகன்னியர் மடத்தில் ஓர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை திறந்துள்ளோம். இங்கு இளம் பெண்களை உருவாக்கி மடம் இல்லாத பாடசாலைகளுக்கு கற்பித்தலுக்கு அனுப்ப முடியும். இலங்கையின் தென் பகுதி நன்கு ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இறைவன் சுதேச சகோதரிகளின் எண்ணிக்கையைப் பெருகச் செய்வாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பணிகளைப் பற்றிக் கூறமுன்பு, எம் நல்ல தாயார் மாறி றவ்வாயேல் அருட்தந்தை சூலியேர் இவர்களின் மரணம் தூரஇடத்தில் இருக்கும் எம்மை எவ்வாறு தாக்கியதென்பதை எடுத்துரைக்க விரும்புகின்றோம். எம் தாயார் எம் பணிகளை ஊக்குவித்தவர். கஷ்டங்களில் எம்மேல் இரக்கம் கொண்டவர. அதேபோன்று எம் சபை ஆசியா, ஆபிரிக்காவுக்குச் சென்றபோது தானாக அங்கு சென்று எம் சகோதரிகளைச் சந்தித்தவர். தேவைகளில் உதவியவர். எனவே இறந்த செய்தி இடிவிழுந்தது போன்று எமக்கெட்டியது. பிரான்சில் இருந்த சகோதரிகளுக்கு இதை ஏற்பது கஷ்டமாக இருந்தால் தூரதேசத்தில் இருக்கும் எமக்கு எப்படி இருக்குமென எழுதியுள்ளனர்.

பிரதிநிதித் தலைவர் (VICAR GENERAL) கசியன் ஏஜியோர் இலங்கைச் சகோதரிகளைச் சந்தித்தது நல்ல பயனைக் கொடுத்தது. குருநாகல் மடத்துச் சகோதரிகள் வைத்தியசாலைச் சகோதரிகளைச் சேர்த்து தியான ஒடுக்கம் நடாத்தினார்கள். தை மாதத்தில் இவர் தன் யாழ்- மறைமாவட்டத்திற்குத் தரைமார்க்கமாக வந்தார். பங்குனி 10ந் திகதி கொழும்புக்குத் திரும்பிவிட்டார். புத்தளம் பின்பு 24ந் திகதி சிலாபத்திற்கும் சென்றார். அதற்குமுன் நான் சென்ற்.சூசனுடன் அங்கு சென்று புதிய மடத்தை ஆசீர்வதிக்க அங்கு ஆயத்தம் செய்தோம்.25ந் திகதி மட்டக்கோட்டை, 26ந் திகதி மாறவில்லா, 27ந் திகதி கட்டுநேரிக்கும் சென்றார். பிள்ளைகளாலும் நல்வரவேற்புப் கிடைத்தது. வென்னப்புவாவை அடந்தபோது அங்கு வரவேற்பு சிறிது வித்தியாசமாக இருந்தது. வெள்ளிக்கிழமை மாலை பல இடங்களிலும் இருந்து சகோதரிகள் ஒன்றுகூடினர். சனி காலையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. 10மணிக்குச் சகோதரிகள், நவகன்னியர், மாணவிகள் பாடல்களால் அவரை வரவேற்றனர். அவரின் அறிவுரை மிகவும் உணர்ச்சிபூர்வமாக அமைந்தது.

**யாழ்ப்பாணம் பருத்தித்ததுறை - மார்கழி -1897**

என் நல்ல தாயாரே! இலங்கையின் புதிய ஆளுநர் சேர்.வெஸ்ற் றிச்வேயின் சந்திப்பு 1897ம் ஆண்டு யாழ் குழுவுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியாக இமைந்தது. தனது பிரத்தியேக செயலாளர், அரச அதிபர், எம்.ஜெவர்ஸ் சகிதம் வருகை தந்தார். யூலன் ஆயர், குருக்கள், அருட்தந்தை கொலின் டெல்பேச் என்போர் அவரை வரவேற்றனர். ஆங்கில வகுப்பில் ஒரு மண்டபம் அவரை வரவேற்க மாலைகளாலும், மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டபத்துள் மாணவர்கள் பாட்டிசைத்து வரவேற்று உரையாற்றினர். அவரும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் பாராட்டினார். எம் பணிகளில் அவருக்கு நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபாடு இருந்ததால் அதற்குரிய வெகுமதியும் இருக்கும். அருட்தந்தை கசியன் ஒஜியேர் எம்மைச் சந்திக்க வந்தார். பல வாரங்கள் யாழில் தங்கி தன் ஆலோசனைகளைத் தந்து எம்பணியில் எம்மை ஊக்குவித்தார். இளவாலை நவகன்னியர் இல்லத்திற்கும் சென்று எம் சிறிய சுதேச சகோதரிகளைச் சந்தித்தார்.

எம் சுதேச சகோதரிகளின் பணி புதிய மடத்திற்கு ஆயத்தமாக இருந்தது. பல காலமாக அருட்தந்தை மான்கொட் (Mangot) பருத்தித்துறைப் பாடசாலைப் பொறுப்பை நாம் ஏற்கும்படி கேட்டிருந்தார். கடல் சூழ்ந்த இந்த இடத்தில் ஒழுக்கமின்மை அதிகம் காணப்பட்டது. எனவே 5அல்லது 6 சகோதரிகள் தங்கக் கூடியதாக ஒரு மடம் அமைக்கப்பட்டது. எல்லாம் ஆயத்தமானதும் பங்குனி 29ம் திகதி சகோதரிகள் மாறி ஸ்ரனிஸ்லாஸ், மாறி றோஸ், மாறி கபிரியேலா இவர்களை அங்கு அழைத்துச் சென்றேன். அங்குள்ள கிறிஸ்தவர்களால் நாம் வரவேற்கப்பட்டோம். குருவானவரும் மகிழ்வுற்றார். பாடசாலை புனித சூசையப்பருக்குஅர்ப்பணிக்கப்பட்டு அவரின் மாதத்தில் திறக்க முடிவு செய்யப்பட்டது. பெரும் திரளான மக்கள் வந்து தம் பிள்ளைகளின் பெயர்களைப் பதிவு செய்தனர். 92 பிள்ளைகள் 4கிராமத்தில் இருந்து வந்தனர்.

எதிர்காலத்துக்கு இது எனக்கு நல்ல நம்பிக்கையைக் கொடுத்தது. ஆனால் யாழ் வந்ததும் தீயோன் ஆட்சி செலுத்தினான். மக்கள் அறியாமையும், சாதிப் பெருமையும் சிறிய பிரச்சனைகளைப் பெரிதாக்கின. விவசாயிகள், மீன்பிடிப்போர், பனை ஏறுவோர் சமுதாயங்களிலிருந்து பிள்ளைகள் படிக்க வந்தனர். இதில் முதல் இரு சமுதாயத்தினரும் கதிரை வாங்குகளில் இருந்து படிக்க மற்றவர்கள் நிலத்தில் இருந்தனர். சில நாட்களின் பின் எல்லோரும் வாங்குகளில் இருக்க விரும்பினர். அல்லது பாடசாலைக்கு அனுப்புவதில்லை என்றனர். வாங்கு இல்லாதவர்களுக்கு ஒரு பலகை நிலத்தில் போடப்பட்டது. இதை ஒரு சகோதரி எனக்கு அறிவிக்க நான் சிஸ். கிளமென்றுடன் அங்கு சென்றேன். மாணவர்களை இரு பிரிவாகப் பிரித்து பனை ஏறுவோரைப் பருத்தித்துறைக்கும். மற்றவர்களைத் தும்பளைப் பாடசாலைக்கும் அனுப்பினோம். தும்பளையில் நல்ல குடும்பங்கள் இருந்தன. அங்கிருந்து நல்ல அழைத்தல்கள் வரலாம்.

ஆடி 21ந் திகதி பிதா றூ (Roux) 13 பிள்ளைகளுக்குத் திருமுழுக்குக் கொடுத்தார். கார்த்திகை மாதத்தில் யூலன் ஆயர் தலைமையில் இளவாலையில் சகோதரிகளின் தியானம் நடைபெற்றது. புனித பிரான்சிஸ் சவேரியார் விழாவன்று முடிவுற்றது. அன்று 2ஆயத்த கன்னியர் துறவற உடைபெற்றனர். ஆங்கில வகுப்பில் ஆயர் தலைமையில் பரிசளிப்பு நடைபெற்றது. பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

புரட்டாதி மாதத்தில் 3 புதிய சகோதரிகள் போர்டோவில் சில காலம் செலவிட்டு இலங்கைக்குப் புறப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## KAYTS

என் நல்ல தாயாரே!

தை மாதம் 17ந் திகதி பொண்மான் (Pontman) தேவதாய் ஊர்காவற்றுறையில் எம் சகோதரிகளுக்கு ஒரு மடத்தைத் திறந்து அங்குள்ளர்களுக்குக் கிறிஸ்தவ கல்வியையும், நல்ல பணியையும் செய்ய உதவி செய்தா. இலங்கையின் வடபகுதியில் நற்பணி புரியும் புனித இராயப்பர் சபையின் ஆரம்ப வரலாற்றை இங்கு தருகின்றோம்.

ஊர்காவற்றுறையானது கடலருகே அமைந்துள்ள ஒரு துறையானதால் படகுகள் தங்குமிடமாகும். மேற்கில் சமுத்திரமும், கிழக்கில் யாழ்ப்பாணமும் அமைந்துள்ளது. 5000 கத்தோலிக்கர் உள்ளனர். சந்திரசேகரா என்னும் தமிழ் அமதிக் குருவானவர் 7 கிறிஸ்தவப் பங்குகளில பணியாற்றி வருகின்றார். திருக்குடும்பச் சகோதரிகள் இங்குவர வேண்டுமென முன்பு இருந்த பங்குக் குருக்களும் யூலன் ஆயரும் விரும்பினர். 20 வருடங்களுக்கு முன்பே யோசேப்பின் பற்றிட் தாயாருடன் இது பற்றி ஆலோசிக்கப்பட்டது. இறைபராமரிப்பின் நேரம் தற்போதைய குரு, ஆயரின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது சகோதரிகள் அங்கு போகுமுன் இடம் பற்றி அறிவதற்குத் தை 4ந்திகதி சென்ற் கிளமென்ற் தாயாருடன் நான் அங்கு சென்றேன். 2,3 மணித்தியாலங்கள் கடற் பிரயாணம் செய்து துறையை அடைந்தபோது சந்திரசேகர குருவானவர் மக்களுடன் கரையில் நின்றார். அவர்களுடன் பவனியாகச் சென்று புனித.மரியாள் ஆலயம் சென்று நன்றிக் கீதம் (Tedeum) பாடினோம்.

மாலை நேரமானது இளைப்பாற வேண்டும். ஒரு வீட்டிற்குக் குரு அழைத்துச் சென்றார். மக்களும் உடன் வந்தனர். ஒரு 12 வயதுச் சிறுமி கத்தோலிக்க குடும்பங்களின் பெயரால் வரவேற்புரை நிகழ்த்தினா. எல்லாப் பக்கமும் மக்கள் எம்மைப் பார்க்க விரும்பினர். எனவே குரு மறுநாள் நிகழ்ச்சி நிரலைக் கூறினார். அதில் பெற்றோர் மாணவரைச் சந்தித்து, பரீட்சை இல்லாது மாணவர் பதிவு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. ஒரு பிள்ளை நாமே அதற்குப் பொறுப்பு எடுக்க வேண்டுமெனக் கூறினா. புனித அந்தோனியார் பங்கிலே மீனவரும் பொறுமையுடன் எமக்காகப் பொறுமையுடன் காத்திருந்தனர். அருட்தந்தை வொர்லான்டே (P.Vorlander) தமது பங்கினரை அறிமுகப்படுத்தி தமது சிறுமிகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புவதாக வாக்களித்தார்.

புனித யாகப்பர் பங்கும் தம்மை வந்து சந்திக்கும்படி கேட்டனர். அங்கு செல்வதற்கு 6பேர் ஒரு வண்டியில் எம்மை இருத்தி இழுத்துச் சென்னறனர். அங்கு மேளம் அடிக்கப்பட்டது. ஒரு குடும்பத் தலைவி உரையாற்றினார். சகோதரிகளின் வருகை, பணி அவர்களுக்கு மகிழ்ச்சி அளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தீவின் எல்லாப் பகுதிகளுக்கும் செல்லமுடியாதிருந்தது. ஒவ்வொரு பகுதியும் தம் பிரதிநிதிகளை எம்மிடம் அனுப்பினர். எனவே முதலில் இறைவனுக்கும், பின் குருக்களுக்கும் விசேடமாக சந்திரசேகர குருவுக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

தை 17ந் திகதி நம்பிக்கையுடன் இப்புதிய இடத்திற்குச் சகோதரிகளை அழைத்துச் சென்றேன். வானதூதர்களைப் போல் அவர்கள் வரவேற்கப் பட்டனர். முதல்நாளே 90மாணவர்கள் பெயர் பதியப்பட்டன. அதேவேளையில் பல பக்கங்களிலுமிருந்து நன்கொடைகள் கிடைக்கப் பெற்றன. இது எம் தொடக்க கால வாழ்வுக்கு உதவியாக இருந்தன.

தை 30ந் திகதி யூலன் ஆயர் ஊர்காவற்றுறைக்கு வந்தபோது பணிகள் நன்கு செயற்படுவதையும், சகோதரிகள் பாராட்டப்படுவதையும் கண்டு கொண்டார். 300பேர் திருவருட்சாதனங்களுக்கு ஆயத்தமாக இருந்தனர். பலர் சகோதரிகளால் ஆயத்தப்படுத்தப்பட்டனர். இதனால் அவர்கள் உற்சாகப்படுத்தப்பட்டு ஒவ்வொரு ஞாயிறும் பங்குப் பெண்களைச் சேர்த்து இறைவனைப் பற்றியும், அவர்கள் கடமைகளைப் பற்றியும் எடுத்தியம்பினர். இவ்வாறான மறைக்கல்விகள் எல்லோருக்கும் உதவியது. பிள்ளைகள் மத்தியிலும் இவர்கள் பணி மகத்தானது. தமிழ் பாடசாலைகளில் இப்பாடசாலை முதல் வருடத்திலேயே முன்னிடம் வகுத்தது.

ஆனி மாதத்தில் ஓய்வுகாலம் வந்தது. உடற்சுகத்துக்கு ஏற்ற இடமாக ஊர்காவற்றுறை தேர்ந்தெடுக்கப்பட்டது. அயற் கிராமமான சரவணைப் பங்கு மனையைப் பிதா சந்திரசேகரா எமக்கு விட்டுத்தந்தார். செபமாலைமாதா பக்தி அங்கு இருந்தது. சில வருடங்களின் முன் இந்த ஏழ்மைக் கிராமம் பற்றி நன்கு பேசப்படாதபடியால் குருவானவருக்குக் கஷ்டமாக இருந்தது. ஏற்கனவே வளர்ந்தோர் சிலர் திருமுழுக்குப் பெற்றிருந்தனர். அவர்களை உற்சாகப்படுத்த ஒரு கத்தோலிக்க ஆலயம் தேவைப்பட்டது. சென்ற வருடத்தில் பிதா சந்திரசேகரா ஓர் ஆலயத்தைக் கட்டி வெற்றிமாதாவுக்குக் காணிக்கையாக்கினார். தென்னோலையால் அமைக்கப்பட்டிருந்தாலும் ஆடம்பரமாகத் தொடங்கி வைக்கப்பட்டது. ஊர்காவற்றுறையில் இருந்து மக்கள் பவனியாக வரவழைக்கப்பட்டனர். கையில் மெழுகுதிரி, விளக்குகள், துணி, பூக்கள் தாங்கியவர்களாக வருகை தந்தனர். அன்றிருந்து செபமாலை மாதா ஆலயம் "சின்னமடு" என்னும் பெயருடன் யாத்திரைத் தலமாக விளங்குகின்றது. ஒரு கொட்டில், மரத்தாலான பீடம் உண்டு. ஒரு சிறு குடிலில் மாதாவின் சுருவம் உள்ளது. உடைகள், நகைகள் மாதாவை அழகுற வைத்துள்ளன. பங்குப் பணிமனையில் பெரிய மரத்தூண்கள் கூரையைத் தாங்கியுள்ளன. சுவர், கதவுகள் தென்னோலையால் அமைக்கப்பட்டுள்ளன. மேலே பாய் போடப்பட்டிருந்தது. ஒரு பெரிய தோட்டம் அண்மையில் இருந்தது. அருட்தந்தை வொர்லான்டே 15 நாளும் திருப்பலி நிறைவேற்ற ஆலயத்திற்கு வந்தார். தினமும் மக்கள் இதில் பங்குபற்றினர். எம் ஆங்கில வகுப்புப் பழைய மாணவர்களைச் சந்தித்தது மிகவும் ஆறுதலாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி 2ந் திகதி திருவிழாவுக்கு பக்தி உள்ள மக்கள் முதல்நாள் இரவே வந்து சேர்ந்தனர். 6மணிக்கு கோவில் மணி அடித்தது. அயற்கிராம மக்கள் ஒன்றுகூட திருவழிபாடு ஆரம்பமானது. உரத்த குரலில் செபமாலை ஓதி அதைத் தொடர்ந்து பிரார்த்தனை நடைபெற்றது. அப்போது ஊர்காவற்றுறை மக்கள் பவனியாக வந்தனர். நற்செய்தியின் பின் சந்திரசேகரா குருவானவர் தேவதாய் பற்றிய மறை உரையாற்றினார். இறுதியில் நற்கருணை ஆசீருடன் காலை வழிபாடு நிறைவெய்தியது.

மதிய வேளை காய்ந்த தரையில் மக்கள் ஒன்றுகூடினர். பெரிய மரங்கள் ஒன்றும் இருக்கவில்லை. 2பெரிய பாத்திரத்தில் சாதம் சமைக்கப்பட்டு விருந்து பரிமாறப்பட்டது. அருட்தந்தை இந்தச் சோற்றை ஆசீர்வதித்தார். ஒரு தந்தையின் பிள்ளைகளாக எல்லோரும் இந்த உணவை உண்ட பின் காய்ந்த சோற்றை (அவல்) நோய்க்கு மருந்தாக வீட்டுக்குக் கொண்டு சென்றனர்.

எமது நாட்கள் விரைவாகக் கடந்து சென்றன. ஆடி 20ந் திகதி எனக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. புனித இராயப்பர் சபைச் சகோதரிகள் நவகன்னியர் ஒன்றுகூடி சென்ற் பிறக்சீட் தாயாரின் திருநாளைக் கொண்டாடினர். 40பேர் திருக்குடும்பச் சபைக்குச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

பலவருட உழைப்பின் பயனாகவும், தியாகம், துன்பங்கள் வழியாகவும் சேவியர் தாயார் யோசேப்பின் பற்றிட் தாயார் மூலம் இவர்கள் வந்தவர்கள். ஆனால் தம் பயனை அவர்கள் காணவில்லை. இப்போது இச்சபை வளர்ந்து வருகின்றது.

21ந் திகதி 12 சிறுமிகள் திருமுழுக்குப் பெற்றனர். அவர்களில் ஒருவர் றோசா மரியா. அவளின் வரலாற்றைக் கூறுகின்றேன். 1896 கார்த்திகை மாதத்தில் அருட்தந்தை பூலோகசிங்கத்தால் அனுப்பப்பட்டட ஒருவர் தன் 9வயது பிள்ளையை மடத்தில் சேர்க்க வந்தார். தந்தையைப் பிரிவது முதல் கஷ்டமாக இருந்தது. பின்பு படிப்பு, விளையாட்டு. வேலை எல்லாம் அவளைக் கவர்ந்தது. அதேவேளை தீயோனும் அவளைப் பழிவாங்க நனைத்தது. மார்கழி 6ந் திகதி எமது மறையில் சேர விரும்பாது வீடு செல்ல இருப்பதை அறிந்து செபித்தோம். நவநாள் செய்தோம். பயனில்லை. வீடு சென்றாள். பின்பு மனம் திரும்பி வந்து திருமுழுக்குப் பெற்று நல்ல சிறுமியாக இருக்கின்றாள்.

இளவாலை நவகன்னியர் மடம் பற்றிச் சிறிது கூற விரும்புகின்றேன். வடபகுதியில் அழைத்தல் குறைவு. உண்மையான அழைத்தல் பற்றியே கூறுகின்றேன். ஏனென்றால் சிலர் சமூகத்தில் இந்த அழைப்பு உயர்வு என நினைத்து வந்தால் புனித இராயப்பர் சபை இருமடங்காகக் கூடியிருக்கும். எனினும் சபைக்கு ஆட்கள் சேர்ப்பது இலகுவாக உள்ளது. எம்முடன் ஆயத்த கன்னியர் 8 பேர் உள்ளனர். பரீட்சை மூலம் தரத்தை உயர்த்தி நவகன்னியர் இல்லத்தில் சேர்க்கவுள்ளோம். இடவசதியிருப்பின் 15 பேரைச் சேர்க்கலாம். இறைபராமரிப்பு ஒருநாள் உதவும் என நம்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்

நாம் முன்பு கூறியது போன்று சபையின் நூற்றாண்டு நற்கருணை விழாவும் இலங்கைப் பணியின் வைர விழாவும் ஒன்றாக அமைந்தது. (1822, 1862 - 1922)

யாழ்ப்பாணத்திலேயே திருக்குடும்பச் சகோதரிகள் முதன்முறையாக காலடி வைத்து அங்கிருந்து இலங்கைத் தீவின் மறுபகுதிகளுக்குப் பரவியதால் வேதாகமத்தில் கூறியது போல் நல்ல ஒலிவ மரத்திற்கு ஒப்பிடலாம். 1822 மாசி 3ந் திகதி இடம்பெற்ற நற்கருணைப் புதுமையில் பங்குபற்றியவர்களில் ஒரு தெய்வீகத் தன்மை இருந்ததால் அதன் கனிகளைப் பின்வரும் நிகழ்ச்சிகள் வழியாகக் காணலாம்.

தை மாதத்தில் நடைபெற்ற வருடாந்த தியானத்தில் அருட்தந்தை (R.P.Viard) வியாட் வழிகாட்டியாக இருந்தார். குழுச் சகோதரிகளுடன் தீவின் ஏனைய சகோதரிகளும் பங்குபற்றினர். ஆயர் புறோ ஆண்டகை (Mgr.Brault) முன்னைய ஆயர்கள் போன்று தனது நேரத்தை ஒதுக்கி ஆலோசனை வேண்டிய சகோதரிகளுக்கு உதவி செய்தார். அவரே இறுதி நாள் வழிபாட்டிற்கும் தலைமை தாங்கினார். சில நாட்களின் பின் இறைவன் அவரைத் தம் பக்கம் சேர்த்துக் கொண்டார். அவரது தியாக சேவையை நாம் மறக்க முடியாது.

தைமாதம் 19-20ந் திகதி இரவு சடுதியாக ஏற்பட்ட மார்பு நோயினால் ஆயர் இறந்துவிட்டார். ஆடி மாதம் 2ந் திகதி மடுமாதா சுரூபத்திற்கு முடிசூட்டுவதற்கு பரிசுத்த பீடத்தில் இருந்துஅனுமதி பெற்றிருந்தார். ஆனால் தேவதாய் அவருக்கு முடிசூட்ட விரும்பினார். மரண அடக்கச் சடங்கின்போது கொழும்பு, கண்டி, திருகோணமலை ஆயர்களும் காலிப் பிரதிநிதியும் இலங்கை ஆளுசரின் பிரதிநிதியும் சமூகம் அளித்தனர். அத்துடன் அங்கிலிக்கன் சபைப் போதகரும், இந்துக் குருமாரும் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து கிறிஸ்தவர்களும் வந்திருந்தனர். பகிரங்கமாகத் தம் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்தனர்.

கொழும்பு அதிமேற்றிராசனத்தில் கல்விப்பணிக்குப் பொறுப்பாக இருந்தபடியால் பிள்ளைகள் ஆயரை தம் தந்தை போல் கருதினார்ககள். திருக்குடும்பச் சகோதரிகளும், அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களும் கல்விப் பணியினால் அவருடன் தொடர்புடையவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தனர். வாழ்நாளில் அவரை நேசித்தவர்கள் இறந்த பின்னும் யாழ் பெரிய கோவிலில் அவரின் கல்லறையில் செபித்து வருகின்றனர்.

தை 15ந் திகதி பாடசாலை மீண்டும் ஆரம்பமானது. யாழ் பாடசாலைகளில் 1089 பிள்ளைகள் சமூகமளித்தனர். ஆசிரியர்களின் தியாகப் பணியின் காரணமாகப் பரீட்சையிலும் நல்ல பெறுபேறு கிடைத்தது. புத்த மக்களும் பிற சமயத்தவர்களும் தம் பிள்ளைகளை எம் பாடசாலையில் கல்விக்காகக் கொண்டு வந்து சேர்க்கின்றார்கள். நாமும் அவர்களின் நம்பிக்கைக்கு ஏற்கப் பதிலிறுக்கின்றோம். கத்தோலிக்க நிறுவனமாக இருப்பதுதான் ஒரேஒரு சந்தோஷமான குறை. சென்ற். பிறக்சீட் தாயார் கூறியவாறு எவ்வாறு நல்ல பிதாவும் விண்ணிலுள்ள எம் சகோதரிகளும் எமக்கு உதவி செய்வதைக் காண்கின்றோம்.

வைகாசி 14ந் திகதி எம் நல்ல தாயார் இறந்த நாளை நினைவு கூர்ந்தோம். மாலையில் தாயை இழந்த ஒரு 3வயது சிறுமியை என்னிடம் கொண்டு வந்தனர். அவள் இந்து மதத்தவளாக இருந்தபடியால் ஓர் ஆன்மாவை மீட்க முடியும் என நம்பினேன். அத்துடன் அவள் வருகையும் நல்ல தாயார் இறந்த நாளும் ஒன்றாக இருந்தபடியால் மாறிடிலா நற்றிவிற்றித் தாயாரே அனுப்பியதாக நான் நம்பினேன். எனவே அவரின் பெயரால் பிள்ளையை வரவேற்று எணஸ்ரீன் என்னும் பெயரைத் திருமுழுக்குக் கொடுக்கு முன்பே கொடுத்தோம். அவள் ஏனைய அநாதைப் பிள்ளைகளுடன் நல்ல முறையில் வளர்கின்றாள்.

ஆனி 29ந் திகதி நல்ல பிதாவினதும், புனித இராயப்பரினதும் திருவிழா. இந்த விழாவில் வேறு 2 அநாதைச் சிறுமிகளைக் கொண்டு வந்தனர். மூத்தவளுக்கு 7வயது. தங்கைக்கு 2வயது. நல்ல பிதாவின் கரத்தில் இவர்களை ஏற்றோம். சில நாட்களின் பின் இளைய பெண் நோயுற்றதால் "செனற்.போல்" என்னும் பெயருடன் திருமுழுக்குப் பெற்றாள். மூத்த பிள்ளை எம் சமய உண்மைகளைப் படித்து "பெற்றனிலா" என்னும் பெயருடன் திருமுழுக்குப் பெற்றாள். ஐரோப்பிய சகோதரிகளும் தமிழ் சகோதரிகளின் வகுப்பில் துணை புரிகின்றனர். நவகன்னியர் இல்லம் இளவாலையில் அமைந்துள்ளது.

## இளவாலை

இளவாலையைச் சேர்ந்த 7 சுதேச பாடசாலைகளில் 974 பிள்ளைகள் படிக்கின்றார்கள். பாடசாலை இன்ஸ்பெக்ரர்மார் இப்பாடசாலையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்து திருப்தி அடைந்தார்கள். மாணவர்கள் பரீட்சையிலும் நல்ல சித்தியடைந்துள்ளனர். கத்தோலிக்க பாடசாலைகளில் பரீட்சைகளில் சித்தி பெறுதல் அவசியமாகும். இங்கு புத்த, புரட்டஸ்தாந்த, இந்து மதக் குடும்பங்கள் உள்ளன. சகோதரிகளால் கொடுக்கப்படும் உயர்கல்வி பிள்ளைகளின் ஆன்மாக்களைக் கிறிஸ்துவின் திருமறை நோக்கி அழைக்கின்றது.

சிறிய பங்குத்தளங்களில் எம் சுதேச சகோதரிகள் அமதி குருக்களின் பணியில் உதவி புரிகின்றனர். 'ஏழைகளுக்கு நற்செய்திப் பணி' என்னும் விருது வாக்கை நிறைவேற்ற உதவி புரிகின்றனர். பாடசாலை நாட்கள் முடிவடைந்ததும் லீவுக்கு இளவாலைக்கு வந்து தலைவிகளின் அறிவுரை பெற்றுத் தியானமும் செய்கின்றனர். இது ஆன்ம புதுப்பித்தலுக்கு உதவுகின்றது. உடல் உள ஆன்ம உறுதி பெற்று பின்பு மீளவும் தம் பணித்தளங்களுக்குச் சென்று தேவபராமரிப்பினால் தம்மிடம் வரும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கின்றனர். எனவே எல்லோரையும் இயேசுக்கிறிஸ்துவின் பாதையில் வழிநடத்த முன்வருவார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தற்போது இலங்கைக்குச் சென்று சென்ற் பிறக்சீட் பூர் தாயாரின் யூபிலி அறிக்கையைத் தருகின்றோம்.

என் நல்ல தாயாரே, எனது அன்பான தாயாரின் 50ஆவது துறவற அர்ப்பண ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு ஆனி 4ந் திகதிக்கு முன்னதாகவே நாட்களை எண்ணியபடி ஆயத்தம் செய்தோம். செபத்தினாலும் தம்மைத் தயார் செய்த அவவின் குமாரத்திகள் குறித்த நாளில் அவவின் யூபிலியைக் கொண்டாடத் தாயாருக்கும் நல்ல உடல் நிலை அருள வேண்டினோம். இறுதியில் இறைவன் எமது செபத்தைக் கேட்டு அந்த நாளைக் காணச் செய்தார். மடத்துச் சிற்றாலயம், வரவேற்பறை, விறாந்தைகள், சாப்பாட்டறை யாவும் விழாக் கோலம் பூண்டு எம் உள்ளங்களைக் கவர்ந்தன.

ஆலயத்தில் வெண்ணிற லீலி மலர்கள், மாகிறெற் பூ மின்னொளி (palm) பாம் இலைகளினூடாகத் தென்பட்டன. நீண்ட சுவர்களில் மாலைகள் வெஸ்ரோன் வடிவில் கட்டப்பட்டு இடையில் திருச்சபை, நாட்டு நிறங்களின் கொடிகள் பறக்கவிடப்பட்டன. பணியின் நண்பர்கள் மடத்துச் சிற்றாலயத்தைப் பார்த்தீர்களா? என நகரில் கேட்டனர். என்னே அழகு எனக் கூறினாலும், எம் இறைவனைப் பிரதிநிதிப்படுத்தும் எமது தலைவிகளுக்கு இது அதிகமில்லை என்று கூறலாம்.

இந்த விழாவைக் கொண்டாடுவதற்கு தீவின் தென் பகுதியில் இருந்து, வட பகுதிக்கு தலைவிகள் வருகை தந்தனர். திருநாளின் முதல்நாள் மாலையில் பிறக்சீட் தாயார்அவருக்கெனத் தயாரிக்கப்பட்ட மேலான இடத்தில் அமர்ந்திருந்தார். அப்போது இனிமையான இன்னிசை ஒலி மீட்கப்பட்டது. பின்பு எல்லார் சார்பாகவும் ஒரு சகோதரி உரையாற்றத் தொடங்கினார்.

எனது அன்பிற்கும், வணக்கத்திற்கும் உரிய தாயாரே, ஆவலுடன் காத்திருந்த பொன் யூபிலியும் வந்துவிட்டது. (Ad Multos Annos) பல்லாண்டு வாழ்க என எம் உணர்வுகளுடன் சேர்த்து வாழ்த்துகின்றோம். எம் தலைமைச் சகோதரிகள் இலங்கையிலுள்ள உமது குமாரத்திகள் இயேசு மரி சூசை மூலம் இறைவனிடம் உங்களுக்காக செபிக்கின்றோம். எம் புனித பாதுகாவலர்கள் எம் வாழ்த்துக்களை அறிவார்கள். எனவே எம் செபங்கள் கேட்கப்படும் என்பதற்குச் சந்தேகமில்லை. எம் நல்ல பிதாவும் இன்று மறை அறிவிப்புப்பணியில் ஈடுபட்டுள்ள எம் தாயார் மீது, தம் கருணைக் கண்ணைத் திருப்புவார். தம் திட்டப்படி உம்மில் கட்டாயம் திருக்குடும்பச் சகோதரியை இனங் காண்பார்.

எல்லாம் மகிழ்வாக இருக்கும் வயதில் உறுதியான முறையில் தாராள உள்ளத்துடன் இதோ வருகின்றேன் எனப் பதிலளித்து இலங்கைப் பணி புரிய உம்மைக் கையளித்தீர். அன்று தொடங்கி இயேசுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியவும், நேசிக்கவும் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்து அவர்களின் ஆன்மாக்களை வெற்றி கொண்டீர். பின்பு எம் தாயாராக இறைவன் உங்களைத் தேர்ந்து கொண்டார். தன் விருப்பப்படி தேர்ந்து கொண்ட எம் தாயார் எம் ஆன்மாக்களின் ஒளியும், வழிகாட்டியும் தாங்குபவராகவும் விளங்குகின்றார்.

அன்புத் தாயாரே நீங்கள் எல்லாரையும் தனிப்பட்ட முறையில் கவனித்து அன்பு செய்து வருகின்றீர்கள். அதேவேளை சிலர் உங்களுக்குத் துன்பம் வருவித்தால் இந்த யூபிலி நாளில் மன்னிப்பைக் கேட்கின்றோம். உங்கள் உடல் நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது. நல்ல இறைவன் உங்கள் வாழ்விற்கு புத்துயிரை அளித்து உங்கள் நல்ல பணியைத் தொடர்ந்தாற்ற உதவிபுரிவாராக. போர்டோவில் இருந்து இலங்கைக்கும் இலங்கையில் இருந்து விண்ணகத்திற்கும் (Ad Multos Annos) பல்லாண்டு வாழ்க என்னும் ஓசை இன்று எழும்புவதாக. இறைவன் இதை உங்களுக்கு அளிப்பாராக. ஆமென்.

இந்த நன்றி உரை நேரடியாக யூபிலி நாயகியின் உள்ளத்தைத் தொட்டது. அவவும் தாயன்புடன் எம் முதற் தாய்மாரின் அறிவுரைகளைப் பின்பற்றி அவர்களின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து செல்ல அறிவுரை கூறினா. ஐரோப்பிய குழுவைத் தொடர்ந்து தமிழ் சகோதரிகள் தங்கள் யூபிலி வாழ்த்துக்களைத் தூய தமிழில் சமர்ப்பித்தனர். இறுதியில் ஒவ்வொருவரும் அவவின் ஆசீர்வாதம் பெற்றுப் பிரிந்து சென்றனர்.

காலையில் யாழ் கியோமர் ஆயர் தலைமையில் தியாக்கோன் உபதியாக்கோன் உதவியுடன் ஆடம்பரத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இலங்கையைச் சந்திக்க வந்த அதிசிரேஷ்ட உபதலைவர் Bella (பெல்லோ) மேலும் பல அமதி குழுக்கள் பீடத்தில் காணப்பட்டனர். அவர்களில் ஒருவரான Fr.Berrussel (பெறுசல்) நற்செய்தியின் பின்பு மறைஉரை ஆற்றினார். யூபிலி நாயகியின் பணிகள், பெற்ற அருள் அழைத்தல் மறைபரப்புப் பணி "இறைவன் மாத்திரமே" என்னும் நிலைக்கு அனுமதி பற்றி சுருக்கமாக எடுத்துரைத்தார். அத்துடன் சுதேச சகோதரிகளின் உருவாக்கத்திற்கு இலங்கை மக்கள் அவவுக்கு நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும் என்றார். கிறிஸ்துவின் பத்தினியாகவும், ஆன்மாக்களின் தாயாகவும் உங்கள் உள்ளம் இறையரசை எங்கள் பணித்தளத்தில் பரப்ப முனைந்தது. இலங்கை இளம் பெண்களை துறவற வாழ்வுக்கு உருவாக்கி உங்கள் தாயன்புள்ள வழிகாட்டலில் அவர்கள் தொகை பெருகியதால் மடங்களும் அதிகரித்து மக்கள் எல்லாப் பக்கங்களிலுமிருந்து அவர்களை அழைத்த வண்ணம் உள்ளனர்.

சுதேச சகோதரிகளின் துணையுடன் இறைவன் மேலும் அறியப்பட்டு நேசிக்கப்பட்டு பணி செய்யப்படுகின்றார். அவர்கள் மூலம் உங்கள் அப்போஸ்தலிக்க ஆர்வம் பல ஆன்மாக்களைச் சென்றடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் குருக்களாகிய எங்களுக்கு அதிகாலையில் பல ஆன்மாக்களுக்கு இயேசுவைக் கொடுக்க முடிகின்றது. இதனால் இலங்கை சிறப்பாக யாழ்ப்பாணம் உங்களுக்குக் கடமைப்பட்டுள்ளது. எனவேதான் முதல் ஆயனாகிய நான் இந்த 50ஆவது பொன் யூபிலிக்குத் தலைமை வகிக்க வந்துள்ளேன். ஆயர், மறைபோதக சகோதரருடன் இணைந்து ஒரே குடும்பமாக ஐரோப்பிய சுதேச சகோதரிகளுடன் எம் நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

எனவே தெய்வீக விருப்பங்கள் உம்மில் நிறைவேறவும், இறை நாமத்தை வேண்டுகின்றோம். பல்லாண்டு வாழ்வீர்களாக. இந்தப் பொன் யூபிலி, வைர யூபிலியின் (60) அடிநாதமாக அமையட்டும்.

இந்த உரையைத் தொடர்ந்து திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து கியோமர் ஆண்டகை திருத்தந்தையின் ஆசியை வாசித்தார். உங்கள் துறவற வாழ்வின் பொன் யூபிலி நாளில் திருத்தந்தை பாராட்டுக்களையும், தந்தைக்குரிய வாழ்த்துக்களையும், அப்போஸ்தலிக்க ஆசீர்களையும் அளிக்கின்றார். கையொப்பம் கருதினார். கஸ்பாறி (Cardinal Gaspari)

வத்திக்கான் ஆசீருடன் வேறு தந்திச் செய்திகளும் கிடைக்கப் பெற்றன. அதில் கொழும்பு அதிமேற்றிராணியார் (Mgr. Coudert) கூடேர் திருக்குடும்ப சபையின் மறைப்போதகப் பணியின் ஆர்வத்தைப் பாராட்டி எழுதியிருந்தார்.

ஆங்கில வகுப்பு மாணவிகளும் பழைய மாணவிகளுடன் சேர்ந்து வாழ்த்துக்களை தெரிவித்தனர். நற்கருணை ஆசீர்வாதத்தின் பின்பு ஆயரின் தலைமையில் சில கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. சாதி மத,பேதமின்றி பெற்றோர் பலர் கலந்து கொண்டனர். ஆதிக்கிறிஸ்தவர்களின் வரலாறு நடித்து காண்பிக்கப்பட்டுக் கத்தோலிக்க திருச்சபை பற்றி எடுத்துரைக்கப்பட்டது. பலத்த கரகோஷம் நடிகர்களுக்கு திருப்தி அளித்தது. மறுநாள் காணாத கொண்டாட்டம் இல்லை என்பது பழமொழி. எனவே மறுநாள் விழாவை அதிசிரேஷ்ட அமதி தலைவரின் பிரதிநிதி அருட்தந்தை பெல் ஆரம்பித்து வைத்தார். ஐந்து பாடசாலைகளில் எம் தமிழ் சகோதரிகள் கற்பிக்கும் மாணவர்கள் ஒன்றுகூடுவதற்கும் இது வாய்ப்பளித்தது. நூற்றுக் கணக்கான மாணவர்கள் சமூகமளித்தனர். ஒவ்வொரு பாடசாலையும் வித்தியாசமான நிகழ்வுகளைக் காண்பித்தனர். பாட்டு வாழ்த்துரை மலர்ச்செண்டு கொடுத்தல்..... இறுதியில் உடற்பயிற்சி (Drill) செய்தனர். புனித. யாகப்பர் ஆலய ஆண்கள் வேதசாட்சியான புனித.சிறில் பற்றிய நாடகம் நடித்துப் பார்வையாளரின் பாராட்டைப் பெற்றனர். இந்த நிகழ்வுடன் யூபிலி விழா யாழ்ப்பாணத்தில் இனிதே நிறைவு பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி 14ம் திகதி இரவு புகை வண்டி மூலம் யாழ் புறப்பட்டோம். ஒரு மாதத்தின் பின்பு திரும்பி வந்தோம். 15ம் திகதி காலை 7 மணி அளவில் இறுதி நிலையத்தை வந்தடைந்தோம். அங்கு மாறிடிசென்பியர் தாயாரை வரவேற்க விக்ரறின் தாயார் காத்து நின்றார். கார் மடத்தை அடைந்ததும் கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டன. மடத்தின் முன் புறத்தில் அலங்காரக் கொடிகள் பறக்க விடப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது. அங்கே பிறக்சீட் தாயாரின் வலது பக்கத்தில் ஐரோப்பிய சகோதரிகளும், இடது பக்கத்தில் தமிழ் சகோதரிகளும் நின்று வரவேற்பு கூறினர். "மரியாளின் கீதம்" (magnificat) இசைக்கப்பட்டது. மாணவர்களும், அநாதைச் சிறுமிகளும் ஆசிரியர்களுடன் சேர்ந்து செபித்தனர். லீவுக்கு முதல் நாளாக இருந்தபடியால் ஆங்கில வகுப்பு மாணவர்கள் போடிங்கை விட்டு வெளியேற முன் தம் வாழ்த்துக்களைத் தாயாருக்கு தெரிவித்தனர். தாம் திருக்குடும்ப சபையினருடன் சேர்ந்திருப்பதால் மகிழ்ச்சி அடைவதாகவும், கிறிஸ்தவ வாழ்வில் அவர்கள் தம்மை உருவாக்குவதற்கு நன்றியுடையவர்களாக இருப்பதாகவும் கூறினர். அத்துடன் சென்ற் பிறக்சீட் தாயார் பல வருடங்களாக கல்விப் பணி ஆற்றிவருவதையும் கூறினர். அதைத் தொடர்ந்து பாடல், உடற்பயிற்சி (drill) நேசறிச் சிறுவர்களின் விளையாட்டுக்களும் இடம் பெற்றன. தாயார் இவற்றிற்கு நன்றி கூறி மாலையில் பரிசளிப்பு விழா நடைபெறும் என்றார். மறுநாள் அநாதைச் சிறுவர் தம் கலை நிகழ்ச்சிகளைக் காண்பித்தனர். கீழைத்தேச முறைப்படி மேடை அலங்கரிக்கப்பட்டு பிரான்சிய மொழியில் பாடினர். 5 வயதுப் பிள்ளை ஒரு கவிதையும் கூறினா. 202 பிள்ளைகள் எமது சுதேச சகோதரிகளால் கற்பிக்கப்பட்டனர். செபமாலை, படங்கள், குழந்தை யேசுவின் சுருவம் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியை அளித்தன. செபமாலையை கையில் கட்டியிருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் 5 பாடசாலைகள் உள்ளன. யாகப்பர் கோவில் பங்கு 140 பிள்ளைகள், சென்ற் சாள்ஸ் 126 பிள்ளைகள், O.L.R அடைக்கல மாதா 71 பிள்ளைகள், பாஷையூர் 67 பிள்ளைகள். துற்போது பாடசாலை லீவு. ஆசிரியர்கள் இளவாலையில் தம் தியான ஒடுக்கத்தை செய்கின்றனர்.

20 மார்கழி - முன்னைய வருடங்கள் போன்று சென்ற் பிறக்சீட் தாயார் தமிழ்ச் சகோதரிகளின் வருடாந்த தியானத்தை செய்தார். இளவாலையில் தியான இறுதி நாளில் (மார்கழி 18) 5 நவ கன்னியர் உடுப்புப் பெற்றனர். இருவர் நித்திய அர்ப்பணம் செய்தனர். இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயார் வரவை விரும்பினாலும் 2 நாட்கள் கழித்து 20ம் திகதியே மாட்டு வண்டியில் (பொறுமையின் பாதை) யாழ்ப்பாணத்திலிருந்து இளவாலைக்கு வந்தா. தற்போது அரை மணித்தியாலத்தில் காரில் வரலாம். வீதியின் இருமருங்கும் பனை, தென்னை மரங்கள் கண்கொள்ளா காட்சியாக இருந்தன. மடத்தை அடைந்ததும் அலங்கரிக்கப்பட்ட விறாந்தையில் 80 சகோதரிகள் திருக்குடும்ப சபை எளிமையுடன் இரு வரிசைகளில் நின்றனர். முகமலர்ச்சியுடன் வரவேற்றனர். குழுவின் பெரிய மண்டபமும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாதாவின் சுருபம் லீலி மலர்களாலும் தாயார்மாருடைய போட்டோ பசுமையான இலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

பிரான்சிய மொழியில் சென்ற் பியர் தாயாருக்கு வரவேற்புரை வழங்கப்பட்டது. தமிழில் உரை நடைபெறும் போது ஒரு சிறுமி மலர்மாலை சூட்டினா. ஒவ்வொருவருக்கும் ஞாபகப் படங்கள் வழங்கப்பட்டன. படங்கள் கொடுக்கும்போது ஒவ்வொருவரும் தம் பெயர், பணி பற்றி கூறினார்கள். அப்போது சில்லாலை, மாதகல், ஊர்காவற்றுறை, நாரந்தனை, கரம்பொன், பருத்தித்துறை, மன்னார் சகோதரிகள் வந்திருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒரு நல்ல வார்த்தை கூறப்பட்டது. அப்போது 15 வருடங்களுக்கு முன்பு வருகை தந்திருந்த வெரோணிக் சேக்ரெட்காட் தாயாரை நினைவு கூர்ந்தனர். மாலையில் நற்கருணை ஆசீர்வாதம் இடம் பெற்றது. மறு நாள் 3 சகோதரிகள் யூபிலி வெள்ளி விழாவைக் கொண்டாடினர். அத்துடன் தாயார் பிரியாவிடை பெற்றுச் சென்றார்.

கிறிஸ்மஸ்- இரவின் போது யாழ் மடமும் நவகன்னியர் இல்லம் போல் காட்சி அளித்தது. நள்ளிரவுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பிரான்சிய மொழியில் கிறிஸ்மஸ் பாடல்கள் இசைக்கப்பட்டன. பகலில் 3 திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டன. மாலையில் மடத்துப் பணியாளர் எல்லோரும் பங்குக் கோவிலுக்குச் சென்றனர். யாழ் பங்குக் கோவில் அழகான பதாகைகளால் தொங்கவிடப்பட்டு அழகாக இருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் விறாந்தைகளிலும் உட்புறமும் நிறைந்து கோவில் அழகிலும் பார்க்க அழகாகக் காட்சி அளித்தனர். ஆர்வத்துடன் அழகாகக் குளோரியா பாடினர்.

## இளவாலை - 1925

மார்கழி 20ம் திகதி தியானம் செய்தோரைத் தாயார் சந்தித்தா. இது நவகன்னியரின் சந்திப்புக்கு முன்னதாக இருந்தது. 27ம் திகதி ஞாயிற்றுக் கிழமை தாயார் வருகையுடன் குழுத்தலைவியின் விழா கொண்டாடப்பட்டது. தூர இடத்துச் சகோதரிகளும் அங்கிருந்தனர். அண்மையில் உள்ளோர் வந்தார்கள். புத்தாண்டு வாழ்த்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாறப்பட்டன. பெரிய படங்கள் வகுப்புக்களுக்குக் கொடுக்கப்பட்டன. மறுநாள் காலை சகோதரிகள் புறப்படத் தொடங்கினர். மாட்டு வண்டிகள் சகோதரிகளைத் தேடி வந்தன. பருத்தித் துறையில் இருந்து வந்தபடியால் மாடுகள் சிறிது இளைப்பாறி மீண்டும் 5 மணித்தியால பயணத்திற்குத் தம்மைத் தயார் செய்தன. வேறு பொருட்களும் ஏற்றியபடியால் இருப்பதற்கு அதிக இடமில்லை. மகிழ்வுடன் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டனர். தாயாரும் இவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

இளவாலைப் பாடசாலை மடத்தின் வலது பக்கத்தில் உள்ளது. ஒரு பகுதி போடிங் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. மறு பகுதி தமிழ்ப் பாடசாலைக்கும், முன்பள்ளி மாணவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. 185 மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்றார்கள். 49 பிற சமயப் பிள்ளைகள் எமது திருமறைக்கு வர விரும்புகின்றனர். வேறொரு பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சகோதரிகள் படிப்புடன் ஆங்கிலப் பாடத்தையும் படிப்பிக்கின்றனர். மன்னாரிலும், கரம்பொன்னிலும் ஆங்கிலம் படிப்பிக்கப்படுகின்றது.

பங்குத்தளத்துக்கும், ஆலயத்திற்கும் அருகாமையில் மடம் அமைந்துள்ளது. நவகன்னியர் இல்லத்திற்கும், தி.கு பாடசாலைக்கும் அ.ம.தி குருக்களின் உதவி கிடைக்கின்றது.இவ்வாறே சில்லாலை, மாதகல் பணித்தளங்களும் சகோதரிகளின் உதவியுடன் குருக்கள் முன் நின்று நடத்துகின்றனர். அங்கு இளம் பெண்கள் சபை தொடங்கி உள்ளது. 1910ம் ஆண்டு வெரோணிக் சேக்ரெட் தாயாரின் சந்திப்பு மாதகலில் 2 சமூகத்தினரின் ஒப்புரவுக்கு உதவியது. இரு சமூகமும 2 ஆலயத்தை எழுப்பியுள்ளது. தாயார் 2 ஆலயங்களுக்கும் சென்று கிறிஸ்தவ வாழ்வு பற்றி எடுத்துரைத்தா. மடத்துச் சிற்றாலயத்திலும் நன்றி, மன்னிப்பு வழிபாடு நடைபெற்றது.

மார்கழி 31ம் திகதி பெரிய கோவிலில் பகிரங்கவழிபாடு, ஒப்புரவு, நன்றி நவிலல் நற்கருணை நாதரின் முன் நடைபெற்றது. மடத்துக்கு வந்து பிறக்சீட் தாயார் பிரதித் தாயாருக்கு தத்தம் வாழ்த்தைத் தெரிவித்தார். மறு நாள் ஆயர் பாரம்பரிய வழக்கப்படி மடத்துச் சிற்றாலயத்தில் வருடத்தின் முதற் பூசையை ஒப்புக்கொடுத்து நற்கருணை ஆசீர்வாதமும் அளித்தார். சில நாட்களின் பின் தை மாதம் 10ம் திகதி வருடாந்த இறுதி நாளுக்கு வந்து 2 ஐரோப்பிய சகோதரிகளின் நித்திய அர்ப்பணத்திலும் பங்கு பற்றினார். யாராவது உத்தமனாக இருக்க விரும்பினால் தன்னை வெறுத்து என்னைப் பின் செல்லட்டும், நிலைத்திருப்பவன் மீடபடைவான், என்னும் யேசுவின் வார்த்தையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளவாலை - ஆலயம்



இளவாலை - ஆலயம்



கல்லறை
ஆண்டவர்



குருவின்
பணிமனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவாலை மடம்








இளவாலை நவகன்னியர் இல்லம்
15.04.1895



இளவாலை
ஆசிரியகல்லூரி



இளவாலை பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடற்கரை



மயிலிட்டி மடம்



பருத்தித்துறை மடம்



கடற்கரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புனித சூசையப்பர் ஆலயம்



கொழும்புத்துறை கடலேரி



பாஷையூர்
புனித. அந்தோனியார்
பாடசாலை



யாழ்ப்பாணம்
புனித. சாள்ஸ்
பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரிகோணமலை மடம்
ஆரம்பம் 02.09.1881



சிற்றாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுராதபுரி மடம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கினார். அன்பினால் இறைவனுடன் ஒன்றித்து தீய ஆவியுடன் போட்டியிட வேண்டும். இவர்களின் பரிசுத்தமான வாக்குத்தத்தங்கள் உடைக்க முடியாத பந்தனங்கள் என்றும், இறைவன் தன் பக்கத்தில் பிரமாணிக்கமாக இருப்பார் என்றும், சகோதரிகள் நிலைத்திருக்க வேண்டும் என்றும் சொன்னார். அன்று திருக்குடும்ப திருநாளாதலால் அவர்களின் கையிலே எமது நிலைத்திருத்தலைக் கூறி ஒப்பந்தத்தின் அடையாளமாக கணையாளியைக் கொடுத்தார். நற்கருணை ஆசீர்வாதத்தின் பின் திருக்குடும்ப கீதம் பாடப்பட்டது. எல்லோரையும் தாயார் திருஇருதயத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.தியானம் முடிந்ததும் இளவாலைக்குச் செல்லுமுன் தியோப்பில் தாயார் யாழ் சிறு பணித்தளங்களைச் சந்தித்தார்.

## பருத்தித்துறை

50 கி. மீற்றர் தூரத்தில் 6-10 கி.மீற்றர் அகலத்தில் அமைந்த பணித்தளம்தான் பருத்தித்துறையாகும். இந்து சமுத்திரத்திற்கும், கடலுக்கும் இடையே அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து 22 மைல் தூரத்தில் உள்ளது. லீவு காலமானபடியால் தாயார் சென்ற போது பிள்ளைகள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் தம் வெகுமதிகளைக் கொடுத்த போது படங்கள் கொடுக்கப்பட்டன. பாடசாலையில் பல சமூகத்தினரும் படித்தனர். இப்பகுதியில் மீனவர் அதிகமாக இருந்தபடியால் பாடசாலையும் அருகே இருந்தது. அங்கு சென்றதும் பட்டாசு வெடிகள் வெடிக்கப்பட்டன. பிள்ளைகள் வரவேற்புப் பாடல் பாடினர். பின்பு தென்னை, பனை ஓலையினாலும், வைக்கோலினாலும் பின்னப்பட்ட கூடைகளில் பழங்கள், முட்டை, எலுமிச்சம்பழம் போன்றவற்றைக் காணிக்கையாகக் கொடுத்தனர். தியோப்பில் தாயார் இதை ஏற்றுக்கொண்ட பின் படங்கள் கொடுத்தார். வரும்போது மயிலிட்டியில் சுதேச சகோதரிகளுக்கும் பங்குத்தந்தை புதிய கட்டிடம் கட்டியிருந்த இடத்தில் கார் தரித்தது. மதில் கூரை உயரத்தில் காணப்பட்டது. பாடசாலைக்கும் பொருட்கள் வந்திருந்ததைக் காண முடிந்தது. பங்குத் தந்தை வேறொரு பணித்தளத்திற்குச் சென்றிருந்தார். எனவே அங்குள்ள ஒருவர் தாயாரை வரவேற்றார். வீதியோரத்தில் கட்டப்பட்டிருந்த சிறிய ஆலயத்தைக் காண்பித்தார். சகோதரிகள் அங்கு போகும்போது ஆலயம் சுத்தமாகப் பேணப்படலாம். பின்பு மதிய வேளை இளவாலைக்கு வந்து சேர்ந்தோம். சாரதிக்கு மடத்தில் உணவு கொடுத்தாலும் அவன் இந்து மதமானதால் சாப்பிடவில்லை. அரை மணித்தியாலம் தாமதமாக வந்து ஊர்காவற்றுறைக்குப் புறப்பட்டோம். கரையை அடைந்ததும் பாதை சென்று விட்டதால் 1 மணித்தியாலம் தாமதித்தோம். பின்பு ஊர்காவற்றுறையை அடைந்தோம். அங்கு நீதிமன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளான படியால் பல ஐரோப்பியர்களையும் காண முடிந்தது. மடத்தைச் சந்தித்த பின் பாடசாலையில் 115 பிள்ளைகள் படிக்கும் இடத்தையும் பார்த்து விட்டு நாரந்தனைக்குப் புறப்பட்டோம். அங்கு 112 பிள்ளைகள் படிக்கின்றனர். 1 மைல் தூரத்தில் உள்ள கரம்பன் மடத்தில் 123 பிள்ளைகள் படிக்கின்றனர். கரம்பன் மக்கள் ஆங்கிலம் படிப்பதற்கு யாழ் ஆயரிடம் அனுமதி பெற்று ஒரு சகோதரியை அனுப்பும்படி கேட்டனர். எனவே 1926 தை மாதம் 5 ஆவது சகோதரி அனுப்பப்பட்டா.

மடத்தின் முன் பங்குக் கோவில் உள்ளது. அது பெருப்பிக்கப்பட்டுள்ளது. சற்று தூரத்தில் அறை வீடு உண்டு. 2 ஐரோப்பிய குருக்கள் 2 மாட்டு வண்டியில் வந்திறங்கினார்கள். ஒருவர் மரணச் சடங்கு நிறைவேற்றிய பின் வந்தார். மொழிப்பிரச்சினை பற்றி கூறினார். தான் உத்தரவு கொடுத்திருந்தால் பெற்றோர் ஆன்ம சோதனை செய்வதற்கு உதவி செய்திருக்கலாம். இறுதியாக அருட்சாதனங்களைப் பெற்றிருந்தார் என்று கூறினார். மீளவும் Kayts நோக்கி வந்தோம். பாதையால் பயணம் செய்து மறு கரைக்கு வந்த போது 6 மணி ஆகிவிட்டது. சாரதி வேகமாக ஓட்டி 7.15 மணிக்கு யாழ் வந்தடைந்தோம். 70மைல்கள் விபத்தின்றிப் பயணம் செய்திருந்தோம்.

## பயணம்

12ம் திகதி மாலை பிரியாவிடை கூறி 13ம் திகதி காலையில் புறப்பட்டோம். புகைவண்டி அதிகாலையிலேயே கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. பிரதிநிதித் தாயார் அநுராதபுரத்திலும் தங்க விரும்பினார். செல்லும் வழியில் செபம், தியானத்துடன் இயற்கை அழகையும் ரசித்த வண்ணம் சென்றனர். ஆனையிறவு வந்தடைந்ததும் யானைகள் அங்கு குளிக்க வருவதாகவும் புகை வண்டி சில வேளை தரித்து நின்று அவைக்குப் பாதை விடுகின்றது என்றும் அறிந்தோம். நாம் ஒன்றையும் காணவில்லை, ஒரே காடு. முட்பத்தைகள் படர்ந்த வண்ணம் காட்சி அளித்தன. அங்கு மருதமடு மாதா ஆலயம் உள்ளது.

மதவாச்சி புகையிரத நிலையத்தில் ரயில் பாதை இரண்டாகப் பிரிந்து செல்கின்றது. அ.ம.தி குருக்களினால் அமைக்கப்பட்ட இந்த ஆலயத்திற்குப் பாதை செல்கின்றது. 60 ஏக்கர் நிலம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. நவநாள் வழிபாடுகள் யாத்திரிகளுக்கு நடைபெறும். 1924ம் ஆண்டு மாதாவுக்கு முடி சூட்டு வைபவம் நடைபெற்றது. 95 பேருக்குத் திருமுழுக்கு அருளப்பட்டது. கீழே இதைப்பற்றி சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

கொழும்பு அதி மேற்றிராணியார் "கூடேர்" ஆண்டகை பாப்புவின் பிரதிநிதியாக இந்த விழாவிற்குத் தலைமை வகித்தார். இவர் 25 வருடமாக கொழும்பு ஆயராகவும், 40 வருடங்கள் நற்செய்திப் பணியும் ஆற்றி வருகின்றார். அ.ம.தி குருக்களின் சார்பாக சபையின் பிரதிநிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fr. Belle o.m.i (பெல்) வந்திருந்தார். திருப்பலி 3-7 மணி வரை நடைபெற்றது. 5, 6 குருக்கள் மக்களுக்கு (50200) திருவிருந்து கொடுத்தனர். யாழ் ஆயர் பாடற் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். முடி சூட்டு வைபவம் 7-10 மணி வரை நடைபெற்றது. சனத்திரள் வெயில் அகோரத்தையும் பாராது பங்கு பற்றினார்கள். றோச் ஆண்டவர் மனதை உருக்கும் வண்ணம் தமிழில் உரை ஆற்றினார். மன்னாரின் 700 வேத சாட்சிகள் பற்றிக் கூறினார். 1554ம் ஆண்டிலிருந்து செபமாலை மாதா பக்தி பற்றி எடுத்துரைத்தர். இதனாற்தான் மாதாவிற்கு முடி சூட்ட பாப்புவின் உத்தரவு கிடைத்தது. அ.ம.தி குருக்களும் இதனால் மகிழ்ச்சி அடைகின்றனர். இவர்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், திருமலை, காலி, கண்டி மறை மாவட்டங்களில் பணி புரிகின்றனர். 5 ஆயர்களும் மக்களை ஆசிர்வதித்தனர். பின்பு "கூடேர்" ஆயர் சிங்களத்தில் மறையுரை ஆற்றினார். மாதாவுக்குத் தனது வணக்கத்தையும் மக்களின் வணக்கத்தையும் தெரிவித்தார். 1,50,000 பேர் கூடியிருந்த இடத்தில் ஆயர் கத்தோலிக்கத் திருச்சபையினது காலத்தையும் இடத்தையும் கடந்து வாழ்ந்து வருவதை உங்கள் கண்முன்பாக காண்கின்றீர்கள், உங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்துங்கள். இதனால் தமிழ், சிங்கள மக்கள் உண்மையான மாதாவின் பிள்ளைகளாக வாழ முடியும் எனக் கூறினார். இதன் பின் பொன், இரத்தினக் கற்கள் பதித்து அலங்கரிக்கப்பட்ட முடியை மாதாவின் தலையில் சூடினார்கள். அப்போது வெடிகள் கொழுத்தப்பட்டன. மரத்தில் இருந்த கோவில் மணி அடிக்கப்பட்டது. மக்கள் கரகோஷம் செய்து ஆர்ப்பரித்தனர். பின்பு தெதேயும் நன்றி கீதம் இசைக்கப்பட்டது. மடுவிலிருந்து மன்னார் வரை ரயில் பாதை போடப்பட்டுள்ளது. மன்னாரில் ஒரு சுதேச பாடசாலையும், ஒரு ஆங்கிலப் பாடசாலையும் உள்ளது. 6 சகோதரிகள் உள்ளனர். முதற் கிறிஸ்தவர்கள் வேதசாட்சிகளான போது சிலர் மாதா சுருபத்தை எடுத்துச் சென்றனர். அங்கு ஒல்லாந்தரின் எதிர்ப்புக்கும் ஆளானார்கள். இறுதியில் காட்டின் நடுவில் மருதமடு என்னும் குளத்தின் அருகே வைத்தனர். மருதம் என்பது நீர் நிலையருகில் வளரும் ஒரு மரமாகும்.

## 1925 ஆசியா

நற்கருணை நூற்றாண்டு விழாவில் எம் தென்னாபிரிக்க சகோதரிகள் எம் முதற் தலைவிகளை அழைத்து வந்து இரட்டிப்பான நன்மையைப் பெற்றுக் கொண்டார்கள். 3வருடத்திற்குப் பின்பே இலங்கைக்கும் (1925) இவ்வாறான அருள் கிடைத்தது. மாறி டெ சென் பியர் (Marie de St. Pierre) தாயார் 15 வருடங்களின் முன் வெரோணிக் சேக்கிறட் (Veronique Secred) தாயாருடன் சபைத் தலைவியின் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். ஐப்பசி 17ந் திகதி மார்செயித் துறைமுகத்திலிருந்து புறப்படும்போது பிரதிநிதத்த் தாயாருக்கு வெரோணிக்காத் தாயாரின் பிரசன்னம் இரட்டிப்பான மகிழ்ச்சியை அளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்னப்புவா மடத்துத் தலைவியும், குருநாகல் வைத்தியசாலை தாதிச் சகோதரியும் சில கிழமைகள் போர்டோவில் செலவழித்து விட்டுத் திரும்பி வந்தனர். நாம் அவர்களின் பயண அறிக்கை மூலம் இச்சந்திப்பு பற்றி அறியத் தருகின்றோம்.

**மார்செய் (Marseille)**
**15 ஐப்பசி 1925**

என் நல்ல தாயாரே, எம் யாத்திரிகர், பாதுகாக்கும் அன்னையிடம் சென்று தம் நீண்ட தூரப் பயணத்தை "சமுத்திரத்தின் நட்சத்திரத்திடம்" ஒப்படைத்தனர். இந்த யாத்திரையின்போது எம் இதயங்கள் ஒன்று சேர்ந்து எம் குடும்பத்தை விண்ணக அரசியிடம் ஒப்படைத்து, இயேசுவையும் அவரின் அருளையும் நம்பிக்கையுடன் கேட்கும் அனைவருக்கும் தரும்படி கேட்டோம். குழந்தைகளின் குழுவொன்று எமக்கு அருகாமையில் இருந்து செபித்துப் பாடினார்கள். முதற் திருப்பலி நிறைவேறியதும் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது. இறுதியாக, "இயேசுக்கிறிஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாம் பேறுபெற்றவர்களாக இருக்க, இறைவனின் தாயே எமக்காக வேண்டும்" என 3முறை ஓதப்பட்டது. இது எமக்கு இரட்டிப்பான ஊக்கத்தைத் தந்தது. எம் நன்றிச் செபத்தின் போது 2வது திருப்பலி பிரதான பீடத்தில் நடைபெற்றது. அதேவேளை குருக்கள் ஏனைய பீடங்களில் திருப்பலி நிறைவேற்றினர். வேறொரு இடத்தில் ஆயர் தமது மறைப்பணியை ஆற்றிப் பேராலயத்திற்கு வரும்போது நாம் அங்கிருந்து 9மணியளவில் வெளியேறினோம் அப்போது வெரோணிக்காத் தாயார் உங்களது (சபைத் தலைவி) செய்திகளை எமக்குத் தந்தார். நீங்கள் எம் அருகே நிற்பது போல் நாம் உணர்ந்தோம்.

மாதாவின் மலையிலிருந்து இறங்கி வரும்போது அழகிய இயற்கை வனப்புக்கள் காணப்பட்டன. கதிரவன் எல்லாப் பனிப்புகார் மூட்டங்களையும் அகற்றி "மார்செயி" பெரும் நகரைக் காட்டினான். பல கப்பல்கள் துறைமுகத்தில் நின்றன. தூரத்தில் ஒரு கப்பல் பயணிகளுடன் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. அப்போது நாமும் இன்னும் சில மாதங்களில் மாதாவிடம் நன்றி யாத்திரை செலுத்த வரவிருக்கும் கப்பலை நினைத்தோம். நாளை மார்செயி ஆயர் திருப்பலி நிறைவேற்ற எம் குழுவிற்கு (நம்பிக்கை கிளை) வருகை தந்து இலங்கை செல்லவிருக்கும் சகோதரிகளுக்குத் தன் ஆசியை வழங்குவார்.

**ஐப்பசி 16**

தான் கூறியபடியே ஆயர் சாம்பவியே (Mgr. Champavier) காலை 7மணிக்குக் குழுவுக்கு வந்தார். ஆலயம் சென்று மக்களை ஆசீர்வதித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் திருப்பலி ஆரம்பித்தார். நற்செய்தியின் பின் இயேசு சீடர்களை மக்களிடம் அனுப்பியது பற்றி மறையுரை ஆற்றினார்."தந்தை என்னை அனுப்பியது போல் நானும் உங்களை அனுப்புகின்றேன். சென்று எல்லா நாட்டினர்க்கும் கற்பித்து வாருங்கள். நம்புகின்றவன் மீட்படைவான்" என்றார்.

மேலும் ஆயர் தன் உரையில், "ஒவ்வொரு துறவியும் செபம், தபம், ஒழுங்குகளைக் கடைப்பிடித்தல் போன்றவற்றால் எந்த நாட்டிலும் அப்போஸ்தலனாக வாழ அழைக்கப்பட்டிருக்கின்றான். புனித பிரான்சிஸ் இந்தியாவில் நற்செய்தியைப் போதித்தார். ஆர்ஸ் நாட்டுப் பங்குக் குரு (சூரேதாஸ் வியான்னி) ஒரு கிராமப்புறப் பங்குத்தளத்திலும், புனித திரேசா கார்மேல் மடத்திலும், புனித மொனிக்கம்மாள் வீட்டுப் பணிகளிலும் நற்செய்தியை வாழ்ந்தனர். அவ்வாறே திருக்குடும்பச் சகோதரிகளும் எல்லா இடங்களிலும் தாம் கற்பிக்கும் சிறுவர்கள், பராமரிக்கும் நோயாளிகள், வளர்க்கும் அநாதைச் சிறுவர்கள் எல்லாரிலும் ஆன்ம மீட்புக்காகப் பணிபுரிகின்றனர்." என்றார். திருப்பலி நிறைவேறியதும் ஆயர் குழுச் சகோதரிகளை வரவழைத்து மறைப்பணிக்குச் செல்வோருக்குத் தன் விசேட ஆசீரை வழங்கினார்.

**ஐப்பசி 17 கெறவோட்சிறே (Herefordshire) கப்பல்**

என் நல்ல தாயாரே நாம் 2 மணித்தியாலமாக மிதக்கும் வீட்டிலுள்ளோம். உங்களின் இதயம் எம்முடன் இருப்பதை உணர்கின்றோம். எம்முடைய இதயமானது எமக்குதவி செய்துவரும் எம் சபை இல்லத்தையே நாடியுள்ளது. வெரோணிக்காத் தாயாரின் பிரசன்னத்திற்கு நன்றி. அவவுடன் சேர்ந்து எல்லாப் புனிதர்களையும் எமது பாதுகாப்பாகக் கேட்டுள்ளோம். எம் உள்ளத்தில் எமக்குத் தேவையானவற்றை அளிக்கும், புதுப்பிக்கும் இறைவனைக் கொண்டிருப்பதனால் ஊக்கம் தணியவில்லை. கப்பலில் குருக்கள் இல்லை. 11.45 மணிக்கு சாப்பாட்டு மணி அடிக்கப்பட்டு சாப்பாட்டு அறைக்குச் சென்றோம். சாப்பாட்டை முடித்துக் கொண்டு மேலும் கரையில் இருப்பவர்களுக்கு எமது பிரியாவிடையைக் கூறினோம். பின்பு எல்லாம் மறைந்தது. மாதா சுரூபம் மட்டும் தெரிந்தது.

**ஐப்பசி 18**

மார்செயி துறைமுகத்திலிருந்து திரும்பியதும் வெரோணிக்காத் தாயார் தேவபராமரிப்பு எவ்வாறு எம் சிறிய குழுவை ஸ்தாபித்தது என்பது பற்றி எழுதியிருப்பா. அன்பான தாயாரே, உங்கள் உணர்ச்சி பூர்வமான அன்பு, ஆசைகளை நாம் அறிவோம். நீராவிக் கப்பல் விரைவாகப் புறப்பட ஆரம்பித்தவுடன் எம் கண்கள், இதயம் எல்லாம் மரியாளின் சுரூபத்தையே நோக்கிய வண்ணம் இருந்தன. எம் கப்பலின் சுக்கானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவவிடமே கொடுத்துவிட்டு "ஆவே மறிஸ்ரெலா" கீதத்தையும், செபமாலையையும் ஓதினோம். இவ்வாறான கப்பலோட்டி இருக்கும்போது ஏன் பயப்பட வேண்டும்?

மத்திய தரைக்கடல் நீல நிறமானது. அலைகள் குறைவு. எனவே பயணம் நன்றாக அமைந்தது. இரவு "பொனிவாஸ்" சீரிணையைக் கடந்தோம். ஞாயிற்றுக்கிழமை திருப்பலி இல்லாவிடினும் குழுவின் பக்தி முயற்சிகளினால் எம்மைத் தூய்மைப்படுத்தினோம்.

**ஐப்பசி 19**

அதிகாலையில் விழித்தெழுந்து யன்னல் கண்ணாடி வழியாக, உள்ள பாறைகளைக் கண்டு லிப்பாறி (Lipari) தீவுகள் என நினைத்தோம். ஸ்ரொம்பிலி (Stompli) எரிமலை புகை மூட்டத்துடன் காணப்பட்டது. ஒரு பக்கத்தில் கலாபிறே (Calabre) தோற்றமளிக்க மறுபுறத்தில் சிசிலித் தீவுதெரிந்தது. அந்த அதிகாலை வேளையில் கிராமப்புற மக்கள் தம் சிறிய ஆலயங்களில் திருப்பலியில் பங்கு கொண்டனர். நாமும் அவர்களுடன் உள்ளத்தால் இணைந்து இறைவன் திருவுளம் நிறைவேறச் செபித்தோம். இந்த இலையுதிர் காலத்தில், படைப்பின் இறைவனுடன் எம் நன்றிக் கீதம் கலந்தது. மெசினா (Messine) நீரிணையில் பல வருடங்களாக அழிவு ஏற்பட்டது தெரியவில்லை. சாறிப்டே (Harybde) சீலா (Scylla) என்பவை எமக்குப் பயத்தை ஏற்படுத்தவில்லை. காலநிலை சீராக இருச்தது. றெஜியோ (Reggio) அண்மித்ததும் எமக்கு இத்தாலியில் கால் பதிக்க ஆவல் ஏற்பட்டது. பின்பு எற்னா (Etna) தன் நீண்ட கம்பப் புகையுடன் தெரிய, கற்றானா (Catana) வெகு தொலைவில் தெரிந்தது. எமக்குப் புனித ஆகத்தமமாளின் இடத்தைப் பார்க்க ஆவல் ஏற்பட்டது. சாப்பாட்டு சேரம் வந்தது. நிலம் தெரியவில்லை. நாம் ஐனோனியன (Ionianne) கடலில் இருந்தோம். கடல் கொந்தளிப்பாக இருந்தாலும் கப்பல் அமைதியாகச் சென்றது.

**ஐப்பசி 20**

காலை அமைதியாகக் கடந்தது. நிலம் எமக்குப் பின்னால் வெகு தொலைவில் காணப்பட்டது. பரந்த கடலும், நீல வானும் எம் தியானத்திற்கு உதவியது. எம்மைச் சூழ இருந்தோர் மகழ்ச்சியில் திளைத்தனர். மாலையில் கிறிற் தீவு தெரிந்தது. அது புனித சின்னப்பரின் துன்பங்களையும், நற்செய்திப் பணிகளையும் நினைவூட்டியது. மாலையில், மறுநாள் தபால் எடுக்கப்படும் என்ற செய்தி கடைத்தது. எனவே எம் பயணத்தின் முதற் பகுதி அறிக்கையை அனுப்புகின்றோம். எம் இறுதி வார்த்தையானது எம் மிதக்கும் குழுவின் நன்றி ஆகும். என் நல்ல தாயாரே, எமது எல்லாத் தலைவிகளையும் செப மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமை தொடரும் தலைமை இல்லச் சகோதரிகளையும் நினைத்து நன்றி கூறுகின்றோம்.

**போட்செயிட் துறைமுகம்** 8 - 9 மணியளவில் இன்று காலை கப்பல், செயிட் துறைமுகத்தில் நங்கூரமிட்டது. ஆனால் கரையை அடையவில்லை. எனவே திருப்பலிக்கு நகருக்குள் செல்ல முடியாதபடியால் இறைவனை வரவழைத்துச் செபித்தோம். பாலத்தில் எல்லாவகையான வியாபாரப் பொருட்களும் குவிந்து கிடந்தன. ஏடெனில் (Aden) கப்பல் தரிக்காது என்றதால் ஏமாற்றம். எனவே சுயேஸ் கால்வாய் ஊடாகச் செல்லும்போதும், செங்கடல் வழிப் பயணத்தின் புதினங்களைக் கூற முடியாதுள்ளது. எனினும் சுயெஸ் தபால் மூலமாக எம் செய்திகளைத் தருவோம் என நம்புகின்றோம்.

நல்ல தூதர்கள் எம் கப்பலை எல்லா ஆபத்துகளிலிருந்தும் காப்பாற்றி வருகின்றார்கள். அத்துடன் எம் உள்ளத்தின் ஆழத்தில் போர்டோ தாயார், சகோதரிகளைப் பற்றிய செய்திகளைப் கூறுகின்றனர். நாமும் எமது பதிலை அனுப்பி வைக்கின்றோம். இவ்வாறாகச் செய்திப் பரிமாற்றம் நடைபெறுகின்றது. மாலையில் சூரிய மறைவைப் பார்க்கின்றோம். அழகிய விண்மீன்கள் நிறைந்த வானைப் பார்த்தபடி எமது இராச் செபத்தைச் செபிக்கின்றோம்.

**ஐப்பசி 23 செங்கடல்**

நேற்றுத் தேநீர் விருந்து முடியக் கப்பல் நங்கூரத்தைத் தூக்கிச் சுயெஸ் கால்வாய் ஊடாகப் பயணித்தது. கால்வாய் சிறிது. 2பெரிய கப்பல் ஒரே நேரத்தில் செல்ல முடியாது. எனவே கப்பல் தங்கி நிற்க இடங்கள் இருந்தன. தபால் கொண்டு செல்லும் கப்பலுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. எல்லாம் மெதுவாகச் சென்றபடியால் நாம் கரையைப் பார்க்க முடிந்தது. ஒரு பக்கத்தில் பரந்த அராபிய பாலைவனம் காணப்பட்டது. மேலும் ஒட்டகங்கள் சகிதம் ஒரு கூட்டம் மக்கள் கரைக்கு அண்மையில் கூடாரமிட்டு இருந்தனர். கால்வாய்க்கு மறுபக்கத்தில் எகிப்து தேசம் தெரிந்தது. புளிய மரம், பைன் மரங்கள் தெரிந்தன. புகைவண்டிப் பாதை, செயிட் துறையையும், சுயெசையும் இணைக்கும் வழியினூடாகச் சென்றது. வீடுகள் குறைவு. எனினும் செங்கற்களிலான முஸ்லிம் மக்களின் வீடுகள் தெரிந்தன. மாலையில் இருட்டாக இருக்கும்போது ஒரு நகர் ஒளிர்வதைக் கண்டோம். இஸ்மாயிலியர் என ஒருவர் கூறினார். பைபிளில் வரும் ஆகார் எனும் பெண் தன் மகன் இஸ்மாயேலைத் தாகத்தினால் வருந்தியபோது அங்கு விட்டுச் சென்றிருக்கலாம். பின்பு ஊற்றைக் கண்டு பிடித்துத் தூதர் பிள்ளையின் வருங்காலத்தை எடுத்துரைக்கின்றார். அத்துடன் திருக்குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்துக்கு ஓடிச் சென்றது. திருக்குடும்ப யாத்திரையையும் தியானித்தோம். கால்வாயைக் கடக்க 12 மணித்தியாலங்கள் எடுத்தன. அதிகாலை 3மணிக்கு சுயெசை அடைந்தோம்.

நாம் விழித்தெழும்போது இஸ்ராயேல் மக்கள் கடலைக் கடந்து சென்ற பாதையை அண்மித்தொம். எபிரேய மக்கள, கால் நடையாகச் சென்றதையும்பாரவோன் படைகள், அழிக்கப்பட்டதையும் தியானித்தோம். இவ்வாறு மீட்பின் வரலாறு எம் இதயத்தை ஆட்கொண்டது. சீனாய் மலையைக் கண்டபோது 10 கற்பனைகளையும் தியானித்தோம்.

## ஐப்பசி 24

மாலையில் அழகியசூரிய அஸ்தமனம் தெரிந்தது. மேகங்கள் பல வர்ண நிறங்களைத் தாங்கி ஒரு இயற்கைக் காட்சியைக் கண்முன் கொண்டு வந்தன.

## ஐப்பசி 25

இரண்டாவது ஞாயிறும் திருப்பலி இல்லாது கழிந்தது. பகலில் வேலை, விளையாட்டுக்களை நிற்பாட்டி வாசினை, எழுத்துவேலை, ஓய்வு, பிள்ளைகளுடன் செலவிடல் போன்றவற்றில் ஈடுபட்டோம்.

## ஐப்பசி 27

நேற்றுப3 பேனாவைத் தூக்க முடியவில்லை. நிழல் படிந்த நாளாகவே இருந்தது. கடலில் அலை அதிகமாகவே இருந்தது. அழகிய காட்சிகள் தென்பட்டாலும் இரசிக்க முடியவில்லை. நாம் எம் வெண்ணுடையுடன் இருந்தோம். இரவுணவுக்கு முன் மூவேளைச் செபம் சொல்லும்போது திடீரென ஒரு பெரிய அலை வந்து எம்மை நனைத்தது. நாம் உடையை மாற்றி இரவுணவில் பங்கு கொண்டோம்.

## ஐப்பசி 29

புனித யூதாததேயு திருவிழா. நேற்றுக் கடல் அமைதியாக இருந்தது. காற்று ஏடென் குடாவில் இருந்து எதிரப்புறமாக வீசியது. மாலையில் சொக்கத்ரோறா எனும் பெரிய தீவு தென்பட்டது. இது முதலில் பிரான்சிஸ் சவேரியாரால் நற்செய்தி போதிக்கப்பட்ட இடமாகும். தற்போது இந்து சமுத்திரத்திற்கு வந்துவிட்டோம். நாம் வந்த பாதையைப் படத்தில் பார்க்கும்போதும், கடலாழத்தைச் சிந்திக்கும்போதும் வல்லவரின் கரம் எம்மைத் தாங்குகின்றது என்பது எமக்குப் பலமளிக்கின்றது. இல்ங்கைக்கு வந்த முதல் சகோதரிகளின் கஷ்டமான பயணத்தையும் நினைத்தோம். அவர்களின் துன்பங்கள் எங்களுக்கும், பணிக்கும் நிறைய ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐப்பசி 31

சகல புனிதர் திருநாளின் முதல்நாள். திருப்பலி இல்லை. 2அல்லது 3நாளில் அதாவது வருகிற திங்கள் நாம் இலங்கையை அடையலாம். புயல் வீசியபடியால் வானம் இருளடைந்து காணப்பட்டது. எனினும் பின்பு சூரியன் தன் கதிர்களை நீட்டினான்.

## கார்த்திகை 01

அதிகாலையில் பாலத்தை வந்து பார்க்கும்போது வானமும் கடலும் அமைதியாக இருந்தது எமது அமைதித் தியானத்திற்கு உதவியது.

## கார்த்திகை 02

புரட்டஸ்தாந்து மக்கள் ஒன்றும் செய்யாவிட்டாலும் நாம் இறந்தவர்களை நினைவு கூர்ந்து செபித்தோம். இன்றிரவு கப்பல் கொழும்பை வந்தடையும்.காலையில் நாம் வெளியேறலாம். முதற் கடிதம் இந்த வரிகளைக் கொண்டு வந்து சேர்க்கும். பின்பு நாம் தந்தி அனுப்புவோம்.

## கார்த்திகை 03 - கொழும்பு

கொழும்புத்துறைமுகம் திருக்குடும்ப இல்லம் அடைந்துவிட்டோம். கப்பலிலேயே நல்ல வரவேற்புக் கிடைத்து விட்டது. சிறு படகுகள் எம் கப்பலை நோக்கி வந்தன. இறுதியிரவு தாழமுக்கம் இருந்தபடியால் நாம் எழும்பத் தாமதித்துவிட்டது. பாலத்திற்கு வந்து இயற்கை அழகை இரசித்தோம். சிலர் சகோதரிகளைக் கண்டதும் கைகளைக் குவித்து, நிலத்தில் பணிந்து தம் கழுத்தில் உள்ள வரவணிக்கத்தைக் காட்டி மகிழ்ந்தனர். சிலுவை அடையாளம் போட்டனர். இந்த மக்களைக் கண்டு நாம் மகிழ்ச்சி அடைந்தோம். பின்பு ஒரு நீராவிக் கப்பல் எம்மை நோக்கி வந்தது. தி.கு. சகோதரிகளும் அதில் இருந்தனர். படிகளில் ஏறிப் பாலத்திற்கு வந்து எமது பிரதிநிதித் தாயாரைச் சந்தித்தனர். பிறக்சிட் தாயார், மாறி டெசென்ற் பியருக்கு இலங்கைச் சகோதரிகளின் பெயரால் வரவேற்பைக் கூறினார்.

பம்பலப்பிட்டியா மடத்திற்கு வந்து சேர்ந்தோம். வழியில் அழகிய கட்டிடங்கள், பொதுத் தோட்டங்கள், நிழல் மரங்கள் காணப்பட்டன. நகரைத் தாண்டியதும் பெரிய தென்னம் சோலைகள், கடற்கரையோரமாகச் செல்லும் வாகனங்கள், மாட்டு வண்டி, றிக்சோ வண்டிகள் எங்கும் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண வருட அறிக்கையானது 1926ம் வருடத்தில் சபைத்தாயார் தியான வேளையில் கொண்டு வந்த பக்தி முயற்சிகள் பற்றிக் கூறுகின்றது. எமது நன்றியானது தேவபராமரிப்புக்கும், அதனைத் தருவோருக்கும் உரித்தாகட்டும். எமது பிரதித் தலைவி பிரான்சுக்குப் பங்குனி மாதம் வரும்போது யாழ் - சகோதரிகளுக்கு கொலரா நோய் காணப்பட்டது. பாஸ்குத்திருநாள் அன்று சுதேசிகளிடையில் இந்நோய் பரவியதால் மடமும் பொலிசாரால் மேற்பார்வை செய்யப்பட்டது. குருவானவர் திருப்பலி நிறைவேற்ற வந்தார். பாண் முதலிய பொருட்களும் கொண்டுவந்து கொடுத்தனர். சில பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்த வேளையில் தாயார்மாரும், சகோதரிகளும் இறைவனை வேண்டினர். பலரைப் பலி கொண்ட பின்பு தொற்று நோய் மறைந்தது. ஆனால் குழுவில் எல்லோரும் காப்பாற்றப்பட்டனர். எனவே தேவபராமரிப்பைப் புகழ்ந்தோம்.

யூபிலி ஆண்டுத் தினத்தில் பிள்ளைகள் வருடாந்தத் தியானம் செய்தனர். தினமும் அருளுரைகளில் பங்கு பற்றித் திருவிருந்திலும் பங்கேற்றனர். மாலையில் செபமாலைப் பவனி குருக்களின் தலைமையில் நடைபெற்றது. உரத்த குரலில் செபமாலை ஓதிக்கொண்டு வீதிகளைக் கடந்து சென்றனர். யூபிலி இறுதி நாளில் 30 பேருக்கு முதல் நன்மை வழங்கப்பட்டது. இதில் 4 அநாதைப் பிள்ளைகளும் அடங்குவர்.

இறைவனுக்குப் பிரியமான பிள்ளைகள் இங்கு இருக்கின்றார். அண்மையில் மரித்த எல்சி என்னும் பிள்ளை இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவள். இந்து மதத்தைச் சார்ந்த புத்திக் கூர்மையுள்ள பிள்ளை. வந்த முதல் நாட்களில் செபமாலையுடன் இருப்பதைக் கண்ட அவர்களின் தலைவிச் சகோதரி "நீ என்ன செய்கிறாய்" என்று கேட்டதற்கு நான் பெரியவர்களைப் போல் செபிக்கின்றேன் என்றாள். திருச்சிலுவையைத் தன்னோடு வைத்திருந்து ஈட்டியால் குத்தி திறக்கப்பட்ட இதயத்தை முத்தி செய்து "இயேசு இரத்தம் சிந்துகிறார்" என்று அன்போடு சொன்னாள். அவளின் சகாக்களில் ஒருத்தி கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமாகத் திரும்பிப் பார்த்த போது மரியான்னா கிறிஸ்துவிலிருந்து இரத்தம் வடிகிறதை இப்போ நீ காணவில்லையா? என்றாள். பெற்றோர் எல்சியைக் கொண்டு போகாவிட்டால் நாம் சந்தோஷமாக அவளுக்கு திருமுழுக்குக் கொடுப்போம்.

இன்னொரு வயதான பெண் தன்னை மடத்தில் சேர்க்கும்படி கேட்டபோது உனது பெற்றோர் எங்கே என்று கேட்டனர். அதற்கு அவள் அவர்கள் இறந்து விட்டனர், நான் தனித்திருக்கின்றேன் என்றாள். இங்கு வரமுன் எங்கே இருந்தாய் என்றதற்கு ஒரு இந்து பூசாரியுடன் இருந்தேன் அவர் என்னோடு கோபித்து கலைத்து விட்டார். பட்டணத்தில் உள்ள ஒரு அம்மா என்னை ஏற்றுக்கொண்டு பாதுகாப்பு தந்தா. நீங்கள் என்னை ஏற்றுக்கொள்வீர்கள் என்று சொல்லி இங்கு அனுப்பிவிட்டா. நீ இங்கு இருப்பதென்றால் கீழ்ப்படிவுள்ள நல்ல பிள்ளையாக இருக்க வேண்டுமென்று சொல்ல தாயார்மார் சொல்வதெற்கெல்லாம் பணிந்து நடப்பேன் என்றாள். நாகமுத்து என்ற இப்பெண் அக்னெஸ் என்று அழைக்கப்பட்டாள்.

## இளவாலை

பாடசாலை வகுப்பில் 185 பிள்ளைகள் உள்ளனர். அன்னம்மா 20 வயது, றோசான்னா 14, மரியதிரேசா 10 வயது இவர்கள் மறையறிவு பெற்று திருமுழுக்குப் பெற்றுக் கொண்டனர். இவர்களுடன் 28 சிறுவர்கள் ஆடி 26ம் திகதி முதல்நன்மை பெற்றார்கள். மனம்மாறிய மூவரும் ஏனையோருக்கு முன்மாதிரிகையாக விளங்குகிறார்கள். ஏனைய தமிழ் பணித்தளங்களிலும் சகோதரிகள் இவ்விதமான பலன்களைப் பெறுகிறார்கள். 1030 பிள்ளைகளுக்கு இவ்வருடம் மறைக்கல்வி படிப்பித்திருக்கின்றார்கள். எல்லாமாக 1030 பிள்ளகைள் உண்டு.

பேசாலையிலும் ஒரு மடம் கட்டப்பட்டது. மூன்று சகோதரிகள் அங்கு சென்றனர்.புரட்டாசி 1ம் திகதி 75 பிள்ளைகளுடன் பாடசாலை ஆரம்பமானது. ஒரு சிறிய மடம்தான்.

மடுவில் ஆனி மாத இறுதியில் நவநாள் செய்து ஆடி 2ம் திகதி விழா எடுப்பர். மார்கழி மாதத்தில் 70 தமிழ் சகோதரிகள் வருடாந்த தியானம் செய்தனர். இறுதியில் 2 சகோதரிகள் நித்திய அர்ப்பணமும், 5 நவகன்னியர் முதல் அர்ப்பணமும் செய்தனர். 6 ஆயத்த கன்னியரும் நவகன்னியர் நிலையை அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1927ம் ஆண்டு முதல் மாதங்கள் எம் இலங்கைச் சகோதரிகளுக்குத் துன்பம் தரும் காலமாக அமைந்தது. சபையின் உதவித் தலைவி வியாதியாக இருந்ததால் இலங்கைக்கு வரமுடியாதிருந்தது. பன்னிரண்டு வருடங்களாக முக்கியமான பதவியிலிருந்து பிறெக்சிட் தாயாரின் உடல் நலம் அவரின் ஆவலுக்கு ஈடுசெய்ய முடியாமல் இருக்கின்றது.

எனவே தென் ஆபிரிக்காவில் பணிபுரிந்த மாறி லியோனித் தாயாரை சபை உதவித் தலைவியாக நியமித்தபடியால் பாரம் குறைக்கப்பட்டது. இறைசித்தத்திற்குப் பணிந்தபடியால் பிறெக்சிட் தாயாரின் இதயமும் மகிழ்ந்தது. 25 வருடங்களாகப் பணியாற்றிய இடத்திலிருந்து வருவதும் லியோனித் தாயாருக்குக் கஷ்டமாகவே இருந்தது. சபையின் தலைமை இல்லத்தில் (Generalate) சில காலம் செலவழித்துப் புரட்டாதி 14ம் திகதி 5 இளம் சகோதரிகளுடன் மார்செயி துறைமுகத்திலிருந்து இலங்கைக்கு வந்தார்.

கப்பலில் குருக்கள் பலர் இந்தியா செல்ல இருந்தபடியா்ல தினமும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. எமது சகோதரிகள் தினமும் நற்கருணை விருந்தினால் ஊட்டம் பெற்று செய்யப் போகும் பணிக்குத் தம்மைத் தயாராக்கினர். ஐப்பசி 05ம் திகதி கொழும்பை வந்தடைந்து பம்பலப்பிட்டியில் தங்கினர். அன்றைய தினமே தன் வேலையைத் தொடங்கி உள்நாட்டுத் தலைவிகளை ஊக்கப்படுத்தினா.பிறக்சீட் தாயாரின் முயற்சியினால்எல்லாம் நடைபெற்றது. இலங்கைப் பணிகளை பார்க்குமுன் ஒரு சிறிய வைதத்தியசாலை ஒன்றைப் பொறுப்பேற்க வேண்டியிருந்தது. குருநாகல் வைத்தியசாலைத் தலைவி சில மாதங்களுக்கு முன் இதற்கு ஏற்பாடு செய்திருந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்

புரட்டாதி மாதத்தில் ஆவலுடன் விரும்பித் தேடும் முதல் நன்மை வைபவம் நடைபெறுகின்றது. யாழ்மடத்தில் இது எவ்வாறு நடைபெற்றது எனப் பார்ப்போம். இவ்வருடம் ஆயர் தலைமையில் அவரின் பிரதிநிதி, பங்குத்தந்தை, எம் மடத்துக்குரிய ஆன்ம குரு இவர்களுடன் இந்த வைபவம் நடைபெற்றது.

காலை 6.30 மணிக்கு ஆயர் கியோமர் ஆண்டகை பீடத்திற்கு வருகை தந்தார். ஆங்கில வகுப்பில் 25 பிள்ளைகளும் தமிழ் வகுப்பு அநாதையில்லத்திலிருந்து 42 பிள்ளைகளும் பங்கு பற்றினர். அவர்கள் பாடிய இசையின் வழியாக ஒருமித்த யேசுவின் அன்பு பிரதிபலித்தது. போடிங் பெரிய பிள்ளைகள் நற்கருணைப் பாடல்களை இசைத்தனர். எல்லோரும் திருவிருந்தில் பங்குபற்றக் காத்திருந்தனர். "இறை பிரசன்னம் எல்லோருக்கும், ஒவ்வொருவருக்கும் இறைவனை நேசிக்கும் சகலருக்கும் சம அளவாகக் கொடுக்கப்படும்போது சமனற்ற முறையில் உள்ள சாதி வகுப்பு மறைகின்றது" எனும் கருத்தும் மறை உரையில் இடம் பெற்றது. திருவிருந்துக்கு முன் நற்கருணை பெறும் சிறுவர்கள் உரத்த குரலில் நற்கருணை ஆயத்த செபத்தைச் செபித்தனர். இவ்வாறு இறைவனுக்குச் சொந்தமாகும் போது நிலவிய செபச்சூழல் பெற்றோர்களையும் நண்பர்களையும் ஓர் அமைதி நிலைக்கு ஈர்த்தது.

திருப்பலியின் பின் அருட்தந்தை றொட்றிகோ (Fr.Rodrico) உறுதி பூசுதல் அருட்சாதனம் வழியாக பரிசுத்த ஆவியின் கொடைகள் கனிகள் அவர்கள் வாழ்வில் பொழியப்படுமெனப் பிள்ளைகளுக்கு எடுத்துரைத்தார். ஆயரும் அவர்களின் வாழ்வு நற்செயல்களால் நிரம்பியிருக்க வேண்டுமென வாழ்த்தினார். ஆலயத்தை விட்டு ஆயர் வெளியேறும்போது பிள்ளைகள் விறாந்தையில் 2 வரிசையாக நின்று நினைவுப் படமும் பெற்று தந்தைக்குரிய நல்ல வார்த்தைகளைக் கூறும் ஆயருக்கு நன்றியைத் தெரிவித்தனர்.

பின்பு சிறிது நேரம் குழுச் சோதரிகளைச் சந்தித்துச் சல்லாபித்தார். இதனால் சகோதரிகள் மறை மாவட்ட முதல் ஆயரிடமிருந்து அறிவுரைகளும் ஊக்கமும் பெற்றுக் கொண்டனர். நற்கருணை நாதரின் சந்திப்பும் பரிசுத்த ஆவியின் கொடைகளும் எம் சிறுமிகளின் வாழ்வில் நிலைத்திருக்கும் அருளை அளிப்பதாக. எம் கல்விப் பணியானது அவற்றின் கனிகளால் எமக்கு ஆறுதலைத் தருகின்றது என்றார்.

வைகாசி மாதத்தில் மாதா பக்தியானது மிகவும் ஏழைப்பிள்ளைகளின் தாராள உள்ளத்தை வெளிப்படுத்துகின்றது. ஒருநாள் சக்கிறிஸ்ரி வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் சகோதரி அமலோற்பவமாதா சுருபத்தின் பாதத்தில் ஒரு பார்சல் இருப்பதைக் கண்டார். அதில் எம் பரலோக அன்னைக்கு தி.கு. மடத்துப்பிள்ளைகளின் அன்பளிப்பு என எழுதப்பட்டிருந்தது. பார்சலுக்குள் பீடத்திற்குத் தேவையான மெழுகுதிரியும் தாம் சேகரித்த பணமும், தோடு காப்பு போன்ற நகைகளும் காணப்பட்டன. அநாதைப் பிள்ளைகளின் தூண்டுதலால் ஆங்கில வகுப்பில் இருந்த கத்தோலிக்கர் அல்லாதோரும் இதில் பங்கு பற்றி இருந்தனர். இவர்களில் ஒரு பிள்ளை தன் பணக்காரக் குடும்பத்திலிருந்து மாதாவின் பீடத்திற்கு உதவி பெற முடியாததால் தன் மதிய உணவைப் பல நாள் ஒறுத்தாள். இதைப்பற்றி வினாவியபோது மாதாவுக்காகத் தான் செய்த ஒறுத்தல் தன் உடல் நலத்தைப் பாதிக்காது எனவும், தன் ஆன்மாவுக்கு மீட்பாகும் என்றாள்.

மார்கழி 3ந்திகதி இந்தியாவின் அப்போஸ்தலர் புனித சவேரியார் திருவிழா இலங்கையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்வருடம், இப்புனிதர் உண்மையைத் தேடியடைய ஓர் ஆன்மாவை அனுப்பினார். அவர் மடத்துத் தலைவியைக் கண்டதும், இயேசு, மரி, சூசை என் மேல் இரக்கமாயிரும் என்றாள். இந்த வார்த்தைகள் ஒரு கிறிஸ்தவள் என்பதைக் காட்டியதால், அவவின் சந்திப்பின் காரணத்தைக் கேட்டா. அப்போது அவ தான் கத்தோலிக்கள் அல்லேன் எனவும், கத்தோலிக்களாக வர விரும்புவதாகவும் கூறினா, முஸ்லிம் மதத்தில் பிறந்து தன் கணவன் இறக்கும் வரை அந்த மதத்தில் வளர்ந்தாலும் அது உண்மையென எனக்குத் தெரியவில்லை, விதவையாக இருந்த போது எல்லாத் துன்பங்களும் என்மேல் விழுந்தன. ஒருவரிடம் தன் பிள்ளையை ஒப்படைத்த போது அவரையும் காணவில்லை. தானும் தன் உயிரை இழக்க வேண்டிவந்து பின்பு சிறிது சிறிதாக அறிவு பெற்றதாகக் கூறினா, மறுநாள் இரவு ஒரு சிறு பிள்ளை தன் காயங்களில் சிலுவை அடையாளம் வரைந்து அதைக் குணப்படுத்தி எழுந்து மடுவுக்குப் போ எனக் கூறியதாகவும், எழும்பியபோது தன்னால் நடக்கக் கூடியதாக இருந்ததாகவும் அந்த யாத்திரையைச் செய்ததாகவும் கூறினாள். அங்கு மடு யாத்திரிகர்களுடன் சேர்ந்து சில விசுவாச உண்மைகளைக் கற்றுக் கொண்டதாகவும், குரு இல்லாதபடியால் திரு முழுக்குப் பெற முடியவில்லை எனவும் கூறினா. அன்று தொடங்கி ஒரு குரல் தன்னுள் ஒலிப்பதாகவும் அதுவே இயேசு, மரி, சூசை என்மேல் இரக்கமாயிரும் என்பதாகும் எனக் கூறி, இந்தச் சமயத்தைப் பற்றி எனக்குக் கற்றுத் தர வேண்டுகிறேன் என்றா.

இதைக் கேட்டதும் இவை உண்மையெனப் பட்டதால் ஒரு சுதேச சகோதரியிடம் ஒப்படைக்கப்பட்டா. தினமும் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து மறைக் கல்வியை ஆர்வத்துடன் படித்தா. மாதா பீடத்தின் முன் பயபக்தியுடன் செபித்ததைக் கண்டோம். படித்து முடிந்ததும் பங்குக் குருவிடம் அழைத்துச் சென்றோம். அங்கு அவவின் வரலாறு, ஆசை என்பவற்றைக் குருவுக்கு எடுத்துக் கூறினோம். குரு வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவல்களில் ஈடுபட்டிருந்ததால், அவவின் பரீட்சையைத் தாமதித்துச் செபங்களைப் படிக்கும்படி கூறினார். இதனால் ஏமாற்றமடைந்து மீளவும் குருவிடம் கதைக்கும்படி சகோதரியை நாடினாள். 2ம் முறை குரு சம்மதித்து கிறிஸ்மஸ் நாளன்று திருமுழுக்குக் கொடுத்தார். அவளின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஒரு செபமாலை கொடுத்து வாழ்நாள் முழுவதும் ஓதும்படி கூறினேன்.

மறுநாள் கொலராவால் தாக்கப்பட்டு வைத்தியசாலைக்குச் சென்று அங்கு இறந்து விட்டாள். அங்கிருந்த நோயாளிகளுக்குத் தன் பொறுமையைக் காட்டினாள். புனித சவேரியார் வழியாக இந்த ஆன்மா திரு முழுக்கு உடையுடன் விண்ணகத்தில் சென்றதால் நாம் இயேசு, மரி, சூசையைப் புகழ்ந்தோம்.

## இளவாலை - ஆசிரிய பயிற்சிக் கல்லூரித் திறப்பு விழா

போர்டோ பொதுச் சங்கத்தில் பங்குபற்றிய பின் தன் குழுவுக்கு வந்த சென்ற். தியோப்பில் கவாட் தாயார், யாழ்ப்பாண ஆசிரிய கலாசாலையை இளவாலைக்கு மாற்ற முயற்சி செய்தா. கீழே கட்டிடத் திறப்பு விழா பற்றி கூறப்பட்டுள்ளது.

புரட்டாதி மாதம் 23ந் திகதி யாழ் ஆயரால் திறப்புவிழா நிர்ணயிக்கப்பட்டது. ஆயர் பலமுறை வந்து கட்டிட வேலை ஆட்களை ஊக்கப்படுத்தினார். நாளும் நேரமும் வந்து கைகூட மணிகள் ஒலிக்க ஆயர் தன் பிரதிநிதியுடன் வந்து சேர்ந்தார். அப்போது பங்குக் குரவர் இருவரும், அயற் கிராமக் குருக்கள் இருவரும் அவர்களை வரவேற்றனர். குழுச் சகோதரிகள், நவகன்னியர், மாணவர்கள் ஆலயத்தில் ஒன்றுகூடி இருக்க ஆயர் ஆலயத்துள் நுழைந்து தூயஆவியின் பாடல் "வெனிக்கிறேயாத்தோர்" ஆரம்பிக்கக் குருக்களும் பாடகர் குழாமும் பகிர்ந்து பாடினர். பாடல் நிறைவுற்றதும் "ஆவே மாறிஸ்ரெலா" கீதத்துடன் பவனி ஆரம்பித்து மடத்துக்குப் புறம்பான கட்டிடம் நோக்கிச் சென்றது. ஆயர் எல்லோரையும் ஆசீர்வதித்தார். செபம் சொல்லி சிலுவை ஆசீர்வதிக்கப்பட்டு மேடையில் பொருத்தப்பட்டது. ஆசிரிய கலாசாலை மாற்றப்பட்டதன் நோக்கத்தை எல்லோர் முன்னிலையிலும் எடுத்துக் கூறினார். "சுகாதார நிபந்தனையுடன் நவகன்னியர் காலம் முடிய இந்த இளம் சகோதரிகள் சிறிய பணித்தளங்களுக்குச் செல்லுமுன் தமது படிப்புக்களையும் நிறைவுறச் செய்யலாம்" என்றார். அத்துடன் கியோமர் ஆண்டகை கலாசாலைப் படிப்புக்களின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறி தன் ஆசீரையும் ஒவ்வொருவருக்கும் அளித்தார். அனைவரும் இறைவனுக்கு நன்றிகூறி அந்த நாளின் இறைபராமரிப்பைப் புகழ்ந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பணியில் விசேடமாகக் கொழும்பு மறைமாவட்டத்திலே 1929ம் ஆண்டு ஒரு பெரிய தியாகத்தைக் கேட்டு நின்றது. சித்திரை 4ந் திகதி அதி மேற்றிராணியார் கூடேர் ஆயர் (Mgr. Coudert) பாஸ்குத் திருநாளன்று இறைவனடி சேர்ந்தார். 25 வருட காலமாகக் கொழும்பு மறைமாவட்டத்தில் பணியாற்றியவருக்கு இயேசுவின் உத்தானத்தின் மகிழ்ச்சியிலும் பங்கெடுக்க முடிந்தது. ஆயரின் இழப்பு அமதி குருக்களையும், தி.கு.சகோதரிகளையும் துன்பத்தில் ஆழ்த்தியது. தீவிலுள்ள எம் குழுக்கள் இறுதிச் சடங்கில் பங்குபற்றின. தை மாதத்திலே லியோனித் தாயார் போர்டோவின் பொதுச் சங்கத்தில் பங்குபற்றிய பின் ஒவ்வொரு குழுவுக்கும் வந்து போர்டோ செய்திகளைப் பரிமாறிக் கொண்டார்.

## யாழ்ப்பாணம்

முதலில் தாயார் யாழ் மடத்திற்கு வருகை தந்தா. சென்ற்.பிறக்சிற் தாயாரின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தது. கண் பார்வை மங்கி ஒரு சத்திர சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது.அது நல்ல பயன் அளித்தது. நன்றி கூறினோம். அடைக்கல மாதா கோவிலருகில் சுதேசிகளின் பாடசாலை ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பங்குக் குரு ஒரு கடிதம் எழுதி எமக்கு அனுப்பியுள்ளார்.

இப்புதிய ஆலயம் ஆசீர்வதிக்கப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. எமது அன்பான சென்ற்.பிறக்சிற் தாயாரும் அவவின் குமாரத்திகளும் இதில் பற்கேற்றுச் சிறப்பித்தனர். எம் கிறிஸ்தவர்கள் இதனால் மகிழ்ச்சி அடைந்தனர். பலர் திருவிருந்தில் பங்கேற்றனர். நற்கருணைப் பாத்திரம் சிறியது என்று ஆயர் சொன்னார். வருடத்தில் 33.000ஆயிரம் முறை ஏறக்குறைய 1600 பங்கு மக்களுக்குத் திருவிருந்து கொடுத்துள்ளேன். இறைவனுக்கு நன்றி. மேலும் பல இந்து மதத்தினர் எம்மைச் சூழவுள்ளனர். அவர்களின் மனமாற்றத்திற்காகவும் வேண்டுவோம். அடைக்கல மாதா, புனித திரேசாள் பரிந்துரை எமக்குக் கிடைத்திருக்கின்றது. அதில் ஒன்றைத் தருகின்றேன்.

நான் ஒருநாள் கோவில் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது ஒரு மருத்துவர் வந்தார். அந்த வேளையில் நான் நோயுற்றிருந்தபடியால் தேவ பராமரிப்புத்தான் இவரை இங்கே அழைத்து வந்ததென நினைத்து நான் என் நோய் பற்றிக் கூறியபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரும் மருந்து எழுதித் தந்து நான் சுகம் அடைந்தேன். அது அவருக்கு மகிழ்ச்சி அளித்தது. எனவே மாலையில் அடிக்கடி வந்து சென்றார். ஒருநாள் மூவேளைச் செபமணி அடிக்க நான் கதையை நிற்பாட்டி மூவேளைச் செபத்தைச் சொன்னேன். உடனே அங்கிலிக்கன் மருத்துவரும் ஆலயத்தை நோக்கிக் கைகளைக் குவித்து சிலுவை அடையாளம் வரைந்தார். நானும் எமது சமயத்தைப் பற்றிக் கூறினேன்.

அன்பான மருத்துவரே, நீங்கள் உடல் நோய்க்கு மருத்துவர். எனக்கு நல்ல சிகிச்சை அளித்தீர்கள்.நன்றியுடையவளாக உள்ளேன். நான் இறையருளால் ஆன்ம மருத்துவராக உள்ளேன். உம் நோயுற்றிருக்கும் ஆன்மாவைக் குணப்படுத்த விரும்புகின்றேன். அவர் ஒன்றும் கூறவில்லை. எனினும் எல்லாம் விளங்கியுள்ளது என்பதை அவர் முகம் காட்டிற்று. ஆலயத்திற்கும், பணிமனைக்கும் வந்து சென்றார். அவர் நல்லதொரு தீர்மானம் எடுக்கச் செபித்து வந்தேன்.

பின்பு சில நாட்கள் வரவில்லை. வேலை நிமித்தமாக வரவில்லையென நினைத்தேன. அவ்வாறில்லை. அவர் நோயுற்றிருப்பதாகவும், என்னுடன் கதைக்க விரும்புவதாகவும் ஒருவர் என்னிடம் கூறினார். எனவே அங்கு சென்றேன். கடும் சுகவீனமுற்றிருந்தார். எனவே நான் "அன்பான மருத்துவரே, நீங்கள் கடும் நோயுற்றிருக்கின்றீர்கள். பரலோகம் செல்ல உதவி செய்ய விரும்புகின்றேன். முன்பு உங்கள் ஆன்ம மீட்புப் பற்றிக் கூறியது நினைவில் இருக்கும்" என்றேன். அதற்கு அவர் நான் "இயேசுவை விசுவசிக்கின்றேன்" என்றார். "நல்லது, திருச்சபையையும் அதன் வழுவாப் போதனைகளையும் விசுவசிக்க வேண்டும்" என "அதையும் விசுவசிக்கின்றேன், எனக்கு இறுதி அருட்சாதனங்களைத் தாருங்கள். நான் கத்தோலிக்க திருச்சபையிலேயே இறக்க விரும்புகின்றேன். எனவே எல்லாவற்றையும் செய்வேன்" என்றார். எனவே திருமுழுக்கு, இறுதி அருட்சாதனத்திற்கு ஆயத்தப்படுத்தி வழங்கினேன். அப்போது சிலுவை அடையாளம் வரைந்தார். அவர் முகம் அமைதியடைந்தது. அவரை ஆசீர்வதித்த பின் மீளவும் வருவேன் எனக் கூறிச் சென்றேன். அதற்கிடையில் ஒருவன் வந்து "மருத்துவர் இறந்துவிட்டான்"என்றான்.

சடுதியாக அவர் இறந்தாலும் இறையருள் அவருக்குக் கிடைத்ததை எண்ணி நன்றி கூறினேன். உடனே அடைக்கல அன்னைக்கும் நன்றி கூறி, மேலும் இந்த அருள் இன்னும் பலருக்கும் கிடைக்க வேண்டுமென்றும் மன்றாடினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி இயக்குனர் லியோனித்தாயார் யாழில் இருப்பதால் நேரடியாக எம் புதுவருட வாழ்த்துக்களைக் கூற முடியும். யாழ் ஆயர் கியோமார். ஆண்டகை எமது ஆலயத்தில் புதுவருடத்திருப்பலி நிறைவேற்றினார். திருப்பலியின் பின்பு எமக்குத் தமது ஆசீர்களைத் தந்தார். ஐரோப்பிய சகோதரிகளின் தியானம் தை 5 - 13ந் திகதி வரை நடைபெற்றது. முதல்நாள் மாலையில் அவர்கள் வந்து தம்மைத் தயார் செய்து கொண்டனர். லியோனித்தாயாரின் வழிநடத்தலில் தியானம் நடைபெற்றது. இறுதி நாளில் கியோமார் ஆண்டகை திருப்பலி நிறைவேற்றினார். தியானம் செய்தவர்களில் ஒருவர் தன் நித்திய அர்ப்பணத்தையும் செய்தார். அதன்பின்பு ஆயர் அர்ப்பணத்தின் அடையாளமான மோதிரத்தை வழங்கினார். ஆராதனைக்காக நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு ஒவ்வொரு மணித்தியாலமும் தியானம் செய்த சகோதரிகள் செபித்துக்கொண்டே இருந்தனர். லீவுநாட்கள் இத்தியானப் பக்தி முயற்சியுடன் 15ந் திகதி முடிவுற்றது. எனவே மாணவர்கள் பல பிரிவினராக வரத்தொடங்கினர். சபைக்குரியபிள்ளைகள் 9 பேர், சபைக்கு வர ஆசிப்போர் (Aspirants) 26 பேர், இவர்களுள் 19 பேர் குறைந்த வயதுடையவர்களாக இருந்தனர். சிலநாட்களின் பின் எல்லாப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் ஒரு தியானம் நடைபெற்றது. இறுதி நாளில் நற்கருணை எழுந்தேற்றமும், அதைத் தொடர்ந்து லூர்துகெபிக்கு ஒரு பவனியும் நடைபெற்றது. இதில் பழைய மாணவர்களும் பங்கெடுத்தனர்.

வைகாசி மாதத்தில் ஆங்கிலப் பாடசாலையில் 35 பிள்ளைகளும், புரட்டாதியில் தமிழ்ப்பாடசாலையில் இருந்து 34 பிள்ளைகளும், மாதாவுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டனர். இவர்களுள் 9 அநாதைச் சிறுமிகள், 4 பேருக்கு திருமுழுக்கு அருளப்பட்டது. திருப்பலியின் போது 135 பேர் உறுதிபூசுதல் பெற்றுக்கொண்டனர்.

மடத்துத் தலைவி இலங்கைக்கு வந்த 50 ஆவது ஆண்டை பாடசாலை வேலைகள் மத்தியிலும் நினைவுகூரக்குழுச் சகோதரிகள் மறக்கவில்லை. பிறக்சீட்தாயாரும் அவருக்குத்துணையாக சகோதரி செனற் ஆஞ்வாணியே என்பவரும் வந்தனர். யூபிலி ஆயத்தங்கள் அமைதியாக நடைபெற்று ஐப்பசி 9ந் திகதி யூபிலி சிறப்பாக நடைபெற்றது. பலமுக்கிய மடங்களின் தலைவிகள் வந்து சிறப்பித்தனர். லியோனித் தாயார் இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்இலைகளினால் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் முதல் மாலைச் செபத்திற்குக் குழுச் சகோதரிகள் ஒன்று கூடினர். அமைதியான முறையில் வழிபாடுகள் பாடல்களுடன் நடைபெற்றது. அப்போது ஒரு பாராட்டுரை வாசிக்கப்பட்டது.

எம் அருமையான தாயாரே! நாம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த நாள் வந்துவிட்டது. எமது உண்மையான பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம். எமது உதவி இயக்குனர் தாயார் எம்முடன் இருப்பதால் அவ எம் சபையின் பிரதிநிதியாக இருக்கின்றா. இங்கிருந்த பழைய சகோதரிகளும் தம் வாழ்த்துக்களைக் கூறி இறைவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

''உறுதியான பெண்'' அவளின் செயல்கள் அவளின் மகிமை எனத் தூய ஆவிகூறுகின்றார். நீங்களும் அந்த உறுதியான பெண்தான். உங்கள் பணிகள் மூலம் இறைவனை அறியவும் நேசிக்கவும் உதவி புரிந்து இருக்கிறீர்கள். பணித்தளங்களில் இறையரசு பரவ உதவிக்கரம் தந்தீர்கள். அத்துடன் பல இளம் பெண்கள் துறவு வாழ்வில் உருவாக்கம் பெற்றுத் தம் சகோதரர்களுக்குப் பணியாற்ற முன் வந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் ஆங்கில பாடசாலை படிப்பில் முன்னேற்றம் காட்டுகிறது. அத்துடன் அநாதை இல்லம், ஆரம்ப தமிழ்ப்பாடசாலை, சுதேசபாடசாலைகள் என்பன ஒரு மகிமையின் முடியை உருவாக்குகின்றன. இளவாலை நவகன்னியர் இல்லமும் இத்துடன் இணைகிறது. வென்னாப்புவா நவ கன்னியர் இல்லமும் அத்துடன் சேர்ந்த சிறிய பணித்தளங்களையும் எவ்வாறு எடுத்துரைக்கலாம். பம்பலப்பிட்டி மடம் ஆரம்பத்தில் சிறியதாக இருந்தாலும், தற்போது கொழும்புப் பாடசாலைகளுடன் போட்டிபோடக்கூடிய நிலைக்கு விருத்தியடைந்துள்ளது. குருநாகல் நாவலப்பிட்டி, அனுரதபுரம் ஆகிய இடங்களிலுள்ள மடங்களின் பணிகளும் வளர்ச்சியடைந்துள்ளன. எனவே இறைவனுக்கு நன்றிகூறி, இன்னும் பலவருடங்கள் எம் வழிகாட்டியாக இருக்கவேண்டுகிறோம். "Admultos Annos"

அன்பான சகோதரி சென்ற் ஆஞ் அவர்களே! எம் தாயாருடன் நீங்களும் 1/2 நூற்றாண்டு தியாக சேவை புரிந்துள்ளீர்கள். எம் பாராட்டுக்கள் உரித்தாகுக! இலங்கை வெயிலில் ''இறைவன் மாத்திரம்'' என்னும் பார்வையில் உங்கள் துறவுவாழ்வை மேற்கொண்டீர்கள். நாளைய திருப்பலியின் போது நீங்கள் இறைவனுக்கு நன்றிகூறுவீர்கள். இன்பத்திலும் துன்பத்திலும் வழிநடத்திய இறைவன் உங்களை மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுப்பித்து உங்கள் சுமைகளை எளிதாக்குவார். நாமும் உங்களுடன் சேர்ந்து மேலும் 10 வருடங்களைத் தந்து வைரவிழாவையும் நாம் காண, இறைவனை வேண்டுவோம். அந்த அருளை எம் தாயாருக்கும் கேட்போம்.

பிறக்சீட்தாயார் சென்றஆஞ் சகோதரியுடன் வாழ்ந்த நாட்களை மீளவும் புதுப்பித்துக் கொண்டார். பல வேலைகளை ஒருமித்துச் செய்தனர். கஷ்டங்களை அனுபவித்தனர். எனினும் அவர்கள் வேலை சபைக்கு மகிழ்ச்சி தந்தது. சபையின் தலைவிகள் நல்லவர்களாக இருந்தனர். எனவே கீழ்ப்படிதல், ஏழ்மை, வார்த்தைப்பாடுகள் அவர்களின் தாராள உள்ளத்திற்கு உதவியாக இருந்தன.

ஐரோப்பிய சகோதரிகளின் வாழ்த்துக்களின் பின்பு, தமிழ்ச் சகோதரிகளின் வாழ்த்துக்களை யூபிலி நாயகிகளுக்குத் தெரிவித்தனர். பொதுப்பணிக்கு ஒவ்வொரு சகோதரியும் காட்டும் ஒத்துழைப்புக்குத் தாயார் நன்றிகூறினார். இறுதியில் ஒவ்வொருவரின் நெற்றியிலும் சிலுவை அடையாளம் வரைந்து தலைவியின் ஆசீர் அருளப்பட்டது.

மறுநாள் யாழ் ஆயர் தனது பிரதிநிதி பிஜியன் (R.P. Bizien) குருவானவருடன் திருப்பலி நிறைவேற்ற மடத்திற்கு வந்தார். அத்துடன் பல பங்குத் தளங்களிலுமிருந்து அ. ம. தி. குருக்களும் பீடத்தில் காணப்பட்டார்கள். பீடத்தில் லீலிப்பூக்களும், எல்லா இடமும் ஒளிமயமாகவும் பிரகாசித்து உள்ளத்திலே மகிழ்ச்சியையும் பக்தியையும் ஊட்டின. நற்செய்தி வாசகத்தின் பின்பு ஆயர் மறைஉரை வழங்கினார்.

வணக்கத்திற்குரிய தாயாரே!அன்புக்குரிய சகோதரி செனற் ஆஞ் (St. Ange) அவர்களே! வருடாந்த நினைவு கூர்தல் Anniversary பீடத்தைச் சூழ எம்மை வரவழைத்து, ஒரு நன்றிக்கீதத்தை இசைக்கச் செய்தது. 6 வருடங்களின் முன்பு உங்கள் துறவற வாழ்வின் 50 வருடங்களை யாழ் குழு மகிழ்வுடன் கொண்டாடியது. இன்று இலங்கையில் உங்கள் 50 வருடப் பணி வாழ்வை நினைவு கூர்கிறோம்.

மறைப்பணிக்காக அனுப்பப்பட்ட இடத்தில் அன்பு, ஆர்வப்பணிக்காகத் தன்னை 50 வருடங்களாக அர்ப்பணித்தவரின் வாழ்வின் தியாகத்தை யார் எடுத்துரைக்க முடியும். அரைநூற்றாண்டு இது ஒரு வரலாறு ஆகும். இதனை நாம் இன்று நினைவுகூர்கின்றோம். அதாவது 1880 ஐப்பசி தொடங்கி 1930 வரைப்பட்ட காலம். யாழ். அ. ம. தி. குருக்களின் அறிக்கையிலும் தி. கு. சபை அறிக்கையிலும் மகிமையுள்ள காலமாகும். பணிகள் முன்னேற்றமடைந்து பரவிய காலமெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1880ல் திருக்குடும்பச் சபை யாழ் - எல்லையைவிட்டுச் செல்லவில்லை. ஆனால் கஷ்டங்களை மேற்கொண்டது. சகோதரிகளை உருவாக்கியகாலம். யாழ் - மறைமாவட்டத்தின் எல்லைக்குச் செல்லும் காலம் அண்மித்தது. மாதகல், பணித்தளத்தின் பட்டியலில் முதலிடம் பெற்றது. அதைத் தொடர்ந்து மன்னார், இளவாலை, சில்லாலை, பருத்தித்துறை, அனுரதபுரம், ஊர்காவற்றுறை, நாரந்தனை, கரம்பன், பேசாலை என்று பணித்தளங்கள் ஆரம்பமாகின. ஆரம்பத்தில் இருந்து யாழ் - மறைமாவட்டம் விருத்தியடைந்து காலத்தின் தேவைகளை நிறைவு செய்து கொண்டிருந்தது. இளவாலையின் விருத்தி நம்பிக்கையின் சின்னமாக இருந்தது. அனுரதபுரம் புத்த மதச்சூழலில் இருந்து காப்பாற்றியது. எனவே இரு யூபிலி நாயகிகளின் துணையுடன் நடைபெற்ற வேலைகளை மேல் நோக்கிப்பார்த்தோம். உங்கள் ஒத்துழைப்புக்களை என்னிலும் பார்க்க மற்றவர்கள் நன்கு கூறமுடியும். இதில் நீங்கள் பெரும் பகுதி எடுத்துள்ளீர்கள். இது கடந்த கால நிகழ்ச்சியன்று. இளைஞருடைய கல்வி அப்போஸ்தலிக்க பணியாக இருந்தது. இளம் உள்ளங்களை உருவாக்கல், புண்ணியங்களில் வளர்த்தல், இறைஅன்பு - இதுவே கல்விகற்பிப்போரின் நோக்கமாக இருக்க வேண்டும். இந்த அடிப்படையில் ஆன்மீக கட்டிடம் உயர வேண்டும். கிறீஸ்தவ, துறவுக்கல்வி விரைவில் அதன் பலனைத்தரும். சூழலையே உருமாற்றிவிடும். பங்குத் தளம் மேன்மை பெறும். கிறீஸ்தவ வாழ்வு, பாடசாலையின் விளைவாகவும் உள்ளது. எனவே இன்று போல் ஒரு நாள் நாம் தரித்து நின்று சென்ற பாதைகளைத் திரும்பிப் பார்த்து பெற்ற நன்மைகளுக்கு நன்றி கூறுவது வழமையாகும்.

அத்துடன் இளைஞர்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் உருவாக்க வேண்டிய பணி உண்டு. சில ஆசிரியர்கள் பிள்ளைகளைக் கவரமுடியும். ஆனால் இறைவனைப் பற்றிக் கூற முடியாதிருந்தால் கற்பித்தல் பணிக்கு ஏற்றவர்களல்லர். நீங்கள் இப்பணியின் காத்திரத்தை விளங்கி இலங்கைச் சகோதரிகளை உருவாக்கியதன் மூலம் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ளமுடிகிறது. இதுவே அரைநூற்றாண்டு பணிபுரிந்த, இந்த வாழ்வு பற்றிச் சுருக்கமாகக் கூறக்கூடியது. அன்புடனும், ஆர்வத்துடனும் அயலானின் மீட்புக்காகத் தியாகத்துடன் பணிபுரிவதே, திருக்குடும்பச் சபையின் குறிக்கோளாகவும் உள்ளது.

இடைவிடாது நசரேத்தின் திருக்குடும்பத்தை தியானித்து வாழ்வைப் புதுப்பித்தல், குழுவாழ்வு, நசரேத்தில் வாழப்பட்ட புண்ணியங்கள் எல்லாம் ஒரு படம்போன்று உங்கள் பணிகளில் உதவியுள்ளன. எனவே நீங்கள் இறைவனுக்கு நன்றிக்கீதம் எழுப்புகிறீர்கள். அத்துடன் மற்றவர்களையும் அதில் பங்கேற்க அழைத்துள்ளீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பலி தொடர்ந்து நடைபெற்றது. மதியம் (Agape) ஆகப்பே உணவு பரிமாறப்பட்டது. மகிழ்வுடன் பொழுது போக்கு (Recreation) நற்கருணைச் சந்திப்பு, தொடர்ந்து நற்கருணை ஆசீர்வாதம் நிறைவேற்றப்பட்டது. இறுதி நிகழ்வுக்கு அ. ம. தி. குருக்கள் பங்குபற்றித் தங்கள் வாழ்த்துக்களையும் யூபிலிச் சகோதரிகளுக்கு வழங்கினர்.

தேதேயும் பாடலில் நாங்களும் பங்குபற்றி இறைவனைப் புகழ்கின்றோம். மாலையில் ஆங்கில பாடசாலை மாணவிகளால் கலைநிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. அதற்கு ஆயர் தலைமை தாங்கினார். மறைசாட்சியான புனித செசிலியாவின் வாழ்க்கைச் சரிதை மாணவர்களால் நடித்துக்காண்பிக்கப்பட்டது. பலத்த கரகோஷம் மக்களின் பாராட்டைத்தெரிவித்தது. மறுநாள் அநாதைப் பிள்ளைகளின் வாழ்த்து யூபிலிச் சகோதரிகளுக்குக் கிடைத்தது. அவர்களும் லியோனித்தாயாரின் தலைமையில் சிலகலைநிகழ்ச்சிகளைக் காண்பித்தனர். பாட்டு, கவிதை, உடற்பயிற்சி போன்றவை, பாப்பரசரின் கீதத்துடன் எல்லாம் நிறைவுற்றது. அதே நாள் மாலையில் வேறு ஒரு விழாவும் கொண்டாடப்பட்டது. சகோதரிகள் கற்பிக்கும் 4 பாடசாலை மாணவர்களும் மடத்துப் பாடசாலையில் ஒன்று கூடினர். ஒவ்வொரு பாடசாலையும் ஒரு நிகழ்ச்சி கொண்டு வந்து எல்லோரின் பாராட்டையும் பெற்றனர். இந்நிகழ்ச்சியுடன் யூபிலி விழாமுடிவுற்றது.

வைகாசி மாதத்தில் கத்தறின் லவபேர் (Lafaber) சகோதரியின் வைரவிழா கொண்டாடப்பட்டது. தனது 86 வயதிலும் மகிழ்ச்சியுடன் இருந்தார். யாழ்ப்பாணத்தை விட்டு ஒரு போதும் வெளியே செல்லவில்லை. யூபிலி நாளில் பலர் அவ செய்த நன்மைகளைப் புகழ்ந்தனர். கார்த்திகை மாதத்தில் இறைவன் ஆங்கிலபாடசாலை ஆசிரியர்களின் முயற்சியை ஆசீர்வதித்து நல்ல பரீட்சை சித்திகளைக் கொடுத்தார். இது பரீட்சை அதிகாரிகளின் பாராட்டையும் பெற்றது.

அநாதை இல்லத்திலும், நகரின் 4 பாடசாலைகளிலும் பணியாற்றும் சுதேச சகோதரிகள் தம் வருடாந்த தியானத்தைச் செய்வதற்கு மார்கழி 11ந் திகதி இளவாலையில் மகிழ்வுடன் ஒன்றுகூடினர். அங்கு ஆன்மீக பலம் பெற்று மீளவும் சிறிய உள்ளங்களில் பணியாற்ற ஆர்வத்துடன் வந்தனர். எல்லோரையும் கிறீஸ்துவின் பக்கம் திருப்புவார்களாக!.

இவ்வருடத்தில் 2 ஐரோப்பிய சகோதரிகள் இறைவனடி சேர்ந்துவிட்டனர். இவர்கள் இறையடியில் இருந்து எம் பணிக்கு உதவுவார்களாக! எம் ஆங்கில பாடசாலையில் இருந்தும் 2 சிறந்த மாணவர்கள் இறைபதம் அடைந்து விட்டனர். இருவரும் நல்ல கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இறைவனிடம் செல்வதாக பெற்றோருக்கு ஆறுதல் கூறிச் சென்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவாலை

1930ம் ஆண்டை நோக்கும் போது அதிகம் அருள் பொழிந்த இறைவனைப் போற்றுவதுடன், நல்ல பிதாவின் வேண்டுதலால் பெற்ற அருள்களையும், நாம் அனுபவித்துள்ளோம். இவற்றில் முதலாவது எம் இருகாணிகளைப் பிரிக்கும் ஒரு பொதுப்பாதையை வாங்கியுள்ளோம். 15 வருடமாக முயற்சி செய்து பலன் பெறவில்லை. ஆசிரியகலாசாலைகட்டிய பின்பு இதை வாங்குவது இன்றியமையாத தேவையாக இருந்தது. புனித ஆசீர்வாதப்பரின் வரவணிக்கமும், நல்ல பிதாவின் நினைவுச் சின்னங்களும் ஆங்காங்கே வைக்கப்பட்டன. நாம் தொடர்ந்து செபித்தோம். சிலகாலங்களின் பின் மடத்தின் சார்பாக முடிவு எடுக்கப்பட்டது. இதனால் பிள்ளைகளுக்கு நல்ல பிதாவில் நம்பிக்கை ஏற்பட்டது. பரீட்சை அண்மிக்கும் போது திருப்பலி நற்கருணை, தியாகம் போன்றவை 'டிப்ளோமா' பெறுவதற்காக ஒப்புக்கொடுக்கப்பட்டன. நல்லபிதாவின் பரிந்துரையும் வேண்டப்பட்டது. இருவரைத் தவிர எல்லோரும் சித்தி பெற்றனர். ஒருவர் புரட்டஸ்தாந்து மதத்தவர், மற்றவர் இந்து, இவர்கள் நல்ல பிதாவிடம் செபிக்கவில்லைப் போலும் என அவர்களின் நண்பிகள் கதைத்தனர்.

நல்ல உள்ளத்துடன் எம் பாடசாலை மாணவர்கள் செயற்படுகின்றனர். போடிங்பிள்ளைகள் 30 இல் இருந்து 100 ஆக உயர்ந்துள்ளது. அவர்களில் 6 பேர் புரட்டஸ்தாந்து மதத்தவர். இந்துப் பிள்ளைகள் 10 பேர், எல்லோரும் ஒரே ஒழுங்கைப் பின்பற்றுவர். கோவிலுக்குச் செல்வர். ஒரு அ. ம. தி. குருவானவரால் மறைக்கல்வி வகுப்பு நடாத்தப்படும். அதற்கும் அறியாசையினால் ஒருவர் பின் ஒருவராக வந்து பங்குபற்றுவர். ஒரு புரட்டஸ்தாந்துப் பெண் கல்லூரி மாணவர்களுடன் உரையாடலில் பங்குபற்றித் தற்போது திருவருட்சாதனங்களைப் பெறக்கேட்டுள்ளாள். திருமணமும் இதில் அடங்குவதால் இது பலருக்குப் பயனளிக்கலாம்.

வேறொரு பெண்ணுக்குக் குடும்ப உறவு மதமாற்றத்திற்குத் தடையாக இருந்தது. தந்தை அவளை போடிங்கில் இருந்து எடுத்துவிட்டார். சகோதரிகளின் சந்திப்பையும் தடைசெய்தார். சிலகாலத்தின் பின் மீளவும் மகளை அழைத்து வந்து மடத்துத்தலைவியிடம் "2 நாட்களுக்கு இவ்விடம் கொண்டு வந்தேன். வீட்டில் அழுதபடி இருக்கிறாள். எனவே அவள் மகிழ்ச்சியுடன் வீடுதிரும்ப விரும்புகிறேன" என்றார். பின்பு "21 வயதின் முன் அவளை எடுக்க வேண்டாம், இடைக்கிடை அவளை இங்கு அழைத்து வருவேன்" பின்பு அவள் சுதந்தரமாக முடிவு எடுக்க முடியும் என்று இன்னொரு முறை கூறினார். இது நமக்கு நம்பிக்கையை அளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துச் சிறுமிகளும் எம் சமயத்தால் கவரப்பட்டுள்ளனர். செபமாலையும், கழுத்தில் வரவணிக்கமும் அணிந்திருப்பர். அவர்களின் கேள்விகள் அவர்களின் சிந்தனையை எடுத்துக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, கத்தோலீக்கர் பொய் சொல்லும் போது நற்கருணை பெறமுடியுமா? பல நாட்கள் சண்டை போடமுடியுமா? உடலில் எங்கு ஆன்மா உள்ளது? திருமுழுக்குப் பெற எமது பெற்றோர் மறுத்தால் விண்ணகம் செல்ல முடியுமா? ஆசை ஞானஸ்நானம் பற்றி எடுத்துரைக்கும் போது மகிழ்ச்சி அடைகின்றனர். செபம்படிக்கின்றனர். இந்த இளம் உள்ளங்களில் போட்ட நல்ல விதையானது தேவபராமரிப்பின் நேரம் வரும் போது பயனளிக்கும் என எதிர்பார்க்கலாம். இதற்குப் பின்வரும் நிகழ்வு உதாரணமாகும். ஒரு மாணவியின் தந்தை இந்து. தனது படிப்பை அ. ம. தி. குருக்களின் கல்லூரியில் முடித்து மதமாற்றமின்றி வீடுவந்து சேர்ந்து மணம் செய்து கொண்டார். ஒரு பழைய ஆசிரியர், குரு வைத்தியசாலைச் சந்திப்புச் செய்த போது ஒரு குரல் கேட்டது. அவன் தன்னை அறிமுகம் செய்தான். தன் பெயர் சொல்லி 23 வருடங்களின் முன் கல்லூரியில் படித்ததாகவும், தற்போது தான் இறக்கப் போவதால் திருமுழுக்குத் தரும்படியும் கேட்டான். உடனே குரு இதற்கு ஆயத்தம் செய்து திருமுழுக்குக் கொடுக்க அது உடல் நலனையும் அளித்து சிலநாளின் பின் வீடு செல்ல முடிந்தது. அவன் செய்த முதற்காரியம் தன் 7 வயது மகளை எம்மிடம் அழைத்து வந்து கிறீஸ்தவளாக்கும்படி கேட்டுக் கொண்டார். அத்துடன் தன் சிறிய தம்பியையும் வளர்ந்த பின கல்லூரியில் சேர்த்துக் கிறீஸ்தவனாக்குவேன் என்றார்.

இளவாலைப் பிள்ளைகளுக்கு வருடாந்த தியானம் நடைபெற்றது. அதில் 30 பேர் முதல் நன்மையும். 200 பேர் உறுதிபூசுதலும் பெற்றனர். கத்தோலிக்கரல்லாதோர் பொறாமையுடன் ''ஓ உங்கள் வழிபாடுகள் எல்லாம் உள்ளத்தைத் தொடுகின்றன. எம் வழிபாட்டில் இப்படியல்ல'' என்றனர்.

மார்கழி மாதத்தில் 11 - 18ம் திகதிகளில் வருடாந்த தியானம் நடைபெற்றது. அவ்வேளை லியோனித்தாயார் எம்முடனிருந்தது ஓர் இனிய அனுபவமாகும். 82 தமிழ் சகோதரிகள் தம்மைப்புதுப்பித்துக் கொண்டனர். ஓர் அ.ம.தி. குருவானவரால் கொடுக்கப்பட்ட மறைஉரைகள் பாராட்டுப் பெற்றன. வழக்கப்படி இறுதி நாள் திருப்பலி ஆயர். கியோமார் ஆண்டகையால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. 3 நவகன்னியர்கள் தம் முதல் அர்ப்பணத்தைச் செய்தனர். 5 ஆயத்த கன்னியர்கள் துறவற உடை பெற்றனர். அவர்களின் இடத்தை அஸ்பிறன்ஸ் (Aspirants) உடனே எடுத்துக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்

வழக்கம் போல் வருடாந்த தியானத்துடன் புது வருடத்தை ஆரம்பித்தோம். இந்நாட்களில் எம் ஆன்மாவில் இறைவனின் செயற்பாடுகளையும் எம் அழைத்தலையும் சிந்தித்து மேலும் மேலும் அவர் அருளுடன் ஒத்துழைத்து எம் புனித வாழ்விற்கும், எம்முடன் உள்ள சிறு பிள்ளைகளின் மீட்பிற்கும், தாராள உள்ளத்துடன் பணி புரியத் தூய ஆவியை வேண்டினோம். அருட்தந்தை பெறுசல் ( Fr.Perrusel) எமக்கு வழிகாட்டியாக இருந்து தன் விசுவாசம், பக்தி மூலம் எம்மை இயேசுவின் சிலுவையண்டை அழைத்துச் சென்றார். 8 நாட்களும் இறைவன் எம்மிடம் கேட்கும் தியாகங்களுக்குப் புத்தாண்டில் அன்பினால் பதிலிறுக்க வேண்டுமென்று மறையுரையில் கூறினார். தியான முடிவின் மறுநாள் யாழ் பெரிய கோவிலில் இருந்து அவருக்கு மாற்றம் வந்தது. காடுகளின் நடுவேயுள்ள ஒரு புதிய இடத்திற்குச் சென்றார்.

தியான இறுதி நாளில் ஆயர் தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றன. மாறி லியோனித் தாயார் தலைமையில் ஒரு சகோதரி தன் நித்திய அர்ப்பணத்தைச் செய்தா. நாள் முழுவதும் எழுந்தேற்றம் செய்யப்பட்டு இறுதியில் நற்கருணை ஆசீர்வாதம் நடைபெற்றது. இறுதியில் நன்றிக் கீதம் இசைத்தோம்.

மறுநாள் எம் ஆசிரிய சகோதரிகள் புத்தூக்கத்துடன் கல்விப் பணியைத் தொடர்ந்தனர் புனித யாகப்பர் ஆலயத்தில் தை 18ந் திகதி நற்கருணை மகாநாடு நடைபெற்றது. நகரில் உள்ள எல்லாப் பங்கு நிறுவனங்களும் புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்கள், பங்குக் குருக்கள், கொழும்புத்துறை அதிபர்கள், எமது சகோதரிகள், எல்லாக் கத்தோலிக்க மாணவர்களும் சமூகமளித்தனர். எல்லோரும் ஒரே உள்ளத்தினராய் தம் விசுவாசத்தின் வெளிப்பாட்டைக் காட்டினர்.

ஆலயம் அலங்காரத்துடன் நன்கு காட்சியளித்தது. திரிதின ஆராதனை 15ந் திகதி வியாழன் 4.30 மணிக்கு ஆரம்பித்து முதலில் தூய ஆவிக்குக் கீதமும், அதைத் தொடர்ந்து செபமாலையும் பாடல்களும் நூற்றுக்கணக்கான மாணவர்களால் ஓதப்பட்டன. பின்பு அருட் தந்தையர்கள் புறோகான் (Brohan) அருட்சகோதரன் குறுசோ(Grousseault) தலைமையில் பாடலும், சோவன் (Chovan) தலைமையில் பியானோவும் இசைக்கப்பட்டது. காலை, மாலை மறை உரையின் கருப்பொருள் நற்கருணையாகவிருந்தது. வியாழக்கிழமை மழையாக இருந்தாலும் மக்கள் சமூகமளித்தனர். மகாநாட்டின் கருத்து, சித்திக்காகச் சிறுவர்கள் தினமும் செபித்து வந்தனர். வெள்ளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனிக்கிழமை மழைக்கோலமாக இருந்து சனி மாலை தொடங்கி ஞாயிறு காலை வரையும் ஒரே வெள்ளம். எனவே கோவிலில் எல்லோரையும் வைத்திருக்க முடியாது நெரிசலாகவிருந்தது. ஆயர் தியாக்கோன்மாருடன் திருப்பலி நிறைவேற்றினார். 3 குருக்கள் நற்கருணை கொடுத்தார்கள். திருப்பலி முடிந்ததும் எல்லோரும் வெளியே சென்று மீண்டும் 10.30 மணிக்கு திருமணித்தியாலத்துக்கு வந்தனர். ஆராதனை நடைபெறும்போது பீடமும் ஒளியினால் அலங்கரிக்கப்பட்டுக் கவர்ச்சியாக இருந்தது. அப்போது சூரியன் மீளவும் தன் அனல் கதிரை வீசி நல்ல காலநிலை கிடைத்தது. எனவே மக்கள் வீதி அலங்காரத்தில் ஈடுபட்டனர். செபமாலை ஓதி முடிந்ததும் 4 மணிக்கு ஆயர் வந்தார். அவரைத் தொடர்ந்து பீடப்பணியாளர்களும் நின்றனர். அருட்தந்தை பெருசல் மறையுரை ஆற்றினார். திருவிருந்தில் தினமும் பங்கெடுக்க வேண்டுமென்றார். மறையுரையின் பின் பவனி இடம் பெற்றது. திருச்சிலுவையின் பின் பீடப்பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் ஒளியுடன் சென்றனர். இதற்கெனத் தயாரிக்கப்பட்ட கீதங்களுடன் கொடிகளையும் பிடித்துக் கொண்டு சென்றனர். இறுதியில் ஆங்கிலப் பாடசாலை மாணவிகள் 24 பேர் பூத்தெளித்தனர். ஆயர் கதிர்ப்பாத்திரம் ஏந்தியவராக புனித பத்திரிசியார் மாணவர்கள், புனித யாகப்பர், திரு இதயச் சபையினர் குடை பிடித்துச் சென்றனர். பவனி முடிந்ததும் நன்றிக் கீதம் (Te Deum) இசைக்கப்பட்டது. நற்கருணை ஆசீருடன் மகாநாடு நிறைவு பெற்றது.

சித்திரை 15-19ந் திகதிகளில் அருட்தந்தை மார்செலின் எமது பல பாடசாலைப் பிள்ளைகளுக்கு நற்செய்தி உரையாற்றினார். ஓய்வு நேரங்களிலும் அமைதி பேணப்பட்டது. இவர்கள் குடும்பங்களில் முன்மாதிரியாக உள்ளனர். வைகாசி 16ந் திகதி 24 தி.கு.பிள்ளைகளும் 24 ஆயத்தகாரரும் திருக் குடும்ப கொடியின் கீழ் ஒன்று கூடினர். இவர்கள் மாதத்தில் ஒருமுறை மடத்துத்திருப்பலியில் பங்குபற்றுவர். திங்கட் கிழமைகளில் ஏழைகட்குப் பணிபுரிவர். இந்த ஒன்று கூடல்கள் அவர்களிடையில் ஐக்கியத்தை வளர்க்கின்றன.

புரட்டாதி 11ந் திகதி 3 அநாதைப் பிள்ளைகள் திருமுழுக்குப் பெற்றனர். 26 ந் திகதி ஆங்கில வகுப்பு மாணவர்கள் 22 பேர் புது நன்மை பெற்றனர். திரு விருந்து பெறும்போது அருட்தந்தை நல்லையா படிப்பித்த செபத்தை உரத்த குரலில் சொன்னார்கள். நன்றிச் செபமும் உணர்ச்சி பூர்வமானதாக இருந்தது. தம் பெற்றோருக்காகச் செபித்தனர். கோவிலில் இருந்து வெளியேறி நேரே பிள்ளைகளின் வகுப்பறைக்குச் சென்று அங்கே காலை உணவில் பங்கு கொண்டார்கள். தாயாரால் ஒரு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது. மார்கழி மாதத்தில் பரீட்சை முடிவுகள் நன்றாக அமைந்தன. மார்கழி 25ந் திகதி ஓர் ஆசிரியை புரட்டஸ்தாந் மதத்திலிருந்து எம் மதத்திற்கு மாறி திருவிருந்து பெற்றா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவாலை

இவ் வருடத்தில் எம் அன்புத் தாயாரின் உடல் நலக் குறைவினால் துன்பத்துக்குள்ளானோம். நல்ல இறைவன் துன்பத்துடன் வேறு சில நன்மைகளையும் தந்துள்ளார். எம் பணிகள் நல்ல பயன்கள் தருகின்றன. இந்து புரட்டஸ்தாந் பிள்ளைகள் பலர் எம் சகோதரிகளின் பாடசாலைகளில் கல்விப் பணியை அனுபவிக்கின்றனர்.

எம் கியோமார் ஆண்டகை வழக்கம் போல் எம் வருடாந்த தியானத்தின் இறுதி நாளில் தலைமை வகித்து உரையாற்றினார். இதில் சுதேச சகோதரிகள் பங்கு பற்றினர். சகோதரிகளின் செல்வாக்கு மீட்புக்கு வழி வகுக்கின்றது. "அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு". எனவே சகோதரிகளின் தொகை பெருகி வரவேண்டுமென்று ஆயர் ஆசித்தார். ஆயர் கோவா (**Goa**) க்குச் சென்று திரும்பி வந்த படியால் ஒவ்வொருவருக்கும் பிரான்சிஸ் சவேரியாரின் உடலைத் தொட்ட வரவணிக்கங்களைக் கொடுத்தார். தியான முடிவில் 3 ஆயத்த கன்னியர் துறவற உடையையும் 3 நவகன்னியர் முதல் அர்ப்பணத்தையும் 3 சகோதரிகள் நித்திய அர்ப்பணத்தையும் செய்தனர். அத்துடன் ஆயர் மார்கழி 19ந்திகதி, 50 ஆவது யூபிலி அர்ப்பண விழாவைக் கொண்டாடும் சகோதரிக்கும் தன் விசேட ஆசீரைக் கூறினார்.

மன்னாரிலும், இளவாலையிலும் எம் சகோதரிகள் பல சிறுவர்களை முதல் நன்மை, உறுதிபூசுதலுக்கு ஆயத்தப்படுத்தினர். மறைக்கல்வித் தேர்தலிலும் நல்ல சித்தி கிடைத்தது. இதைக் குருவானவர் நடாத்தினர். ஆசிரிய கல்லூரி மாணவர்களுக்கு தினமும் சமயக் கல்வி நடைபெறுவதில் ஆயர் மிகவும் கரிசனை எடுக்கின்றார். அத்துடன் ஆயரால் நியமிக்கப்பட்ட ஒரு குருவானவர் ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒரு மணித்தியால விளக்கம் கொடுக்கின்றார். தவணை முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டு ஆயரால் பரீட்சைப் பெறுபேறு அறிவிக்கப்பட்டுச் சித்தியடைந்தோர்க்கு மறைக்கல்விப் படங்கள் அன்பளிப்புச் செய்யப்படுகின்றன. சிலர் ஏனைய பாடங்கள் படிக்க நேரமில்லை எனக் கூறினாலும் அரசாங்க பரீட்சையில் பலர் சித்தியடைகின்றனர். ஏனைய பாடசாலைகளில் அவ்வாறில்லை. மறைக்கல்விப் படிப்பு அம்மாணவர்களுக்கு விண்ணக ஆசியைப் பெற்றுக் கொடுப்பதாக நம்புகின்றனர். அத்துடன் அடுத்த பரீட்சைக்கு ஆயத்தம் செய்பவர்களும் மறைக்கல்விக்குச் செல்லத் தீர்மானம் எடுத்துள்ளனர். சில நாட்களின் பின் உதவிக் கல்வியதிகாரி வருகை தந்து ஆசிரியர்களைப் பாராட்டிச் சென்றார். அத்துடன் 36 ஆசிரியக் கலாசாலையில் எம் பாடசாலை 5ம் இடத்தையும் வென்னப்புவா 2ம் இடத்தையம் எடுக்கிறது எனத் தமது திருப்தியைத் தெரிவித்தார். மைதானத்தில் உள்ள ஒரு திரு இதயச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருபம் எல்லோரின் பக்தியையும் ஈர்த்து நிற்கின்றது. ஒவ்வொரு மாலையும் படிப்பதற்கு முன் சுருபத்தின் முன்னே செபிப்பார்கள். ஏதாவது பிழை செய்தால் எல்லோரும் முழந்தாளில் இருந்து ஒரு பாட்டுப் பாடுவார்கள். நமது நல்ல பிதா மூலம் திரு இதய நாதரிடம் பெற்றுக் கொண்ட நன்மைகளுக்கு நன்றி கூறுகின்றோம்.

ஆவணி மாதத்தில் ஒரு படிப்பு முடிந்த பிள்ளை எம் ஆலயத்தில் திருமுழுக்குப் பெற்று ஆவணி 15ந் திகதி முதல் நன்மையும் பெற்றா, அவள் தன் நல் எண்ணத்தைப் பெற்றோருக்குத் தெரிவித்தபோது படிப்பு முடியுமுன் மதம் மாறவேண்டாமென்று சொன்னார்கள். அவள் பணிவோடு பொறுத்திருந்து தனது 27 வயதில் பெற்றோருக்கு ஒன்றும் சொல்லாமல் திரு முழுக்குப் பெற்றாள். பெற்றோர் சிலவேளை வேறு காரணம் கூறலாம் என நினைத்தாள். தற்போது இங்கே தங்கியிருந்து படிப்பைத் தொடர்கின்றாள். முதலில் கிறிஸ்தவ சமயத்தில் விருப்பமில்லாவிடினும் இறையருளின் துணையால் தானும் மனமாறித் தன் 3 நண்பிகளுக்கும் உதவுகின்றாள். அவர்களில் ஒருவர் ராணி வீட்டில் துன்புறுத்தப்படுகின்றாள். எனினும் தன் விருப்பத்தில் நிலைத்திருந்து இடைக்கிடை எம்மை சந்தித்துச் செல்கின்றா.

3 வருடங்களாக எம்முடன் இருந்த திரேசா எனும் அநாதைச் சிறுமி எம்மை விட்டுச் சென்று விட்டாள். அவள் தாயை இழந்த பயபக்தியுடைய பிள்ளை. தனது கால் நோவுக்கு மருந்து கட்டும் போதும் அந்த நோவைத் தன் தாய் உத்தரிப்பு ஸ்தலத்தில் இருந்தாலும் என்று அவவுக்காக ஒப்புக்கொடுப்பாள். கண்ணீருடன் சின்ன இயேசுவே, இதை என் அம்மாவுக்காக ஒப்புக் கொடுக்கிறேன், என்றுசொல்லுவாள்.

ஒருநாள் சகோதரி கொடுத்த கசப்பான மருந்தைக் குடிக்கக் காது வருத்தம் உடைய 7 வயதுச் சிறுமி விரும்பவில்லை. தடியைக் காட்ட வேண்டியிருந்தது. சகோதரிகள் ஸ்பெயின் தேசத்தின் துன்பத்தைக் கூறித் தீயோர் மனமாற்றம் அடையவும், ஏழைகள் ஆறுதல் பெறவும் தியாகம் செய்யும்படி சொன்னபோது எல்லோரும் சம்மதித்து இயேசுவுக்காகக் குடித்தனர். இச்சிறுமிகளைப் பராமரிக்கும் சகோதரி புண்ணியச் செயல்களைச் செய்யும்போது அதை எழுதி மேசையில் வைக்கும் பெட்டியில் போடும்படி கூறியிருந்தா. "அதில் காணப்பட்டவை", "என் நண்பியுடன் கோபித்தேன். இயேசுவை மகிழ்விக்க அவளிடம் சென்று மன்னிப்புக் கேட்டேன்." "என் முழங்காலில் நோவு இருந்தது. இயேசுவை நினைத்து முழங்காலில் இருந்து செபித்தேன்." தாகமாயிருந்தும் உடனே நீர் குடிக்கவில்லை", சோற்றை எறிய விரும்பினேன். ஆனால் முழுவதையும் சாப்பிட்டேன்." "எனக்கு விருப்பமில்லாதவர்களுடன் அன்புடன் கதைத்தேன்." இவ்வாறு இச்சிறுமிகள் இயேசுவுக்காக ஒறுத்தல் செய்யக் கற்றுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயிலிட்டி ஸ்தாபகம்

பருத்தத்துறை வீதியில் இளவாலையிலிருந்து 6 மைல் தூரத்தில் கடலருகில் தூய காற்றுள்ளஇடத்தில் அமைந்துள்ள கிராமம் மயிலிட்டி. அங்கு அரசினர் வைத்தியசாலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பல வருடங்களாகப் பாடசாலையைத் தி.கு சகோதரிகளிடம் கொடுக்க விரும்பியும், இறுதியாக 1931ம் ஆண்டு தை மாதம் 2ந் திகதியில்தான் மடத்துத் தலைவியும் மாறி லியோனித் தாயாரும் 3 சகோதரிகளும் அங்கு சென்றனர். அங்கு சென்றபோது ஒரு ஏமாற்றம் காத்திருந்தது. பங்குத்தந்தை மாஜறி (Fr. Majari) பணியின் நிமித்தம் தூரஇடத்திற்குச் சென்றுவிட்டார். மக்கள் சகோதரிகளை வரவேற்றனர். இடங்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேள வாத்தியங்களோடு வரவேற்று உபசரிப்பும் செய்தனர். சகோதரிகள் புதுமடத்தில் தங்க, தாயார்மார் இருவரும் இளவாலைக்குத் திரும்பினர். மயிலிட்டி மக்கள் மடத்தை விட்டு அகலாது சகோதரிகளைப் பார்த்த வண்ணம் நின்றனர். சிலர் முன்னொருபோதும் இவர்களைப் பார்க்காதபடியால் இவர்கள் செய்வதைப் பார்த்தவண்ணம் நின்றனர்.

மயிலிட்டிப் பாடசாலையில் சமூக சம்பந்தமான பிரச்சனையில் மக்கள் இரண்டாகப் பிரிந்து நின்றனர். பழைய அதிபர் உயர் சமூகத்திற்குச் சார்பாக இருந்தார். அரசினர் எல்லோரையும் பாகுபாடின்றிக் கவனிக்கும்படி கூறியது, எல்லா மாணவர்களும் ஆசனங்களில் அமர அனுமதி கிடைத்தது. ஆசிரியர் அதைக் கவனத்துக்கு எடுக்காதபடியால் மக்கள் முறையிட்டனர். எனவே அரசாங்கம் 6மாத காலமாகப் பாடசாலையைப் பொறுப்பெடுக்காமல் விட்டுவிட்டது. சகோதரிகளும் இதில் தலையிடவில்லை. ஆயர் தன் பொறுப்பில் எடுத்து நடாத்தினாலும் குழப்பத்தைச் சகோதரிகள் அறிந்திருந்தனர். தை மாதம் 7ம் திகதி பாடசாலைச் சகோதரிகள் தலைமையில் ஆரம்பமானது.

முதல் நாளில் பலர் சமூகமளித்தனர். ஆசிரியர் அரச முறையைப் பின்பற்றினர். பெற்றோர் வந்தபோது சகோதரிகள் விளக்கமளித்தனர். எனவே எல்லாம் ஒழுங்காக நடைபெற்றது. பங்குக் குருவும் தன் பங்கில் சகோதரிகள் இருப்பதால் மகிழ்ச்சியடைந்தார். சில வருடங்களால் நன்மைகளைக் காண முடியும். ஆயர், சகோதரிகளின் வருகையினால் மறைஆசிரியர்களை ஆனுப்பத் தேவையில்லை. சகோதரிகளே, சிறுவர்களின் ஒப்புரவு அருட்சாதனம், முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்தனர். மக்கள் அவர்களில் நம்பிக்கை வைத்தனர். புதுமைகளும் நடைபெற்றன.

மயிலிட்டி மக்கள் மீனவ சமுதாயத்தினர். பல காலமாக மீன்பாடு குறைவாக இருந்தது. எனவே வறுமையால் வாடினர். சகோதரிகளிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபிக்கும்படி கேட்டுக் கொண்டனர். சகோதரிகள் மாணவர்களையும் அழைத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்று முழந்தாளில் இருந்து உருக்கமாகச் செபித்தனர். மாலையில் அதிக மீன்கள் பிடிபட்டன. தொடர்ந்தும் மீன்கள் கிடைத்து வந்தன. மீன்பிடிப்பவர்களின் வலது கையில் புதுமை வரவணிக்கம் கட்டப்பட்டிருந்தது. அதனுடன் தம் படகில் தண்டு வலித்துப் பிடித்தனர். சகோதரிகளின் செப உதவிக்கு நன்றியாக மடத்திற்குத் தொடர்ந்து மீன்கள் கொடுத்து வந்தனர்.

சகோதரிகளுக்கு உதவியாக 2இளம் பிள்ளைகள், 140 சிறுவர்களின் படிப்பித்தலுக்கு உதவியாக வந்தனர். வருடாந்த பரீட்சையில் பாடசாலை அதிகாரி, இவர்களின் முன்னேற்றத்தைப் பாராட்டி நல்ல அறிக்கை சமர்ப்பித்தார். அத்துடன் பல ஆன்ம நலன்களும் கிடைக்கப் பெற்றன. அறியாமையிலுள்ள கிறிஸ்தவர்கள் பலர் சகோதரிகளின் அறிவுரைகளைக் கேட்டனர். வேறு திருவிழாக்களுக்கும் சென்று வந்ததால், கிறிஸ்தவ வழிபாட்டுக்கு வரமாட்டார்கள். பங்குத்தந்தையும் விவேகத்துடன் ஒன்றும் பேசாது விட்டிருந்தார். ஒரு சனிக்கிழமை குருவானவர் தன் வேலையில் மூழ்கியிருந்தபோது ஒரு மூதாட்டி ஒப்புரவு அருட்சாதனத் தட்டியை அணுகினாள். குருவானவர் அவவைச் சகோதரிகளிடம் அனுப்பிவிட அவளும் குருபோன்று இவர்களுக்கும் அதிகாரம் உண்டென நினைத்து என் சகோதரியே, ஒப்புரவு அருட்சாதனத்திற்கு வருகின்றேன் என்று வந்தவுடன் கூறினாள். குருவிடம் செல்ல வேண்டுமென, இல்லை. அவரே இங்கு என்னை அனுப்பினார், என்னைக் கேட்க அவருக்கு நேரமில்லை என்றாள். பின்பு தன் பாவ அறிக்கையை ஆரம்பிக்க, சகோதரி இடைமறித்து, கிறிஸ்தவக் கடமைகளைக் கூறி குருவிடம் செல்லும்படி ஆலோசனை கூறினா. அவள் திரும்பி வந்தபோது நல்ல ஆயத்தம் செய்யப்பட்டு பாவமன்னிப்பு பெற ஆயத்தமாக இருந்ததைக் குரு அவதானித்தார்.

புதிதாகக் கட்டப்பட்ட மடம் 4 பெரிய அறைகளையும், சாப்பாட்டறை, பொருட்களறை, பெரிய சமயலறையையும் கொண்டுள்ளது. திருப்பலி தினமும் ஆலயத்தில் நடைபெறும். பங்குக்குரு அங்கிருந்து கொண்டு சிறிய பணித் தளங்களுக்கும் சென்று வருவார். அவ்வேளைகளில் திருப்பலிக்காகச் சகோதரிகள் ஒன்று, இரண்டு மைல்களுக்குச் சென்று வரவேண்டும். தூரத்தில் உள்ள கிராமங்களுக்குச் செல்லும்போது திருப்பலி இருக்காது. எனவே, மடத்தில் நற்கருணை வைப்பதற்கு ஆயரிடம் ஒழுங்கு செய்வதாகக் குருவானவர் கூறியுள்ளார். அங்கு ஒரு பீடம் வைக்க முடியும். இந்த எண்ணங்கள் சகோதரிகளின் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. இயேசுவிடம் ஊக்கம் பெற்று எல்லா வீரமான தியாகங்களையும் செய்ய சக்தி பெறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில வகுப்புகளை நடாத்துவதற்கு இடம் போதாமையால் வேறொரு கட்டிடம் தேவையாக இருந்தது. பங்குனி மாதம் 3ந் திகதி யாழ் - ஆயர் கியோமார். ஆண்டகையால் முதற் கல் அடிநாட்டப்பட்டுக் கார்த்திகை 21ந் திகதி கட்டிமுடிக்கப்பட்டது. எனவே திறப்பு விழா ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. கட்டிடத்திற்கு உதவி செய்தேன். பழைய மாணவர்கள் பல இடங்களிலும் இருந்து வந்தனர். செய்த ஆயத்தங்கள், அலங்காரங்களை மழை வந்து குழப்புமோ எனப் பயந்த போது அநாதைச் சிறார்களின் செபத்தை இறைவன் கேட்டார். கார் மேகம் கலைந்தது, ''மரியாள் புன்னகை பூர்க்கின்றாள்'' என்று மகிழ்ச்சியடைந்தோம். சிற்றாலயத்தின் கதவு அலங்கார வளைவு போடப்பட்டு அதனூடாகப் புதிய கட்டிடத்திற்குச் செல்லும் வழி சமைக்கப்பட்டது. செல்லும் வழியில் பசுமையான மரங்களும் மலர்களும் காணப்பட்டன.

5 மணியளவில் கியோமார் ஆண்டகை திருப்பலி உடையணிந்து நிற்க, பல குருக்கள் சேப்பிளிஸ் அணிந்து ஆலயத்துள் சென்று ''வேனிகிறே ஆற்றோர்'' என்னும் தூய ஆவியின் கீதம் இசைத்தனர். பின்பு பவனியாகப் பக்திக் கீதங்கள் இசைத்த வண்ணம் சென்றனர். அநாதைச் சிறுமிகள் வெண்ணுடையணிந்து முன்னேயும் அதைத் தொடர்ந்து ஆங்கில வகுப்பு மாணவர்கள் குழுச் சகோதரிகள், மக்கள் திரள் - சென்றனர்.

ஆயர் பாடசாலையை ஆசீர்வதித்த போது பிள்ளைகள் ஒருபக்கமும் சனத்திரள் ஒரு பக்கமும் நின்று ஆயரின் செபத்தில் பங்குபற்றினர். வழிபாடுகள் முடிந்ததும் பழைய மாணவர்களால் தேநீர் விருந்துபசாரம் நடாத்தப்பட்டது. அதைத்தொடர்ந்து பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகள் எளிமையானதாகவும் பார்வையாளரின் கரகோஷத்துடனும் நிறைவெய்தியது. ஆயரின் கரங்களில் இருந்து பரிசுப் பொருட்களையும் பெற்றனர். வாணவேடிக்கையின் பின் வழக்கறிஞரும், கட்டிட வேலைக்கு பொறுப்பானவருமான M. V. ஜோசெவ்தன் உணர்வுகளைக் குழுச்சகோதரிகள் மட்டில் எடுத்தியம்பினார். 70 வருடங்களாகத் திருக்குடும்பச் சகோதரிகள் யாழ் மக்களுக்குப் பணிபுரிகின்றனர். இக்கட்டிடம் அவர்களின் ஆர்வம், தியாகத்தின் அடையாளம் என்றார். ஆயர்கொடுத்த ஒத்துழைப்பிற்கும் நன்றி கூறினார். அதைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மத வழக்கறிஞரான M. R. R. நல்லையா உரையாற்றினார். எல்லாப்பிள்ளைகளுக்கும் நல்ல கல்வி புகட்டும் சகோதரிகளை எல்லாமதத்தவர்களும் பாராட்டுகின்றனர். பிள்ளைகள் ஆசிரியர்களுடன் கூடச் சேர்ந்திருப்பதால் பெற்றோர்களுக்கு ஆச்சரியம் ஏற்படுகிறது என்றார்.

அதைத் தொடர்ந்து உரையாற்றிய வழக்கறிஞரான M. J. H. வன்னியசிங்கம் தன் அனுபவங்களை எடுத்தியம்பினார். சகோதரிகளின் ஆரம்ப வகுப்பில் படித்து விட்டுப் புனித. பத்திரிசியார். கல்லூரிக்குச் செல்லும் போது தனக்குக் கவலை ஏற்பட்டது என்றார். ஆயர் தன் உரையில் சகோதரிகளையும் அவர்கள் பணிகளையும் புகழ்ந்து பாராட்டி இப்பணி நகரில் உள்ள இளைஞர்களுக்கும், யாழ் மறை மாவட்டத்திற்கும் பெரும் உதவிபுரியும் என்றார். அத்துடன் இலங்கைத் தலைவிக்கும், அவவின் ஊடாகச் சபைத்தலைவிக்கும், அவவின் ஆலோசகர்களுக்கும், அவர்கள் இத்தீவிலே கத்தோலிக்க கல்விக்குக் காட்டும் அக்கறையின் சின்னமாக இக்கட்டிடம் விளங்கும் என்று கூறி நன்றியைத் தெரிவித்தார். இறுதியாக யாழ் அதிகாரி திரு. டைசோன் (Deyson) என்பவருக்கும், பங்குபற்றியோர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்தார். அவர்களின் பிரசன்னம் சகோதரிகளுக்கு உண்மையான நம்பிக்கையை ஊட்டுவதாகக் கூறினார்.

"God Save the king" என்னும் கீதம் 3 குரலில் பாடப்பட்டு இந்த மாலை வேளையை ஆயர் நிறைவு செய்தார். 12 வகுப்புகளைக் கொண்ட 400 பிள்ளைகள் படிக்கக்கூடிய இக்கட்டிடம் தேவபராமரிப்பு உதவியுடன் முடிவு பெற்றது. பல கடன் உதவிகள் பெறப்பட்டன. பலர் தம் தியாகத்தைக் காட்டினாலும் பொருளாதார வீழ்ச்சியினால் பெரும் தொகையைத் தரமுடியவில்லை. எனவே மாணவர்கள் வளத்தைக் கூட்டுவதற்காகக் கலைநிகழ்ச்சிகள் செய்தார்கள். அதே போன்று வேறுபாடசாலைகளும் ஒழுங்கு செய்து தம் காணிக்கையை எமக்குத் தந்தனர். ஒவ்வொரு பாடசாலையிலும் சில அநாதைப் பிள்ளைகளும் அடங்குவர். ஒரு தமிழ் நாடகத்தை அரங்கேற்றி 3 நாட்கள் சிறப்பாக நடித்துப் பார்வையாளரைக் கவர்ந்தனர்.

மார்கழி மாதத்தில் பழைய ஆங்கில வகுப்பில் ஒரு Fancy விற்பனை ஒழுங்கு செய்தோம். மாலைகளினால் ஒவ்வொரு பிரிவையும் அழகுறப் பிரித்தோம். யாழ் - ஆளுநரின் மனைவி திருமதி. டைசோன் 1ம் நாள் விற்பனையைத் திறந்து வைத்தார். மடத்துத் தலைவி அவவை வரவேற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனை நிலையத்துக்கு அழைத்துச் செல்ல அங்கே அருட்தந்தை P. மத்தேயு அ. ம. தி. அடிகளார் நல்வரவு கூறினார். அந்நேரத்தில் மாணவிதலைவியால் ஒரு பூச் செண்டு கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டா. திருமதி. டைசோன் இந்த விற்பனையில் பங்குபற்றுவதையிட்டுத் தனது மகிழ்ச்சியையும், கல்விக்காகப் பாடசாலை ஆற்றும் அழகிய பணிகளையும் மகிழ்ந்து கூறி, ஆரம்பித்து வைத்தார். பின்பு விற்பனைக்கூடத்துள் சென்று சில பொருட்களை வாங்கியபின் வெளியே சென்று விட்டார்.

2ம் நாள் திருமதி நல்லையா விற்பனையை ஆரம்பித்து வைத்தார். தாராள உள்ளத்தோடு விற்பனை செய்வோருடன் ஒன்றித்திருந்தா. மேடை 3 பிரிவாகப்பிரிக்கப்பட்டு பல தையல் வேலைகள் வைக்கப்பட்டிருந்தன. கீழே பூக்கள், அத்துடன் பழங்கள், மரக்கறிகள் இருந்தபடியால் நகரில் இருந்த பலர் அங்கு கொள்வனவு செய்தனர். அடுத்த படியில் பிள்ளைகளின் விளையாட்டுப் பொருட்கள் இருந்தன. இது பிள்ளைகளைக் கவர்ந்ததால் அவர்களை மகிழ்ச்சியான அந்த இடத்திற்கு அழைத்துச் சென்று, தம் பொருட்களை வாங்கச் செய்தனர். சாப்பாட்டறையும் பலரைக் கவர்ந்தன. இவ்வாறாக எல்லாருடைய தேவைகளையும் பூர்த்தி செய்ததால் பலர் மடத்திற்கு வந்தனர்.

இந்த மகிழ்ச்சியான விழா தேசிய கீதத்துடன் முடிவு பெற்றது. 1932ம் வருடத்தில் ஆசிரியர்கள் கலைநிகழ்ச்சிகள், விற்பனையை ஒழுங்கு செய்ததால் இருமடங்காக உழைத்தனர். இவற்றால் இறைவனுக்கு மகிமையும், ஆன்மாக்களுக்கு மீட்பும், சபைக்கு மதிப்பும் ஏற்பட்டன. இத்தியாக சேவைக்கு ஈடாக நல்ல இறைவன் கார்த்திகை மாதத்தில் நடந்த பரீட்சையில் நல்ல சித்தியும் கிடைக்கச் செய்தார். சில நாட்களின் பின் 3 பரீட்சை அதிகாரிகள் கையொப்பம் இட்ட பாராட்டு அறிக்கை கிடைக்கப் பெற்றது. ஆடிமாதத்தில் பியானோப் பரீட்சையும் திருப்தி அளித்தது. பலர் சித்தியடைந்தனர். சமயப் பரீட்சையிலும் மாணவர் சித்தியடைந்தனர். தமிழ் பாடசாலைப் பிள்ளைகள் மாவட்டத்தில் முதலாவதாகத் திகழ்ந்தனர். இதனால் கியோமார் ஆண்டகை மகிழ்ச்சியடைந்தார்.

விழாவின் மறுநாள் எம் சிற்றாலயத்தில் ஆயர் திருப்பலி நிறைவேற்றினார். மாலையில் எம் அநாதைச் சிறுமிகளின் கலைநிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தார். இறுதியில் ஒரு தேநீர் விருந்துபசாரம் ஆயரின் தாராள உள்ளத்தால் ஒருங்கு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவாலை

இளவாலைக் குழுவானது ஒரு வருடமாக தம் தலைவியின் நோயினால் துன்புற்றிருந்த வேளையில், 1932ம் வருடத்தொடக்கத்தில் தியோபான் தாயாரின் வருகையால் மகிழ்ச்சி அடைந்தது. இங்கு வந்ததும் ஒரு பிள்ளையின் திருமுழுக்கு முதல் நன்மையில் பங்குபற்றிக் கொண்டா. அந்தப் பிள்ளை 2 வருடங்களாக இந்த அருளைப்பெற விரும்பியிருந்தா. ஆனால் தாய் இதை விரும்பவில்லை. சிறுமி மறைக்கல்வியை ஆர்வத்துடன் படித்து செபதபம் செய்தாள். அத்துடன் பரீசில் உள்ள எம் சகோதரிகளின் மாணவர்கள் அவளின் ஞானப் பெற்றோராக இருந்தனர். புனித திரேசாளின் பாதுகாவலில் சிறுமியை ஒப்படைத்தனர். இருபக்கமும் தொடர்புகள் இருந்தன.

சிறுமியின் தந்தை கடுமையான நோய் வாய்ப்பட்டார். தன் மகளையும், 4 வயது சிறுவனையும் திருமுழுக்குப்பெற, தன் மனைவியிடம் இருந்து அனுமதியை எழுதிப் பெற்றுக் கொண்டார். இதற்குப் பங்குக் குருவும் இரு சாட்சிகளும் சமுகமாயிருந்தனர். இச் செய்தியைத் தாய் சகோதரிகளுக்கும் தன் சிறுமி திருஞானபதிக்கும் அறிவித்தாள்.

சிறுமி ''மரியதிரேசா'' என்னும் பெயருடன் திருமுழுக்குப் பெற்றாள். அவளின் தந்தை உடல் நலமுற்றதும் தன் மகனைக் குருக்களிடம் அழைத்துச் சென்று தானும் திருமுழுக்குப் பெற்றுப் பின் மகனை யாழ் பத்திரிசியார் கல்லூரியில் விட்டுச் சென்றார். எனவே சிறுமி தனது தாயின் மனமாற்றத்தையும் விரும்பினாள். ஆனால் 15 நாட்களுக்குப்பிறகு தாயும் தந்தையும் கொல்லப்பட்ட செய்தி அவளுக்குக் கிடைத்தது. எனவே சிறுவன் ஒப்படைக்கப்பட்ட அ. ம. தி. குரு இவர்களுக்குப் பாதுகாவலராகப் பொறுப்பேற்றார். மரியதிரேசாவும், அவளின் தம்பியும் கத்தோலிக்க பாடசாலைகளில் தம் படிப்பைத் தொடர்ந்தனர். 1932ம் ஆண்டில் மேலும் 2 போடிங் பிள்ளைகள் வேறு பல வெளிப்பிள்ளைகளுடன் முதல் முறையாக எம் சுதேசச் சகோதரிகளால் முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்யப்பட்டனர்.

எம் சகோதரிகள் எங்கும் ஆர்வத்துடன் பணிபுரியும் போது அமலமரித்தியாகிகள் சகோதரிகளின் ஒத்துழைப்பைப் பாராட்டுகின்றனர். பாடசாலை அதிகாரிகளும் இவர்களது பணியில் திருப்தி அடைந்தனர். ''சகோதரிகள் மட்டுமே இவ்வாறு பணிபுரிகின்றனர். ஏன் பொது நிலையினர் தம் பணிகளை இவர்கள் போல் செய்வதில்லை'' என அவர்களில் ஒருவர் கூறினார். எனவே நல்ல இறைவன் இவர்கள் பணிகளை ஆசீர்வதிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவாலையில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 11 பேர் பரீட்சைக்குத் தோற்றி ஒருவர் மட்டும் சித்தியடையவில்லை. சென்ற வருடம் 5ம் இடத்தில் இருந்த இக்கல்லூரி இவ்வருடம் முதலாம் இடத்தில் உள்ளது. பாடசாலை அதிகாரிகள் இவர்களின் இடவசதி பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். மற்ற போடிங் பிள்ளைகளுடன் கலந்துள்ளனர். 21 பிள்ளைகளுக்கே இடவசதி உண்டு.

தற்போது தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தில் 30 மாணவிகளை வைத்திருக்க அரசாங்கம் உத்தரவு கொடுத்துள்ளது. கியோமார் ஆண்டகை ஐப்பசி மாதக் கடைசியில் இக்கட்டிடத்தை ஆசீர்வதித்தார். சிறிதாக மழை பெய்து கொண்டிருந்த போதும், ஆயர் தன் பிரதிநிதி குருக்களுடன் வருகை தந்து ஆலயத்துள் சென்று தூய ஆவியை வேண்டி ''வேனிக்கிறேயாத்தோர்'' பாடல் இசைத்தனர். பின்பு தேவதாயின் பாதுகாவலை வேண்டி ''ஆவே மாறிஸ்ரெலா'' கீதம் பாடினர். மழைகாரணமாக வெளியில் அலங்கரிப்புக்கள் இடம் பெறவில்லை.

புதிய கட்டிடம் ஆசீர்வதிக்கப்பட்டது. உள்ளே ஆயருக்கு அழகான ஆசனம் தயாரிக்கப்பட்டு சிறிய நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆங்கில வகுப்பு மாணவர்களால் வரவேற்புரையும் சுதேச ஆசிரியர்களால் ஒரு குழுப்பாடலும், தமிழ் வகுப்பு பிள்ளைகளால் ஓர் உரையாடலும் நடைபெற்றன. ஆயர் இளவாலைப் பணிகளில் காட்டும் அன்பான கரிசனைக்கு சகோதரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பில் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை மாணவியால் நன்றி கூறப்பட்டது.

ஆயர் பதில் மொழியாக இவ் வகையான விழாக்களுக்குத் தலைமை தாங்குவதில் தான் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். இன்றுவரை பணியாற்றிய ஆசிரியர்களுக்கும், அவர்களை ஊக்கமூட்டுவதாகவும், ஆயரின் உரை அமைந்துள்ளது. ஆசிரியர்களை உருவாக்குவது மட்டுமன்றி கத்தோலிக்க கல்விபுகட்டக் கூடிய தங்கள் மாதிரிகைகளால், தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளின் ஆன்மாக்களை உருவாக்கி நித்திய வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டும் என்று அறிவுரை கூறினார்.

மாணவர்களுக்கு உரையாற்றுகையில் இலவசமாக உங்களுக்குப் படிப்பிப்பதன் நோக்கம் பரீட்சையில் சித்தி பெற்றுச் சான்றிதழ் பெறுவதற்காக மட்டுமல்ல, எதிர்காலத்தில் உங்களிடம் ஒப்படைக்கப்படும் பிள்ளைகளின் ஆன்ம நலனில் அக்கறை கொள்வதற்காகவே என்றார். எனவே கத்தோலிக்க கல்வியை நன்கு பயின்று அருளைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டஸ்தாந்து இந்து மத மாணவர்களும் கத்தோலிக்க மாணவர்கள் போன்று அருளைப் பெற்றுக் கொண்டனர். ஒரு புரட்டஸ்தாந்த மாணவி திருமுழுக்குப் பெறவிரும்புகிறா. ஓர் இந்து மாணவி மரியதிரேசாவின் திருமுழுக்கு, முதல் நன்மையால் தொடப்பட்டுள்ளா. தன் வீட்டுக்கு எழுதிய கடிதத்தில் கத்தோலிக்க வழிபாடுகள் நல்லது எனவும், இந்துக் கோவிலுக்குத் தான் செலலமாட்டேன் எனவும் கூறினாள். இக்கடிதம் அவள் குடும்பத்தைச் சென்றடையவில்லை. சென்றிருந்தால் பெரிய புலம்பல் கேட்டிருக்கும்.

எனினும் கடிதம் அவள் ஆன்மாவின் தெய்வீக சக்தியை எடுத்தியம்புகின்றது. புரட்டாதி மாதத்தில் கல்லூரிக்குச் சென்றவர்களில் பலர் சகோதரிகளை ஒரு போதும் காணாததால் பலகேள்விகளைக் கேட்டனர். பின்பு தங்கள் அறியாமையை உணர்ந்து சிரித்தனர். இப்புனிதமான திருமறையில் பற்றுக் கொண்டனர். அவர்களுக்கு ஒரு படத்தைக் கொடுக்கும் போது கத்தோலிக்க பிள்ளைகளை அணுகி எங்கே இயேசு? எங்கே மாதா? எனக் கேட்டனர். இது அவர்களுக்குத் திருப்தி அளித்தது.

தினமும் திருஇருதய சுரூவத்தின் முன் தம் நண்பிகளுடன் சேர்ந்து பாட்டிசைக்கின்றனர். திருஇருதயமானது தினமும் அவர்களைக் கவர்ந்து நல்ல வாசலுக்கு அழைத்துச் செல்வதாக! இன்னும் பலர் நெற்றியில் ''திருநீறு'' பூசியவர்களாகவே உள்ளனர்.

வழமை போல் மார்கழி 10 - 18ந் திகதிகளில் சுதேச சகோதரிகளுக்கு வருடாந்த தியான ஒடுக்கம் நடைபெற்றது. சிறிய குழுக்களில் வாழ்ந்த 95 பேர் மடத்துத் தலைவியின் கீழ் தம் தியானத்தைச் செய்தனர். இறுதி நாள் வழிபாட்டுக்கு ஆயர் சமுகமளித்தார். அதற்கு முதல் நாள் மாறி லியோனித்தாயார் 3 ஆயத்த கன்னியர்க்கு துறவியர் உடுப்புக் கொடுத்தா. 3 நவகன்னியர் முதல் வாக்குத் தத்தம் செய்தனர். மற்றைய சகோதரிகள் தம்மைப் புதுப்பித்துக் கொண்டு மறுநாள் தாம் பரிசுத்த அமைச்சலால் செல்லும் இடங்களுக்கு நல்ல இறைவனிடமிருந்து ஊக்கம் பெற்றுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை

1933, 1934ம் ஆண்டுகளில் இறைவன் இலங்கையில் பணிபுரியும் சகோதரிகளை ஆசீர்வதித்து அவர்கள் பணிகள் மேலும் 2 இடங்களுக்குப்பரவச் செய்தார். டலுகம, களுத்துறை ஆகிய மடங்களே இவையாகும். இந்த 2 மடங்களின் ஆரம்பத்தைக் கூற முன்பு ஏனைய மடங்களின் வருடாந்த அறிக்கைகளைச் சுருக்கமாகத் தருகின்றோம்.

## யாழ்ப்பாணம்

பணிமிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. ஆங்கிலப் பாடசாலையின் 12 வகுப்புக்களும், மாணவிகளின் பரீட்சைச் சித்திகளும் ஆசிரியர்களின் முயற்சியை எடுத்துக் காட்டுகின்றன. புரட்டஸ்தாந்து, இந்து மத அல்லது புத்த மத உயர் அதிகாரிகள் இதற்குச் சான்று பகர்ந்துள்ளனர். ''திருக்குடும்பச் சகோதரிகள் யாழ்ப்பாணத்தில் மகத்தான பணியைத் தியாகத்துடன் ஆற்றிவருகின்றனர். மாணவர்கள் தம் உணர்வுகளை எடுத்தியம்பினால் இச் சகோதரிகள் வெற்றியின் நன்றியின் கீதங்களைக் கேட்பார்கள். நல்ல இறைவன் எல்லாவற்றையும் அறிவார். அவருக்கே எல்லா வேலையும் செய்யப்பட்டன. அவரே அவர்களின் வெகுமதியாவார்.

குழுவின் நன்மைத் தனம் நிறைந்த தந்தையாக யாழ் ஆயர் கியோமார் ஆண்டவர் இருந்தார். அவர் ''கற்பித்தலின் கடமைகள்'' பற்றி ஆசிரியர்களுக்குப் பல கருத்துரைகள் வழங்கினார். 'போடிங்'கின் அருகில் அமைந்துள்ள அநாதை இல்லத்தில் 64 பிள்ளைகள் மகிழ்வுடன் தி. கு. சகோதரிகளின் தாய்மையான பாதுகாப்பில் வாழ்கின்றனர். வைகாசி 31ந் திகதி சகல வரப்பிரசாத மாதா திருநாளில் 12 பிள்ளைகள் முதல் நன்மை பெற்று இயேசுவை உள்ளத்தில் வரவேற்றனர். சிலகிழமைகளின் பின்னர் ஆங்கில பாடசாலையில் 24 மாணவர்கள் புதுநன்மையில் பங்கு கொண்டனர்.

ஆவணி 8ந் திகதி யாழ் சகோதரிகளின் தலைமையில் உள்ள பாடசாலைகளின் மாணவர்களின் வருடாந்த தியானம் புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. அ. ம. தி. குருக்கள் இப்பணியைச் செய்தனர். அங்கு பிள்ளைகள் ஊர்வலமாக வந்தது புரட்டஸ்தாந்து, முஸ்லிம், புத்த மக்களுக்கு நற்செய்தியைப் பறைசாற்றியது. ஆயர் இறுதி நாளில் திருப்பலி நிறைவேற்றி நற்கருணை எழுந்தேற்றம் செய்தார். நாளின் இறுதியில் நற்கருணை ஆசீர் அளிக்க ஆண்டவன் அருள் பொழிந்தார். 8 நாட்களின் பின் அதே ஆலயத்தில் எம் சுதேச சகோதரிகள் வழிநடத்தும் பாடசாலைகளின் 150 ஆண், பெண், சிறுவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுநன்மை இடம்பெற்றது. 7, 8 வயதுடைய இச்சிறுவர்களின் பெற்றோரும் இதில் பங்குபற்றினர். அத்துடன் பிள்ளைகளுக்கு உறுதிபூசுதலும் வழங்கப்பட்டதால் பெற்றோர் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆலயத்தில் இருந்து வெண்ணுடையணிந்தவர்களான பிள்ளைகள் மடம் நோக்கி வந்தனர். இந்த உடையை வாங்குவதற்கு ஏழைப் பெற்றோர் பல மாதங்கள் பலவற்றைத் தியாகம் செய்து பெற்றனர். பெற்றோர் மகிழ்வுடன் இத்திருவிருந்திற்காக எல்லாம் செய்தனர். மடத்துத் தலைவி சிறுவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கினார்.

1933 சித்திரை 25ந் திகதி செள். கிளமென்ற் குவ்றோ தாயார் தனது 50 ஆவது பொன் யூபிலியைக் கொண்டாடினா. குடும்ப விழாவாக இதுமிளிர்ந்தது. கியோமார் ஆண்டகை தன் பிரதிநிதியுடன் ஆடம்பரமான திருப்பலி நிறைவேற்றினார். விழாவின் நிகழ்ச்சிகளுக்கும் தலைமை தாங்கினார். யூபிலி நாயகி இலங்கையில் தன் நீடிய வேத போதக வாழ்வின் மதிப்பையும் நன்றியையும் பெற்றுக் கொண்டார். 1934ம் ஆண்டு ஆனி 4ந் திகதி செள். பிறக்சீட் தாயார் தனது துறவற வாழ்வின் 60ம் வருட வைர விழாவை நினைவு கூர்ந்தார். இந்த யூபிலி விழாவிற்கு, தெற்கிலுள்ள சிங்கள மடத்துத் தலைவிகள் வடக்கிற்கு வந்தனர். வாழ்த்துக்கள், ஆங்கிலம், பிரெஞ்ஸ், தமிழ், சிங்களத்தில் கவிதை வடிவில் எடுத்துரைக்கப்பட்டன.

ஆயர் அவர்களும், அவரின் குருக்கள், சகோதரிகள், பழைய புதிய மாணவர்கள், சுருங்கக் கூறின் தாயாரை அறிந்தவர்கள், அவரின் ஆர்வத்தைப் பாராட்டுவோர். அவருக்குச் சாட்சியம் கூறினர். மடத்தின் சிற்றாலயம் அலங்கரிக்கப்பட்டு ஆயரால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. நல்ல பிதாவின் இறைவனின் சொந்தக் குமாரத்தியாகத் தன் வாழ்வை இறைவனுக்கும் ஆன்மாக்களுக்கும் கையளித்த அவவை ஆயர் பாராட்டினார். இறைவனுக்கு ஆன்மாக்களைப் பெற்றுக் கொடுக்க ஓயாது வேலை செய்தல், அதற்காகத் தன் விருப்பங்களைத் துறந்து தன் முதல் தலைவிகளுடன் சேர்ந்துழைத்தல், உலகின் எப்பகுதிக்கும் சென்று, எந்நிலையையும் தேர்ந்தெடுத்து, அன்பிற்காக வாழவும் இறக்கவும், பற்றற்ற நிலையில் வாழ்தல். இதுவே இறைவனின் சொந்தக் குமாரத்திகள் என்றார். யூபிலி நாயகியே! இதுவே உங்கள் ''மகிழ்வின் இரகசியம்'' உங்கள் துறவற வாழ்வை நிரந்தர நன்றியின் கீதமாக்குகின்றது. என யூபிலி நாயகிக்கு கூறினார். ''நன்றி'' உங்கள் ஸ்தாபகர் அதைப் பெரும் பேறாகக் கருதியதால் தியானயோகக்கிளையை உருவாக்கி, வாழ்நாள் முழுவதும் தெய்வீக அருளை எல்லாத் திருக்குடும்பச் சகோதரிகளுக்கும் பொழியச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே உங்கள் வாழ்வு இந்த ஆன்மாக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. வயது, நோய் எல்லாவற்றையும் கடந்து, விருத்தியடைய வேண்டியது. இறைசித்தத்தைச் செய்வதன் மூலம் தந்தைக்கு மகிமையும் சேர்க்கவேண்டியது.

எனவே முடிவில்லாத வாழ்வுக்கு நாம் எம்மை இங்கு ஆயத்தம் செய்கிறோம் திருவெளிப்பாட்டு நூலில் பேறுபெற்றோரின் கீதத்தில் இதை வாசிக்கின்றோம். 'ஆமென்' புகழ்ச்சி, மகிமை, ஞானம், நன்றி பெருமை வல்லமை பலம் எல்லாம் எம் இறைவனுக்கே ஊழியுள்ள காலம் எல்லாம் இருப்பதாக! பீடத்தில் பலியாகும் செம்மறியான இறைவனை நோக்கிக் கீதங்கள் இசைக்கத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மாலையில் நற்கருணை ஆசீர்வாதத்தின் பின் இளம் பிள்ளைகளின் வாழ்வை ஆயத்தம் செய்யும் சகோதரியின் விழாக்கொண்டாடப்பட்டது. ஆயரின் அருகே ஆங்கில ஆளுநரின் பிரதிநிதி றொட்றிக்கோ. யாழ் நீதிபதியின் வழக்கறிஞர் யோசெவ் ஆகியோர் அமர்ந்திருந்தனர். யூபிலி நாயகி முன்போல் பணிகள் ஆற்ற முடியாவிடினும் தன் செபம் தியாகத்தின் வழியாகப் பயனுள்ள பணியைத் தொடர்கின்றா என ஆயர் கூறி இந்த நல்ல நாளை நிறைவு செய்தார்.

நாள் இதழும் இந்த நல்ல யூபிலிநாள் பற்றி எழுதியிருந்தது. அதன் சுருக்கத்தைத் தருகின்றோம். 30 வருடப்பணி வாழ்வில் 15 வருடங்கள் இலங்கையின் சபைப்பிரதிநிதியாகவும் இருந்து சுதேசிகளின் சபையைத் திடப்படுத்தவும் பெரிதும் உழைத்து உதவி செய்தா. கஷ்டமான இந்தப்பணிகளுக்கு இவவின் தெளிந்த பார்வையும் நல்ல தியாகம் நிறைந்த தாராளமான உள்ளமும் காரணமாக அமைந்தன. 1857ம் ஆண்டு பிரான்சில் உள்ள மெற்ஸ் (Mets) என்னும் இடத்தில் பிறந்து ''வார்த்தையல்ல செயற்பாடு'' (Res non Verba) என்னும் தாரகை மந்திரத்தை உடைய ஒரு குலத்தைச் சேர்ந்திருந்தா. தனது சமயக்கல்வி மூலம் அப்போஸ்தலிக்க ஆர்வத்தைப் பெற்றுச் சபையில் சேர்ந்து அமலமரித்தியாகிகளின் பணியில் உடனுழைப்பாளியாக அமைதியாகப் பணிபுரிந்தா. எனவே தன் சபைக்குப் பெருமையையும், யாழ் மக்களுக்கும் அவவின் தியாக சேவையையும் எடுத்தியம்ப முடிகின்றது. ஆனி 4ந் திகதி இடம் பெற்ற யூபிலி விழாவில் அவவைப் புகழ்ந்து பாராட்டினர். எனவே இந்தத் திருக்குடும்பச் சகோதரி போல் நேர்மை, தாழ்மை, துடிதுடிப்புள்ள செயலாற்றல் வாய்ந்த பலரை அனுப்பும்படி அறுவடையின் எஜமானை வேண்டுவோம்.

இலங்கையில் முதலாவது சகோதரியாகச் சேர்ந்த சிஸ்ரர். அக்னெஸ் ஸ்ரவுட்டர் கார்த்திகை மாதத்தில் இறந்து விட்டா. அவ தி. கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகளின் போடிங்கில் முதலில் சேர்ந்து நல்ல அறிவுள்ளவளாக இருந்தாள். நன்கு கல்விபயின்று இசையிலும் தேர்ச்சி பெற்றிருந்தாள். தன் வாழ்வை இறைவனுக்கு அளித்து தன்னைப் பயிற்றுவித்த ஆசிரியர்கள் போல் வாழமுயன்றாள். புனித அக்னெஸ் அம்மாளின் முன் மாதிரிகையைப் பின்பற்றினாள். திரிகோணமலை, யாழ்ப்பாணம், பம்பலப்பிட்டியா, சிலாபம், அனுராதபுரம் என்னும் பணித்தளங்களில் தன் திறமை, ஆர்வத்தைக் காட்டினா. கடைசியான பணித்தளத்தில் அவவின் உடற் சக்தி தன் பணியைத் திறம்படச் செய்ய இடமளிக்காதபடியால் அவவின் தலைவிகள் இளவாலைக்கு இடமாற்றம் செய்து ஒய்வு பெறவும், தமிழ் ஆயத்தக் கன்னியர், நவகன்னியருக்கும் முன் மாதிரிகையாக இருக்கவும் அங்கு அனுப்பப்பட்டா. முன்பு இருந்த மடங்களிலும் தலைவிகளுக்குப் பணிந்து மதிப்பளித்து வாழ்ந்தா.

இறைவன் தலைவிகள் மூலம் யாழ்ப்பாணம் வரச் செய்து அவவின் ஆசையை நிறைவேறச் செய்தார். அங்கு தன் மரணத்துக்கு ஆயத்தம் செய்தா. 10 மாதங்கள் அமைதியான சூழலில் ஒரு குழுவில் வாழ்ந்தா. ஒரு நவ கன்னிகை அவவை நன்கு பராமரித்து வந்துள்ளா. திடீரென ஒரு வியாதியால் பீடிக்கப்பட்டு ஒரு குழந்தை நித்திரை செய்வது போன்று அவவின் உயிர் பிரிந்து காணப்பட்டா. அவ இறக்கு முன் ஒரு குருவானவர் மடத்திற்கு வந்த போது தேவாதீனமாக இறுதி அருட்சாதனம் பெற்றுக் கொண்டா.

## இளவாலை

1933ம் ஆண்டில் 3 சகோதரிகள் இறைவனடி சேர்ந்து விட்டனர். அவர்களில் இருவர் தமிழ்ச் சகோதரிகள், மற்றவர் சகோதரி தியோவில் கவாட் (Theophile Haward) என்பவராகும். இவர் பல மாதங்களாகப் பாரிசவாத நோயால் பீடிக்கப்பட்டு இறைவனின் அழைப்புக்காகக் காத்திருந்தா.

1896ம் ஆண்டு இளவாலையில் பணி ஆரம்பித்த போது நல்ல தாய்மை உள்ளத்துடன் பணிபுரிந்து, தமிழ் நவகன்னியரின் உருவாக்கத்தில் பெரும் பங்கு வகித்தா. சித்திரை 8ந் திகதி இறைவன் அவரை அழைத்து விட்டார். மறுநாள் இத்தாயார். செய்த நன்மைகளை நினைவூட்டிப் பங்குத்தந்தை திருப்பலி வேளையில் அறிவித்து, அங்கு சென்று மன்றாடும்படி அறிவித்தார். பிரேத ஊர்வலம் மடத்தில் இருந்து கோவிலுக்கும், பின்பு சேமக்காலைக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. புரட்டஸ்தாந்து, இந்துக்கள், புத்தமதத்தவர், கத்தோலிக்கருடன் சேர்ந்து தமக்கு நன்மை செய்தவருக்கு மதிப்பளித்தனர். தற்போது இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமக்காலையில் 15 தமிழ் சகோதரிகளுடன் முதல் ஐரோப்பிய மிஷனறிச் சகோதரி இளைப்பாறுகின்றா. அவவின் முன் மாதிரிகையான வாழ்வின் மேலான விழுமியங்கள் இப்பெண்களின் வாழ்விலும் நீண்ட காலம் நிலைத்திருப்பதாக!

இத்துன்பங்களுக்கிடையில் நல்ல இறைவன் பாடசாலை வேலைகளையும் எம் சகோதரிகளின் ஆர்வத்தையும் ஆசீர்வதித்துள்ளார். வருடமுடிவில் பரீட்சைக்குச் சமுகமளித்தோர் எல்லோரும் சான்றிதழ் பெற்றனர். ஆசிரிய கல்லூரியும் இலங்கையின் வடபகுதியில் 2ம் நிலையில் இருந்தாலும் மனையியல், குழந்தைக் கல்வியில் முதலிடம் வகிக்கின்றது. கல்வி அதிகாரிகள் வருகை தந்து பாடசாலை ஆசிரியர்களை அடிக்கடி எம் பாடசாலைக்கு அனுப்பிப் பார்த்து வரும்படி கூறுவர். எல்லாப்பாடசாலைகளும் எமது பாடசாலைகள் போலிருந்தால் தனக்கு மகிழ்ச்சியாக இருக்குமென்று ஓர் அதிகாரி கூறினார். எங்கு சகோதரிகள் உள்ளனரோ அங்கு அவர்கள் பணிகள் சிறந்தவை என்று இன்னோர் அதிகாரி கூறினார்.

திருஇருதயப்படம் ஸ்தாபிக்கப்பட்ட வீடுகளை இறைவன் ஆசீர்வதிக்கின்றார். கிறீஸ்து அரசர் பெருவிழாவன்று ஆசிரியர் கல்லூரியிலும், ஆங்கில வகுப்பிலும், படம் ஸ்தாபிக்கப்பட்டது. 4 வருடங்களின் முன்பு தமிழ் பாடசாலையில் ஏற்படுத்தப்பட்டது. இரு பாடசாலைகளிலும் அன்பின் அரசருக்கு அழகான படம் அமைக்கப்பட்டு மாணவர்கள் பவனியாகக் கீதம் இசைத்த வண்ணம் அங்கு ஒன்று கூடுவர். இந்தப் பக்தி முயற்சி புரட்டஸ்தாந்து, இந்து மக்களிடையிலும் ஊற்றெடுத்தது. தம் தேவைகளுக்கு நம்பிக்கையுடன் இரக்கத்தின் அரசரை நாடிச் செல்வார்கள்.

மாலை வழிபாட்டின் பின்பு திருஇருதயஸ்தாபகம் செய்யப்பட்டது. முதல்நாள் மாலை திருமுழுக்குப் பெற்ற ஆசிரிய கல்லூரி புரட்டஸ்தாந்து மாணவி ஒருவர் அன்று காலைத் திருப்பலியில் திருவிருந்தில் பங்குபற்றினா. பல கஷ்டங்கள் மத்தியில் அவவும், அவவின் சகோதரியும் பெற்றோரின் சம்மதத்தைப் பெற்றிருந்தனர்.

இந்த 2 நிகழ்வுகளும் பலமாணவர்களுக்கு ஊக்கத்தைப் பிறப்பித்தன. ஒரு பெண் கடுமையான நோயுற்றிருந்த போது தன் மூத்த சகோதரியின் அனுமதியுடன் திருமுழுக்குப் பெற்றாள். பின்பு உடல் நலம் பெற்றாள். நீர்திருமுழுக்குப் பெறமுன் இறந்திருந்தால் மோட்சம் சென்றிருக்க மாட்டாய் என மூத்த சகோதரி கூறத் தான் ஆசைஞானஸ்நானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறலாம் எனப் பதிலிறுத்தாள் இப்பெண். மேலும் ஒரு பெண் தந்தையின் அனுமதியுடன் புரட்டஸ்தாந்து மதத்தில் இருந்து விடுபட்டுப்பின் போடிங்கில் இருந்து இந்தியாவுக்குத் தாதியாகச் சென்று புரட்டஸ்தாந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டாள். அங்கு வேறொருவருடன் சேர்ந்து கத்தோலிக்க மக்களுக்குப் பணிவிடை செய்தனர். அத்துடன் சாகப் போகும் தருவாயில் இருந்தவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்தனர்.

சில இளம் பெண்கள் துறவற வாழ்வை விரும்பியதால் இளவாலையில் அவர்களுக்கு ஓர் இல்லம் திறக்கப்பட்டதால் மகிழ்ச்சி அடைந்தனர். ஆறு பேருக்கு மேல் அதில் இடமில்லை எல்லா மாணவர்களும் திருஇருதய ஆண்டவர், லூர்துமாதா, நல்ல பிதாவிடம் கேட்டவரங்களைப் பெற்றுக் கொண்டனர். எனவே நன்றியாகப் பல காணிக்கைகள் அளிக்கப்பட்டன. ஞானப் பூச்செண்டு அளிக்கப்பட்டு அவை போர்டோவில் உள்ள நல்ல பிதாவின் கல்லறையில் வைக்கப்பட்டுள்ளன.

முதல் முறையாக லீவு நாட்களில் ஏழைப் பிள்ளைகளுக்கு உடுப்பு வழங்கப்பட்டது. பெற்றோரும் இதற்கு அழைக்கப்பட்டனர். அமதி குருக்கள், தாயார், இவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு எல்லோரும் ஐரோப்பிய நன்கொடையாளர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருந்தனர்.

மயிலிட்டியில் தமிழ் மடம் கடைசியாகக் கட்டப்பட்டது. எம் சகோதரிகள் பாடசாலையைப் பொறுப்பேற்ற பின் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.பிள்ளைகளுடைய நடை, உடை,பாவனைகளிலும், பழக்கவழக்கங்களிலும் முன்னேற்றம் காணப்பட்டது.

வருடாந்த பரீட்சையின்போது ஒரு ஐரோப்பிய சகோதரி இளவாலையில் இருந்த சிறிய மடங்களுக்குப் பரீட்சை அதிகாரியை வரவேற்கச் சென்றார். கார்ச் சத்தம் கேட்டவுடன் மயிலிட்டி மக்கள்தம் வீடுகளின் முன் வந்து மகிழ்வுடன் அவவை வரவேற்றனர். அமதி குருக்கள், தி.கு.கன்னியரின் நிலைமையான, அர்ப்பணிக்கப்பட்டபணியின் விளைவே இந்த வரவேற்பின் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்

1937ம் ஆண்டு தை மாதம் 6ந் திகதி இலங்கைத்தீவில் திருச்சபையின் தலைமைத்துவம் ஸ்தாபித்து 50 ஆவது ஆண்டு நினைவுகூரப்பட்டது. 1887ம் ஆண்டு அகிலியார்டி ஆயர் (Mgr. Agliardi) முதல் இலங்கை - இந்தியாப் பிரதிநிதி 13ம் சிங்கராயர் பாப்புவின் உத்தரவுப்படி பொஞ்சியன் ஆயரைக் கொழும்பு அதிமேற்றிராணியார் ஆகவும், கண்டி, யாழ்ப்பாணத்திற்கு உதவிப்பிரதிநிதியாகவும் நியமித்தார். இத்தீர்மானத்தின்படி அன்பு பெருகும் எனவும், ஆயர் மக்களிடையில் நல்லுறவு வளரும் எனவும், கத்தோலிக்க விசுவாசம் பெருகும் எனவும் பாப்பு எடுத்துரைத்தார்.

இயேசுவின் பிரதிநிதியின் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. இந்த நினைவுதினத்தில் செய்த கணக்கெடுப்பு இதனைக் காட்டுகின்றது. 1887ல் அ. ம. தி. குருக்களின் பணிக்கு 3 சபைச் சகோதரிகள் உதவினார். ஆயர். சமேரியா ஆண்டகை யாழ்ப்பாணத்திற்கு தி. கு. சகோதரிகளை அழைத்தார். 1962ம் ஆண்டு கார்த்திகை 2ந் திகதி 6 சகோதரிகள் முதன்முறையாக வந்தனர். சபைத்தலைவர் இலங்கைக்கு வந்த போது சகோதரிகளின் பணியைப் புகழ்ந்து பாராட்டினார். மாசி 11ந் திகதி யாழ்ப்பாணம் வந்த போது பேராலய மணிகள் அவர் வரவை அறிவித்தன. மாலையில் தி. கு. மடத்திற்கு வருகை தந்த போது சகோதரிகள் அவரை வரவேற்று அவர் உரைக்குச் செவிசாய்த்து, எம் சபையைப் பற்றியும், துன்புறும்ஸ்பானிய சகோதரிகள் பற்றியும் பல கேள்விகள் கேட்டு அறிந்து கொண்டனர்.

மறுநாள் எம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி எம்மடத்தையும் சுற்றிப்பார்வையிட்டார். அன்று சனிக்கிழமையாகையால் எல்லோரும் ''துப்பரவு செய்யும்'' வேலையில் ஈடுபட்டிருந்தனர். சகோதரிகளின் தொழில் முயற்சியைப் பார்த்து வியந்து, எல்லாவற்றிலும் இயேசு, மரி, சூசையின் முன்மாதிரிகையைப் பின்பற்றும்படி கேட்டுக்கொண்டார். 'ஞாயிறுதினத்தில் மீளவும் ''இறைவன் மாத்திரமே'' என்றும் நல்ல பிதாவின் வார்த்தையைக் கருப்பொருளாகக் கொண்டு உரையாற்றினார். ஒவ்வொருவருக்கும் இதன் அவசியத்தையும், மேலும் மறைபோதகப் பணிக்கு தம்மை உட்படுத்தியவர்களுக்கு இது கூடுதலாகத் தேவையென்றும், கூறியபோது அது எம்மை ஊக்குவித்தது.

எமது பிள்ளைகள் அடுத்த வெள்ளிக்கிழமை ஓர் ஆடம்பரமான வரவேற்பு சபைத் தலைவருக்கு ஆயத்தப்படுத்தினர். அவருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர்கியோமார் ஆண்டகையும், அ.ம.தி. குருக்கள் பலரும் வருகை தந்தனர். நேசறிப்பிள்ளைகளின் வரவேற்புக்கீதம் பலத்த கரகோஷத்தைப் பெற்றது. தொடர்ந்து ஆங்கில பாடசாலை மாணவர்கள் ஓர் அழகிய கலைநிகழ்ச்சியை ஒழுங்கு செய்தனர்.

சபைத்தலைவர் அருட்தந்தை T. Laboure லபோறேஉரையாற்றிய போது அவர்களின் அன்பான வரவேற்புக்கு நன்றி கூறினார். மடத்துப் பாடசாலைக் கல்வியை நன்கு பயிலும்படி கூறினார். இது வாழ்க்கையின் சவால்களை மேற்கொள்ள உதவும். பல இடங்கள், காடுகளில் கத்தோலிக்கர் துன்புறுகின்றனர். இறைவனின் உரிமையை பாதுகாத்தலே எமது கடமை. இறைவனுக்கு எம் குடும்பத்திலும் பாடசாலை, சமுகத்திலும் அவரின் இடத்தைக் கொடுத்தலாகும். இறைவனை மதிக்க பரிசுத்த பாப்பரசரால் வரும் கடமையைச் செய்ய முயற்சிப்போமாக!

பின்பு சபைத்தலைவர் தன் பிரியாவிடையை ஐரோப்பிய சகோதரிகளுக்கும், சுதேச சகோதரிகளுக்கும் கூறினார். பிறக்சீட்தாயார் தன் நோயாளி வண்டியிலும், கத்தறின் லவலிஸ் தன் 93 வயதிலும் அங்கு வந்து தங்கள் பிரியாவிடையைக்கூறினர். அ.ம.தி. குருக்கள் மட்டில் தம் நன்றியையும், விசேடமாகச் சமேரியா ஆயர், தம் அழைப்பிற்குக் காரணம் எனவும் நன்றி கூறினார். இவவே முதலாவது திருக்குடும்ப சுதேச சகோதரி ஆவார்.

ஆவணி மாதத்தில் பிறக்சீட்தாயாரை இறைவன் அழைத்துக்கொண்டார். அவ்வேளை வகுப்பாசிரியர்கள் நுவரெலியாவுக்கு ஒய்வுக்குச் செல்வார்கள். அவர்கள் போகும் போது நல்ல ஒய்வு என்று தாயார் அவர்களை வாழ்த்தினார். 12ந் திகதி நற்கருணை ஆசீர்வாதத்தின்பின் அநாதைப்பிள்ளைகளுடன் செபித்தா. மறுநாள் ஒரு கடும் காய்ச்சல் வந்து மருத்துவர் இறுதி அருட்சாதனத்திற்கு ஆயத்தப்படுத்தும்படி கேட்டார். மறுஇரவும் வாந்தி எடுத்தபடியால் 15ந் திகதி நற்கருணை அருந்த முடியவில்லை. அன்று நல்ல தாயாரின் பொன் யூபிலி கொண்டாடப்பட்டது. மறுநாள் திருவிருந்து உட்கொண்டு தன் அர்பணத்தைப் புதுப்பித்தா. மரியாளின் பாடலை ஆர்வத்துடன் சொன்னா.

லியோனித்தாயாரும், கொன்சாய்க்தாயாரும் கொழும்பில் இருந்து அவவைப் பார்க்க வந்திருந்தனர். அவர்களைப் பார்த்துப் புன்னகை புரிந்தா. ஆம் இல்லை எனப்பதிலிறுக்க முடிந்தது. எனினும் என் இறைவன் என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டிருந்தா. மருத்துவர் முயற்சி செய்தாலும் ஆவணி 23ந் திகதி மாலையில் அருட்தந்தை மங்கா (Manka) இறுதி அருட்சாதனம் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரி மரணவேதனைப்படும் போது குழுச்சகோதரிகள் கட்டிலைச் சூழ்ந்து நின்று அவவின் ஆன்மாவை ஒப்புக்கொடுத்தனர். சகோதரி 57 வருடங்கள் இலங்கையில் மறைபோதகப் பணியை ஆற்றியுள்ளா. நள்ளிரவில் அநாதைப்பிள்ளைகள் கோவிலில் வைக்கப்பட்ட அவவின் தூய உடலுக்கு மரியாதை செலுத்தி ''ஆசைத்தாயாரே'' என அழைத்தனர். திருப்பலி அவவின் ஆன்மஇளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது. மரியன்னை பேராலயத்திலும் அருட்தந்தை கில்லறி (Hilary) மடத்தின் இழப்பைப் பகிரங்கமாக அறிவித்தார். அதனால் மக்கள் திரண்டு வந்து மடத்தில் அவவைச் சூழ்ந்து நின்று செபித்தனர். பழைய மாணவர்கள். அநாதைச் சிறுவர்கள், சுதேச சகோதரிகள் இளவாலை, சிறிய பணித்தளங்களில் இருந்தும் வருகை தந்து மரியாதை செலுத்தினர். அ.ம.தி. குருக்களும் வந்து பிரேதப் பெட்டியருகே இருந்து செபித்தனர். அடக்கச் சடங்கு வேளையில் குருக்கள் பலர் அருட்தந்தை மங்காவுடன், மடத்தில் இருந்து பெரிய கோவிலுக்கு உடலைக் கொண்டு வந்தனர். பெரியபவனி இடம்பெற்றது. அ.ம.திக் கல்லூரி ஆசிரியர்கள், குருமடமாணவர்கள், வருடாந்த தியானம் செய்த குருக்கள் பாடல் இசைத்தனர். குரு முதல்வர் அருட்தந்தை பிஜியன் (Bizien) இறுதி வழிபாடு நடாத்தினார். யாழ் ஆயர் கியோமார் ஆண்டகை சுகவீனமுற்றுப் பிரான்சில் இருந்தார்.

இறுதி ஆசீரின் பின்பு பவனி ஆரம்பமாகி சேமக்காலை நோக்கிச் சென்றது. அதில் உதவி இயக்குனர், குழுத்தலைவிகள்,சகோதரிகள் பிள்ளைகள் பெருந்தொகையான சனத்திரள் பங்குபற்றியது. சேமக்காலையில் இவவின் வழிகாட்டலில் வாழ்ந்த பல சகோதரிகள் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். பிறக்சீட்தாயார் தான் இறந்தபின்பு, தன்னை இலங்கையில் வரவேற்று வழிகாட்டிய யோசேவ்வின் தாயாரின் கல்லறையில் வைக்க வேண்டுமென விருப்பம் தெரிவித்திருந்தா. அவவின் விருப்பம் நிறைவேற்றப்பட்டது. அவவின் நன்மாதிரிகையை மற்றவர்களும் பின்பற்றுவார்களாக!

சுதேச பழைய சகோதரி கத்தறினின் இறுதி வாழ்வு அண்மித்தது. 1938ம் ஆண்டு தை மாதத்தில் நோயுற்று மாசி 11ந் திகதி இறுதி அருட்சாதனங்கள் பெற்று 17ந் திகதி இறந்து விட்டா. இவதிருக்குடும்பத்தை மாதிரிகையாகக் கொண்ட எம் சபையை மறக்கமாட்டா. அதேபோன்று வருடமுடிவில் மார்கழி 2ந் திகதி எமது நல்ல தாயார் கடும் நோயுற்று இறந்தா. அவவையும் நாம் மறக்கமுடியாது. ஆயர் கியோமார் ஆண்டகை, அ.ம.தி. குருக்கள் எம் துன்பத்தில் பங்கு பெற்றுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். பெரிய கோவிலில் சபைத் தலைவிக்குத் திருப்பலி நிறைவேற்றப்பட்ட போது யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லாக்குருக்களும் சமுகமாயிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகள், பாடசாலைப் பிள்ளைகளால் கோவில் நிரம்பியிருந்தது. எம் நல்ல தாயாரின் உதவியையும், பாதுகாப்பையும் கேட்டோம்.

எம் கல்விப் பணி நல்ல சித்தியைக் கொண்டு வந்தது இதை புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை லோங் (Long) தன் வருடாந்த அறிக்கையைப் பரிசளிப்பு விழாவில் வாசித்த போது கூறினார். இலங்கைக்குப் புதிய ஆளுநர் சேர். அன்றூ கால்டிகோற் (Sir Andrew Caldeolt) பலமுறை இதைக்கூறி சகோதரிகளின் சார்பாகப் பேசினார். யாழ்ப்பாணத்துக்குத் தன் மனைவி தன் மகளுடன் வந்தபோது ஆசிரியர்கள், 450 ஆங்கில வகுப்பு மாணவிகளின் வரவேற்பு அவர்களைக் கவர்ந்தது. மாணவர் தொகை பெருகி வருகின்றது. எம் வகுப்புக்களில் சமய போதனை இல்லாவிடில் கல்வி முழுமையடையாது என யாழ் ஆயர் கூறினார்.

1937ம் ஆண்டு உயர் வகுப்பு மாணவர்களுக்குத் தியானம் நடைபெற்றது. 35 பழைய மாணவர்களில் திருமணம் செய்தோரும் பங்குபற்றினர். மனம் மாறிய ஒரு யூதப்பெண் (Lady Abraham) ஏபிரகாம் அம்மையார் தன் பூரண ஒத்துழைப்பை எல்லோருக்கும் நல்கினார். அருட்தந்தை லோங் அடிகளார் தியானத்தை நல்நெறிப்படுத்தினார். அமைதி பேணப்பட்டது. இறுதிநாளில் திருமுழுக்குவாக்குறுதிகள் புதுப்பிக்கப்பட்டன. மாணவர் தம் நன்றியைக் குருவுக்கும், குழுத்தலைவிக்கும் தெரிவித்தனர்.

1937ம் ஆண்டு 26 சிறுவர் மடத்தில் இருந்தும், 32 பேர் திருஇருதயப் பாடசாலையில் இருந்தும் 75பேர் ஏனைய தமிழ்ப்பாடசாலைகளில் இருந்தும் முதல் நன்மை பெற்றுக் கொண்டனர். 1938ம் ஆண்டு ஆங்கிலபாடசாலையில் இருந்து 19 சிறுவர்களும், திருஇருதயப் பாடசாலையில் இருந்து 35 பேரும் அவர்களுள் 5 பேர் திருமுழுக்குப் பெற்றவர்களும், முதல்நன்மை பெற்றுக்கொண்டனர். அநாதைப்பிள்ளைகளுள். ஒரு பத்து வயதுச்சிறுமி இருந்தாள். தாய் இந்தியாவில் இருந்து வேலைக்கு இங்கே வந்து மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டு இறந்தாள். சகோதரிகளால் பராமரிக்கப்பட்ட குருநாகல் வைத்தியசாலையில் அவள் இறந்தபடியால் சிறுமி ஒரு போர்த்துக்கேயப் பெண்ணுக்கு வேலை செய்தாள். அவள் நன்கு கவனிக்கப்படாமையால் ஒரு நாள் வீட்டை விட்டு ஓடிவிட்டாள். நீதிபதியாக இருந்த சேர். சிட்னி. ஏபிரகாம் அவள் வீட்டுப் பொறுப்பானவருக்கு 3 வருடச் சிறைத்தண்டனை கொடுத்தார். திருமதி. ஏபிரகாம் எம் அநாதை இல்லத்தில் அவளைச் சேர்த்து சிசிலியா என்னும் பெயருடன் திருமுழுக்குப்பெற்றாள். அவள் அடிவாங்கிப்பழகியபடியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகளைக் கண்டு பயந்தாள். எம் சகோதரிகள் நன்கு அவளைக் கவனித்தபடியால் இந்த இளம் ஆன்மா மலர்ந்தது.

1938ம் ஆண்டு செபமாலை மாதாவின் மாதத்தில் நாம் மிகவும் மகிழ்சிசியடைந்தோம். ஆங்கிலப் பாடசாலைப் பெரிய மாணவி ஒருவர் பலகாலமாக மனம் மாற விரும்பி இறுதியில் எம் திருமறையில் சேர்ந்தாள். கதிரம்மா என்னும் பெண் இந்து சமயத்தவள் அவளின் தந்தை வேலை மாற்றமாகிக் கண்டிக்குச் சென்ற போது இவளும் அங்கு சென்று படித்தபோது ஒரு பிள்ளையுடன் சேர்ந்து சமயம் கற்றாள். தந்தை மீளவும் யாழ் வந்த போது கல்லூரிக்கு சென்று, விசுவாசத்தைப் பயின்று தந்தைக்குத் தன் நிலைமையை எழுதினாள். தந்தை இதை விரும்பவில்லை. இவளும் விட்டபாடில்லை. எனவே தம் மூத்த பிள்ளையைத் துன்புறவிடப் பெற்றோர் விரும்பவில்லை. மடத்தில் பிள்ளைகளும் இவளுக்காகச் செபித்தனர். இறுதியில் தந்தையின் அனுமதியுடன் பலமாதங்கள் ஆயத்தம் செய்து ஐப்பசி 8ந் திகதி சனிக்கிழமை தேவதாயின் பாதுகாப்பில் திருமுழுக்குப் பெற்றாள். மகளை மகிழ்விக்கத் தந்தையும் இதில் பங்குபற்றினார். அப்போது கண்ணீர் மல்கியது. பின்பு அருட்தந்தை புறோகான் (Brohan) உடன் கதைத்து விட்டுச் சென்றார். மறுநாள் திருவிருந்தில் பங்குபற்றினாள் தந்தை தன் பிள்ளைகளை மடத்திலும் மகனை அ.ம.தி. கல்லூரியிலும் சேர்த்துள்ளார். அவர்களும் மனமாற்றம் பெறுவார்களாக!

## இளவாலை

சபைத்தலைவரின் முதலாவது சந்திப்பு 1937ம் ஆண்டு மாசி மாதம் 20ந் திகதி நடைபெற்றது. குழுச்சகோதரிகள், நவகன்னியர், ஆயத்தக்கன்னியர், சபையில் சேரவிரும்பிய பெண்கள் அவரண்டையிலேயே வர, அவர் அ.ம.தி. குருக்களுக்கும் தி. கு. கன்னியருக்குமிடையே மசனட் ஆண்டகையும், நல்ல பிதாவும் செய்த ஒப்பந்தங்களைக்கூறி, இதனால் இந்த ஒத்துழைப்பு இறை அரசைப் பரப்ப உதவி புரிகின்றது என்றார். கற்பிக்கும் சகோதரிகளே! நீங்கள் மறைப்பணி செய்யும் குருக்களுக்கு உங்கள் ஒத்துழைப்பை வழங்குகிறீர்கள். மாசில்லா உற்பவக்கிளையை உருவாக்குவதன் மூலம் நல்லபிதாவின் நோக்கு, பிள்ளைகளைப் படிப்பித்தலும் நோயாளிகளுக்கு ஆறுதல் கூறுவதுமாகும். இதைச் செய்வதற்கு ''இறைவன் மாத்திரமே" என்னும் தூய ஒழுங்கிலுள்ள மனப்பான்மையில் உங்களை உட்புகவிடவேண்டும். இத்தூயகருத்தில் எம்மைத் தியாகம் செய்வது, பாடசாலைச் சித்திக்காகவல்ல, குழுத்தலைவர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதற்காகவல்ல, நல்ல இறைவனுக்கு மகிமை அளிப்பதற்கேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியின் முதல்வர், செயலருடன் சேர்ந்து சபைத் தலைவர் மடத்தையும் வகுப்புக்களையும் சுற்றிப்பார்வையிட்டார். பின்பு பழைய மாணவர், புரட்டஸ்தாந்து மாணவர் ஒர் இந்துப் பெண், இவர்களின் திருமுழுக்குக்கு வருவதாகக் கூறிச் சென்றார். இவர்கள் உதவி ஆசிரியர்கள், மேரி திரேசா, மேரிஸ்ரெலா, மேரிகிளாறா, என்போர் மேலும் நால்வருடன் திருமுழுக்கு, திருவிருந்து பெற்றுக் கொண்டனர். இவர்களோடு சிறுவர்களும் பெற்றுக் கொண்டனர். 3 அ.ம.தி. குருக்களுடன் இதை நிறைவேற்றினார். இச்சடங்கின் பின்பு சபைத்தலைவர் தனக்கு முதல் முறையக இச்சந்தர்ப்பம் கிடைத்தது என்று மகிழ்வுடன் கூறினார்.

பாஸ்காக்காலம் வரையும் சபைத்தலைவர் அருட்தந்தை லபோறே (Labori) யின் கீழுள்ள பணித்தளங்களைச் சந்தித்தார். எல்லோருக்கும் எல்லாமாக இருந்தவரைச் சந்திப்பது சுதேச சகோதரிகளுக்கு மகிழ்ச்சியளித்தது. மாலைநேரம் இளவாலைக்கு வந்தார். சிலவேளைகளில் எம் ஒய்வு நேரத்தில் திடீரென வந்து எம்மை மகிழ்வித்தார். காலையில் எம்மடத்துச் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அத்துடன் எம் குழு, நவகன்னியர், ஆயத்தக்கனினியருக்காக பாடசாலையில் 3 நாட்கள் செலவிட்டார். சிறிய பணித்தளச் சகோதரிகளும் சிறப்புரைகளுக்கு அழைக்கப்பட்டனர்.

சபைத்தலைவர் ஆங்கிலத்தில் உரையாற்றினாலும், அவை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. இறை அன்பானது எல்லாவற்றிலும் இறை திருவுள்ளத்தை நிறைவேற்றுவதில் தங்கி உள்ளது. இறைசித்தம் தேடப்படுவதில்லை, துறவிகளாகிய எமக்கு இறைசித்தம் திருச்சபை, எம் ஒழுங்குகள் வழியாகத் தரப்படுகின்றது. எம் உணவு, ஒய்வு, நித்திரை எல்லாம் இவற்றுடன் சேர்கின்றன.

நாம் புனிதராக முடியும் அப்போது நீங்கள் இறைவனைப் பிரகாசிக்கச் செய்வீர்கள். தொகை அல்ல, தரமான வாழ்வே ஒரு சபைக்கு அழகைக் கொடுக்கின்றது. அதாவது புனிதத்துவம், இதையே இறைவன் விரும்புகின்றார். உங்கள் தந்தை நிறைவுள்ளவராக இருப்பது போல் நீங்களும் நிறைவுள்ளவராக இருங்கள். ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள், இறைஅன்பையும் பிறரன்பையும் பிரிக்க முடியாது, இதன் மூலம் இயேசு தன் உண்மைச் சீடர்களை இனம் காண்பார். நல்ல பிதாவும் இதனால் தனது உண்மையான குமாரத்திகளை இனம்காண்பார். உங்கள் வீடுகளில் பிறர் குறைகளைக் காணாதவாறு குருடர்களாகவும், கேளாதவாறு செவிடர்களாகவும், குறை கூறாதவாறு ஊமைகளாகவும் இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் சுயவிருப்பின்றி இயேசுவின் இதயத்துடன் பிறரை நேசிப்போம். அவரே அனைத்திலும் எம்மாதிரிகையாக இருப்பாராக! இயேசு எம் குறைகளுடன் எம்மை ஏற்றுக்கொள்ளுகிறார். அன்பு செய்கிறார். எம் ஆசைகள், முயற்சிகளை அவர் அறிவார். எம் உருமாற்றத்தை அவர் விரும்புகிறார். எதிர்நோக்குகின்றார். இறைவனுக்கு எம்மை அளிப்பது காணாது, பிறருக்கும் எம்மை அளிக்க வேண்டும். தன்னைமறுத்து வாழ்வது துறவு வாழ்வின் அடிப்படையாகவுள்ளது. என்னைப் பின்பற்ற விரும்புபவன் தன்னை மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்த வண்ணம் என்னைப் பின்பற்றட்டும் என இயேசு கூறவில்லையா?

அன்றாட மறுதலிப்பை வாழ விரும்பாதவன், துறவு வாழ்வுக்கும் உண்மையான இறைஅன்பு, பிறரன்புக்கும் ஏற்புடையவன் அல்லன். எல்லாப்புண்ணியங்களும் ஒன்றுடன் ஒன்று தொடுக்கப்பட்டுள்ளன. இறையருளின்றி இவற்றைக் கடைப்பிடிப்பது கஷ்டம். எனவே எம் செபங்கள், தாழ்மை, நம்பிக்கை நிலைமை என்னும் கொடைகளுடன் நல்ல இறைவனிடம் இந்த அருளைக் கேட்டால் அவர் தருவதற்குத் தாமதம் செய்ய மாட்டார்.

மூன்றாவது மறைஉரைஞாயிறு மாலை, கோவிலில் நடைபெறவிருந்தது. மதியத்திற்கு முன் ஒரு மழை பெய்தபடியால் சபைத்தலைவர் மடத்திலிருந்து பங்கு மனைக்குச் செல்ல முடியவில்லை. அப்போது நான் புனித ஸ்கொலஸ்ரிக்காவை நினைத்தேன். அவவின் சகோதரர் பெனடிக்ற் மழை வந்து மடத்தில் நின்ற சமயம் உங்களுக்குத்தெரியும். நீங்களும் அந்தப் புனிதை போல் இருக்கலாம். நான் உங்களுக்கு ஏழ்மைபற்றிக் கூறவுள்ளேன் என்றார். சகோதரிகள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார். சபைத்தலைவரையும் பாராட்டி நன்றி கூறினார்கள். இவரிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஊக்குவித்தல்கள் நன்மை செய்தன.

இலங்கையின் வடபகுதியில் 165 பேர் அரசாங்க பரீட்சைக்குச் சமுகமளித்து 13 பேர் சித்தி பெற்றனர். அதில் 6 இளம் பெண்கள், 4 பேர் இளவாலையைச் சேர்ந்தவர்கள். மாணவரின் இடைவிடாத செபம் சித்தியைத் தருகின்றன. இறைஆசியைப் பணிகளுக்குப் பெற்றுத்தருகின்றன. இங்குதான் என் பிள்ளையைச் சேர்ப்பேன் என்று கூறினார், ஒர் இந்து மதத்தவர், அப்போது மடத்துத் தலைவி கத்தோலிக்க ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றா. அவள் நீங்கள் கூறுவதைச் செய்வாள். நான் அவளை இங்கு சேர்க்க விரும்புகிறேன் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகரீதியிலும் நல்ல நன்மைகள் கிடைத்துள்ளன. 1937ம் ஆண்டு 3 பேருக்குத் திருமுழுக்கு சபைத்தலைவரால் அருளப்பட்டது. வேறுபலருக்கு இளவாலை மடத்துச் சிற்றாலயத்தில் கொடுக்கப்பட்டது. கார்த்திகை 21ந் திகதி ஆங்கிலபாடசாலையின் 7 இளம் பெண்களுக்குத் தொடர்ச்சியாகத் திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், திருவிருந்து அருட்சாதனங்கள் வழங்கப்பட்டன. இவர்களில் மரிய கொன்செப்ரா பெற்றோரினால் துன்புற்றா, மேரி றோசாறி என்பவ எங்கள் ஒரு சகோதரியின் மருமகள், அவளின் பெற்றோர் இந்து மதத்தவர்கள். அருளின் துணையால் கிறீஸ்தவ விசுவாசத்தைத் தழுவினாள். 24 வயதுடைய மாகிறெற் என்னும் பெண் அவளின் 2 சகோதரர் புரட்டஸ்தாந்து மதத்தவர், மருத்துவர்கள், திருமுழுக்குப்பெற உத்தரவு பெற்றுத் திருவிருந்தும் அருந்தி மார்கழி 18ந் திகதி உறுதிபூசுதல் பெற்றாள். மாறி இம்மனுவேலா என்பவளுக்குத் தாய் உத்தரவு கொடுத்தும் மூத்த சகோதரிக்கு முன் தான் திருமுழுக்குப் பெறவிரும்பவில்லை. அவவும் ஆயத்தமாக இருக்கவில்லை. எனினும் வருடாந்த தியான முடிவில் இம்மனுவெலா திருமுழுக்குப் பெற்றாள். நத்தார் விடுமுறையின் போது ஆசிரியகல்லூரி மாணவி தன் சகோதரி கடும் வியாதியுற்றிருப்பதை அறிந்து ஆசைத்திருமுழுக்குக் கொடுத்தா. 1938ம் ஆண்டிலும் மீட்பின் கனிகள் பல கிடைத்தன. எம் சிற்றாலயத்தில் வளர்ந்தோர் திருமுழுக்கு அருளப்பட்டன.

பஞ்சவர்ணம், மங்கையர்க்கரசி என்னும் 2 பெண்கள் ஆசிரிய கல்லூரியில் படித்துக் கொண்டு எம் சமயத்தையும் படித்து அறிந்து அது உண்மையெனத்தெரிந்து கொண்டனர். பஞ்சவர்ணத்துக்கு உத்தரவு கிடைக்கவில்லை. விடுமுறை காலத்தில் வீடு சென்றபோது 7 மாதப்பிள்ளை ஒன்று மரண வேதனைப்படுவதை அறிந்த அங்கு சென்று தாயின் அனுமதியுடன் பிள்ளைக்குத் திருமுழுக்குக் கொடுத்தாள். தமிழ் இளம்பெண்கள் அயலவர் நண்பர்கள் விடு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. எனினும் துணிவுடன் இவள் கொஞ்சநீர் கொண்டு சென்று நெற்றியில் ஊற்றி மறிஸ்ரெலா பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் உனக்குத் திருமுழுக்குத் தருகின்றேன் என்றாள். சிறிது நேரத்தில் பிள்ளையின் ஆவிபிரிந்தது.

மறிஸ்ரெலா விண்ணகத்தில் இருந்து தனது ஞானத்தாய்க்காகச் செபித்திருப்பாள். பஞ்சவர்ணம் பலவந்தமாக வீட்டுக்கு அழைக்கப்பட்டு அன்றிரவே வழக்கம் போல் ஓர் இந்துவுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். அந்நேரம் திருமுழுக்குப் பெற இருந்த நம்பிக்கை இழந்து விட்டதுபோல் இருந்தது. ஆனால் தொடர்ந்து செபித்தும், சகோதரிகளுக்கு எழுதிக் கொண்டும் வந்தாள். கணவனுக்கும் விசுவாசத்தின் உண்மைகளை எடுத்துரைக்கத் துணிந்தாள். முதற்குழந்தை பிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் சித்திரை மாதத்திற்குப்பின் அவள் திருமுழுக்குப் பெறலாம் என வாக்குப்பண்ணினான். இதற்கு முன் தைமாதத்தில் இவள் ஒரு கனவு கண்டாள். அவவுடன் படித்த ஒரு புரட்டஸ்தாந்து நண்பி அவளுக்குத் தோன்றி பங்குனி மாதம் 2ந் திகதி உனக்கு இயேசுவின் 2ம் வருகைவரப் போகின்றது என்று கூறினாள். இவள் உடனே துள்ளி விழுந்தெழுந்து தனது கலன்டரில் பார்த்த போது 2ந் திகதி புதன் கிழமையாக இருந்தது. பஞ்சவர்ணம் மடத்துத் தலைவிக்குத் தனது கனவில் சிநேகிதி சொன்னதை எழுதினாள். தனக்குக் கனவு நிகழ்ந்த திகதியில் நண்பி திருமுழுக்குப் பெற்றுவிட்டாள். நண்பி சொன்னது தனக்குத்தான் என்று எடுத்துத் தன் கணவனிடம் போய் தன் ஆவலை நிறைவேற்ற உத்தரவு தரவேண்டுமென்று கேட்டாள். மீண்டும் தலைவிக்குக் கடிதம் போட்டாள். நீ குருவானவரிடம் சென்று இரகசியமாகத் திருமுழுக்குப் பெறு என்று தலைவி எழுதினா. இக்கடிதம் பங்குனி 1ம் திகதி அவளுக்குக் கிடைத்தது. பங்குக்குரு அங்கு தன் பணிமனைக்கு வருகிறார் என்று அறிந்து அவரைத் தனக்கு தெரியும் என்றும் அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்க விரும்புவதாகவும், பெற்றோரிடத்தில் கேட்டாள். உத்தரவைப் பெற்றுக் குருமனைக்குப் போனாள். தலைவியின் கடிதம் கிடைத்ததாகக் குருவானவர் சொன்னார். அவளுடைய ஆவலை அறிந்த குருவானவர் மறுநாள் காலைத் திருப்பலிக்கு முன் திருமுழக்குப் பெற ஆயத்தமா? என்று கேட்டார். அடுத்தநாள் தன் கணவனின் முன்னிலையில் திருமுழுக்குப் பெற்றுப் புதுநன்மையும் பெற்றாள். கணவனும் இத்திருமறையைக் காத்திரமாகப்படித்து மனைவியோடு அனுசரிப்பேன் என்றும் வாக்குப்பண்ணினான்.

மங்கையர்க்கரசி ஆசைஞானஸ்நானம் பற்றி மாத்திரம் அறிந்திருந்தாள். அவள் வலுவந்தமாக ஓர் இந்துவைத் திருமணம் செய்து தென்னிலங்கைக்குப் போய்விட்டாள். திருமறையைப் பற்றிக் கணவனுக்கு அறிவுரை கூறினாள். குழந்தைகிடைத்ததும் மூவரும் திருமறையில் சேர்க்கப்பட்டனர். பெண்ணின் பெற்றோர் இதை எதிர்த்தனர் அவள் விரைவில் இறந்துவிட்டாள். அவளின் உடலைத் தகனம் செய்தனர். ஆன்மா நித்திய பேரின்பத்தைப் பெற்றுக் கொண்டது.

சிறிய கிராமங்களில் எமது சகோதரிகள் நல்ல பிதாவைப் பற்றிச் சொல்லிக் கொடுக்கிறார்கள். பேசாலையில் ஒரு பாடசாலைச் சிறுவன் வியாதியாக மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு போகப்பட்டான். அவரின் ஆபத்தான நிலையை வைத்தியர் பெற்றோருக்குத் தெரிவிக்க அவர்கள் வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டனர். சகோதரிகள் நல்ல பிதாவின் சுத்தமான பண்டததைக் கொடுத்து நவநாள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். உடனே தானே சிறுவன் குணமடைந்தான் நவநாள் முடியமுன்பே அவன் நல்ல பிதாவுக்கும், சகோதரிகளுக்கும் நன்றி கூறினான். இந்த அற்புதத்தை நாளேட்டில் பிரசுரித்தார்கள். நல்லபிதாவில் வைத்திருக்கும் நம்பிக்கை அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNALS NO - 27

**1881**

புரட்டாதி 2ம் திகதி சிஸ். எமிலி ஜேன்சன், சிஸ்.ஸ்ரனிஸ்லாஸ், சிஸ. பிரான்சிஸ் மக்மேயர் மூவரும் திரிகோணமலையில் ஒரு மடம் அமைக்கப் போனார்கள்.சிஸ்.லிகோரி கப்பல் வரையும் சென்று வந்தா. 36 மணித்தியாலங்கள் கடலில் பயணம் செய்து மகிழ்வுடன் திருமலையை வந்தடைந்ததாகவும், அங்கு அமோக வரவேற்புக் கிடைத்த செய்தியும் எனக்குக் கிடைத்தன.

# ANNALS NO - 28

**30 ஆனி**

**1882**

எமது சிறிய பணி பல துன்பங்களைச் சந்திக்க நேர்ந்தபோது ஆயரின் வருகை மீளவும் உற்சாகத்தைத் தந்து ஊக்கத்துடனும் நம்பிக்கையுடனும் எம் பணியைச் செய்ய முடிகிறது. சித்திரைக் கடைசியில் எம் ஆயர் இங்கு வந்து 3 கிழமைகள் இவ்விடம் செலவிட்டார். அவ்வேளையில் எம் தியான நாட்களுக்கும் உதவி செய்தார். அதே வேளை நகர மக்களுக்கும் இராணுவம் கடற்படைக்கும் உதவி செய்தார்.அவர் செல்லமுன் எம் ஆலயத்தில் நற்கருணையை ஸ்தாபித்தார். இனி எமக்கு ஒரு குறையும் வராது. துன்பம் வரும் போது அவரண்டை சென்று ஆறுதல் அடையலாம். இச் செய்திகள் எம் முதற் தவணையை சுருக்கமாக உங்கட்கு எடுத்துரைக்கின்றன. எம்அமைதியான வாழ்வு விசேட செய்தியைத் தராவிடினும் "இறைவன் மாத்திரமே" என்ற மனநிலையில் எம் பணிகளைச் செய்வதில் மனமகிழ்கின்றோம்.

# ANNALS NO - 29

**தை -1883**

எம் பணி திருப்திகரமான நிலையில் நடைபெறுகின்றது. ஆடி மாதத்தில் நடைபெற்ற பரீட்சை நல்ல சித்தியைத் தந்தது. சென்ற வருடம் தொடங்கிப் பாடசாலை நல்ல பெறுபேறுகளைத் தருகிறது எனவும் மாணவர் தொகை குறைவு எனவும் பாடசாலை அதிகாரி கூறினார். சுதேச அதிகாரி முதல் முறையாக எமது தமிழ் பாடசாலையைச் சந்திக்க வந்தார். அவர் பிரிவினைப் பாடசாலையின் பழைய மாணவன். ஆதலால் எம் நண்பரல்லர். எனினும் பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் கூறி எமக்குத் திருப்தி அளித்தனர். அத்துடன் திருமலையில் எம் பணிகளின் எதிர் காலத்திற்கும் இச் சித்திகள் தேவை. பரீட்சையின் பின் 15 நாட்கள் லீவு கொடுக்கப்பட்டது. எல்லோரும் புத்தூக்கத்துடன் லீவு முடிய வந்தார்கள். ஒரு பெண் மட்டும் படிப்பு முடிந்ததால் வரவில்லை. அவள் இடத்தை ஒரு 5 வயதுப்பிள்ளை எடுக்கின்றாள்.

பிரிவினை மதத்தவர்களும் பிற சமயத்தவர்களும் கிறிஸ்தவர்களைக் குழப்புகின்றனர். விசுவாசக் குறைவு. தாய் தந்தை வழிகளைப் பின்பற்றுகிறார்கள். பெற்றோர் தம் கடமைகளைச் சரியாகச் செய்யாதபடியால் பிள்ளைகள் மட்டில் நாம் மிகவும் கஷ்டப்படுகின்றோம். சில காலங்களின் முன் ஒப்பரவு அருட்சாதனத்திற்கும் அனுப்புவது கஷ்டமாக இருந்தது. எனவே செபங்களைப் படிப்பித்து அதன் வழியாக இத் திரு அருட்சாதனத்தைப் பெற உதவி செய்தோம்.

சகல வரப்பிரசாத மாதாவின் துணையை நாடி அவவிடம் இந்த இளம் உள்ளங்களை ஒப்படைத்து அவர்களுக்கு மறைக்கல்வி படிப்பித்து அவர்கள் முயற்சிகளை ஊக்குவித்தேன். இடைக்கிடை சிறு வெகுமதிகளும் வழங்கினேன். 8-12 வயதுடைய 20 பேர் மனஸ்தாபப்பட்டு ஒப்பரவு அருட்சாதனம் செய்து பின்பு வாரம் தோறும் இந்த அருட்சாதனத்தைப் பெற்று வருகின்றனர்.

கார்த்திகை மாதத்தில் உங்கள் செய்தி மடல் வழியாக எம் குடும்பத்தில் இருந்து போனாத் தாயாரை இறைவன் அழைத்துக் கொண்டதை அறிந்தோம். எல்லோருக்கும் இது பெரிய இழப்பு. நாம் மிகவும் துயரப்படுகின்றோம்.

இறுதி நேரம் அவவின் வாழ்வில் நடந்தவற்றை நீங்கள் எழுதிய மடலில் இருந்து வாசிக்கும் போது பக்தி நறுமணம் போல் அவவின் முன்மாதிரியான வாழ்வு கமழ்ந்தது. உங்களை விட்டுப் பிரிய முன் அவவின் விரம் பொருந்திய எங்களுக்கு விட்டுச் செல்லும் புண்ணியங்களைக் கண்டு பாவித்து அவவின் பாதையில் நாமும் நடந்து செல்ல முயல்வோமாக.

## ANNALS NO - 30 **1884**

என் நல்ல தாயாரே

எம் வருடாந்த அறிக்கையானது எம் பணி போன்று அடக்கமாக உள்ளது. நாம் இதனை ஏழ்மையிலும் அமைதியிலும் செய்து வருகின்றோம் எனலாம். முதல் வருடங்களில் நாம் தனிமைப் பட்டிருந்தோம். பின்பு மடம் கட்டும் பணி ஆரம்பித்துத் தற்போது ஒரு சிற்றாலயமும் எம் மடத்தில் உள்ளது. யோசவின் தாயார் சென்ற வருடம் இங்கு வந்த போது 2 சுதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகளைத் தன்னுடன் கூட்டி வந்தா. இது எமக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. நாம் கோவிலுக்குத் தூரச் செல்வதைப் பார்த்துத் துன்புற்றா. அவ எம்முடன் இருக்கும் போது எம் சிற்றாலயத்தில் முதல் தடவையாகத் திருப்பலி நிறைவேற்றப் பட்டது. இது ஒரு புதிய பெத்லேகமாக எம் பலவீனத்தில் பலமாக உள்ளது.

எம் பணி மிகவும் சுருக்கமாக உள.ளது. ஆங்கில வகுப்பு மாணவர்களுக்குரிய பணி நகரிலுள்ள ஐரோப்பியரைப் பொறுத்துள்ளது. பெற்றோர் கத்தோலிக்கர். ஏனையோர் புரட்டஸ்தாந் இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள். இவர்களின் விசுவாசம் எப்படி உள்ளது என்பதைக் காட்ட இவர்கள் வாழும் சுழல் எப்படி உள்ளது என்பதை உங்களுக்கு அறியத் தருகின்றேன்.

திரிகோணமலை எரிமலையிலிருந்து ஆரம்பமானதெனலாம். சூரியன் சூடு கற்பாறையில் படுகின்றபடியால் மதிய வேளையில் சுடு சாம்பலில் மிதித்தது போல் இருக்கும். சமுத்திரத்தின் அருகே உள்ள பகுதிகளுக்குக் காற்று அடிப்பதால் இக் காலநிலை மாறுபடும். இறைவனின் பராமரிப்புக் காரணமாக இங்கு 2 இயற்கைத் துறைமுகங்கள் உள்ளன. ஒன்றில் காற்று அடிக்கும் போது மற்றையதில் அமைதி இருக்கும்.

எமது மலைகள் எப்போதும் பசுமையானவை. எமது இல்லம் கோட்டைக்கு முன்புறமாக உள்ளது. இயற்கை அழகு நிறைந்தது. எம்மைச் சுற்றி இருளில் வாழும் மக்கள் உள்ளனர் போர்க்கப்பல்கள் வரும் போது 300 400 கடற்படையினர் எம் பாதைகளில் அங்குமிங்கும் ஓடித்திரிகின்றனர். பெற்றோரே தம் இளம் பிள்ளைகளின் ஆன்மாவைக் கெடுக்கின்றனர்.

இந்த வருடம் இலங்கை ஆளுனர் சேர் கோர்டன் (Sir.Gordon) எம்மைச் சந்திக்க வந்தார். எம் பணிவான வரவேற்பை ஏற்றுக் கொண்டார். எம் பாடசாலைப் பிள்ளைகளும் பரீட்சை அதிகாரிகளின் பாராட்டைப் பெற்றுக் கொண்டனர் நாம் பிள்ளைகளுடன் சேர்ந்து செபத்தில் இறைவனுக்கு நன்றி கூறினோம். பின்பு எம் தியான வேளையிலும் நன்றி கூறினோம்.

தியானத்தின் மறுநாள் கிராமப்புறத்திற்கு ஒரு கிழமை லீவில் சென்றோம். ஆவணி 18 ந்திகதி ஒரு மாட்டு வண்டியில் அமர்ந்து மாங்கனை (Manganey) எனும் கிராமத்திற்குச் சென்றோம். இது திரிகோணமலையிலிருந்து 5 மைல் தூரத்தில் உள்ளது. அருட்தந்தை பற்றறோன் ( Bateron ) என்பவர் அங்கு ஆன்மீக இயக்குனராக வந்தார். அங்குள்ள கத்தோலிக்கர் வருடத்தில் 3அல்லது 4 முறை தான் குருக்களைச் சந்திப்பார்கள். எனவே காலையில் ஆலயத்துக்கு வருவர். மாலையில் விகாரைக்குச் செல்வார்கள். குருவின் வருகை அவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. நாமும் அப்போஸ்தலிக்க வேலைகளில் பங்கு கொண்டோம். மறைக்கல்வி படிபபித்தோம். பெரியவர்களுக்குச் செபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக் கொடுத்தோம். புனித லூயிஸ் திருவிழா அன்று பலர் அருட்சாதனங்களைப் பெற்றுக் கொண்டனர். ஒரு 5 வயதுப்பிள்ளைக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. இக்கிராம வாசிகள் எம்மை மறக்கவில்லை. பலர் எம்மை வந்து சந்தித்தனர். பலர் தாம் நல்ல நிலையில் இருப்பதாகக் கூறிச் சென்றனர்.

சில மாதமாக வெளிப்பிள்ளைகளைக் கொண்ட ஆங்கில வகுப்பு வைத்திருக்கிறோம். ஒரு புரட்டஸ்தாந் குடும்பத்தின் 2 பிள்ளைகள் உறவினரான ஒரு பக்தியுள்ள கத்தோலிக்க பிள்ளையோடு அடிக்கடி வருவார்கள். இந்தப் பிள்ளை கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்திருப்பது எவ்வளவு பாக்கியம் என்று சொன்னாள். 15 நாட்களாக இவர்கள் மடத்திற்கு வந்து மறைக்கல்வி படிக்க உத்தரவு கேட்டாாகள். விவேகத்தோடு செயற்பட சகோதரி பெற்றோருக்குக் கடிதம் எழுதினா. பிள்ளைகள் ஆவலோடு படித்தார்கள். தந்தை இதை எதிர்பார்க்கவில்லை. பிதா மாசியே(Massiet) இவர்களுக்கு விருத்த சேதனத் திருவிழாவில் திருமுழுக்குக் கொடுத்தார். அதே நாளில் ஒரு இளம். பெண்ணும் மனமாற்றம் அடைந்தாள். இவள் திரிகோணமலையில் ஒரு சிங்கள வியாபாரியோடு வாழ்ந்தாள். இவர்கள் கிறிஸ்தவத்திலிருந்து விலகியபடியால் வெளியில் சந்தோஷமாக இருந்தாலும் இவளைக் குற்ற உணர்வு குழப்பிக் கொண்டிருந்தது. தனது குழந்தையை மடததுக்கு அனுப்பக் கணவனிடம் உத்தரவு கேட்டு புதிய வருடத்தன்று குழந்தையுடன் வந்தாள். தந்தை மாசியேயிடம் இவர்களை ஒப்படைத்தேன். இப் பெண் இறை அருளைப் பெற்றுத் தைரியமாக நின்று தன் கணவனுக்கும் உதவி செய்ய வேண்டினாள். கணவனின் அனுமதியுடன் அவர்களும் சேர்ந்து தானும் இணைந்து திருமறையில் திருமணத்தையும் நிறைவு செய்தாள்.

## ANNALS NO - 32

**மார்கழி 1886**

இங்கு எமது பணி முன்னேறிக் கொண்டு வருகின்றது. 3 ஐரோப்பிய சகோதரிகளும், 3 சுதேச சகோதரிகளும் ஆங்கில, தமிழ் வகுப்புகளைக் கவனிப்போர் குழுவை அமைக்கின்றனர். சில திருப்பாலத்துவ சபை, அநாதைப் பிள்ளைகளையும் வைத்திருக்கின்றனர்.

இவர்கள் பிரிவினை, பிற சமய மக்கள் மத்தியில் மரியாதை, நம்பிக்கைக்குச் சாட்சி பகர்கின்றாாகள். ஒரு நிகழ்ச்சியை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஒரு பெண் கிராமத்தில் இருந்த வீட்டை ஓய்வு காலத்தைச் செலவிடுவதற்காக இவர்களுக்குக் கொடுத்தாள். சகோதரிகள் சில நாட்களைத் தம்முடன் இருந்த பிள்ளைகளுடன் அங்கு செலவிட்டனர். தோட்டத்தில் விகாரை ஒன்றைக் கண்டதும் பிள்ளைகள் அதனை உடைத்தனர். தோட்டக்காரன் கோபித்தான். எனினும் சகோதரிகள் மன்னிப்புக் கேட்டதும், அவன் கோபம் அடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1886ம் ஆண்டு பரீட்சை முடிவுகளும் 2 பாடசாலைகளிலும் மிகத் திருப்திகரமாகக் காணப்பட்டது. ஐரோப்பிய மக்கள் நிரந்தரமற்றவர்கள். திரிகோணமலையில் எங்கும் காணப்படுகின்றனர். ஆசிரியர்கள் தம் சிறந்த மாணவர்களைப் பிரிவினை மதப்பிள்ளைகளுடன் கண்டாலும் அவர்கள் ஆன்மா கத்தோலிக்க திருச்சபையுடன் உள்ளது. இது, இந்த அழகான கடற்கரைப் பிரதேசத்தில் கஷ்டமான பணியாக உள்ளது.

# ANNALS NO - 34

**மார்கழி 1887**

என்நல்ல தாயாரே

உங்கள் ஆவலைப் பூர்த்தி செய்வதற்கு எம் சிறிய பணிகளைத் தொகுத்துத் தருகின்றேன். 1887 முதல் மாதங்களில் நோயினால் எம் மாணவரும் ஆசிரியர்களும் தாக்கப்பட்டார்கள். எம் நல்ல புரட்டஸ்தாந் வைத்தியர் கடுமையானவர் என்றாலும் புனித சூசையின் உதவியினால் எம்முடன் நல்ல முறையில் நடந்து இலவசமாக நோயாளிகளைப் பார்வையிட்டுத் தன் செலவில் மருந்தும் வாங்கித் தந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் நான் அவரைக் கேட்ட போது, "தான் நல்ல வேலை செய்வதால் மகிழ்வதாகவும் அன்புப் பணிகள் செய்ய முடியாதா?" எனவும் கேட்டார்.

தினம் தினம் அன்றாடம் வாழ்ந்து எமது ஒழுங்குகள் தேவ பராமரிப்பின் உதவியுடன் எம்மைப் புதுப்பித்துக் கொள்கிறோம். ஒரு ஆங்கிலேயர் இடைக்கிடை எமக்கு மதிய உணவு அனுப்பி வைக்கிறார். அத்துடன் ஒரு துண்டு வைப்பார். (note) ஒரு முறை அதில் "உதவி இல்லாத ஒரு விசுவாசிக்கு ஒரு இறைச்சித்துண்டு" என எழுதப் பட்டிருந்தது. வேறொரு முறை "புரட்டஸ்தாந் ஆகிய நாம் உலக செல்வம் படைத்தவர்களாக உள்ளோம். ஆனால் தாங்கள் விசுவாசக் கொடைகளைப் பெற்றிருக்கிறீர்கள்" என எழுதப் பட்டிருந்தது. நல்ல இறைவன் இவர்கள் தவறான வழியை விட்டு உண்மையைத் தழுவ அருள்புரிவாராக.

அயர்லாந்துப் போர்வீரர்கள் தம் ஓய்வு நேரம் தம் மேலதிக பணத்தையும் மடத்திற்குச் செலவிடுகின்றார்கள். எம் பிரசன்னம் அவர்களுக்குத் தம் தாய் சோதரிகளை நினைவூட்டுகின்றன. எம் யன்னல் கதவு கண்ணாடியில்லாமல் இருந்தது. தம் செலவில் மரவேலை செய்பவன் கூலியையும் கண்ணாடி வாங்கும் செலவையும் ஏற்றனர். மேலும் தாமே இவற்றுக்கு வாணிஸ்பூசத் தம் அதிகாரியிடம் உத்தரவு பெற்றுச் செய்தனர். கதவுகளுக்கும் சட்டங்களுக்கும் பெயின்ற் பூசினர். இதனால் இல்லம் துப்பரவாக உள்ளது. அதற்குப் பதிலாக நாம் குளிர்பானம் உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாறினோம். அவர்கள் நன்றியுணர்வுடன் எம் தாய்மை உள்ளத்தை ஏற்றனர். விசேடமாக எம் அறிவுரைகளைக் கேட்க ஆவலாக இருந்தனர்.

சித்திரை 22ல் சேர். சேர்ஜன் பிளாஞ்ச்(Sergent Blanehe) தலைமையில் உள்ள பான்ட் வாத்தியக்காரர் திருமலையை விட்டு வெளியேறினார். தூரச்செல்லுமுன் 30 ரூபா எம் அநாதைச் சிறுமிகளுக்கு அனுப்பி வைத்தார். அத்துடன் தனக்குப் பின்வருபவர்க்கும் கூறி அவர்களும் நல்ல தியாக சேவை புரிந்து வருகின்றனர்.

இப் போர் வீரர் நல்லவர்களாக இருந்த போதும் சிலர் வழிபாட்டுக்கு வரமாட்டார்கள். ஒரு ஞாயிறு, நற்கருணை வழிபாடு முடிந்து வரும்போது இவ்வாறான சிலரைக் கண்டு "எம் இறைவன் உங்களை ஆசிர்வதிக்கத் தேடினார். உங்களைக்காணவில்லை" என்றோம். அவர்கள் மன்னிப்புக் கேட்டு அந்த நாள் தொடங்கித் தொடர்ந்து வழிபாட்டுக்கு வந்தனர்.

தேவபராமரிப்பு, பிரான்ஸ் நாட்டிற்கும் சென்று எமக்குதவி புரிந்தனர். போர்டோவிலிருந்து ஒரு பெட்டி வரக்கண்டு மகிழ்ந்தோம். அதில் சிஸ். மாறி டெ ல குறுவாவின் வெகுமதி இருந்தது. அது திருமலையில் அவவின் ஞாபகமாக இருக்கும். ஒரு சிறிய விளக்கு நற்கருணைப் பேழையின் முன் எரிந்து கொண்டிருக்கும்.

தமிழ் வகுப்பு நன்கு நடைபெறுகின்றது. 108 பேர் பதிந்துள்ளனர். 60 பேர் சராசரியாக வருகின்றனர். இந்துக்கள் தம் பிள்ளைகளை எம்மிடம் அனுப்புகின்றனர். நாம் உண்மையான தெய்வத்தை வழிபட உதவி செய்கின்றோம். ஆங்கில வகுப்பில் பல கத்தோலிக்க பிள்ளைகள் தப்பான போதனைகள் அடங்கிய புத்தகங்களைப் படித்துப் புரட்டஸ்தாந் மதத்திற்குச் செல்லுகின்றனர்.

ஆவணி 15 ல் முதல் நன்மைக்குச் சில பிள்ளைகளை ஆயத்தம் செய்தோம். 2 இளம் பிள்ளைகளைக் குரு எம்மிடம் ஒப்படைத்துள்ளார். 12 பிள்ளைகள் அநாதையில்லத்தில் உள்ளனர். 4 பேர் திருப்பாலத்துவ சபை உதவியுடன் உள்ளனர். 2 பேருக்கு நாம் செலவிடுகின்றோம். இவர்களில் ஒரு பெண் இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவளாகி "யோசபின்" எனும் பெயரைப் பெற்றுள்ளாள். 12 வயது. தற்போது முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்கிறாள். மற்றப் பெண் றோசமுத்து. எம் வேலையில் உதவி புரிகின்றாள். நோயாளி. நகர் பாதையில் மசியே குருவால் கண்டெடுக்கப் பட்டு எம்மிடம் ஒப்படைக்கப் பட்டாள். வயது 18. இந்த யேசு மரி சூசையின் பாதுகாப்பான இல்லத்தில் நாம் பாதுகாப்பாகப் பராமரிக்கின்றோம். கூடிய நாட்கள் வாழ்வார்களாக. இவளும் இவளது சகாக்களும் மகிழ்வோடு வாழ்வார்களென்று நம்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பெயருக்கொப்ப 3 கூம்புகளைக் கொண்ட இத் திருமலையானது கடலை நோக்கியுள்ளது. இதன் இரு துறையும் இயற்கையாகவே தோண்டப்பட்டு ஒரு பக்கம் காற்றடிக்கும் போது மறு பக்கம் பாதுகாப்பாகக் கப்பல்களுக்குள்ளது. இந்நகரில் எம் சோதாரிகள் தாழ்மையுடனும் தாராள குணத்துடனும் தம் பணிகளைச் செய்து வருகின்றார்கள். படையினருடன் எமக்குறவு இருப்பதாக முன் கூறினோம். பின்வரும் சம்பவம் தலைவியின் கடிதத்திலிருந்து அத்தாட்சிப் படுத்துகின்றது.

தை 1 ம் திகதி எம் பிள்ளைகளின் பெற்றோர் அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எம்மை வந்து சந்தித்து வெகுமதிப் பொருட்கள் தந்து செல்வார்கள். இந்த வருடமும் கத்தோலிக்கப் படையினர், புரட்டஸ்தாந் மக்கள், திரு. சேர்ஜன் பிளாச் தம் நத்தார் வெகுமதிகளை அனுப்பி வைத்தனர். அத்துடன் படையினர் ஒரு விளையாட்டு ஒழுங்கு செய்து வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப் பட்டன. ஓகொனல் (Connel) என்பவர் தன் வயதையும் பாராது, எம் மடத்திற்கு வந்து தான் பரிசாகப் பெற்ற 5 ரூபாவை அநாதைப் பிள்ளைகளுக்குக் கொடுத்துச் சென்றார். அவர் தன் சேவை முடிந்து செல்லும் போது ஒரு செபமாலை கூட என்னிடம் அவருக்குக் கொடுப்பதற்கு இருக்கவில்லை. அத்துடன் மெலிசான் ஆயர் வருமுன் சில பணிகள் மடத்தில் செய்ய இராணுவத்தினர் சம்மதித்தனர். தினமும் 30 நிமிடம் தோட்டத்தைப் பண்படுத்துவதுடன் நிலத்திற்கு சிமென்ற் போட்டு வகுப்புக்கு வெள்ளை அடித்தல் போன்றவற்றைச் செய்யக் கேட்டனர். கார்த்திகை மாதத்தில் இவர்களில் ஒருவர் புரட்டஸ்தாந் மதத்திலிருந்து கத்தோலிக்கத்திற்குச் சேர்ந்துள்ளார். ஆடி மாதம் 27 ல் ஆயர் வந்து எம்மை ஆசிர்வதித்தார். பிரான்ஸ் தலைவிகளின் செய்தி பரிமாறிய பின் எம் இல்லம், தோட்டம், சக்கிறிஸ்ரி என்பவற்றைச் சுற்றிப் பார்வையிட்டார். சக்கிறிஸ்ரியில் சிஸ். மாறி டெ ல குறுவா (Sr;Marie de la Croix) வின் வெகுமதியான பூசையுடுப்புக் காணப்பட்டது. ஒவ்வொரு வியாழனும் நற்கருணை ஆசிர்வாதம் சிபோறியத்தில் செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. கதிர்ப்பாத்திரம் இல்லை. தமிழ் வகுப்புக்குப் போர்டோவிலுள்ள றூ டு மிறய் ( Rue du Mirail ) இடத்தின் சோதரிகள் கொடுத்த காணிக்கையை ஆயர் வழங்கினார். திரு. கிறின் (Mr.Green) என்பவர் "சோதரிகளின் படிப்பித்தல் பணியில் பலர் பயன் பெற வேண்டும்" என எழுதியுள்ளார். ஓர் அநாதைப் பிள்ளை திருமலையில் திருமணம் செய்துள்ளா, அவள் பெற்றுக் கொண்ட கல்வி இங்கு பயன்படும் என நம்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNALS NO - 47 (1923)

ஓர் ஆங்கில பாடசாலையும், ஒரு சுதேச பாடசாலையும் திருப்பாலத்துவ சபையின் அநாதையில்லமும் எமது அப்போஸ்தலிக்கப் பணியில் அமைந்துள்ளது. புத்த சமயப் பகுதியில் இப்பணித்தளம் அமைந்துள்ளதால் சாத்தான் தன்னால் இயன்றவரை தன் தாக்கத்தைக் காட்டினாலும் இது இறை பணியாளரின் பொறுமைக்கும், மாணவரின் நற்பாதுகாப்புக்கும் உதவுவதை வருடாந்த அறிக்கையில் சில சம்பவங்கள் காட்டி நிற்கின்றன.

என் நல்ல தாயாரே, 1923ம் ஆண்டானது அனுராதபுர உங்கள் குமாரத்திகளுக்கு சிலுவை நிறைந்த வருடமாக உள்ளது. தை மாதம் 1ம் திகதி மகிழ்ச்சியான நாளில் நகரில் மலேரியா தொற்று நோய் பரவியது. எனவே எமது மடம் கல்விப் பணியிலும் பார்க்க வைத்தியசாலையாகவே மாறியது. ஒரு பெரிய பிள்ளை இந்நோயால் இறந்து விட்டா. பாஸ்கு விழாவரையும் எம் வகுப்புகள் குழம்பியிருந்தன. பிள்ளைககளும் காய்ச்சலால் வருந்தி மெலிந்து பாடசாலைக்கு வந்தனர். அவர்களுக்கு வேலையிலும் பார்க்க ஓய்வு தேவையாக இருந்தது. எனவே இந்த நிலையில் ஆனி, ஆடிப்பரீட்சைகள் தோல்வியடையும் என நம்பினோம். ஆனால் எமது நல்ல தாயார் மாறி டி லா நற்றிவிற்றித்தாயாரின் பரிந்துரையால் நல்ல சித்திகள் கிடைத்தன. பரீட்சையின் பின்பு சகோதரிகள் தம் உடல் நலனைப் புதுப்பிக்கும் நோக்குடன் லீவுக்குச் சென்றனர். சுதேச சோதரிகள்வென்னப்புவாக்கும், ஆங்கிலச் சோதரிகள் பம்பலப்பிட்டியாவுக்கும் சென்றனர். ஆங்கு தம் வருடாந்த தியானங்களைச் செய்தனர். இதனால் மீளவும் புதுப்பிக்கப் பெற்று புரட்டாதி மாதத்தில் மீண்டும் 346 பிள்ளைகளின் படிப்பை ஆரம்பித்தனர். இங்கு புத்தரின் விகாரைகள் உள்ளன. திரு இருதய நாதரின் ஆட்சியமைவதற்கு எம் தியாக அன்றாட சேவையும், பிரமாணிக்கமும் தேவையாக உள்ளது.

மார்கழி 3ம் திகதி புனித பிரான்சிஸ் சவேரியாரின் திருவிழாவிலன்று 3 அநாதைச் சிறுவர்கள் திரு முழுக்குப் பெற்றனர். இவாகள் தமிழ் இந்து குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். வறுமையினால் தம் பிள்ளைகளை மணமுடியாத ஒரு சகோதரனிடம் ஒப்படைத்தனர். அவர் முன்பு கொழும்புத் துறையில் அ.ம.தி. குருக்களுடன் இருந்தவர். அவர் பெயர் லாசர். அனுராதபுரத்தில் முக்கியமானவர். எம்மிடம் முப்பது அநாதைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமிகள் இருப்பதை அறிந்து தம் சோதரர் பிள்ளைகளையும் கொண்டு வந்து சேர்த்தார். 16 வயதுப் பிள்ளை முதலில் வந்தா. அவள் திருமுழுக்குப் பெற்றாள். அதைத் தொடர்ந்து ஏணஸ்ரின், மாறி லூாயிஸ், மாகிறேற் (10,12வயதுப் பிள்ளைகள்) வந்து சேர்ந்தனர். தொடக்கத்தில் எல்லாம் அவர்களுக்குப் புதிதாக இருந்தது. சகோதரிகளைக் கண்டு அஞ்சினர். நாம் அவர்களை நன்கு கவனித்தோம். பின்பு ஆசிரியர், மாணவர்களுடன் சேர்ந்து கிறிஸ்தவர்களாகவும் விரும்பினர். செபங்களைப் படித்தனர். எனவே இலங்கையின் பாதுகாவலர் விழாவில் திரு முழுக்கும், மார்கழி 8ம் திகதி முதல் நன்மையும் பெற்றனர். ஏணஸ்ரின் சுதந்திரமாக வாழும் இயல்பு கொண.டவள். பச்சையாகக் காய்கறிகளைப் பறித்து மறைவில் சாப்பிடும் பழக்கம் கொண்டவள். தேவதாயின் கிருபையினால் தனது பழக்கங்களில் இருந்து விடுதலை பெற்றாள். இயேசுவின் முதல் சந்திப்பு இவர்கள் உள்ளத்தில் பதிந்து எதிர் காலத்தில் பயனளிக்கும்.

இந்தப்பிள்ளைகள் எம் தலைவிகளுக்காகவும் செபிக்கின்றனர். அத்துடன் ஸ்பெயின் "மாட்றிட்" போடிங் ஞானத்தாய்மாரின் செபங்களும் பயனள்ளவை. எனவே நாம் புதிய அருள்களைப் பணிக்கும் திருக்குடும்ப சபை முழுவதற்கும் பெறுகின்றோம். லாசரும், இறைவன் தன்னைக் கருவியாக எடுத்ததை எண்ணி மகிழ்ந்தான். தற்போது அவர்களின் நிலைமைக்காகச் செபித்து வருகின்றான்.

ஸ்பெயின் நாட்டுப் பரந்த நோக்குடைய நன்கொடையாளர்களுக்காக எம் திருப் பாலத்துவ சபைச் சிறுவர்களின் நன்றியைக் கூறுகின்றோம். ஞானப் பெற்றோர் தூர தேசப் பணிகளுக்குத் தம்மை அர்ப்பணித்தோர் பிரான்சிலும் உள்ளனர். அவர்கட்கும் நன்றி. ஒரு பாடசாலை மாணவர்கள் தம் பரீட்சைச் சித்தியின் நன்றியாக ஓர் ஆபிரிக்கச்சிறுமியைச் சுவீகரித்தனர். தம் சுய ஒறுப்பினால் கிடைத்த பணத்தைக் கொண்டு உடுப்புகள் தைத்துத் தென் ஆபிரிக்காவுக்கு அனுப்பியுள்ளனர். அச்சிறுமி வளர்ந்து வந்த பின் இறைவனின் பிள்ளையாகித் தன் ஞானப் பெற்றோரின் மீட்புக்கு உதவ முடியும். ஒரு ஆன்மாவை மீட்பவன் தன்னையே மீட்டுக் கொள்கின்றான். "ஒரு சிறியவனின் மகிழ்ச்சி பெரியது" என லூயி வெய்யோ (Louis Veuillat) எழுதியுள்ளார்.

தங்கத்தைக் காணும் போது அதை எடுக்கச் செல்பவன் மகிழ்ச்சி அடைகின்றான். கடலில் ஒரு முத்தை எடுக்கச் செல்பவன் போல் இறை பணியாளர்களும் ஓர் ஆன்மாவை மீட்கும் போது இறைவனுக்கு நன்றி கூறுகின்றார்கள். நித்திய வாழ்வின் முத்துக்கள் தான் வாழ்விலும் காலத்திலும் பார்க்க நிலைத்திருக்கக் கூடியது. இந்தச் செல்வங்களுடன் உலக செல்வத்தை ஒப்பிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNALS NO - 49 (1925)

அனுராதபுரத்தை அண்மிக்கும் போது செங்கற்களால் கட்டப்பட்ட சிறிய கட்டிடங்களைக் காணலாம். இவை டகோபா, விகாரைகள், அல்லது இலங்கையின் பழைய அரசர்களின் கல்லறைகள் ஆகும். மலைச் சாரலில் பீடங்கள் வைக்கப்பட்டு அங்கு புத்த மக்கள் தங்கள் காணிக்கையை வைத்துத் தீபங்கள் ஏற்றுவர். நாம் புகையிரதநிலையத்தில் இறங்கி அழிவுற்ற ஆயிரங்கால் மண்டபத்தின் ஊடாக எம் மடத்தை நோக்கிச் சென்றோம். எம் சகோதரிகள் சிறுவர்கள், இளைஞர்களுக்குக் கல்வி புகட்டுகின்றனர். சிறிய மடத்தின் இடது பக்கத்தில் சுதேச பாடசாலையும் வலது பக்கத்தில் ஆங்கில பாடசாலையும் காணப்பட்டது. அங்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். சிலர் விடுதியிலும் இருக்கின்றார்கள். லீவு நாட்களாயிருந்தும் வெளி மாணவர்கள் வருகை தந்து தாயாருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். தாம் பெற்றுக் கொள்ளும் கல்விக்கு நன்றி கூறினர். பலர் கத்தோலிக்கராக இருந்தார்கள். முன் பள்ளி மாணவர்கள் 40 பேர் இருந்தனர். தமிழ், சிங்கள பாடசாலை மாணவர்கள் பலர் இருந்தனர்.

148 தமிழ் மாணவர்களும் 134 சிங்கள மாணவர்களும் தாயாரின் முன் அணி வகுத்துச் சென்றனர். இவர்களுள் 50 பேரே கத்தோலிக்கர். அவர் தம் கை வேலைகளைத் தாயாருக்குக் காட்டினர். சில வருடங்களுக்கு முன்னர் இப்பிள்ளைகளுக்கு ஒரு புதுமை நடைபெற்றது. கிணற்றிலே நீர் இல்லை. பிள்ளைகள் கிணற்றைச் சூழவந்து புனித திரேசாள் வழியாகச் செபித்தனர். உடனே ஊற்றில் இருந்து நீர் வந்து பின் ஒருபோதும் வற்றவில்லை. அனுராதபுரத்தில் அழகான வீட்டுத் தோட்டங்கள் உண்டு. வாழைத்தோட்டங்களையும், அழகான பறவைக் கூட்டங்களையும் காணலாம்.

# ANNALS NO - 50 (1926)

ஆனி மாதத்தில் இலங்கை ஆளுனர் அனுராதபுரம் வந்ததாக மடத்துத் தலைவி கூறுகின்றா. 4 கத்தோலிக்கப் பாடசாலைகளும் சேர்ந்து வரவேற்புக் கீதம் இசைத்தனர். ஆங்கிலப் பாடசாலையில் இது நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அ.ம.தி.குருக்களின் மாணவன் ஒருவன் உரையாற்றினான். மடத்து மாணவி பூச்செண்டு கொடுத்தாள். ஆளுனர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். கத்தோலிக்கரைப் போற்றினார். தேசிய கீதத்தில் 'இறைவன் அரசனைப் பாதுகாப்பாராக' எனப் பாடினர். நற்கருணைப் பவனி வீதியிலே நடைபெற்றது. 2 இடங்களில் நற்கருணைப் பீடம் ஆயத்தம் செய்யப்பட்டு நற்கருணை எழுந்தேற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டது. இந்து, புத்த, முஸ்லிம் மக்கள் இதைப் பார்த்தனர். சிலர் மட்டும் மனமாற்றம் பெறுகின்றனர். மூன்றாவது பீடம் மடத்தில் தயாரிக்கப்பட்டது. இயேசு எம் இதயத்தில் தங்க வேண்டும் என்று செபித்தோம். அநாதையில்லப்பிள்ளைகளில் மூவர் 12 நாட்களுக்குள் இறந்துள்ளனர். மூவரும் சகோதரர். இந்து சமயத்தவராக இருந்து திருமுழுக்குப் பெற்றவர்கள்.

# ANNALS NO - 52 (1927)

இந்த வருடத்தில் பலர் நோயினால் துன்புற்றனர். மடத்தில் சகோதரிகளும் பிள்ளைகளும் இதனால் வேதனை அடைந்தனர். ஒரு அநாதைச் சிறுமி புரட்டாதி மாதத்தில் தொற்று நோயினால் இறந்து விட்டா. ஆசிரியர் 3 பாடசாலைகளிலும் (ஆங்கிலம், தமிழ், சிங்களம்) ஊக்கத்துடன் படிப்பித்தனர். இறைவன் இவர்கள் முயற்சியை ஆசீர்வதித்துப் பரீட்சையில் நல்ல சித்தியைப் பிள்ளைகள் பெற்றுக் கொண்டனர். பரிசளிப்பு விழாவில் மடத்துப் பிள்ளைகளுக்குப் பல பரிசுகள் கிடைத்தன. பிள்ளைகளின் உருவாக்கத்தைப் பாராட்டி அவர்கள் பணிக்குக் குடும்பங்கள் தம் உதவியை அளிக்க முன் வந்தன.

இலங்கை புதிய ஆளுனரின் சந்திப்பும் மடத்திற்கு ஊக்கத்தை அளித்தது. அவ்வறிக்கையைத் தருகின்றோம். புரட்டாதி 12ம் திகதி திரு.ஸ்ரான்லி என்பவர் திருக்குடும்ப மடத்திற்கு வருகை தந்து பங்குக் குரு, மடத்துத்தலைவி, ஆசிரியர்களால் வரவேற்கப்பட்டார். அவரின் செயலர் திரு. டைசன் (Dyson) என்பவரும் வந்திருந்தனர். அவரை மாணவர் மண்டபத்திற்கு அழைத்துச் சென்று வரவேற்புப் பாடலால் மகிழ்வித்தனர். பின்பு ஒரு போடிங் மாணவியால் வரவேற்புரை வாசிக்கப்பட்டது. "பூக்கள் அறுவடை" எனும் நாடகமும், நடித்துக் காண்பிக்கப்பட்டது.

மலர்களால் மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இவை பாடசாலைப் பிள்ளைகளின் திறமையை வெளிக்காட்டியது. இந்தக் காட்சி ஆளுனரை மிகவும் கவர்ந்தது. எனவே அவரின் உரையில் "உங்கள் வரவேற்புக்கு நன்றி கூறுகின்றேன். உங்கள் வேலையைக் கொண்டே எவ்விதமான கல்வியை நீங்கள் பெற்றுக் கொள்கிறீர்கள் என்று காண்கிறேன். இதனால் உங்கள் ஆசிரியர்களுக்கு ஆறுதல் அளிக்கின்றீர்கள். அவர்களின் தியாகத்தினால் தற்போது நீஙகள் படிக்கிறீர்கள். ஒரு காலம் உங்கள் கற்றல் வேலை முடிவடையும். ஆனால் இந்த மடத்திற்கு உங்கள் பிரமாணிக்கமான பணியினால் மேன்மை அளிக்க வேண்டும்." என்றார்.

இறுதியாகப் புறப்படுமுன் பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஒருநாள் விடுமுறை அளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ANNALS NO -53 (1929)

புத்த பிரதேசமான இந்தப் பணித்தளம் 1903 ல் நடைபெற்றது போன்ற ஒரு துன்பத்தால் இவ்வருடமும் தாக்கப்பட்டது. இதைக் குழுத்தலைவியின் கடிதத்திலிருந்து வாசித்தறிந்தோம். ஆடி 30ந் திகதி ஒரு மன நோயாளி புத்த விகாரைக்குள் நுழைந்து ஒரு கோடரி உதவியுடன் அரசமரத்தை வெட்டினான் இதற்குப் பதிலாகக் கோவிலையும் மடத்தையும் எரிக்கத் திட்டமிட்டனர். தமது இடத்தில் அது கட்டப்பட்டுள்ளது என்றனர். தேவபராமரிப்பினால் தகுந்த நேரத்தில் அதிகாரிகள் வந்து தலையிட்டனர். புத்த விகாரைக்கு அருகில் எங்கள் தேவாலயம் இருப்பதை அவர்களால் பொறுக்க முடியவில்லை. எனினும் அவர்கள் திட்டம் கை கூடவில்லை. மடம் பாதுகாக்கப்பட்டு மக்களின் அனுதாபத்தையும் பெற்றுக் கொண்டது.

ஆங்கில, தமிழ்ப் பாடசாலைப் பரீட்சைகள் வழக்கம் போல் நல்ல சித்தியைப் பெற்றுக் கொண்டன. சிங்களப் பாடசாலையில் பரீட்சை நடைபெறவில்லை. குழப்பம் காரணமாகப் பெரிய மாணவர்கள் பணியின் தேவைக்காக ஒரு கலை நிகழ்ச்சி ஒழுங்கு செய்து ஒவ்வொருவரும் தம்தம் பாத்ததிரங்களை நன்கு செய்தனர். அருட்தந்தை பெல் (Belle) உதவிப் பிரதிநிதியாக இலங்கைப் பணிகளைத் தரிசிக்க வந்தவர், இக் கலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்குவதற்காகத் தன் காலத்தை நீடித்து அனுராதபுரத்தில் தங்கினார். அத்துடன் அரச ஆளுநரிடமிருந்தும் அவருக்கு ஆதரவும் கிடைத்தது. பலர் வந்து மண்டபத்தை நிரப்பினர்.

மார்கழி 25ம் திகதி எம் அநாதைச் சிறுவரின் விழா நடைபெற்றது. கிறிஸ்மஸ் மரத்தில் ஐரோப்பிய போடிங் பிள்ளைகளின் வெகுமதிப் பொருட்கள் கட்டப்பட்டுக் குழந்தை யேசுவின் பெயரால் பகிர்ந்து அளிக்கப்பட்டன. பிள்ளைகளும் கடலுக்கப்பால் இருந்து அனுப்பிய அன்புள்ளங்களுக்குத் தம் நன்றியைத் தெரிவித்தனர்.

## ANNALS NO -54 (1930)

அனுராதபுரம் புத்த மத வழிபாடுகளுக்குப் பேர் போன இடம். புத்த பிக்குகள் நீள மஞ்சள் அங்கியுடன் காணப்படுவர். மின்சார ஒளியுடைய அரசமர விகாரையில் இருந்து இரவு பகலாக ஓயாத சத்தம். மேளவாத்தியம் மணிஓசை கேட்கும். 2 வருடங்களின் முன் அரசமரத்தைப் பற்றி ஒரு பிரச்சினை எழுந்ததால், ஏதாவது நடந்தால் தம் புத்தரைச் சாந்தப்படுத்த முயல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாட்களின் முன் ஒரு வயோதிபர் நீண்ட தூரம் பயணம் செய்து வரும் போது அவரைச் சந்தித்தோம். இரக்கத்துடன் அவருடன் உரையாடியபோது தான் அருகேயுள்ள விகாரைக்கு ஏறிச் சென்று தன் ஒரு ரூபா பெறுமதியான காணிக்கை முழுவதையும் புத்தருக்குக் கொடுக்க விரும்புவதாகக் கூறினார். இதுவே மீட்பின் பாதையென அவர்கள் நம்புகின்றார்கள். இச் சூழலில் நன்மை செய்வது மிகக் கடினம். எனினும் ஒரு ஆங்கில பாடசாலை, 2 தமிழ்ப் பாடசாலைகள், ஒரு சிங்களப் பாடசாலை, புனித திரேசாள் துணையால் முன்னேறிச் செல்கிறது. முன்பு 7 கத்தோலிக்கச் சிறுமிகளே இருந்தனர். தற்போது 16 பேர் இருக்கிறார்கள். பெற்றோர் தடை செய்யாவிடில் இன்னும் சிலர் சேர முடியும். சில புத்த சிறுமிகள் மாதா சுருவத்தை அலங்கரிக்கின்றனர். ஒரு சிறுமி வீட்டில் இருந்து பூக்கள் கொண்டு வருகின்றாள். மாதா பாதத்தில் கொண்டுபோய் வைப்பாள். வேறொரு பெண் புத்தகம் வாங்கி வாசிப்பாள். மறைக்கல்வி வகுப்புகளுக்கும் போவாள். ஒரு பெண் செபம் படித்துத் திருமுழுக்குப் பெற விரும்புகின்றாள். ஆனால் அவளுடைய பாட்டி அவளைத் தடை செய்கின்றாள்.

5 வயது ராஜா எனும் புத்த மதச்சிறுவன் சகோதரிகளின் கோவிலுக்கு வந்து நற்கருணை ஆசீரில் பங்கு பற்ற விருப்பம். ஒரு நாள் மாலை துக்கத்துடன் வகுப்பில் இருந்ததைக் கண்ட ஆசிரியர் காரணத்தைக் கேட்டபோது தனது புத்தகத்தை இழந்து விட்டதாகக் கூறினான். அப்போது ஆசிரியர் "புனித அந்தோனியாரே, என் புத்தகத்தை இழந்து விட்டேன். கண்டுபிடிக்க உதவி செய்யும்" என்று தனக்குப்பின்னே சொல்லும்படி கேட்டாள்.

3ம் முறை கூறிய போது ராஜா பெரு மூச்சு விட்டு விரைவாகச் சென்று தன் புத்தகத்தை எடுத்து வந்தான். பின்பு தலை சாய்த்து புனித அந்தோனியார், குழந்தை யேசுவின் சுருவத்திற்கு வணக்கம் தெரிவித்தான். சில நாட்களின் பின் வந்து புனித அந்தோனியார் கதைப்பாரா என அறிய விரும்பினான். அதற்கு அவ சத்தமில்லாது கதைப்பார் என்றா. அவர் குரல், எம் காதிலல்ல, இதயத்திலும் அறிவிலும் எட்டும், இதனாற்றான் உன் புத்தகத்தை எடுத்தாய் என, அவன் புனித அந்தோனியார் எவ்வளவு நல்லவர் என்றான். அன்றிலிருந்து அவன் எதிர்காலத்திட்டம் போட்டான். புனித அந்தோனியாரின் பாதுகாவலின் கீழ் பங்குக் குருவைப்போலத் தானும் ஒரு கத்தோலிக்கக் குருவாக வந்து மடத்துச் சிற்றாலயத்தில் நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்க விரும்புகின்றான். கிறிஸ்து அரசர் திருவழாவன்று ஓர் உதவி ஆசிரியரும் 25 பிள்ளைகளுடன் புதுநன்மை பெற்று உறுதி பூசுதலும் பெற்றுக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மரியாயின் பிள்ளைகள்" என்னும் பெயர் கொண்ட இளம் பெண்கள் சபை ஒன்று ஆயர் இல்லத்தில் தம் திட்டத்தை வெளிப்படுத்தியது. ஆயர் அதை ஊக்கப்படுத்தி, ஒழுங்குகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமெனவும் அன்றாட வாழ்வில் அமல மரியின் புண்ணியங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைகளையும் எடுத்துரைத்தார்.

# ANNALS NO -55 (1931)

புத்த மதச் சூழலில் உள்ள எம் மடம், மற்ற மடங்களில் இருந்து தனித்து நிற்கின்றது. அத்துடன் வேறொரு நாட்டில் நாம் இருப்பதால் அடிக்கடி நம் எண்ணங்கள் போர்டோவில் உள்ள தியான யோகக் குழுவின் பக்கம் திரும்பி அவர்களின் செபங்களையும் தியாகங்களையும் நாடி நிற்கின்றது. இதன் மூலம் எமது கஷ்டமான பணியில் நல்லபயனை அடையலாம். எனினும் இந்துக்கள் மட்டில் எமக்குச் செல்வாக்கு உண்டு. புத்த மதத்தினர், சகோதரிகளின் பணிகள் மட்டில் வெறுப்பைக் காட்டினாலும் பிள்ளைகள் இறைவன் பக்கம் இழுக்கப்படுகின்றனர். 12 வயதுடைய ஒரு சிறுமியின் தந்தை புத்த மதத்திலிருந்து புரட்டஸ்தாந் மதத்திற்கு மாறினார். சிறுமி கத்தோலிக்க மறையில் சேர விரும்பினாள். தன் வீட்டின் ஒரு மூலையில் மாதா படம் ஒன்று வைத்து, ஒரு விளக்கும் தொடர்ந்து எரிய விட்டாள். அவளின் பாட்டி கூட அங்கு வந்து தன் வணக்கத்தைத் தெரிவித்தாள். தந்தை வேலையற்று இருந்தபடியால் தன் ஏழைச் சிறுமிக்குப் பாதணி வாங்கிக் கொடுக்க முடியவில்லை. எனவே மறைக்கல்வி வகுப்பிலும் பங்குபற்ற முடியவில்லை. மார்கழி 8ந் திகதி அவள் திருச்சபையில் சேர முடியாததால் இயேசுவின் விருத்த சேதனத் திருவிழாவின் போது அவளது ஆவல் நிறைவேறும் என நாம் கூறினோம். புத்த மதத்து ராஜாவுக்கு வயது 7. பெற்றோர் தங்கள் நம்பிக்கையில் அவனை வளர்த்தனர். பாடசாலை போடிங்கிற்கு வந்தவுடன், உடனே இயேசு பக்கம் திரும்பினான். அவனது தூய, எளிய உள்ளம் எம் சமயக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டது. அடிக்கடி ஆலயத்திற்குச் சென்று கைகளைக் குவித்து நற்கருணைப் பேழையில் கண்களைப் பதித்து செபிப்பான். நற்கருணை ஆசீரில் பங்குபற்றுவது அவனுக்கு விருப்பம். ஆண்டவருக்கு என்ன சொல்கிறாய் எனக் கேட்ட போது "என் தந்தையைப் பணமுள்ளவனாக்கவும், சகோதரிகள் என்றும் மகிழ்ச்சியுள்ளவர்களாகவும், என்னை ஞானமுள்ளவர்களாகவும் பேணும்படியும் செபித்தேன்" எனறான். சகோதரி பிள்ளைகளுக்கு மீட்பர் இயேசுவின் வாழ்வையும் அவர் பாடுகள் கசையால் அடித்தல், சிலுவையில் அறைதல் போனற படங்களைக் காண்பிக்கும்போது ராஜா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை இயேசு என்று கூறி அவன் கண்களில் நீர் வடிந்தது. அவன் தந்தை ஒரு கத்தோலிக்க கல்லூரியில் சேர்த்துப் படிப்பிக்க விரும்பினார். அவனுக்கு உங்கள் செபத்தில் மன்றாடிக் கொள்ளவும்.

தற்போது எம் மடம் அழகாக உள்ளது. பசும் புற்றரையின் நடுவில் தெளிந்த நீரூற்று உள்ளது. எனவே ஒரு கெபி ஒன்று லூர்து மாதாவுக்கு ஆயத்தப்படுத்தி மாதா பக்தியை பிறசமயத்தவர் மத்தியில் பரப்ப முடியும். பழைய மடம் நீளமாக்கப்பட்டுச் சுற்றிவர அகலமான விறாந்தையைக் கொண்டுள்ளது. ஒரு விறாந்தையின் முடிவில் புனித திரேசா சுரூபம் உள்ளது. இவ்வருடம் மலேரியா அதிகம் இல்லாதபடியால் ஒழுங்காகப் பிள்ளைகள் பாடசாலைக்குச் சமூகமளித்தனர். புத்த விழாக்கள் அதிகம் சத்தம் கொடுப்பன. இரவுப்பவனிகளில் போடும் சத்தம் காதைத் துளைக்கும். எம் தோட்டத்திற்கு அண்மையில் புத்த துறவிகளின் மடம் உள்ளது. 7-10 மணி வரையும் அழுகுரலில் பிரித் ஓதுவர். ஒருவர் களைத்துப்போக இன்னொருவர் தொடங்குவர்.

ஆடி 5ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நற்கருணைப்பவனி இடம் பெற்றது. ஆலயம் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. யாழ் ஆயர் ஆடம்பரத்திருப்பலி நிறைவேற்றினார். அவருடன் பிஜியன் (Bizian) குக்ரின் (Huctin) குருக்களும் காணப்பட்டனர். ஆயர் தன் மறை உரையில் 5 அப்பம் பலுகிய புதுமை பற்றியும், நற்கருணையில் இயேசுவின் உண்மையான பிரசன்னம் பற்றியும் எடுத்துரைத்தார். மாலையில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டுப் பங்குத் தந்தையால் நற்கருணைபற்றிச் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

பவனியின் போது ஒரு சிறுவன் சிலுவையைக் கொண்டு செல்லப் பக்கத்தில் இருவர் நின்றனர். பின்னே ஒளி கொண்டு செல்லப்பட்டது. அநாதைச் சிறுமிகள், ஆங்கில பாடசாலைப்பிள்ளைகள், திருக்குடும்பச் சகோதரிகள், ஆங்கில ஆசிரியர்கள், இவர்களைத் தொடர்ந்து ஆண்கள் சென்றனர். இறுதியில் ஆயர் கதிர்ப்பாத்திரம் தாங்கியவராக வரச் சிறுமிகள் பூத்தெளித்தனர். இளைஞர் ஒளியுடன் நின்றனர். இவர்களின் பக்கத்தில் குருமுதல்வரும், அருட்தந்தை குக்ரின், பங்கு உதவியாளரும் நின்றனர். நற்கருணை வைத்த இடங்களில் ஒன்று எம் மடத்து விறாந்தையாகும். இறுதியில் பவனி ஆலயத்திற்குச் சென்று திரு இதய அபிஷேகம் நடைபெற்றது. இந்தப் பகிரங்க வழிபாடு கத்தோலிக்கரல்லாதோரையும் கவர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் பலகாலமாக எதிர்பார்த்த வைபவத்தில் மாறி லியோனித் தாயார் பங்குபற்றினார். யாழ் ஆயர் எமது போடிங்கைத் திறந்து ஆசீர்வதித்தார். அதற்காக ஆயத்தப்படுத்தப்பட்ட தோட்டத்தில் நடைபெற்ற விருந்திற்கும் தலைமை வகித்தார். பலர் இதில் பங்குபற்றி எம் இதயத்தில் எதிர்கால நம்பிக்கையைப் பதித்தனர். ஆயர் வேறு பல ஆயர்களுடன் கோவாவுக்குச் (Goa) சென்று திரும்பி வரும்போது எமது மடத்திற்கு வந்தார். 3 திருப்பலிகள் எமது மடத்தில் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு இறை மகிமைக்காகவும் ஆன்ம மீட்புக்கும் பணிபுரிய எமக்கு ஊக்கம் அளிக்கின்றார்.

5வயது ராஜா என்னும் புத்த மத சிறுவன் சகோதரிகளின் கோவிலுக்கு வந்து நற்கருணை ஆசீரில் பங்குபற்ற விரும்பினான். ஒருநாள் மாலை துக்கத்துடன் வகுப்பில் இருந்தலாக் கண்ட ஆசிரியர், காரணத்தை கேட்டபொழுது தனது புத்தத்தை இழந்துவிட்டதாகக் கூறினான். அப்போது ஆசிரியர் "புனித.அந்தோனியாரே என் புத்தகத்தை இழந்துவிட்டேன். கண்டு பிடிக்க உதவி செய்யும்"என்று தனக்குப் பின்னே சொல்லும்படி கேட்டாள்.

மூன்றாம் முறை கூறியபோது இராசா பெருமூச்சு விட்டு விரைவாகச் சென்று தன் புத்தகத்தை எடுத்து வந்தான். பின்பு தலை சாய்த்து புனித அந்தோனியார் குழந்தை இயேசுவின் சுரூபத்திற்க வணக்கம் தெரிவித்தான்.

## ANNALS NO - 56 (1932)

தை மாதத் தொடக்கத்தில் திருமதி தொம்சன் (இலங்கை ஆளுனரின் மனைவி ) எம் மடத்திற்கு வருகை தந்தார். குழுச் சோதரிகள், ஆங்கில, தமிழ், சிங்கள வகுப்பு மாணவிகள் அவவை நன்கு வரவேற்றனர். இதற்கு நன்றி கூறி மறுநாள் அநாதைப் பிள்ளைகளுக்குப் பொருட்கள் அனுப்பி வைத்தார். எம்மையும் மறக்கவில்லை. இவ் வருடத்தில் உபதலைவிச் சகோதரி பலமுறை இவ்விடம் தரித்துச் சென்றார். கொழும்பில் இருந்து யாழ் வரும் போதும் யாழில் இருந்து கொழும்பு செல்லும் போதும் தரித்த சில வேளைகள் சகோதரிகளுக்கு ஊக்கத்தையும், மகிழ்ச்சியையும் அளித்துள்ளன.

புதிதாக நியமனம் பெற்ற ஐரோப்பிய பாடசாலை அதிகாரி பரீட்சைச் சித்தியைப் பற்றி அறிக்கையில் பாராட்டி எழுதியுள்ளார். ஆங்கில வகுப்பில் 106 மாணவர்களில் 16 பேர் மட்டும் கத்தோலிக்கர். 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் விடுதியில் உள்ளனர். 6 சுதேச சகோதரிகளின் முயற்சியினால் பரீட்சையில் நல்ல முடிவுகள் கிடைக்கின்றன. அவர்கள் 146 சிங்கள வகுப்பு மாணவர்களுடனும் 174 தமிழ்ப் பாடசாலை மாணவர்களுடனும் 37 அநாதைப்பிள்ளைகளுடனும் பணி புரிகின்றனர்.

யாழ் ஆயர் அனுராதபுரப் பணிகளில் தந்தைக்குரிய ஆர்வத்தைக் காட்டுகின்றார். எம் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார். ஆடி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையில் பங்குக் கோவிலில் திருப்பலி நிறைவேற்றியபின் நகரைச் சுற்றி நற்கருணை வலம் வந்தது. புரட்டஸ்தாந்து மக்கள் பலர் இதில் பங்கு பற்றினர். நகர் காவலர் புத்த மக்களின் பிடியிலிருந்து பாதுகாத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அமைதியாகவும் மரியாதையுடனும் காவல் புரிந்தனர்.

மடத்தின் ஒரு பகுதயில் நற்கருணைப்பீடம் ஒன்று சகோதரிகளால் தயாரிக்கப் பட்டிருந்தது. அவரின் பாதத்தடியில் மக்கள் அமர்ந்திருந்து அருளையும் ஆசியையும் பெற்றுக் கொண்டனர். அவர்களுள் ஒருவன் எம்மடத்தில் வேலை செய்யும் நல்ல தம்பி எனும் இந்து மதச்சகோதரன். அவர் விசுவாசம் எனும் கொடையைப் பெற்றுக் கத்தோலிக்கனாக வர விரும்புவதாக எமக்குத் தெரிவித்தார். அதற்கு முதல் மடுத்திருப்பதிக்குச் சென்று வர விரும்பியதால் லீவு கொடுத்தோம். புதிய ஆடை உடுத்து எம் சகோதரி கொடுத்த பை ஒன்றில் தன் பணத்தைப் போட்டுக் கொண்டு புதையிரத நிலையத்திற்குச் சென்றவருக்கு ஒரு துன்பம் காத்திருந்தது. கொழும்பிலிருந்து 54 மைல் தூரத்திலுள்ள அனுராதபுரத்திற்குப் புகையிரதம் வரவேண்டும். அவ்வேளை இவன் யாரோ ஒருவனின் கைப்பையை எடுத்திருக்க வேண்டுமென்று 2 பொலிஸ்மார் சந்தேகப்பட்டனர். எப்படிச் சொன்னாலும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மடத’திற்கும் வர விரும்பாததால் கபடற்ற அவன் உள்ளத்தை அறிந்து அவனை விட்டனர். உடனே தன் பயணத்தைத் தொடர்ந்தான். மடுவுக்குச் சென்றதும் தன் ஆவலை மடுமாதாவுக்கு எடுத்துச் சொன்னான். மாதாவின் விண்ணேற்புத் திருநாளின் மறுநாளில் நல்ல தம்பி திருமுழுக'குப் பெற்று யுவக்கீம் எனும் பெயர் பெற்றான். சில கிழமைகளின் பின் முதல் நன்மை பெற்றார். நல்ல பக்தியுள்ள கிறிஸ்தவனாக வாழ்கின்றான். ஆவணி மாதத்திலும் 8 சிறுமிகள் புதுநன்மை பெற்றுக் கொண.டனர். புத்த மதம் பரவியுள்ள இந்நாட்களில் இது ஓர் ஆறுதலாக அமைந்தது.

1932ம் ஆண்டின் இறுதி நாட்களில் புத்த மதத்தினர் விகாரையின் முடிசூடடுதல் வைபவத்தைச் சிறப்பாகச் செய்யத் தீர்மானித்தனர். பிரமிட் வடிவத்தில் இலங்கையின் பழைய அரசர்களின் சமாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கட்டிகளினால் கட்டப்பட்டிருக்கும். இந்த வைபவத்தின் போது தங்கச் சிலைகள், விலையேறப்பெற்ற இரத்தினக் கற்கள் அதனுள் வைக்கப்படும். 3 முறை வெடிச் சத்தம் கேட்டதும் எல்லோரும் நிலத்தில் விழுந்து பணிவர். பின்பு சீமந்தினால் மூடப்படும். 15 நாட்கள் விழாக் கொணடாடப்படும். இலங்கையின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் இந்தியா, சீனா, யப்பான் ஆகிய நாடுகளில் இருந்தும் மக்கள் வருவர். 2,50000 மக்கள் வருகை தந்ததாகக் கூறினர்.

இவர்கள் "தம்மையொத்த ஒருவரைக் கொல்லலாம், ஆனால் ஒரு மிருகத்தைக் கொல்லக் கூடாது" என்ற கோட்பாடு கொண.டவர்கள். ஒருநாள் 3 பேர் எம் தோட்டத்திலிருந்து சாப்பிடக் கேட்டனர். நாம் மறுத்த போது அதை ஏற்றுக் கொண்டனர். இன்னொரு முறை ஓர் ஏழை மனிதன் வருவதைக்கண்டு வாசல் காப்பாளராகிய சகோதரி பயந்ததைக் கண்டு "பயப்படாதே" எனக் கூறித் தன் கார்மேல் மாதா உத்தரியத்தைக் காண்பித்துத் தான் புத்த மதம் இல்லை என்றார்.

முன்பு புத்த மதத்தினரின் புனித தலமாகிய இடத்தில், மடமும், பங்குக் கோவிலும் கட்டப்பட்டுள்ளது. இறைபராமரிப்பு எம்மைக் காப்பாற்றி வருகின்றது. குழுச்சோதரிகளின் செபமும், அநாதைச்சிறுமிகளின் வேண்டுதலுமே இதற்குக் காரணம் எனலாம். அநாதைச் சிறுமிகள் கிறிஸ்மஸ் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர். ஐரோப்பாவிலிருந்து வந்த உடுப்புகளைப் பெற்றுக் கொண்டனர்.

கிறிஸ்மஸ் குடிலின் முன் முழந்தாள் படியிட்டுக் குழந்தை இயேசுவிடம் இவ்வாறு செபித்தனர்."எங்கள் இறைவனே, திருக்குடும்பத் தாயார்மாரை நிறைவாக ஆசீர்வதித்தருளும். அத்துடன் வெகு துாரத்திலிருந்து எமக்கு உதவி புரியும் எல்லா நன்கொடையாளர்களையும் ஆசீர்வதியும்."

## ANNALS NO - 57 (1933-1934)

எமது ஆங்கில, தமிழ், சிங்கள 3 பாடசாலைகளிலும் மாணவர் தொகை அதிகரித்து வருகின்றது. 475 மாணவர்களில் 16 பேர் விடுதியில் இருக்கின்றார்கள். முன்பு புரட்டஸ்தாந்து மதத்தைச் சார்ந்த பழைய மாணவி தற்போது பாடசாலை அதிகாரியாகப் பணி புரிகின்றா. எமது ஆங்கிலப் பாடசாலையின் முன்னேற்றத்தைப் பாராட்டினா. தி.கு.சபைச் சகோதரிகளால் உருவாக்கப்பட்ட இவவைக் கல்வி அதிகாரிகள் பாராட்டினர். சுகாதாரக் கண்காட்சி ஒன்று நடாத்தப்பட்டது. இதற்குப் புத்த, புரட்டஸ்தாந் அதிகாரிகள் மத்தியஸ்தம் வகித்தனர். ஆங்கிலப் பாடசாலை 6 பரிசுகளையும், தமிழ்ப் பாடசாலை 2 பரிசுகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பாடசாலை ஒரு பரிசையும் பெற்றுக் கொண்டது. இயக்குனர் சகோதரி, மனையியல் கல்விக்கு ஒரு சான்றிதழ் பெற்றுக் கொண்டார். அவ்வேளை, புத்தமத கல்வி அதிகாரி நமது மடத்தை நன்கு புகழ்ந்துரைத்தார். இங்கு நன்மை செய்வது மிகவும் கஷ்டமான பணியாகும். இந்நகரம், இலங்கைத் தீவின் புத்த மத மையமாக உள்ளது. எனினும் 1934ம் ஆண்டிலே ஓர் அநாதைச் சிறுமி திருமுழுக்குப் பெற்று மேரி எலிசபேத் எனும் பெயரைப் பெற்றாள். மேலும் 3 இளம் பெண்கள் திருமுழுக்குப் பெற்றனர். இது மிகவும் ஆறுதல் அளிக்கின்றது.

மார்கழி 8ந் திகதி 22 பிள்ளைகள் முதல் நன்மை பெற்றனர். சுதேச பசடசாலையைச் சேர்ந்த இவர்கள், தங்கள் பெற்றோருடன் திருவிருந்தில் பங்கு கொண்டனர்.

ஐரோப்பாவிலிருந்து வந்தபோது நம் யாழ் ஆயர் எமது மடத்தையும் சந்தித்துச் சென்றார். அதே போன்று பொதுச் சங்கத்திற்குச் சென்று திரும்பி வரும்போது எம் உதவி இயக்குனரும் இங்கு வந்தார். போர்டோவில் பெற்றுக் கொண்டவைகளை எம்முடன் பகிர்ந்து கொண்டமையால் ஆறுதல் அடைந்தோம்.

# ANNALS NO - 59 (1937- 1938)

கொழும்பு- யாழ் புகையிரதப் பாதையில் எமது மடம் அமைந்துள்ளதால் சபைத் தலைவரின் முதற் சந்திப்பும், பின்பு தமது பணியை நிறைவு செய்து திரும்பிப் போகும் போதும் எம்மிடம் வந்து சற்றுத் தங்கிச் சென்றார். அவரை வரவேற்பதில் பெரு மகிழ்ச்சியடைந்தோம். அவரும் எம்மை ஊக்கப்படுத்திச் சென்றார். புத்த, இந்து, புரட்டஸ்தாந்து மக்களிடையே வாழும் எமக்கு மனமாற்றங்கள் அரிதாகவே இருக்கும். எம் பணியின் சித்தி குறைவாகவே இருக்கும். எனினும் எம் கல்வியின் நோக்கம்: பிள்ளைகளைப்பரீட்சைக்கு ஆயத்தம் செய்வது அல்ல, இயசுவை அறிந்து நேசித்து அவருக்குப் பணிவிடை புரிவதற்கு உதவி செய்ய வேண்டுமென்றார்.

எமது 3 பாடசாலைகளையும் (தமிழ், சிங்கள, ஆங்கில) சந்தித்தார். மருதமடு அன்னையின் திருவிழாவின் போது அங்கு சென்று பாடற் திருப்பலி நிறைவேற்றினார். யாழ் ஆயர் கியோர்மார் ஆண்டகையும் இலங்கையின் 5 மறைமாவட்டங்களில் இருந்தும் 34 குருக்கள் சமூகமாயிருந்தனர். எல்லா மதங்களிலுமிருந்தும் 50,000 யாத்திரிகர்கள் வருகை தந்துள்ளனர். எல்லோரும் பயபக்தியுடன் தேவதாயின் அருளையும், ஆசியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டினர். பின்பு லூர்து யாத்திரிகர்கள் நீர் எடுத்துச் செல்வது போல், சிறிது மண்ணை எடுத்துச் செல்வர். பாம்புக் கடியில் இருந்து இம் மண் அவர்களைக் குணமாக்கும். பாம்புக் கடி ஏற்பட்டவுடன் சிறிது மண்ணை எடுத்துத் தேவதாயை வேண்டிய பின் உட்கொண்டால் மரண பயம் ஏற்படாது.

அருட்தந்தை குக்ரின் (Huctin) யாத்திரிகர்களின் இயக்குனராக இருந்து மாதாவின் மகிமைக்காகத் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி மாதா பக்தியை எங்கும் பரப்பி வருகின்றார். மடுத்திருவிழா முடிவடைந்ததும் நற்கருணை விழா அனுராதபுரத்தில் நடைபெறும். மடு யாத்திரிகர்கள் அங்கும் தங்கி நின்று பவனியில் பங்குபற்றிச் செல்வர். அதிகாரிகள், பிறசமயத்தவர்கள் எதிர்ப்புத்தெரிவிக்காது எல்வோரும் பாதையோரம் நின்று அமைதியாக நற்கருணையைப் பார்ப்பார்கள்.

1938ம் ஆண்டு யாழ் முதல்வர் அருட்தந்தை பிஜியன் (Bizien) நற்கருணை வழிபாட்டிற்குத் தலைமை தாங்கினார். இறுதிப் பவனியின் போது எம்மடத்திலும் இயேசு தங்கிச் சென்றார். தை மாதத்தில் புதிய அநாதையில்லத்தை ஆசீர்வதித்தார். பிள்ளைகளின் தொகையும் கூடுகின்றது. வருடத்தின் முதல் நாள் புனித சூசை, யோசேப்பின் எனும் சிறுமியை அநாதையில்லத்திற்கு அனுப்பினார். முதலில் தன் நண்பிகளுடன் சேர மறுத்தாலும் பின்பு சூசையப்பர், நல்ல பிதாவின் துணையால் தன் பழைய வாழ்வை விட்டு எம் மறையைப் பின்பற்றுகின்றார். ஐப்பசி 9ந் திகதி யாழ் ஆயர் அனுராதபுர மேயப்புப் பணிக்கு வருகை தந்து 34 மடத்துப் பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் அளித்தார். தூயஆவியைப் பற்றி 3நாட்கள் தியானம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநாகல்

## பாகம் II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நல்ல தாயாரே!

எனது புதுவருட வாழ்த்துக்கள் தை 1ம் திகதிக்குக் கிடைக்காவிடினும் நான் இதயத்தால் இந்த நாளில் உங்களோடு இருப்பேன். எங்கள் தெய்வீக எஜமான் உங்களுக்காகவும், உங்கள் பாரிய குடும்பத்திற்காகவும் நீங்கள் ஆசிப்பதை அளித்தருள வேண்டுமென்று எங்கள் செபத்திற்குச் செவிசாய்ப்பாராக!

15 நாளின் முன் என் புதிய பணிக்கு வந்துள்ளேன். சகோதரிகள் பிள்ளைகள் என்னை அன்புடன் வரவேற்றனர். 2 நாட்களுக்கு முன் ஆயர் சகோதரிகள் யோசெவ், பற்றிக் இருவரையும் கூட்டிச் சென்று விட்டார். ஆயரின் பெருந்தன்மையை எடுத்துரைக்க முடியாது. பிரயாணத்தின் போதும், குருநாகலில் இருந்த போதும் தந்தைக்குரிய அன்புடன் எமக்கு உதவி செய்தார். எமது வீடு சிறியது. வேறொரு வீட்டை விரும்பியும் முடியாத காரியம். எனவே நாம் இருக்கும் வீட்டைத் திருத்த முடிவு செய்துள்ளோம்.

இருமுறை வகுப்புக்களைத் தரிசித்தேன். ஆங்கில வகுப்பில் 22 பிள்ளைகளும், சிங்கள வகுப்பில் 10 - 12 பிள்ளைகளும் இருக்கின்றார்கள். இதில் ஒரு புத்தபிள்ளையும் ஏனையோர் கத்தோலிக்கரும ஆவர். ஆங்கிலேயர் புரட்டஸ்தாந்தர். புரட்டஸ்தாந்த ஆயர் எமது பணிகளை விரும்பவில்லை. எனினும் இறைவனின் துணையுடன் எல்லாவற்றையும் வெல்வோம். எங்களுடன் இருக்கும் புரட்டஸ்தாந்து பிள்ளைகள் சந்தோஷமாக இருக்கிறார்கள். பெற்றோர்களும் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டதைப் பற்றி நம்பிக்கையோடிருக்கிறார்கள்.

**5 தை 1871**

பிரான்சில் இருந்து வரும் உங்கள் கடிதத்தைப் பார்க்கஆவலோடு காத்திருந்தோம். சேவியர் தாயார் கடிதமும், நீங்கள் அனுப்பிய செய்திகள் அடங்கிய பத்திரிகையும் (செய்தித்தாள்) எங்களுக்கு அனுப்பியிருந்தா அது எமக்கு மகிழ்ச்சியளித்தது.

எனது கடைசிக் கடிதத்தின் பின்பு இங்கு புதிதாகச் செய்திகள் இல்லை. புரட்டஸ்தாந்து ஆசிரியர் எமக்கு எதிராகச் சதித்திட்டம் செய்வதாகக் கேள்விப்பட்டோம். நாங்கள் இறைவனின் கரங்களில் தங்கி வாழ்கிறோம். அவர் எம்மைப் பராமரித்துக் காப்பாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற திங்கட்கிழமை எமது மடத்தில் முதன் முதலாகத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. நாமனைவரும் ஓர் இல்லத்தில் இயேசுவோடு வாழ்கின்றோம், என்ற மகிழ்ச்சி. நாம் சாட்சியமாக வாழ்வது தான் நாம், தெய்வீக எஜமானுக்குச் செலுத்தும் நன்றிக்கடனாகும். ஒருவர் ஒருவரை அன்பு செய்து அவருக்குத் தகுந்த பத்தினிகளாக வாழும் போது இறைவன் ஆறுதல் அடைகின்றார்.

### 3. மாசி 1871

உங்களுக்கு எழுதத் தாமதித்து விட்டேன். எவ்வாறு உங்களிடம் இருந்து செய்திகளைப் பெற்றுக் கொள்ளாமல் இருக்க முடியும். எங்கள் பிரான்ஸ் நாட்டையும் எங்கள் குடும்பத்தையும் பற்றி அறிய மிகவும் ஆவலோடு இருக்கிறேன்.

குருநாகலில் உங்கள் புத்திரிகள் நன்றாகப் பணிசெய்கிறார்கள். எனது அன்பான நல்லதாயாரே! அவர்கள் எப்பொழுதும் இறைவனை அன்பு செய்தும், தங்கள் தலைவிகளையும் அன்பு செய்து வருகிறார்கள்.

நாங்கள் மிகவும் அமைதியாக இருக்கிறோம். போன்ஜீன் ஆயர் இத்தீவில் ஒரு பிரபல்யமானவர். புரட்டஸ்தாந்தவர்களுக்கும் அவ்வாறு தான். இருந்தும் புரட்டஸ்தாந்தர் ஆயருக்குக் கொஞ்சம் பயந்தவர்கள். எங்கள் பிள்ளைகள் மிகவும் நல்லவர்கள். எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் தம் ஆசிரியர்களுக்குப் பணிந்து அவர்களுடன் அன்பாக நடந்து கொள்வர். இறைவனுக்கு நன்றி. இந்த மனப்பான்மை அவர்களுக்கு அதிகம் உதவி செய்ய வழியாக அமையும். ஆங்கில வகுப்பில் 6 புரட்டஸ்தாந்து சகோதரிகள், பிள்ளைகளும் ஒரே குடும்பத்தவர். புரட்டஸ்தாந்து ஆயர் தன்னால் இயலக்கூடுமானவற்றைச் செய்கிறார். தங்களுடைய பெற்றோரையும் கொண்டு வரவிரும்பினார். ஆனால் முடியவில்லை. எங்களுடைய பாடசாலையில் இருந்து அவர்களை எடுக்க விரும்பினர். தை மாதம் 1ந் திகதி எங்கள் பாடசாலையில் 3 ஆங்கிலப் பிள்ளைகள் 4 சிங்கள பிள்ளைகள் இருந்தார்கள். இவ்விடத்து மக்கள் எம்மை மிகவும் அன்பு செய்கிறார்கள். தங்கள் வெகுமதிகளைக் கொண்டு வந்து தருகின்றனர்.

மூன்று கிழமைகளுள் 8 நாட்களாக தொடர்ச்சியான மழை பெய்தது. ஒரு நாள் மாலை நேரம் எங்கள் சகோதரிகள் குடைகளை விறாந்தையில் இருந்து எடுக்க மறந்து விட்டார்கள் அடுத்த நாள் காலை பூசைக்குப் போவதற்குக் குடையைக் காணவில்லை. தோட்டப் பக்கமாகப் போன ஒருவனைக் கண்டார்கள். அவன் எடுத்துக் கொண்டான் ஒரு ஆயத்த கன்னிகையின் உடுப்புகளும் மறைந்து விட்டன. எனினும் அன்று மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் ஒரு நல்ல சிங்கள மனிதன் களவு போன குடைக்குப் பதிலாக 2 ஐரோப்பிய குடைகளைக் கொடுத்தார். இதை ஏற்றுக் கொள்ளும்படி அவர் கவனத்தோடு எம்மைக் கேட்டுக் கொண்ட மாதிரி எம்மைத் தொட்டது. இறைவனின் பராமரிப்பை இந்த உதவியினால் ஆழமாக உணர்ந்தோம்.

ஒரு நகைச் சுவைச் சம்பவத்தைக் கூறலாம் என்று நினைக்கிறேன். எங்களுடைய சாப்பாட்டறை கோவிலுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. ஒரு நாள் இரவு உணவின் போது Sr. Mary சிங்களத்தில் Sr. Josephineக்கு ஏதோ கூறினா. என்னைத் தவிர எல்லோருக்கும் நன்கு விளங்கியது. உடனே என்னைக் கோவிலின் பீடத்தடிவரை கூட்டிக் கொண்டு போய் 'அசையாதே' என்றனர். பின்பு அடிக்கும் சத்தம் கேட்டது. நான் ஏதோ தீங்கிழைக்கும் பிராணியாக இருக்கலாமென்று நினைத்த போது என்னை உள்ளே வரும்படி கூறினர். கதவின் கீழே ஒரு பாம்பு என நினைத்துத் தடியால் அடித்தனர். அது அசையாதிருப்பதைக் கண்டு இறந்து விட்டது என நினைத்தனர். ஆனால் அது ஒரு உருட்டிய துவாய் (சேவியற்) என்பதை அவர்கள் அறியவில்லை.

**25 - மாசி**

குருநாகலில் நாம் நன்கு கவனிக்கப்பட்டு நன்றாக இருக்கிறோம். நன்மை செய்வதற்காக எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்று புரட்டஸ்தாந்து மதத்தினரும் சொல்வார்கள். நாம் ஒரு பாடகர்குழாமை ஒழுங்கு செய்து ஒவ்வொரு ஞாயிறும் நற்கருணை ஆசீர்வாதத்திற்குப் பாடுவோம். இதனால் பலர் கவரப்பட்டு கோவிலுக்கு வருவார்கள். 15 நாட்களுக்கு முன் எமது பத்திரிகையில் பாடலைப் புகழ்ந்து எம்மை Holy Sisters என்று பெயரிட்டனர்,என்று ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்கள். எனது நல்ல தாயாரே! நாம் பிரான்சில் இருந்தால் எம் வாழ்நாளில் இவ்வாறு புனித பட்டம் கொடுக்க மாட்டார்கள். Fr. Boutin நாம் நாட்டைத் துறந்தது நல்லது என்றார். புரட்டஸ்தாந்தர் எமக்கு வேறு பிரச்சினைகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இது சாத்தனின் வேலை.

குருநாகல் பட்டினத்தில் மக்கள் மிகவும் ஏழ்மையானவர்கள். சிறிய குடிசைகளில் தான் வாழுகிறார்கள். எமது இடமும், எமது வேலைகளுக்குப் போதியதாக இல்லை. ஆயரும் எமது இடத்து உரிமையாளரும் ஏதோ ஒரு நல்ல முடிவை எடுத்து வசதி செய்வாரென்று நம்பி எல்லாவித கஷ்டங்களையும் அனுபவித்து இவற்றில் இருந்து விடுதலை பெற ஆண்டவரை நம்பியுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள பிள்ளைகள் பெரும்பாலும் தன்னிஷ்டமானவர்கள். பாடசாலைக்கு ஒழுங்காக வருவதில்லை. காலநிலையும் மிகவும் சூடு காயச்சலால் பீடிக்கப்படாவிட்டால் வருவார்கள். இதுவரைக்கும் ஒரு சிங்கள புத்த சமய சிறு பிள்ளைதான் எங்களுடன் இருக்கிறா.

புத்த சமயத்தினர் உருவமற்ற சிலைக்கு வணக்கம் செலுத்தி தங்களுடைய கடவுளுக்கென்று விகாரைகளையும் கட்டியெழுப்பு கிறார்கள். ஒரு மலைப்பாறையில் உயரமான சிகரத்தில் விகாரை ஒன்று கட்டி பவனியாக அங்கு சென்று வணங்குவர்.

சில காலத்துக்கு முன் ஒரு கத்தோலிக்க குடும்பத்துடன் அறியாசையுடன் ஒரு புத்த விகாரையைப் பார்க்கச் சென்றோம். முதல் இடத்தில் கால் வைத்ததும் ஒரு துன்பமான உணர்வை அனுபவித்தேன். நான் விரைவாக அவ்விடத்தை விட்டு வெளியே வந்து விட்டேன்.

**14 - பங்குனி**

இன்று உங்கள் நல்ல கடிதம் கிடைத்தது, எல்லோருக்கும் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. எங்களுடைய அருமையான பிரான்ஸ் நாட்டுக்கு நல்ல ஒளிமயமான காலம் கிடைக்கப் போகின்றது. இறைவன் வாழ்த்தப்படுவராக! ஆனால் வடபகுதி மக்களும் எமது சகோதரிகளும் எவ்வளவோ துன்ப வேதனைககூடாகப் போய்க் கொண்டிருந்தார்கள். எமது அன்பான குடும்பத்தை இறைவன் பாதுகாத்து வருவதற்காக அவருககு நன்றி கூறுவோம்.

என் நல்ல தாயாரே! இந்த நாட்களில் எமக்கு ஓர் இடவசதியைத் தேடிக்கொண்டிருக்கிறோம். நாம் வசிக்கும் வீடு மிகவும் சூடானது. குறிப்பாக வகுப்பறைகள் இவ்வாறு சூடு தொடர்ந்து போனால் பிள்ளைகளுக்கும், சகோதரிகளுக்கும் அவர்களின் சுகத்துக்குப் பாதிப்பு ஏற்படுமென்று பயப்படுகின்றோம். ஆயரும் Fr. Salun அவர்களும் அரசிடமிருந்து அவசிய உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு எமக்கு அறிவித்திருககிறார்கள். இறைவனின் அருளுடன் நன்மை கிடைக்கும் என்று எண்ணுகின்றேன். எமது பிள்ளைகளையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். அவர்களிடையே அதிசயமான நல்ல மனபபோக்கு காணப்படுகிறது. Sr. Stanislaus மறைக்கல்வி படிப்பிக்கின்றா.

## 13. சித்திரை

எமது அதி சிரேஷ்ட தலைவர் சுவாமியின் திருநாளை வெகுசிறப்பாகக் கொண்டாடினோம். எமது சிற்றாலயத்தில் நற்கருணை ஆசீர்வாதம் வைக்கும்படி ஆயர் உத்தரவு தந்தார். Fr. Boutin தங்களுடைய இசைக்கருவி (Harmonium) யைத் தந்தார். இவற்றின் உதவியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறிய விழா பயபக்திக்குரிய மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. பின்னேரம் பிள்ளைகள் ஒரு சிறிய நாடகம் நடித்து எல்லோரையும் மகிழ்வித்தனர்.

ஆயர் தமது குதிரையையும் வாகனத்தையும் விற்று யாழ்ப்பாணத்திலுள்ள அநாதைப் பிள்ளைகளுக்கு உதவி செய்தார். இதைக் கேள்விப்பட்ட குருநாகல் கத்தோலிக்க மக்கள் இந்த நாடகத்தைத் திரும்பவும் மேடையேற்றிக் கிடைக்கும் பணத்தை ஆயருக்குக் கொடுக்கலாம் என்று எனக்குக் கூறினர். ஆயரும் உத்தரவு கொடுத்தார். 300 பிராங் கிடைத்தது. எல்லோருக்கும் மகிழ்ச்சி.

நகர மக்கள் தங்கள் நன்மைத் தனத்தை எமக்குக் காண்பிக்கின்றனர். புதிய அரசாங்க அதிபரும், மனைவியும் மிகவும் உதவியாக இருக்கிறார்கள். எங்கள் கொண்டாட்டத்திற்கு அவர்களும் சமூகமளித்தனர். முதலியார் ஒரு கத்தோலிக்கர். உங்களுடைய குமாரத்திகளிலே மிகவும் அன்புடையவர். பிள்ளைகளும் அதிகம் நல்லவர்களாக வருகிறார்கள். இங்கே இலகுவாக மிகவும் நன்மை செய்யலாம்.

தீவு முழுவதையும் அம்மை வியாதி தாக்கியது. இங்கேயும், யாழ்ப்பாணத்திலுமுள்ள சகோதரிகள் காப்பற்றப்பட்டனர்.

## 8 - வைகாசி

பரீசில் இருந்து நமக்குக் கிடைக்கும் செய்திகள் நல்லனவாக இல்லை. எங்கள் சகோதரிகளையும் அதிசிரேஷ்ட குரு முதல்வரையும் நினைக்கும் போது பயமாக இருக்கின்றது. பிரான்சின் ஏனைய பகுதிகளைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அங்கே படையெடுப்பு புரட்சிகள் இடம்பெறவில்லை என்று நம்புகிறோம். கலகக்காரரால் சிறைப்படுத்தப்பட்ட 300 குருக்களுள் எங்களுடைய குருக்கள் இல்லை என்பதை உங்களுடைய மறுகடிதத்தில் உறுதிப்படுத்துவீர்களென்று நம்புகிறோம்.

எங்களின் பணி வழமைபோல் நடைபெறுகின்றது. புரட்டஸ்தாந்தருக்கு எப்பொழுதும் எங்களோடு ஒரு எதிர்ப்புத்தான். பத்திரிகையிலும் எழுதினார்கள். எங்களுடைய பரிசுத்தமான சடங்கு முறைகளைத் தங்களுடைய கோவில்களிலும் விகடமாகச் செய்வார்கள். எம்மை அமைதியாயிருக்க விடுகிறார்கள். சில மாதங்களாக அவர்களுடைய பாஸ்ரர் சுகவீனமுற்றிருந்தார். பதிலாக வந்தவரைத் தெரிவு செய்வது அவர்களுக்குக் கஷ்டமானதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இருந்தும் அவர்களிற் பெரும்பாலானோர் எமக்கு உபயோகமாக இருக்கிறார்கள். ஒரு நாள் முதலியார் எம்மிடம் வந்து சிங்களத் தலைவரைச் சந்திக்கும்படி கேட்டார். அவர் எமக்கு உதவி செய்வார். 50 புத்தகங்கள் அவரிடம் இருந்து பெற்று உங்களுக்குத்தந்தால் நீங்கள் பயன்படுத்தலாம் என்றார். உயர்ந்த தலைவர்களைச் சந்திப்பது தான் இந்நாட்டு வழக்கம், எனவே நான் போகவில்லை. முதலியார் 20 புத்தகங்களைப் பெற்றுக் கொண்டார்.

நான் இதைப்பற்றி ஆயருக்குச் சொல்லவில்லை. இதைப்பற்றி அவர் கேள்விப்பட்டால் ஆச்சரியப்படுவார்.

## 9 - ஆனி

பரிசில் இருந்து வந்துள்ள செய்திகள் எம்மைத் துயருக்குள்ளாக் குகின்றன. Sr. Trinity யின் மரணம், சேவியர் தாயாருக்கும் எங்களுக்கும் மிகுந்த கவலையைக் கொடுத்தது.

எமது பணி மெதுவாக வளர்ச்சியடைகின்றது. எல்லாவற்றிற்கும் மிகுந்த பொறுமை தேவை. எம்மிடம் வரும் பிள்ளைகளை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். புரட்டஸ்தாந்தரைப் பெரும்பாலும் தவிர்த்து விடுகிறோம். அவர்களும் 2 அல்லது 3 பேர் தங்களுடைய பெண்பிள்ளைகளுக்குச் சங்கீதம் (Music) 6 வாரங்களுக்குப் படிப்பிக்கவும் இரு மடங்காகப் பணம் தருவோம் என்றும் கேட்டனர். நான் சம்மதிக்கவில்லை.

வைகாசி மாதத்தில் மாதா இரு பிள்ளைகளை எங்களிடம் அனுப்பியிருந்தா. ஒரு பிள்ளை மிகவும் உறுதிப்பாடுள்ள புரட்டஸ்தாந்து குடும்பத்தைச் சேர்ந்தவ. அரசாங்கப் பாடசாலையில் இருந்து விலகி இங்கு வந்தா. அவ விலகியதைப் பற்றி எல்லோரும் அதிசயப்பட்டார்கள். எமது வகுப்புகள் திறமையாக நடைபெறுவதால் இங்கு வருகிறார்கள். தற்போது 37 பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களில் 23 பேர் ஆங்கிலேயர். 12 பேர் சிங்களவர்கள். 8 ஆங்கிலப் பிள்ளைகள் மியூசிக் படிக்கிறார்கள். இருவர் பூக்கள் செய்து பழகிறார்கள். எல்லோரும் வேலை செய்கிறார்கள். நான் ஆன்மீக, வீட்டுப்பணிகளை நெறிப்படுத்தி வருகிறேன். ஒருவாரத்தில் 3 முறை 'பிரெஞ்' மொழி படிப்பிக்கிறேன். சிங்களம் படிக்கிறேன். ஒரு சிங்களச் சகோதரி எனக்குப் படிப்பிக்கிறா. அவ ஆங்கிலம் பேசமாட்டா.

## ஆடி - 6

இறுதியாக எம் புதிய இடத்திற்கு வந்துள்ளோம். முன்னைய வீட்டிலும் பார்க்க விசாலமானதும், வசதியாகவும் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புகள் நடாத்த இன்னும் வசதியாகச் செய்திருக்கலாம். சிறப்பாக இலங்கையில் நாம் நன்மை செய்வதற்குச் சில பற்றாக்குறைகளை அனுபவிக்க வேண்டும். தளவாடங்களைப் பயன்படுத்துவதில் மிகவும் ஏழ்மையை அனுசரிக்கிறோம். ஒவ்வொரு சகோதரிக்கும் ஒரு நாற்காலி தேவையான இடங்களுக்கு எடுத்துச் செல்வர் முன்பு இருந்த வீட்டு உரிமையாளரின் பொருட்களை அங்கேயேவிட்டு வந்தோம். நாம் வந்த முதல் நாளிலேயே ஒரு வரவேற்பாளர் - பாம்பு - அடுத்தநாள் எம் இடங்களைத் தயார் செய்தோம் 3ம் நாள் Fr. Boutin திருப்பலி நிறைவேற்றினார். பீடம், 4 மரத்தூண்களில் வைத்த இருபலகைகளால் ஆனது.

9ம் பத்திநாத பாப்பரசரின் 25ம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடினோம். நமது சுதேசிகளுக்கு வெடிச்சத்தம் இல்லாது விழாக்கள் இல்லை. எனவே முதல் நாள் மாலை நேரத்திலும் மறுநாள் நற்கருணை ஆசீர்வாதத்தின் பின்பும் வெடிகள், பீரங்கிகளின் சத்தமும் அதிர்வும் இடம் பெற்றன. மின் விளக்குகளின் பேரொளி கண்களைப்பறித்தன.

அடுத்த ஞாயிறு நற்கருணைத் திருநாள். குருநாகலில் இருந்து 6 மைல் தூரத்தில் உள்ள ஒரு கிராமத்துக்குச் சென்றோம். இக்கிராமத்தில் வருடத்துக்கு 1 அல்லது 2 முறை தான் திருப்பலி நடைபெறும் Fr. Boutin எங்களுக்கு ஒரு வசதியான இடத்தை ஆயத்தம் செய்திருந்தார். ஓர் ஏழைப்பெண் தனது குடிசை இணைந்திருந்த ஒரு தங்குமிடத்தைக் கொடுத்தா. நற்கருணைப் பவனி இடம் பெற்றது. நாங்களும் பாடினோம். திருப்பலியின் பின்பு துறவிகளை ஒரு போதும் காணாத சுதேச பெண்கள் எங்களைப் பார்த்தபடியே காணப்பட்டார்கள். வெளியாட்கள் போய் விட்டார்கள் எமது இரவு உணவு ஆயத்தமாக இருந்தது. வெளியாட்கள் போய்விட்டார்கள் எமது சமையல் ஆட்கள் சுவையான சாப்பாடு தயாரித்தார்கள். வான்கோழி 'சூப்' தயாரித்தனர்.

நான் இலங்கைக்கு வந்த பின் முதன் முறையாகச் சுவைத்தேன். அத்துடன் கோழி வதக்கல் (Chicken Roasted) கறி, பழவகைகள் வைக்கப்பட்டிருந்தன. மகிழ்வுடன் வீடு வந்து சேர்ந்தோம்.

## 24 - ஆவணி

உங்கள் கடிதம் கிடைத்தது, மகிழ்ச்சி உங்கள் கவலைகள் முடிவடைந்தன. எங்களுடைய Mothers எங்களுக்கு சில வரிகள் என்றாலும் எழுதி அனுப்பியதற்கு நன்றி. எங்களை மறக்கவில்லை என்பதற்கு இது சான்று. அவர்களுடைய கடிதங்கள் எமக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. குருநாகலில் உள்ள உங்கள் புத்திரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகமாக இருக்கிறார்கள். இவ்விடத்து ஒர் ஆயத்தக்கன்னிகை இருக்கிறா. ஆயரின் உத்தரவுடன் ஒர் அநாதையும் ஆயத்தகன்னிகையாக உள்ளா. 14 அல்லது 15 வயது இருக்கும்.

## 14 - புரட்டாதி

பரிசில் இருந்து எனக்கு இரு கடிதங்கள் கிடைத்தன. ஒன்று அதிசிரேஷ்ட குரு முதல்வரிடம் இருந்து, மற்றது Fr. Soullier (சுலியர்) இடம் இருந்து. இரண்டும் எமக்கு ஆறுதலும் ஆனந்தமும் தந்தன. இன்னும் எமக்கு விடுதிப்பிள்ளைகள் வந்து சேரவில்லை அதிகம் பேர் வருவார்களென்று நான் எதிர்பார்க்கவில்லை. நாம் கொழும்புக்குக் கிட்ட இருப்பதால் எப்பொழுதும் நன்மை செய்யச் சந்தர்ப்பம் உண்டு.

## 4 - மார்கழி

''இன்ஸ்பெக்ரர்'' வந்து எல்லா வகுப்புகளையும் சந்தித்தார். எமது நல்ல கல்வி தராதரத்தையிட்டு திருப்தி கொண்டார். அரசாங்கம் தன் பாடசாலையை மூடலாம். இதனால் எமது வகுப்புக்களை அதிகரிக்கலாம்.

ஆயர் தை மாதத்தில் வருவதாக அறிவித்திருந்தார். எமது ஆரம்பநிலைபற்றி மகிழ்ச்சியாக இருப்பார். அவர் வருகையின் பின் அவரோடு பேசுவதற்கு அநேக காரியங்கள் இருக்கின்றன. 3 வருடங்களுக்கு மட்டும் தான் புதிய வீட்டில் இருப்போம் என்று உரிமையாளருடன் பேசிக் கொண்டோம். புதிய காணி வாங்கி அதில் மடம் கட்டிக் கொள்ளலாமென்று எல்லா கத்தோலிக்க மக்களும் சொல்லுகிறார்கள். அவருக்கு இந்தக் கருத்து இருக்குமோ நான் அறியேன். தளவாடங்களும் இரவலாக இருப்பதால் திரும்பிக் கொடுக்க வேண்டும் நாங்கள் சிறிது சிறிதாக எங்களுக்குள்ள பணத்தில் இருந்து தேடிக் கொள்ள வேண்டும்.

எனது நல்ல தாயாரே! ஏழ்மை எம்மைப் பயமுறுத்தாது. நாம் எப்பொழுதும் இறைவனை மகிமைப்படுத்தினால் மகிழ்வோடு வாழ்வோம்.

சில நாட்களுக்கு முன்பு எனது அறையைக் கழுவிக் கொண்டிருக்கும் போது தலைக்கு மேலாக ஒரு சிறிய சத்தத்தைக் கேட்டேன். வீட்டுமுகட்டில் ஒரு பாம்பு இருந்தது. சுதேச சகோதரிகளைக்கூப்பிட்டும் அவர்களால் அடிக்கமுடியவில்லை. அது மரங்களிடையே சுருண்டு போயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி மாதக் கடைசியில் இருந்து ஆயரின் வருகையை எதிர்பார்த்திருநதோம். பங்குனி 1ந் திகதி தான் வந்தார். காலை 8 மணிக்குப்பிள்ளைகள் வெள்ளை உடை அணிந்து பூக்கள் தலையில் சூடி ஆயத்தமாக இருந்தார்கள். அவர் 11 மணிக்கே வந்தார். எல்லோரையும் ஆசீர்வதித்துப்பின் எம்முடன் சம்பாஷித்தார். எமக்கு மிகவும் மகழ்ச்சி. மாலை நேரம் எம் மடத்திற்கு வந்து மடத்தின் வளர்ச்சியைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அடுத்த நாள் எமது மடத்தில் திருப்பலி நிறைவேற்றினார். விறாந்தையும் வரவேற்பறையும் மக்களால் நிறைந்தது. சிறிது நாட்களின் பின் ஆயரின் கையால் எம் பிள்ளைகள் பரிசுகள் பெற்று அவரின் ஆசீரும் வேண்டினர். உயிர்த்த ஞாயிறு விழாவரையும் எம்முடன் இருப்பதாகக் கூறியபடியால் எமக்கு மகிழ்ச்சி.

பரிசுத்த வார வழிபாடுகள் ஆயர் தலைமையில் நடைபெற்றது. 9 மிஷனறிமார் கூட்டுப்பலி நிறைவேற்றி பரிசுத்த தைலம் பெற்றுப் பெரிய செவ்வாய்க் கிழமை சென்று விட்டனர். குருநாகலில் 4 நாள் பெரிய ஆரவாரம். கிழமை முடிவில் 2 நாட்கள் ஆயர் தலைமையில் எமக்கு ஞானொடுக்கம் நடைபெற்றது. இறுதிநாளில் ஒரு ஐரோப்பிய சகோதரி உட்பட 3 சகோதரிகள் தம் வார்த்தைப் பாடுகளைக் கொடுத்தார்கள். ஓர் ஆயத்த கன்னிகை குருநாகலில் இருந்து முதன்முறையாக Sr. M. Rose என்னும் பெயரை ஆயர்தலைமையில் பெற்றுக்கொண்டா. காலை 9 மணிக்கு F. Mauroit மோறுவா நற்கருணை எழுந்தேற்றம் செய்து 3 மணிவரை வழிபாடு நடைபெற்றது. எமது பணிகள் நல்ல முறையில் நடந்தாலும் தீய ஆவியின் வேலைகளும் உள்ளன. வைகாசி 1ந் திகதி ஒரு புரட்டஸ்தாந்து ஆசிரியர் வருவார். French, சங்கீதம் ,சித்திரம், பூக்கள் செய்தல் இவற்றைப் படிப்பிப்பார். இறைவனின் சித்தம் நடக்கட்டும்.

ஆயர் எமக்கு ஒரு காணிவாங்கி மடம் கட்டத்தீர்மானித்துக் காசு சேர்க்கிறார். புனித சூசையப்பருக்கு விளக்கு வைத்துத் தினமும் மன்றாடி வருகின்றோம்.'. இது எமக்குப் பிரான்சிலுள்ள PAU மடம் ஆரம்பத்தை நினைவூட்டுகின்றது. அநாதை மடம் தொடங்கவில்லை. சில முதியவர்கள் செபம் படிக்க வருகிறார்கள். வருகிற புதன், மாதாவின் மாதம் ஆரம்பிக்கின்றது. பின்பு இயேசுவின் திருஇருதய மாதம். நாம் உங்களுக்காகச் செபிப்போம். நீங்களும் அவ்வாறு செய்வீர்கள்.

**18 ஆடி 1872**

சென்ற தவணை நன்றாக முடிவுற்றது. ஏழ்மை, எளிமையை எல்லாவற்றிலும் அனுபவிக்கக்கூடுமாக இருக்கின்றது. நீங்கள் அனுப்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய மாதா சுருவத்துக்கு வைகாசி மாதத்தில் பூக்கள் செய்து, மெழுகுதிரி ஏற்றி அலங்கரித்தோம். மாலையில் மாதாவின் பிரார்த்தனை சொல்லி ஒரு பூவை அவள் பாதத்தில் வைப்போம். பிழை செய்தவர்கள் வைக்கமாட்டார்கள். பிரிவினை மதத்தவர்களும் வந்து பார்த்தனர்.

இயேசுவின் திருஇருதய மாதத்தில் குழுமட்டும் பங்குபற்றியது. இறுதிநாள் Fr. Duffo திருப்பலி நிறைவேற்றினார். மாலையில் பிள்ளைகளுக்கு சிலவார்த்தைகள் கூறி, திருஇருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கும் செபமும் சொல்லி நற்கருணை ஆசீர்வாதமும் நிறைவேற்றினார்.

ஆனி 6ந் திகதி ஆயர் கண்டிக்கு வந்திருந்தபோது மிகவும் தந்தைக்குரிய கரிசனையுடன் எம்மையும் சந்திக்க வந்தார். அவர் வந்த அன்று காய்ச்சலாக இருந்தார். சற்று நேரம் தங்கி இளைப்பாறினார். காய்ச்சல் தணிந்திருந்தபடியால் 3 வாரங்களாக அவரோடு நாம் மகிழ்ச்சியாக இருந்தோம். பின்பு கல்வி அதிகாரியும் எமது ஆங்கில பாடசாலையின் முன்னேற்றத்தையிட்டு மிகவும் திருப்தி அடைந்தார். புரட்டஸ்தாந்து மக்களும் தங்களுடைய பிள்ளைகளுடைய நன்மைக்காக ஓர் ஆசிரியரைக் கேட்டனர். அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை. ஆனால் எமது பிள்ளைகளைக் கவரத்தெண்டிக்கின்றனர். அரசு எமது மடம் கட்டுவதற்கு ஒரு துண்டு நிலத்தைக் கொடுக்க விரும்புகின்றது. பாடசாலைக்குரிய தளவாடங்களையும் கொடுக்கவிரும்புகின்றது. புரட்டஸ்தாந்து மக்களுக்கு இது மிகவும் கோபத்தை ஏற்படுத்தும் தகுந்த காலத்தில் Fr. Duffo வந்து உதவி செய்தார்.

## 11. ஐப்பசி 1872

புரட்டஸ்தாந்தர் தம் மக்களுக்குப் பாடசாலை ஆரம்பிக்க இருப்பதாக நான் சென்ற கடிதத்தில் உங்களுக்கு எழுதியிருந்தேன். அவர்களுக்குப் படிப்பிக்க வரவிருந்த ஆசிரியை அவர்கள் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டு 'இங்கிலாந்து' செல்லவுள்ளார். இது அவர்களுக்கு ஏமாற்றம். ஆனால் புரட்டஸ்தாந்து ஆயர் தன் மனைவியின் பாதுகாப்பில் தங்களில் ஓர் இளம் போதகரை வீடுவீடாகச் சென்று புரட்டஸ்தாந்து பிள்ளைகளைத் தம் பாடசாலைக்கு அனுப்பக் கேட்டுள்ளார். சிலர் எதிர்த்தனர். எனினும் 3 பிள்ளைகள் அங்கு போய் விட்டனர்.

ஆயர் இங்கு ஓர் அநாதை மடம் தொடங்கவிரும்புகிறார். ஒரு பிள்ளை இங்கு வந்த போது அவவுக்கு ஒணறின் என்று பெயரிட்டோம். 2 மாத காலமாக இங்கே ஒரே மழை பாலங்கள் உடைந்துள்ளது. அரிசி விலையும் ஏறிவிட்டது. வெள்ளத்தினால் அநேகர் இறந்து விட்டனர். வெள்ளம் எங்கள் மடத்துக்குள் வந்து விட்டது. ஆங்கில வகுப்புக்குள்ளும் வெள்ளம் நிரம்பி விட்டது. எனவே வகுப்புகள் பல்வேறு இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றன. ஒரு சகோதரி விறாந்தையில் பிள்ளைகளை வைத்துப் படிப்பிக்கும் போது ஒரு நச்சுப்பாம்பைக் கண்டு அடித்தோம். வேறு ஒரு சகோதரியின் படுக்கைப் பாயின் கீழ் ஒரு புலிமுகச் சிலந்தி. இவ்விதமான ஆபத்துக்களில் இருந்து இறைவன் எம்மைப் பாதுகாத்து வருகின்றார்.

**30 மார்கழி 1872**

எனது கடைசிக் கடிதத்தில் கார்த்திகை மாதம் இன்ஸ்பெக்ரர் வருவதாகக் கூறி இருந்தேன். கடைசி மாதங்கள் எமக்கு நன்றாக அமையவில்லை. எமது அதிகமான பிள்ளைகளை இழந்து விட்டோம். சில பெற்றோர், நகரத்தை விட்டு வெளியேறிவிட்டனர். சிலர் படிப்பை முடித்து விட்டனர். சிலர் புரட்டஸ்தாந்த பாடசாலைக்குச் சென்று விட்டனர். நாம் நம்பி இருந்த பிள்ளைகள் விலகியது எமக்கும் ஒரு கஷ்டமான காலகட்டமாகும். கார்த்திகை 8ந் திகதி இன்ஸ்பெக்ரர் பாடசாலையைத் தரிசிக்க வந்தார். எல்லாம் நன்றாக நடைபெற்றது. 30ந் திகதி அமலோற்பவ அன்னைக்கு நவநாள் தொடங்கினோம். ஆரம்பகாலத்தில் பல கஷ்டங்களினூடாகத் தொடங்கிய எமது பணிகளையும் பாடசாலையையும் ஆசீர்வதிக்கும்படி அமலமரி அன்னையிடம் மன்றாடினோம்.

அநாதை இல்லத்திலும் சிறு பிரச்சினை எழுந்துள்ளது. இரு மாதங்களாக ''சின்ன ஒணறின்'' எங்களோடு தான் இருக்கிறா. மிகவும் திறமைசாலி. மடத்திலே சிங்களப் பிள்ளைகளோடு பழகி அவர்களை அன்பு செய்து நன்றாக இருக்கிறா. ஆனால் கத்தோலிக்க பிள்ளையாக வரவிருப்பமில்லை. ஒருவருக்கும் தெரியாமல் விலகிவிட வேண்டுமென்று அறிவித்திருக்கிறா. தேவ அன்னையிடம் ஒப்படைத்து இவவுக்காகச் செபித்தோம். சிலநாட்களின் பின் தான் கிறீஸ்தவளாக வரவிரும்புவதாகச் சொன்னா. இப்போது சிறுபிள்ளை, சற்று வயது வரும் வரைக்கும் காத்திருக்க வேண்டும். செபத்திலே தொடர்ந்தும், நற்குணங்களைக் கொண்டும் வாழ்ந்து வருகிறா.

மாதாவின் நவநாட்களில் முடிந்தளவு நன்றாக அலங்கரித்தோம். சுருவத்தின் இருபக்கமும் செயற்கைப்பூக்கள் வைக்கப்பட்டிருந்தன. மெழுகுதிரித்தண்டு இல்லை. எனவே மலர்க்கொத்தில் மெழுகுதிரியையும் ஏற்றினோம். அமலோற்பவ அன்னையின் பெருவிழா ஞாயிற்றுக் கிழமையில் இடம்பெற்றது. பங்குத் திருப்பலியிலே நாம் எமது சங்கீதங்களைப் பாடினோம். முதல் விழிப்புச் சடங்கில் எமது பாடல்களைச் சுதேச மக்கள் பெரிதும் விரும்பினார்கள்.

5ந் திகதி எமது குடும்ப விழாவைப் பலவேலைகள் மத்தியில் சிறப்பாகக் கொண்டாட முடியாவிட்டாலும் Fr. Duffo காலையில் திருப்பலி நிறைவேற்றினார். இராவுணவின் போதும் அதிசிரேஷ்ட குருவைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்லாபித்து மகிழ்வுடன் ஒய்வு நேரத்தைச் செலவழித்தோம். ஒவ்வொரு சகோதரியும் தங்களைத் தூரம் பிரித்துக் கொள்ளவில்லையென்றும் எல்லாம் எம்மோடு நெருக்கமாக எங்கள் அன்பான குடும்பத்துடன் ஒன்றித்திருக்கிறோம் என்றும் உணர்ந்தோம். பிரான்சில் இருப்பது போல உணர்ந்தோம். அந்த நாள் மகிழ்வாக நிறைவு பெற்றது. எமது சிரேஷ்ட தந்தைக்காக நன்றாகச் செபித்தோம்.

18ந் திகதி பரிசுத் தினம் இடம்பெற்றது. பலமாதங்களாக Sr. Stanislaus பாடகர் குழாமை ஆயத்தப்படுத்தி வந்தா. இறைவன் அவவின் முயற்சியை ஆசீர்வதித்தார். Fr. Duffo தனது ஆலயத்தின் அலங்கரிப்பு மாலைகளைக் கொடுத்து உதவியபடியால் நாங்கள் எல்லாவற்றையும் நன்றாகச் செய்தோம். 12 விளக்குகள் வைத்து மாலைகளுடன் அழகாக அலங்கரித்தோம். சுதேச மக்கள் இவற்றைப் பார்த்து மகிழ்ச்சியுற்றனர். அரசாங்க அதிபர், நீதிபதி நகர அதிபர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். தலைமையானவர் வரப்பிந்தியபடியால் நீதிபதி சொற்பொழிவாற்றினார்.

பாடசாலை மாணவர்களைப் பெரிதும் பாராட்டினார். அடுத்த வருடம் எமது புதிய மடத்தில் பரிசளிப்பு விழா நடைபெறும் என்று அவர் எண்ணியிருந்தார். இறுதியாகத் 'தேசீயகீதம்' இசைக்கப்பட்டது. "God Save The Queen" எல்லோரும் மகிழ்வுடன் சென்றனர். அடுத்தநாள் சிங்களப் பிள்ளைகளின் பரிசுத் தினம் இடம்பெற்றது. Fr. Duffo தலைமைவகித்து எல்லாவற்றையும் சிறப்பாக நிகழ்த்தினார். அதன் பிறகு லீவுகாலம் தொடங்கிவிட்டது. சில நாட்களென்றாலும் ஒய்வெடுக்கலாம் என்ற மகிழ்ச்சி. வருடத்தில் இந்த நாட்கள் மாத்திரம் நாம் ஒன்று கூடச்சந்தர்ப்பம் கிடைக்கும்.

கிறிஸ்மஸ் அண்மித்து வருகிறது. ஆலயத்தில் குழந்தை இயேசுவுக்கு நவநாள் செய்தோம். முதல்நாள் மாலையும் நடுச்சாமப்பூசையிலும் ஆலயம் ஒளிவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நாம் எல்லா வழிபாடுகளிலும் பாடல்களில் பங்குபற்றினோம். திருப்பலி முடிவில் சுதேச மக்கள் ஆலயத்தின் முற்றத்தில் வாணவேடிக்கைகளில் ஈடுபட்டனர். அந்த நாளில் கேக் போன்ற வெகுமதிகளை மக்கள் கொண்டு வந்தார்கள். அந்த வருடம் எமது சிநேகிதர்களைச் சந்தித்தோம். 28ந் திகதி ஒரு சின்ன புத்த பிள்ளை எம்மிடம் வந்து சேர்ந்தா. அவவுக்கு றீற்றா என்று பெயரிட்டோம். போனாட் தாயாரின் பெயரிட்டோம். எமது அநாதை இல்லத்துக்காக அவ மன்றாடிக்கொள்ளுவா. இப்போ, ஒணறின், றீற்றா இருவரும் தான் அநாதை மடத்தில் இருக்கிறார்கள். அரசாங்க அதிபரின் மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி Wright எமது ஆங்கில வகுப்புப்பிள்ளைகளைச் சந்திக்க வந்தா. அவவின் வருகை பிள்ளைகளுக்கு தைரியத்தையும் உற்சாகத்தையும் கொடுத்தது. அவவும் மகிழ்ச்சியுடன் திரும்பினா.

நமது மடத்தின் கட்டிடம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. 1874 ஆடி மாதத்துடன் அங்கு செல்வோம். அது எமக்குப் பெரிய ஆசீர்வாதமாக அமையும்.

## Rev. Fr. Duffo O.M.I. to Mother General 4 மார்கழி 1872

My Very Rev. good Mother.

உங்களுடைய அருமையான குமாரத்திகளுக்கு நான் பொறுப்பாக இருப்பதால் உங்களைப் பற்றி அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே இக்கடிதத்தை எழுதுகிறேன். எல்லோரும் நலமேயுள்ளார்கள். அவர்களது இருப்பிடம் வசதியாக இருந்தால் நல்லது. விரைவில் மடம்கட்டி முடிக்கப்படும். ஒரு சகோதரி வியாதியாக இருந்தால் அவவுக்குப் பதிலாகப் பள்ளிக்கூடத்தில் ஒருவரும் இல்லை. 8 சுதேச சகோதரிகள் இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பக்தி வைராக்கியம் உடையவர்கள் உத்தமதனத்தில் வளர்வது தான் அவர்களின் ஒரே நோக்கம்.

எமது வேலைகள் படிப்படியாகப் போய்க் கொண்டிருக்கிறது. சில புரட்டஸ்தாந்தக் குடும்பங்கள் எமது பணிக்கு எதிராக இருந்தாலும் ஏனையவர்கள் எம்மோடு ஒத்துழைக்கிறார்கள். வெளியிலே நம் சகோதரிகளுக்கு மிகவும் மதிப்பு ஆண், பெண் அநாதை பிள்ளைகளுக்கான ஒரு இல்லம் தொடங்கி இருக்கிறோம். புத்த குடும்பங்களின் பழக்கவழக்கங்களை நாம் அவதானித்த போது சிறு பெண் பிள்ளைகளை வைத்திருப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அவர்களுடைய தப்பான முன் சார்பெண்ணங்கள் மறைந்து போவதற்கு எமக்கு நீடித்த நிலைமையான பொறுமையோடு வழிநடத்தக் காலம் தேவை. சகோதரிகள், அதிகம் பிள்ளைகளை வைத்திருப்பதற்குத் தற்போதைய இடம்பொருத்தமானதல்ல.

நான் எனது பையன்களோடு நன்றாக இருக்கிறேன். தற்போது 6 சிறு பையன்களை வைத்திருக்கிறேன். எமது அநாதை இல்லக் கட்டிடம் முடிந்தபின் 100 அல்லது 200 பிள்ளைகளை வைத்திருக்கலாம். இங்கே சில புத்தபெயர்களை உங்களுக்கு அறியத்தருகிறேன்.

1. பீற்றர் - கிரிபண்டா

கிரி - பால், பண்டா - பெரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சாள்ஸ் - கிரி ஹாஸ்னா

ஹாஸ்னா - இறைவன், பால் இறைவன்

3. ஜோசெவ் - ஒக்கியோ ஹாஸ்னி

கிறீம் - இறைவன்

4. ஜோண் - றான்ஹாஸ்னி

தங்கம் - இறைவன்

5. தோமஸ் - ஒக்கியோ பண்டா

கிறீம் பெரியவர்.

6. ஏட்றியன் - றான் ஹாஸ்னி

தங்க இறைவன்.

இப்பிள்ளைகளிற் சிலர் காட்டில் இருந்து வந்தவர்கள் இவர்களை எவ்வளவு பொறுமையோடு புரிந்து கொண்டு பணிசெய்ய வேண்டுமென்பதைப் புரிந்து கொள்வீர்கள். யோசெவ் என்பவர் 8 வயதுச் சிறுவன். இவனுடைய எளிமையான வாழ்வு சகோதரிகளுக்கு ஆச்சரியமாக இருக்கும். இவன் சகோதரிகளுக்கு இவ்வாறு பெயர் கொடுத்திருக்கிறான். சிஸ்ரர். ஸ்ரனிஸ்லாஸ் இரண்டாவது ஹாமதுறு. சிஸ்ரர். யோசெவ்வின் - சின்ன ஹாமதுறு. தங்களின் தேவைகளுக்கு சிஸ்ரர். யோசெவ்வின் இடம் அண்மித்துச் செல்வார். வீணைப்பெட்டியை ''ஒரு பெட்டி அழுகிறது'' என்று சொல்வார்கள். மணிக்கூட்டின் ''பென்டி யூலம்'' ஆடுவதை மணிக்கணக்காகப் பார்த்துக் கொண்டிருப்பார். ஒன்றும் புரியாது 9 வயதுடைய யோணுக்கு ஒரு சகோதரனும் ஒரு மாமனும் புத்தபிக்குகளாக இருக்கிறார்கள்.

பாடசாலையில் ஒய்வு நேரத்தில் வேலை செய்வார்கள். தினமும் மறைக்கல்வி, செபம் படித்துக்கொள்வார்கள் இவர்கள் தான் கண்டிபுத்த மக்களிடமும் முதல் மனமாற்றம் பெற்றவர்கள். லூர்து அன்னையிடம் இவர்களை ஒப்படைத்து விட்டேன். மதர். யோசெவ்வின் சிங்களம் பேசுகின்றா. மொழீ பெயர்ப்பாளர் இலலாது விரைவில் தனது வேலையைச் செய்து கொள்வா.

புதிய மடத்தின் வரை படம் எனது Altar உடன் இணைத்து உங்களுககு அனுப்புகிறேன். 1874ல் கட்டிமுடிக்க வேண்டியது. பணம்பற்றாக்குறை. 35,000 பிராங் தேவை. உங்களுக்குத் தெரிந்தவர்களிடம் சொல்லிப் பெற்றுத் தந்தால் நல்லது. நாளைக்கு எமது அதி. சிரேஷ்ட தலைவரைத் தெரிந்த வருடாந்த நாள். மடத்தில் திருப்பலியும் நிறைவேற்றி நற்கருணை ஆசீர்வாதமும் நிறைவேற்றுவேன். அவர் போர்டோவில் இருந்தால் எனது அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துவிடவும். செபத்தில் ஒன்றிக்கும் A. M. Duffo, O.M.I



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நல்ல தாயாரே!

என் சென்ற தவணை அறிக்கையில் எம் விடுமுறையைத் தொடங்கினேன் என்று எழுதியிருந்தேன். அமைதியாகச் செலவழித்தோம். தை 15ந் திகதி 3ம் நாள் தியான ஒடுக்கம் ஆரம்பித்தோம். Fr. Duffo பிரென்ஸ், சிங்கள மொழியில் 12 சகோதரிகளுக்கு ஒரு நாளில் இருமுறை மறைஉரை ஆற்றினார். தினமும் நற்கருணை ஆசீரும் நிகழ்ந்தது. இறுதி நாளில் நற்கருணை எழுந்தேற்றம், எல்லாராலும் விரும்பப்பட்டது. பலர் அதிகநேரம் நற்கருணைப் பிரசன்னத்தில் செலவிட்டுச் செபித்தனர். இறுதி நாளில் திருக்குடும்ப உத்தரியம் கொடுக்கப்பட்டு திருக்குடும்பப்பாடல் இசைத்தது. எம் குடும்பத்துடன் ஒன்றிணைந்தோம்.

தை 24 எமது ஒய்வு காலம் முடிந்தது. படிப்புக்கள் ஆரம்பமானது, சில பிள்ளைகள் திரும்பி வரவில்லை. அவர்களின் இடம் புரட்டஸ்தாந்து பிள்ளைகளினால் நிரப்பப்பட்டது.

பங்குனி 1ம் திகதி புனித சூசையின் மாதத்தை ஆரம்பித்தோம். அவர் நமக்கு 2 பிற சமயப்பிள்ளைகளையும் 1 கத்தோலிக்க பிள்ளையையும் தந்தார். ஆங்கிலப்பிள்ளைகளும் பாடலின் போது புனித சூசையப்பருக்குத் தங்கள் கருத்துக்களை எழுதி முழங்காலில் இருந்து கொடுத்தனர். பங்குனி 19, நாம் ஆலயத்தில் பாடல் இசைத்துத் திருநாளைக் கொண்டாடினோம். அடுத்தநாள் நமது சிற்றாலயத்தில் திருவிழா நடைபெற்றது.

எம் புதிய மடத்திற்கு மதில்கட்டி வருகின்றோம். Fr. Duffo இந்த வேலைகளை மேற்பார்த்து வருகின்றார். முதலியாரின் பிள்ளைகள் எம்மிடம் உள்ளனர். அவர்கள் புரட்டஸ்தாந்தினர்க்கு எதிரானவர்கள் ஒரு முறை இவர் சுகவீனமுற்று எம்மைச் செபிக்கும்படி ஒரு கடிதம் எழுதினார். பின்பு 25 பிராங் எமக்கு அனுப்பி, தான் சுகம் பெற்றதாகக் கூறினார்.

**ஆடி 2. 1873**

எம் 3 மாத அறிக்கையை பாஸ்கு லீவுடன் ஆரம்பிக்கிறேன். நகரில் இருந்து சிறிது தூரத்தில் உள்ள குளத்தருகே அமைந்த ஒரு சிறிய கிராமத்திற்கு ஒரு கத்தோலிக்க குடும்பம் எம்மை அழைத்துச் சென்றனர். ஈஸ்ரருக்கு அடுத்த செவ்வாய் அதிகாலை 5 1/2 மணியளவில் புறப்பட்டு 6 1/4 மணிக்கு அவ்விடத்தை அடைந்தோம். அழகிய மரங்களின் நிழல்கள். எனவே வெளியில் நாம் நாளைச் செலவிட்டு மதிய உணவு அருந்தினோம். மாலை 5 மணியளவில் Frs சுனாவெல், டுபோ தங்கள் அநாதைச் சிறுவர்களுடன் எம்மைச் சந்திக்க வந்தனர். சிறிது நேரம் பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடியபின் மீளவும் எமது மடத்துக்கு வந்து இறைவனுக்கு நன்றி கூறினோம். பின்பு ஆங்கில பாடசாலைப் பிள்ளைகள் அதே இடத்துக்கு எங்களையும் அழைத்துச் சென்றனர். அங்கு நாம் தனியே இருந்தபடியால் நன்றாக விளையாடி மகிழ்ந்து நேரம் போவது தெரியாமல் மகிழ்ந்தோம்., மீளவும் வகுப்புகள் ஆரம்பமாகியது. வைகாசி 1ம் திகதி மாதாவின் மாதம் தினமும் எம் பிள்ளைகள் பூவைத்து வழிபாடு செய்தனர். எம் கிறீஸ்தவர்களும் பூமாலை செய்வர். இரவில் வாணவேடிக்கை பார்க்க பிரிவினை மதத்தவர்களும் வருவார்கள். இறுதிநாளில் மாதாவின் அடைக்கலச் செபம் சொல்லி, அடுத்தநாள் இயேசுவின் திருஇருதய மாதத்தை ஆரம்பித்தோம்.

பாஸ்கா விடுமுறை காலத்தின் பின் எம் பிரிவினை (புரட்டஸ்தாந்து) மதத்தினர் கண்டியில் இருந்து ஒர் ஆசிரியரைக் கூப்பிட்டனர். அந்த ஆசிரியை பிரெஞ், லத்தீன் மொழியில் பேசுவா. மியூசிக் படிப்பித்தா. எம் பாடசாலையில் உள்ள புரட்டஸ்தாந்து பிள்ளைகளை அழைத்தும் அவர்கள் போகவில்லை.

ஆனி 21 ஆளுநர் எம்மிடம் வந்தார். எம் பாடசாலைகளை அலங்கரித்தோம். எம் சிங்களப் பிள்ளைகள் வெளிப்புறக்கதவின் மேல் ஒரு வளைவு கட்டி அலங்கரித்தனர். அவர்களுடைய பாடல்கள், உடுப்புகள் அவரைக்கவர்ந்தன. எனவே அவர் எம் மதத்தைச் சாராது இருந்தாலும் எம் பணிகளைப் பாராட்டி மேலும் பயனளிக்க விரும்பினார். பின்பு அவரின் மனைவி சுகவீனமாகக் கண்டியில் இருந்தபடியால் உடனே சென்று விட்டார். 8 நாளின் பின் அவ இறந்து விட்டா. எனினும் மறவாது 50 ரூபாவும் தனக்கு உரையாற்றிய சிறுமிக்கு ஒரு பொருளும் அனுப்பி வைத்தார்.

புதிய கட்டிட வேலைகள் முடிகின்றன. பிரான்சில் இருந்து புதிய சகோதரிகள் வரும் போது நாம் அங்கு செல்லலாம். ஆனால் வேலைகள் மாசி மாதத்திற்கு முன்பு முடியாது. அநாதை மடமும் முடியவில்லை. திறப்பு விழாவிற்கு நீங்கள் வந்தால் மகிழ்ச்சியாக இருக்கும். அழகானமடம். நாம் அங்கு வசதியாக வாழலாம்.

### தை 1874

நல்ல தாயாரே! எனது (3 மாத) அறிக்கையைத் தெரிவிக்கத்தா மதித்துள்ளேன். பல வேலைகள், இடமாற்றம் மார்கழிக்கடைசியில் இடம்பெற்றதால் நேரம் போய்விட்டது. ஐப்பசி 5ந் திகதி ஆயர் எம்மைச் சந்திக்க வந்தார். பிள்ளைகள் வெள்ளை உடை அணிந்தனர். எல்லாக் கத்தோலிக்கரும் ஆலயத்திற்கு வந்தனர். அவர்களுக்கு உரையாற்றியபின் எம்மையும் சந்திக்க வந்தார். பிள்ளைகளையும் ஆசீர்வதித்தார். எம் கட்டிடம் விரைவில் முடிவுபெற்றது பற்றி மகிழ்ச்சி அடைந்தார். Fr. Duffo ஒரு வருடத்தில் தொடங்கி முடித்தார் என ஆச்சரியப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை 4 மணியளவில் ஆங்கில வகுப்புப் பிள்ளைகள் ஒரு விழா ஆயத்தப்படுத்தினர். ஆயரும் அதில் பங்குபற்றினார். சிங்களப் பிள்ளைகளும் பங்குபற்றினர். ஆயர் எம்முடன் இருந்த போது எம் சுதேச சகோதரிகளுக்கு 4 நாள் தியானம் தந்தை சுனவால் தலைமையில் நடைபெற்றது. சிங்களம் விளங்குமென்றபடியால் சிஸ்ரர். யோசெப்பின் இதில் பங்குபற்றினா. இறுதி நாளில் 2 ஆயத்தக் கன்னியர் உடுப்புப் பெற்றனர். சிஸ்ரர். மேரி திரேஸ், சிஸ்ரர். மேரி பிறிஜிற் ஆகிய இருவரும் தான் உடுப்புப் பெற்றனர். 2 நோவிஸ்மார் முதல் வாக்குத்தத்தம் செய்தனர். மற்றவர்கள் வாக்குத்தத்தம் புதுப்பித்தனர். இச்சடங்கு எல்லார் முன்னிலையிலும் நடைபெற்றது. இவற்றை மக்கள் முன்பு காணவில்லை. ஆயர், Frs. Duffo, Chonnaval உடன் சேர்ந்து தூய மறை பொருளான சடங்கை நிறைவேற்றி மறையுரையும் ஆற்றினார். இது எல்லார் உள்ளங்களையும் கவர்ந்தது.

ஆயர் உரையின் பின்பு ஒய்வு நேர நிகழ்ச்சிகளைப் பார்த்து விட்டுச் சென்றார். Fr. Chonnaval நற்கருணை எழுந்தேற்றம் செய்தார். மாலையில் ஆயர் வந்து நற்கருணை ஆசீர்வாதம் கொடுத்தார். இந்த நாள் எல்லோருக்கும் மகிழ்ச்சியூட்டியது.

அடுத்த ஞாயிறு புதிய மடம் ஆசீர்வதிக்கப்பட்டது. எல்லா அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. பாடகர்கள் முன்னுக்கும் பின் ஆயர், மக்கள், பின் தொடர்ந்து பவனியாக வந்தார்கள். செபம், பாடல்களின் பின்பு ஆயர் புதுக்கட்டிடத்தை ஆசீர்வதித்தார். இறுதியாக மக்கள் இருந்த மண்டபத்தை ஆசீர்வதித்தார். புரட்டஸ்தாந்து மக்களுக்கு இது வேடிக்கையாக இருந்தபடியால் தம் உடையில் இருந்த ஆசிநீரைத் தட்டிவிட்டார்கள். ஆயரின் மறைஉரையும் இடம்பெற்றது. கல்வி வகுப்புகள், பணிகள் பற்றி விளக்கினார். அதிகாரியும் தான் உதவி செய்வதாகச் சம்மதித்தார். அப்போது மக்கள் கரகோஷம் செய்து வெடிகொழுத்தித் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அத்துடன் அவர்கள் அரிசி, பழங்கள் கொண்டு வந்து ஏழைகட்கு வழங்கினர்.

மார்கழி 20 லீவு ஆரம்பமாகும். அதற்கு முன் பிள்ளைகள் முன்பு சென்ற கிராமத்தில் ஒரு நாள் ஒய்வெடுக்க கேட்டுக் கொண்டனர். அதற்கு நான் சம்மதித்து அவர்களுடன் சென்றேன். அது ''பிலிப்போ'' என்பவருக்குச் சொந்தமானது. தனது வீட்டுத் தளவாடங்களைக் கொண்டு வந்து போட்டார். வேறொருவர் தென்னைமரத்தின் கீழ் தனது ஆர்மோனியத்தை வைத்து நாம் அங்கு செல்லும் போது அதை மீட்டி இசைத்தார். அதன் பின் நன்றியுடன் பிள்ளைகள் சென்றனர். நாம் அமைதியாக எமது ஓய்வு காலத்தைப் பயன்படுத்தி ஐரோப்பாவில் இருந்து வரும் சகோதரிகளை வரவேற்க ஆயத்தம் செய்தோம். மார்கழி 29 புதிய வீட்டுக்குச் சென்றோம். அடுத்த நாள் Fr. Duffo திருப்பலி ஒப்புக்கொடுத்து, பொஞ்ஜீன் ஆயரின் கருத்துக்களுக்காகச் செபித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நல்ல தாயாரே

1874ம் ஆண்டு தை 1ம் திகதி ஐரோப்பாவில் இருந்து வந்த சகோதரிகளைக் கண்டு களிக்க விரும்பினோம். இது எமக்குப் பெரும் மகிழ்ச்சி. ஆனால் அவர்கள் காலியில் 3 நாட்கள் செலவிட வேண்டியிருந்தது. பின்பு தை 2ந் திகதி கொழும்பு வருவதாகக் கூறினர். Fr.Duffo அங்கு சென்றிருந்தார் அவர்கள் மாலை 6 மணிக்கு அங்கு வந்ததால் இரவு நல்லாயன் மடத்தில் தங்கி அடுத்த நாள் 2 மணிக்கு இங்கு வந்தனர். நானும் Sisters ஸ்ரனிஸ்லாஸ், யோசேப்பின் வரவேற்கச் சென்றிருந்தோம். குருநாகலுக்குச் சற்றுத் தொலைவில் இருக்கும்போது 2 காரில் Fathers, sisters வருவதைக் கண்டோம். கிட்ட வந்ததும் இருகாரும் தரித்தது. நாம் நல்வரவு கூறினோம். வெண்ணாடை தரித்தவர்களாய் 12 மணித்தியாலம் காரில் செம்மண்ணில் பயணம் செய்தால் அவர்களின் நிலை எவ்வாறு இருக்குமென்று யோசித்துப்பாருங்கள். எமது மகிழ்ச்சி அவர்களின் களைப்பைப் போக்கியது.

அவர்களின் வருகை எம் கத்தோலிக்க மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டியது. மறுநாள் சிங்கள மக்கள் கூட்டமாக எமது மடத்துக்கு வந்தனர். சகோதரிகளுக்கு மகிழ்வூட்ட மாலையில் எம் முற்றத்தில் 1 மணித்தியாலயம் வாணவேடிக்கை செய்தனர்.

6ந் திகதி குருவோடு இருக்கும் 15 அநாதைப்பிள்ளைகள், எமது பிள்ளை ஒன்று, இன்னொரு முப்பது வயதுப் பெண், மொத்தமாக 17 பேர் திருமுழுக்குப் பெற்றனர் எமது ஆலயத்தில் நடைபெற்றதால் புதிய சகோதரிகளுக்குப் பெரும் மகிழ்ச்சி. எமது பிள்ளை மரியா என்னும் பெயர் பெற்றா இவர்தான் முதலாவதாக திருமுழுக்குப் பெற்ற ஒருவர். வழிபாடு முடிய எல்லோரும் மரியாவைச் சூழ்ந்து சகபாடிகள் தமக்கும் இந்த மகிழச்சி வேண்டும் என்றனர்.

தை 12ந் திகதி சகோதரிகள் கப்பல் எடுத்து யாழ் சென்றனர். 22ந் திகதி பாடசாலை ஆரம்பம் சிங்களப் பிள்ளைகள் பலர் வந்தனர். என் திருநாளின் போது இருபத்தேழு பிள்ளைகள் என்னைச் சூழ இருந்தனர். ஆங்கில வகுப்புக்களும் நன்கு நடைபெறுகின்றன.

மாசி 2இல், 14 வயதுப் புத்தப் பிள்ளையொன்றை தேவதாய் எம்மிடம் அனுப்பினார். தனது கத்தோலிக்க மாமனாருடன் வந்தாள். அவர் சமயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுசரிப்பதில்லை. ஒருவருட காலத்துக்கு மடத்தில் இருந்து கிறிஸ்தவளாக வரவிரும்பினாள். நான், தினமும் மடத்துக்கு வந்து 2 மணித்தியாலயம் செபம் படிக்கலாம் எனக் கூறினேன். திருப்தியில்லாது சென்றாள். மறுநாள் வந்து தான் மடத்தில் இருந்து படிக்க விரும்புவதாகக் கேட்டபடியால் அநாதை மடத்தில் சம்மதித்தேன். பின்பு புனித சூசையப்பரின் வேலை அகத்தில் சேர்ந்தாள். பொலின் என்னும் பெயர் பெற்றாள். 3 நாட்களின் பின் அனாவின் சகோதரி வந்தாள். எனவே இன்று 12 பேர் உள்ளனர். அனாவின் தந்தை கண்டியன். காசு கொடுத்தபோதும் அனா அதை மாற்றி தன்னுடன் இருந்த ஏழைப் பிள்ளைகளுக்குக் கொடுத்தாள். பின்பு எமது இராயப்பர் சபையில் சேருவாள் என்று நம்புகிறேன்.

புனித சூசையப்பரின் மாதத்தைச் சிறப்பாகக் கொண்டாடினோம். தினமும் விளக்கேற்றி அநாதைகளின் பாதுகாவலரை வேண்டினோம். எம் மன்றாட்டுப் புறக்கணிக்கப்படவில்லை. ஒரு நன்கொடை கிடைத்துள்ளது. அத்துடன் 5அநாதைப் பிள்ளைகளும் பாஸ்குத் திருநாளில் வந்து சேர்ந்தனர். ஆங்கிலப் பிள்ளைகள் தம் வகுப்பின் மூலையில் ஒரு பையை தொங்கவிட்டுள்ளதை Sr. stanislaus அவதானித்தா. ஒரு புரட்டஸ்தாந்துப் பிள்ளையின் கதையைக் கேட்டு பிள்ளைகள் அதனுள் பணம் சேகரித்துப் பின் என்னிடம் திருப்பாலத்துவ சபைக்கெனத் தந்தனர்.

கோமாரிகாமி என்னும் கண்டிச் சிங்களப் பெண் 3 அடிமைகளுடன் என்னிடம் வந்தா 40 வயது விதவை. அவ வரும்போது முன்னுக்கு ஒருவரும் இல்லாதபடியால் சிஸ். செலஸ்ற் வேலை செய்யும் இடத்திற்கு சென்றா. அவ தனது தையல் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தா. பின்பு என்னைச் சந்திக்க வந்தா. நான் வரவேற்பறைக்குக் கூட்டிச் சென்றேன். தன் பேரப்பிள்ளையை அனுப்புவதாகக் கூறிச் சென்றா. அவள் புத்தமதம். பலநகைகள் போட்டிருந்தா. தன் கணவன் உயிரோடு இருக்கும்போது மேலும் கூட வைத்திருந்ததாகக் கூறினா.

## 15. புரட்டாதி 1874

சித்திரை மாதத்தில் பாஸ்கு லீவு முடிந்ததும் கிறிஸ்மஸ் வரையிலான எம் பணியை ஆரம்பித்தோம். பாடசாலை ஆரம்பமாகும் முதல்நாள், மடத்தில் ஒரு சிறிய விழா ஏற்பாடு செய்து வழக்கம்போல் கேக் வகைகள் கொடுத்தோம். பின்பு ஒரு சுற்றுலாவுக்குச் சென்றோம். எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள ஆங்கில அநாதைப் பிள்ளைகள் எல்லோரும் ஒன்று கூடினர். பாடசாலை ஆரம்பம் நன்கு இடம்பெற்றாலும் புரட்டஸ்தாந்து பாஸ்ரர் நல்ல தருணம் பார்த்து எமது பிள்ளைகளைத் தம்மிடம் இழுக்க வழி தேடினார். எமது படிப்புக்கள் சரியில்லை என்று கூறியதால், மக்கள் எதிர்த்து எழுந்து பத்திரிகைகளில் தம் கருத்துக்களை தெரிவித்தனர். மக்கள், சகோதரிகள் சார்பாக அவரது அறிக்கையை எதிர்த்து, நன்மையாகப் பத்திரிகைகளில் எழுதினர்.

நாம் யேசுவின் திரு இருதயத்தில் சரணடைந்து எமது பிள்ளைகளை அவரின் பாதுகாப்பில் ஒப்படைத்து நவநாள் செய்தோம் ஒரு பிள்ளையை இலவசமாக படிப்பிப்போம் என்று பாஸ்ரர் கூறியும் பிள்ளை செல்லவில்லை.

மாதாவின் மாதத்தில் ஒரு குடும்பம் ஒவ்வொரு நாளும் அவவின் பீடத்தை அலங்கரித்தது. வசதி படைத்தவர்கள் கோவிலையும் அலங்கரித்தனர். இரவு எட்டு மணிக்கு வழிபாடு நடைபெறும். வீதி எங்கும் ஒளி மயமாக இருக்கும். சிரட்டையுள் எண்ணெய் திரி விட்டு எரிப்பர். நாம் French,English மொழியில் பாடலில் பங்கு எடுப்போம். மக்களுக்கு எமது பாடல் புரியாவிட்டாலும் கேட்டுக்கொண்டிருப்பர்.

தூய ஆவியின் திருவிழாவில் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. 13 பிள்ளைகளில் 9 பேர், Fr.Duffo வின் பிள்ளைகள். ஏனைய 4 பேர், ஓணரின் நீற்றா, அனா, விக்ரறின் எம் சிற்றாலயத்தில் திருமுழுக்கு வழிபாடு நடைபெற்றது. ஓணறின் உடைய பெற்றோர் வந்திருந்தார்கள். அவள் என்னுடைய எல்லாவற்றையும் விற்று நீங்கள் கிறிஸ்தவர்களாகி மடத்தில் வந்திருங்கள் என்றாள்.

வைகாசி 31இல் தேவதாய் ஒரு 5 வயது புத்த சிறுமியைத் தந்தா. ஆகத்தா எனப் பெயரிட்டோம். திரு இருதய விழாவன்று சகல வரப்பிரசாத மாதா விழாவையும் நினைவு கூர்ந்து 4 சிறுமிகளுக்கு திருமுழுக்கு அருளப்பட்டது. 3 விழா ஒன்றாக நடந்தது. பிள்ளைகளைத் திரு இருதயத்திற்கும் மாதாவிற்கும் ஒப்புக் கொடுத்தோம். திருஇருதய மாதத்தில், குழுவாலும் பிள்ளைகளாலும் சிங்கள, ஆங்கில வழிபாடுகள் பிரார்த்தனை இடம்பெற்று ஓர் ஆங்கிலப் பாடல் பாடப்பட்டது.

**15 ஐப்பசி 1874**

எம் தாயார் இல்லாத படியால் எம் பணிபற்றிய அறிக்கையை எழுதும்படி என்னைக் கேட்டார். ஆயர் Bonjean விருப்பப்படி ஆடி 9ந் திகதி யோசேப்பின் தாயார் யாழ் சென்றார். அவவின் பிரிவு எமக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவ கன்னியர், இராயப்பர் சகோதரிகளுக்கும் கவலை. 2 மாதம் அங்கு இருப்பா. இராயப்பர் சகோதரிகளுக்குச் சிங்களம் விளங்காது. நான் அவர்கள் மத்தியில் கைச்சயிக்கினை காட்டி அல்லது, ஆங்கிலம், சிங்களம் தெரிந்த ஆயத்த கன்னிகையின் உதவியுடன் பேசினேன். எனக்குத் தெரிந்த ஆங்கிலச் சொற்களைக் கூறினேன். சில சிங்களச் சொல், மிகுதி Frenchஇல் கூறினேன். அவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை ஒரு நாள் ஒரு சகோதரி ஐயோ சிஸ்ரர், நீங்கள் அரை வாசி ஆங்கிலம், அரைவாசி சிங்களம், French கதைக்கின்றீர்கள். உங்களை விளங்க வேண்டுமே என்றாள் சில வேளைகளில் சில சொற்களை ஊகித்து அறிந்தார்கள். அல்லது சிரிப்பார்கள். டுவ்வோசுவாமி எமக்கு உதவி செய்தார்.

ஆடி 25 இல் ஆயரின் திருவிழா. எம் பிள்ளைகள் கேக் வகைகள் செய்தனர். இராயப்பர் சகோதரிகளுடன் சேர்ந்து குருவானவரின் அநாதை பிள்ளைகளுக்குமாகச் செய்தனர். தேங்காய் துருவி பால் எடுத்து இடித்த அரிசியுடன் கலந்து, பிசைந்து சிறிய உருண்டையாக்கி 3 கல் வைத்து நெருப்பு மூட்டி எண்ணெயில் போட்டு எடுத்தனர். இது எம் வயிற்றுக்கு சரிவராது. கண்ணால் ரசித்தோம். காலையில் திருப்பலியும் மாலை வாழிபாடும் நடைபெற்றது. அத்துடன் St. Anne Feast உம் வேஸ்பரும் சேர்க்கப்பட்டது.

இங்கு St. Anne Feast சிறப்பாக கொண்டாடப்படும். குருநாகலில் ஒரு கோவிலில் நவ நாள் தொடங்க எல்லா இடங்களிலும் இருந்து பக்தர்கள் வருவார்கள். தம் வீட்டை விட்டு மாட்டு வண்டியில் வருவார்கள். வழியில் திறந்த வெளியில் சமையல் செய்து அங்கு தங்கி பல நாட்கள் கிழமைகள் செலவிடுவர். இங்குள்ள காலநிலையும் இதற்கு ஏற்றதாக உள்ளது. ஏழைமுதியவர்கள் பல நாட்கள் நடந்து வந்ததால் களைப்புற்றிருப்பர். திருநாளின் அடுத்த நாள் உணவு தயாரித்து எல்லோருக்கும் வழங்குவர். இது ஊர் மக்கள் கொடுத்த நன்கொடையால் தயாரிக்கப்பட்டதால் ஏழைகளுக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுக்கப்படும். எம் ஆயத்த கன்னிகைகளும் தம பங்கை அளித்தனர். எமக்கு மதிய உணவு தந்தார்கள். சோறு மீன்கறி மரக்கறி எல்லாம் மிளகாய் மஞ்சள் போட்டு சமைத்திருந்தது. Fr.Duffo வுக்கு ஒரு பெரிய கட்டில் கொடுத்தனர். மக்கள் எல்லோரும் கோவிலடியில் தென்னைமரத்தின் கீழ் இருந்து வாழையிலை போட்டு கைகளினால் உண்டனர் இது ஆதி கிறிஸ்தவர்களின் Agape ஐ நினைவு ஊட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி 15இல் உங்கள் திருநாளை நினைவு கூர்ந்தோம். புரட்டாதி 3இல் யோசேப்பின் தாயார் இங்கு வரவும் ஒரு விழா வைத்தோம். பாடசாலை ஆண்டு முடிவில் பலர் காய்ச்சலினால் பாடசாலைக்கு வரவில்லை. அரச ஊழியரின் பிள்ளைகள் இடம் மாற்றம் வரும்போது சென்று விடுகின்றார்கள். 22 பிள்ளைகள் இருந்தும் ஒழுங்காக வரமாட்டார்கள். எனினும் எமது அநாதை மடத்திற்கு 3 புத்த பிள்ளைகள் வந்தனர். இவர்கள் மூலம், கிறிஸ்தவம் பரவும் என்பதற்கு அவர்களின் நன் மாதிரிகையே காரணம். அனாவின் தந்தை அதிகாரியாக வந்துள்ளார். அவர் தம் பிள்ளைகளை எடுப்பார் எனப் பயந்தோம். ஆனால் அவர் வேறொரு பிள்ளையை கூட்டிவந்தார். தற்போது 17 பிள்ளைகள் உள்ளனர். இன்னும் வேறு பிள்ளைகளை எடுக்கலாம். ஆனால் திருப்பாலத்துவசபை பணம் போதாது புது வீடு கட்டும்போது பாம்பு வராது என நினைத்தோம். ஆனால் வந்து கொண்டேயிருக்கின்றது. வீடு உயரத்தில் கட்டப்பட்டுள்ளது.

## குருநாகல் தை 1875

ஐப்பசிக் கடைசியில் புரட்டஸ்தாந்து பாடசாலைப் பிள்ளைகள் லீவில் சென்றனர். தளபாடங்கள் விற்கப்பட்டன. பாஸ்ரரின் மனைவி பதவி விலகினா. இப் பணியை ஊக்குவித்தவர்கள் கை கழுவியதால் 30 ஸ்ரேலின் நட்டத்துடன் (கடன்) தம் பணியை விட்டார்கள். எனவே பிள்ளைகள் எமது பாடசாலைக்கு வருகிறார்கள். மேலும் 3 புத்த பிள்ளைகள் எம் அநாதை மடத்திற்கு வந்து ஒரு பிள்ளை மாலையிலே 6 மைல் தூரத்தில் உள்ள தனது வீட்டிற்கு சென்று விட்டா. அவவின் இடம் நிரப்பப்பட்டுள்ளது .கஷடங்கள் மத்தியில் எம் பணி சிறந்து வருகின்றது. திருப்பாலத்துவசபை நிதியில் பணம் இருந்தால் மேலும் பிள்ளைகளை எடுக்கலாம். தற்போது ஒரு லொத்தர் ஆயத்தம் செய்துள்ளோம். எமக்காக செபிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு அறிக்கையில் எம்மிடம் வரும் எல்லா புத்த பிள்ளைகளையும் சேர்க்க முடியாதநிலையில் இருப்பது பற்றி எழுதியிருந்தேன். 15 பிள்ளைகளை திருப்பாலத்துவ சபை மூலம் சேர்க்கமுடியும். தற்போது 17 பேர் உள்ளனர். 2 பேர் எம்மடத்துச் செலவில் உள்ளனர். தை 1ம் திகதி மேலும் 2 பேர் வந்தனர். ஒருவர் 13 வயதுச் சிறுமி சென்ற வருடம் வந்து நாம் பொலின் எனப் பெயரிட்டோம். பின்பு முதல் நன்மை பெற்றார். அவவின் தாய் சடுதியாக இறந்து போனதால், அவள் தந்தை 3 வயது, 4 வயதான இரு கடைசிப் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு தை 1ந் திகதி இங்கு வந்தார். சேர்க்க முடியாத நிலையை நாம் கூறியபோது அழத்தொடங்கினார். பொலின், தாயை இழந்த பிள்ளைகளுக்குத் தாயாக இருக்க வேண்டியதால் அவளும் சேர்ந்து அழுதாள். 2 பிள்ளைகளும் பொலினுடன் சேர்ந்து நின்றதால் தேவ பராமரிப்பில் நம்பிக்கை வைத்து மடத்தில் சேர்த்துள்ளேன். தற்போது புனித. Benoit Labre (பெனடிக்ற் லாப்றெ) என்பவருக்கு நவநாள் செய்து விசேட அருள் பெற மன்றாடுகின்றோம். அத்துடன் மாறியோசெவ், மாறி பெனடிக்ற் என்னும் பெயர்களைக் கொடுத்துள்ளோம்.

சில நாட்களின் பின் தேவ பராமரிப்பு மூலம் ஒரு நன்கொடை கிடைத்தது. M.Aubert என்பவர் காலியில் இருக்கும் வெளிநாட்டு தூதுவர். எம் அநாதை மடத்திற்கு தை 1ந் திகதியில் இருந்து ஒரு மாதத்திற்கு 4 ரூபாவும் 5 பவுணும் அனுப்புவதாகக் கடிதம் வந்தது. ஒரு பிள்ளைக்கு இது போதும் மற்றப் பிள்ளைக்கு லொத்தர் ஒன்று இழுக்க உத்தேசித்துள்ளோம். முதலாம் முறையாக இதை செய்வோம்.

தை 8ந் திகதி திருக்குடும்பத் திருநாள் கொண்டாடினோம். நாம் லீவில் இருந்த படியால் பக்தியுடனும் மகிழ்வுடனும் செலவிட முடிந்தது. Fr. Duffo எம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார். நாம் குடும்ப பாடல்கள் பாடினோம். இது எம்மை பிரான்சில் உள்ள சகோதரிகளுடன் ஒன்றிணைத்தது.

சில காலமாக ஆயர் வருகையை எதிர் பார்த்துள்ளோம். ஒரு மாதம் தாமதித்து மாசி 27ந் திகதி மாலை 6மணிக்கு வந்தார். Fr. Duffo அவரின் 45 அநாதைப் பிள்ளைகள், குருநாகல் கிறிஸ்வர்கள், சில புரட்டஸ்தாந்தர், ஆயரின் வாகனத்தை நோக்கிக் காத்திருந்தனர். நாமும் எம் அநாதை பிள்ளைகளுடனும் ஆங்கிலப் பிள்ளைகளுடனும், பவனியில் சேர்ந்தோம். ஆயர் எமக்கு விசேட ஆசி தந்தார். ஒவ்வொருவருக்கும் ஒரு நல்ல வார்த்தை கூறினார். பின்பு ஆலயத்தை அடைந்தோம். ஆயர் பயணக்களைப்புடன் எம்மை வரவேற்றார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு திருப்பலியின் பின்பு ஆயர் எம்மை சந்திக்க வந்தார். திங்கட்கிழமை கண்டிக்குச் சென்றார். அடுத்த நாள் திரும்பி வந்தார். மாலையில் 1874ம் ஆண்டுக்குரிய பரிசு அளிப்பு, சிங்கள, ஆங்கில பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்டது. மார்கழியில் கொடுக்கப்பட வேண்டிய பரிசு ஆயருக்காக மாசியில் பின் போடப்பட்டது.

M.Aubert என்பவர் காலியில் இருந்து எம் குடும்ப விழா தொடங்கும்போது வந்து, அதில் பங்கெடுத்தார். பாட்டுக்கள் நகைச்சுவை நாடகங்கள் நடைபெற்றன. பின்பு பிள்ளைகள் அனைவரும் பரிசு பெற்றனர். செபப்புத்தகம் சிங்களத்தில் அச்சிட்டு கொடுக்கப்பட்டது. சிங்களப் பிள்ளைகளுக்கு படம், பொன், வெள்ளிப் பேப்பரால் அலங்கரித்துக் கொடுத்தோம். அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. இவ்வாறே நாம் பிரான்சில் இருந்து பெறும் பொருட்களைப் பாவிக்கின்றோம். எட்டு நாட்கள் லீவு கொடுத்தபடியால் வருடாந்த ஞானொடுக்கம் செய்தோம். ஆயருக்கு 8 நாள் செய்யவிருப்பம் ஆயினும் பல வேலைகளினால் 4 நாள் மட்டும் செய்ய முடிந்தது. 5ம் நாள் இறுதி நாள் Fr. Duffo இராயப்பரின் சகோதரிகளுக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும் சிங்களத்தில் நடாத்தினார். 8 பிள்ளைகள் முதன் நன்மை பெற்றனர். எனவே துன்பமும் மகிழ்ச்சியும் எமக்கு உண்டு. இந்த அருளின் நாட்களில் பல நன்மைகள் பொழியப்பட்டன. இறுதி நாளில் ஒரு ஆயத்த கன்னிகையை துறவற உடுப்புப் பெற்று மேரிபெனடிக்ரா என்னும் பெயர் பெற்றா. 2 நவகன்னியர் கீழ்ப்படிதல் வார்த்தைப்பாடு எடுத்தனர். வழிபாடுகள் சிங்கள மொழியில் எல்லோருக்குமாக நடைபெற்றன. நீற்றா, ஓணறின் என்னும் 2 அநாதைப் பிள்ளைகள், 2 வெளிப்பிள்ளைகள். குருவானவரின் 10 பிள்ளைகள், முதல் நன்மை பெற்றனர். இது எமது முதல் அறுவடை. பின்பு உறுதி பூசுதலும் கொடுக்கப்பட்டது. எம் பலமற்ற முயற்சிகளுக்கு ஆசி கிடைத்தது.

சில நாட்களின் பின் ஆயர், புனித சூசையப்பரின் திரு நாளுக்கு புனித அன்னாள் ஆலயம் சென்றார். 50 மைல் தூரத்திற்கு மாட்டு வண்டிப் பிரயாணம் செய்தார். ஞாயிறு மாலை 9 மணிக்கு இவ்விடம் விட்டுச் சென்றார்.

**ஆடி 1875**

என் நல்லதாயாரே! சென்ற அறிக்கையில் ஆயர் சந்திப்பு தியானம் பற்றி எழுதியிருந்தேன். ஆயர் கொழும்பு சென்று நீராவிக்கப்பல் வழியாக யாழ் செல்ல ஆயத்தமாகும்போது Sr. St.Jean மரண்மடைந்ததால் உடனே குருநாகல் வந்து ஒருநாள் எம்முடன் செலவிட்டார். எமக்குத் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுதாபத்தைத் தெரிவித்தார். சிறப்பாக சிஸ் பற்றிக்குக் கூறி அடுத்தநாள் யாழ் சென்றார்.

சித்திரை 1ந் திகதி Fr.Duffo வின் பிள்ளைகளுக்கும் எம் ஆங்கில, சிங்களப்பிள்ளைகளுக்கும் Fr. Perrard (பெராட்) தியானம் கொடுத்தார். 4 பேர் முதல் நன்மைக்கு அனுமதிக்கப்பட்டனர். இறுதி நாள் எல்லோருக்கும் ஓர் திருவிழாவாக அமைந்தது.

மாதாவின் மாதம் சென்ற வருடம் போல் நன்கு கொண்டாடப்பட்டது. எமது சிங்கள மக்கள் ஆலயத்தை நன்கு அலங்கரித்துத் தினமும் மாலை வேளையில் பத்து பதினொரு மணிவரை வாணவேடிக்கை நடாத்தினர். பின்பு நற்கருணை ஆசீர்வாத வேளையில் பாடகர் குழாம் ஒன்றை ஆயத்தப்படுத்தி வயலின் இசைத்து சிங்களப் பாடல் பாடினர். சில வேளை ஆங்கிலம், சிங்களம். தமிழ், போர்த்துக்கேயம் ஆகிய 4 மொழிகளிலும் பாடினர்.

திருஇருதய விழாவின்போது எம் ஆலயத்தில் திருப்பலியும் நற்கருணை எழுந்தேற்றமும் நடைபெற்றது 7 மணி தொடங்கி மாலை 5 மணிவரை எமது குழுச் சகோதரிகள், நவகன்னியர் அநாதைச் சிறுமிகள் யேசுவின் பாதத்தண்டை வந்து செபித்தனர். நாம் எமது திருச்சபைக்காகவும் பிரான்ஸ் நாட்டிற்காகவும் தலைவிகள் சகோதரிகளுக்காகவும் மன்றாடினோம். நாம் கடல்கள் தாண்டி இருந்தாலும் சில உள்ளங்கள் எம்மை மறவாது இருக்கும் என நம்புகிறோம்.

புனித இராயப்பர் திருநாள் அன்று ஞானப்பூச் செண்டு ஒன்று எம் நல்ல பிதாவிற்கு ஆயத்தம் செய்தோம். 8 புத்த பிள்ளைகள் திருமுழுக்குப் பெற இருந்தும், சில காரணங்களால் அது நடைபெறவில்லை.

**மார்கழி 1875**

என் நல்ல தாயாரே

நாம் ஒரு கிராமத்தில் செலவிட்ட நாளைக் கூறுவதுடன் என் அறிக்கையை ஆரம்பிக்கிறேன். அரசிக்கு முடிசூட்டிய நாள் எமக்கு லீவாகும். அந்த நாளில் ஏதும் மகிழ்ச்சியான முறையில் நாளைச் செலவழிக்கலாம். பிள்ளைகளுக்கு திறந்த வெளியில் ஓடிவிளையாடுவதே விருப்பம். எமது பிள்ளைகளின் தந்தை ஒருவர் நகரில் இருந்து 8 மைல் தூரத்திலுள்ள தன் கிராமத்திற்கு வரும்படி கூறினார். அந்த இடம் தனிமை என்றதால் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்று சம்மதித்தேன். எனவே காலை 5 மணிக்கு எழும்பி புறப்பட தயார் செய்தோம் முதல் நாள் மாலை எல்லா ஆயத்தங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருந்தோம். பிரான்சிலுள்ள சொலிற்றியூட்டுக்குச் செல்லும் பயணத்தை இது எமக்கு நினைவூட்டியது. அத்துடன் யாரோ மார்த்தியாக்கிற்கு புறப்படுவோம் என்று கூறியது கேட்டது. 3 மாட்டு வண்டிகளும் எமக்காக காத்திருந்தன. எல்லாப் பிள்ளைகளையும் 2 வண்டியில் ஏற்றி விட்டு மற்றையதில் நாம் ஏறினோம். 2 கறுப்பு நிற மாடுகள் இதனை இழுத்தன. பாதி வழியில் முதலாம் வண்டி மாடுகள் படுத்து, அசைய விரும்பாததால் பிள்ளைகள் நடக்க நேரிட்டது. நாம் இரு மருங்கும் இருந்த காட்சிகளை மரம் செடி கொடிகளைப் பார்த்து இரசித்துக்கொண்டிருக்கும்போது முன் சென்ற ஒரு நீரோடையினால் பயணம் தடைப்பட்டது அதில் அதிகம் நீர் இருந்தது. பிள்ளைகள் அங்கே இருந்த 2 சாய்ந்த நாற்காலிகளைக் காட்டி அங்கு சென்று அமரும் படி கூறினர். அதில் இருந்ததும் 4 மனிதர்கள் எம்மைச் சுமந்து அடுத்த பக்கத்தில் விட்டனர். பின்பு மற்றவர்கள் வந்து சேர்ந்ததும் அங்குள்ள சிறிய வீட்டை நோக்கிச் சென்றோம் அது தென்னந்தோப்பின் மத்தியில் அமைந்துள்ளது அதனூடாக நீரோடை, மணலின் மேல் அமைதியாகவும் பாறையின் மேல் சத்தத்துடனும் ஓடியது. பின் 2 மலைக்குன்றுகளினூடாக ஓடி நெல்வயல்களினூடாகப் பாய்ந்தது. நாளும் சந்தோசமாகக் கழிந்தது.

3 மணியளவில் ஒரு மரத்தின் கீழ் ஞானவாசனை செய்யும்போது ஒருவர் வந்து மலையில் இருந்து அதிகநீர் வருவதால் கெதியில் புறப்படும்படியும் அல்லது நீரோடையைக் கடக்க முடியாதென்றும் கூறினார். சில நிமிடங்களில் எல்லோரையும் சேர்த்துக்கொண்டு நீரோடைக்கு வந்து முன்பு போல் நடந்தோம். இயற்கைக் காட்சிகளை கூடுதலாக ரசிப்பதற்காக Srs. Stanislaus Patrick இவர்களை பிள்ளைகளுடன் விட்டு நானும் Sr. celestரும் முன்னோக்கிச் சென்றோம். அப்போது ஒரு கூட்டம் எருமைகள் எம்மை நோக்கி வர நாங்கள் பயந்து நிற்கும்போது ஒருவர் பயப்படத்தேவையில்லை என்றார். பின்பு சற்று தூரம் நடந்து வர ஒரு பாம்பு நின்றது. பின்பு இச் சாரைப்பாம்பு சென்று மறையுமட்டும் நின்று பிரதான வீதிக்கு வந்து வண்டிகள் வரவை காத்திருந்தோம்.

ஒரு லொத்தர் இழுத்து 300 பிராங் பணம் சேர்த்துக்கொண்டோம். எமது பாடசாலையைச் சகலரும் பாராட்டுகின்றனர். கல்வி அதிகாரியை ஒருவர் எம் ஆங்கில பாடசாலை வகுப்புப் பற்றி கேட்டபோது இந்தப் பாடசாலையைப் போல் வேறொன்றைக் காணவில்லை என்றாராம். மார்கழி 10ந் திகதி அனி முதல் நன்மை பெற்றார். வெண்ணுடையுடன் ரோஸ் முடி அணிந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நல்ல தாயாரே!

வருடத் தொடக்கத்தில் எம் ஆங்கில வகுப்புக்கு அதிகமானோர் வந்தார்கள். போடிங் பிள்ளைகளும் வந்திருந்தனர். எனினும் தீய சக்திகளும் கூடவே இருந்தன. ஒரு புதிய புரட்டஸ்தாந்து ஆயர் இங்கிலாந்திலிருந்து வந்திருந்தார். உறுதி பூசுதல் கொடுக்க விரும்பினார். ஓர் இளம் போதகர் அவர் கையால் குருப்பட்டம் பெற விரும்பினார். அவர் எம்மிடம் வரும் புரட்டஸ்தாந்துப் பிள்ளைகளை எடுத்து விட விரும்பினார். வராவிட்டால் உறுதி பூசுதல் இல்லை என்று கூறிய படியால் பிள்ளைகள் எம் பாடசாலையில் இருந்து விலக ஆரம்பித்தனர். அப்போது போதகரின் மனைவியும் ஒருவருடமாக மூடி இருந்த தன் பாடசாலையைத் திறந்தா. தன் வீட்டின் முன்னால் சென்ற ஒரு கத்தோலிக்க பெண் பிள்ளையையும் மறிக்க முயன்றா. அப்போது அவளின் தந்தையின் முயற்சியால் இது முறியடிக்கப்பட்டது.

எனினும் புனிதசூசையப்பரின் திருநாளை நாம் கொண்டாடினோம். Sr. Stanislaus பிள்ளைகளுக்கு ஒரு நாடகம் பழக்கி நன்றாகச் செய்தனர். பங்குனி 25ந் திகதி 2 புத்த பிள்ளைகள் திருமுழுக்குப் பெற்றனர். எம் அநாதை மடமும் சில துன்பங்களுக்கு உள்ளானது. ஒரு பிள்ளையை அனுப்பினோம். மற்றோர் பிள்ளை ஓடி விட்டது. இவர்கள் பிற சமயத்தவர்கள் மத்தியில் தம் விசுவாசத்தை இழக்கப்போகிறார்கள். இருவரும் முதல் நன்மை பெற்றவர்கள். ஒரு பிள்ளை தன் தந்தை வழியாக செபப் புத்தகம் செப மாலை கேட்டிருந்தா. இது இவர்களின் பெற்றோர் மனமாற்றத்திற்கு உதவி செய்யும்.

பங்குனி, வைகாசி ஆனி மாதம் பக்தி முயற்சிகள் இரண்டு குழுவினாலும் பிள்ளைகளாலும் நடாத்தப்பட்டன. Sr. Stanislaus தலைமையில் பிள்ளைகள் பிரார்த்தனைகள் பாடி இறுதியில் ஆங்கிலப் பாட்டுப் பாடினர். மாதாவிற்கு நிரம்ப மெழுகுதிரி கொழுத்துவார்கள் சில வேளைகளில் சுருவமும் மறைந்து இடமும் மெழுகு உருகி சுத்தம் இல்லாது இருக்கும். மாதா இருதயத்தில் கருத்துக்களையே பார்க்கின்றா. நற்கருணை எழுந்தேற்றம் இல்லாதவேளைகளில் பிள்ளைகள் தாமே பாடி இறுதியில் ஒருவர் குறிப்புக்கள் ஒன்றும் இல்லாது Organ Play பண்ணுவார்.

ஆனி மாதத் தொடக்கத்தில் M.Aubert (ஒபேட்) ஐரோப்பா செல்லு முன் கண்டியில் இருந்து எமக்குப் பிரியாவிடை கூறவந்தார். ஆயரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாகலில் இருந்தபடியால் எம் பாடசாலையையும் பார்த்து எமக்கு ஒரு வெகுமதியும் தர விரும்பினார். எனவே அவர் வர முன்பு நாம் ஆயத்தம் செய்தோம். அவர் வர நாள் வந்ததும் வெகுமதி முன்னதாகவே வந்தது. திறந்து பார்த்தபோது ஒரு கதிரைச் செல்வியின் படம் இருந்தது. அதை நாம் வரவேற்பறையில் போட்டோம். அவர் வந்ததும் நாம் கூறினோம். பிள்ளைகளும் இந்தப் படத்தைப் பார்த்து சந்தோஷப்பட்டனர்.

ஆனி 12ந் திகதி சகல வரப்பிரசாத மாதா பாதத்தடியில் ஒன்று கூடினோம். திருஇருதயத் திருநாளன்று எமது ஆலயத்தில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது. பழைய மாணவர்களும் திருப்பலியில் பங்கு பற்றினர். திருவிருந்தில் பங்கு கொண்டனர். Fr. Doffo ஆங்கிலத்தில் மறை உரையாற்றினார். முத்திப்பேறு பெற்ற மாகிறெற் மேரிக்கு இயேசுவின் வெளிப்பாட்டை விளக்கினார். அன்றிரவு அவர் படுத்திருந்தபோது ஒரு சத்தம் கேட்டது. பார்த்தபோது ஒரு பாம்பு அவருடன் இருந்த பிள்ளைக்கு அண்மையில் இருந்தது. உடனே ஒரு தடி எடுத்து அடித்து விட்டார்.

தேவதாய் எலிபெத்தம்மாளைச் சந்தித்த திருநாளன்று எம் தோட்டத்தில் லூர்து மாதாவின் சுருபம் ஒன்று வைத்தோம். கொழும்பிலிருந்த ஒருவர் தான் சுகம் பெற்ற நன்றிக்காக இச்சுருவத்தை குருவானவருக்கு கொடுத்தார் அவர் அதை எமக்கு தந்தார். கோவிலிருந்து மடத்துக்கு வரும் பாதை தோரணங்களாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. முதல் நாள் அரசிடம் Canon (பீரங்கி) வாங்கி வந்தனர். கேற்றின் மேல் ஒரு வளைவு செய்து அதில் "அமலோற்பவம் நானே" என எழுதி வைத்தனர் விளக்கும் வைத்தனர். சிவப்புக்கொடி பறக்க விட்டனர். தேங்காய் எண்ணெய் விளக்கு எரித்தனர். நாள் முழுவதும் மக்கள் வந்து மாதாவிடம் மன்றாடினார். காலையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. Fr. Perad வாய்க்கால் என்ற இடத்தில் இருந்து வந்து நல்ல மறையுரை ஆற்றினார். மாலை 5 மணிக்குப் பவனியாகச் சென்று மாதாவை கெபியில் வைத்தோம். ஒவ்வொரு பிள்ளையும் ஓரு செயுற்கை லில்லிப்பூவைக் கொண்டு சென்றனர். வெண் உடை அணிந்து ரோஸ் முடி வைத்த பிள்ளைகளில் 8 பேர் மாதாவை சுமந்து சென்றனர். 5 இளம் பிள்ளைகள் இயற்கைப் பூக்களுடன் மாதாவுக்கு முன் நடந்து சென்றனர். இடைக்கிடை பீரங்கி வெடிச்சத்தம் கேட்டது. இச்சத்தம் சிங்களப் பிள்ளைகளுக்கு பயத்தை ஏற்படுத்திக் குழப்பம் நேரிட்டது. எனினும் இரு மருங்கும் இருந்த மலைகளிடையே சென்று கெபியை அடைந்தனர். அங்கு குருவானவர் மீண்டும் மறை உரை யாற்றினார். லத்தின் பாட்டுடன் வழிபாடு முடிந்தது. பின் தனித்தனியே சிலர் மன்றாடினார். வெடிச்சத்தமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டது. சிலர் மாதாவின் பாதத்தை முத்தி செய்து காணிக்கை போட்டனர்.

இத்தவணையில் இப் பூக்களையே நாம் கொய்தோம். அதே வேளையில் துன்பங்களையும், ஆன்மாக்களின் மீட்புக்காக இறை மகிமைக்காகப் பெற்று வருகின்றோம்.

## ஐப்பசி 8 1876

லூர்தூ மாதாவின் பக்தி பெருகி வருகின்றது. ஒருநாள் மாலையில் மாதாவின் பாதத்தடியில் ஒரு சிறிய கையும் பாம்பும் வெள்ளித்தகட்டால் செய்யப்பட்டு தாம் பெற்ற சகாயத்தின் அடையாளமாக வைத்திருந்தனர். நாம் ஆச்சரியம் அடைந்தோம். ஓர் இளம் புத்த நோயாளியும் டுவ் - வோ குருவுடன் உடன் சேர்ந்து லூர்து மாதாவிடம் வேண்டி அவர் சுகம் பெற்றுள்ளார்.

15 மாதத்தின் பின் ஆயர் இவ்விடம் வந்தார். ஆயர் வருகிறார் என்று அறிந்ததும் டுவ்வோகுருவானவர் தன் முற்றத்தில் ஒரு தென்னோலைக் கொட்டில் போட்டு அயல் வீடுகளில் நாற்காலிகள் சாய்மனை நாற்காலிகள் வாங்கிப்போட்டோம். தென்னோலை கிடுகால் வேய்ந்த கொட்டில் சூரியனின் சூட்டுக்கும் மிகவும் நல்லது. ஒரு நாளுக்கிடையில் எல்லாம் தயார் செய்தனர். ஆவணி மாதம் 5ந் திகதி மாலை 8 மணிக்கு ஆயர் வந்தார். மறுநாள் நாம் சென்று அவரைச் சந்தித்தோம். இரண்டு நாட்களின் பின் எமக்கு தியானம் கொடுத்தார். இதன் வழியாக நாம் யேசுவின் குரலைக்கேட்டு அன்று அப்போஸ்தவர் கேட்டது போல் கூடாரம் அடித்துத் தங்க வேண்டும் போல் இருந்தது. 6 வருடங்களாக ஒரு புரட்டஸ்தாந்து போதகர் எமக்கு துன்பம் தந்து கொண்டிருக்கின்றார். எம் வீட்டிற்கு பக்கத்தில் தான் அவருடைய வீடும் உள்ளது. அழிந்த நிலையில் இருந்த வீட்டை இவ்வருடம் அவர் புதுப்பித்து, பாடசாலைப் பிள்ளைகளையும் எடுக்க விரும்பினார். ஆயர் தக்க சமயத்தில் 1872ம் ஆண்டில் இருந்து படிப்பித்த பாடசாலையையும் வாங்கி எமக்கு உதவி செய்தார். எனவே எமக்காக நீங்கள் விசேட விதமாக மன்றாடவும் ஆவணி 15ந் திகதி உங்களுக்காக மன்றாடினோம். ஆயர் எங்களுடன் இருந்தது. மகிழ்ச்சிக்குரியது.

## தை 1877

புரட்டஸ்தாந்து போதகர் பாடசாலையை விற்பதற்கு 5000 பிராங் கேட்டார். இந்தப் பணத்தைக்கொண்டு தமக்கு ஒரு புதிய பாடசாலை கட்ட விரும்பினார். டுவ்வோகுரு வழியாக ஆயர் இதை அறிந்து பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு கொடுக்கப்படாது எனக் கூறி, 2000 பிராங்குக்கு கேட்கப்பட்டது. இன்னொருவர் 2500 பிராங் கேட்டார். கண்டியிலிருந்து ஒரு புரட்டஸ்தாந்து ஒரு கத்தோலிக்கனாகி ஓர் ஆசிரியராக வந்தபோது பல கேள்விகள் கேட்கப்பட்டாலும் அவர் உறுதியாக தன் விசுவாசத்தில் வாழ்ந்தார். குருநாகல் இன்ஸ்பெக்ரரும் ஆங்கிலப் பாடசாலையில் மிகவும் கண்டிப்பாக இருந்தார். சிங்களப் பாடசாலையில் மொழிபெயர்ப்பாளர்கள் இருந்த படியால் நன்றாக போய்க்கொண்டிருந்தது. இவ்வாறு இருக்கும்போது புதிய சகோதரிகள் பிரான்சிலிருந்து வந்தார்கள். காலியிலிருந்து கப்பல் எடுக்கு முன் கடிதம் எழுதியும் பதில் வரவில்லை. அவர்கள் புகையிரத நிலையத்தை வந்தடைந்ததும் ஒருவரையும் காணாமல் Fr.Duffo வின் சிறுவர்கள் மூலம் எம்மிடம் வந்தனர். 3 நாட்கள் எம்முடன் தங்கிப் பின்பு யாழ் சென்றனர். போகும்போது 5 பிள்ளைகளை தம்முடன் செமினறிக்கு அழைத்துச் சென்றனர். அவர்கள் பிரிவது கவலையாக இருந்தது. அவர்கள் Fr. Duffo உடன் இருந்த பிள்ளைகள் எனினும் அவர்கள் நாட்டிற்கும் மக்களுக்கும் மறைத்தூதுவர்களாக இருப்பார்களென அனுப்பிவைத்தோம்.

மார்கழி மாதத்தில் லூர்து மாதாவிற்கு நேர்த்தியாக ஒரு சிங்களக் குடும்பம் எமது பிள்ளைகளுக்கு உணவு கொடுத்தனர் எனவே குத்தரிசி, கருவாடு,மரக்கறி,வாழைப்பழம் தந்தனர். அத்துடன் ஒரு தென்னம்பிள்ளையும் கெபியில் வைத்தனர்.

நத்தார் திருநாளென்று கண்டி அதிகாரியின் மனைவி மெனிக்கா தன் கணவனுடன் (நிலெமி) ஜேற்றூட்டைச் சந்திக்க வந்தார். முன்பு யானைத்தந்தால் செய்த விசிறி ஒன்று எனக்கு தந்தா. தற்போது கிறிஸ்தவளாக வர விரும்புகிறா. மணம்முடித்தவர்களை மடத்தில் வைத்திருப்பீர்களா என எம் சகோதரிகளைக் கேட்டா. பின்பு நான் அவவுக்கு செபம் படிக்க வேண்டும் எனக் கூறி கோவிலுக்கு அழைத்துச் சென்றேன். நான் முழங்காலில் இருக்க, அவவும் அவ்வாறே செய்தா. பின்பு திரு இருதய செபம், மாதா செபம் கொடுத்து பாடமாக்கும்படி சொன்னேன். அவவுக்கு வாசிக்கத் தெரியாததால் ஜேற்றூட் சொல்லிக் கொடுக்க அவ சொன்னா. பின்பு வைகாசியில் மீளவும் வருவதாக கூறிச் சென்றா. பின்பு திருமுழுக்கு பெறலாம், என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நல்ல தாயாரே, ஆண்டுத் தொடக்கத்தில் பல புதிய பிள்ளைகள் சிங்கள வகுப்பில் காணப்பட்டார்கள். புத்தமக்கள் எம் பாடசாலைக்கு அனுப்பிச் செபங்கள் படிக்க விட்டனர். எல்லாரையும் நாம் சேர்க்க முடியாது. ''நோனா'' என்னும் 6 வயதுச் சிறுமி தன் தங்கை, தம்பியுடன் வகுப்புக்கு வந்து அவர்களுக்கு ஒரு தாய் போன்று பராமரிக்கிறாள். செபங்கள் தெரிந்தும் தந்தை விடமாட்டார் என்ற படியால் திருமுழுக்குப் பெறுவதற்கு மடத்தில் தங்க விரும்புகிறாள்.

பாஸ்குத் திருநாளில் 15 பேர் திருமுழுக்குப் பெற்றனர். மேரி ஏஞ்சல் சகோதரி இவர்களை ஆயத்தப்படுத்தி வருகின்றா. ஒருவர் புனித சூசையப்பரின் உதவியால் படிக்க வந்தார். ஒரே கடவுள் என்பதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. டுறா என்னும் அவரை நாம் கேள்வி கேட்கும் போது பலகடவுள் என்றார். அத்துடன் ''கிறீஸ்தவனாகாதே'' என்னும் குரல் இரவும் பகலும் அவனுக்குக் கேட்டது. இதனால் செபம் படிக்க முடியவில்லை. எனவே அவனை விட்டோம். பாஸ்குத் திருநாளை அண்மித்த நாட்களில் கொழும்பு நல்லாயன் சபைச் சகோதரிகளுக்கு உதவி செய்ய வாய்ப்புக் கிட்டியது. அந்தக குழுவில் 2 சகோதரிகள் சுகவீனமுற்றிருந்தனர். வேறு ஒரு சகோதரி கடும் சுகவீனமுற்று இருந்ததால் டொக்டரின் ஆலோசனைப்படி அவளை இடமாற்றம் செய்வது நல்லது என்று கூறியபடியால் எம் மடத்தில் இடம் கேட்டனர். நான் அதற்குச் சம்மதித்து எம் சகோதரிகள் போல் கவனித்தோம். அவவின் பெயர் Sr. St. Albon டொக்டர் வந்து பார்த்த போது இறுதிநாட்களில் அவவின் இதயம் தாக்கப்பட்டுள்ளது என்றார். உனே தலைமைச் சகோதரிக்கு இதை அறிவித்தேன். ஆனால் Sr. Albon தான் இங்கு குணமடைவேன் என்று நம்பி இருந்தா. டொக்டர் நோயின் தாக்கம் கூடுதலாக இருப்பதால் உடனே கொழும்புக்கு அனுப்பி அவவின் குழுவில் அவ மரணிப்பது நல்லது எனக் கூறியபடியால், ஆயரின் உதவியுடன் நானும் அவவுடன் அங்கு சென்று 3 நாள் தங்கினேன். பின்பு உண்மையைத் தலைமைச் சகோதரி அவவுக்கு எடுத்துரைத்தாள். நான் வந்த பின் அவ இறைவனின் குரல் கேட்டு அவர் பதம் சென்றா. பின்பு மற்றைய இரு சகோதரிகளும் இறந்து விட்டார்கள். நாம் கேட்டிருந்த திரு இருதயச் சுரூபமும் கிடைத்தது. உடையாமல் வந்து சேர்ந்தது. மிகவும் சந்தோஷம்.

## குருநாகல் - மாசி 1879

திரு இருதயப்பக்தி நன்கு பரம்புகின்றது. ஒவ்வொரு முதல் வெள்ளியும் மக்கள் திருவிருந்தில் பங்குபற்றிச் செல்கின்றனர். நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பணிக்கு ஒத்துழைப்புக் கொடுக்கின்றோம். எம் பணியை விருத்தி செய்வதற்குரிய ரிக்கெற் பிரான்சில் இருப்பதால் அதனை ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் மாற்ற வேண்டும். இதற்குப் பணம் தேவை. எனவே பக்திப் பொருட்களைக் கொண்டு (செபமாலை, வரவணிக்கம்) ஒரு கடை திறக்கவுள்ளேன். எனவே நீங்கள் அனுப்பும் பொருட்களுக்கு நன்றி.

ஆடி 25ல் ஆயரின் திருநாளைக் கவலையுடன் நினைவு கூருகின்றோம். சுகவீனமாக இருக்கிறார். தற்போது உடல் நிலை தேறி வருகின்றது. புனித ஆனாள் திருவிழா பலரின் திருமுழுக்குடன் கொண்டாடப்பட்டது. 8பேர் Fr. சுன்னாவேல் (Chounavel) என்பவரால் ஆயத்தப்படுத்தப்பட்டனர். சிலர் ஆவணி 15ல் திருமுழுக்குப் பெற்றனர். ஆவணி 5ல் குருநாகல் நகர ஆளுநரை வரவேற்க ஆயத்தம் செய்தனர். வளைவுகள் கட்டி அலங்கரித்தனர். அவர் தன் மனைவி (Longdon) உடன் வந்தார். எமது பாடசாலையையும் பார்வையிட்டார். தன் பிள்ளைகளையும் இங்கு அனுப்ப Fr. Duffo விடம் கேட்டார். பலதடைகள் நேரிட்டிருந்தாலும் தனது மகளையும் 2 சிறிய மகன்மாரையும் அனுப்பினார். ஆயர் போன்ஜீன் Fr.Soullier வருவதை அறிவித்தார். நல்ல மகிழ்ச்சி அவரின் பிரயாணத்திற்காகச் செபித்தோம்.

Fr. Duffo காலி துறைமுகத்திற்குச் சென்று கப்பல் வருகையை எதிர்பார்த்தார். பிரான்சில் இருந்து புறப்படும் போது கப்பலில் பழுது ஏற்பட்டதால் 8 நாட்கள் தாமதித்து இருவரும் வந்து சேர்ந்தனர். மாலை 7 மணி அவரை அடையாளம் காணமுடியவில்லை. நீண்ட தாடியுடன் Fr. Duffo எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். உடனே யாம் செல்ல விரும்பினும் முடியாது போயிற்று. தை 2ந் திகதியின் பின்பே சென்றார்.

மார்கழி 7ல் லொத்தர் இழுத்தோம். இதற்காக 6 மாதங்களாக வேலை செய்தோம். மார்கழி 8, மாசில்லா உற்பவத்திருநாளில் சுலியர் குரு தியானத்துக்குப் போதித்தார். அவரே நத்தார் நடுச்சாமப் பூசையும் நிறைவேற்றினார். தியாக்கோன், உபதியாக் கோனாக றொன்ச்சே, பிளாச்சோ இருந்தார்கள். வருடப்பிறப்பில் குழு, நோவிஷியற் 2 பிரிவு, போடிங் பிள்ளைகள் வாழ்த்துக்கூறி ஆங்கிலத்தில் பாட்டுப் பாடினர். சிஸ்ரர். மேரி ஏஞ்சல் பிறெஞ்சில் சிறிய உரையாற்றினா. இதனால் குருவானாவர் மிகவும் மகிழ்ச்சியுற்றார்.

இவ்வாறாக வருடத்தை நிறைவு செய்து மகிழ்ச்சியுடன் தொடங்க இறைவன் எம் தலைமைக்குருவின் மூலம் உதவி செய்தார். ஆளுநர் குழுவுடன் வருகைதந்த பிரதான பொறியியலாளர் இவர் அங்கிளிக்கன் சபையின் அங்கத்தவராகவும், தியாக்கோன் ஆகவும் இருந்தார். இச் செய்தி அங்கு பரவிக் கண்டி அதிமேற்றிராசனத்துக்குச் சென்றடைந்து அவரது பெயரை நீக்கிவிட்டார்கள். அவர் மனம் சோரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது முன்னைய அறிக்கையில் 9ம் பத்திநாத பாப்பரசரின் ஆசிபெற்ற வரலாற்றை அறிவிக்க மறந்துவிட்டேன். இறக்க முன் தன் ஆசியை எழுதிக் கையொப்பம் இட்டார். அதை எம் ஆயர் தந்தார் அதை Sr. Patrice அலங்கரித்து எமது குழும (Community) அறையில் போட்டோம்.

வருடத் தொடக்கத்தில் தந்தை சுலியர் தை 2ல் எம்மை விட்டு யாழ் சென்றார். காலை 7 மணிக்கு Fr. Duffo உடன் சென்றார். அவர் சென்றது கவலையாக இருந்தாலும் யாழ் சகோதரிகள் மகிழ்ச்சியடைவார்கள் என எண்ணினோம். பின்பு நம் அன்றாட கடமைகளைத் தொடங்கினோம். பரீட்சைகளும் திருப்தி தந்தன. எம் தியாக சேவைகள் சிங்கள மக்கள் மத்தியில் நல்ல பலன்களைத் தருகின்றன.

முதன் முறையாக ஓர் அநாதைப் பிள்ளை, மாறி சில்வியா Fr. Duffo உடன் இருந்த லூயிஸ் என்பவரை மணம் முடிக்கப் போகின்றா. குருநாகலில் இருந்து 16 மைல் தூரத்தில் திருமணம் நடைபெற்றது. பின்பு எம்மைச் சந்திக்க வந்தார்கள். அப்போது Fr. சுலியர் ஆசி வழங்கினார் எமது முதற் பணிக்கு. சில்வியாவின் தந்தையும் மனம் மகிழ்ந்தார்.

சில நாட்களின் முன்பு ஒணறின் உடைய தாய் மிக வருத்தமாக இருந்ததால் தகப்பனார் அவளை வீட்டுக்கு அனுப்பும் படி கேட்டார். 2 நாட்களின் பின் கூட்டி வரும்படி அனுப்பினேன். அவள் பிரசன்னம் வீட்டில் மகிழ்ச்சியைக் கொடுத்தது. வீட்டின் மூலையில் தன் செபங்களைச் செய்து மற்றவர்களின் கவனத்தைக் கவர்ந்தாள். தாயும் ''அவள் மடத்தில் கற்றவற்றைச் செய்கிறாள்" தடை செய்ய வேண்டாம் என்றாள். போக முன் தாயை இறைவனின் பாதுகாப்பில் ஒப்படைத்து மாதா, திரு இருதய ஆண்டவரின் வரவணிக்கத்தைத் தாயின் கழுத்தில் போட்டாள். பிரியும் போது தாய் துன்புற்றாள். ஆனால் தாயின் தந்தை பெரிய தாயாரை நாம் ஏமாற்றினால் அடுத்த முறை விடமாட்டா, எனக்கூறி அவரும் அழுது கொண்டு அவவை வழி அனுப்பினார்.

தற்போது ஒணறினுக்கு ஒரு தங்கை, பிறக்கு முன் திருமுழுக்குக் கொடுப்பதாகப் பெற்றோர் கூறிப் பிறந்த பின்பு கொடுத்தனர். பின்பு எம்மிடம் கொண்டு வந்தனர். சில்வியா தன் இடத்தை நிரப்ப வேறொரு சிறுமியை அழைத்து வந்தா. அவவுக்கு லூயிஸ் என்னும் பெயரிட்டோம். வேறு 2 பிள்ளைகளும் வந்தார்கள். அப்போது எம் சிறுமிகள் அவர்களைச் சூழ்ந்து கதைத்துக் கொண்டிருப்பர். ஒரு 7 வயதுச் சிறுமிக்கு திருமுழுக்குப் பற்றிக் கூறி அவள் விரைவில் பெறவிரும்பினாள். நாங்கள் பார்பராவுக்குச் செபங்கள் படிக்க வேண்டிக் கூறினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி - 1879

Fr. சுலியர் உடைய சந்திப்பு மகிழ்ச்சியுடன், வேறு சில சிலுவைகள் எமக்கு நேரிட்டன. கண்டியில் இருந்து ஒரு பிள்ளை அம்மை நோயுடன் வந்தா. வந்தவுடன் நோயின் அறிகுறிகள் பரவத் தொடங்கியதால் உடனே ஒரு கொட்டில் போட்டு நோயாளியைத் தனிமைப்படுத்தினோம். அப்படி இருந்தும் பலரைத் தாக்கிவிட்டது. பின்பு சுதேச சகோதரிகளையும் தாக்கியது. எனினும் கடும் வருத்தம் இல்லை எமது பராமரிப்பு அவர்களைக் காப்பாற்றியது.

பங்குனி 22ல் ஆயர், Fr. சூஜெயுடன் வந்து சுதேச சகோதரிகளுக்கு தியானம் போதித்து, இறுதிநாளில் 4 சிங்கள ஆயத்த கன்னிகைகள் உடுப்புப் பெற்றனர். 6 சகோதரிகள் 3 வருடத்துக்கு தங்கள் வாக்குத்தத்தங்களைச் செய்தனர். Sr. M. Francis Maguire நித்தியத்திற்கு தம்மை அர்ப்பணித்தா. திருப்பலியின் பின் எம் சகோதரிகள் S.M. கெலன், M.லூயிஸ், M.ஜேர்மயின் என்னும் பெயர்கள் பெற்றுக் கொண்டனர்.

சித்திரை 3ல் ஆயரும் பதில் பிரதி ஆயரும் எம்மிடம் இருந்து விடை பெற்றனர். மே மாதத்தில் தேவதாய் ஒரு பூவைக் கொய்து விட்டா. Fr. பெராட் மிஷனறி வென்னாப்புவாவில் இருந்தவர். இறந்து விட்டார். Fr. Dinard உடன் குருநாகலுக்கு வந்து இளைப்பாற்றி எடுத்தவர். 9ந் திகதி களைப்புற்றிருந்தார். Fr. Duffo ஓர் ஆள் அனுப்பி என்னைக் கூப்பிட்டார். அங்கு சென்ற போது மருத்துவரைக் கூட்டிவரச் சொல்ல, அவர் பின்னேரம் வருவார் என்றார்கள். பின்பு படிப்படியாகப் பேசவும் முடியாமல் இறுதி அருட்சாதனங்களைப் பெற்று 2 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். Fr. Chounavel (சுனாவல்) 10 மைல் தூரத்தில் கிறீஸ்தவர்களைச் சந்திக்கச் சென்றிருந்தார். அவரையும் அழைத்தோம். புரட்டஸ்தாந்து மக்களும் இறுதிச் சடங்கில் பங்குபற்றினர். 20 வருடங்கள் பணியாற்றிய குருவுக்குத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டு. அவரின் கல்லறையில் வைக்க ஒரு சின்னமும், வென்னாப்புவாவில் இருந்து பங்கு மக்கள் கொடுத்தனர்.

## தை 1880

எமது பணிகளுக்குத் தடையாக இருந்த ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இறுதித் தவணையில் முன்பு போல் தொற்று நோய் பரவி எமது 2 சகோதரிகள் 5 - 6 கிழமைகள் பணிபுரிந்தனர்.

Sr. M. Francis குருநாகல் காலநிலை தாங்க முடியாது பல மாதங்கள் களைப்புற்று இருந்தா. அவவின் படிப்பித்தலுக்கு 2 பேர் நியமிக்கப்பட்டனர். அவ இடம் மாற வேண்டுமென்று டக்கடர் கூறியபடியால் யாழ்ப்பாணம் அழைத்துச் சென்றேன். போஞ்ஜீன் ஆயர் தன் இடத்திற்கு மெலிசான் (Melizan) ஆயரை நியமித்துள்ளார். வருங்கால ஆயருக்கு ஆசிகள் வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நல்ல தாயாரே இவ்வருடத்தின் முதலாவது சந்தோஷமான நிகழ்ச்சி 22 பிள்ளைகள் திருமுழுக்குப் பெற்றது ஆகும். இதில் 16 பேர் அநாதைச் சிறுமிகள். மற்றவர்கள் அநாதைச்சிறுவர்கள். பிதா கென்றி (Henry) மூவரசர் திருவிழாவில் இவர்கள் தலையில் நீரை ஊற்றினார். பிதா டுவ்வோ(Duffo) இச்சந்தர்ப்பத்தை 2 மாதமாக எம்முடன் இருக்கும் இந்த இளம் குருவுக்கு அளித்தார்.

3 நாட்களுக்குப் பிறகு சோதரி பொலினுடன் கேனல் ( Kaynel) எனுமிடத்திற்குச் சென்றோம். அங்கு எம் குருக்களுக்குப் பல பங்குகள் உண்டு. எல்லோரும் கத்தோலிக்கர். நாம் பஸ், புகையிரதம் இறுதியில் ஓர் கூடார வண்டில் மூலம் அங்கு சென்றோம். 8 மணித்தியாலத்தின் பின் வென்னப்புவை அடைந்தோம். காலை 9 மணிக்கு எம் பயணத்தை ஆரம்பித்திருந்தோம். பிதா சுனாவால் (Chounavel) எம்மைக் காத்திருந்து நாம் வந்ததும் தமதில்லத்தை எமக்காக விட்டுக் கோவிலுடன் சேர்ந்த ஓர் அறையில் அடைக்கலம் தேடினார். இது எமக்குக் குழப்பமாக இருந்தாலும் அதனை ஏற்க வேண்டியிருந்தது. எம் வருகை எல்லாவிடமும் பரவியது. மக்கள் பரிசில்களுடன் வந்தனர். எனக்கு இப்பொருட்களை என்ன செய்வதென்றே தெரியவில்லை. பாண், பழங்கள், முட்டைகள், கேக் என்பன தந்தனர். அடுத்த நாள் மாலை சிறிது நேரத்திற்குக் கடற்கரையில் உலாவச் சென்றேன். திரும்பி வந்து பார்த்த போது அலுமாரி வெறுமையாகக் காட்சியளித்தது. ஒரு கை தர, வேறோர் கை எடுத்ததையிட்டுச் சிரித்தோம்.

4 நாட்கள் அங்கு தங்கியிருந்து அங்குள்ள தேவைகளைக் கண்டறிந்தேன். பல கத்தோலிக்கர் இருந்தனர். நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கு பிதா சுனாவால் தலைமையில் சில இளம்பெண்கள் படிப்பித்தனர். எம் சோதரிகள் வந்தால் பல நன்மைகள் புரியலாம் என்று புரிந்தது. துறவு வாழ்வை விரும்பும் ஒரு கூட்டப் பிள்ளைகள் இருந்தாலும் அவர்கள் வென்னப்புவவில் ஒரு மடம் கட்டினால் பெற்றோர் தம் பிள்ளைகளைத் தூர அனுப்பத் தேவையில்லை என நம்பினர். மடம் அமைப்பதற்கு ஒரு வீடும் இல்லை. நிலமும் இல்லையென்றாலும் பிதா சுனாவால் துறவிகள் அங்கு வருவதற்கு விரும்பினார். எனவே நானும் என்னால் இயன்றதைச் செய்வேன் என வாக்களித்துச் சென்றேன்.

அந்த இளம்பெண்கள் நான் திரும்பிச்செல்வதற்கு வேண்டிய பணத்தொகையைச் சேர்த்துத் தந்தனர். இப்பயணம் நல்ல திருப்தியை எனக்கு அளித்தது. தை 15 பாடசாலை மீளவும் ஆரம்பித்தது. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரியின் சந்திப்பும் நடைபெற்றது. அவர் பிரிவினை மதத்தவர். எம் சேவைகளைப் பாராட்டினார். எனினும் சில பெற்றோர் தம் பிள்ளைகளை இங்கு அனுப்ப மாட்டார்கள் என்று கூறினார்.

எம் அநாதை மடத்தில் ஓர் பெரிய பெண், சமயம் படிக்க வந்திருந்தாள். பெற்றோர் இவளை இங்கு அனுப்பியிருந்தனர். காரணம் தந்தை தன் மகளுக்கும் பிதா டுவ்வோவின் அநாதை மடத்து ஆணுக்கும் மணம்முடித்துவைக்க விரும்பினார். இதற்கு மதம் மாற வேண்டியிருந்தது. ஆனால் அவள் மதம் மாற விரும்பினாள். ஆனால் மணமுடிக்க விரும்பவில்லை. பல கஷ்டங்கள் மத்தியில் படித்து மூவரசர் விழாவில் திருமுழுக்குப் பெற்று புனித வியாழனில் நன்மை பெற்றாள். 3 மாதப்படிப்பும் முடிந்தது. திருமணம் பாஸ்குத்திருநாளில் நடைபெற இருந்தது. பிதா டுவ்வோ எம் ஆலயத்தில் பூசை முடிந்தபின மாகிறேற் மேரியைக் கூப்பிட்டார். வரவேற்பறையில் அவளின் ஞானத்தகப்பனும் அவளின் எதிர்காலக்கணவன் மார்குசும் (Marcus) இருந்தனர்.

பிதா டுவ்வோ மார்குசிடம் 'அவளை மனைவியாக ஏற்கத் தயாரா' என அவன் "ஆம்" என்றான். இப்பதில் அவளுக்கு இடி விழுந்த உணர்ச்சியை அளித்தது. பின்பு குரு இவள் பக்கம் திரும்பி 'மாகிறேற் மேரி, மார்குசை உன் கணவனாக ஏற்றுக்கொள்வாயா என அவள் உடனே சிங்களத்தில் 'மட்ட பாய்' என்னால் முடியாது என்றாள். இப்பதிலைச் சிறிது எதிர்பார்த்து இருந்தாலும் இது குழப்பத்தை உண்டாக்கியது. இளைஞனும் குழம்பிய நிலை. பிதா டுவ்வோவும் குழம்பியிருந்தார். சோதரி செலஸ்ற் அங்கு வந்து நிலமையைக் கண்டறிந்து கோபித்தா. ஞானத்தகப்பன் வன்டேஸ்றாரென் (Mr.Vanderstraten) மாகிறேற் மேரியைக் கதைக்க வைத்தார். நீ உன் கிராமத்தைக் காணவேண்டுமென அழுது இப்போது எல்லாம் சரிவரும்போது ஏன் உனக்கு மகிழ்ச்சியில்லை, என்றார். அவளோ நான் என் கிராமத்திற்கு செல்ல விரும்புகின்றேன். ஆனால் நான் வந்தது போலவே செல்வேன். எனக்கு இந்த மனிதன் தேவையில்லை என்றாள். உன் தந்தை தான் இவருக்கு மணமுடித்து வைக்க விரும்புகின்றார், என்ற போதும் அதைப்பற்றித் தன்னிடம் கதைக்கவில்லை என்றாள். அப்போது பிதா டுவ்வோ குறுக்கிட்டு நீ உன் தந்தையுடன் கதைத்து முடிவு செய். உன் சிந்தனைக்கு இன்றும் நாளையும் தருகின்றோம். பின்பு முடிவு கூறுவாய் என்றார். அத்துடன் கூட்டம் கலைந்தது. மார்குஸ் தாழ்மையுடன் அநாதை மடம் சென்று இதனை மற்றவர்களுக்குக் கூறினான். மாகிறேற் மேரி அழுதவண்ணம் இருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தந்தை இதனை அறிந்து அடுத்த நாள் திருமணத்திற்கு வேண்டிய பொருட்களுடன் வந்தார். பாஸ்குத் திருநாளுக்கு அடுத்த திங்கள் திருமணம் நடந்தது. மார்குஸ் பொறுமையினால் எல்லாம் நன்கு முடிந்தது. தற்போது அவர்கள் சந்தோஷமாக வாழ்கிறார்கள்.

சில காலத்தின் பின் ஒரு புத்த பெண் அநாதை மடத்து அல்பேட் என்பவரை மணமுடிக்க முன் திருமுழுக்குப் பெற விரும்பி எம்மிடம் வந்தாள். அவளுக்குத் தன்னை வளர்த்த பாட்டியை விட்டு வந்தது பெரும் கஷ்டமாக இருந்தது. தன் மெனிக்கா (தங்கமான பெண்) எனும் பெயருடைய இப்பெண் தன் கொட்டிலையும் காடுகளையுமே அறிந்திருந்தாள். முதல் நாள் எம்மிடம் கதைக்கவில்லை. மறுநாள் அல்பேட் வந்தபோது, தான் 8 நாள் மட்டுமே இருக்க முடியும். 21 நாள் இருக்க முடியாது எனறு விட்டாள். இதனைப் பல முறை கூறிய படியால் 8 நாளில் படித்து முடிந்தால் திருமுழுக்குத் தரலாம் என்றேன். ஆனால் அவளால் படிக்க முடியவில்லை. எப்போதும் தன் பாட்டி கிரிகாமியின் யோசனை தான். ஒருநாள் திரித்துவம் மனிதவதாரம், உயிர்ப்பு என்பனபற்றி விளக்கிய போது ஒன்றுமே அவளுக்கு விளங்கவில்லை. புத்தர் பற்றியே அவளுக்குத் தெரிந்திருந்தது. அவளுடன் உரையாடுவதும் கஷ்டம்.

ஒருமுறை புனித மரியாளைப் பற்றிக் கூறி ஒரு சிறிய செபம் அவளுக்குக் கூறும்படி சொல்ல சிறிது சிந்தித்த பின் " இறைவனின் தாயே நேரத்தைக் கெதியாகப் போகச் செய்யும் என்பேன்" என்றாள். அவள் உணர்ந்ததை அவள் வார்த்தைகள் எடுத்துக்காட்டின. 3 கிழமையின் பின் பிதா டுவ்வோ திருமுழுக்கு அருளினார். மறுநாள் திருமணம் நடைபெற்றது. திருமுழுக்கின் போது லுசினா எனும் பெயர் பெற்றாள். முதல் நன்மைப் படிப்புக்கு வைகாசி மாதத்தில் கூட்டி வருவதாகக் கூறி அவ்வண்ணமே வந்து 1 கிழமை தியானம் செய்து முதல் நன்மை பெற்றாள். நல்ல கிறிஸ்தவர்களாக வாழ்வார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

மேலும் ஒரு சைவப்பெண் பிரிவினை மதத்தவர்களுடன் வேலைக்கு இருந்து அவர்கள் மதத்தில் விருப்பமில்லை என உண்மையைத்தேடி எம்மதத்திற்கு வந்தாள். செபம் படிக்கக் கஷ்டமாகவிருந்தாலும் தற்போது திருமுழுக்குப் பெற்று நன்மை அருந்தியுள்ளாள்.

ஆனி மாதத்தில் அ.ம.தி. தலைமைக்குருவின் கடிதம் வந்தது. பின்பு உங்கள் கடிதம் வந்து, நாங்கள் செப தபம் செய்கிறோம். அத்துடன் றோயமொன்ற் (Royamont ) இலுள்ள நவகன்னிகைகள் தம் ஓய்வு நேரத்தை இறை முன்னிலையில் செலவிடுகின்றார்கள் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி அறிந்து எம் நவகன்னியரும் என்னிடம் உத்தரவு பெற்று அவ்வாறு செய்ய விரும்புகின்றார்கள். போடிங் பிள்ளைகளும் அநாதைச் சிறுமிகளும் அதனை விரும்புகின்றனர். இரவின் ஒருபகுதியை இறை பிரசன்னத்தில் செலவிட்டு எம் சபையை ஆசிர்வதிக்க வேண்டினர்.

இந்த வேளையிற்றான் ஆயரின் பிரதிநிதியும் அ.ம.தி.யின் தலைவருமான பிதா புலிக்கானி (Pullicani) யின் சந்திப்பு இடம் பெற்றது. அவர் பனித ஆனாளின் வருடாந்த யாத்திரையில் பங்கு பற்ற வந்த போது இவ்விடமும் வந்து சென்றார். எமக்கு ஒரே மகிழ்ச்சி. பின்பு பொஞ்சின் ஆயரும் வந்தார்.

ஆடி, ஆவணி மாதங்கள் லொத்தருக்குப் பரிசு தயாரிப்பதில் கழிந்தன. இத்தயாரிப்புக்குக் காலம் தேவை. புரட்டாதி 11ம் திகதி லொத்தர் இழுப்பு நடைபெற்றது. 450 பரிசுப் பொருட்கள் பார்ப்பதற்கு அழகாகவிருந்தன. இவற்றை எமக்குத் தந்த எம் நல்ல தாயார்களுக்கு நன்றி. பிரிவினை மதத்தவர்களும் கத்தோலிக்கரும் எம்மை ஊக்கப.படுத்தி தேவபராமரிப்பை எமக்கு எடுத்துக் காட்டினர். இந்த ஏழை நாட்டில் இப்படியாகச் சித்தியடைவது இயலாத காரியமாகும். எம் தையல் வேலைகள் எல்லாரின் பாராட்டையும் பெற்றது. ஒரு அநாதைச்சிறுமி வெண்துணியில் செய்த வேலைப்பாடு முதல் பரிசைப் பெற்ற போது எவ்வாறு இவளின் கறுப்புக்கையிலிருந்து இது வெளிவந்தது என ஆச்சரியமடைந்தனர். 2வது பரிசு போடிங் பிள்ளை ஒன்றின் பின்னல் வேலைக்குக் கிடைத்தது

ஐப்பசி 22ல், ஆயர் எம் மத்தியில் வந்தார். பல கால இடைவெளியின் பின் வந்ததால் கிறிஸ்தவர்கள் அமோக வரவேற்பு அளித்தனர். பிரிவினை மதத்தவர்கள் ஆயர் கூட்டி வந்த குருக்களைக் கண்டு சிறிது பயந்தனர். ஆயர் ஒரு மாதம் எம்முடன் செலவிட்டுப் பின்பு யோசப்பின் தாயாரையும் கூட்டிக் கொண்டு செல்லக் கிறிஸ்தவர்களுடன் நாமும் துக்கப்பட்டோம்.

எனினும் இவற்றைவிட்டு மெலிசான் (Melizan) ஆயர் வருகின்ற செய்தி அறிந்த போது அவரை வரவேற்க ஆயத்தங்கள் செய்தோம். வீடு, மாலைகள் கட்டிப் பூக்கள் வைத்ததால் விழாக் கோலம் பூண்டது. அவ்வாறே கத்தோலிக்கரும் செய்தனர். தெருக்களில் இங்கொன்றும் அங்கொன்றுமாக வளைவுகள் கட்டினர். எம் மடத்தின் முன்னாலும் ஒரு வளைவு கட்டிப் பூக்கள் மத்தியில் தேங்காய்குலைகள் அன்னாசிப் பழங்கள் வேறு பழங்களை வைத்தனர். கீழே சீலை விரித்து அதிலே நாம் ஆயருக்காகக் காத்திருந்தோம். மக்கள் சிறிது தூரத்தில் ஆயருக்காக இசையுடன் காத்திருந்து நல்வரவு கூறினார்கள். பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இதோ ஆயர்" என்ற எம்மைச் சூழவுள்ள மக்கள் கூறினார்கள். அப்போது ஆயர் காரிலிருந்து இறங்கி ஆரவாரங்கள் மத்தியில் மக்களை ஆசிர்வதித்தார். நாம் அவரை எம் ஆலயத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பியும் மக்களோடு செல்ல வேண்டியதாயிற்று..

மாலையில் ஆயர் எம்மில்லம் வந்தார். எம் அநாதைச்சிறுமிகளும், போடிங் பிள்ளைகளும் வரவேற்புக் கூறினர். சுதேசிகள் சிங்களத்திலும் போடிங் பிள்ளைகள் ஆங்கிலத்திலும் பாடல்கள் பாடினர். பின்பு ஆயர் அவர்களை ஊக்கப்படுத்தினார். தன் பையிலிருந்த இனிப்புப் பொருட்களைச் சிறுவர்களுக்குக் கொடுத்து அவர்களை மகிழ்வித்தார்.

மெலிசான் ஆயர் ஒரு மாதம் எம்முடன் செலவிட்டு எம் பணிகளில் நாம் செய்யும் தியாகத்தைக் கண்டார். யோசபின் தாயார் யாழ்ப்பாணத்தலைவியாக நியமிக்கப்பட்டதைக் கூறினார். எம் கண்களிலிருந்து நீர்த்துளிகள் விழுந்தன. 10 வருடமாக எம்முடன் இருந்து உருவாக்கிய சோதரிகளுக்கும் இடி விழுந்த உணர்வு தோன்றியது. எனக்கும் இரு மடங்கு உற்சாகம் தேவையாக இருந்தது. அவவின் பிரிவும் அவ விட்டுச் சென்ற இடைவெளியை நிரப்ப வேண்டியதும் என் மேலே விழுந்தது. இறை சித்தத்திற்குப் பணிந்தவளாக தலைவிகளின் வாாத்தைகளை ஏற்று இறையருளைப் பெற்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நல்ல தாயாரே, எனது ஒரு வருடஅறிக்கை தாமதமாகியதற்கு மன்னிப்பு வேண்டி இதை எழுதுகிறேன்.

தை, மாசி மாதங்களில் தொற்று நோய் மக்களைப் பாதித்தன. ஏழைமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இறந்தனர். எம் அநாதைப் பிள்ளைகள், சுதேச சகோதரிகள் நோயினால் தாக்கப்பட்டாலும் ஒருவரும் மரிக்கவில்லை. குருநாகலில் இருந்து 12 மைல் தூரத்திலுள்ள "பொல்காவலை" எனும் இடத்தில் "விக்ரறின்" என்ற பழைய மாணவி இருந்தாள். அவளின் தந்தை, மாமியார் புத்தமத முறைப்படி அவள் நோயை மாற்ற முயன்ற போது நான் கிறிஸ்தவள் கிறிஸ்தவளாக இறப்பேன் என்றாள். பாவ சங்கீர்த்தனம் செய்ய முடியவில்லை. இறைஇரக்கத்தில் இறந்தாள்.

பங்குனி மாதத்தில் ஒருமாலையில் ஒருநாளும் இல்லாத மழைக்கோலம் காணப்பட்டது. மின்னல், இடிச்சத்தம் கேட்டது. உடனே எமது வீட்டிற்குக் கிட்டவுள்ள யானை மலையில் தீப்பிளம்பு காணப்பட்டது. இருண்ட வானத்தின் கீழ் ஒளிப்பிளம்புகள் மலைச்சாரலில் ஓடின. புத்த கோவில் பக்கம் சென்றன. 2 நாட்கள் தீ நீடித்தாலும் தீ நகரை அடையவில்லை.

புனித சூசையப்பர் எம் போடிங் பிள்ளைகளைப் பாதுகாத்து வருகின்றார். பிரிவினை மதத்தவர்கள் இருவர் பெரிய சனிக்கிழமை திருமுழுக்கு பெற்றனர். எம் பிள்ளைகள் பிரிவினை மதத்தவர்கள் மத்தியில் பிறந்ததால் சில வேளைகளில் திருமுழுக்கு கொடுக்கப்படவில்லை. எனவே எம் ஆலயத்தில் 4 முறை திருமுழுக்குச் சடங்கு நடைபெற்றது.

எமது திருக்குடும்ப பிள்ளைகள் சனிக்கிழமை காலையில் இவ்விடம் வந்து ஏழைகளுக்குப் பணிபுரிவார்கள். 3 சிறுவர்கள் பாடசாலை செல்வதற்கு உடைகள் கொடுத்தனர். அவர்களின் அன்புப்பணி ஆசீரின் ஊற்றாக உள்ளது. தற்போது ஆங்கில வகுப்பில் 52 பேர் உள்ளனர்.

கோடை காலத்தில் ஆயர் போஞ்சின் யாழ்ப்பாணத்திலிருந்து தரைமார்க்கமாக மாட்டு வண்டியில் எம்மிடம் வந்தார். ஒரு நாள் முன்னதாக வந்தபடியால் சோடினைகள் எல்லாம் அரைகுறையாக இருந்தன. மக்கள் கோவிலின் முன் ஒரு வளைவு கட்டிக்கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது ஆயர் Fr. Boisseau (புவாசோ)வுடன் வந்து அதனூடாகச் சென்றார். மாலை 3 மணிக்கு மெலிசான் ஆயருடன் எம்மிடம் வந்தார். 2 வகுப்புப் பிள்ளைகளும் ஒன்று கூடினர். ஒரு சிறுமி பிரெஞ் பாஷையில் உரையாற்றி எல்லாரையும் மகிழ்வித்தா.

சில நாட்களின் பின் எம் ஆயர்கள் புனித ஆனாள் திருநாளைக் கொண்டாடத் தலைவிலுக்குச் சென்றார்கள். குருநாகலில் உள்ள ஆனாளை சிறிய ஆனாள், எனவும் புத்தளத்தில் உள்ள அன்னம்மாள் பெரிய St. Anne எனவும் கூறுவர். அங்கு செல்ல முடியாதவர்கள் இங்கு வருவர். 20 அல்லது 25 பேர் மட்டில் வருவார்கள். சில வேளை குடும்பம் முழுவதுமே வரும். கோவிலுக்குப் போன பின் எம் மடத்திற்கு வருவர். கன்னியாஸ்திரிமார், தாயார் சிஸ்ரமாரை பார்ப்பது அவர்கள் பயணத்தின் சிகரமாக இருக்கும். ஒரு நாள் ஒரு 40 வயது மனிதன் 75 வயது மதிக்கத்தக்க ஒரு கிழவியைத் தனது தோளில் போட்ட வண்ணம் வந்தான். பாரிசவாதத்தால் கால் மடித்தபடி இருந்தது. என் முன்னே அவளை இறக்கினான். அவவுடைய மகளும், மருமகனும் இவ துறவிகளைப் பார்க்க ஆசைப்பட்டதால் கூட்டி வந்தார்கள். 11 வருடங்களாக கால், கை வழங்காது இருந்தாலும் இறை சித்தத்தை ஏற்று வாழ்ந்தாள். அத்துடன் மகள், மருமகன் அவவுக்கு உதவி கிடைப்பதாகக் கூறினார்கள். மூவரும் மகிழ்வுடன் இருந்தனர். தங்கள் கடமைகளைச் செய்து விசுவாசத்துடன் வாழ்கிறார்கள்.

வறுமை நிலையும் இங்குண்டு. ஒரு நாள் எமது மடத்தின் வாசல் வழியாக ஒரு பிரேத ஊர்வலத்தைக் கண்டேன். வாகனத்தில் ஒரு மனிதன் தன் இறந்த குழந்தையை மடியில் வைத்த வண்ணம் சென்றான். சவப்பெட்டி வாங்கவில்லை. எனினும் முடிவில்லா வாழ்வில் நம்பிக்கை உண்டு.

சிங்களப் பாடசாலையில் வெளிப் பிள்ளைகள் அதிகம் இருக்கிறாகள். பிள்ளைகள் ஒழுங்காக வந்தால் அதிகம் நன்மை செய்யலாம். ஆனால் காய்ச்சல், வறுமை, உடையின்மையால் தம் வீடுகளில் இருந்து விடுகின்றனர். ஒரு நாள் ஒரு பிரிவினை மதப்பெண் தன் 6 வயதுப் பிள்ளையை (டாம் - லூயிஸ்) செபங்கள் படிக்க அழைத்து வந்தார். அவளுடன் அவள் வயதொத்த வேறொரு சிறுமியும் வந்தாள். நான் இவள் யார்? என்று கேட்டேன். டூறியா என்னும் சாதியினர், இந்துமதத்தவள், அநாதைப் பிள்ளை, வேலைக்காரி என்றாள். அவளுக்கும் திருமுழுக்கு கொடுக்கலாமே என்ற போது இவர்களுக்கு ஆன்மா கிடையாது, இவர்கள் எமக்கு வேலை செய்யவே இருக்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றனர். தன் மகளுடன் பாடசாலைக்கு அனுப்ப விரும்பவில்லை. தனக்கு வீட்டைக் கூட்டவும், சமைக்கவும் இவள் தேவை என்றாள்.

இப்போது ஒரு பயங்கர நிகழ்வைக் கூறப்போகிறேன். ஒரு நாள் மாலை நாம் உணவருந்தும்போது ஒரு பிராணி நாயினால் துரத்தப்பட்டு வந்து திறந்திருந்த கதவின் வழியே உள்ளுக்கு வந்து விட்டது. நாம் ஒரு பெரிய வாலைக் கண்டு காட்டு விலங்கு என நினைத்தோம். எல்லா இடமும் தேடினோம், என் அறைக் கதவும் திறந்திருந்தது. இரவு 1 மணி. மீளவும் சத்தம் கேட்டு என் பக்கத்து அறைச் சகோதரியைக் கூப்பிட்டேன். அவ ஒரு தும்புத்தடியைக் கொண்டு வந்து பார்த்தபோது அவ "காட்டுப் பாம்பு" எனக் கத்தினா. நான் அறையை மூடினேன். மறுநாள் மூவர் வந்து ஒரு சாக்குள் அதைப் போட்டுக் கொண்டு போய்க் கொன்றனர்.

பொஞ்சீன் ஆயர் புனித அன்னாள் திருவிழாவுக்குச் சென்று வந்தபின் எமக்கு தியானத்திற்கு உதவி செய்தார். Fr. Chournaval (சுனாவல்) சுதேச சகோதரிகளுக்கு தியானம் கொடுத்து இறுதி நாளில் அவர்கள் துறவற உடுப்புப் பெற்றனர். சிஸ். ஆஞ்சலா வெர்ணான்டோ புனித. இராயப்பர் சபைக் கன்னியருக்கு மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். தற்போது இவர்களை 2 பிரிவுகளாகப் பிரித்துள்ளோம். நவகன்னியர்கள் புறம்பாக உள்ளனர். தற்போத 9 பேர் இருக்கின்றனர். இட வசதியுண்டு. இவர்கள் தம் நாட்டிற்கு சேவை புரிவார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒணறின் வரலாறு"

என் நல்ல தாயாரே!

உங்கட்கு 1872ம் ஆண்டு அநாதை மடத்தில் சேர்க்கப்பட்ட "ஒணறினைப் பற்றி" தெரிந்திருக்கும். திருமுழுக்கின் முன்பு "முத்துமெனிக்கா" என்னும் பெயர் கொண்ட புத்தசமயப் பெண். அவள் பெயருக்கேற்ப ஒரு முத்துத்தான். 10 வயதில் திருமுழுக்குப் பெற்று "ஒணறின்" என்னும் பெயர் பெற்றாள். அப்போது அங்கு வந்தவர்களுக்கு "உங்களைக் கிறீஸ்தவர்கள் ஆக்குங்கள்" உங்களுக்குள்ளதை விற்று விட்டு மடத்துக்கு வாருங்கள் என்றாள். இவ்வாறு தன் நண்பிகளுக்கு முன் மாதிரிகையாக இருந்தாள். முதல் நன்மை நாளன்று இறைவனுக்குத் தன்னை அர்ப்பணிக்கவும் தீர்மானித்தாள்.

சிலகாலத்தின் பின் இயேசுவின் திருஇருதயத்தைப் பற்றிக் கூறி ஒவ்வொரு முதல் வெள்ளியும் அப்பக்தியை அனுசரித்து வந்தாள். எனவே சுதேச நவகன்னியருடன் சேர்க்கலாம் என்று நினைத்தேன். அப்போது தான் சாத்தானும் தன் வேலையைத் தொடங்கியது.

'ஒணறின்' பெற்றோரால் மிகவும் விரும்பப்பட்டவள். எனவே அவள் தம்முடன் வந்திருக்கப் பெற்றோர் விரும்பினர். தந்தை பென்டா (Benda) கோறளே ஆராய்ச்சி 2ம் தலைவரின் காவலாளியாக நியமிக்கப்பட்டதால் தன் மகளுக்கு ஒரு கல்வீடு கட்டி ஓடு போடத்திட்டம் போட்டார்.

வழமையாகச் சுதேசிகள் மண்ணால் வீடு கட்டிக் கிடுகினால் வேய்வர். தந்தை, மகள் மடத்தில் வளர்ந்ததால் கொட்டிலில் வாழ விரும்பமாட்டாள் என வீட்டையும் கட்டிமுடித்தான். பின்பு மகளைக் கூட்டி வரத்திட்டம் போட்டான். தாயும் இதற்கு உதவி செய்யவிரும்பினாள். எனவே தாயும் தனக்கு வியாதி போல் நடித்தாள். தை மாதம் ஒரு நாள் மாலை நேரம், பென்டா மடத்திற்கு வந்து சாகப்போகும் தாயைப் பார்த்து வர "ஒணறினை" விடும்படி துக்கத்துடன் கேட்டார். இவர்களின் கிராமம் குருநாகலில் இருந்து 7 மைல் தூரத்தில் உள்ளது. தாய் பிள்ளையைக் காணாது இறந்தால் மக்கள் எம்மை மன்னிக்கமாட்டார்கள் என அறிந்து இப்பொறுப்பை என்னோடு மாத்திரம் வைத்திராது Fr. Duffo இடம் ஆளனுப்பினேன் அவரும் என்னைப் போலவே சிந்தித்து 2 நாட்களின் பின் மகளைத் திரும்பவும் மடத்திற்கு அழைத்துவரத் தந்தையிடம் கூறி "ஒணறினை" விடும்படி என்னிடம் கூறினார். மகள் சென்று பார்த்தபோது தாய் சிறிது களைப்புற்றிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும் வியாதி ஒன்றுமில்லை. 2 நாட்கள் முடிந்ததும் திரும்பவும் மடத்துக்குப் போக மகள் தந்தையிடம் கேட்டாள். அப்போது தந்தை தன் முகமூடியைக் கழற்றிவிட்டுத் தனது உண்மை நிலையை மகளுக்கு விபரித்தார். இந்த வீடு, தென்னந்தோட்டம், நெல்வயல்கள் எல்லாம் உனக்கே உரியவை. இவை எல்லாம் என் வேலையின் பயன். உனக்கே தருகிறேன். இவற்றை அனுபவிப்பது தான் உன் பெற்றோரின் விருப்பம் எனவே ''மடத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டாம்'' என்று கூறினார். இந்தச் செய்தியால் ஏழைச் சிறுமிகலங்கி, அப்பா, இந்த உலக செல்வங்கள் எல்லாம் எனக்கு விருப்பமில்லை. என் ஆன்மமீட்பும், விண்ணகச் செல்வங்களுமே எனக்கு மேலானவை. எனவே இவற்றையெல்லாம் துறந்து, துறவியாக மடத்திலேயே இருக்கத் தீர்மானித்துள்ளேன். என்றாள்.

தந்தைக்கு இது இடிவிழுந்தது போன்றிருந்தது. திருமணம் செய்து வைக்க விரும்பியிருந்தவன் எனவே தன் குலத்துக்கு இழிவு தர வேண்டாம் என்று கோபித்தான். இதை அறிந்த ''ஒணறின்'' கடிதம் ஒன்று எழுதி அனுப்பிவைத்தாள்.

அன்புத்தாயாரே! இரவு பகலாக அழுதவண்ணமே இருக்கிறேன். இதற்கு இறைவனே சாட்சி மடத்திற்கு நான் வருவது தந்தைக்கு விருப்பமில்லை. எனவே யாரையாவது அனுப்பி என்னை உவ்விடம் வரச் செய்யவும் என எழுதியிருந்தது. எனவே இதை Fr. Duffo வுக்கு அறிவித்தேன். அவர் இருவரை அங்கு அனுப்பினார். அவர்களுடன் அனுப்ப தந்தை விரும்பவில்லை. நானே அங்கு செல்லத்தீர்மானித்தேன். இதை ஏற்கனவே அவர் அறிந்து மகளை வேறொரு இடத்திற்கு அனுப்பிவிட்டார். நான் மாசி 3ந் திகதி இருவருடன் அங்கு சென்றேன்.

முதலில் மாட்டு வண்டியிலும் பின்பு கால்நடையாகவும் சென்றோம். இடையில் வீதிகள் நீர்நிரம்பி இருந்தது. அப்போது ஒரு கதிரையில் என்னை வைத்துத்தூக்கி மறுபக்கம் விட்டார்கள். இவ்வாறாக அங்கு சென்றதும் ''காலையிலேயே அவள் குருநாகலுக்குச் சென்றுவிட்டாள் என்று'' தந்தை பொய் சொன்னார். வழியில் சந்திக்கவில்லையே என்றபோதும் குறுக்கு வழியால் சென்றிருக்கலாம் என்றார். சென்ற களைப்பிற்கு ஒரு மரநிழலில் இருக்கும் போதும் எனக்குக் கிட்ட வந்தவர்களை அண்மிக்காது காவல் செய்தார். எனவே நாம் திரும்பி எமது இடம் வந்து பார்த்தபோது மடத்திலும் அவளைக் காணவில்லை. எம்மை அவன் ஏமாற்றி விட்டான். எனவே மடத்தில் வேலை செய்யும் ஒரு கூலியை அழைத்து சிறு தொகைப்பணம் கொடுத்து அக்கிராமத்தில் சென்று விசாரித்துப் பார்க்கும்படிகூறினேன். அவன் அக்காசுக்குக் கொஞ்சம் முட்டைகள் வாங்கி ஒரு சீலையில் கட்டிக் கொண்டு வீடு வீடாகச் சென்று வந்தான். அப்போது தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறெங்கேயோ அனுப்பிவிட்ட செய்தி எனக்குக் கிடைத்தது. எனவே அவள் புத்தமதத்தவரால் சோதிக்கப்பட்டாள். புத்தகுரு புத்தமதக்கொள்கைகளைக் கூறி மனம்மாறும்படி கேட்டார். தாய் தந்தைக்கு அமைதல் இந்த அதிகாரத்தைப் புத்தகத்தில் காட்டினார். அப்போது அவள் இவை தனக்குத் தெரியும் எனவும், இவற்றிற்கு மேலாக ''இறைசித்தத்துக்கு'' அமைய வேண்டும் என்றாள். அத்துடன் தான் 10 வயது தொடங்கி மனம்மாறி விட்டேன். 2 முறை மனம்மாற முடியாது என்று கூறியதால் இந்த வயோதிபகுரு அவளை விட்டு அகன்றார்.

சில காலத்தின் பின் ''கல் கமுவா'' என்னும் இடத்திற்கு தந்தை பென்டா மகளை அழைத்து வந்து ஒரு புத்த சமயப் புத்தகத்தைக் காட்டி ''புத்தசமயம் தோன்றிப் பல நூற்றாண்டுகளின் பின்பு தான் கத்தோலிக்க சமயம் வந்தது.'' என்று கூறினார். அவள் இவை பொய் என மறுத்து விட்டாள். 2 1/2 மாதங்கள் தினமும் துன்புற்றாள். அவ்வேளையில் தன் செபம், செபமாலையை மறக்கவில்லை. தபக்காலத்தில் தவமுயற்சிகள் எல்லாம் செய்தாள். அவள் சகோதரி அவளைக் கண்டபோது ''குருநாகல் சிஸ்ரமார் வந்ததாகவும் வாழைப்பழம் கொடுத்ததாகவும்'' கூறினாள். இது அவளுக்கு மகிழ்வையூட்டியது.

இயேசுவின் திருஇருதயச் சுருவத்துக்கு விளக்கு ஏற்றி ஒரு புதுமை செய்யும்படி மன்றாடினோம். எனினும் ஒரு செய்தியும் இல்லை. இதேவேளை வேறொரு நிகழ்ச்சி இடம்பெற்றது. ஒரு நாள் காலை நாம் திருப்பலி முடிவடைந்து வரும்போது போடிங்பக்கம் ஒரு அலறல் சத்தம் கேட்டுத் திரும்பிப்பார்த்தேன். அங்கு ஒரு 10 வயதுச் சிறுமி உடம்பு எல்லாம் எரிந்த வண்ணம் காட்சியளித்தாள். என்னைக் கண்டதும் என் முன்னே வந்தாள். கைவிரல் குளிர் ஏற்பட்டபடியால் அடுப்புமூட்டிய இடத்திற்குச் சென்று அங்கு சுடுநீர் பாத்திரத்தில் வைத்தனர். ஒரு சிறுமி விறகை அசைத்தபோது பாத்திரம் கொதிநீருடன் கவிழ்ந்து மேரிபெனடிக்ற் மேல் ஊற்றப்பட்டது. உடனே மருந்துவரை அழைத்தேன். இடதுகை, நெஞ்சு, கால்கள் எல்லாம் எரிகாயங்கள். நான் அடிக்கடி சென்று அவளைச் சந்தித்ததால் மகிழ்ச்சியாக இருந்தாள். 20 இரவும் பகலும் அவள் மரணத்திற்கும் வாழ்வுக்கும் இடையில் போராடிக் கொண்டிருந்தாள். அத்துடன் சூரியவெய்யிலும் எரித்தது. எனவே இந்த வேதனையை ஒணறினுக்காக ஒப்புக்கொடுக்கும்படி கூறியிருந்தேன். அவளும் ஒணறின் திரும்பி வர எல்லா வேதனைகளையும் காணிக்கையாக்குகின்றேன்'' என்றாள். சிலநாட்களின் பின்பு மருந்து போடச் சென்றபோது கண்விழித்து தான் இரவு முழுவதும் வேதனைப்பட்டதாகவும் ''ஒணறின் வந்து விட்டாளா? எனவும் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஒரு செய்தியும் வரவில்லை. எனினும் நம்பிக்கையுடன் காத்திருக்கிறேன். மாதாவுக்கு நவநாள் செய்து எரிந்த பிள்ளையும் குணமடைந்து விட்டாள். எனவே லூர்து மாதாவுக்கு நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

இதேவேளையில் ''ஓணறின்'' பற்றிய செய்தியும் வந்தது. அவள் தினமும் அழுது தன் தந்தையைக் குறைந்தது ஞாயிறு பூசைக்காவது அழைத்துப் போகும்படிகேட்டாள். எங்கள் அயலில் ஒரு பெரிய அதிகாரி வசித்து வந்தார். (கண்டியன்) நான் இதை அறிந்து ''ஓணறின்'' அலுவலில் உதவி செய்யக் கேட்டேன். கோவிலும் மடமும் பக்கத்திலேயே உள்ளன. 'பெண்டா' அடுத்த ஞாயிறு அழைத்து வருவதாகக் கூறிப் பின்பு அழைத்து வரவில்லை. எனவே அதிகாரிக்கும் கோபம் வந்தது. தந்தை மன்னிப்புக் கேட்டபோது பெரியபுதனுக்கு மடத்துக்குக் கூட்டிச் சென்று பாஸ்குத்திங்கள் வரை அங்குவிடும்படி முதலியார் கூறினார். இதற்குத் தந்தை அமைந்து அழைத்துச் சென்றார். உயிர்த்தஞாயிறு முடியும் வரை காத்திருந்தார்.

அவளின் வருகை எமக்கு மகிழ்ச்சி அளித்தது. அவள் பெற்றோர் சிங்கள புதுவருடப்பிறப்பில் அவள் விரும்பியோ, விரும்பாமலோ அவளுக்கு மணம் முடிந்து வைக்க எண்ணியதை இவள் எமக்குக் கூறினாள். அதாவது உயிர்த்தஞாயிறின் பின்வரும் அடுத்தகிழமை. எனவே பயத்தினால் துன்புற்றாள். ஆயரிடம் அவளை அனுப்பினேன். அவள் 2 சாட்சிகள் முன்னிலையில் தான் மடத்தை விட்டு அகலமாட்டேன் என்றாள்.

தந்தை முன் குறிப்பிட்டபடி மகளைக் கூட்டிச் செல்ல வந்தார். நான் நடந்தவற்றைக் கூறாது அவனை முதலியார் வீட்டுக்குச் செல்லும்படி கூறினேன். அங்கே பிள்ளையின் உரிமை பற்றி எடுத்துரைத்ததால் கோபமுற்றுத் திரும்பவும் மடத்திற்கு வந்தான். என்னையும் சந்தித்து மகளுடன் கதைக்க விரும்பினார். அவள் ஒரு பாதுகாப்பான அறையில் இருந்தாள். நான் அங்கு செல்லாததால் அவர் 2 மணித்தியாலமாகக் காத்திருந்து விட்டுச் சென்றுவிட்டார்.

இது எல்லோருக்கும் நல்ல பாடமாக அமைந்தது. எம் பெற்றோர் எம்மை ஏமாற்றுகிறார்கள் என்பதை உணர்ந்தாள் ஒரு பெண். ''நான் ஒரு போதும் மடத்தை விட்டு அகலேன்'' என்றாள், வேறொரு பெண்.''மேரி பெனடிக்ற்'' தற்போது குணமடைந்து விட்டாள். ''ஓணறின்'' சுதேச நவகன்னியரின் இல்லத்துள் சேர்க்கப்பட்டுள்ளாள். நரகப்பிடியில் இருந்து தப்புவித்தவரைத்தினமும் நன்றியுடன் நினைக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1883ம் ஆண்டானது எம் சிறிய பணிகள் பற்றிய குறிப்பேட்டில் மறக்கமுடியாத ஆண்டு. தைமாதம் 28ம் திகதி எமது சிற்றாலயத்திற்கு அடிக்கல் இட்டோம்.

மடம் ஆரம்பித்த காலம் தொடங்கி 10வருடமாக ஒரு நல்ல சிற்றாலயம் இருக்கவில்லை. இது எனது ஆவலாக இருந்தது. எம்பணிகள் ஆரம்பித்த காலத்திலேயே பிரிவினை மதத்தால் பிரச்சினை எழும்பியவேளை மடத்துத்தலைவி இயேசுவின் திரு இருதயத்திற்கு ஒரு ஆலயம் ஒப்புக்கொடுப்பதாகவும், சுதேசிகளிடம் திருஇருதயப் பக்தியைப் பரப்பவும் வாக்குப்பண்ணினார். கஷ்டங்கள் மத்தியிலும் வாக்குறுதியை நிறைவேற்ற எல்லா வழிகளையும் கடைப்பிடித்தோம். ஐரோப்பிய சகோதரிகள், சுதேசிகள், போடிங் பிள்ளைகள், அநாதைப் பிள்ளைகள் எல்லோருமாக இவ்வேலையில் ஈடுபட்டோம். 5வருடங்களாகத் திருஇருதயக் கோவிலை நிறுவுவது எம் முக்கிய சிந்தனையாக இருந்தது. சென்ற வருடம் மூன்றாவது லொத்தர் இழுப்புடன் ஒரு சிறு தொகைப் பணத்துடன் கட்டிடவேலைகளை ஆரம்பித்தோம். ஆனால் இப்பூமியில் பலகாலம் மகிழ்வை அனுபவிக்க முடியுமா?

நன்மைகளைத் தீமையாக்கும் எதிரியாகிய சாத்தானும் தன் வேலையைத் தொடங்கினான். அநாதைச் சிறுமிகள் ஒழுக்கமின்றி சகோதரிகளுக்கு அடங்காமல் இருந்தார்கள். சென்ற வருடத்தில் எம் (Honorine ) ஒணறிக்கு நடந்ததைப் போலவே இருந்தது. நற்செய்தியில் வரும் உவமைபோன்று சாத்தான், தன்னிலும் பலம் வாய்ந்தவர்களை அழைத்து வந்ததுபோல் இருந்தது. எனவே இறைவனிடமே அடைக்கலம் நாடினேன். சில நாட்கள் தியானத்திற்கு ஒதுக்கத்திட்டமிட்டேன். அவர்கள் இதை விரும்பவில்லை. எம்தாயார் தியானம் மூலம் எம்மை மனமாற்றப் பார்க்கிறார். இது எமக்குத் தேவையில்லை என்றனர்.

என் திட்டத்தைக் கைவிடப் பார்த்தாலும் சிறு இடைவேளையின்பின் மீளவும் கூறி 3நாள் தியானம் வைத்தோம். தொடக்கத்தில் அவர்கள் பயன்பெற்றாலும் தீமை ஆட்கொள்ளப் பார்த்தது. அதில் இருவர் காரணமாக இருந்ததால் இருவரையும் நீக்க வேண்டியிருந்தது. புத்தமதப் பெற்றோரிடம் போவது அவர்களுக்கு மகிழ்ச்சி அளித்தது. எனினும் ஒரு பிள்ளை தன் விசுவாசத்தைக் காப்பாற்றினா. திருவிழாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் தன் தந்தையின் அனுமதியுடன் குருநாகலுக்கு வந்தா. அருட்சாதனங்களில் பங்குபற்றினா. நானும் அவவை வரவேற்று என்னால் இயன்றளவு அவவின் வாழ்க்கைப் போராட்டத்தில் உதவி செய்தேன். அவவை ஒரு கத்தோலிக்க இளைஞனுக்கு மணம்முடித்து வைத்தேன். மற்றப் பிள்ளையைக் காணமுடியவில்லை. அவ புத்தமதப் பகுதியில் இருந்தா. எனினும் எமது அநாதை மடத்தில் மீளவும் அமைதி நிலவியது.

மேலும் ஒரு துன்பசம்பவம் எம் பிள்ளைகளுக்கு ஏற்பட்டது. திருப்பாலத்தவ சபை நிதி குறைவுற்றதால் 20பேர் மட்டுமே எம்மடத்தில் இருக்கலாம் என அப்போஸ்தலிக்கப் பிரதிநிதி எமக்கு கூறினார். எனவே திருமுழுக்குப் பெற்ற சிலரையும் அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எம்முடன் இருந்த மதலேன் திருமுழுக்குப் பெற்று முதல் நன்மை பெற ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தா. அவவின் சகோதரி ஒக்ராவி முன் மடத்தில் இருந்தவ. பின் திருமணமாகிச் சென்றபோது தன் சகோதரியையும் கூட்டிச் செல்லக் கேட்டாள். கத்தோலிக்க இடமானதால் போவதற்கு அனுமதித்தேன். எனினும் தினமும் சமயக் கடமைகளுக்கு வருவதாகக் சென்றாள்.

“பகாலே” என்னும் காட்டில் அவர்களின் சகோதரன் வசித்து வந்தான். தந்தை போன்று பாசம் காட்டி வந்தான். குருநாகலுக்கு வந்தபோது சகோதரியைப் பார்த்து விட்டான். திரும்பிச் செல்லும்போது இவளையும் தன்னுடன் அழைத்துச் சென்றான். முதலில் அன்பு காட்டினாலும் பின்பு புத்தமதத்தில் சேரும்படி வற்புறுத்தினான். “மடத்தில் கிறிஸ்தவளாக இருக்கலாம். இங்கு புத்தரையே வணங்க வேண்டும்” என்றான். மதலேன் கழுத்தில் இருந்த சிலுவையைக் கழற்றி காலின்கீழ்ப் போட்டு மிதித்தான். செபமாலை, உத்தரியத்தை எரித்தான். அவளிடம் இருந்த பக்திப் பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டான். அவள் அழுதாலும் அவன் உணர்ச்சி இல்லாதிருந்தான். அவன் மனைவி, பிள்ளைகள் ஒரு பெரிய புத்தர் சிலைக்குப் பூக்கள் வைத்ததைப் பார்த்தாள். பிக்குமார் வாடிய பூக்களை எடுத்துவிட்டனர். நாம் மலையைக் கடந்து செல்லும்போது பிள்ளைகள் பூக்களைக் கண்டு எடுப்பார்கள். பின்பு இது புத்தரின் பூ என்றுகூறி எறிந்து விடுவார்கள்.

எனவே மதலேனும் பூக்களை புத்தரின் பாதத்தில் வைக்க நிர்ப்பந்திக்கப் பட்டாள். ஏதோவொரு சக்தி இதைச் செய்யவிடாது அவளைத் தடுத்தது. எனவே விகாரைக்குச் செல்லும் வாசலில் பிக்குகளின் முன்னிலையில் அடிகள் வாங்கினாள். 6மாதங்களாக தனது விசுவாசத்தைக் காப்பாற்றினாள். அப்போது அயல் கிராமத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்செய்தி அறிவிப்புப்பணி நடைபெறுவதை அறிந்து அங்குசென்று தன் துன்பங்களை குருவானவருக்கு அறிவிப்போம் எனநினைத்தும் அது முடியவில்லை. இத்துன்பங்களினால் அவள் நோயுற்றாள். எனவே சகோதரன் ஒற்ராவி சகோதரியிடம் ஒப்படைக்க குருநாகலுக்கு அழைத்துச்சென்றான். நான் அங்குசென்று துன்பத்தினால் முதிர்ச்சியடைந்த பிரிந்துசென்ற ஆட்டை அரவணைத்துக்கொண்டேன். இறைவன் இவளைக் கைவிடவில்லை. விசுவாசத்தில் உறுதியாக இருந்தாள். தற்போது அநாதை மடத்தில் முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்கின்றாள்.

**தை 1884**

சென்ற அறிக்கையில் போடிங்பற்றி நான் கூறவில்லை. பிரிவினை மதம் பெற்றோரைத் தடுத்தாலும் 60 பிள்ளைகள் உள்ளனர். 20 பேர் மடத்தில் உள்ளவர்கள். இலங்கையில் பறங்கிப் பெண்கள் சமயஅறியாமையில் வாழ்கின்றனர். எனவே பிள்ளைகளுக்கு திருமுழுக்குக் கொடுப்பதில்லை. இவ்வருடம் 4பிள்ளைகள் திருமுழுக்குப் பெற ஆயத்தம்செய்தோம்.

தொற்று நோய்களும் எம்மைத் தாக்கி வருகின்றன. வயிற்றோட்டத்தினால் ஒரு பிள்ளை பலியானாள். எனது றெஜினா பற்றிக் கூறுகின்றேன். அவள் பெற்றோரால் நேசிக்கப்பட்டாலும் இரகசியமாகத் தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்து நவகன்னியர் இல்லம் சென்றாள். அங்கு 6 மாதங்கள் செலவழித்தபின்பு சுதேசிகள் சபையில் சேர்ந்தாள். சுதேசசகோதரிகள் குருநாகல் சிங்களப்பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்றார்கள். இதனால் பாடசாலையின் தரம் உயர்வடைகின்றது. பாடசாலை அதிகாரிகளும் ஆசிரியரின் புத்தியையும், அறிவையும் பாராட்டுகின்றனர்.

மார்கழி மாதம் 18ம் திகதி (Fr. Joulain) அருட்தந்தை யூலன்ட் தியானம் போதித்தார். இறுதி நாளில் இயேசுவின் திருஇருதய சுருவத்தின் பாதத்தில் எம் வாக்குறுதிகளைப் புதுப்பித்தோம். புதிய ஆலயத்தில் முதல்நாள் இச்சுருவம் ஸ்தாபிக்கப்பட்டது.

வேறொரு நிகழ்வையும் கூறிவைக்க விரும்புகின்றேன். எமது லொத்தர் இழுப்பின் முதல்நாள் அது தடைசெய்யப்பட்டுள்ளது என்ற செய்தி அறிந்தேன். 2வருட வேலைகள் எம் நம்பிக்கையை இழக்கச் செய்தது. மொத்தமாக 600 லொத்தர்கள். இவற்றில் பல பிரான்சில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து எம் தாயார், சகோதரிகள் அனுப்பியிருந்தனர். என்ன செய்வது என்று துக்கப்பட்டோம்.

ஒரு கத்தோலிக்கப்பெண் எம் சீட்டுக்களை தன் (Rest house) சுகவிடுதியில் வைத்திருந்து பயணிகளுக்கு விற்று வந்தாள். புசல்லாவை வீதியில் அவள் விடுதி அமைந்திருந்தது. ஒருநாள் பொலிஸ் அதிகாரி அவ்வழியால் சென்ற போது இப்பெண் இச்சீட்டைக் கொடுக்க அவர் அதைப் பார்த்துவிட்டு ஒரு துண்டில் தான் அச்சீட்டை எடுத்துச் செல்வதாகவும், குருநாகல் சீட்டிழுப்பு தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் எழுதிச் சென்றார். அவர் பிரான்ஸ் நாட்டவர். பெண்ணும் இதனால் பயமுற்றார். கொழும்பிலிருந்து அரசியின் வழக்கறிஞர் எம் நகருக்கு செய்தி அனுப்பி அதிகாரிகள் எம்மை வரும்படி அழைத்தனர்.

மேலிடத்தில் இருந்து வந்ததால் இயேசுவின் திருஇருதயத்திடம் எம் நம்பிக்கை எல்லாம் வைத்தோம். குருநாகல் பொலிஸ் அதிகாரி எமக்கு அதரவு தந்தார். அத்துடன் எம் நண்பர்கள், பிரிவினை மதத்தவர்கள் கூட சீட்டிழுப்பபு இல்லாவிடினும் விற்பனைக்கு ஆதரவுதந்தனர். Vanlengember வான்லென்கெம்பர் என்னும் ஒரு கத்தோலிக்க அரசியின் வழக்கறிஞருடன் கதைத்தும் பயனில்லை. ஆயர் போஞ்ஜீன் ஆண்டகை தம் ஆதரவு எமக்குத் தேவை என முன்வந்தார். எமது சீட்டிழுப்பின் காரணத்தை முன் வைத்தார். அவரின் எழுத்து வெற்றி பெற்றது. எமது பணி அன்புப் பணியெனவும், எதிர்காலத்தில் நாம் விரும்பும் போது செய்யலாம் எனவும் உத்தரவு பெற்றோம். இறைவனுக்கே மகிமை உண்டாவதாக.

எனவே ஆலயத்தில் "இறைவனுக்கு மட்டும் மகிமை" என்னும் ஒரு மாபிள் (ex-voto) கல்லைப் பதித்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நல்ல தாயாரே!

வருடத்தொடக்கத்திலே ஆயர் போஞ்ஜீன் கொழும்பிலிருந்து வந்து எம் சிறிய மடத்தில் சில மணித்தியாலங்கள் தங்கித் திருப்பலி நிறைவேற்றினார். அவரது பிரசன்னம் எமக்கு மகிழ்ச்சியைத் தந்தது. இறைவனுக்கு நன்றி. பின்னர் இலங்கையின் முன்னாள் ஆளுநர் சேர். உவில்லியம் கிறகோரி எம்மைச் சந்தித்து மகிழ்வித்துச் சென்றார். அத்துடன் மக்களும் அவரை வரவேற்றனர். இவர் இங்கிலாந்து சென்றபோது மக்கள் கவலையடைந்தனர். எனவே திரும்பி வருவதைக்கண்டு மகிழ்ச்சியுற்று விழாவெடுத்தனர். சென்ற இடமெல்லாம் வரவேற்பு. அத்துடன் குருநாகலில் " யானை வேட்டை" ஒன்றை ஒழுங்கு செய்தனர். இதனை" கிரால்" (Kraal) என அழைப்பர். இரண்டு மாதங்களுக்கு முன் நூற்றுக்கணக்கான சுதேசிகள் காட்டுக்குள் கால் நடையாகவோ, குதிரையிலோ சென்று பரந்துநின்று வெடிகள் மூலம் ஒரு யானைக் கூட்டத்தை ஒன்று சேர்த்து கிரால் என்னும் இடத்துக்கு அனுப்பிவைப்பார்கள். இதன் மூலம் வன்னியில் இருந்து யானைகள் "கிராலுக்கு" அனுப்பப்பட்டன. ஒருவர் காயமடைந்தார். ஒருவர் இறந்தார்.

பங்குனி 6ம் திகதி விழா ஏற்பாடானது. எனவே முன்னாள் ஆளுநர் உவில்லியம்கிறகோரி தற்போதைய ஆளுநர் கோடன் அவர்களுடன் சேர்ந்தே குறிப்பிட்ட இடத்திற்கு வந்துசேர்ந்தார். கொழும்பு, கண்டி, புத்தளம் , குருநாகலிலுள்ள ஐரோப்பியரும் இலங்கையரும் கிரால் (வேட்டைநகர்) இடத்திற்கு வந்தனர். இது காட்டுக்கு நடுவே 22 மைல் தூரத்தில் உள்ளது. 6 நாட்கள் முடிவில் யானைக்கூட்டம் தென்பட்டது. 2 தாய் யானைகளை இளம்யானைகள் கூட்டிச் சென்றன. சில பசியால் தூரச் சென்றன. 12ம் திகதியே 2 ஆளுநர்கள் திருமதி கோடன் மற்றவர்கள் முன்னிலையில் வெற்றியுடன் அனுப்புதல் நடைபெற்றது.

கிரால் 20 ஏக்கர் நிலத்தில் உள்ளது. 4 இலங்கையர் அழகிய யானைகளில் ஏறி மரக்கொப்புகளை வெட்டும்போது ஒருயானை கோபவெறி கொண்டு தன்பாகனை தூக்கி எறிந்தது. அதனால் தும்பிக்கைமுறிந்து நிலத்தில் குத்தியது. அதனால் அவனைக் கிழித்து எறிந்திருந்தது. எனவே எல்லோரும் கூக்குரலிட சேர். கோடன் கிராலை நிற்பாட்டினார். மக்கள் கூட்டம் கலைந்தது. மிருகங்களும் அங்கும் இங்குமாக உள்ளே திரிந்தன. சிறிது சிறிதாக் கலைந்தமக்கள் ஒன்றுசேர்ந்து யானைகளை அடக்க முயற்சி செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைகளைப் பழக்கி எடுப்பதில்தான் வெற்றி அடங்கியுள்ளது. அதன் பிளிறிடும் சத்தத்திற்கு அன்பாகப் பதிலிறுத்து தும்பிக்கையை மரங்களுடன் தடவி அதனை வசப்படுத்துவர். அப்போது பெரிய கம்பிகளைப் போட்டு மரக்கட்டைகளில் பிணைப்பர். 25 யானைகளும் பிணைக்கப்பட்ட பின் அது முதலாளிமாரின் சொத்துக்களாக மாறும். சில நாட்களின்பின் அவை குருநாகலுக்கு அழைத்துவரப்பட்டு மரங்களில் கட்டி வேறு இடங்களுக்கு அனுப்பத் தயாராகின. இது ஒரு பெரிய நிகழ்வாகும். எமது பிள்ளைகளும் இதைப் பார்க்கவிரும்பினர். ஒரு ஞாயிறு அவர்களைக் கூட்டிச்சென்று காட்டினோம். யானைகளின் பின்னங்கால்களும் கட்டப்படடிருந்தன. பின் இந்தயானைகள் ஆளுநரை வரவேற்கப் பவனியாகச்சென்றன. கழுத்திலிருந்த மணிகள் மிருதங்க ஒலியுடன் சேர்ந்து ஒலித்தது. நடனமாடுவோர், இசைக்கருவிகள் இசைப்போருடன் சுதேசத் தலைவர்களும் விழாஉடை அணிந்து, தொப்பி, இடைப்பட்டியணிந்து வந்தனர். ஆளுநர் முன்னிலையில் வந்ததும் யானைகள் பலவிதமான சாகச விளையாட்டுக்களை யானைப்பாகன் உதவியுடன் செய்துகாட்டின. முடிவில் கால்களையும் தாழ்த்தி திருமதி. கோடன் முன்னிலையில் தும்பிக்கையை நீட்டியது. ஒவ்வொன்றுக்கும் ஒரு நாணயம் கொடுக்க அதைப் பாகனிடம் வழங்கியது.

சேர்.உவில்லியம் கிறகரி எமக்கு அந்நியரல்லர். எமது பணிக்கு உதவிபுரிந்த ஒரு நண்பன் எனலாம். திரும்பி இலங்கைக்கு வந்தபோது போஞ்ஜீன் ஆயர் மூலம் இங்கு வருவதாகக் கூறியிருந்தார். கிரால் வேளையில் பங்குனி 12ம் திகதி கண்டியில் இருந்தபடியால் இங்கு வரமுடியவில்லை. ஆனால் சேர்.கிறகரி "கிராலுக்கு" வந்தவேளையில் மாலையில் மடத்திற்கு வரமுடியவில்லை. எனினும் "பொல்காவலைக்குச்" செல்லுமுன் பயண உடையில் அதிகாலையில் வரமுடியும் என ஒரு துண்டு அனுப்பிருந்தார். எனவே அவசரமாக எம்மடத்தை அலங்கரித்து விழாக்கோலம் கொள்ளச் செய்தோம். செயற்கைப் பூக்களால் மாலைசெய்து சுவரில் தொங்கவிட்டு, வரவேற்பறையில் ஒரு நாற்காலி வைத்தோம். எமது நன்கொடையாளிக்கென எழுதித் தொங்கவிட்டோம். எல்லா மாணவர்களும் சமுகமாகி இருந்தனர். காலையில் எமது மணியடிக்கும் முன்னமே மாணவர்கள் வந்து எம்மை எழுப்பினார்கள்.

காலை 6மணிக்கு சேர். கிறகரி வந்தபோது நூற்றுக்கணக்கான மாணவர்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். எல்லோரின் சார்பாகவும் ஒருவர் உரையாற்றினார். தி.கு சபை மாணவர்கள் இவரது உதவியுடன் வளர்ச்சி பெற்று நிரம்பிய நம்பிக்கையுடன் திகழ்கிறார்கள் என்று தனது உரையில் புகழ்ந்து கூறினார். அத்துடன் இத்தோட்டமானது ஆன்மீக. அறிவுள்ள இளம் பெண்களை உருவாக்குகின்றது எனவும் விஞ்ஞானம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு, புண்ணியங்களில் நிறைந்து இறைமகிமையில் வாழ விரும்புவதாகவும் கூறினார். இதனால் திருச்சபைக்கும், சமுதாயத்திற்கும் பெருமையைக் கொடுக்கும் எனவும்கூறி தனது உரையை நிறைவு செய்தார். இவ்வுரைக்கு நன்றி கூறிய ஆளுநர் தான் ஒரு கருவியாக இருந்ததை எண்ணி மகிழ்வதாகவும், பாடசாலையின் நற்பெறுபேறுகளினால் தான் பெருமைப்படுவதாகவும் கூறினார். தான் தொடக்கத்தில் கத்தோலிக்க கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது உண்மையெனவும், இதனால் சமுதாயம் பலன் பெறுகிறதென்றும் மகிழ்ச்சியடைந்தார். ஆனால் கல்வியில் தேவபயம் இருக்கும்போதுதான் நல்ல பெண்களாக வரமுடியுமென்றும் அதிகாலையில் தன்சந்திப்புக்கு சொற்ப நேரம் என்றாலும் சகோதரிகளுக்குத் தன் நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் எடுத்துரைத்தார். இவரின் சாட்சியமானது எமக்கு நாட்டில் நன்மதிப்பைப் பெற்றுத் தந்தது.

சில நாட்களின் பின்பு புனித. சூசையின் திருவிழாவைக் கொண்டாடினோம். எம் பிள்ளைகளும் எம்முடன் இணைந்து தம்வாழ்த்துக்களைத் தாயார், சகோதரிகளுக்குத் தெரிவித்தனர். வைகாசி மாதத்தில் ஒவ்வொரு வருடமும் மாதாவுக்குத் திருவிழா எடுப்பார்கள். இந்தப் பக்தியானது தினமும் படத்தை அலங்கரிப்பதற்கும், தாராள உள்ளம் உடையவர்களாக விளங்கவும், அத்துடன் சில குடும்பங்கள் ஒளியூட்டப்படவும் உதவியாக இருக்கின்றன. வழிபாட்டின் பின் வாணவேடிக்கையும் இடம்பெறும். இவ்வாறு சிங்கள மக்கள் மாதாவை மகிமைப்படுத்துவார்கள்.

சென்ற அறிக்கையில் 3வருடங்களாக அநாதை இல்லத்தில் கையிருப்புப் பணம் குறைந்ததால் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லையென எழுதியிருந்தேன். 5 பேர் திருமணம் செய்துள்ளனர். ஒருவர் சுதேச நவகன்னியர் இல்லம் சென்றுள்ளார். 30பேரை மாத்திரம் வைக்கும்படி ஆயர் கூறியுள்ளார். 7வயதிற்குக் குறைந்த பிள்ளைகளும் உள்ளனர். எதிர்காலத்தின் நம்பிக்கையாக விளங்குகிறார்கள். மடத்திலே பெற்றுக் கொண்ட பாடங்கள் எதிர்காலத்திலே அவர்களுக்கு உதவியாக இருக்கும். பெரிய விழாக்களுக்கு ஆலயத்திற்கு வந்து அருட்சாதனங்களில் பங்கு பெறுவார்கள்.

எம்முடன் இருக்கும் சிறுவர்களைப் பற்றிக் கூறவிரும்புகிறேன். நல்ல புத்திக் கூர்மையுள்ள 5வயதான "யோசேப்பின்" விருப்பம்கொண்டு அவருடைய தந்தை கூட்டிவந்தார். எம்சகோதரிகள் பிள்ளைகளுடன் கிராமப்புறம் சென்றபோது ஒரு கொட்டிலில் தங்க வேண்டி நேரிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அமர்வதற்கு ஒரு பாய் கொண்டு வந்து கொடுத்தார். பின்பு அப்பிள்ளைகளுடன் விளையாடினார்கள். புறப்படும் நேரம் வந்ததும் பிள்ளைகளுடன் தானும் வரவிரும்பினாள். உடையில்லாமல் போகவேண்டாம் என்று பெற்றோர் தடுத்தபோதும் "மடத்தில் தருவார்கள்" என்று பதில்சொன்னாள். ஆனால் தந்தை விடவில்லை. மறுமுறை அங்கு சென்றபோது தாயும், மகளும் காய்ச்சலினால் வருந்தினார்கள். மகள் பலவீனமுற்றிருந்தாள். அந்தக் காய்ச்சல் தொற்று நோயாகிப் பலர் இறந்தனர். எனவே திருமுழுக்குக் கொடுக்க விரும்பினேன். மறுநாள் இன்னொரு சகோதரியையும் அழைத்துக் கொண்டுவந்து தாயிடம் சில மருத்துவ சிகிச்சையைச் செய்ய விரும்புகிறாளா? எனக் கேட்டு லூர்துமாதா நீரைக் காட்டினேன். அவள் சம்மதிக்கவே அதை நெற்றியில் ஊற்றித் திருமுழுக்கு அளித்து "மாறிஜெோகானா" எனப் பெயரிட்டு மரியாள், திருமுழுக்குஅருளப்பர் பாதுகாவலில் ஒப்படைத்தேன். 4வயதுச் சிறுமி சுகமுற்றால் என்னிடம் வரும்படி கூறினேன். எமது சிங்களச் சிறுமிகள் நன்றியுள்ள இதயத்தைக் கொண்டவர்கள். பிரான்சில் உள்ள தாயார் வெகுமதிகளை அனுப்பவதால் தினமும் அவர்களுக்காகச் செபித்தனர். ஆனி மாதத்தில் 18 பிள்ளைகள் அருட்தந்தை (Row)றூ என்பவரால் முதல் நன்மைக்கு ஆயத்தப்படுத்தப்பட்டு முதல்முறையாக சிற்றாலயத்தில் நன்மை பெற்றனர். அத்துடன் ஒரு வயோதிபப் புத்தமதப்பெண்ணையும் மனம் மாற்றியது.

இந்த ஏழைப் பெண் தனது 6வயதுடைய பேரப்பிள்ளையை அநாதை இல்லத்திற்கு கொண்டு வந்தாள். நான் அவளை ஏற்று இடைக்கிடை வந்து பார்த்துச் செல்லும்படி கூறினேன். தூரம் அதிகமாக இருந்ததால் இங்கே தங்கக் கேட்டபோது நான் மறுத்தேன். ஆனால் சமயம் படிக்க 2 கிழமை வந்து சென்றாள். பின்பு தன் உடுப்பு, பாய், தலையணையுடன் வந்து கதவண்டையில் வைத்தாள். அவளைத் திருப்பி அனுப்பினால் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவமாட்டாள் என்று எண்ணி அவளை அநாதை இல்லத்தில் சேர்த்தோம். அவளும் அநாதைப் பிள்ளைகளுடன் அன்பாய்ப் பழகி மகிழ்ச்சியாய் இருந்தாள். ஒரு சகோதரி அவளுக்குச் சமயம்படிப்பிக்க திருமுழுக்கு, முதல்நன்மை பெற்றாள். திருப்பலியின் பின்பு "இனி நான் சாகலாம், விண்ணகம் சேர முடியும்" என்றாள். அத்துடன் வேறுஒரு குடும்பமும் இந்த முதல்நன்மை விழாவினால் மனம் மாறித் தாமும் திருவிருந்தில் பங்குபற்றினர்.

1884ம் ஆண்டில் பாடசாலைப் பணிகளுக்கும் 10மடங்கு கஷ்டதுன்பம் நிகழ்ந்தாலும் பெரும் சித்தியை அளித்தது. புரட்டஸ்தாந்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையில் வெளிவந்த ஒரு செய்தியை உங்களுக்குத் தருகின்றேன். தி. கு சபைப் பாடசாலையில் திரு. அல்விஸ் என்பவரால் 40 பிள்ளைகள் தனித்தனியாக பரீட்சிக்கப்பட்டனர். 37பேர் சித்தியடைந்து பரீட்சை அதிகாரிகளால் போற்றப்பட்டனர். 8ம் வகுப்பு மாணவி எல்லாக் கேள்விகளுக்கும் பதிலிறுத்தாள். இது சகோதரிகளின் கரிசனையைக் காட்டுகிறது. இப்பாடசாலைக்கு அதிகம் இளம் பெண்கள் சேர்கிறார்கள். நகரிலே இப் பாடசாலை மேன்மையுடையதாக விளங்குகிறது. எனினும் புதிய ஆளுநர் சுதேசிகளுக்கு ஆங்கில மொழிக் கல்வியைத் தடைசெய்வித்தால் எதிர்காலம் பற்றிக் கூறமுடியாது.

எம் மடத்துச் சிற்றாலயம் இலங்கையிலே ஒரு அழகிய நினைவுச் சின்னமாக உள்ளது. போட்டிக்கோவின் மேலே எமது விருதுவாக்கு லத்தீனில் "இறைவனுக்கு மகிமை" எனப் பெறிக்கப்பட்டுள்ளது. பீடத்தின் 3 பெரிய கண்ணாடி யன்னல்களில் ஒன்று நாட்டதிகாரி முதலியாராலும், எமது வீட்டு மருத்துவராலும், மற்றையது ஒரு நல்ல கத்தோலிக்கராலும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. ஆவணி 16ம் திகதி போஞ்ஜீன் ஆயர் தலைமையில் மெலிசன் ஆயர் கொழும்பு, யாழ் மறைமாவட்டங்களில் இருந்து வந்த அ.ம.தி. குருக்கள், பெருந்தொகையான குருநாகல் மக்கள் முன்னிலையில் ஆலயம் ஆசீர்வதிக்கப்பட்டது.

பொஞ்ஜீன் ஆயர் தன்உரையிலே குருநாகல் பணியின் ஆரம்பத்தை தெளிவாகக் கூறினார். சகோதரிகள் ஆரம்பத்திலே பல துன்பங்களை அனுபவித்தனர். தம் சக்திக்கு மேலாக இப்பணியைத் தொடங்கி மனிதபலமின்றி தி.கு. சகோதரிகள் இதை நிறைவேற்றியுள்ளார்கள். இந்த ஆலயம் உள்ளஇடம் அரசுக்கு சொந்தமான தாவரவியல் பூங்காவாக அமைந்துள்ளது. பணியின் ஆரம்பத்திலே அரசு இவர்களுக்குக் கொடுத்தது. தற்போது இது ஒரு ஆன்மீகத் தோட்டமாகவும் அதிலே மலரும் பூக்கள் சகோதரிகளினால் பயன்படுத்தப்படும் பிள்ளைகளின் ஆன்மாக்களாக விளங்குகின்றன என்றுகூறி தம் உரையை நிறைவு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் நல்ல தாயாரே! வருடமுடிவிலேயே கடந்த 12மாதங்களிலும் இலங்கையிலுள்ள உம்பிள்ளைகளுக்கு நேர்ந்த துன்பங்கள் சிறியவையாயினும், பெரியவையாயினும் இறைபராமரிப்பு எமக்கு அளித்தவற்றை எழுதுவது எமது கடமையாக உள்ளது. சில பூக்கள் மலர்ந்தன. அத்துடன் முட்களும் சூரிய வெய்யிலில் உள்ளன. எனவே இரண்டாவது கூறியதை உங்களுடன் பகிர்ந்து எம் பணிக்கு அருளைப் பெற்றுக்கொள்வோமாக.

தைமாதத்தில் ஆயர்மெலிசான் தன் மறைப்பணி சம்மந்தமாக குருநாகலுக்கு வந்தார். நாம் எம் நாட்டைவிட்டு, எம் சபையைவிட்டு தூர இருப்பதால் இவரின் சந்திப்பு எமக்கு மகிழ்ச்சி அளித்தது. அத்துடன் எமது தியானத்திற்கு உதவிசெய்தார். அவரின் ஊடுருவும் வார்த்தைகள் உதாரணத்தடன் கூடியிருந்ததால் எம் ஆன்மா புத்தூக்கம் பெற்று மீளவும் இறைமகிமைக்காகவும், ஆன்மாக்களின் மீட்புக்காகவும் பணிபுரிய ஆர்வம் பிறந்தது. 5 நாட்கள் மட்டுமே இருந்தாலும் எம் தியானம், செபம் நற்பயன் அளித்தன. பின் ஆயர் சென்றுவிட்டார்.

தை 25ம் திகதி குருநாகலுக்கு 4மைல் தூரத்திலுள்ள ''மல்பிட்டியா'' என்னும் கிராமத்தில் ஒரு ஆலயம் அமைக்கப்பட்டது. அருட்தந்தை டினோ (Dinaux) என்பவர் புத்த மக்கள் மதம்மாற விரும்பியதால் புனித செபஸ்ரியாருக்கு அங்கு ஆலயம் அமைக்க விரும்பினார். எம்மை அழைத்தபடியால் நாமும் சுதேச சகோதரிகள், பிள்ளைகளுடன் அங்கு சென்றோம். 15 நாட்களுக்கு முன் குருவானவர் அங்கு சென்று ஆயத்தங்கள் செய்தார். சுதேசமக்கள் ஆடம்பரத்துடன் கொண்டாடினாலும் கோவில் சிறிதாகவே இருந்தது. 4 தூண்கள் எழுப்பி கிடுகினால் வேய்ந்து அதன் மத்தியில் பீடம் எழுப்பி அங்கு மக்கள் கூடியிருக்க பலிப்பூசை நிறைவேற்றப்பட்டது.

திருப்பலி முடிந்தபின் பெரிய மரநிழலில் புற்றரையில் அமர்ந்து "மல்பிட்டியா" மக்கள் சூழ்ந்திருக்க நாம் அவர்களுக்கு செபம் படிப்பித்தோம். கேள்விகளும் கேட்டனர். மாலையில் மகிழ்வுடன் எம்இல்லம் திரும்பினோம். நாம் விதைத்த விதை பலன் தரமுன் அவர்களைக் கண்காணிக்க எம் சுதேசசகோதரிகளை அனுப்பினோம். அருட்தந்தை டினோ, எம் சுதேசசகோதரிகள் இவர்களின் முயற்சியினால் 40பேர் திருமுழுக்குக்கு ஆயத்தம் செய்தனர். பின்பு வருடம் முழுவதும் தம்பணியைச் செய்ததால் தற்போது 100 கிறிஸ்தவர்கள் அங்கு உள்ளனர். தாளன்பிட்டியா, பலூடே கிராமங்களிலும் பல மனமாற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றன. மக்கள் சுதேசசகோதரிகளை வரவேற்று அவர்கள் கூறுவதைக் கேட்கிறார்கள். குருநாகல் வைத்தியசாலையையும் சந்திக்க பிதா டினோ கேட்டுள்ளார். சில மாதங்களின் பின்பு 6 ஏழைநோயாளிகள் மரணிக்கமுன் திருமுழுக்குப் பெற்றனர்.

குருநாகலில் இருந்து 16 மைல்தூரத்தில் எமது இராயப்பர் சகோதரிகள் சென்றுள்ளனர். 1884ல் ஆவணிமாதத்தில் 5 சுதேசசகோதரிகளை வென்னாப்புரி, கட்டுனேரிப் பாடசாலைத் தலைவர்களாக அங்கிருந்த பெண்களுக்குப் பதிலாக அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. இப் பெண்களில் பலர் குழுவில் சேரவிரும்புகின்றனர்.

ஐப்பசி மாதத்தில் நிலைமையைப் பார்வையிட 2ஆசிரியர்களுடன் அங்கு சென்றேன். மக்கள் எம்மை நன்கு வரவேற்றனர். திரும்பி வரும்போது செலவுக்குப் பணம், பொருட்கள் தந்து வழியனுப்பினர். ஆலயத்திற்கு அருகில் ஒருவீடு மிஷனறிக் குருக்களினால் எமக்கு வழங்கப்பட்டது. 3அறை, ஒரு விறாந்தை அத்துடன் பாடசாலையும் இருந்தது. அந்த இடம் ஒரு மடம் அமைக்க ஏற்றதாக இருந்தது. காலநிலையும் சிறந்தது. குருநாகலில் இருந்து வென்னாப்புவா வருவதற்கு இரண்டு வழிகள் இருந்தன. ஒன்று "கெனறற்கொட" (Heneratgoda) வரை புகையிரதம் மூலம் சென்று பின்பு 12 மணித்தியாலங்கள் மாட்டுவண்டியில் பயணம் செய்ய வேண்டும். மற்றையது தனியே மாட்டுவண்டிப் பயணம். இதையே நாம் விரும்பினோம்.

எனவே ஆயர் மெலிசான் ஆண்டகையின் ஆதரவும், உங்கள் உத்தரவுடனும் மாசி 3ம் திகதி காலை 5ஸ்தாபிகளும், நானும் குருநாகலில் இருந்து புறப்பட்டு 48 மணித்தியாலயங்களின் பின்பு வென்னாப்புரியை அடைந்தோம். அங்குள்ள மடத்தில் இருக்கும்போது மக்களுக்கு மகிழ்ச்சி. ஒரு வயோதிகப் பெண் உணர்ச்சி மிகுதியால் கண்ணீர்விட்டாள். மறுநாள் ஆயர் வந்து பாடசாலையைச் சந்தித்து 137 பிள்ளைகளுக்கு எம் சகோதரிகளை ஆசிரியர்களாக பகிரங்கமாக நியமித்தார்.

கட்டுநேரி கிறிஸ்தவர்களுக்கு இச்சிறிய மடத்திலிருந்து இரண்டு சகோதரிகள் நாளாந்தம் சென்று அங்குள்ள பிள்ளைகளுக்குப் படிப்பித்து வந்தனர். அருட்தந்தை அலோசியஸ் ஆயரின் அனுமதியுடன் பல பிள்ளைகளை இவர்களிடம் ஒப்படைத்தார். சில வாரங்களின் பின் நான் அவர்களை விட்டுப் பிரிந்தேன். திரும்பவும் வைகாசி மாதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு திரும்பிப் போனபோது பிள்ளைகளின் பரீட்சை நல்ல முறையில் சித்தியடைந்துள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது.

அதேவேளை குருநாகல் ஐரோப்பிய சகோதரிகளும் தமது வேலையைத் தொடங்கினர். பாஸ்கு விடுமுறைக்கு ஒய்வு தேவைப்பட்டது. மெலிசான் ஆயர் "புசல்லாவை" என்னும் இடத்தைத் தந்ததால் 15 நாட்கள் அங்கிருந்து எம் சக்திகளை மீட்டுக் கொண்டோம். இதனால் அங்கிருந்த குருக்கள் 10 மைல் தூரத்தில் உள்ள "கம்பளை" என்னும் இடத்திற்குச் சென்றனர்.

இப்பங்குக்கு அண்மையில் " பங்களா" ஒன்று விற்பதற்கு இருந்தது. பிரான்சில் (Villa) "விலா" அல்லது "சலேற்" (Chalet) என்பர். இதை நாம் எமதாக்கிக் கொள்ள விரும்பி ஆயருக்கும் உங்களுக்கும் அறிவித்தோம். 6கிழமைகளின் பின் எமதுகனவு நனவாகி அது எமக்காகியது. வீடு ஒரு மலை உச்சியில் ஒரு அழகிய விறாந்தையுடன் காணப்பட்டது. கீழே அழகிய புற்றரை, அதில் கீழைத்தேச மரங்கள், றபர், யூக்கலிப்ரஸ், காட்டுத்தோடைகள் காணப்பட்டன. அத்துடன் ஐரோப்பாவில் இருந்து முன்பு இருந்தவரால் நாட்டப்பட்ட (Sapin) சாப்பைன், (wilow) விலோ மரங்களும் காணப்பட்டன. வீட்டிற்குப் பின்னால் மரக்கறித்தோட்டம், பூந்தோட்டம் அழகாக இருந்தன. அத்துடன் ஒரு நதியும் சுற்றியோடியதால் குளிர்மையாக இருந்தது. எனவே எம் லீவுகாலத்தில் நாம் இங்கு வந்து எம் சக்திகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பலகாலமாக எதிர்பார்த்த பெட்டி வைகாசி மதத்தில் வந்துசேர்ந்தது. பெட்டியைத் திறந்ததும் மகிழ்ச்சியடைந்தோம். லூர்து மாதா சுருவத்தை அதற்கென ஆயத்தப்படுத்திய இடத்தில் வைத்தோம். அவரின் புன்னகை எம்மை ஊக்கப்படுத்தும். கீழே படர்ந்திருந்த ரோஜாமலர்கள் வானுக்கும், முட்கள் பூமிக்கும் உரியதாகும். அருட்தந்தை டினோ மாதாவை ஸ்தாபகம்பண்ணி மறையுரை ஆற்றினார். மாதாவின் பாதத்தில் பிள்ளைகள் ஒன்றுகூடிச் செபித்தனர்.

சில வாரங்களின்பின் புனித. ஆனாள் திருநாள் கொண்டாடப்பட்டது. இதுவரை பூக்களைக் கொய்துதந்தேன். சில துன்பச் செய்திகளையும் தருகிறேன். நோய்கள் பல வடிவங்களில் எம்மைத்தாக்கின. புரட்டாதி 7ம் திகதி சிஸ். மாகிறெற்மேரி இறந்துவிட்டார். பின்பு 16 வயதுடைய ஒரு போடிங்பிள்ளையும் இறந்துவிட்டார். தந்தை டினோ இறுதிச் சடங்கில் பங்குபற்றினார். எமது ஆங்கிலவகுப்புப் பிள்ளைகள் பரீட்சையில் நல்ல சித்தியடைந்துள்ளனர். சிங்களவகுப்பும் அவ்வாறே. எனவே இறைவனுக்கு நன்றி கூறுகிறோம். இயேசு, மரி, சூசையின் கொடியைத் தாங்கியவர்களாக இறைபணிபுரிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நல்ல தாயாரே,

8 மாத இடைவெளியின் பின் ஐப்பசி 18ந் திகதி நான் மீளவும் என் பணித்தளத்தைப் பார்வையிடுகிறேன். அத்திகதியில் இருந்து என் அறிக்கையை ஆரம்பிக்கிறேன். எம் பணிக்கு நீங்கள் அனுப்பிய சகோதரிகளுக்கு நன்றி. வேலைப்பளுவினால் வருந்திய சகோதரிகளுக்கு புதிய சகோதரிகளாகிய Sr. Marie De La Nativity, Sophie இருவரும் நல்ல உதவி புரிந்தார்கள். இறைவன் இவர்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக

கார்த்திகை மாதத்தில் எமது பங்கில் ஒரு தியானம் போதிக்கப்பட்டு எம் பழைய அநாதை மாணவர்கள் யூபிலி ஆண்டில் மீளவும் விசுவாசத்தில் பலப்படுத்தப்பட்டனர். இவர்கள் பங்குக் கோவிலில் இருந்து சிற்றாலயம் வரை பவனியாகப் பயிற்சிகள் (யூபிலிக்கான செயற்பாடுகள்) செய்கிறார்கள். காடுகளிலே இவர்கள் பரவி வாழ்ந்தாலும் பிரிவினை மதத்தவர், புத்த மதத்தவரிடையே இருந்தாலும் தம் சமயக் கடமைகளை நிறைவேற்றி தம் ஏழைப்பிள்ளைகளுக்கு உதவுகிறார்கள். தியான இறுதிநாட்களில் 13 பேர் திருமுழுக்குப் பெற்றனர்.

பிள்ளைகள் எம்மைச் சந்திக்கும் போது தாங்கள் கிறீஸ்தவர்களாக வர உதவி செய்யும்படி கேட்கின்றனர். எவ்வளவு நாம் அவர்களை ஆயத்தம் செய்கிறோமோ, அவ்வளவுக்கு அதன் பலன்கள் உறுதியானதாக இருக்கும்.

இங்கு வாழ்பவர்களுக்கு இடம் பற்றாக்குறைபற்றி அநேக முறைகள் எழுதியிருந்தேன். அதற்கு மெலிசான் ஆயரும் சம்மதித்தார். நீங்களும் செவிசாய்த்தீர்கள். 1885ம் ஆண்டின் இறுதியில் ஆயர் அநாதை மடம் இருந்த இடத்தை வேறிடத்திற்கு மாற்றினார். அந்த இடம் அவர்களுக்கு வகுப்பறையாகவும், சாப்பாட்டறையாகவும், படுக்கை அறையாகவும், ஓய்வு நேர இடமாகவும் இருந்தது. தற்போது புதிய இடத்தில் வசதியாகச் சென்று வருகிறார்கள்.

அத்துடன் பூந்தோட்டம், மரக்கறித்தோட்டம் இருப்பதால் சோம்பலுக்கு இடம் கொடுக்காது படிப்புத் தவிர்ந்த வேளைகளில் தோட்டத்தில் வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றனர். இதில் அவர்கள் முன்னேறிக் கொண்டு வருகிறார்கள்.

மார்கழியில் புசாக் (Pussacg) குருவானவர் எம் இராயப்பர் சபைச் சகோதரிகளுக்குத் தியானம் கொடுத்தார். ஒரு புதிய மிஷனறி உடுப்புப் பெற்றா. இருவர் சிஸ. ஒணறின், சிஸ். பெயாற்றிஸ் என்னும் பெயர் பெற்றனர். சிஸ். மாறி. பெனடிக்ற் இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்து வாக்குத்தத்தம் செய்து கொண்டா. இவை எல்லாம் உணர்ச்சி பூர்வமாக இவர்களைத் தாக்கியது. பிறசமயத்தில் பிறந்து கிறீஸ்தவர்களாகி தம்மை இறைவனுக்கு அாப்பணிக்குமளவிற்கு இவர்கள் வந்துள்ளனர். இது திருக்குடும்பத்திற்கே மகிமை. இது ஐரோப்பிய துறவிகளின் தியாகத்தினால் ஏற்பட்டவை. எனவே இந்த இராயப்பர் சபை எம் சபையில் இணைந்து இலங்கை வாழ் மக்களுக்கு நல்ல பயன் அளிக்கும்.

முன்பு கத்தோலிக்க பாடசாலைகள் கிடையாது. எனவே சிங்களப் பெற்றொர் தம் பிள்ளைகளைப் பிரிவினை மதப் பாடசாலைகளிலே சேர்த்தனர். மிஷனறிமார் வந்த பின்பு தான் கத்தோலிக்க பாடசாலைகள் தொடக்கப்பட்டன. என்னை ஒரு புதிய பணி ஆரம்பிக்கும்படி பல முறை கேட்டதினால் அநாதைச் சிறுமிகளால் விடப்பட்ட கட்டிடத்தில் ஒரு சுதேசிகளின் பாடசாலையை ஆரம்பிக்க எண்ணினேன். இப்பாடசாலையில் பிள்ளைகள் மானிட அறிவையும், விஞ்ஞானத்தில் விஞ்ஞானத்தையும் இறைவனை அறிதலையும், அவரை அன்பு செய்தலையும் படிப்பார்கள். 10 வயதுக்குட்பட்டவர்கள் பெருமளவில் வந்தனர். எல்லாரும் மறைக் கல்வி செபம்படித்தனர். இது மனமாற்றத்திற்கு வழிவகுத்தது.

எம் வெளிப் பாடசாலையில் படித்த ஒரு பிறசமயப் பெண் எமது சமய உண்மைகளைப் பற்றிப்பிடித்தாள். பெற்றோரினால் இவளுக்கு எதிர்ப்பு வந்தது. ஓர் இரவு ஒரு மனிதன் போய்க் குருவானவரை எழுப்பி, தன் பிள்ளைக்குத் திருமுழுக்குக் கொடுக்கும்படி கேட்டான். மடத்துப் பாடசாலையில் தன் பிள்ளை படிப்பதாகவும், தான் கிறீஸ்தவளாக வர அவள் விரும்பியதாகவும் பெற்றோர் அதை விரும்பவில்லை எனவும், தற்போது அவள் மரணப்படுக்கையில் இருப்பதால், அவள் ஆசையைத் தடுக்க முடியவில்லை எனவும், கூறினான். உடனே குருவானவர் விரைந்து சென்று திருமுழுக்குக் கொடுத்தார். சிலமணித்தியாலங்களின் பின் அவள் ஆன்மா பிரிந்து சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிச் சடங்குகள் ஆடம்பரமாக உயிர்ப்பு விழாவிற்குச் சாட்சியாக நடைபெற்றது. சிலுவை, இயற்கை மலர்களால் பிரேதப் பெட்டி அலங்கரிக்கப்பட்டிருந்தது. பிற சமயத்தவர்கள் கத்தோலிக்க ஆலயத்திற்கு ஊர்வலமாகப் பிரேதத்துடன் வந்தனர். குருவானவரின் மறை உரையைக் கேட்டுச் சென்றனர்.

ஒருமுறை நான் ஒரு பிறமதத்தவனை அணுகி நீங்கள் அறிவுள்ளவர்களாக இருந்தும் ஏன் சாத்தனை வணங்குகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவன் நாம் பயத்தினால் அப்படிச் செய்கின்றோம், எனப் பதிலிறுத்தான். அதற்காக அவனை அமைதிப்படுத்த நாம் வணங்கிறோம் என்றான். ஏனெனில் அது பொல்லாதது என்றான்.

மார்கழி 31ந் திகதி குழுச் சகோதரிகள், நவகன்னியர்கள், அநாதைச் சிறுமிகள் தம் வாழ்த்துக்களை எனக்குத் தெரிவித்தனர். எமது வருடத்தை இயேசுவின் பாதத்தில் ஒப்படைத்து பாவிகளுக்கு மன்னிப்பு வேண்டியும், தவறியவர்களுக்கு இயேசுவின் இரக்கத்தையும் கேட்டு நின்றோம்.

இந்த உணர்வுடன் திருக்குடும்பத்தின் அங்கத்தவர்களுடன் சேர்ந்து நன்றிச் செபம் சொன்னோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நல்ல தாயாரே, இலங்கையிலும் ஐரோப்பா போன்று தை 1ல் வருடப்பிறப்புக் கொண்டாடிக் கத்தோலிக்கர் எமக்கு வெகுமதி தருவார்கள். அதாவது சில வாழைப்பழங்கள், உருளைக்கிழங்கு, கோவா, தேங்காய் எண்ணெயில் பொரித்தெடுத்த பலகாரங்கள், கொண்டு வருவார்கள். எளிமையாகத் தாராள உள்ளத்துடன் தருவார்கள். எம் அநாதைப் பிள்ளைகள் லீவுக்குச் செல்லாத காரணத்தினால் ஒரு சுற்றுலா ஆயத்தம் செய்யப்பட்டது. யானை மலைக்குச் சென்றோம். செல்லும் வழியில் புத்தர் ஆலயத்தையும், பிக்குகளின் இல்லத்தையும் கண்டோம். ஒரு குகையில் பாதச் சுவடு இருந்தது. அங்கு தேங்கிய (stagnant) நீரும் இருந்தது. அங்கு ஒவ்வொரு வருடமும் புத்த மக்கள் பவனியாக வந்து இந்த நீரை எடுத்துச் சென்று தம் மதத்தவருக்குக் கொடுப்பார்கள்.

சில நிமிடங்கள் அங்கு நின்று விட்டு வேறொரு மலை உச்சிக்கு மகிழ்வுடன் சென்றோம். அங்கு குருநாகலைப் பார்க்கக்கூடியதாகவும், ஒரு செயற்கையான குளத்தையும் பார்க்கமுடிந்தது. தென்னஞ் சோலை நடுவே சில வீடுகள் பரந்து இருந்தன. எம் கோவில் ஒரு கோட்டை போன்று இருந்தது. இது உண்மை அல்லவா. அத்துடன் பறவைகளின் நிறமும், அவற்றின் இசையும் ஒரு தியான நிலைக்கு எம்மை அழைத்துச் சென்றன. மாலையானது. வீடு செல்ல இறங்குவது இலகுவாக இருந்தது. அப்போது மரங்களுக்கிடையில் ஒரு சத்தம். குரங்குக் கூட்டம் ஒன்று வந்து எம்மை இடைமறித்தது. ஒருவாறு வீடு வந்து சேர்ந்தோம். மறுநாள் மாணவர்களும் ஆசிரியர்களும் வகுப்பைத் தொடங்கினார்கள். ..தை 8ல் மெலிசான் ஆயர் எம்மைச் சந்திக்க வந்தார். எம் சபை ஸ்தாபித்த நாளானபடியால் ஆயர் திருப்பலி நிறைவேற்றி நற்கருணை வழங்கினார். அடுத்த ஞாயிறு பங்குக்குச் (Parish) சென்று ஐரோப்பா செல்லுமுன் மீண்டும் வருவதாகக் கூறி எம்மை விட்டுச் சென்றார். இந்த ஆறுதலைத் தொடர்ந்து துன்பங்கள் வந்தன.

ஆங்கில மாணவர் எம் வகுப்புகளுக்கு வருவதை ஒரு புரட்டஸ்தாந் போதகர் எதிர்த்தார். இறைவன் இதை அனுமதித்தாலும் அவர் போற்றப்படுவாராக. தை 3ல் பிரான்ஸ் நாட்டிலிருந்து புதிய சகோதரிகள் மார்செயி (Marseille) துறையினூடாக வந்தனர். இங்கு சகோதரி மாறி லூயிஸ் மரணப்படுக்கையில் இருந்ததால் நான் அவவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலடியில் இருந்தேன். இதைக் கண்ணுற்ற சகோதரி, "நீங்கள் கொழும்பு சென்று அவர்களை வரவேற்று வாருங்கள். நான் நீங்கள் இல்லாதபோது சாக மாட்டேன்" என்றாள். திரும்பி வந்த போது அவள் தன் மரண வேளையிலும் புன்னகையுடன் இருந்தாள். எனவே, வந்த சகோதரிகளுடன் அவவைப் பார்க்க முடிந்தது. அதே வேளை குறுகிய இடைவேளையில் எம் விற்பனையையும் செய்ய வேண்டியிருந்தது. பிரான்சிலிருந்து அனுப்பப்பட்ட பொருட்கள் இலங்கைக் காலநிலையுடன் (climate) சேதமடைய முடியும். எனவே விற்பனையின் சித்திக்காகப் புனித சூசையின் உதவியை நாடினோம். மாசி 1ம் திகதி நடைபெற்ற கூட்டத்திற்கு வந்த நீதிபதி ஒருவருக்குக் கடிதம் அனுப்பினேன். அவரும் உதவி செய்தார். காலை 8 மணிக்கே வந்து விற்பனை இடத்திலிருந்த பொருட்களை வாங்கினார். பின்பு எம் அநாதைப் பிள்ளைகளுடனும் சில நிமிடங்கள் செலவழித்தார். பின்பு எம் விற்பனை வேளை இங்கு வரலாம் எனக் கூறிச்சென்றார். புனித சூசை எமக்கு இவ்வாறு உதவி செய்தார். மாலையில் புனித இராயப்பர் சபைச் சகோதரி மாறி லூயிஸ் இறைவனால் அழைக்கப்பட்டார். எம் பணியைத் தடை செய்யாது வாழவும், துன்புறவும் விரும்பியவளின் செபத்தை இறைவன் ஏற்றுக் கொண்டார். இந்து சமயத்தில் பிறந்த இவள், நரக நெருப்பிற்கு இரையாகாது நல்ல கிறிஸ்தவளாகித் துறவியாகி இறந்தாள். சாத்தானை, உலகை வென்று திருக்குடும்ப சகோதரிகளின் உதவியினால் எம் ஸ்தாபகரின் ஒரு இரத்தினக்கல்லாக மிளிர்கின்றாள்.

அவவின் மரணத்தின் மறுநாள் வென்னப்புவாவில் உள்ள எம் சுதேச சகோதரிகளைப் பார்க்கச் சென்றேன். இந்த மடத்தில் சகோதரிகளின் ஆர்வத்தினால் பல நன்மைகள் விளைந்ததை அவதானித்தேன். கிறிஸ்தவ பாடசாலைகள் பெருகியிருந்தன. சுதேசிகளுக்கு சமயம் பரவ நல்ல வாய்ப்பு எனினும் துறவற வாழ்வின் தியாகங்களும், சுயமறுப்புகளும் சுதேசிகளின் சுதந்திரவாழ்வுக்கு எதிராக இருப்பதால் அழைத்தல் குறைவாக உள்ளன.

அங்கிருந்து உடனடியாகக் குருநாகல் திரும்பினேன். மக்கள், ஆயர் வரவுக்காகக் காத்திருந்தனர். 11.30 மணியளவில் ஆயர் தென்னோலையால் அழகுற அமைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவுகளின் கீழ் அமர்ந்து மக்களுக்கு மகிழ்வூட்டினார். உறுதிபூசுதல் சடங்கின் போது எம் 4 பிள்ளைகள் பங்கு பற்றினர். 2 நாட்கள் எம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி 3ம் நாள் எம்மிடமிருந்து விடைபெற்று ஐரோப்பா சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறை பரப்புப் பணி செய்வோருக்கும், அவர்களின் பணிகளுக்கும் தேவபராமரிப்பு உண்டென்பதை மீளவும் கூறுகின்றேன். பங்குனி மாதத்தில் புதிய ஒரு சோதனை எமக்கு வந்தது. எம் சுதேசச் சகோதரி மாலையில் அநாதையில்லத்திற்கு அருகாமையிலுள்ள தோட்டத்திற்குச் செல்லும் போது பாதையில் ஒரு பாம்பு இருந்தது. காலடி பட்டதும் பயத்தினால் சகோதரி சென்று விட்டா. பாம்பு மாலை வேளையானதால் எல்லா இடமும் அடைக்கலம் தேடியது.

பங்குனி 19ல் றோஜாப் பூக்கொத்து எம் அதி சிரேஷ்ட குருவுக்குக் கொடுத்தோம் அத்துடன் வேறொரு பூவும் கொய்யப்பட்டது. அப்பூவானது எம் ஐரோப்பிய சகோதரிகளால் மனமாற்றம் செய்யப்பட்ட ஒரு புத்த மத்தவர். புனித சூசையின் பெயரை இந்த வயோதிபர் பெற்றார். வருடத் தொடக்கத்திலிருந்து உமது பிள்ளைகள் 32 பேருக்குத் திருமுழுக்குக் கொடுத்து அதில் 5 பேர் உயிருடன் உள்ளனர். குருநாகல் வைத்திய சாலையில் எம் சுதேச சகோதரிகள் நோயாளரைச் சந்தித்து மரண பயத்திலிருப்பவர்கள் திருமுழுக்கு அருட்சாதனம் கேட்கும் போது கொடுக்கின்றனர்.

எனவே எமக்குத் துன்பங்களும் அதே வேளை மகிழ்ச்சியும் உண்டு. சுதேச சகோதரிகளும் தம் பணியை விளங்கிச் செய்கின்றனர். விசேடமாக, நோயாளிகளை வைத்தியசாலையில் சென்று சந்திப்பவர்களுக்குப் பலனாகப் பல மனமாற்றங்கள் கிடைத்துள்ளன. சகோதரிகள் இவர்களின் ஆன்மாக்களைத் தொடக்கூடிய வரம் பெற்றுள்ளனர்.

## ஆனி 1887

என் நல்ல தாயாரே, இந்த 3 மாத அறிக்கையானது, எம் கிறிஸ்தவரின் புனித வாரச் சடங்கின் போது காணப்பட்ட ஆவல், எளிமை பற்றி எடுத்தியம்புகின்றது. எம் சிற்றாலயத்தில் நற்கருணை எழுந்தேற்றத்தின் போது ஒளியேற்றி அவர் முன் பணிகின்றனர். ஒரு வயோதிபரும் அவரின் மனைவியும் மெழுகுதிரியைக் கையிலேந்தி நெற்றி நிலத்தில் பட இருந்து பாட்டிசைத்தனர். இறைவனுக்கு மட்டுமே அது விளங்கும். இதனை நாம் கண்டோம். கத்தோலிக்கர் பாடுகளைத் தியானித்து உயிர்ப்பின் மகிழ்ச்சியை அனுபவிக்கத் திருவிழிப்புச் செய்தனர். இவ்வாறு தம் விசுவாசத்தைக் காப்பாற்றி வந்தாலும் ஒருவர் தவறிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலம் பிரான்ஸ் நாட்டில் இளவேனிற் காலம். இங்கு வெயில் 2 மடங்காக உள்ளது. தேவ பராமரிப்பானது எமக்குப் புசல்லாவ (Pussellawa) எனுமிடத்தில் ஒரு பாலைவனச்சோலையைத் (an Oasis) தந்துதவியது போல எம் பிள்ளைகளுக்கும் உதவியது. ஒரு பணக்காரக் கத்தோலிக்கர் இவர்கள் மேலிரங்கித் தன் தென்னம் சோலையில் ஒரு கட்டிடம் கட்டினார். பாஸ்குத் திங்கள் நாம் அங்கு சென்று தூய காற்று, ஓய்வு, சுற்றுலா எடுத்து வந்தோம். அதே வேளை எம் ஐரோப்பிய சகோதரிகள் துன்பக் கலசத்தில் பருகினார்கள். நாம் திரும்பி வந்த போது இச் செய்தியை அறிந்தோம்.

எம் தாயார் மாறி டெ ல குறுவா (Mary of the Croos) இறந்த செய்தி எமக்கு இடி போல இருந்தது. தாய்மை உள்ளம் கொண்ட இவவின் இரகசியம் என்னவோ? நான் அவவைச் சந்தித்த போது ஆர்வத்துடன் எம் வெளிநாட்டுப்பணி பற்றிக் கேட்டறிந்தா. குருநாகல் பெண்கள், அநாதைப் பிள்ளைகள், புனித இராயப்பர் சபை பற்றி எல்லாம் கூறினேன். விண்ணிலும் எம் பாதுகாவலியாக இருப்பாளாக. இயேசுவின் விண்ணேற்புத் திருநாளும் நன்றாக முடிந்தது.

நான் இலங்கைக்குத் திரும்பும் போது மார்செயித் துறையில் ஒரு பிரம்பினால் செய்த ஒரு சாய்கதிரை வாங்கி வந்தேன். என் திருநாளில் சில மாற்றங்களுடன் வெளியே வந்தது. அடுத்த லொத்தர் சீட்டிழுப்பில் அதனை வைக்கவுள்ளோம். எம் சிற்றாலயத்திலும் பல நிறங்களையுடைய ஒரு நிலவிரிப்பு உள்ளது. (Carpet) அதுவும் நான் வரும்போது சிறு துண்டுகளாகக் கொண்டு வந்தேன்.

வைகாசி 18ந் திகதி பங்குக் கோவில் திருப்பலி முடிய கலவன் பாடசாலைப் பிள்ளைகள், எம் மடத்தில் ஒன்று கூடி விளையாடினார்கள். 11 மணியளவில் எல்லாப் பிள்ளைகளும் நல்ல உடை அணிந்து தம் தலையில பழங்கள் கொண்ட தட்டை வைத்தனர். அதில் தோடம்பழம், வாழைப்பழம், அன்னாசி, பலகாரங்கள் இருந்தன. சைகை கொடுத்ததும் நாதஸ்வர இசையுடன் விறாந்தையருகே வந்து தம் வெகுமதிப் பொருட்களை "ஆய்பவான்" எனக் கூறிக் கொண்டு கொடுத்தனர். அப்போது றபான், வெடிச் சத்தங்கள் அதிர்ந்தன. எவ்வளவுக்குச் சத்தம் போடுகிறார்களோ அவ்வளவுக்குப் பிள்ளைகள் மகிழ்ந்தனர். எனவே தப்பியோடாது நாம் புன்னகை பூத்துக் கை தட்ட வேண்டும். மாலையில் வேறு விதமான விளையாட்டுக்கள். கண்ணைக் கட்டியபின்பு ஒரு தடியின் உதவியுடன் ஒரு பொருளைத் தேடுதல். அந்தப் பொருள் தண்ணீர்த் தொட்டி. எனவே நன்கு தண்ணீர் தெளித்தனர். மாலை 4 மணிக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியடிக்கப்பட்டு நற்கருணையாசீர் வழங்கப்பட்டது. சமய வேறுபாடின்றி புத்த, இந்து கிறிஸ்தவப் பிள்ளைகள் இயேசுவின் பாதத்தில் தாயாரின் விழா வாழ்த்துக்கள் கூறினர். இவற்றினால் மிகவும் களைப்படைந்தாலும் இவர்களுடன் தொடர்பை ஏற்படுத்த இது ஓர் சந்தர்ப்பமாக இருந்தது.

ஆனி 2ம் திகதி வென்னப்புவா சென்றேன். அங்கு எம் சகோதரிகள் பரீட்சைக்கு ஆயத்தம் செய்தனர். 226 பிள்ளைகளுக்குப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்வது கூடிய வேலை என்ற படியால் நான் அங்கு சென்றது உதவியாகவிருந்தது. அவர்கள் என்னைப் பாராட்டினார்கள். நல்ல இறைவனும் இவர்கள் முயற்சிக்குப் பலனளித்தார். கத்தோலிக்க மத ஆர்வத்தால் இவர்கள் இதனைச் செய்தனர். அரச புரட்டஸ்தாந் அதிகாரியும் இவர்களின் சித்தியைப் புகழ்ந்தார்.

ஆனி 12ல் குருநாகலில் நற்கருணை விழா வெளிப்படையாகக் கொண்டாடப் பட்டது. பவனி எம் வீதியினால் சென்றது.. அங்கு பல இந்துக்கள் உள்ளனர். இயேசு இவர்களுக்கு நீதியின் கதிரவனின் ஒளியைக் கொடுப்பாராக. இங்கிலாந்து அரசியின் 50வது முடிசூட்டு விழாவிற்கு ஆயத்தம் செய்வது கண்டு எம் சகோதரிகள் ஆச்சரியப்பட்டனர். எம் அநாதை இல்லத்தைப் பார்த்து அங்கு மதிய உணவுகசு ஆயத்தம் செய்ய விரும்பினர். நாம் அதற்கு இடமளிக்கவில்லை. அவர்கள் அதனை ஏற்றனர். ஆனி 28ல் எமது விறாந்தையில் ஒளியேற்றினோம். பின்பு 3 மணிகள் ஒலித்தன. மறுநாள் விற்றோறியா அரசியின் கருத்துக்காகப் பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதேவேளை கத்தோலிக்கர், புரட்டஸ்தாந் மக்கள், புத்த மதத்தவர், முஸ்லிம், இந்து மக்களும் தம்தம் இடங்களில் அவவின் கருத்துக்காகப் பிரார்த்தனை செய்தனர்.

நகரில் அலங்கார வளைவுகள் தென்னோலையால் செய்யப்பட்டிருந்தன. யானைப்பவனி மாலையில் நடைபெற்றது. பிள்ளைகள் மகிழ்ந்தனர். ஒரு நல்ல கத்தோலிக்கன் தன் வீட்டை அவர்களுக்குக் கொடுத்தான். 6 யானைகள் அலங்கரிக்கப்பட்டு யானைப்பாகன்மார் அலங்கார உடையுடன் செல்ல அவர்களைப் பின் தொடர்ந்து சனத்திரள், நடனமாடுவோர், இசைக்கருவிகள் இசைப்போர் சத்தத்துடன் சென்றனர். இறுதியில் புத்த மக்கள் சென்றனர். அவர்களுக்கு யானையில் ஒரு மதிப்பு. விசேடமாக காதில் சாம்பல் நிறமுள்ள வெள்ளை யானையை நன்கு மதிப்பர். இறுதியில் யானையின் நிகழ்ச்சியும் இடம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாதி 1887

என் நல்ல தாயாரே, எனது சென்ற அறிக்கையில் புரட்டஸ்தாந் போதகரால் எமக்கேற்படும் போராட்டங்கள் பற்றி எழுதியிருந்தேன். அது மேலும் கூடிக்கொண்டே செல்கிறது. 2 இளம்பிள்ளைகள் சிறு வயதிலிருந்தே எம் பாடசாலையில் கற்று வந்தார்கள். இவர்களின் தாய் தன் கணவனின் உத்தரவுடன் தன் 8 பிள்ளைகளுக்கும் திருமுழுக்குக் கொடுத்துக் கிறிஸ்தவ முறையில் வழிநடாத்தினாள். திடீரெனத் தந்தை இறந்தார். எமது மிஷனறிக் குருக்கள் அவளில் அக்கறை காட்டினாலும் புரட்டஸ்தாந் போதகரும் வந்து சென்றார். வறுமையினால் துன்புற்ற தாய், தன் ஒரு மகனை அவர்களின் பாடசாலைக்கு அனுப்பினார். அத்துடன் தானும் அப்பிழையான பாதையில் செல்லத் தொடங்கினாள். எம்முடன் இருந்த பிள்ளைகளையும் தன்னுடன் எடுத்தாள். எம்முடன் அந்தப் பிள்ளைகள் நன்றாக இருந்தனர். மேலும் 4 பிள்ளைகள் சென்று விட்டனர். அத்துடன் பல ஐரோப்பியர், சிங்களவர் குடும்பங்களும் இந்த வழியைப் பின்பற்றுகின்றனர்.

2 ஐரோப்பிய பிள்ளைகள் எம் மடத்திற்கு வந்து பியானோ, பிரான்சிய பாஷை கற்றுச் சென்றனர். 2 மாதத்திற்கு முன் அவர்கள் தாய் இனிமேல் வரமாட்டார்கள் எனக் கூறிச் சென்றார். உண்மையில் போதகர் அவர்களை மாற்றி வ்ட்டார். இங்கிலாந்திலிருந்து ஒரு ஆசிரியர் இசைக்கருவிகளுடன் வந்து சேர்ந்தார். எனவே மடத்திலிருந்து பிரித்து விட்டனர். எனவே நல்ல தாயாரே எமக்காகச் செபிக்கவும். இப்போராட்டம் எம் சக்தியை மிஞ்சிவிடாது இருக்கச் செபிக்கவும். எனினும் நம்பிக்கையுடன் உள்ளோம்.

ஆடி மாதத்தில் இலங்கைப் பாதுகாவலி புனித ஆனாளின் திருவிழாவைக் கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாது பிற மதத்தினரும் கொண்டாடுகின்றனர். 2,3 மைல் கடந்து இவர்கள் மடு செல்கின்றனர். அப்போது குருநாகலில் தங்கிச் செல்வர். எம் ஆலயத்திலும் சிறிய புனித ஆனாள் சுரூபம் ஒன்று உண்டு. " ஒருநாள் மாலை எம் குரு, வெளிச்சம் இல்லாது ஒரு ஆங்கில வகுப்புக்குச் சென்ற போது சனத்திரளில் முட்டிய போது சிலர் கீழே விழுந்தனர். உடனே அவர்கள் கள்வன் என நினைத்துப் பாடம் புகட்ட நினைத்த போது குரு பேசத் தொடங்கினார். ஏழை மக்கள் அவரைப் புரிந்து கொண்டனர்"என்ற ஒரு கதை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி 26ல் புனித ஆனாளின் திருவிழா, 9 நாள் நவநாட்களுடன் கொண்டாடப்படும். திருவிழாவுக்கு முதல் நாள், மாலை வழிபாடு ஆடம்பரமாக இருக்கும். திருவிழாத் திருப்பலிக்குப் பல மைல் தூரத்திலிருந்து மக்கள் வருவார்கள். மாலையில் நற்கருணைப் பவனி நடைபெறும். ஒரு தாய் தன் மகனுக்கு விசேட அருள் வேண்டிச் செபித்தாள். அவன் திருமணம் வரை தாடி வளர்ப்பான் என்றும் பின்பு கோவிலில் கொண்டுவந்து வெட்டுவதாகவும் வாக்களித்தாள். இதற்கு இளைஞனும் சம்மதித்தான். புனித ஆனாள் மீதிருந்த பக்தியினால் முடி வெட்டுபவனைக் கோவிலுக்கு அழைத்தாள். அது திருமணத்திற்கு முதல் நாளாகவும் இருந்தது. அன்று புனித ஆனாளின் திருவிழா. வழிபாட்டில் இவ்வாறான வழக்கம் கிடையாது. இந்த விடயத்தைக் குரு அறிந்தார்.

எம் அநாதையில்லத்திலிருந்து இந்த மாதத்தில் ஒரு பிள்ளை மீளவும் சென்று விட்டாள். 9 வயதுடைய அலிஸ் எனும் சிறுமி நோயுற்றிருந்த படியால் தாய் வந்து அழைத்துச் சென்று குணமாக்க விரும்பினாள். வழமையான அறிவுறுத்தலின்படி அனுப்பி வைத்தேன். பரீட்சை நெருங்கியது. அவளைக் காணவில்லை. எனவே பெற்றோருக்கு எழுதினேன். இங்கிருந்து செல்லும் போது சிறுமி தாய்க்குக் கூறியது. "அப்பா உங்களைப் பேசும்போது நீங்கள் பதிலிறுக்க வேண்டாம், அப்போது சமாதானமாக இருப்பீர்கள்." இது எமக்கு உண்மையை வெளிப்படுத்தியது. இவள் வரமாட்டாள் என நம்புகின்றோம். 8 வயதுப்பிள்ளை, யுசேபியா ஆனி மாதத்தில் சுவாச நோயினால் துன்புற்றாள். ஒப்பரவு அருட்சாதனம் தனக்குத் தேவையென்று சொல்லிப் பெற்றாள். நோயில் பூசுதல் அருட்சாதனமும் கொடுக்கப்பட்டது. குருவுக்கு நன்றி கூறினாள். அத்துடன் சிறிது உடல் நலம் பெற்றாள். ஆனால் மீளவும் நோய் தாக்குகின்றது.

2 வருடங்களாக அநாதைப்பிள்ளைகள் தொகை கூடி வருகின்றது. பணவசதி இல்லாதபடியால் கூடப்பிள்ளைகளைச் சேர்க்க முடியாதுள்ளது. இப்பிள்ளைகள் நல்லவர்கள். ஆசிரியர் இவர்களைப் பார்த்தவுடன் விளங்கி விடுவார்கள். சுறுசுறுப்பாக இருப்பார்கள். அல்லது தம் இஷ்டத்திற்குச் சென்று சோம்பியிருப்பர். தற்போது சிறிய வேலை செய்ய விரும்புகின்றனர். வகுப்புக்கு முன்னும் பின்னும் சிறிய மரத்தோட்டம் செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதி 1ந் திகதி வென்னப்புவா சென்றேன். ஒரு வண்டி புகையிரத நிலையத்தில் எனக்காகக் காத்து நின்றது. ஆனால் புகையிரதம் வரவில்லை. அதே வேளை நீராவியந்திரம் என் பொதிகளைக் கொழும்புக்கு எடுத்துச் சென்று விட்டது. 30 மைல்கள் கடக்க வேண்டும். பொதி ஒன்றுமில்லாதிருந்த வேளையில் புகையிரத நிலையத் தலைவர் மரியாதையுடன் நல்ல கிறிஸ்தவன் போன்று தங்குமிடம் தந்தார். மறுநாள் நான் அனுப்பிய பொதிகள் வந்தன. நான் பசி, களைப்புடன் சென்று வென்னப்புவா மடத்தை அடைந்தேன். மெதுவாக என் உடல் நலமடைந்தது. அங்கு ஒரு மூத்த இராயப்பர் சபைச் சகோதரி மார்பு நோயினால் துன்புற்று அனுப்பப்பட்டிருந்தா. குருநாகல் தாதி அவவுக்குப் பணிவிடை செய்தா. சகோதரி மாறி பெனடிக்ற் அநாதையில்லத்தில் தியாக உள்ளத்துடன் பணி புரிந்தவ, இவவை இழப்பது எமக்குக் கவலை தருகின்றது. என்றும் இறைவன் போற்றப்படுவாராக. எப்போதும் அவர் சித்தம் எல்லா இடங்களிலும் நடைபெறுவதாக.

ஐப்பசி 2ல் குருநாகலையில் பாடசாலைப் பரீட்சைகள் ஆரம்பமாகின. புதிய பாடசாலை அதிகாரியின் வருகை: பிள்ளைகள், ஆசிரியர்கள் மத்தியில் பயத்தை உண்டாக்கின. இறைவனில் நம்பிக்கையுடன் இருந்தனர். அது அவர்களைக் கைவிடவில்லை. ஒரு போடிங் பிள்ளைக்கு முதற் கேள்வி கேட்டபோது அது விளங்கவில்லை. உடனே தன் உள்ளத்தை இறைவன் பக்கம் திருப்பிய போது ஞாபகம் வந்தது. எனவே அமைதியுடன் பதிலிறுத்தாள். எனவே பல இடையூறுகள் மத்தியிலும் சித்திகள் இருப்பதாக டினோ (Dinaux) குருவுக்குப் பாராட்டுக் கடிதம் கிடைத்தது.

சிறிது நாட்களின் பின் எம் அநாதைப் பிள்ளைகளும், சிங்கள கலவன் பாடசாலைப் பிள்ளைகளும் எமக்குச் சாட்சி பகர்ந்தனர். 116 பிள்ளைகள் பரீட்சை அதிகாரி முன் சென்று 10 பேர் மட்டுமே சித்தி அடையவில்லை. நாம் வெளிப் பிள்ளைகளின் குடும்பங்களுக்குச் சென்று பாடசாலைக்கு நேரத்திற்கு அனுப்பும்படி கேட்டிருந்தோம். அந்த முயற்சி பயனளித்தது.

கண்டியினத்தைச் சேர்ந்த வெபுறோணி( Febronie) பற்றி எழுதியிருந்தேன். அநாதையில்லத்தில் இருக்கின்றாள். படிப்பிப்பதற்குத் தகுதி பெற்றிருக்கின்றாள். தாய் அவளின் உடல் நிலையைக் கூறிச் சுகப்படுத்த அழைத்துச் செல்ல விரும்புகின்றாள். எனவே 5 வருட போடிங் பணத்தைச் செலுத்தி அழைத்துச் செல்லும்படி கூறினேன். அவர்கள் வசதியானவர்கள். மகள், பெற்றோரின் மனமாற்றத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்தாள். "இப்போது நீர் இறந்தால் எங்கு செல்வீர்" எனத் தந்தையைக் கேட்டாள். அப்பொழுது அவர் "எங்கே செல்வேன்?" எனத் திரும்பக் கேட்டார். நீர் நரகத்திற்குச் செல்வீர். கத்தோலிக்கனாக மாறிவிடவேண்டும். புத்தனாக இறந்தால் நீர் விண்ணகத்தைக் காணமாட்டீர் என்றாள். அப்போது ஒரு கிறிஸ்தவன் அவர்களுடன் கதைத்தான். தந்தை அவனிடம் "நான் என்ன செய்வது?, மடத்திற்குத் தூரவுள்ளோம். செபம் படிப்பிப்பதற்கு உதவி செய்ய ஒருவரும் இல்லை" என்றான். அறுவடையோ மிகுதி. ஊழியர்கள் குறைவு. எம் பிள்ளைகள் ஒருகாலத்தில் தம் குடும்பங்களின் அப்போஸ்தலர்களாக மாறி இறையரசைப் பரப்ப உதவி புரிவார்கள் என நம்புகின்றோம். புனித தந்தை 13ம் சிங்கராயரின் யூபிலி ஆடம்பரமாக நடைபெற்றது. காலையில் ஆடம்பரத் திருப்பலியின் பின் நன்றிக் கீதம் (te Deum ) பாடப்பட்டது. மாலையில் நற்கருணையாசீர் சனத்திரள் மத்தியில் நடைபெற்றது. திருநாளுக்கு முதல்நாள் மாலை பீரங்கி வெடிகள் கேட்டன. அதிகாலையிலும் தொடர்ந்து கேட்டன. கோவிலில் இருந்து மடம் வரை தெரு வீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பெரும் மழை பெய்து எல்லாவற்றையும் இல்லாதொழிக்கப் பார்த்தது. மதிய வேளை திடீரென சூரியனின் ஒளிக்கீற்று மேகங்களினூடாக வந்து நம்பிக்கை தந்தது. நீல வானம் மனதுக்கு இரம்மியம் அளித்தது. இரவு சாயும் வேளை ஆளுனர், குருநாகல் ஐரோப்பியர் ஒன்று கூடி வாணவேடிக்கையில் பங்குபற்றிப் பக்தியுள்ள இந்த நாளை முடித்தனர். பாப்புவின் பக்தர்களுக்கும் இந்த ஞாபகம் பதிந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆனி 1898)

என் நல்ல தாயாரே!

வருடத் தொடக்கத்தில் ஒன்றும் விசேடமாக நடக்கவில்லை. எம் அன்றாட பணித் தியாகங்களை இறைவன் ஆசீர்வதிக்கின்றார். வைத்தியசாலை நோயாளிகள் சந்திப்பு எம் சுதேச சகோதரிகளுக்கு ஆறுதல் அளித்தும், சில திருமுழுக்கும் இடம் பெற்று வருகின்றன.

குருநாகல் சனத்தொகையில் பலர் புரட்டஸ்தாந்து மதம், என்றாலும் எம் மடத்தில் பற்றுள்ளவர்களாக உள்ளனர். விற்பனை நேரத்தில் தாராள உள்ளத்துடன் எம் அழைப்புக்குச் செவிமடுத்து வந்து பணம் தருகின்றனர். இலங்கை ஆளுனரின் மனைவி ஐரோப்பா சென்றபோது மக்கள் ஒரு விருந்து வைத்தனர். விருந்தின்போது அதிக உணவு மேசையில் மீதியாக இருந்தன. அதனை எம் அநாதைப் பிள்ளைகளுக்குக் கொடுத்தனர்.

தை 16ல் எம் வகுப்புகள் ஆரம்பமாயின. புசல்லாவா எனுமிடத்தில் ஓய்வு எடுத்துத் தியானமும் செய்தோம். மசியே (Massiet) எனும் குருவின் வழிகாட்டலில் எம் பணிகள் அப்போஸ்தலிக்கத் துறவிகளின் அழைத்தலுக்கேற்றதாக இருக்க எம் உள்ளத்தில் ஓர் ஆவல் ஏற்பட்டது. தை 22ல் வென்னப்புவா சென்றேன். அங்கு சகோதரி சென்ற் பெனடிக்றின் நிலைமை கவலைக்கிடமாக இருந்தது. மெலிசான் ஆயர் ஒரு வருடத்தின் பின்பு ஐரோப்பாவிலிருந்து திரும்ப வந்தார். உடல் நலமின்றி இருந்தார். குருக்களின் பணிப்புரையினால் சில கிழமைகள் புசல்லாவா என்னுமிடத்தில் ஓய்வு எடுக்கச் சம்மதித்தார். நாம் அவருக்காகச் செபித்தோம்.

பங்குனி 6ல், மாலை 7 மணியளவில் குருநாகலுக்கு ஆயர் வந்தார். ஒரு வருடத்தின் பின்பு எம் தலைவிகளைப் பற்றிக் கேட்டறிந்தோம். அப்போது சிமித் குரு மரண வேதனையில் இருந்ததால் ஆயர் யாழ் சென்றுவிட்டார். எனினும் 3நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்றன.

1. ஒரு ஐரோப்பிய சகோதரியின் நித்திய வாக்குத்தத்தம்
2. இரு சுதேச சகோதரிகளின் முதல் வாக்குத்தத்தம்
3. ஒரு இராயப்பர் சபை ஆயத்த கன்னிகை உடுப்புப் பெறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்" என்ற வார்த்தைக்கிணங்க அவர்கள் கிறிஸ்தவ வாழ்விற்கும், அதற்கு மேலாக அழைத்தல் வாழ்வுக்கும் தெரியப்பட்டார்கள். நீல வானில் மழை மேகம் தோன்றியதால் எம் சிற்றாலயத்தில் வழிபாடு நடக்கவில்லை.

லூக் (LucK) என்பவர் மக்கள் சார்பாக ஆயருக்கு உரையாற்றினார். அநாதையில்ல மண்டபத்தில் 115 சிறுமிகள் இருந்தனர். அதில் 50பேர் அநாதைப் பிள்ளைகள். இவர்களுடைய அழகான தோற்றம், தொகை என்பன ஆயருக்கு மகிழ்ச்சி அளித்தது. எம் கோவில் பற்றிக் கூற விரும்புகின்றேன். கடும் மழையினால் கூரை சேதமடைந்திருந்தது.. எனவே ஆயர் அதில் திருப்பலி நிறைவேற்ற விரும்பவில்லை. எமது வறுமையும் அதிக செலவை ஈடுசெய்ய முடியவில்லை. என்றாலும் இறைமகிமைக்காகவும், கோவில் மதிப்புக்காகவும் வேலையைத் தொடங்கினோம். உள்நாட்டு மேசன்மாரைக் கூப்பிடாது கொழும்பிலிருந்து ஆட்களை எடுப்பித்தோம். பொஞ்சின் ஆயர், ராமெனுட் குருவின் உதவியுடன் ஆட்களைத் தெரிவு செய்தார். மடத்து முற்றம் எல்லாம் பொருட்கள் நிரம்பின. எல்லோரும் உதவிக்கு வந்தனர். ஒரு சிறுமி தன் நண்பிகளிடம் எவ்வளவு பணம் எமக்கு அன்றாடம் தருவார்கள்? எனக் கேட்டாள். அதற்கு எல்லாரும் "எங்கள் தாயாரிடம் பணம் கேட்க முடியுமா?...... அவதானே எமக்கு உணவும், உடையும் தருகின்றா....." என்றனர். அதற்கு அவள் தான் நகைச் சுவையாகக் கூறியதாகச் சொன்னாள்.

எம் கோவிலை அழகுற வைத்திருப்பதற்குப் பல பொருட்கள் குறைவுபடுகின்றன. ஒரு பழைய மாணவி போடிங்கிலிருந்து தன் குடும்பத்திற்குச் சென்ற பின் தன் மடத்தை மறவாது திருஇருதய சுரூபத்திற்கு ஒரு முடி வைத்தாள். பின்பு கருங்காலி மரத்தாலான ஒரு மேசை தருவதாகக் கூறியுள்ளாள். இறைவன் இவள் தாராள உள்ளத்தை ஆசீர்வதிப்பாராக. பல அநாதைப் பிள்ளைகள் பாஸ்கு விழா கொண்டாட எம்முடன் வந்தனர். இவர்கள் ஆன்மீகத்தைக் காப்பாற்ற இவை தேவையாக உள்ளன. இசபெல் எனும் பெண், ஒரு கிறிஸ்தவனைத் திருமணம் செய்துள்ளாள். அவன் தன் வேலையின் பயனாக நன்கு வசதியுடன் வாழ்வதே காரணமாகும். இதில் அவள் நிலைத்திருப்பாளா?

இவ்வாறான சம்பவங்களுடன் வேறு சம்பவங்களையும் இறைவன் எமக்குத் தருகின்றார். ஒரு ஞாயிறு வழிபாட்டின் பின்பு 4ஐரோப்பிய சகோதரிகள் கால் நடையாக ஒரு சுற்றுலா மேற்கொண்டனர். இரண்டு, இரண்டு ஆக ஒரு குறிப்பிட்ட தூரத்தில் நடந்து செல்லும்போது ஒரு காட்டெருமை வந்தது. இவர்கள் உடையைக் கண்டு பயந்து கயிற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுக்கப் பார்த்தது. திரும்பி வந்தபோது வேறொரு எருமை நின்றது. தேவாதீனமாக ஒரு நல்ல சிங்களவன் வந்து இரு எருமையின் கண்களைக் கட்டி இவர்களைப் பாதுகாப்பாகப் போகவிட்டான். இதையிட்டு நாம் சிரித்தோம்.

ஒருநாள் மாலை சகோதரி மாறி டெ ல நற்றிவிற்றி லூர்து மாதா கெபியில் முழங்காலில் இருந்து செபித்துக் கொண்டிருந்தா. அப்போது ஒரு பாம்பு கற்களுக்கிடையில் காணப்பட்டது. உடனே அவ பயந்து ஆட்களைக் கூப்பிட்டா. அத்துடன் வேறு பல பாம்புகள் குகையின் மேற்பகுதியிலும் காணப்பட்டன. பெரிய பாம்புகளை அடிக்கும்போது இவை மயங்கின. சகல வரப்பிரசாத மாதா எம்மைக் காப்பாற்றி வருகின்றா. குருநாகல் அறிக்கை ஆனி மாதத்துடன் முடிவடைகின்றது. 1888, 2ம் ஆறு மாத அறிகையில் ஒரு மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது. சுதேச கன்னியர் வென்னப்புவா செல்லுகின்றனர். அங்கு சிங்கள இராயப்பர் சபைப் பகுதியில் இருப்பார்கள். மெலிசான் ஆயர் அனுமதியுடன், செலஸ்ற் மார்சல் தாயார் மேற்பார்வையில் இவர்கள் இருப்பார்கள். எம் சகோதரிகளின் முயற்சியால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. இறைவன் மட்டும் எம் தியாகங்களை அறிவார். இன்றிலிருந்து எம் சகோதரிகள், பொதுநிலையினர் செபத்தை நாம் நாடியுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நல்ல தாயாரே!

வருடத் தொடக்கத்தில் மரணம் பல அநாதைச் சிறுமிகளை அழைத்துச் சென்றது எமக்கு மிகவும் வேதனையை அளித்தது. எனினும் விசுவாசத்தால் ஊட்டம் பெற்றுள்ளோம். இங்கு மலர இருந்த பூக்களை தெய்வீக விவசாயி எடுத்துச் சென்று தனது தோட்டத்தில் வைத்துள்ளார். அங்கு எரிக்கும் வெயிலுக்கும் அழிக்கும் பூச்சிகளுக்கும் அஞ்சத் தேவையில்லை. ''பரலோக பிள்ளைகள்'' என்று கூறும் போது அவர்கள் எமக்காக இறைவனிடம் பரிந்து பேசுவர். என்னும் எண்ணம் எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

3 நாள் காய்ச்சல் (குருநாகல் காய்ச்சல் என்றும் கூறுவர்) வந்தால் அது கல்லறைக்கே இட்டுச் செல்லும் எனவே ஒரு சிறுமிக்கு மருத்தவரின் ஆலோசனைப்படி திருவிருந்து, நோயில்பூசுதல் கொடுக்க ஆயத்தம் செய்தோம். இதே காய்ச்சல் எம் வகுப்பிலும் பரவி தைமாத இறுதியில் ஏழை மாணவர் பலரைக் கொண்டு சென்று விட்டது. இந்த அறுவடை எமக்கு மிகுந்த துயரத்தைக் கொடுத்தது. யூசேபியா என்னும் ஓர் அநாதைச் சிறுமி 2 வருடங்களாக நோயினால் துன்புற்றாள். தன் இறுதி நேரம் வந்ததை உணர்ந்து ஒப்புரவு அருட்சாதனம் பெற்றுக் கொள்ள விரும்பினாள். 8 வயது எனவே திருவிருந்துக்கும் குருவானவர் சம்மதித்தார். திருவிருந்தை வாயில் வைத்ததும் அவளின் நண்பிகள் அவளின் நன்றியுடன் தங்கள் புகழ்ச்சிகளையும் சேர்த்தனர். பின்பு கடைசி நேரம் நெருங்கியதால் நோயில் பூசுதலும் அருளப்பட்டது. எனினும் 3 கிழமைகள் உயிர் வாழ்ந்தாள். இந்நாட்களில் வேதனையைத் தாங்க நற்கருணை மூலம் சக்தி பெற்றாள். பின்பு என்னுடன் கதைக்க விரும்பியதால் அங்கு சென்றேன். தன் பிழைகளை மன்னிக்கும்படியும், செய்த நன்மைகளுக்கு நன்றியும் கூறித் தனக்காகச் செபிக்கும்படியும்,உத்தரிப்புஸ்தலத்தில் அதிகநாள் இருக்காது மன்றாடும்படியும் கேட்டாள். தன்னை வந்து சந்திக்கும்படி ஒவ்வொருவரையும் கேட்டாள். விண்ணகத்தில் தான் ஒருவரையும் மறக்கமாட்டேன் என்றாள். ஒரு நாள் எம் தலைவிகள் பற்றி அவளிடம் கூறினேன். அவர்கள் இலங்கைக்குச் சகோதரிகளை அனுப்பிவிட்டால் இயேசுவை அறியாது இறப்பீர்கள் என்றேன். அதற்கு இது ''உண்மை'' என்றும் எல்லோருக்காகவும் தான் செபிப்பதாகவும் கூறினாள். பின்பு மகிழ்வுடன் இறைவனிடம் போகிறீரா? அல்லது வேறு துன்பங்கள் உண்டா? எனக் கேட்டதற்கு தனக்கு 2 துன்பங்கள் உண்டென்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று தன்னால் செபிக்க முடியவில்லையெனவும, தனது தந்தை இன்னும் கத்தோலிக்கனாகவில்லை எனவும் கூறினாள். மரணிக்கப் போகும் மகளின் நிலை சிலவேளைகளில் தந்தையின் இதயத்தைத் தொடலாம் என நம்பி தந்தையை அழைத்து வரக்கூறினேன். அவன் புத்த மதத்தினன். அவன் வந்ததும் யூசேபியா ''பப்பா'' நீங்கள் கத்தோலிக்கனாக வரவேண்டும். நீங்கள் கிறீஸ்தவனானால் நான் மகிழ்வுடன் மரிப்பேன் என்றாள். 2 நாட்களாக அவள் கேட்டும் தந்தை மனம் இரங்கவில்லை. கண்காய்ந்து, வாய் பேசாது அவ்விடத்தை விட்டு அகன்று விட்டான். இதனால் மகள் மனமுடைந்து போனாள். எனவே அவளை ஆறுதல்படுத்தி நீர் பரலோகத்தில் இருக்கும்போது தந்தையின் மனமாற்றத்திற்கு உதவலாம் என்றேன். அத்துடன் யூசோபியா அமைதியாகக் கண்ணை மூடினாள். எமது சிறுமிகளும் நல்ல ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டனர். அருளைப் பெற்றுத்தரும் ஒரு தருணத்தில் சேர்ந்திருப்பதை உணர்ந்தனர். தற்போது அவளின் இடத்திற்கு ஒரு வயதுடைய ''யூசேபியா'' வந்திருக்கிறாள்.

ஒரு மறைத்தூதர் 2 ரூபாவுக்கு இந்தப் பிள்ளையை வாங்கித் திருமுழுக்குக் கொடுத்து ஒரு கிறீஸ்தவளிடம் ஒப்படைத்தார். அவளிடம் அன்பில்லாதபடியால் மீளப் பெற்று எம்மிடம் கொண்டு வந்தார். ஒரு ஆன்மாவை மீட்பதற்காக ஏற்றுக் கொண்டோம். ஒரு கண் மட்டுமே பார்வையுடையவள். தெய்வீக அருள் கிடைக்க விரும்புகிறோம்.

பங்குனி மாதத்திலும் புனித. சூசையப்பர் இவ்வாறான ஒரு குடும்பத்து 4 சிறுமிகளை அழைத்து வந்தார். தாய் இல்லை தகப்பன் கத்தோலிக்கன். மடத்தில் இருந்து பலமைல் தூரத்தில் இருப்பவர். இவர்களை அழைத்து வந்தார். ஒருவர் சிறிதளவு நன்கொடை அளிக்க முன் வந்தார். அது ஒரு பிள்ளைக்கே போதுமானது. எனவே அனபுள்ளம் கொண்ட ஒரு பிரான்சியர் அளித்த ஒரு ஓவியத்தை லொத்தருக்கு விற்றேன். தேவபராமரிப்பின் மூலம் 2 மடங்கு பெறுமதி கிடைத்தது. இவ்வாறு அங்கு தேவையற்ற பொருட்கள் எனக்கருதுபவை எம் பணிக்கு உதவுகின்றன.

ஒரு மாதத்தின் பின் 8 வயதுடைய ஓர் அநாதை சிறுமி மடத்தின் வேலைகள் கஷ்டமாக இருந்ததால் மடத்தை விட்டு வெளியேறவிரும்பினாள். ஒரு நாள் மாலை நேரம் மடத்தை விட்டு வெளியேறி அருகேயுள்ள தன் சகோதரியின் வீட்டைத் தட்டினாள். இரவு நேரம், அவள் வருகையினால் சகோதரி சந்தேகமுற்று அவளை வீட்டில் ஏற்காது என்னிடம் மன்னிப்புக் கேட்கும்படி அனுப்பிவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளும் திரும்பவும் வந்து பணிவுள்ள பிள்ளையாக இருக்கிறாள். குருநாகல் கிராமத்தில் பல பதிதர், கடவுளை நம்ப மறுப்போர் இருக்கிறார்கள். பலவீனமான கிறீஸ்தவர்களும் இருக்கிறார்கள். எனவே எதிர்காலம் நம்பிக்கையற்றது. அத்துடன் அவர்கள் தூரச் செல்லும் போது நாம் அவர்களைச் சந்திக் முடியாமல் இருக்கின்றது.

அவர்களின் விசுவாசத்தைத் தட்டியெழுப்ப வெளிஆடம்பரங்கள் தேவையாகவுள்ளது. ஆனிமாதத்தில் அகில கத்தோலிக்க திருச்சபையுடன் திருஇருதய ஆண்டவரின் காட்சியின் 200ம் அண்டு விழாவை ஆடம்பரமாகக் கொண்டாடினோம். ஆலயத்தை அலங்கரித்து நவநாள் செய்தோம். திருப்பலியில் பல இளைஞர்கள் பங்குபற்றிப் பாடினார்கள். திருவிழாவன்று எம் ஆலயத்தில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது. எமது சிறுமிகள் சிவப்புப்பட்டி அணிந்து திருஇருதய உத்தரியம் அணிந்திருந்தனர். மாலை வழிபாடு முடிய நற்கருணைப் பவனி எம் தோட்டத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை நினைவுகூரும் முகமாக ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் எழுதிய இயேசுவின் வார்த்தைகள் பங்குபற்றியோருக்குக் கொடுக்கப்பட்டது.

குருநாகல் ஆஸ்பத்திரிக்கு எம் சகோதரிகள் ஒரு கிழமையில் 3 முறை சென்று வருகின்றனர். ஏழைகளுக்குத் திருமுழுக்குக் கொடுக்கின்றனர். ஒருநாள் இறக்கும் தருவாயில் இருந்த ஒருவரை அண்மித்து எமது சமயத்திற்கு வரவிருப்பமா? என எம் சகோதரிகள் கேட்டதற்குத் தான் விரும்புகின்றேன் எனவும்,'பாக்கு வெற்றிலை' வாங்குவதற்குப் பணம் தரும்படியும் கேட்டான். சகோதரிகள் பணம் இல்லை எனப் பாட்டியிடம் கேள் என்றனர். மறுநாள் அவன் கேட்ட பணத்தை அவனது ஆன்மாவை மீட்பதற்காகக் கொடுத்தனர்.

இவற்றின் மத்தியில் இறைவன் பல நன்மைகளும் எமக்குச் செய்துள்ளார். தை மாதம் 1ந் திகதி எம் வருடாந்த ஞானொடுக்கம் செய்தோம். அருட்தந்தை லோன்ஸ் (Lons) எம் கடமைகள் பற்றிக் கூறினார். இறுதி நாளில் ஒரு சகோதரி நித்திய வாக்குத்தத்தம் செய்தா.

வைகாசி மாதத்தில் மெலிசான் ஆயரின் சந்திப்பு எமக்கு மகிழ்ச்சி அளித்தது. மறுநாள் புதிய சகோதரிகளின் வருகையும் 2 சகோதரிகள் யாழ் சென்றதும் இடம் பெற்றது. வருட முடிவில் ஆயர் 'புசல்லாவைக்கு' வந்து எமக்கு ஆசீர் அளித்துச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நல்ல தாயாரே,

உங்கள் இலங்கைப் பெண்கள், தேவபராமரிப்பின் பிள்ளைகள் தமது பணியைச் செய்வதற்கு என்றும் அருளைப் பெறறு வருகிறார்கள். நம் உடற் சக்தி வெயிலின் அகோரத்தாலும், நாளின் சுமையாலும் பலவீனமடையும் போது ஆண்டின் முடிவிலே ''புசல்லாவை'' என்னும் இடம் நமக்கு நல்ல ஓய்வைத் தருகின்றது.அதேவேளையில் எம் ஆன்மநலனுக்கு தை 2 - 8ம் திகதிகளில் அரட்தந்தை ''ருச்சே'' (Touchet) அவர்களின் வழிகாட்டலில் தியானமும் நடைபெற்றது.

அத்துடன் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் தியானம் நடைபெற்றது. சில பழைய அநாதைப் பிள்ளைகள் மணம் செய்து தம் கணவர், பிள்ளைகளுடன் இருக்கிறார்கள். இவர்களும் தியானத்தில் பங்குபற்றியதால் குழந்தைகள் தாயைப் பிரிய முடியாத நிலையில் அருட்தந்தை (Rou) றூவின் வார்த்தைகளுக்குச் செவிமடுக்க முடியாத நிலையும் இருந்தது. எனினும் ஆன்மாக்களை மீட்பதற்கு உதவி செய்தார். ஆதிக்கிறீஸ்தவர்கள் போன்று ஒற்றுமையாக மனமகிழ்வுடன் காணப்பட்டனர். பக்தி முயற்சிகளில் பங்கு பற்றினர். ஆண்கள் குரலெழுப்பிச் செபிக்கும் போது பெண்கள் தம் பிள்ளைகளுடன் பதில் சொன்னார்கள். இறுதியில் 3 திருமுழுக்கும் 20 முதல் நன்மையும் இடம்பெற்றது.

எமது சிற்றாலயம் புனரமைக்கப்பட்டதால் நற்கருணை எழுந்தேற்றம் செய்ய முடியவில்லை. வருடத்தில் 3முறை இந்த அருள் எமக்குக் கிடைக்கிறது. எனவே பங்குக் கோவிலில் திருப்பலி முடிய நற்கருணை எழுந்தேற்றம் செய்ய ஆயத்தப்படுத்தினோம். ஒரு திரைச்சீலையைப் பீடத்திற்குப் போட்டு விட்டு நற்கருணையை கோவிலின் பின்பக்கம் கொண்டு வந்து எல்லோரும் நிலத்தில் இருந்து மன்றாடினோம்.

மறுநாள் வருடாந்த விற்பனை ஆரம்பமானது. புரட்டஸ்தாந்து மக்கள் கத்தோலிக்கரிலும் பார்க்க வசதிபடைத்தவர்களாக இருப்பதால் எம் பணிக்குத் தாராள மனதுடன் உதவி புரிகின்றனர். பங்குனி மாதத்தில் புனித. சூசையப்பரின் பக்தி முயற்சிகள் செய்து 19ம் திகதி எம் நன்றிகளை அவருக்குத் தெரிவித்தோம். எனினும் 2 பிள்ளைகள் பிரிந்து சென்று விட்டனர்.

''மாட்டீனா'' என்ற பிள்ளை களவு, பொய் பேசுவதில் ஈடுபட்டிருந்தாள். விற்பனை காலத்தில் கடையைச் சுத்தம் செய்யும் போது 2 பொருட்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கொண்டாள். அவை பெரிய பெறுமதியானவை அல்ல. ஆயினும் ஓர் அநாதைப் பெண் 15 பிராங் என்று கூறிவிட்டாள். அவள் மடத்தை விட்டு விலகப்போகின்றாள் என அறிந்து நான் புத்திமதி கூறினேன்.

மடத்திற்கும் அநாதை இல்லத்திற்கும் இடையே உள்ள வழியில் தன் தாய், குடும்ப அங்கத்தவர்களை அவள் சந்தித்தாள். இவளுக்குத் திருமணம் செய்வதற்கு என்னைச் சந்திக்க வந்தனர். அவள் மடத்திற்கும் திரும்ப விரும்பவில்லை. இதை அறிந்த நான் ''றூ'' (Rouso) குருவானவரை உதவிக்குக் கேட்டேன். 3 கிழமைகளின் பின் திருமணம் நடைபெறவிருந்தது. ''மாட்டீனா'' தன் பிழையை உணர்ந்து கிறீஸ்தவளாக வாழ உறுதியளித்தாள்.

2 வது ''பார்பறா'' சிறுபிள்ளையாக இருந்த போதே எம்மிடம் ஒப்படைக்கப்பட்டாள். புத்தமதத்தில் திருமணம் செய்யப் பெற்றோர் விரும்பியதால் நான் வீட்டிற்கு அவளை அனுப்பவில்லை. தாய் சுகவீனமுற்று இருந்ததால் ஒரு நாள் அவள் சகோதாரன் அவளைக் கூட்டிச் செல்ல விரும்பினான். நாள் குறித்து அனுப்பி வைத்தேன். ஒரு கிழமையாகியும் திரும்பிவரவில்லை. தாய் சுகமுற்றதும் பிற மதத்தினனுக்கு மணம் செய்து வைக்க விரும்பினர். விசுவாசம் காப்பாற்றப்படுமா? எனவே செபித்தோம். ''இறைவா இந்த ஆன்மா உம்முடையது, உமது பெயரின் மகிமைக்காக அவளைக் காப்பாற்றியருளும்.''

அச் செபம் இயேசுவின் திருஇருதயத்தை தொட்டது. பார்பறா கத்தோலிக்கத்தில் நிலைத்திருந்தாள். திருமணத்தை எதிர்த்தாள். வீட்டில் இருந்தால் ஆபத்து என்று அநாதை இல்லத்திற்கே வந்து விட்டாள்.

இதற்கிடையில் ஆளுநர் எம் பாடசாலையிலும், சிறப்பாக எம் அநாதைப் பிள்ளைகளிலும் அதிக அக்கறை காட்டினார். தனது தோட்டத்தை நல்ல காற்றைச் சுவாசிக்க எமக்கு விட்டுக் கொடுத்தார். பரீட்சையிலும் நல்ல சித்தி கிடைத்தது. ஓர் அநாதைப்பிள்ளை மாணவ ஆசிரியர் (Pupil - Teacher) பதவிக்கு தெரிந்தெடுக்கப்பட்டார். இது எமக்கு மிகவும் மகிழ்ச்சி.

பாஸ்கு லீவின் போது எம் சுதேச சகோதரிகள் வென்னாப்புவா சகோதரிகளுடன் சேர்ந்து வருடாந்த தியானத்தைச் செய்தனர். வைகாசி மாதத்தில் குருநாகல் கத்தோலிக்க மக்கள் பரலோக இராக்கினியின் பீடத்தை அலங்கரிக்க எம்மைக் கேட்கின்றனர். எமக்கு இது அதிக வேலையை தந்தாலும் மாதாவின் மகிமைக்காகத் தினமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கரிப்போம். திருஇருதய மாதத்திலும் புரட்டஸ்தாந்து, கத்தோலிக்க மக்கள் எம் ஆலயத்திற்குத் திரளாக வருவார்கள்.

நற்கருணைத் திருவிழாவன்று இயேசு புதிய பீடத்திற்கு மாற்றப்பட்டார். சுதேச மக்கள் அலங்கரிக்கப்பட்ட பொருட்களினால் கவரப்பட்டனர், ``சகோதரிகள் மட்டும் இறைவனின் இல்லத்தை அலங்கரிக்கத் தெரிந்தவர்''களென மக்கள் கூறினர்.

இயேசுவின் திருஇருதய விழாவும் மிக ஆடம்பரமாகக் கொண்டாடப்படும். திருப்பலியின் பின்பு நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டுப் பவனியாக எடுத்துச் செல்லப்படும்.

ஆடி மாதத்தில் புனித. ஆனாள் திருவிழா குருநாகலில் சிறப்பாகக் கொண்டாடப்படும். ஏழை மக்களாக இருந்தாலும் 6 நாள்கள் நவநாள் செய்து சிறப்பாகக் கொண்டாடுவார்கள். 26ந் திகதி புனித. ஆனாளைப் பிரதிபலிக்கும் ஓர் ஓவியத்தையும் பூக்கள் நடுவில் வைத்தனர். வழிபாட்டின் போது அருட்தந்தை (Jean) ஜான் என்பவர் பியானோ வாசித்தார். அவர் முன்பு அமலோற்பவ குருக்களின் மாணவனாக இருந்து சபையில் சேர்ந்து குருவானவர். குருநாகலில் பிறந்து குருத்துவநிலைக்கு உயர்ந்துள்ளார். அவருடைய குடும்பத்தில் பலர் பிக்குகளாக உள்ளனர். எமது முயற்சிகள், ஆர்வம், குருவின் உதவியுடனும் சேர்ந்து மக்கள் எம் திருமறையை விரும்பச் செய்கின்றது. எல்லா நன்மைகளும் மேலிருந்து வருகின்றன என்பது எமக்குத் தெரியும்.

தேவபராமரிப்பின் பாதுகாப்பைக் குறிப்பிடாது என் கடிதத்தை நிறைவு செய்ய முடியாது. ஒரு நாள் மாலை நேரம் சகோதரி ``டோமினிக்'' அநாதைப் பிள்ளைகளின் உடுப்பறையில் வேலை செய்யும் போது மண்ணெண்ணெய் விளக்குத் தட்டுப்பட்டுத் தீப்பற்றி எரிந்தது. இதை அணைப்பதற்கு அருகே இருந்த நிலவிரிப்பை (Carpet) எடுத்துப் போடும் போது இன்னும் அதிகமாகி அவவின் உடையிலும் பற்றியது. முகத்தை விகாரமாக்கியது. எனவே அவகூக்குரலிட்டுச் சத்தமிட்டா. பக்கத்து அறையில் இருந்த அவவின் நண்பி உடனே படுக்கை விரிப்பினால் அவவை மூடிக்காப்பாற்றினா. ஓர் உயிர் தப்பியது. நெருப்பு பல பொருட்களை எரித்து விட்டது. பின்பு தீ அணைந்தது.

இறைவன் எம்மைக் காப்பாற்றினார். அவருக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்கிறோம். இத்துடன் என் அறிக்கையை நிறைவு செய்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்கழி 1891**

என் நல்ல தாயாரே,

எம் ஆண்டறிக்கைகள் புனித இராயப்பர் சபைச் சகோதரிகளின் வைத்தியசாலைப் பணிகள் பற்றியும், சமயப் பணிகள் பற்றியும் எடுத்து இயம்புகின்றன. இது ஐரோப்பிய சகோதரிகளுக்கு ஆறுதலாகவும் சுதேச சகோதரிகளை வழிநடத்தலில் இறைவன் உதவி செய்வதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

நோயாளிகளின் அறையில் சாத்தானுக்கெதிரான போராட்டம் நடைபெறும். ஒரு நாள் ஒரு நோயாளி படுக்கையில் மரண வேதனைப் பட்டுக் கொண்டிருந்தான். அப்போது ஒரு சுதேச சகோதரி இறைவனின் நாமத்தை அவன் காதில் சொல்லிக் கொண்டிருந்தா. நாம் முழந்தாளில் இருந்து செபித்தோம். அப்போது அவன் திருமுழுக்குப் பெறக் கேட்டான். சகோதரி ஸஸ்ரனிஸ்லாஸ் காய்ச்சலாக இருந்த நோயாளியின் தலையில் நீர் தெளித்துக் காப்பாற்றினா.

வேறொருவன் கால் வெட்டப்பட்டுத் துன்புற்றான். சுதேச சகோதரிகள் அவனைச் சந்தித்து ஆறுதல் கூறுவது அவர்களின் மென்னையான பணியாக இருந்தது. தன் துன்பங்கள் பற்றி முணுமுணுக்காது இறைஅன்புக்காக எல்லாவற்றையும் பொறுமையோடு ஏற்றுத் திருமுழுக்குப் பெற்றான். சகோதரிகளிடம் கற்றுக் கொண்ட செபங்களைச் சொல்லிக் கொண்டே இருப்பான். அவர்களைக் காணும் போது இயேசு மரியைப் பற்றித் தனக்குக் கூறும்படி கேட்பான்.

அதேவேளை புரட்டஸ்தாந்து சகோதரிகளை வைத்தியசாலையில் புகுத்தச் சிலர் திட்டமிட்டனர். சிலர் தேவதாயைப் பற்றித் தவறானவற்றைக் கூறியபோது ஒரு பெண் "உங்கள் தாயை நான் இழிவாகப் பேசினால் என்னை ஏசுவீர்கள். அதேபோன்று தேவதாய் எனது தாய், எனவே பல சம்பவங்கள் நடைபெற்றன. எனவே தான் வைத்தியசாலை நிர்வாகத்தை அரசு ஐரோப்பிய சகோதரிகளுக்கு வழங்கியது. புரட்டஸ்தாந்தரும் தாம் எடுக்கவிரும்பினர். நாம் எம் சுதேச சகோதரிகளுடன் சேர்ந்து பணிபுரிகிறோம். வைத்திய அதிகாரியும் எமக்குத் துணைபுரிகின்றார். ஆனால் நகர அதிகாரி எமக்கு எதிராக இருந்து எம் மடத்தை ஒதுக்குகிறார். புதிய ஆளுநர் வரவிருந்த போது மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்கக் காத்திருந்த போது ஒரு தகவல் எல்லாவற்றையும் முறியடித்தது. அவ்வேளை நான் திருமதி (Lady Have Lock) காவ் லொக் இடம் அவர் சந்திப்பை விரும்புவதாகத் தகவல் கொடுத்தேன். பல மன மாற்றங்களும் வைத்தியசாலையில் இடம் பெற்றன. பின்பு நேரடியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுநருக்குத் தகவல் கொடுத்த போது ''நாளை 11.30 மணிக்கு உங்கள் மடத்தில் நிற்பேன்'' எனப் பதில் கிடைத்தது. உடனடியாக இறுதிவரவேற்கும் ஆயத்தங்கள் நடைபெற்றன. குறித்த நேரத்தில் இங்கிலாந் அரசியின் பிரதிநிதி தன் செயலாளர், நகர அதிகாரி சகிதம் வந்து சேர்ந்தார். இவ்விடம்வராது போனால் நான் மன வருத்தப்படுவேன் என்றார். Sir. Have Lock ஆபிரிக்க சகோதரிகளை நன்கு அறிவார். நத்தாலில் (Natal) இருக்கும் போது சகோதரிகளின் பணிகளை நன்கு அறிவார். அதே போன்று எம்பணிகளையும் மெச்சினார். பின்பு குருநாகல் காலநிலை எம் சுகத்திற்கு ஏற்றதா? என விசாரித்தார்.

அநாதை இல்லத்தின் அலங்காரத்தைப் பார்த்து புன்னகை கொண்டார். பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும் கல்வியை நன்கு பயன்படுத்தும்படி தன் உரையில் கூறினார். அவ் வேளை நல்ல தருணம் என அறிந்து, ஆளுநரிடம், ஐரோப்பிய சகோதரிகளால் ஆரம்பிக்கப்பட்ட வைத்திய பணியை சுதேச சகோதரிகளிடம் கொடுப்பது பற்றிக் கேட்டேன். அவர் பதில் ஊக்கம் அளித்தது. ''நிர்வாகத்தை நாம் எடுப்பது மகிழ்ச்சியெனவும், தன் வைத்திய அதிகாரியிடம் இது பற்றிக் கதைப்பதாகவும், பின்பு (Lady Have Lock) உடன் மீளவும் வருவதாகக் கூறினார்.

எனினும் எமக்கு எதிராகவும் சிலர் சதி செய்தனர். சடுதியாக எம் பிரயாணச் செலவுகள் தரமுடியாதெனக் கூறினர். அரச பணத்தை எடுத்துக் கத்தோலிக்க சகோதரிகளுக்குக் கொடுப்பது பற்றியும், அங்கிலிக்கன் சகோதரிகள் இங்கேயே உள்ளார்கள் அவர்களுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்க முடியாதெனவும் வாதிட்டனர். பணம் ஆன்ம ஈடேற்றத்துக்கு ஈடுகொடுக்க முடியாது தி. கு. சகோதரிகளுக்காக மெலிசான் ஆயர் ஈடுபட்டு 2 சகோதரிகள் ஐப்பசி 16ந் திகதி மார்செயிஸ் இல் இருந்து இலங்கை நோக்கிப் புறப்பட்டனர். மெல்போண் (Melbourne) கப்பலில் அவர்கள் சென்ற பயணத்தை விபரமாகத் தருகின்றோம்.

## ஐப்பசி 21

மத்திய தரைக்கடல் எமக்கு நல்ல வரவேற்புத் தந்தது. எமது கப்பல் 144 மீற்றர் நீளமும் ஒரு சிறிய மிதக்கும் நகர் போலும் காட்சியளித்தது. ஒரு மிஷனறி ஆயர் பயணம் செய்தார். தினமும் திருப்பலி நடைபெற்றது. நாம் இரு முறை அவர் கையால் திருவிருந்து பெற்றோம். எம்மைச் சூழ பல அரச அதிகாரிகளின் மனைவிமாரும் இருந்தனர். கொழும்புத் தூதரக அதிகாரி யாழ் சகோதரிகளைத் தெரிந்தபடியால் எம்முடன் நன்கு பழகினா. நங்கூரத்தைத் தூக்கியவுடன் உங்கள் கடிதம் எமக்குக் கிடைத்தது. கண்ணீர்த்துளிகளும் உருண்டு ஓடின. எம் தியாகப் பலியை நினைவு கூர்ந்தோம். அதேவேளை எம் சபையில் நிலவும் ஐக்கியத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வுடன் இறைவனுக்குக் கொடுத்தோம். இந்த ஒன்றிப்பு (Union) எம் பலமாகவும், தூரத்திலே எம் சொத்தாகவும் உள்ளது.

## ஐப்பசி 28

மத்தியதரைக் கடலின் தென்றல், தாலாட்டு தொடர்ந்து செங்கடலின் கொடுமை, சூடு, அலையாட்டம் வந்தது. 25, 26 இரவில் கப்பலில் பொருத்தப்பட்ட இடிதாங்கியின் இடி விழுந்தது. இந்நிகழ்ச்சி பிரயாணிகளை வியப்பில் ஆழ்த்தியது. கப்பல் அதிகாரிக்கு 40 வருட சேவை அனுபவம் இருந்தும் இப்படி இதவரை ஒன்றும் நிகழவில்லை. இலங்கை அடைவதற்கு இன்னும் 8 நாட்கள் இருந்தன. கடற் பயணம் நீண்டகாலம் போல தோன்றியது.

## கார்த்திகை 6

வியாழன் மாலையில் கொழும்பு வந்து சேர்ந்தோம். கப்பலைவிட்டு இறங்கவில்லை. மறுநாள் அதிகாலையில் செலஸ்ற் தாயாரும் சென்ற். சூசன் சகோதரியும் எம்மைச் சந்திக்க வந்தனர். தூர இடத்தில் எம் குடும்ப சகோதரிகளைக் காண்பது மகிழ்ச்சியான கனவு போல் தோன்றியது. ஆனால்இது உண்மை. நாம் குழு வாழ்வை முதலாவதாக வென்னாப்புவாவில் (இலங்கையில்) அனுபவித்து மகிழ்ந்தோம்.

## வென்னாப்புவா (சுதேச நவகன்னியர் இல்லம்)

நவகன்னியர் இல்லம் ஆரம்பித்தது இலங்கையில் எம் வரலாற்றில் முக்கியமான பகுதியாகும். சுதேச சகோதரிகள் புனித. இராயப்பரின் பாதுகாவலில் (எம் நல்ல பிதாவின் பெயர்) தி. கு. சபையில் சேர்ந்த கிளையாகும். அதில் இரு பிரிவு, ஒன்று வடபகுதி தமிழ், மற்றது தென்பகுதி சிங்களம். தம் ஆர்வம் மொழி, கலாச்சாரத்தினால், மற்றும் தம் மக்கள் மேல் கொண்டுள்ள நம்பிக்கையினால் இச்சபை மிஷனறிச் சகோதரிகளுக்கு உதவியாக உள்ளது. இந்த நம்பிக்கை 1888 ஆனி வரையும் குருநாகலில் அமைந்த ஆயத்த கன்னியர், நவகன்னியர் மூலம் வெளிப்பட்டது. காலநிலை மேலும் அழைத்தலை ஊக்குவிக்கத் தடையாக இருந்தது.

பலகாலமாக செலஸ்ற்மார்ஷல் தாயார் இச்சிறிய சபையை விருத்தி செய்ய விரும்பி நவகன்னியர் இல்லத்தை வென்னாப்புவாவுக்கு மாற்றத்திட்டம் போட்டார். இறை நம்பிக்கையுடன் கத்தோலிக்க கிராமத்தை நோக்கிச் சென்று. தன் இடத்தில் அவரின் பிள்ளைகளுக்கு இடம் கொடுத்தார். அவவின் அறிவு சக்தி சுதேச நவகன்னியர் இல்லம் அமைக்க வசதியாக இருந்தது. தேவபராமரிப்பு உதவியுடன் 1888 புரட்டாதியில் ஆரம்பித்த கட்டிடம் 1889 ஆவணியில் முடிவுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெலிசான் ஆயர் உதவியுடன் கொழும்பு அதிமேற்றிராசனம் மேசன்மாரை ஒழுங்கு செய்து குறித்த காலத்தில் முற்றுப் பெற்றது. செங்கட்டிகள், களிமண்ணாலும், சுண்ணாம்பு பாறையாகவும் மரங்கள் காட்டிலும் இருந்தன. தொடக்கத்தில் முடியாத செயலாக இருந்தாலும் இறைவனின் உதவியுடன் எல்லாம் நன்கு முடிவுற்றது. அருட்தந்தை ராமெனுட் (Tarmennae) என் நன்றிக்கு உரியவராவார்.

கட்டிடம் 121 அடி நீளம் 62 அடி அகலமானது. 4 பக்கமும் விறாந்தைகள் சூரியனிடமிருந்து கட்டிடத்தைக் காப்பாற்றுகின்றது. 11 அடி உயரமும் 4 அடி சுற்றளவும் கொண்ட 36 தூண்கள் உண்டு. தென்னஞ் சோலை புதிய மடத்திற்கு நிழல் கொடுக்கின்றது. இத்தென்னை மரங்கள் நல்ல விளைச்சலைக் கொடுப்பதை நான் கண்டுணர்ந்தேன். நாம் தோட்டத்துக்கு அண்மையிலே வாழும் போது 4 மடங்காகப் பயன் தருகின்றது. இங்குள்ளவர்கள் தம் வார்த்தைகளை அவை கேட்பதாகவும், வெளிச்சத்தை விரும்புவதாகவும் நினைக்கின்றனர். தேங்காய் பிள்ளைகளுக்கு உதவுகின்றது.

எம் சுதேச சகோதரி சென்ற். பெனடிக்ற் 1888 ஆனி 26ல் இறந்து விட்டா. அவவின் தியாகமும் எம் பணிக்கு உதவியது. 1890 மாசி 17ந் திகதி வருடாந்த தியான முடிவில் மெலிசான் ஆயர் (யாழ்ப்பாணம்) தற்போது கொழும்பு அதிமேற்றிராணியார் தலைமையில் 12 அ. ம. தி. குருக்கள் இணைந்து இக்கட்டிடத்தை ஆசீர்வதித்தனர். பிள்ளைகள் வசதியாக உலாவுவதைக் கண்ட மார்ஷல் தாயார் மகிழ்ச்சியுற்றார். இது அவர்களின் உருவாக்கத்திற்கு உதவும் ஆன்மபயிற்சி, படிப்பு, கைவேலை, இவற்றிற்கு மிகவும் வசதியாக அமைந்தது. ஒவ்வொருவரும் ஒரு கிழமை சமையல், தினமும் மாலையில் ஒரு மணித்தியாலம் தோட்ட வேலையிலும் பங்கு கொள்வர். அழைத்தல்களைப் பொறுத்தமட்டில் சில ஆயத்தகன்னியர் துறவற உடையும் வெள்ளைத்துப்பட்டியும் பெற்றுக் கொள்ள 8 பேர் அவர்கள் இடத்திற்கு வந்தார்கள். பலர் துறவற வாழ்க்கையை ஆசித்தாலும் ஒரு சிலரே வீட்டுத்தடைகளை மீறி பொருட்கள் இல்லாது வந்து சேர்கின்றனர். தேவபராமரிப்பில் நம்பி உள்ளோம்.

பாடசாலையைப் பொறுத்த மட்டில் சுதேச சகோதரிகள் வென்னாப்புவா, கட்டுநேரியாப் பாடசாலைக்கு குருநாகலில் இருந்து சென்றனர். மாட்டு வண்டியில் அதிகாலை புறப்பட்டு மாலையில் ஒரு வீட்டில் பாயில் படுத்துறங்கினர். மார்ஷல் தாயார் இதில் படுக்க முயற்சி செய்த போது வண்டிச் சாரதி ஒரு மரக்கட்டிலைத் தந்தார். ஒரு பெண் பழங்கள், முட்டைகள் தந்தாள். திருக்குடும்பம் எகிப்தில் பயணித்தது போன்று வென்னாப்புவா இருந்தது. எனினும், மக்கள், அரச ஆதரவு கிடைத்தது. எனவே கிறீஸ்தவக் கல்வி பெருகி இறை அரசு இலங்கையில் வளர்வதாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழில் குருநாகல் வைத்தியசாலைக்கு எம் சகோதரிகள் அழைக்கப்பட்டது பற்றி எழுதியிருந்தோம். இந்த இதழில் எம் சகோதரிகள் நியமிக்கப்பட்டதும், முதற் பணியின் விளைவு பற்றியும் எழுதுகின்றோம்.

கார்த்திகை 3ந் திகதி கொழும்பை அடைந்து நேரே வென்னாப்புவா சென்று 3 கிழமைகள் அங்கு எமது குடும்ப வாழ்வைச் சுவைத்தோம். செலஸ்ற் தாயாரின் வரவேற்பும், அவவின் அன்பான பராமரிப்பும், சுதேச நவகன்னியரின் துறவற உடை, தூய உள்ளம் என்பன எம் நாட்களை மகிழ்வுறச் செய்தன. மார்கழி 26ல் நாம் குருநாகல் வந்த போதும் நல்ல வரவேற்புக்கிடைத்தது.

குருநாகல் வைத்தியசாலை இல்லம் தயார்நிலையில் இல்லாத காரணத்தினால் குருநாகல் மடத்தில் தங்கி இருந்து காலை, மாலை இங்கு சென்று வந்தோம். இரவில் நோயாளிகளுடன் தங்க முடியாதநிலை. மடத்தில் இருந்து சற்றுத் தூரத்தில் வைத்தியசாலை இருந்தபடியால் மாட்டு வண்டியில் சென்று வந்தோம். திருக்குடும்பம் எகிப்தில் பயணம் சென்றதை நினைவு கூர்ந்தோம். பணியை ஆரம்பித்தோம்.

1892ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி எம் புதிய செலஸ்ற் தாயார் வென்னாப்புவாவில் இருந்து வந்திருந்தார். அவவுடன் சகோதரி சென்ற். சூசனும் அதிகாரிகளுக்கு எம்மை அறிமுகம் செய்து வைத்தார். இந்த முதற் சந்திப்பு எதிர்காலத்தை உறுதிப்படுத்தியது. 2 மாதங்களின் பின்பு ஆளுநர் சேர் காவ் லொக் எம்மிடம் வைத்தியசாலையை ஒப்படைத்த பின்பு எம்மைச் சந்தித்து எல்லாம் நல்ல நிலையில் இருப்பதைக் கண்டு திருப்தியடைந்தார். மே மாதத்தில் ''மெலிசான்'' ஆயர் எம்மைச் சந்தித்து ஊக்கப்படுத்தினார். நோயாளிகள் சந்தோஷப்பட்டனர். விசேடமாகத் தமிழர் தம் மொழியில் கதைப்பதைப் பார்த்து இன்புற்றனர். ஆடி 2ம் திகதி நாம் எமது இல்லத்துக்கு வந்தோம்.

நற்கருணைப் பேழை இல்லாததால் அதைவைப்பது எம் கனவாக இருந்தது. மடத்துச் சக்கிறிஸ்தியில் சில பழைய பொருட்களை எடுத்தோம். போர்டோவில் இருந்தும் உதவி கிடைத்தது. ஆவணி 22ந் திகதி ஆயர் வந்து திருப்பலி நிறைவேற்றி நற்கருணையை ஸ்தாபித்தார். இயேசுவை வைத்திருப்பதும், எம் வேலை முடிந்ததும் அவரைச் சந்தித்து எம் அன்றாட பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும்படி கேட்பதும் எமக்கு ஆறுதலாக இருந்தது. புரட்டஸ்தாந்து மக்கள் எமக்கு எதிராகச் செயற்பட்டாலும் அதிகாரிகள் நல்லவர்கள். இந்த வருடத்தில் 70 வளர்ந்தோர் 10 சிறுவர்கள் வைத்தியசாலையில் திருமுழுக்குப் பெற்றனர். 71 பேருக்கு எம் சகோதரிகள் திருமுழுக்குக் கொடுத்தனர். சில கத்தோலிக்கர் கிறீஸ்தவ மரணத்துக்கு ஆயத்தம் செய்யப்பட்டனர். இவர்கள் சிலராக இருந்தாலும் கல்வி அறிவு அற்றவர்களாக இருப்பினும் இந்த அருளை நாம் பெற்றுக் கொடுப்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைச் சூழவர இருப்போருக்கும் அது சென்றடைகின்றது. பல மனமாற்றங்கள் நடைபெறுகின்றன. ஓர் புரட்டஸ்தாந்து நற்கருணையிலும் பங்குபற்றினார்.

உவில்லியம் என்னும் ஒரு பதிதர் போதைவஸ்து பாவித்ததால் தன் எல்லாவற்றையும் இழந்து வைத்தியசாலையில் உயிரிழந்தார். அவர் கட்டிலருகே ஒரு தமிழ் நோயாளி 30 வயதில் பாரிசவாத நோய்க்கு உட்பட்டு சிகிச்சை பெற்றார். குரு உவில்லியத்துக்கு ஒப்புரவு அருட்சாதனம் வழங்கி நற்கருணை கொடுத்ததையும் தமிழ் நோயாளி அவதானித்தார். இவருடைய நிலையும் மோசமாகிக் கொண்டு வந்ததால் அவரின் நிலையையும் எடுத்துரைத்தோம். மரண வேதனையில் இருந்த இவருக்கும் ஆன்மமீட்பைப் பற்றி எடுத்துரைக்க அருள் அவரைத் தொடவே திருமுழுக்குக் கொடுத்து ''யோசேவ்'' என்னும் பெயரிட்டோம். என் கை ஆசீநீரை எடுத்து அவன் நெற்றியில் பூசும் போது அவன் சந்தோஷப்பட்டான். 20 நிமிடத்தின் பின் அமைதியாக உயிர் பிரிந்தது.

சில நாட்களின் பின் வேறொரு தமிழ் நோயாளியும் வந்தார். அவருக்கும் சிகிச்சை அளித்த பின் எமது திருமறையில் சேர விரும்பியதால் சில மறை உண்மைகளைக் கற்றுக் கொடுத்தோம். அடுத்தநாள் திருமுழுக்கு அருளப்பட்டது. மேலும் 5 நாட்கள் வாழ்ந்து மரித்தார். மனமாற்றம் பெற்றவர்களில் ஒரு முஸலிம் ஆளும் அடங்குவர் தொடக்கத்தில் சகோதரி அவரை அண்மித்த போது வாய் பேசாது இருந்தார். சகோதரி அவரின் ஆன்மநிலையை எடுத்துக்கூறி, இதற்கு உதவவே தாம் பெற்றோர், சொந்த நாடு இல்லத்தைத் துறந்து வந்தோம் எனக்கூற அவன் வாய் திறந்து பேசினான். ''தன் சகோதரனைக் கலந்தாலோசித்த பின்பே பேசவேண்டும், ஏனெனில் தன் மனைவி பிள்ளைகளைக் கைவிட்டுவிடுவான் என்றார். எனவெ நாம் ஒரு திருஇருதய வரவணிக்கம், புனித ஆசீர்வாதப்பார் படத்தையும் அவரின் தலையணையின் கீழ் வைத்தோம். மறுநாள் காலை அவரின் இறுதிநேரம் அண்மித்தது. எனவே அங்கு சென்றபோது என்னைக் கண்டவுடன் ''விரைவில் வந்து திருமுழுக்குத் தாருங்கள்'' எனக்கத்தினான். ''சேவியர்'' என்னும் பெயருடன் திருமுழுக்குப் பெற்றான். அவன் அமைதியடைந்தான். இயேசுவே என்னைக் காப்பாற்றும் எனச் செபித்தான். அதேவேளை வேறொரு முஸ்லிம் நோயாளியும் புதுப்பிறப்பு அடைந்தான். ''அடொல்ப்'' என்னும் பெயர் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

ஐப்பசி 26ந் திகதி எமது தலைவர் சுவாமி இறந்த தினத்தில் மூவருக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. ஆடி 27ல் யாழ் குருநாகல் கத்தோலிக்க மக்கள் அ. ம. தி. குருக்கள் தி. கு. சகோதரிகளின் செபங்களுடன் இணைந்து அருட்தந்தை பாபிறா (Fabre) வுக்காக வேண்டிக் கொண்டனர். சிங்கள அநாதைப்பிள்ளைகளுக்கு அவரின் இறப்பு அதிர்ச்சியைக் கொடுத்தது. திருப்பலி ஒப்புக்கொடுத்ததும், சிலுவைப்பாதை செய்தும் செபித்தார்கள். இலங்கையின் பணிகளுக்குத் தன்னைக் கையளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்னாப்புவா - (நவகன்னியர் இல்லம்)

## மார்கழி 1892

என் நல்ல தாயாரே!

எம் சுதேச நவகன்னியரில் நீங்கள் காட்டும் கரிசனை எம் இன்பதுன்பங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள அழைக்கின்றது. சென்ற அறிக்கையில் எம் இல்லம் மீளவும் புனரமைக்கப்பட்டது பற்றி எழுதியிருந்தேன். அன்று தொடங்கி இறைவன் எம்மை ஆசீர்வதித்து வருகின்றார். இவ்வருடத்தில் தினமும் புனித இராயப்பர் சபைக்கு நன்மைகள் வந்து கொண்டே இருக்கின்றன.

## அழைப்புக்கள் சேர்த்தல்

8 பேர் ஆயத்த கன்னியராக உள்ளனர். பல இளம் கிறீஸ்தவப் பிள்ளைகள் துறவற வாழ்வை நாடுகின்றனர். பலர் வீட்டில் இருந்து ஓடிவருவதால் பொருட்கள் இல்லாது வருகின்றனர். சிலவேளைகளில் குறைபாடுள்ளவர்களையும் பெற்றோர் விடுகின்றனர்.

## அழைப்புக்கான பரீட்சை

இதுவும் கஷ்டமானதொன்று. இதற்குப் பரிசுத்த ஆவியின் துணை தேவை. சிலவேளைகளில் வீட்டுப் பிரச்சினைகாரணமாகவும் வருவார்கள்.

## துறவற உடையணிதல்

மாசி 18ந் திகதி ஒரு ஆயத்த கன்னிகை துறவற உடை எடுத்தா. மெலிசான் ஆயர் வென்னாப்புவா வந்த போது இந்த வழிபாட்டில் பங்குபற்றிச் சென்றார். பங்குனி 30 ந் திகதி சுதேச சகோதரிகளுக்கும், நவகன்னியருக்கும் வருடாந்த தியானம் நடைபெற்றது. 4 பேர் துறவற உடை எடுக்க விரும்பியும் 2 பேருக்கு ஆவணி 25ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## இல்ல அமைப்பு

தேவபராமரிப்பின் உதவியுடன் சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது. தோட்டத்திற்கு எல்லோரும் வருவதால் சில அசம்பாவிதங்களும் நடைபெறுகின்றன.

இந்த வருடத்தில் இங்கிலாந்து அரசியின் பிரதிநிதியின் சந்திப்பு நடைபெற்றது. அப்போது வென்னாப்புவா மக்கள் வரவேற்பு அலங்காரம் செய்தனர். இது முதற் தடவையாக இருந்தபடியால் பாடசாலையும் பின் நிற்கவில்லை. ஆளுநர் (Sir Have Lock) சேர். காவலொக் எம் பணிவான உபசரிப்பை ஏற்றார். அவர் தி. கு. சகோதரிகளுடன் பழக்கமுடையவராக இருந்தார். சிங்கள மக்கள், உயர் பதவியில் இருக்கும் ஒருவர் எம் மடத்திற்கு வருவதைக் கண்டு, சிலவேளைகளில் எம் உறவினராக இருக்கலாம் எனத் தம்முள் பேசிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குடும்பச் சபையின் நூற்றாண்டு விழா : இலங்கை

கொழும்பு :

இலங்கையிலுள்ள சோதரிகள் தூரவிருந்தாலும் சபையின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர். புவியியல் அடிப்டையில் நேரமாற்றம் காரணமாக நாங்களே முதலில் நன்றிக் கீதத்தை இசைத்தோம். யாழ்ப்பாணம், கொழும்பு இதனை சிறப்பாகக் கொண்டாடினாலும் பம்பலப்பிட்டியாவின் அறிக்கையைத் தருகின்றேம்.

ஆலயம் இந்த நிகழ்வுக்குச் சிறியதாகவே காணப்பட்டது. 400 பிள்ளைகள், பல நண்பர்கள் வந்தனர். பாம் (Palm) இலைகள், வண்ணப்பூக்கள், கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் 3 நாள் வழிபாடுகள் நடைபெற்றன. இறுதிநாளில் அதிமேற்றாணியார் கூடோர் (Mgr. Coudert) தலைமை வகித்தார். புனித மரியாள் ஆலயத்தில் அமலமரித்தியாகி சபைக்குருக்கள் பலர் புடைசூழ ஆயர் திருப்பலி நிறைவேற்றினர். பூசைமுடிவில் இறுதி நிகழ்வாக உணர்ச்சி பூர்வமாக எம் சபை வரலாற்றை எடுத்தியம்பினர். நல்ல பிதாவின் ஆன்ம வாஞ்சை, நற்கருணை ஆசீர், சபை செய்து வரும் நன்மைகள் பற்றி எடுத்தியம்பினர்.

தனது அப்போஸ்தலிக்க பயணத்தில் நாற்பதிற்கும் (40) மேற்பட்ட மடங்களை பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்பெயின், இத்தாலியில் சந்தித்ததாகக் கூறினர். அத்துடன் இங்கிலாந்து, அயர்லாந்து, ஆபிரிக்கா, அமெரிக்காவுடன் இலங்கையிலும் எம் சோதரிகள் O. M. I. குருக்களுடன் சேர்ந்து நற்செய்திப் பணிபுரிவதைக் குறிப்பிட்டார்.

கத்தோலிக்க கல்வி புகட்டுவதில் எம் சோதரிகளின் பணிக்கு ஆயர் தந்தைக்குரிய பாராட்டுகளைத் தெரிவித்தார். அத்துடன் ''இறைவனுக்கு மகிமையும், ஆன்மாக்களின் மீட்பையும்'' குறிக்கோளாகக் கொண்ட இந்த நிறுவனமானது செய்யும் நன்மைகளுக்கு இறைவனுக்கு நன்றி கூறும்படி மக்களைக் கேட்டுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியா சிலாபம்

ஆபிரிக்காவுக்கு இருமுறை சென்றதை முதல் பக்கத்தில் கூறியிருந்தோம். அதே போன்று இலங்கைக்கும் 1910, 1912ல் சென்றோம். அறிக்கைகள் இடைமறிக்கப்பட்டதால் எம் புதினங்களை இயம்பமுடியவில்லை. ஆயர் (Donteneeiel) டொன்ரன்லில் 1912 எம்மைச் சந்தித்த போது நாம் எமது பணியின் 50 ஆவது ஆண்டை நிறைவு செய்ததால் அதனைக் கொண்டாடினோம். நல்லபிதாவின் கனவை நிறைவு செய்யும் தூர தேசப்பணிகளின் அறுவடையை எம் முதற்தலைவர்களின் முன்னிலையில் இறைவனுக்கு அளித்தோம்.

10 புதிய வருடங்களின் வேலைகள், தியாகங்கள், துன்பங்கள் சேர்ந்து வைரவிழாவும் கொண்டாடப்பட்டது. நற்கருணைக் காட்சியின் நூற்றாண்டு விழாவில் இந்து சமுத்திரத்தின் முத்தாகிய இலங்கை, திருக்குடும்பச் சபையின் கதிர்ப்பாத்திரம் போல் இயேசுவைத் தாங்கி இந்த யூபிலி விழாக்களை நினைவு கூர்ந்தது. எனவே பணித்தளங்களின் அறிக்கைகளைத் தருகின்றோம். முதலில் சிலாபத்தில் நடைபெற்றதின் அறிக்கை

என் நல்ல தாயாரே!

தை மாதம் 21ந் திகதி நீங்கள் எழுதிய கடிதத்தில் மாசி 12ந் திகதி நற்கருணை இயேசுவிடம் உங்கள் பிள்ளைகளுக்காகச் செபிப்பேன் என்று கூறியபடி அந்த நாளில் உங்கள் கடிதம் எம் கையை வந்தடைந்தது தேவபராமரிப்பை எமக்குக் காட்டியது. எனவே எவ்வாறு 3 நாள் வழிபாடுகளை நாம் செய்தோம் என்பதை எழுதுகிறோம்.

எமது தூய விருப்பத்தை நிறைவேற்றத்தடையாய் இருந்த எல்லாம் நீக்கப்பட்டன. சாதாரணமாகப் பற்றாக்குறையினால் வாழும் எமக்கு ஒன்றுமே குறைபடவுமில்லை. மாசோன் குருவானவர் தினமும் வந்து நற்கருணை எழுந்தேற்றம் செய்தார். திருப்பலியும் நிறைவேற்றினார். முதற்தடவையாக இந்த அருள் எமக்கு கிடைத்தது. எம் சிற்றாலயம் இயற்கைப்பூக்களால் நிரம்பி வழிந்தது. புரட்டஸ்தாந்து, பிறசமயத்தவர் தம் தோட்டத்துப்பூக்களையும் கொண்டு வந்து பீட அலங்காரம் செய்தனர். எழுந்தேற்றம் செய்யப்பட்ட நற்கருணைநாதருக்கருகே தான் கொடுத்த றோசாமலர் இருக்கக் கண்டு ஒரு பிள்ளை மகிழ்ச்சியடைந்தா. இன்னொரு பெண் "கத்தோலிக்க ஆலயங்கள் அழகாகவும் வேறுபட்டதாகவும் உள்ளன. எம்மிடம் இல்லாததொன்றை நாம் உணர்கின்றோம்" என்றாள். அவளுக்கு அதனைக் கூற முடியாவிடினும், அது எம் மீட்பரின் உண்மையான பிரசன்னம் என்றும் அதனை நோக்கியபடியே எம் ஆர்வம் முழுவதும் உள்ளது என்று கூற முடியும். எனவே இறைவன் எல்லாப் பிள்ளைகளின் உள்ளங்களையும் ஆட்கொள்வாராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பாடசாலையும் தமக்குரிய ஆராதனை மணித்தியாலங்களில் நற்கருணைநாதரைச் சந்தித்து ஆராதித்தனர். ''சிறுவர்களை எம்மிடம் வரவிடுங்கள்'' என்ற இயேசுவின் வார்த்தைகளுக்கு ஒப்பசிறுவர்களும் இதில் பங்கெடுத்தனர். தமிழ்மக்கள் 12 - 1 மணியில் ஒன்றுகூடிச் செபித்தனர். அவர்களின் இசையுடன் கூடிய மன்றாட்டுக்கள் உள்ளத்தைத் தொடக்கூடியனவாக அமைந்தன. குருவானவரின் மறைஉரையின் பின் நற்கருணை ஆசீர்வாதத்தில் 3 பாடசாலை மாணவர்களும் பங்குபற்றினர். ஏறக்குறைய 300 பிள்ளைகள் இருந்தார்கள். எல்லோரும் பீடத்தையும் சிறப்பாக நற்கருணைக் கதிர்ப்பாத்திரத்தையும் பார்க்க முனைந்தனர். 1822 மாசி 3ந் திகதி நடைபெற்ற புதுமை மீளவும் நடைபெறலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. ஆங்கில பாடசாலை மாணவர்கள் பாடலுக்குப் பொறுப்பாக இருந்தனர். (Te Deum) என்னும் லத்தீன் பாடலும் இடம்பெற்றது.

நாம் நற்கருணைநாதரிடம் தி. கு. சபையை ஒப்புக்கொடுத்து உலகின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள சகோதரிகளின் ஐக்கியத்திற்காகச் செபித்தோம். இந்த 3 நாட்களிலும் தபோர் மலையின் இனிமையைரசித்த சீடர்கள் போன்று ''நாம் இங்கிருப்பது நல்லது'' எனக்கூற வேண்டும் போல இருந்தது. அதற்கு இயேசு ''தபோர் என்பது சிலுவைகளும், பாடுகளுமே எனப் பக்ர்ந்தார்'' எனவே எல்லா வழிகளாலும் இறை அரசைப் பரப்ப வேண்டும். திருஇருதய விழாவன்று மண்டபம் அலங்கரிக்கப்பட்டுக் கத்தோலிக்கரல்லாதோரும் ஒத்துழைத்தனர். திருஇருதயக் கொடியை வாங்கித் தம் உடையில் மாட்டினர்.

அருட்தந்தை மாசோன் (masson) இயேசுவை அரசராக ஏற்கத் தீர்மானம் எடுக்கும்படி இளம் உள்ளங்களைக் கேட்டுக் கொண்டார். நீங்கள் மலர்களாலும், ஒளியாலும் இப்பீடத்தை அலங்கரித்திருப்பது உங்கள் விசுவாசம், நம்பிக்கை, அன்பைக் காட்டுகின்றது. அரசராக இருப்பவர் இறைவனே ஆகும். இந்த அன்பின் அரசர் உங்கள் கூட்டங்களில் இருக்கிறார். உங்கள் முயற்சியின் சாட்சியாகவுள்ளார். உங்கள் படிப்புக்கு மட்டுமல்ல, நீங்கள் பக்தியுள்ள, கீழ்ப்படிவுள்ள பிள்ளைகளாக வாழ்ந்து, நல்ல கிறீஸ்தவர்களாக வருவதற்கு உதவி செய்கிறார்கள். எனவே இறைவன் அவர்களின் வேலையை இலகுவாக்க விரும்புகிறீர்கள் குழந்தை இயேசு எல்லாம் தெரிந்தவராக இருந்தபோதும், தேவதாய், சூசையப்பர் வழியாக வேலை செய்யக் கற்றுக்கொண்டார். இந்த உண்மை உங்கள் ஊக்கத்தைத் தூண்டுவதாக!

இதைக் கேட்ட ஒரு புரட்டஸ்தாந்தப் பெண் ''கத்தோலிக்க குரு நல்ல உண்மைகளைத் தன் முழு இதயத்தோடும் புத்தி, சித்தம் ஒன்றுபட்ட நிலையிலும் எடுத்துக்கூறுகிறார்'' எனத் தன் நண்பிக்குக் கூறினா. ஒரு விசுவாசமற்ற சட்டத்தரணியும் தன் வீட்டில் திருஇருதயஸ்தாபகம் செய்தார். படம்பிடிப்பவரும் திருஇருதயப் படத்தின் முன் பிள்ளைகளை ஒழுங்குபடுத்தி ஓர்படம் எடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பலப்பிட்டி

''லீலிப்பூக்கள் மலரும் இடம் (Where The Lilies Bloom)

இத்தலைப்பில் கொழும்பு கத்தோலிக்க இதழான ''மெசஞ்சர்'' (messenger) திருக்குடும்பச்சபை மாணவரின் பரிசளிப்பு விழா பற்றி எழுதியிருந்தது.

''அழகான மாளிகைகள் அமைந்துள்ள பம்பலப்பிட்டியில் ஓர் இடம் இறைவனின் தோட்டத்திற்கு லீலிப்பூக்கள் பயிரிட ஒதுக்கப்பட்டு அங்கு சில ஊழியர்கள் இறைவனால் அனுப்பப்பட்டுள்ளனர். இந்து சமுத்திரத்தின் கடற்காற்று வருடிச்செல்லும் இந்தப் புதிய இடத்திலே ஒரு விசேட முயற்சி தேவைப்படுகிறது. ஆம், தம்நாடு குடும்பம், பெற்றோர், சொத்து எல்லாவற்றையும் துறந்து தி. கு. சகோதரிகள் தெய்வீக வழியில் தம் இளம்பயிர்களைப் பராமரித்து வருகின்றனர். குடும்பத்திலும், சமுதாயத்திலம் இந்த லீலிமலர்கள் தம் நறுமணத்தைப் பரப்புகின்றனர்.

20 வருடங்களின் முன்பு 28 இளம் பயிர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணியானது தற்போது 500 ஆக உயர்ந்துள்ளது. நாற்று மேடையானது எல்லோருக்கும் திறக்கப்பட்டிருப்பதால் இயக்குனர்கள் பார்வையிடவும் இவர்களால் நன்மைபெறும் இளம் பயிாகளையும் காணமுடிகினறது. பாடசாலை மண்டபத்தில் மடத்துத்தலைவி அழைப்பை ஏற்றுவருகை தந்த, கொழும்பு கல்வி அதிகாரியின் மனைவி திருமதி மக்றே (Macrae) என்பவரும் கொழும்பு அதிமேற்றிராணியார், துறவற சகோதரிகளின் தலைவியும் அமர்ந்திருந்தனர்.

மாணவர்களால் வரவேற்புக் கீதம் இசைக்கப்பட்ட பின்பு, மறைமாவட்டத்தின் கல்விப் பணிக்குப் பொறுப்பாக இருந்த அருட்தந்தை ஜமோய் அ. ம. தி (Jamoys) பணிகள் பற்றிய அறிக்கையை எடுத்துரைத்தார்.

திருமதி. மக்றேயின் வருகையின் பின் அபிவிருத்தியில் பல முன்னேற்றங்கள் இடம்பெற்றன. எனவே நாம் இறைவனுக்கு நன்றி கூறுவோம். மாணவர் தொகை 500 ஆக அதிகரித்ததால் வகுப்பறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதாக்கப்பட்டன. கடன் தொகை கூடும் போது மாணவர்கள் தாராள உள்ளத்துடன் 3 கலைநிகழ்ச்சிகள் நடாத்தி நிறைவு செய்தனர். 80 போடிங்பிள்ளைகள் அடங்கும் இடத்தில் தற்போது 65 பேர் உள்ளனர். பெரிய மண்டபத்தில் 400 பேர் அமரக்கூடிய இடத்தில் 178 முன்பள்ளி ஆண், பெண் சிறுவர்கள் உள்ளனர். ஆனிமாதத்தில் சிறிய பரீட்சை வைத்து வகுப்பேற்றம் செய்யப்படவுள்ளனர்.

அடுத்த வகுப்புகளில் 78% சித்தியடைந்துள்ளனர். இறுதி வருடங்களில் 61 பேர் றோயல் அக்கடமி மியூசிக் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர். பொருளாதார வகுப்புகளும் நடைபெறுகின்றன. மானிட விஞ்ஞானம் (Human Sciences) எம் சகோதரிகளால் இளம் பெண்களுக்குப் படிப்பிக்கப்படுகின்றது. இது ஆன்மதேவையாகவுள்ளதால் அவர்களின் படிப்போடு சேர்க்கப்பட்டுள்ளது. இது அவர்களின் அழைத்தலுக்கும் உதவுகின்றது. எனவே வாரத்தில் ஒரு முறை அருட்தந்தை ஆல் (Alles) வந்து படிப்பிக்கிறார் அதனைத் தொடர்ந்து ஆயர் மக்றே அம்மையாரின் பிரசன்னத்திற்கும் ''ஜமோய்'' குருவானவரின் அறிக்கைக்கும் நன்றி கூறினாரர். பெற்றோர் தம் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதைப் பாராட்டினார். இன்று அவர்களின் முயற்சியின் பயனை நினைவூட்டினார்.

ஆயர் சந்தர்ப்பத்தை நழுவவிடாது, கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் சகோதரிகள் (துறவிகள்) 8000 இளம் பெண்களுக்குப் படிப்பிப்பதைக் கூறினார். ஆங்கிலத்திலும், சுதேச மொழிகளிலும் கல்வி பயிற்றி கத்தோலிக்கரின் நன்றியைப் பெற்றுள்ளதை எடுத்துரைத்தார்.

பின்பு பிள்ளைகளைப் பார்த்து ஆயர், எனது அன்பான பிள்ளைகளே தேவபராமரிப்பு உங்களை எந்த இடத்தில் வைத்தாலும், போடிங்கில் நீங்கள் கற்றுக் கொண்ட அன்புச் செயல்களை மறவாதீர்கள். மகிழ்வின் மத்தியில் மடத்தை மறவாது, ஆன்மமீட்புக்கு உதவி செய்ய வேண்டும். துன்ப வேளையில் உங்கள் சிந்தனைகள் தி. கு. மடத்தின் அமைதியான ஆலயத்திற்கு வந்து, அங்கு உங்கள் இளமைக் காலத்தில் நீங்கள் பெற்ற அருள்களை நினைவுகூரட்டும். இந்த நினைவுகள் உங்களுக்கு ஆறுதல் அளித்து செபத்தின் மூலம் இவைனின் பாதுகாப்பைத் தருவதாக! நம்பிக்கையுடன் கேட்கப்படும் வரங்கள் நிச்சயம் கிடைக்கும்.

இதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது. பலத்த கரகோஷத்துடனும், தேசிய கீதத்துடனும் விழா இனிதே முடிவுபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க திருச்சபையானது தற்போது ''இலங்கையின் கத்தோலிக்கத்தின் அபிவிருத்தி'' என்னும் தலைப்பில் ஓர் ஆய்வுக்கட்டுரையை வெளியிட்டது. அவற்றில் சிலவற்றைத் தருகின்றோம். 1837ம் ஆண்டு இலங்கையில் 85,359 கத்தோலிக்கர் இருந்தனர். தற்போது 368,435 பேர் உள்ளனர். கொழும்பு மறைமாவட்டத்தில் 17,39028 சனத்தொகையில் 265,211 பேர் கத்தோலிக்கர் என்பதை அறிவார்களா? கொழும்பு நகரில் 60,000 கத்தோலிக்கர் உள்ளனர். அதாவது சனத்தொகையில் 1/4 பகுதி. கொழும்பு மறைமாவட்டம் 265,211, யாழ்மறைமாவட்டம் 51.023, உடன் சேர்ந்து 368.435, அதில் 316.236 அ. ம. தி. குருக்கள் வாழும் பங்குத்தளங்களில் உள்ளனர். தி, கு. சபைச் சகோதரிகள் விசுவாச முன்னேற்றத்திற்கு உதவுகின்றனர். ஆயர் கூடேர் O. M.I ஆண்டகையின் அறிக்கையில் திருஇருதயப் பக்தி மிஷனறிமாரின் வேலைக்கு உதவுகின்றது. அத்துடன் முதல் வெள்ளித் திருப்பலியில் 50,000 பேர் திருவிருந்தில் பங்குபற்றுகின்றனர். 6000 பேர் பெரிய கோவிலுக்கு வருகின்றனர். தினமும் 1500 பேர் திருப்பலியில் பங்குபற்றுகின்றனர். பிள்ளைகளின் கல்விப் பணியைப் பற்றி பார்த்த நாம் தற்பொது குருநாகல் வைத்தியசாலையில் பணிபுரியும் எம் தாதிச் சகோதரிகளின் பணிபற்றிப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குருநாகல் வைத்தியசாலை**

**ஆசியா**

என் நல்ல தாயாரே!

1922ம் ஆண்டில் எம் பணியின் 32 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்தச் சிறிய இடைவெளியில் 5248 நோயாளிகள் இறந்துள்ளனர். ஆனால் எல்லோரும் ஆறுதல் தரும் வகையில் அருட்சாதனங்களைப் பெற்று இறந்துள்ளனர்.

இந்த இறுதி வருடத்தில் 178 வளர்ந்தோரும் 32 சிறுவர்களும் திருமுழுக்குப்பெற்று விண்ணகம் சென்றுள்ளனர். மற்றவர்கள் 40, 50 வருடங்களின் பின் நல்ல பாதைக்கு வந்துள்ளனர். பின்வரும் சில நிகழ்ச்சிகள் எவ்வாறு இறைஇரக்கம் ஏழை நோயாளிகள் மேல் பொழியப்பட்டு குணம் அடைந்ததையும், வேறு சிலர் நல்ல மரணம் அடைந்துள்ளனர் என்பதையும் காட்டுகின்றது.

75 வயதுடைய புத்தபிக்கு ஒருவரின் மஞ்சள் உடையில் தீப்பற்றி உருவமிழந்து வைத்தியசாலைக்கு வந்தார். குணப்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதால் எமது சகோதரி எமது சமயத்தைப் பற்றி அவருடன் உரையாடினா. இதை உற்றுக் கேட்ட வயோதிப பிக்குவிடம் ''உமக்குப் புத்தரின் சமயமா? இயேசுவின் சமயமா நல்லது எனத் தோன்றுகிறது? எனச் சகோதரி கேள்வி எழுப்பினார். ''உங்கள் மதமே'' எனப் பதிலிறுத்தபடியால் ''கிறீஸ்தவனாக வரவிருப்பமா? எனக் கேட்க ஆம் வைத்தியசாலைக்கு வரமுன்னே இதனை விரும்பினேன் என்றார். எனவே திருமுழுக்கு ஆயத்தப்படுத்தி இறுதி மூச்சுவிடு முன் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது.

வேறொரு புத்த குரு சுவாச நோயால் மிகவும் பாதிக்கப்பட்டு வந்தார். இறக்கும் தருவாயில் இருந்தபடியால் தாதி அவரின் ஆன்ம நலனைப் பற்றிப் பேச விரும்பினார். ''யுனான்சி, நீர் எந்த மதம்? புத்த மதம் இல்லையா? ஆம் சகோதரி, ஆனால் நான் என் தாயைப் போல திருமுழுக்கு பெற்றேன். 12 வயதில் புத்த குருவாக வந்தேன். என் திருமுழுக்குப் பெயர் ''யோண்'' என்றார். மீளவும் இயேசுவின் மதத்திற்கு வந்து விண்ணகம் செல்வதற்கு கத்தோலிக்க குருவைச் சந்திக்க விரும்புகிறாயா? ''நான் அதனை அதிகம் விரும்புகிறேன்'' உடனே குருவானவர் வந்தபோது அவர் பாவ அறிக்கை செய்தார். இறுதி அருட்சாதனமும் பெற்றார். இவர் கத்தோலிக்க குருக்களுக்கு எதிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர். கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் புத்த விகாரையைப் பெருப்பிப்பதற்கு விரும்பியவர். அதிஷ்டவசமாக வழக்குத் தோல்வியில் முடிந்து மன்னிப்பும் பெற்றவர். உடல் நலம் தேறிவர அவருக்கு "ஏழைகளின் சிறிய சகோதரிகள் (Little sisters of the poor) இல்லத்தில் குருவானவர் ஓர் இடம் எடுத்துக் கொடுத்தார்.

எமது சிங்கள மக்கள் தமமிடையே ஒற்றுமையுள்ளவர்கள். அவர்களின் அன்புச் செயல்கள் உள்ளத்தைத் தொடக்கூடியவை. இவற்றில் ஒன்றைத் தருகின்றோம்.

தாதிச் சகோதரி ஓர் ஏழை நோயாளிக்குத் திருமுழுக்குக் கொடுத்தார். அவள் அடுத்த நாள் காலை உயிரோடு இருப்பாளோ தெரியாது பின்பு அவ சிறிது தூரம் சென்று திரும்பிவரும் போது வேறொரு புதிதாகத் திருமுழுக்குப் பெற்ற நோயாளி அவளடியில் இருப்பதைக் கண்டு ''நீரும் கடும் வியாதியாக இருக்கிறீர். உம்படுக்கைக்குச் செல்" என்று சொன்னா. உடனே அமைந்து சென்றாள் பின்பு தாதிச் சகோதரி அகன்று போக மீளவும் வந்து நின்றாள். மன்னியுங்கள் சகோதரி, அவ நல்ல மரணம் அடைய உதவி செய்வதற்கு இறுதிச் செபங்களைச் சொல்லுகிறேன் என்றாள். சிறிது நேரத்தின் பின் அவள் உயிர்பிரிந்தது. அன்பின் இறைவன் மகிழ்வோடு அவளை வரவேற்றிருப்பாள்.

பெண்களின் வாட்டில் சகோதரி சில பெண்களை மரணத்திற்கு ஆயத்தப்படுத்துவதை ஒரு பதிதப்பெண் அவதானித்தாள். ஆனால் எமது திருமறையில் சேருவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. ஓர் இரவு மேற்பார்வை செய்யும் சகோதரியிடம் தனக்குத் தண்ணீர் தரும்படி கேட்டாள். எனக்குத் தாகமில்லை. என் தலையைக் கழுவத் தண்ணீர் வேண்டும் என்றாள். ''திருமுழுக்குப் பெற்று இறைவனின் பிள்ளையாக வரவிரும்புகிறாயா? ஆம் அதையே நான் விரும்புகிறேன். விரைவில் தாருங்கள் இவ்வாறு கூறியபடியால் சுருக்கமாக விசுவாசத்தின் உண்மைகளைக் கற்பித்த 24 மணித்தியாலத்தின் பின் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. அத்துடன் அவ இறைவனடி சேர்ந்தா.

சிலவேளைகளில் நோயாளிகள் விரும்பாவிடினும் தேவதாயின் படம் மனமாற்றத்தைத் தருகின்றது. தாங்களாகவே கேட்டு கத்தோலிக்க குருவை அழைத்து இறைவனிடம் ஒப்புரவாகின்றனர். சகோதரிகள் இவர்களுக்கு உதவிபுரிகின்றனர். யாராவது மரணவேதனையில் இருந்தால் (புத்த மதம் என்றாலும்) சகோதரிகளுக்கு அறிவிக்கும்படியும் கத்தோலிக்கர்கள் கேட்கப்பட்டுள்ளனர். திருக்குடும்பத்தின் பாதுகாப்பு அவர்களுக்குக் கிடைப்பதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 அறைகள் வசதி படைத்தோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அறை எப்பொழுதும் ஆட்களால் நிறைந்திருக்கும். சிலவேளைகளில் ஐரோப்பிய மரம் நடுவோர், அவர்களின் குடும்பங்கள் வந்து தங்கிச் சுகம் பெற்றுக் கொள்கின்றனர்.

எம் ஆலயம் எல்லோரையும் கவர்ந்து கொள்கின்றது. ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் மக்களுக்கு இடம காணாமல் உள்ளது. அப்போது விறாந்தைகளில் மக்கள் இருப்பர். குறிப்பாகக் காலைத்திருப்பலிக்கு அவ்வாறு இருக்கும்.

கொழும்பு அதிமேற்றிராணியார் எம்மைச் சந்திக்க வந்தார். துன்பங்களைக் கண்டு பயப்படாது எம் ஒழுங்குகளின்படி எம்மை ஊக்கப்படுத்தினார். நாட்டு அதிகாரிகளும் எமது பணியைப் பாராட்டினர். அத்துடன் ஏழைச் சிங்களவருக்கு சகோதரிகள் செய்யும் பணிக்கு நன்றி கூறினனர்.

இலங்கை ஆளுநரின் செயலாளர், குருநாகல் வைத்தியசாலை இலங்கையில் முதற்பிரிவில் வைக்கக் கூறிய நிலையில் உள்ளதென்றும், அதேவேளை இன்றுவரை இவர்களின் உழைப்பிற்குத் தகுந்த பலன் அளிக்கப்படவில்லையெனவும் கூறினார்.

எனவே அரச நிர்வாகம் இவர்களுக்கும் ஐரோப்பாவில் சில மாதம் செலவிட்டு வர உத்தரவு அளித்தது. இது எம் சகோதரிகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. தேவபராமரிப்பிற்கு நன்றி கூறி இதைப் போடோவுக்குத் தெரியப்படுத்தினார். சென்ற். செலஸ்ரின் தாயார் முதலாவதாகத் தெரிந்தெடுக்கப்பட்டு சிலமாதங்கள் உடல் உள ஓய்வு பெற்று குடும்ப உறவை வலுப்படுத்திச் சென்றா. திரும்பி வந்த பின் தன் துணைச் சகோதரியை பிரான்சுக்கு அனுப்பினா. அதேபோன்று கல்விப் பணிபுரியும் சகோதரிகளும் ''போர்டோ'' சென்று வர உத்தரவு பெற்றனர். இது எம் சகோதரிகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது என்பதைப் பின்வரும் ஒரு கடிதம் எடுத்தியம்புகின்றது.

## ஐப்பசி 21

என் நல்ல தாயாரே!

நீங்கள் மார்செயி நம்பிக்கைக் கிளைத் தலைவி மூலம் கப்பலில் ஏறிய முதற் செய்தியை அறிந்து இருப்பீர்கள். ஏட்றியன் தாயாரும் அவரின் குழுவும் திருப்பலியின் போது எம் துயரைக் குறைக்கச் செபித்தனர். சமுத்திரத்தின் தாரகையாகிய தேவதாயின் பக்கம் எம் கவனம் திரும்பியது. 9 மணியளவில் ''தூய ஆவியே வாரும்'' 'Veni Ceator' என்னும் கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கப்பட்டு ஆவியின் கனிகள் எம் இதயத்தில் பொழியப்பட்டு அவவிசுவாசத்தில் உள்ள நாட்டுக்கு விசுவாசத்தின் ஒளிகிடைக்கச் செபித்தோம். உடனே குழு எமக்குப் பிரியா விடைகூற கார் துறைமுகத்தை நோக்கி நகர்ந்தது. ''ஏட்றியன்'' தாயாரும் வேறு 4 சகோதரிகளும் இறுதி நிமிடம் வரை எம்முடன் நின்று குடும்பத்தைப் பிரதிநிதிப்படுத்தினர்.

12 மணிக்கு மணியடிக்கப்பட்டு கப்பல் புறப்படத்தயாரானது. நங்கூரம் எடுத்துப் போடப்பட்டது. கயிறுகள் அவிழ்க்கும் போது எம் இறுதிப பிரியாவிடை கூறினோம். கப்பல் தூரம் செல்லச் செல்ல, எம் இதயம் வெடித்து விடும்போல் இருந்தது. இறைவனுக்காக நாம் செய்த தியாகங்களை, நினைத்துக் கொண்டு சென்றோம். கப்பல் முன் நோக்கி நகர எம் மனம், போர்டோவில் நாம் இறுதி மாதத்தில் பெற்ற அருள்களை நோக்கிப் பின் நகர்ந்தது.

போர்டோவில் இருந்து புறப்பட்ட நாள் தொடங்கி எம் சிந்தனைகள் அங்கேயே இருந்தன. இதை எம் சகோதரிகளோடு பகிர்ந்து கொளவோம். எமது கடந்த கால நினைவுகளிலும், செபங்களிலும் இருந்த எம்மை சாப்பாட்டு மணி நனவு உலகிற்கு அழைத்தது. பிரயாணிகளுக்குப் பெரிய இடம். சகோதரிகளின் மேசையைவிடப் பெரியது. கப்பற் தலைவன், அலுவலக ஊழியர்கள் எம்மை நன்கு கவனித்தனர். ஒன்றுமே எமக்குக் குறைவாக இருக்கவில்லை. குருவானவர் இல்லாதபடியால் திருப்பலியில் பங்கேற்க முடியவில்லை.

## ஐப்பசி 22

ஓர் இரவு முடிந்து பொலிவாசியோ பாலத்தில் நின்றோம். திருப்பலி இல்லாதபடியால் ஞான விதமாக ''போர்டோ'' திருப்பலியில் பங்குபற்றினோம். தேவபராமரிப்புத் தந்த இந்நிகழ்வில் இறைசித்தத்தை நிறைவேற்றினோம். அவரின் வழிகாட்டலுக்கு எம்மைக் கையளித்தோம். எமது நல்ல தாயார் மாறி டி நற்றிவிற்றியை அன்புடன் நினைத்துக் கொண்டோம்.

## ஐப்பசி 23

காலை 7 மணியளவில் ''ஸ்ரொம்பிலி'' (Stromboli) அண்மையில் தெரிந்தது. கடலலைக்கு மேலாக அதன் எரிமலை தெரிந்தது. இரவில் அது நன்றாக எரிவது தெரியும். அதனடியில் ஒலிவ் மரங்களும், திராட்சையும் பயிரிடப்படுகின்றது. இதனைச் சூழ மக்கள் உள்ளனர். ஆபத்து வரும் போது வேறு இடம் சென்று முடிந்த பின் திரும்பத் தம்மிடம் வருவர். சிறிது சிறிதாக இத்தாலி வர மெசின் (messine) நீரிணை றெஜியோ அங்குள்ள அம்பி தியோட்டர், மத்தியதரைக்கடலில் தோன்றியது. அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசித்துக் கொண்டிருக்கும் போது பேரலைகள் தோன்றக் கப்பலும் அசைய உடலில் அசௌகரியம் ஏற்பட்டது.

### ஐப்பசி 24

அதிதூதரான றவாயேலின் திருவிழா. பிரயாணிகளின் பாதுகாவலர். அவரின் துணையால் மீளவும் கடல் பழைய நிலைக்கு வந்தது. பிள்ளைகள் விளையாட்டில் ஈடுபட்டனர். நாளை நாம் (Portsaid) போட்செயிட் துறைமுகம் செல்வோம். அங்கு இருந்து இந்தச் செய்திகளை அனுப்பிவைக்கிறோம். இதன் மூலம் எம் முதற் பகுதிப் பிரயாணம் பற்றிய தகவல்களை அறிய முடியும். மீளவும் எம் நன்றியைக் கூறுகின்றோம்.

### ஐப்பசி 26

'செயிட்' துறைமுகம் - எமது கப்பல் எண்ணெய் எடுக்கத் தரித்து நின்றது. அப்போது பல படகுகள் எமது கப்பலை நோக்கி வந்தன. தம் பொருட்களை விற்க முனைந்தன. பொலிஸ்மார் உள்ளே நுழைய விடாதபடியால் தூரச் சென்றன. எனவே பயணிகள் கப்பலை விட்டு இறங்கி நகருள் சென்றனர். நாம் தனித்து விடப்பட்டோம். அப்போது கப்பல் அதிகாரி எம்மிடம் வந்து இலங்கையில் எம்பணிபற்றிக் கேட்டறிந்தனர். அவரின் பாராட்டினால் மகிழ்ந்து நாம் இறைவனுக்கும், புனித திருச்சபைக்கும், எம் சபைக்கும் நன்றி கூறினோம்.

சூரியன் மறையும் நேரம் எம் கவனம் ஓர் அரேபிய முகமதின் பக்கம் திரும்பியது. அவர் ஒரு தூய இடத்தில் வந்து கீழ்த்திசை நோக்கி அல்லாவை வணங்கி வழிபட்டான். 1/2 மணித்தியாலமாக, யார் பார்த்தாலென்ன அமைதியாகத் தன் வழிபாட்டைச் செய்தார். சில கத்தோலிக்கருக்கு இது விருப்பமில்லாவிடினும் நாம் இரக்கத்துடன் நல்ல இறைவனிடம் வேண்டினோம். 7மணிக்குப் பயணிகள் நகருக்குச் சென்று மீளவும் வந்தவுடன் கப்பல் ''சுயெஸ்'' கால்வாயினூடாகச் சென்றது.

### ஐப்பசி 27

இரவில் ஒரு மேகக்கூட்டம் கப்பலின் வேகத்தைத் தடுத்தது. பகல் வேளையிலும் பிரான்ஸ் கொடியுடன் சென்ற 2 படகிற்கு வழிவிட்டது. தற்போது நாம் பெரிய, பழைய ஞாபகங்களைத் தாங்கும் நாடுகளைக் கடக்கின்றோம். இறைவனின் மக்களின் மீட்பின் வரலாற்றில் நடைபெற்ற சம்பவங்களைக் காட்டும் இடங்களல்லவா? தூரத்தில் இறை விரலால் எழுதப்பட்ட சட்டங்களைத் தாங்கிய கற்பலகையை மோயீசன் பெற்றுக் கொண்ட சீனாய் மலை உச்சிதென்படுகின்றது. மிகத்தொலைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலைவனமும், ஜெருசலேம் வலது பக்கத்திலும், எகிப்து இடது பக்கத்திலும், வாக்களிக்கப்பட்ட பூமிக்கு செல்லுமுன் 10 கோத்திரங்களும் 40 வருடம் அலைந்த இடங்களும் தென்படுகிறது. தினமும் மன்னாவினாலும், பாறையில் மோசேஸ் தட்ட வந்த நீராலும் இஸ்ராயேல் மக்கள் போஷிக்கப்பட்டனர். திருக்குடும்பமும் ஏரோதின் குடும்பத்திற்குத் தப்ப இவ்விடங்களுக்கு வந்து எகிப்து சென்று பின்பு திரும்பி வந்தனர். செங்கடலினூடாக எமது கப்பல் சென்று வருவது போல் யாக்கோபின் பிள்ளைகளும் பாரவோன் படைவீரர் துரத்திய போது இக்கடல் வழிவிட்டது. இந்த ஞாபகங்கள் எம் கலந்துரையாடலில் இடம் பெற்றது. அத்துடன் இறைவனையும் நினைக்கச் செய்தது. இது இறைநம்பிக்கையை அதிகரிக்கச் செய்து எமது அழைப்பிற்கும் நன்றியுடையவர்களாக இருக்கச் செய்தது. திருக்குடும்பச் சபையின் மறைத்தூதர்களாக, அயல், தூர நாட்டுக்குச் செல்லவும்,இயேசுவின் பத்தினிகளாக இருக்கவும் வழிவகுத்தது. இந்தப் பலியானது,எம்மை உணரச் செய்தாலும், எம் தலைவிகளின் விருப்பத்திற்கிணங்க எம் பணிகளுக்காக நாம் எம்மை இறைவனுக்கு அர்ப்பணிக்கின்றோம்.

## ஐப்பசி 29

(ஞாயிற்றுக்கிழமை) திருப்பலி இல்லாதது, துறவிகளாகிய எமக்கு துயரத்தைத் தந்தாலும், தரையில் பூசை ஒப்புக்கொடுக்கும் குழுக்களுடன் எம்மையும் சேர்த்தோம். புரட்டஸ்தாந்து பயணிகளுக்கும், போதகர் இல்லாவிடினும் கப்பற் தலைவன் வழிபாட்டை நடாத்தினான். பாடல்களை நாம் கேட்டாலும் அவர்களுக்காக நாம் செபித்தோம்.

## ஐப்பசி 31

இந்து சமுத்திரத்தில் வந்துவிட்டோம். வெப்பநிலை உயர்கிறது. எம்முடன் வந்த நவகன்னிகை, இலங்கையில் இவ்வாறான களைப்படையச் செய்யும் வெப்பநிலையா? என எம்மை வினவியபோது,நாம் அவவை அமைதிப்படுத்த அவ மீண்டும் ஊக்கம் பெற்றா. பயணிகள் எம தூய உடையைப் பார்க்கின்றனர். சிலர் எம் நாற்காலிகளைத் தூக்கி வெயில் இல்லாத இடத்தில் வைத்தனர்.

## கார்த்திகை 1

சகல புனிதர்களின் திருவிழா,எம்மைத் தவிர மற்றவர்கள் அதனை உணரவில்லை. நாம் மனத்தால் ''போர்டோ'' சென்று எம் தலைவிகளுடனும் விண்ணுலகில் நல்லபிதாவைச் சூழவுள்ள எம் தி. கு. சபைச் சகோதரிகளுடனும் இணைந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகை 2

சகல புனிதரின் திருவிழா போன்று சகல ஆன்மாக்களின் விழாவும் மிதக்கும் இந்த நகரில் (கப்பல்) கொண்டாட்டப்படவில்லை. உத்தரிப்பு ஆத்துமாக்களுக்குச் செபித்தோம். நாளின் தொடக்கத்தில் கடல் அமைதியாக இருந்தது. மதியத்தின் பின்பு கடும் மேகங்கள் நீலவானில் தோன்றவே அலைகள் தோன்றிக் கப்பலை அசைக்கப் பயணிகளுக்கு அசௌகரியங்கள் ஏற்பட்டன.

## கார்த்திகை 4

தொடர்ந்து இந்த நிலையில் கடல் இருந்ததால் உங்கள் பெண்களுக்கும் சுகவீனம் ஏற்பட்டது. ஒருவரை ஒருவர் தேற்றினோம். இறை அன்புக்காக இதை ஏற்று விரைவில் இது முடிவுக்கு வரும் என நம்பினோம்.

## கார்த்திகை 6

இரவு ஒரே களைப்பாக இருந்தது. காலையில் காலநிலை சீரானபடியால் மீளவும் என் பேனாவை எடுத்துள்ளேன். இறுதி நாட்கள் பயணம் நன்றாக இருக்கவில்லை. துறைமுகத்தை அடையவுள்ளோம். எமது தாயார்மார், சகோதரிகளின் செபங்கள் மூலம் பிரயாணம் நன்கு முடிந்தது. இதே வழியில் பயணித்த வேறு நீராவிக் கப்பல்கள் பலத்த சேதமுற்றன.

எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த நல்ல தாயார் மாறி டெலாநற்றிவிற்றி மிஷனறிச் சகோதரிகளைப் பாதுகாப்பாராக! யாழ் திரும்பியதும் 9 நாட்கள் திருப்பலி ஒப்புக் கொடுத்து அவவின் ஆன்மாவுக்காகச் செபிப்போம்.

## கார்த்திகை 7

சில மணித்தியாலங்களில் கொழும்புத் துறைமுகத்தை அடையவுள்ளோம். கப்பலில் இருப்பது இன்று இறுதிநாள். நேற்றைய நாள் அமைதியாக இருந்தது. பயணித்த சிறுவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பெரியவர்களுக்கும், விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசு கொடுத்தனர். எனவே இறுதி நேரம் ''லிசெஸ்ரேர்சிறே'' என்னும் கப்பலில் பயணித்தவர்களுக்கு ஒரு நல்ல அனுபவமாக இருந்தது.

இறுதிப் பயணத்தில் உங்கள் பெண்கள் மகிழ்ச்சி அடைந்தனர். எனவே, மீளவும் என் நல்ல தாயாரே, முழு உள்ளத்துடன் உங்களுக்கு நன்றி கூறுகிறோம். எனவே தாராள உள்ளத்துடன் இறைபணியைத் திருக்குடும்பச் சபையின் பெயரால் புனித. பிரான்சிஸ் சவேரியார் ஆரம்பித்த மண்ணில் பணிபுரியும் எம் ஆவலைத் தெரிவிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநாகல் - வைத்தியசாலை

எனது நல்ல தாயாரே!

தை மாதத்தில் இறைவன் எம்மைப் பாதுகாத்ததற்கு கடிதத்தின் தொடக்கத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். தியானத்திற்காக யாழ் சென்ற நாம் வெள்ளம் காரணமாகத் திரும்ப முடியவில்லை. ஒருவாறு வந்து சேர்ந்தோம். சிலநாட்களின் பின் இலங்கை ஆளுனரும் எம்மைச் சந்திக்க வந்திருந்தார்.

அவர் வைத்தியசாலையின் வளர்ச்சி பற்றி நல்ல அறிக்கை எழுதினார். இதன் பயனாக சகோதரிகளின் கட்டிடத்தைப் பெரிதாக்கவும், மேலும் ஒரு சகோதரியைக் கூட்டவும், இதனால் இராக்காவலுக்கு 2 சகோதரிகள் இருக்கவும் முடிந்தது. 200 பேருக்கு ஒருவர் போதாது. எனவே ஐரோப்பாவில் இருந்து ஒரு சகோதரி வருகை தந்துள்ளா. எனவே சகோதரி சென்ற். போல் ஐரோப்பா சென்று போர்டோவிலும் சில கிழமைகள் செலவிட்டு அவவைக் கூட்டி வந்தா.

1923ல் நடைபெற்றவை 5037 நோயாளிகள் இங்கு வந்து சென்றனர். 300 வளர்ந்தோர், 29 சிறுவர்கள் திருமுழுக்குப் பெற்றனர். 54 பேர் உறுதிபூசுதல் பெற்றனர். 2515 பேர் ஆலயத்தில் திருவிருந்தருந்தினர். 48 பேர் இறைவனின் பக்கம் திரும்பினர்.

வசதி படைத்தோருக்கான பணம் கட்டும் வாட்டிலும் (Ward) பல நன்மைகள் கிடைத்துள்ளன. ஒரு புரட்டஸதாந் இளைஞன் மரம் நடுவோன், முன்னைய வைத்திய அதிகாரியின் மகன். இங்கு விசுவாச உண்மையைக் கண்டறிந்தான். வீட்டிலே அவனை நன்கு பராமரித்தாலும், அவர் சகோதரிகள் மூலம் தன்னைக் குணப்படுத்த விரும்பினான். லூர்து மாதாவின் துணையை நாடியதால் நவநாள் செய்து செபித்தோம். தேவதாய் உடல் நலனிலும் பார்க்க ஆன்ம நலனைக் கொடுத்தாள். எனவே அவன் கத்தோலிக்கனாக இறக்க விரும்பியதால் நமது திருமறையின் உண்மைகளைப் படிப்பித்து திருமுழுக்குப் பெற்று இறந்தான்.

எம்முடன் வேலை செய்யும் ஒரு பெண் நோயுற்று வீடு திரும்பினாள். புத்த குருவிடம் சென்றனர். ஆனால் அவள் தனக்குத்திருமுழுக்குத் தரும்படி கேட்டு இறைவனில் அமைதி அடைந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஒரு சிங்கள இளைஞன் எம்முடன் பணிபுரிந்தான். செனவிரத்தினா என்னும் பெயர் கொண்ட புத்த மதத்தினன். போயநாட்களில் லீவு எடுத்து புத்த விகாரைக்குச் செல்வான். இவன் நோயுற்ற பின் சிங்கள வைத்தியரிடம் கொண்டு சென்றனர். பயனளிக்கவில்லை. அவன் எமது வைத்தியசாலைக்கு வரவிரும்பியதால் மடத்துத் தலைவி கார் அனுப்பி அழைத்துக் கொண்டா. சாகும் தறுவாயில் இருந்ததால் அவன் விருப்பைக் கேட்டனர். தான் தாயாரைப் போல அதே சமயத்தில் இறக்க விரும்புவதாகக் கூறியபடியால் விசுவாச உண்மைகளைப் படிப்பித்து புனித. இராயப்பர் பாதுகாவலில் திருமுழுக்குக் கொடுத்தோம்.

## குருநாகல் வகுப்புகள்.

குருநாகல் வைத்தியசாலை பணிகள் வளர்ச்சியடைந்திருப்பது போல, கல்விப் பணியும் வளர்ச்சியடைந்து தி. கு. சபைக்குப் பெருமை தேடித்தந்துள்ளது. கல்விப் பணியில் ஓர் ஆங்கில பாடசாலை ஒரு சிங்களப் பாடசாலை, ஒரு தொழிற் கல்விப் பாடசாலை திருப்பாலத்துவ சபையின் அநாதை இல்லம். எல்லாமாக ஏறக்குறைய 400 பிள்ளைகள் உள்ளனர். சனத்தொகையின் தேவைக்கு ஆங்கில பாடசாலை போதுமானதாக இருந்தபடியால் 1920ல் புரட்டஸ்தாந்து மக்களும் பாராட்டினர்.

இவ்வருடம் மாணவர் தொகை கூடியதால் கட்டிடம் பெருப்பிக்கப்பட்டது. 2 ஐரோப்பிய ஆசிரியர்கள் கற்பிக்கும் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பின்வரும் கடிதம் மார்கழியில் நடைபெற்ற விழாக்களின் எதிரொலியாக அமைந்துள்ளன.

என் நல்ல தாயாரே! அமல உற்பவத்திருநாள் பங்கிலும் மடத்திலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சகோதரிகளும் மாணவர்களும் இதற்கு ஆயத்தம் செய்தனர். அழகிய மடத்துச் சிறறாலயம் லீலிமலர்களால் அலங்கரிக்கப்பட்டது. எமது மாணவருக்கு ஒரு கிழமை தியானம் நடைபெற்றது. இறுதிநாளில் 14 அநாதை மாணவர்களுக்கு முதல் நன்மை வழங்கப்பட்டது. நீலஉடை, நீள வெள்ளைத்துப்பட்டி அணிந்தவர்களாக இயேசுவின் அன்புடன் உயிருள்ள நற்கருணைப் பேழையாகத் திருப்பலியில் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தனர். வீடு வந்த பின் தம் நண்பிகளுடன் இயேசுவின் பாதத்தில் நாள் முழுவதும் இருந்தனர். திருமுழுக்கு அர்ப்பணத்தைப் புதுப்பித்தல், தேவதாய்க்குத் தம்மை அர்ப்பணித்தல். அமல உற்ப அன்னையின் கொடியின் கீழ் 13 புதிய திருக்குடும்பப் பிள்ளைகளும் 10 விண்ணப்பதாரிகளும் (aspiremts)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்தல் போன்ற நிகழ்வுகள் மாலையில் இடம் பெற்றன. நற்கருணை ஆசீர்வாதத்துடன் எல்லாம் நிறைவெய்தியது.

இயேசு பிறப்பு விழாவும், குடும்ப விழாவாக அமைந்தது. தேவபராமரிப்புத்தரும் பொதுப்பணிகளில் நாம் எல்லோரும் ஈடுபட்டிருந்தோம். நள்ளிரவுத் திருப்பலி பங்குக் கோவிலில் நடைபெற்றது. மக்கள் பெரும் திராளாக வந்து திருவிருந்தில் பங்குபற்றினர். திருப்பலியின் பின் கிறிஸ்மஸ் கீதங்களை இசைத்த வண்ணம் சென்றனர். இலங்கையின் வெப்பம் தான் இக்காலத்தில் எம்மைத் துன்புறுத்துகின்றது. வெப்பநிலை ஏற்றத்துடன் வரும் தனிப்பட்ட துன்பங்களை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்து ஆன்மாக்களின் மீட்புக்கு ஒத்துழைப்புக் கொடுக்கிறோம். காலைத்திருப்பலி மடத்திலும் 3ஆவது திருப்பலி பங்குக் கோவிலும் நடைபெற்றது. சகோதரிகளும், மாணவர்களும் விசுவாசிகளுடன் சேர்ந்து மாலை வழிபாட்டிலும் பங்கேற்றனர்.

போர்டோவில் இருந்து இவ்வருடம் வந்த சகோதரிகள் தம் புதிய பணிக்குப் பழக்கப்பட்டுள்ளனர். ''பிள்ளைகளின் நடுவே எம் தியாக வாழ்வு'' என எழுதியுள்ளனர். சிங்களச் சிறுமிகளுக்குக் கிறீஸ்தவக் கல்வியைக் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். இதுவரை காத்துவரும் இறைவன் வருங்காலத்திலும் பாதுகாப்பார். அவர் கரத்தில் ஒரு வித பயமின்றி வாழ்கிறோம். எனவும் சேர்த்துள்ளனர்.

இறுதியாக வந்தவர்கள் ''மார்செயி'' துறைமுகத்தில் இருந்து ஐப்பசி மாதம் கப்பலில் வந்துள்ளனர். அங்கு கீழைத்தேச அப்போஸ்தலிக்க ஆயரின் ஆசீர் பெற்றனர். ''மார்செயி'' நம்பிக்கைக்களைச் சகோதரிகள் ஆயரின் சந்திப்பைப் பெற்றனர். அவரது உரையில் இலங்கைச் சகோதரிகளைப் புகழ்ந்து கூறியுள்ளார். அதனைத் தருகின்றோம்.

ஆயர் ''பிஜானி'' (Pizani) ஆண்டகை எமது சபைக்குத் தான் கடமைப்பட்டுள்ளதாகக் கூறுகின்றார். பின்பு இலங்கைச் சகோதரிகளின் பணி மெச்சத்தக்கதாக இருந்தன. அவர்களின் மகிழ்ச்சி முகத்தில் மலர்ந்ததாகக் கூறினார். துறவறவாழ்வு, வேலை, இன்பதுன்பங்கள் நிரம்பியது. இறை அன்புக்காகச் செய்யும் போது அது அர்த்தமுள்ளதாகின்றது. மகிழ்வுடன் பணியாற்றுவதையே இறைவன் விரும்புகிறார். ''அவர் நுகம் இனிது, அவர் சுமை எளிது'' இலங்கைக் குழு பற்றிய தனது சாட்சியத்தை சபைத் தலைவிக்கு அறிவிக்க வேண்டுமென ஆயர் கேட்டுக் கொண்டார். சகோதரிகள் அண்மையில் புறப்படவிருக்கிறார்களென அறிந்து ''திருத்தந்தை, எல்லாச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகளுக்கும் அவர்களின் பணிக்கும் அளித்த ஆசீரைக் கொடுத்தார்." எனக்கு அ. ம. திக் குருக்களை இலங்கையில் இந்தியா மட்டுமல்ல வட அமெரிக்காவிலும் தெரியும். St. Boniface, வன்கூவர் மற்றும் பல இடங்களிலும் இக்குருக்கள் எனக்கு நல்ல வரவேற்புத் தந்துள்ளனர். அவர்களின் பணிவாழ்வும் பாராட்டத்தக்கவை. ஆன்மாக்களுக்குப் பயனளிப்பவை. என்று கூறியுள்ளார்.

ஆயர் எம்மை விட்டு லூர்து நகருக்குச் சென்றார். அங்கு எளிமை, ஆர்வத்துடன் வாழும் எம் திருக்குடும்பச்சபைச் சகோதரிகளுக்கு அமலமரித்தாயிடம் செபிப்பேன் என வாக்குறுதி அளித்தார்.

## 1923 - ஆசியா

## வென்னப்புவா

இலங்கையின் வட பகுதியில், தமிழ்சகோதரிகளின் நவகன்னியர் இல்லம் இருப்பது போன்று, தென் பகுதியில் சிங்களச் சகோதரிகளுக்கு வென்னப்புவாவில் நவகன்னியர் இல்லம் உள்ளது. துறவிகளின் உருவாக்கம் பெற்று படிப்பித்தலுக்கு வேண்டிய திறமையைப் பெறுவதற்குப் பாடங்களுக்குச் சென்று வருவர். பின் அரசாங்கத்தால் தகைமை பெற்ற பின் கீழ்ப்படிதலினால் பெற்றுக்கொள்ளப்படும் பணித்தளங்களுக்குச் சென்று அங்கு பணிபுரிவர். நவகன்னியரர் இல்லம் தவிர வென்னப்புவாவில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியும், தொழிற் பாடசாலையும் இதன் தலைமையில் 28 சிறிய பாடசாலைகளும் உள்ளன. பாடசாலை லீவு காலத்தில், பணித்தளங்களில் பணிபுரியும் சகோதரிகள் இங்கு ஒன்றுகூடி ஆன்மீகப் பயிற்சியில் ஈடுபடுவர். சென்ற ஆடிமாதம் 22-29ந் திகதிகளில் 138 சகோதரிகளுக்கு ஒரு அமலோற்பவமரித் தியாக குருவின் வழிகாட்டல் கிடைத்தது. எல்லோரும் இலங்கைப் பிரதிநிதித் தாயாரின் பிரசன்னத்தைப் பாராட்டினர். அவரின் கரத்தில் தம் அர்ப்பணத்தையும் புதுப்பித்துக் கொண்டனர். ஆயத்தகன்னியர் சிலர் கன்னியரின் (Veil) தலைத் துகிலைப் பெற்றுக் கொண்டனர்.

எமது தியான நாளில் எழுந்தேற்றம் செய்யப்பட்ட நற்கருணைநாதரின் பாதத்தண்டை காலை 8.30 மணியில் இருந்து மாலை 5.30 மணிவரையும் இருந்து ஆராதனை செய்தார்கள் என செலஸ்ற் தாயார் எழுதியிருக்கின்றா. நற்கருணை ஆராதனை முடிந்த பின்பு தோட்டத்திலே இராக்கினியான தேவதாயைப் புகழ்ந்து பிரார்த்தனை சொல்லியும், பாடல்கள் பாடியும் "ஆவே மாறிஸ்ரெலா" கீதம் இசைத்தும் சென்றதைக் காணும்போது எம் தாயார் உள்ளம் மகிழ்ந்திருக்கும். அத்துடன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமே இயற்றிய ஓர் அர்ப்பணச் செபத்தையும், தியானத்தின் தீர்மானங்களையும், தம் பணித்தளங்களையும் தேவதாயின் பாதுகாவலில் வைத்தனர்.

எல்லாவற்றிலும் தம்மை உறுதிப்படுத்திய பின்பு ஊக்கத்துடன் தத்தம் பணித்தளங்களுக்குச் சென்றனர். அங்கு கத்தோலிக்கர் குறைவாகவே வாழ்கின்றனர். அங்கு சகோதரிகள் தண்டின் மேல் கொழுத்தப்பட்ட விளக்காக, அதைப் பார்ப்பவர்கள் ஒளியைக் கண்டடையவும் உதவுவார்களாக. ஆ! இந்த ஒளியின் பிரகாசத்தினால் எம் பாடசாலைகளில் உள்ள 4550 சிறுவர்கள் சிறப்பாக ஈர்க்கப்பட்டுப் பயன் அடைவார்களாக.

## 1923 - ஆசியா

## பம்பலப்பிட்டியா (கொழும்பு)

சென்ற இதழில் இவ்விடத்தின் பணியை லீலிப் பூக்கள் மலரும் இடம் என்று கூறியிருந்தோம். இன்று இந்த உயிர்ப் பூக்கள் கொய்து கட்டிய பூக் கொத்தாக ஒரு விழாவுக்கு அன்பினதும், நன்றியினதும் காணிக்கையாக இருப்பதாகக் தோன்றுகின்றது. தம் நறுமண வாசனையை கொழும்பு முதல் அதிமேற்றிராணியாரின் 25ஆவது அர்ப்பண வருடத்தில் கமழ்ந்ததை பின்வரும் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

என் நல்ல தாயாரே! ஆயர் கூடேர் (Coudevt) ஆண்டகையின் யூபிலி விழாவுக்கு தி.கு. சபைத் தலலவிகள் அழைக்கப்பட்டிருந்தனர். எனவே எல்லோரும் பம்பலப்பிட்டி மடத்தில் ஒன்றுகூடி ஆயரின் தந்தைக்குரிய தியாக சேவைக்கும், எம் சபைப் பணிக்கும் நன்றிகூற விரும்பினோம்.

கார்த்திகை 27ந் திகதி விழா தொடங்குவதற்கு ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு குழுவும் ஒருநாள் நேரம் பார்த்துத் தம் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். தி.கு. சபை முதலிடத்தை வகுத்தது. 1898ம் ஆண்டு கார்த்திகை 30ம் திகதி அன்று புனித அன்று திருநாளில்தான் ஆயர் தன் அர்ப்பணத்தைச் செய்திருந்தார். எனவே அந்த நாளை நாம் தேர்ந்தெடுத்தோம். ஒரு சகோதரி எமது உணர்வுகளைப் பகிர்ந்தபோது ஆயர் அதற்குப் பதிலளித்தார். பம்பலப்பிட்டியின் தாழ்மையான ஆரம்பத்தை எடுத்துரைத்தார். பின்பு அதன் முன்னேற்றங்களையும் நிரைப்படுத்தி, தற்போது தான் அதிமேற்றிராணியாராக இருப்பதற்குத் திருக்குடும்பச் சகோதரிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் தியாகத்தினால் பாதைகள் வகுத்தனர் எனக் கூறி திருக்குடும்பச் சபையின் ஒத்துழைப்புக்கு நன்றி கூறினார். பின்பு வெகுமதிகளைப் பாராட்டினார்.

பேசிக்கொண்டே விழா மண்டபத்திற்குச் சென்றோம். அங்கு 50 பிள்ளைகள் ஆயரை வரவேற்றனர். இது அவர் உள்ளத்தைத் தொட்டது. மேலும் 2குழந்தைகள் பூக்கொத்துடன் வர, ஒரு பெரிய பிள்ளை நன்றியுரை வாசித்தா. ஆயர் இந்த விழா ஆயத்தங்களுக்குப் பிள்ளைகளுக்கு நன்றி கூறி சகோதரிகளால் பிள்ளைகளுக்குக் கிடைக்கும் கல்விப் பணியைப் பாராட்டினார். வெறுமனே விஞ்ஞானத்தைக் கற்பியாது, உண்மையான விசுவாசத்தையும், மீட்பையும் தரும் கல்வியின் நன்மையைப் புகழ்ந்தார். "God Bless Our Pope" என்னும் பாப்பிறைக் கீதத்துடன் இனிதாக விழா முடிவுற்றது. இனிப்புகள் வழங்கப்பட்டு, ஒருநாள் பாடசாலை லீவும் கொடுக்கப்பட்டது.

வைகாசி மாதத்தில் வெளியான பரீட்சை முடிவில் கத்தோலிக்க நிறுவனங்களில் பம்பலப்பிட்டி மடம் முதலிடம் வகிக்கின்றது. அத்துடன் வேலையிலும் சித்தி பெற்றுள்ளது. 150 மாணவர்களில் 30பேர் பழைய மாணவர். எல்லோரும் வருடாந்த தியானத்தில் பங்கெடுத்தனர். பிதா ஜமேய் அடிகள் (Jamoays) தனது முதல் உரையில் இறைவனைச் சுவைக்கக் கூறி, அவரே எம் சிந்தனை, உணர்வு, செயல்களில் இருக்க வேண்டும் என்றார். ஒவ்வொரு உரையைத் தொடர்ந்தும் ஓர் ஆன்ம சோதனை இடம்பெற்றது. இளம் பிள்ளைகளுக்கு அவர்களின் வயதுக்கேற்றபடி விளக்கம் அளிக்கப்பட்டது. மாலை இறுதி மறையுரையில் எல்லோருக்கும் நற்கருணை அருட்சாதனம் பற்றி விளக்கப்பட்டது. இறுதித் தியான நாளின் முதல் மாலையில் மரியாள் பற்றி லூர்து மாதாவின் முன் சிந்திக்கப்பட்டது.

ஒளியினாலும், மலர்களினாலும் அலங்கரிக்கப்பட்ட அமலஉற்பவி பிள்ளைகளின் அர்ப்பணச் செபத்தைக் கேட்பது போல் தோன்றியது. இறுதித் தியான நாளில் இந்த அமதி குருவானவர் திருப்பலி நிறைவேற்றுகையில் தன் உள்ளத்தைத் திறந்து மரியாளைப் பற்றித் தம் இளம் பிள்ளைகளுக்கு எடுத்துரைத்தார். திருவிருந்துக்கு ஆயத்தம் செய்தல் பற்றியும் கூறினார். இவ்வருடத்தில் ஒரு சிறுமி முதல்நன்மையும் பெற்றுக் கொண்டாள். முதல் நாள் மாலையில் ஆசிரியை எவ்வாறு திருவிருந்து மேசையை அண்மிக்க வேண்டுமென்றும், ஆட்களின் பெயரை இயேசுவிடம் நன்றிச் செபத்தில் கூறும்படியும் எடுத்துரைத்தா. அந்த ஏழைச் சிறுமி சகோதரியைத் துக்கமாகப் பார்த்து, இவையெல்லாவற்றையும் என்னால் ஆங்கிலத்தில் இறைவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைக்க முடியாது..... என நீர் இதனைச் சிங்களத்தில் கூறலாம் என, இறைவனுக்குச் சிங்களம் விளங்குமா? என 'கட்டாயம்' எனப் பதிலிறுக்கப்பட்டது. எனவே மகிழ்வுடன் மறுநாள் தன் தாய் மொழியில் இயேசுவிடம் பேசினாள்.

சில நாட்களின் பின் அதாவது ஐப்பசி 25ம் நாளில் சிஸ். சென்ற் அம்புறோசின் மரணநாள் நினைவுகூரப்பட்டது. ஒவ்வொரு மாணவியும் தம் நன்றிக் காணிக்கையைக் கொண்டு வந்தனர். அதிகாலையில் ஒரு திருப்பலி அவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது. பங்குத் தளத்தில் ஒரு வழிபாடு நடைபெற்றது. போடிங் பிள்ளைகளும், வெளிப் பிள்ளைகளும் பாடசாலை வெள்ளைச் சீருடையணிந்து கறுப்புப் பட்டி அணிந்தனர். வேறு பொதுநிலையினரும் அதில் பங்கேற்றனர். அதைத் தொடர்ந்து சிலுவைப்பாதை சேமக்காலைச் சந்திப்பு, உண்டியல் இவற்றுடன் நாள் முடிவுற்றது.

எனவே எந்த வேளையிலும் இறைபராமரிப்பு, அனுப்பும் சகோதரிகள் மட்டில் நல்ல எண்ணங்களைப் பிள்ளைகள் பெற நல்ல இறைவன் இந்தச் சிறுவர்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

## 1923 - ஆசியா

### சிலாபம்

சிலாப மடத்துத் தலைவி 846 பிள்ளைகளைக் கொண்ட பாடசாலையை மேற்பார்வை செய்கின்றா. அடிக்கடி பாடசாலைக்குச் சென்று எம் சுதேச சகோதரிகளின் கல்விப் பணியில் ஊக்கம் அளிக்கின்றா. இப்பிள்ளைகள் வழியாகப் பல நன்மைகள் அவிசுவாசிகளான குடும்பங்களில் நடைபெறுகின்றன. புரட்டஸ்தாந், புத்த சமயத்தினர், இந்து மதத்தினர் மனம் திரும்பி வருவதால் கத்தோலிக்க சமயம் பரவி வருகின்றது. இங்கு பிள்ளைகள் தொகை கூடியதால் 2 சிங்களப் பாடசாலைகள், ஒரு தமிழ் பாடசாலை பெரிதாக்க வேண்டிய நிலையில் உள்ளது. எனவே மடத்துத் தலைவி தனது பணியின் பலன்களைப் பற்றி எடுத்துக் கூறுவா.

என் நல்ல தாயாரே! நற்கருணை யூபிலி ஆண்டு எமக்கு ஆன்ம நலன்களையும், 1923ம் ஆண்டு பாஸ்குக் காலத்தின் 2ம் ஞாயிறு (குவாசிமோடோ) ஞாயிறு எம்மைப் பணிக்கும் அனுப்பியது. எம் ஆவி, இதயம் எல்லாம் நல்லபிதாவின் சிற்றாலயத்திற்குச் சென்று அங்கு நற்கருணை புதுமை நடைபெற்ற கதிர்பாத்திரத்தில் உள்ள இயேசுவை ஆராதித்து வணங்கியது.எமது தாயார், சகோதரிகள் எமக்காகச் செபிப்பது எமக்கு ஆறுதல் அளிக்கின்றது. தபக் காலத்திலும் எம் கிறிஸ்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபம் செய்வர். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் காலை 7மணி தொடங்கி மாலை 7மணி வரையும் 3மொழிகளிலும் சிலுவைப்பாதை நடைபெறும். ஒன்றன் பின் ஒன்றாகக் குழுவாக செபிப்பர். பின்பு நகரில் உள்ள 6 பாடசாலைப் பிள்ளைகளும் தனித்தனியாகச் செபிப்பர். தொடர்ந்து சிங்கள, தமிழ் மக்கள் வந்து செபிப்பர். இறுதியாக நூற்றுக் கணக்கான ஆண்கள் ஒவ்வொரு ஸ்தலத்தின் முன்பாகவும் பாடிச் செபித்து மனஸ்தாபச் செபம் சொல்லுவார்கள். இறைவன் இவர்களின் விசுவாச முயற்சியைக் கண்ணுற்று தன் இரக்கப்பார்வையை இலர்கள் மேல் திருப்புவார் எனத் தோன்றுகின்றது.

ஆங்கிலப் பாடசாலையில் திருஇருதய அபிஷேகம் செய்த ஆண்டு நினைவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வகுப்பறை ஆலயமாக மாற்றப்பட்டது. படத்தைச் சுற்றிவர பசுமையான இலைகள், மலர்கள் , ஒளியினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாணவர்கள் சமய வேறுபாடின்றி அலங்கரிப்பதில் ஈடுபட்டும் வழிபாட்டிலும் பங்கேற்றனர். அருட்தந்தை மாசோன் (masson) திருஇருதய ஆண்டவரில் மாணவரின் கடமை பற்றி எடுத்தியம்பினார். எம் அரசராக அவரை ஏற்று அவரிடம் செல்ல வேண்டும் என்றார். இதைக் கேள்வியுற்ற புரட்டஸ்தாந்து மாணவிகள் "எமது பாஸ்ரர் இவ்வாறு கூறுவதில்லை" கத்தோலிக்க குரு நல்ல முறையில் வாழுவதற்குரிய செயற்திட்டங்கள் பற்றிப் பேசுகின்றார் என்றனர். அவர்களிடம் நற்கருணை இயேசுவின் பிரசன்னம் பற்றாக்குறையாகவுள்ளது. செபம் எம் முயற்சிகளை ஆதரித்துப் பணித்தளத்தில் இறைசித்தத்தை நிறைவேற்ற உதவிபுரிகின்றது.

50 சிறுமிகளை முதல்நன்மைக்கு ஆயத்தம் செய்து அவர்கள் புரட்டாதி மாதத்தில் வேறு 50 பங்குச் சிறுவர்களுடன் முதல்நன்மை அருந்தினர்.

அவர்கள் செய்த தவறுகளை உணர்த்த ஆன்மசோதனை செய்யும்படியும் ஆசிரியை கூறினா. பாவங்களை இறைவன் விரும்புவதில்லை என ஒரு சிறுமி உணர்ந்து தன் பாவங்களையும், பிறர் பாவங்களையும் மன்னித்து ஒப்புரவு செய்ய வேண்டுமென்றாள். பின்பு என் நண்பி இதைச் செய்தா. என் மூத்த சகோதரி அதைச் செய்தா.... அமைதியில் ஒரு சில நிமிடங்கள் கழிந்தபின், இவைகள் திருஇருதயத்தினை நோகச் செய்வதினால் கட்டாம் இவற்றில் இருந்து விலகி எம் இறைவனை ஆறுதல்படுத்த வேண்டும் என்றார். திருவிருந்தை அடிக்கடி பெறும்போது கத்தோலிக்கப் பிள்ளைகள் நல்ல குணங்களை விருத்தி செய்கின்றார்கள். இது அவர்களின் நண்பிகள் எச்சமயத்தைச் சார்ந்தவர்களாயினும் அவர்களை ஈர்க்கின்றது. எமது மடம் ஆலயத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் அமைந்துள்ளதால் ஆலயவழிபாடுகளிலும் குழுமம் பங்கெடுக்கின்றது.

மார்கழி 8ந் திகதி அமல உற்பவ திருநாளில் ஒளியுடன் கூடிய பவனி இடம் பெற்றது. 2000க்கும் மேற்பட்டோர் இதில் பங்குபற்றினர். முதலில் சகல பாடசாலை மாணவர்களும் அதைத் தொடர்ந்து தமிழ், சிங்கள மக்களும் தத்தம் மொழியில் செபித்துப் பாடிச் சென்றனர். இடையிடையே "ஆவே மரியா" "மரியே வாழ்க" "ஆவே மாறிஸ்ரெலா" சமுத்திரத்தின் நட்சத்திரமே வாழ்க என்னும் பொதுப்பல்லவி இசைக்கப்பட்டது. ஒரு மைல் தூரத்திற்கு செபமாலை ஓதும் சத்தம் கேட்டது. மின்னொளியினால் அலங்கரிக்கப்பட்ட பரலோக இராக்கினியின் வெண் சுரூபம் ஆண்களால் தூக்கி வரப்பட்டது. இது லூர்து கெபியை நினைவூட்டியது. அதைத் தொடர்ந்து சனத்திரள் முழந்தாட்படியிட நற்கருணை ஆசீர் நடைபெற்றது.

மார்கழி 4ந் திகதி பரிசளிப்பு விழா. நண்பர்களும், நன்கொடையாளர்களும் இவ்வருடத்தில் இதை நடைமுறைப்படுத்த உதவினர். அருட்தந்தை லெகொக் (Legoe) தலைமையில் இவ்வைபவம் நன்கு நடைபெற்றது. கிறிஸ்தவக்கல்வி பற்றி அவர் உரையாற்றினார். புரட்டஸ்தாந்து பிள்ளைகளும் படிப்பதனால் பெற்றோரும் சமூகமளித்திருந்தனர். பலத்த கரகோஷம் நடைபெற்றது. பரிசளிப்பு வைபவத்தின்போதும் இடையிடையே இளம் நடிகர் நடித்தனர். இசைப் பாட்டியிலும் (MUSIC) பலர் சித்தி பெற்றனர். இறைவன் போற்றப்படுவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநாகல் வகுப்புகள்

மாறிடி சென்ற் பியர் அநுராதபுரத்தை விட்டு குருநாகல் சென்றார். மலைகள் மேட்டு நிலங்களில் தேயிலைச் செடிகள் நாட்டப்பட்டிருந்தன. தொடர்ந்து ''யானை'' மலையும், புகையிரதநிலையத்திற்கு அண்மையிலேயே மடமும் அமைந்திருந்தது. மரியாளின் கீதம் பாடிக்குழுச் சகோதரிகள் தாயாரை வரவழைத்தனர். விறாந்தையில் அநாதைச் சிறுவர்களும் நின்று வரவேற்றனர். நீலநிற உடையுடன் அழகாகக் காணப்பட்டனர். வீதியின் மறுபக்கத்தில் அநாதை இல்லம் அமைந்திருந்தது. மறுநாள்காலையும் ஆங்கில பாடசாலை மாணவர்கள் முன்பள்ளி மாணவர்களுடன் இவர்களும் வந்திருந்தனர்.

50 அநாதைப் பிள்ளைகள் இனியபாடல்கள் இசைத்து உடற்பயிற்சியும் செய்து காட்டினர். தையல் கைவேலைகளையும் காண்பித்தனர். றோஸ்டிலீமாத்தாயாரின் காலம் நிறைவு பெற்று பம்பலப்பிட்டிக்குச் செல்ல இருந்ததால், அவவைத் தங்களுடன் வைத்திருக்க விரும்பினார்கள். அதே நாளில் கொழும்பில் இருந்து சென்ற். செபஸ்ரியன் தாயார் வந்திருந்தா. இப்புதிய இடத்திற்குத் தாயார் அவவை நியமித்தா. குருநாகலில் 14 சகோதரிகள் இருந்தனர். ஆங்கில பாடசாலை முன்பள்ளி அநாதை இல்லம், சுதேச பாடசாலைகளை நிர்வகித்து வந்தனர். 200 பிள்ளைகள் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்றனர். போடிங் பிள்ளைகள் 20 பேர் இருந்தனர். தமிழ், சிங்களப் பாடசாலையில் சரிசமானான பிள்ளைகள் கல்வி கற்றனர். அநாதை இல்லத்தில் எல்லோரும் கத்தோலிக்கர். மக்கள் ஆசிரியர்களைப் பாராட்டினர். புரட்டஸ்தாந்து பாடசாலையில் 4 பிள்ளைகளே இருந்தனர்.

எல்லாப் பிள்ளைகளும் ஒன்று சேர்ந்து தாயாருக்குப் பாடல்கள் இசைத்தனர். ஞாயிற்றுக் கிழமைகளில் பங்குக்கோவிலுக்கு ஏராளமான மக்கள் வருவார்கள். ஆண்களின் குரலும் வழிபாட்டில் கேட்கப்படும்.

## குருநாகல் வைத்தியசாலை

பிள்ளைகளின் படிப்பைப் பார்வையிட்டபின் தாயார் வைத்தியசாலையில் தாதிப்பணியாற்றும் சகோதரிகளைச் சந்திக்கச் சென்றார். ஒரு மடத்தில் இருந்து மற்ற மடம் தூரத்தில் இருந்ததால் மாட்டுவண்டியில் சென்றனர். முத்து சாரதி சூ,சூ என்று மாட்டைக் கலைத்துச் சென்றார். வைத்தியசாலை கிராமப்புறத்தில் அமர்ந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மரங்கள் நிழல் கொடுத்தன. சகோதரிகளின் வீடு தனியாக அமைந்திருந்தது. தாயார் 10 மணிக்கு அங்கு வந்தா வைத்தியர்கள் சந்திப்புக்குச் சென்றனர். தாதிமார் சமுகமாக நின்றனர். சென்ற். செபஸ்ரின் தாயார் தன் தள்ளா வயதிலும் அங்கு நின்றார். அவவின் அழைப்பைக் கேட்டதும் சகோதரிகள் புறாக்கள் போல் பறந்து வந்தார்கள். விறாந்தையுடன் 14 அறைகள் இருந்தன. அதில் நோய்களுக்கேற்றவாறு அவர்களின் படுக்கை அமைந்திருந்தது. எல்லாக் கட்டில்களும் நிரம்பிய பின் இடமில்லாதோர் பாய்களை விரித்துப் படுத்திருந்தனர். வேறொரு அறையில் காயப்பட்டவர்களை வைத்தனர். வேறொன்றில் மரண ஆபத்தில் இருப்பவர்களை விட்டனர். அங்கு மனமாற்றங்கள் இடம்பெற்றன. ஏழைகள் பலர் இங்கு வருவார்கள். இறைத்தூதர் போல் எம் சகோதரிகள் அங்கு பணியாற்றுவர். சிலர் தாம் சந்தித்த கோவில்களின் பெயர்களைக் கூறி உ+ம் (மடு, தலைவில்லு) மனம் மாறக் கேட்பார்கள். சிலர் முதலில் மறுத்தாலும் புனித. திரேசாளின் பரிந்துரையால் பின்பு மனம் மாறக் கேட்பார்கள்.

இரவில் நோயாளிகளைக் கவனிக்கும் தாதிமார் பகல் நேரப்பணியாளர்களிடம் நோயாளிகளின் நிலைமை பற்றிக் கூறுவார்கள். சில சகோதரிகள் நோயாளிகளுக்கு இறைவார்த்தையை எடுத்துரைத்துத் திருமுழுக்குக் கொடுத்து இறை குடும்பத்தில் சேர்க்க வாய்ப்பாக இருந்தது. இவ்வாறு வளர்ந்தோருக்கு 211 திருமுழுக்கும் 25, குழந்தைகள் திருமுழுக்கும் நிறைவேற்றப்பட்டது. 55 பேர் பலவருடங்களின் பின் இறைவன் பக்கம் திரும்பியுள்ளனர். 4516 பேர் பராமரிக்கப்பட்டுள்ளனர். பலர் சுகம் பெற்றுச் சென்றுள்ளனர். 33 வருடங்களாகப் பணி நடைபெற்று வருகின்றது. 6839 பேருக்கு ஆசைஞானஸ்நானம் வழங்கப்பட்டது. தினமும் திருப்பலி நடைபெறுகின்றது. ஞாயிறு திருப்பலிக்கும் தூரத்தில் இருந்து வருவார்கள். 4750 திருவிருந்து அளிக்கப்பட்டுள்ளது.

27 தை பம்பலப்பிட்டிக்கு வந்து அங்கு திரிதின வழிபாடுகளில் பங்கு கொண்டோம். 29ம் திகதி இரவு எம் சபை தலைமை இல்லத்தில் மாறிடி சென்ற் ஜேன் ஜில்பேற்றின் சகோதரி இறந்து விட்டா என்ற செய்தி கிடைத்தது. பழைய சகோதரிகளை இலங்கைக்கு உருவாக்கியிருந்தா. எனவே கவலைப்பட்டனர். எனினும் நற்கருணைப் புதுமை நடைபெற்ற தினங்களில் இறந்தபடியால் இந்த மகிழ்ச்சியில் பங்கு பெறுவா என நம்பினோம்.

## வென்னாப்புவா

மாசி 1ந் திகதி கொழும்பில் இருந்து வடக்கு நோக்கி வென்னாப்புவா சென்றோம். இந்து சமுத்திரத்தின் அருகே கறுவாத்தோட்டங்களினூடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெயில் பாதை சென்றது. நீர்கொழும்பைக் கடந்து சென்றபோது 1910ம் ஆண்டு ''வெரோணிக்'' தாயார் மாட்டுவண்டியில் வென்னாப்புவா சென்றதை செனற். பியர் தாயார் நினைவு கூர்ந்தார். 2 மணித்தியாலப் பயணம் புகையிரதம் ''லுணுகலா'' வரையும் கொண்டு செல்ல ''சேக்கிறட்ஹாட்'' தாயாரும் உதவிச் சகோதரியும் ஒரு காருடன் வந்து நின்றனர். உடனே புகையிரத நிலையத்தில் இருந்து மடத்திற்கு அழைத்து வந்தனர். ஆலயம் திறந்தவெளியில் இருந்தது. எல்லோரும் பிரான்ஸ் தாயாரைப் பார்த்தனர். எல்லா இடமும் கொடிகள், மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆசிரிய கலாசாலை மாணவர்கள் அணிவகுப்புடன் தாயாரை வரவேற்றனர். மூன்று மாதமாக அவவின் வரவைக் காத்திருந்த இவர்களுக்கு லீவு வழங்கப்பட்டது.

சுதேச சகோதரிகள் நவகன்னியருடன் சேர்ந்து இல்லத்தின் பொது அறை (Community) யை அலங்கரித்திருந்தனர். அயற்கிராமச் சகோதரிகளும் வந்திருந்தனர். ஒரு மூத்த சகோதரி உணர்ச்சிப் பூர்வமான ஒரு உரையை வாசித்தா. அதே வேளை பலகாலமாக ஆயத்தப்படுத்தப்பட்ட செபம், புண்ணியங்கள் அமைந்த ஒஸ்திகள் போன்று நற்கருணைப் பாத்திர வடிவில் செய்த ஞானப்பூக்கொத்து ஒன்று வழங்கப்பட்டது. நன்றியுரையின் போது தாயார் குடும்பச் செய்திகளைப் பரிமாறினார். பின்பு சிறிய பணித்தளங்களுக்குச் செல்லும் தன் விருப்பைத் தெரிவித்தார். அப்பொது எல்லோரும் மகிழ்ச்சியடைந்தனர்.

## சிலாபம்

ஒழுங்குபடுத்தப்பட்டபடி முதலாவது சிலாபத்திற்குச் சென்றனர். இப்பணித்தளம் கடலருகே உள்ளது. வென்னாப்புவாவில் இருந்து ஒரு மணித்தியால புகைவண்டிப்பயணம். மடமும் ஆலயமும் வீதியால் மட்டுமே பிரிக்கப்பட்டிருந்து. மடத்தில் ஒரு சிற்றாலயம் உள்ளது. உள்ளே செல்லும் போது இடது பக்கத்தில் ஆங்கில பாடசாலையும், வலதுபக்கத்தில் போடிங்கும். தூரத்தில் 2 சுதேச பாடசாலைகளும் இருந்தன. பல காலமாக ஆயத்தப்படுத்திய கலை நிகழ்ச்சிகளைச் செய்து காட்டுவதில் பிள்ளைகள் மகிழ்ச்சியடைந்தனர். ஆங்கில பாடசாலை நன்றாக அலங்கரிக்கப்பட்டுப் பிள்ளைகள் வெள்ளையும், நீலமும் சேர்ந்த சீருடை அணிந்தவர்களாக நெஞ்சிலே சின்னம் அணிந்து அழகாகக் காணப்பட்டனர். ஆயத்த கன்னியர் மூவரும் காணப்பட்டனர். பாடசாலை திருஇ.ருதயநாதருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு மாட்டு வண்டியில் கட்டிடப் பொருட்களை ஏற்றிச் சென்ற போது மாடுகேற்றடியைத் தாண்டிச் செல்லாமல் அங்கேயே நின்றது. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் இந்தப் பணியில் தங்கள் பங்களிப்பைக் காட்ட வேண்டுமெனச் சுட்டிக் காட்டியது. மகிழ்வுடன் பிள்ளைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திற்கு கற்களைப் பொறுக்கிச் சென்று மாசி 11ந் திகதி கெபிகட்டிமுடிக்கப்பட்டது. தேவதாய் பேர்னதேத் அம்மாளுக்குக் காட்சி அளித்த நாளில் லூர்த்து மாதா சுருவம் நூற்றுக் கணக்கான பிள்ளைகளால் தூக்கி வரப்பட்டு வைக்கப்பட்டது.

''ஆவேமறியா'' இசைக்கப்பட்டது. அருட்தந்தை மாசோன் (Masson) இந்த வழிபாடுகளுக்குத் தலைமை தாங்கினார். தமிழ், சிங்கள மாணவர்கள் கண்ணைக் கவரும் உடையணிந்து நின்றனர். அவர்களுள் 70 பேர் சென்ற புரட்டாசி மாதம் முதல் நன்மை பெற்றனர். 7,8,9 வயதுப் பிள்ளைகளை முதல் நன்மைக்கு ஆயத்தப்படுத்துவது கஷ்டமானது. எனினும் இயேசுவைப் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு ஆர்வம் இருந்தது. எழுதவாசிக்கக் கஷ்டப்படுவர். எனவே செபம், மறைக்கல்வியைப் பாடம் செய்வர்.

கொழும்பு அதிமேற்றிராணியார் வந்த போது 300 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் அளித்துச் சென்றார். பின்பு சகோதரிகளைச் சந்தித்து உரையாடிச் சென்றார்.

வென்னாப்புவாவுக்குத் திரும்பி வந்த போது சென். பியர்தாயார் ஒரு சுதேச சகோதரி சென்ற் றேமனற் அவர்களின் மரணச்சடங்கில் பங்குபற்றினார். சிறிய பணித்தளங்களில் பணியாற்றி வந்த சகோதரி நோய் காரணமாக வென்னாப்புவாவுக்கு வந்தா. சென்ற் பிறசீட்தாயார் அண்மையில் இருப்பதை உணர்ந்த சகோதரி தாயார் புடைசூழ திருக்குடும்பச் சபையில் இறப்பது எவ்வளவு நல்லது என்றார். பின்பு மதிய மணி ஒலிக்கும் போது இறைவனடி சேர்ந்துவிட்டார். மாதத்தின் முதல் வெள்ளியானபடியால் இறுதிச் சடங்குத் திருப்பலி கோவிலில் நடைபெறவில்லை. திருவிருந்து கொடுக்கப்பட்டு நற்கருணை ஆசீர் நிறைவேற்றப்பட்டது. 9 மணிக்கு இறுதி ஊர்வலத்தில் ஆயத்தகன்னியர், நவகன்னியர், ஐரோப்பிய சகோதரிகள், இங்கைச் சகோதரிகள் அயலில் உள்ள சகோதரிகள், மாணவர்கள், பெற்றோர்கள் பங்குபற்றினர். பீற்றர் தாயாருக்கும் முன் இறந்த சகோதரிகளை சிறப்பாக செலஸ்ற்சீமோன் தாயாரின் கல்லறையைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவவின் கல்லறை 1924ம் ஆண்டு திறக்கப்பட்டது.

வென்னாப்புவா ஆசிரிய கலாசாலை மாணவிகள் தினமும் 6 மணிக்குத் திருப்பலிக்குச் செல்வர். அதே வேளை சகோதரரால் வழிநடத்தப்படும் மாணவர்களும் வந்து திருப்பலிச் செபங்களில் முறைப்படிபங்கேற்பர். திருப்பலி முடிந்து மடத்திற்கு வந்து பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை செல்வார்கள். மாசி 11ந் திகதி ''றாகம'' என்னும் இடத்தில் லூர்து மாதாவுக்கு யாத்திரை நடைபெற்றது. இந்த வருடம் கனடாவில் இருந்து வடமேல்பகுதி ஆயர் Breynat (பிறேனா) தலைமையில் இந்த யாத்திரை நடைபெற்றது. அதுமுடிந்ததும் ஆயர் வென்னாப்புவா வந்தபோது சிறுவர் தோட்டத்தில் இருந்த லூர்து கெபியில் மெழுகுதிரி ஏற்றி செபமாலை ஓதிப் பாடுவதைக் கண்டார். அன்று நற்கருணை ஆசீர்மடத்துச் சிற்றாலயத்தில் நடைபெற்றது. ஆயத்தகன்னியர், நவகன்னியர் சூழ கோவில் நிரம்பியது. மற்றவர்கள் விறாந்தையிலும் பொது அறையிலும் இருந்தனர். சிறுவர்கள் புற்றரையில் உட்கார்ந்தனர். தென்னை மரங்களுக்குக் கீழும் முழந்தாளில் இருந்தனர். சிறிய பணித்தளங்களைப் பார்வையிட்ட பின் தாயார் கொழும்புக்கு திரும்பினார். அங்கு அ. ம. தி. குருக்களின் ஒழுங்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் பங்குபற்றினா. சகோதரிகளுக்கு அதிமேற்றிராணியாரின் ஆலயத்தில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அ. ம. தி. க்குருக்களின் இந்த நன்றி விழாவில் கலந்து மகிழ்ந்தனர்.

மாசி மாதத்துடன் இலங்கைத் தரிசிப்பு முடிவுற்றது பங்குனி 1ந் திகதி (artagnan) ஆட்டக்ன-ன்- என்னும் கப்பல் கொழும்பில் தரிக்க வந்தது. குருக்களும் அதில் இருந்தபடியால் திருப்பலி நிறைவேற்ற முடிந்தது. சென். பிறக்சீட்தாயார் எல்லாத்தலைவிகளையும் அழைத்து தாயார் செல்லும் போது வழியனுப்பத்தாயாரானார். மாசி 26ந் திகதி யாழ்ப்பாணம் இளவாலை, அனுரதபுரம், குருநாகல், வென்னாப்புவா மடத்தத் தலைவிகள் வந்திருந்தனர். சென்ற். செபஸ்ரியன் தாயார் காய்ச்சல் காரணமாக வரமுடியவில்லை. பீற்றர் தாயார் இறுதியாக இவர்களின் ஒன்றுகூடலில் கலந்து கொண்டு சந்திப்பின் போது பெற்றுக்கொண்ட ஆசீருக்கு நன்றி கூறினா. பங்குனி 1ம் திகதி மாலை பிரியாவிடைகூறப்பட்டது. சிலர் கப்பல் வரையும் கூட்டிச் சென்று அவவின் பயணத்தைத் திருக்குடும்பம், நல்லபிதாவின் காவலில் வைத்தனர். 1861ம் ஆண்டு தொடங்கி இந்த ஆன்ம அறுவடை நடைபெறுகின்றது. 3 கிழமைக்குப் பின் பங்குனி 20ம் திகதி மார் செயித்துறைமுகம் கப்பல் சேர்ந்தது. நன்றித் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பங்குனி 23ம் திகதி போர்டோ சென்று 2 மாதத்தின் பின்பு மாறிடெ சென்ற் ஜேன் நாட்டுக் காற்றைச் சுவாசித்தா. எனினும் அவவின் பிரயாணங்கள், வேலைத்திட்டங்கள், பற்றிய அறிக்கை அடுத்து வரும் (Annals) இல் பிரசுரிக்கப்படும். எல்லாம் எம் நல்ல பிதாவின் மகிமைக்கு உதவுவதாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்னாப்புவா

சென்ற். பிறக்சீட் தாயார் தலைமையில் வென்னாப்புவாவில் புரட்டாசி 1 - 8ந் திகதிகளில் சிங்கள சகோதரிகளுக்கு வருடாந்த தியானம் நடைபெற்றது. குருவானவரின் மறைஉரைகளைச் சகோதரிகள் நன்கு கேட்டனர். இறுதிநாளில் 7 நவகன்னியர்கள் துறவற உடைபெற்றனர். 5 பேர் நித்திய அர்ப்பணம் செய்தனர். தியானம் செய்த சகோதரிகள் அனைவரும் தமது வாக்குறுதிகளைப் புதுப்பித்தனர். அந்த நாளில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு இறுதியில் திருக்குடும்பத்தின் அர்ப்பணச் செபத்துடன் 7 இளம் பெண்கள் ஆயத்தகன்னியராகச் சேர்க்கப்பட்டனர்.

மறுநாள் பங்குக் கோவிலில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. காலை உணவின் பின் எல்லோரும் தத்தம் மடங்களுக்குச் சென்றனர். ஆசிரியகலாசாலை மாணவர்களுக்கு புரட்டாசி 21 - 25 திகதிகளில் விசேட தியானம் நடைபெற்றது. 3 பிள்ளைகள் படிப்பு முடிந்து ஆயத்த கன்னியர்களாகச் சேர்ந்தனர். ஐப்பசி மாதத்தில் பாடசாலை அதிகாரிகள் கத்தோலிக்க பாடசாலைக் குருவுடன் சேர்ந்து வென்னாப்புவா பாடசாலையைச் சந்திக்க வந்தார்கள். சேர். றொபின்சன் எமது சமயத்துக்கு ஆதரவு காட்டியதால் இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

ஐரோப்பிய கடற்படைகள் ஏழைப் பிள்ளைகளுக்கு உடைகள் அனுப்பியிருந்தனர். இந்த வெகுமதிகள் பங்குக் குருவின் தலைமையில் நத்தார் வெகுமதியாகக் கொடுக்கப்பட்டது. சில பிள்ளைகள் சரியான உடைகள் இல்லாதபடியால் பாடசாலைக்கு ஞாயிறு திருப்பலிக்கு வருவதில்லை. போடிங் பிள்ளைகள் உடுப்பைத் தைத்துக் கொடுத்தனர். இதைக்கண்ட ஒரு தாய் எவ்வாறு ஐரோப்பியர் எம் ஏழை இலங்கையருக்கு வேலை செய்கின்றனர் எனறாள். மறுநாட்களில் முட்டை, கேக், தேசிப்பழம் போன்ற வெகுமதிகள் கொண்டு வந்தனர்.

## கொழும்பு

சபைத் தலைவியினால் பம்பலப்பிட்டி போடிங் பிள்ளைகளுக்கு ஒரு லூர்து மாதா சுருவம் அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கு ஒரு பெரிய மாணவி கடித மூலம் தன் நன்றியைத் தெரிவித்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கத்திற்குரிய தாயார் அவர்களே! எம் நண்பர்கள் தம் நன்றியைத் தெரிவிக்கு முகமாக என்னைத் தேர்ந்துள்ளனர். இந்த அழகிய சுருவம் ஆசீர்வதிக்கப்பட்டு எம் பெரிய மண்டபத்தில் வைத்து எம் செபங்களை உங்கள் கருத்துக்களுக்காக ஒப்புக் கொடுத்தோம். ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு வகுப்பும் மலர்களால் அலங்கரித்து எம் ஞானப்பூச் செண்டை சென்ற். லூயிஸ் டி கொன்சாய்க் மூலம் ஒப்புக்கொடுத்தோம். அந்தப்பூச் செண்டை உங்களுக்கும் அனுப்பி வைக்கிறோம். தி. கு. சகோதரிகள மூலம் நாம் நல்ல கல்வியைப் பெற்றுக் கொள்கின்றோம். இக்கல்வி எம் வாழ்வுக்கு உதவுகின்றது. எமது பழைய மாணவர்களும் எமக்கு உதவுகின்றனர். கூட்டங்களுக்குத் தவறாது சமுகமளிக்கின்றனர். எம் ஆசிரியர்களின் தியாகச் சேவைகளுக்கு நாமும் பதிலளிக்கின்றோம். எம் முயற்சிகளை இறைவன் ஆசீர்வதிப்பாராக!

எல்லா போடிங் பிள்ளைகளும் தினமும் திருவிருந்தில் பங்குபற்றுகின்றனர். மரியாயின் பிள்ளைகள் தொகை தினமும் கூடி வருகின்றது. தியானம் நடைபெற்றது. நாம் திருக்குடும்பத்தின் புண்ணியங்களைப் பின்பற்றுகின்றோம். பம்பிலப்பிட்டியில் உள்ள 600 பிள்ளைகளின் நன்றிகளையும் ஏற்பீர்களாக. ஹெலன்டிசில்வா (மரியாயின் பிள்ளை)

இக்கடிதத்துடன் தெகிவளைப் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டதை அறியத் தருகின்றோம். தினமும் 2 சகோதரிகள் அங்கு சென்று வருகின்றனர். இவர்களின் ஆர்வம் பங்குக் குருவுக்கு உதவுகின்றது. நற்கருணைத் திருவிழாவிற்கு ஏராளமான மக்கள் வந்தனர். ஆவணி மாதத்தில் குழுச்சகோதரிகளுக்கு வருடாந்த தியானம் அருட்தந்தை கொலின் அடிகளாரால் கொடுக்கப்பட்டது. திருககுடும்பப் பணிகளில் அவருக்கு இருக்கும் அக்கறை துறவிகளின் கடமையை விளக்குவதில் தெரிந்தது. சிலர் தம் நித்திய அர்ப்பணத்தைச் செய்தனர். அன்று கொழும்பு அதிமேற்றிராணியார் திருப்பலி நிறைவேற்றி நற்செய்தியை விளக்கினார். சிறப்பாக அர்ப்பணம் செய்தவர்களுக்கு 3 வாக்குத்தத்தங்களையும் எடுத்துரைத்தார். இறைசித்தத்திற்குப் பணிந்து இருக்கும் போது நாம் நல்ல பயன் அளிக்கின்றோம். திருப்பலியின் பின்பு ''கூடேர்'' ஆயர் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் புதிய சகோதரிகளுக்கு மோதிரம் வழங்கப்பட்டது. அதே வேளை தி.கு. சகோதரிகள் மட்டில் தன் அக்கறையையும் புதுப்பித்தார். சிலநாட்களின் பின் பகிரங்கமாகத் தன் சாட்சியத்தை வெளிப்படுத்த ஆயருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநாகல் - வைத்தியசாலை

சென்ற். செலஸ்ரீன் தாயார் 34 வருடங்கள் வைத்தியசாலையில் பணியாற்றியதற்காக மருத்துவ அதிகாரிகள் அவவின் பணிகள் பற்றி அரசிடம் எடுத்துரைத்தனர். எனவே இலங்கை ஆளுநர் சேர். கை. கிளிவோட் பிரிட்டிஸ் அதிகாரியிடம் கூறி சென்ற். ஜேன்டி ஜெருசலேம் ஒழுங்கில் அவவைச் சேர்த்தார். (Order of St. Jean of Jerusalem) இவ்வாறு முதற்தடவையாக ஒரு சகோதரி இலங்கையில் அரசரால் கௌரவிக்கப்பட்டார்.

எனவே குருநாகல் அதிகாரியின் தலைமையில் வைத்தியசாலையில் கண்டிய முறைப்படி ஒரு மேடை அமைக்கப்பட்டு முக்கியமானவர்கள் அழைக்கப்பட்டனர். மேடையில் கொழும்பு அதிமேற்றிராணியார் இருந்தார். சென்ற். பிறக்சீட் தாயாரும் அமர்ந்திருந்தார். நேரம் வந்ததும் திரு. கோட்றிங்ரன் (godrington) தன் உதவியாளர் திரு. வாகுகரிடம் (farguhar) அரசரின் சென்ற். ஜேன். டி. ஜெருசலேமின் கடிதத்தைக் கொடுத்தார். ஒருவர் அதை வாசிக்கும் போது 2 அதிகாரிகள். ''யூனியன் Jack'' கொடியை விரித்தனர். பின்பு திரு. கொட்றிங்ரன் சகோதரியின் உடையில் சின்னத்தைக் குத்திவிட்டார். பலத்த கரகோஷம் எழுப்பப்பட்டது. அமைதி ஏற்பட்டதும் திரு. கொட்றிங்ரன் சகோதரியின் பலகாலச் சேவையை வியந்து பாராட்டினார். மருத்துவ அதிகாரியும் அவ்வாறே அவவின் சேவையைப் புகழ்ந்து பாராட்டினார். கொழும்பு அதிமேற்றிராணியார் இவ்வாறு நன்மையை எடுத்துரைத்தார். ''சகோதரியிடம் ஒப்படைக்கப்பட்ட நோயாளிகள் நல்ல சிகிச்சை பெற்றனர். அவர்களின் சேவைபாராட்டக் கூடியது. தம்மால் இயன்றளவு சகோதரிகள் பணியாற்றி வருகின்றனர். எனவே அவருக்குக் கொடுக்கப்பட்ட சின்னம் அவவுக்கும், அவவைப் போன்று அன்புப்பணியாற்றும் எல்லோருக்கும் பொருந்தும் என்றார்'' இந்த நிகழ்ச்சியின் பின்பு வைத்திய அதிகாரி M. J. சிட்னி என்பவர் வருகை தந்திருந்தவர்களை வரவேற்று உபசரித்தார். குழுவின் விருப்பத்திற்கு மாறாக வெளியே ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. ஆன்ம ஒழுக்கம் சம்பந்தமான நிகழ்ச்சிகளே எமக்கு ஆறுதல் தருவது என்று மடத்துத் தலைவி கூறுகின்றார். இவற்றிலே எல்லாவற்றையும் கூற முடியாவிடினும் சில முக்கியமானவற்றைத் தருகின்றோம்.

ஓர் இளம் பெண் வைத்தியசாலைக்கு வரும் போது தான் ''மீட்பின் படை'' என்று கூறினாள். அவளைப் பராமரிக்கும் சகோதரியைக் கண்டதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் குழப்பங்கள் சமயத்தைப் படித்து மரணிக்கும் முன் திருமுழுக்குப் பெற்றாள். ஒரு வயோதிப மாதும் இதே ஆவல் கொண்டவளாக இருந்தாள். அவளும் திருமுழுக்குப் பெற்று திருச்சபையின் அங்கத்தவளானாள். வேறொரு பெண் முதலில் மனமில்லாதிருந்தாலும், பின்பு சகோதரிகளின் தியாக சேவையைக் கண்டு மனம் மாறித் தன் இருபிள்ளைகளுடன் திருமுழக்குப் பெற்றாள். மூவரும் ஒரேநாளில் இறந்தனர்.

எமது நல்ல பிதாவும் குருநாகல் சகோதரிகளுக்கு உதவி செய்து வருகிறார். ஓர் இளைஞன் நோயுற்று வைத்தியசாலைக்கு வந்த போது தன் சமயத்தைப் பற்றித் தெரியாதிருந்தான். அவனின் தலையணையின் கீழ் நல்ல பிதாவின் சுத்தமான பொருள் வைக்கப்பட்டது. 24 மணித்தியால ங்களின் பின்பு நோயாளி திருமுழுக்குப் பெற விரும்பிக் கேட்டான். திருமுழக்குக் கொடுக்கப்பட்டதும் சுயஅறிவு இழந்தாலும் இறைவனை நான் விசுவாசிக்கிறேன் என்றான். சில நாட்களின் பின் மரணமடைநதான்.

ஒரு குடும்பத்தலைவன் நீரிழிவு நோயினால் துன்புற்றான். அவனுடைய குதிக்காலில் ஒரு புண் இருந்தது. வைத்தியர் அவனைக் கைவிட்டபடியால் நல்ல பிதாவின் படம் அதில் வைத்து நவநாள் செபம் தொடக்கப்பட்டது. முதல்நாளிலேயே காய்ச்சல் நின்றுவிட்டது. 8ம் நாள் நோயாளி திருவிருநது பெற்றான். 4பெண் பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூத்த பிள்ளைக்கு 11 வயது எம் மடத்துக்குக் கோவிலில் திருவிருந்து பெற்றாள். பின் குருவுடன் சேர்ந்து சென்று தந்தைக்கும் கொடுக்கப்பட்டது. 240 வளர்ந்தோர், 81 சிறுவர்கள் திருமுழுக்குப் பெற்றனர். 37 மரணவேதனைப்பட்டோர் நோயில் பூசுதல் பெற்றனர். 5560 திருவிருந்து மடத்துச் சிற்றாலயத்தில் கொடுக்கப்பட்டது. 1926ம் ஆண்டில் 6217 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். இந்த ஆன்ம அறுவடைக்கு திருக்குடும்பம் போற்றப்படுவதாக!

## குருநாகல் - வகுப்புகள்

நகரை விட்டு வெளியேறாது கல்விப் பணிச் சகோதரிகளைச் சந்தித்தோம். ஆங்கிலப் பாடசாலைகளில் மாணவர் தொகை அதிகம். 14 பேர் திரு இருதயவிழாவன்று முதல் நன்மை பெற்றனர். கண்டி ஆயர் மேன்மை தங்கிய ''பெக்மேயர்'' (Beckmayer) தலைமையில் வழிபாடுகள் நடைபெற்று திருப்பலியில் நல்ல ஓர் மறையுரையும் ஆற்றினார். பிள்ளைகள் மாதாவின் பாதத்தில் தம்மைத் தயார் செய்தனர். பாடசாலை வெளிப்பிள்ளைகளின் மறைக்கல்விக்காக ஞாயிற்றுக் கிழமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. படிப்பு முடிய பங்குக்கோவிலின் வழிபாடுகளில் பங்குபற்றியது பங்குக் குருவுக்கு மகிழ்ச்சி தந்தது.

அநாதை இல்லத்தில் பிள்ளைகள் தம் தாயை ஒத்த ஆசிரியர்களை மதித்து வந்தனர். இந்தப் பிள்ளைகளில் ஒரு பிள்ளை சிங்கள நவகன்னியர் குழுவுக்குச் சேர்ந்தா. வேறொரு பிள்ளை வைகாசி மாதத்தில் திருமுழுக்குப் பெற்றா. 10 பேர் புதிதாகச் சேர்ந்தனர். 3, 4 வயதுடைய 2 பிள்ளைகள் இருந்தார்கள். தேவபராமரிப்பும் இவர்களைக் காப்பாற்றி வந்தது.

ஒருநாள் எம் அநாதை பிள்ளைகளுடன் சேர்ந்து நடந்து சென்றோம். ஒரு குடிசையில் ஒரு தாய் தன் மகளிடம் ஒரு நாற்காலியைச் சகோதரிக்குக் கொடுக்கும் படி கூறினா. சிறுமிக்கு எம் குழுவைப் பிடித்துக் கொண்டது. நாம் புறப்பட்டுச் செல்லும் போது சிறுமியும் தன் புதிய நண்பர்களைப் பிரிய மனமில்லாது இருந்தாள். வேறொரு நாள் மீளவும் அவ்வழியே வந்தோம். ஒரே அமைதியாக இருந்தது. தந்தையிடம் கேட்டபோது தாயும் மகளும் காய்ச்சலினால் ஒரு பாயில்படுத்திருப்பதைக் காட்டினார். நாமும் சிகிச்சை முறைகளைக் கூறினோம். ஒருவாறு பிள்ளை சாவில் இருந்து தப்பித்துக் கொண்டாள். அவளுக்குத் திருமுழுக்கு கொடுக்க விரும்பினோம். எனவே லூர்து மாதா நீரை நெற்றியில் ஊற்றி ''மாறிஜேன்'' என்னும் பெயருடன் தேவதாய் திருமுழுக்கு அருளப்பரின் பாதுகாவலில் வைத்தோம். சுகம் பெற்றாள் அவளை எம்மிடம் தருவதாகத் தாய் கூறினாள். சில நாட்களின் பின்குணம் அடைந்து எம் அநாதை இல்லத்தில் தற்போது தன் நண்பிகளுடன் இருக்கிறாள்.

11ம் பத்திநாத பாப்பரசர் துறவற சபைகளில் மறைபரப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் சகோதரிகளுக்கு ஏற்பாடு செய்த கண்காட்சி பற்றித் தருகிறோம். முதலில் ஆண்களின் சபையைப் பாப்பு கேட்டார். பின்பு தூர இடங்களில் மறைபரப்புப்பணி ஆற்றும் சகோதரிகளைக் கேட்டார். அவர்களும் தம் கூட்டங்களை ஒழுங்கு செய்து தமக்குரிய வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றார். இந்தக் கூட்டம் மாசி 4ந் திகதி நடைபெற்றது. முதல் நாள் மாலையில் அழைப்புகள் அனுப்பப்பட்டன. 2 ''என்வலப்'' வைக்கப்பட்டிருந்தன. ஒன்றில் திருக்குடும்பச் சபைத் தலைவிக்கென எழுதப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே வத்திக்கான் நோக்கி அமைதியாக 4,5 சகோதரிகள் சென்ற். டமஸ்கஸ் முற்றம் வழியாக கிளமென்ரின் மண்டபம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். 140 சபைப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32 சபைத் தலைவிகளும் சென்றனர். அமைதியாக நொகாறோ (Nogaro) ஆயர் ஒவ்வொரு சபையின் பெயரைக் கூறி அவர்களின் இடத்தைக் காட்டினார். எல்லொரும் தத்தம் இடங்களில் அமர்ந்தபின் ''புனித தந்தை'' எனக் கூறப்பட்டது. அப்போது 11ம் பத்தி நாதர் சாம்பேர் (Samper) ஆயருடனும் 2 செயலாளர், ஒரு கர்தினால் வான்றோசும் (Van Rossum) உடன் வந்து சேர்ந்தார்.

வரும் போது எல்லாரையும் வாழ்த்திய பின் இருக்கையில் அமர்ந்தார். எல்லாரையும் இந்தப் பொது இடத்தில் சேர்க்கத் தனக்கிருந்த விருப்பத்தைக் கூறினார். இந்தக் கூட்டம் ஆண்களின் ஒன்று கூடல் போலல்லாது அடக்கமான, ஆனால் அந்நியோன்னியமான ஒன்று கூடல் என்றார்.

பாப்பு சகோதாரிகளின் பணிகளையும் செயல்களையும் புகழ்ந்து கூறினார். இவர்களின் பணியை இயேசு ஆசீர்வதிக்க வேண்டினார். உரைமுடிந்த பின் பாப்பு தன் இருக்கையில் இருந்து எழும்பி வந்து 2 முறைமண்டபத்தைச் சுற்றி வந்தார். டிப்ளோம், வரவணிக்கம் போன்றவற்றைக் கொடுத்தார். அவ்வேளை தன் மோதிரத்தையும் முத்தி செய்ய விட்டார். மாசெட்டி (Marchetti) ஆயர் ஒவ்வொரு சபையின் பெயரையும் பாப்புவுக்குக் கூறிக்கொண்டு வந்தார். டோமினிக்கன் இயேசு, மரிசபை.... என்று கூறிப்பின் போர்டோவின் திருக்குடும்பச் சபை என்று கூறினார். வரவணிக்கத்தைக் கொடுத்துக் கொண்டு மெல்லிய குரலில் ''நீங்கள் எத்தனை பேர் என்று கேட்டார்.'' ''பலபேர் இல்லை'' என ''மீளவும் எத்தனை பேர்'' என்று கேட்டு ஏறக்குறைய 4000 பேர்'' எனப் பாப்பு புன்னகை புரிந்தார். அவர் பார்வையில் ஒரு திருப்தி ஏற்பட்டது. எனவே சபையை ஆசீர்வதித்தார். பின்பு அவர் தன் இருக்கைக்குச் சென்றார்.

டிப்ளோம் பொர்டோவுக்கு அனுப்பப்பட்டு சபைத் தலைமை இல்லத்தில் மாறி டி நற்றிவிற்றியின் போட்டோவின் கீழ்வைக்கப்பட்டது. அவவை எல்லாச் சகோதரிகளும் அறிவார்கள். மறைபரப்பும் பணியில் (தூர இடங்களில்) அவவுக்கு நல்ல ஆர்வம் இருந்தது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடாந்த தியானம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் வென்னப்புவாவுக்கு 'மூனி' ஆயர் 3 மணியளவில் வந்து எம் சிங்களச் சகோதரிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். ஆயருடன் கிலில்மி (Guglielmi) குருவானவரும், சகோதரர் ஒருவரும், அவரின் செயலரும் வந்திருந்தனர். "பிறக்சீட்" தாயாரும் மடத்துத் தலைவியும், ஆயரை வரவேற்றுப் பின் ஐரோப்பிய குழுச் சகோதரிகள் அவரைக் கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு 138 சுதேச சகோதரிகள் காணப்பட்டனர்.

"மூனி" (Mooney) ஆயர் ஆங்கிலத்தில் உரையாற்றினார். இலங்கை மக்களின் மீட்புக்காகத் தம்மை அர்பணித்த பெருந்திரளான சகோதரிகளுக்குத் தன் மகிழ்ச்சியைப் பின்வருமாறு எடுத்துரைத்தார்.

பாப்பானவர் வந்திருந்தாலும் இவ்வாறே மகிழ்ச்சியடைந்திருப்பார். நல்ல இறைவனிடம் உங்கள் மேலும், உங்கள் பாடசாலைகள் மீதும் நிறைய அருள் வரங்களைக் கோட்டிருப்பார். உங்கள் பக்தி முயற்சிகளைக் கொண்டு செல்வதற்குத் துணையாக என் அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தைத் தருகின்றேன். என்றார். தியான வழிகாட்டியான குரு இந்த வார்த்தைகளைச் சிங்களத்தில் கூறச் சகோதரிகள் முழந்தாளில் இருந்து பாப்புவின் பிரதிநிதியின் ஆசீரைப் பெற்றனர்.

தியான வழிகாட்டியான குருவானவர். வண. விகிறாடோ (Fr. Figerado) என்பவர் இத்தியான நாட்களை நல்ல முறையில் நெறிப்படுத்தினார். அழைத்தல் வழியாக வாழ வேண்டிய அன்பு பற்றி நினைவூட்டினார். தெய்வீக அன்பருடைய அன்புக்குப் பதிலன்பை எல்லோரும் அன்புப் பணியில் காட்ட வேண்டும் என்றார். துறவற உடை பெற்றுக் கொள்ளும் நிகழ்வு உணர்ச்சிப்பூர்வமாக அமைந்தது. 11 ஆயத்த கன்னியர் இந்த வருடம் மாசில்லாமாதாவின் சுருவத்தைச் சூழ பூக்களுடனும், ஒளியுடனும் நின்றனர். மறுநாள் திருப்பலியின் போது நித்திய தற்காலிக அர்பணத்தைச் செய்தவர்கள் தம் அர்ப்பணத்தைப் புதப்பித்தனர். கோவில் லீலிப்பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு ஆராதனை நடைபெற்று இறுதி ஆசீர்வாதம் அருளப்பட்டது. பக்தி முயற்சிகளுடன் குடும்ப ஒன்றுகூடலும் இடம் பெற்றது. மாலையில் "பிறக்சீட்" தாயாருக்கு நன்றி கூறும் வைபவம் நிகழ்ந்தது. எல்லோரும் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் உபதலைவியாகப் பணியாற்றித் தன் உடல் நலத்திற்காக ஓய்வெடுத்தார். இந்த ஓய்வு அவவுக்குப் பயன் அளிக்கும் மறுநாள் நன்றித் திருப்பலியின் பின்னர், பணிச் சகோதரிகள் தங்கள் சொந்தப் பாடசாலைகட்குச் சென்றனர். வென்னாப்புவாவில் புதிய நவகன்னியர் தன் உருவாக்கத்தை ஆரம்பிக்க, அவர்களின் இடத்திற்கு மேலும் 30 பேர் வந்துள்ளனர். இந்த எண்ணிக்கை கொழும்பு அதிமேற்றிராணியாருக்கு மகிழ்ச்சி அளித்தது. அவர் பங்குக் கோவிலில் 700 பிள்ளைகளுக்கு உறுதிபூசுதல் கொடுக்க வந்தவேளை மடத்துக்கும் வந்து சென்றார். கூடேர் (Coudert) ஆயருக்குத் திருப்தியளித்தது.

இந்த அறிக்கையை "செலஸ்ற் மார்ஷல்" தாயார் பற்றி ஒரு பிரான்சிய செய்தித் தாளில் வந்த செய்தியுடன் முடித்துக் கொள்ளுகிறேன். திருக்குடும்பச் சபையைச் சார்ந்த செலஸ்ற் மார்ஷல் தாயார் தைமாதம் 14ந் திகதி வெள்ளிக்கிழமை மார்சேயிலுள்ள (Mareille) நம்பிக்கைச் சகோதரிகளின் குழுவில் அமைதியில் இறந்தார். இச்சபை 1820 இல் பீற்றர் பியன்வெனுநோஆய் குருவானவரால் போர்டோவில் ஆரம்பிக்கப்பட்டது. இக்குருவின் முத்திப்பேறுபெற்ற பட்டத்திற்கு போர்டோவில் ஆய்வுகள் நடைபெற்று வருவதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

1843ம் ஆண்டு ஆடிமாதம் 14ந் திகதி (Mety) மெஸ்மறைமாவட்டத்தில் உள்ள றவியே (Raville) என்னும் இடத்தில் பிறந்து 1865ல் தி. கு. சபையில் சேர்ந்தா. தூர நாட்டுப் பணிகளால் கவரப்பட்டா. சிலவருடங்கள் பிரான்சில் பணியாற்றிய பின் இலங்கைக்கு 1873ம் ஆண்டு மார்கழி 8ந் திகதி மார்சேயிதுறைமுகம் வழியாக வந்தார். இங்கு குருநாகலில் அநாதை இல்லத்தைப் பொறுப்புடன் பராமரித்து வந்தா. பின்பு மடத்தின் தலைவியாகவும் இருந்து சுதேச சகோதரிகளின் உருவாக்கத்திலும் செயற்பட்டா. 1886ம் ஆண்டு "வென்னப்புவா" நவகன்னியர் இல்லத்தில் பணியாற்றி வந்தா.

"செலஸ்ற்" தாயாரின் ஆர்வம் திறமையால் இச்சபை இங்கு விருத்தியடைந்து தற்போது 300 பேர் தமிழ், சிங்கள இளம் பெண்களுக்குப் படிப்பிக்கின்றனர். யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் 50 பாடசாலைகள் உண்டு.

40 வருடசேவையின் பின் காலநிலையினாலும் வேலையினாலும் களைத்து ஓய்வு பெற்றார். 1914ம் ஆண்டு தனது பதவிகளைக் கைவிட்டு பிரான்ஸ் வந்தார். தன் இறுதி நாட்களில் எம் நகரில் உள்ள நம்பிக்கைச் சகோதரிகளின் குழுவில் இருந்து கொண்டு இலங்கைப் பணிக்கு உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். சுதேச சகோதரிகளுக்குத் தேவையானவற்றைச் சிங்களத்தில் மொழி பெயர்த்தார். "அன்பின் அரசர் மாதம்" என்பதே அவரின் இறுதிப் புத்தகம், அவ்வாறே வெள்ளிக்கிழமையில் இயேசுவின் திருஇருதயத்தின் நாளில் அன்பின் அரசர் தன் பணிவுள்ள பணியாளை அழைத்துக் கொண்டார். ஆளுநர் "சேர் - விளெட்சர்" வைத்தியசாலையில் எல்லா வாட்டுக்களையும் பார்வையிட்டு எல்லாம் நல்ல முறையில் பேணப்படுவதையும், தாதிமாரின் தியாக சேவைகளையும் பாராட்டினார்.

அப்போஸ்தலப் பணிகளைப் பொறுத்தமட்டில் புத்தபிக்குமாரால் துன்பம் வந்தாலும் இப்பணி ஆறுதல்தரக் கூடுமாயுள்ளது. 1927ம் ஆண்டில் 4955 நோயாளிகள் வந்து சென்றனர். அதில் ஒரு மகிழ்ச்சிக்குரிய சம்பவம் என்னவென்றால் 175 வளர்ந்தவர்களுக்கு திருமுழுக்கு அருளினால் விண்ணகக் கதவு திறக்கப்பட்டதாகும். அவர்களுள் 45 பேர் குழந்தைகள். பல மனமாற்றங்களும் இடம் பெற்றன. இறைவனது இரக்கத்தைப் பெற்றுக் கொண்டனர்.

மார்பு நோயாளி ஒருவர் வாழ்வின் முடிவை அண்மித்தவராக இருந்தாள். அவள் கிறீஸ்தவ பெயரைக் கொண்டிருந்தாள். ஆனால் அருட்சாதனங்களைப் பெற்றதாகத் தெரியவில்லை. அத்துடன் தன் பெயர் "காலி" யில் இருந்த ஒரு மிஷனறிக் குருவால் ஒரு பெரிய புத்தகத்தில் எழுதப்பட்டதை நினைவு கூர்ந்தாள். அது திருமுழுக்குப் பதிவுப் புத்தகம் என்று கூறியபோது அவளது ஆன்மாவில் ஒருவித மகிழ்ச்சி பிறந்தது. அத்துடன் இறுதி அருட்சாதன அருளும் சேர இந்த மகிழ்ச்சியில் "இயேசு, மரி, சூசை" என்னும் பெயரை உச்சரித்த வண்ணம் இறைவனடி சேர்ந்தாள்.

வயது சென்ற ஒரு பெண் "மடுமாதா" வரவணிக்கம் கழுத்தில் அணிந்திருந்தாள். கையில் புத்த மத மஞ்சள் நாடாகட்டியிருந்தாள். எனவே என்ன சமயத்தைச் சார்ந்தவள் எனக் கேள்வி எழுப்பினோம் அதற்கு அவள், நான் கத்தோலிக்க சமயம், என் கணவனும் கத்தோலிக்கனாக இருந்தாலும் எம் திருமணம் கோவிலில் ஆசீர்வதிக்கப்படவில்லை. இப்போது ஆண்டவருடைய அன்பில் மரணிக்க விரும்புகிறேன். அதையே என் கணவனும் விரும்பினார். இருவரும் ஒப்புரவு அருட்சாதனத்தில் பங்குபற்றிய பின் குரு அவர்களது திருமணத்தை ஆசீர்வதித்தார். மரணத்திற்கு ஆயத்தப்படுத்துவதை மறந்தாள் நோயாளி. நலமடைந்து நல்ல கிறீஸ்தவளாக வாழ வீடு திரும்பினாள்.

ஓர் இளைஞனை சுயநினைவு இல்லாது வைத்தியசாலைக்கு அழைத்து வந்தனர். மருந்துகள் பயன் தரவில்லை. சகோதரி இவன் திருமுழுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற ஆயத்தமில்லாது இறக்கப் போகிறானே என்று எண்ணி அவனது ஆன்ம மீட்புக்கு நல்ல பிதாவின் துணையை நாடினார். அது வீண்போகவில்லை, பகலில் நோயாளிக்கு அறிவு வந்தது. எனவே தாதி இதனைப் பயன்படுத்தி விசுவாசத்தைப் பற்றி சில கேள்விகள் கேட்டார். "எனக்கு நன்கு விளங்குகிறது." எனப் பதிலளித்தான். "திருமுழுக்குப் பெற விரும்புகிறாயா? ஆம். நல்ல இறைவனைப் பார்க்கப் போகிறேன்" என்றார். நெற்றியில் தூய நீரை ஊற்றும் போது "ஆம் நான் நம்புகிறேன்" எனத் திரும்பத் திரும்பக் கூறித்திருமுழுக்கு உடுப்புடன் இறந்தான்.

ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் காய்ச்சலினால் வருந்தினான். அவவின் குடும்பம் நல்லபிதாவின் வேண்டுதலுடன் நவநாள் செய்து செபிக்க விருப்பம் தெரிவித்தனர். முதல் நாளில் இருந்தே பையன் சுகம் வருவதற்குரிய அறிகுறிகளைப் படிப்படியாகத் தெரிவித்தான். நவநாட்கள் முடிவில் அவனுக்கு ஓய்வு தேவைப்பட்டது. இவன் சுகம் பெற்றது பெற்றோரின் பார்வையில் ஒரு புதுமையாகத் தென்பட்டது. எனவே "பிற்காலத்தில் நல்ல இறைவன் ஒரு குருவாக வருவதற்கு அழைத்தால் எம் சம்மதத்தை அளிப்போம் என்றனர்.

எமது நல்ல பிதாவின் பாதுகாப்பு குருநாகல் சகோதரிகள் மேல் இருந்து எங்கள் பணியிலே உதவி புரிகின்றது. அதேபோன்று குழந்தை இயேசுவின் புனித. திரெசாளின் பாதுகாவலும் உள்ளது. வருடாந்த தியானத்தின் பின்பு 3 ஆன்மாக்கள் வானகம் நோக்கிச் சென்றது மகிழ்ச்சி என்று ஒரு தாதி கூறுகின்றா.

அவர்களில் ஒருவர் இந்த அருளைப்பெற விரும்பாது இருந்தா. அவர்நிலை மேலும் மோசமடையத் திருமுழுக்குப்பெற விரும்பாது இருந்தா. அவர்நிலை மேலும் மோசமடையத் திருமுழுக்குப் பற்றிக் கேட்டேன். உடனே "இல்லை" எனப் பதில் வந்தது. எனவே பணியின் பாதுகாவலர் (புனித. திரேசாள்) வரவணிக்கத்தை அவளின் உடுப்பில் இணைத்து விட்டேன். அவவின் இதயத்தில் நேரடியாக மாற்றத்தை ஏற்படுத்தச் செபித்து விட்டுப் போய் விட்டேன். எனக்குப் பதிலாக இரவுக் காலப் பணியில் ஈடுபட்ட சகோதரி நோயாளியின் மாற்றத்தைக் கவனித்தா. "நான் புத்தரை விட்டு" திருமுழுக்குப் பெற்று விண்ணகம் செல்ல விரும்புகிறேன் என்று சகோதரிக்குச் சொன்னா. இவ்வாறு கூறியதால் சகோதரி ஆன்மாவுக்கு ஆயத்தம் செய்து மாலை 6 மணிக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. 3 மணித்தியாலத்தின் பின்பு ஆன்மா விண்ணகம் நோக்கிப் பறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காகப் புனித. திரேசாளுக்கு நன்றி கூறி இதேபோன்ற அருளை வேறொருவருக்கும் பெற்றுத் தரும்படி வேண்டினேன். அவள் வைத்தியசாலைக்கு வரும் போது புத்த மதம் என்று கூறியிருந்தாள். நான் வரவணிக்கத்துடன் அவளண்டை செல்லக் கண்ணீருடன் "நல்ல புனித மரியே, எங்கள் மேல் இரங்கும். எனக் குழறிப் பின்பு தான்" கத்தோலிக்க சமயம் என்றாள். தன் மனச்சாட்சிக்கெதிராக புத்தமதக் கணவனுடன் தன் கிறீஸ்தவக் கடமைகளைச் செய்யாது விட்டாள். சிதறிய ஆடாகிய அவள் நல்ல ஆயனின் கையில் ஒப்புரவு அருட்சாதனத்தால் மீளவும் திரும்பி வந்தாள். இறுதி அருட்சாதனம் பெற்று புனித. மிக்கேல் தூதரின் பெயர் பெற்று விண்ணகத்தில் உள்ள தனது சிறிய மகளுடன் இறுதி மூச்சை விட்டுச் சென்றடைந்தாள்.

## குருநாகல் - வகுப்புகள்

1927ம் ஆண்டின் முற்பகுதியில் அநாதை இல்லத்தில் "அம்மை" நோய் வந்ததென மடத்துத் தலைவி எழுதியுள்ளா. இதனால் பாடசாலை சிலகாலம் மூடவேண்டி ஏற்பட்டது. எனினும் நல்ல இறைவன் தமது அருளினால் எமக்குத் துணைபுரிந்தார்.

முதலில் குழுவில் பாஸ்குஞாயிறின் அடுத்த ஞாயிறு (குவாசிமோடோ) சீடர்களைப் பணிக்கு அனுப்பிய ஞாயிற்றுக்கு முன் 3 நாள் நவநாட்கள் நடைபெற்றது. வைத்தியசாலைச் சகோதரிகளும் பங்குபற்றினர். இது எமக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆர்வத்துடன் எமக்கு நற்கருணை பற்றியும் துறவற வாழ்வு பற்றியும் குருவானவர் எடுத்துரைத்தார். ஞாயிறு திருப்பலி பங்குக் கோவிலில் மட்டும் நடைபெற்றது. திருச்சபை வரலாறு, கிறீஸ்தவ வரலாறு, பெத்லகேம், நசரேத் கத்தோலிக்க திரச்சபையின் விருத்தி வேதகலாபனைகள் எமது சபையும், அதன் துன்பங்களும் பற்றிக் கூறினார். பின்பு 1822 மாசி 3 நற்கருணைப் புதுமை பற்றிக் கூறி நற்கருணை எழுந்தேற்ற ஆராதனைக்கு வரும்படி அழைப்பு விடுவிக்கப்பட்டது. இந்த அழைப்பை அவர்கள் காத்திரமாக எடுத்து நாள் முழுவதும் அநேகம் பேர் எம் ஆலயத்தில் வந்து செபித்தனர். இந்தப் பக்தி முயற்சி அணைத்துலக சகோதரிகளுடன் சேர்ந்து நற்கருணை ஆசீருடன் முடிவுற்றது.

ஆண்டின் ஒவ்வொரு மாதமும் எம் தியானத்தின் பயனாக ஆறுதல்களும் கிடைத்தன. தை மாதத்தில் ஒரு மாணவியின் திருமுழுக்கும் முதல் நன்மையும் இடம்பெற்றது. மாசி மாதத்தில ஒரு இளம் பெண்ணின் திருமணத்திற்கு ஏற்பாடாக முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவானவர் சிஸ். லெற்றீசியாவை உதவி செய்யும்படி கேட்டதால் இப்பெண் எமது போடிங்கில் வந்திருந்து ஒரு பிள்ளை போன்று நன்கு படித்தாள். விரைவில் விசுவாச உண்மைகளைக் கற்று அறிந்தபடியால் நற்கணை விருந்தைச் சுவைத்தாள். தன் கடமைகளைக் குடும்பத்தில் செய்வதற்கு இந்த அருள் முக்கியமானாதாக இருந்தது வேறு 3 பேர் சகோதரிகளால் ஆயத்தம் செய்யப்பட்டு திருமுழுக்கு முதல் நன்மைக்கு அனுமதி பெற்றார்கள். ஒருவர் பாஸ்குத் திருவிழாவிலும், ஒருவர் ஆடி 31ந் திகதி பங்குப் பாதுகாவலரின் திருவிழாவிலும் இவ்வருட்சாதனங்களைப் பெற்றனர். 4 புத்த அநாதைச் சிறுமிகள் முறையே 3,4,6,7 வயதுடையவர்கள் புனித. சூசையப்பரின் திருவிழாவில் திருமுழுக்குப் பெற்றனர். 6அநாதைச் சிறுமிகள் திருஇருதயநாதரின் திருவிழாவில் முதல் நன்மை பெற்றனர். ஆங்கில மாணவர்களும் இவர்களுடன் முதல் நன்மை பெற்று நல்ல உள்ளத்துடன் ஆசிரியர்களுடன் ஒத்துழைக்கின்றனர்.

முதல் நன்மை அண்மிக்கும் போது மறைக்கல்வி படிக்க ஆர்வத்துடன் வருவார்கள். 2 சிறுமிகள் வெகுதொலைவில் இருந்து ஞாயிறு தோறும் தனியாக மாட்டு வண்டியில் திருப்பலிக்கு வருகின்றனர். அவர்களின் பெற்றோர் ஒரு போதும் வருவது கிடையாது. வேறொரு சிறுமி தன் புரட்டஸ்தாந்து தாய்க்கு மறைக்கல்வி படிப்பித்து கோவிலுக்கு அழைத்து வரமுயல்கிறாள். வேறொரு சிறுவன் தன் தந்தை ஓய்வாக இருக்கும் போதே தருணம் பார்த்து தன் தந்தையின் கையை இறுகப் பிடித்து முதல் நன்மை பெற உத்தரவு கொடுத்த பின்பே தன் கையை விடுகிறான்.

புரட்டாதி மாதத்தில் கொழும்பு அதிமேற்றிராணியார் உறுதிபூசுதல் கொடுப்பதற்காக இங்கு வந்தார். எல்லா வகுப்புக்களின் சமயப் பரீட்சையும் அவருக்குத் திருப்தி அளித்தது. சிறுவர்களும், வளர்ந்தோரும் உறுதிபூசுதல் பெற்றனர். புதிய பாடசாலைக் கட்டிட வேலையும் ஆயருக்கு மகிழ்ச்சி அளித்தது. கட்டிடத்திறப்பு விழாவுக்குத் தான் வருகை தருவதாக உறுதியளித்தது எல்லோருக்கும் ஆர்வம் ஊட்டியது. யானை ஒன்று கட்டிட வேலைக்கு உதவி செய்தது. தனது தும்பிக்கையினால் 2.3 பெரிய கற்களை இலகுவாகத் தூக்கி வேலை செய்யும் இடத்தில் வைத்தது. அவ்வாறே வேறு பொருட்களையும் தூக்கி உதவியது. பலர் சேர்ந்தம் தூக்க முடியாத மரத்தைத் தூக்கியது.

இரு அநாதைப் பிள்ளைகள் நவகன்னியர் இல்லம் புகுதல் ஒரு பிள்ளையின் கிறீஸ்தவத் திருமணம் - இவற்றுடன் ஆண்டு முடிவுற்றது தை மாதத்தில் ஒரு பிள்ளை இறந்தது எமக்கு விண்ணகத்தில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலி இருப்பதாக நம்பிக்கை ஊட்டுகிறது. அநாதை இல்லத்தில் வெறுமையாக்கப்பட்ட இடங்கள் புதிய சிறுமிகளால் நிரப்பப்பட்டது. எனவே விரைவில் அவர்களும் இறைவனின் பிள்ளைகளாக வருவார்களென நம்புகிறோம்.

## கொழும்பு

புரட்டாதி 1ம் திகதி 11ம் பத்திநாதரின் இந்தியப் பிரதிநிதியான மேன்மை தங்கிய (MGR. Mooney) மூனி ஆயர் இலங்கைக்கு விஜயம் செய்த போது கொழும்பு அதிமேற்றிராணி ஆண்டகையிடம் தான் பகிரங்கமாகத் தன்னை வெளிப்படுத்த விரும்பவில்லை எனக் கேட்டுக் கொண்டார். பம்பலப்பிட்டியா மடத்திற்குக் காலை வருவதாக முதல் நாள் இரவே அறிவிக்கப்பட்டது. இதை நாம் எதிர்பார்க்கவில்லை. எனவே வெளிப்பிள்ளைகளுக்கு அறிவிக்க முடியவில்லை. நாம் குறித்த நேரத்திற்கு ஆயத்தமாக இருந்தோம்.

காத்திருந்தவேளை கல்வி அதிகாரி விஞ்ஞான, கணித பாடப்பரீட்சைக்காக வந்திருந்தார். எம்மைக் கண்டு அவர் ஆச்சரியப்பட்ட போது நாம் விளக்கம் கொடுத்ததால் தானும் அதில் பங்குபற்ற அனுமதி கேட்டார்.

இதோ! ஆயரின் கார் பாடசாலை மண்டபத்தின் முன்னே தரித்து நின்றது. (Auguste) அகஸ்ற் ஆயர் (Coudert) கொழும்பு கூடெற் ஆயருடன் இறங்கி முதல் ஆசீரைக் குழுவுக்குத் தந்தார். மண்டபத்தில் நுழையும் போது வரவேற்புப் பாடல் இசைக்கப்பட்டது. அங்கு நூற்றுக்கணக்கான பிள்ளைகள் கூடியிருந்தனர். மேடையில் அமர்ந்த எல்லாரின் நன்றியுரைகளையும் அவதானத்துடன் செவிமடுத்த பின் குழுமத் தலைவி, குழு, மாணவர்களுக்கும் அவர்களின் வரவேற்புக்கும் நன்றி கூறினார்.

நான் இங்கு வந்ததின் நோக்கம் எம் எல்லோருக்கும் பொதுவான அன்பின் செய்தியையும், பாப்புவின் ஆசியையும் கொண்டு வருவதற்கே ஆகும். நீங்கள் அவரை அறியவும், நேசிக்கவும் கற்றுக் கொண்டீர்கள். இந்த இல்லத்தில் தம் அழைத்தலுக்குப் பிரமாணிக்கமாக எல்லாவற்றையும் துறந்து வந்து பணிகளில் ஈடுபடும் சகோதரிகளால் வளர்க்கப்படும் உங்களை வாழ்த்துகிறேன். இயற்கை விஞ்ஞானங்களைக் கற்பிப்பதன் மூலம் உங்கள் வாழ்வில் இயற்கைக்கு மேலானவற்றை உங்கள் ஆன்மாவில் பதிக்கிறார்கள். இதன் மூலம் வேதாகமத்தில் கூறப்பட்டிருப்பது போன்று "வீரப் பெண்களாக" வருவதற்கு உதவி செய்கிறார்கள். எனவே அவர்களின் அறிவுரைகளையும், முன்மாதிரிகைகளையும் பின்பற்றி இவ்வுலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான மகிழ்ச்சியையும், மறுஉலகில் நிலையான மகிழ்வையும் பெறுவீர்களாக" என்றார்.

அத்துடன் தனது வருகையின் நினைவாக அவர்களுக்கு ஒரு பொது விடுமுறையையும் அளித்தார். பிள்ளைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் இது மகிழ்ச்சியை அளித்தது. எனவே எல்லோரும் முழந்தாள்படியிட்டு அவரின் அப்போஸ்தலிக்க ஆசீரைப் பெற்றனர். பிறமறைகளைச் சேர்ந்தவர்களும் இவர்களுடன் இணைந்து கொண்டனர்.

கல்வி அதிகாரியும் இந்த நிகழ்வில் செல்வாக்குப் பெற்றார். இவரும் மடத்துத் தலைவியால் "மூனி" ஆயருக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். அவரின் பார்வையால் கவரப்பட்டுத் தன் கருத்துக்களை வெளிப்படுத்தினார். கத்தோலிக்க திருச்சபை அதிகாரியின் கவனத்தில் தான் இருக்கிறேன் என்றார். அத்துடன் எனது பணிவாழ்வில் மறக்க முடியாத நாள் என்றார்.

கல்வி அதிகாரியும், ஆயரும் கதைத்துக் கொண்டிருக்கும்போது பிள்ளைகள் இருவரிசையில் ஆயரின் வாகனத்தன்டை நின்றனர். பின்பு அவர் புறப்படும் போது "இறைவன் எங்கள் புனித தந்தை பாப்புவைப் பாதுகாப்பாராக" என நூற்றுக்கணக்கான குரல்கள் கேட்டன. பின்பு 2 ஆயர்களின் ஆசிக்கும் மக்கள் தலை வணங்கினர்.

மூனி ஆயர் யாழ் - மடத்திற்கும், இளவாலை மடம் அங்கு நவகன்னியர் இல்லம், சுதேச ஆசிரியர்களால் நடாத்தப்படும் பாடசாலை எல்லாவற்றையும் தரிசித்தார்.

வரவேற்புப் பாடல், உரைக்குப் பதிலிறுத்த ஆயர், விசுவாச உண்மைகளை நன்கு கற்றறிந்து, நல்ல கிறீஸ்தவர்களாக வாழ ஊக்கப்படுத்தினார். யாழ் ஆயர், பாப்புவின் செய்தியுடன் இந்த அறிவுரைகளையும் மொழி பெயர்த்தார். திருக்குடும்பச் சகோதரிகளுடன் உணவருந்தவும் ஆயர் சம்மதித்தார். மறைமாவட்டச் சந்திப்பின் போது தமிழ் மக்களின் ஆன்மகாரியங்களில் அக்கறைகாட்டினார். விசேடமாக எம் சகோதரிகளால் நடாத்தப்படும் பாடசாலைகளின் படிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNALS NO - 52

## குருநாகல் - வகுப்புக்கள்

1927ம் ஆண்டு கூடேர் ஆயர் ( Coudert) இறுதியாக மடத்திற்கு வந்தபோது புதிய ஆங்கிலப் பாடசாலைக் கட்டிடத்தில் தன் ஆர்வத்தைக் காட்டி "கட்டிடம் கட்டி முடிந்ததும் தான் வந்து அதனை ஆசீர்வதிப்பேன்" என்று கூறிச் சென்றார். தான் கூறிய வாக்குப்படி மாசி 2ம் திகதி பாடசாலையைத் திறக்க வந்தார். இவ்விழாவுக்கு, மாணவர்கள், பெற்றோர், பணியின் நண்பர்கள் ஆவலுடன் அவர் வரவைப் பார்த்து நின்றனர்.

இயேசுவைக் காணிக்கையாக்கிய இந்த நாளில் ஆயர் பீடத்தடியில் நின்று "தூய ஆவியே வாரும்" "Veni creator" என்னும் பாடலைத் தொடங்கி புதிய கட்டிடம் நோக்கி பிள்ளைகளுடன் சென்றார். அவர்களுடன் குழுச் சகோதரிகளும், குருக்களும் சென்றனர். தூய ஆவியின் பாடலுடன் கட்டிட வெளி, உட்புறங்கள் ஆசீர்வதிக்கப்பட்டது. பின் தூபம் காட்டிய பின் வகுப்பிலும், படுக்கை அறையிலும் சிலுவை மாட்டப்பட்டது.

பின்பு சனத்திரள் மண்டபத்துள் கூடியது. ஆயர் மேடையில் அமர்ந்திருந்தார். அப்போது திரு.கோமிஸ் என்பவர் எல்லோர் சார்பாகவும் ஆயருக்கு நன்றி கூறி மடத்தின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறினார். அதன் அபிவிருத்திப் பணிகள் பற்றி எடுத்துரைத்தார். இளைஞர் பணி மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் புதிய கட்டிடத்திற்கு தங்களால் இயன்றளவு உதவி செய்து நன்றியைக் காட்டியுள்ளனர் என்றார். அதனைத் தொடர்ந்து பாடசாலை அதிகாரி மாணவர்களின் கல்வி, சகோதரிகளின் கையளித்தல் பற்றி புகழ்ந்து கூறினார். ஆயர் தன் உரையில் குருநாகல் சகோதரிகள் மட்டுமல்ல எல்லாத் தி.கு. சகோதரிகளின் தியாக வாழ்வையும் கோடிட்டுக் காட்டினார். மாலையில் ஆயர் பரிசளிப்பு விழாவில் பங்காற்றினார். பாடசாலை அதிகாரியும் தனது நீண்ட அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். தேசிய கீதங்களுடன் விழா நிறைவு பெற்றது. அதனைத் தொடர்ந்து தேநீர் விருந்துபசாரம் இடம் பெற்றது. அநாதை இல்லத்திற்கும் ஆயர் சென்றார். 6 புத்த சமயப் பிள்ளைகள் புதிதாக வந்து சேர்ந்தனர்.

அமலஉற்பவ மாதா திருநாளில் 7 பிள்ளைகள் " மரியாயின் பிள்ளைகள்" சபையில் சேர்ந்தனர். 11 ஆயத்த கன்னிகைகள் இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநாகல் - வைத்தியசாலை.

வைகாசி மாதத்தில் இலங்கையின் புதிய ஆளுநர் வைத்தியசாலையை முதல் முறையாகச் சந்தித்தார். விறாந்தையில் தங்கியிருந்த நோயாளிகளை அறையில் ஒழுங்காக சகோதரிகள் வைத்திருந்தனர். நேரம் வந்ததும் சேர்.கேபேட் ஸ்ரான்லி அவரது மனைவி வைத்தியஅதிகாரி கல்டரா (Caldera) சத்திர சிகிச்சை நிபுணர், மூன்று உதவி வைத்தியர்கள் மடத்துத் தலைவியால் வரவேற்கப்பட்டனர். அவர்கள் நேரே நோயாளிகள் தங்கியிருந்த 14 வாட்டுக்களையும் தரிசித்தனர். ஒவ்வொரு கட்டிடத்திற்கும் செல்லும்போது ஆளுநர் ஏழை நோயாளிகளுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அங்கு பெறும் சிகிச்சைகளுக்குப் பாராட்டுக்கள் தெரிவித்தார்.

வைத்தியசாலையைப் பார்வையிட்ட பின் மடத்திற்கு சென்றார். சகோதரிகளுக்கு ஒதுக்கப்பட்ட பகுதி சிறிதாக இருந்தாலும், நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்ததை திருமதி. ஸ்ரான்லி அவதானித்தார். தான் செல்லுமுன் ஆளுநர் தன் சந்திப்புப் பற்றி அறிக்கையில் எழுதினார். நோயாளிகளின் பணியில் தன் திருப்தியையும், சகோதரிகள் எல்லாவற்றையும் ஒழுங்காக வைத்திருப்பதில் முன்னேற்றத்தையும் குறிப்பிட்டார்.

இவ்வாறான சாட்சியங்கள் எம்மை ஊக்கப்படுத்துகின்றன எனத் தலைவி குறிப்பிட்டுள்ளார். விசேடமாகத் தெய்வீக ஆசீர்வாதங்கள் அவர்களின் பணிக்குப் பிரதி பலனாக் கிடைத்துள்ளன. வருடத்தில் 6980 நோயாளிகள் பராமரிக்கப்பட்டுள்ளனர். அதில் 231பேர் வளர்ந்தோர், 8வயதிற்குட்பட்ட 105 சிறுவர்கள் திருமுழுக்குப் பெற்றுள்ளனர். மரண வேதனையில் இருந்த 70பேர் இறுதி அருட்சாதனங்கள் பெற்றுள்ளனர். எம் சிற்றாலயத்தில் 3060 நற்கருணைகள் வழங்கப்பட்டது. பலநோயாளிகள் புனித. திரேசாவின் பரிந்துரையால் சுகமடைந்தனர். வேறுசிலர் மனமாற்றம் அடைந்தனர். இதில் இரண்டு புத்த பிக்குகளும் அடங்குவர். பியதாசா என்பவர் மாலையில் கடும் வியாதியாக வந்தார். புத்த வழிபாட்டை விட்டு மறுநாள் திருமுழுக்குப் பெற்றார். இந்த இறைவனின் புதிய பிள்ளை மதிய வேளை இறைவனடி சேர்ந்தார். மற்றவர்கள் கடும் வியாதியால் வருந்தாவிடினும் ஒருநாள் சகோதரியை தன் கட்டிலிலருகே அழைத்து, அவரைப் பலகாலமாகத் தனக்குத் தெரியும் எனவும், தான் இளமைப் பருவத்தில் வைத்தியசாலைக்கு வந்து போனதாகவும் இறக்கு முன் திருமுழுக்குப் பெற விரும்புவதாகவும் தெரிவித்தார். சில நாட்களின் பின் வீடு திரும்பினார்.

ஏழைகளிடம் அறியாமை நிரம்பவுள்ளது. விசேடமாக சமய அறிவு இல்லை. இதற்குப் பின்வரும் நிகழ்ச்சியைக் கூறலாம். ஒரு மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை நேரம் வைத்தியசாலைக்கு வந்தான். பரிசோதித்துப் பார்த்தபோது அவன் நிலை பரிதாபத்திற்குரியதாய் இருந்தது. பலவீனமாகக் காணப்பட்டான். என்னிடம் தாயாரே! சாகுமுன் என் வீட்டிற்குச் செல்ல விரும்புகிறேன். ஒரு மரத்தின் கீழ் என் தலை மயிரை சாத்தானுக்குக் கொடுக்கப் போகிறேன். முன்பு தருவேன் எனக் கூறியபடியால் சாவின் பின் அமைதியாக இருக்க என் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்றான். "நோயாளியாகிய நீர் இரவில் வெளியே செல்ல முடியாது. ஒருநாளாவது பொறுத்திருக்க வேண்டும்" என்றேன். அவனுக்கு சிகிச்சை அளிப்பதுடன் கத்தோலிக்க திருமறையைப் பற்றிக் கூறினேன். அதற்கு அவன் நான் வாழ்ந்தது போலவே ஒரு உண்மையான புத்த மதத்தவனாக இறக்கவும் விரும்புகிறேன் என்றான். அவன் மரணம் அண்மித்துக் கொண்டு வந்ததால் அந்த ஆன்மாவை மீட்பதற்காக விண்ணகம் பற்றியும், தேவதாய், புனிதர் விசேடமாகப் புனித. அன்னாள் பற்றியும் எடுத்துக் கூறினேன். சில நிமிட சிந்தனையின் பின் ஆழ்ந்த கனவில் இருந்து வந்ததுபோல் பேசத் தொடங்கினான். தாயாரே! நீங்கள் கூறிய கடவுள் புனித. அன்னாளின் பேரனாவார். எனவே எனது தலைமயிரைச் சாத்தானுக்குக் கொடுக்காது புனித. அன்னாளுக்குக் கொடுப்பேன் என்றான். பின்பு அவன் அறிவுரையைக் கேட்டு புனித. திருச்சபையில் சேர்ந்து திருமுழுக்குப் பெற்று "அந்தோனியார்" பெயருடைய "அன்ருவான்" என்னும் பெயர் பெற்றார். அப்போது 12 மணியடித்தது. 5 மணிக்கு இறுதி மூச்சுவிட்டார்.

சிலநாட்களின் பின் புதிதாக திருமுழுக்குப் பெற்ற ஒரு பெண் மேலுலக அழைப்பிற்குக் காத்திருந்தாள். ஒரு பதட்ட நிலை வந்த போது "என்னிடம், தாயாரே! எவ்வாறு நான் விண்ணகம் செல்ல முடியும்? எனக்கு ஒருவரையும் தெரியாது. நீங்கள் என்னை அழைத்துச் செல்லமுடியுமா? என்றாள். மனமகிழ்வுடன் "முடியும், ஆனால் நான் பலநாள் காத்திருக்க வேண்டும்" என்றேன். "நான் அதிகம் துன்பப்படுகிறேன்" என்றாள். அப்போது நான் "நல்ல இறைவனிடம் புனிதர் சிலரை அனுப்பும்படி கேட்பேன். அவர்கள் உம் பயணத்தை இலகுவாக்குவார்கள்" என்றேன். நம்பிக்கை பெற்று அன்றே இறந்துவிட்டாள்.

திருமுழுக்கு ஆடையுடன் வானகம் அனுப்புவது ஆறுதல் தரக் கூடியது. ஆனால், பல ஆண்டுகளாகத் தூரத்தில் இருப்பவர்களை மந்தையின் நல்ல பாதையில் அனுப்புவது கஷ்டம். ஒரு மாலையில் ஒரு எச்.அப்பு என்பவர் மஞ்சள் கயிற்றுடன் காணப்பட்டார். புத்த மதத்தில் இருந்து எமது சமயத்திற்கு வர திருமுழுக்குப் பெற்று, ஒப்புரவு அருட்சாதனமும், நோயில்பூசுதலும் பெற்றார். மஞ்சள் கயிற்றை அவிழ்த்த பின் நல்ல நிலையில் இறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொரு "சியடோறிஸ்" என்பவர் சாகும் தருவாயில் வைத்தியசாலைக்கு வந்தார். திருமுழுக்குப் பற்றி உரையாடியபோது தான் கத்தோலிக்கன் எனவும் முப்பது வருடங்களாக அனுசரிப்பதில்லை எனவும் கூறினான். இறுதி அருட்சாதனத்திற்கு தன்னை தயார் செய்து குருவானவரை வரவழைத்து நல்ல அறிவுடன் பெற்று அன்றே இறந்துவிட்டார். எல்லா நோயாளிகளும் இறப்பதில்லை. ஆனால் கிறிஸ்தவர்களாகும் அருள் பெறுகின்றனர்.

## நாவலப்பிட்டி

இச்சிறிய வைத்தியசாலையானது இவ்வருடத்தில் பல சந்திப்புக்களை எதிர்கொணட்து. முதலில் கண்டி ஆயர் பெக்மேயர் (Beckmayar) எல்லா நோயாளிகளின் பிரிவுகளையும் சந்தித்து ஆறுதல் கூறினார். அவர்களைப் பராமரிக்கும் சகோதரிகளையும், உற்சாகப்படுத்தினார். அத்துடன், தனது மக்களுக்குப் பணிபுரிவதற்கு நன்றி கூறினார். கொழும்பு வைத்திய அதிகாரி, மாகாண சத்திரசிகிச்சை நிபுணர், வேறு மருத்துவர்கள், தீவின் புதிய ஆளநர் என்போர் சந்தித்துச் சென்றனர். எல்லோரும் வைத்தியசாலையின் ஒழுங்கு முறைகள், ஆட்சி நிருவாகம் விசேடமாகச் சகோதரிகளின் தியாக சேவையைப் பாராட்டிச் சென்றனர். அத்துடன் அவர்களின் இடம் சிறியதாக இருப்பதால் அதைப் பெரிதாக்கவும் சம்மதித்தனர். எனவே இவ்வேலை விரைவில் முடிய இறைவன் உதவிபுரிவாராக.

நாம் இவ்விடம் வந்தபின் 520 நோயாளிகள் இங்கு தங்கிச் சிகிச்சை பெற்றனர். பலர் தூர இடங்களில் இருந்து சகோதரிகளிடம் சிகிச்சை பெற அனுப்பப்படுகின்றனர். 63 வளர்ந்தோர், 15 சிறுவர் திருமுழுக்குப் பெற்றுள்ளனர். பலர் ஒப்புரவு அருட்சாதனம், நற்கருணை, இறுதி அருட்சாதனம் பெற்று இறைவனடி சேர்ந்துள்ளனர். இவற்றுள் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றோம்.

புத்தமதத்தைச் சார்ந்த அறுபது வயதுடைய பிரமன்சாமி வாத நோயினால் வைத்தியசாலைக்கு வந்தார். அவருடைய நோய் கடுமையாகவே இறுதி அருட்சாதனம் பெற விரும்பினார். அத்துடன் தான் கத்தோலிக்கன் எனவும், தன் பெயர் கிறிஸ்ரியன் எனவும் கூறினார். குருவானவர் வரவழைக்கப்பட்டு ஒப்புரவு அருட்சாதனம், நோயில் பூசுதல் பெற்று மீட்பின் பாதையில் விடப்பட்டார்.

பெண்கள் பிரிவில் ஒரு தமிழ் இளம்பெண் சாகக் கிடந்தாள். எனவே, சகோதரி விண்ணகம் பற்றி அவளுடன் பேசினார். அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த பெண் இடையில் "தாயே, நீங்களும் அங்கு செல்வீர்களா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கேட்டாள். "நான் அதை நம்புகின்றேன" என "நானும் உங்களுடன் வருகின்றேன்" நாம் ஒன்றாக இறைவனைப் பார்த்து நேசிப்போம்" என்றாள். பின் பல கேள்விகள் கேட்டுத் தன் விசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொண்டாள்.

பின்பு தேவதாயின் பாதுகாவலில் திருமுழுக்குப் பெற்றாள். சில நேரத்தின் பின்பு இறந்துவிட்டாள். அவளுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு நோயாளி "எம் கடவுளும், உங்களுடையது போல் நல்லவர்களே" என சகோதரிகளுக்குக் கூறினார். எனவே, புனித. ஆசீவாதப்பர் வரவணிக்கம் அவள் தலையணையில் வைக்கப்பட்டு, நவநாள் ஆரம்பிக்கப்பட்டது. எமது ஸ்தாபகரின் பரிந்துரை கேட்கப்பட்டது. நோளயாளி அமைதியான ஓர் இரவு கடந்த பின் தாதியை அழைத்தாள். தாயே, "கறுப்பு உடை அணிந்து நான் ஒரு குரு, என்று என் கட்டிலருகே வந்து, "நீ விரைவில் இறக்கப் போகிறாய்". எனவே சகோதரி கூறும் சமயத்தைப் பின்பற்று உங்கள் கடவுள் பொய்'' என்றார். எனவே தற்போது கத்தோலிக்க உண்மைகளை அறிந்து திருமுழுக்குப் பெற எனக்குச் செபம் கற்றுத் தாருங்கள் என்றாள். அவள் ஆசை நிறைவேற்றப்பட 2நாளின் பின் இறைவனடி சேர்ந்தாள். வேறொரு விபத்தில் அகப்பட்ட ஓர் ஏழையும் எம் ஸ்தாபகர் பரிந்துரையால் சுகம் பெற்றார். சகோதரி செபித்துக் கொண்டு அவர் காயங்களுக்கு மருந்து கட்டினார். 2கிழமையின் பின் சுகம் பெற்று வீடு சென்றான். மருத்துவர் சகோதரிகளின் தியாகப் பணியினால் வேறு குணப்படுத்தல்களும் நடைபெற்றது. எல்லாவற்றையும் எடுத்துக் கூறமுடியாது. ஒரு தெய்வீகக் குணப்படுத்துதலுடன் இதை நிறைவு செய்கின்றோம்.

பங்குனி 3ம் திகதி மொகதி அப்பு என்பவர் வைத்தியசாலைக்கு வந்தார். தான் ஒருவரை அடித்துக் கொன்றதாகவும் 7மாதம் சிறையில் இருந்ததாகவும் கூறினார். அங்கு உணவுகள் சரியில்லை. கடும் வெயிலில் வேலை. இவை எல்லாம் அவரின் உடல் நிலையைக் குழப்பியது. சிறைக் காலம் முடிந்ததும் தன் குடும்பத்துடன் சேர்ந்து உடல் நிலையைத் தேற்றிக் கொள்ளலாம் என்று நினைத்தார். ஆனால் குடும்பம் ஏற்றுக்கொள்ளவில்லை. இங்கு வந்து என்னைக் குணப்படுத்தலாம் என நம்புகின்றேன் என்றார்.

துன்பங்களில் இருந்து விடுதலை அடையக் கத்தோலிக்க சமயத்தில் சேரும்படியும், புத்தமதத்தை விடும்படியும் கூறப்பட்டது. நோயாளி பதில் கூறவில்லை. சிலநாட்களின் பின் ஒரு காலையில் அதிகம் துன்புற்றான். எனவே தானாகவே எம் தூயமதத்தைக் கற்றுத் தரும்படி கேட்டான். பரலோக மந்திரம், அருள்நிறை மரியே, பாவசங்கீர்த்தன மந்திரங்களைச் சொல்லுச் சொல்லாகப் படித்தான். சிறிய அளவில் மறைஅறிவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொண்டான். அடிக்கடி கத்தோலிக்க மதம் நல்லது. படிப்பதற்கு நான் நோயாளி என்றான். அப்போது நான் எல்லாம் பாடமாக்கத் தேவையில்லை. புத்தமதத்தை விட்டால் போதும் என, இச்சிறு புத்தகத்தில் இருப்பதை நான் நம்புகின்றேன். இவ்வளவு காலமும் நம்பியது பொய் எனக் கூறினார். புனித.சூசையின் விழா அண்மித்தது. அந்த நாளில் திருமுழுக்குப் பெற விரும்பி நன்மரணத்தின் பாதுகாவலர் திருநாளில் பெற்றான். ஆனால் புனித.ஆசீர்வாதப்பர் திருநாள்வரை வாழ்ந்தான். அவன் தலையணையில் அவர் வரவணிக்கம் இருந்தது. இறுதி மூச்சு வரை இரக்கமுள்ள இயேசு மரி சூசை என் இதயம் ஆவி வாழ்வு எல்லாம் தருகின்றேன். ஏற்றுக்கொள் எனச் செபித்தான்.

## கொழும்பு 1928 - பம்பலப்பிட்டியா

பம்பலப்பிட்டியா பாடசாலை ஆரம்பித்து 1928ம் ஆண்டு தனது 25ம் வருட நிறைவைப் பிரதிபலிக்கின்றது. இந்தகக் கால் நூற்றாண்டு காலத்தில் இறைவன் இப்பாடசாலை வழியாக ஆன்மாக்களுக்குச் செய்த நன்மைகளுக்கு இறைவனுக்கு நன்றிகூற வேண்டும். இந்த வெள்ளி விழாவானது நாட்டுத் தலைவர்களுக்கும், பெற்றோர், மாணவர்களுக்கம் பணியின் ஓர் உயிருள்ள சாட்சியமாக விளங்குகின்றது. இந்த விழாவிற்காக பாடசாலையின் பெரிய மண்டபத்தில் ஒரு தற்காலிக பீடம் அமைக்கப்பட்டு மாசி 16ந் திகதி கொழும்பு அதிமேற்றிராணியார் தலைமையில் காலைத் திருப்பலி ஆடம்பரமாக நிறைவேற்றப்பட்டது. பல அமலமரித்தியாகக் குருக்கள் ஆயரைப் புடைசூழ நின்றனர். அவர்களில் ஒருவர் லெஜன் (LEJEUNE) குருவானவர் (Forget me not) என்ற பூவை அடையாளமாக வைத்து உரையாற்றினார்.

இந்த ஆடம்பர விழாவில் போடிங்கிலும், இப்பணிக்குக் கருவிகளாக இறைவன் தேர்ந்து கொண்டவர்களிலும் அவர் செய்த நன்மைகளை நீ என்றும் மறவாதே.

இறைவார்த்தை வாசகத்திலும் "இதோ இறைவனின் இல்லம் பலமாகக் கட்டப்பட்டுள்ளது" என்னும் வார்த்தையை எடுத்து இப்பாடசாலை ஆரம்பத்திலிருந்து திருக்குடும்பச்சபை சகோதரிகளின் அபிவிருத்தியைப் பார்க்கும்போது, இறைவனின் கரத்தையே நாம் அங்கு காண்கின்றோம். அத்துடன் இயேசுவின் திருஇருதயமானது இந்த போடிங்கின் கட்டிடிடக் கலைஞராக இருப்பதை மறக்க வேண்டாம்.

பழைய மாணவர்களும், சிறப்பாகத் தற்போதைய மாணவர்களும் திருக்குடும்பச்சபையின் தோட்டத்தில் உள்ள இச்சிறு பூவை மறக்க வேண்டாம். 1903ம் ஆண்டு ஒரு சிறிய வீட்டில் 28 பிள்ளைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய இப்பணி மெதுவாக கஷ்டமான சூழ்நிலையில் உறுதியுடன் 5வருடங்காக 2ஆசிரியருடன் பணிபுரிந்தது. 1908ம் ஆண்டு மாசி 1ம் திகதி ஒரு பகுதியில் (Retreate) தியானம் என்னும் பெயருடன் சகோதரிகள் வந்து தங்கினர். தற்போது மடம் பிரதான வீதிக்கும் இந்து சமுத்திரத்திற்குமிடையே பரந்துள்ளது. 28 பிள்ளைகள் 25 மடங்களாகப் பெருகி உள்ளனர். எனவே ''இறைவனின் விரல்'' அங்குள்ளது.

எனவே தூயஇதயம் 'என்னை மறவாதே' என்கிறது இறைவன் தனித்து ஒரு பணியைச் செய்ய முடியாது. மனிதனின் வேலையாட்களின் ஒத்துழைப்பைக் கேட்கின்றது. ஆரம்பத்தில் இருந்தே தனிப்பட்டவர்களினதும், குடும்பங்களினதும், நாட்டினதும் முன்னேற்றத்தைப் பேணி வருகின்றார் இறைவன்.காலத்தால், வல்லமையால், பாராட்டுக்களால் இப்பாடசாலை வளர்ந்து வரும் வேளையில் இவர்களும் தங்களுக்குள் உதவிபுரிய வேண்டும். மேலும் இச்சிறிய 'பூ' சொல்வதைக் கேட்போம். பழைய வேலையாட்கள் தற்போது விண்ணகத்தில் இருந்து 'என்னை மறவாதே' என்று கூறுகின்றனர். மெலிசான் ஆயர் பல வருடங்களுக்கு முன் தன் நன்றியைப் பெற்றுள்ளார். இவ்வருடம் (1928) தம் ஆயர் திருநிலைப்படுத்தலின் 30ம் ஆண்டை நிறைவு செய்கின்றார். தன் பணிக்காலத்தில் எல்லாக் கத்தோலிக்க பாடசாலைகளுக்கும் நன்மை செய்பவராகவும், உதவி செய்ய உவந்தளித்து அபிவிருத்தி செய்ய ஆயத்தமானவராகவும் இருந்தபடியால் அவரை மறவாதே.

இப்பணியை ஆரம்பித்த புனித தாயார்மார் சகோதரிகளை மறவாதே. அவர்கள் முதல் வருடங்களில் வெயயில், களைப்பு என்பவற்றைத் தாங்கிப் பணிபுரிந்துள்ளனர். பலர் எம்முடன் இல்லாவிடினும் சிலர் எம்முடன் இருந்து தம் உழைப்பின் பயனை அனுபவிக்கின்றனர். எனவே இவர்களை மறக்க வேண்டாம். திருக்குடும்ப சபையின் ஆன்மீகத்தை மறவாதே. ஒவ்வொருவரின் பண்புகளும் வித்தியாசமாக இருக்கம். அவ்வாறே சபையும் உள்ளது. பம்பலப்பிட்டியா மடத்தின் ஆன்மீகம் எளிமையும் இயற்கையுமே. இயேசுவின் சிறிய மலரின் ஆன்மீகமும் அதுவே. அவவின் படம் இங்கு எம்மைப் பார்த்துப் புன்னகை புரிகின்றது. கடந்து போனதை மறவாதே. இது வருங்காலத்திற்குப் பாதுகாப்பாக உள்ளது.

தெடேயும் (TEDEUM) என்னும் நன்றிப் பாடல்25 வருட ஆசீர்வாதங்களுக்காக இசைக்கப்பட்டது. நண்பர்களும், மாணவர்களும் ஒரு கலைநிகழ்ச்சியுடன்(Consert) விழாவை நிறைவு செய்தனர். எல்லோருடைய விருப்புடனும் கோவில் கட்டுவதற்குப் பெயர்கள் பதிவு செயய்யப்பட்டது. கோவிலின் அளவு பணியின் அபிலிருத்தியைப் பொறுத்திருக்கும்.இறைவனின் ஆசி பல வேளைகளில் கடும் சோதனைகளால் புடமிடப்படுகின்றது.இப்படியே போடிங் நிர்மாணிப்பதற்கும் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூபிலி விழாவின் மறுநாள் சின்னமுத்து தொற்றுநோய் திடீரென்று தாக்கியபடியால்பிள்ளைகளைப் பாடசாலையிலிருந்து வெளியேற்ற வேண்டி நேரிட்டது. நோய் குணமாகும் வரை காலம் நீடித்தது. 2 மாதங்கள் சென்றன. குழுவிலுள்ள சகோதரிகளைத் தாக்கவில்லை. ஆடி 11ம் திகதி 650 பிள்ளைககள் மகிழ்வுடன் பரிசளிப்பு விழாவிற்குச் சமூகமளித்தனர். புதிய இலங்கை ஆளுநரின் மனைவி திருமதி ஸ்ரான்லி இவ்விழாவிற்குத் தலைமை வகித்தார். அவர் வருடாந்த பாடசாலை அறிக்கைக்கு கவனமாகச் செவிமடுத்தார்.

பாடசாலையானது பரீட்சைப் பெறுபேறுகளிலும் இளம்பெண் பிள்ளைகளின் கல்வியிலும் முதலிடம் வகிக்கின்றது. மாணவர்கள் மிகவும் கரிசனையுடன் பயின்று அறிவுடன் பதிலிறுக்கின்றனர். பழக்கவழக்கங்கள் மேன்மையானவை. சங்கீதம், உடற்கலை நன்றாக அமைந்துள்ளன. சமயஅறிவிற்கு முதலிடம் கொடுக்கப்படுகின்றது. 80 வீதம் கத்தோலிக்க மாணவர்கள் உள்ளனர். வாரத்தில் ஒருநாள் பங்குத்தந்தையின் அறிவுரையும், வருடாந்த தியானமும் வழங்கப்படுகின்றது. இந்த ஆன்ம பாதுகாப்பின் வழியாகப் பிள்ளைகள் தம் வாழ்வின் அர்த்தத்தை அதாவது தம் ஆன்ம மீட்பைக் கண்டடைகின்றனர்.

திருமதி ஸ்ரான்லி, பம்பலப்பிட்டி போடிங்கின் மகிழ்ச்சியான வரவேற்புக்கு நன்றி கூறினார். "நானும் தென்னாபிரிக்காவில் உள்ள ஒரு போடிங்கில் வளர்ந்து அதில் நல்ல மதிப்பைக் கொண்டிருக்கின்றேன். அதே போன்ற ஒரு போடிங்கில் மீளவும் என்னைக் காண்பது எனக்கு மகிழ்ச்சி தருகின்றது. உங்கள் அறிக்கையும் பாராட்டுக்குரியது. தூரதேசத்தில் இருந்து வந்த ஆசிரியர்கள் இலங்கைப் பிள்ளைகளின் கல்விக்கு அளிக்கும் தியாகத்தின் சாட்சியமாக இவை விளங்குகின்றது.

நீங்கள் பெறும் உருவாக்கம் எளிமையானதாக ஒழுக்கத்துடன் இணைந்து செல்கின்றது. இங்கு ஓர் அமைதியான சூழலில் நீங்கள் வாழ்கின்றீர்கள். உலகப் போக்கு பல நல்ல விழுமியங்களை இழந்து விடுகின்றது. நீங்கள் அதற்கு எதிராகப் பயனளிக்கின்றீர்கள். அமைதியாக நிதானத்துடன் சிந்தித்துச் செயலாற்றுகின்றீர்கள். அறிவு, முயற்சி, விஞ்ஞானக் கல்வி எல்லாம் இருக்கலாம். ஆனால் ஒருபோதும் அவசரப்பட்டுச் செயற்படக் கூடாது. அவ்வாறு செயற்பட்டால் எப்படிப்பட்ட சூழலாயினும் பலவற்றை இழப்பீர்கள். எனவே இங்குள்ள முன்மாதிரிகைகள், அறிவுறுத்தல்களை கடைப்படியுங்கள். அத்துடன் என் அன்பார்ந்த மதிப்புக்குரிய சகோதரிகளே, உங்கள் பக்தி பற்றுதல் உள்ள படிப்பித்தலானது இங்கு வேரூன்றி மாணவரின் இதயத்தில் மலர்ந்து, அவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறிச் செல்லும்போது ஒவ்வொரு மாணவரும் ஓர் அன்பொளியின் இருப்பிடமாக மிளிர உங்களை வாழ்த்தி நிற்கின்றேன் என்றார். அத்துடன் வருடாந்த பரிசுகளை அளிப்பதில் பெருமிதம் அடைகின்றேன் என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வென்னப்புவா மடம்




பம்பலப்பிட்டி மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருநாகல் மடம்



குருநாகல் சிற்றாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசளிப்பின் பின்பு கொழும்பு அதிமேற்றிராணியார் திருமதி ஸ்ரான்லிக்கு நன்றி உரை வழங்கினார். இக்கலைநிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கத் தன்னை அழைத்ததற்கு நன்றி கூறிப் பின்பு துறவற சகோதரிகள் தம்மிடம் ஒப்படைத்த பிள்ளைகளிடம் காட்டும் தியாக சேவையைப் பாராட்டினார். இறுதிப்பாடல் ஒரு பலத்த கரகோஷத்துடன் நிகழ்வுகளும் முடிவுற்றன. எமது பணியில் தெய்வீக ஆசி பெற்றவையென 11மனமாற்றத்தைக் குறிப்பிடலாம். சில முக்கியமானவையைக் கீழே தருகின்றோம்.

எமது யூபிலித் திருப்பலியின்போது 2போடிங் பிள்ளைகளின் தந்தை உணர்ச்சி வசப்பட்டு மீளவும் இறைவனிடம் திரும்பிவர முனைந்தார். திருமுழுக்குப் பெற்றிருந்தார். கிறீஸ்தவக் கடமைகளை அனுசரியாது வாழ்ந்து பின் ஒரு புரட்டஸ்தாந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். எனினும் தேவதாயின் பக்தியைத் தன் வீட்டில் கடைப் பிடித்தார். ஒரு கத்தோலிக்க நண்பர் மூலம் குருவிடம் செல்ல ஊக்கம் பெற்று அவர் அறிவுரைகளைப் பின்பற்றிப் பாவசங்கீர்த்தனம் செய்து, நற்கருணை உறுதிப்பூசுதல் பெற்றுத் தன் திருமணத்தைச் செய்தார்.

வேறொரு பெண் தன் கணவனைப் போன்று கத்தாலிக்க மதத்திற் சேர்ந்து தன் பிள்ளைகளையும் சேர்த்துத் திருவிருந்தில் பங்கு பற்றியது குடும்பத்திற்குப் பெரும் மகிழ்ச்சியாகும். இனி நான் திரும்பி பார்க்க மாட்டேன் என ஆனந்தக் கண்ணீர் சொரியக் கூறினார்.

புனித திரேசாளின் தியான நாட்களில் கத்தோலிக்கம் அல்லாத ஒரு பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்த ஒரு பழைய மாணவி நோயாளியானார். இதைக் கண்டு அவள் தந்தை கத்தோலிக்கப் பிள்ளையாக, துறவியாக இரு. இது உன் உடல் நலத்திற்கு நல்லது என்றார். எனவே ஐப்பசி 16ந் திகதி திருமுழுக்கு,ஒப்புரவு அருட்சாதனம், நற்கருணை பெற்றுக் கொண்டார். இதே அருளை அவவின் சகோதரரும் பெற்று இருவரும் தம் பெற்றோரின் மனமாற்றத்திற்காக உழைக்கின்றனர்.

வேறு இரு இளம்பெண்கள் அதே அருளை எம் இல்லத்தில் பெற்றுக் கொண்டனர். முதலாவது பெண் 17 வயது. தன் படிப்பை புரட்டஸ்தாந்துக் கல்லூரியில் முடித்துக் கொண்டு பம்பலப்பட்டியா பாடசாலைக்கு வந்தாள். திருமுழுக்கினால் கத்தோலிக்க பெயரைக் கொண்டிருந்தாலும் விசுவாச உண்மைகளைப் புறக்கணித்து வந்தாள். எனவே அதிகம் அறிவைப் பெறுவதற்காக ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளுடன் சேர்ந்து படித்தாள். சில நாட்களின் பின் அவள் உள்ளம் திருவிருந்தில் பங்குபற்ற ஆயத்தமானது. எனவே உள்ளம் நன்றிச் செபத்தின்போதும், நாள் முழுவதும், விசேடமாகத் தம் ஆசிரியருக்கு நன்றி கூறும்போதும் கண்ணீர் சொரிந்தது. வேறொரு மாணவி தன் தந்தையுடன் மார்கழி 8ந் திகதி திருமுழுக்குப் பெற்று முதல்நன்மை பெற்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடத்து வேலை செய்யும் பெண் ஒருவரும் தன் வேலையில் விசுவாசத்தின் முத்தைப் பெற்றாள். எனவே மனமாற்றம் அடைந்தாள். ஆயர் கூடேர் (Mgr. Condert) வந்தபோது போடிங் பிள்ளைகளிடம் தன் வருகையின் ஞாபகமாக என்ன வேண்டும் என்று கேட்டார். உடனே ஒரு சிறுமி எழுந்து தனக்கு முதல்நன்மை தரவேண்டுமென்று கேட்டாள். அதற்கு அவர் நான் விரும்புகின்றேன். ஆனால் பெற்றோரின் சம்மதத்தை எழுத்து மூலம் பெற வேண்டும் என்றார். சம்மதம் பெற்றவுடன் ஆயத்தம் செய்யப்பட்டு வேறு சிறுமிகளுடன் திருமுழுக்குப் பெற்றாள். இவ்விரு சிறுமிகளின் பெற்றோரும் சிறந்த கத்தோலிக்கராக மாறினர். இறைவன் தன் அன்பினால் ஈர்க்கப்பட்ட இந்த ஆன்மாக்களைத் தன் அருளின் அமைதியில் காப்பாராக.

ஐப்பசி மாதத்தில டெலால்( Delalle) ஆயர் நத்தால் (Natal) நாட்டு அப்போஸ்தலிக்கப் பிரதிநிதி கொழும்பு வந்தபோது பிள்ளைகளின் வருடாந்த தியானம் நடைபெற்றது. எனவே இறுதிநாள் வழிபாடுகளை அவர் சிறப்பித்தார். அவரிடம் தந்தைக்குரிய அன்பு, சகோதரிகள், பிள்ளகள் மட்டில் இருந்தது. தென்னாபிரிக்காவில் திருக்குடும்பச் சகோதரிகள் ஆற்றும் பணிகளை விதந்துரைத்தார். அவுஸ்ரேலியாவில் சிட்ணியில் நற்கருணை மகாநாட்டில் பங்குபற்றி விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். அங்குள்ளவர்களின் விசுவாசத்தைப் பற்றிக் கூறீயுது எமக்குப் பயனுள்ளதாக அமைந்தது.

## வென்னப்புவா

இலங்கையை விட்டுப் புறப்படுமுன் "டெலால்" ஆண்டகை எமது வென்னப்புவா மடம் சென்றார். ஐப்பசி 4ம் திகதி அங்கு சென்றபோது பெருமழை பெய்தது. ஆயர்( Fr. Mark Lefrere) மார்க் லெவிறேர் என்னும் குருவானவருடன் வந்தார். காரில் இருந்து இறங்கியதும் அவரின் அன்பான பண்பு எமஸ்மக் கவர்ந்தது. ஆலயத்திற்குச் சென்று நற்கருணைநாதர் முன் ஆராதனை செலுத்திவிட்டு நவகன்னியர் இல்லம் சென்றார். ஆலயம் தென்ஆபிரிக்க "மறிஸ்ரெலா" போடிங்கில் உள்ளதிலும் சிறியதாக இருக்கக் கண்டார். நவகன்னியரகள் , ஆயத்தக் கன்னியர்கள் ஆயருக்கு நல்வரவு கூறினர். அதற்கு ஆயர் இங்கு பலர் தம்மை இறைவனுக்கு அர்ப்பணிக்க ஆயத்தமாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுவதாகக் கூறினரார். திருக்குடும்பசபையில் சேருவது எமக்கு மகிழ்ச்சி. ஏனெனில் அவர்கள் அமலஉற்பவசபைத் துறவிகளின் சகோதரிகளாகவுள்ளனர். தென்ஆபிரிக்க சகோதரிகள் பாடசாலையிலும், நோயாளிகளுடனும் பெரும் பணியாற்றுகின்றனர். தூரம் அவர்களிடம் இருந்து எம்மைப் பிரித்தாலும் செபத்தினால் ஒன்றிணைகின்றோம். நற்செய்திப்பணிக்கே நாம் எம்மை அர்ப்பணிக்கின்றோம். சபை நிறுவுனரின் 'இறைவன் மாத்திரமே' என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்போக்கைக் கடைப்பிடிக்கின்றோம். சபையின் பலமான குடும்ப உணர்விலே வாழ்கின்றோம். தென் ஆபிரிக்காவில் இருந்து லியோனி தாயார் இவ்விடம் வந்திருக்கின்றார். நான் இங்கு வரும்போது அவர் போர்டோவில் பொதுச்சங்கத்திற்குச் சென்றுள்ளதால் அவவைச் சந்திக்க முடியவில்லை. ஆயருக்கு வென்னப்புவாவின் பணிகள் திருப்தியை அளித்தது. சிங்களப் பாடசாலை, ஆங்கிலப் பாடசாலை, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, நவகன்னியர் இல்லம் போன்றவை ஒரு தேன்கூடு போல் காட்சியளித்தது. தாம் பெற்ற மனித விஞ்ஞான இயற்கைக்கு மேலான படிப்புக்களின் பயன் (தேன்) இலங்கைத் தீவின் மறுபகுதிகளுக்குக் கொண்டு செல்ல ஆயத்தமாக இருந்தனர். அத்துடன் கிராமத்தில் இருந்த ஆரம்பப் பாடசாலைகளிலும் அரசாங்கம் ஆசிரியர்களுக்கு அவர்கள் மொழியிலும், ஆங்கில மொழியிலும் பல வேலைகள் கொடுத்திருந்தது. எனவே சமய அறிவு கொடுப்பது கஷ்டமாக இருந்தது. எனவே அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு. என்ற செபம் இறைவனால் கேட்கப்பட்டது.

நவகன்னியருக்கு ஒரு புதிய தங்குமிடம் அமைக்கப்பட்டு ஆயர் அதை ஆசீர்வதித்தார். அமதிக் குருக்கள் 20பேர் மட்டில் சமூகமளித்தனர். அவர்களின் பிரசன்னம் எதிர்கால தேவஊழியர் மட்டில் அவர்களுக்கிருந்த அக்கறையைக் காட்டியது.

சித்திரை 10ந் திகதி காலை பாஸ்குத் திருநாள் முடிந்து செவ்வாய்க்கிழமை மடத்துக் கோவிலுக்குப் பவனியாக வந்தனர். ஆயர் இறுதியில் வந்தார். கூடேர் ஆயர் கோவிலுக்குள் நுழையும்போது "நல்லாயன் வாழ்க" என்னும் பாடல் இசைக்கப்பட்டது. நவகன்னியரும், ஆயத்தகன்னியரும் இதைப் பாடினர். ஆயர் தமக்குரிய உடை அணிந்தவராகப் பவனியாகப் புதிய கட்டிடம் நோக்கிச் சென்றார். திருச்சபைச் சம்பிரதாய ஒழுங்கு முறைப்படி எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார். இந்தக் கட்டிடம் பாப்புவின் விருப்பப்படி அமைந்துள்ளதென்று திருக்குடும்ப சபைச் சகோதரிகளையும், நவகன்னியரையும் பாராட்டினார். பின்பு கட்டிட வேலை செய்தோருடன் ஒரு புகைப்படம் எடுப்பதற்குச் சம்மதித்தார். கட்டிட வேலையின்போது ஒரு விபத்தும் ஏற்படாது பாதுகாத்த இறைவனுக்கு ஒரு நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

புரட்டாதி 08ந் திகதி சுதேச சகோதரிகளின் தியானம் முடிவுற்றது. 15 ஆயத்தக்கன்னியர் துறவற உடை பெற்றனர். 9நவகன்னியர் தம் முதல் அர்ப்பணத்தைச் செய்தனர். ஆயத்தகன்னியரின் மண்டபம் 100பேரைக் கொள்ளக் கூடியதினால் விழாக்களின்போது மனரம்மியமாக இருக்கும். இப்பக்தி முயற்சிகள் இவ்வருடம் இடம்பெற்றதால் நல்ல பலன் தரும் என எதிர்பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை, வென்னப்புவா

சென்ற வருடம் சிங்கள நவகன்னியரின் ஸ்தாபகம் பற்றி ஆண்டறிக்கை குறிப்பிட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஆயர் ''கூடோர்'' ஆண்டகை அந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்து தந்தைக்குரிய தன் தியாக அன்பை எடுத்துக் காட்டினார். ஒருவருமே இது அவரின் கடைசிச் சந்திப்பு என்று எதிர்பார்க்கவில்லை. எனவே சடுதியான அவரின் மரணம் எல்லோருக்கும் துயரத்தைக் கொடுத்தது. 38 சிறிய பணித்தளங்களைத் தன்னகத்தே கொண்ட இந்தப் பணிக்குத் தாபாரமாக இருந்தவர் விண்ணகத்தில் இருந்தும் பாதுகாப்பார். இந்த நம்பிக்கையில் எம் சகோதரிகள் இறைவனின் புதிய பிரதிநிதியைக் கொழும்பு அதிமேற்றிராசனத்திற்கு எதிர்பார்க்கின்றனர். இந்த உணர்ச்சிப் பூர்வமான நம்பிக்கையில் குழுச் சகோதரிகள் போடிங் பிள்ளைகளின் நோயையும் தாங்கிக் கொண்டனர்.

''சிலுவை புனிதர்களை உருவாக்குகிறது'' என்பார்கள் இத்துன்பங்கள் எமக்கு ஒரு புத்த பிள்ளைக்குத் திருமுழுக்குக் ஆயத்தப்படுத்த அருளைத் தந்தது. இளம் வயதிலேயே தாயை இழந்த பிள்ளை வேறொரு புத்தமதத்தாயினால் வளர்க்கப்பட்டாள். புத்தமதத்தில் வாழ்ந்தாலும் நல்லாயன் சபைச் சகோதரிகளிடம் கல்வி பயின்றாள். அவள் நோயுற்றுத் தந்தையின் வீட்டிற்கு அனுப்பப்பட்டபோது எமது ஒரு சகோதரியின் பெற்றொர் அவளின் படிப்பைக் கண்காணித்து வந்தனர். அந்த வீட்டின் பக்திச் சூழல் அவளைக் கத்தோலிக்க மதத்தில் சேரத்தூண்டியது. எனவே தந்தை வென்னாப்புவா மடத்திற்கு அழைத்துச் சமயம் படிப்பித்து புரட்டாதி 30ந் திகதி திருமுழக்குப் பெற்றாள்.

வழிபாடுகூடிய நேரம் எடுத்தாலும் தான் முதல் நன்மை எடுப்பதற்கு உபவாசம் காத்தாள். தற்போது துறவற வாழ்வை நாடுகிறாள். வேறொரு போடிங் பிள்ளையும் புத்தமதத்தில் இருந்தாலும் தோட்டத்தில் இருக்கும் திருஇருதய சுருவத்தில் பக்தியுடையவள். பெரிய, சிறிய பிள்ளைகள் அருட்தந்தை மத்தியூவின் பக்தி முயற்சிகளைச் செய்கின்றனர். அதாவது செபம், திருவிருந்து, தபம், திருமணித்தியாலம் போன்றன. ஒரு நாள் திருமணித்தியாலத்தின் போது இயேசு தன்னை ஆறுதற்படுத்தகிறவர் மேல் அன்பாக இருக்கிறார். எனவும் இந்த வீட்டை அவர் தெரிவு செய்துள்ளார், ஆனால் சிலமுட்களும் உள்ளன. என ஒருவர் வாசித்தார். அப்போது நான் தான் முள் என அந்தப் பிள்ளை, நான் என் பப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம்மாற இயேசுவை வேண்டுவேன். அதன் மூலம் நான் கத்தோலிக்க பிள்ளையாக முடியும் என்றாள். பின்பு தன் கழுத்தில் இருந்தவற்றைக் காலில் போட்டு மிதித்து விட்டு வரவணிக்கம் போட்டாள். பின் நண்பிகளுடன் செபத்தில் பங்குபற்றினாள். தற்போது தன் பெற்றோருடன் இறைவனின் பிள்ளையாகவும், திருச்சபையின் உறுப்பினராகவும் வரமுயற்சி செய்கின்றாள்.

## குருநாகல் - வகுப்புகள்

சென்ற வருடத்தில் கட்டிய பாடசாலைக் கட்டிடம் பிள்ளைகளின் தொகைக்குப் போதியதாக இருக்கவில்லை. அருகே புத்த பாடசாலையும் உள்ளது. 2 வகுப்பு மேலதிகமாகத் தேவையாக உள்ளது. சுதேச பாடசாலையில் இருந்து ஆங்கில பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்கின்றனர். ஆங்கிலம் அரச மொழியாக உள்ளது. வருட இறுதியில் பிள்ளைகள் நல்ல சித்தி பெற்றுள்ளனர். இது ஆசிரியர்களின் தியாகத்தையும், முயற்சியையும் காட்டுகிறது. பாடசாலை அதிகாரிகளின் சந்திப்பின் பின் அறிக்கையும் நல்ல முடிவையே காட்டுகின்றது. எனவே தேவபராமரிப்பு எம்முடன் இருந்து எம் பணிகளை ஆசீர்வதிப்பதைக் காணமுடிகிறது.

வைகாசி மாதத்தில் பிள்ளைகள் நவநாட்கள் செய்து மாசில்லா மாதாவுக்கு தம்பக்தியை வெளிப்படுத்துகின்றனர். இவ்வருடம் நவநாட்கள் முடியமடத்தினுள் பவனி நடைபெற்றது. ''ஆவே மரியா'' பாடலுடன் சுருவத்தை அலங்கரித்து எடுத்துச் சென்றனர். இறுதியில் ஒரு மாணவி மாதாவுக்கு முடிவைத்துத் தம் அன்பை வெளிப்படுத்தினாள். ஒரு போடிங் பிள்ளை எல்லார் சார்பாகவும் அர்ப்பணச் செபத்தைச் செபித்தாள்.

ஆனி மாதத்தில் நற்கருணைப் பவனி நடைபெற்றது. அநாதைப் பிள்ளைகள் பல நாட்களுக்கு முன்பே அவர்கள் தோட்டத்தில் நற்கருணை தங்கும் இடத்தைத் தயார் செய்தனர். நல்ல உள்ளத்துடன் வீட்டின் கூரை உயரமட்டத்திற்கு அமைத்திருந்தனர். மழை வந்து தாம் செய்தவற்றை ஒரு நொடிப்பொழுதில் அழிக்காது முகிலை தூரச் செல்ல மன்றாடினர். நற்கருணைப்பவனி செல்லும் போது எல்லோரும் அகமகிழ்ந்தனர். பிற மதத்தினரும் பவனி செல்லும் போது மரியாதையாக நின்றனர்.

எமது அநாதை இல்லத்திற்கு நாவலப்பிட்டி வைத்தியசாலையில் இருந்த 2 1/2 வயதுச் சிறுமி ஒருத்தி வந்துள்ளாள். குடும்பத்தால் கைவிடப்பட்டு மரணத்தருவாயில் இருந்த இவளை மாறி லியோனித்தாயார் அங்கு சென்ற போது பிள்ளையைக் கண்டு திருமுழுக்குக் கொடுத்து ''லூயிடிகொன்சாய்க்'' என்ற பெயரையும் கொடுத்தா. விண்ணகம் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவளைத் தேவபராமரிப்பு மீளவும் குணமளித்து, வைத்தியசாலையில் இடமின்மையால் குருநாகல் அநாதை இல்லத்திற்கு அனுப்பப்பட்டாள். அங்கு எல்லோரின் மகிழ்ச்சிக்கும் காரணமானாள். அதேவேளை பெரிய பிள்ளைகள் பலர் திருமணம் செய்து வெளியேற அவர்களிடமாகப் பல சிறுமிகள் வந்து சேர்ந்தனர்.

## கொழும்பு

பொதுச் சங்கத்தில் இருந்து செய்திகளுடன் வந்த மாறிலியோனித் தாயாருக்கு 1929ம் ஆண்டு தை 13ந் திகதி பம்பலப்பிட்டி மடத்துச் சகோதரிகள் வரவேற்புக் கூறினர். தைமாத இறுதி நாட்கள் இவற்றுடன் கழிந்தன. பாடசாலை தொடங்கியதும் தொகையான மாணவர்கள் சமூகமளித்தனர் எம்முடன் சேர்ந்து நற்கருணைப் புதுமை, திரிதின நாட்களில் செபித்தனர் இறுதியில் தியான நாட்களின் நிறைவு போன்ற ஓர் அனுபவத்தை அளித்தனர். சில நாட்களின் பின்பு ஓர புதிய செய்தி கடல் கடந்து வந்தது. 11ம் பத்திநாத பாப்பரசரின் யூபிலியுடன் அச்செய்தி சேர்ந்திருந்ததால் ''போடிங் மாணவரின் வெளியீடான" (Refreshing Breezes) இதழின் முதற்பக்கத்தில் ஒரு கவிதை வெளியானது.

''பாப்பிறைக்கு எமது வணக்கம்" இங்கிருந்த உரோமாபுரி தூரத்தில் இருந்தாலும், உள்ளத்தால் நாம் அருகே இருந்து இறைவனின் பிரதிநிதியாகவும், இராயப்பரின் வாரிசாகவும் இருக்கும் தங்களை வாழ்த்துகிறோம். உமது ஆளுகை உலகெங்கும் பரந்துள்ளது. எனவே எம் இதழ் மூலம் இச்சிறிய குடும்பத்தின் அதாவது கொழும்பில் உள்ள திருக்குடும்பச் சபையிடமிருந்து எம் வாழ்த்துக்கள், செபங்கள், நன்றிகளை யூபிலி நாயகருக்குத் தெரிவிக்கிறோம். இறைவன் எம் புனித தந்தையை ஆசீர்வதிப்பாராக!

அதேவேளை கொழும்பு புனித லூசியா தேவாலயத்திலும் நன்றி வழிபாடுகள் நடைபெற்றன. பம்பிலப்பிட்டிச் சகோதரிகள் அங்கும் சமூகமளித்தனர். அதேவேளை ஆயர் கூடோர் ஆண்டகையின் மறைவும் பம்பலப்பிட்டி மடத்தில் கூடுதலாக உணரப்பட்டது. எல்லா வேளைகளிலும் ஆயர் சமூகமளித்து தன் தந்தைக்குரிய ஆதரவை அளித்து ஆன்மீக, பணி முன்னேற்றத்திற்கு ஆக்கம் அளித்தவர். தனது இறுதிச் சந்திப்பின் போதும் வைகாசி 26ந் திகதி சில பிள்ளைகளுக்கு உறுதிபூசுதல் கொடுக்கவிருந்தார். எனவே பிள்ளைகள் அந்த நாளைச் செபத்தின் நாளாக ஒதுக்கி அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபித்தனர்.

ஒரு கல்விக் கூடத்தில் தியான நாட்கள் முக்கியமான நாட்களாகும். ஆனி 19 - 23ந் திகதிகளில், போடிங் பிள்ளைகள், வெளிப்பிள்ளைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவர்கள் சேர்ந்து 300 பேர் அருட்தந்தை கிறகோரியின் வழிகாட்டலின் கீழ் தம் தியானத்தைச் செய்தனர். அவர் மீட்பின் உண்மைகளை வெளிப்படுத்தி எதிர்காலத்திற்கு நல்ல தீர்மானங்களை எடுப்பதற்கு உதவிபுரிந்தார். தினமும் ஒரு மறை உரை இளைஞருக்கு வழங்கப்பட்டது. சிறுவர்களும் இது தமக்கில்லை எனத் தம்முள் கேள்வி எழுப்பினர். வியாழன் அமைதியின் நாளாகவும், வெள்ளி மன்னிப்பு, உபவாசத்தின் நாளாகவும் இருந்தது. உபவாசம் சிங்கள மக்களுக்குக் கடினமாக இருந்தது. ஒரு துளி நீர் குடிக்காமல் இருப்பத இச்சூடான நாட்டில் இன்னும் கடினம். எனினும் எமது பிள்ளைகள் அருளின் உதவியால் உபவாசம் காத்தனர். சனிக்கிழமை மாதாவுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு ஏழைகளுக்கு உதவி செய்யக் கேட்கப்பட்டது. உண்டியல் திறக்கப்பட்டு அதனுள் பணம் போட்டுத் துன்புறுவோருக்குக் கொடுக்கப்பட்டது. மண்டபத்தில் மாதாவின் பீடம் அலங்கரிக்கப்பட்டு, மறையுரையின் பின் மெழுகுதிரியுடன் பவனி நடைபெற்றது. இறுதியில் மாதாவின் பாதத்தடியில் ஒளியேற்றப்பட்டு நிறைவு பெற்றது. மறுநாள் காலை ''இறைவன் செய்த நன்மைகளுக்கு நான் என்ன கைமாறு செய்வேன்'' உன் இருதயத்தைத் தா'' என்னும் பகுதியை விளக்கினார். நற்கருணை எழுந்தேற்றம் நாள் முழுவதும் வைக்கப்பட்டது. இறுதியில் குருவானவருக்கு நன்றி கூற. அவரும் எடுத்த தீர்மானங்களில் பிரமாணிக்கமாக இருக்கக் கூறினார். அதேநாளில் பங்குக் கோவிலைச் சேர்ந்த ஒரு பிள்ளை பம்பலப்பிட்டிமடத்தில் தன்னை ஆயத்தப்படுத்தித் திருமுழுக்குப் பெற்றா.

ஐப்பசி 17ந் திகதி அ. ம. தி. குருக்களின் சபைப் பிரதிநிதி அருட்தந்தை (Belle) போல் என்பவர் கொழும்புக்கு வந்து சேர்ந்தார். முதலாவதாகத் தி. கு. சகோதரிகளைச் சந்திக்க வந்தார். பணிகள் விரிவடைந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். 26 வருடங்களாக 2500 பிள்ளைகள் கல்வி கற்றுள்ளனர். பழைய மாணவர்களும் குடும்ப உணர்வுடன் தம் பாடசாலையை நினைக்கின்றனர். அவ்வாறே தற்போது படிக்கின்ற மாணவர்களும் உள்ளனர். ஆடிமாதத்தில் 24 சிறுமிகள் தம் முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்தனர். பங்குக் கோவிலில் திருவிருந்து பெற்றனர். இன்னொரு பகுதியினர் மார்கழி 8ந் திகதி திருவிருந்து பெற்றனர். அன்றைய நாளில் நற்கருணை ஆசீருடன் வழிபாடு நிறைவு பெற்றது. வழிபாட்டிற்கு புதிய கொழும்பு ஆயர் வணக்கத்திற்குரிய மார்க்'' ஆண்டகை தலைமை வகித்தார். சில நாட்களின் பின் ஒரு பெண்ணுக்கு மடத்தில் திருமுழுக்கு ஆயத்தம் செய்யப்பட்டு பங்குக் கோவிலில் கொடுக்கப்பட்டது. ஆசிரியருக்கு இது மகிழ்ச்சியைக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வெளிவாரி மாணவி தான் மடத்துப் பாடசாலையில் கல்வி கற்றதைப் பற்றி வீட்டிலுள்ளவர்களுக்குக் கூறுவாள். அங்கு வேலை செய்யும் பெண் அதைக் கேள்வியுற்றுத் தன் உறவினர் ஒருவருக்குத் தெரிவித்தாள். இருவரும் மடத்திற்கு வந்து எமது சமயம் படிக்கவிருக்கும் ஆசையைக் குழுத்தலைவிக்குத் தெரிவிக்க அவவும் சம்மதித்தா. வேலை செய்யும் பெண்ணுக்கு வாசிக்கத் தெரியாது. எனினும் தன் உறவினார் போன்று மறைக்கல்வி படிக்க விரும்பினாள். அவள் அயல் வீட்டுப் பெண்ணிடம் வாசிக்கக் கற்று தினமும் 2 மைல் தூரம் நடந்து வந்து சிறுபிள்ளைகளுடன் மறைக்கல்வி படித்தாள். எம் செபம், தியாகம் இவர்களுக்கு உதவி செய்கின்றன. தெகிவளைப் பாடசாலையிலும் பிள்ளைகளின் தொகை பெருகிவருகிறது. பக்தி முயற்சிகளிலும் சிறந்து விளங்குகிறார்கள். எனவே தெய்வீக எஜமான் தன் முதல் வருடத்தில் இருக்கும் தெகிவளைப் பணியை ஆசீர்வதிப்பாராக.

## குருநாகல் - வைத்தியசாலை

சென்ற். செலஸ்ரீன் தாயார் தனது 38 வருட வைத்திய சேவையில் இருந்து சுகவீனம் காரணமாக விலகிவிட்டார். அவ்வேளை வைத்திய அதிகாரிகள் பணியாளர் ஒன்றுகூடி ஐப்பசி 31ந் திகதி நன்றி கூறினர். சுருக்கமாக தலைமை அதிகாரி அவவின் பணியைப் பாராட்டினார். பணியின் ஆரம்பகாலம் தொடங்கி அதன் முன்னேற்றத்தையும் எடுத்துக்கூறினார். அவவின் சேவையின் நினைவாக ''4 பகுதிகள் அடங்கிய புனிதர்களின் வாழ்வு'' என்னும் புத்தகத்தை தாயாருக்கு வழங்கினார். இந்த நாளில் தனக்கு நிலைத்திருப்பது எல்லாப்புகழ்ச்சிகளையும் எதிர்த்துக் கூறாது அமைதி காப்பதே. மனஅமைதியில் இறைவன் பால் தன்னை எழுப்பி அவர் மகிமைக்காக, அவரின் அருளினால் செய்தவற்றை நினைக்கும் போது இலகுவாக இருந்தது என்று கூறிக்கொண்டா. இவ்வருடமும் 6000 நோயாளிகள் வந்து சென்றனர். பலர் கடின வியாதிக்குட்பட்டிருந்தனர். 287 வளர்ந்தோர், 102 சிறுவர்கள் ஆசை ஞானஸ்நானம் பெற்று விண்ணகம் பறந்தனர். 20,30,40 வருடங்கின் பின்பு 17 பேர் மீளவும் மீட்பின் பாதையில் வந்து சேர்ந்தனர். அவர்கள் இறைவனைப் புகழ்ந்த வண்ணம் இறந்தனர். இவற்றில் சிலவற்றைக் கீழே தருகின்றோம்.

புத்த மதக் கல்லூரியில் கற்பிக்கும் ஒரு தமிழ் இளம் ஆசிரியர் பணம் செலுத்தும் ஒரு வாட்டில் (word) சிகிச்சை பெற்றார். நன்கு பராமரித்தும் குணமடையவில்லை. இதைக் கண்ணுற்ற சகோதரி இதை எவ்வாறு இவருக்கு விளங்க வைப்பது என எண்ணி அவரின் தலையணையுள் புனித. திரேசாளின் பரிசுத்த பண்டத்தை வைத்தார். சில மணித்தியாலங்களின் பின் நோயாளி சுயநினைவுக்கு வந்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீர் என்ன சமயத்தைச் சேர்ந்தவர்'' எனக் கேட்டா. அவரும், நான் புரட்டஸ்தாந்து மதத்தில் படித்தேன். கத்தோலிக்க மதத்தில் இறக்க விரும்புகின்றேன். எனப் பதிலிறுத்தான். எனவே மீட்பின் உண்மைகள் அவனுக்குப் படிப்பிக்கப்பட்டது. சகோதரியுடன் சேர்ந்து விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேக முயற்சிகள் உத்தம மனஸ்தாபச் செபம், பரலோக மந்திரம், அருள் நிறைமரியே, விசுவாசமந்திரம் என்பவற்றைச் செபித்துத் திருமுழுக்குப் பெற்றார். சில நேரத்தின் பின் சகோதரியே! இறைவன் என் மட்டில் கிருபை புரிந்துள்ளார். எனக்கூறிப் பின்மரண வேதனையுடன் அமைதியாக இறந்தார்.

ஒரு சுதேச வைத்தியர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்தார். கடின வியாதி இல்லை என்றபடியால் தன் சமயத்தைத் தொடரவிட்டோம். ஒருநாள் அவருடைய கட்டிலின் அருகே படுத்திருநத இன்னொருவருக்குத் திருமுழுக்குக் கொடுக்க ஆயத்தம் செய்ததைக் கண்ணுற்ற அவரை ''நீரும் புத்த சமயத்தைக் கைவிட்டு இயேசுவிடம் வரவிரும்புகிறாயா''எனச் சகோதரி கேட்டா. அவன் பதில் கூறவில்லை. ஆனால் பல தடவைகளில் அவன் விரும்பினான். எனவே நாம் உண்மையை அறிவதற்காகச் சிறிது தாமதித்தோம். தேவபராமரிப்பும் நேரகாலத்தைக் குறித்திருந்தது. ஒரு நாள் அவரின் மனைவி வந்து பார்த்த பின் வீட்டிற்குக் கூட்டிச் செல்ல ஒரு வாகனத்தைத் தேடிச் சென்றாள். அப்போது திடீரென மரண வேதனை ஏற்பட்டது. எனவே தாதி திருமுழுக்குக் கொடுத்தவுடன் இறந்து விட்டார். மனைவி திரும்பி வந்து உயிரற்ற சடலத்தையே கண்டு அழுதாள்.

அதே இடத்தில் பேதுறு அப்பு மார்பு வியாதியினால் துன்புற்றார். தாதி எம் சமயத்தைப் பற்றிக் கூறியபோது அமைதியாகக் கேட்டார். ஒரு நாள் மனம் திறந்து ''தாயாரே'' எனக்கு நரகம் செல்ல விருப்பமில்லை நான் ஏற்கனவே கத்தோலிக்கனாக உள்ளேன். 15 வருடங்களாக அதிலிருந்து விட்டுப் பிரிந்தேன். எனவே குருவை அழைத்து ''நோயில் பூசுதல்'' தந்தால் மகிழ்ச்சியடைவேன்.'' என்றான். அவனுடைய ஆவல் நிறைவேற்றப்பட்டது. வழிபாட்டின் பின்பு இப்போது நான் அமைதியில் இறக்க முடியும் இந்த வைத்தியசாலைக்கு அழைத்து வந்த இறைவனுக்கும், நல்ல வழிகாட்டிய சகோதரிக்கும் நன்றி என்றான். மறுநாள் இறந்து விட்டான்.

பெண்களுள் ஒரு பெண் அதிகம் நோயுற்றிருந்தாள். புத்தமதத்தைச் சேர்ந்தபடியால் கத்தோலிக்க சமயத்தை விரும்பவில்லை. எனினும் தன் நண்பிகளில் அருளின் வழியாக மாற்றம் ஏற்படுவதைக் கண்டாள். ஒரு பெண் திருமுழுக்குப் பெற்றதும் இறந்தாள். அப்போது திருமுழுக்குத் தான் அவளைக் கொன்றது என்று கத்தினாள். செபம் மட்டுமே எம் பலமாக இந்த ஆன்மாமட்டில் இருந்தது. சிலநாட்களின் பின் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்கூடவே சகோதரியை அழைத்து தாயாரே! என் சக்தி குறைந்து கொண்டு வருகின்றது. புத்தமதத்தில் இறக்காது உங்கள் சமயத்தில் இறப்பதற்கு உங்கள் சமயத்தைப் பற்றிப் படிப்பியுங்கள் என்றாள். அவளும் திருமுழுக்குப் பெற்று இறந்தாள். இவ்வாறு பல ஏழை மக்களைத் தேவபராமரிப்பு வைத்தியசாலைக்கு அழைத்து வந்து மீட்பின் பாதையைத் திறந்துள்ளது.

எனவே கன்னி மரியாளுடன் சேர்ந்து நாமும் அவளின் நன்றிக் கீதத்தைப் பாடி (Magnificat) அவரின் இரக்கம் தலைமுறை, தலைமுறையாகத் தாழ்மையுள்ள அவரின் பிள்ளைகளில் தங்குகிறது எனலாம்.

## நாவலப்பிட்டி ஆலயம் நிறுவுதல்

குருநாகல் போன்று இங்குள்ள பணியும் ஒரு குடும்ப அப்போஸ்தல பணியாகும். பல தியாகங்களைக் கொண்டது. ஒரு புதிய ஆலயம் இறை அருளால் திறக்கப்பட்டதைக் காணலாம்.

என் நல்ல தாயாரே! எமது மடத்தில் ஆலயம் திறக்கப்பட்டதை அறிந்திருப்பீர்கள். இந்த நிகழ்ச்சிக்கு லியோனித் தாயார் சமுகமளித்தார். கொழும்பு, குருநாகல் மடத்துத் தலைவிகளும் வந்திருந்தனர். கண்டி ஆயர் பெக்மேயர் (Beckmayer) ஆண்டகையும் தன் வாக்குத் தவறாமல் கார்த்திகை 28ந் திகதி வந்தார். அவர் தன் செயலர் பங்குக் குருவுடன் வந்து ஆலயத்தின் வெளி,உட்புறங்களை ஆசீர்வதித்தார். அதே ஆடம்பரத்துடன் திருப்பலி நிறைவேற்றி தேவநற்கருணையைப் பேழையில் வைத்தார். நாமும் ஒளியேற்றினோம். இயேசுவின் பிரசன்னம் எம்மடத்தை நிரப்பி எம் தனிமையைப் போக்கியது.

காலையில் ஆயர் பெருப்பிக்கப்படவிருக்கும் கட்டிட வேலைகளைப் பார்த்தார். பின்பு குழுச் சகோதரிகளை ஒன்றுகூட்டி தன் அறிவுரைகளைக் கூறினார். வைத்தியசாலைகளில் நோயாளிகள் மட்டில் எம்பணியை ஊக்குவித்தார். ஆயர் எம்முடன் சேர்ந்து எல்லா நன்மைகளுக்கும் நன்றி கூறினார். இந்த வருடம் 139 பேருக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. 45 வளர்ந்தோரும் 94 சிறுவர்களும் இதில் அடங்குவர்.

அண்மையில் ஒரு சிங்கள இளம் பெண் மார்பு நோயினால் துன்புற்று வைத்தியசாலைக்கு வந்தாள். முன்பு கிறீஸ்தவ மதத்தில் இருந்து ஓர் இந்து இளைஞனை மணம் செய்து கிறீஸ்தவ சமயத்தை அனுசரிக்கவில்லை. தற்போது ஒப்புரவு செய்ய விரும்புவதாகக் கூறினாள். இறுதி அருட்சாதனம் கொடுக்கப்பட்டு பிழைகளுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தி பாவமன்னிப்புப் பெற்று இறை இரக்கத்திற்கு நன்றி கூறி இறந்தாள்.

பிரான்சிஸ் என்பவர் பெயரளவில் மாத்திரம் கத்தோலிக்கராவார். கடின வியாதியினால் வைத்தியசாலைக்கு வந்தார். தனது உழைப்பினால் ஒரு பெரிய குடும்பத்தை நடாத்தி வந்தார். தன் இறுதி முடிவை ஏற்கமுடியாதிருந்தார். எனினும் குருவின் உதவியுடன் ஏற்று இறுதி அருட்சாதனத்தைப் பெற்றார். வழிபாட்டின் முடிவில் மகிழ்வுடன் நன்றி கூறித் தேவதாய் தன் மாசில்லா உற்பவத்திருநாளன்று தன் ஆன்மாவை எடுத்துக் கொண்டால் மகிழ்ச்சி அடைவேன் என்றான். அதே போன்று தேவதாயும் அவன் கேட்டபடியே செய்தா.

அதேவேளை வேறொரு இளைஞன் தன் சமயத்திலே விடாப்பிடியாக நின்றான். அவனது நோயும் கடின பராமரிப்பைக் கேட்டு நின்றது. அன்பு, பொறுமை, செபம், தபம், முதலியவற்றின் மூலம் இந்த ஆன்மா கத்தோலிக்க உண்மைகளை நம்புவதற்கு அருள்கள் பெற்றோம். ஒருநாள் ஒரு தாதியிடம் இயேசுக் சிறிஸ்துவைப் பற்றிப் பேசும் சகோதரியை அழைத்து வரும்படி கேட்டாள். சகோதரியைக் கண்டதும் நீங்கள் கூறியவற்றை நம்புகின்றேன். திருமுழுக்குப் பெற விரும்புகின்றேன் என்றான். அவனது ஆசை பூர்த்தி செய்யப்பட்டது. புனித முடியப்பர் திருநநாளில் புனித சூசையின் பாதுகாவலில் திருமுழுக்குப் பெற்று இறந்தார்.

எமது ஆலயத்தில் கிறிஸ்மஸ் நள்ளிரவுத் திருப்பலி நடைபெறாதபடியால் நாம் பங்குக் கோவிலுக்குச் சென்று பங்குபற்றினோம். ஆலயம் மக்களால் நிரம்பி இருந்தது. 350 பேர் திருவிருந்தில் பங்குபற்றினர். மறுநாள் கிறிஸ்மஸ் மரம் அலங்கரிக்கப்பட்டு வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. நகரத்தில் உள்ள மரம் நடுவோர், சில குடும்பங்கள் தாராள உள்ளத்துடன் செயற்பட்டனர். ஒரு ஐரோப்பிய பெண், எங்கள் வைத்தியர்களின் மனைவிமார், வேறு சிலர் உதவிக்கு வந்த பின்பு பகிர்ந்து கொடுத்தனர். மாலையில் எல்லா நோளிகளுக்கும் ஒரு மண்டபத்தில் தேநீர் விருந்து அளிக்கப்பட்டதும் தொடர்ந்து வெகுமதிப் பொருட்கள் வழங்கப்பட்டது. உடுப்புக்கள், துணி போன்றவையும் சிறுவர்களுக்கு விளையாட்டுப் பொருட்களும் கொடுக்கப்பட்டன. எனவே இயேசுவின் பிறப்பு நிகழ்வானது பெறுவோரையும், கொடுப்போரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. "பெற்றுக் கொள்வதிலும் பார்க்க கொடுப்பதே மகிழ்ச்சி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பலப்பிட்டி

பாடசாலை ஆரம்பமாகிச் சில நாட்களின் பின் கருதினால் டூகேட்டி (Doughesty) அவரின் பிரதிநிதி ஓகாரா (O' Hara) இவர்களின் சந்திப்பு நடைபெற்றது. பிலடெல்பியாவுக்குத் திரும்பிச் செல்லும் போது இலங்கையையும் சந்தித்துச் சென்றார். அவ்வேளை கொழும்பு அதிமேற்றிராணியார் மார்க் ஆண்டகை தன் விசுவாச அறிக்கையை இயேசுவின் பிரதிநிதியாகத் தொண்டாற்றப் புதுப்பித்துக் கொண்டார். இந்நிகழ்வு அதிமேற்றிராணியார் சிற்றாலயத்தில் இடம் பெற்றது. இவர் ''கூடோர்'' ஆண்டகைக்குப் பின் வரக்கூடியவர். இவர் பிரான்சில் உள்ள ''லூட்ஸ் மறைமாவட்டத்தைச் சேர்ந்தபடியால் மாசி 11ந் திகதி லூர்து அன்னை காட்சி கொடுத்த நாளைத் தெரிவு செய்து புனித. லூசியா பேராலயத்தில் வைபவங்கள் நடைபெற்றன. இந்தியாவின் அப்போஸ்தலிக்கப் பிரதிநிதியாகிய மூனி (Mooney) ஆயர் யாழ், கண்டி ஆயருடன் சேர்ந்து கூட்டுப் பலி நிறைவேற்றினார். இலங்கைக்குடியரசுத் தலைவருக்கு முன்னே ஒரு நாற்காலி போடப்பட்டிருந்தது. குருக்களுக்குப் பீடத்தில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. தி. கு. சகோதரிகள் பலரும் இதில் பங்குபற்றினார். வழிபாட்டின் போது மக்கள் இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்தனர். புரட்டஸ்தாந்து மதத்தினர் சிலரும் இதில் பங்குபற்றினர். புதிய அதிமேற்றிராணியார் மாசி 15ந் திகதி பம்பலப்பிட்டி மடத்திலும் திருப்பலி நிறைவேற்றினார். பிள்ளைகள் தங்கள் வாழ்த்துக்கள், செபங்களைத் தெரிவித்தனர்.

எமது சபையின் உதவியாளராகிய (Fr. Belle) இவர்களின் சந்திப்பு 1930ம் ஆண்டு பலமுறை நிகழ்ந்தது. அவர் எம் சபையின் பணிக்குத் தன் ஒத்துழைப்பைத் தந்து எம்மை ஊக்குவித்தார். அவரின் மாதா பக்தி எமக்கு உதவியது. போர்டோ செல்லும் போது எம் பணிபற்றிக் கூறுவதாக வாக்குப் பண்ணினார்.

பொருளாதார வீழ்ச்சியினால் சில பெற்றோர்கள்போடிங்கில் இருந்து தம் பிள்ளைகளை எடுத்துக் கொண்டாலும் வெளிப் பிள்ளைகளின் தொகை குறையவில்லை. தெகிவளைப் பாடசாலையுடன் சேர்ந்து கூடிய தொகைப் பிள்ளைகள் 1000 பேர் உண்டு. மாணவர்கள், பழைய மாணவர்களின் வருடாந்த தியானம் தெகிவளைப் பங்குக் குருவினால் நடாத்தப்பட்டது. அவர்களின் ஆன்மாவில் மரியாளின் படம் அமைக்கச் சொன்னார். விசுவாசத்தினால் இதை அமைத்து புண்ணியங்களினால் அலங்கரிக்கச் சொன்னார். அதில் சிலுவை, ஒளி - நம்பிக்கை வெள்ளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணி அன்பு, கற்பு, தூய்மை- பூ, கம்பளம்- தாழ்மை, கீழ்ப்படிதல்- இடைக்கிடை ஆசிரியர்கள் தியானத்தின் போது செய்த தீர்மானங்கள் பற்றியும், பீட அலங்கரிப்புப் பற்றியும் கேட்பார்கள்.

தெகிவளைப் பாடசாலையில் மார்கழி 8ந் திகதி 47 பிள்ளைகள் திருவிருந்தில் பங்குபற்றினர். இலங்கையில் அமல உற்பவத் திருநாள் கடன் திருநாளாக உள்ளது. சகோதரிகளின் வருகையின் பின்பு பங்கே உருமாறி விட்டது, என்று பங்குத் தந்தை கூறினார். புனித. திரேசா, திருநாளில் 22 போடிங் பிள்ளைகள் திருவிருந்தில் பங்குபற்றினர். புனித. திரேசாள் பக்தியும் இலங்கையில் வளர்ந்துள்ளது. அவவின் வாழ்வின் படிப்பினைகள் எல்லோருக்கும் உதவி செய்யக்கூடியது. எம் சிறுவரும் அவ மழையில் திருப்பலிக்குச் சென்றது போலத் தாங்களும் அவ்வாறு செய்தனர்.

தேவபராமரிப்பும் எமக்கும் உதவி செய்கின்றது. பெரும் மழை பெய்த போது கால்வாய் மூலம் தண்ணீர் சென்று வடிந்தது. சிறிது நீர்பள்ளமான பகுதியில் சென்றடைந்தது. எனவே பாடசாலை தொடர்ந்து நடைபெற்றது. ஆனால் கொழும்பு நகரில் பலர் வெள்ளத்தினால் தாக்கப்பட்டனர். எமது உதவி இயக்குனர் வென்னாப்புவாவில் இருந்து 2 சகோதரிகளை வரவேற்பதற்காகக் கொழும்புக்கு வந்திருந்தா. பாதி வழியில் ஒரு மாட்டு வண்டியில் ஏறினா. வண்டி வழுக்கியது மாடுகள் நீந்தத் தொடங்கின. எனவே ஒரு மரத்துண்டை வள்ளம் போல் வைத்து சுதேசிகள் அவவைக் கொண்டு வந்து சேர்ந்தனர். அவ பம்பலப்பிட்டிக்கு வந்து சேர்ந்ததும் இறைவனுக்குச் சகோதரிகள் நன்றி கூறினர். அதேவேளையில் 2 கப்பல்கள் இலங்கையின் கிழக்குக் கரையில் மூழ்கியது.

வைகாசி 12ந் திகதி எம் மத்தியில் பயணிகள் வந்தனர். அவர்களின் நீராவிக்கப்பலை ஒன்றும் தடை செய்யவில்லை. இயேசு மரி. சூசைக்கு மகிமை உண்டாகுக. இருமுறைகளில் இவர்களின் பாதுகாப்பைத் திருக்குடும்பச் சபைச் சகோதரிகள் உணர்ந்தார்கள்.

## வென்னாப்புவா

எம் மடத்துத் தலைவியின் நோய் 1930ம் ஆண்டும் குணமடையாமல் இருந்தது. எனவே ஐரோப்பாவுக்குக் கப்பல் எடுக்கும் போது எம் உள்ளம் துன்புற்றது. மாசி 11ந் திகதி சென்றதால், லூர்து மாதா சுகம் அளிப்பா, மீண்டும் இங்கு வருவா என்ற நம்பிக்கை ஏற்பட்டது. செபங்களும், தியாகங்களும், வென்னாப்புவா, அதைச் சேர்ந்த பணித்தளங்கள், ஐரோப்பிய, சுதேச சகோதரிகள் நவகன்னியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயத்தகன்னியர், யூனியறிஸ், பாடசாலை மாணவர்கள் இவர்களால் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

எமது மடத்துத் தலைவி ஐரோப்பாவில் இருந்தபோது, உதவி இயக்குனர் தாயார் வென்னாப்புவாவில் தங்கி இருந்தா. அப்போது புரட்டாதி மாதத் தியானத்துக்கு தலைமை தாங்கினா. 8 ஆயத்தகன்னியருக்குத் துறவற உடை வழங்கப்பட்டது. 5 நவகன்னியர் தம் முதல் அர்ப்பணம் செய்தனர். 5பேர் நித்திய அர்ப்பணம் செய்தனர். றோஸ் முடிகள் பீடத்தை அலங்கரித்தன. போர்டோவில் உள்ள ''தலன்ஸ்'' போலவே இலங்கையிலும் தியான முடிவு நாளில் அங்குள்ள ஆலயத்தில் இருப்பது போல உணர்வோம். எனவே ஐரோப்பாவில் இருந்தாலென்ன, ஆசியாவில் இருந்தாலென்ன, நன்றிக்கீதம் உணர்ச்சிப்பூர்வமாக எழும்பியது. இங்கு வயோதிப சகோதரிகள் பலர் எம்முடன் உள்ளனர். நற்கருணை ஆண்டவர் முன் மாறிமாறி ஆராதனை செலுத்துவர் அவர்களின் பணி செபமாக உள்ளது. அதில் ஒருவர் 84 வயதிலும் இளமையான உள்ளத்துடன் போர்டோ தலைவிகளுக்குத் தனது வணக்கத்தைக் காட்டி வருகிறா. ஞாயிறு தினங்களின் பீடத்தை விட்டு அகலாது செபித்த வண்ணம் இருப்பர்.

இந்த வருடத்தில் 3 சுதேச சகோதரிகள் இறந்து விட்டனர். அவர்களில் ஒரு சகோதரிக்கு 30 வயது. வென்னப்புவாவில் இருந்தபோது லியோனித்தாயார் எல்லாச் சிறிய மடங்களையும் பார்வையிட்டார். கல்விப் பணி மறைக்கல்விப் பணி, பீடத்துணிகளைப் பார்வையிடுதல் இவற்றை அவதானித்தார். பங்குக் கோவில் தூரத்தில் இருந்தபடியால் சிலவேளைகளில் பூசைகளில் பங்குபற்ற முடியவில்லை. மாட்டுவண்டிப் பயணம் கஷ்டமானதாக இருந்தது. இதை அவர்கள் தாராள உள்ளத்துடன் ஏற்றனர். லியோனித்தாயாரின் சந்திப்பு அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. வகுப்புகளுக்குச் சென்றபோது வெள்ளை முகத்தைக் காணாத சிறுமிகள் பயத்துடன் ஓடி ஒளித்தனர். அப்போது ஒரு படம், ஒரு வரவணிக்கம், ஒரு செபமாலை என்பன அவர்களை உறுதிப்படுத்தி அதைத் தூரத்திலிருந்து பெற்றனர். ஆனால் ஒரு 4 வயதுச் சிறுமி தாயாருக்குக் கிட்ட வந்து தன் முழங்கையை அவவின் முழங்காலில் வைத்துக் கொண்டிருந்தாள். விலகமுடியவில்லை. பிரியும் போது அமைதியாகக் கண்ணீர் விட்டாள். மாலையில் அவள் தன் தாயிடம் இன்று நல்ல இறைவன் எம் பாடசாலைக்கு ஒரு காரில் வந்து தனக்கு ஒரு வரவணிக்கம் தந்ததாகக் கூறினாள். ஏனென்றால் சிங்கள மொழியில் நல்ல இறைவன், வணக்கத்துக்குரிய சகோதரி என்னும் 2 சொற்களும் அவளைக் குழப்பிவிட்டது. இதனாற்தான் அவள் அவ்வாறு இருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நற்கருணைப் பவனி நல்ல முறையில் நடைபெறும். நமது மடத்தின் பெரிய வாசல் கதவு அகலத் திறக்கப்பட்டு எம் தோட்ட வெளியிலும் நற்கருணை தங்கித் தரிக்க ஓர் இடம் தயாரிக்கப்பட்டது. இவ்வருடம் 12 பிள்ளைகள் சம்மனசுகளின் இறக்கை அணிந்து பீடப்படிகளில் ஆடாது அசையாது நின்றனர். வெயிலின் போது வியர்வை முகத்தில் வடிந்து கொண்டிருந்தது.

ஒவ்வொரு மாதமும் முதல் வியாழன் மாலை நாம் திருமணித்தியாலம் செய்வோம். இப்பக்தி முயற்சியின் நூற்றாண்டு சிறப்பாக நடைபெற்றது. 11 மணியில் இருந்து நள்ளிரவு வரை ஜெத்சமனிப்பாடுகளை நினைவு கூர்வோம். பின்பு காலைச் செபம், தியானம், ஒரு மணிக்குப் பொதுத் திருப்பலி, அதன் பின்பு ஓய்வெடுப்போம்.

பங்குத்தளத்திலும் ஒவ்வொரு முதல் வெள்ளியும் 4 - 5 மணிக்குப் பிள்ளைகளும் திருமணித்தியாலம் செய்வர். பெரிய பிள்ளைகள் வருடாந்த தியானம் செய்வர். ஆலயம் எல்லோருக்கும் போதியளவு இல்லாததால் ஆசிரியர் கல்லூரி மாணவர்களுக்கு விசேட முறையில் நடைபெறும். தினமும் 3 மறைஉரைகள், அத்துடன் சிலுவைப் பாதைஈ செபமாலை, நற்கருணைச் சந்திப்பு, ஒறுத்தல் முயற்சிகள், உண்டியலில் இருந்து நல்ல பிதாவின் கருத்துக்காகக் கொடுத்தல், அமைதி என்பன கண்டிப்பாக அனுசரிக்கப்படும். 16 - 20 வயதைச் சேர்ந்த இந்த இளம் பெண்களின் உள்ளத்தில் இறைவனின் அருள் பொழியப்படும்.

மத்திய பிரிவில் பக்தி அறிவுள்ள பிள்ளைகள் ''பெஞ்சமின், தார்சியஸ், என்னும் கூட்டத்தில் உள்ளனர். இவர்கள் அன்புப் பணிகளினாலும், தியாகத்தினாலும் இயேசுவுக்கு ஆறுதல் தருவார்கள். அடிக்கடி சாப்பாட்டு வேளைகளில் நீர்குடிக்க மாட்டார்கள். ''சிலுவையில் இயேசு தாகமாயிருந்தும் நீர் குடிக்கவில்லை" என்பர். முன் பள்ளி மாணவர்களும் தினமும் காலையில் 2 நிமிட தியானம் செய்வர். செபத்தின் பின்பு அவர்களின் ஆசிரியர்கள் - ஒரு சுதேச சகோதரி இயேசுவைப் பற்றிக் கூறுவார். இயேசுவின் அன்பு, அவரின் பாடுகள் பற்றிக் கூறிக் தற்போது தான் சொன்னதைத் தியானித்த உங்கள் மீட்பரிடம் பேசுங்கள் என்பாள். 2 நிமிடத்தின் பின்பு ஒரு பொதுச் செபம் உரத்த குரலில் சொல்லுவார்கள். என் இயேசுவே நான் உம்மை மிகவும் நேசிக்கின்றேன்.என் இருதயத்தில் வாரும்.நான் உமக்கு ஆறுதல் உண்டாக்குவேன். மீளவும் அமைதி காப்பர். அப்போது இயேசு் தம் உள்ளத்தில் வருவதை உணர்வார்கள். அடிக்கடி இந்த ஐக்கியத்தை நாளிலே புதுப்பித்துக் கொள்வார்கள். ஓர் நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு நேரத்தில் ஒரு 4 வயது சிறுமி தன் ஆசிரியையிடம் அழுதவண்ணம் வந்த ஒரு சிறுமியைக் காட்டி இவள் இயேசுவை அடித்துவிட்டாள் என்றாள். இயேசுவை அடித்ததா? எனக்கு விளக்கமாகக் கூறு எனக் கேட்டபோது தன் இதயத்தைக் காட்டி ''அதில் அடித்தாள் இயேசு உள்ளே இருக்கிறார்'' என்றாள்.

எல்லோரும் இவ்வாறு தவறு செய்யாமல் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. பல கீழ்ப்படியாமை, கூடாத செயற்பாடுகள் எல்லாம் உண்டு. ஆனால் தம் மனச் சாட்சியை மதிக்கின்றனர். எம் மாணவர்கள் கையை விரித்துச் சிலுவை போல் செபிப்பர். சிறுவர்களும் அவ்வாறே செய்யமுனைவர். அநேக மாணவர்கள் ஏழைப்பிள்ளைகள். தேங்காய் விலை குறைந்து வருகின்றபடியால் மேலும் ஏழைகளாக்கப்படுகின்றனர். எனினும் ஆர்வத்துடன் தியாகம் செய்து நல்ல பிதாவின் கருத்துக்குக் காணிக்கை செலுத்துகின்றனர். நல்ல பிதாவும் விண்ணகத்தில் இருந்து அருள் பொழிவார். இதே போன்று புனித. திரோசாள் கேட்பதிலும் பார்க்க கூடிய உதவி சகாயங்களைச் செய்கின்றா. எல்லா ஆலயங்களிலும் அவவின் சுருவத்தைக் காணக்கூடியதாகவுள்ளது. றோசா மலர்களால் நிறைந்து காணப்படும் திருவிழா நவநாட்களுடன் ஆரம்பித்து வெகுசிறப்பாக வாணவேடிக்கைகளுடன் முடிவடையும்.

ஐப்பசி 30ந் திகதி எமது மடத்துத் தலைவி வென்னாப்புவாவுக்கு வந்து சேர்ந்தா. அரை மணித்தியாலத்துக்கு முன் 400 மாணவர்கள் கண்ணைக் கவரும் உடையுடன் இருவரிசையில் நுழைவாயிலில் காத்து நின்றனர். குழுச்சகோதரிகள், நவகன்னியர், ஆயத்தகன்னியர், எல்லோரும் பொறுமையுடன் அவவைக் காத்திருந்தனர். கிராம வாசிகளும் பிள்ளைகளின் மகிழ்வில் பங்குபற்றினர். முதல் வெடியை அவர்களே சுட்டனர். அந்தச் சத்தத்தினால் புற்றரையில் மேய்ந்து கொண்டிருந்த பசு ஒன்று பிள்ளைகள் நடுவே துள்ளிக் குதித்து வந்தது. தாயாரின் காரும் மெதுவாக வந்தது. இருபக்கமும் பிள்ளைகள். இதைப் பார்த்து மடத்துத் தலைவியும் லியோனித்தாயாரும் உணர்ச்சி மேலீட்டினால் வாகனத்தில் இருந்து இறங்கி நேரே கோவிலுக்குச் சென்றனர்.

நற்கருணை ஆசீரின் பின்பு புனித. திரேசாளின் பரிசுத்த பண்டத்தைப் பார்த்ததில் மகிழ்ச்சி அடைந்தோம். இது வென்னாப்புவா சகோதரிகளுக்கு எம் நல்ல தாயாரின் அன்பளிப்பு. எனவே புனிதையின் சிறிய வழிகளில் முன்னேற எமக்கு உதவி செய்த இறைவனை நேசித்து வாழ உதவி செய்வாராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநாகல் வகுப்புகள்

மாசி 11ந் திகதி புதிதாகத் திருநிலைப்படுத்தப்பட்ட கொழும்பு அதிமேற்றிராணியார் தன் பழைய பணித்தளமாகிய குருநாகலுக்கு முதற் சந்திப்பை மேற்கொண்டார். 7 வருடங்களாகப் பங்குத் தந்தையாகப் பணிபுரிந்திருந்தார். எனவே பங்குனி 2ந் திகதி உள்ளத்தைத் தொடக்கூடிய முறையில் வெகுசிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கத்தோலிக்கர் மட்டுமல்ல, புரட்டஸ்தாந், புத்த, முஸ்லிம் மக்களும் வரவேற்புக்கு ஆயத்தம் செய்தனர். மார்க் ஆண்டகையை வரவேற்கக் கடைகள் மூடப்பட்டன. ஒவ்வொருவரும் தம் வீட்டிற்கு முன்புறத்தை அலங்கரித்தனர். வளைகள் கட்டினர். குருநாகல் மக்கள் அயல் கிராமத்தவர் அனைவரும் ஆயரைப் பார்க்கவும், 50 யானைகளைப் பார்க்கவும் ஒன்று கூடினர். ஆனால் 21 யானைகளே வந்தன. முன்னே 3 யானைகள் சென்றன. அதனைத் தொடர்ந்து நடனமாடுவோர், நாதஸ்வரம் வாசிப்போர் சென்றனர். மாலை 3 மணிக்கு யானைகள் ஒழுங்கில் நின்றன. 4 மணிக்கு ஆயர் வந்தார். அவருடன் பிரதிநிதிக்குருவும், செயலரும் வந்தனர். நகரின் 2 மைல் தூரத்தில் சனத்திரள் அவரை வரவேற்க நின்றது. ஒரு புத்த செல்வந்தர் ஆயருக்கு ஒரு அழகான வாகனம் கொடுத்திருந்தார். எனவே பவனியாக ஆயர் அழைத்து வரப்பட்டார். இடையில் வரவேற்புரையும் வழங்கப்பட்டது. அத்துடன் வழக்கப்படி மாலைகள் அணியப்பட்டன.

திரு. றவோட்டர் (Rowater) முஸ்லிம் மக்கள் சார்பில் உரையாற்றினார். மார்க் ஆண்டகையின் தியாக வாழ்வு, புண்ணியங்கள், கத்தோலிக்கர், இதர மதத்தவர்க்குக் காட்டும் அன்பு, நகர மக்களின் உள்ளங்களைக் கவர்ந்துள்ளது. எனவே நீடிய வாழ்வு கிடைக்கும்படி அல்லாவிடம் கேட்கின்றேன். அதனால் அவர் தன் பணியைச் சிறப்புடன் ஆற்ற முடியும்.

இறுதி வளைவில் மடத்திற்கண்மையில் பிள்ளைகள் குழுவாக நின்றனர். ஆயர் வாகனத்தில் இருந்து இறங்கி திருப்பலி உடை அணிந்து செங்கம்பளத்தின் மேல் நடந்து புனித ஆனாள் ஆலயத்தை நோக்கி நடந்தார். அங்கு நற்கருணை ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. அதன் பின்பு (Garden Party) தேநீர் விருந்துபசாரம் நடைபெற்றது. மக்கள் பொறுப்பேற்று எல்லாவற்றையும் நடாத்தினர். ஆயர் எல்லார்க்கும் எல்லாமாக இருந்ததால் எல்லோரும் மகிழ்வடைந்தனர். அத்துடன் அவர் முயற்சியுடன் விதைத்த விதையானது உள்ளத்தில் பதிந்து தற்போது பொன் மணிகளாக அறுவடைக்கு ஆயத்தமாக இருப்பதைக் கண்டு மகிழ்வதாகத் தனது உரையில் கூறினார். மறுநாள் காலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயர் தன் பழைய கோவிலில் ஓர் ஆடம்பரத் திருப்பலி நிறைவேற்றிப் பலருக்கு உறுதிபூசுதல் அருட்சாதனம் வழங்கினார். அவர்களுள் 14 பேர் புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்கள். அவர்கள் முதல் நாள் மாலை முதல் நன்மை பெற்றவர்கள். இவர்களுள் எமது சகோதரிகளால் ஆயத்தப்படுத்தப்பட்ட 8 அநாதைப்பிள்ளைகளும் இருந்தனர். இந்த நீண்ட நேர வழிபாட்டின் பின்பு ஆயர் மாலையில் பிள்ளைகளின் வரவேற்பு நிகழ்ச்சிகளுக்காக வருகை தந்தார்.

மறுநாள் காலை குருநாகல் வைத்தியசாலைக்கு சகோதரிகளின் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றிக் குருநாகலை விட்டுச் சென்றார். பின்பு வருடமுடிவில் ஓர் ஐரோப்பிய சகோதரியின் பொன் விழா யூபிலிக்காக மடத்துக்கு வந்தார். (Sr. St. Alban சிஸ். செனற். அல்பான் இதனை எதிர்பார்க்காவிடினும் ஆயர் தன் பணியை ஒதுக்கி இச் சகோதரியின் பணிக்கு மதிப்பளிக்க வந்திருந்தார். மடத்துச் சிற்றாலயத்தில் 6 அ. ம. தி. குருக்களுடன் ஆயரும் நசரேத்தின் மரியாள் போன்று பணியாற்றும் சகோதரிக்கு திருப்பலி நிறைவேற்றினார். ஆயர் பிரான்சிய மொழியில் மறையுரை ஆற்றினார். இறைவனைப் புகழ்ந்து நன்றி கூறினார். நற்கருணை ஆசீருடன் வழிபாடு முடிவுற்றது.

ஆயருடன் குடும்ப உணர்வுடன் ஒரு ஒன்று கூடல் நடைபெற்றது. இதற்குக் கொழும்பில் இருந்தும் தாயார்மார் சகோதரிகள் சமுகமளித்தனர். குருநாகலில் கல்விப் பணிச் சகோதரிகள் தமது அப்போஸ்தல பணியை விரிவுபடுத்தியுள்ளனர். 2 அநாதைப் பிள்ளைகள் கிறீஸ்தவ முறையில் திருமணம் செய்துள்ளனர். மூவர் திருமுழுக்கு முதல் நன்மை, உறுதிப்பூசுதல், திருமண அருட்சாதனங்களைப் பெற்றுக் கொண்டனர். எனவே திருஇருதய ஆண்டவரின் இறைஆட்சி தடைகளின் மத்தியிலும் பரவி வருகின்றது.

## குருநாகல் - வைத்தியசாலை

''வைத்தியசாலையில் ஒரு நாள் திருவிழா'' என்று ஆயர் மார்க் ஆண்டகையின் முதல் சந்திப்புப் பற்றி மடத்துத் தலைவி கூறியுள்ளா. ''நான் என் ஆடுகளை அறிவேன், என் ஆடுகளும் என்னை அறியும்'' என்பதற்குகொப்ப எம் குழு மீளவும் அவரை அறிந்து கொண்டது. தற்போது கொழும்பு அதிமேற்றிராசனத்துக்கு இடம்மாறிச் சென்றதால் வேறு தி. கு. சகோதரிகளும் பயன் பெறுவார்கள்.

அவரின் சந்திப்பின் போது 3 பேருக்கு உறுதிப்பூசுதல் வழங்கினார். ஒருவர் எமக்குப் பணிபுரியும் ''Carpen'' கார்ப்பன் என்பவர் 6 வருடங்களின் பின் எம் சமயத்தைப் படிக்கத் தொடங்கி ஒரு வருடத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் திருமுழுக்குப் பெற்று ''பீற்றர் செபஸ்ரியன்'' என்னும் பெயர் பெற்றார். அவருடன் ''பம்பிறியா'' என்ற 11 வயது அநாதைச் சிறுமியும் 3 வருடங்கள் சமயம் படித்து மாசி 28ந் திகதி திருமுழுக்குப் பெற்று ''மாறி சிசிலியா'' என்னும் பெயர் பெற்று இறைவனின் பிள்ளையானாள். அதேநாளில் 10 வயதுச் சிறுமி புனித. சூசையின் பாதுகாவலில் திருமுழுக்குப் பெற்றாள்.

வைத்தியசாலையில் நோயாளிகளின் பராமரிப்பு ஆறுதல் தரக்கூடியது. சுகம் பெற்று வீடு சென்றவர்கள் பலர். நோயினால் இறந்தவர்களிலும் புதுமையாக அருள் பொழியப்பட்டுள்ளது. இவற்றில் சிலவற்றைத் தருகின்றோம். ஒரு ஏழைப் பெண் மிகப் பெலவீனமான நிலையில் அனுமதிக்கப்பட்டாள். தாதிச் சகோதரி இறுதி முடிபு அண்மித்திருப்பதை அவதானித்துக் கட்டிலில் இருந்தோர் தாதியின் சொல்லைக் கேட்கச் சொன்னபோதும் மறுத்துவிட்டாள். எனவே புனித திரேசாளின் வரவணிக்கம் அவளது தலையணையின் கீழ் வைக்கப்பட்டது. திடீரென அவள் சகோதரியை அழைத்து விரைவாக வந்து உங்கள் சமயத்தைத் தாருங்கள். எனக்குப் புத்த சமயம் தேவையில்லை என்றாள். அவளின் ஆசை பூர்த்தி செய்யப்பட்டது. சில நிமிடங்களின் பின்பு ஆன்மா விண்ணகம் சென்று விட்டது.

புனித. திரேசாள் மீட்பின் பாதையைத் திறக்க எம் சகோதரிகளுக்கு உதவுகின்றாள். ஒரு கத்தோலிக்கனுக்கு நடந்த சம்பவத்தையும் பார்க்கலாம். கடும் வியாதியாக வைத்தியசாலைக்கு வந்தார். அடிக்கடி திருப்பலியில் பங்குபற்றுவதைக் குருவானவர் அவதானித்தார். நற்கருணைப் பந்தியில் அமர்வதில்லை,பாவசங்கீர்த்தனம் செய்யத்துணிவில்லை. சுகம் பெற்றதாக வீடு சென்றான். ஒரு கிழமைக்குள் மீள வந்து அறிவற்ற நிலையில் இருந்தான். அப்போது புனித. திரேசாள் வழியாக அவனுக்குச் செபித்தோம்.

வேறொரு நோயாளியும் நெருப்புக் காய்ச்சலினால் தாக்கப்பட்டு முடிவு நெருங்கி வந்து கொண்டிருந்தது. அவர் புத்த சமயத்தைச் சார்ந்தவர். அதிலே நிலைத்திருக்கவும் விரும்பினான். தாதியின் பராமரிப்பினால் தொடப்பட்டு வைத்திருந்த தன் சமயப் பொருட்களை கைவிட்டான். முன்பு கத்தோலிக்கனாக இருந்ததாகவும், இளைஞனாக இருந்தபோது திட்டமிட்ட ஒரு பிரயாணம் கைகூடாதபடியினால் இறைவனோடு கோபித்துச் சாத்தானுக்குத் தன் உடல், ஆன்மாவை அளித்ததாகக் கூறினான். ''நரகத்தைப் பற்றித் தெரியுமா?'' இல்லை. நான் ஒருபோதும் அங்கு செல்லவில்லை. அத்துடன் சாத்தானையும் நான் கண்டதில்லை. ஆனால் என் நண்பனாக உள்ளான். அவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை சாத்தான் உன் பகைவன் ``உன்னை ஏமாற்றுகிறான்'' நீங்கள் கூறுவது உண்மையாயின் நான் சாத்தானிடம் நரகத்திற்குச் செல்லமாட்டேன். இவ்வாறு கூறியபடியால் குரு இறுதி அருட்சாதனம் வழங்கினார். அத்துடன் அவர் அறிவும் போய் விட்டது. அப்போது பலமுறை சிலுவை அடையாளம் வரைந்தான். ``அருள் நிறைமரியே'' செபம் சொன்னார். மறுநாள் பாவிகளின் அடைக்கலத் தாயை வேண்டியபடி இறந்தான்.

70 வயது வயோதிபர் ஒருவர் தன் சொந்தத் தாயிலும் பார்க்க விண்ணகத்தில் ஒரு தாய் தன்னை நேசிப்பதை அறிய விரும்பினான். கிறீஸ்துவின் பிறப்பு, உயிர்ப்பு - எல்லாம் பற்றி அறிய ஆவல் கொண்டார். எவ்வாறு இறைமகன் தந்தையுடன் இல்லாது மண்ணகத்திற்கு வந்து பாடுபட்டு மரணித்துப் பாவிகளை மீட்க முடியும் என ஆசைப்பட்டார். இடைவிடாது இவற்றைத் தியானித்து சகோதரியிடமும் கேள்விகள் கேட்டு அவவுடன் செபித்தான். கிறீஸ்து பிறப்பு நாளில் திருமுழுக்குப் பெற்று ``இம்மானுவேல'' என்னும் பெயர் பெற்றான் இறைவனிடமும் செபிப்பதாகக் கூறி ஆன்மாபிரிந்தது.

10 வருடங்களாக எங்களுடன் இருந்து நோயாளிகளுக்குத் துணைபுரிந்த ``சோபிகனி'' என்னும் பெண் இருதய நோயினால் துன்புற்றாள். ஆங்கில வைத்தியத்தில் நம்பிக்கை இல்லாது சிங்கள வைத்தியம் செய்து பார்த்தாள். பின்பு முழு ஓய்வு எடுக்க வேண்டி வந்த போது புத்த குடும்பத்தில் இருந்து பிரிய நேரிட்டது. வைத்தியசாலையை அணுகினாள். அவள் சேவையில் இருக்கும் போது பலரின் திருமுழுக்குக்கு உதவியதால் அவளின் ஆன்மாவையும் மீட்க விரும்பினோம். அவளுககும் எம் சமயம் பற்றித் தெரிந்திருந்தது. ஆனால் அவளின் தாய் உறவின்ருக்கு அவளின் மதமாற்றம் விருப்பமில்லை. ஒருநாள் அவள் தனித்திருந்தபோது ஒரு வயோதிப சகோதரி முதல் வருடங்களில் அவள் காட்டிய தியாக உள்ளம் பற்றி எடுத்துரைத்தாள். இது அவளைத் தொடவே. இறைவழி பினபற்ற தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

``சிறியோர் ஒருவருக்கு என் பெயரால் குடிக்க நீர் கொடுப்பவன் அதன் கைமாறு பெறாமல் போகமாட்டான்'' என்று இயேசு கூறியுள்ளார். அதுபோல சோபிகனிக்கும் திருமுழுக்குக் கிடைத்தது. குழுச்சகோதரிகளுக்கும் மட்டற்ற மகிழ்ச்சி.

இவ்வருடத்தில் 6103 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். 242 திருமுழுக்குப் பதியப்பட்டுள்ளது. எம் சகோதரிகளே இதனைக் கொடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்னாப்புவா

தைமாதம் 1ந் திகதி வெடிகளின் ஒலி, மத்தள ஓசை இவற்றின் சத்தத்தினால் அதிகாலையிலேயே நாம் எழும்பிவிட்டோம். மக்கள் தம் மகிழ்ச்சியை இவ்வித ஓசைகளினால் வெளிப்படுத்துகின்றனர். எனவே இரவு முழுவதும் ஆடல், பாடல், வாணவேடிக்கைகளால் முடிந்த வருடத்துக்குப் பிரியாவிடைகூறி புத்தாண்டுக்கு வரவேற்புக் கூறுகின்றனர். எனவே இந்த வழியில் நாமும் இறைவனுக்குப் புதிய வருடவாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். அன்பின் ஆட்சி வருவதற்கு நாம் 8 - 9 மணியளவில் செபித்தோம்.

மூவரசர் திரவிழாவில் நாமும் குழுவாக இயேசுவைச் சூழநின்றோம். ஓர் அழகான நட்சேஸ்திரம் மின்னொளியினால் ஒளியூட்டப்பட்டது. எம் சகோதரிகளை வியப்புக்குள்ளாக்கியது. இங்கு அழகிய நீலவானில் பல விண்மீன்கள் காணப்படுவதால் தாரகையே தேவை இல்லை அவற்றின் அழகை வியந்தபடி படைத்தவரைப் புகழ்கின்றோம்.

எமது திருக்குடும்ப விழாவை எதிர் கொண்டோம் நாம் எமது சபையுடனும், எல்லாச் சகோதரிகளுடனும் சேர்ந்து கொண்டாடினோம். நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு காலை 9 - மாலை 4 மணிவரையும் அவரருகே இருந்தோம்.

தைமாதத்தில் சந்திப்புக்கள் நடைபெற்றன. கொழும்பு அதிமேற்றிராணியார். ஆயர் (Mark) மார்க் ஆண்டகை திடீரென வருகை தந்தார். எம்மகிழ்வான ஆச்சரியத்தை எம் முகத்தில் கண்டார். ஒரு தந்தை போல் மகிழ்வுடன். எம் சுதேச சகோதரிகளுடன் காணப்பட்டார். பெத்தானியாவில் இயேசு இவ்வாறு தான் இருந்திருக்க வேண்டும்.

இவ்வருடம் நற்கருணைப் புதுமை விழா (மாசி 3) திரிதின ஆராதனையுடன் நடைபெற்றது. எம் ஓய்வு நேரத்தில் இப்புதுமை பற்றி நீண்டநேரம் சம்பாஷித்தோம். எமது தாயார் கதிர்ப்பாத்திரப் படத்தையும் அதை ஆராதிக்கப் பேறுபெற்றோர் படத்தையும் எமக்குக் காட்டினார். எம் சகோதரிகள் தம் மாணவர்களுக்கு இதைப் பற்றிக் கூறினர். எனவே அவர்களும் இயேசு தம்மைக் காண்பிப்பாரா என எழுந்தேற்றவேளையில் உற்று நோக்கினர். குரு நற்கருணைப் பேழையில் வைத்து மூடும்போது தான் அவரைப் பார்க்க விரும்புவதாக ஒரு சிறுமி கூறினாள்.

வென்னாப்புவாவில் தினமும் திருப்பலி நடைபெறும். வியாழன், ஞாயிறு தினங்களில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்படும். பகல் வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலுக்கு அடிக்கடி செல்வோம். கதவு யன்னல் என்றும் திறந்திருக்கும். நாம் தலைசாய்த்து வணக்கம் செய்வொம். தினமும் எம் தோட்டப்பூக்களால் அலங்கரிப்போம். ஒருநாள் கல்வி அதிகாரி மாணவிகளால் செய்யப்பட்ட பூக்களைப் பார்த்து "இதை உங்கள் ஆலயத்தில் வைக்கிறீர்களா? எனக் கேட்டார்." இல்லை எனக்கூறியபோது நல்லது இந்தநாட்டிலே நல்ல இறைவன் அழகிய பூக்களைத் தருகிறார் எனவே பேப்பர், துணியினாலான பூக்கள் தேவை இல்லை என்றார்.

இயேசுவின் திருஇருதய விழாவைப் பக்தியுடனும், மகிழ்வுடனும் கொண்டாடுகிறோம். ஆலயம் அலங்கரிக்கப்பட்டு நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது. சிறிய சிவப்பு விளக்குகள் பீடத்தில் வைக்கப்படும். எமது இருதயங்களும் அவர் அன்பினால் எரிந்து ஒளிக் கதிர்வீச விரும்புகிறோம்.

அதே நாளில் பங்கிலும் நற்கருணைப் பவனி நடைபெற்றது. எமது தோட்டத்தின் மத்தியில் ஓர் அழகிய நற்கருணை மேடை அமைக்கப்பட்டு மடத்தின் கதவுகளும் திறக்கப்பட்டன. இயேசுவை வரவேற்பதற்காக கிராம மக்களும் வந்து வணங்கினர். எமது பிள்ளைகள் வெள்ளை உடையணிந்து "புகழ்வாய் ஜெருசலேம்" என்னும் கீதம் இசைத்தனர். அதேவேளை சிலர் சம்மனசுகளைப் போல் உடுத்தி பீடத்தடியில் முழந்தாட்படியிட்டு விண்ணக மகிமையைக் காட்டினர். எம் சிறிய "பெஞ்சமின்" பிள்ளைகள் மாலைகள், கொடிகளால் அலங்கரித்து, பவனிப் பாதையைச் சுத்தம் செய்தனர்.

ஆவணி 15ந் திகதி எமது தோட்டத்தில் மாதாவின் திருநாளுக்காக "ஒளிப்பவனி" நடைபெற்றது. குருக்களும் பங்கேற்று லூர்து கெபியின் முன் இறுதி மன்றாட்டுக்கள் ஒப்புக் கொடுக்கப்பட்டன. எமது நல்ல பிதாவின் விழாவும் (ஆனி 29) நல்ல தாயாரின் விழாவும் கொண்டாடினோம். இவ்வருடம் எம் நவகன்னியர் தம் வாழ்த்துக்களை நல்ல தாயாருக்கு அனுப்பினர். அவவின் படத்தின் முன் நின்று தமது அன்பு, நன்றியைத் தெரிவித்தனர். எம் சுதேச சகோதரிகளுக்கு எம் சபைத் தலைவியைக் காணாது இருப்பது கஷ்டமாக உள்ளது. இதனை அவர்கள் உணர்கின்றனர். உண்மையான தி. கு. சபைச் சகோதரிகளாக இருக்க விரும்புகின்றனர். சிலர் உண்மையாகவே நல்ல சகோதரிகளாகவுள்ளனர். விடுதி மாணவர்களுக்கும் பொறுப்பாக உள்ள சகோதரியோ, கல்விப் பணியில் ஈடுபட்டிருக்கும் சகோதரிகளோ, தங்களுக்கு நேரிடும் சிலுவை, துன்பங்களை நல் மனதுடன் ஏற்று இயேசுவுடன் ஒன்றித்து வாழ முயற்சிக்கின்றனர்.

ஆடிமாதத் தொடக்கத்தில் ஆசிரிய கல்லூரி மாணவர்களுக்குப் பரீட்சை நடைபெற்றது. வென்னாப்புவாவில் இருந்து வந்திருந்த 4 உயர் அதிகாரிகளின் முன் எதிர்கால ஆசிரியர்கள் பாடம் கற்பித்துக் காட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். 2 மாதங்களின் பின் பரீட்சை முடிவு வந்தது. 15/16 பேர் சித்தியடைந்துள்ளனர். கத்தோலிக்க ஆசிரிய இயக்குனர், கொழும்பு குருமுதல்வர், பிதா சுக்கேல் (Cazuquel) மூலம் இலங்கை அதிகாரி வாழ்த்துக்களைத் தெரிவித்தார். சிலநாட்களின் பின் தானே நேராக வந்து கல்விப் பணிச் சகோதரிகளை வாழ்த்திச் சென்றார். அவர்களுக்குப் படிப்பித்தலானது அவர்களின் ஆன்மாவை அடையும் கருவியாகும். அவர்களின் முயற்சியெல்லாம் இயேசுவின் ஆட்சியை அவர்களின் உள்ளங்களில் கொண்டு வருதலாகும். 6000 மாணவர்களில் 5200 பேர் கத்தோலிக்கராகவும் மிகுதி புத்தமத, வேறுமதத்தவர்களாகவும் இருந்தனர். ஒர புத்த மதப்பிள்ளை ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றி ஐப்பசி 3ந் திகதி புனித. திரேசாவின் திருப்பண்டத்தை முத்தி செய்தா.

ஆடிமாதத்தில் மேலும் 30 பேர் பரீட்சையில் சித்தியடைந்தனர். எனவே கத்தோலிக்க ஆசிரியர்கள் இலங்கையில் பணி செய்ய வாய்ப்பு உண்டு. புத்த மதக்கல்வி அதிகாரிகளும் சகோதரிகளுடன் நல்ல முறையிற் பழகி அவர்களுக்கு அறிவுரை கூறிப்புதிய முறைகளையும் கற்றுத் தருகின்றனர். ஐப்பசி மாதத்தில் உயர்பாடசாலை அதிகாரி (Acadamy) வென்னாப்புவாவில் ஒரு கிழமை படிப்பித்தல் முறைபற்றிக் கற்பிக்கும்படி எம் தாயாரிடம் உத்தரவு பெற்றார். எல்லாப் பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் அழைக்கப்பட்டனர். நாம் எம் பிள்ளைகளை லீவுக்கு அனுப்பிவிட்டோம். 12 உயர் அதிகாரிகள் தினமும் காலையில் ஒருவர் பின் ஒருவராகப் படிப்பித்தனர். பின் 12 குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு அதிகாரியின் தலைமையில் படித்தவற்றை மீளப் பார்த்து கேள்வி எழுப்பிப் பதிலிறுத்தனர். அறிவு, ஒழுக்கரீதியில் பயன் அடைந்தனர். எம் ஆசிரியர்கள் கத்தோலிக்கராதலால் இவர்களின் ஒழுக்கத்தைக் கண்டு வியந்தனர். 3 பெரிய வகுப்புக்களில் பல பாடசாலைகளின் கை வேலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுப் பாராட்டைப் பெற்றனர்.

எம் பழைய மாணவர்கள் கூட்டங்களுக்கு மட்டுமல்லாது இயேசுவைச் சந்திக்கவும் எம் மடத்திற்கு வருகின்றனர். சிலநாட்கள் எம்முடன் தங்கித் தியானம் செய்கின்றனர். அவர்களில் ஒருவர் இப்போ ஆயத்தகன்னிகையாக உள்ளா.

சிறு பிள்ளைகளுடன் பணியாற்றுவது இனிமையானது பெஞ்சமின், தார்சீயஸ் என்னும் இவர்களின் கூட்டம் எமக்கு ஆறுதல் தருகின்றது. பிறர் அன்பு, ஒறுத்தல் முயற்சிகள் செய்வார்கள். வெள்ளிக் கிழமைகளில் இயேசு சிலுவையில் அனுபவித்ததாகத்தை உணர்ந்து சிலர் தாமும் தாகமாயிருப்பர். இனிப்புச் சாப்பிடமாட்டார்கள். இயேசுவின் திருஇருதய விழாவின் போது ஆசிரியர் ஒரு பெரிய பாத்திரத்தில் மேல் மட்டம் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒஸ்தியை நிரம்பும்படி கேட்டா. அது அவர்களின் அன்பு தாராள உள்ளத்தின் அடையாளமாக இருந்தது. கிறீஸ்து அரசர் திருவிழாவின் போது ஒரு கப்பல் போல் செய்து அதில் தம் தியாகத்தின் பயனை பணிகளுக்காக வைத்தனர். அன்பின் அரசரின் ஆட்சி எங்கும் பரவவேண்டும் என்றனர். அவர்களுக்குப் பணித்தளம் பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலியாக இருந்தது. கிறிஸ்மஸ் விழாவின் போது பாலனின் தொட்டிலை ஆயத்தம் செய்தனர். தமது சிறிய செயற்பாடுகளினால் பாலக இயேசுவை மகிமைப்படுத்துவார்கள்.

ஐப்பசி மாதத்தில் 125 சிறுவர்களும், மார்கழி மாதத்தில் 6 - 7 வயதுடைய 9 சிறுவர்களும் முதல் நன்மை பெற்றனர். அயர்லாந்தில் இருந்து வந்த ஓர் இளம் மறை போதகர் இவர்களை ஆயத்தப்படுத்தினார். எல்லாப் பிள்ளைகளும் தம் பெற்றோர், குடும்பம் புடைசூழ நற்கருணை அருந்தி நன்றிக் கீதத்தின் போது "இயேசு என் இரட்சகரே, என் சிறிய இதயத்தை உம்மிடம் தருகிறேன்" எனக்கூறினர்.

திருமுழுக்கு வாக்குறுதிகள் புதுப்பிக்கும் நேரத்தில் தம் சிறிய கைகளை நற்செய்தி வாசகத்தின் மேல் வைத்துக் கொண்டு பதிலிறுத்தனர். இதன் பின்பு அவர்கள் அடிக்கடி திருவிருந்தில் பங்குபற்றி மேலும் மேலும் பக்தி புத்தியில் சிறந்து விளங்கினார்கள்.

பெரிய பிள்ளைகளும் புரட்டாதி 8ல் தம் வருடாந்த தியானம் முடிந்த பின்பு தினமும் ஓய்வு நேரத்தில் நற்கருணைச் சந்திப்பில் ஈடுபடுகின்றனர். மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் பணித்தள 35 மாணவர்கள் திருமணித்தியாலம் செய்கின்றனர். ஐப்பசி மாதத்தில் வென்னாப்புவாவில் 300 சிறுவர்களும், பொகிப்பிட்டியா, பமுணகம், கப்புங்கொடா சிலாபத்தில் இருந்து 400 பேரும் திருஇருதயத்திற்குத் தம்மை அர்ப்பணித்தனர். இவர்கள் மூலம் இலங்கையில் அன்பின் அரசாட்சி பரவமுடியும்.

இவ்வருடம் எம் சகோதரிகளுக்குத் தியானம் மார்கழி 10 - 18 வரையும் நடைபெறும். இது கிறிஸ்மஸ் விழாவுக்கு ஓர் ஆயத்தமாகவும் அமையும். 4 ஆயத்த கன்னியர், 5 நவகன்னியர். 3 முதல் அர்ப்பணம் செய்தோர். தியானத்தில் பங்கெடுத்தனர். சிறிய குருமட இயக்குனர். தந்தை பீரிஸ் சிங்களக்குரு எளிமையான கருத்துள்ள மறையுரை ஆற்றினார். 17ந் திகதி மாலையில் 5 மணிபோல் மாதா சுருவத்தின் முன்னால் பெரிய மண்டபத்தில் குழு ஒன்று கூடியது. துறவற உடையணியும் சடங்கு இடம்பெற்றது. இரவுணவு, குழுச் செபம் முடிய படுக்கை அறையில் சந்திப்பு நடைபெற்றது. ஒவ்வொருவரின் படுக்கையிலும் இயற்கையான லீலிமலர்களால் செய்யப்பட்ட ஒர பெரிய சிலுவை காணப்பட்டது. அதைச் சுற்றிவர சிறிய பூக்களாலான மாலை இருந்தது. எம் தாயார்மார் அனுப்பிய படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனிடையே வைக்கப்பட்டிருந்தது. நாம் ஓர் சிறுபீடத்தில் ஒருமித்துச் செபிக்கும் போது அர்ப்பணம் செய்வோர் தம் றோசாப்பூ முடிகளைத் தாயாரிடம் கொடுக்க அவர் நற்கருணைப் பேழைக்கு அண்மையில் வைத்தார்.

18ந் திகதி முதல் அர்ப்பண நாளாகும். ஒரு பிரான்சிய பாடலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சுதேசிகள் பாடினார். எல்லோரும் எம் அர்ப்பணத்தைப் புதுப்பித்தோம். 8.30 மணிக்கு பொது ஒன்று கூடலும், நவகன்னியரின் அர்ப்பணமும், தியானத்தின் தீர்மானங்களைக் கொடுத்தலும் நடைபெற்றது. நற்கருணை எழுந்தேற்றம் நாள் முழுவதும் வைக்கப்பட்டு சகோதரிகள் செபித்தனர். மறுநாள் எல்லோரும் தாம் பெற்ற அருள்வரங்களுடன் பணித்தளம் நோக்கிச் சென்றனர். கிறிஸ்மஸ் விழாவும் அண்மித்தது. வழமைபோல் பாலன் கொட்டிலில் பாட்டிசைத்துச் செபித்தோம். சிறப்பாக எம் சபைத் தலைவி ஆலோசகர்களுக்காகச் செபித்தோம்.

நத்தார் மாலையில் எமக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. நாம் மாலை வழிபாடு முடிந்து வரும் போது 2 நாட்களின் முன் குருத்துவ திருநிலைப்படுத்தப்பட்ட குரு ஒருவர் மேலும் 11 பேருடன் தன் முதல் நற்கருணை ஆசீர்வாதத்தை நிறைவேற்ற எம் ஆலயத்திற்கு வருகை தந்தார். அவர் எம் இரு சகோதரிகளின் சகோதரராவார். 2 ஆயத்த கன்னியரின் மாமனுமாவார். எனவே அவர் தன் கிராமத்திற்குச் செல்லுமுன் வென்னாப்புவாவில் தங்கி சிறப்பு ஆசீரைக் கொடுத்துத் திருப்பலியும் நிறைவேற்றினார்.

பாவ மன்னிப்பு, நன்றி கலந்த திருமணித்தியாலத்துடன் இந்த வருடம் முடிவுற்றது. பிறக்கும் புதுவருடம் நல்ல பிதாவின் கருத்துக்கள் நிறைவேறும் அன்புப் பாதையாக மாறுவதற்கு மரியாள் மூலம் வேண்டுகின்றோம்.

## நாவலப்பிட்டியா 1931

1931ம் வருடத்தை நாம் திருப்பலியுடனும் நற்கருணை ஆசீருடனும் தொடங்கினோம். திருக்குடும்பத் திருவிழாவின் போதும் இந்த ஆன்ம மகிழ்ச்சி எமக்குக் கிடைத்தது. எமது பங்குக் குரு தூரவுள்ள ஒரு மலைப் பகுதிக்கு புனித. செபஸ்தியாரின் நவநாட்களுக்கு மறையுரை ஆற்றச் சென்று விட்டபடியால் எமக்கும் பல நாட்கள் திருப்பலி நடைபெறவில்லை. மாசி மாத நற்கருணைப் புதுமை நாளில் திரிதின ஆராதனை நடைபெற்று இறுதி நாளில் திருப்பலியும் இடம்பெற்றது.

மாசி மாதம் எம் மாறிலியோனித் தாயார் எம்முடன் சிலநாட்களைச் செலவழித்தார். அவரது பிரசன்னம் எமக்கு மனமகிழ்வையும் பிரிவு துக்கத்தையும் கொடுத்தது. மாத முடிவில் 40 மணித்தியால விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குத்தளம் கொண்டாடி நற்கருணைப் பவனியும் நடைபெற்றது. 3 நற்கருணைப் பீடங்களிலும் பல கத்தோலிக்கரும், இந்துக்கள், புத்தர், புரட்டஸ்தாந்தரும் பங்குபற்றினர். மறையுரை தமிழில் திருநாளுக்கென வருகை தந்த அ. ம. தி. குருக்களால் வழங்கப்பட்டது.

பரிசுத்த வார வழிபாடுகள் பங்குக் கோவிலில் நடைபெற்றதால் சகோதரிகள் எல்லோரும் பங்குபற்ற முடியாத நிலை. பாஸ்காவிழாவன்று எம்மடத்துச் சிற்றாலயத்தில் திருப்பலியும் மாலையில் நற்கருணை ஆசீரும் இடம்பெற்றன. வைகாசி மாதத்தில் பிரான்சில் இருந்து அனுப்பப்பட்ட தேவதூதர்களை கோவிலில் உள்ள இரு தூண்களிலும் வைத்தோம். இயேசுவின் விண்ணேற்பு விழாவன்று பங்குக்குரு அதை ஆசீர்வதித்தார்.

எம் சிறிய குழுவில் திருஇருதயநாதரின் ஸ்தாபகம் வரவேற்பறையில் நிறைவேற்றப்பட்டது. வலது, இடது பக்கத்தில், பாப்பு, நல்ல பிதாவின் படமும் வைக்கப்பட்டது. எமது மாறிலியோனித் தாயார் கார்த்திகைக் கடைசியில் வந்திருந்தா. பின்பு வைத்திய கொழும்பு அதிகாரி Dr. Prinsவருகை தந்த நல்ல அறிக்கை எழுதியிருந்தார். நத்தார்த் தினத்தில் எம் ஆலயத்தில் 3 திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டன. நோயாளிகளுக்கும், பிள்ளைகளுக்கும் பழங்கள், கேக் வகைகள், உடுப்புகள், விளையாட்டுப் பொருட்கள் வழங்கி மகிழ்வித்தோம். இந்த வருடத்தில் 1994 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். 60 பேர் வளர்ந்தோர் திருமுழுக்கும், 50 சிறுவர் திருமுழுக்கும் 19 பேர் இறுதி அருட்சாதனமும் பெற்றனர். இந்த அறிக்கையில் சில ஆன்ம மீட்பு நிகழ்வுகளைத் தருகின்றோம்.

ஒர புத்த இளம் பொலிஸ் உத்தியோகத்தர் சாகுந்தருவாயில் இருக்கும் போது சகோதரிகளின் அறிவுரையைக் கேட்டு கத்தோலிக்கனாக மரிக்க விரும்பித் திருமுழுக்குப் பெற்று 5 நிமிடத்தால் இறைவனடி சென்றார். ஓர் ஏழைக் கத்தோலிக்க மனிதன் வைத்தியசாலைக்கு வந்த போது குருவானவர் வரவழைக்கப்பட்டு அருட்சாதனங்களைப் பெற்றுக் கொண்டார். வேறொரு இளம் பெண் மார்பு நோயால் வைத்தியசாலைக்கு வந்தாள். திருமுழுக்குப் பெற்றுப் பரலோகம் செல்ல விரும்பினாள். தனது சின்னப் பிள்ளைகளுடன் சேர்ந்து திருமுழுக்குப் பெற்றாள். முகத்தில் மகிழ்ச்சி திருமுழுக்கு முடிந்ததும் அவள் இறந்து விட்டாள்.
இன்னும் பல சம்பவங்கள் இவ்வாறு நடைபெற்றன.

## கொழும்பு - பம்பலப்பிட்டியா 1931

வருடத்தொடக்கத்தில் கொழும்பு அதிமேற்றிராணியார், அல்ரின் பிரதிக்குரு முதல்வர், அ.ம.தி. குருக்கள் பலர் எம்மடத்திற்கு வருகை தந்தனர். அவர்களுள் அருட்தந்தை கெகன் (Gueguen) ஐரோப்பா சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்தார். பிரான்சில் உள்ள எம் மடங்களில் அவர் பெற்ற வரவேற்புக்கு மிகவும் நன்றியுள்ளவராக உள்ளார். எம் சபையைப் புகழ்ந்து கூறியுள்ளார். இயேசு பரலோகத்துக்கு எழுந்தருளிய திருநாள் வியாழக்கிழமையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பிள்ளைகள் திருமுழுக்குப் பெற்றனர். சில காலத்தின் பின் அவர்களின் தந்தையும் மனம் மாறினார். இந்த வருடத்தில் 20 பேர் மட்டில் சுதேசிகள் எம் திருச்சபையில் சேர்ந்துள்ளனர்.

முதல் நன்மை வைபவங்கள் எம் மடத்தில் எப்போதும் மகிழ்ச்சி தருகின்றது. இயேசுவின் இந்த முதல் சந்திப்புப் பலநாட்களாக ஆயத்தம் செய்யப்படுகின்றது. நல்லஉள்ளத்துடனும், முயற்சியுடனும் ஆசிரியர்கள் இவர்களை ஆயத்தம் செய்வர். இந்த வருடம் முதல் நன்மைக்கு முதல்நாள் 5 குருக்கள் 185 பிள்ளைகளுக்கு எம் சிற்றாலயத்தில் ஒப்புரவு அருட்சாதனம் கொடுத்தனர். மறுநாள் பங்குக் கோவிலில் இவர்கள் முதல்நன்மை பெற்றனர். எனவே முதற்தவணையில் நல்ல இறைவனுக்கு ஆன்மாக்களைக் கொடுத்தோம். இதற்காகவே தான் நாம் எல்லாவற்றையும் துறந்து இலங்கைக்கு வந்தோம்.

2ம் தவணை முடிவில் பழைய மாணவர்களுடன் 300 பிள்ளைகள் எம்மடத்தில் வருடாந்த தியாம் செய்தனர். அருட்தந்தை அலோசியஸ், பெரேரா இவர்களுக்கு வழிகாட்டினார். ஆனி 21ந் திகதி எமது நல்ல தாயாரின் திருநாளில் நற்கருணை எழுந்தேற்றத்துடன் தியானம் முடிவுற்றது. இங்கு பவனிகள் மிகவும் சிறப்பாக நடைபெறும். ஆடி முதல் ஞாயிற்றுக் கிழமை பெருந்தொகையான இந்துக்கள், புரட்டஸ்தாந்தர், புத்த மக்கள தம் வீடுகளின் முன் நின்று நற்கருணைப் பவனியைப் பார்த்தனர். கத்தோலிக்கர் தம் ஆர்வம் மேலிட அரசரின் அரசர்க்குப் பகிரங்கமாக வணக்கம் செய்வர், வீதிதோறும் அழகான பச்சிலை, மலர்களால் அலங்கரிக்கப்படும். இடையிடையே நற்கருணையை வைப்பதற்குப் பீடங்களும், பந்தல்களும் அமைக்கப்படும்.

பிரான்சில் இருந்து எம் பணிக்கு 4 சகோதரிகள் வந்துள்ளனர். வைகாசி - கார்த்திகை மாத இடைவெளியில் வந்த இச் சகோதரிகள் எம் தாயார் மாறி லியோனிக்கு மகிழ்ச்சி அளித்துள்ளனர். எம் தேவையில் உதவி செய்தமைக்கு எம் நன்றிகளைத் தாயாருக்கு அனுப்பியுள்யோம். எம் தலைவி றோஸ்டிலிமா தாயாரின் பொன் யூபிலி விழா கொண்டாடப்பட்டது. அதிமேற்றிராணியார் இல்லாதபடியால் மறைமாவட்ட பிரதிமுதல்வர் கசுகெல் (Cazugel) தலைமை வகித்து அருட்தந்தையர்கள் மாஜோறெஸ் (Majoret) லெகொக் (Legoc) இவர்களுடன் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார்கள். ''என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றுகின்றது, என் மீட்பராம் இறைவனிடம் என் இதயம் அகமகிழ்கின்றது.'' என்னும் பகுதியை அருட்தந்தை கசுகெல் விரிவுபடுத்தி விளக்கினார். மரியாளின் கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குடும்பச் சகோதரிகளுக்கு மீளக் கூறுவது எவ்வளவோ நல்லது என்றார். 50வருடங்களாக இறைவனுக்குப் பணிசெய்தது, மற்றவர்களையும் பணிசெய்ய அழைக்கின்றீர். இறைவன் உங்களுக்கு உதவிசெய்து மேலும் பலகாலம் இலங்கையில் பணிபுரிய உதவிடுவாராக!

பாடசாலை மாணவர்கள் யூபிலி நாயகிக்கு நன்றியினதும் அன்பினதும் அடையாளமாகக் கலைப்பொருட்களைக் கொடுத்தார்.கள். போடோ சகோதரிகள் பேரால் பிள்ளைகளின் அன்பை அவ உணர்ந்தா. விழாவின் சிகரமாக 11ம் பத்திநாத பாப்புவின் ஆசியைப் பெற்றா. அயல் மடத்துத் தலைவிகளும் அவவைச் சூழ்ந்து அவவின் மகிழ்ச்சியில் பங்குபெற்றனர். மார்கழி 8ந் திகதி போடிங் பிள்ளைகள் சிலர் ''மரியாயின் பிள்ளைகள்'' கூட்டத்திற் சேர்ந்தனர். இவ்வாறு குடும்பவிழா செபத்துடனும், மாதாவுக்கு அர்ப்பணிப்புடனும் முடிவுற்றது.

## குருநாகல் வகுப்புகள்

1931ம் ஆண்டு பெரிய நிகழ்வுகள் நடைபெறவில்லை. எம் திருநாட்கள், அநாதைப்பிள்ளைகள், பணிகள் பற்றியே எடுத்துரைக்கவுள்ளோம். தி. குடும்பச் சபையினருடன் ஒன்றித்து நற்கருணைப்புதுமை திரிதின வழிபாட்டில் பங்குபெற்றோம். வைகாசி மாதத்தில் 9 பிள்ளைகள் எம்முடன் சேர்ந்து மாதாவின் பீடத்தை அலங்காரம் செய்து மாதா புகழைப் பாடி அவவின் பரிந்துரையைப் பெற்றுக் கொண்டோம். திருஇருதய விழாவன்று 26 சிறுமிகள் முதல் நன்மை பெற்றனர். அதனைத் தொடர்ந்து புனித. திரேசாவின் திருநாள் அண்மித்தது. பங்குக் கோவிலில் உள்ள சுருவம் றோசாப்பூக்களால் அலங்கரிக்கப்பட்டு இறுதிநாளில் பவனியாக மிக நீண்டதூரம் கொண்டு செல்லப்பட்டது. அவ்வேளை எம் தோட்டத்தையும் வலம் வந்தனர். வருடாந்த தியானத்தில் பலமடங்களிலும் இருந்து சகோதரிகள் பங்குபற்றினர். அருட்தந்தை கெகன் (Gueguen) வழிநடத்தி ஆன்மீக சிறிய வழிகளைப் பற்றித் தன் மறையுரையில் எடுத்துரைத்தார். மார்கழி 8ந் திகதி மாசில்லா உற்பவத்திருநாளில் எம்மடத்தில் நற்கருணை எழுந்தேற்றம் செய்ய முடியவில்லை. வயோதிப குருக்களால் கதிர்ப்பாத்திரத்தை தூக்கிப் பீடத்தின் மேல் வைக்க முடியவில்லை. நாம் இதனைத் தியாகத்துடன் ஏற்றுக்கொண்டோம். ஆனால் ஆச்சரியம் பங்குக்குரு தன் பணித்தளத்திற்கு வந்து ஒரு நாள் ஆராதனை செய்ய வழிவகுத்தார்.

மனமாற்றங்களைப் பற்றிக் குறிப்பிடாவிடினும் ஒரு புத்த மதப்பெண், ஓர் அநாதைச் சிறுமியின் தந்தை, இவர்களின் மனமாற்றத்தை எதிர்பார்க்கிறோம். மக்கள் மிகவும் வறுமையில் வாழுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மருந்து, உணவுப்பொருட்கள் கிடைப்பது அரிது. சிலவேளைகளில் எம்மிடம் இருக்கும் 8 அநாதைப் பிள்ளைகள் படிக்கின்றனர். வகுப்புகள் முன்னேறுகின்றன. இயேசு கூறியதுபோல் ''அறுவடையோ அதிகம் வேலையாட்களோ குறைவாக உள்ளனர். செபிப்போம்.

## குருநாகல் வைத்தியசாலை

வைத்தியசாலைப் பணிகள் நோயாளிகளாலும், வைத்தியர்களாலும் பாராட்டப்படுகின்றன. நோயாளிகள் நன்றியுள்ளவர்களாகவும், வைத்தியர் நம்பிக்கை உடையவர்களாகவும் உள்ளனர். 1931ம் ஆண்டு நிகழ்ந்த நல்ல சம்பவங்களைத் தருகின்றோம்.

ஒரு மார்பு நோயாளி பலவருடங்களாக விசுவாச வாழ்வில் இருந்து விலகிப் பின்பு தன் குழந்தைப்பராய விசுவாசத்தைக் கண்டடைந்தான். சாத்தான் பலமுறை சோதித்தது. 3முறை குருவானவர் வந்தும் தான் பாவசங்கீர்த்தனம் செய்ய ஆயத்தமில்லை என்றான். எனினும் ஆண்டவனின் இரக்கம் அவனைத் தொடர்ந்தது, திரு விருந்தும் பெறறான். தினமும் குருவானவர் அவனுக்கு ஆறுதல்கூறி தைரியத்தோடு இறந்தான்.

வேறொரு 10 வயதுப் பிள்ளை மரணவேதனையில் இருந்தபோது சகோதரி இறை அன்பைப் பற்றி எடுத்துரைத்தாள். அத்துடன் விசுவாச உண்மைகளையும் விளக்கித் திருமுழுக்குப் பெற ஆயத்தம் செய்யப்பட்டது. இருமல், விக்கல்களுக்கிடையில் மனஸ்தாப, தேவசிநேக முயற்சிச் செபங்களைச் செபித்தாள். இறைவனின் பிள்ளையான பின்பு ''தாயே எனக் கூப்பிட்டு" என் அம்மா வரும் போது நான் விண்ணகத்தில் அவளைக் காத்திருக்கிறேன். என்று கூறும்படி சொல்லி ஒரு மணித்தியாலத்தின் பின்பு உயிர் துறந்தாள். இவ்வாறு பல திருமுழுக்குகளும், வேறுகுணப்படுத்தல்களும் நல்ல பிதாவின் பரிந்துரையால் நடைபெற்றன.

1931ம் ஆண்டில் நடைபெற்ற உடல் உள இரக்கச் செயல்களின் சிறிய அறிக்கை.

| | | |
|---|---|---|
| வைத்தியசாலையில் பராமரிக்கப்பட்ட நோயாளிகள் | - | 6112 |
| சிறுவர் திருமுழுக்கு | - | 63 |
| வளர்ந்தோர் திருமுழுக்கு | - | 199 |
| ஒப்புரவு அருட்சாதனம் | - | 60 |
| திருவிருந்து | - | 29 |
| இறுதி அருட்சாதனம் | - | 35 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பம்பலப்பிட்டி

நோய்கள் எம்மைத் தாக்கினாலும் எம் சகோதரிகளின் தியாக சேவைக்கு இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். கல்விப்பணியில் ஈடுபட்டிருக்கும் சகோதரிகள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளின் ஆன்மநலனில் அக்கறையுடையவர்களாக இருக்கின்றார்கள்.

புனித. சூசையின் திருவிழாவன்று 300 மாணவர்கள் புதுநன்மை விருந்தில் பங்கு கொண்டனர். அவர்களின் வெண்ணுடை, நீளமான துப்பட்டி இறைவனை அணிமிக்க அவர்களின் தூய்மையான உள்ளத்தைக் காட்டிநின்றன. நற்செய்தி வாசித்தபின் மெழுகுதிரி ஏந்தியவர்களாக விசுவாச மந்திரத்தை அறிக்கையிட்டனர். தெளிந்த குரலுடன் ஒவ்வொரு வார்த்தைகளையும் அவர்கள் உச்சரிக்கும் போது விசுவாசிகளின் உள்ளத்தை அவை ஆழமாகத் தொட்டன. பக்தியுடன் நற்கருணை விருந்தில் பங்குபற்றி நன்றி கூறினர். இந்த நன்னாளில் மடத்திலே ஒரு புதிய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

30 வருடங்களாகப் பணியாற்றும் இந்த மடம் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. 20 பிள்ளைகளுடன் தொடங்கிய இந்த ஆரம்பப் பாடசாலை இன்று நாட்டிலேயே மிகவும் பிரசித்தி பெற்ற உயர்தர வகுப்புகளுடன் (Retreat Road) நிலத்தையும் சுவீகரித்துள்ளது. திருச்சபை அதிகாரிகள் கல்லாலான கட்டிடத்திற்கு முன்பு தூயஆவி வதியும் ஆலயமான ஆன்மாக்களை மீட்கப் பாடசாலைகளைக் கட்டும்படி அறிவுரை கூறினார்கள். எனவே வசதியான ஓர் ஆலயம் அமைக்க முடியாதிருந்தது. தற்போது கட்டிடம் அமைக்க காலம் வந்துள்ளது. அமலமரித்தியாகிகள் புடைசூழ கொழும்பு அதிமேற்றிராணியார் கல்லை ஆசீர்வதித்தார். தலைவி, சகோதரிகள், மாணவர்கள் சார்பாக 'லெகொக்' (Legoc) அ.ம.தி. குருவானவர் ஆயரின் வழிபாட்டிற்கு நன்றி கூறினார்.

''கிறீஸ்துவை மூலைக் கல்லாகக் கொண்ட இக்கட்டிடமானது அழிவில்லாத வல்லமையைக் காட்டி நிற்கின்றது. அத்துடன் ஆயர் இக்கல்லை ஆசீர்வதித்து சகோதரிகளின் ஆன்மபணிக்கு ஊக்கமூட்டியுள்ளார். இன்று வரையும் பெற்றுக்கொண்ட சித்திகள் மாணவரின் பெற்றோர் ஆசிரியர் மட்டில் காட்டும் நம்பிக்கையை எடுத்துரைக்கின்றன. பழையகால நிகழ்வுகள் எதிர்காலத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுகின்றன. இறைவனின் கரம் என்றும் அவரின் சேவை செய்வோருடன் தங்கி உள்ளன" என்று ஆயர் கூறினார். அத்துடன் "போடிங்" மாணவர்களின் பெற்றோர், நண்பர்களுக்கு நன்றி கூறிப் புதிய கட்டிடத்திற்கும் உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டார். தங்களின் ஆலயக் கட்டிடத்திற்குத் தம்மாலான உதவியைச செய்வதாக மாணவர்கள் கலைநிகழ்ச்சிகளை ஆயத்தம் செய்து பெற்றோரையும், தமக்குத் தெரிந்தவர்களையும் அதற்கு அறிமுகம் செய்தனர். ஒவ்வொரு வகுப்பும் தம்பிரதிநிதிகளை அனுப்பித் தம் பொறுப்புக்களை நன்கு செய்தனர். பார்வையாளரின் கரகோஷம் நிறுவனத்தில் பிள்ளைகள் பெறும் கல்வியைப் பாராட்டுவதாக இருந்தன. ஆனி 2ந் திகதி 50 சிறுவர்கள் முதல் நன்மை பெற்றுக் கொண்டனர். வெண்ணுடை அணிந்தவர்களாக முகம் மலர இறைவனின் சந்திப்பை எதிர்பார்த்திருந்தனர். திருப்பலியின் போது பக்திப் பாடல்கள் இசைக்கப்பட்டன. அடிக்கடி அல்லது அன்றாட நற்கருணை விருந்தில் பங்குபெறும்படி கேகென் (Gucguen) சுவாமியார் கேட்டுக் கொண்டார். நற்கருணைச் சிறுவர்களை வழிபாடுகள் நிறைவு பெற்ற பின் பெற்றோர் அரவணைத்து முத்தமிட்டனர், நினைவுப் பக்திப் படங்கள் பெற்றுக் கொண்டனர். புனித. கன்னிமரியாளுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தனர். திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தக் கொண்டனர்.

சிலநாட்களின் பின் 350 மாணவர்களுக்கும் 50 பழைய மாணவர்களுக்கும் தியானம் நடைபெற்றது. சில தாய்மார் பிள்ளைகள் அதில் பங்குபற்றினர். கத்தோலிக்கரல்லாதவர்களும், பெற்றோரின் அனுமதியுடன் கலந்து கொண்டனர். 2 புரட்டஸ்தாந்து பிள்ளைகள் பீட அலங்கரிப்புக்கு உதவி செய்தனர். முதல்முறையாகப் பெரிய மண்டபத்தைச் சிற்றாலயமாக உருவாக்கி அதில் நற்கருணை வைக்கப்பட்டது. சில பக்தி முயற்சிகள் குருவானவரின் உதவியுடன் எடுக்கப்பட்டது.

**1ம் நாள்**

இனிப்புப் பண்டங்களை உண்ணாமலும் சீனி இல்லாது தேநீர் அருந்தல் 15 நிமிஷத்திற்கு முழங்காலில் இருந்து நற்கருணையை உற்று நோக்கி செபித்தல்.

**2ம் நாள்**

உணவு நேரங்களுக்கிடையில் நீர், குளிர்பானம் அருந்தாது இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3ம் நாள்**

பீடத்தில் ஒரு சிலுவை வைக்கப்பட்டிருந்தது, தியானம் செய்யும் ஒவ்வொருவரும் அதன் முன் சென்று பணிந்தனர். அத்துடன் ஒவ்வொருவரும் மலர்களால் ஒரு பூச்செண்டு செய்து மாதாவுக்கு வைத்தனர். வசதிபடைத்தோர் ஏழைகளுக்கு பணம் போட்டனர்.

**4ம் நாள்**

பாவசங்கீர்த்தனத்திற்கு முன்பு ஆன்ம சோதனை பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது.

இறுதி நாளில் பலர் பங்குபற்றினர். குடும்பத்தாய்மார் ஆன்ம உணவைப் பெற்றுக் குருவின் இறுதி உரையை ஏற்றுச் சென்றனர். ''தூய உள்ளத்தையும், எல்லாவற்றிலும் எளிமையான வாழ்வையும் உங்களிடம் கேட்டு நிற்கிறேன். உங்கள் அயலவரிடம் மகிழ்ச்சியாக இருங்கள். அன்றாட வாழ்வின் மகிழ்ச்சி இறைசித்தத்தைக் காட்டுகின்றது. இது ஆன்மாவுக்கு ஊக்கத்தை அளிக்கின்றது. அயலானிடம் அன்பில்லாத ஒருவருக்கு ஓர் புன்னகை, ஒரு நல்ல வார்த்தை ஓர் ஒளிக்கீற்றாகவும், கொடையாகவும் உள்ளது. இதுவிசுவாசம், இறை அன்பினால் ஏற்படும். பலர் அருட்சாதனங்களைப் பெற ஆயத்தம் செய்தனர். எம்மடத்தில் இருந்த முத்து என்ற வேலையாளும் திருமுழுக்குப் பெற்று ''யோசெவ்'' என்ற பெயர் பெற்று முதல் நன்மையும் பெற்றுக் கொண்டார். அவரின் மனைவி பிள்ளைகளும் அவரைப் பின் தொடர்வார்களென்று நம்புகிறோம்.

**தெகிவளை** **1932**

தெகிவளையில் உள்ள ''புனித மரியாள்'' பாடசாலை புதிய பணித்தளமாக இருந்தாலும் முழுவதும் கத்தோலிக்கர், 400 மாணவர்கள் உள்ளனர். முன் பள்ளிப் பாடசாலைக்கு 200 சிறுவர்கள் உள்ளனர். இடம்பற்றாக்குறையாக உள்ளது. சில பிள்ளைகள் கத்தோலிக்க சமயத்தில் சேரவிரும்புகின்றனர். எனவே சமய பாடத்தின் போது திருஇருதயநாதருக்கு, பூக்கள், மெழுகுதிரிகள் ஏற்றிச் செபிப்பர். மற்றப்பிள்ளைகளும் சமய பாடத்தில் நல்ல புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளச் செபிப்பர். அது மட்டுமல்ல இறைவனைப் பற்றிப் பேசுவதற்கு இது ஒரு சந்தர்ப்பமாகின்றது. ஒரு புத்த சிறுமி தந்தையிடமிருந்து ஒரு பைபிளைப் பெற்று ஏனைய பாடங்களைப் போன்று அதைப் படிக்கின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நன்மைக்கு 54 பிள்ளைகள் ஆயத்தம் செய்யப்பட்டனர். ஒரு பிள்ளை பாவசங்கீர்த்தனத் தொட்டியில் இருந்து வரும்போது அழுவதைக்கண்டு ஆசிரியர் ஆறுதல் கூறினார். அதற்கு அவள் ''என் பாவத்தினால் நல்ல இறைவனுக்கு வருத்தம் வருவித்தேன்'' எனக்கூறினாள். பெரிய மாணவர்கள் பம்பலப்பிட்டி போன்று ''பாஸ்கா'' நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டனர். இதனால் பங்கு மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

இந்த வருடம் நற்கருணைத் திருநாள் ''அயர்லாந்தில் உள்ள டப்ளின்'' நற்கருணை மகாநாட்டுடன் தொடர்புடையதாக நடாத்தப்பட்டது. பவனியின் தூரம் அதிகமாக இருந்தாலும் களைப்பை ஏற்படுத்தவில்லை. ஆலயவளவில் 2 நற்கருணைப்பீடம் ஆயத்தம் செய்யப்பட்டன. வீதிகளில் 3 பீடங்கள். மக்களிற் சிலர் தம் சொந்தச் செலவில் ஆயத்தம் செய்திருந்தனர். குடும்பங்கள் இப்பீடத்தைச் சுற்றியிருந்த நற்கருணைநாதரின் ஆசியைப் பெற்றுக் கொண்டனர்.

சகோதரிகளால் வளர்க்கப்பட்ட ஒரு குடும்பத் தலைவன் சிலகாலமாகச் சமயத்தை அனுசரிக்காது 25 வருட திருமணவாழ்வின் நினைவாக வீட்டில் திருஇருதயப் படத்தை வைக்கச் சம்மதித்தான். ஓர் ஆர்வமுள்ள குருவைத் தனது இரக்கத்தின் கருவியாக இறைவன் இவரிடம் அனுப்பி மனந்திரும்பி இறுதி நற்கருணைப் பீடத்தில் நற்கருணை ஆண்டவரின் ஆசியைப் பெற்றார். ''இன்று உன் வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று'' என்று இயேசு கூறுவதாக உணர்ந்தான். நற்கருணைப் பவனியின் இறுதியில் தம் பங்குகளுக்கும், சிறப்பாக இளைஞரை உருவாக்கும் பாடசாலைகளுக்கும் ஆசிகேட்டுச் செபித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வென்னாப்புவா

எமது 182 சிங்களச் சகோதரிகள் 44 பாடசாலைகளில் உள்ள 6876 மாணவிகளுக்குக் கல்விப் பணி ஆற்றுகின்றனர். அவர்களுடன் 76 பொது நிலையினரும் இணைந்துள்ளனர். வயது முதிர்ந்த சகோதரிகள் தம்மாலான பணிகளையும், இளைய சகோதரிகள் ஆர்வமுடனும் தம் பணிபுரிகின்றனர். அரச பாடத்திட்டங்கள் அதிகமாகவும் பரீட்சைகள் கஷ்டமாகவும் உள்ளன. ஆங்கிலக் கல்வி எம் சகோதரிகளுக்கும், மாணவர்களுக்கும் புதிய பாதையைத் திறக்கின்றன. இதுவரை சிங்கள இலக்கியங்களையே அதாவது புத்த சமயத்தையே படிப்பித்தார்கள். எனவே நவகன்னியர் தம் சிறிய பணிகளுக்குச் செல்லுமுன் ஆங்கிலம் படிக்கின்றார்கள். ஓய்வுகாலத்தில் வென்னாப்புவா மடமானது படிக்க விரும்பும் சகோதரிகளுக்குப் பயன்படுகின்றது. சில பாடங்களில் சிறப்புச் சித்தி பெற்றவர்கள் தாம் பெற்ற அறிவை மற்றவர்களுக்குக் கூறுவார்கள். அப்போது சிலர் மாணவர்களாக மாறுவதையும், சிலர் தம் ஓய்வைத் தம் நண்பர்களுக்காகச் செலவிடுவதையும் காணலாம்.

பாடசாலை அதிகாரிகள் இந்த அறிவு விருத்தியைப் பயன்படுத்திக் கூட்டங்கள், கருத்தரங்குகள், கைவேலைக் கண்காட்சி போன்றவற்றை ஒழுங்கு செய்கிறார்கள். இந்த மடமானது ஆண், பெண் ஆசிரியர்கள், சகோதரிகள், பொதுநிலையினர் என நூற்றுக்கணக்கானோர் ஒன்று சேரும் இடமாகும். முன்பள்ளி மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு எம் சகோதரிகளிடம் புதியமுறைகளைக் கேட்பதால் மற்ற ஆசிரியர்களுக்கு மேல்வரிச்சட்டமாக விளங்குகிறார்கள். ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இருந்து 14பேர் சித்தியடைந்துள்ளனர். 4 ஆசிரியர்கள் 26 முன்பள்ளி ஆசிரியர்கள், இன்னும் பலர் தராதரப்பத்திரம் பெற்றுள்ளனர். ஒரு புத்த அதிகாரி முகம்மலர ''இந்தப் பாடசாலையைப் பரீட்சிப்பதில் மகிழ்வடைகின்றேன் ஏனென்றால் இங்கு பிரச்சினைகள் கிடையாது'' என்றார். எவ்வாறு இதனை நீர் அறிவீர் எனக்கேட்டபோது இது கத்தோலிக்க பாடசாலையல்லாவா? புத்த பாடசாலை வித்தியாசமானது என்றார். பின்பு எம் மடத்தை விட்டுச் செல்லும் போது எம் பாடசாலையைப் பற்றி நல்ல அறிக்கை எழுதினார்.

''மவுன்ற் லெவனியா'' என்னும் இடத்தில் மக்கள் புத்தமதத்தவராயினும் எம் பாடசாலை முன்னேற்றமடைந்து வருகின்றது. பிள்ளைகளின் ஒழுக்க வாழ்வுக்காகவும், தையல் போன்ற கலைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்று நல்ல பெண்களாக வருவதற்காகவும் பிள்ளைகளைப் பெற்றோர் இங்கே அனுப்புகிறார்கள். தீவின் தென்பகுதியில் தமிழ் பாடசாலைகள் குறைவு. இரு இனத்திற்கும் வேறுபாடு இருப்பதால் இந்த மொழியைப் படிப்பிக்க ஆசிரியர்கள் குறைவு. எனவே எம் மாணவர்களில் சிலரை இளவாலை ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பி அங்கு தராதரம் பெற்று இங்கு வந்து படிப்பிக்கலாம்.

வழக்கம் போல் ஆசிரியர்களின் வருடாந்த தியானம் புரட்டாதி மாதத்தில் நடைபெற்றது. அரசகடமைகளை நன்கு நிறைவேற்றுவது பற்றி, வழி நடத்திய குருவானவர் எளிமையாக எடுத்துரைத்தார். எமது 6876 மாணவர்களைப் பற்றி என்ன கூறலாம் எம் சகோதரிகள் அவர்களுக்கு ஒரு நல்ல மறை அறிவை அளிக்கின்றனர். அவர்கள் முயற்சி பயனளிக்கின்றது. கிழமைகளில் திருப்பலியில் பங்குபற்றித் திருவிருந்து பெற்றுக் கொள்கின்றனர்.

''பெஞ்சமின்'' ''தார்சீசியஸ்'' என்னும் திருஇருதயச் சபை விருத்தியடைந்து வருகின்றது. எல்லோருக்கும் இது விருப்பமாயினும் இதில் சேர முடியவில்லை. 6 வயதுடைய ஒரு புரட்டஸ்தாந்து பிள்ளை இப் பணியின் இயக்குனருக்கு எழுதியது. ''குருவே, சகோதரி எனக்கு இந்த உத்தரியம் தரவில்லை. எனினும் ''பெஞ்சமினை'' நான் விரும்புகிறேன். திருஇருதயப் பக்தியினால் பலதியாகங்கள் செய்கிறேன். எனக் கூறித்தான் செய்த தியாகங்களை எழுதியிருந்தார்.

சிறுவர்கள் தாராள உள்ளத்துடன் ஒறுத்தல் முயற்சிகள் செய்வார்கள். ஒரு சிறுமி தனக்கு விருப்பமில்லாத உடையை ஒரு கிழமை மட்டும் அணிந்திருந்தாள். வேறொரு பிள்ளை தனக்கு விருப்பமில்லாத ஒர மரக்கறியை 2 முறைகேட்டு வாங்கி உண்டாள். இவ்வாறான சிறுதியாகங்கள் பலதிருநாட்களுக்கு ஆயத்தமாகச் செய்யப்பட்டன. கிறீஸ்து அரசரின் திருநாட்களுக்கு ஆயத்தமாகச் செய்யப்பட்டன. கிறீஸ்து அரசரின் திருநாளுக்குப் பிள்ளைகள் அழகிய முடி ஒன்று செய்தனர். அதில் ஒவ்வொரு தியாகத்திற்கும் ஒரு நிறம் பூசினர். பல நிறங்கள் ஒழுங்காகப் பூசியதால் இயேசுவும் பிள்ளைகளும் மகிழ்ந்தனர் இது முக்கியமானது.

கிறிஸ்மஸ் விழாவுக்குப் பிள்ளைகள் இயேசுவின் தொட்டிலை அலங்கரித்தனர். ஒரு பட்டியலில் தேவையான பொருட்களை வெட்டியெடுத்தனர். விளையாட்டுப் பொருட்களையும் மறக்கவில்லை. ஒரு குழந்தை இயேசு படுத்திருக்கும் படத்தை எடுத்து அதில் எல்லாவற்றையும் ஒட்டினர். வகுப்பில் சத்தம் போடக்கூடாது எனவும் சத்தம் போட்டால் குழந்தை இயேசு எழுந்து விடுவார் எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டது. கிறிஸ்மஸ் இரவு அன்று ஒவ்வொரு வகுப்பும் தாம் செய்தவற்றைக் கொண்டு வந்து எல்லார் முன்னிலையிலும் வைத்தனர். இம்மானுவேல் அங்கு வந்து தங்கினார். எம் சிறுவர்களின் ஆர்வம் எமக்குத் திருப்தி தருகின்றது. செபத்தின் போது கண்களை மூடிக் கைகுவித்து ''இயேசுவின் திருஇருதயமே, உம்மை நாம் நேசிக்கின்றோம். உம் அரசு வருக'' எனச் செபிக்கின்றனர். இவ்வாறு ஆசிரியர் இப்பணியின் இயக்குனருக்கு எழுதினார்.

இவர்களில் ஒரு பிள்ளை வியாதியாக இருந்த போது தாய் கவலையுற்றாள். அப்போது அவன் அம்மா, திருஇருதய இயேசு எம்மை நேசிக்கிறார், எம் அரசர், எதையும் மறுக்கமாட்டார். என்று சிஸ்ரர் சொல்லித்தந்தா. எனவே அழாது நான் சுகம் பெற செபியுங்கள் என்றாள். தாய் முழங்காலில் இருந்து செபிக்க வியாதி குணமாகியது.

''தார்சீசியஸ்''கூட்டத்தினரும் அப்போஸ்தலர்களாகத் திகழ்வதற்கு முனைகின்றனர். இவர்களில் 14பேர் இறைவனுக்கு பணிபுரிய அழைக்கப்பட்டுள்ளனர். இறைவனின் அளவுகடந்த இரக்கத்தை விளக்கி ஓர் ஆசிரியர் (மற்றேயோ) Mateo சுவாமி மூலம் நிகழ்ந்த சில மனமாற்றங்களை விளக்கினார். இதைக் கேட்ட 2 சிறுமிகள் தம் கத்தோலிக்க தந்தை கோவிலுக்குச் செல்லாமல் இருப்பதால் எம் நல்ல கடவுளுக்குத் துன்பம் தருவதாக உணர்ந்து ஒரு கடிதம் எழுதினர் அன்பான தந்தையே உம் மனமாற்றத்திற்கு நிரம்பிய அருள் தருமாறு இயேசுவின் திருஇருதயத்திடம் செபிக்கிறோம். என எழுதினர்.

புனித. திரேசாளின் நவநாளின் போது ''தார்சியாஸ் கூட்டத்தினர் எந்த அருள் பெற நாம் செபிக்க வேண்டுமெனத் தம் வகுப்பாசிரியரிடம் கேட்டனர். அதற்குச் சகோதரி ஓர் ஆன்மாவின் மனமாற்றம் என்றாள். போடிங்கில் இருந்த ஒரு புத்த மதப்பிள்ளை செபத்தின்போது வகுப்பைவிட்டு வெளியேறுவா, நவநாளின் முடிவில் திருப்பலியின் பின் புனித. திரேசாள் சுருவத்தின் முன் எல்லோரும் நின்றனர். ஒருவர் இல்லை எனத் திரும்பிப் பார்த்த போது இப்புத்த பிள்ளை முழங்காலில் இருந்து தன் தலையை இருகைகளிலும் வைத்தவாறு இருந்ததைக் கண்டனர். அன்றில் இருந்து செபத்திலும், மறை வகுப்புகளிலும் பங்கு பற்றி வருவா. தன் மூத்த சகோதரியின் உதவியுடன் திருமுழுக்குப் பெறவிரும்பினாலும் அவளது தந்தை தன் மரணத்தின் பின் இவளை மற்றோர் துன்புறுத்தலாம் எனப் பயந்து உத்தரவு கொடுக்கவில்லை. இயேசுவின் திருஇருதயம் இப்பிள்ளையின் வேண்டுதலைக் கேட்டு திருச்சபையில் நுழைய உதவி செய்வார். எனவே எம் சகோதரிகள் வகுப்பில் மட்டுமல்லப் பங்கிலும் உதவி புரிகின்றனர். ஓர் மறை மாவட்டக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு இவர்களைப் பாராட்டி இவ்வாறு கூறினார். ''இச் சிறிய சகோதரிகள் விசுவாசத்தைக் காப்பாற்றுகின்றனர். இவர்கள் இல்லாவிடில் வேதபோதகக் குருக்கள் என்ன செய்வார்களோ? என்றார். ''கஞ்சிக்குளியா'' சகோதரிகள் குருக்கள் இல்லாததால் சிலாபத்திற்குச் சென்று திருப்பலியில் பங்குபற்றித் திரும்பிவரும் போது ஒரு புத்த பவனி வந்து கொண்டிருந்தது. ''பொலிஸ்'' இவர்களைத் தடைசெய்ததால் ஒரு பக்கத்தில் நின்றனர். புத்தசிலையை அண்மித்ததும் அதைக் கீழே வைத்தனர். பாரமாக இருந்ததால் அதைத் தூக்க முடியவில்லை. அப்போது பிக்கு ''அவர்களைப் போகவிடும்படி பொலிசுக்குக் கூறினார். பின் அவர்களால் தூக்க முடிந்தது'' விசுவாசம் அற்புதங்களைச் செய்யவல்லது.

## குருநாகல் - வகுப்பு 1932

தெய்வீக ஆசி எம் பணிமேல் பொழியப்பட்டுள்ளது. ஒரு தொற்று நோய் பரவிப் பலர் மடிந்துள்ளனர். அதில் ஒருவர் தான் கத்தோலிக்கர். சென்ற வருடத்திலும் பார்க்க இவ்வருடம் கூடிய மாணவர் சேர்ந்துள்ளனர். பரீட்சையிலும் சித்தி பெற்றுள்ளனர். ஆங்கில வகுப்பில் உள்ள 9 சிறுமிகள் இயேசுவின் திருஇருதய விழாவன்று மடத்துச் சிற்றாலயத்தில் முதல்நன்மை பெற்றனர். சிலநாட்களின் பின் கொழும்பு அதிமேற்றிராணியார் பங்கில் பெருந்தொகையானவர்களுக்கு உறுதிப்பூசுதல் வழங்கினார். அதேவேளையில் 5 அநாதைச் சிறுமிகள் திருமுழுக்குப் பெற்றனர். 5பேர் முதல் நன்மை பெற்றனர். இறைபராமரிப்பு திருக்குடும்பச் சகோதரிகள் மூலம் இறைவனைக் கண்டடையச் செய்கின்றது. 4 சிங்களச் சகோதரிகள் 57 பிள்ளைகளுக்கு உதவிபுரிகின்றனர்.

ஆயர் (Marque) மார்க் ஆண்டகை ஒரு கிழமை குருநாகலில் தங்கி நின்று சிறிய பங்குகளில் உறுதிப்பூசுதல் கொடுத்தார். தந்தைக்குரிய ஒத்துழைப்பையும் கொடுத்தார். ஆயரின் மறைப்பணி மக்களின் ஆன்மீகப்புதுப்பித்தலுக்கு உதவிபுரிகின்றது. மாதாவின் மாதத்தில் பக்தியும் அனுசரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் சகோதரிகள் கோவிலை அலங்கரித்துப் பக்தி முயற்சிகள் நடைபெற உதவுகின்றனர். சனிக்கிழமை மாலை மாதாவின் பவனி பாடல்கள், பிரார்த்தனைகளுடன் நடைபெறும் போது நகரில் முஸ்லிம் மக்கள் வாழும் வீதியூடாகவும் சென்றது. இவ்வருடம் அவர்களும் வீதியை அலங்கரித்தனர். கத்தோலிக்கர் இங்கு குறைவாக இருப்பினும், புத்தர், முஸ்லிம், புரட்டஸ்தாந்து மக்கள் பரலோக அரசிக்குத் தம்மால் இயன்ற ஒத்துழைப்பை வழங்குகின்றனர். சிலர் தம் பிரசன்னத்தால், மற்றவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் அமைதியால், சிலர் மரியாதை வேட்டுக்களைத் தீர்ப்பதால் மாதாவின் பவனியைச் சிறப்புறச் செய்கின்றனர். இந்தநாள் எத்தனை பேருக்கு நீதியின் கதிரவன் உதிக்கும் காலமாக இருக்கும். எம் சந்தோஷத்தின் காரணமாக இருப்பவள் தேவதாய் அல்லவா?

## குருநாகல் - வைத்தியசாலை

பல வருடங்களாக அரசு எம் குழுச்சகோதரிகளுக்கு ஓர் இடம் தருவதாகக் கூறியது. 1932ம் ஆண்டு அந்த வாக்கை நிறைவேற்றியது. சிற்றாலயம் பெரிதாக்கப்பட்டு புரட்டாதி 10ந் திகதி ஆசீர்வதிக்கப்பட்டது. எனவே வைத்தியர்களும் நண்பர்களும் சேர்ந்து ஒரு சிறிய விழா வைக்கப்பட்டது. அப்போது இலங்கை ஆளுநர் சேர். தொம்சன் (Thompson) என்பவர் வைத்தியசாலையில் சுகாதாரம் பேணப்படுவதாகவும், சத்திர சிகிச்சை நிலையம் நன்கு இயங்குவதாகவும் கூறி அங்கு பணிபுரிபவர்கள் பாராட்டுக்குரியவர்களே" என்றார். ஆனால் கஷ்டங்கள் நேரிடுவதால் எம் தாதிமாரின் ஆர்வம் குறைந்து போகின்றது. பலமாதங்களாக எம் சகோதரிகள் விவேகத்துடன் நோயாளிகளைச் சந்திக்க வேண்டி இருந்தது. எனவே கிறீஸ்தவக் கடமைகளை நிறைவேற்றாது பல ஆன்மாக்கள் இறந்து விட்டனர்.

தேவபராமரிப்பு எமக்கு உதவி செய்தது தடைகளை நீக்கியது. எனவே சென்ற வருடம் போல் இவ்வருடம் 6412 நோயாளிகளைக் குணமாக்கினோம். 205 பேருக்குத் திருமுழுக்கு அருளப்பட்டது. அதில் 119 பேர் பெரியவர்கள். 35பேர் இறைவனைவிட்டுத் தூரவிருந்தாலும் இறக்குமுன் நோயில் பூசுதல் பெற்றனர். 4615பேர் ஆலயத்தில் திருவிருந்தில் பங்குபற்றினர். எம் சகோதரிகளின் அன்றாட உழைப்பினால் இப் பயனை அடைகின்றோம். இறைஇரக்கத்தின் கருவிகளாகத் தாம் திகழ்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றனர்.

ஒரு கத்தோலிக்க இளைஞனின் தோளில் புற்று நோய் காரணமாக அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. சத்திரசிகிச்சை நன்கு முடிந்ததும் புண்மாறவில்லை. 2 மாதத்தின் பின் எம் சகோதரிகள் நல்ல பிதாவின் வேண்டுதலுடன் செபிக்கும்படியும், இவரது பரிசுத்த பண்டமும் கொடுக்கப்பட்டது. குழுச்சகோதரிகள் நவநாள் செய்து மன்றாடினார்கள். புண்மாறத் தொடங்கி தழும்பு தெரிந்தது. சகோதரிகளுக்கும், இளைஞனுக்கும் மகிழ்ச்சி வைத்தியசாலையை விட்டு வெளியேறிய பின்னும் சகோதரிகளுக்கு நன்றி சொல்ல அவர்களிடம் வந்து செல்வார். வேறொரு சிங்களவன் தன் சேவல் ஒன்றுக்கு நடனம் பயிற்றுவித்தார். அதையும் ஒரு தாயார் வியாதியாக இருக்கும் போது அவவுக்கு அதைக் கொடுத்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புத்த மதப்பெண் அறுவைச் சிகிச்சையின் பின் சாகக் கிடந்தாள். அவள் திருமுழுக்குப் பெற விரும்பியதால் சகோதரிகளால் விசுவாசத்தைப் பற்றிய மறை உண்மைகளும் செபங்களும் அவளுக்குப் படிப்பிக்கப்பட்டன. அவளுடைய கணவன் கத்தோலிக்கன். ஆனால் அவள் கத்தோலிக்க முறைப்படி திருமணம் முடிக்கவில்லை. கணவனும் விரும்பியபடியால் அவளுக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டு அவர்களின் திருமண உறவும் புதுப்பிக்கப்பட்டது. நோயாளி இறுதிவரை நன்றியுணர்வுடன் இருந்தாள்.

வேறொரு கத்தோலிக்கன் தன் கிறீஸ்தவக் கடமைகளை நிறைவேற்றாது காலத்தைக் கடத்தி வந்தான். இறுதியாகச் சகோதரிகளின் உதவியுடன் இறுதி அருட்சாதனம் பெற்று அறிவிழந்த நிலையில் இறந்துவிட்டார்.

''சுசி அப்பு'' என்பவர் பலவிதத்தில் சிகிச்சை பெற்றும் நல்ல சுகம் பெறவில்லை. அவன் ஒரு கிறீஸ்தவன். தாய் தந்தையை இழந்தபின் அநாதையாகி ஒரு புத்த சமய மனிதனால் வளர்க்கப்பட்டான். பின்பு புத்த மதப் பெண்ணையே விவாகம் செய்து கொண்டான். 45 வயதாகியும் சிலுவை அடையாளமே போடத் தெரியாத நிலையில் இருந்தான். ஒரு அ.ம.தி. குருவானவர் குருநாகலுக்கு வந்த போது அவனுக்குத் திருமுழுக்கின் கடமைகளை எடுத்துக்கூறி முதல் நன்மைக்கும் ஆயத்தம் செய்தார். அதேநாளில் நோயில்பூசுதல் அருட்சாதனமும் பெற்றான்.

அதே காலத்தில் புத்தமத நோயாளி ஒருவர் தனக்கு அருகில் இருந்த ஒருவரின் மனமாற்றத்தைக் கண்டு உணர்ச்சி வசப்படுவதை ஒரு சகோதரி கண்டு ''நீர் கத்தோலிக்கனா'' என்று கேட்டா. அவர் ஆம் என்று கூறி 17 வயது வரை திருவிருந்து அருந்தியதாகவும், சிறுவயதில் பீடப்பணியாளனாக உதவிபுரிந்ததாகவும் பின்பு ஒரு புத்த முதலாளியின் பேக்கரியில் சேர்ந்து கத்தோலிக்க கடமைகளையும் கைவிட்டதாகக் கூறினான். எனவே அவனுக்கு மறை உண்மைகளை விளக்கி அருட்சாதனமும் வழங்கப்பட்டது. ''சுயிலறிர்'' என்பவனும் வைத்தியசாலையில் மரணப்படுக்கையாய் இருந்தபோது ஒரு சகோதரியைக் கண்டு ''இயேசுக் கிறீஸ்து'' என்றான். முன்பு அவன் திருமுழக்குப் பெற்று புத்த மதம், புரட்டஸ்தாந்த மதத்தில் சேர்ந்தான் குருவின் வழியாக அருட்சாதனங்களைப் பெற்று மறுநாள் இறந்து விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலப்பிட்டி வைத்தியசாலை

5 வருடங்களாக இப்பணி ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வருகின்றது. பல நோயாளிகள் இங்கு வந்து குணமடைந்து சகோதரிகளின் சேவைகளைப் பாராட்டிச் செல்கின்றனர்.

கண்டி ஆயர் மாசி 15ந் திகதி இவ்விடம் வந்து எம் பணிகள் பற்றிக் கேட்டறிந்தவற்றை வருடாந்த அறிக்கையில் காணலாம். இவ் வருடத்தில் 2364 நோயாளிகள் இங்கு வந்து சிகிச்சை பெற்றுச் சென்றனர். அவர்களில் 125 பேர் திருமுழுக்குப் பெற்றனர். 61 பேர் வயதில் முதிந்தவர்கள். ஒரு நோயாளி இறைவனின் பிள்ளையாக வந்ததையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்து தன் விசுவாசத்தை வெளிக்காட்ட அடிக்கடி சிலுவை அடையாளம் போடுவாள் ஒரு சகோதரி அவளின் மகிழ்ச்சிக்கான காரணத்தைக் கேட்டறிந்த போது சிலுவையைக் காட்டி அதை முத்தம் செய்து அதன் மட்டில் தனக்கிருந்த ஆழமான மதிப்பைக் காட்டினாள். ''மரியை'' என்னும் இப்பெண் சுகமடைந்து தன் வீடு சென்றாள். ஆனால் குறுகியகால இடைவெளியின் பின் மீளவும் வைத்தியசாலைக்கு வந்தாள். சிலநாட்களின் பின் இறந்து விட்டாள். தன் திருமுழுக்கு ஆடையுடன் விண்ணகம் சென்றிருப்பாள்.

ஒரு முஸ்லிம் பெண் பலவீனமான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்ட வரப்பட்டாள். அவளின் இறுதி நேரம் நெருங்கிவருவதைக் கண்ணுற்ற சகோதரி திருமுழுக்குப் பெற்று விண்ணகம் செல்ல விருப்பமில்லையா? எனக் கேட்டா. அதற்கு அவள் தான் சாகப் போவதாகவும் ''கத்தோலிக்க மதமே ஒரே வழி'' எனத் தெரியும் என்றாள். ஆனால் தன் குடும்பத்தினரால் பகைக்கப்படலாம், ஏனென்றால் பெற்றோரின் அனுமதியின்றி தாம் சமயம் மாறமுடியாது என்றாள். ''ஒருவருக்கும் இது தெரியாது. உன் ஆன்மாமீட்கப்படும் எனக்கூறித் தாமதிக்காது விசுவாச உண்மைகள் கற்பிக்கப்பட்டன. திருமுழுக்குப் பெற்றுச் சில நிமிடங்களின் பின்பு அவள் இறந்தாள்.

வேறொரு பெண் புத்த பெயருடன் மரண வேதனையில் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டாள். புத்தமதத்திற்கான எவ்வித அறிகுறியும் அவளிடம் காணப்படவில்லை. அன்றிரவே அவள் இறக்கலாம் போன்று இருந்ததால் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள விருப்பமா? எனக் கேட்கப்பட்ட பொழுது தான் பலகாலமாகக் கத்தோலிக்கத்தில் இருந்ததாகப் பதிலிறுத்து ஒரு குருவானவரைக்கான விரும்புவதாகக் கூறினாள். ஒப்புரவு, இறுதி அருட்சாதனங்களைப் பெற்று, இறைவன் தனக்கு நல்ல சுகம் தந்தால் கிறிஸ்தவளாக வாழ்வதாகக் கூறினாள். நல்லபிதாவின் சுத்தமான பண்டம் தன் ஆடையில் மாட்டிக்கொண்டாள். அன்று மாலையே காய்ச்சல் அவளை விட்டகன்றது. சில காலத்தின் பின்பு வைத்தியசாலையை விட்டு வெளியேறினாள். ஒரு நல்ல குடும்பம் ''மாகிறெற்''றைத் தம் வீட்டில் ஏற்றுக் கொண்டது. மீளவும் அவள் சுவாசக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு வந்தாள். மீளவும் தான் இருந்த குடும்பத்திற்குச் செல்ல விரும்பவில்லை. ஆனால் வேறொரு சமய சம்மந்தமான ஸ்தாபனத்தில் அனுமதி கிடைத்தது.

கிறிஸ்மஸ் தினத்தில் நோயாளிகள் பாலன் குடிலைச் சந்தித்து அவர் முன்னிலையில் மகிழ்ச்சியாக இருந்தனர். பிறமதச் சகோதரரும் கத்தோலிக்கர் போன்று தம் சிறுகாணிக்கைகளை பெத்தலேகம் இடையர் போன்று கொடுத்தனர். குழந்தை இயேசுவின் பெயரால் எல்லா ஏழை நோயாளிகளுக்கும் கேக் வகைகளும், மதிய உணவும் வழங்கப்பட்டன. வளர்ந்தோருக்கு உடைகள் வழங்கப்பட்டன. குழந்தைகள் விளையாட்டுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு - பம்பலப்பிட்டியா

புதிய ஆலயம் கட்டுதல் 1932ம் ஆண்டு பங்குனி மாதம் 19ந் திகதி அத்திவாரக் கல் நாட்டப்பட்டு 1933ம் ஆண்டு ஆவணி 29ந் திகதி கொழும்பு அதிமேற்றிராணியாரால் ஆலயம் ஆடம்பரமாக ஆசீர்வதிக்கப்பட்டது. அருட்தந்தை லெஜன் (Lejcone) O.M.I. மறை உரை ஆற்றினார். ''இது இறைவனின் இல்லம் பரலோகத்தின் வாசல்'' என்னும் வாசகத்தைப் பயன்படுத்தினார். மறுநாள் பீடம் ஆசீர்வதிக்கப்பட்டு முதற் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்தாலியில் இருந்து கொண்ட வரப்பட்ட வெள்ளை மாபிளினால் ஆனபீடத்தை தெகிவளை பழைய, புதிய போடிங் மாணவர்கள் அன்பளிப்புச் செய்திருந்தனர். கொழும்பு மடத்தின் ஆரம்பத்தில் இருந்து இறந்த சகோதரிகளுக்காக பழைய ஆலயத்தில் இறுதித் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. 1933 ஆவணி 30ந் திகதி மடத்தத் தலைவி றோஸ்டிலிமாவின் திருநாளாகவும் இருந்தது. சுகவீனமுற்றிருந்தபடி யால் வென்னாப்புவாவுக்கு அனுப்பப்பட்டா. புனித. சவேரியாரின் திருநாளில் 32 பெண்கள் திருவிருந்தில் முதல் முறையாகப் பங்குபற்றினர். அமல உற்பவத்திருநாளில் தெகிவளைப் பாடசாலை 38 சிறுவர்கள் திருவிருந்தில் முதன்முறையாகப் பங்குபற்றினர். அதில் 5 பேர் மனந்திரும்பியவர்கள்.

கேம்பிறிட்ஜ், மனையியல்கலை, திரித்துவக் கல்லூரிப் பரீட்சைகளின் முடிவுகள் திருப்திகரமாகவுள்ளது.. கத்தோலிக்கர் ஒன்று சேர்ந்து ஆர்வமுடனும், தியாகத்துடனும் பணிபுரிவதைக் காண்கிறோம் என்று ஒரு புத்த கல்வி அதிகாரி கூறியுள்ளார். அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற நற்கருணை மகாநாடு முடிவடைந்த பின் பல ஆயர்கள் கொழும்புக்கு வந்து துறவற நிறுவனங்களைப் பார்வையிட்டுச் சென்றனர். எம் சகோதரிகளின் பணியைப் பாராட்டிச் சென்றனர்.

## வென்னாப்புவா

மடத்துத்தலைவி சுகவீனமுற்றிருந்தாலும் இவ்விடத்தப் பணிகள், இம்மடத்தைச் சார்ந்திருக்கும் சிறிய மடங்களின் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் முன்பள்ளிப் பரீட்சைகள் நடைபெற்று வகுப்பு ஆசிரியர்களாகும் தகுதி அரசினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கப்படுகின்றது. பல இளம் பெண்கள் ஆசிரியத் தொழிலுடன், அத்துடன் இணைந்த தகைமைச் சான்றிதழையும் பெற விரும்புகின்றனர்.

சிறிய பணித்தளங்களிலுள்ள பாடசாலைகளில் இருந்து ஏறக்குறைய 150 பேர் முன்பள்ளி ஆசிரியர் தேர்வுக்கு வென்னாப்புவாவுக்கு வந்திருந்தனர். தாம் தெரிவு செய்யப்பட்டால் ஆயத்தகன்னியர்களாகத் தொடர்ந்து அங்கிருப்பதாகச் சிலர் தம் ஆவலைத் தெரிவித்தனர். இது ஒரு நிபந்தனையாகும். ஆடி, ஆவணி மாதங்களில் ஆசிரிய கல்லூரிப் பரீட்சை முடிவுகள் வெளியாகின்றன. வாய்மொழிப் பரீட்சைக்கு 3 கல்வி அதிகாரிகள் வென்னாப்புவாவுக்கு வருகின்றனர். அவர்களில் ஒருவர் திரு. கொட்விறி கல்வி அதிகாரி, நேர்மையான மனிதன். இங்கிலாந்தில் இருந்து எழுதியிருந்தார்.

## நொட்டிங்காம் 6 ஐப்பசி 1934

என் அன்பான தாயாரே!

நான் இங்கிலாந்தில் பாடசாலை அதிகாரியாக வருவதற்கு இலங்கைப் பணியில் இருந்து விலகிய செய்தியை என் மனைவி மூலம் அறிந்திருப்பீர்கள். தற்போது உங்கள் பணி திருச்சபையைப் பொறுத்தமட்டிலும், உங்கள் மாணவரைப் பொறுத்தமட்டிலும் எவ்வாறுள்ளதென்பதைப் பற்றி எடுத்துக்கூற விரும்புகிறேன்.

வென்னப்புவா தாயன்பு கொண்ட சக்தியின் ஆக்கமாக எனக்கு தோன்றுகிறது. எனது முயற்சியால் நான் பாடசாலைக்குச் சிறிது நன்மை செய்தேனென்றால் அது எனக்கு 100 மடங்கு நன்மையைத் தந்தது. எப்போதும் நான் தாயாரின் முழுமையை நோக்கிய முயற்சியை நினைவுகூர்கிறேன். புன்னகை முகத்துடன் என்னை ஏற்றுக்கொள்வதையும் மகிழ்வான சூழமையில் நான் இருந்ததையும் நான் ஒரு போதும் மறக்கமாட்டேன். அதே சூழமையைத்தானும் அனுபவிப்பதாகக் கொழும்பு அதிமேற்றிராணியாரும் கூறியிருந்தார்.

1933ம் ஆண்டு ஆனி 12ந் திகதி சகோதரி டோமினிக்கின் 50 ஆவது யூபிலி விழா நடைபெற்றது. ஆயர் திருப்பலி நிறைவேற்றி மறை உரை வழங்கி யூபிலி நாயகியின் பலவருடத்தியாக சேவையைப் பாராட்டி நன்றி கூறினார். இந்த விழாவின் பின்பு புதிய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 3 பாடசாலைகள், நவகன்னியர், ஆயத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியர், இல்லத்தின் ஆட்கள் கூடியிருந்ததால் ஒரு பெரிய ஆலயம் தேவைப்பட்டது. ஆயத்தகன்னியர் ஆசிரியர் கல்லூரியில் பயில்கின்றனர். அதேவேளை எஞ்சிய நேரங்களில் ஐரோப்பிய சகோதரிகளின் கண்காணிப்பில் உள்ளனர். இவர்களில் அக்னெஸ் என்னும் 16 வயதுப் பெண்ணை நல்ல இறைவன் எடுத்துக் கொண்டார். திருக்குடும்பப் பக்தி உடையவள் ஆனி 4ந் திகதி நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுச் சிலாப வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டா. அங்கே சிகிச்சை பெற்றுச் சுகமடையவில்லை. உறங்கமுடியவில்லை. தன் செபமாலையை எடுத்துத் தேவதாயிடம் செபித்து அமைதியில் இறைவனடி சேர்ந்தாள்.

அடக்கம் நடந்த நாள் மாலையில் அவளின் இடத்திற்கு அவளின் தங்கை வந்தாள். 6 மாதத்தின் பின்பும் குடும்பத்திலும் ஒரு பெண்குழந்தை பிறந்தது. இது 12ஆவது பிள்ளையாகும். பொதுநிலை ஆசிரியர்கள் மிகவும் பக்தி, விசுவாசம் கொண்டவர்கள். ஒவ்வொரு வருடமும் அவர்களுக்குத் தியானம் நடைபெறும். ஆரம்பநிலையில் இருப்போர் தம் முதற் சம்பளத்தை நல்ல பணிக்காகக் கொடுத்து இறைஆசீர் பெறுவார்கள். அவர்களுள் ஒரு புரட்டஸ்தாந்து பெண் இறை அருளினால் கத்தோலிக்கத்திற் சேர்ந்து சுதேச பாடசாலையில் கத்தோலிக்கரல்லாத சிறுவர்களுக்கு முன்மாதிரிகையாகத் திகழ்ந்தாள். எனவே சகேதரிகள், பங்குக் குரு இவர்களின் தியாக சேவையுடன் பாடசாலை நன்கு முன்னேறியது மூன்று மொழிகளிலும் மாணவர்கள் கல்வி பயின்றனர். மேலும் பங்குக்குரு, 500 ஏழைப்பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலை கட்ட எண்ணியுள்ளார். அன்புக்கன்னியரால் மடத்துக்கு அனுப்பப்படும் பொருட்களை இல்லாதோருடன் பகிர்ந்து கொள்வர். அவ்வாறே ஒவ்வொரு வருடமும் நத்தார் வெகுமதியும் பெற்றோர் பிள்ளைகளுக்குப் பகிரப்படும்.

150 கத்தோலிக்க பிள்ளைகள் வருடாந்த தியானத்தில் பங்கெடுத்தனர். இவர்களுடைய செபத்தின் பயனாக எவாஞ்செலின் என்ற பிள்ளைகத்தோலிக்கத்தில் சேர்ந்தாள். அவளின் தாய் மடுவுக்கு அழைத்துச் சென்று அங்கு சமயம் படித்துத் திருமுழுக்கு, திருவிருந்து பெற்றுக் கொண்டாள். தங்கள் பாடசாலையை ''இயேசுவின் தோட்டம்'' என்று அழைத்தனர். ஓய்வு நேரங்களில் சிப்பிகளால் வரைந்து இயேசுவின் தோட்டத்தின் சொந்தக்காரனென்றும, சின்னத் திரேசம்மாள் தோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்பவள் என்றும், ஆசிரியர்கள் தோட்டக்கருவிகள் என்றும் வகுத்துக் கொண்டனர். ஒவ்வொரு பிள்ளையும் ஒரு பூவாகும் லில்லி, மல்லிகை, றோஸ், ஊதா... இயேசுவின் பார்வையைக் கவர கத்திரிக்கோலை அங்கும் இங்கும் வைத்தனர். சிறிது சிறிதாக அழைத்தல்கள் வரத்தொடங்கின. இளம்பிள்ளைகள் தாராள உள்ளத்துடன் 3 குழுக்களாகப் பிரிந்தனர். மிரியம், திரேசியன், பியன்வெனு இவற்றின் தலைவர்கள் முயற்சியுடன் புண்ணியங்களைச் செய்வார்கள்.

ஐப்பசி 3ந் திகதி புனித. திரேசாளின் பீடத்தில் ஞானப்பூச்செண்டு வைக்கப்பட்டது. பங்குக் கோவிலில் கிறீஸ்து அரசரின் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கிறிஸ்மஸ் தினத்தன்று இந்து சமயத்தவரான மடத்தின் வைத்தியர் ''ஒரு நல்ல கேக்'' அன்பளிப்புச் செய்து அவர்களின் செபஉதவியை நாடினார். சகோதரிகள் வாக்குறுதிகளை எடுத்து மடத்தில் மகிழ்ச்சியோடும் அர்ப்பணிப்போடும் வாழ்வதை அவரால் விளங்க முடியாதிருந்தது. லூர்து கெபியின் நீர் ஒரு நோயாளிக்கு உதவியதால் தலைவியிடம் அந்நீரைப்பெற்றுக் கொண்டு லூர்து மாதாவின் சரித்திரத்தையும் கேட்டு அறிந்து கொண்டார். லூர்து மாதா கெபிக்கு முன்னால் போகும் போது தலைவணங்குவார். அத்துடன் இரவில் நோயாளிகளைப் பார்க்கச் சென்றபோது 2 முறை தேவதாய் தன்னைப் பார்த்துச் சிரித்ததாகக் கூறுகின்றார். இவருக்காகப் பல தியாகங்களும் செபங்களும் செய்து வேண்டிக்கொள்ளுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநாகல் - வகுப்புகள்

ஆங்கில, சிங்கள வகுப்புகளில் மாணவர் தொகை அதிகரிக்கின்றது. 392 மாணவர்களில் 30 பேர் போடிங்கில் உள்ளனர். 1933ம் ஆண்டில் 9பேர் பரீட்சையில் தோற்றிச் சித்திபெற்றனர். 1934ம் ஆண்டில் வேறு 3 பேர் நல்ல புள்ளிகள் பெற்றனர். சங்கீதப் பரீட்சையிலும் நல்ல சித்தி கிடைத்தது. பிள்ளைகள் தம் பாடசாலையை நேசிக்கின்றனர்.

பங்குக் கோவிலுக்கு ஓர் அழகிய சுருவம் தேவைப்பட்டதால் ஆங்கிலப் பாடசாலை மாணவிகள் ஓர் இசைக்கச்சேரி ஒழுங்கு செய்து பணம் சேர்த்து மாதா சுருவம் வாங்கிக் கொடுத்தார்கள் இவர்களுடன் புத்த, புரட்டஸ்தாந்து மாணவிகளும் இணைந்து கொண்டபடியால் தேவதாய் அவர்களையும் ஆசீர்வதிப்பா. பம்பலப்பிட்டி பழைய மாணவியாகிய ஒரு புரட்டஸ்தாந்து ஆசிரியர் திருமுழுக்குப் பெற்று 1933 மார்கழி 8ந் திகதி முதல் நன்மை பெற்றுள்ளா. பெற்றோர் இதனை எதிர்த்துள்ளனர். வேறொரு புரட்டஸ்தாந்து பெண்ணும் மடத்தில் வேலை செய்யும் ஒருவரும் திருமுழுக்குப் பெற்றனர். திருஇருதயநாதர் விழாவில் 28 சிறுவர்கள் முதல்நன்மை பெற்றனர். முதல் நாள் மாலையில் திருமுழுக்குப் பெற்ற மூவரும் 9 அநாதைச் சிறுவரும் இதில் அடங்குவர்.

1934ம் ஆண்டு மார்கழி 8ந் திகதி 14 பிள்ளைகள் முதல் நன்மை பெற்றனர். அவர்களுள் ஒரு பிள்ளை தொற்று நோயால் பீடிக்கப்பட்டு 2 நாட்களின் பின் இறந்துவிட்டா. 4பேர் மடத்திலிருந்து வெளியேறி திருமணம் செய்துள்ளனர். 6 பேர் திருமுழுக்குப் பெற்றனர். இருவர் எம் சகோதரிகளுக்குத் துணையாக நாவலப்பிட்டி வைத்தியசாலையிலும், கழுத்துறை புதிய பாடசாலையிலும் சேர்ந்துள்ளனர். 20 அநாதைப்பிள்ளைகள் ஒரேவேளையில் நோயால் பீடிக்கப்பட்டபோது 4 சகோதரிகள் அவர்களைப் பராமரிக்க வந்து அவர்களையும் மலேரியா தாக்கியது. நகரில் 2 மாதத்தில் 6000 பேர் இறந்துள்ளனர் என்று அறிக்கை கூறுகின்றது.

## குருநாகல் - வைத்தியசாலை

எமது சகோதரிகள் வழக்கமாக 200 நோயாளிகளையே பராமரிப்பார்கள். தொற்று நோய் பரவிய போது 500பேரை ஒரே நேரத்தில் பராமரிக்கவேண்டியிருந்தது. விறாந்தைகளிலும், தென்னோலைக் கொட்டில்களிலும் நோயாளிகள் தங்கினர். இந்த ஏழைகள் மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடின வேலைகளின் காரணமாக எம் சகோதரிகள் காய்ச்சலினால் வருந்திப் பெலவீனமாகக் காணப்பட்டனர். இருவர் தம் உயிரையே கையளித்தனர்.அதேவேளை பலமனமாற்றங்களும் ஏற்பட்டன. 1933ம் ஆண்டு 6422 நோயாளிகள் வைத்தியசாலையில் பராமரிக்கப்பட்டனர். வளர்ந்தோர், சிறுவர் உட்பட 185 பேருக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. 1934ம் ஆண்டு 7516 நோயாளிகள் வைத்தியசாலையில் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். 600 பேர் வெளி நோயாளர்களாகத் தினமும் வந்து மருந்து எடுத்துச் சென்றுள்ளனர். 108 வளர்ந்தோர் உட்பட 348 திருமுழுக்கும், 60 ஒப்புரவு அருட்சாதனமும், 35 முதல் நன்மையும், 25 இறுதி அருட்சாதனங்களும் இடம் பெற்றன. அதிகாரிகள், சகோதரிகள் தியாக சேவையைப் பாராட்டுகின்றனர். 1934ம் ஆண்டு தை 29ந் திகதி மாகாண சத்திர சிகிச்சை நிபுணர், அதிகாரிகள் நடாத்திய கூட்டத்தில் சகோதரி. சென்ற். ''மைக்கேல் பெட்னோட்'' என்பவருக்கு வைத்திய அதிகாரி என்னும் பட்டம் கொடுத்துக் கௌரவிக்கப்பட்டது. 37 வருட சேவை பாராட்டப்பட்டது. எனவே தி. கு. சபைக்கும் இது பெருமை தரும் நிகழ்வாகும்.

சில வருடங்களின் முன் சென்ற். செலஸ்ரீன் ஜேர்ம் தாயாருக்கும் இதே போன்ற பாராட்டு நடைபெற்றது. 1934 முதல் மாதங்களில் அவ நோயுற்றிருந்தா. அவவின் 50 ஆவது யூபிலி விழாவுக்குக் குழு தயார் செய்தது. ஆனி 9ந் திகதி ஆயர் தலைமையில் வைத்தியசாலை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி ஆயர் அவவின் சேவையைப் பாராட்டினார். பலமடங்களின் தலைவிகள், சகோதரிகள் இதில் பங்கேற்றார்கள். அதேவேளை உதவி இயக்குனர் தாயாரும், விக்ரறின் தாயாரும் பொதுச் சங்கத்திற்கு ஐரோப்பாவுக்குச் சென்றபடியால் செபத்தாலும், இதயத்தாலும் இவ் விழாவில் பங்கேற்றனர். இதன் பின்பு செலஸ்ரீன் தாயாரின் சக்தி குறையத் தொடங்கியது. கார்த்திகை 5ந் திகதி இறுதி அருட்சாதனம் அளிக்கப்பட்டது. மார்கழி 11ந் திகதி இறைவனடி சேர்ந்தா. அவ எங்கள் பணிக்கு உதவுகின்றா என்பதைப் பின்வரும் நிகழ்ச்சி எடுத்துரைக்கின்றது.

கடின வியாதியாக இருந்த 2 பிள்ளைகளைத் தந்தை வைத்தியசாலைக்கு அழைத்து வந்தார். தந்தை புத்த மதம், தாய் கத்தோலிக்கம். எனவே அவர்கள் நிலையை எடுத்துக்கூறிப் பிள்ளைகளுக்குத் திழுமுழுக்குக் கொடுக்கப்பட்டது. சிலநாட்களின் பின் தந்தை நோயுற்றிருந்த வேளையில் ஒரு குருவான வரைக்கண்டார். முழந்தாளிலிருந்து அவரிடம் ''சகோதரிகள் பிள்ளைகளைப் பராமரித்ததும், மனைவிக்கு அறிவுரை வழங்கியதும் தன் உள்ளத்தைத் தொட்டபடியால் தானும் கத்தோலிக்க சமயத்தைத் தழுவ விரும்புகிறேன் என்றார். எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குப் படிப்பித்து திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. அதேவேளை திருச்சபையின் திருமணமும் நிறைவேற்றப்பட்டது.

வேறொரு நோயாளி, நானும் என் கணவர், 3 பிள்ளைகளும் கத்தோலிக்க மதத்தில் இருந்தோம். 7 வருடத்தின் முன்பு ஒரு புத்த மதத்தவரை 2 ஆவது திருமணம் செய்து அவரின் மதத்தைப் பின்பற்றினேன் என்றாள். அவளும் தன் பிழையை உணர்ந்து மன்னிப்புக் கேட்டு ஒப்புரவு அருட்சாதனம் பெற்று, தன் பிள்ளைகளுக் குருவிடம் கிறீஸ்தவர்களாக வாழ ஒப்படைத்து அமைதியாக இறந்தாள். மதலேன் என்னும் வேறொரு நோயாளியும் கோவிலுக்குத் தூர வாழ்ந்தபடியால் 11 வருடங்களாக அருட்சாதனங்களைப் பெற முடியவில்லை இறுதியாக குருவானாவரை அழைத்து இறுதி அருட்சாதனம் பெற்று அமைதியாக இறைவனடி சேர்ந்தாள். இன்னும் ஒரு பெண் சாத்தானுக்கு அடிமையாகி வாழ்ந்தவள். 60 வயதுடையவள். காய்ச்சலினால் வருந்தி வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெற்றாள். ஒரு மின்னல் இடி அவளைப் பயமுறுத்தியது. நல்ல இறைவன் என்னுடன் கோபமாயிருக்கிறபடியால் இந்த இடியை அனுப்பினார் என்று பயந்து" உங்கள் கடவுளை எனக்குத் தாருங்கள் என்று திருமுழுக்குப் பெற்று மகிழ்வுடன் இறந்தாள். 60 வயதுடைய கிறீஸ்தவனான ஹென்றி புற்று நோயினால் வருந்தி வைத்தியசாலைக்கு வந்தார். அவர் தன் உண்மை வழியை விட்டு 40 வருடங்களாகப் புத்த சமயத்தில் வாழ்ந்தார். குருவானவரைக் காண விருப்பமா என்று தாதி கேட்டபோது தான் பாவி என்று சொன்னார். நல்ல பிதாவின் திருப்பண்டம் வைத்துச் செபிக்கப்பட்டது. நவநாளின் இறுதியில் குருவைச் சந்தித்து இறுதி அருட்சாதனம் பெற்று புனித. ஹென்றியின் திருநாளில் இறந்தாார்.

நல்ல பிதாவின் வேண்டுதல்கள் வழியாக பல அருளுதவிகள் கிடைத்துள்ளன. குருநாகல் சகோதரியின் சகோதரன் குணமடைந்த நிகழ்ச்சியைத் தருகின்றோம். கார்த்திகை மாதத்தில் இருந்து அவர் சுவாச நோயால் துன்புற்று வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். 40 நாட்கள் தான் இவருக்கு வாழ்வு என்று வைத்தியர் கைவிட்டனர். சகோதரியைப் பார்க்க விரும்பினார். அவ சென்று நல்ல பிதாவின் திருப்பண்டத்தை உடுப்பில் குத்திவிட்டா. நவநாளின் இறுதியில் ஒரு மாற்றம். வைத்தியர் வீடு செல்லலாம் என்றார். மகிழ்வோடு குடும்பத்துடன் சென்றார்.

## நாவலப்பிட்டி - வைத்தியசாலை

தீவில் தொற்று நோயுள்ள பகுதியில் இந்நகரம் அமைந்துள்ளது. நோயாளிகள் எல்லாரையும் தங்கவைக்க இடம் காணாது. 3 அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 நாட்கள் குணப்படுத்திய பின் காய்ச்சலின் தீவிரம் குறைய, அவர்கள் புதிதாக வருபவர்களுக்கு இடமளிக்கின்றனர். ஆனால் அவர்கள் வீடு செல்லும் பொது நல்ல சத்துணவு இன்மையால் மீளவும் சக்தி பெறாது திரும்பு முன் ஓய்வு பெறுவதற்கு ஒரு கட்டிடம் தேவை.

தொற்று நோய் குழந்தைகளையும், இளம் தாய்மாரையும் தாக்கியுள்ளது. திருமுழுக்குப் பெற்றுப் பலர் இறந்துள்ளனர். தீமையில் இருந்து நன்மை செய்யும் இறைவன் இந்த ஏழைகளைப் பராமரிக்கிறார். புத்த மக்கள் சகோதரிகளுக்கு எதிராகக் கிளம்பிய போதும் இறைவன் பாதுகாத்தார். தமது நாளேடுகளில் தற்போது தாதிகளின் தொகை கூடியுள்ளதெனவும் முன்பு 3 பேர் போதியதாக இருந்ததெனவும் எழுதினர். அதிகாரிகள் இதைக் கடுமையாக எதிர்த்துள்ளனர். சகோதரிகளின் தியாக சேவையைப் பாராட்டியுள்ளனர். ஒழுங்குமுறை, பராமரிப்பு, செயலாற்றும் திறமையை சுகாதார அதிகாரி தனது சந்திப்பின் போது புகழ்ந்து கூறினார். நோயாளிகளுக்கு நன்றி கூறத்தெரியாவிடினும் விண்ணகம் சென்றோர் சகோதரிகளின் உதவியினால் தெய்வீக ஒளியைப் பெற்றிருப்பார்கள்.

பல மறைகளையும் பின்பற்றி வாழ்ந்த பீற்றர் என்பவர் இருதய வியாதியினால் வருந்தி வைத்தியசாலைக்கு வந்து குணப்படுத்தமுடியாத நிலைகண்டு தன் பாவ வாழ்க்கைக்காக மனம் வருந்தினார். பின்பு திருக்குடும்பத் திருவிழாவன்று திருவிருந்து பெற்றுச் சில காலத்தின் பின் இறந்தார்.

வேறொரு பெண் இளமையில் கத்தோலிக்கத்தில் இருந்து திருச்சபைக்குத் தூர விலகி விட்டாள். பங்குக் குரு விசாரித்த போது காலம் இருக்கிறது" எனப்பதிலிறுத்தாள். ஆனால் நோய் அவளைத் தாக்கவே அவளைப் பராமரிக்கும் சகோதரி அவள் மனச் சாட்சியைச் சரிப்படுத்தினா. எனவே திருவிருந்து, நோயில் பூசுதல் பெற்றுக் குணமடைந்து நல்ல நிலையில் நிலைத்திருக்கிறாள். கார்த்திகை மாத்தில் ஓர் இளம் தமிழ்ப் பெண் கடும் காய்ச்சலினால் துன்புற்றாள். அவளின் மாமன் ஒரு கத்தோலிக்க நண்பனுடன் வந்து "ஆசீநீர்" கேட்டான். ஒரு போத்தல் நீர் கொடுத்தபோது அதற்குப் பணம் கொடுக்க விரும்பினான். அப்போது அது விற்பதில்லை எனக் கூறினர். நோயாளி அதைப் பருகிய போது அமைதி அடைந்து நித்திரை செய்தான். அடுத்தநாள் எழும்பிச் சுகமாக இருந்தான். சுகப்படுத்த முடியாதென நம்பியிருந்த வைத்தியர் ஆச்சரியமடைந்தார். சில நாட்களின் பின் வீடு திரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மாத இறுதி நாட்களில் ஓர் இளைஞன் வியாதியுற்று இறுதி அருட்சாதனங்களைப் பெற்று மார்கழி மாத முதல் வெள்ளியில் இறந்தான். இயேசுவின் திருஇருதயப் பக்தியுடையவன் இறக்கும் போது தன் தந்தைக்கு ''அழவேண்டாம், நல்ல கிறீஸ்தவனாக வாழ்'' எனக் கூறி உயிர் நீத்தான். தந்தை உடனே தன் பெயரைப் பதிவு செய்து ஒப்புரவு அருட்சாதனம் பெற்று அமலோற்பவ அன்னையின் திருநாளில் திருவிருந்து பெற்றான். 4 வருடங்களாக சமயக் கடமைகளை அனுசரியாது வாழ்ந்து வந்த இவர் மனம் திரும்பினார். அதேகிழமை அடுத்த அறையில் இருந்த புத்த சமய ஓர் இளம் பெண் திருமுழுக்குப் பெற்று மாறிசேவியர் என்னும் பெயருடன் 6 மணித்தியாலங்களின் பின் இறந்தாள்.

வேறொரு தாய் தான் இறந்த பின் தன் பிள்ளைகள் அநாதைகளாகி விடுவார்களெனக் கலங்கினாள். சகோதரி இதைக் கண்ணுற்று தாய் திருமுழுக்குப் பெற சம்மதித்துப் பெற்ற போது புத்த சமய அவள் சகோதரியும் அங்கிருந்தாள். புனித. திரேசாள், நல்ல பிதாவின் உதவியுடன் எல்லாம் நன்கு நடைபெற்றது. சகோதரி நீரை நெற்றியில் ஊற்றும் போது ''நீர், நீர்'' இது என்னை ஆறுதல்படுத்துகிறது எனக் கத்தினாள். மகிழ்ச்சியுடன் ஆன்மா பிரிந்தது, 5அநாதைப் பிள்ளைகளையும் சகோதரியிடம் ஒப்படைத்தாள். 6வது குழந்தை திருமுழுக்குடையுடன் சில மணித்தியாலங்களின் பின் இறைவனடி சேர்ந்தது.

| | | | |
|---|---|---|---|
| திருமுழுக்கு | 1933: | 145 | (68 வளர்ந்தோர்) |
| | 1934: | 123 | (46 வளந்தோர்) |

| | | | | |
|---|---|---|---|---|
| பச்சாத்தாபம் | 1933 | 56 | - நற்கருணை - | 40 |
| | 1934 | 63 | - நற்கருணை - | 52 |

## டலுகம Dalu Gama சுதேச பாடசாலை 24 - 10 - 1933

தேவதாயினதும், றவ்வாயேல் தூதரினதும் பாதுகாப்பை வேண்டிய பின் வென்னாப்புவா சுதேச சகோதரிகள் நால்வர் தமக்கு உதவி செய்யும் பெண்களுடனும் 3 ஐரோப்பிய சகோதரிகளின் துணையுடனும் புறப்பட்டனர். 2 காரில் சென்றபடியால் 45 கிலோமீற்றர் தூரத்தை 1 1/2 மணித்தியாலத்தில் கடக்க நேர்ந்தது மாட்டு வண்டி வழியாகச் சென்றிருந்தால் ஒரு நாள் எடுத்திருக்கும் 10 1/2 மணிக்கு அங்கு செல்ல வேண்டி இருந்தது. திடீரென ஒரு திருப்பத்தில் ஓர் ஆலயமும் மக்கள் திரளும் காணப்பட்டன. இதுவே ''டலுகம'' என்னும் இடமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் எமது வரவை அறிவித்ததும் சனத்திரள் எம்மை நோக்கி வந்தன. ஆலயமணிகள் ஆர்ப்பரித்தன. பட்டாஸ் வெடிகள் வெடித்தன. இசைவாத்தியங்கள் இசைக்க மேளங்கள் முழங்கின.

வாகனங்கள் மெதுவாகச் சென்றன. எல்லோருடைய கண்களும் சகோதரிகளை நோக்கிய வண்ணமாக இருந்தன. குருவானவர் மக்களின் மத்தியில் வந்து எமக்கு நல்வரவு கூறி எம் சகோதரிகளே நான் உங்களுக்குக் கூறுவதை நன்றாகச் செய்யுங்கள் என்று எல்லோர் பேராலும் சொன்னார். நாம் அதற்குப் பணிவோம் எனவும் இதன் மூலம் சபைக்குப் பெருமை தேடிக் கொடுத்து, எம் சபையின் பிரதிகளாக இருப்போம் எனத் தீர்மானம் எடுத்தோம். அருட்தந்தை தோமஸ் என்பவர் மக்களை ஆலயத்தினுள் செல்லுமாறு பணித்தார். வேறொரு அ.ம.தி. குருவானவர் நாம் உள்ளே செல்ல வழி சமைத்தார். ஆலயம் மக்களால் நிரம்பி வழிந்தது. நாம் பலிபீடத்தின் முன் அரைவட்டமாக முழந்தாள் படியிட்டு இருக்கக் குருவானவர் புன்முகத்துடன் வாருங்கள் ''மடத்திற்குச் செல்வோம்'' என்றார். ''பான்ட் வாத்திய இசையுடன் நாம் பின் சென்றோம். சிறுவர்கள் எம் பாதையில் முண்டியடித்தனர். தாய்மார் தம் குழந்தைகளுடன் எம் முன்னே வந்தனர். தாழ்மையுடன் துறவிகளாக உணர்ந்தாலும் அதேவேளை ஒன்றுமில்லாத் தன்மையை அனுபவித்தோம்.

ஒரு புதிய கட்டிடம் தெரிந்தது. முன்னே ''புனித திரேசாள் மடம்'' எனவும் எழுதியிருந்தது. ஒரு கூட்டில் புனித திரேசாளின் சுருவம் இரந்தது. அருட்தந்தை தோமஸ் திறப்பைக் கதவில் போட்டுத் திறந்தபின் முதற் சகோதரியிடம் திறப்பைக் கொடுத்தார். இசையுடன் மடத்தைச் சுற்றிப் பார்த்தோம். எல்லா அறைகளிலும் தளவாடங்கள் காணப்பட்டன. வீட்டைச் சுற்றி வர மதில் போடப்பட்டிருக்கின்றது. பொருட்கள் சேமிக்கப்பட்டிருந்தன. ''டலுகம'' இடத்தில் வறுமை இல்லை சகோதரிகளுக்கு மிகவும் பிடித்த இடம் ஆலயமாகும். யன்னல் கண்ணாடியில் இயேசுவின் ஆசீர்வதிக்கும் படம் காணப்பட்டது. அத்துடன் புனித. திரேசாளின் சுருவமும் வைக்கப்பட்டிருந்தது. 12 மணிக்கு ஆலயத்தில் மணி ஒலிக்கவே பெரியோர், சிறியோர் எல்லோருமே மூவேளைச் செபம் சொன்னார்கள். பின்பு மக்களை அனுப்பிவிட்டு மடத்தின் நன்கொடையாளரைக் குருவானவர் எமக்குக் காண்பித்தார். ஒரு வயோதிபப் பெண்ணின் 11 சகோதர சகோதரிகள் இறந்து விடவே தன் சொத்தக்களை நற்பணிக்குக் கொடுத்து உதவுகிறார். சமயலறையில் ஒரு குடும்பத்தின் பிள்ளைகள் உணவு தயாரித்தனர். ஒரு புதிய வெள்ளைத் துணிவிரிக்கப்பட 19 தட்டுகளில் விதம் விதமான உணவு வகைகள் பரிமாறப்பட்டன. பார்ப்பதற்கு மிகவும் அழாகாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. மிளகு, மிளகாயும் சேர்க்கப்பட்டிருந்தன. பிள்ளைகளுக்கு லீவு கொடுக்கப்பட்டபடியால் வகுப்பு அறைகளில் சூழநின்றனர். கருமையான கண்கள் சகோதரிகளின் உடை, தலைத்துகிலைத் (Veil) தொடமுயன்றனர். ஒரு பிள்ளை சகோதரி ஒருவரின் கையைத் தொட்டு நிறம்மாறவில்லை என்றாள். 3 ஆசிரியர்கள் சகோதரிகள் வருகை தந்தது மகிழ்ச்சி என்றனர். ஒருவர் தான் குறைந்த சம்பளம் பெற்றாலும் பணத்தை நற்பணிகளுக்காகக் கொடுக்கின்றா. இந்த ஆசிரியை வருகிற வருடம் வென்னாப்புவா நவகன்னிகை இல்லத்திற்குச் செல்வாள்.

அவளின் முன்மாதிரிகை இன்னும் தொடரும் என்று கூறி அழைத்தலுக்கு உதவி செய்வதாக குருவானவர் வாக்களித்தார். அத்துடன் தன் சகோதரக் குருக்களுக்கும் கூறி அயல் கிராமத்தில் திருக்குடும்ப மடங்களைத் தொடங்க உதவுவதாகச் சொன்னார்.

**களுத்துறை** **தை 8 - 1934**

**ஆங்கில பாடசாலை**

கொழும்பில் இருந்து 25 மைல் தூரத்தில் கொழும்பு - காலி பிரதான வீதியில் கடற்கரையோரத்தில் சுகாதார வசதியுள்ள சிறிய நகர் தான் களுத்துறை. இத ஒரு புத்த மத இடமாயினும் அ.ம.திக். குருக்களுக்குத் துணையாக எம் சகோதரிகள் பணியாற்றுகின்றனர். ஒரு சிறிய மேட்டுப் பகுதியில் கத்தோலிக்க பணித்தளம் அமைந்துள்ளது. அத்துடன் ஒரு லூர்து கெபியும் உள்ளது. மாதாவின் பரிந்துரையால் புதுமையாகக் குணமடைந்ததற்கு நன்றியாக பிரான்சிய அ.ம.திக. குரு ஹெறல் (Herel) என்பவரால் கட்டப்பட்டது. அவர் கடும் நோய்வாய்ப்பட்டுக் களுத்துறையில் இருந்து கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். வைத்தியார் கைவிட்டநிலையில் தான் குணம் பெற்றால் மசபியேல் ஒன்றை இங்கும் கட்டுவதாக வாக்குப் பண்ணினார். வைத்தியருக்குப் பெரிய ஆச்சரியம் மன்றாட்டு அருளப்பட்டது. தன் வாக்குரைப்படி மேட்டுப் பகுதியின் உச்சியில் காடுகளின் நடுவே ஆற்று நீர் உள்ள ஓரிடத்தில் கெபியைக் கட்டி 1909ம் ஆண்டு மார்கழி 8ந் திகதி ஆசீர்வதிக்கப்பட்டது. ஆற்றிலிருந்து வரும் நீர் பிரான்சில் உள்ள காவ் (cave) ஆற்றை ஒத்ததாக இருந்தது. அன்று மாலை அங்கு ''ஆவேமரியா'' பாடிக்கொண்டு விளக்கொளியுடன் முதற் பவனி நடைபெற்றது. அதன் பின் பலமுறை பவனிகள் நடைபெற்றன.

அருட்தந்தை ஹெறல் அவர்களின் ஆர்வம் இத்துடன் முடியவில்லை. அப்போது அங்கு 2 ஆங்கில பாடசாலைகளில் 42 மாணவர்கள் இருந்தனர். அவர் அதை 2,3 மடங்காகப் பெருப்பித்தார். ஆரம்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையாக்கினார். ஆயர் அவர்கள் பலமுறை திருக்குடும்பச் சகோதரிகளின் வழிகாட்டலுக்கு இளம் பெண்களை நெறிப்படுத்தினார். 1934ம் ஆண்டு தை மாதம் 8ந் திகதி ஆயரின் விருப்பத்திற்குப் பதிலிறுக்க முடிந்தது. பம்பலப்பிட்டியா மடத்தில் இருந்த உதவி இயக்குநர் தாயாருடன் 4 சகோதரிகள் களுத்துறை நோக்கிப் பயணமானார்கள் அங்கு பங்குக் குரு அருட்தந்தை பேர்பறிஸ் (Pere Paris) எதிர் நோக்கியிருந்தார். அவருடன் அவரின் உதவிக்குரு திருச் சிலுவைக் கல்லூரி அதிபர் தந்தை சோலியு (R.P. Challieu) அவர்களும் வரவேற்புக் கூறினார்கள். பங்குத் தந்தை அந்த சிறிய வீட்டை ஆசீர்வதித்தார். பெரிய மடம் கட்டும் வரையும் அதிலே அவர்கள் தங்குவார்கள்.

லீவு நாட்களின் பின் தை 15ந் திகதி கல்லூரி 300 மாணவர்களுடன் ஆரம்பமானது. சகோதரிகள் நேசறிப்பிள்ளைகளையும் இளம் பெண்கள் பிரிவையும் எடுத்துப் பணியாற்றினர். பெரும்பாலான ஆசிரியர்கள், மாணவர்கள் புத்த மதத்தினர். எனினும் சில ஆன்மாக்களையாவது இறைவனுக்கு எடுக்கலாமென சகோதரிகள் நம்பினர்.

ஒரு மாதத்தின் பின்பு மாசி 11ந் திகதி களுத்துறை லூர்து கெபியில் வெள்ளி விழா நடைபெற்றது. அதற்கு யாத்திரிகள் பலர் வருகை தந்திருந்தனர். மார்க ஆண்டகை வழிபாடுகளுக்குத் தலைமை தாங்கி நடாத்தினார் முதல் நாள் மாலை வழிபாட்டுக்கு ஆயர் வந்திருந்தார். அருட்தந்தை ஹெறல் என்பவரால் மறைஉரை வழங்கப்பட்டது. நற்கருணை ஆசீரும், மெழுகுதிரிப்பவனியும், அமலஉற்பவத்தாயின் மாலை வழிபாட்டை நிறைவு செய்தது.

மறுநாள் திருப்பலி 5 மணிக்கே ஆரம்பமாகித் தொடர்ந்து பல திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டது. ஆயர் ஆடம்பர பாடற் பூசை நிறைவேற்றினார். அருட்தந்தை சில்வா மறையுரை ஆற்றினார். இறுதியில் நற்கருணை ஆசீர்வாதத்துடன் முடிவுற்றது. மாலையில் ஆயர் 4 சகோதரிகளையும் சந்திக்க வந்தார். அதேநாளில் லியோனித் தாயாரும் வந்தார். தந்தை சோலியு ஆயருக்கு துணையாக வந்தார். சகோதரிகள் வந்த பின்பு இளம் பெண்களில் ஒரு முன்னேற்றம் காணப்படுவதை ஆயர் எடுத்துக் கூற விரும்பினார்.

ஆடி 2ந் திகதி 20 சிறுவர்கள் முதல் நன்மை பெற்றனர். ஐப்பசி 2ந் திகதி கல்லூரி கத்தோலிக்க மாணவரின் தியானம் நடைபெற்றது. இந்தப் பக்தி முயற்சிகளினால் நல்ல பலன் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை - கொழும்பு - பம்பலப்பிட்டி

சபைத்தலைவர் அருட்தந்தை லபோறே இலங்கைக்குழுக்களைத் தரிசித்தது. நாம் பெற்றுக் கொண்ட அருளாகும். எல்லா மடமும் இவரின் தரிசிப்புப் பற்றி அறிக்கை தருகின்றது. அவரின் செயலாளர் தந்தை திறேபோலுடன் (Rev. P. Trebaol) 1937ம் ஆண்டு தைமாதம் 20ந் திகதி புறப்பட்டு மாசி 7ந் திகதி கொழும்பு வந்தடைந்தார். அன்று மாலை எல்லா அ.ம.தி. குருக்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. சிலர் அவர்களை வரவேற்கத் துறைமுகம் சென்றனர். சிலர் தம் இடங்களில் காத்திருந்தனர். எம்மடத்தின் முன்பாகச் செல்லும் போது தரிசித்து எம்டத்திற்கு வந்தார். உடனே மணி அடிக்க எல்லாச் சகோதரிகளும் ஒன்றுகூடினர். தான் இன்னமும் பங்குமனைக்குப் போகாதபடியால் மறுநாள் திருப்பலி நிறைவேற்ற வருகின்றேன். என்று கூறி மறுநாள் மாசி 8ந் திகதி மடத்துச் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்ற வந்தார். எம் நல்ல பிதாவின் மரித்த நாளாகையால் அவரின் பிரதி நிதியாக அவரைப் பார்த்தோம். 5 சகோதரிகள் அவர் முன்பாகத் தம் முதல் வார்த்தைப்பாட்டைப் புதுப்பித்தனர். 3 முறை எம்மடத்தில் காலைத்திருப்பலி நிறைவேற்றியபின் இலங்கையின் வடபகுதிக்குச் சென்றார். அங்கு அ.ம.தி. குருக்களையும் தி.கு. சகோதரிகளையும் சந்தித்து வந்தார்.

வைகாசி மாத முடிவில் கொழும்புக்கு வந்தார். எமது 750 மாணவர்கள் அவரை ஆடம்பரமாக வரவேற்றனர். தேவதாயின் நீலநிற உடை அணிந்து வரவேற்புப் பாடல் இசைத்தனர். கவிதை, பாடல்கள், உடற்பயிற்சி என்பன இடம்பெற்றன. பாப்புவின் கீதம் பாடப்பட்டபின் அவர் பிள்ளைகளுக்கு நன்றி கூறி உரையாற்றினார்.

திருக்குடும்பச் சகோதரிகளினால் நடத்தப்படும் பாடசாலைகளின் கலை நிகழ்ச்சிகள் வேறு இடங்களிலும் பார்க்க நன்கு நடைபெறுகின்றன. என்ன வேலையாக இருந்தாலும் அரைகுறையாகச் செய்யாது முழுமையாகச் செய்ய வேண்டும். நீங்களும் இந்த நன்மாதிரிகையைப் பின்பற்ற வேண்டும். பாடசாலையை விட்டுச் சென்றாலும் இந்த அழகிய இலங்கையில் இருக்கும் போது எமது புனித. மறையைப் பின்பற்றுவதிலும், நன்முன்மாதிரிகையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வதிலும் முன்னிற்க வெண்டும். உங்கள் குருக்கள், சகோதரிகள் தூரநாட்டில் இருந்து தம் குடும்பம், நாட்டைத் துறந்து இறை அன்பிற்காகவும், உங்கள் ஆன்ம மீட்பிற்காகவும் இங்கு வந்துள்ளனர். இவர்களின் தியாகத்திற்கு நன்றி உடையவர்களாக இருங்கள். நீங்கள் நல்ல கிறீஸ்தவர்களாக வாழ அவர்கள் முயற்சிக்கின்றனர். இளம் பெண்கள் சமுதாயத்திற்கும், குடும்பத்திற்கும் பெருமைதரக் கூடியவர்கள் என்றார். பலத்த கரகோஷமானது அவரது உரை அவர்களின் உள்ளத்தைத் தொட்டது என்பதைக் காட்டியது. 750 பிள்ளைகளுக்கும் அ.ம.தி. குருக்கள் பரிசில் வழங்கினர். பின்பு வகுப்புகளையும் மடத்தையும் தரிசித்தார். இந்தக் குருவானவர். தி.கு. சபையை நேசிக்கிறார். எமது ஆசிரியர் மட்டில் பெருமைப்பட்டார். என்று கூறி மாணவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

புனித. லூயி. டிகொன்சாக் திருவிழா, வருடாந்த தியான முடிவு எம் தாயார் கொன்சாக் டிமாறியின் பொன் யூபிலிக்கு சபைத் தலைவர் தலைமை தாங்கினார். எம் விருதுவாக்காகிய மரியாயின் மூலமாகவும், சூசையப்பர் மூலமாகவும் இறைவனுக்கு மாத்திரமே மகிமை என்பதை விளக்கினார். ஒழுங்குப்புத்தகத்தில் உள்ள எல்லாவற்றிலும் ''இறைவன் மாத்திரமே'' என்பதைக் கூறி நசரேத்தில் திருக்குடும்பத்தின் முன்மாதிரிகையைப் பின்பற்றும்படி கூறினார். உங்கள் கல்விப் பணியின் கடமையானது உங்கள் அழைத்தலின உண்மையான இலக்கை அடைய உதவுகின்றது. அதாவது எம்மைப் புனிதப்படுத்துவதும் மற்றும் ஆன்மாக்களின் மீட்புக்கு உதவுவதுமாகும். இன்னும் உங்கள் மாணவரில் பிற சமயத்தவரைக் காண்கிறீர்கள். அவர்களும் உங்கள் ஆர்வம் மிகும் முயற்சியினால் உண்மை ஒளியைப் பெறுவார்களாக! உலகிலே மனித விஞ்ஞானத்தைப் படிப்பிக்கப் பலர் உள்ளனர். நீங்கள் தெய்வீக உண்மைகளைப் படிப்பித்து அதன்படி நடக்க வேண்டும்.

இன்று உங்கள் முதல் அர்ப்பணத்தைப் புதுப்பிக்கும் போது உங்கள் ஊக்கத்தை உறுதிப்படுத்துங்கள். உங்கள் அழைத்தலுக்குரிய நல்ல அறிவைத்தர தெய்வீக எஜமானை மன்றாடுங்கள் தாராள மனத்துடன் பணிபுரியுங்கள். உங்களையே மறந்து இறைவனுக்காகச் செயற்படுங்கள். இதுவே உங்கள் நல்லபிதாவின் விருப்பம். அவரின் பெயரால் அதனையே நானும் இயேசு மரி சூசை மகிமைக்காக விரும்புகிறேன். திருவிருந்தின் பொது 5 பேர் நித்திய அர்ப்பணம் செய்தனர். தியானம் செய்தோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணத்தைப் புதுப்பித்தனர். அதைத் தொடர்ந்து குருவின் தலைமையில் ஒரு ஒன்றுகூடல் நடைபெற்றது. 5 பேரும் தம் கணையாழியைப் பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து தீர்மானங்கள் கொடுக்கப்பட்டது.

மாதாவின் விண்ணேற்பு நாளின் முதல் நாள் 2 விழாக்களை மறுநாள் நினைத்தோம். ஒன்று மாதாவின் விழா, மற்றது எம் நல்ல தாயார் கொன்சாய்க டிமாறியின் 50 ஆவது அர்ப்பண யூபிலி விழா, சபைத் தலைவரால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் சபைத் தலைவர் தாயாரின் அலங்கரித்த போட்டோவுககு வணக்கம் தெரிவித்து "Ad Multos Anos" என்று கூறி வாழ்த்த, அது எங்கும் எதிரொலித்தது, சபைத் தலைவர் எமக்கு போர்டோ பற்றியும், நம் தாயார் சந்தித்த மடங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

புரட்டாதி 5ந் திகதி கப்பல் பிரயாணத்திற்கு முதல் நாள் பிரியாவிடைகூற எம் குழுவிற்கு வந்தார். என் ஆசியாப் பயணத்தையிட்டு மகிழ்வடைகிறேன். இறுதித் திருப்பலியையும் இங்கேயே நிறைவேற்றுகிறேன். பிரான்ஸ் திரும்பியதும் இலங்கைச் சகோதரிகள் செய்யும் நன்மைகளை உங்கள் நல்ல தாயாருக்கு எடுத்துரைப்பேன். வேறு சபைகள் போக முடியாத இடங்களுக்குத் தி.கு. சபையினர் சென்றதை அறிந்து மகிழ்கிறேன். இதன் வழியாக ''இறைவன் மாத்திரமே'' என்னும் வாழும் நிலையைக் காணமுடிகின்றது. இதையே உங்கள் நல்ல பிதாவும் விரும்பினார். தினமும் புனித. திருப்பலியில் அ.ம.தி. குருக்களுக்குச் செபிப்பது போல் தி.கு. சகோதரிகளுக்கும் செபிக்கிறேன். 2 ஸ்தாபகரும் ஒரு நாளில் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டால் எம் விழா இரட்டிப்பான மகிழ்ச்சி தரும் இந்த மகிழ்ச்சியின் மத்தியில் ஆயர் மார்க் ஆண்டகையின் மரணச் செய்தி கிடைத்தது. அவர் தனது சுகநலனுக்காகப் பரீஸ் சென்றவர் அங்கேயே இறந்து விட்டார். திருஇருதய விழாவன்று மாலை இது நடைபெற்றது. இத்துக்க செய்தி இலங்கைத் தீவுக்கும், சிறப்பாகக் கொழும்புக்கும் துயரை அளித்தது. அருட்தந்தை மாசோன் உதவியாளராக நியமிக்கப்பட்டார். ஒரு வருடத்தின் பின் அப்போஸ்தலிக்க பிரதிநிதி புதிய ஆயரைத் திருநிலைப்படுத்தினார். 5 ஆயர்கள் ஏறக்குறைய 500 குருக்கள், குருமட மாணவர்கள் சமுகமாயிருந்தனர். பேராலயத்தில் இலங்கை ஆளுநர் பிரதிநிதி, கொழும்பு மேயர் அவர் ஆலோசகர்கள் காணப்பட்டனர். கத்தோலிக்கர், கத்தோலிக்கரல்லாதோர் திரண்டிருந்தனர். மறுநாள் ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசோன் ஆண்டகை பம்பலப்பிட்டி மடத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.

1937ம் ஆண்டு 38 சிறுவர் சிறுமிகளுக்கு முதல் நன்மை வழங்கப்பட்டது. 1938ம் ஆண்டு 34 பேர் பெற்றுக் கொண்டனர். பெற்றோரும் பிள்ளைகளுடன் சேர்ந்து திருப்பலி நிறைவேறிய பின் அலங்கரிக்கப்பட்ட பாலர் பாடசாலையில் காலை உணவை அருந்தி மகிழ்ந்தனர். வருடாந்த தியானத்தின் போது வயதான மாணவர்கள் நீர்கொழும்பில் ஒரு நேசறிக் கட்டிடம் ஆரம்பிக்கப்படுவதை அறிந்து மகிழ்ச்சியடைந்தனர். ஒவ்வொருவரும் ஒரு குழந்தையைச் சுவீகரித்துத் தம் தியாகத்தினால் அவர்களுக்குத் தேவையான உடுப்புகள், துணி வாங்கி அனுப்பினர். திருமுழுக்கின் பின் சிலர் இறந்ததையிட்டுக் கவலையடைந்தனர். எங்கள் திருமறையில் சேரவிரும்புபவர்களுக்கு ஒரு சகோதரி படிப்பித்து வருகின்றா. சகோதரிகள் கல்விப் பணியை நிறைவாகச் செய்வதால் பரீட்சை முடிவுகளும் சிறந்து விளங்குகின்றன. பம்பலப்பிட்டிக் கல்லூரி இலங்கையில் முதல் இடம்வகிக்கின்றது. பிரான்சிய மொழிப் படிப்பிலும் வெற்றி என்பதை பிரான்ஸ் தூதரகம் இலங்கைக்கு அனுப்பிய கடிதத்தில் இருந்த அறிந்த கொள்ளலாம்.

## கொழும்பு - தெகிவளை

சென்ற தை மாதத்தில் பல புதிய மாணவர்கள் சேர்க்கப்பட்டதால் இப்பாடசாலையில் மாணவர்தொகை அதிகரிக்கின்றது. எல்லோரும் கத்தோலிக்க மாணவர்கள். பரீட்சை செய்த மாணவர்கள் நல்ல சித்தி பெற்றுள்ளனர். பாடசாலை அதிகாரிகள் பாடசாலையைப் பாராட்டினர்.

33 சிறுவர்கள் முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்யப்பட்டனர். அதில் 2 புரட்டஸ்தாந்து சிறுமிகளும் அடங்குவர். இவ்வழிபாட்டிற்குப் பலர் வந்திருந்தனர். திருப்பலிவேளையில் சிறுவர்களின் குரல் கேட்டது. மாலையில் தம் திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்து உத்தரியமும் பெற்றுக் கொண்டனர்.

நற்கருணைத் திருநாளில் வழமை போல் நற்கருணைப் பவனி இடம் பெற்றது. தெகிவளை, கல்கிசைப் பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் பவனியில் பங்கெடுத்தனர். மறைமாவட்ட அதிகாரிகளினால் ஒரு புதிய பங்குப் பணிமனையின் தேவை உணரப்பட்டது. அதற்கு நிதி உதவி செய்ய மாணவர்கள் ஒரு கலைநிகழ்ச்சியை ஒழுங்கு செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிபெருக்கியில் பங்குத் தந்தை இவர்களுக்கு நன்றி கூறி "இக்கலைநிகழ்ச்சியானது பாடசாலைக்குப் பெருமை தந்தது" என்றார்.

## களுத்துறை

தெகிவளை போன்று இப்பணித்தளமும் பம்பலப்பிட்டியைச் சேர்ந்தது. தொடக்கத்தில் ஒரு வீட்டில் வாடகைக்கு இருந்தாலும் பின்பு கட்டிய மடத்தில் சித்திரை 22ந் திகதி வாழத் தொடங்கினர். அந்நாள் கொன்சாய்க் டிமாறித் தாயார். தெரிவு செய்யப்பட்ட நாளும், லியோனித் தாயாரின் பாதுகாவலர் திருநாளுமாகும். தற்போது ஆண்கள் பாடசாலை பிரிக்கப்பட்டு அ.ம.தி. குருக்கள் படிப்பிக்கின்றனர்.

ஆயர் மார்க் ஆண்டகை சுகவீனமாக பிரான்சில் இருந்தபடியால் உதவிப்பிரதிநிதி அருட்தந்தை மசோன் (Masson) கட்டிடத்தை ஆடம்பரமாக ஆசீர்வதித்தார். அருட்தந்தையர்கள் பெறோட் (Perrot) மசோறல், மேலும் 8 அ.ம.தி. குருக்கள் சமுகமளித்தனர். பம்பலப்பிட்டி மடத்துச் சகோதரிகள் பலரும் இதில் பங்கேற்று நன்றி கூறினார். அருட்தந்தை சோலியு கல்லூரி முதல்வர் வைகாசி 6ந் திகதி சிலுவைப் பாதை அமைத்து ஆனி 1ம் திகதி முதற் திருப்பலியும் 21ந் திகதி எம் நல்ல தாயாரின் கருத்துக்காக 2ம் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது. புனித. லூயிடெகொன்சாய்க திருநாளன்று பரீசில் ஆயர்மார்க ஆண்டகை இறந்த செய்தியறிந்து துன்புற்றோம். அ.ம.தி. குருக்களும், தி.கு. சகோதரிகளும், கொழும்பு மறைமாவட்டமும் இதை வெகுவாக உணர்ந்தார்கள். பங்குக் கோவிலில் அவருக்காகத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

ஆவணி மாதம் 2ந் திகதி சம்மனசுகளின் இராக்கினி திருநாளன்று சபைத் தலைவர் எம்மைச் சந்திக்க வந்தார். மறுநாள் எம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி எம்மை ஆசீர்வதித்தார். எமது குழு, கல்விப் பணி ஆசிரியர்களையும் நன்கு பாராட்டி ஊக்கப்படுத்தினார். புரட்டாதி 4ந் திகதி சபைத் தலைவர் கொழும்பில் இருந்தபடியால் திருப்பலி நிறைவேற்றி தான் ஐரோப்பா செல்ல விருப்பதால் நாம் பிரியா விடை கூறினோம். அவரின் இறுதி அறிவுரையைக் கவனமுடனும் நன்றியுள்ளத்துடனும் கேட்டோம். 1938ம் ஆண்டு ஆனி 16ந் திகதி மாசோன் O.M.I ஆண்டகை புதிய ஆயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐப்பசி 28ம் திகதி களுத்துறைக்கு வந்து புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தை ஆசீர்வதித்தார். நகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையினர் இனமத பேதமின்றி (புத்த, முஸ்லிம்) அவரை வரவேற்றனர். எங்கள் பணி அபிவிருத்தியையும், புத்த, முஸ்லிம் மக்கள் எமது பாடசாலையைப் புகழ்ந்து கூறுவதையும் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்.

## குருநாகல் வகுப்புகள்

சபைத் தலைவர் 3 நாள் எம்முடன் செலவிட்ட ஆறுதலுடன் மார்க் ஆண்டவரின் மரணத் துன்பமும் எங்களை ஆட்கொண்டது. கொழும்பு அதிமேற்றிராணியாராக நியமிக்க முன் பல வருடங்களாகக் குருநாகல் பங்குக் குருவாகவும் இருந்தார். கத்தோலிக்கர், இதரமதத்தினர் அவரது அன்பை உணர்ந்து பிரிவுக்காக வருந்தினர். பாடசாலைகள் மூடப்பட்டன. பங்குக் கோவிலில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. புத்தமதத்தவரும் இதில் இணைந்தனர்.

ஆயர் மாசோன் குருநாகலுக்கு வந்தபோது ஆலயத்தில் மக்களின் வரவேற்பை ஏற்றுக் கொண்டார். பரிசளிப்பு விழாவுக்கும் ஆயர் தலைமை வகித்தார். ஆங்கிலப் பாடசாலை மாணவர்கள் கலைநிகழ்ச்சிகளை நடாத்தினார்கள். பாடசாலை அறிக்கையை புனித. சூசையப்பர் கல்லூரி அதிபர் அருட்தந்தை Legoc O.M.I. அவர்களால் வாசிக்கப்பட்டது.

ஆங்கில, சிங்களப் பாடசாலையில் இருந்து 60 பிள்ளைகள் முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்யப்பட்டனர். மரியாளின் பிள்ளைகள் சபையில் 29 பேர் உள்ளனர். நகரப் பெண்கள் ஏழைகளின் நலனுக்காக உழைக்கின்றனர். கிறிஸ்மஸ் மரம் ஏழைகளின் தேவை நோக்கி ஆயத்தம் செய்யப்பட்டு தேவையில் உள்ளோர்க்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. சில ஆன்மாக்கள் திருமுழுக்குப் பெற்றுத் தீய வழியை விட்டு இறைவனிடம் திரும்புகின்றனர்.

ஒரு புத்த ஏழை மனிதன் கடும் நோயுற்று வைத்தியசாலையில் துன்புற்றான். தன்பிள்ளைகளை யாரிடமாவது ஒப்படைத்துச் சாக வேண்டுமென்று விரும்பி வைத்தியரின் மனைவியிடம் கூறினான். நான் அவர்களைப் பொறுப்பெடுக்கிறேன். கவலைப்பட வேண்டாமென்று இந்த நல்ல கத்தோலிக்கப் பெண் கூறினாள். இந்த உதவியுடன் அவன் இறந்தவிட்டான். 2 சிறுவர்கள் எமது அநாதை இல்லத்தில் சேர்க்கப்பட்டனர். மூத்த பிள்ளையும் விரும்பியபடியால் திருமுழுக்குப் பெற்று இவர்களுடன் வந்து சேர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1936ம் ஆண்டு மலேரியாக் காய்ச்சல் பரவிப் பலர் இறந்தனர். பெற்றோரை இழந்த பிள்ளைகள் ''மலேரியா அநாதைகள்'' என்னும் பெயரில் அரசு இவர்களைப் பல இடங்களில் சேர்த்தது. மடத்திலும் இரு பிள்ளைகள் சேர்க்கப்பட்டனர். பெண்பிள்ளை எமது மடத்தில் திருமுழுக்குப் பெற்றாள். சிறுவன் அருட்தந்தை பெறோவுடன் மகோனா அநாதை இல்லத்தில் சேர்க்கப்பட்டான். ஆனி 21ந் திகதி 2 புத்த பிள்ளைகள் வந்து சேர்ந்தனர். அவர்களின் ஞானப் பெற்றோர் பிரான்சில் இருந்தபடியால் அவர்களின் விருப்பப்படி திருமுழக்குப் பெற்று மறியா, அலோசியா என்னும் பெயர் பெற்றனர். 3 பெரிய அநாதைப் பிள்ளைகள் கிறீஸ்தவ குடும்பங்களை உருவாக்கியுள்ளனர். நகரில் இருந்த ஒரு புத்த சமயப் பெண் திருமுழுக்குப் பெற்று திரும்பவும் அனுசரிக்காது 10 வருடங்களின் பின் கடும் நோயுற்றாள். அவள் கணவனும் அவள் விசுவாசத்தைக் காப்பாற்ற விரும்பினான். அவள் சுகம் பெற்றதும் மறுத்து விட்டாள். ஒருநாள் அவள் மடத்திற்கு வந்த போது அவளின் வாக்குறுதியை நினைவுபடுத்தி நல்ல பிதாவின் சுத்தமானவஸ்து அணியப்பட்டது. ஓர் இரவு திருப்பண்டத்தைக் காணவில்லை. பலவாறு சோதிக்கப்பட்டாள். பின்பு ஒப்புரவு அருட்சாதனம் பெற்று கார்த்திகை 21ந் திகதி திருவிருந்தும் பெற்றுக் கொண்டாள். அன்றிருந்து முழுக்குடும்பமும் கத்தோலிக்க மறையைப் பின்பற்றி வருகின்றனர்.

1938ம் அண்டு எம் பணித்தளத்தில் இருவர் இறந்தனர். அருட்தந்தை பரீஸ் OMI வைகாசி 12ந் திகதியும், எம்மடத்துத் தாயார் மாறி. விக்றறின் கார்த்திகை 1ம் திகதியும் இறந்துவிட்டனர். விக்றறின் தாயார் தனது மரணம் பற்றி அடிக்கடி கூறுவார். இறுதி அருட்சாதனம் பெற வைத்தியரைக் கேட்டபோது அவசரமில்லை என்றார். குழுச் சகோதரிகள் இவ குணமடைவா என நம்பினர். ஆனால் கார்த்திகை 1ம் திகதி அருட்தந்தை கோர்லிசோன் (Goraichon) வந்து நற்கருணை கொடுத்தார். சற்று நேரத்தில் இறந்து விட்டா. 1891ல் சபையில் சேர்ந்து 1893ல் இலங்கைக்கு வந்து 1905ல் யாழ்மடம், 1933ல் குருநாகல் மடத்துக்கு வந்தா ஆங்கிலம், தமிழ், சிங்களம் படித்தா.

## குருநாகல் வைத்தியசாலை

ஆனி 16ந் திகதி சபைத் தலைவர் பங்குக் கோவிலில் திருப்பலி நிறைவேற்றினார். 2 நாட்களின் பின் எம் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார். குழுச் சகோதரிகள் அவரை வரவேற்பறையில் சந்தித்தபோது, எம் அழைத்தலை ஏற்றுத் துன்பங்களையும், தியாகங்களையும் ஏற்று எம்மை ஊக்கப்படுத்தினார். துன்புறும் இயேசுவின் சகோதரர் நோயாளிகளைப் பராமரிப்பதன் மூலம் கிடைக்கும் நன்மையைக் கூறினார்.

சிலநாட்களின் பின் சபைத் தலைவர் வைத்தியசாலையைச் சந்திக்கச் சென்றார். எம் கஷ்டங்கள் மத்தியில் நாம் பணியாற்றுவதை வியந்தார். மறுஞாயிற்றுக் கிழமையும் திருப்பலிக்கு வந்து இறைவன் மாத்திரமே என்னும் பகுதியை விளக்கினார். இடைக்கிடை அதில் தியானம் செய்ய அழைத்தார். மாலையில் நற்கருணை ஆசீர்வாதம் இடம்பெற்றது. யாழ் சென்று திரும்பிவரும் போது மீளவும் சந்திக்கலாமென நம்புகிறோம். 1938ல் வைத்திய அதிகாரி எம்மைச் சந்திக்க வந்தார். வருட முடிவில் தீவில் புதிய ஆளுநர் சேர் அன்றூ கல்டிக்கொட் எம்மை வீட்டில் சந்தித்தார். அன்றாடம் நாம் படும் கஷ்டங்கள் அவர் அறிக்கையில் வெளிப்பட்டது.

| ஆன்மநலன்கள் | 1937 | 1938 |
|---|---|---|
| வளர்ந்தோர் திருமுழுக்கு | 147 | 440 |
| சிறுவர் திருமுழுக்கு | 298 | 440 |
| ஒப்புரவு அருட்சாதனம் | 127 | 99 |
| திருவிருந்து | 107 | 101 |
| இறுதி நோயில்பூசுதல் | 44 | 70 |
| மொத்த நோயாளிகள் | 11767 | 13255 |

## நாவலப்பிட்டி வைத்தியசாலை

கிறிஸ்மஸ் நள்ளிரவுத் திருப்பலியில் எம் மடத்துச் சிற்றாலயத்தில் ஒரு தாதிப் பெண் முதல் நன்மை பெற்றாள். என மடத்துத் தலைவி எழுதியுள்ளா. மாகிறெற் ஒரு மனந்திரும்பிய கத்தோலிக்கனை பதிவுத் திருமணம் செய்து 3 பிள்ளைகளைப் பெற்றனர். பின்பு விவாகரத்துச் செய்து முதல் 2 பிள்ளைகள் தந்தையுடனும் 1 பிள்ளை தாயுடனும் சென்றனர். எனவே தாய் வைத்தியசாலையில் வேலைக்கமர்ந்தாள். பின்பு இறை அருளினால் தொடப்பட்டு கிறிஸ்து பிறப்பு நாளில் பாவசங்கீர்த்தனம் செய்து திருவிருந்து பெற விரும்பினாள். இதனைக் கணவன் அறிந்து வைத்தியசாலைக்கு வந்தான். அவர்கள் திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது மகிழ்ச்சி அமைதி அவர்கள் குடும்பத்தில் நிலவுகிறது. எம் சகோதரிகளுக்கு நோயாளர் பராமரிப்பில் நல்ல பிதாவின் உதவியும், திருக்குடும்பத்தின் பாதுகாப்பும் உதவி செய்து வருகின்றது.

ஒரு ஏழைத் தமிழ் மனிதன் கால் நோயினால் வைத்தியசாலை க்கு கூட்டிவரப்பட்டான். கால் வெட்ட வேண்டி நேரிட்டது. மீட்பின் பாதையிலும் செல்லவிருப்பமில்லை. அப்போது எம் நல்ல பிதாவைப் பற்றி எடுத்துக்கூறி அவரின் திருப்பண்டத்தை நோயாளியின் காலில் வைத்தோம். அவனும் எம் பிதாவின் கருத்துக்காகக் காணிக்கை செலுத்தினான். அவன் மனைவியும் பிள்ளைகளும் இவனைப் பார்த்த பின்பு கோவிலுக்குச் சென்று எல்லாப் புனிதர்களின் முன்பாகவும் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினர். சிலநாட்கள் கழித்து மேலும் அதிகம் அதிகம் நோயுற்றான். அவனின் மனமாற்றத்திற்காகச் செபித்தோம். நல்ல பிதா நல்ல சந்தர்ப்பத்தை அவனுக்களித்தார். இவ்வாறு பல புதுமைகள் நல்ல பிதாவின் அருளால் கிடைக்கப் பெற்றன. பலர் திருமுழுக்குப் பெற்று இறந்தனர்.

| | 1937 | 1938 |
|---|---|---|
| வைத்தியசாலைக்கு வந்த நோயாளிகள் | 4137 | 4114 |
| வளர்ந்தோர் திருமுழுக்கு | 38 | 58 |
| சிறுவர் திருமுழுக்கு | 57 | 59 |
| ஒப்புரவு அருட்சாதனம் | 120 | 66 |
| திருவிருந்து | 130 | 35 |
| இறுதி திரு அருட்சாதனம் | 12 | 12 |
| மனமாற்றம் | 41 | 58 |

## வென்னாப்புவா

சபைத்தலைவரின் முதற் சந்திப்பு வென்னாப்புவா ஆகும். ஞாயிறுதினம் ஆயத்தம் செய்வதில் செலவானது. நல்ல பிதாவின் பிரதிநிதியை வரவேற்க மகிழ்ச்சியோடு காத்திருந்தோம். சபைத்தலைவர், அவரின் செயலர், பங்குக் குரு வருகை தந்தனர். குழுத் தலைவி இவர்களுக்காகக் காத்திருந்தார். வருகை தந்தோர் நேரடியாகக் கோவிலுக்குச் சென்றனர். கோவில் நறுமணம் கமழும் இயற்கைப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சுதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகள் அங்கில்லாதபடியால் பி. பகல் 4 மணிக்குத் தான் அவர்கள் வருவார்களென்றும் குழுத்தலைவி சபைத்தலைவருக்கு அறிவித்தபடியால் அவர் 5 மணிக்கு வந்து வேறு பணித்தளத்தில் இருந்து வந்த சகோதரிகளையும் சந்தித்தார்.

குழு மண்டபத்தில் எல்லோரும் ஒன்று கூடினர். அவர் வியப்புடன் பலர் வந்திருக்கிறார்களென்று அன்பான வார்த்தைகளைக் கூறினார். ஒரு சகோதரி வரவேற்புரை கூறினா. அவளே அதை எழுதியபடியால் அதன் ஒரு பிரதியைத் தரும்படி கேட்டார். அதில் நல்ல தாயாரை இலங்கையில் காணவிரும்பியிருந்ததால், அவவருவா எனவும், பணித்தளங்களைப் பார்த்து மகிழ்ச்சியடைவா எனவும் கூறினார். சபைத்தலைவர் ஆங்கிலத்தில் உரையாற்றும் போது ஒரு சகோதரி அதைச் சிங்களத்தில் மொழி பெயர்த்தபடியால் எல்லோரும் புரிந்து கொள்ள முடிந்தது. சபைத் தலைவர் தன் இளமைப் பருவம் தொடங்கியே, திருக்குடும்பச் சபையைத் தெரியும் எனவும் அவரின் சிறியதாயார். அதில் சேர்ந்திருப்பதாகவும் கூறினார். இதனால் இந்த நிறுவனத்தின் மேலுள்ள கரிசனை வளர்ந்து வருவதாகக் கூறினார். புனித திரேசாளின் சிறிய வழிகளைப் புகழ்ந்து கூறி ''இறைவன் மாத்திரமே'' என்னும் நல்ல பிதாவின் விருது வாக்கைப் பற்றி எடுத்துரைத்தார்.

எம் சகோதரிகளைச் சந்தித்த பின் ஆயத்த கன்னியர் அவரைத் தோட்டத்தில் சந்தித்தனர். அறிவுரைகள் பல கூறினார். பாடசாலைக் கட்டிடங்களைப் பார்வையிட்ட பின் மறுநாள் போடிங்பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகளைப் பார்க்க வருவதாகக் கூறினார். ''நான் மடத்துச் சந்திப்புக்கே வந்தேன், பங்குகளுக்குச் செல்ல மாட்டேன். புதன் மாலை புறப்படுவேன். எனவே குருக்களையும் இரவுணவுக்கு அழைத்தால் நாம் ஒரு குடும்பமாக உணவு அருந்தலாம். என்று குழுத்தலைவிக்கு கூறினார். செவ்வாய் எம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார். சகோதரிகளும் நவகன்னியரும் நன்றாகப் பாடினார்கள் சபைத் தலைவர் அவரைப் பாராட்டினார். ஆசிரிய கல்லூரிப் பரீட்சை நாள் கல்வி அதிகாரி 18 வயதான தன் மருமகளையும் அழைத்து வந்தார். மாணவிகள் ஒரு கைவேலைக் கண்காட்சியும் ஒழுங்கு செய்திருந்தனர். பாடசாலை அதிகாரிகள் அதையும் பார்வையிட்டனர். மாலை 4 மணியளவில் ஆங்கில பாடசாலை மாணவிகள், கலாசாலை மாணவிகள் மண்டபத்தில் கூடியபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைத்தலைவர் வந்தார். நல்வரவு கூறி ஞானப் பூச்செண்டுகள் கொடுத்தனர். ஒரு மாணவி தன் உரையில் தங்கள் பாடசாலையில் 3 குழுக்களையும், அவற்றின் பாதுகாப்பாளர், மரியன், திரேசியன், பியன்வெனு என்று கூறும் போது ''பியன்வெனு'' நல்ல பிதாவின் பெயரானபடியால் அக்குழு தம் தலைவராகச் சபைத் தலைவரை ஏற்றுக் கொண்டது.

ஆனி 29ந் திகதி நல்ல பிதாவின் திருவிழா ஆனபடியால் அந்நாளில் உங்கள் வழியாகத் திருஇருதய ஸ்தாபகம் செய்தால் நல்லது. ஆனால் இது முடியாத காரியம் ஆனபடியால் இத்தியாகத்தை உங்கள் கருத்துகளுக்காக ஒப்புக்கொடுக்கிறோம். என்று ஒரு பிள்ளை கூறினா. சபைத் தலைவர் புன்னகையுடன் தலைவிக்கு ஏதோ கூறினார். பின்பு பாடசாலைச் சகோதரியை அழைத்துத் தான் திருஇருதய ஸ்தாபகம் செய்ய விரும்புவதாகவும், ஆனி 29ந் திகதி வரமுடியாதபடியால் நாளைக்குக் காலை செய்யலாம் எனவும் அவவும் ''ஆம்'' எனச் சம்மதம் தெரிவித்தா. கலைநிகழ்ச்சிகள் அரை மணித்தியாலம் நீடித்தது.

பின்பு சபைத்தலைவர் பேசத் தொடங்கினார். தான் பலகலைநிகழ்ச்சிகளில் பங்குபற்றினாலும், இன்று போல் தான் வரவேற்கப்படவில்லை என்றும், மிக எளிமையாக உள்ளதால் எப்படி நன்றி கூறுவதென்று தெரியவில்லை என்றும் கூறினார். பின்பு உரையாடல் இடம்பெற்றது. பிள்ளைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. பிள்ளைகள் இனிப்பிலும் பார்க்க அவர் முகத்தையே பார்த்தவண்ணம் இருந்தனர். பிள்ளைகளின் வகுப்பு முயற்சிகளைப் பார்யிைட்டு அவர்களை நல்வழியில் உற்சாகப்படுத்தினார். பின்பு ஆசிரிய கல்லூரி மாணவர்களின் கைவேலைக் கண்காட்சியையும் கண்டுரசித்தார். சில இலங்கைப் புவியியல் படங்களையும் தம்முடன் எடுத்துச் செல்ல விரும்பினார். பின்பு குழுச் சகோதரிகளைச் சந்திக்க வந்தார்.

நான் இங்கு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். தொடர்ந்து கதைத்தும் களைப்புறவில்லை என்றார். சகோதார அன்பு பற்றி உரையாற்றினார். இந்தியாவில் பார்த்த ஒரு படத்தில் 3 குரங்குகள் ஒன்று கண்ணை மூடியபடியும், மற்றது வாயைப் பொத்தியபடியும், காதைக் கையால் மூடியபடி மூன்றாவது இருந்தது எனவும் கூறி நாமும் எம் சகோதரிகளின் பிழைகளைப் பாராது, பேசாது, கேளாது இருக்கும் போது சகோதர அன்பை வாழமுடியும் என்றார். விசுவாச வாழ்வு பற்றி எடுத்துரைத்தார். அதிகாரிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைக் காணல், வறுமையில், மாணவர்களில், குருக்களின் தொடர்பில் நாம் இறைவனைக் காண வேண்டும்.

முன்பு நவகன்னியர்களாக இருக்கும் போது பொறுப்பான சகோதரி புண்ணியங்களைக் கடைப்பிடிக்க உதவி செய்தா. தற்போது எம்மிடம் உள்ள மாணவர், எம்மைச் சூழவுள்ளோருக்கு உதவி செய்ய வேண்டும். அத்துடன் குழுவில் மகிழ்வாக இருப்பதற்கு சகோதரிகளை உருமாற்றாது, நாமே உருமாறி, மற்றவர்களைத் தாமாக உருமாறச் செய்ய வேண்டும் என்றார். நல்ல பிதாவின் வார்த்தைகளையே எமக்குக் கூறினார். இயேசுவுக்காக எல்லோரையும் நேசியுங்கள். இதன் மூலம் திருக்குடும்பச் சகோதரிகளாகவும், எனது உண்மையான பிள்ளைகளாகவும் இருப்பீர்கள் என்றார்.

திருஇருதய ஸ்தாபகத்திற்கு 8 குருக்கள் சமுகமாயிருந்தனர். சபைத்தலைவியையும் எம் செபத்தில் நினைவு கூர்ந்தோம். சபைத்தலைவர் ''இறைஅன்பு'' பற்றி எடுத்துரைத்து வென்னாப்புவாவில் இருந்து விடைபெற்றார்

**-1938-**

புதுவருடம் ஆரம்பமாகிறது. தேவதாயின் நம்பிக்கையுடன் ஆரம்பிக்கிறோம். தூயஆவியின் கீதத்துடன் (வெனிக்கிறே ஆத்தோர்) சபையுடன் இணைந்து திருப்பலியில் பங்குபற்றினோம். எம் செபத்தில் ஸ்பெயின் சகோதரிகளையும் நினைவு கூர்ந்தோம். பல இளம் சகோதரிகள் தம் ஓய்வுக்காக வென்னாப்புவாவுக்கு வந்திருந்தார்கள். புதிய முறையில் கல்வி கற்பிக்கத் தம்மைப் பயிற்ற விரும்பினர். ஓய்வு நேர நிகழ்ச்சிகள் எமக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. தம் மாணவர்கள், பணிகள் செயற்பாடுகள் பற்றி எம்முடன் பகிர்ந்து கொண்டனர். தைமாதம் 3ந் திகதி அருடதந்தை தியாடோர் அரச கடமைகள் பற்றி உரையாற்றினார். மறைக்கல்வி ஊட்டும் கடமையை எடுத்துரைத்தார். எம் சகோதரிகள் தம் கடமையை உணர்ந்தவர்களாகக் காத்திரமான தீர்மானங்களை எடுத்தனர்.

5ம் திகதி மீளவும் வகுப்புகள் ஆரம்பித்தன. முதலாம் நாளிலிருந்தே மாணவர்கள் முயற்சியுடன் செயலாற்றினர். 9ந் திகதி எம்முடன் சேர்ந்து திருக்குடும்ப விழாவைக் கொண்டாடினர். 12ந் திகதி அருட்தந்தை மாசோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவருட வாழ்த்துத் தெரிவிக்க வந்தார். அதிமேற்றிராணியார் தெரிவுக்குச் செபிக்கும் படி கேட்டார்.

மாசி 8ந் திகதி எம் நல்ல பிதாவின் மரித்த நாளை மறக்கவில்லை. அத்துடன் ''நஞ்சுண்டான்கரை'' என்னும் இடத்தில் ஒரு மடம் ஸ்தாபிக்கப்பட்டது. இது ஒரு ஆற்றங்கரையில் உள்ள சிறிய கிராமம். எல்லோரும் மீன்பிடிக்கும் வறியவர்கள். ஆனால் அமைதி எளிமையுள்ள மக்கள். கலவன் பாடசாலை ஒன்று உண்டு. பெற்றோர் தம் பெண் பிள்ளைகளைச் சகோதரிகளிடம் ஒப்படைக்க விரும்பினர். எனவே பங்குக்குரு வென்னாப்புவா சென்று மடத்துத் தலைவியிடம் தம் பிரச்சினை பற்றி எடுத்துரைத்தார். அவ போர்டோவுக்கு எழுதுகிறேன் என வாக்குப் பண்ணினா. இம்மக்கள் தூரத்தையும் பாராது பலமுறை வந்து சென்றனர். ஒரு முஸ்லிம் ஆள் முழந்தாள்படியிட்டு வேண்டினான். எனவே தாயார் பாடசாலைக்குச் சென்று பார்த்தா. ஆசிரியர்கள் இவர்களை விரும்பவில்லை கிராமம் மாதாவுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆலயத்தில் தேவதாய் தன் கையில் ஒரு சிறு கப்பலைத் தாங்கியபடி இருந்தாள். ஆலயத்திற்கு அருகே பாடசாலை காணப்பட்டது. வருடத்தில் 2 முறை ஆறுபெருக்கெடுக்கும் மக்கள் வெளியேறிப் பாடசாலை, கோவிலில் தஞ்சம் புகுவர். பங்குக்குரு நற்கருணையை எடுத்து விடுவார். வெள்ளம் போனபின் சனமும் வீடுதிரும்பும்.

## றாகம ஆரம்பம் (3ஆடி 1937)

''றாகம'' என்பது ஒரு சிறிய நகரம் ''கிரிமித்தியகரம்'' என்னும் இடத்திற்கு எம் சகோதரிகள் சென்றபோது நாம் அதனூடாகச் சென்று திரும்பி வரும்போது நாம் ஒரு நல்ல திட்டம் போட்டோம். அது இப்போது நிறைவேறி எம் சகோதரிகளும் அங்கு பணியாற்ற முடிகிறது. கொழும்பு சுற்றுப் புறத்தில் அமைந்த இந்த இடம் பிரான்சில் உள்ள ஒரு கிராமத்தை ஒத்துள்ளது. ஆலயம் ஒரு குன்றில் கட்டப்பட்டுள்ளது. சேமக்காலையும், பாடசாலையும் அருகே உள்ளன. சிலாபம், யாழ்ப்பாணம், நுவரெலியா, கொழும்பு - புகையிரதப் பாதைகள் இதனூடாகவே செல்கின்றன. வேறொரு குன்றில் கச நோயாளருக்கான வைத்தியசாலை கட்டப்பட்டுள்ளது. காற்றுத் தூயதாக இருப்பதாலும், கொழும்பில் இருந்து இந்த நோயாளிகளைத் தனிமைப்படுத்துவதற்காக வும் இந்த இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசகாய மாதா சபையினர் அங்கு பணியாற்றுகின்றனர். அவர்களின் தலைமை இடம் பெல்ஜியத்தில் உள்ளது. ஆலயத்தின் அருகாமையில் குருடர், செவிடருக்கான ஓர் இல்லம் உண்டு. இந்த இல்லங்களிலும் பார்க்க மரியன்னையின் செபியே எல்லோரையும் அழைக்கின்றது. அடிக்கடி புதுமைகளும் இவ்விடம் நடைபெறுகின்றது. சில சகோதரிகள் கல்விப் பணிக்குத் தம்மை அர்பணித்தனர்.

ஆடி மாதம் 3ந் திகதி 1.30 மணியளவில் 3 சகோதரிகள் அங்கு சென்றனர். பிரதிநிதித் தாயாரும் அவர்களுடன் சென்றா. ஒரு தேவதாயின் படமும் சின்னத்திரேசம்மாள் படமும் எடுத்துச் சென்றனர். 3 மணிக்கு றாகமத்தை அடைந்தோம். நேரே கோவிலுக்குச் சென்றோம். பங்குக் குரு எம்மை வரவேற்றார். அருட்தந்தை அக்காலியோ பலகாலம் வென்னாப்புவாவில் இருந்தவர். சகோதரிகளை அன்பு செய்தார். சகோதரிகளை இனம் கண்டு தம் பணிமனையைச் சுற்றிக் காண்பித்தார். மடத்திற்குச் செல்லும் முன் சில நிமிடங்கள் அருட்தந்தை லெவிறர் கல்லறையில் செபித்தோம். முன்பு வென்னாப்புவாவில் பணியாற்றி எம் பணிக்கு ஒத்துழைப்புத் தந்தவர் றாகமத்துக்கு அவர் வந்தபோது எம் சகோதரிகளைக் கேட்டார். அப்போது கொடுக்க முடியவில்லை. அவரின் இறுதிச் சடங்கில் எம் சகோதரிகள் பங்குபற்றி றாகமத்துக்கு வருவதற்கு அவரிடம் வேண்டினர். ஒரு சிலரின் அழைத்தலுக்கும் அவரேகாரணர்.

ஆடி மாதம் 5ந் திகதி சபைத் தலைவர் எம்மிடம் வந்து நாம் உண்மையான ஒரு "நசரேத்தில்" இருப்பதாகக் கூறிச் சென்றார். ஆங்கிலத்தில் உரையாற்றித் தன் ஆசீரையும் வாழ்த்தையும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Print by Lanka Publishing House - Colombo-11. Tel: (+94) 0602137006, 0114574711

வெளியீடு:

150 ஆவது அகவை நோக்கி வடமாநில திருக்குடும்ப நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org